வீரகாவியம்.

உ

வீரபாண்டியம்

ஆசிரியர்

செகவீர பாண்டியனார்

மதுரை

வாசுகி அச்சகத்தில் பதிப்பிக்கப் பெற்றது.

பராபவ ஞ மார்கழி மீ

1967.

All Rights Reserved.

நூலின் முறை.

பொருள்	பக்கம்
நூல்முகம்	
1. கடவுள் வாழ்த்து	1
2. பாயிரம்	7
3. நகர நிலைமை	15
4. குலமரபு	24
5. செகவீரன்	37
6. திக்குவிசயன்	54
7. கண் கொடுத்தது	67
8. காட்சி தெளிந்தது	77
9. குமரன் கோல்கொண்டது	99
10. குடி புரந்தது	125
11. திறை மறுத்தது	152
12. மந்திரம் புரிந்தது	162
13. சங்கத் தலைவர் சூழ்ந்தது	177
14. சாக்சன் சந்திப்பு	184
15. நியாயம் தெளிந்தது	208
16. துரைகள் நட்பானது	212
17. மல்வலி கண்டது	221
18. ஆட்சி நிலைமை	228
19. நெல்லைக் கொள்ளை யிட்டது	247
20. படை எழுச்சி	277
21. போர் மூண்டது	310

22. தாளபதி தப்பி வந்தது 339
23. பதி பெயர்ந்தது 351
24. விதி விளைந்தது 388
25. சிறை இருந்தது 420
26. அரண் ஆற்றியது 444
27. அஞ்சி மீண்டது 472
28. தளபதியைத் தலையிட்டது 489
29. சேனைகள் சேர்ந்தது 501
30. அடுசமர் ஆற்றியது 516
31. பாசறை படிந்தது 554
32. அக்கினி மூண்டு பொருதது 601
33. சதி புரிந்தது 647
34. கதி எய்தியது 704
குறிப்பு 745

காவிய நாயகன்

பாராண்ட செகவீர பாண்டியன்தன்
அரசபதம் பரிந்து தந்து
நேராண்ட கட்டபொம்மை நிலவேந்தா
இந்நாட்டில் நிலைக்கச் செய்தான்;
போராண்ட அவ்வரசைப் புவனமெலாம்
எவ்வழியும் புகழ்ந்து போற்றச்
சீராண்ட செகவீர பாண்டியவேள்
சீர்வேந்தாய்ச் சிறக்கச் செய்தான்.

———

காவிய அமைதி.

பாட்டுமூ வாயிரத்து எண்ணூற்றுப் பன்னென்று
நாட்டு காவியம் நன்கமைந் துள்ளது;
காட்டு நீதியும் ஞானமும் காணுறின்
வீட்டுள் இன்பம் விளைந்து விளங்குமே.

———

நூல் முகம்.

காவிய சீவியம்.

உலகம் உயர்ந்தோரால் ஒளி பெற்று வருகிறது. உயிர் இனங்கள் அளவிடல் அரியனவாய் எங்கணும் பரந்து விரிந்து உள்ளன. இந்த இனங்களுள் எல்லாம் மனித இனமே தனி நிலையில் உயர்ந்து யாண்டும் சிறந்து எவ்வழியும் தலைமையுடன் நிலவி யுளது.

சிறந்த மனிதர்

பிறந்து வருகிற மனிதருள் சிலரே சிறந்த மனித ராய் உயர்ந்து திகழ்கின்ருர். அரசர்கள், கவிஞர்கள், வள்ளல்கள், வீரர்கள், ஞானிகள் என இன்னவாறு பேர் பெற்று வருபவரே யாண்டும் சீர்பெற்று விளங்கி வருகின்றனர். இந்த வரவுகள் அதிசய நிலையில் அரியனவாய் நேர்கின்றன.

மேலோர் என்று எவரை ஞாலம் உவந்து புகழ்ந்து வதுகிறதோ, அவர் காலம் பல கழிந்து போயினும் யாதும் மறையாமல் யாண்டும் குறையாமல் எவ்வழியும் இனியராய் நீண்டு என்றும் சீரோடு சிறந்து நிற்கின்றனர். அவருடைய பேரும் பெருமையும் சீரும் சிறப்பும் பார் எங்கும் பரவி வருதலால் யாரும் அவர் பால் பேரன்பு புரிந்து வருகின்றனர்.

நூல்களும் அவரைச் சால்போடு போற்றி வருகின்றன. வழிவழியே அவர் ஒளிபெற்று வருகிருர்.

ஓவியக் காட்சி.

ஒரு நாட்டுள் சிறந்து தோன்றிய மனிதரை அந் நாட்டுச் சிற்பங்களும், ஓவியங்களும், காவியங்களும் என்றும் எவரும் எங்கும் நன்கு கண்டு மகிழும்படி நயமாய்க் காட்டி வியலு விளக்கி வருகின்றன.

சிற்ப ஓவியங்கள் மனிதருடைய உருவங்களை மாத்திரம் வரைந்து காட்டும். பார்ப்பவருடைய பார்வை அளவே அவை தீர்வையாய் நின்று விடுகின்றன.

காவியக் காட்சி.

காவியமோ, ஒருவனுடைய உருவம் பருவம் குணம் செயல் அறிவு ஆற்றல் ஆண்மை மேன்மை வீரம் மானம் முதலிய நீர்மைகளை எல்லாம் நேரே கண்டு நெஞ்சம் உவந்து தெளியும்படி தெளிவாக விளக்கி யருளுகின்றது. அந்த விளக்கம் சிந்தைக்கு இனிய தாய்ச் செவிக்கு இனியதாய் காட்சிக்கு இன்பமாய் எந்த வகையிலும் எழில் மிகுந்து மிளிர்கின்றது.

சொல்லும் பொருளும் தொனியும் அணியும் சுவை சுரந்து வருதலால் காவியம் எவரையும் எவ்வழியும் பரவசப் படுத்தி வருகின்றது. காவியக் காட்சிகள் அறிஞர் மாட்டுகளாய்த் துதி கொண்டுள்ளன. ஆகவே அறிஞர் யாவரும் வியந்து விழைந்து நயந்து நோக்கி அவற்றை மகிழ்ந்து புகழ்ந்து வருகின்றனர்.

காவிய மனிதன்

கவி ஒருவனைக் கொண்டு வந்து காட்டுங்கால் அவனுடைய நிலைமை தலைமை நீர்மை சீர்மைகளை எல்லாம் கூர்மையாய் ஓர்ந்து தேர்ந்து உவந்து கொள்கின்றோம். பழமை யாயினும் புதுமையாய்க் கெழுமிக் கிழமை தோய்ந்து வளமையாய்க் கிளர்ந்து எவ்வழியும் செவ்வையா யாண்டும் அவை எழில் மிகுந்து திகழ்கின்றன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே மறைந்து போனவரையும் கவியில் காணும் பொழுது நேரே உடன் உறைந்து உள்ளவரைப் போல் உரிமை மீதூர்ந்து உறவுடன் நோக்கி உவகை மீக்கூர்கின்றோம். அரிய அன்பும் பெரிய நண்பும் பேருறவும் அவன்பால் பெருகி வருகின்றன.

அவன் ஆடுகின்ற படி எல்லாம் நம்மை ஆட்டி விடுகின்றன். அவன் சிரித்தால், நாம் சிரிக்கின்றோம்; வெறுத்

தால், வெறுக்கின்றோம்; வருந்தினால், வருந்துகின்றோம்; உவந்தால், உவக்கின்றோம்; அழுதால், அழுகின்றோம்; அவன் மானத் துடிப்போடு வீறுகொண்டு எழுந்தால் காமும் வீராவேசமாய்ச் சீறி எழுகின்றோம்: இன்ன வாறே என்ன என்ன விதமாகவோ காவிய மனிதன் ஓவிய உருவமாய் நின்று நம் உள்ளங்களை உருக்கி உணர்ச்சிகளைப் பெருக்கி நம்மை எவ்வழியும் செம்மை யாக உயர்த்தியருளுகின்றான். மொழிகளின் வழியே உணர்வின் எழில் ஒளிகள் எதிர்வீசி வருகின்றன.

விற்பன விவேகம் விரிந்து வருகிற கவி ஓர் அற்புதக் கற்பகமாய் அதிசய இன்பங்களை விளைத்து அருளுகி றது. அந்த இன்ப விளைவுகளில் அன்பும் அறமும் பண் பும் பரிவும் அறிவும் அமைதியும் பரவி வருகின்றன.

வசன நடையினும் கவியே சுவையும் இனிமையும் சுரந்து உணர்வு நலன்கள் கனிந்து எவ்வழியும் உவகை புரிந்து வருகின்றது. இதனை ஓர் உவமான நிலையால் தெளிவாக நேரே தெரிந்து கொள்ளலாம்.

பாட்டும் வசனமும்.

நாட்டியமே பாட்டு; நடையே வசனமாம்;
காட்டிய இவ்வுவமக் காட்சியால்—பாட்டியல்பின்
மாட்சிகளை எல்லாம் மதியூக மாய்ஓர்ந்தே
ஆட்சி புரியும் அறிவு.

கவியின் உயர்வையும் வசன நடையின் இயல்பை யும் இக் கவி சுவையாய் விளக்கியுளது. உவமான உப மேயங்கள் உணர்வு நலன்கள் நிறைந்து உறுதி உண் மைகள் செறிந்து உவகை சுரந்து திகழ்கின்றன.

ஒரு பெண் நடந்து போவது போல் வசன நடை இசைந்துள்ளது; அழகிய ஒரு பருவ மங்கை எழிலோடு நாட்டியம் ஆடுவது போல் பாட்டு அமைந்துள்ளது.

நடக்கின்ற பெண்கள் எல்லாரும் நாட்டியம் ஆட முடியாது; எழுதுகின்றவர் எல்லாரும் நல்ல கவி பாட முடியாது. இருவகை நிலையும் கருதி உணர வுரியன.

நாட்டியம் ஒரு கலை. பரதமும் இசையும் பயின்று முயன்று பெற வுரியன. எத்தகைய பயிற்சி முயற்சிகள் படிந்தாலும் சிலரே அவற்றில் உயர்ச்சி அடைந்து ஒளி மிகுந்து வருகின்றனர்.

பாட்டும் அவ்வாறே அருமைப்பாடு உடையது.

கற்றுத் தேர்ந்த பெரிய புலவர்களும் பாட்டுப் பாட கேர்ந்தபோது படாத பாடுகள் படுகினறனர். அவர்கள் படுகின்ற அந்தப்பாடு கவியின் இயல்பான உயர்வு கலை நயமாய் விளக்கி வருகின்றது.

எதுகை மோனைகள் இணைந்து புதுமையாய்ப் பிணைந்து வரினும் அது பாட்டு ஆகாது. உணர்வின் ஒளியும் உயிர் ஒட்டமும் ஒங்கி வருவதே உயர்ந்த பாட்டாம். அறிவின் சுவையும் ஆன்ம இன்பமும் சுரந்து வரும் அளவே கவி சிறந்து மிளிர்கிறது. வயிரம் மாணிக்கம் முதலிய மணிகளைப் போலவே கவிகளும் கூர்ந்து சோதனை செய்து தேர்ந்து தெளிய வுரியன.

உயிர்கள் உயர்த்தி வருதலால் கவியுள் ஒரு தெய்வ ஒளியுளது. அரிய இனிய அது விளைந்து வரு மறு நிலம் விழுமிய நிலையமாய் விளங்கி வருகிறது.

கவிஞர் பெருமான் என்பது சிவபெருமானுக்கு ஒரு பெயராய் வந்துள்ளது. ஆகவே கவி எத்தகைய மகிமையும் மாண்பும் உடையவன் என்பதை ஈண்டு உய்த்து உணர்ந்து கொள்ள வேண்டும். கருவிலேயே திருவை மருவி வருதல்போல் பிறப்பிலேயே கவிஞன் சிறப்பாய்ப் பேறு பெற்று வரவேண்டும். அத்தகைய பேறு எனே யாண்டும் என றும் சீரோடு சிறந்து வருகிறான்.

கவித் தன்மையைக் கல்வியால் முயன்று ஓரளவு பெறலாம் ஆயினும் அது, அப் பேரளவே நின்றுவிடும். அரிய பெரிய மேன்மையை அதனால் பெற இயலாது.

உத்தமமான வித்தகக் கவிஞனைய் எத்தகையோரும் என்றும் வியந்து புகழ்ந்து உவந்து வர ஒருவன் உயர்ந்து வருவது தெய்வத் திருவருளாலேயாம். தெய்வ

ஒளி மேவிய அளவு அவன் திவ்விய கவி ஆகின்றான். அதிசயமான ஓர் அறிவு மணம் மருமமாய் மருவி வருதலால் அவனுடைய கவிகள் எவ்வழியும் செவ்வையாய் விழுமிய நிலையில் தேசு வீசி வருகின்றன.

வருந்தி முயன்று பலர் பலவழிகளிலும் தலைவிரி கோலமாய் அலைந்து திரிந்து அல்லும் பகலும் ஆவலோடு பொருளை ஈட்டி வருகின்றனர்; வரினும் சிறந்த செல்வராய் அவர் உயர்ந்து கொள்வதில்லை.

சிலர் பிறப்பிலேயே அரச திருவுடன் பிறந்து யாண்டும் செல்வச் சீமான்களாய்ச் சிறந்து விளங்குகின்றனர். அரிய கவிஞனும் இவ்வாறே பிறப்பின் பேருய்ப் பெரிய சிறப்பினை அடைந்து திகழ்கின்றான்.

A poet is born, not made. (Anon)

"கவிஞன் பிறந்து வருகிறான்; முயன்று வருவது இல்லை" என இது குறித்துள்ளது. இலத்தீன் மொழியினர் இதனை ஒரு பழமொழியாக வழங்கி வருகின்றனர்.

கலைத்துறையில் நிலைத்த உண்மையை எந்த நாட்டவரும் சிந்தை ஓர்ந்து தெளிந்து மொழிந்து வருவது விந்தையாய் விளங்கி வருகிறது.

அறிவின் நுகர்வு

கவிகளின் சுவைகளைக் கருதி நுகர்பவர் உணர்வின் ஒளிகளை மருவி மகிழ்கின்றனர். அறிவு தெய்வத் திரு ஆதலால் அதன் வழியே பெருகி வருவது விழுமிய இன்பங்களை விளைத்தருளுகிறது.

ஆன்மானந்தத்தின் அருமை மருவி வருதலால் அறிவானந்தம் எவ்வழியும் உயர்வாய் ஒளி மிகுந்து திகழ்கிறது. அறிவின்பம் சுரந்து வருகின்றமையால் கவிகள் பேரின்பமாய் விளங்கி வருகின்றன. கருதி உணருந் தோறும் கவிகள் அருளுகிற அற்புத இன்பங்களைக் கற்பகத் தருவும் தருமா?

இனிய கனிகளினும் அரிய கவிகள் அதி மதுரங்களுடையன. அளவிடலரிய சுவைகள் நிறைந்தன.

கவி உணர்வு அவி உணவினும் அதிசய இனிமையும் மகிமையும் தோய்ந்து யாண்டும் மேன்மையா யுள்ளது.

உணவும் உணர்வும்.

உணவு உடலை வளர்த்து வருகிறது.
உணர்வு உயிரை உயர்த்தி அருளுகிறது.
அது மருளோடு களித்து இழிகிறது.
இது தெருளோடு தினைத்து உயர்கிறது.
அது ஊன நிலையில் ஒழிகிறது.
இது ஞான நிலையில் வளர்கிறது.

உள்ளம் தோய்ந்து ஓர்ந்து உணர்ந்து வருபவரே கவிகளின் சுவைகளைத் தேர்ந்து தெளிந்து செவ்வையா நுகர்ந்து எவ்வழியும் மகிழ்ந்து வருகின்றனர்.

படித்தல்	1
கற்றல்	2
அறிதல்	3
ஆய்தல்	4
உணர்தல்	5
அனுபவித்தல்	6

இந்த ஆறு நிலைகளும் ஈண்டு ஊன்றி உணர வுரியன.

கலையறிவின் பயிற்சி வகைகள் இன்னவாறு தெரிய வந்துள்ளன. பயின்று வருகிற பான்மை அளவே மேன்மைகள் விளைந்து வருகின்றன. மேல் எழுந்த படியே எழுத்தைப் படித்துப் போதலே யாவரிடமும் அழுத்த மாய்ப் படிந்து எங்கும் முடிந்து வருகிறது.

கற்கும் வகை.

உள்ளம் படியாத படிப்பு எள்ளல் படிந்து இழிந்தே போகின்றது. அந்தப் போக்கை நோக்குவாரும், அதனை நீக்கி ஆக்கம் பெறுவாரும் அரியரா யுள்ளனர். மாய மருள்கள் தீய இருள்களாய்ச் சூழ்ந்து வருதலால் அறிய வுரியதை அறியாமல் அவமே போகின்றனர்.

படித்தவரினும் கற்றவர் உயர்ந்தவர்.
கற்றவரினும் அறிந்தவர் சிறந்தவர்.
அறிந்தவரினும் ஆய்ந்து தெளிபவர் மேலானவர்.
ஆய்பவரினும் ஓர்ந்து உணர்பவர் தேர்ந்தவர்.
ஓதி உணர்ந்தவரினும் தூயராய் ஒழுகுபவர் உத்தமர்.

கலையுணர்வின் நிலைகள் எல்லாம் ஆன்ம நலனே அருளி வரவே பான்மை சுரந்து வந்துள்ளன. அந்த வரவுகளைச் சிந்தனை செய்து தெளிந்து வருபவரே எந்த வகையிலும் நன்கு சிறந்து வருகின்றனர்.

ஒரு நல்ல கவியைக் காண நேரின் அதன் சொல்லையும் பொருளையும் குறிப்பையும் கருத்தையும் கூர்ந்து ஓர்ந்து உள்ளம் தேர்ந்து உண்மையை உறுதியா உணர்ந்து கொள்ள வேண்டும். அவ்வாறு கொள்ள நேர்ந்தால் கவியின் சுவையும் கருத்தும் குறிப்பும் உணர்வும் அங்கே உயர் பேரின்பம் சுரந்து வரும்.

கருதி நுகர்வது.

நுண்மையாய்க் கருதி உணரும் அளவே உண்மையான உறுதி நலன்கள் தெரிய வருகின்றன. கருதா வழி யாவும் விருதாவாய் விலகி ஒழிகின்றன. கருத்து ஊன்றி ஒரு பக்கம் படிப்பவன் கருதாமல் ஆயிரம் பக்கங்களைப் படிப்பவனைக் காட்டிலும் மேலான அறிவாளியாய் விளங்கி நிற்கின்றான். அனுபவ உணர்வே மனிதனைப் புனிதனுக்கி அருளுகிறது. அறிவோடு உரிமையாய்ப் பழகி வருகிற பழக்க வாசனையே அனுபவமாய் மருவி இனிமை சுரந்து வருகிறது.

உள்ளம் தூய்மையாய் உணர்வு தெளிந்து வரின் அந்த உயிர் பேரின்ப வெள்ளத்தைப் பெற நேர்கின்றது. இனிய சீவ ஒளி அரிய தேவ ஒளியாகிறது.

உணர்வின் பயன்.

கல்வியறிவு, கலைஞானம் எனத் தலைமையாக யாவரும் புகழ்ந்து வருகின்றனர். மேலான இந்த அறிவுக்கு

மெய்யான பயன் யாது? உயிர் துயர் உருமல் உய்தி யுறச் செய்து கொள்வதேயாம். இவ்வாறு செய்து கொள்பவரையே மகான்கள், ஞானிகள், சீவன் முத்தர் கள் என்று வையம் வாழ்த்தி வருகிறது. ஆன்ம உய்தி அதிசய இன்பமாய்த் துதி செய்யப் பெறுகிறது.

கோடி கோடியாய்ச் செல்வங்களை ஈட்டிக்கொண் டாலும், அரிய பெரிய அரச பதவிகளை அடைந்தாலும் தன் உயிர் துன்பம் தோயாமல் இன்பம் தோயச் செய்து கொள்ளாது ஒழியின் அந்த வாழ்வு நல்ல வாழ் வாகுமா? அல்லலான அவல வாழ்வேயாம். அவரும் அரிய பயனை இழந்த வறியரே யாவர். பாழான அவர் பரிதாபமாய் இழிந்து கழிந்து அழிந்தே போகின்றார்.

பிறந்த பிறவிக்குச் சிறந்த உயர்ந்த பயன் என்ன? பின்பு பிறவாத பேரின்ப நிலையைப் பெறுவதேயாம்.

இக்காவியத்தின் நோக்கம்.

இந்த வீர காவியம் ஓர் அரசனுடைய சீவிய வர லாறுகளை மாத்திரம் கூறுவதோடு அமையாமல் மனித சமுதாயம் இனிது தெளிந்து புனித நிலை யடைந்து உய்திபெற உரிய உறுதி நலன்களை இடங்கள்தோறும் உரிமையுடன் தெளிவுறுத்தி யுள்ளது. ஓதி உணர்பவர் எவரும் இந்த உண்மையை நேரே காண நேர்வர்.

சிந்தனை செய்க.

ஏறக்குறைய எண்ணூறுக்கு மேலான கவிகள் இக் காவியத்துள் யாவரும் கருதியுணர்ந்து மனனம் செய்து கொண்டு யாண்டும் சிந்தித்துத் தெளிந்து வர வுரியனவாய்ச் சிறந்துள்ளன. உயர்ந்த உணர்வு நலன் களை ஓர்ந்து வருபவர் தேர்ந்த மேலோராய்ச் சிறந்து திகழ்கின்றனர். தெய்வ அருளும் எய்துகின்றனர்.

உள்ளத்தை உயர்த்தி, உணர்வை ஒளி செய்து, உயிர் துயர்நீங்கி, உய்தி பெறச் செய்து வருவதே மெய்யான காவியமாம். இதனைக் கருதித் தெளிக.

ஆன்ம நலனை அருளி வரும் அளவே கலையும் கவி களும் நிலையான மேன்மைகளை எய்தி வருகின்றன.

உலகப் பொருள்கள் எவற்றினும் உடம்பே மனித னுக்கு நெருங்கிய உரிமையான உடைமையாம். இந்த மெய்யுள் மெய்யாய் மேவி யுள்ள சீவனைப் புனிதமா னிது பேணி வருபவன் தேவனைச் சிறந்து திகழ் கின்றான். ஆன்மா பரமான்மாவின் இனமே.

அறிவு என்பது பரமனது ஒளித்துளியே. பறவை விலங்கு முதலிய வேறு பிராணிகள் எவற்றினும் மனித இனமே இதனைப் பெரிதும் மருவி வந்துளது. இந்த அரிய அறிவுக்கு உரிய பயன் என்ன? கருதி உணர வேண்டாமா? உறுதி தெரிவதே உய்தி புரிவதாம்.

ஆறு அறிவுடையனைப் பிறந்துள்ள மனிதன் தனது இனிய உயிர்க்கு உரிய உறுதியை அறியாத் தின் ஓரறிவும் இல்லாதவனைப் ஒழிய நேர்கிறான். அறிய நேரின் பேரறிவாளனைப் பெருகி உயர்கிறான். அறி பவர் யாண்டும் அரியராய் அருகி ஒழிகின்றனர். அறி யாமை பெருகி யிருக்கும் வரையும் எவ்வழியும் பரிதா பங்களே மருவி நிற்கின்றன.

பிறவியில் நேர்ந்துள்ள தன் நிலைமையை எந்த மனிதன் சிந்தனை செய்ய நேர்கின்றானே, அந்த மனி தன் அந்தம் இல்லாத பேரின்ப நிலையை அடைய வுரிய தகுதியை நேரே அடைந்தவனாகின்றான்.

உண்மை உணர்வு எவ்வழியும் நன்மையாய் உய்தி புரிகின்றது. எண்ண வேண்டியதை எண்ணி உணர் பவன் புண்ணியவானைப் பொலிந்து திகழ்கின்றான்; எண்ணுதவன் மண்ணைப் மடிந்து போகின்றான்.

எண்ண உரியன.

எங்குமுன் இருந்தோம்? எங்குஇனிப் போவோம்?
என்பதை இறைஅள வேனும்
தங்கிமுன் உணரார்; தம்நிலைக்கு இரங்கார்;
தருக்கிலும் களிப்பிலும் தழைத்துப்

பொங்கிநிற் கின்ரூர்; போயிழி கின்ற
புலன்ஒன் றும்தெரிகிலார்; புலையாம்
இங்கிவர் நிலையை எதிர்அறிந்து ஓர்ந்தால்
இங்ஙனம் இருப்பர்கொல்? இவரே! (1)

எண்ணுவார் எவரே?

என்னதாம் பெற்ரேம்? இதுவரை வாழ்ந்தோம்;
எதன்பொருட்டு இங்குநாம் வந்தோம்?
அன்னையும் பிதாவும் அன்புடை மனையும்
அறிவுறு மக்களும் தமரும்
முன்னம்எத் தனைபேர் மொய்த்தமர்ந் திருந்தார்?
முறையுடை அவரெலாம் எங்கே?
இன்னம் எத்தனைபேர் எய்திட நின்ரூர்;
என்பதை எண்ணுவார் எவரே? (2)

மடமை மருள்.

கருவினுள் அழிந்தும், கண்டபின் அழிந்தும்,
கவினுறு குழவியாய் அழிந்தும்,
மருவிய பாலன் குமரனுய் அழிந்தும்,
வன்பெருங் கிழவனுய் அழிந்தும்,
ஒருநிலை இன்றி அழிவையே உடையிவ்
உலகினை உறுதியா நம்பி
வருநிலைக் குரிய நலன்ஒன்றும் இன்றி
வறியராய் வாழ்வதே மடமை. (3)

மானிடர் இயல்பு.

இன்பமே வேண்டி நிற்கும் இயல்பினை யுடைய மாந்தர்
துன்பமே அடையத் தக்க தோமினை விளைத்து நின்ரூர்;
நன்பயன் உடைய மாவின் நறுங்கனி வேண்டி எட்டி
வன்படு விதையை நட்டு வளர்க்கின்ற மடவோர் அன்றே?

உயிர் வாழ்வு.

பொள்ளலார் குடம் நிறைந்த
புனல்எனப் புரைகொள் யாக்கை
உள்ளமர் உயிரின் வாழ்க்கை
உறைந்துளது; ஒழுகி நாளும்
தள்ளுறக் கழிதல் தேற்ரூர்;
சாலவும் தருக்கி நின்ரூர்;

எள்ளல்இம் மானி டங்கள்
இழிநிலை என்னே! என்னே! (5)

என்ன பெறுவரோ?

கணம்ஒன் றுகழியும் தோறும்
கவர்ந்தம் ஆயுள் நாளின்
கணம்ஒன் றுகழியத் தாம்போய்க்
காலன்வாய் விழுவது ஓர்ார்;
குணம்ஒன் றும்கொள்ளார் அந்தோ!
குற்றமே கொழித்து நின்ருர்;
பிணம்என்று வரும் போது என்ன
பெறுவரோ? பேதை யோரே? (6)

நஞ்சு அருந்துவார்.

கொள்ளியால் தலை சொரிந்து
கோவென அழுது கூவும்
பிள்ளைபோல் பேதை யாளர்
தீவினை புரிந்து பின்பு
துள்ளிவெந் துயரத்து ஆழ்ந்து
துடித்தழுது அயர்வர் அந்தோ!
அள்ளிநஞ்சு அருந்தி நல்ல
அமிர்தினை அகல விட்டார். (7)

நல்வினையாளர்.

நல்வினை புரிந்து நாளும்
நவைஅகன் று ஒழுகி நின்ருர்
வெல்வினை வேந்தர் ஆகி
விண்ணவர் ஆகி மேலாம்
இல்லென விளங்கும் இன்ப
வீட்டினை எய்தி வாழ்வார்;
புல்வினை யாளர் அந்தோ!
புன்பிறப் பதனில் வீழ்வார். (8)

உலக வாழ்வை உணர்க.

அண்ட கோடிகள் அளவில: அவற்றுள்ஓர் அணுவாய்க்
கண்ட இப்பெரும் கண்டமே காணியார்க் கையில்
கொண்ட போதினும், கொண்டுதான் போவதுஒன்றிலையே;
பிண்ட மாயிதன் இயல்பறிந்து ஒழுகுவர் பெரியோர். (9)

தினஅளவேனும் எண்ணுக.

வந்து வந்திந்த மண்ணினை ஆண்டு மண் ஆகி
முந்து போய்முடிந்து ஒழிந்தவர் தமைஎலாம் முறையே
சிந்தை யுள்ளுறத் தினையளவு எண்ணினும், செருக்கை
எந்த மன்னனும் எங்குமே கொண்டிடான் என்றும். (10)

யாவும் உடையவன் ஒருவனே.

யாவு மேமுழுது உடையவன் ஒருவனே; அவன்கை
மேவி யுள்ளதை உயிர்களின் நல்வினைக்கு ஈடாத்
தூவு கின்றனன்; அப்பெருந் தூவலில் சிலபேர்
கோவெ னப்பெயர் கொண்டிறை குலாவுகின் றாரே. (11)

தலைமையான அரசர் நிலைமை.

நீரில் தோன்றிய மொக்குளுள் பெரிதுன நிமிர்ந்து
பாரில் தோன்றிய நரர்களுள் அரசர்கள் பதிந்தார்;
காரில் தோன்றிய மின்னெனக் கடிதினில் மறைந்து
வாரிப் போமிதை வரவென மதிப்பர்கொல்? மதியோர். (12)

சிந்தனை செய்து தெளிக.

வந்த காரியம் எதற்குநாம் வருமுனம் எங்கே
சொந்தமா யமர்ந் திருந்தனம்? தொல்நிலை என்னே?
இந்த வாழ்விடை இரண்டுநாள் இருந்தபின் இனிமேல்
அந்த மாயடைந்து அமர்நிலை யாது? என அறியோம். (13)

துரும்புனச் சுழல்கின்றோம்.

* சண்ட வெங்கடுஞ் சுழலினுள் சார்ந்தமென் துரும்பு
விண்டி டாதுஅயல் அதன்வழி விரைந்துஒழி வின்றி
மண்டி ஓடிவெங் கறங்குன மறிந்துழன்று அலைந்து
தண்டி டாதுறல் போலுயிர் தனைமறந்து உழலும். (14)

---

* கொடிய சூறைக் காற்றில் அகப்பட்ட துரும்புபோல் பிறப்பு இறப்பு ஆகிய நெடிய சுழலில் சிக்கி சீவன் ஓயாது சுழன்று உழன்று திரிகிறது. அல்லலான இந்த அவலத் துய ரங்களை யாதும் அறியாமல் மருண்டு களித்து மயங்கி எவ் வழியும் மறந்து இழிந்து கழிந்து உழலுவது மாய மயக்கமாய் நீண்டுள்ளது. பொல்லாத இந்தப் புலைத்துயர் அடியோடு ஒழிவது என்று? தன்னைத் தெளிவாக ஒருவன் அறிய நேர்ந்த போதுதான் இந்த அழிதுயர் ஒழிய நேர்கின்றது.

தன்னை அறிவது என்றுல் என்ன? உடம்புள் உறைந் துள்ள உயிரை உண்மையாக உணர்ந்து தெளிவதே தன்னை அறிவதாம். உயிர் புனிதமானது; உணர்வுநலம் உடையது; என்றும் அழியாதது; எல்லாம் வல்ல இறைவனுடைய உற வாயுள்ளது; அந்தப் பரஞ்சோதியி லிருந்து சிதறிய சிறிய ஒரு ஒளித்துளியே சீவான்மா என மேவியுளது; இந்த உண் மையை உணர்வதே மெய்ஞ்ஞானமாம்: தூய இந்த ஞான ஒளி தோன்றியபோதே தீய மாய இருள் மாய்ந்து ஒழிந்தே போம்; போகவே ஏக பராபரமாய் இன்பம் பெருகி வரும்.

நிலைமையை நினைந்து தெளிக.

தனைமறந்து,தன் தலைமையை மறந்து,முன் நின்ற
நினைவு யாவையும் நீளவும் மறந்து,வெம் மாய
இனைய வாழ்வினை இடையினில் எதிர்ந்துளோம்; இதினும்
புனையும் நல்வினை புரிகிலம் ஆயின்என் புகுமோ? (15)

கல்வியும் செல்வமும்.

கல்வி யின்பயன் ஒழுக்கமும் அறிவுமே; கண்ட
செல்வ நன்பயன் ஈதலும் துய்த்தலு மேயாம்;
இல்லை யேல்அந்த இருபெருஞ் செல்வமும் இழிந்து
புல்லி தாகிய பழிமிகப் போக்கொடு போகும். (16)

ஒழுக்கம் உயிர்க்கு ஒளி புரிகிறது. அறிவு உடலை வளர்க்க உதவுகிறது. ஈதலும் துய்த்தலும் இம் முறையி லேயே உள்ளன. உண்மையை ஓர்க; நன்மையைத்தேர்க.

மூதறிவாளன்.

மன்னு யிர்க்கிதம் செய்பவன் மாநிலத்து என்றும்
தன்னு யிர்க்குயர் தனிப்பெரும் பதத்தினைத் தகவாய்
முன்னம் ஆற்றிடும் மூதறி வாளனே யாவான்;
அன்ன வன்உயர் நிலையினை யாரள விடுவார்? (17)

பெரிய மேன்மைகள் பெறுபவன்.

அரிய பேறுகள் அனைத்தையும் எளிதினில் எய்திப்
பெரிய மேன்மைகள் பெறஒரு வழியுளது; அதுதான்
உரிய தன்மனை அன்றிமற் றுள்ளவர் எல்லாம்
பிரியம் மேவிய தாய்தங்கை என்றுபே ணுதலே. (18)

கற்றவன் யார்?

பெற்ற தாய்எனப் பிறர்மனை எண்ணுவோன்; பிறர்கை
உற்ற ஒண்பொருள் ஓடுள உணருவோன்; உலகில்
மற்ற யாவையும் தன்னுயிர் ஆமென மதிப்போன்;
கற்றவன்; அவன் கருதரும் பேரின்பம் கண்டான். (19)

பிறவியின் பயன்.

அந்தம் இல்லதோர் ஆண்டவன் ஒருவனே நமக்குத்
தந்தை; இங்குள யாவரும் சகோதார் என்றே
சிந்தை செய்துமெய் அன்புடன் இதம்செய்க; சேர்ந்து
வந்த இப்பெரும் பிறவியின் பயனது வாமே. (20)

இந்தப் பாசுரங்களை வாசித்துப் பாருங்கள்; பொருள்களை யோசித்துச் சிந்தியுங்கள். உண்மையை உணர நேரின் உள்ளம் உருகித் தெளிய நேர்வர்.

உள்ளம் படியாமல் வெள்ளோட்டமாக இப் பாட்டுக்களைப் படித்துப் போகலாமா? அவ்வாறு போனால் ஒரு வார்த்தை ஏனும் நல்ல பலனை வார்த்து அருளுமா? தரும நீதிகளும், நெறி நியமங்களும், மானச நீர்மைகளும், ஆன்ம தத்துவங்களும் இக்காவியத்துள் எங்கும் பொங்கி இனிய சீவிய ஒளிகளை நன்கு வீசி யுள்ளன.

கவி.

கவி என்றால் என்ன? அரிய அறிவு நலன்களை மனிதனுக்கு இனிமையாக அருளி வருவதே கவி என மருவி வந்துளது. எழுத்து அசை சீர் தளை அடி தொடைகளால் அழகுற அமைந்து விழுமிய பொருள் வளங்கள் பொலிந்து உணர்வொளிகள் எங்கணும் விளங்கி வருவதைக் கவி என வழங்கி வருகின்றும்.

அறிவின் சுவைகள் கவிந்தது, அரிய கவின்கள் நிறைந்தது, பெரியோர் கவனத்தால் விளைந்தது என் பதைக் **கவி** என்னும் பெயர் விளக்கி யுளது. காரணக் குறி அதன் பூரணமான நிலைமையைத் துலக்கித் தலைமையோடு தழைத்துச் செழித்து நிற்கிறது.

உருவ அழகும் குணநலன்களும் நிறைந்த விழுமிய ஓர் அரச குல மகன்போல் நலமான கவி கம்பீரமாய் நிலவி உலாவுகிறது. உணர்வின் ஒளிகள் நிறைந்து உலகம் நலமுற வருவதே விழுமிய கவியாம்.

கவியின் நீர்மை.

புவியினுக்கு அணியாய் ஆன்ற
பொருள் தந்து புலத்திற்ருகி
அவியகத் துறைகள் தாங்கி
ஐந்திணை நெறி அளாவிச்
சவியுறத் தெளிந்து தண்ளன்று
ஒழுக்கமும் தழுவிச் சான்ரோர்
கவினைக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார். (இராமாயணம்)

கோதாவரி நதிக்குக் கவியை இவ்வாறு கவிஞர் பெருமான் நயமாக உவமை கூறியுள்ளார்.

உலகுக்கு அணி செய்வது; உயர் பொருள்கள் தருவது; உணர்வுநலம் உடையது; இனிய துறைகள் தோய்ந்தது; நெறி நியமங்கள் வாய்ந்தது; ஒளி மிகுந்து தெளிந்தது; நீர்மை சீர்மைகள் நிறைந்தது; தண்மையும் வண்மையும் உண்மையும் ஒழுக்கமும் தழுவியது என உணர்த்தி யிருப்பதைத் தனித் தனியே நுனித்து உணர்ந்து கொள்ள வேண்டும். பொருள் நயங்களை ஓர்ந்து வரும் அளவே தேர்ந்த தெருள் ஒளிகள் நேர்ந்து யாண்டும் ஆர்ந்த இன்பங்களை அருளி வருகின்றன.

கோதாவரி, சீவ நதி.

கவி, தேவ நிதி.

பயிர்களும் உயிர்களும் உவந்து வாழ்ந்து வர நதி நீர் எங்கும் என்றும் பரவி அருளுகிறது. மாந்தர் யாவரும் யாண்டும் பான்மை நிறைந்து மேன்மை சுரந்து மேலோராய் உயர்ந்து சால்போடு விளங்கி வரக் கவி எவ்வழியும் செவ்வையாய் அருள் புரிந்து வருகிறது.

சிறந்த ஆற்று நீர்க்கு உயர்ந்த கவி ஈண்டு உவமானமாய் வந்துள்ளது. நீர்மை சீர்மைகளைக் கூர்மையாய் ஓர்ந்து உணர்பவர் கவியின் மகிமை மாண்புகளைத் தேர்ந்து தெளிந்து கொள்வர். உவமேயத்தினும் உவமானம் உயர்ந்த நிலைமையும் தலைமையும் உடையது. இருவகை நிலைகளையும் துருவி உணர்பவர் பொருள்களின் இயல்புகளைத் தெளிவாகத் தேர்ந்து உள்ளம் உவந்து வியந்து கொள்ளுவர்.

நதி நீர் புற உலகை வளர்த்து வருகிறது;
கவி நீர் அக உலகை உயர்த்தி யருளுகிறது.
அது நிலத்தில் பாய்ந்து வருகிறது;
இது நெஞ்சத் தலத்தில் தோய்ந்து திகழ்கிறது.

சான்ரோர் கவி என்ற குறிப்பு இங்கே ஊன்றி உணர வுரியது. அரிய இனிய கவியை அருள உரியவர் யார்? என்பதை இப் பேர் தெரிய விளக்கி யுளது.

சான்ரோர் என்ற பதம் ஆன்ற பொருள்கள் உடையது. சால்பு என்னும் பண்பிலிருந்து இப்பெயர் தோன்றியுள்ளது. சால்பு = அமைதி; நிறைவு. அரிய பல குணநலன்கள் இனிது நிறைந்தபெருந்தகைமையாளரே **சான்ரோர்** என வான்தோய் புகழுடன் விளங்கியுள்ளனர். இத்தகைய உத்தமர்களிடமிருந்து உதயமாகி வருகிற கவிகளே உலக ஒளிகளாய் நிலவி வருகின்றன.

இன்பம் இனிது அருளுவது.

நிறையுடைக் கல்வி பெறுமதி மாந்தர்
ஈன்றசெங் கவிளனத் தோன்றிநனி பரந்து,
பாரிடை இன்பம் நீளிடைப் பயக்கும்
பெருநீர் வையை வளநீர்க் கூடல்
உடல் உயிர்என்ன உறைதரு நாயகன். (கல்லாடம் : 2)

வையை நதிக்குக் கவியை இவ்வாறு **கல்லாடர்** உவமை கூறியிருக்கிறார். மதுரை மாநகருக்கு உயிர்ஆய் ஒளி செய்து இருப்பது **சோமசுந்தரப் பெருமான்;**

இந்த நகருக்கு வளமாய் அழகு செய்துள்ளது வையை மாநதி; இந்நதி எத்தகையது? முத்தமிழ்த் துறையின் முறை போகிய உத்தமக் கவிஞர் அருளிய கவிபோல் சுவையாய் நீர்மை சுரந்துளது எனச் சீர்மையா விளக்கி யுள்ளார். விளக்கங்கள் வியந்து சிந்திக்க விளைந்தன.

பார்இடை இன்பம் நீளிடைப் பயக்கும் எனக் கவி யும், நீரும் இவ்வாறு காண வந்துள்ளன. பார் = பரந்து விரிந்துள்ள உலகம். உயிர்களுக்கு உயிராதாரமாயுள்ள நீருக்குக் கவியை உவமை காட்டியிருப்பது கருதியுணர வுரியது. உண்மை தெரியவரின் உவகை பெருகி வரும்.

தண்ணீர் தாகத்தை நீக்கும்; தளர்வைப் போக்கும்.
கவி சோகத்தை நீக்கும்; சுகத்தை ஆக்கும்.

உயிர் இனங்களுக்குச் சுகத்தை ஆக்கி வருவதில் நீரும் கவியும் ஒப்பாயினும் அதனினும் இது செப்பம் மிகவுடையது. அறிவின்பம் பெருகிவர ஆன்ம நலனைக் கவி அருளி வருதலால் இதன் உயர்வையும் ஒளியை யும் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

எற்பொரு நாகர்தம் இருக்கை ஈது எனக்
கிற்பதுஓர் காட்சியது; எனினும், கீழுறக்
கற்பகம் அனையஅக் கவிஞர் நாட்டிய
சொற்பொருள் ஆம்எனத் தோன்றல் சான்றது.

பம்பைப் பொய்க்கைக்குக் கவி இங்ஙனம் உவமை யாய் வந்துள்ளது. ஆழமான அந்த நீர் நிலை மிகவும் தெளிந்திருந்தது. அந்தத் தெளிவைத் தெளிவாக விளக்கி யிருக்கிறார். மேலான கவிஞர் அருளிய கவி ஆழமான பொருள்களை உடையது; ஆயினும் யாதும் ஐயுறுதபடி எவ்வழியும் தெளிவாய் ஒளி செய்து நிற்கும் உயர் நீர்மை வாய்ந்தது; ஆகவே அந்தத் தெளிந்த நீர் நிலைக்கு உயர்ந்தோர் கவி ஒப்பாய் வந்தது.

அரிய நீர் நிலைகள் இனிய சுவையாய் எவ்வுயிர்க் கும் இதம் பயந்து வருகின்றன. சீவாதாரமாயுள்ள தண்ணீரின் தகைமையைத் தெளிவாக விளக்குதற்குக்

கவியை இவ்வாறு ஆதாரமா இணைத்துக் காட்டியிருக் கிறார்; காட்டியுள்ள காட்சிகள் யாரும் கருதி உணர்ந்து உறுதி உண்மைகளை ஓர்ந்துகொள்ள நேர்ந்துள்ளன.

கற்பகம் அனைய அக்கவிஞர் என்றது அற்புதமான கவிகளை ஆக்கி அருளவல்லவர் யார்? என்பதை நோக்கி உணர வந்தது. உலகம் எல்லாம் உணர்ந்து என்றும் உவந்து வர விளைந்து வருகிற கவிகளின் விளைநிலம் விழுமிய நிலையில் தெளிவாய் விளங்கியுளது.

கற்பகம் என்பது இருபொருள் உடையது.

கருதிய எல்லாம் தருகிற தெய்வத் தருவையே **கற்பகம்** என்பர். கற்பு அகம் எனப் பிரித்துக் கல்வி நிறைந்து கலைஞானம் கனிந்துள்ள உள்ளம் உடையவர் கவிஞர் எனக் காண வந்தனர்.

உள்ளம் தூயராய் உண்மை தோய்ந்துள்ள நல்ல கவிஞரே யாவும் அறிந்து எல்லார்க்கும் இதமாய் யாண்டும் நல்லதைச் சொல்ல வல்லராகின்றார்.

"The true poet is all-knowing! he is an actual world in miniature." (Novalis)

"உண்மைக் கவிஞன் எல்லாம் அறிந்துள்ளான்; சிறிய உருவில் பெரிய ஒரு மெய்யான உலகமாய் அவன் மேவியிருக்கிறான்" என்னும் இது இங்கே அறிய வுரியது.

மக்கள் தக்கவராய் உயர்ந்து யாண்டும் சிறந்து எவ்வழியும் நல்லவராய் வாழவேண்டும் என்றே கவிகள் மிக்க உரிமையோடு போதித்து வருகின்றனர். அவருடைய போதனைகள் வேதனைகளை நீக்கி விவேகங்களை ஆக்கியருளுகின்றன. உயிர்கள் உயர்ந்து வர உள்ளங்களை உருக்கி உணர்வுகளை இனிது உதவி வருகின்றன. உணர்வின் ஒளிகள் உயர் நிலைகளை அருளுகின்றன.

"Poets, the first instructors of mankind." (Horace)

"கவிஞர் மனிதசாதியின் முதன்மையான போதகர்" என இது தெளிவாகப் போதித்துளது.

இத்தகைய வித்தக விவேகங்களை உலகத்துக்குப் போதிக்க வேண்டுமானால் கவிஞர் எத்தகைய உத்தம நிலையில் உயர்ந்திருக்க வேண்டும்!

"A poet's soul must contain the perfect shape of all things good, wise, and just." (Augustine)

"கவிஞன் உயிர் ஞானம் நீதி நன்மைகள் எல்லாம் பூரண உருவமாய்ப் பொலிந்திருக்க வேண்டும்" என இது புகன்றுள்ளது.

"Poetry is practical because it fosters sympathy."

வாழ்வின் அனுபவம் வண்கவி; ஆதலால்
சூழ்பரிவு நல்கும் தொடர்ந்து.

"Poetry was thought the most proper vehicle for conveying their knowledge to posterity." (Poetry)

மாந்தர் அறிவை வருங்கால மக்களுக்கு
ஏந்தி யருள்வது பாட்டு.

கவிகளையும் கவிஞர்களையும் குறித்து மேல்நாட்டார் கருதியுள்ள கருத்துக்கள் இவ்வாறு தெரிய வந்துள்ளன. யாவும் செவ்வையாக் கருதி உணர வுரியன.

செய்யுள் கவி பாட்டு தூக்கு பனுவல் யாப்பு என்னும் பெயர்கள் காரணக் குறிகள் உடையன. அரிய கலைஞானங்கள் கவிகளில் மருவி யுள்ளன.

வாய்மொழிகளின் வழியே தங்கள் வாழ்வுகளை மாந்தர் யாண்டும் நடத்தி வருகின்றனர். அந்த மொழிகளில் அருமையாய்த் தோன்றி வருகிற கவிகள் விழுமிய உண்மைகளைத் தெளிவாக விளக்கி என்றும் எங்கும் அவர்க்கு நன்கு ஒளி செய்து வருகின்றன. இத்தகைய கவிகளை அருள வல்ல வித்தக விவேகம் உள்ள உத்தமர்கள் யார்? நல்ல கவிஞர்களே.

கவிஞர்.

கவிஞர் என்பவர் எவர்? அவர் எத்தகைய நிலையினர்? கலையுலகில் இனிய உணர்வொளிகளை வீசி

அதிசய நிலையில் உலாவி வருகிற அரிய மேதைகளே பெரிய கவிஞர் எனப் பேர்பெற்று நிலவுகின்றனர்.

அறிவு நலன்களை வாரி வழங்கி வருகிற அளவு அவர் சீரும் சிறப்பும் பெற்றுச் சிறந்து திகழ்கின்றனர். மனித இனம் புனிதமாய் உயர்ந்து உய்தி பெறச் செய்து வருபவரே மெய்யான கவிஞராய் மேவி மிளிர்கின்றனர்.

திருவள்ளுவரைத் தெய்வப் புலவர் என்று வையம் துதி செய்து வருகிறது: ஏன்? மாந்தர் ஆந்துணையும் ஓதி யுணர்ந்து சாந்த சீலராய்ப் பேரின்ப நிலையை அடைய வுரிய நெறி முறைகளை வரன்முறையே அருளி யுள்ளமையால் கருணை வள்ளல் என அவரை யாவரும் உரிமையுடன் போற்றி வருகின்றனர். உலகம் போற்றி வர அவர் ஆற்றியுள்ளது எது? அது பெரிய ஓர் அதிசய நிலையாய் எவ்வழியும் திவ்விய ஒளிகளை வீசித் தேசுமீதூர்ந்து வருகிறது. அவருடைய எண்ணங்களைக் கவி உருவில் மருவாமல் வசன நடையில் எழுதியிருந்தால் அந்த நூலின் நிலை என்னும்? நிலைத்து நிற்குமா? கருத்துடன் எவரும் கருதி வருவரா? திருக்குறள் என்னும் பேர் வெளியே தெரிய வந்திருக்குமா? ஆயிரக் கணக்கான ஆண்டுகள் மாண்டு ஒழிந்தாலும் யாண்டும் மறையாமல், யாதும் குறையாமல், எவ்வழியும் பேரொளி வீசி நீண்டு நிலவி வருவது எதனால்? செய்யுள் உருவில் செய்தமையாலேதான் பொய்யாமொழி என்று பேர்பெற்று எவ்வழியும் மெய்யான ஒளிகளை வீசி யாண்டும் மேலோங்கி அது விளங்கி வருகிறது.

கவியுள் ஒரு தெய்வீக நிலை கனிந்துள்ளது. ஆகவே அத்தகைய உத்தமக் கவிகளை உலகம் நலமுற இயற்ற வல்லவர் தெய்வப் புலவர் என நேர்ந்தனர்.

"The poets are liberating gods." (Emerson)

"கவிஞர் சுதந்தர தேவதைகள்"

இந்த ஆங்கில வாசகம் ஈங்கு ஊன்றி உணர

வுரியது. அதிசய நிலைகளில் ஒளி புரிந்து வருபவர் எவ் வழியும் எவரும் துதி செய்ய நின்றனர்.

உலக ஒளிகள்.

சூரியன் சந்திரன் அக்கினி என்பன உலக இருளை நீக்கியருளும் ஒளிகளாயுள்ளன. இவை புறத்தே படர்ந் துள்ள வையக இருளை நீக்குமே அன்றி மக்கள் அகத்தே புகுந்துள்ள மடமை இருளை நீக்கா.

அஞ்ஞான இருளை நீக்கி யருளுவது மெய்ஞ்ஞான ஒளியே. இந்த ஒளிகள் மேலோருடைய மொழிகளின் வழியே வெளியாய் வருகின்றன. மேலோர் கருதி வந்த மேலான எண்ணங்களே நூல்களாய் ஞாலம் அறிய வந்துள்ளன: ஆகவே நூல்களின் சால்புகளை நன்கு தெரிந்து கொள்ளலாம்.

திருவள்ளுவருடைய அருள் வாக்கைப் பொய்யா மொழி என்று சொல்லுகின்றோம். ஏன்? வையமையல் களான வெய்ய இருள்களை நீக்கி யருளுதலால் அது மெய்யான ஒளியாய் மேவியுளது. உலக ஒளிகள் செய்ய முடியாத உயர் நிலைகளைக் கவிஞர் வாய்மொழி கள் யாண்டும் நயமாய்ச் செய்தருளுகின்றன.

உலகஇருள் நீக்கும் ஒளிகள், உயிரின்
கலகஇருள் நீக்கா; கவிஞர்—அலகில்
மருள்நீக்கி இன்பம் மருவ அருளித்
தெருளுக்கி நிற்பர் தெளிந்து.

வான சோதியான சூரியனாலும் செய்ய முடியா ததை ஞான சீலங்கள் தோய்ந்த நல்ல கவிஞர்கள் நன்கு செய்து எங்கும் இதம் புரிந்தருளுகின்றனர்.

“ரவி எறுகநி தாவு கவி எறுகுநு:
ரவி சேயநி பநி கவி சேசுநு.”

சூரியன் அறியாத இடத்தைக் கவிஞன் அறிகிறான்: அவன் செய்ய முடியாத தொழிலை இவன் செய்தருளு கிறான் எனத் தெலுங்கு மொழியாளரும் கவிஞர்களின் மகிமை மாண்புகளை இங்ஙனம் வழங்கி வருகின்றனர்.

"உத்யந்து சதமாதித்யா உத்யந்து சதமிந்தவ: [
நவிநா விதுஷாம் வாக்யைர் நச்யத்யாப்யந்தரம்தம: ll"

"நூறு சூரியர்கள் உதித்தாலும் நூறு சந்திரர்கள் தோனறினுலும் கவிஞர்களுடைய மொழி ஒளி இல்லையானுல் மாந்தர் அகத்துள்ள அஞ்ஞான இருள் ஒழியாது" என இந்த ஆரிய சுலோகம் கூறியுளது.

கதிரவன் கோடி மதியமும் கோடி
கதிர்களோ விரித்தெழுந் தாலும்,
அதிர்கடல் புடைசூழ் உலகிடை மனிதர்
அகஇருள் அகலுமோ? என்றும்
விதிமுறை ஒழுகும் நெறியுடை ஞான
வித்தகர் மொழிவழி விரியும்
அதிசய ஒளியே அகஇருள் நீக்கி
ஆனந்த நிலைகளை அருளும்.

இவை யாவும் இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியன.

உலக உயிர்களுக்குக் கவிஞர்கள் செய்து வருகிற அரிய உதவி நிலைகளைக் கருதி யுணர்பவர் அதிசயமடைந்து துதிசெய்து வருவர்.

"True poets are the guardians of the state." (Dillon)

"உண்மையான கவிஞர் உலக பரிபாலகர்" என இது குறித்துளது. நாடும் மக்களும் நலமுறப் பாடுபட்டு வருபவர் யார்? என்பதை ஈண்டு ஓர்ந்து உணர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்ளலாம்.

உலகம் முழுவதையும் தலைமையா ஆளும் அரசரினும் கவிஞர் தலை சிறந்தவர். உடலுக்குத் தலைபோல் உலகிற்கு அரசன்; அந்தத் தலைக்குக் கண்போல் அரசனுக்குக் கவிஞன் ஒளிபுரிந்துள்ளான். கவிஞனை உரிமையோடு போற்றுத அரசன் கண் இழந்த குருடனுய் இழிந்து கழிந்து அழிந்து ஒழிந்து போகின்றுன்.

தக்கவரைப் போற்றுதவர் தகாதவராய் ஒழிகின்றுர். எந்த நாடு அறிஞர்களைப் போற்றி வருகிறதோ, அந்த நாடே ஏற்றமான நல்ல நாடாம். அவ்வாறு போற்றுதது எவ்வகையும் பொல்லாத புலைக்காடே.

கவிஞர் உள்ளம் தூயராய் உணர்வொளி நிறைந்து யாண்டும் சுதந்திரமான தலைமையில் நிலவியிருத்தலால் எல்லாருக்கும் நல்லதைச் சொல்ல வல்லவராகின்றூர். நன்மை தோய்ந்து உண்மையாய் உயர்ந்தவரே பிறரைத் திண்மையா உயர்த்த முடியும்.

உயர்ந்த கவிகளிடம் இயல்பாகவே தெய்வத் திருவருள் சுரந்திருத்தலால் யாண்டும் அவர் தலைமையாகவே தகைமையுடன் நிலவி நிற்கின்றூர்.

The poet is not any permissive potentate, but is emperor in his own right. (Emerson)

"கவிஞன் எந்த அரசனுக்கும் அடங்கினவன் அல்லன்; தன் நிலைமையில் அவன் தலைமையான ஒரு சக்கரவர்த்தியே."

எமர்சன் என்னும் அமெரிக்க மேதை இங்ஙனம் குறித்திருக்கிறூர். எந்த நாடும் கவிஞர்களை எவ்வாறு போற்றி வந்துள்ளது! இன்றும் அவர்களை எவ்வகையில் பேணி வருகிறது? என்பதை இந்த உரையால் ஈங்கு அறிந்து சிந்தை தெளிந்து கொள்ளலாம்.

உண்மைக் கவிஞன்.

கவிஞன் பிறருடைய தயவை நோக்கி வாழ்பவன் அல்லன். எவரும் தன்னைப் புகழ்ந்து போற்ற வேண்டும் என்று எண்ணுபவனும் அல்லன். அவ்வாறு எண்ணினால் அவன் உண்மையான கவிஞனாயிருக்க முடியாது.

தன் உள்ளத்தில் பொங்கி எழுகின்ற நல்ல அறிவின் சுவையிலேயே கவிஞன் களித்துத் திளைக்கின்றூன். அவனது உவகை புனித நிலையில் பொலிந்து திகழ்கிறது. உள்ளம் தெய்வ ஒளியில் உலாவி வருகிறது.

அறிவானந்தம்.

அறிவின் நுகர்வில் ஆன்மானந்தம் மேன்மையாய்ப் பெருகி வருதலால் அதனைப் பருகி மகிழ்பவர் வேறு எதையும் விழையாமல் தனியே விலகி விடுகின்றனர்:

உள்ளத்திலிருந்து ஊறி வருகிற உணர்வின் சுவை பேரின்ப வெள்ளத்தின் கிளையாகிறது. ஆகவே அதன் அதிசய சுகம் தெளிவாய் அறியலாகும்.

அக நோக்கு, புற நோக்கு என நோக்குகள் இரு வகைகளாய்ப் பிரிவு கொண்டு பெருகியுள்ளன.

முன்னது மெய்ஞ்ஞான வழி.

பின்னது அஞ்ஞான விழி.

அது மெய்யான இன்ப நலன்களை அருளுகிறது.

இது பொய்யான மையல் மருள்களையே தருகிறது.

பொறிநுகர்வு

அருந்தல் பொருந்தல்கள் ஆகிய பொறிநுகர்வு களிலேயே யாவரும் வெறிகொண்டு திரிகின்றனர்.

அறிவின் சுவையை அறிவார் அரியர்.

ஒரு தேசத்தில் வாழுகின்ற மாந்தர் பண்பாடு படிந்து நல்ல மேன்மையான நிலையில் உயர்ந்துள்ளனரா? அல்லது புண்பாடு புகுந்து பொல்லாத கீழ்மையான புலையில் தாழ்ந்துள்ளனரா? என்பதைத் தெளிவாக அளந்து தெரிந்துகொள்ள வேண்டுமானால் அதற்குச் சரியான சிறந்த கருவி ஒன்று உள்ளது.

அந்த அளவு கருவி எது?

உணர்வின் இனிய சுவையே.

உணர்விலே சுவை காணுமல் உணவிலேயே சுவை கண்டு களித்துத் திரிகின்ற மக்கள் உருவங்களால் மனிதர்போல் தோன்றினும் அவர் உண்மையான மனிதர் ஆகார். புன்மையான ஒருவகை மிருகங்களே.

வாய் உணவையே அவாவி விழுங்கி வயிற்றை நிறைத்து உடலைக் கொழுக்க வளர்த்து ஊனமாய் இழிந்து கழிந்து உழந்து திரிகிற அந்தக் கூட்டத்தின் இருப்பு பூமிதேவிக்கு வெறுப்பான பெரிய ஒரு சுமையே. அருவருப்பான கொடிய நெடிய பாரமே.

அவர் இருப்பதை விட இல்லாமல் ஒழிவதே நல்லது; நல்லவர் எல்லாரும் இவ்வாறே சொல்லி யுள்ளனர்.

செவியின் சுவைஉணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்? (குறள்: 420)

இனிப்பு புளிப்பு கைப்பு கார்ப்பு உப்பு உறைப்பு என இவ்வாறு வாய் உணவிலேயே நசை மீதூர்ந்து உண்டு களித்து உழலுகின்றனர்; உயிர்க்கு இனிய அமுதமான சிறந்த உணர்வின் சுவையை யாதும் உணராமல் தீதாய் அலைகின்றனர்; அவல நிலையிலுள்ள அந்தப் புலை மிருகங்கள் இருந்தால் என்ன? செத்து ஒழிந்தால் என்ன? என்று வள்ளுவப் பெருமான் இப்படி உள்ளம் கொதித்து வைதுள்ளார்.

இந்தப் பொய்யா மொழியின் வேகத்தையும் விவேகத்தையும் மனத்துடிப்பையும் மானச மருமத்தையும் உணர்விழந்த வாழ்வின் ஊனத்தையும் உயிர் இரக்கத்தையும் குறிப்பையும் கூர்ந்து ஓர்ந்து உண்மை நிலை களைத் தேர்ந்து தெளிந்து கொள்ள வேண்டும்.

கலையின் சுவை உணர்வைத் தேவர் கருதி உவந்துள்ள உண்மை ஈண்டு நுண்மையாய் உணர வந்துளது. அறிவின் இனிய சுவைகளை அறியாமல் ஒழிந்த அளவே அந்த மனித சமுதாயம் இழிந்து கழிந்தது என்பதை இங்கே தெளிந்து கொள்கின்றோம்.

நல்ல அறிவின் சுவைகளை உணர்ந்து நுகர்ந்து உவந்து வருபவர் எவரோ அவரே உயர்ந்த மக்களாய்ச் சிறந்து திகழ்கின்றார். அறியாமல் ஒழிந்தவரோ பரிதாபமாய் இழிந்து பாழாய் அழிகின்றார்.

சிறந்த நாட்டு மக்கள் யார்?

இழிந்த காட்டு மாக்கள் எவர்?

மேலே வந்துள்ள காட்சிகளால் இந்தக் கேள்விகளுக்கு உரிய விடைகளைச் சரியாகத் தெளிந்து உணர்வு நலங்களை நன்கு ஓர்ந்து கொள்ளலாம்.

கலை அறிவின் சுவை நுகர்வைக் கொண்டே மேலோர்களின் நிலைகளையும், கீழோர்களின் புலைகளையும் கூர்ந்து ஆன்றோர்கள் தேர்ந்து கொள்கின்றனர்.

"Taste will be a proper standard to judge of a nation's improvement or degeneracy in morals." (Goldsmith)

அறிவின் சுவையால் அறியலாம் மாந்தர்
நெறியுயர்வைக் கீழ்மையை நேர்.

இந்த ஆங்கில வாசகத்தில் குறித்துள்ள பொருளைத் தனித் தனியே நுனித்து உணர்ந்து கொள்ள வேண்டும். ஓர்ந்து உணர்பவரே உண்மையான பொருள்களைத் தேர்ந்து தெளிந்து கொள்ளுகின்றனர். அகத்துள்ளே மகத்துவமாய் விளைந்து வருகிற அறிவின் பத்தை நுகர்ந்து வருபவர் சிறந்த மதிமான்களாய் உயர்ந்து வருகின்றனர். அந்த இனிய சுவை நுகர்வை இழந்தவர் மதிகேடராய் இழிந்து போகின்றார்.

மக்களும் மாக்களும்.

மக்களுள்ளே கல்லாதவரினும் கற்றவர் சிறந்தவர்; கற்றவருள்ளும் அறிவின் சுவையை உணர்ந்து சுகித்து வருபவர் அரிய பெரிய மேதைகளாய் உயர்ந்து திகழ்கின்றார். உணர்வு தெளிய உயர்வு மிளிர்கிறது.

தத்துவ ஞானிகள் ஆத்துமானந்தத்தை அனுபவித்துத் தனியே அமர்ந்து சாந்த சீலராய் மகிழ்ந்துள்ளனர்.

வித்தக விவேகிகள் அறிவானந்தத்தை அனுபவித்து நெறி நியமங்களோடு விளங்கி நிற்கின்றனர்.

உயர்ந்த கலையுணர்வின் சுவைகளை நுகர்ந்து உள்ளம் உவந்து வருதலால் வேறு எதையும் கவனியாமல் தனிமையாகவே கவிஞர்கள் இனிமையாயுள்ளனர். அவர்களுடைய சிறந்த எண்ணங்களின் எழுச்சிகளே கவிகளின் வண்ணங்களாய் உருவெடுத்து வருகின்றன. உலக மக்களுக்கு அவை உணர்வொளிகளையூட்டி உறுதிநலன்களைக் காட்டி யருளுகின்றன.

ஆதி கவி ஆகிய வால்மீகி முனிவர் தவவனத்தில் தனிமை இருந்தே இராமகாதையை இனிமையாகப் பாடியருளினார். அறிவின் சுவைகள் சுரந்து வர, ஆன்ம இன்பம் நிறைந்து வர அன்பு மீதூர்ந்து அவர் பாடியுள்ள பான்மையை அயலே வருகிற ஆரிய சுலோகம் சீரிய முறையில் மேன்மையா விளக்கியுளது.

கூஜந்தம் ராம ராமேதி
மதுரம் மதுராக்ஷரம்
ஆருஹ்ய கவிதா சாகாம்
வந்தே வால்மீகி கோகிலம். (வால்மீகம்)

"கவிதை என்னும் கற்பகதருவின் அற்புதக் கிளையில் அமர்ந்து ராம ராம என்று அதிமதுரமான மொழி கூவ இனிமையாக் கூவுகின்ற வால்மீகி என்னும் அழகிய குயிலை நான் வணங்குகின்றேன்."

அற்புதமான அதிசய காவியத்தைப் பாடியுள்ள முனிவரை இப்படித் துதிசெய்துள்ளனர்.

கோகிலம் என்றது இசையின் இனிமை கருதி. வசந்த காலத்தில் குயில் கூவும்போது அதன் தொனி மிகவும் இனிமையாயிருக்கும். இராம சரிதமாகிய அரிய சீவிய காவியத்தை யாவரும் ஓதியுணர்ந்து உய்யும்படி மதுரகீதமாய்ப் பாடியருளிய கவிஞர் திலகம் கோகிலம என நேர்ந்தார்.

பறவையாய்ப் பிறந்திருந்தாலும் இனிய கானத்தால் அரிய ஞானிக்குக் குயில் உவமையாய் வந்தது.

வாக்குநயத் தால்அன்றிக் கற்றவரை மற்றவரை
ஆக்கைநயத் தால்அறிய லாகாதே—காக்கையொடு
நீலச் சிறுகுயிலை நீடிசையால் அன்றியே
கோலத்து அறிவருமோ கூறு?

காக்கையும் குயிலும் உருவத்தால் ஒன்றுபோல் இருந்தாலும் குரலின் இனிமையால் குயில் மதிப்புறுகிறது; மனிதர் ஒத்த உருவத்தினராய்த் தோன்றினாலும் கற்றவர் மற்றவரினும் மாண்பு மிகப் பெறுகின்றார்.

அறிவு சொல் செயல்கள் இனிமை தோய்ந்து வரின் அந்த மனிதர் மகான்களாய் உயர்ந்து திகழ்கின்ரூர்.

அறிவின் சுவையிலேயே களித்துத் திளைத்து வருகிற கவிஞர் தனியே ஒதுங்கி இருந்துகொண்டு தாமாகவே உல்லாசமாய்ப் பாடி உவந்து வருகின்ரூர். தனிமையில் இனிமையை நுகர்ந்து வருதலால் அரிய இனிய கவிகளைக் கவிஞர்கள் இயல்பாகவே பாடிக் கொள்கின்றனர்.

"A poet is a nightingale who sits in darkness and sings to cheer its own solitude with sweet sounds."

(Shelley)

"கவிஞன் என்பவன் இரவில் ஏகாந்தமாய்த் தனியே அமர்ந்துகொண்டு தானேவே உவந்து பாடுகிற உயர்ந்த பறவை" என்று ஷெல்லி என்னும் ஆங்கிலக் கவிஞர் இவ்வாறு பாடியிருக்கிரூர்.

குயிலும் ஒயிலான குருவியும் கவிஞர்க்கு ஒப்பாய் வந்துள்ளன. அந்த அந்த நாட்டு நிலைகளும் தெரியவே நேர்ந்தன. கண்ட காட்சிகளையே யாண்டும் காட்டியருள்கின்றனர். உள்ளத்தில் தோய்ந்த அனுபவங்களே உரைகளாய் வெளிவருகின்றன. எந்த நாட்டிலும் கவிஞர்கள் எவ்வாறு இருப்பர்! அவர் எத்தகைய நிலையினர்! எவ்வகைய வாழ்வினர்! என்பதை ஈண்டு உய்த்து உணர்ந்து கொள்கின்ரேம்.

அவர்களுடைய இருப்பும் விருப்பும் வாழ்வும் சூழ்வும் வையம் உய்யவே வாய்ந்து வந்துள்ளன.

சிருட்டி கருத்தர்கள்.

உயர்ந்த எண்ணங்களை எண்ணிவரும் அளவே மாந்தர் சிறந்த மேலோராய் விளங்கி வருகின்றனர். அரிய பெரிய கருத்துக்களும் இனிய அறிவு நலன்களும் கவிகளிலிருந்தே உதயமாய் வருகின்றன.

இதிகாசங்கள், புராணங்கள், காவியங்கள், தருமநூல்கள், நீதிநூல்கள் என இன்னவாறு பேர் பெற்று

வந்துள்ள நூல்கள் எல்லாம் யாரிடம் இருந்து தோன்றி யுள்ளன? ஆன்.ற கவிஞர்களிடமிருந்தே பிறந்துள்ளன.

கலையுலகங்களுக்கும் அறிவுலகங்களுக்கும் கவிஞர் களே சிருட்டி கருத்தர்களாய் நிலவி நிற்கின்றனர்.

நல்ல அறிவால் மனிதர் நல்லவர் ஆகின்றனர்.

அந்த அறிவுநலன்களே நூல்கள் தருகின்றன.

அந்த நூல்களைக் கவிஞர்கள் அருளுகின்றனர்.

இந்த உண்மைகளே ஈண்டு ஓர்ந்து சிந்திக்கவேண் டும். கவிஞர்கள் இலரேல் நூல்கள் இல்லை; நூல்கள் இல்லையேல் நல்ல அறிவுகள் தோன்ரு. அறிவு இல்லாது ஒழியின் மனித இனம் முழு மூடமாய் இழிவடைந்து பழி படிந்து கழிந்து போம்.

மனிதன் மாடாய் இழியாமலும், நாடு காடாய் ஒழி யாமலும் கருணையோடு பாதுகாத்து வருபவர் யார்? கூர்ந்து ஓர்க! ஓர்ந்து உணர்க! நன்றியறிவுடன் தேர்ந்து தெளிக; தெளிவாய் ஒழுகி உயர்க!

வீர காவியம்.

இந்த நாட்டின் அதிசயமான வீர காவியமாய் இந் நூல் விளைந்து வந்துள்ளது. இதனை உரிமையோடு ஓர்ந்து உணர நேரின் எந்த நாட்டவரும் உண்மையைத் தெளிந்து தேர்ந்து உள்ளம் உவந்து வர நேர்வர்.

வீரபாண்டியன்.

வீரமா நகரம் என விளங்கி யிருந்த பாஞ்சாலங் குறிச்சியில் அமர்ந்து அரசுபுரிந்து வந்த வீர பாண்டியன் என்னும் மன்னனுடைய சீவிய வரலாறுகளையும், அவ ரது தம்பி ஊமைத்துரையின் அரிய வீரத் திறல்களையும் இக் காவியம் முறையே தெளிவா விளக்கியுளது.

வீரச் சுவைகளும் ஞான சீலங்களும் எங்கும் நிறைந் துள்ள இந்த வீரகாவியம் வீரபாண்டியம் எனக் காவிய நாயகன் பேரால் சீருடன் விளங்கியுளது.

முப்பத்திரண்டு படலங்கள் இதில் அடங்கி யிருக் கின்றன. மூவாயிரத்து எண்ணூற்றுப் பதிஞெரு கவிக ளால் இக்காவியம் மேவியுளது. நடந்த நிகழ்ச்சிகளை நேரே தெளிவாகப் படம் பிடித்துக் காட்டி யுள்ளமை யால் இந்தப் பாடல்களின் அதிசய ஆடல்களை யாவரும் கண்டு களித்துக் கதிநலம் காணுவர்.

உலக சரித்திரங்களும் தேச வரலாறுகளும் அரசி யல் வரிசைகளும் ஆட்சி முறைகளும் அதிகார நிலை களும் வாழ்க்கை வகைளும் காலச் சூழல்களும் அதிசய விசித்திரங்களாய்த் தோன்றியுள்ளன.

தோன்றின மறைந்து போகின்றன; மறைந்தன தோன்றி வருகின்றன; பழையன கழிந்து ஒழிகின்றன; புதியன கிளர்ந்து எழுகின்றன.

இயற்கை விநோதங்கள் இன்னவாறு எங்கணும் காலத்தின் கோலங்களாய்க் கலித்து வருகின்றன.

ஆங்கிலேயர் ஈங்கு வந்தது.

கி பி. 1792ல் இந்த நமது பாரதபூமி ஆங்கிலேயர் கைவசம் ஆயது. வணிக முறையில் பொருள் ஈட்டக் கருதி ஈங்கு வந்த வெள்ளையர் பின்பு அரசாள நேர்ந் தனர். கால வேற்றுமையால் யாவும் மாறுபட்டு வேறு பாடு அடைந்து வருவதை ஞாலம் பார்த்து வருகிறது.

இந்தத் தேசத்தின் வீர சரித்திரமாய் விழுமிய நிலையில் இது தேசு மிகுந்து வந்துள்ளது.

கி. பி. 1798 முதல் 1801 வரை பாஞ்சாலங் குறிச்சியாருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த கடுமை யான போராட்ட வரலாறுகளை இதில் பாராட்டப்பட் டுள்ளன.

அதிசயமாய் நடந்த சரித்திரம் மதிநலம் சுரந்து வந்துள்ளமையால் யாவரும் இதனைத் துதி செய்து விழைந்து பயின்று வியந்து மகிழ்ந்து வருகின்றனர்.

வங்காளம் மகதம் மராடம் விராடம் கூர்ச்சரம் முதலிய வடநாடுகள் எங்கணும் யாதொரு எதிர்ப்பு மின்றி ஆங்கிலேயர் யாவும் கவர்ந்து கொண்டு களித்து ஆரவாரமாய் நீண்டு இத் தென்னாட்டை அடைந்தனர்.

பாஞ்சை மன்னன் மூண்டது.

வீர பாண்டியன் ஒருவனே ஈண்டு மூண்டு எதிர்த்தான். முனைந்து பொருதான். முதலில் வெற்றி பெற்றான். முடிவில் சதி வஞ்சனைகளால் மாண்டு போனான்.

அதன் பின்பு ஊமைத்துரை உருத்து எதிர்த்து உக்கிர வீர பராக்கிரமமாய்ப் போராடினான். இந்த வீரனுடைய அதிசய ஆற்றல்களை நோக்கி வெள்ளையர்கள் எல்லாரும் உள்ளம் கலங்கினர். படைகள்மேல் படைகளாய் வெள்ளம்போல் மூண்டு வந்தன. மூன்று முறை வந்த சேனைகள் மாண்டுபட்டன; முடிவில் கொடிய சதி புரிந்து கோட்டையைக் கவர்ந்துகொண்டனர். இவ்வீரன் 2600 படை வீரர்களோடு வெளியேறி மறைந்தான்.

கி. பி. 1801 மே மாதம் 24ந் தேதி மாலை 6 மணி அளவில் இந்த வெளி ஏற்றம் நேர்ந்துள்ளது. அந்த வீரத் திறல்களையும் போராட்ட நிலைகளையும் கருதியுணர்வார் எவரும் உள்ளம் உருகி மறுகுவர்; உரிமை மீதூர்ந்து பரிவு கூர்ந்து வருவர்.

யாவும் கருதி உணர்க.

இமயம் முதல் குமரிவரையும் இந்தப் பரத கண்டத்துள் ஆங்கிலேயரை நேரே மூண்டு எதிர்த்தவர் யார்?

முனைந்து பொருதவர் எவர்?

பெரிய வெள்ளைத் தளபதியைக் கைதியாகப் பிடித்து வந்து தன் கோட்டையுள் எந்த மன்னன் இந்த நாட்டில் சிறை வைத்திருந்தான்?

அந்தத் தானைத் தலைவன் மனைவி வந்து மறுகி வேண்டிய பொழுது உள்ளம் இரங்கி உடனே விடுதலை செய்து உதவி புரிந்தருளிய வீர வள்ளல் யார்?

பகைவராய் மூண்டு போராட நேர்ந்த வெள்ளை யரும் உள்ளம் வியந்து உவந்து புகழ்ந்துள்ளது யாரை?

"One of the most extraordinary mortals I ever knew" (R. G.)

"நான் அறிந்த எவரினும் இவர் மிகவும் அதிசயமான ஓர் அற்புத மனிதர்" என்று ஊமைத்துரையைக் குறித்துச் சேனைத் தலைவன் ஆன சீமைத்துரை உள்ளம் திறந்து இப்படி உரைத்திருப்பது எத்தகைய மதிப்பு! எத்தனை வியப்பு! இத்தகைய வீரத்திறல்களை உய்த்துணர்ந்து ஓர்ந்து சிந்திக்க வேண்டாமா?

இந்த நாட்டு அரசினரும் இளைஞரும் முதியரும் மகளிரும் இந்த வீர காவியத்தின் மகிமை மாண்புகளை உரிமையுடன் மதித்துப் போற்ற வேண்டாமா?

தேசத்துக்காக மான வீரத்தேடு செய்துள்ள நன்றியை மறக்கலாமா? மறவாமல் மதித்து வருவதே நாட்டுக்கு மதிப்பாம்.

அயலே வருகிற ஆங்கிலக் குறிப்பைப் பாங்கோடு படித்துப் பரிவோடு சிந்திக்க வேண்டும்.

"For the most disinterested and purest patriotism"

"சிறிதும் தன் நலம் கருதாத பரிசுத்தமான தேசாபிமானத்துக்காகவே" இவர் போராடி அரசை இழந்துள்ளனர்.

ஆங்கிலப் படைகளின் தளபதி குறித்துள்ள இந்த ஆங்கில வாசகத்தை ஊன்றி உணர்பவர் உள்ளம் தெளிந்து உருகிப் போற்றுவர்.

* பகைமை யாளர்களும் பரிந்து வியந்து புகழ்ந்து போற்றும்படி இவ்வீரர்களுடைய வீர வரலாறுகள் விழுமிய நிலையில் விளங்கியுள்ளன.

---

*பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் முதல் பாகமும், இரண்டாம் பாகமும் 800 பக்கங்கள் உடையன. அரிய பல ஆராய்ச்சிக் குறிப்புகளுடனும் ஆங்கில ஆதாரங்களுடனும் தெளிவான இனிய வசன நடையில் வெளிவந்துள்ளன. அந்த இரண்டு தொகுதிகளையும் அறிந்துகொண்டால் இந்த வீர காவியத்தின் கவிகளில் சுவை சுரந்து வந்துள்ள சரித்திரத்தைத் தெளிவாகத் தெரிந்துகொள்ளலாம்.

இந்நாட்டு வீரம் எந்நாட்டுக்கும் பேரொளியை நீட்டிப் பெரு மகிமைகளை விளக்கியுள்ளது. அந்த உண்மைகளை எல்லாம் இந்த வீர காவியத்துள் வியந்து விழைந்து கண்டு உணர்ந்து உவந்து கொள்ளலாம்.

வீரம் கொடை நீதி ஞானம் முதலிய மேலான கீர்மைகளில் இந்த நாடு பண்டு தொட்டே மேன்மை அடைந்து வந்துள்ளது. ஆடவரே அன்றிப் பெண்டிரும் பேராண்மையைப் பேணி வந்துள்ளனர். அந்த உண்மை களைப் பழைய தேச சரித்திரங்கள் கிழமையாய்க் கிளர்ந்து காட்டி யுள்ளன. அவற்றுள் ஒன்றை இங்கே காண வருகின்றோம்.

ஒரு மகனைப் பொருமுகம் உய்த்த தாய்.

ஒருமகன் அன்றி வேறே உறுதுணை யாதும் இல்லாள்;
மருவலர் வந்த போது மன்னவற்கு உதவி ஆகப்
பொருமுகம் புகுந்து போரில் பொருதுவா! என்று சேயைப்
பரிவுடன் உய்த்த தாயர் பலர்இங்கே பண்டிருந்தார்.

குறிப்பு.

ஒரு முதியவள்; மதிநலம் உடையவள்; மானமும் வீரமும் மருவிய உருவினள். அவள் மரபில் பிறந்த ஆடவர் எவரும் வீரர்கள் ஆதலால் வீரக்குடி என அந்தக் குடும்பம் சீருடன் விளங்கி வந்தது.

பகைவரால் தன் நாட்டுக்கு நேர்ந்த கேட்டை நீக்க அவள் தந்தை போருக்குப் போனான்; மூண்டு பொரு தான்; முடிவில் மாண்டு போனான். சில ஆண்டுகள் கழிந்தன. பின்பு ஒரு போர் நேர்ந்தது: அதில் அவளு டைய கணவன் சென்று அடலாண்மைகளோடு அமராடி னான்; எதிரிகள் பலரை முதிர் வேகத்தோடு வென்றான்; இறுதியில் அங்கே அவன் இறந்து போனான்.

அதன் பின்பு ஒரு பெரும் போர் மூண்டது. அரசுக் கும் தன் நாட்டுக்கும் உதவி புரிய வேண்டுமே! என்று அந்தக் கிழவி எண்ணினாள். தனக்கு ஒரே ஒரு மகன் இருந்தான்; அவனுக்கு அப்பொழுது இருபது வயது

கூட நிறைய வில்லை. தனது அருமை மகனை உரிமையுடன் அழைத்தாள்: "மகனே! இன்று நீ போருக்குப் போக வேண்டும்; யாருக்கும் அஞ்சாத வீரக் குடியில் பிறந்த நீ விரைந்து செல்க; வென்று வருக!" என்று பணித்தாள். அவனும் ஆர்வத்தோடு உவந்து இசைந்தான். இசையவே அவனது தலையை வாரி முடித்தாள்; வெள்ளை வேட்டியை எடுத்து அவன் இடையில் இறுக்கி உடுத்தினாள். கூரிய வேலாயுதத்தைச் சீருடன் போற்றி அவன் கையில் கொடுத்தாள்: "செருமுகம் சென்று செறுநரை வென்று வெற்றி பெற்று வருக!" என்று வேல் முருகனைக் கருதி உறுதியோடு விடுத்தாள்.

"செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து, வெளிது விரித்து உடீஇப்,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!"

ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நாடு இருந்த நிலைமையும், வீர மக்களும், வீரத் தாயரும், வீறுடன் விளங்கி நின்ற தலைமையும் கண்டு உளம் மிக வியந்து கொள்கின்றோம். உரைகளில் மருவியுள்ள உணர்ச்சிகள் வீர ஒளிகளை வெளியே வீசியுள்ளன. யாவும் கருதியுணர உரியன.

செருப்பறை = போர் முரசம்.

வெளிது = வெள்ளையான ஆடை.

உடீஇ = உடுத்தி.

பாறுமயிர் = சிதறியிருந்த உரோமம்.

குடுமி = சிகை; மயிர்முடி.

செல்க = சென்று வென்று வா.

விடுமே! என்றதிலுள்ள ஏகாரம் வியப்பை விளைத்துளது. தொனிக் குறிப்புகள் நுனித்துணரத் தக்கன.

வென்று மீளுக.

போரிடைப் பொருது வென்று புகழுடன் மீள்க; அன்றேல்
சீருடை அரசும் நாடும் திசைகளும் இசைமீக் கூர
நீருடை உலகில் நின்பேர் நிலைத்திட நேரே மாள்க;
பாரிடை நின்னை ஈன்ற பயன் எனக்கு அருள்க என்றுள்.

குறிப்பு.

ஒரு வீரத்தாய் தன் மகனைப் போருக்கு அனுப்பும் போது இவ்வாறு கூறியுள்ளாள். உரைகளில் உறைந் துள்ள உறுதி நிலைகளையும் உணர்ச்சிகளையும் வீரத் துடிப்புகளையும் ஓர்ந்து உணர்பவர் உள்ளம் பரிந்து வியந்து கொள்வர்.

பகைவரைப் போரில் வென்றுல் வெற்றித் திருவுடன் மீண்டு வருக; வெல்ல முடியவில்லையானுல் உன் வீரப் புகழ் விண்ணும் மண்ணும் விளங்கி வர ஆண்டே மாண்டு போக! என்று மான வீரருடு உரைத்திருக் கிறுள். பெற்ற தாயின் வீரம் பிள்ளைப் பாசத்தையும் கடந்து வெற்றி வீரருடு விளங்கியுள்ளது.

இத்தகைய தாய்மார்களின் தங்கக்கட்டி வயிறுகளி லிருந்தே அத்தகைய சிங்கக் குட்டிகள் பிறந்து வந்துள் ளன. வீரர்களுடைய பிறப்புகளும் சிறப்புகளும் வினத் திறங்களும் வியப்புகளை விளைத்து வருகின்றன.

போரில் ஏறினுன் புகழில் ஏறினுன்.

ஆர்ந்தபேர் அரசுக் கேனும் அரியதன் நாட்டுக் கேனும்
நேர்ந்தபேர் இடரை நீக்க நெஞ்சுரம் தோய்ந்து நேரே
ஓர்ந்துபோய்ப் போரில் ஏறும் ஒருவனே உலகில் என்றும்
தேர்ந்துயர் புகழில் ஏறித் தேசுடன் திகழ்வன் நின்றே.

குறிப்பு.

ஒரு மனிதன் ஆற்றி வருகிற அரிய பெரிய செயல் களால் அவன் பெயரை உலகத்தார் உவந்து புகழ்ந்து வருவது புகழ் என வந்தது. இசை பெற வாழ வில்லையா னுல் அந்த வாழ்வு எந்த வழியும் இழிந்து வசையுற

நேர்கிறது. வாழ்வு மணம் பெற வாழ்ந்தவனே வையம் வணங்கி வாழ்த்த வருகிறான்.

சிறந்த பிறவிக்குப் பயன் உயர்ந்த புகழை அடைந்து கொள்வதேயாம். கல்வி அறிவு கொடை சீலம் முதலியவற்றால் புகழை அடையலாம்; ஆயினும் வீரத்தால் விளைந்து வருகிற புகழையே ஞாலத்தார் விரைந்து வியந்து போற்றி வருகின்றனர்.

அரசுக்கும் நாட்டுக்கும் இடையூறாக மாற்றார் மாறுப்ப் போராட மூண்டபோது அவரை எதிர்த்து நேரே வீறோடு போராடி வென்று தேச மக்கள் யாவரையும் பாதுகாப்பவர் வீரர்களே ஆதலால் அவருடைய பேரும் புகழும் எங்கும் பெருகி விளங்குகின்றன.

பகைவரைப் பொருது வெல்ல நேர்தல் அரிய செயல் ஆதலால் அதனைச் செய்தவர் பெரிய வெற்றி வீரராய்ப் பெரும் புகழ் பெற்று நிற்கின்றனர்.

போரில் ஏறினன் புகழில் ஏறினன் என்றதனால் அந்த ஏற்றத்தைப் பெற வுரியவர் வீரரே என்பது இங்கு நன்கு விளங்கி நின்றது.

பிறந்த பிறப்பு சிறந்த வீரத்தால் உயர்ந்து வருகிறது. நெஞ்சம் அஞ்சாமை, நிலைகுலையாமை, நேர்மை முதலிய நீர்மைகளே வீரர்களின் சீர்மைகளாய் விளங்கியாண்டும் வியனு விரிந்து வந்துள்ளன.

வில்லாலும் சொல்லாலும் உலகை எல்லாம்
வெல்லவல்ல வீரர் ஆன
நல்லார்கள் பலர்தோன்றி நண்ணிநின்ற
நன்னாடே நந்நாடு என்ன

எந் நாடும் இந் நாட்டை இன்னவாறு வியந்து புகழ்ந்து வர இது சிறந்து உயர்ந்து வந்துள்ளது.

இந்த நாட்டு வீரர்களுடைய அருந்திறல் ஆண்மைகளும் பெரும் போர் மேன்மைகளும் யாண்டும் அதிசய

நிலைகளில் தோன்றியுள்ளன. அந்த வீர வரலாறுகள் யாரையும் தீரர்களாக்கி யருளுகின்றன.

பெண்களும் தீரமான மக்களையே ஆர்வம் மீதூர்ந்து போற்றி வந்துள்ளனர். சிறந்த வீரத் தாயர்களிடம் இருந்தே உயர்ந்த வீரர்கள் விளைந்து வந்துள்ளனர். அந்த உண்மைகளைச் சங்க நூல்கள் எங்கும் நன்கு துலக்கி வருகின்றன.

எந்த நாடும் வீரத்தை வியந்து போற்றி வந்துள்ளதை அந்த அந்த நாட்டுச் சரிதங்கள் காட்டி நிற்கின்றன.

பிரஞ்சு தேசத்து அரசன் ஆன நெப்போலியன் தன் ஆட்சிக் காலத்தில் தன் நாட்டில் யாண்டும் வீரர்களே பெருகி வர வேண்டும் என்று பெரிதும் விழைந்து முயன்று வந்துள்ளான். அதற்கு வேண்டிய முயற்சிகளை எல்லாம் உயர்ச்சியாக அவன் ஆற்றி வந்தான்.

"None but the brave deserve the fair."

ஏர்எழில் மங்கையர்க் கேற்ற கணவர்கள்
வீரரே வேறே இலர்.

ஆங்கில நாட்டவரும் வீரர்களைப் பாங்கோடு மதித்துப் போற்றி வந்துள்ளதை ஈண்டு இதனால் அறிந்து கொள்கிறோம்.

நாட்டுக்கு வீரரே நல்ல அணி.

என்னும் இது இங்கே நன்கு சிந்திக்க வுரியது.

ஒரு தேசத்துக்குச் சிறந்த பாதுகாப்பாளராய் விளங்கி நிற்பவர் வீரர்களே ஆதலால் அவர்களுடைய விழுமிய நிலைமைகளைத் தலைமையாக அறிந்து வியந்து கொள்கின்றோம்.

பண்டைக் காலத்தில் இந்த நாட்டில் விளங்கியிருந்த வேந்தர்களையும் வீரர்களையும் ஓர்ந்து உணர்பவர் நீதி முறைகளையும் நெறி நியமங்களையும் தீரதைரியங்களையும் தேர்ந்து தெளிந்து வியந்து வருவர்.

ஒரு தேசத்தில் நடந்துள்ள வீர வரலாறு காலம் இடம் தொழில் பெயர் முதலிய நிலைமைகளை எல்லாம் தெளிவாக விளக்கி வருதலால் அவை வருங்கால மாந் தர்க்குக் கலங்கரை விளக்கங்களாய் நின்று நலம் பல நல்கியருளுகின்றன. ஊக்கங்களை ஊட்டி ஆக்கங்களை ஆக்குகின்றன: ஆற்றல்களை ஏற்றமாய் ஆற்றி வரு கின்றன. அறிவு நலன்களை உறுதியாத் தருகின்றன.

உள்ளத்தின் அளவே உயர்வுகள் உளவாகின்றன.

நல்ல சிந்தனைகளே எல்லா நன்மைகளையும் நன்கு அருளி எங்கும் இன்பம் சுரந்து வருகின்றன.

சத்தியம் கருணை தருமம் மானம் வீரம் ஞானம் ஆகிய இந்தப் புனித நீர்மைகளை மருவியுள்ள மனிதரே எவ்வழியும் என்றும் மகிமை எய்தி வருகின்றனர்.

இந்த நாடும் மக்களும் நலம்பல எய்தி யாண்டும் பெருமை பெற்றுவர ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.

திருவள்ளுவர் நிலையம் செகவீர பாண்டியன்.
மதுரை.
1—1—67.

காவியம் தந்தது.

மான வீரம் மருவி மதியுயர்
ஞான சீலம் பெருகிஇந் நாட்டினை
வான மாக வளர்ப்பவர் யாவர்க்கும்
தான மாகஇக் காவியம் தந்துனேன்.

———

காவிய மாட்சி.

வீரகா வியம்என விளைந்து வந்துள
ஆரமு தாமிதை ஆய்ந்து கொள்பவர்
பாரகா வியம்பல பயின்ற பண்பெலாம்
சேரவே தெளிவுடன் சிறந்து வாழ்வரே.

உ

பரம பதி துணை.

பாஞ்சாலங்குறிச்சி விரகாவியம்

என்னும்

வீரபாண்டியம்.

கடவுள் வாழ்த்து.

1. உலகம் யாவையும் ஈன்றரு ளோங்கிய
திலகம் ஆகிய தேவியை மேவியே
அலகில் இன்ப அருள்வினை யாடல்செய்
தலைவன் தந்தருள் தந்தியைப் போற்றுவாம். (க)

இதன் பொருள்.

திலகம் என்றது அகில லோக நாயகியாய்த் தலைமை எய்தி நிற்கும் நிலைமை கருதி. உமாதேவியை மேவி அலகில் ஆடல்கள் புரிந்து சகல சிவ கோடிகளும் அண்ட கோடிகளும் இனிதியங்கத் தனியமர்ந்துள்ள பரமபதி தந்த கணபதியை உரிமையோடு உளமுவந்து போற்றுவாம் என்றவாறு. தந்தி=யானை. அதன் முகத்தையுடைய விநாயக மூர்த்தியை ஈண்டு அது உணர்ந்தி நின்றது. தாய் தந்தை சேய் என நேயத்தோன்ற நினைந்துள்ள வமையால் இக்காவியம் ஆய்வார் மக்கள் சம்பத்துடன் ஒக்கலும் உறவும் நினைந்துப் பக்கம் தழைத்துத் தக்க செல்வங்கள்பெற்று மிக்க இன்பங்கள் துய்ந்து மேன்மையோடு மேவி இருப்பர் என்பதாம்.

காப்பு.

2. தேசு பூத் தொளிர்மதி திகழு மாமுடி
ஈசன்முன் அருளதின் றெவரும் எங்குமுன்
பூசனை செயவருள் போத யானையென்
வாசகம் இசைபெற வந்து காக்குமே. (உ)

இ—ள்

போத யானை என்றது ஞான நாயகனைய் யானைமுக மேவி வானமும் வையமும் உய்ய மருவியுள்ளமை கருதி. போதம்=அறிவு. ஈசன் முதல் யாவரும் போற்ற வீற்றிருக்கும் விநாயகன் எனது வாசகம் இசைபெற வந்து காக்கும் எனக் காப்புக் கூறிய படியிது. இதனல் இக்காவியம் இனிது நிறைவேறித் தெய்வ மணம் கமழ்ந்து செவ்விய புகழ் சிறந்து எங்கும் நிலவியமாய் நிலவித் தேசோடு திகழ்ந்து நிற்கும் என்பது தெளிவாம்.

முருகக்கடவுள் துதி.

3. நீர்க்கடல் சூலாவிய நிலத்து நின்மலன்
பாற்கடல் அருளினன் பாலனுக் கென்பர்
சூர்க்கடல் குடித்தவேற் சோதி வானவன்
கார்க்கடல் கொடுத்தனை காலும் ஆளுமே. (ங)

இ—ள்

பாலன் என்றது உபமன்யு முனிவரை. அவர் பசுங்குழவியாய்ப் பசித்தழுதபொழுது பரமன் அருள்கூர்ந்து அவர்க்குப் பாலாழி யீந்தாராதலால் அவ்வள்ளன்மையை உள்ளி இது கூறியதென்க. "பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்" எனத் திருப்பல்லாண்டு கூறுவதும் காண்க. சூர்=சூரபன்மன். கடல் என்றது அளவிடலரிய பலமுடையனை யார்க்கும் அச்சம் விளைத்து உச்ச நிலையில் ஓங்கியிருந்த அவனது உறுதி நிலை கருதி. குடித்தவேல் என்றது விடுத்தவுடனே நீரறச்சுவற்றிய வடவைபோல் சூராதி அசுரரனைவரையும் வேரற மாய்த்த அதன் விறல்நிலை நோக்கி. கார்=அன்பு. பரமன் பண்டொரு பாலனுக்குப் பால் அருளினர்; முருகன் இன்று இந்நாலனுக்கு அன்பு அருளினர் என்றவாறு. பால் உடலை வளர்த்து உணர்வளிக்கும்; அன்பு, உயிரை உயர்த்தி உயர்கதி யுய்க்கும் என்க.

சரசுவதி துதி.

4. பூமிசை யமர்ந்தருள் போதன் செவ்விய
நாமிசை யமர்ந்தருள் நளின நாயகி
தோமிசை யாவகை சுரந்து பொங்குமென்
பாமிசை யமர்ந்தருள் பாலித் தாளுமே. (ச)

இ—ள்

போதன்=பிரமா. நளினம்=தாமரை. நளின நாயகி என்றது வெண்டாமரையில் வீற்றிருந்து அண்டர்முதல் யாவருக்கும் அறிவுத் தெய்வமாய் நிலவி நிற்கும் தலைமை கருதி. தோம்=குற்றம். இசையாவகை=குற்றம் யாதும் இல்லாதவாறு. என்றதனால் குணநலங்கள் யாவும் குலவி யுள்ளன என்பது புலனும். யாதொரு வழுவுமின்றி விழுமிய நிலையில் அழகிய கவிகள் விரைந்து விளைந்து வந்த நிலை சுரந்துபொங்கும் என்றதனால் அறியலாம். கல்விச் செல்வியாகிய சரஸ்வதி தேவி அருள் சுரந்து என்னை ஆதரித்து ஆளுதலால் பொருள் பொதிந்த இந்நூல் புனித நிலையில் பொலிந்து இனி தெழுந்த தென்றவாறு. பாலித்து ஆளும் என்றதனால் ஊழியும் இது ஒளி செய்து நீளும் என்பது பெற்றும்

குரு வணக்கம்.

5. இலக்கண முத்தெனும் இனிய பேரொடு
நிலக்கணேர் உருவமாய் நேர்ந்து நின்றுமுன்
புலக்கணைற் கருளிய புனிதன் ஈண்டொரு
வலக்கணைய் நின்றுநல் வழியைக் காட்டுமே. (நு)

இ—ள்

இந்நூலாசிரியருடைய குருவின் பெயர் இலக்கண முத்தையா என்பது. புலம்=அறிவு. கண் என்றது கருத்துப் பொருளைத் திருத்த முறக் காணும் அக்காட்சியின் மாட்சி கருதி. புலக்கண் அருளிய புனிதன், வலக்கணையாய் நின்று வழியைக் காட்டும் என்றதனால் கருதிய துறையில் எனிது சென்று எதையும் இனிது கண்டமை காணலாம். தெய்வ அருளும் குருவின் பலமும் கொண்டு இக்காரியம் செய்கின்றேன் ஆதலால் இவ் அருமைநூல் இனிது முற்றி எவர்க்கும் இன்பம் பயந்து நிற்கும் என்பதாம்.

நூல் நிலை.

6. வீரமாக் கதையொன்று விளம்ப எண்ணியென்
பேரன்மார் கதைகளே பேச முந்தினேன்
வாரமொன் றுரைத்திடேன் வாய்மை குன்றிடேன்
சீரறி வுடையவர் தெளிவர் உண்மையே. (சு)

7. காட்டையும் நகரையும் வருணித் தீண்டென்றன்
பாட்டையும் பாட்டையும் பரப்பி டாமலே
கோட்டையுண் டானதும் கோவ மைந்ததும்
வேட்டைமேல் விளைந்ததும் விளம்பு வாமரோ. (எ)

8. வீட்டரும் புகழ்ச்செக வீர பாண்டியன்
நீட்டரு மெய்ப்புகழ்ச் சரித மீதிலென்
பாட்டெது வாயினும் பரிந்து வந்தெந்த
நாட்டவ ருநம்இதை நயந்து கொள்வரே. (அ)

9. தண்டமிழ்த்திரு நாட்டிடைத் தங்கியெம்
மண்டலங்களும் மண்டு பெரும்புகழ்
விண்டலர்ந்த மலர்களைத் தொண்டையர் யாவிஃ
தண்டமிழ்த் தெய்வமாலிர் தாரும் அவனிக்கே. (கூ)

---

7. பாற்கொலை பெருக்கிப் பக்கம் பரப்பாமல் சுருக்கியுரைத்துள்ளமை தெளிவியபடியிது. பாட்டுடைத்தலைவனுள் முன்னது பாடல்; பின்னது உழைப்பு.

10. பிறந்த நாட்டினைப் பெற்றதன் தாயினைச்
சிறந்த தில்லெனச் சீறி யிகழ்ந்திடார்;
இறந்தி லாப்புகழ் ஈட்டியிந் நாட்டிடை
மறைந்த மன்கதை மன்பதைக் கின்பமே. (ய)

11. தக்கினை திசைக்கொரு தனிச் சிறப்பினை
மிக்குறச் செய்தவிவ் வீர மாமகன்
உக்கிரப் பெருந்திறல் உணருந் தோறுநம்
மக்களுக் கோர்புது மாண்பு தோன்றுமே. (கக)

12. வீர மெய்ம்மையும் மேதகு பாஞ்சைமன்
நேரமர்ந்து நிலைகுலை யாதுமுன்
போரில் நின்று பொருத திறமையும்
யாரும் காண அமைந்ததிந் நூலரோ. (கஉ)

13. கற்பனைக் கதையையும் கவிகள் இன்புடன்
பொற்புறப் புனைகுவர் என்னும் புன்பழி
அற்பமும் இலாவகை அமைந்த இப்பெரும்
விற்பன மெய்க்கதை வேதம் ஒக்குமே. (கங)

14. தேச மாண்பும் திறலுந்தன் மானமும்
மாசு றுவகை போணி மதிப்புறல்
வீசை தோன்றிய ஆண்கடன் என்றிது
பேச வந்தது நேசம் பெருகியே. (கச)

15. உண்டு டுத்தி யுறங்கிக் கழிப்பதே
கண்டெடுத்த பிறவிப் பயனெனக்
கொண்டெடுத்துக் கொழிப்பவர்க் குங்கதி
யுண்டு வேறென் றுணர்த்துமிந் நூலரோ. (கஙு)

16. வீர மேவிய வேந்தன் விறலிந்தப்
பார காவிய மாகப் படர்ந்தது
நீர மேவிய நீணில மெங்குமே
தீர மேவிச் சிறந்து விளங்கவே. (கசு)

---

16. விறல்=வெற்றி. வீரசரிதம் உயிர்களுக்குத் தீரதைரியங்களை விளைத்துச் சீர்மை பயக்கும் ஆதலால் நிலம் விளங்கப் படர்ந்த தென்றார்.

17. மானம் பேணி மனுநலம் பேணிமெய்த்
தானம் பேணித் தகவுட னின்றவன்
வானம் பேணிய வண்புக ழின்பனுய்க்
கானம் பேணுவன் என்றி துகாட்டுமே. (கள)

18. தலைமை யின்னதென் றன்னதன் தன்மையெங்
நிலைமை யோர்களும் நின்று தெளிந்திடப்
புலமை யின்பம் பொருந்த வுரைத்தலால்
தலைமை யின்பம் தழைத்தி துதங்குமே. (கஅ)

19. மண்ணர சிழப்பினும் மானம் வீரமென்
எண்ணர சிழந்திடேன் என்று நின்றவன்
விண்ணர சும்புகழ் வென்றி வேந்தனுய்
நண்ணர சின்புகழ் நரர்க்கின் பாமரோ. (கக)

20. வீர மாட்சி விளங்க விரிக்குமிப்
பார காவியம் பாருல கெங்கணும்
மேரு மால்வரை யென்ன விளங்கிமெய்ச்
சீரு லாவிச் சிறந்து திகழுமே. (உ0)

21. வீரபாண்டியக் கட்ட பொம்ம னென்றுபேர்
சீருற நின்றவச் செம்ம லின்புகழ்
பாருல கோர்ந்திடப் பகர்த லாலிது
வீரபாண் டியம்என விளைந்தெ முந்ததே. (உக)

22. வீரபாண் டியமென விளக்கி நின்றநூல்
வீரபாண் டியனெனும் வேந்தன் மெய்க்கதை
வீரபாண் டியமென விளக்கினன் செக
வீரபாண் டியனெனும் கவிஞர் வேந்தனே. (உஉ)

---

17. கானம்==இசை. தலைமையான மான வீரங்களையுடையவன் புலவர் பாடும் புகழுடையனுய் நிலவி நிற்பன் என்பதை இது புகனுறுத்தும்.

21. இக்காப்பியத் தலைவன் பெயர் வீரபாண்டியன் என்பது ஆகலான் இந்நூல் அவன் பெயரால் வீரபாண்டியம் என வந்தது. வீரம் கொடை முதலிய சீர்மைகளில் சிறந்திருந்தமையால் செம்மல் என நின்றன். செம்மல் என்பது பெருமையில் சிறந்தவரை உரிமையாயுணர்த்தும். சூரிகில், அண்ணல் என்பனவும் அது.

22. வீரபாண்டியம் என விளக்கி என்றது பாண்டியநாடு வீரமுடையது என யாரும் அறிய விளக்கித் தன் பெயர்ப்பொருட் காரணத்தைத் துலக்கி நின்றவன் என்றவாறு. கதாநாயகன் பெயர், காவியத்தின் பெயர், காவியம் இயற்றிய கவிஞன் பெயர் கூறியபடி யிது.

அவையடக்கம்.

23. நவையொழித்து நலம்பல சூழ்ந்துநற்
சுவைபயக்க நூல் சொல்ல வல்லார்களே
அவையடக்க முன் சொல்லுவ ராதலால்
அவையடக்கம் சொலாமல் அடங்கினேன். (உந)

24. சுவையி லாதன சொல்லிச் சுவைதெரி
நவையி லாதநன் னுவலர் கூடிய
அவையி லேறி யறிமினென் றுடலின்
* அவையு றுமல் அடங்குதல் நன்றரோ. (உச)

25. உள்ளம் கண்ட துலகம் அறிந்திட
மெள்ள வேசெல மேவின னீதிலோர்
எள்ளல் கண்டிக ழாதரு ளும்மெனத்
தெள்ளி யோர்முனம் செப்புதல் சீர்மையே. (உடு)

பாயிரம்.

26. வண்மை யாளர்கள் வீரர்கள் மதிமிகு கல்வித்
திண்மை யாளர்கள் சீலமெய்ஞ் ஞானத்திற் சிறந்த
வுண்மை யாளர்கள் உருவினில் மனிதரே யெனினும்
தெண்மை யாளரத் தேவர்கள் தம்மினும் சிறந்தோர்.
(உசு)

வீரம்.

27. அறங்கெ டாமல்நின் றடலமர் புரிவதே வீரம்;
மறந்தும் புன்மையும் வஞ்சமும் மருவிடா ததுதான்;
சிறந்த போரிடை யிறந்தவர் தேவராய்ச் சிறந்து
பிறந்த பேறெலாம் பெற்றவராய்நலம் பெறுவார். (உள)

வீர நிலை.

28. வீர முள்ளவர் தருமமு மெய்ம்மையு மேனி
ஈர முள்ளவ ராயிதம் செய்குவர் வீரம்
கோர வன்குண மன்றது கெய்வவான் குணமே
சீரிராமனை விசயனை நினைந்துண்மை தெளிமின். (உஅ)

---

* அவை = ஏறலும், ஆடலும் ஆகிய அச்செயல்கள்.

26. வள்ளல்கள், வீரர்கள், புலவர்கள், ஞானிகள் உருவில் மனிதராகக் காணப்படினும் உண்மையில் தேவரினும் சிறந்தவர் என்பதாம். ஆகவே தலை சிறந்த அவ்வீரப்புகழை யாரும் அறியக் கூறுகின்றேன் என்றவாறு. தெண்மை = தெள்ளிய தன்மை.

வீரமேன்மை.

29. உலகி லுள்ளநல் லுயிர்த்தொகை எவற்றினு முயர்ந்து
திலக மாய் நின்று தேசொடு தெவ்வரை யடக்கி
அலகில் சீருடன் ஆளுறும் அரசனுக் குயிராய்
நிலவி யுள்ளநன் னீர்மையே வீரமென் றறிக. (உசு)

வீரதேவதை.

30. வீரம் என்பது வெற்றிவேல் எம்பிரான் தனது
நீர்மை யாதலால் அன்னதோர் தன்மையில் நிறைந்து
போரில் மாறிலாப் புகழினர்ப் புகலுத லாலிப்
பார காவியம் அப்பரா பரனுக்கே பரமாம். (உo)

இந்நூலெழுந்த நிலை.

31. எந்த வேளையும் செந்திலெம் பிரானையே யெண்ணிச்
சிந்தை யுள்ளுற உருகிமெய் யன்பினிற் சிறந்து
வந்த மன்னவர் சரிதம் என்பதனையே மதித்து
முந்த யானிதைமொழிந்திடத் துணிந்துமுன் வந்தேன். (உக)

என்தாயின் கருணை.

32. என்னை யீன்றதாய் இளமையில் இடையிடை எனக்கே
இன்ன மாக்கதை நிகழ்ந்ததும் எமர்நிலை யழிந்து
பின்ன மானதும் பிரிந்தகன் றிருந்ததும் பேணிச்
சொன்ன யாவையும் இன்னமும் என்னுளம் தோன்றும். ()

33. அந்த நாளிலென் அருமைநற் முயருள் சுரந்து
முந்த ஓதிய நீதிகள் முதுமொழி நலங்கள்
இந்த நாளினில் என்னையிந் நிலையனுச் செய்த
எந்த நாளந்த அம்மையின் இன்கடன் தீர்ப்பேன்? (உஉ)

34. ஆண்டு மூன்றெனும் பருவத்தில் தந்தையார் அந்தோ
மாண்டு போயிருர் மறுகினின் றெனையென தனையே
சீவண்டு சீரெல்லையின் வளர்த்தனள் வறுமைநோய் மிகவும்
வாண்டும் என்னிலவ் அன்பினை எங்ஙனம் புகல்வேன். (உச)

---

29. உலகினுக்கு உயிராய் உறுதி செய்துநிற்கும் அரசனுக்கு வீரம் உயிராயுள்ளதென்றதனல் அதன் உயர் நிலை புலனும். நீர்மை=தன்மை.

35. பாரதம் முத லாகிய பண்டையில் நிகழ்ந்த
வீர நாயகர் சரிதங்கள் பலபல விழைவாய்
ஈர மோடினி துரைத்தென திளையமென் னெஞ்சில்
தீர மேவிடச் செய்தனள் செய்தவ மென்னே! (நடு)

36. ஆன சீருடை ஆவுடை யம்மையென் அந்த
ஞான அன்னையின் நல்லடித் துணைகளை நினைந்து
மான வீரவிம் மாக்கதை மாநில மகிழ
யானி சைத்திட இசைந்தனன் இசைந்தன இசைமேவ. (நகூ)

நூலமுறையின் நிலை.

37. ஓட்ட நத்தமென் பெயருடை யூரினி லுறைந்து
பட்ட முற்றுயர் பலுடன் பண்பினில் சிறந்தே
அட்ட திக்கிலும் ஆண்மையும் புகழையும் பரப்பி
வட்ட வெண்குடை மன்னென மாண்புடன் வாழ்ந்தோனான். (நஎ)

38. ஐந்தை னுந்தலை முறையினில் இருந்த என் பேரன்
விந்தை சேர்புய நவாபுளனும் பெயரினன் ; அவன்சேய்
சந்த மார்செக வீரபாண் டியன்இரு வோரும்
முந்து பாஞ்சையின் போரிடை மூண்டுமுன் மாண்டார். (நஅ)

39. போரில் மாண்டஅவ் வீரபாண் டியன்தனிப் புதல்வன்
நேரில் வாலமன் நேர்ந்தமூ வாண்டுறு பாலன்
பாரில் * ஓரர சில்லிடை வளர்ந்தனன் அவன்சேய்
எர்மி கும்பெரு மாளவன் என்தந்தை என்க. (நக)

எனது மக்கட்பேறு.

40. வழி வழிக்கொரு புதல்வராய் வந்துளேம் எனதகவ
வழி விலக்கதாய் வாய்ந்துள தென்னேயோ வென்னின்
எழி லமைந்தமூன் முண்மகார் பெண்மகார் மூவர்
உழுவ லன்புடன் வளர்ந்தினி துறைந்துளார் உவந்தே. (சய)

---

* ஓர் அரசு இல் என்றது சொக்கம்பட்டி ஜமீன்தார் அரண்மனையை. அவரே வாலியன் என்னும் என் பாட்டனை வளர்த்தவர் என்க.

பழம்புகழ் பதிந்தமை.

41. பங்கை யோர்திறல் முழுவதும் இளமையில் கேட்டு
வந்த காலந்த வழிமுறை மன்புகழ் மதித்தேன்
செந்தில் எம்பிரான் திருவடி முடிபுனைந் துருகி
இந்த மாக்கதை இயம்பிட எனதுளந் துணிந்தேன். (சக)

முன்னொரு நூல் மொழிந்தமை.

42. வள்ளு வப்பெரு மான்குறள் மருவியோர் மதிநூல்
தெள்ளு சீர்க்கும ரேசவெண் பாவெனச் செய்தேன்
உள்ளு வந்திந்த நூலையும் உலகினுக் குதவ
வள்ளி நாயகன் அருள்வழி யமைந்துமுன் வந்தேன். (சஉ)

மனைவியின் வேண்டுகோள்.

43. முழுவ லன்புடை உரிமையென் மனைவிநம் முன்னோர்
வழுவில் சீர்த்திநை மாநிலம் என்றும் நன்குணர
எழுதி யின்புற அருளுக என்றிடை யிடையே
தொழுது வந்ததும் இந்நூல் வரலொரு துணையே. (சங)

44. அருமை யென்றிரு மனைவியை* யிழந்தருந் துயரால்
ஒருமை எய்தியோ ரிடத்தினி லுறைந்தவள் மொழிந்த
உரிமை யாவையும் உள்ளியுள் ளுருகுங்கா லிந்தப்
பெருமை நற்கதை பிறந்தது § வானமென் றெழுந்தே. (சச)

முதல் வந்த கவி.

45. வான மாமழை எனவந்த அந்தவான் கவியில்
ஞான மாதிய நலம்பல நண்ணுமென் றுவந்து
மான மானிந்தக் கதையினை வரம்புசெய் தடைவே
தேன வாந்தமிழ்ப் பாவினில் சீர்பெறச் செய்தேன். (சரு)

---

42. திருக்குறட் குமரேச வெண்பா என்னும் நூல் 1924விருந்து 14 ஆண்டுகளாகத் தொடர்ந்து அச்சாகி வந்து 5 பெரிய புத்தகங்களாய் இப்பொழுது பூர்த்தியா யுள்ளது.

* அந்நூல் இழந்தது தாது வருடம், கார்த்திகை மாதம், உகந் தெய்தி. (6—12—36). இந்நூல் எழுந்தது ஷ மாசி, உள, (9—3—37)ல் என்க.

§ "வான மாமழை பொழிதர" என்னும் செய்யுளே இல்லவள் மொழியை நினைந்து உள்ளம் உருகியபொழுது முதலில் உள்ளுற எழுந்தது. 45. திறைமறுத்த படலம், 27ம் பாட்டைப் பார்க்க.

எம்பெருமான் இயக்கம்.

46. மாற்ற லர்க்கரி யேறென நின்றமன் கதையை
ஏற்ற மிக்குற இசைத்திட என்னுளே நின்று
தேற்ற மிக்கநல் லறிவுதந் தருள்முரு கேசன்
தோற்று வித்தலால் யான்சொலக் கிடந்ததான் றுளதோ. (சக)

நூலினமைதி.

47. உண்மை யானநற் கேள்வியால் உணர்ந்தவும், உறுதித்
திண்மை யானபொற் சாசனங்களில் தெளிந்தனவும்,
அண்மை யானவ ரிடமிருந் தறிந்தவும், இந்த
வண்மை நூலதாய் வந்துமுன் சுரந்தன வளர்ந்தே. (சள)

48. ஆதி மேன்மையும் அரசியல் நிலைமையும் அமைந்த
சாதி வீரமும் சமர்புரி திறமையும் தகவும்
நீதி யாய்நின்று நெறிமுறை நிலம்புரந் ததுவும்
ஏதி லார்நிலை யாவையும் இனிதுற விளக்கி; (சஎ)

49. சீர மைந்ததென் பாஞ்சையம் பதியினிற் சிறந்து
போரமைந்துயர் வீரமன் புகழினைத் தழுவிச்
சார மாய்ப்பல சரிதங்கள் சாற்றிடும் தகவால்
வீரகாவியம் எனவிது விளங்கிதழுந் ததுமே. (சக)

முன்னுரைன்றின் முடிவு.

50. கலியுகப்பெருங் காவியம் எனும்பெய ராலே
பொலிவிழுந்தவோர் புன்கவி பொய்பல புனைந்து
வலிய வீரவிம் மாபெருஞ் சரிதத்தின் வரம்பை
நலிவு செய்தது நல்லறி வோரதை நாடார். (நய)

51. அந்த நூலினைக் * கீரனென் ஆங்கிலன் மிகவும்
நிந்தை செய்துளான்; அச்சிலும் வரவில்லை; நேரே
வந்த தாயினு வசைமிகப் படும்அந்தக் கவியின்
சொந்த மானபுன் பிழைகளும் துலங்கிடு மன்றே. (நக)

---

50. நமசிவாயப் புலவர் என்பவர் பாஞ்சாலங்குறிச்சி அரசின் பெருமை குறித்துக் கலியுகப் பெருங்காவியம் என ஒன்று பாடியுள்ளார். அதில் சரிதத் தொடர்ச்சி யாது மில்லை. பொய்யும் புளுகும் பொதிந்து பிழைகள் பல மலிந்து இழிநிலையில் இயைந்திருத்தலால் வெளியிடவில்லை.

* கீர்னஸ் (J. F. Kearns) என்னும் துரை அக்காவிய நிலையைக் குறித்து வசையாக மிகவும் இகழ்ந்து எழுதியிருக்கிறார்.

கும்மி.

52. முடிம னூர்மலை யேறுசின் னிப்பெருங் கதையைப்
படியுங் கும்மியாப் பாடியுள் ளானது நல்ல
வடிவ மைந்தில தாயினும் வரன்முறை விளக்கி
நெடிய வீரநற் சுவையுடன் நிலவியுள் ளதுவே. (நுஉ)

53. அந்தக் கும்மியை யாவரும் அன்புடன் விரும்பிச்
சந்த மாய்ப்படித் தின்புறு கின்றனர் சார்ந்து
வந்து கேட்பவர் சிந்தையுள் வன்சமர் வீரம்
முந்து தோன்றவே முந்தைய தோர்கின்ற் முனைந்து.(நுங)

கதாநாயகன்.

54. வீர நாடென வெளியுறு நாட்டினர் இன்றும்
ஈர மோடிந்த நாட்டினை இசைத்திட முன்னம்
தீர மோடுதென் பாஞ்சையில் இருந்தமெய்த் திறலோன்
பேரும் கீர்த்தியும் பேசிநாம் பெருமைபெற் றுள்ளோம்.
(நுச)

55. சென்று போனஅக் கட்டபொம் மேந்திரன் திறலை
இன்று கூறினும் எறுழ்வலி யுடையராய் எவரும்
துன்று வீரமெய்த் துணிவுடன் எழுவதை நாளும்
நன்று கண்டுநேர் நயந்துளம் வியந்துளம் நாமே. (நுடு)

56. காதை நாயகன் கருணையும் வீரமும் கனிந்து
நீதி யாயுல குயிர்களை நெறிமுறை புரந்து
சீதை நாயகன் எனஇருந் தானவன் சீரை
ஓதி னுரைவ ராயினும் உயர்நலம் பெறுவார். (நுசு)

காவிய நிலை.

57. மனிதன் பாலுள்ள தெய்வநன் மாட்சியை வரைந்து
புனித மாகிய செஞ்சொலால் அழகுறப் புனைந்தே
இனிய தாகஇவ் வுலகினுக் கீந்தருள் இன்பக்
கனியதே யுயர் காவியம் என்பது காண்மின். (நுள)

---

52. முடிமன் என்னும் ஊரில் இருந்த மலையேறு சின்னுநாயக்கர் என்பவர் பாஞ்சாலங்குறிச்சிப் போர் வரலாற்றைக் கும்மியாகப் பாடி ள்ளார். அது கட்டபொம்மு சண்டைக்கும்மி என வழங்கப்படுகின்றது.

58. அயன்படைத்தவிவ் வுலகினில் அறுசுவை யன்றி
வியன்படைத்திலன் மேதகு புலவன் மெய்யான
பயன்படைத்ததன் காவிய வுலகினில் பண்பா
நயன்படைத்துயர் நவரசம் நனிகனிந் துளவே. (நஅ)

59. பொறிபுலன்களால் நுகர்ந்திடும் புல்லிய வின்பம்
சிறுமை யாகவே முடிந்திழி நிலையினில் சேரும்;
அறிவி னுணுகர் காவிய நுகர்ச்சியோ என்றும்
செறியு நன்மையிற் சிறந்துபே ரின்பமாய்த் திகழும். (நக)

60. உள்ள மேவிய கவலைகள் யாவையும் ஒழித்துக்
கள்ள மாகிய கசடுக ளனைத்தையும் கழித்துத்
தள்ளரும் பெரு மகிமையைத் தந்துபே ரின்ப
வெள்ள மாய்வினைக் திருப்பதே நூலென விளங்கும். (கo)

61. புலவன் கட்டிய வுலகமென் றுரைபெறு புனித
நிலய மாகிய காவியம் நீதியா றெல்லாம்
நலமு றும்படி தெளிவுற நயம்பட வுணர்த்தி
அலகி லின்பமாய் அமர்ந்துநின் றுருயிர் புரக்கும். (கக)

62. கால மாகிய கரும்பெருந் திறையினால் மறைந்து
மூல மேமாநுழன் றொழிந்தகம் முன்னவர் நெறியும்
சீல மாதிய செயல்களும் இன்றுநேர் காணச்
சால இன்பநல் லாடியாய்ச் சமைந்தது நூலே. (கஉ)

63. வாடி நின்றவண் பயிரினை மழைவந்து வளர்த்து
நீடி நிற்றல்போல் நெறிமுறை யறிந்தகன் மேலோர்
பாடி வைத்தநூல் பல்லுயிர்க் கின்பமாய் என்றும்
கூடி நின்றுபே ரின்பினைக் கொடுத்தருள் குலவும். (கந)

---

62. ஆடி = கண்ணாடி. இறந்தகாலம் என்னும் பரந்த திறையால் மறைந்து போயுள்ள நம் முன்னோர்களுடைய குணம் செயல்களையும், தலைமை நிலைமைகளையும் நூல்கள் தெளிவாகக் காட்டுகின்றமையால் அவை கண்ணாடி என நின்றன- "The soul of a poet is the mirror of the world" (L. S. Mercier) என்பதுங் காண்க.

64. விதிபடைத்தமன் னுயிரெலாம் விதிமுறை தெரிந்து
கதிபடைத்தபே ரின்புறக் கருணையிற் காட்டி
மதிபடைத்தமாண் புலவர்கள் மகியினுக் கென்றும்
துதிபடைத்தநல் விதியின ராய்த்தொடர்ந் துள்ளார். (சுச)

கவியினியல்பு.

65. மாற்று யர்ந்தசெம் பசும்பொனுல் மணியணி செயல்போல்
ஏற்ற மாகிய காவியம் இயற்றுவோன் அறிவின்
தேற்ற மோடுயர் சீலமும் செறிந்துநில் லானேல்
ஊற்ற மாயவன் நூலொளி செய்திடா துலகில். (சுரு)

66. ஒருவன் சொல்வதை உலகெலாம் உவந்துளங் கொண்டு
கருதிச் செய்திட வேண்டுமே லவனுயர் காட்சித்
திருவும் செம்மையும் சீலமும் தெய்வநல் லருளும்
மருவி நின்றமோ தன்றியே மாண்புற லமையா. (சுசு)

67. உலகுயிர்க் கெலாம் உயிரென வுள்ளுற மருவி
இலகி நிற்குமப் பரனருள் நிலையினில் எய்தும்
புலமை யேயுயர் நிலையினில் எங்கணும் பொருந்தித்
தலைமை யின்பொடு தனியொளி செய்திடும் தழைத்தே.(சுஎ)

68. புவிபுரந்திடு மன்னவர் புகழ்ந்துமுன் போற்றக்
கவிபுரந்திடு மன்னவர் கருதிய தென்றும்
செவிபுரந்திடச் செய்துயர் தேவரும் புகழச்
சவிபொருந்திய தனியதி * பதிகளாய்த் தழைப்பார். (சுஅ)

69. கலையமைந் தொளிர் மதியினில், அமிர்தினில், கவினூர்
மலரில், சீதம்வண் சுவைமணம் மருவிய வகைபோல்
புலமை யின்பமும் புனிதநல் † லுயிரினில் பொருந்தி
நிலவும் வேறிழி நிலையினில் என்றுமே நிலையா. (சுகு)

---

64. மக்களுக்கு விதி விலக்குகளை வகுத்து உணர்த்தி, மதிநலம் விளைத்து, நெறிமுறை யுய்த்தலால் புலவர்கள் உலகினுக்குத் தலைமையான நியமன நீதிபதிகளாய் நிலவியுள்ளார் என்பதாம். மகி=பூமி. " Poets are the unacknowledged legislators of the world. " (shelly)

* " The Poet is not any permissive potentate, but is emperor in his own right." (Emerson) சவி = ஒளி.

† " The sublime vision comes to the pure and simple soul in a clean and chaste body ." என்பதும் ஈண்டெண்ணத்தக்கது.

70. சில மோடுயர் கல்வியும் ஞானமும் தெளிவும்
சால வாய்ந்துள தருமவான் உரிமையிற் றந்த
வாலி தாகிய நூலொன்றே வானமிர் தென்ன
ஞால மின்புற நன்றருள் செய்திடும் என்றும். (எ0)

71. ஞான நன்மணங் கமழ்நுகை நளினநா யகிதன்
வான நல்லருள் வாய்ந்தமாண் புடையவர் கவியே
தேன ளைந்துயர் பாகெனத் தெள்ளமிர் தென்ன
மான வர்க்கினி தாய்நனி வழிவழி யோங்கும். (எக)

72. தருமம் சத்தியம் தண்ணளி தகைபெறு வீரம்
அருமை வண்மைநன் னீதிகள் யாவுமே யமைந்து
பெருமை பெற்றுள ஒருமகன் சரிதையா லுலகம்
இருமை யின்பமும் எய்தநூ லிசைத்திட லினிதே. (எஉ)

73. இன்ன மாப்பெருங் காப்பியம் உலகெலாம் இன்பம்
மன்னி யோங்கிட வரன்முறை யினிமையா வகுத்துச்
சொன்ன பாவலன் சோதிவேற் பரனருள் பெற்றோன்
மின்னு சீர்ச்செக வீரபாண் டியனெனும் விறலோன். (எங)

சிறப்புப் பாயிரம்.

74. சகவீர முடனண்டு தரியலருக் கிடியேறாய்த் தழைத்திருந்த
மகவீர முயர்பாஞ்சை மன்கதையை மன்பதைகள் மகிழத்தந்தான்
தகவீர வாண்டகைமை சமதமமா தியநீர்மை சார்ந்த சீலன்
செகவீர பாண்டியனென் றுலகமெலா நிலவியுள சீர்சால் செம்மல். ()

அரங்கேறிய காலம்.

75. சிறமார்ந்த கொல்லமாண் டாயிரத்து நூற்றுப்பன் னன்கில் சேர்ந்து
நேரமர்ந்த ஆவணியில் முருகனுயர் சந்நிதியில் நிருப ரெல்லாம்
போரமர்ந்த நிலைகண்டு புகழ்காணப் புவிமகிழப் புனைந்த இந்நூல்
பேரமர்ந்த சீரோடு பெருமையுடன் அரங்கேறப் பெற்ற தம்மா. ()

பாயிரம் முற்றிற்று.

ஆகக் கவிகள் எடு.

முதலாவது

நகரநிலைப் படலம்.

இஃ தாப்பியத் தலைவனாகிய வீரபாண்டியன் வீற்றிருந்து அரசுபுரிய நின்றதும், அவன் முன்னோர் முதலாக முதன்மை எய்தி வந்தது மாகிய பாஞ்சாலங்குறிச்சி என்னும் வீரமா நகரின் தலைமை நிலைமைகள் இதில் கூறப்படுகின்றன ஆதலால் இது நகர நிலைப்படலம் என நின்றது

---

76. தூஞ்சோலை வாவி யெங்கும் பொலிதரப் புடைசூழ் தெங்கும்
தாஞ்சால வளங்கள் நல்கும் தாற்றிளங் கமுகும் ஓங்கத்
தீஞ்சாலி வாழை தேமா செழித்தொளி தழைத்து நிற்கும்
பாஞ்சாலங் குறிச்சி என்னும் பதியொன்று சிறந்ததுண்டே. (க)

77. நீர்வளம் மலிந்து சூழ நிலவளம் பொலிந்து நீளச்
சீர்வளம் நிறைந்து தெய்வத் திருவளஞ் சிறந்து நாளும்
பார்வளம் பொருந்தி யின்பம் பயந்திடச் செங்கோல் ஏந்திப்
போர்வளம் திருந்தி வீரப் புகழ்வளர்ந் திருந்த தன்றே. (உ)

கலிநிலைத்துறை.

78. தென்றி ருத்தமிழ் நாடெனத் திகழ்ந்தொளி சிறந்து
பொன்றி ருத்திய பொருநைநன் னதியொடு பொலிந்து
மன்றி ருத்திய நலனெடு பலவள மலிந்து
நன்றி ருத்திய பாண்டிநாட் டிடையதந் நகரே. (ங)

79. நெல்லை மண்டலத் துள்ளது நெடும்புகழ்க் கெல்லாம்
எல்லை யாயது திருமகிழ்ந் திருப்பதாய் எங்கும்
இல்லை யிச்செல்வம் எழில்நலம் கலைநிலை என்னும்
சொல்லை மேயது சுரபதி யனையதப் பதியே. (ச)

80. பொன்னின் மாமகள் புகழ்மகள் கலைமகள் போரில்
மன்னி வாழ்மகள் மதிமகள் சயமகள் கலையூர்
கன்னி மாமகள் காமரு மகள்களித் திருக்கும்
இன்ன மாநகர்த் திருவினை என்னவா றுரைப்பாம். (ஞ)

தனலட்சுமி, கீர்த்திலட்சுமி, வித்தியாலட்சுமி, சௌரியலட்சுமி, தைரியலட்சுமி, விசயலட்சுமி, வீரலட்சுமி, இராசலட்சுமி ஆகிய அட்ட லட்சுமிகளும் அமர்ந்துள்ளமைமை முறையே இதில் அறிந்துகொள்க.

எழுசீர் விருத்தம்.

81. அமரர்கோ னகரும் அளகையும் இனைய
அதிசய அழகுடை நகர்கள்
தமமெனக் கருதித் தன்னுளங் களித்துத்
தழைத்த அந் நகரினில் அமர்ந்தே
குமரியின் முனையும் இமயமும் தனது
குலப்புகழ் குலவிடக் கோல்கொண்
டமர்முகத் தடங்கா மடங்கலே றனையான்
அரசுசெய் திருந்தன னம்மா. (கூ)

82. வீரதே வதைக்கு நிலையமா யமர்ந்து
வெலற்கருந் திறலொடும் விளங்கிப்
பாரதீர் வலயத் துலகெலாம் தன்பேர்
பரவிநின் றோங்கிடச் சிறந்து
சீரெலாம் புரிந்து திருவெலா நிறைந்து
தென்றிசைக் கொருதனி யிசையாய்ப்
போரெலாங் கடந்து புகழெலாங் கொண்டு
பொன்பதி யெனப்பொலிந் ததுவே. (எ)

83. பெட்டையின் கோழி முட்டையிட் டடைதான்
பேணுமுன் அப்பதி மண்ணைக்
கட்டிவந் தடியில் பரப்பிவைத் தந்தக்
கருவழி வந்தவன் சேவல்
ஓட்டிய போரில் உளமடங் காமல்
உருத்தடர்த் தெதிரியை யுருட்டிக்
கட்டிய புகழோ டமர்வதை யின்றும்
கண்டுளங் களிப்பவர் பலரால். (அ)

அ. முட்டையிட்டுக் கோழி அடைகாக்குங்கால் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையிருந்த இடத்திலிருந்து கொஞ்சம் மணலை எடுத்துக்கொண்டுவந்து பலர் அதன் அடியில் பரப்பி வைக்கின்றார். அம் மண் சம்பந்தமாய்ப் பிறந்து வந்த சேவல் சிறந்த வீர முடையதாய்ப் போரில் வெற்றிபெற்று விளங்குகின்றது. சேவல் சண்டை புரிபவர் பல ஜில்லாக்களிலும் இருந்து ஆவலோடு வந்து அம் மண்ணை எடுத்துச் செல்கின்றார். சில இடங்களில் அம்மண்ணைக் கரைத்துக் குழந்தைகளுக்குச் சேனையும் ஊட்டி வருகின்றார். அங்ஙனம் ஊட்டின் யாண்டும் அஞ்சா நெஞ்சமும், அருந்திற லாண்மையும் அமையும் என்பது கருத்து. இவ் வழக்கம் இன்றும் இந்நாட்டில் இருந்து வருகிறது. பாஞ்சாலங்குறிச்சி வீர நிலையைக் குறித்து மக்கள் மனத்துட்கொண்டிருக்கும் உறுதிநிலையும், பொருதிறலுணர்வும், பழமையும், கிழமையும் இதனால் எளிது தெளியலாம்.

84. என்னைநீ யாரென் றறிந்திலை பாஞ்சை
யிடத்துமண் சேனையுட் கொண்ட
அன்னதோர் திறலோன் என்பதை நன்றுய்
அறிந்தகல் எதிர்ந்தையேல் அழிந்தாய்
என்னுமிவ் வீர மொழியினை யெவரும்
இயம்பி வாய் வீரராய் நிற்கும்
இன்னதோர் வழக்கம் இந்நில மெங்கும்
இருப்பதை யாவரே அறியார் ? (கூ)

85. நெஞ்சினில் வீரம் இலாதவர் தாமும்
நீள்புகழ்ப் பாஞ்சையம் பதிச்சீர்
கொஞ்சமுட் கொளினும் அஞ்சிடா தெழுந்து
கூற்றென ஆற்றல்மீக் கூர்ந்தே
அஞ்சிலும் சாவே ஆறிலும் சாவே
யாரிவண் இறந்திடார் ஆவி
துஞ்சினும் ஆண்மை துஞ்சிடோம் என்று
சூளுரை புகன்றுமே லெழுவார். (ய)

86. அன்னமா நகரின் பெருமையை முழுதும்
அளந்தறிந் துரைத்திட லரிதே
என்னினும் என்னல் இயன்றவா றிசைப்பேன்
இசைதிசை யெங்கணும் பரப்பி
இன்னமும் வீர நிலைக்கொரு நிலையா
யிருந்துள தழிந்துமின் றதன்பேர்
சொன்னபோ தெவர்க்கும் வீரமெய் யுணர்ச்சி
சோரியி லூரிடு மன்றே. (கக)

கூ. பாஞ்சாலங்குறிச்சிச் சம்பந்தம் தமக்கு உண்டென்று கூறி எதிரியை வெருட்டும் இயல்பு இந்த நாட்டில் எந்த மரபினரிடத்தும் இருந்து வருதல் எல்லாருக்கும் தெரியும் ஆதலால் "யாவரே அறியார்"! என விளம்ப வந்தது. உலகப்பிரசித்தமான இதனால் அவ்வீர நகரின் விறல்நிலை தெளிவாம்.

கூ. கோழைகளும் பாஞ்சாலங்குறிச்சியின் வீரநிலையைக்கேட்டால் உடனே தீரமிகவுடையராய்ப் போரில் ஏறத்துணிவர் என்பதாம். இதனால் அதன் பேராண்மையும், போராண்மையும் எளிது புலனும்.

கக. சோரி = இரத்தம். ஊர்தல் = ஏறுதல், பரத்தல்.

87. *வேட்டைமே லெழுந்த ஒருமுயல் தன்னை
விரைந்துடன் கடித்திடத் தொடர்ந்தே
ஓட்டமாய் வந்த நாய்களை இந்த
இடத்தினில் உருத்துமேற் சீறி
மாட்டிய திறலைக் கண்டதால் கட்ட
பொம்மனு மன்னவர் மன்னன்
கோட்டையை வளைத்து நகரமும் அமைத்துக்
கோமனை யுட்குடி புகுந்தான். (கஉ)

88. மாடமா ளிகைகள் மணியொளி கஞலி
வானமும் இருள்கெட வயங்கும்
கூடமோ புரங்கள் கொல்படை நிறைந்த
கொத்தள வரிசைகள் எங்கும்
பாடல்வே திகைகள் பட்டிமண் டபங்கள்
பாவையர் பதம்பெயர்த் தினிதா
ஆடல்செய் அரங்கம் அரமியத் தலங்கள்
அணியணி யாயவண் திகழும். (கங)

89. அருமறை தெரிந்த அந்தணர் ஒருபால்;
அரசர்தம் மரபினர் ஒருபால்;
பொருதொழில் அமைந்த வீரர்கள் ஒருபால்;
புகழ்மதி அமைச்சர்கள் ஒருபால்;
திருவமர்ந் துயர்ந்த வணிகர்கள் ஒருபால்;
செய்யவே ளாளர்கள் ஒருபால்;
கருமமே கண்ணுய் வினைபுரிந் துயரும்
கம்மியர் காருகர் ஒருபால். (கச)

---

* சாவிகுளம் காட்டில் வேட்டையாளர் ஒரு நாள் வேட்டையாடுங்கால் இடையே புதரிலிருந்து ஒரு முயல் எழுந்தது. அதன்மேல் ஏழு நாய்கள் சினந்து பாய்ந்தன. அது ஒன்றுக்கும் எட்டாமல் வேகமாய் ஓடி வடகீழ்த் திசையில் ஒரு மைல் அடையவும் மாறிச் சீறி நாய்களை எதிர்த்தது. அவை வெருண்டு கலைந்தன. அம்முயல் அயலே மறைந்து போயது. வேட்டைக் காரர் வெட்கிமீண்டு அவ் அதிசயத்தை இவ் அரசிடம் உரைத்தார். உரைக் கவே அவ் இடத்தின் மகிமையை உணர்ந்து அத்தலத்திலேயே கோட்டை அமைத்துப் பாஞ்சாலன் என்னும் தன் பாட்டன் பெயரை அப்பதிக்கு இட்டுப் பாஞ்சாலங்குறிச்சி எனப் புதுக்கி நல்ல நாளில் அச்செல்ல நகரில் குடிபுகுந்து கட்டபொம்மு கட்டாண்மையோடு ஆண்டிருந்தான் என்க.

90. அதிகலை கற்று மதிமிகுத் துயர்ந்த
அருந்தமிழ்ப் புலவர்கள் ஒருபால் ;
சுதிநெறி வழாமல் இசைநலங் தெரிந்த
சொல்லிசை வாணர்கள் ஒருபால் ;
கதிமிகுத் தடுவெம் படைக்கலம் பயின்ற
கடும்படைத் தலைவர்கள் ஒருபால் ;
கதியறிந் தொற்றித் தகவுட னுரைக்குஞ்
சதுருடை ஒற்றர்கள் ஒருபால். (கடு)

91. காரெனத் திரண்டு மதமிகப் பொழியும்
களிற்றினம் களித்திடும் ஒருபால்;
பாரெனப் படாமல் தாவிமேமற் பாயும்
பரியினம் செழித்திடும் ஒருபால் ;
போரெனப் புடைத்துப் புயநெடி தோங்கும்
பொருநர்கள் பொங்குவர் ஒருபால் ;
நேரெனக் கெங்கும் இலையென நிமிர்ந்து
நீண்மதில் நிலைத்திடும் ஒருபால். (கசு)

92. மணிகளின் விலையை நிலையறிந் துரைக்கு
மணியறி வல்லுநர் ஒருபால் ;
அணிகலை அழகா அமைத்துமுன் கொடுக்கும்
அரியபொற் பணியினர் ஒருபால் ;
கணிதநன் னூல நுணுகிமுன் னறிந்து
கசடற வுரைக்குநர் ஒருபால் ;
தணிவரு திணிதோள் மல்லர்கள் ஒருபால் ;
சரமுறு வில்லினர் ஒருபால். (கள)

93. வாள்வலி யதனில் வல்லவர் ஒருபால் ;
வல்லயம் வல்லவர் ஒருபால் ;
நீள்சுடர் வடிவேல் வல்லவர் ஒருபால் ;
நெடுங்கவண் வல்லவர் ஒருபால் ;
தோள்வலி யதனில் வல்லவர் ஒருபால் ;
சொல்வலி வல்லவர் ஒருபால் ;
நாள்வலி விழைந்து பலபடை பயின்று
நனியுடல் பேணுநர் ஒருபால். (கஅ)

94. வாரணம் ஊர்ந்து வன்படை வெல்லும்
வகையினை அறிபவர் ஒருபால் ;
காரணங் குறுவெம் புரவியைக் கடாவிச்
சமர்நிலை தெரிபவர் ஒருபால்;
காரணங் காண இருவர்மே லெதிர்ந்து
கைத்திறம் காண்பவர் ஒருபால் ;
பாரணங் கினிய முகமெனப் பொலியும்
பாஞ்சையின் வலியெவர் பகர்வார். (கக)

95. திரண்டுருண் டமைந்து பதின்துலா மளவிற்
றிகழுருக் கல்லினைத் தினமும்
முரண்டுடன் றெடுத்து முன்பின்னு எறிந்து
முழுவலி காண்பவர் ஒருபால் ;
அரண்படத் தமதின் னுடல்வலி படையின்
அடல்வலி யடைவுடன் பெருக்கி
யுரம்பட விசைந்து வளம்படப் பயின்றுள்
ளுயர்வலி காண்பவர் ஒருபால். (உய)

96. அரும்பெறல் மணிகள் அழகிய பரிகள்
அடுதிற லளவிட லரிய
பெரும்பொரு கரிகள் விரும்புபோ தெல்லாம்
பேணிமென் மடிசுரந் துறுபால்
தரும்பரி சுடைய அரும்பசு நிரைகள்
தமனியச் சிவிகைகள் இன்ன
இரும்பொருள் பலவும் இடந்தொறும் நெருங்கி
இமையவ ருலகெனத் திகழும். (உக)

97. மருங்கெலாம் சோலை வயலெலாம் செந்நெல்
வரம்பெலாம் பணிலங்கள் முழங்கும்
கரும்பெலாம் கமுகின் காடெனத் திகழும்
கமுகெலாம் தெங்கென நிமிரும்
அரும்பலா மரங்கள் அசோகமா மரங்கள்
அணியணி யாயுறச் சாலிப்
பெருங்குளம் என்னும் இருங்குளம் பாலின்
பெருங்கட லெனப்பொலிந் திலங்கும். (உஉ)

உஉ. சாலிகுளம் என்பது பாஞ்சாலங்குறிச்சி ஊருக்கு மேற்கே 2 மைல் தூரத்தில் உள்ளது. மிகுந்த நெல் விளைவுக்கு வளமாக நீர்வழங்கி வந்த மையால் அது சாலிதுளம் என நின்றது. சாலி = நெல். அரண்மனைக்கு வேண்டிய சிறந்த செந்நெல் அதில் விளைந்து வந்தது. விரிந்து பரந்து நிறைந்த நீர்ப்பெருக் குடையதாய் முன்னம் விளங்கி யிருந்த அது, இப்பொழுது கரையழிந்து தூர்ந்து நிலைகுலைந்துள்ளது.

98. புலவியிற் புலந்தும் கலவியிற் களித்தும்
பொறிபுல னுகர்ச்சியில் திளைத்தும்
பலகலை பயின்றும் அறிவுரை பகர்ந்தும்
பாடல்கேட் டாடல்கண் டுவந்தும்
வலமிகு வீரர் வாள்சிலை வேல்கள்
வரிசையி னுடலத் தெரிந்தும்
நலமுய ரறங்கள் நயந்துடன் புரிந்தும்
நாள்களைக் கழிக்குமந் நகரே. (உ௯)

99. மனத்திடை யறமும் வாக்கிடை மெய்யும்
வண்கையில் ஈகையும் வாய்ந்த
இனத்திடை அன்பும் இசையிடை நசையும்
ஏற்பவ ரிடையுயர் அருளும்
கனத்திடை முறியும் தனத்திடை யிற்தக்
கலத்தினை ஏணணிந் தாரென்று
அனத்திடை நடைகொள் அரிவையர்க் கிரங்கும்
ஆடவ ரிடமெலாம் அமைந்த. (உச)

100. கொல்லம்ஆண் டிருநூற் றெழுபத்தி யாறில்
குலவிய இடபமா மதியில்
நல்லியல் அமைந்த திங்களில் சிங்க
நாமநல் லோரையில் நவமாய்ப்
பல்வளம் செறியப் பாஞ்சையம் பதியைப்
பண்புடன் இன்புற அமைத்து
மல்வளம் செறிந்த மன்னவர் திலகன்
மணிமுடி புனைந்துவீற் றிருந்தான். (உடு)

101. சூர்வலி தொலைத்த வீரவேல் முருகன்
சோதியங் கோயிலும் தும்பி
ஏர்முகக் கடவுள் இனிதமர்ந் திருக்கும்
எழில்மிகு கோயிலும் திருமால்
நேர்மகிழ்ந் துறையும் நீளொளி கனலும்
நெடுமணிக் கோயிலும் வீரப்
போர்மகள் அமரும் கோயிலும் நான்கு
புரத்திலும் பொலிந்தினி தொளிரும். (உசு)

உடு. கொல்லம் ஆண்டு என்பது பாண்டிமண்டலத்தில் வழங்கிவருகின்ற காலக் குறிப்பு. இது கி. பி. ஆண்டுக்கு 825 வருடங்கள் பிந்தியதாம். ஆகவே பாஞ்சாலங்குறிச்சி நகரம் தோன்றியது கி. பி. 1101-ல் என்பது தெளிவாம். இடபமதி=வைகாசி மாதம்.

102. காலையும் உச்சி மாலையு மூரசம்
காரென முழங்கிடும் ஒருபால் ;
சாலவு மினிய வீணைவேய்ங் குழல்கள்
சதுருட னிசைத்திடும் ஒருபால் ;
பாலையு மினிய தேனையும் வெலுஞ்சொற்
பாவையர் பாட்டொலி ஒருபால் ;
வேலையி ணெளியிற் பல்லியங் களுமேல்
மேவினின் றெங்கணும் ஒலிக்கும். (உஎ)

103. பதியய லிருந்து வருபவ ரெவரும்
பண்புடன் இன்புறத் தங்கி
அதிசுவை யுடைய அறுசுவை யடிசில்
அருந்தன்ன சாலைகள் எங்கும்
விதிமுறை வழாமல் பகலிர வென்றும்
விருந்துப சரித்தருள் புரிந்து
துதியொடு நின்று கதியொடு பொங்கிச்
சொல்லரு நல்லறம் வளர்க்கும். (உஅ)

104. இனியவெண் சுதைமா மாடங்கள் எங்கும்
எழில்சுரந் தொளிதவழ்ந் தோங்கிப்
பனிமலை பலநின் றெளிர்வன போலப்
பண்பமைந் தின்புறத் தோன்றும்
கனிபல பழுத்து நறுமலர் மலர்ந்து
காமரு சோலைகள் துறக்கம்
தனில்வளர் தருவின் பொழிலென மிளிர்ந்து
தகவுற வெங்கணும் விளங்கும். (உகூ)

105. மங்கலம் புரிந்து மணவணி புனைந்து
வதுவைகள் செய்துள மகிழ்ந்து
பொங்கிய இன்டப் பொலிவினி லமர்ந்து
பொழுதினைக் கழித்தெழு புகழும்
தங்கிய அறமும் கேண்மையும் வளர்த்துத்
தகவுட னனைவரும் இனிதாய்
வங்கணும் களிப்போ டுறைந்தனர் துறக்கம்
என்பதே இதுவென இருந்தார். (உடு)

கலிநிலத்துறை.

106. இனைய பல்வளம் நிறைந்தஇவ் இரும்பதி யிடையே
கனக மால்வரை யெனவொளி கனலியெம் மருங்கும்
புனையுஞ் சிற்பநல் லருங்கலத் திறனெலாம் பொருந்தி
நினைய லாவகை மன்னவன் நெடுமனை நிலவும். (உக)

107. புடையெ லாம்ஒளி பொங்கிய மாடங்கள் பொலிய
இடையி லேஅர சாண்மனை யிருந்தொளிர் தோற்றம்
அடைய நின்றவிண் மீன்களின் நடுவணே சோதி
மிடையும் திங்களின் மண்டலம் போலநின் றதுவே. (நஉ)

108. கொத்த ளங்களும் கொடிமதில் நிலைகளும் கோமான்
நித்தலும் தங்கி அரசியல் புரிதரு நிலையும்
முத்த வெண்குடை மன்னவர் வரினவர் தம்மோ
டொத்து வந்திடும் உயர்மணி மாடமும் ஒளிரும். (நந)

109. ஈசன் பங்குறை சத்தியின் அமிசமா யெங்கும்
நேச அன்பர்கள் நினைத்தன அருள்சக தேவி
வாச மாயமர் கோவிலும் வாவியும் மன்னன்
தேசு லாவிய கோவிலை யடுத்தொளி திகழும். (நச)

110. அரங்க மால்எனும் அற்புத மன்றமும் அயலே
தரங்க நீர்நிலைத் தமனியப் பொய்கையும் சார்ந்துள்
உரங்கொள் கற்புடை ஒண்குலத் தேவியர் அந்தப்
புரங்க ளும்இன்ப நலங்கனிந் தெழிலொடு பொங்கும். (நடு)

111. அன்னம் ஆடுதண் டுறைகளும் அரம்பையர் நாணக்
கன்னி மார்விளை யாடுநீர் நிலைகளும் காமர்
மன்னி வாழ்தரு மலர்ச்செழும் பொழில்களு மருவிப்
பொன்னு லாநகர்க் குவமைதந் துரைத்திடப் பொலியும். (நசு)

112. புண்ணி யப்பயன் பொருந்துறு பெருந்திரு வமர்ந்தே
எண்ணி வேண்டிய இன்பங்கள் யாவுமே நிறைந்து
விண்ணில் வாழ்நரும் விழைந்துளம் வியந்திடச் சிறந்து
மண்ணில் ஒருயர் சுவர்க்கமாய் மருவிநின் றதுவே. (நஎ)

க-வது நகர நிலைப் படலம் முற்றிற்று.

ஆகக் கவி நகஉ.

இரண்டாவது
குலமரபுப் படலம்.

இக் கதா நாயக னுடைய குலத்தையும் மரபையும் உணர்த்தலால் இது குல மரபு என நின்றது. குலம்=சாதி. மரபு=வமிசம், இனம்.

113. இந்த மாநகர் இருந்த சாண்ட அவ் அரசன்
எந்த மாமர பினனவன் இனமெதெங் கிருந்து
வந்த தம்மர பெனவிவை அனைவரும் அறிய
முந்த ஓதிமேல் உள்ளன முறைமுறை மொழிவாம். (க)

மரபின் இயல்பு

114. கம்ப ளங்களுள் தோக்கல வாரெனுங் குலத்தார்;
இம்பர் நாடெங்கும் இரும்புகழ் படைத்தநற் றிறத்தார்;
உம்பர் கோனையும் ஒளிர்முடி யுடைத்துமுன் னெழுந்த
தம்பி ரானையே தம்பிரான் எனக் கொளுந் தரத்தார். (உ)

115. தெலுங்கு நாட்டிடை யிருந்திவண் வந்தவர்; தெலுங்கே
இலங்கு தாய்மொழி யாய்வழங் கியல்பினர்; என்றும்
கலங்கு நுதலெஞ் சுறுதியர்; அமரையே கருதித்
தலங்க டோறுந்தந் திறலினை நிறுவுறுஞ் சதுரர். (ங)

116. பொய்யும் வஞ்சமு மறந்தும்வாய் கெஞ்சிடைப் பொருந்தார்;
மெய்யும் வீரமும் மானமும் பேணியே வாழ்வார்;
எய்யும் வில்கணை வாள்ஒளி வேல்களே என்றும்
கையும் மெய்யுமாய்க் கவினுறக் கொண்டுளங் களிப்பார். (ச)

117. உழைத்து வாழ்வதை ஒருபொரு ளாகவுட் கொள்ளார்;
தழைத்த செல்வமும் தாணியும் வெண்டுமென் றெண்ணார்;
இழைத்த போரிவண் உண்டென வந்தெவ ரேனும்
அழைத்த போதுளங் களித்தெழுந் தார்த்துமேல் வருவார். (ஞ)

118. போர்பெ றுதநாள் புல்லிய நாளெனப் புலந்து
கார்பெ றுதபைங் கூழெனக் களிந்துளம் கவல்வார்
பார்பொறுதவெம் படைவந்த தென்னினும் பயந்து
சோர்பொராதக லாரெதிர் ஏறிமுன் நிற்பார். (சு)

உ. தம்பிரான் என்பது முருகக்கடவுளை. உக்கிரகுமார பாண்டியனுய் அவதரித்து இந்திர னை மகுடபங்கஞ் செய்த அவ் அருள் வீரனையே தம் குலதேவதையாகக் கொண்டுள்ளவர் என்பதாம். பிரான்=கடவுள், தலைவன்.

110. முடல்பகிப்பினும் கொண்டையில் பூவினைச் சூடி-
யுடல்மினுக்கியே ஊக்கமுற் றுலாவுவர் எங்கும்
அுடல்கொள் வன்மையே கருதுவர் ஆண்மையே பகர்வார்
மிடல்கொள் வெம்படை விரகொடு பயிலுவர் விழைந்தே. (எ)

120. பழகி னர்க்குத்தம் உயிரையும் பரிந்துகைக் கொடுப்பார்;
னிழைவு மாறியே வஞ்சரா யிரகுடன் நிமிர்ந்தால்
கழைகொல் யானைபோற் கடுத்தவர் உயிரினை யெடுப்பார்;
உழைய ராயினர்க் கென்றுமே உரியராய் உழைப்பார். (அ)

121. வஞ்ச மில்லவர் யாரையும் நம்புவர் வாய்ந்து
நஞ்சம் என்றவர்க் கஞ்சலென் றடைக்கலந் தருவார்;
கஞ்ச மன்னவ ராயினும் நம்பினர்க் கிடரை
நெஞ்ச கத்திலும் நினைந்திடார் மேர்மையே நினைவார். (கூ)

122. கம்பு கைக்கொண்டாற் பம்பர மெனச்சுழன் மேறி-
அம்பு கைக்கொண்ட பேரையும் அடர்த்துவென் றெழுவார்;
வம்பு மீறியே வாய்மதம் பேசிடார் கையே
தம்பி காணைனக் *காட்டுவார் தந்திரங் காணுர். (கo)

123. வீர வெஞ்சமர் வாழ்வினை விழைந்தவ ரேனும்
ஈர நெஞ்சமும் ஈகையும் உடையவர் என்றும்
வார மொன்றிடார் வஞ்சகம் பேசிடார் கூரே
நீர மாய்நின்று செம்மையே செய்குவர் தெரிய. (கக)

124. மான மல்லது மன்னுயிர் பெரிதென மதியார்;
வானம் எய்துவ தாயினும் வரிசையும் மரபும்
ஈன மெய்திட இசைந்திடார் இசையினை விழைந்தே
ஊனம் ஒன்றிலா வாழ்வையே யுவந்துநாட் கழிப்பார். (கஉ)

தற்கால நிலை.

125. அன்ன மாபெரு வீரமா மரபிடைப் பிறந்தார்
இன்ன நாளிலவ் வியல்பெலாம் இழந்திழிந் துள்ளார்
என்ன காலமோ எவர்செய்த சாபமோ இன்ன
சின்ன நீரராய்த் தேசழிந் துழல்கின்றூர் பலரே. (கங)

---

* எதிரி வெகுளியை மூட்டின், வீண்வாய்பிதற்றிக் காலம் தாழ்த்தி விலகி நில்லார்; ஆண்மையுடன் புகுந்து கைநீட்டி அடித்துவிடுவர் என்பதாம். தம்பி என்னும் விளி இளிவு குறித்து நின்றது.

126. அரசு போனதால் ஆனதோ ? அருங்கலை யிழந்து
பரசு பாணியின் அருள்வழி ஒழுகிடாப் பழியோ?
உரைசெய் தென்னையிங் கூழ்வழி யுயிர்முழு தொழுகும்
விரைசு மேன்மையும் கீழ்மையும் வினைமுறை மேவும். (கச)

127. தருமம் குன்றினர் தங்கிலை யழிகுவர்; சார்ந்த
கருமம் குன்றினர் கடையராய் இழிகுவர்; இந்த
இருமை யில்லவர் இருமையும் இழந்தன ரன்றே
ஒருமை யேயிதை யுணர்ந்துட னெழுகினை ருயர்ந்தார். (கந)

128. திருவும் மேன்மையும் தேசுமற் றுளநல மெல்லாம்
ஒருவர் மற்றவர்க் குதவுற வருவன வல்ல;
பரம னும்அவை தந்திடான் பரிந்துநாம் செயுநற்
கருமமேயவை யுரிமையிற் கொணர்ந்துகைக் கொடுக்கும்.(கசு)

129. இன்ன வண்மையை யறிந்துதாம் இழந்துள நிலையை
உன்னி நாணியுள் ளுருகிநல் வினைகளை யுடனே
மன்னி மாண்புற ஒழுகினர் உயர்குவர்; மறந்தார்
பன்ன ருந்துயர் பழியிடைப் பட்டுளம் பதைப்பார். (கள)

130. மாசு மீப்பட்டு மண்ணிடைப் புதைந்தமா மணிகள்
தேசு போய்ப்பட்டுத் தெரிகிலா தொழிந்தபோ துள்ளார்
ஈசன் இன்னருள் வலியிலுல் என்றிவர் ஒளிமேல்
வீசி மேல்வந்து மேன்மையாய் விளங்குவர் கொல்லோ? (கஅ)

131. நெல்லை எல்லையில் அல்லது வேறெங்கும் நிலையாய்
இல்லை யென்னவே யிருந்தனர் இன்றுமன் றமைந்த
சொல்லை மெய்ப்பித்து நின்றுளார் தொன்முறை மறந்தார்
புல்லை யுண்டுவாழ் புலியெனப் பொலிவிழந் துள்ளார். (கக)

132. எண்ணி நோக்கி ஆராயிர மெனுந்தொகை யுள்ளாய்
நண்ணி நின்றனர் அமரிடை நைந்தொழிந் ததனால்
திண்ணி தாகநூர் ஆயிரம் பேரின்று தேர்ந்து
கண்ணுங் கையுமா யுள்ளனர் கருதுங்கா லில்லார். (உய)

133. சமய கோக்கினில் மால்வழி பாட்டின ரேனும்
இமய வல்லியி னிருங்கலை யாகிய தேவி
அமையும் அன்புடன் ஆதரித் தறுமுகத் தேவைத்
தமது மெய்க்குலத் தெய்வமாச் சார்ந்திவ ருள்ளார். (உக)

134. தேவி கோவினுள் உருவமொன் றில்லையோர் வாளே
மேவி யுள்ளது வெளிப்பட எவருமே காணார்
ஓவி லன்புடன் மறையவைத் துறுசிவ நிகியில்
ஆவ லோடிவர் பூசனை புரிகுவர் அணியாய். (உஉ)

135. கரும்பி னல்பந்தல் கவினுற நாட்டிநெய் விளக்கம்
அரும்பி யெங்குமே ஒளிசெய ஆனெய்யால் ஏற்றி
இருஞ்சுவைக்கனி முதலிய இன்பொருள் பரப்பிப்
பெரும்ப யங்கொடு பத்தியிற் பேணியே பணிவார். (உங)

136. தென்னங் காயையும் அங்கிவர் சிதைத்தில னென்றல்
இன்ன தேவியின் அருள்வழி பாட்டின தியல்பும்
முன்னம் நின்றவர் புனிதநல் லொழுக்கமு[1]முறையும்
என்ன வாறமைந் திருந்துள என்பது தெளிவாம். (உச)

137. தீய கள்முத லாகிய தீப்பொருட் பெயரை
வாயி னுலுமே சொல்லலர் வேறொரு வழியாய்
ஏய வேயதை யியம்புவர் இயம்பினும் தேவி
காயு மேயெனக் கருதிநெஞ் சழலுவர் கடுத்தே. (உரு)

138. ஆத லால்இவர் தேவியை வழிபடும் அமைவும்,
சாதி மேலவர் சார்ந்துமுன் னிருந்துள தகவும்,
நீதி மாட்சியும் நிரைபசுக் காத்தலும் நெறியும்
கோதி லாண்மையும் குலமுறை நிலைமையும் தெளிவாம். (உசு)

உரு. கள் சாராயம் என்னும் பேர்களைக்கூட இம்மரபினர் வாயால் சொல்லக் கூசுவர். பேச வேண்டிய அவசியம் நேர்ந்தால் தெலநீடு, நலநீடு என அவற்றை முறையே சுட்டிக் கூறுவர். தெல்ல நீரு, நல்ல நீரு என்னும் தெலுங்கு மொழிகளுக்கு வெள்ளைத் தண்ணீர், கருந்தண்ணீர் என்பது பொருள். இழிவான பழிபடு பானங்களை வழிவழி வெறுத்து வந்துள்ளமையால் இவ்வழியினருடைய விழுமிய நிலை வெளியாம்.

கட்டபொம்மு தோற்றம்.

139. இனைய தொல்குல வீரமா மரபிடை எமர்செய்
புனையும் புண்ணியப் பெரும்பய னெருங்குபோந் தென்னக்
கனைசெயுங்கழற் கட்டபொம் மென்றொரு கதிர்வேல்
தினக ரன்வந்து தோன்றினன் திசையிசை பொங்க. (உஎ)

போர்நிலை.

140. திண்டி றற்பெருந் திறலினைத் தெலுங்கினில் விளக்கிக்
கொண்டி ருக்கின்ற * கெட்டியென் பதமது குலைந்து
தண்டமிழ்ச் சொலில் கட்டபொம் மென்றுசார்ந் ததனால்
பண்டு தொட்டிந்த மன்னவன் அப்பெயர் படைத்தான். (உஅ)

தன்னுடு விட்டுத் தென்னுடு வந்தது.

141. வாடிக் கோட்டையென் னகரினில் முப்பத்தி ரண்டோர்
நாடுக் காதியா யிருந்துமுன் னூழினு ழிழந்து
மாடும் மக்களும் மற்றுள நிதிகளும் வாரித்
தேடி யித்திருத் தென்திசை வந்தவன் சிறுவன். (உக)

142. ஆண்ட கைப்பெருந் திறலுடன் இளமையும் அமைந்து
காண்ட கைக்கினி யானெனக் கவினுறக் கனிந்து
பூண்ட கைத்திரு மார்பொளி பொலிதரும் இவனிப்
பாண்டி மண்டலம் புகுந்துபல் லிடங்களும் படர்ந்து ; (ஈ)

உஎ. உலகம் உவப்பத் தோன்றிப், பகையிருள்கடிந்து, புகழொளி பரப்பிக், குலம் விளக்கி நின்றமையால் இவன் தினகரன் என நின்றான். தினகரன் = சூரியன். அவன் கதிரொடு துலங்கினன்; இவன் வேலொடு விளங்கினன். கனை=ஒலி. கழல்=வீரர்கள் அணியும் காலணி.

* கெட்டி என்னும் தெலுங்குப் பதத்திற்கு வல்லமை என்பது பொருள். இளமையிலேயே வல்லாண்மை வாய்ந்திருந்தமையால் கெட்டிபொம்மு எனப் பெயர் இடப்பெற்றான். அதுதமிழில் கட்டபொம்மு எனவழங்கலாயது.

உக. ஆதியில் தெலுங்கு நாட்டில் இவன் முன்னோரிருந்து அரசுபுரிந்த ஊருக்கு வாடிக்கோட்டை என்று பேர். அது, பல்லாரி ஜில்லாவில் உள்ளது. பல்லாரி விசாகம் என்னும் அந்நாடுகளிலிருந்தே இம் மன்னவன் மரபினர் முன்னும் பின்னுமாக இந்நாட்டுக்கு வந்து குடியேறியிருக்கின்றார்.

143. சாலி வண்குளம் பறம்பெனும் தலத்தினைச் சார்ந்து
வேலி கோலியே யுடன்வந்த கிளையுடன் விழைந்து
வாலி தாகிய சிறுநக ரழகுற வளைத்துக்
காலி கன்றுகள் செழித்திடக் களித்தினி திருந்தான். (நக)

புதிய நாட்டில் புகழ் நாட்டியது.

144. இந்த வாறிவன் வந்தமர்ந் திருந்தனன் இவன்றன்
சிந்தை மேன்மையும் செயலையும் திறலையும் தெரிந்து
முந்தை நாள்முதல் இங்குவாழ்ந் திருந்தவர் முறையே
வந்து வந்துற வாடியே தனித்தனி மகிழ்ந்தார். (நஉ)

145. அயலெ லாமட லாற்றுவெங் கொடியவர் திருடும்
செயல் மிகுந்தவர் திரளுடன் சேர்ந்தெழுந் தொருநாள்
வையல்வ ளைந்தவோர் வளநகர் கொள்ளைசெய் தள்ளி
மையலு வந்திவ ணார்வழி யல்லிடை வந்தார். (நந)

146. தனியெ திர்ந்திவன் கண்டனன் சார்ந்தவக் கொடியோர்
துணிமி குந்துநீ யாரெனச் சூழ்ந்துடன் வளைந்தார்
இனியி ருந்திடில் ஈனமென் றெழுந்துமேல் பாய்ந்தான்
அனைய வெய்யவர் யாவரும் அடிபட்டு வீழ்ந்தார். (நச)

147. எண்ணி நோக்கிலன் பன்னிரண் டெண்ணினர் கிடந்தார்
கிண்ணி தாயவர் திருடிய பொருளெலாம் திரட்டி
நண்ணி நின்றதன் துணைவரை நள்ளிர வெழுப்பிக்
கண்ணிற் பட்டஅக்கள்ளரைக் கட்டிப்போய் வைத்தான். (நரு)

148. விடியவும் இந்த விவரத்தை யறிந்தய லிருந்த
குடிகள் யாவரும் குழுவுடன் வந்துகண் டிந்த
நெடிய வீரனைப் போற்றிமுன் னின்றனர் அந்தக்
கொடிய கள்ளரைக் குறித்துட னிகழ்ந்தனர் கொதித்தே. (நக)

149. கொள்ளை கொண்டவப் பொருளினை யுரியர்கைக் கொடுத்துக்
கள்ள மாக்களைக் கட்டவிழ்த் தறிவுற விட்டான்
வள்ள லெனயெல யாவரும் வாழ்த்தின ரிவனை
உள்ள சிருடன் உயர்புகழ் சூடின னுயர்ந்தே. (நள)

நச. சாலிகுளம் பறம்பு என்பது மணியாச்சியிலிருந்து வடகிழக்கில் 10 மைல் தூரத்திலுள்ளது. அந்த இடமே ஆதிக்கட்டபொம்மு இந்த நாட்டுக்கு வந்தபொழுது முதலில் தங்கியிருந்ததென்க. காலி = பசுக்கள்.

150. தென்ன நாட்டினிற் சிறந்துதன் னிசைதிசை யெங்கும்
முன்ன நாட்டினுன் முனைமுகத் தெதிர்ந்தவ ரெவரும்
பின்னங் காட்டமே பெருந்திறல் காட்டினுன் பெயரை
இன்னங் காட்டினும் இரும்பயங் காட்டுவான் எவர்க்கும்.(நஅ)

151. வீர மிக்கவன் ஒருவனே மக்களுள் மேன்மை
கூர நின்றுநற் குலமகன் எனநிலை கொள்வான்
பாரும் அன்னவற் கேயுரித் தாமெனும் படியை
யாரும் காணவந் ததிசய நிலையினில் அமர்ந்தான். (நக)

152. ஊக்க முள்ளவன் உலகிடை யுயர்ந்தவ னுவான்
ஆக்கம் யாவுமே யவனைமுன் னுடிவந் தடையும்
கோக்கு லத்தனுய்க் குலப்புகழ் கொண்டுநல் லரசைக்
காக்க நேர்வன்என் பதையிவன் காட்டிமுன் நின்றுன். (சஅ)

153. கலைவ ளர்ந்தநன் மதியெனக் கலைபல கற்றுத்
தலைமை யோடுதன் தமரிடைத் தழைத்தினி திருந்தான்
பலவும் கூறியென் பாரினி லிவனெரு தனியாம்
நிலையில் நின்றனன் தலைமையே கருதினன் எங்கும் (சக)

154. பொய்ம்மை யாம்விளை யாட்டினும் புடையொரு தோல்வி
எய்த நேரினும் இளமையி லிசைந்திடான் எதிர்ந்து
வெய்தி னேறியே எதிர்ந்தவர் எவரையும் வெருட்டி
உய்தி சென்றுதன் னுழையரோ டமர்ந்துளங் களித்தான்.(சஉ)

அரசடைந்த திறம்.

155. வாளின் வன்மையால் மலையெனத் திரண்டதன் னிரண்டு
தோளின் வன்மையால் தொடர்ந்துட னுறவதா யிருந்த
ஆளின் வன்மையால் அழகிய வீரபாண் டியப்பேர்
வேளின் அன்னவோர் மன்னவன் அரசிவன் பெற்றுன். (சங)

156. அன்ன மன்னவன் யாரெனின் ? அருங்குல வீரத்
தென்ன னின்வழி வந்தவன் தேசுடைத் திறலோன்
பன்ன ரும்பெருந் திருவுடன் பாஞ்சையின் தென்பால்
மன்னி நின்றதன் * பதியிடை மகிழ்ந்துவாழ்ந் திருந்தான். ()

---

* பதி என்றது அழகிய வீரபாண்டியபுரம் என்னும் ஊரை. இப் பொழுது ஓட்டப்பிடாரம் என்னும் ஊரிருக்கும் இடத்தே முன்னம் அப்பதி இருந்தது. மதுரைப் பாண்டியர் மரபைச் சார்ந்த ஜகவீரபாண்டியன் என்னும் அரசன் அந் நகரிலிருந்து அரசு புரிந்து வந்தான். அவ் அரசின் பட்டமே இக் கட்டபொம்மு கைவந்த தென்க.

157. ஆறு நூறெனும் ஆண்டுகள் வழிவழி யமைந்து
மாறிலாவகை யாண்டுறும் அக்குல மகனை
வேறு மென்றிரு குறுநில மன்னர்கள் வெகுண்டு
பாறு சூழ்பெரும் படையுடன் படுத்திட வந்தார். (சரு)

158. வீர சிங்கன்வேல் விசயராம் எனப்பெயர் சிறந்து
போரில் வல்ல அவ் விருவர் மூவாயிர ருடனே
யாரும் தோர்வுறு வகையடர்ந் திரளிடை வந்து
கோருங் காலையை நிலையெதி ரறிந்தயல் நின்றார். (சசு)

159. வந்த சேனையின் வரவினை முந்துற அறிந்தே
இந்த வீரனைத் துணைவர வேண்டினன் இவனும்
சிந்தை யுள்ளுறக் களித்துடன் சென்றவன் துணையாய்
முந்து போய்நின்றன் முனைமுகத் தவரெதிர் கண்டார். (சள)

160. புதிய ஞெகிய ஒருவனோர் வாளொடு போந்து
அதிக மாகிய இப்படை யனைத்தையும் மதியான்
மதிகொள் வீறுடன் நின்றுளான் இவன்கடுந் திறலை
மதியின் மண்டல மெனப்பொலி முகத்திடை மதித்தாம்.(சஅ)

161. கடலெனத் திரண் டுங்குவந் தடைந்தவிப் படையை
உடலெடுத் தவர் யாவரும் கண்டுள முடைந்து
குடல் நடுக்குடன் குலைந்தய லொதுங்குவர் குலையா
தடல டுத்திவன் நின்றதே வென்றதென் றறைந்தார் (சகூ)

162. இற்றை நாள்வரை யாருமே எம்பெயர் கேட்பின்
நிற்றல் செய்கிலர் நேரலன் ஒதுங்கினன் நேரே
ஒற்றை யாளிவ னூக்கிவந் துருத்துமுன் நின்றுன்
எற்றை நாளினும் இலாதவோர் புதுமை யீதென்றார். (ரிo)

சசு. வீரசிங்கன், விசயராம் என்னும் இருவரும் புதியம்புத்தூர், ஆரைக் குளம் என்னும் ஊர்களிலிருந்த குறுநிலத் தலைவர். பெருவலி யுடையவர்.

சகூ. நின்றதே வென்றது என்றது யாதும் அஞ்சாது அருந்திறலுடன் தனியே துணிந்து வந்து நேரில் நின்ற அவ்வீரசிலையின் விறல் நோக்கி. வெல்லுமுன்னரே எதிரி உள்ளம் வியந்து சொல்லிய இதனால் இவனது வீர மேன்மையும், வெற்றித்திருவும், நெய்வகிருபையும், தெரியலாகும்.

163. உதவிக் கோர்துணை கொண்டிலன் உரியதோர் வாளை
கதமி குந்துகைக் கொண்டனன் கடுத்துமுன் வந்து
மதமி குந்திவன் நின்றனன் வலியநம் போரின்
விதம் அறிந்திலன் விளிந்தனன் எனவிரைந் தெழுந்தார். (நிக)

164. அடர்த்து வந்தயல் வளைந்தனர் அடுசினம் பொங்கிப்
படைக்க லங்களைச் சுழற்றி நீ யாரெனப் பகர்ந்தார்
உடற்று போரினில் உரைவிடை ஏனென வுருத்தான்
தொடுத்து வீசினர் அவர்இவன் துள்ளிமேல் பாய்ந்தான்.(நிஉ)

165. வாள்சுழன்றது கறங்கென மந்தர மென்னும்
தோள்சுழன்றது தொடுகழல் சுழன்றது துண்ணர்
தாளிழந்துகை தலைகளை யிழந்து தாம் கொண்ட
கோளிழந்தனர் நாளிழந் தழிந்தனர் குலங்தே. (நிங)

166. போரில் பாய்ந்துமுன் பொருபடை யுட்புகுந் தோடி
நேரில் வாளினுல் நேர்ந்தவர் தமையெலாம் கணத்தே
பாரில் வீழ்த்தினன் படையுடைந் தகன்றது பறந்தே
வீர கேசரி என இவன் மீண்டனன் விரைந்தே. (நிச)

167. விந்தை பூமகள் விழைந்துவீற் றிருந்தொளி சிறந்து
சந்த மாமலை யெனத்திரண் டோங்கியே தடந்தோள்
முந்த வீங்கினன் சிந்தையுள் ளுவந்தெழில் மிகுந்து
வந்து சேர்ந்தனன் நின்றவர் வாழ்த்தினர் வளைந்தே. (நிஙி)

168. இவன தாண்மையை எழிலினை யியல்பினை வியந்தே
அவன தந்தத்தே ஆண்மக வின்மையால் அரசை
உவகை யோடிவற் குதவினன் உதவவும் அதனைச்
சிவகுமாரன தெனமனங் கொண்டுகைக் கொண்டான். (நிசு)

169. வீர வெற்றியால் பெற்றஅவ் வரசினை மேன்மை
கூர நின்றுகண் ணுயிரெனக் குறிக்கொடு காத்தான்
பாரில் நன்மழை பொழிந்தது பலவள மிகுந்த
யாரும் இன்புற நண்புடன் அறம்பல புரிந்தான் (நிஎ)

நிஙி. எழில்—வெற்றிக்களிப்பால் நேர்ந்த வீரப்பொலிவு.

நிசு. எய்திய அரசை முருகனுடையது என உருகியுளங் கொண்டதனல் இவனது உளநிலையும் உயர் நோக்கும் எளிது புலனும்.

நிஎ. கண் என உயிர் எனக் காத்தான் என்க. குடிகளை மிகவும் உரிமை யோடு கண்ணுங் கருத்துமாய்க் கருதிக் காத்துவந்தான் என்பது கருத்து.

170. குடிமை கிழச்சியே கோனுடை யுயர்ச்சியென் றுணர்ந்தான் ;
முடிமை கிழச்சியை முன்னிலன் ; மன்னுயிர்க் கெல்லாம்
நெடிய வூழியம் செயவந்த நிலையென நினைந்தான் ;
வடி செய் வேற்பரன் அடிமுடி புனைந்துபார் புரந்தான். (நஅ)

171. .ரிய திண்டிற லுடையவன் அடுத்தவர்க் கெல்லாம்
பெரிய தண்ணளி புரிந்தனன் குடிகளும் பெருகி
னிரிய நேர்ந்தன மேன்மையும் கீர்த்தியும் மேன்மேல்
உரிய வாயுற வுவந்தினி திருந்தனன் உயர்ந்தே. (நக)

172. மனுமு றைப்படி அரசிவன் செய்திவண் வருங்கால்
தனுமு றைப்படி பயின்றவர் சிலரய லிருந்த
புனமி டைப்புகுந் தாற்றிய வேட்டையில் முயலொன்
றினமி டைப்பிரிந் தெழுந்துடன் இரிந்தது விரைந்தே. (கo)

வேட்டையில் விளைந்தது.

173. துடித்த கன்றவம் முயலினைத் தொடர்ந்தெழு நாய்கள்
நடித்து மென்றுபின் கடுகியே முடுகின கதியாய்
அடுத்த வோர்நில மடுத்தலும் அம்முய லெதிர்த்துக்
கடுத்த டர்த்தது கலங்கின கலைந்தன கடிதே. (கக)

174. வாயு வேகமாய் மண்டிமேல் பாய்ந்துபின் வந்த
நாய்கள் அஞ்சியே நடுங்கின சிதறிட நவமாய்
ஆய வேகத்தோ டயலிடை யடலுடன் தாவி
மாய மாயது மறைந்தது தொடர்ந்தவர் மருண்டார். (கஉ)

நஅ. கிடைத்த அரச பதவியை நினைந்து களிப்புக் கொள்ளாமல் குடிகளின் நலத்தையே கருதி உழைத்து வந்தான் என்பதாம். ஒருவன் உயர்ந்த பதவி யடைபின் அவன் உலகிற்கு இதஞ்செய்ய உரிமை யுடைய வன். ஆகலான் அக்கடமை யுணர்ச்சி ஊழியம் என நின்றது. "Men in great place are thrice servants; servants of the state, servants of fame, and servants of business." (Bacon) என்னும் ஆங்கிலக் கருத்தும் ஈண்டு எண்ணத் தக்கது.

கஉ. யாண்டும் அஞ்சி ஓடும் இயல்பினதான முயல் மூண்டு மேல்வந்த நாய்களை முனைந்து எதிர்த்தது இயற்கைக்கு மாறான அதிசயம் ஆதலால் அந்நிகழ்ச்சியை நேரே கண்டவர் மருட்சி மீக்கொண்டு மயங்கி நின்றார் என்க. நவம்=புதுமை. வியக்கத் தக்க வேகம் விளக்க வந்தது.

175. எத்த லத்தினும் என்றுமே நடந்தறி யாத
விந்த கத்தினைக் கண்டவர் வியந்துளந் திகைத்தார்
இத்த லத்திலே தோவொரு திருவரு ளுளதென்
றெத்து ணர்ந்துதம் மூரினை யடைந்தனர் ஒருங்கே. (கூஈ)

176. ஊரி லுள்ளவர் யாவரு முடனுணர்ந் துவந்தார்
பாரி லெங்கணும் பார்த்திரா அதிசயம் இதைநாம்
நேரில் கண்டன மாதலால் நங்குல நிருபன்
ஒரு மாசெய வேண்டுமென் றுளமிகத் துணிந்தார். (கூச)

வேட்டை வீரர் விளம்பியது.

177. மன்னன் பால்வந்து வணங்கிமுன் னின்றுதா மன்று
துன்னி வேட்டைமேல் தொடர்ந்ததும் முயலொன்று நாயை
முன்னெ திர்ந்துமேல் முடுக்கிய திறனையு முறையே
பன்னி நின்றனர் பார்த்ததை நினைந்துமுன் பரிந்தார். (கூடு)

மன்னன் மனங்கொண்டது.

178. அந்த வாயமமாழி கேட்டதும் அரசுளம் வியந்தான்
எந்த மாட்சிக்கோர் இனியநல் லிடமிதே யென்னு
முந்த வந்தொரு திருநக ரமைத்தநி லிருந்தான்
இந்த வாறிந்தப் பாஞ்சையம் பதிவந்த இயல்பே. (கூசு)

முன்னொன்றின் விளவு.

179. மதத்த யானையைக் கோழிமுன் மாட்டிய தென்னும்
விதத்தை யோர்ந்தொரு வேந்துமுன் விரிநகர் சமைத்தான்
கதத்த நாய்களை முயலெதிர் கடித்ததைக் கண்டு
பதத்த இந்நகர் மன்னவன் பண்புடன் படைத்தான். (கூஎ)

கூஎ. முன்னொரு நாள் சோழமன்னன் சேனையோடு திரிசிரபுரம் அருகே வந்தபொழுது அங்கு ஓர் பட்டிச்சேவல் அவன் பட்டத்து யானைமேல் சிறிப் பாய்ந்து தன் சிறகால் அடித்தது; அடிக்கவே யானை அஞ்சி வெருண்டது; அவ் அதிசயத்தைக் கண்டதும் அவ் அரசன் பெரிதும் வியந்து அந்த இடத்திலே ஒரு திருநகர் அமைத்துக் குடிபுகுந்திருந்து படிபுரந்தான். அது உறையூர் என உறையாகின்றது.

"முறஞ்செவி வாரணம் முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்." (சிலப்பதிகாரம், நாடுகாண் 247.)

ஊர் பெற்ற பேர்.

180. உரிமை மிக்கபாஞ் சாலன்என் றிருந்ததன் பாட்டன்
அருமைப் பேரையே அப்பதிக் கழகுற அமைத்தான் ;
பெருமை மிக்கது பேரிசை வளர்ந்தது பெரிதாய்
இருமை யின்பமும் பெற்றிவ னிருந்தனன் இனிதே. (கூஅ)

181. தலத்தை முந்துறத் திருத்தினன் தானர சியற்றி
நிலத்தை யின்புற நிறுத்தினன் நெறிமுறை வருதன்
குலத்தை யன்புடன் விளக்கின னுதலால் அவன்பேர்
நலத்த மன்குல நாமமாய் நாளும்வந் ததுவே. (கூகூ)

182. அதிக மேன்மையாய் அங்ஙன மமைத்தர சியற்றி
மதிமி குந்துதன் மரபினில் வருபவ ரெவர்க்கும்
புதிய கீர்த்தியைப் புனைந்ததால் கட்டபொம் மென்னும்
துதிகொள் நாமத்தைச் சூடினர் வழிமுறை தொடர்ந்தே.(எ0)

183. இன்ன வாறிவன் வழிவழி வந்தர சாண்ட
மன்ன ரெண்ணிலார் மன்னுயிர் மாண்புடன் புரந்தே
உன்ன ருந்திற லுடையரா யுலகிடை யுயர்ந்து
பன்ன ரும்புகழ் கொண்டனர் பரகதி யடைந்தார். (எக)

" கொதியாப் பறந்து கவிகையினும் குதித்துச் சென்னி குஞ்சரத்தை
உதையாச் சரண முள்ளழுந்த முகமுள் ளழுந்த வுள்ளழுந்தப்
புதையாக் குருதி நதிப்படியா மதவா னையினும் பொங்கியது
மதவா ரணத்தைக் கண்டக்கால் விடுமோ மற்ற வாரணமே. "

(செவ்வந்திப்புராணம்)

மேற்குறித்த கோழிச்சரிதம் இவற்றுள் குறித்திருத்தல் அறிக. வாரணம் முன்னது யானை. பின்னது கோழி. இக்காரணத்தால் உறையூர் கோழி யூர் என நின்றது. யானையை எதிர்த்த சேவல் நிலையை நோக்கி முன்னம் ஒரு சோழமன்னன் நகரம் அமைத்து நயந்திருந்தான் ; முயல் நாயை எதிர்ந்த செயலை யறிந்து அவ்விடத்திலேயே கோட்டையை அமைத்து இக் கோமகன் குடியிருந்தான் என்பதாம். பதம்=சிறப்பு, மேன்மை.

கூ. மன்குல நாமம் = அரசமரபுக்குரிய பட்டப் பெயர்.

எ0. கட்டபொம்மு என்னும் பட்டப் பெயரைப் பாஞ்சாலங்குறிச்சி யுள்ளத்தார் வழிவழியாயிட்டு வருதற்குக் காரணம் இதனால் காணலாகும்.

184. பரிதி வானவன் உருள்நிலப் பரப்பினில் வந்து
திருவி ராவிய செய்யதோல் திசைதிசை செலுத்திச்
சுருதி கூறிய நெறிதொடர்ந் துலகினைத் திருத்திப்
பொருவில் மன்னவர் புகழறம் படைத்தினி துயர்ந்தார். (எஉ)

185. வானம் நோக்கிவாழ் மாநில மன்னுயிர் யாவும்
மானம் நோக்கிவாழ் மன்னவர் கோலமே நோக்கி
ஊனம் நோக்கிடா துவந்தினி தொழுகிட நின்றூர்
மீனம் நோக்கிய கொடியினர் என்னுமிம் மேலோர். (எக)

186. பானு வின்னெளிப் பரப்பினைப் பரவையின் விரிவை
வானி னீளத்தை மலையுறு நிறையினை அலைவாய்
ஈனு நுண்மணற் றிரளினை யெண்ணினும் எவரே
மான வேலினர் திறலினை மதித்தல விடுவார். (எச)

2-வது குலமரபுப் படலம் முற்றிற்று.

ஆகக் கவி 186.

எஉ. புகழ் அறம் படைத்தார் என்றமையால் இம்மை மறுமை என்னும் இருமையினும் இவர் பெருமை மிகப்பெற்றூர் என்பது புலனும்.

எக. மாநிலம், மழையால் நிலைத்துவருதல்போல் மன்னுயிர் மன்னரால் தழைத்துவரும் என்க. மானம் ஆவது நிலைகுலையாமல் எஞ்ஞான்றும் தலைமையோடு நிலவி நிற்றல். மீனம் நோக்கிய கொடியினர் என்றது பாண்டியமன்னரை. இவர் குடிபுரந்த நிலை கூறிய படியிது.

எச. சொல்லரும் புகழுடன் நல்லறங்கள் புரிந்து பலதலைமுறைகளாக விழுமிய நிலையில் இவ்வீர மரபினர் விளங்கி யிருந்தார் என்பதாம்.

இப் படலத்தின் சாரம்.

ஆதிக் கட்டபொம்மு இளமையில் வடநாடு விட்டுத் தென்னாடு வந்ததும், இந்நாடுபுகுந்ததும், இடம் கண்டிருந்ததும், நிடங்கொண்டு நின்றதும், பொரும்படை வென்று பெரும்புகழ் கொண்டதும், அரும் பரிசாக அரசுரிமை யடைந்ததும், வேட்டையில் முயல் எதிர்த்த இயல்பறிந்து அங்கே கோட்டை வளைந்து தன்பாட்டன் பெயர் சூட்டிப் பாஞ்சாலங்குறிச்சி என நகர் அமைத்ததும், அதில் குடிபுகுந்திருந்து படிபுரந்ததும், அம்மன்னவன் மரபில் பின்னவரும் தொடர்ந்து அறம் பொருள் ஈட்டிப் பெரும் புகழ் படைத்துப் பெருகி வந்ததும், பிறவும் இதன்கண் மருவியுள்ளமை காண்க.

மூன்றுவது

செகவீரக் கட்டபொம்மு படலம்.

இவன் ஆதிமன்னனாகிய கட்டபொம்முடைய சசு-வது வழிமுறையில் வந்து பட்டந்தாங்கி அரசு புரிந்தவன். வீரம் கொடை நியாயம் அருள் அறிவு தேய்படைத்தி சந்திய முதலிய உத்தமகுணங்களெல்லாம் ஒருங்கே அமைந்து பெருந்தகையாளனாய் விளங்கி யிருந்தான். இத் தாய்பியத் தலைவனாகிய வீரபாண்டியனுக்கு இவன் தந்தை என்க. இனது வரலாற்றி லிருந்தே இக் காவியம் ஆரம்ப மாகின்றது. இது முதல் நான்கு படலங்களால் இத் தலைமானுடைய தலைமை நிலைமை ததுதி முதலியன கூறப் பெறும்.

---

187. இந்த மன்னவர் மரபெனும் பாற்கட லிடையே
வந்து தோன்றிய மதியமிர் தெனச் செகவீரச்
சுந்த ரத்திருத் தோளினன் தோன்றினன் கண்டார்
நந்து தாங்கிய கரத்தனே யிவனென நவின்றார். (க)

188. தேன ளாவுசெந் தாமரைப் பொகுட்டுறை திருவும்
கான ளாவுவெண் கமலையாம் விமலையும் களிப்ப
மான ளாவுசெங் கரனரு ளமிழ்தினை மாந்தி
வான ளாவிய இசையொடு புவிமிசை வளர்ந்தான். (உ)

189. வேத மேமுத லாகிய நூலெலாம் மெய்யே
ஓதி ஓதியுள் ளுறவுணர்ந் தருளினு லுலகம்
போத மேவியின் புறவொரு பெரியவர் புகலும்
நீதி யாறென நெறிமுறை கடந்தொளி சிறந்தான். (ங)

க. பாற்கடல் கூறியது குலத்தூய்மை தெரிய. மதி அமிர்து என்றது உருவம் குணம் செயல்களால் எவர்க்கும் அவன் இனியனா யிருந்தமை குறுகி. இளமையொளி தவழ்ந்து, எழில்நலங்கனிந்து விழுமிய நிலையில் விளங்கியிருந்த இவனைக்கண்டவரெவரும் மால் என மால்கொண்டு மதித்து வந்தார் என்பதாம். இதனால் இவனது தோற்றத்தின் ஏற்றம் இளமை யிலேயே இசைபெற்றிருந்தமை இனிது தெளிவாம். நந்து = சங்கு.

உ. திருவும் அறிவும் சேரப்பெற்றுச் சிவபெருமான் அருளால் இவன் செழித்து வளர்ந்தான் என்பதாம். கமலையாம் விமலை = சரசுவதி.

190. உருவில் வீரத்தில் ஒருவரும் நிகரிலான் உயர்ந்த
திருவில் நீதியில் சீலத்தில் கொடையினில் தேசில்
அருளில் ஆண்மையில் அருங்கலை யுணர்வினி லெங்கும்
பொருவி லானென வுலகெலாம் புகழ்ந்திட நின்றான். (ச)

191. சீல மிக்கபால் பாண்டியன் எனப்பெயர் சிறந்து
ஞால மின்புற நயந்தர சாண்டவன் மைந்தன்
மாலை வெண்குடை மதனவே ளிவனெனத் திகழ்ந்து
கோல மஞ்ஞையூர் குமரவே ளருள்கொடு வளர்ந்தான். (ஞ)

192. யானை யேற்றமும் அடல்பரி யேற்றமும் அடர்ந்த
தானை யேற்றமும் சமர்நிலை யேற்றமும் சார்ந்த
வூனை யேற்றவெம் பலபடை யேற்றமும் உணர்ந்து
வானை யேற்றவெந் திறலொடு வளர்ந்தினி துயர்ந்தான். (ட)

193. சிவந்த மேனியும் செழுமதி யனையவொண் முகமும்
நிவந்த தோள்களும் நிமிர்ந்தெழுந் துயர்ந்தகன் மார்பும்
இவர்ந்து மேதெதி ரேறிய உரோமமும் இவனோர்
தவங்கொள் வீரனென் றுண்மையைச் சாற்றிநின் றனவே. (எ)

194. வால மன்மதன் வந்தன னுமென இவன்றன்
கோல நோக்கிய மங்கையர் உளநிலை குலைந்து
மாலு முந்துவெம் மையல்மீக் கூர்ந்தனர் அழகைப்
போலு யர்ந்ததோ நின்புறு பொருளுண்டோ புவியில். (அ)

195. கண்ட கண்ணையும் கருத்தையும் கவர்ந்துவெங் காதல்
மண்டி யேறவிம் மாமகன் வயங்கிய னெனினும்
கொண்ட நீதியும் ஒழுக்கமும் குன்றிடா மையினால்
அண்ட ராரமிர் தவாவினர் போலல மந்தார். (கூ)

196. அழுத மைந்தபொற் கும்பத்தை வண்டின மடர்ந்து
கமழும் வாசனை யால்வெளி களிப்பன போலக்
குழுத வாயெழில் மடந்தைய ரிக்குலக் குமரன்
அமையு மெய்ந்நல மாதரித் துழன்றன ரயலே. (ஏ)

சு. உருவை முதலில் குறித்தது கண்டவுடனே காட்சியின்பம்தரும் அதன் மாட்சி நோக்கி. அழகு வீரம் அறிவு முதலியவற்றில் இவன் தலைமை எய்தி நின்ற நிலைமை கூறியபடியிது. பொருவு=ஒப்பு, உவமை,

ஞ. இவனுடைய தந்தை பெயர் பால்பாண்டியன் என்பது. கோலம்=அழகு. மஞ்ஞை=மயில். அழகுக்கு மதனவேளும், வீரத்திற்குக் குமரவேளும் உவமை என்க. இளமை எழில் வீரங்களின் வளமை குறித்தவாறு.

197. வில்லில் வாளினில் வேலினில் மெய்யட லமர்ந்த
மல்லில் தண்டினில் மற்றுள படைகளி லெல்லாம்
எல்லை யில்லதோர் வலியனு யெத்திசை களையும்
வெல்ல வல்லனுப் வீரரா யகனென நின்றுன். (கக)

198. மன்னு யிர்க்குரற் முயென வன்பகை மாற்றூர்
இன்னு யிர்க்குவெங் கூற்றென இதமுட னடைந்தார்
பொன்னு யிர்க்கொரு புகலிட மெனப்பொலிந் துயர்ந்து
மின்னு யிர்க்கும்வேல் மன்னவன் மேன்மையுற் றிருந்தான். ()

199. உருவ மெய்திய மதனென வொளிமிகத் திகழ்ந்து
பருவ மெய்திய பக்குவ நிலையினைப் பார்த்தில்
ஒருமகன் றனக் குலகெலா முவந்திடச் சிறந்த
திருமணஞ்செய வுரிமையிற் சூழ்ந்துமுன் றோர்ந்தார். (கங)

கலிவிருத்தம்.

200. கண்ணினும் இனியோன் மாமன் மாமகள்
மண்ணினும் விண்ணினும் மருவ லாவெழிற்
பெண்ணருங் கலமெனப் பிறந்து பீடுடன்
எண்ணிரு பருவமா யினைந் திருந்தனள். (கச)

201. ஒழுகொளி வண்ணமும் உருவும் செய்கையும்
முழுமதி யனையவாண் முகமும் மூரலும்
விழுமிய நிலையினில் மேவி மேன்மையாய்
அழகொரு வடிவமா யமைந்து நின்றனள். (கஞ)

202. சண்முகக் கனியெனத் தழைத்த பேரிளுள்
ஒண்முகம் மதியென வொளிசெய் சீரிளுள்
விண்முக மகளிரும் விழையும் நீரிளுள்
பண்முக மொழியினுள் பவள வாயினுள். (கசு)

203. கற்பினில் அருந்ததி கலையில் நாமகள்
அற்பினில் மலைமகள் அறிவில் மாமறை
பொற்பினில் திருமகள் பொறையில் பூமகள்
இற்பெருங் குலமகள் இவளென் றேங்கினுள். (களை)

கசு. அருங்கலம் என்றது அரும்பெறலுருவும் பெரும்பொறைக் கற்பும் ஒருங்கமையப் பெற்று உரிமை யெய்தி யிருந்தமை கருதி. உருவம் சிறந்து பருவம் சுரந்து பதினறுவயதுத் தருண மங்கையாய் மருவியிருந் தாள் என்பதாம். இளையந்து என்றது இவளையே வரைந்து எதிர்நோக்கி யிருந்தமையான். ஆகவே இவரது கனிந்த காதல் நிலை காணலாகும்.

204. கலைபல பயின்றுயர் கவின்கொண் டோங்கிய
தலைமகன் இவனுக்குத் தகுதி யாகிய
குலமக ளிவளெனக் குலவி நின்றவத்
திலகத்தைத் திருமணம் செயவி ழைந்தனர். (கஅ)

205. உலகெலாம் உரிமையி னெருங்கு கூடின
அலகிலா வகையலங் கார மாயின
குலவிய கோணிலை கூர்ந்து தேர்ந்தனர்
நலமுறு நாளினில் நன்கு செய்தனர். (கக)

206. மருவும் வைகாசிநன் மதியில் வெள்ளியும்
குருவுமோ ரில்லினிற் குலவ வொண்மதி
உருவுரோ கணியுட னுறையச் சண்முகத்
திருவினை மன்னவன் சேரல் மேயினன். (உ0)

207. தாமரை மேவிய தருண மங்கையை
மாமறை மேவிய மால்வி ழைந்துமுன்
காமுற மணந்துடன் கலந்த தாமெனக்
கோமகன் இக்குல மகளைக் கூடினன். (உக)

208. கற்பகம் படர்ந்தொளிர் காம வல்லிபோல்
வெற்பக மலர்ந்ததோள் வீரனைத் தழீஇ
அற்பக மலர்ந்தநல் அறுமு கக்கனி
எற்பக லின்பமா யினிது ருந்தனள். (உஉ)

209, வாகைவேல் மன்னனும் வாட்கண் நங்கையும்
ஆகம்வே றன்றியே ஆவி யொன்றெனு
ஓகைமே லோங்கியுள் ளுருகி யொன்றிமெய்ப்
போகபூ மியரெனப் பொலிந் திருந்தனர். (உங)

210. காமனும் இரதியும் கலையும் உரோணியும்
தாமணைந் தமைந்தநீர் தகைமை யாமென
மாமனன் மகளினை மணந்து மாண்புறு
கோமகன் இன்பிடைக் குளிப்ப தாயினன். (உச)

உ0. மதி, உரோகிணியுடன் உறைய என்றதனல் அச்சமயம் சந்திரன் இடபலக்கனத்தில் எறியிருந்தமை பெற்றும். வெள்ளி=சுக்கிரன்.

உஉ. கற்பகம் அரசனுக்கும், காமவல்லி அரசிக்கும் உவமையாம்.

211. அண்புளே கனிந்தநல் அறுமு கக்கனி
இண்புளே சுரந்தெழில் தவழ்ந்தி ருந்ததால்
ஐம்புலன் களுநுகர்ந் தார ஆர்வமாய்
நம்பியுட் களித்தனன் நாளு நாளுமே. (உரு)

212. இருவரும் ஒருவராய் இணைந்து புல்லியே
உருவென வளமுணர் வுயிருமே யொன்முய்ப்
பருவம்வே றறிகிலார் பதிந்த வின்பமே
மருவிய நிலையராய் மயங்கி மண்டினர். (உசு)

213. தழுவிய கையிடை தளர நேரினும்
நழுவிய துயிரென நடுங்கி நண்ணிய
எழுவுறழ் தோளினை யினிது புல்லியே
கெழுதகை யோடுடன் கிடந்து றங்கினள். (உள)

214. ஆண்டகை யாளனுய் அரசை யாளுமப்
பாண்டிய வேளெனும் பதிக்கு நாளுமே
ஈண்டிய வைம்புலன் களுக்கும் இன்பமாய்
வேண்டிய போகங்கள் விளைத்து வந்தனள். (உஅ)

215. பூவுறு தேனினைப் பொறிவண் டுண்டதில்
ஆவலோ டயர்ந்தறி வயர்ந்த தன்மைபோல்
ஓவற வெழில்மனை யுதவு மின்பிடைக்
காவலன் மூழ்கியே களித்தி ருந்தனன். (உக)

216. பஞ்சனை மலரனை யாகப் பன்னிய
அஞ்சனை யாவுநீத் தறுமு கக்கனி
நெஞ்சனை யாகவே நிலைத்து வந்தனன்
மஞ்சனை யாதகை மான மன்னனே. (ஙo)

217. அன்றிலம் பெடையென யாதும் நீங்கிடா
தொன்றிய காதலோ டுவந்து துய்த்தனர்
தென்றலும் திங்களும் சேறல் கண்டிலர்
என்றுமே பிரிவினை யெய்தி டாமையால். (ஙக)

ஙக. பிரிந்து தனித்திருக்கும் காதலர்க்குத் திங்களும் தென்றலும் காமதாபத்தை விளக்கும் ஆதலால் அத்தாபநிலையை யாதும் பிரிவின்றி மருவியிருந்த இவர் அறியவில்லை என்க. அன்றில் பறவை ஒன்றியகாதலுடையது.

218. விண்முகத் தமிர்தினை விழைந்து வானவர்
உண்முகத் துவந்துயி ருயர்ந்து வாழ்ந்தெனச்
சண்முகத் தமிர்தினைத் தழுவி மாந்தியே
மண்முகத் துயர்ந்தனன் மான வீரனே. (கூஉ)

219. பொறிபுல னுகர்ச்சியிற் பொங்கி நின்றவின்
அறிவனும் அழகியும் அமர போகமே
செறிவுடன் திளைத்தனர் செய் தவத்தினுல்
உறுபய னிதுவென வுவந்து போற்றவே. (கூங)

220. மதுவிரி பொழிலிடை மருவி நீடியும்
புதுமலர் சூடியும் புனலில் ஆடியும்
கதுமென வோடியும் கனிந்து கூடியும்
விதுவொளி நிலவினில் விழைந்து நின்றனர். (கூச)

221. விழுமிய குணநலன் மேவி மேதகு
வழுவிலா எழிலுடை மயிலு மன்னனும்
எழுமையும் தொடர்ந்துவந் தியைந்த தாமெனும்
உழுவலன் புடன்கலந் துவந்தி ருந்தனர். (கூஞ)

கலிநிலத்துறை.

222. இன்ன வண்ணநல் லின்பங்கள் எண்ணில நுகர்ந்து
தென்ன நாடெங்கும் சீர்மிகச் செய்யகோல் செலுத்தி
முன்ன மாண்டதன் முன்னவ ரெவரினு முதன்மை
மன்னி யோங்கலிம் மன்னவன் மகிழ்ந்துவீற் றிருந்தான். (கூசு)

223. மக்க ளுக்கொரு தாயென மன்னுயிர்க் கெல்லாம்
ஒக்க அன்புசெய் துரிமையிற் பேணினுன் எங்கும்
மிக்க செல்வமும் மேன்மையும் மகிழ்ச்சியும் பொங்கித்
தக்க சீருடன் தழைத்தினி திருந்தது தலமே. (கூள)

224. பொறிபு லன்களின் போகங்கள் பொருவில நுகர்ந்தும்
அறிவ மைந்தபே ரின்பங்கள் நூல்களி லார்ந்தும்
செறிவ மைந்துயர் சீலர்கள் தம்முடன் சேர்ந்தும்
நெறிய மைந்தநற் சீர்த்தியில் நிறைந்தினி திருந்தான். (கூஅ)

கூஅ. செறிவு = அடக்கம். புலனடக்கம் சீலத்துக்கு மூலகாரணம் ஆதலால் உயர்வுக்கு அது உறுதியாய் நின்றது. நெறி = சன்மார்க்கம்.

மக்கட்பேறு.

225. அன்பு பூண்டுநின் றவனியைப் புரந்திவன் வருங்கால்
இன்பு பூண்டுயர் எழில்மனை வயிறுவாய்த் திருந்து
முன்பு செய்தநல் லருந்தவப் பயனென முதலா
மன்பு னைந்தீவார் மகவினைப் பயந்தனள் மகிழ்ந்தே. (கூக)

226. கொல்லம் ஆண்டுதொள் ளாயிரங் கொளுமுப்பத் தைந்தில்
செல்லு மார்கழி யிரு பதில் சிங்கலக் கனத்தில்
நல்ல யோகமும் கோள்களும் நலமுடன் நிலவச்
செல்ல மாமகன் தோன்றினன் செழுமதி யென்ன. (சல)

227. பால சூரியன் போலொளிர் பாலனைப் பார்த்துச்
சீல மன்னவன் சிந்தையுள் மகிழ்ச்சிமீக் கூர்ந்தான்
சால வேயுயர் தானங்கள் தருமங்கள் செய்து
ஞால மின்புற நலம்பல புரிந்தனன் நயந்தே. (சக)

228. நல்ல நாளினில் வீரபாண் டியனென விந்தச்
செல்ல நன்மகற் கொருபெயர் சூட்டினன் சேர்ந்தே
வல்ல மன்னிள யாவரும் வரன்முறை வந்து
மல்ல லோங்கிய அன்புடன் வாழ்த்தியுள் மகிழ்ந்தார். (சஉ)

229. தலைம கன்வளர்ந் திங்ஙனம் சார்ந்திவன் வருங்கால்
மலைம கள்மகன் மாணருள் மாட்சியால் எழிலார்
கலைநி றைந்தமா மதியெனக் காளைய ரிருவர்
சிலைநு தற்றிரு மடந்தைய ரிருவர்பின் சென்றார். (சங)

ஐவர் பேர்.

230. வீர பாண்டியன், சேதகு குமாரசா மிப்பேர்ச்
சூரன், பின்வரு துரைச் சிங்கம் எனவிவர் மூவர்
ஏர மைந்தொளிர் துரைக்கண்ணும் ஈசுர வடிவும்
சேர மைந்துபின் தங்கைய ராய்ப்பிறந் திருந்தார். (சச)

231. மைந்தர் மூவரும் மகளிர்கள் இருவரும் ஆக
ஐந்து பேர்களும் அருந்தவப் பயனென வந்து
இந்த மாநிலம் இன்புற வளர்ந்தனர் இறைவன்
சிந்தை யுள்ளுறக் களித்தினி திருந்தனன் சிறந்தே. (சஙி)

232. ஐந்து மக்களை அறுமுகக் கனியெனும் தேவி
தந்து போன்பு தழைத்தினி தமர்ந்தனள் என்றும்
விந்தை வாழ்புய வேந்தன்ஐம் புலன்கட்கும் இன்பம்
முந்து தந்தவள் முழுவதும் தந்திவ்வா றிருந்தாள். (சசூ)

233. மற்றும் தேவியர் மூவரிம் மன்னவன் றனக்குப்
பற்ற மைந்துபே ரின்புறப் பண்புசெய் திருந்தார் ;
உற்ற நால்வரும் ஒருவராய் உவந்தினி துறைய
முற்றுங் காதலில் மூழ்கியுண் மகிழ்ந்தனன் முறையே. (சஎ)

234. ஆயி னும்முயர் ஆறுமா முகக்கனி யிந்த
மாயி ரும்புவி காக்குநன் மகனுமுன் மாண்பாய்
ஈயும் பேற்றினை யெய்தின ளாதலால் எங்கும்
தேயம் போற்றிடத் திகழ்ந்தினி திருந்தனள் சிறந்தே. (சஅ)

இளையவன் இயல்பு.

235. தலைம கற்கிளை யானெனச் சார்ந்தவன் செவிவாய்
உலைவு கொண்டிறை யிருந்ததால் ஊமையன் என்ன
நிலைபெ றும்பெயர் பெற்றனன் நிகரிலா வீரன்
சிலைம தன்விறல் விசயனின் கலையெனச் சிறந்தேதான். (சகூ)

236. கொன்னிப் பேசுமிக் கோமகன் வீரத்தைக் குறித்துப்
பன்னிப் பேசினுல் அஃதொரு பாரதம் ஆகும்
முன்னிப் பாரினில் நின்றவா ளபிமனே முடிந்து
பின்னிப் பேரொடு வந்தனன் என்னவே பிறந்தேதான். (நிஂ)

237. வீர மென்பதேதார் வடிவுகொண் டிவன்பெய ரோடு
சார வந்ததென் றுரைத்துரை யமைவதே சால்பாம் ;
போரில் நின்றுமுன் பொருதுள திறத்தினை லன்றே
பாரி லின்னமும் இவன்பெயர் பரவியுள் ளதுவே. (நிக)

சகூ. தம்பியான தளவாய்க்குமாரசாமிக்கு வாய் சிறிது கொன்னல் உண்டு ; அதனல் யாரோடும் அதிகம் பேசாமல் மௌனமாயிருந்தமையால் ஊமையன் என நின்றன். மதன் விசயன் என்றது அழகு வீரங்களின் அமைதி கருதி. அதிசய ஆற்றல்களுடன் அசகாயசூரனுய்த் திசைமெச்ச நின்றமையால் இன்றும் இவன் இசைபரவி எங்கும் ஏற்றமுற் றுள்ளது.

238. ஊமையன் என இப்பொழு தப்பெயர் சொலினும்
சீமையும் திகில் கொண்டுதென் திசையினை நோக்கி
நாமங் கொள்ளுமால் இத்திசை யூமையன் நாமச்
சீமை யென்றொரு பெயரையும் சேர்த்துள தன்றே. (நுஉ)

239. அரியின் ஏறென ஆண்மையிற் சிறந்தஅவ் வீரன்
பரியின் ஏற்றத்தில் நகுலனை வென்றனன் ; படையில்
வரிவி லாண்மையில் விசயனை யடுத்தனன் ; வாளில்
அரிய திண்டிறல் அபிமனை ஒத்திருந் தனனே. (நுங)

240. தம்பி யாகிய துரைச்சிங்கம் தமையன்மா ரென்னும்
வெம்பு வெந்திற லாளிகள் விழைந்திட விளைந்து
தம்பி வாம்பரி துணிவுடன் ஏறியும் சுடர்வேல்
அம்பு வாள்முத லடுபடை பயின்றுமாங் கிருந்தான். (நுச)

241. முக்கண் எம்பிரான் கண்கள்போல் தோன்றிய இந்த
மக்கள் மூவரும் மாநிலம் இன்புற மருவி
ஒக்க வேவளர்ந் தெழிலுட னெளிர்வதைக் கண்டு
மிக்க பேருவ கைக்கடல் மூழ்கினன் வேந்தன். (நுஙு)

242. ஆத வன்மதி யங்கியென் றமைந்திடு மந்தச்
சோதி தன்னிழி மூன்றனுள் நெற்றியின் சுடர்போல்
மேதி னிக்கணை வெந்திறல் வீரனுய் விஞ்சி
ஓதும் ஊமையன் நின்றனன் உலகெலாம் தெரிய. (நுஞ)

243. முக்கு லத்துயர் மன்னவர் அமிசங்கள் மூன்றும்
ஒக்க வேபிறந்த மன்னவ னிடமுதித் தனபோல்
மக்கள் மூவரும் மருவியே மகிழ்ந்துடன் வளர்ந்தார்
திக்க ளைத்தினும் தந்திறல் நிறுவிடத் திகழ்ந்தார். (நுஎ)

244. வாள்ப யின்றனர் வல்லயம் பயின்றனர் வரிவிற்
கோள்ப யின்றனர் குஞ்சரம் பரிமுத லெவையும்
தாள்ப யின்றுமே லிவர்ந்திடப் பயின்றனர் சமரின்
சூள்ப யின்றனர் தொல்கலை யாவுமே பயின்றார். (நுஅ)

நுஉ. நாமம் இரண்டனுள் முன்னது அச்சம் ; பின்னது பேர். தென்பாண்டி நாட்டை ஊமையன் சீமை என யாண்டும் இன்று இசைத்துவருதலால் மூண்டபோர்தொறும் முனைந்து வென்று இவ் ஆண்டகை மீண்டபுகழுடன் அன்று நிலவியிருந்த நிலை தெரியலாகும். சேர்ந்து = பெற்று.

245. படைக்க லம்பயின் றுடலினை வளர்த்தனர் ; பணிவாய்
அடைக்க லம்புகுந் தரியநூல் பலபயின் றறிவின்
திடத்தில் நின்றனர் ; செம்மையும் நீதியும் செறிந்துள்
உடைப்பெ ரும்பய னுயிரினை யோம்பின ருயர்ந்தே. (நிகூ)

246. எளிய ராயினுர் தமையெதிர் காணினே னென்றும்
அளிய ராயுளங் குழைந்தினி தாதரித் தருள்வார் ;
களிய ராய்வலி மிகுத்தவர்க் காணினே னனன்றே
ஒளிசெய் தீயென வுருத்துடன் எரித்தொழித் திடுவார். (கூ0)

247. அழகும் வீரமும் அருந்திற லாண்மையும் அருளும்
கழக மேறிய கல்வியும் செல்வமும் கமையும்
உழைய டைந்தவர் உளமகிழ் தரத்தருங் கொடையும்
விழைவொ டிக்குலக் குமரர்பால் மேவினின் றனவே. (கூக)

248. பருவந் தன்னிலே முன்பினு இருப்பினும் பரந்த
உருவந் தன்னிலே ஒருவர்போல் ஒளியமைந் திருந்தார் ;
கருவந் தோங்கிய திருவின ராய்க்கதித் தெழுந்து
மருவந் தோங்கிய மலரென மதிகமழ்ந் துயர்ந்தார். (கூஉ)

249. மைந்தர் மூவரும் மாநிலம் மகிழ்ந்திட வளர்ந்து
விந்தை சேர்புய வீரராய் விளங்குதல் கண்டு
முந்தை யோர்செய்த முழுத்தவப் டயனென வியந்து
சிந்தை யுள்ளுறக் களித்தன்பு செழித்தன ரெவரும். (கூங)

250. இத்த ராதல முழுவதும் ஒருவனே எளிதாய்
வைத்த நீதியா டாளவும் வல்லவன் அதனுல்
முத்த லத்தையும் தனித்தனி தத்தமக் குரித்தாய்
ஒத்து வந்துட னுளவுற் றுரென வுறைந்தார். (கூச)

251. உருவம் வேறதாய் வெளியினில் உலாவினும் உள்ளம்
ஒருவ ராகவே யுரிமையி லொழுகின ரென்றும்
கருவி லேதிரு வுடையவர் கல்வியும் அறிவும்
மருவு சீலமும் மருவியே வளர்ந்தினி துயர்ந்தார். (கூடு)

252. கலைநி றைந்தமா மதியெனக் கலைகளா னிறைந்து
நிலைசெய் பேரொளி நிலமிசை நிலவிட நிமிர்ந்து
தலைமை யோடிந்தக் குமரர்கள் சதுருடன் வளர்ந்தார்
மலைசெய் தோள்வலி மன்னவன் மனமகிழ்ந் திருந்தான். (கூக)

253. போரடங்கலும் வென்றுயர் பொருதிற லமைந்தும்
சீரடங்கிய நால்வகைச் சேனையிற் சிறந்தும்
சூரடங்கவென் றெழிர்வடி வேலனைத் துதித்தும்
காரடங்கிய கொடையுடன் கருணைசெய் துயர்ந்தான். (கூள)

254. முருக மூர்த்தியின் முளரியந் திருவடி மலரை
உருகி யெண்ணியெங் நானுமே யுள்ளன்பு கொண்டு
கருதிப் பேணியே கருதரும் பணிகளைச் செந்தூர்த்
திருந கர்க்கணை செய்திவன் பத்தியிற் சிறந்தான். (கூழ)

255. நித்த மாதிய பூசைகள் நெறிக்கெலம் நிலையா
வைத்த மாநிதி வயல்நில முதலிய வழங்கி
அத்த சாமத்துக் கட்டளை முதலினி தாய்ந்து
பத்தி யோடென்றும் பண்புட னடைபெறப் பணித்தான். (கூக)

256. செந்தி லாதிபன் திருவருள் வலியினுல் சிறந்த
மைந்த ராதிய மாபெருந் திருவெலாம் நிறைந்து
இந்தி ராதிப னெனனிந்த மாநிலம் ஏத்த
முந்தி நின்றவன் முருகனைப் பூசித்து வந்தான். (எ0)

நியமநிலை.

257. பூசை செய்தன்றி யுண்டியுட் கொண்டிலன் புனிதத்
தேச மைந்தருந் செந்தியில் எம்பிரான் றனக்கு
நேச மாகவே பூசனை முடிந்ததும் நிதமும்
ஓசை யால்தெரிந் ததன்பினே உணவையுட் கொள்வான். (எக)

258. பரம னுக்கெனப் பணிவுடன் படுத்துமுன் வைத்த
அருமைச் சோத்துகள் செந்திலாதிபன்பண்ணை என்னும்
உரிமைப் பேரினு லின்றுநின் றெழிர்கின்ற உரிய
தருமம் பார்ப்பவர் சரிவரச் செய்கில ரன்றே. (எஉ)

259. மணியிற் பொன்னினில் மாண்புறச் செய்துமேல் அணிந்த
அணிகள் மூன்றிலக் கந்தொகை அமைந்ததா யின்றும்
பணியு றுங்கரு வூலத்தில் பாஞ்சைமன் பெயரால்
துணிவு கொண்டுள இவனுய ருளநிலை துலங்க. (எக)

260. இந்த வண்ணமா யென்றுமே முருகனைத் தனது
சிந்தை யுள்ளுறக் கொண்டிவன் தேசுட னின்றுன்
செந்தி லம்பதி பூசனை முடிந்தது தெரிய
முந்து பேரிகை ஒலித்திட முடித்துவைத் திருந்தான். (எச)

261. கோட்டை நின்றுயர் கோவில்ஐங் காவத தூரம்
நாட்டி நின்றநன் முரசங்கள் பத்து நன்றுகப்
பூட்டி நின்றன பூசனை முடிவினில் முறையே
காட்டி நின்றெலி செய்திடக் காவல ரிருந்தார். (எஞ)

262. முன்ன வன்னுயர் பூசனை முடிந்ததும் முதலிம்
மன்ன வன்னுட னுணர்ந்திட வழிதொறுங் தொடர்ந்து
நன்ன யம்பெற நாட்டிய முரசங்கள் அடிப்பார்
அன்ன ஓசையை யறிந்தபின் அருந்துவன் அமுதே. (எகூ)

263. அமுத யின்றபின் குறுநடை சிறிதுகொண் டமர்ந்து
குமுத வாய்ச்சியர் கோல்வளை ஒலித்திடத் தமது
கமலக் கையினுல் கவரிகள் கால்செய அகன்றே
அமையும் காரியம் அன்புடன் அறிஞரோ டாய்வான். (எஎ)

264. புலமை யின்பமே புனிதமென் றுணர்ந்தனன் அதனுல்
தலைமை யானநற் புலவரைச் சார்ந்துபற் பலநூல்
நலமு றும்படி னினவியும் நவின்றுமுட் களித்தே
அலகி லின்பமாய் அநுதினம் பொழுதினைக் கழிப்பான். (எஅ)

265. சில மிக்கநன் மேலவர் நட்பொடு சிறந்த
நூலு நுட்பமாய் ஆய்ந்திடப் பெற்றதால் நுவன்ற
ஞால மாண்புற நண்புடன் ஆண்டனன் குடிகள்
சால இன்பமாய் வாழ்ந்தன செங்கணும் தழைத்தே. (எகூ)

266. முறையி டுந்தெவ்வர் முறைமுறை வந்துவந் துவந்து
குறையி டந்தரு ளென்றுமுன் குணமுடன் வணங்கித்
நிறையி டுந்தொறும் திருமுக மலர்ந்துரை சிறிது
கறைசு ரந்தொழு கியதென நயம்பட மொழிவான். (அ0)

267. நாட்டில் கொண்டதோர் நிறையினை நலமுற நாடிக்
கூட்டி வைத்திவன் யாவர்க்கும் கொடுத்துள முவந்தான்
ஈட்டி யாதொன்றும் தனக்கென வைத்திலன் என்றும்
தேட்டி னின்பயன் இன்பறம் என்பது தேர்ந்தான். (அக)

268. சிந்து மேய்ந்தெழு செழும்புயல் சிகரியைச் சேர்ந்து
வந்து தாழ்ந்துள புனலெலாம் விரைந்துமுன் வழங்கும்
அந்த நீர்மைபோல் அவனியில் அரும்பொரு ளீட்டித்
தந்து வந்துவா னமர்ந்தெனத் தனியுயர்ந் திருந்தான். (அஉ)

269. அடுத்த வர்க்கெல்லாம் அறிவுரை யாடியா தரவாய்க்
கொடுத்து வந்தன னுதலால் உலகெலாம் கொடைப்பேர்
எடுத்து நின்றனன் புலவர்கள் பலபட வுத்தித்
தொடுத்த செந்தமிழ்ப் பாடல்கள் சூடினர் துதித்தே. (அங)

270. மேல டித்திடும் வெயிலெலாம் மெய்யினில் தாங்கி
ஏலு நீழலே அருகடைந் தவர்க்கெலாம் ஈந்து
சால வேபல கிளைகளைத் தழுவியோங் கியவேர்
ஆல நற்றரு வாமென அமர்ந்திவ னிருந்தான். (அச)

271. இனிய சொல்லொடும் ஈகையும் இரக்கமும் அன்பும்
கனியும் நெஞ்சின னுயிவன் கண்டவர்க் கெல்லாம்
இனிது செய்துவந் திருமையும் பேரிசை கொண்டான்
மனிதர் தம்முளே தெய்வமன் மாண்பொடு வாழ்ந்தான். (அஞ)

272. தன்னைப் போலவே மன்னுயிர் தம்மையும் பேணி
அன்னை யாமென யாவர்க்கும் அன்புடன் அமைந்தே
இன்ன வாறிந்த மன்னவன் திருமலிந் திருந்தும்
முன்ன வன்னருள் முன்னியே வாழ்ந்தனன் முழுதும். (அசு)

அஉ. மேகம் கடல் நீரை மொண்டு உலர் சேர்ந்து உலகினுக்கு உபகரிப்பதுபோல் இவனும் உலகில் பொருள் தொகுத்து நலமுற ஆய்ந்து உயிர்களுக்கு உதவினன் என்க. தானம் செய்தவனே வானம் அளாவிய புகழுடன் வளர்ந்து உயர்ந்திருப்பன் என்பது கருத்து.

273. மாசி மாமகத் தொன்றினில் செந்திலில் வந்து
ஈச னுக்கபி டேகங்கள் எண்ணில செய்து
பூசை யின்புறப் புனிதமாய்ப் புரிந்துமூன் போற்றி
நேச மிக்குளம் நெக்குநெக் குருகிநேர் நின்றான். (அள)

274. கைக ளேத்தலை வைத்தனன் கண்கள்நீர் வெள்ளம்
பெய்து நின்றன போரன்பு மனத்திடைப் பெருகி
மெய்சி லிர்த்தனன் விம்மிவெய் துயிர்த்துமே லேங்கி
ஐய னேயென ஆர்வமோ டலறிவாய் துதித்தான். (அஅ)

துதி.

275. பார்த் தெடுத்து வடித்தபசுந் தேனே ! வானோர்
பலநாளு முயிர்வாழப் பண்பு காட்டும்
தீர்த்தமிகு தெள்ளமுதே ! அமுதின் மேய
தீஞ்சுவையே ! செழுங்கனியே ! சிறந்த பாகே !
சேர்த்தெடுத்த அறுவருள மகிழ வீசும்
செஞ்சோதித் திருமணியே செந்தில் மேவி
வார்த்தெடுத்த திருவுருவாய் வயங்கி நிற்கும்
வள்ளலே ! யுள்ளிருந்து வாழும் தேவே ! (அக)

276. அன்புடையா ருளம்பூத்து விளங்கும் அருள் விளக்கே !
அருளுடையார் அறிவுடையார் அள்ளியுண்ணும் அமிர்தே !
முன்புடையர் பின்புடையார் முழுவதுமே யுடையார்
முருகுடையார் முடியுடையார் முடிவின்மை யுடையார்
என்புடையார் பணியுடையார் என்பணியு முடையார்
ஈவுடையார் வம்புடையார் இளமதியு முடையார்
மன்புடையார் முழுமதியே ! பன்னிருகண் மணியே !
மாறுத லின்பவடிவான பொருளே. (கூ)

277. என்னிருகண் மணிபோளியே ! பின்னமுதப் பெருஞ்சுவையே எழிலார்சோதி, பன்னிருகைப் பரம்பொருளே ! பன்னிருவ ரும்பாராப் பதியும்தேற, முன்னிருவே தப்பொருளை மொழிந்தசிவ குரு'மணியே ! முத்தே ! என்னைத், தென்னிருசே வடிசேர்த்தாள் திருச்செந்தில் அமர்ந்தருளுந் தேவ தேவே. (கூக)

அள. மாசி மாதம் மகநட்சத்திரத்தை முன்னிட்டுத் திருச்செந்தூரில் சிறப்பாகத் திருவிழா நடைபெறும். மாசிமகம், வைகாசி விசாகம், ஆவணி மூலம் என்னும் இம் மூன்று உற்சவங்களிலும் அங்கே திரளான சனங்கள் வந்து பெருமானைத் தரிசித்து மகிழ்வர்.

278. வண்டுளப மணிமார்பன் மருகமுரு காவென்ன மலர்க்கை கூப்ப
அண்டர்முது வன்முதலோர் அறுமுகத்தெம் மரசேயென் றூர்வம்கூர
மண்டலமீ தவர்பிறந்த பயன்பெற்றே மென்றுமன மகிழ்ந்துவாழ்த்தத்
திண்டிறற்செவ் வேலேந்தித் திருச்செந்தி லமர்ந்தருளும் தேவதேவே.

279. ஆசைவளர் தருமனமும் அறிவுதளர் தருசினமும் அமைந்து மீறு
பூசுநெறி யறியாத புல்லியனென் றெனைவிடுத்தால் புகல்வேறுண்டோ
வாசமலி மீபமணி மணிந்தோளா ! எனதுமுடி வைத்த காளா
தேசுவளர் சோலைநிகழ் திருச்செந்தில் அமர்ந்தருளுந் தேவதேவே.

280. மாலுமய னுங்காண மானிடனா ரளித்ததிரு மகனே செங்கை
வேலுமயி லுங்கனக நூபுரஞ்சேர் மென்காலும் வேத நான்கின்
மேலிலகுந் திருவுருவும் மனமுருக விழிகளினற் காண்ப தென்றே
சீலமிகு மாதவர்சூழ் திருச்செந்தில் அமர்ந்தருளும் தேவ தேவே.

281. தேவரெலாந்தொழுதேத்தச் சிகிப்பரிமேல்செங்கதிரோர்கோடிகூடித்
தாவிலுயர் மரகதமா மணிமலைமேல் உதயமெனத் தயங்கா நின்ற
காவலனே ! கதிபடியார்க் குவந்தளிக்குங் கற்பகமே! கருணைவாழ்வே!
சேவலொளிர் கொடியரசே! திருச்செந்தி லமர்ந்தருளும் தேவதேவே.

கொச்சகக் கலிப்பா.

282. இவ்வாறு மனமுருகி இறையவனைத் தொழுதேத்தி
அவ்வாயில் இலைநீற்றை ஆர்வமுடன் பெற்றணிந்து
செவ்வேளை யுட்கொண்டு சிறப்போடு வெளிவந்தான்
எவ்வாயும் பொன்சொரிந்தான் எழில்மறையோர்க்கருள்
புரிந்தான். (கூசு)

283. வள்ளலென எல்லோரும் வாயார வாழ்த்திநிற்கத்
தள்ளரிய படைகளயல் சதுருடனே சார்ந்துவர
ஒள்ளியபொற் சிவிகையினில் ஒளிர்மதிபோல் இனிதமர்ந்து
வள்ளியங்கள் முன்முழங்க மன்னனெழுந் தருளினான். (கூஎ)

284. எழுந்துவரும் வழியிடையே யிருந்துவளர் குடிகளெலாம்
செழுங்கனியும் பல்பொருளும் திரள்திரளா னந்திவந்து
வழிந்தொழுகும் அன்போடு மன்னனைக்கண் டுண்மகிழ்ந்தார்
தொழுந்தொறுநல் லருள்பொழிந்து தோன்றலுறும் வழி
கடந்தான். (கூஅ)

285. வருநெறியில் ஆத்தூர்வாழ் மாமறையோர் எதிர்கொண்டே
அருமையுடன் வந்துகண்டார் அவர்க்கெல்லாம் அன்புசெய்து
பெருமகிழ்வு கொண்டாடிப் பேணியவர் தமைநிறுத்தித்
திருமலியும் பாஞ்சைநகர் சேர்ந்துசிறப் போடிருந்தான். (கூ)

286. காடெல்லாம் திருத்தியுயர் கழனிகளா யுறச் செய்தான்
கோடெல்லாம் வளத்துநிறை குளங்கள்வளம்பெறச்செய்தான்
நாடெல்லாம் குடிகளிடம் நவையொன்றும் நாடாமல்
மாடெல்லாம் அறிஞர்கள மாறுமல் உய்த்தாய்ந்தான். (ஈ)

287. மடியிருந்த குடிகெட்டு மாண்டொழிந்து போமென்றே
அடிவருந்தப் பாடுபடும் அவர்க்கெல்லாம் ஆதரவாய்ப்
படியளந்து பண்புசெய்து பாசெங்கும் ஆள்வினையால்
முடிவளர முன்னுய்ந்து மூலமுறு குடிவளர்த்தான். (ஈக)

288. ஆள்வினையை யுடையவனே ஆண்மகனுய் அகிலமெங்கும்
நீள்புகழை யினிதடைந்து நிறைதிருவும் பெற்றுயர்ந்து
வாள்வினைவேந் தரும்விழைய வாழ்வனென யாவரையும்
தாளுடைய ராயூக்கித் தகவுடைய ராய்ச் செய்தான். (ஈஉ)

289. பெற்றபிள்ளை தனைப்பேணும் பேரன்புத் தாயென்ன
உற்றகுடி யனைத்தையுமே யுரிமையுடன் காத்துநின்றான்
பற்றலர்கள் தலையடங்கப் படுநவைகள் நிலையொடுங்கக்
கொற்றமலிந் தெத்திசையும் கொண்டாடவீற்றிருந்தான். (ஈங)

290. ஊரெங்கும் கல்விநிலை யுக்காமுட னுட்டிவைத்தான் ;
ஏரெங்கும் செய்வினையை யிரக்கமுடன் கழித்தளித்தான் ;
காரெங்கும் மழைபொழிந்து காடெங்கும் வளமோங்கிச்
சீரெங்கும் பெருகிவரச் செங்கோலப் பரவிவந்தான். (ஈச)

291. குற்றங்கள் புரிந்தாரைக் கொடுந்தண்டம் செய்யாமல்
மற்றவரே தாமுணர்ந்து மனந்திருந்தும் வகைசெய்தான் ;
செற்றமெங்கும் சேராமல் செம்மையே போதித்தான் ;
கற்றவரைக் கண்போலக் கைக்கொண்டே வாழ்ந்திருந்தான். ()

ஈக. மூலமுறுகுடி என்றது குடிவளர்ச்சி முடி உயர்ச்சிக்கு மூலகாரணமாதல் கருதி. தருவின் அடியில் நீர்வார்த்து முடியில் பயன்கோடல் போல் முடி வளர இவன்குடிவளர்த்தான் என்க. மடி = சோம்பல். ஆள்வினை = முயற்சி.

202. தனித்தலைவன் ஒருவனெங்கும் தங்கியுள்ளான் அவனருளால்
பனித்திவலை யனையநாம் பாருரிமை சிறிதுடையேயம்
இனித்தனிதை யினிதோம்பா திழிசெருக்கை மேற்கோடல்
மனித்தவுரு விழுந்துபழி மருவும்வழி யென்றுணர்ந்தான். (ரூ)

203. அரசதிரு வுடையனுய் அதிபதியா யமைந்திருந்தும்
பரசிவரும் எவரையுமே பரிவுடனே பாராட்டிச்
சரசமுடன் தந்துவந்த தன்மையினுல் புகழ்நிலவி
விரசியெங்கும் ஒளிவீச வெண்மதிபோல் விளங்கினன். (ரஎ)

கட-வது செகவீரக் கட்டபொம்மு படலம் முற்றிற்று.

ஆகக் கவி உகூக.

ரூ. ஒருவன் என்றது பரமனை. அகில லோக நாயகனுய் யாண்டும் என்றும் நிலைமையுடன் நிலவி நிற்கும் அப்பரமபதியின் திருவருளால் பூமியில் ஒரு சிறிது நிலவுரிமை கிடைத்துள்ளது; அதனை நெறிவழுவாமல் போற்றின் புகழும் புண்ணியமும் அடைந்து உயர்வுறலாம்; வழுவின் பழியும் பாவமும் படிந்து இழிவுறவரும் என்னும் உண்மையை யுணர்ந்து இவன் உரிமையை அருமையாக ஓம்பிவந்தான் என்பதாம்.

"மறவியின் மயங்கி யையத்துயிர்களை வருத்தல் செய்யா
கறவியன் மனத்தை யாகி ஆருயிர்க் கருள் பரப்பிச்
சிறையன பிறவி போக்குந் திருவற மருவிச் சென்று
நிறைபுக முலகம் காத்து நீடுவாழ் கென்று நின்ருர்."

(யசோதர காவியம்)

என்றபடி இவன் நின்று காத்து நிலைத்து வந்தான் என்க.

ரஎ. இருந்தும் என்பதில் உம்மை அவ் இருப்பின் இறுமாப்பு உணர நின்றது. செல்வமிக வுடையவர் எளியர்பால் அளியராய் இரங்கி இதம் புரிதல் அருமை ஆதலால் அரச திருவுடன் அதிகாரமுமுடைய இவன் எவரிடமும் சரசமாய் நின்று உதவி வந்தமை இங்கே உவந்து புகழ வந்தது. "ஈவார்மேல் நிற்கும் புகழ்" என்னும் தேவர்மொழி ஈண்டுச் சிந்திக்கத் தக்கது. இக்கொடைவள்ளல் புகழொளி பரப்பி விண்ணிடை மதிபோல் மண்ணிடை விளங்கி யிருந்தான் என்பது இதனுல் அறியலாகும்.

நான்காவது

திக்குவிசயப் படலம்.

செகவீரக் கட்டபொம்மு என்பவர் பாண்டி மண்டலத்தின் எட்டுத் திக்குகளிலும் சென்று துட்டர்களை அடக்கிக் கள்ளம் முதலியன யாண்டும் நிகழா வகை காரியம் புரிந்து வீரியம் சிறந்து வெற்றித்திறத்துடன் வந் தனமையை உரைக்கின்றமையால் இது திக்குவிசயப் படலம் என நின்றது.

---

294. உடலை யோம்புறும் உயிரென உரிமையி னீர்ந்து
கடல் வளைந்தவிந் நிலத்தினைக் கருத்தொடு காத்தான் ;
நடலை யின்றியே யாண்டுமே நல்லறம் தழைக்க
மடலை னைந்தவன் மலர்த்திரு வுறமகிழ்ந் திருந்தான். (க)

295. இன்ன வாறுல் லிசைதிசை எங்கணும் பரவ
மன்னன் அன்புடன் மாநிலம் புரந்துமன் னுயிர்கள்
துன்னி யின்புறத் தொல்லறம் பலபுரிந் துயர்ந்து
மன்னி வாழுநாள் வந்தீவார் மாண்பினை வகுப்பாம். (உ)

நபாவின் ஆட்சி நிலை.

296. சாதி காவெனும் பெயரினன் நபாவினல் லுறவோன்
ஆதி யாயர சமைச்சியல் புரிந்தநல் லடலோன்
காது வெம்படைக் கடலுடன் தென்திசை போந்து
நீதி செய்திட நெல்லையம் பதியடைந் திருந்தான். (ங)

297. ஈண்டு வந்தமர்ந் திறைமுறை யோர்ந்தினி தாக
ஆண்டு வந்தன னுயினும் அவனியில் யாண்டும்
தூண்டு மின்னலும் பகைளும் கலகமும் தொடர்ந்து
மீண்டு மீண்டயல் விளைந்துட னெழுந்தன விரைந்தே. (ச)

298. மாறு பாடுடன் குறுநில மன்னர்கள் பலரும்
மீறி நின்றனர் மிகைபடப் பேசினர் எங்கும்
தாறு மாறுமாய்ச் சண்டைகள் மூண்டன தளர்ந்து
வேறினிச் செய்வ தென்னென மிகமன மெலிந்தான். (ஞ)

299. தானை கொண்டவன் அடக்கினன் தருக்குடன் மூண்டே
ஆன மட்டுமே பார்த்தனன் அடங்கிடா தவங்கள்
வான் முட்டவே வளர்ந்தன வரிகளும் இழந்தான்
மானம் விட்டவன் மறுகினன் தமருடன் ஆய்ந்தான். (ட)

300. திரும லிந்துயர் பாஞ்சையம் பதியினிற் றிகழும்
பொருவ ருந்திறல் மன்னனே புகலிட மென்ன
உரிமை யோடவன் ஓர்ந்துணர்ந் திவனிடம் வந்தான்
அருமை யாகவே யாதரித் துபசரித் தணைத்தான். (எ)

301. வந்த காரியம் என்னென மன்னவன் வினவ
இந்த நாடெலாம் உரிமையா யெமக்கிறை தந்து
முந்தை நாள்முதல் வந்தன இந்தநாள் முரணி
அந்த நீர்மையை மறுத்தடல் புரிகின்ற அரசே. (அ)

302. பூலம் நாஞ்சிநா டாதிய இடங்களில் பொங்கிச்
சால வேயடர்ந் தோங்கிய மறவர்கள் தருக்கி
ஆல மாய்ப்படர்ந் தயலிட மெங்குமே புகுந்து
கூல மாகவே கொள்ளைகள் செய்கின்றார் கொடிதாய். (கூ)

303. காட்டி லும்கொள்ளை வீட்டிலும் கொள்ளையே கண்ட
நாட்டி லும்கொள்ளை நகரிலும் கொள்ளையா யெங்கும்
கூட்டங் கூட்டமாய்க் கொடுமைக ளிழைக்கின்றார் குடிகள்
வாட்ட மீறியே திகில்கொண்டு மறுகுகின் றனவே. (கஅ)

304. படைகள் கொண்டுமே பரிந்துடன் அடக்கினேன் பயனென்
றடைய வில்லைநான் ஆதலால் அருந்திற லோடு
கொடையும் வாய்ந்தநின் கோமளை தஞ்சமென் றடைந்தேன்
உடைய இந்தவோ ரமையத்தில் உதவுக என்றான். (கக)

305. என்று சாதிகான் கூறலும் இவ்வர சுடனே
ஒன்று மஞ்சலிர் உதவுவன் இருமதிக் குள்ளே
சென்று நும்பதி சேர்ந்திரு மென்றருள் புரிந்து
வென்றி வீரரை அழைத்தனன் விவரங்க ளுரைத்தான். (கஉ)

அ. பூலம் என்பது நாங்குநேரித் தாலுகாவிலுள்ள ஓர் ஊர். நாஞ்சிநாடு சேர மண்டலத்திலுள்ளது. ஆலம் = நஞ்சு. கூலம் = திரள்.

கஉ. அக்காலத்தில் இத்தேசம் ஆர்க்காடு நபாவுக்கு உரிமையா யிருந்தது. உள்நாட்டில் கலகமும் குழப்பங்களும் மிகுந்திருந்தமையால் சாதிகான் என்னும் தலைவன் திருநெல்வேலியில் வந்து தானையுடன் தங்கியிருந்து கொண்டு ஆனமட்டும் இந்நாட்டை அடக்கிப்பார்த்தான்; யாதும் அடங்காமல் யாண்டும் அல்லல்களே நீண்டு நின்றன; நிற்கவே வேண்டியவர்களுடன் ஆராய்ந்து முடிவில் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்து இவ் ஆண்டகையிடம் உற்றதை யுரைத்து உதவிபெற்று அகன்றமை இதனால் அறியலாம்.

306. தானை யின்பதி யாகிய சவுந்தரன் றன்னே
டான வீரரீ ராயிரம் போர்களே யமைத்துக்
கோனை முந்தனன் குணமுடன் குறித்தவோர் நாளில்
சேனை சென்றது தென்றிசை நடுங்கிநின் றதுவே. (கஙூ)

307. பூலம் புக்கனன் மறவரும் புகுந்தனன் பொங்கிக்
காலன் போலவே கடுத்திவன் வந்ததைக் கண்டு
சால வேமறச் சாதியின் தலைவர்க ளெல்லாம்
ஏல வேவிணைந் தெழுந்துவந் ததிரெதிர் கண்டார். (கச)

308. பாக்கி யம்மிகுந் தோங்கிய பாஞ்சையம் பதிவாழ்
கோக்கு லத்துயர் சிங்கமே குடியிட மிங்கே
நோக்கி வந்தது நாங்கள்செய் நோன்பினற் பயனென்
றாக்கி நின்றவர் உரிமையின் உபசரித் துரைத்தார். (கரு)

309. வணங்கி நின்றவத் தலைவரை மன்னவன் பார்த்துப்
பிணங்கி நீரினி யாதொரு பிழையையும் நாட்டில்
அணங்கி டாமலே ஆய்ந்துமே காத்திட வேண்டும்
இணங்கி நின்றுறு திறைகளே யீந்திட வேண்டும். (கரூ)

310. இல்லை யேல்உங்கள் வாழ்வுமிங் கில்லையாம் என்ன
நல்லை நாயக நாட்டிய வரையினைக் கடவேம்
ஒல்லை யாகவே வரிகளைத் தொகுத்தினி முறையே
செல்ல மாநகர் சேர்ந்துடன் செலுத்தியே வருவேம். (கள)

311. என்று வாய்புதைத் தன்புட னின்றவர் இயம்ப
வென்றி வேந்தனும் அவ்விடம் விட்டுவே றெழுந்து
துன்றி நின்றவெந் துடுக்க ளெல்லாரையும் ஒடுக்கி
நன்ற மைந்திட நாடெங்கும் படைகொடு நடந்தான். (களு)

312. நாஞ்சி நாடெங்கும் நடுங்கிமுன் ஞெடுங்கிட நயந்து
வாஞ்சை யாகவே குடிகளுக் கிதம்பட வழங்கி
தீஞ்செய லெங்கும் சேரலா வகைதிறல் செலுத்திப்
பாஞ்சை மன்னவன் நகர்தொறும் பண்புடன் படர்ந்தான். (ககூ)

கஙூ. சவுந்தர நாயக்கன் என்பவன் சேனைத் தலைவருள் ஒருவன்.

313. ஆய வாய்மொழி வையும்தன் ஆணையை நிறுத்தி
வீர வெற்றியோ டுலாவினன் எங்குமே யாரும்
போரை திர்ந்தில்ர் போனதோர் திசையெலாம் உடனே
சார வந்துமுன் பணிந்துபொன் சொரிந்தனர் தாழ்ந்தே. (உ0)

314. சேர்ந்து வந்தடி பணிந்தவர் தமையெலாம் சேரே
ஓர்ந்நிந் நாட்டினில் யாங்கணு மூறுக ளின்றிக்
கூர்ந்து நீர்குறிக் கொண்டுகாத் திடுமென்று குறித்தே
ஆர்ந்த மைந்துள வரிகளை வாங்கிமே லகன்றான். (உக)

315. வான மாமலை யடைந்தினி திருந்தய லிருந்த
தான மெங்கணும் தாணையந் தலைவனை ஏவிக்
கோனி ஞணையைக் குணமுடன் குறித்திட விடுத்தான்
போன யாவரும் புகழுடன் பொருந்தியே மீண்டார். (உஉ)

316. அரசு வந்துள நிலையினை யறிந்ததும் தலைவர்
விரசி வந்துயர் காணிக்கை விழைவுடன் செலுத்திப்
பரசி நின்றனர் பரிவுடன் அவர்முகம் நோக்கி
வரிசை யாகவே வரிசெய்து வரும்படி வகுத்தான். (உங)

317. கட்ட ளைப்படி நடந்தினி வருகின்றோம் காப்பில்
எட்டு ணைப்பிழை யாதுமே செய்திடேம் என்றே
ஓட்டி நின்றவர் உரிமையோ டுளம்பரிந் துரைத்தார்
கட்ட பொம்மிவன் கருணைசெய் துளங்களித் திருந்தான். (உச)

318. திருக்கு றுங்குடி அயல்களைக் காடெங்கும் சேர்த்தே
யிருக்கு நீர்மையன் எவரையும் மதித்திடா வியல்போன்
தருக்கு மீறிய நம்பிநற் றலைவன்என் றுரைப்போன்
வருக்க மாயிவண் அடைந்திலன் வன்மமே மற்கொண்டான். ()

319. பணிந்து வந்தவன் வணங்கிடாப் பான்மையை நோக்கித்
துணிந்து மன்னவன் சூழ்ந்தொரு படையினை விடுத்தான்
அணிந்த போர்த்திறல் ஆதிராம் எனும்படைத் தலைவன்
இணைந்த சேனையை யேற்றியே அவனகர் வளைந்தான். (உசு)

உஉ. வானமாமலை என்றது நாங்குநேரியை. தானம் = இடம்.

உநி. நம்பித் தலைவன் என்பவன் திருக்குறுங்குடி என்னும் ஊரில் இருந்த ஒரு குறுநில மன்னன். பொருதிற லுடையவன்.

கலிவிருத்தம்.

320. பொருதிறங் கருதியே பொங்கி நின்றவன்
ஒருபெரும் படையுட னுற்றி ருந்ததால்
வருசிறு படையென மண்டி வந்ததிர்
கருதிய செருக்கொடு கடுத்து மூண்டனன். (உஎ)

321. இருதிறப் படைகளும் எதிர்த்து முட்டின
பொருதிறம் புரிந்தன பொங்கி நின்றன
ஒருவரை ஒருவர்முன் னுயிர் குடித்திட
அருவரைப் புலிகள்போல் அடர்ந்து டற்றினர். (உஅ)

322. வாள்களும் வேல்களும் வல்ல யங்களும்
நீளுயர் தடிகளும் சேர்ந்து மாட்டவே
தாள்களும் தோள்களும் தலைக ளும்மிழந்
தாள்களி னுருவழிந் தழிந்து வீழ்ந்தனர். (உக)

323. சேனைகா வலனெனச் சென்ற சிங்கமாம்
மானவீ ரன்படை வகுத்த மாட்சியால்
ஆனதோர் எதிரியின் படைகள் யாவுமே
போனதோ ரிடந்தெரி யாமல் போயின. (ஙo)

324. தானைக ளழிந்திடத் தனித்த நம்பியென்
முனவத் தலைவனும் அவன்றன் தம்பியாம்
சேனையி லுயர்சிவ ராமுத் தேவனும்
மானமற் றெளிந்தனர் மாறி யோடினர். (ஙக)

325. ஓடினும் விட்டிடா தருத்து வீரர்கள்
கூடிமுன் வளைந்துகைக் கொண்டு வந்தனர்
நாடியவ் விருவரை நன்கு பற்றியே
நீடிய புகழன்முன் சேரி லுய்த்தனர். (ஙஉ)

326. வந்தவர் பிணிகளை யவிழ்த்து மாண்புடன்
சேர்ந்தனிர் போலுநீர் எனது வன்றனன்
வெந்திறல் வேந்தன்வா யுரைத்த மென்மொழி
சிந்தையில் ஓர்ந்தனர் தியங்கி நின்றனர். (ஙங)

ஙo. ஆதிராபு என்னும் சேனைத் தலைவன் தானையை ஏவி அதிவீரமுடன் அடர்ந்துபொருதமையால் எதிரியின் படைகள் இடைமுறிந்தனவென்பதாம்.

327. மன்னவா மதியின்றி மதத்து நின்றனம்
இன்னமேல் யாதுமோர் இடரும் எண்ணிடேம்
சொன்னவா செய்தடி தொழுது வாழ்கின்றோம்
இன்னருள் புரிந்தெமை யாளும் என்றனர். (கூச)

328. அன்னவர் வணங்கிநின் றபயம் கூறவும்
மன்னவ னறிந்துடன் மனமி ரங்கினன்
இன்னருள் புரிந்துமே யினிது நோக்கினன்
நன்னயம் படவவர் நடக்க வுக்கினன். (கூஞ)

329. வள்ளியூர் பணகுடி வல்லம் ஆதியா
யுள்ளநன் னகரங்க ளுட்பு குந்துநீர்
கொள்ளைகள் புரிந்துமுன் கொடுமை செய்துளீர்
எள்ளுறு மவற்றினுக் கென்செ ால் வீரென்றான். (கூசு)

330. வள்ளலே சொல்லிய வண்ணம் தண்டனைக்
குள்ளுறு பொருள்களை ஒல்லை வைக்கின்றோம்
எள்ளலா யினியொன்றும் இயற்றி லேமெனப்
பிள்ளைமேல் ஆணையாய்ப் பேசி நின்றனர். (கூஎ)

331. நின்றவர்க் கறிவுரை நெறியிற் கூறியே
சென்றிட விடுத்தனன் சேனை யோடுடன்
தென்றிசை நின்றுமே சேர்ந்தெ ழுந்தனன்
ஒன்றிய மேல்திசைக் குவந்து வந்தனன். (கூஅ)

332. அத்திசை மன்னவர் யாரும் ஆர்வமாய்
ஒத்திசை நண்புட னுவந்து போற்றினர்
சித்தமீ தோங்கிய செருக்கி லாமையால்
உத்தம னிவனெழுந் துவந்து போயினன். (கூகூ)

333. சிவகிரி அரசரா தியர்கள் சேரவந்
துவகையி னுபசரித் துதவி நின்றனர்
நவமுறு நவாபினுக் குரிய கப்பத்தைத்
தவறுற வகையினில் செலுத்தச் சாற்றினன். (சூ0)

334. நல்லதென் றவரெலா நயந்து கூறலே
அல்லலொன் றுரைவகை அருளிக் காமினென்
றெல்லையி லுயர்படை யுடனெ முந்தனன்
வல்லவன் வடதிசை வந்து மண்டினான். (சக)

335. கண்டவ நாயக்கன் காமயன் முதல்
திண்டிறல் மன்னவர் யாரும் சிக்கையுள்
மண்டிய அன்புடன் மகிழ்ந்து வந்துமுன்
கொண்டெதிர் கண்டனர் கோம கன்றனே. (சஉ)

336. அவரவர் வரன்முறை யழைத்துப் போற்றினர்
உவகையின் உரிமையோ டுறவு கொண்டனர்
எவருமே யிகலிலர் இறையும் தந்தனர்
கவரிலா அவர்நிலை கண்டு நீங்கினான். (சஙூ)

337. போடியின் மன்னனும் பொங்கு சீர்க்கன்னி
வாடியின் மன்னனும் வந்து கண்டனர்
தேடிய தவப்பயன் சேர்ந்த திங்களை
நீடிய வுவகைய ராகி நின்றனர். (சச)

338. இத்திறம் அத்திசை யிருந்த யாவரும்
குத்திர மின்றியே குணங்க ளோடெதிர்
ஒத்துள முவந்துவந் துரிமை செய்தனர்
அத்திறம் அறிந்துமேல் அகன்று போயினான். (சரு)

அறுசீர் விருத்தம்.

339. இவ்வகையில் பகையடக்கி யிசையுடனே யிவனேக வடமேற் றிக்கில்
வெவ்வலியர் பலர்சேர்ந்துவெந்துயரம் விளைக்கின்றானெனக்கேட்டந்தத்
தெவ்வர்களைக்காண்டுமெனச் சேனைகளைமேல்கடத்திச்செல்லலானன்
எவ்வழியும் இதமாக யாவருமே தொழுதேத்த இனிது போனன். ()

340. அடுபடையோ டிவன்அடர்ந்து படர்ந்துவரும் திறன்நோக்கி ஆங்காங்
குள்ளார், படுமுரணை யறஒழித்துப் பண்பாக எதிர்கொண்டு பணிந்து
கண்டார், கடுவுகிலை திறம்பாமல் நன்னெறியில் நடந்துவர நயங்கள்
கூறி, இடுதிறைக ளோடெழுந்தே யெங்களுமே யிசைந்திருந்தி யேக
லுற்றான். (சஎ)

341. தோகைமலைச் சரிவிருந்த தொல்குறும்பர் வல்லரணத்தொலைத்துநாறி
வாகைமலைந் தெதிர்ந்துவந்த வாட்படையை யறமாய்த்து மன்ன
னென்னும், வேகனெவெந் நிட்வென்று விலைமுடித்து அன்னவன்
முன் விளைத்து நின்ற, சோகமெலாம் அறமாற்றிச் சூழ்குடிகட்
கின்பமே துன்னச் செய்தான். (அ)

342. கோம்பைமலை அயலிருந்த குறும்பர்களை அரும்பாமல் குறும்படக்கித்
தாம்படைத்த வலியினிலும் தம்படையின் நிலையினிலும்தருக்கிவந்தார்
சாம்படிக்குச் சமராடிச் சமன்படைக்கு விளையாடத் தந்து மீண்டு
போம்படிக்குநேர்ந்தவரைப் புகழ்படிக்கும்படிசெய்துபோகவிட்டான்.
(ஆ)

343. நேர்ந்துநின்ற சமர்முறுக்கி நேர்சதுர கிரிகடந்து நீள்தும் பிச்சி
சார்ந்திருக்கும் திருநகரைச் சார்ந்தவுடன் அவ்வரசன் சதுராய் வந்து
சேர்ந்துபணிந் துறவாடித் திறையாதி செலுத்திவிடச் சிறந்தெழுந்தே
ஆர்ந்தபெரும் படையுடனே அரியேறென்றவனிதொழ அயல்
நடந்தான் (இ)

344. கூடலூர் கடந்தரிய கம்பம்போய்ப் பாவாலி புகுந்து கொற்றம்
நீடலுறும் நிலைவிளக்கி நேர்ந்தவரை நிலையடக்கி நிமிர்ந்து சென்று
நாடயலும் காடயலும் நவையொன்றும் நாடாமல் நன்கு பேணி
ஆடலுயர் பரிபடைகள் அடலார்ந்து தொடர்ந்துவர அமர்மேற் சென்
றான். (ஈ)

345. நிலைக்கோட்டை முதலான நிலையங்க ளிடையிருந்த நிருப ரெல்லாம்
தலைக்கோட்டை மன்னன்வந்தான் எனவெழுந்து தகவுடனே சார்ந்து
கண்டார், கலைக்கோட்டை யணிந்தபிரா னடிபரவிக் காரியங்கள் கரு
திச்சூழ்ந்து, சிலைக்கோட்ட படையுடனே சேர்ந்தெழுந்து வாம்பரிமேற்
சிறந்து சென்றான். (உ)

346. ஆர்த்துவரு தானையுடன் அம்மையநாயக்கனு ரடைந்தான் அன்னன்
வேர்த்துவந்துதொழுதேத்தி விநயமுடன் உபசரித்துவிழைந்துநின்றான்
பார்த்துவரும் காரியங்கள் பண்புடனே செய்துவரப் பணித்தெழுந்து
கூர்ந்தமதி யுடையஇவன் கூடல்மா நகரடைந்து கோயில் புக்கான்.

347. அங்கயற்கண் அம்மையையும்ஐயனையும்அடிதொழுதுள்ளன்புகூர்ந்து
சங்கையறப் பொருள்சொரிந்து சார்ந்துநின்ற யாவர்க்கும் தான மீந்து
மங்கலநல் லியமுழங்க மாகதர்கள் வாழ்த்திவர வழிமேற் கொண்டான்
சிங்கமென எத்திசையும் சேர்ந்திசைக்கச் சேதுநா டடைந்தான்
அன்றே. (ஊ)

348. கோதுபதி யாகவிந்தக் கோமகன்வந் தடைந்தசெயல் ஒற்றர் கூறச்
சேதுபதி மனமகிழ்ந்து சிறப்புடனே எதிர்வந்து சேர்ந்து கண்டு
காதுபதி மலர்மாலை புனைந்துபுகழ்ந் துடனழைத்துத் தழுவிக் கொண்டு
காதலொடும் உபசரித்துக் கருதுமொரு விருந்தாற்றிக் களிந்துநின்றான்.

349. அன்னவனை டெழுந்திரா மேசுரம்போ யலைகடலைக் கடந்தி லங்கை
மன்னனுயர் மணித்தலையைத் துணித்தபிரான் பூசித்த மாதே வன்றன்
பொன்னடியைத்தொழுதேத்திப் பொன்னீந்துபுகழ்ந்திப்போந்தசேது
மன்னனிடம் விடைபெற்றுச் சிவகங்கை மாநகரம் வந்து சேர்ந்தான்.

350. அப்பதிவாழ் மன்னனிவன் அடைந்தநிலையறிந்தவுடன்விரைந்தெழுந்
செப்பரிய சிறப்புடனே சேர்ந்துவந்துசேனையெதிர்மகிழ்ந்துகண்டானை
ஒப்பமுடன் அழைத்துப்போ யுபசரித்தான் உற்றவகை யாவுங் கூறிக்
கப்பமுடன் செலுத்திவருங் கடனுணர்த்தி விடைபெற்றுக் கடிது மீண்
டான். (ருஎ)

351. ளுற்றமுட னிடைபிடையே யிருந்தவர்த மிடமெல்லாம்உறுதிகொண்டு
ஏற்றமிகு படைகளுடன் ஏழாயி ரம்பண்ணை எய்த அங்கே
மாற்றலர்சிங் கேறென்ன மன்னிநின்ற வன்னியமன் மகிழ்ந்து வந்து
போற்றிமிக வுபசரித்தான் போந்தவகை யாவுமே புகன்ற கன்ருன்.()

352. மேற்றிசையும்வடதிசையும்மேவிநின்ருர் யாவருமேவிழைந்துநின்றன்
பாற்றிவர அருள்சுரந்தேஅருந்திறலோ டெழுந்துளத்தி லார்வம்கூர்ந்து
சாற்றியகிழ்ந் திசைசார்ந்தான் தன்னினத்து மன்னரெல்லாம் தழுவி
ஏத்திப், போற்றியநல் வியல்பறிந்து போர்மன்னன்பேருவகைபூத்து
நின்ருன். (நிக)

கலிவிருத்தம்.

353. அன்னவ னியல்பெலாம் அறிந்து வந்தனன்
மன்னவன் காகலா புரத்தை மண்டினன்
மன்னிய அங்ஙகர் மன்னன் ஓர்ந்ததும்
இன்னிசை யுடன்எதிர் கொண்டு போற்றினன். (கூ)

354. அழைத்துவந் தரியதோர் விருந்தை யாற்றினன் ;
தழைத்தபே ரன்புடன் தழுவி ஏத்தினன் ;
இழைத்தநல் வினைப்பயன் எய்தி னேனென
உழைத்தநல் லுறவுடன் உவந்து கூறினன். (கூக)

355. எட்டையா புரமுதல் இடையி ருந்துவாழ்
பட்டைய முடையவர் யாரும் பண்புடன்
இட்டமா யெதிரெதிர் வந்து தஞ்செய
அட்டமா திசைகளும் அமர்ந்து வந்தனன். (கூஉ)

356. இவ்வகை யேபிற ரெவரும் ஏத்திரர்
தெவ்வரா யாருமே செருக்கி நின்றிலர்
அவ்வகை நிலையினை யறிந்து கொற்றவன்
திவ்விய நகரமே சேரல் மேயினன். (கூங)

357. வடதிசை தென்திசை மருவி நின்றநற்
குடதிசை குணதிசை குறித்துச் சென்றெங்கும்
அடலமர் தெளிவுற ஆர்த்து வந்ததால்
திடமிகு திக்குயர் விசயன் என்றனர். (கூச)

358. வெற்றியந் திருவுடன் விளங்கிப் பாஞ்சையாம்
கொற்றமா நகர்வந்து கோவில் கொண்டனன் ;
மற்றவ ரனைவரும் மரபின் வந்துமே
முற்றிய வுவகையில் மூழ்கிப் போற்றினர். (கூஙி)

கொச்சகக் கலிப்பா.

359. திங்களொன்று கழிந்தபின்பு திறையாகத் தொகுத்துவந்த
சங்கையுறு தொகையனைத்தும் சாதிகான் தனக்குய்த்துப்
பொங்கமுடன் முடங்கலொன்று பொறித்துநேர் விடுத்திருந்தான்
அங்கையிலேற் றவனறிந்தான் அகமகிழ்ச்சி மீக்கூர்ந்தான். ()

360. திசைவென்ற திறல்வேந்தன் சேர்ந்தவர்கட் கருள்புரிந்தான்
வசையின்றி யுலகாளும் மாண்புடையான் மதியுடையான்
அசைவிலா ஆண்டகையென் றவனிவனைப் புகழ்ந்தேத்தி
நசையோடு நேரெழுந்து நண்புடனே காணவந்தான். (கூள)

361. வந்தவனை யெதிர்கொண்டு வரிசையுட னினிதழைத்துச்
சிந்தைமகிழ்ந் தொருவிருந்து சிறப்பாகச் செய்தளித்தான்
முந்துரைத்த மொழிப்படியே முடித்தருளி யிவன்புரிந்த
அந்தவுய ராண்மையினை ஆர்வமுட னவன்வியந்தான். (கூஅ)

362. நாட்டினில் யிடமொன்றும் நடவாது நண்ணிநின்ற
கூட்டரசர் திறைகொடுத்துக் குணமாக அமர்ந்திருப்பார்
வாட்டமினிக் கொளவேண்டாம் மன்னவா! என்றுநீ
தீட்டிவிட்ட திருமுகத்தைத் தேர்ந்துணர்ந்து மனமுவந்தேம். (கூ)

363. ஆக்கரா டில்லி முதல் அரசுனது பேராண்மை
வாக்காக எமதறிந்து மனமகிழ்ந்தார் நபாவுமுனை
ஆக்கமுடன் நேர்காண அவாவியுள்ளார் ஆண்டகையே
பாக்கியவான் நீயன்றிப் பாருலகில் யாருளரே?

364. வருதிறையில் ஆறிலொன்றை வைத்துக்கொண்டைந்தைமட்டும்
இருமுறையா யெமக்களுப்பி யிதம்புரிந்து வருகவென
அருமணிமா மாலையொன்றை அன்புடனே அவனெடுத்துப்
பெருமையுடன் இவன்கழுத்தில் பேணியணிந் துபசரித்தான்.

365. தென்னாட்டுக் குன்னாநாம் சின்னநபா வென்றுவைத்தேதம்
முன்னாட்டு மொழிப்படியே முறைபுரிந்து முதன்மையெய்தி
எந்நாட்டும் புகழ்நாட்டி எஞ்ஞான்றும் எமக்குறவாய்
இந்நாட்டி லிருந்தருளி யினிதுதவி வருகவென்றான். (எஉ)

366. நன்பாக அவனுரைத்த நன்மொழியைக் கேட்டவுடன்
பண்பாகக் கொண்டாடிப் பாராட்டி யிவனுவந்தான்
கண்காண நாமிங்குக் கலந்தவுற வெங்களுமே
எண்காண இறைவனுமே யினிதருளு மென்றிசைத்தான்(எங)

367. நிலைகுலைந்த ஆட்சிதனை நிலையாக நிலைநிறுத்தி
அலைமலிந்த கடல்நிலத்தை அன்புரிமை யோடளித்தாய்
மலைமலிந்த திண்டோளாய்! மதியிரவி யுள்ளமட்டும்
கலைமலிந்த நின்சீர்த்தி கதித்தோங்கும் என்றெழுந்தான்.(எச)

368. அவனவழி யனுப்பிவிட்டிவ் வாண்டகைதன் தமரோடு
சிவகுமான் அடிபணிந்து சிலமுடன் அறம்புரிந்து
தவமலிந்த நினைவோடு தரணிதனைக் காத்திருந்தான்;
இவனுடைய பெருங்கீர்த்தி யெங்குமுயர்ந் தெழுந்ததுவே. ()

369. இக்குமது வணையமொழி எழில்மடவார் மடலெழுதத்
தக்கவடி வழகனைனத் தனியிசையைச் சார்ந்திருந்தான்
பக்கமெங்கும் பீப்பாய்வீரப் பண்பாற்றி வந்தமையால்
திக்குவிசயன் னெனவீவார் திருப்பெயரும் சேர்ந்துநின்றன். (எசு)

370. இன்னசீர் இவனெய்தி யிருப்பதனை எட்டப்பன்
என்னுமந்த மன்னவன்கேட் டின்னலுழுக் காறுற்றான்
பின்னமுறப் பிழைகள்பல பேசினனெ னச்சிலரிம்
மன்னனிடம் வந்துரைத்தார் மண்டுசினமீக்கொண்டான். (எஎ)

371. நெஞ்சகத்தே வீரமின்றி நெடுங்கோளை வாயில்வைத்து
வஞ்சகத்தே டொஞ்ஞான்றும் வசைகூறி வருகின்றான்
நஞ்சகத்தே யுடையதனை நாடியழித் தொழியாமல்
கொஞ்சியெவர் அன்பாகக் கூடியுற வாடுவதே? (எஅ)

372. ஆதலால் வைதானை அவனியிலே வையாமல்
காதியற வோழித்தலே காவலர்க்குக் கடனையென
ஓதியிவன் உருத்திடவும் உடனிருந்தார் கறுத்தெழுந்து
மோதுபடைக்கலங்களுடன் மூண்டுசமர்க்கிண்டிநின்றார். (எக)

373. கோளரிடை மூட்டியவக் கோளிலுல் கொதித்தெழுந்து
வாளமொன் றந்நகர்வாய் வலிந்துபோய்ப் புகுந்ததந்த
நீளமருக் கின்றுமே * நீராவிச் சண்டையெனத்
தாளமைந்த பேரொன்று சதுராக நின்றுளதே. (அ0)

374. அப்போரில் இம்மன்னன் அடுபடைகள் கடிதேதறி
வெப்போடு பொருதடக்கி வென்றுயர்ந்து வந்தமையால்
உப்போடை நீரொழிய உவர்பொங்கி நின்றதுபோல்
எப்போது மவன்புழுங்கி யிடரெண்ணி யிருந்தானே. (அக)

375. ஒருகுலத்தே சிறுபிரிவை யுடையவனு யுற்றிருந்தும்
வருமனத்தில் பகைமலையாய் வன்மமுடன் வளர்ந்தோங்கித்
கருவறுக்கும் வழிநாடிக் கறுவுகொண்டே சூழ்ந்தேதங்கிப்
பொருமுகத்தை நாடாமல் புறம்பொதிந்தே யுள்ளிருந்தான்.

---

* அப்போர் அங்கே தெப்பக் குளத்தைச் சார்ந்து நடந்தமையால் அது "நீராவிச்சண்டை" என நின்றது. நீராவி = தடாகம்.

376. வஞ்சனையொன் றெண்ணுமல் மானமுயர் வீரமே
தஞ்சமெனக் கைக்கொண்டு தரியலரைத் தலையடக்கி
அஞ்சலென யாவர்க்கும் ஆதரவா யருள்புரிந்து
வெஞ்சினமில் வேழமென வேந்தனிவன் மேவிநின்றான். (அஉ)

377. எங்கணுமே பகையடக்கி எழிலாண்மை மிகப்புரிந்து
பொங்குபெரும் புகழுடனிப் போர்மன்னன் வீற்றிருந்தான்
மங்குல்மழை பொழிந்தருள மாநிலங்கள் விளைந்தருளத்
தங்கியுயர் குடிகளெங்கும் தழைத்துமகிழ்ந் திருந்தனவே.

378. ஆரவாய் மொழிவரையும் ஆணையிவன் செலுத்திநின்றான்
சேரர்கா வலருமே திசைகாவல் செய்திடென
ஆரவொரு பெருந்தொகையை ஆண்டுதொறும் அன்பாகச்
சேரவிவன் றனக்கனுப்பிச் சீர்பலவும் செய்துவந்தார். (அஊ)

379. செகவீரன் ஆணையென்றால் தேசமெங்கும் நடுநடுங்க
மிகவீறு கொண்டுமிகை செய்தவரும் மெல்லியராய்ப்
புகவீர முடன்யாரும் புகலடைந்து போற்றிசெயத்
தகவீர முடனமைந்து தனிச்செங்கோ லிவன்கொண்டான். ()

380. மறுமன்னர் உறவாடி மாண்புடனே உரிமைசெய்தார்;
குறுமன்னர் திறைதந்து குணமோடு குடிசெய்தார்;
செறுமன்னி வளஞ்சுரந்து தேசமெங்கும் நலஞ்சிறக்க
நறுமன்னு மலர்மார்பன் நல்லரசு செய்துநின்றான். (அஎ)

அஎ. செறு=வயல், குளம். நிலவளம் சுரந்து, பலவளங்களும் சிறந்து எங்கும் நலமுறும்படி இவன் அரசுபுரிந்து வந்தான் என்பதாம்.

ச-வது திக்கு விசயப் படலம் முற்றிற்று.

ஆகக் கவி நஅ0.

ஐந்தாவது

கண்கொடுத்த படலம்.

கண் குருடான காசிபன் என்னும் வேதியன் செந்திலம்பதியில் வந்து தவம் கிடந்து முருகக் கடவுள் அருளால் ஒரு கண் பெற்று, அப்பெருமான் ஏவப் பாஞ்சாலங் குறிச்சியை அடைந்து இத் திக்கு விசயத்துரையிடம் மற்றொரு கண்பெற்று மகிழ்ந்து போனமையை உணர்த்துகின்றமையால் இது கண்கொடுத்த படலம் என நின்றது.

---

381. இன்னவா றிந்த மன்னவன் அரசை
இன்புறப் புரந்திசை மிகுந்து
கன்னெறி யெங்கும் கடம்புரிந் தொளிர
கலம்பல சுரந்தெழில் கனிந்து
தென்னகா டினிய தேவகா டென்ன
திகழ்ந்திடச் செய்துவீற் றிருந்தான்;
அன்னகா ளிவன்பால் அறுமுகப் பரமன்
அருள்செய்த நிலையொன்று பகர்வாம். (க)

382. காசியம் பதிவாழ் வேதியன் ஒருவன்
காசிபன் எனும்பெய ருடையோன்
பேசிய கலைகள் பலவுணர்ந் தோதான்
பிராயமோ ரிருபத்தைந் தமைந்தோதான்
மூசிய கொடிய பழவினைப் பயனால்
முன்னொளி யிழந்துதன் னிரண்டு
நேசமார் கண்ணும் தெரிகில னாகி
நெடுந்துய ரடைந்துள முடைந்தான். (உ)

383. அழகிருந் தாலும் அறிவிருந் தாலும்
அருஞ்செறற் செல்வங்க ளெல்லாம்
உழையிருந் தாலும் உறவிருந் தாலும்
உலகெலாம் ஒருகுடை நிழலில்
பிழையறப் பெற்றுப் பெருமுடி கனிக்கப்
போய சாயிருந் தாலும்
விழியில னாகில் பழுதுய ரன்றி
வேறொரு சுகமவற் குண்டோ? (ங)

384. வானகம் இந்த மண்ணக மெங்கும்
வரம்பறு நிலையவாய் விரிந்து
மேனகு பொருள்கள் மேலொரு தலைவன்
மேவியுள் ளானென விளங்கும்
ஆனதோ ரரிய அற்புத நிலைகள்
யாவையும் கண்டுள மகிழ
மானிடன் பெற்ற கண்களால் அன்றி
மற்றொரு வகையினு லுண்டோ? (சு)

385. கண்ணெளி யிழந்து குருடனு யுழந்து
கண்டவர் தமக்கெலா மிகழ்வாய்
மண்ணிடை யிருந்து வாழ்தலிற் சாதல்
மாண்டெனக் கருதியோ நிரவில்
எண்ணரும் துயரால் வருந்திநொந் தயிரை
எவ்வகை விடுவதென் றேறங்கித்
தண்ணிய தயிலில் ஆழ்ந்தனன் செந்தூர்.
என்றொரு தனியொலி கேட்டான். (ரு)

386. கனவிடை யறிந்த ஒலியினை வியந்தான்
காலயி லெழுந்தய லிருந்த
மனிதர்பா லுரைத்து வான்முறை குறித்தான்
மற்றவர் வினவிநின் றந்தப்
புனிதரற் பெயர்தான் முருகவேள் இருக்கும்
பொற்பதிக் குரியது தெற்கில்
இனிதமர்ந் துளது நினைந்தவர் தமக்கும்
இருங்கதி தருவதென் றிசைத்தார். (கூ)

செந்தில் சேர்ந்தது.

387. அன்னவர் உரைத்த வுரைசெவிப் படலும்
அகமிக மகிழ்ந்தனன் முருகன்
இன்னருள் தானே இன்னவா றெழுந்திங்
கென்னையாட் கொண்டதென் றெழுந்தான்
தன்னையும் மறந்து தனிவழி நடந்தான்
தலந்தொறுந் தங்கியே மெதுவாய்க்
கன்னிநா டடைந்தான் பன்னிரு மதியிற்
கருதிய செந்தில்வந் தற்றான். (எ)

438. வீதிவாய்த் தங்கி மறையவ ருடனே
விழைவுடன் வினவிமேன் மெதுவாய்
ஓதிய நெறியே காதல்முன் னீர்க்க
உறுமணல் மேட்டினி லேறி
ஆதிநாள் முதலா அமரர்கோ னுதி
அகிலலோ கங்களும் போற்றச்
சோதிவேற் பரமன் அமர்ந்தருள் செம்பொன்
சுடர்மணிக் கோவிலை யடைந்தான். (அ)

389. அலைகடல் முழக்கும் அடியவர் திரளாய்
அடைந்துநீ ராடிநின் றன்பாய்த்
தலைமிசைக் குவித்த கையராய் முருகா!
சண்முகா! வென்றுரை முழக்கும்
கலையுணர் முனிவர் துதிசெயு முழக்கும்
கவின்மறை முழக்கமு மெங்கும்
நிலைபெற முழங்கு நிலையினைக் கேட்டு
நெக்குநெக் குருகிநேர் நின்றான். (கூ)

390. இன்னதோர் அரிய காட்சியை யெல்லாம்
இன்புறக் காண்கிலே னென்னப்
பன்னியுட் புலம்பி மென்மெல நடந்து
பனிக்கடல் படிந்துமீண் டெழுந்து
சன்னிதி யடைந்து தன்னிரு கையைத்
தலைமிசைக் கூப்பிநின் றின்னம்
பன்னிரு மதியுள் என்னிரு கண்ணைப்
பன்னிரு கையனே அருளாய். (கo)

391. அந்தரா ளதனுள் அடியனேன் விழியை
ஆண்டவா! அருள்கிலா யாயின்,
இந்தவா ணுளை யிந்தரல் லிடத்தே
யிறுதிசெய் திடுவனென் றிசைத்தான்
முந்தவே தன்னுள் இந்தவா றுறுதி
முடிவுசெய் தொருபடி யாக
வந்தரா ளதனுள் விரதமேற் கொண்டு
மருவியாங் கிருந்தனன் வதிந்தே. (கக)

392. உச்சியம் பகலில் ஒருபொழு தங்கே
யுறும்பிர சாதத்தை யுண்டு
பச்சிலை நீறும் இரவினில் பருகிப்
பத்திமை யுடையவ ரின்ன
நிச்சய நெறியில் நிலைத்தினி திருந்தான்
கோர்த்தகூள் நெருங்கியு மிவனுள்
நச்சிய நாட்டம் பெற்றிலா மையினுல்
நைந்துள நொந்தது நினைந்தான். (கூ)

393. இழந்தகண் ணருளும் எம்பிரான் என்றே
யெண்ணிமுன் கண்டதா லிங்கு
விழைந்துவந் தடைந்தேன் விதிமுறை யிருந்தேன்
வேண்டிய பயனென்றுங் காணேன்
உழந்தினி யிருத்தல் ஊனமென் றுயிரை
ஒழித்திடத் துணிந்தது காலை
எழுந்தொரு வாளை யெடுத்துத்தன் கழுத்தை
இருபிள வாகவே அறுத்தான். (கஙு)

394. அறுத்தவாள் கையி லிருக்கவும் உதிரம்
அயலிடம் பெருகவும் கழுத்தில்
குறித்தஓர் தழும்பும் இலாமலே முன்போற்
கூடிய தலையுடன் ஒருகண்
பறித்தபே ரொளியை வீசிமுன் தோன்றப்
பதைத்துளந் திகைத்தனன் வியந்தான்
செறித்தபே ரன்பு தழைத்துமுன் னுங்கத்
தேம்பிநின் றழுதிது சொன்னன். (கச)

ஒரு கண் கண்டு உருகி நின்றது.

395. வெண்ணிலா வணிந்த வேணியன் தந்த
விமலனே! விளங்கு கண்மணியே!
புண்ணிய முதலே! கண்ணரு ளென்று
புரிந்துனைப் புகலடைந் திருந்தேன்
எண்ணிய இரண்டும் ஈந்தரு ளாமல்
இடையொரு விழியையே யீந்தாய்!
அண்ணலே யுன்றன் அருளினை யடைந்தும்
அரைக்குரு டாகவோ அகல்வேன்? ((எ)

5. கண் கொடுத்த படலம்.

396. என்றிவன் புலம்ப இருசெவிப் புலனில்
எம்பிரான் அருளொலி யொன்று
வென்றிவேற் றடக்கைக் கட்டபொம் மென்மேரூர்
வேந்தன்பாஞ் சையம்பதி யதனில்
நின்றுளான் அவன்பாற் போயொரு கண்ணை
நீபெறு கென்றிசைத் ததுவே
அன்றதை யுணர்ந்தான் அதிசய மிகுந்தான்
அந்தணர் சிலருட னடைந்தான். (கசு)

பாஞ்சை வந்து பாடுரைத்தது.

397. வெற்றிவேற் பரமன் அருள்வரப் பெற்ற
மேலவன் என்றிவன் றன்னை
யுற்றவ ரெல்லாம் உவந்துமுன் போற்றி
யுபசரித் துரிமையிற் கொணர்ந்து
பற்றலர்க் கரியே றெனவமர் பாஞ்சைப்
பதியதி பதிமுனம் வந்து
பெற்றதும் முருகன் பேசியுய்த் ததுந்தாம்
பேணியுற் றதுவுநன் குரைத்தார். (கள)

398. வந்தவர் சொன்ன வாய்மொழி கேட்டு
மன்னவன் மனங்கரைந் தெழுந்து
சிந்தையுள் ளுருகி யிருகணீர் சொரிந்து
செந்திலின் திசைமுகம் நோக்கி
எந்தையே! என்னை யாண்டருள் புரியும்
இறைவனே! சிறியனேன் றன்னை
இந்தவா றிசைத்தால் எந்தவா றுய்வேன்
என்செய்வேன்? என்றுநின் றழுதான். (கஅ)

399. அருமறை முடிவும் அருந்தவ ரறிவும்
அருகுசென் றணுகவு முடியா
ஒருபரம் பொருளே! எளியனேன் றன்னை
ஒருபொரு ளாகவுட் கொண்டு
திருவருள் புரிந்தாய்! உரிமையோ டிந்தத்
திருவிளை யாடலும் செய்தாய்!
இருளுடை யுலகம் மருள்மிகுந் திகழும்
இயல்பிதை யெனமனங் கவன்றான். (கக)

400. தேவர்கள் தேவாய்ச் சிறந்தொளிர் தேவ
தேவனே! நின்னரு ளாடல்
பாவமே பயிலும் மனிதரோ தெளிவர்
பணியிது வெனிலினி வேறே
யாவதோ சொல்வேன்? ஏவிய தெதுவோ
அதனையென் முடிமிசை யேந்தி
ஓவற நின்றே யுளந்நிறுவன் உறுவ
வுறுகவென் றுறுதிமேற் கொண்டான். (உ0)

401. யாவரும் அருளா ஒருபொருள் தன்னை
அடியனே னிடம்பெற வேண்டிச்
சேவலங் கொடியோன் ஏவலால் வந்து
சேர்ந்துளீர் இன்றிரும் நாளை
மேவியென் பூசை முடிந்தபின் இதனை
மேவுவன் என்றுணை வாதி
காவற அருளி யுபசரித் திருத்தித்
தன்னகம் புகுந்தனன் அரசன். (உக)

402. அன்றிர வுணவுட் கொண்டிலன் செந்தூர்
அமலனின் னருட்செய லென்னே!
என்றுடற் பலவா யெண்ணிலே யுணையில்
இருந்தனன் அயர்ந்துகண் துயின்றான்
வென்றிவேற் பரம னருளினுல் கனவில்
விழியொன்று கைவரக் கண்டான்
நன்றென விழித்தான் ஒன்றுமே காணான்
நயந்துள முருகின னயர்ந்தான். (உஉ)

சூரிய உதய வருணனை.

403. கண்மணி யொன்று கட்டபொம் மின்று
கண்ணிலா ஒருவனுக் கருள்வான்
மண்மணி யாமவ் அரசையும் அந்த
வரமருள் காட்சியும் கண்டே
உண்மகிழ் கொள்வேன் எனவிரைந் துவகை
யுந்தமுன் வந்தன னென்ன
விண்மணி யான வெய்யவன் செய்ய
விரிகதிர் பரப்பிமே லெழுந்தான். (உங)

404. நாளொளி பரந்த திருளெலா மிரிந்த
நனந்தலை யுலகுவந் தெழுந்து
நீளொளி புரிந்த துயிரெலாந் தத்தம்
நெறிமுறை வினைகளில் நிரைந்த
வேள்விரும் பழகன் மன்னவன் எழுந்து
விதிமுறை புரிந்தனன் ஒருகண்
வாளொளி யின்று வருமென விரைந்து
மறையவன் எழுந்தனன் மகிழ்ந்தே. (உச)

405. மன்னவன் அன்று கண்ணருள் செய்தி
மற்றய லுள்ளவ ரெல்லாம்
முன்னறிந் தமையால் இந்தஅற் புதத்தை
முந்துறக் காண்பமென் றிரைந்து
பன்னரும் அவாவால் திரள்திர ளாகப்
பாஞ்சையம் பதியினை யடைந்தார்
அன்னநாள் அரிய அதிசய நாளாய்
அவனியி லமர்ந்திருந் ததுவே. (உஞ)

406. நித்தலும் புரியும் நெறிமுறைப் படியே
நெடியவேற் பரமனைப் பூசித்து
எத்தலங் களினும் எவருமே செய்யா
இயல்பினை யின்றெனைச் செய்ய
வைத்தனை செய்வேன் வழுவில்என் னுயிரை
மாய்த்திடு வேன்என வடிவாள்
கைத்தலத் தேந்தி வந்தனன் வெளியே
கண்டவ ரெவருமே தொழுதார். (உசு)

407. வடித்தவாள் இடக்கை வைத்தனன் நீற்றை
வலக்கையி லேந்தினன் மறையோன்
அடுத்துமுன் னின்றுன் அடைந்தவ ரெல்லாம்
அதிசயத் தோடச்ச மெய்தித்
தடுத்திமை யாத விழியின ராகித்
தாங்கரும் அவாவொடு துடித்துக்
கடுத்தயல் நின்றூர் முருகனை மன்னன்
கருத்தினி லிருத்திநேர் நின்றுன். (உஎ)

408. மண்ணினுள் வலியாய் மதியினுள் அமிர்தாய்
வளிபுன லனலிய லவையாய்
விண்ணினுள் ஒலியாய் விதியினுள் விதியாய்
விரிந்தபல் லுயிர்தொ றுமுயிராய்
எண்ணினுள் எண்ணுய் இருந்தருள் புரியும்
இறைதிரு முருகனே யனிலிக்
கண்ணினுள் ஒளியாய் நின்றருள் என்று
கைத்தலங் கவித்துடன் எடுத்தான். (உஅ)

409. கையெழு முன்னே கயலெனப் பிறழ்ந்து
கண்ணெளி திகழ்ந்தது; கண்டான்,
ஐயனே! அரசே! யென்றுகை தொழுதே
அகமிக வருகினன்; அமரர்
செய்யபூ மாரி பெய்தனர்; நின்றூர்
தெய்வமே யிவனெனப் போற்றி
வையக முழுதும் ஆண்டுநங் கலியை
மாற்றுமென் றுவந்தனர் வாழ்த்தி. (உக)

410. கண்ணெளி யடைந்து மறையவ னின்ற
காட்சியைக் கண்டதும் மன்னன்
உண்ணிகழ் அன்பால் என்பெலா முருகி
யுளமுயிர் பரவச மாகி
அண்ணல்வேல் முருகன் அருளையும் தன்னை
ஆட்கொண்ட நிலையையும் எண்ணிக்
கண்ணினீர் மல்கி மாலையாய் மார்பில்
கால்கொளக் கனிந்துமுன் னின்றான். (உஙு)

411. கற்புறு மனையும் காதனற் றுயும்
காதலன் நிலையினுக் கிரங்கிப்
பற்பல நினைந்து பதைத்துளங் கலங்கிப்
பரிந்தக மிருந்தனர் நிகழ்ந்த
அற்புதப் பேற்றை யறிந்ததும் முருகன்
அருளினை வியந்துகொண் டாடிச்
சிற்பரன் நமது குலம்புரந் தருளுஞ்
செந்திலான் என்றுளங் களித்தார். (உச)

412. செந்தில்வாழ் பரமன் ஒருகண்ணைக் கொடுத்துச்
சீர்திகழ் பாஞ்சையம் பதிவாழ்
வெந்திறல் வேந்தன் ஒருகண்ணைக் கொடுப்பான்
என்றவன் விளம்பிய படியே
வந்தவன் வேண்டத் தந்தன னிந்த
வானகங் கவிந்தவை யகத்தில்
இந்தவா றெவரே முந்துறத் தந்தார்
எனவியந் தனவரு மகன்மூர். (கூஉ)

413. கண்களை யடைந்து களித்துமுன் னின்ற
காசிபன் றனையுவந் தேதத்தி
எண்களை யிகந்த மணியணி யாடை
இரும்பொரு ளளவில கொடுத்துப்
பண்களை யுடைய பவளவாய்க் கன்னிப்
பார்ப்பனி தனைமணம் புணர்த்தி
மண்களி கூர வாழ்கெனப் பின்போய்
வாகனு திகளுடன் விடுத்தான். (கூங)

414. கண்ணில னகி யின்னலோ டடைந்தேதன்
கதிர்வடி வேற்பரன் கண்ணென்
றெண்ணமுன் னருளி இவனிடம் விடுப்ப
இவன்ஒரு கண்ணெடு சிறந்த
பெண்ணையு மருளிப் பெரும்பொருள் பலவும்
பேணிமுன் கொடுத்தனன் என்றிவ்
அண்ணலை வியந்து புகழ்ந்துபோய்க் காசி
யடைந்தவன் மகிழ்ந்துவாழ்ந் திருந்தான். (கூச)

415. அத்திசை யுள்ளார் அவன்பெற்று வந்த
அதிசய நிலையினைத் தெரிந்து
சத்திவேற் பரமன் அருளையும் செந்தூர்த்
தலத்துயர் பெருமையும் இக்கோன்
பத்தியி னெறியும் பாஞ்சையம் பதியின்
பண்பையும் வியந்தனர் புகழ்ந்தார்
எத்திசை களிலும் இத்திசை மன்னன்
இசைபரந் துலாவிய தன்றே. (கூஞ)

416. ஆண்டவன் புரிந்த அருளையு மிந்த
அரசன்றன் நிலையையு மறிந்து
மாண்டமா தவரும் வியந்துளம் மகிழ்ந்தார்
மறுபுல மன்னவர் பலரும்
நீண்டபே ருவகை யுடன்வந்து கண்டார்
நேர்ந்தவ ரிடமெலாம் அன்பு
பூண்டக மகிழ்ந்து புகழ்ந்துப சரித்துப
புனிபுரந் திருந்தன ரினிதே. (நக)

417. இந்தமன் னவன்போல் இவணமுன் னின்ற
எழில்மிகு தந்தையும் செந்தில்
எந்தையின் னருளால் கந்தசா மிப்பேர்
இசைமிகு புலவனுக் கொருகண்
தந்துளான் அந்த வண்மையை வியந்து
தன்னுளங் களித்தந்தக் கவிஞன்
சிந்திணல் பாடித் துதித்துளான் அந்நூல்
சிலரிட மின்றுமுள் ளதுவே. (நஎ)

418. இன்னதோ ரரிய அற்புதச் செயல்கள்
இவ்வழி வந்த சாண்ட
மன்னவர் புரிந்து வந்துள விதனுல்
மனுநெறி முறைமையு மரபும்
அன்னவர் அறமும்-அன்புயர் நிலையும்
ஆண்டவ னருளுறு மியல்பும்
என்னபே ரமைவி னையைந்திருந் திருக்கும்
என்பது தெளிவுறு மன்றே. (நஅ)

நு-வது கண் கொடுத்த படலம் முற்றிற்று.

ஆகக் கவி சகஅ.

நஎ. கந்தசாமிப் புலவர் என்பவர் முத்தாலங்குறிச்சி என்னும் ஊரில் இருந்தவர். பிறவிக்குருடர். திருச்செந்தூரில் வந்து வசனமிருந்து முருகன் அருளால் ஒரு கண் பெற்று, அப்பரமன் அருளியபடியே பாஞ்சாலங் குறிச்சி ஜமீன்தாராகிய பால்பாண்டியனிடம் வந்து மற்றொரு கண்ணை அடைந்து போயுள்ளார். அவ்வுண்மையை அவர் பாடியுள்ள தொண்டிச் சிந்தில் கண்டு கொள்ளலாம். அது, அச்சாகி யுள்ளது.

ஆறுவது

காட்சி தெளிந்த படலம்.

திக்குவிசயத்துரை திருச்சேந்தூர் முருகக்கடவுளருளால் மருவிய மறையவனுக்கு ஒரு கண் கொடுத்துத் திருமணமுடித்து இனிய உதவிகள் புரிந்து இதமுடன் அனுப்பி வைத்து உலகம் புகழ உவந்து வாழ்ந்து வருங்கால் 'போதகாயன்' என்னும் மாதவர் பாஞ்சைப்பதிக்கு வந்தார். அவரை வணங்கி வாழ்த்தி அவர் வாயிலாக உறுதிநலங்கள் பல தெளிந்து உண்மை யுணர்வுடன் இவர் உயர்ந்திருந் தமையை உரைக்கின்ற மையால் இது காட்சி தெளிந்த படலம் என நின்றது. காட்சி = அறிவு. மெய்யுணர்வு என்க.

---

419. இன்னவா றற்புதம் இனிது செய்தயர்
முன்னவன் அருளினை முடியிற் சூடியிம்
மன்னவன் மனுநெறி தழைக்க மன்னுயிர்
தன்னுயி ராமெனத் தரணி தாங்கினன். (க)

மாதவர் வந்தது.

420. காத்திவன் வருகின்ற காலை மாதவம்
பூத்தமேவார் வடிவினன் போத காயனென்
றேத்திய பெயரினன் எளிது வந்திவன்
வேத்தவை யடைந்தனன் விழவி னேடுமே. (உ)

மன்னவன் உவந்தது.

421. மாதவன் றனைக்கண்ட பொழுது மன்னவன்
ஆதவன் றனைக்கண்ட அம்பு யம்மென
மீதொளிர் திருமுக மிகம லர்ந்தவன்
பாதநன் மலர்களைப் பணிந்து போற்றினன். (ங)

422. அருளுரு வாகிய அடிக ளீண்டுற
மருளுடை மனத்தினேன் என்ன மாதவம்
தெருளுடன் செய்துளேன் தெரிய கிற்றிலேன்
இருளொழிந் தின்பமின் றெய்தி னேனென்றான். (ச)

க. இன்னவாறு என்றது முன்னைய படலத்தில் நிகழ்ந்துள்ள நிலைகளை நினைந்து கொள்ள. அற்புதம் என்றது கண்கொடுத்த அதிசயத்தை.

423. யான்செய்த தவமெனி லன்றென் முன்னவர்
தாஞ்செய்த தவமதே தமிய னேன்முன்பு
தேன்செய்த மொழியொடு தேவர் போந்ததென்
றான்செய்த வேலவன் உவந்து போற்றினன். (நி)

424. எங்கிருந் தெழுந்தீதா எங்குப் போந்தீதா
இங்குவந் தருளிய தெளிய னேன்பெரும்
பொங்குபுண் ணியப்பயன் புனித யான்செயத்
தங்கிய தேதெனத் தாழ்ந்து வேண்டினன். (சு)

425. இமயநின் றெழுந்துதென் குமரி எய்தினேம்
குமரனின் னருளினீ கொண்டு கண்ணினை
அமரமுன் கொடுத்தனை அறிந்து வந்தனம்
கமையுட னேனருணெக் காணு மாசையால். (எ)

426. என்றவ னுரைக்கவும் இறைவன் நாணினன்
குன்றமர் குமரவேள் ஓடல் கொண்டனன்
ஒன்றிய அவனரு ளுற்ற தேல்ஒரு
புன்றலைத் துரும்புமே புவனங் காக்குமே. (அ)

427. இழிந்தபுன் பொருளினை எவரும் எத்தவே
வழிந்தவொண் பொருளென வாதி காட்டல்போல்
பொழிந்தபே ரருளினுல் புனிதன் என்னையிக்
கழிந்தநீ ருலகிலிவ் வண்ணம் காட்டினன். (கூ)

428. ஊனக் கண்ணை உதவுளித் தெற்குயர்
ஞானக் கண்ணினை நல்க அடிகளைத்
தானத் துய்த்தனன் தற்பர னென்றிவன்
வானத் தன்பொடு வாழ்த்தி வணங்கினன். (கo)

429. இவனுள நிலைமையும் இயல்பும் நோக்கியே
அவனுள மகிழ்ந்தனன் அன்பு கூர்ந்தனன்
தவன்முக மலர்ந்தவத் தன்மை நாடியே
நவமுறு கேள்விகள் நயந்து கேட்டனன். (கக)

மன்னவன் உசாவியது.

430. உலகென உயிரென ஓங்கி யுள்ளவிப்
பலவகைத் தோற்றமும் பார்த்து நிற்கின்றேம்
அலகிலா நிலையென அதிச யிக்கின்றேம்
இலகிய வுண்மையை இனிது கண்டிலோம். (கஉ)

431. உண்டதோ யுண்டுமீண் டுடுத்து லாவியே
கொண்டதோ தோலமாய்க் குலாவி நிற்கின்றேம்
கண்டதோர் நன்மையும் கதியும் காண்கிலோம்
மண்டிய சாலவேய மயங்கிக் காண்கின்றேம். (கங)

432. எண்ணரு கோடிபல் பொருள்கள் எங்குமே
மண்ணிடை விண்ணிடை மல்கி யுள்ளன
கண்ணெதிர் தோர்ந்தன சிறிது கண்டுகாம்
உண்மகிழ் வுடையரா யுவந்து நிற்கின்றேம். (கச)

433. ஒருகணத் துறுவதை யுணர கிற்றிலோம்
வருகணக் காகவே வாழ்வை யெண்ணியே
பெருகுறக் களிக்கின்றேம் பிடரி மீதிலே
கருகணக் காலனுர் கடுத்தல் காண்கிலோம். (கஙி)

434. ஆணென்னப் பெண்ணென அமைந்து நின்றவிம்
மாணுல கமைதியும் வாழ்க்கை மாட்சியும்
பேணுறு தொழில்களும் பேச்சும் சூழ்ச்சியும்
காணுறு கனவெனக் கனிந்து காட்டுமே. (கசு)

435. இன்றெதிர் இருந்தவர் நாளை யின்றியே
பொன்றியே போகின்றூர் போகு முன்பல
கன்றுகள் வந்துமே கலித்தெ ழுந்துமேல்
ஒன்றிய புதுமையில் ஓங்கு கின்றன. (கஎ)

436. என்னையிவ் வுலகியல் பெனவி யந்தந்த
மன்னவன் வினவவும் மாதவன்உவந்
தின்னதோர் உசாவினை எய்தி நின்றுளாய்!
நன்னர்நின் நிலையென நயந்து கூறினுன். (கஅ)

அருந்தவன் உவந்தது.

437. பெருந்திரு வுடையவ னிருந்தும் பேணிய
அருந்தவ வுணர்வினை யடைந்து நின்றனன்
இருந்தா தலத்தினி லிருந்து வானுயர்
மருந்தினை யருந்திவாழ் மாட்சி போலவே. (கக)

438. எனவர சியல்பினை யெண்ணி நின்றுதன்
மனமிக வியந்தனன் மகிழ்ந்து கொண்டனன்
தனமுறு நீதியைக் கருதி யன்புடன்
இனனுற இனியவா யியம்ப லாயினன். (உ0)

முனிவர் மொழிந்த உறுதி நலங்கள்.

439. காலமும் கருமமும் கணக்கும் நீத்தொரு
மூலமுண் டதினின்று முளைத்துப் பல்வகை
ஞாலமுண் டாயின நாமுண் டாயிடினும்
ஆலமோர் விதையினின் றுய தன்மைபோல். (உக)

440. அந்தஓர் அற்புத அமிர்த வாரிநின்
றிந்தவோர் புற்புதம் எழுந்து வந்தது
சிந்தையின் நிலைகொடு செழித்த ழிந்தபின்
முந்தைய நிலையினை முற்றும் என்பவே. (உஉ)

441. பராபரம் பரத்திலும் பரம் சிவத்திலும்
சராசரம் வரன்முறை தழைத்து நின்றன
இராவகை மீண்டெதி ரேறி யம்முறை
தராதலம் யாவுமே சார்ந்தொ டுங்குமே. (உங)

கக. பெருந்திருவுடையவர்க்கு அருந்தவவுணர்வு எளிதில் அமையாதாதலால் அம்மெய்யுணர் வெய்தியுள்ள இவனை அச்செய்தவன் வியந்தான் என்க.

உங. பராபரத்திலிருந்து பரம் தோன்றி, பரத்தில் சிவம், சிவத்தில் சத்தி, சத்தியில் நாதம், நாதத்தில் விந்து, விந்துவில் சதாசிவம், சதாசிவத்தில் மகேசுவரம், மகேசுவரத்தில் உருத்திரன், உருத்திரனில் மால், மாலில் பிரமா, பிரமாவில் ஆகாயம், ஆகாயத்தில் வாயு, வாயுவில் தீ, தீயில் நீர், நீரில் நிலம், நிலத்தில் அன்னம், அன்னத்திலிருந்து நரர் விலங்கு பறவை முதலிய சராசரங்கள் யாவும் தோன்றின என்க. தோன்றிய முறையே ஒடுக்கமும் உண்டாம் ஆதலால் அதனை நிரலே ஊன்றி யறிந்து கொள்க.

442. கரணங்கள் புனிதமாய்க் கனிந்து நின்றவேல்
அரணமாய் அப்பொருள் அணைத்து வந்திடும்
இரணமா யிருந்தமேதல் எள்ளி யேயயல்
மரணமாம் அழலிடை வாட்டிக் கொள்ளுமால். (உச)

443. நெஞ்சைநன் னெறியினில் நிறுத்தி நீள்பொறி
அஞ்சையும் அறிவுட னடத்தி அன்பொடு
விஞ்சிய அருள்வழி மேவி நின்றவன்
எஞ்சலில் பேரின்பம் எய்தி வாழ்வனே. (உஞ)

444. மாசிலா ஆடியில் மருவி ஆதவன்
வீசிய கிரணங்கள் விளங்கித் தோன்றல் போல்
ஆசிலாத் தூயவன் அகத்தில் ஆர்வமாய்த்
தேசுறும் ஈசன்மெய் சிறந்து தோன்றுமே. (உசு)

445. சித்தம்நற் சுத்தியாய்த் திகழ்ந்து நின்றதேல்
முத்தியவ் விடத்திலே முனைந்து தோன்றுமே;
சத்திய முடையனுய்ச் சார்ந்து நின்றவன்
எத்திசை யிருப்பினும் எய்தும் இன்பமே. (உஎ)

446. உள்ளுறும் உணர்வினுல் ஊறும் பேறுமுன்
எள்ளுறும் வருத்தமா யிருக்கு மாயினும்
தெள்ளுறும் அமிர்தெனச் சிறந்து பின்னரோ
அள்ளுறும் பேரின்ப மாகி யோங்குமே. (உஅ)

447. ஒருவனே புனிதனு யுயிரின் ஈசனும்;
மருவிய புன்மையே மண்டித் தீமையில்
ஒருவிடா துறைவனேல் உரிய நீசனும்;
இருமையும் இவ்வகை எய்த லாகுமே. (உக)

448. உன்னையுன் செயலினுல் உயர்த்தி யுண்மையாய்த்
தன்னைநீ யுணர்ந்திடில் தரணி மீதினில்
பின்னைவந் தழந்திடாப் பேறு பெற்றுமேல்
மன்னிய இன்பனுய் மருவி நிற்பையே. (ங0)

உச. மனம் மொழி மெய்கள் தூயாயினர் இறைவன் அருளா எளிதினெய்தி இன்புறுவர்; தீயாயினர் பிறவித்துன்பத்தி லழுந்திப் பேதுறுவர் என்பதாம்.

449. அண்டகோ டிகளெல்லாம் அணுவெ னப்படக்
கொண்டபே ருருவொடு குலாவி யுள்ளவன்
பிண்டமாய் வந்துநாம் பெருகி நிற்கின்றோம்
கண்டபோ துரிமையும் காண லாகுமே. (நக)

450. தன்னைமுன் னறிந்தவன் தனித்து நின்றவம்
முன்னைய நிலையையும் முழுதும் தேர்வனல்
பின்னையிவ் வுலகுறு பிணக்கெ லாமகன்
றன்னருன் னீர்மையை அடைந்து நிற்பனே. (நஉ)

451. பாரினில் படிந்துள மனுக்கள் யாவையும்
ஒருயி ரினமென உறவு கொண்டெவன்
கூரிய அன்பொடு குறித்து வாழ்வனே
ஆரிய னேயவன் அமர னவனே. (நங)

452. வினைவிதி யென்பன இரண்டும் உன்னுடை
மனமொழி மெய்களை மருவி யேவினைக்
தினனுற நின்றுதம் பயனை யீந்திடும்
அனையவை நின்னலே அயலொன் றில்லையால். (நச)

453. வித்திய அதனையே விளைவில் மீண்டுதாம்
துய்த்திவண் வருதலைத் தொடர்ந்து காண்கின்றோம்
உய்த்ததம் வினைப்பயன் உறுதல் அன்றியே
எத்திறத் தும்அயல் எய்த லில்லையே. (நஞ)

454. நினைவுசொல் செயலிவை நெறியின் நல்லவேல்
இனியநல் வினையதாய் இன்பம் நல்கிடும்
அனையன தீயவேல் அடல்செய் தீவினை
எனநிமிர்ந் தின்னலை யீயும் எங்குமே. (நசு)

455. நல்வினை செய்தவன் நரருட் டேவனாய்
எல்லையி லின்பங்க ளெய்தி வாழ்குவன்;
புல்லிய தீவினை புரிந்து நின்றவன்
அல்லலே யடைந்தழி நரகி லாழ்குவன். (நஎ)

நசு. நினைவு சொல் செயல்களால் சேர்ந்த கருமங்கள் வினை எனப்படும். அவ்வினையின் வினையே விதியாம் என்க. பழவினை ஊழ்வினை என்பவும் அது.

456. ஆதலால் இன்பமும் அடுத்த துன்பமும்
காதலால் நாம்செய்த கரும மேயலால்
வதிலார் ஈவன வல்ல ஈதுணர்ந்
தோதிய உறுதியை ஓர்ந்து கொள்கவே. (நஅ)

457. என்றுமே இன்பமா யிருக்க வேண்டினுல்
கன்றிய துன்பினைக் கனவி லும்பிறர்க்
கொன்றுமே செய்திடா தொழிக இன்பினை
நன்றென எங்குமே நாடிச் செய்கவே. (நக)

458. அருளினை ஆள்பவர்க் கல்ல லில்லெனத்
தெருளுடைத் தெய்வநற் புலவன் செப்பிய
பொருளுடை மொழியினைப் போற்றி வாழ்கிலார்
இருளுடைத் துயரங்கள் எய்தி மாள்கின்றூர். (சம)

459. பண்டுநாம் செய்ததே பாரில் ஊழ்வினை;
அண்டியின் ருற்றுவ தாகும் ஆள்வினை;
கொண்டவிவ் விரண்டுமே குறித்த யாவையும்
மண்டிவந் தெவர்க்குமுன் மருவச் செய்யுமே. (சக)

460. முன்னையூ முடையவன் செயுமு யற்சிதான்
சின்னதே யாயினும் சிறந்த பேறுறும்
அன்னதின் றென்னிலோ ஆற்றுந் தன்வினைக்
குன்னிய பயனையே உதவி நிற்குமால். (சஉ)

461. உரமிகச் செய்துபண் புற்ற ஓர்நிலம்
வரமிகு பலனைமுன் வளர்த்த ளித்திடும்
தரமிகு நல்வினை சார்ந்து நின்றவன்
பரமுய ரின்பெதிர் பாவ வாழ்வனே. (சங)

462. வித்திய பலனையே விளவி னிற்பெற்றுத்
தத்தமக் கியன்றதோர் தரத்திற் சார்ந்துநின்
றெத்திய லாழ்முறை யுயிர்கள் மேவியே
துய்த்திடும் வேறென்று தொடர்வ தில்லையே. (சச)

சம. "அல்லல் அருளாள்வார்க்கு இல்லை" (குறள் 245)

463. ஆதலால் நல்வினை யமர்ந்து நாளுமே
ஈதலும் இரக்கமும் எய்தி வாழுவார்
சாதலும் பிறத்தலு மாகச் சார்ந்துள
வேதனை கடந்துமெய் யின்ப மெய்துவார். (சஎ)

கலிங்கத் துறை.

464. தருமசிந்தனை யுடையவர் தழைத்துயர்ந் தோங்கிப்
பெருமை யெய்துவர்; பேருல கெங்கணும் அவரை
அருமை யாகவே போற்றுவர்; அதனைநன் கறிய
உரிமை யாகமுன் னிகழ்ந்தவோர் கதையுள துரைக்கேன்.

சங்கன் கதை.

465. வங்க நாட்டினில் வாதுளம் என்னும்அங் நகரில்
சங்கன் என்றுபேர் சார்ந்தவன் தண்ணளி யுடையான்
தங்கி நின்றனன் ஒருமுறை தடங்கடல் கடந்து
பொங்கு மாநிதி தொகுத்துற எண்ணிமுன் போனான்.

466. தாயும் தந்தையும் இழந்தவன் தனக்குரித் தாக
ஆயும் பொன்பதி னாயிர மட்டுமே யமைந்து
நேய மாகமீந் திருந்ததை நிலைமுதலாக
ஏய வேகொண்டச் சேயவன் ஏகினன் இனிதே. (சஅ)

467. சென்ற வக்கலம் தெண்டிரைக் கடலிடைச் சேர
நின்ற மாபெருந் திசையொன்றுந் தெரிகிலன் நீரே
துன்றி நிற்கின்ற தோற்றமும் ஏற்றமும் நோக்கி
என்றும் கண்டிலா இரும்பயம் நெஞ்சிடைக்கொண்டான்.

468. பெரிய வானிடைப் பிறங்குமேகார் கருவெனப் பிறழும்
கரிய நீள்பெருங் கடலிடைக் கலத்தொடு கலங்கி
உரிய வாதர வொன்றுமே கண்டிடா துயங்கிப்
பிரிய நேர்ந்தவோர் உயிரெனப் போதுற லானான். (ஙo)

சஙி. அருளும் கொடையுமுடையார் பிறவித்துன்பம் நீங்கிப் பேரின்பம் எய்துவர் என்பதாம். இன்பம் அடையவிரும்பின் இரக்கமுடையனாய் எவர்க்கும் இதம் செய்க என்றவாறு.

சஅ. நிலைமுதல் = மூலதனம்.

469. அன்ன காலையில் சேணிடை ஒருகலம் அயலே
துன்னு கின்றதோர் தோற்றமோர் கண்டுளங் கொண்ட
இன்னல் நீங்கினன் எதிர்வதை யெண்ணின னின்றான்
மன்னி வந்தவம் மாக்கலம் மருவவு மகிழ்ந்தான். (நக)

470. இனிய ஆகர வெய்திய தெனவுள முவந்த
தனிய ஞகிய இவன்அதில் பேரொலி சார்ந்து
துனிமி குந்தழும் ஓசையைக் கேட்டனன் துளங்கி
அனைய மாலுமி தன்னிடம் அழுகையென்? என்றான். ()

471. அடிய ரானவர் சிலரிதி லமர்ந்துளார் அவரே
கெடிய பூசலிட் டிவ்வகை யழுகின்றார் நிலம்போய்
முடிய விற்றுநான் மீளுவேன் முறையுட னென்றக்
கொடியன் கூறவும் இவனுள முருகினன் குலைந்தே. (நஙு)

472. விலங்கி னங்களைக் கொன்றுணும் வெய்யவர் போல
இலங்கு மானிடர் தமையிட மறிந்துகைப் பிடித்துக்
கலங்கி டாமலே மறுபுலங் கொண்டுபோய்க் காவாய்
மலங்க விற்றுணும் மாபெரும் பாதகன் அவனே. (நச)

473. அந்த வாறதில் அகப்பட்டு நொந்தல மந்து
வந்த பேர்பதி னெறினர் மனமிக மறுகித்
தந்தை தாயரைத் தனயரைத் தனித்தனி நினைந்தே
இந்த வாறவர் அழுதழு தேங்கியே யினைந்தார். (நஞ)

474. கலத்தை நீரிடை நிறுத்தியக் கலதியன் மெதுவாய்
நிலத்த டைந்தங்குத் தனிநிற்கு நிலையின ரிடம்போய்
நலத்தைச் செய்பவன் போல்நய மாகவோர் மருந்தை
வலத்தில் தந்துள மயக்கியே கொணருவன் வலிதே. (நசு)

475. அப்படிக் கொடும் பாதகச் சூழ்ச்சியால் அமைத்துச்
செப்படித்தொழில் செய்தயல் தேயத்தில் கொடுபோய்
ஒப்படைத்திட வற்றவக் கொடியவன் உரையை
இப்பெருந்தகை கேட்டதும் விலையென்ன? என்றான் (நஎ)

நஉ. மாலுமி = கப்பல் ஓட்டுபவன்.

நச. மலங்கல் = மனங்கலங்கி பறுகல்.

476. படிய மைந்தரோர் பொன்பதி னுயிரம் என்றக்
கொடியன் கூறினுன் கூறவு மிவன்தொகை கொடுத்தான்
நெடிது நின்றவன் வியந்தனன் நேர்ந்துகை யிருந்த
அடிமை யாளரை யிவனிடம் கொடுத்தவன் அகன்றுன்.

477. எண்ணி நோக்கினுன் எண்ணிரு பேரமைக் திருந்தார்
திண்ணி தாகிய ஆண்களோங் தேழுசேய் வயது
நண்ணி நின்றதாய் மூவர்கள் நலமெலாந் திரண்டு
கண்ணி றைந்தவோர் கன்னிகை கணக்கமைந் திருந்தார்.

478. பாம்பின் வாய்ப்பட்டுப் பதைத்திடு தேரைகள் போலக்
கூம்பி நின்றவர் கொண்டவன் குணநிலை நோக்கி
ஏம்ப லுற்றனர் இன்னுயிர் தழைத்தனர் இனிதா
ஓம்பி மற்றிவன் கலத்தில்வைத் துபசரித் துவந்தான்.

479. உற்றி ருந்தவர் யாரையும் உரிமையி னேக்கிப்
பெற்ற பேரையும் ஊரையும் பேரையும் பிறந்த
மற்றந் நாட்டையும் வரன்முறை வினவியுள் ளுருகி
எற்று நீர்க்கடல் கடந்துபோய் இடந்தொறும் சேர்த்து;

480. சென்று வாழுங்கள் நுங்களை யாருடன் சேர்ந்தே
என்று சைத்திவன் விடுத்திட அவரெலாம் இறைஞ்சி
நன்றி கூறியே நங்குல தெய்வமென் றேத்தி
ஒன்றி யேகினர் ஒருத்திமட் டிருந்தன ளுவந்தே. (கூஉ)

481. சந்தி ரன்றரு முகத்தினள் தழைத்தொளி தவழ்ந்த
சுந்த ரத்திரு வடிவினள் சுகுணங்கள் நிறைந்தாள்
அந்த ரத்தொளிர் அரமக ளனையவள் மாசு
வந்த டர்ந்துறு மணியென மருவிய மெய்யாள். (கூங)

482. அமிழ்த ளாவிய சொல்லினள் அருமண நிறைந்த
குமுத வாயினள் கொம்மைவெம் முலையினள் கோலச்
சுமைதி ரண்டுயர் கூந்தலாள் துவளிடை யிடைய
அமைதி யானமென் னடையினள் அமலையென் பெயராள்.

483. அன்ன கன்னியைப் பெற்றவ ரகங்கொண்டு சேர்க்க
இன்ன வன்விழைந் திதமுடன் கேட்டனன் அவள்தான்
தன்ன தாகிய நிலையினைச் சாற்றிடா தார்வம்
துன்னி மன்னவ! நீயன்றித் துணையிலை என்றாள். (சுநி)

484. அவளு ரைத்தஅவ் அமிர்தமென் மொழியினு ளுள்ளம்
இவனு வந்தன னுயினும் இனந்தெரி யாமல்
தவமி ருந்துபெற் றவர்மனஞ் சம்மதி யாமல்
நவம தாயுட னயந்திடல் நவையென வுணர்ந்தான். (சுசு)

485. அரிய நற்றவஞ் செய்தவர்க் கன்றியே யுன்னை
உரிமை யாகப்பெற் றுவந்திடல் நீதியோ நான்முன்
பெரிய புண்ணியம் செய்துளேன் ஆயினும் பெற்றோர்
தெரிய நண்ணுதல் நல்லது தெய்வமும் துணையாம். (சுள)

486. உற்ற வுரிமை யுரைஎன அவளுவந் துரைப்பாள்
கொற்ற நீடிய சாவகத் தீவுடைக் கோமான்
வெற்றி வேற்சகன் தந்தைஎன் தாய்பெயர் விமலை
பெற்ற ஊர்சய புரியவண் பெயர்கவென் றுரைத்தாள்.

487. மன்ன வன்றிரு மகளென்ப துணர்ந்தது மிவனுள்
இன்ன பேரருந் திருவெங்ஙன் எய்துமென் றிணங்தான்
என்ன தாயினு மாகவென் றங்ஙகர் நோக்கித்
தன்ன ருங்கலம் நடத்தினன் துறையினைச் சார்ந்தான்.

488. மின்ன லங்கொடி போன்றஇம் மெல்லிய லோடு
மன்னன் மாநகர்த் தெருவிடை மானிளம் பெடையைத்
தன்ன ருந்துணை தழுவியே சார்தல்போல் இவன்றன்
நன்ன யம்பெற நடந்துமுன் சென்றன னயந்தே. (எ0)

489. வேந்தன் மாமகள் மேவரக் கண்டதும் அவ்வூர்
மாந்தர் யாவரு மகிழ்ந்துடன் தொடர்ந்தனர் மருங்கார்
வந்தல் யாவதே? என்றனர் இயல்பொன்றுந் தெரியார்
தாந்த மக்குளே பலபல பேசினர் சார்ந்தார். (எக)

490. மன்னன் கோயிலை யடைந்தது மானவேற் சகன்முன்
அன்ன மேயென அஞ்சுத்துவந் தெடுத்தரு மணிபால்
என்ன ருங்கலம் எய்திய தேயென இசைத்தான்
பின்ன ளுளவள் விரைந்துள்ளி விழிகளித் துவந்தாள்.

491. பெற்ற தங்குல மகளினைப் பிரிந்திடை தொங்தே
எற்று நீர்நிலத் தெங்கணும் தேடியும் காணே
தற்றை நாள்முதல் அருந்துய ருழந்தனர் அவள்தேர்
உற்ற போதவ ருளநிலை யாவரே யுரைப்பார்? (எங)

492. குமரி ருந்தநற் சகியெனக் கோலமா ளிகையில்
தமரு வந்திடத் தழைத்தினி திருந்தவென் தவமே!
எமைய கன்றுநீ எவ்வுழி எய்தினை? இங்கே
அமர வந்திதமக் காருயிர் அளித்தனை அரிதே! (எச)

493. என்று மன்னவன் இன்னலும் மகிழ்ச்சியு மெய்தி
நன்ற றிந்ததன் நற்றவப் புதல்வியைத் தழுவி
நின்று கேட்டலும் நேரெதிர் தந்தையை நோக்கி
ஒன்றி வந்ததன் னிலையினை யுணர்ந்திடவுரைத்தாள். (எஞ)

அமலை மொழிந்தது.

494. இனிய பூம்பொழில் இடையொரு மாலையில் இனிதே
தனியு லாவினன் அங்கொரு முனிவரன் சார்ந்தோர்
கனியை நல்கினன் காணைனக் காட்டினன் கண்டேன்
எனைம றந்தனன் எய்திய இடம்பினை தெரியேன். (எசு)

495. கடிய வெம்பெருங் கருங்கட லிடைநெடுங் கலத்தோர்
கொடிய வன்பல அடியவ ருடன்னணைக் கூட்டி
நெடிது வைத்துள நிலைகண்டு நெஞ்சகம் கலங்கி
முடிய நின்றனன் முடியுடை இவன்வந்து காத்தான்.

496. இன்ன தோன்றல்வந் தெய்திய னுயின்னன் னுயிரை
முன்ன மேயிழந் திருப்பனிம் மூரிநீர் ஞாலத்
துன்ன ரும்பெருங் குணநல முடையனும் மருகன்
என்ன வந்துளான் எனமிக விநயமா யிசைத்தாள். (எஅ)

497. அந்த வாசகம் கேட்டலும் அவன்எழில் நிலையும்
வந்த வாற்றையும் மகள்மன நிலையையும் மற்றும்
முந்த வோர்ந்தரு மறைமுறைப் படிமண முடித்தே
இந்த ஆட்சியும் பெறுகென இனிதுகைக் கொடுத்தான். (எக)

498. பெற்ற ஓர்மகள் தனைமணம் பெறவந்த மகனுக்
குற்ற நாட்டையும் ஒருங்குதந் துயர்தவ நிலையை
முற்றி நின்றனன்; பற்றிய இவன்மனு முறையே
எற்று நீருல கின்புற இருந்தினி தாண்டான். (அ0)

499. தண்ணி ளிப்பெருந் தயவொடு தருமமு நிறைந்த
அண்ண லின்னெழிற் பெண்ணுடன் ஆசையு மெய்தி
எண்ண ரும்பல போகங்கள் நுகர்ந்தினி துவந்து
விண்ணு ளோர்களும் புகழ்ந்திட விளங்கிவீற் றிருந்தான்.(அக)

500. கடலில் வீழ்ந்துமுன் அமிழ்ந்திடு நிலையினில் கடிதே
உடல ழிந்ததென் றுற்றவன் உயிர்களுக் கிரங்கி
இடையில் செய்தவோர் கொடையினுல் இருநில முழுதும்
உடைய னுயினுன் ஒளிசெய்து வழிவழி யுயர்ந்தான். (அஉ)

501. ஆத லாலுயர் தருமமே ஆருயிர்க் கின்பம்
போத நல்கிடும் அருள்மிகப் புரிந்துள முருகி
ஈத லாலஃ தெய்திடும் இன்னவா றிதத்தைக்
காத லோடுணர்ந் தாற்றுவர் காட்சியிற் றெளிந்தோர். (அங)

502. இனிய நல்லறம் இன்புறப் புரிகிலார் தமக்கே
துனிவ ளர்த்திடும் துரோகிக ளாகுவார் தொட்ட
மனித வாழ்க்கையின் நிலையினை மதித்துணர்குவரேல்
கனியும் நெஞ்சராய்க் கதியினை விழைகுவர் கடிதே. (அச)

அங. எண்ணிய இன்பங்கள் யாவும் புண்ணியத்தாலே உண்டாம்; அப்புண்ணியம், எல்லா வுயிர்களிடத்தும் அருள் புரிந்து இதம் செய்வதால் விளையும். ஆதலால் இரக்கமும் ஈகையுமுடையனுய் யாண்டும் நன்மை செய்துவரின் அவன் என்றும் இன்பவாழ்வினனாயிருப்பன் என்பதாம். நன்று ஆற்றி நலம்பெறுக என்றபடி.

அச- உயிர்க்கு உறுதியான தரும நலனை உரிமையாகச் செய்து கொள்ளாதவர் தமக்கே கேடு விளைப்பவர் ஆதலால் அவர் துரோகிகள் என நின்ருர். தனி = துயரம்.

எழுசீர் விருத்தம்.

503. விண்ணிடை நின்று விழுதுளி யனைத்தாய்
மெல்லிய லார்கரு வெய்தி
எண்ணிடை யமையா வுருவமைந் தீரைந்
தெனுமதி யளவினில் வெளியாய்க்
கண்ணிடை யமையாப் பாலனைப்பின்பு
காளையாய்க் கிழவனைக் கழிந்து
மண்ணிடை மண்ணை யழியுமிவ் வாழ்வை
மதித்துளங் களிப்பரோ மதியோர்? (அ)

504. பாலொடு செந்தேன் பரவிய தென்னப்
பசியபொற் கருப்பையிற் புகுந்து
சாலவே உதிரம் தசைதிரண் டுருவாய்ச்
சமைந்துபின் னுமைமேல் லாகிக்
காலொடு கைகள் கலந்துணர் வெய்திக்
கதிநிலை நிணைந்துகண் கலங்கி
ஏலவே வெளியாங் குழவியி னின்னல்
இயல்பினை எவரளந் துரைப்பார். (அசு)

அடு. தளி என்றது சுக்கில ஆர்வின் பெருமை கருதி. "அறுகு நுனி பனியனைய சிறிய துளி பெரியதொரு, ஆகமாகி ஓர் பால ரூப மாய்" (திருப்புசழ்) என வரும் இதனால் நமது உருவ மூலம் புலனும். கருத்துணராது களிப்பவர் மதிகேடரே என்பதாம்.

அசு. பால், தேன் என்றது சுக்கில சுரோணிதங்களை. பொருளின் நிறங்களை உவமைகள் குறித்து நின்றன. கருச்சேக்கையின் உருச்சேர்க்கையை இங்குக்கருதிக் காண்க.

பாலும் தேனும் போல் சுக்கிலமும் சுரோணிதமும் ஒக்கக் கலந்து உறைந்திருந்து ஒன்றும் திங்களில் உதிரம் திரளும், இரண்டில் அச்சு அமையும், மூன்றில் முகிழ் உருவாகும், நான்கில் நரம்பு நாடிகள் அமையும், ஐந்தில் வண்ணம் வரும், ஆறில் ஆமையின் வடிவமுற்றுக் கை கால்கள் நீண்டு நவத்துவாரங்களும் தோன்றி உயிர்த் துடிப்புண்டாம், ஏழில் கருப் பத்தில் புரளும், எட்டில் நீட்டி முடக்கித் தாயுண்ட அன்னரசத்தைக் கொப்பூழ் வழியாக வுண்டு உடல் வளரும், ஒன்பதில் தலை காலளவும் உரோமம் கிளைக்கும், பத்தாமாதம் பூரணமானவுடன் பிரசூதவாயுவின் வேகத்தால் தலை கீழாய்ப் பூமியை நோக்கி விழுந்து உங்கா என்று அழும். அப் பைங் குழவியே பின்பு இங்கோர் மானுடமாய் இடம் பெற்று நிற்கும். இங்ஙனம் அல்லல் பல அடைந்து நில்லா வுடலுடன் நிலைத்துள்ள நாம் உள்ள பொழுதே நல்லது செய்து ஒல்லையில் உய்யவேண்டும் என்பதாம்.

505. சுக்கிலம் பெருகில் ஆணைனத் தோன்றும்
சுரோணிதம் பெருகிலோ பெண்ணும்
ஒக்கவே யிரண்டும் கலந்தொரு நிலையா
யுறைந்திடில் ஈருரு வாகும்
தக்கவப் பிண்டம் கருக்கொளுங் காலம்
தழுவிய தந்தையும் தாயும்
மிக்கவெக் குணத்தை மேவின ரதைமே
மேலெழு குழவியும் மேவும். (அஎ)

506. பொறிபுலன் வாயு நாடிகள் பத்து
பொருந்திய வாசல்கள் ஒன்பான்
சிறுமையா மிராகம் எட்டு தாதேழு
சேர்ந்த ஆதாரங்கள் ஆறு
நறுவிய கோசம் அவத்தைகன் ஐந்து
நலமுறு காணங்கள் நான்கு
செறிகுண மலநோய் மூன்றுடன் இந்தச்
சிற்றுடல் திகழ்ந்திடு மன்றே. (அஅ)

அஎ. ஈர் உருவு என்றது ஆண் கூறும் பெண் கூறும் கலந்த அலி நிலையை.

அஅ. பொறிகள் 10, புலன்கள் 10, நாடிகள் 10, வாயுக்கள் 10, வாசல்கள் 9, இராகம் 8, தாது 7, ஆதாரம் 6, கோசம் 5, அவத்தை 5, காரணம் 4, குணம் 3, மலம் 3, வியாதி 3, மண்டலம் 3 ஆக 96.

பொறி: மெய், வாய், கண், மூக்கு, செவி, வாக்கு, பாதம், பாணி, குதம் குறி எனப் பத்தாம்.

புலன்: பரிசம், சுவை, ஒளி, நாற்றம், ஓசை, வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம் எனப் பத்தாம்.

நாடி: இடைகலை, பிங்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி. குகு எனப் பத்தாம்.

வாயு: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் எனப் பத்தாம்.

வாசல்: கண்கள், செவிகள், மூக்கு, வாய், குறி, குய்யம் என ஒன்பதாம்.

இராகம்: காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம், இடம்பம், அகங்காரம் என எட்டாம்.

தாது: தோல், எலும்பு, தசை, உதிரம், நரம்பு, நிணம், சுக்கிலம் எனவேழாம்.

ஆதாரம்: மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம்; அனாகதம், விசுத்தி, ஆக்ஞை என ஆறும்.

507. தத்துவம் தொண்ணூற் றுறினில் அமைந்த
தனுவிதே கொடியவெம் பிறவிச்
சத்தசா கரத்தைத் தாண்டுதற் கினிதாய்ச்
சமைந்தது சார்ந்தினி திருந்தும்
முத்தியின் பத்தை யடைந்திடா தவமே
மூகமாய் மடிந்தயர்ந் திழந்து
பித்தருட் பெரிய பித்தராய்ப் பெருகிப்
பீழையும் பிழையுமே பெற்றார். (அக)

508. இங்குவந் தடைந்தார் இனிவரு நிலையை
யாதுமே தெரிகிலார் இடையே
தங்குமிக் கணத்தே தம்முயிர்க் குறுதி
தனையொரு சிறிதுமே நாடார்
பொங்கிய பொருளும் போகமும் வேண்டிப்
புல்லிய பறவையாய்ப் பேயாய்
அங்குமிங் கோடி யலைந்தல மருவார்
ஆவதை யாதுமே யறியார். (கo)

509. கேற்றெதி ரிருந்தார் இன்றிறந் தொழிந்து
நீறென மாறிமண் ணுகித்
தோற்றமு மின்றித் தொலைந்தன ரிந்தத்
தொல்லிவெம் பிறவியி னிலையை
ஊற்றமாய் நாளும் உறுகண்ணல் கண்டும்
உறுதியொன் றுணர்ந்திடா தொழிந்து
கூற்றின்வாய்க் கிரையாய்க் கொழுத்துளங் களித்துக்
கூடியே குலாவுகின் றீரே. (கக)

கோசம்: அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்த மயம் என ஐந்தாம்,

அவத்தை: நனவு, கனவு, உறக்கம், துரியம், துரியாதீதம் என ஐந்தாம்.

காணம்: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என நான்காம்,

குணம்; சத்துவம், ராசதம், தாமசம் என மூன்றும்.

மலம்: ஆணவம், மாயை, காமியம் என மூன்றும்.

வியாதி: வாதம், பித்தம், சிலேட்டுமம் என மூன்றும்.

மண்டலம்: சூரியன், சந்திரன், அக்கினி என மூன்றும்.

இத்தொண்ணூற்றுறும் தேக தத்துவங்கள். இதன் விரிவைத் தத்துவ தீபிகை என்னும் நூலுட் கண்டு கொள்க.

510. எங்குமுன் னிருந்தோம் எங்கினிப் போவோம்
என்பதை யிறையள வேனும்
தங்கிமுன் னுரைசார் தந்நிலைக் கிரங்கார்
தருக்கிலும் களிப்பிலும் தழைத்துப்
பொங்கிநிற் கின்றூர் போயிழி கின்ற
புலனென்றும் தெரிகிலார் புலையாம்
இங்கிவர் நிலையை எதிரறிந் தோர்ந்தால்
இங்ஙன மிருப்பர்கொ லிவரே? (கூஉ)

511. என்னதாம் பெற்றோம் இதுவரை வாழ்ந்தோம்
எதன்பொருட் டிங்குநாம் வந்தோம்
அன்னையும் பிதாவும் அன்புடை மனையும்
அறிவுறு மக்களும் தமரும்
முன்னமெத் தனைபேர் மொய்த்தமர்ந் திருந்தார்
முறையுடை யவரெல்லாம் எங்கே?
இன்னமெத் தனைபேர் எய்திட நின்றூர்
என்பதை எண்ணுவார் எவரே? (கூங)

512. கருவினுள் அழிந்தும் கண்டபின் அழிந்தும்
கவினுறு குழவியா யழிந்தும்
மருவிய பாலன் குமரனுய் அழிந்தும்
வன்பெருங் கிழவனுய் அழிந்தும்
ஒருநிலை யின்றி யழிவையே யுடையிவ்
வுலகினை உறுதியா நம்பி
வருநிலைக் குரிய நலனென்று மின்றி
வறியராய் மாள்வதே மடமை. (கூச)

அறுசீர் விருத்தம்.

513. இன்பமே வேண்டி நிற்கும் இயல்பினை யுடைய மாந்தர்
துன்பமே யடையத் தக்க தோமினை விளைத்து நின்றூர்
நன்பய னுடைய மாவின் நறுங்கனி வேண்டி எட்டி
வன்படு விதையே நட்டு வளர்க்கின்ற மடமேவார் போல. (கூரு)

514. செல்வமாம் கல்வி யுண்டு செருக்குமேம் மற்கொண்டு சேர்ந்த
நல்வினை மறந்து தீமை நயந்துசெய் தவாவிற் பொங்கிப்
பல்வகை மயக்கிற் பாய்ந்து படுபழி நீட ஓடிக்
கல்வியும் அறிவும் காணுக் கண்ணராய்க் கழிகின் றூரே. (கூசு)

515. வஞ்சமும் சூதும் பொய்யும் வரம்பின்றி வளர்த்து நல்ல
நெஞ்சினைக் கெடுத்து நீச நிலையினில் நிமிர்ந்து நின்றூர்
வெஞ்சினக் கூற்றம் வந்து விளியும்போ தந்தோ என்ன
தஞ்சமென்றெழுவார் கொல்லோ? தம்மையே கொல்கின்றூரே.

516. பொள்ளலார் குடநி றைத்த புனலெனப் புரைகொள் யாக்கை
உள்ளமர் உயிரின் வாழ்க்கை யுறைந்துள தொழுகி நாளும்
தள்ளுறக் கழிதல் தேற்றூர் சாலவுந் தருக்கி நின்றூர்
எள்ளலிம் ட னிடங்கள் இழிநிலை என்னே! என்னே! (கூஅ)

517. தன்னையே மறந்து சாலத் தருச் தரணி தன்னில்
என்னவோ வெல்லாம் பெற்ற தாகவே எண்ணி எண்ணி
மன்னிய களிப்பின் மூழ்கி மாலுழந் தழலு கின்றூர்
பின்னர்வந் துறுவ தோரார் பிழைகளே பெருக நின்றூர். (கூகூ)

518. தோன்றிய வுயிர்க ளெல்லாம் தொன்முறை வளர்ந்து முற்றி
ஊன்றிய சுடலை நோக்கி ஒருமுக மாய்த்தொ டர்ந்து
நான்றிய எறும்பொ முங்கின் நடைபெறு கின்ற இன்ன
ஈன்றிய லுலக வோட்டம் எதிரறிந் துய்க வின்றே. (கoo)

519. கணமொன்று கழியும் தோறும் கவர்ந்ததம் ஆயுள் நாளின்
கணமொன்று கழியத் தாம்போய்க் காலன்வாய்விழுவதோரார்
குணமொன்றுங் கொள்ளா ரந்தோ குற்றமே கொழித்துநின்றூர்
பிணமென்று வரும்போ தென்ன பெறுவரோ பேதையோரே.

520. அறிவுளார் செல்வம் பெற்றூல் அறம்புக ழின்ப மீட்டி
நெறியொடு நிலைத்த முத்தி நிலையினை நெறியே சேர்வார்;
பொறியிலார்பொருள்கையுற்றூல்பொத்திவைத்திழிந்துசெத்து
வெறிவிலங்காதி வெய்ய வெம்பவத் தழன்று வீழ்வார். (காஉ)

521. கல்வியும் அறிவு மில்லார் கடையரா யிழிந்து கண்ட
வல்விலங் கென்ன வாழ்ந்து மண்ணிடை மடிந்து தாழ்வார்:
நல்வினை யுடைய நீரார் நரர்களுள் தேவ ராகி
எல்வினை யின்ப வீட்டை யினிதுசென் றடைவ ரன்றே. (காங)

522. ஓறறி வாதி யான வுலகுயிர்த் தொகைகள் யாவும்
பேறறி வாதி நின்று பிறந்தன பிறந்த வற்றுள்
சீறறி வரிமை யோடு சிறந்துள மானு டங்கள்
ஆறறி வமைதி யேற ஆதிமை நேரு மன்றே. (ாச)

523. பிறந்துநாம் பெருகி நின்றும் பேணிய வுடம்பு நீங்கி
இறந்துபோய்ச் சேர்ந்து நிற்கும் எல்லையும் தெரிய வில்லை
மறந்துமுந் திரிவாழ் நாளை மயங்கியே களிக்கின் றேமால்
அறந்துணை யன்றி வேறே அருந்துணை யா மின்றே. (ாஞ)

524. செல்வமிக் குடைதே... மென்று சிந்தையுட் செருகக மறு
அல்வழி யவாவி யோடி ஐம்பொறி யார மேய்ந்து
வல்வினை வளர வீங்கி மடிந்துவெங் நாகி லாழ்ந்து
பல்லிழி பவத்து ழந்து படுதுயர்ப் படுவ ரம்மா. (ாசு)

525. ஆசைகூர் வளரத் தம்மை யறமறந் தவாவில் மூழ்கிப்
பாசங்கள் தொடர்ந்து சூழப் படுபவம் படர்ந்து நீள
நீசங்கள் வளர நீண்டு நெடுங்களிப் புற்று நின்றூர்
வீசிவெங் கால பாசம் விசிக்குங்கால் விழிக்கின் றூரே. (ாள)

526. குணத்தினை மறந்து பொல்லாக் கொடுமையும் சூதும் சூழ்ந்து
பணத்தினைப் பரிந்து பற்றிப் பழிபவம் வளர நாளும்
பிணத்தினை வளர்த்து நின்றூர் பேயர்கள் உயிரைப் பேணி
மணத்தினை யடையா தந்தோ மயங்கிவா ளாமடிந்தார். (ாஅ)

527. வஞ்சனை என்னும் வித்தில் வளர்ந்துபொய்க் கொழுந்து விட்டுப்
பஞ்சபா தகங்கள் என்னும் படுபெருங் கிளை படர்ந்து
நெஞ்சகத் தாசை யென்னும் நெடுங்கொடு மரமாய் நீண்டு
வெஞ்சினக் காலத் தச்சன் வெட்டவெங் நிரயத் தாழும். (ாகூ)

528. கொள்ளியால் தலைசொ ரிந்து கோவென அழுது கூவும்
பிள்ளைபோல் பேதை யாளர் தீவினை புரிந்து பின்பு
துள்ளிவெங் துயரத் தாழ்ந்து துடித்தழு தயர்வ ரந்தோ
அள்ளிநஞ் சருந்தி நல்ல அமிர்தினை யகல விட்டார். (ாகo)

529. மணிமுடி புனைந்து மாண்பாய் மண்ணெலாம் புகழ்ந்து போற்ற
அணியுட னிருந்த வேந்தும் ஆருயிர் தீர்ந்த போது
பிணமென இகழப் பட்டுப் பின்னெரு கணமும் வையார்
கணமுடன் திரண்டு காட்டுள் கழித்திடக் காண்டு மன்றே. ()

530. என்னையிவ் வுலக வாழ்க்கை! இதையொருபொருளாயெண்ணித்
தன்னுளஞ் செருக்கி யந்தோ தன்னுயர் நிலைம றந்து
பின்னைவெம் பிறவிக் கான பிழைகளைப் பெருக்கி வீணே
இன்னலுக் கோராய் நீண்டே இழிகின்றார் இழிகின் றாரே. ()

531. ஆசையாம் விருத்தில் தோன்றி ஐம்பொறி வழியா யோடி
நீசமா யினைக ளென்னும் நெடும்பெருங் கவட டர்ந்து
பாசமா மலர்கள் பூத்துப் பழிமர ணங்கள் காய்த்து
நாசமா மரங்கள் சாய்ந்து நரகிடை நிறைய மன்றே. (ாகஙூ)

532. வானகத் தோடு முந்நீர் வளைந்தவிவ் வுலக மெலாமம
தானகங் கையிற் கொண்டு தனியர சாண்டு போய
மானமா மன்னர் இன்ன ரென்னையார் எண்ண வல்லார்?
ஞானமா நிலைய ருய்ந்தார் இல்லவர் நவையி லாழ்ந்தார். (ாகச)

533. பொறிபுலன் நிலைதெ ளிந்து புலைவழி புகாமல் காத்து
நெறிமுறை ஒழுகி நின்றார் நிறைந்தபே ரின்பம் பெற்றார்;
அறிவழிந் தவங்கள் செய்தார் அல்லலும் பழியு மெய்திச்
செறியிருள் நரகம் சேர்ந்து செல்லலே துய்த்தா ரன்றே. ()

534. நல்வினை புரிந்து நாளும் நவையகன் றொழுகி நின்றார்
வெல்வினை வேந்த ராகி விண்ணவ ராகி மேலாம்
இல்லென வுரைக்கு மின்ப வீட்டினை யெய்தி வாழ்வார்
புல்வினை யாளர் அந்தோ புன்பிறப் பதனில் ஆழ்வார். (ாகசூ)

மன்னன் மகிழ்ந்து சொன்னது.

535. மாதவன் இவ்வகை மனுவி னீதியை
ஓதவும் அரசுளம் உவந்து கொண்டவன்
பாதபங் கயங்களைப் பணிந்தெ ழுந்துதன்
சீதவண் குழுதவாய் திறந்து செப்பினன். (ாகள)

536. வானுயர் வாரிவண் பயிர்வ ளர்த்தென
ஞானநல் லமிர்தினை நயந்து நல்கியிம்
மானவ ருயிர்களை மாண்பு றுத்திமேல்
ஆனபே ரின்பருள் அடிகள் போற்றியே. (ாகஅ)

537. என்றுமுன் தொழுதுநின் றினிய வாசகம்
ஒன்றிய அன்புடன் உவந்து கூறினன்
தன்பெருந் தகவினுக் குரிய தானமொன்
றன்றவ னிடம்செய அரச வானினன். (ாகக)

538. இனையவா றெண்பொரு ளீய எண்ணியும்
அனையமா தவனுளம் அவாவி யுள்ளன
எனையவோ வெனவெதிர் எண்ணி யோர்ந்திட
வினையமாய் நின்றுமுன் வினவ லாயினன். (ாஉ0)

கலிநிலத்துறை.

539. இந்தி ராதியர் பதங்களும் இழிவென இகழ்ந்து
அந்தம் இல்லதோர் நிலையினை யடைந்துபே ரின்பச்
சிந்தை யாளராய்ச் செழித்துள அடிகளுக் கடியேன்
தந்து கொள்வதோர் பொருளெதோ வென்றனன் தாழ்ந்தே.

540. உரிமை யாயுள முருகியோர் உதவியை உவந்து
பெருமை யாச்செய விங்யமாய்ப் பேசிய அவன்றன்
அருமை நன்மொழி யளவினை அருந்தவன் அறிந்து
இருமை யும்பெறு மியல்பினி லெதிர்மொழி பகர்ந்தான். ()

541. ஊனு டம்பையே யுறுசுமை யெனவுணர்ந் திகழ்ந்து
யானெ னும்செருக் ககன்றுள துறவியர் என்றும்
வானு யர்ந்தபே ரரசுகை வந்தெளி துறினும்
ஈனம் என்னவே யிகழ்ந்தெதிர் தகவுவ ரன்றே. (ாஉந)

542. ஓசை பெற்றுய ரொலிகட லுலகங்க ளெல்லாம்
வாச மாகியோர் அணுவென மருவிட வளங்கொள்
ஈச னுகிய பரம்பொரு ளெய்திஞர் இழிந்த
நீச மாகிய பொருளினை நினைவர்கொல் நினைவில். (ாஉச)

543. அந்த மில்லதோர் இன்பமாய் நிறைந்தழி வின்றிச்
சந்த தந்தழைத் துயர்ந்துள தத்துவ அமிர்தைச்
சிந்தை யுள்ளுறப் பெற்றவர் தெய்வநற் பதமும்
நித்தை யாமென நினைவர்பின் நினைவதே றென்னே. (ாஉஙு)

544. பொன்னின் மாற்றினை யுரைகல்லால் தெரியலாம், புலமை
தன்னை யாக்குறு கவிகளால் அறியலாம், தவத்தைத்
துன்னி நின்றதன் கருணையால் உணரலாம், துறவை
மன்னி ராசையின் மாட்சியால் தெளியலாம் மதித்தே.(ாஉசு)

545 அலகி லாதபே ரின்பமாய் அகிலமு மருவ
நிலவி நின்றொளிர் பொருளினை நிலைபெற நினைவார
கலக மாகிய ஆசையில் கண்குரு டாகி
உலக மாயையி லுருள்தரு பொருளினை யுகவார். (ாஉள)

546. எனக்கு வேண்டிய தொன்றும்வேண் டாமையே என்றும்
உனக்கு வேண்டிய துரையென வேந்துள முவந்து
தனக்கு வேண்டிய யாவையும் தண்ணரு ளுரையால்
மனக்கு வேண்டிமுன் கொண்டனன் மாதவ என்றான்.(ாஉஅ)

547. அரசு ரைக்கவும் அருந்தவன் அகமகிழ்ந் தெழுந்தான்
பரசி யேத்தியோர் மதியள வேனுமிப் பதியில்
வாமி கும்பணி யடியனேன் புரிந்திட வதிந்தே
உரைசெய் யின்னருள் புரியென அரசடி பணிந்தான். (ாஉக)

548. மன்னன் அன்பையும் மதியையும் மதித்தவன் மகிழ்ந்தே
அன்ன வாறமர்ந் திருந்துபின் அருவனம் படர்ந்தான்;
தன்ன தாணையைத் தனிப்பர னருளேமேற் கொண்டு
மன்னி நின்றிவன் மாநிலம் மாண்புடன் புரந்தான். (ாஙo)

சு-வது காட்சிதெளிந்த படலம் முற்றிற்று.
ஆகக் கவி நுசஅ.

கஉசு, உலகப்பற்று அற்றுப் பரம்பொருளைப்பற்றி நிற்பவர் தின்பு வெறும் பொருளை விரும்பார் என்பதாம் விரும்பின் துறவியர் அல்லர் என்றபடி. நிராசை = ஆசை யின்மை. "நிராசை இன்றேல் தெய்வம் உண்டோ?" (தாயுமானவர்) என்ற கருத்தும் இங்குக் குறிக்கொள்ளத் தக்கது.

ஏழாவது

குமரன் கோல் கொண்ட படலம்.

திக்குவிசயத்துரை தமது அருமைத் திருமகனுகிய வீரபாண்டிய னுக்குத் திருமணம் செய்வித்து அரசுரிமை நல்கிய நிலைமையை உரைக்கின்றமையால் இது குமரன் கோல்கொண்ட படலம் என நின்றது. இக் குலமகனே இக் காப்பியத்துக்குத் தலைவன் ஆகலான் இது முதலாக இவன் சரிதம் தொடர்ந்து இனி நடைபெறும் என்க.

---

549. அங்கண் மாநிலம் ஆளுறும் அரசனிவ் வாறு
மங்க லம்பெறு மதியுடன் வாழுநாள் மைந்தர்
சிங்க மேவெனத் திண்டிற லாண்மையிற் சிறந்து
தங்க மேருவிற் றளர்விலா தெழுந்தனர் தழைத்தே. (க)

550. மூன்று மாபெரும் ஒளிகளில் முதலொளி யாகத்
தோன்றும் ஆதவன் போன்றொளிர் மூவருள் மூத்த
தோன்றல் தோன்றினன் சொற்கலை முழுவதும் தெளிந்தே
என்ற வெம்படைக் கலமெலாம் பயின்றெழில் சிறந்தான். (உ)

551. வீர தேவதை யருள்கொடு மேதினி வந்த
சூர னுமென‌த் துதிகொண்டு நின்றதோர் சுமுகன்
மார னுமென மங்கையர் மையல்மீக் கொண்டு
பார நாணிறை யாவையும் பறித்திட நின்றுன். (ங)

552. கரிய கண்ணினன் செய்யநன் மேனியன் கனிந்த
அரிய தண்கலை மதியென அழகிய முகத்தன்
உரிய தானமா வீரமா மகளுவந் துறையும்
பெரிய திண்டிறற் றேளினன் பெருந்தகை யாளன். (ச)

553. கலைய மைந்தனன் மதியிடைக் களங்கமாய்க் கனிந்து
நிலைய மைந்தமைக் கோடென நிமிர்ந்துமே லெழுந்து
துலைய மைந்தொளிர் மீசைகள் துலையிலா துயர்ந்த
தலைவ னீங்கிவ னென்பதைத் தனிநின்று சாற்றும். (ஙி)

ங. பூரணசந்திரனில் களங்கம் கனிந்துவார்ந்துள்ளதுபோல் இவன் முகத்தில் மீசை மிளிர்ந்து நின்றது என்பதாம். துலை=ஒப்பு சமம்.

554. மத்த யானைமன் மழவிடை மால்கொண்டு திகைத்துச்
சித்த நாணிடச் செம்மலோ டுயர்தரு நடையன் ;
முத்த மாமணி மாலையும் முளரியந் திருவும்
ஒத்து வாழ்வுற வுயர்ந்தொளி திகழ்மன் மார்பன். (சு)

555. வீர மாதுளம் விழைந்தினி துறைந்திட விளங்கி
ஆர மாமலை யருவியி லமைந்துறத் திரண்டு
பார மேருவின் பான்மையின் பருத்தெழுந் துயர்ந்து
தீர மோடொளி திகழ்ந்தெழில் தவழ்ந்திடு தோளன். (எ)

556. கச்சை யங்கரி கடும்பரி யடும்படை முதலாம்
விச்சை யாவையும் பயின்றறி வினன்வினை முன்
வைச்ச காலப்பின் வாங்கிடா வலியினன் என்றும்
அச்சம் என்பதை யறிகிலா அருந்திற லாளன். (அ)

557. மண்கலங்கினும் மறிகடல் கலங்கினும் மயங்கி
விண்கலங்கினும் விறல்மலை கலங்கினும் விண்ணோர்
கண்கலங்கினும் கதிநிலை கலங்கினும் கருதார்
எண்கலங்கிய அமரினில் என்றுமே கலங்கான். (கூ)

558. கண்ட கண்ணையும் மனத்தையும் கவர்ந்தகட் டழகும்
தண்ட மிழ்ப்பெரும் புலமையும் தலைமையும் தகவும்
திண்டி றற்பெரு வீரமும் செம்மையும் கொடையும்
கொண்ட நல்லரு ளுடைமையும் குலாவியே நின்றான். (கo)

559. காம தேனுவும் கற்பக மும்மெனக் கனிந்த
சேம வண்கொடை மேவிய செழுமலர்க் கையான் ;
தாம மேவிய தாரளங்கள் தமனியச் செப்பில்
வாம மோடுற வைத்தெனும் பவளநல் வாயான். (கக)

560. அன்பு மைந்துமெய் யருளுடன் கலந்தறங் கனிந்தீத
இன்ப மைந்தரோ தார் இனியமென் சொல்லினன் ; எவரும்
முன்பு வந்தபோ தேயவர் முகக்குறிப் போர்ந்து
துன்ப கன்றிட வுதவிசெய் திதம்புரி துணிவோன். (கஉ)

அ. கச்சை = டாலையின் கழுத்திடுகயிறு. விச்சை = வித்தை. போர்வலியும், நூலறிவும் பொருந்தி இருந்தான் என்பதாம்.

561. இன்ன வாறிவன் பருவமும் உருவமும் சிறந்து
மன்னன் மாதவப் பயனென மாநில மகிழத்
தென்ன னுட்டுயர் திறல்திசை தெளிந்திடத் திகழ்ந்து
பன்ன ருஞ்சிறப் புடனிவன் பண்பமைந் திருந்தான். (கஈ)

562. மூத்த நன்மகன் மூதன்மையும் நிலைமையும் உணர்ந்து
பூத்த மாநிலம் புரந்திடப் பொன்முடி புனைந்து
நீத்த மாகிய உலகிய லொருவிட நினைந்தான்
காத்த மன்னவன் கருதிமுன் குறித்தனன் கணித்தே. (கச)

563. அனைய காலையில் இருபத்தேழ் வயதெனும் பருவம்
தனைய னெய்திமே தழைத்தினி திருந்தனன் தகவாய்
மனையின் மங்கலம் புனைந்தபின் மணிமுடி புனைய
வனையும் வண்கழல் மன்னவன் மதித்துளந் துணிந்தான். (கடு)

564. அருமை மைத்துனன் திருமகள் அழகினிற் சிறந்த
திருவு மால்கொளும் உருவினள் தேசொடு திகழ்ந்து
பருவ மெய்தியிப் பார்த்திபன் றனக்கென அமைந்து
மருவு கன்னிமா மாடத்தில் வதிந்தினி திருந்தாள். (கஊ)

565. வீர சக்கெனும் பெயரினள் மேதகு மியலாள்
தீர மெய்த்தரு ணிறையிலும் பொறையிலும் சிறந்து
சார முற்றநற் கலைபல பயின்றுதண் மதிபோல்
நீர முற்றதே தா ழிகளுடன் நேர்ந்தமர்ந் திருந்தாள். (கள)

566. தருண மங்கையா யொளிதவழ்ந் தெழில்கனிந் தரிய
அருண மென்கயல் அயிலென அமர்த்தகட் டிருவை
அருண னுமென அமர்ந்தவிம் மகனுக்கு மணஞ்செய்
தருணம் ஓர்ந்தனன் கணிகள்தேர்ந் துரைத்தனர் காழ்ந்தே. ()

567. நல்ல நாளினில் நானிலம் அறிந்திட நம்பிக்
கெல்லை யில்லதோர் சிறப்பொடு மணஞ்செய இசைந்தான்
மல்ல லோங்கிய மாநகர் புனைந்தனர் வாழ்வோர்
செல்ல நன்னக ராமெனச் சிறந்தொளி திகழ. (கக)

கஅ கணிகள் = கணித நூல்வல்லவர். சோதிடர் எனக.

568. ஓலை போக்கினன் உலகினில் மன்னவர் உவந்து
சால வந்தனர் தமரெலாம் நிறைந்தனர் சதுராய்க்
கோல வாழைகள் கொழுஞ்செழுங் கமுகுகள் குயிற்றி
ஏல வேயுயர் தோரணம் எங்கணும் இசைத்தார். (உ0)

569. கணித்த நாழிகை வந்தது காமரு திருவை
அணித்த பேரொழில் அண்ணலை அரியன புனைந்து
மணத்த கோலங்கள் செய்துடன் கொணர்கென மதியோர்
பணித்த போதணி பணியினர் பரிவுடன் வினைந்தார். (உக)

570. நம்பி யைமுனம் நலமுடன் நளிர்புன லாட்டிச்
செம்பொ னுடையும் செழுமணிக் கலன்களும் சேர்த்தித்
தம்பி ராஞெடு தேவியைத் தாழ்ந்தெழச் செய்து
பம்பு சீர்மண மண்டபம் கொணர்ந்தனர் பணிந்தே. (உஉ)

571. வால மங்கையர் நங்கையை மாண்புடன் வினைந்து
கோலம் செய்துயர் கோப்பெருந் தேவியின் குறிப்பில்
சால நல்லுடை யணிமல ராதிகள் புனைந்தே
ஏல வேவழி பாடுசெய் தெழிலுடன் கொணர்ந்தார். (உங)

572. அமர மங்கையர் அருகுறச் சசிவரு திறம்போல்
தமர வண்டொலி தழைத்திடத் தாமங்கள் கமழக்
கமல மென்பதம் பெயர்த்துயர் களியன மென்னக்
குமரன் முன்னுறப் பின்னுற வந்தனள் குமரி. (உச)

573. வந்த டைந்தவவ் விருவரைக் கண்டதும் மாந்தர்
சிந்தை யன்புமீக் கூர்ந்துமுன் களித்தனர் செந்தில்
எந்தை யின்னரு ளாலிவர் என்றுமே இனிதாய்
முந்து மின்புடன் வாழ்கென வாழ்த்திமேல் மொழிந்தார்(உரு)

அறுசீர் விருத்தம்.

574. மன்னனே அழகன் என்பார் ; மங்கையே அழகி என்பார் ;
கன்னல்வில் ஒளித்து வந்த காமனே இவனு மென்பார் ;
இன்னமிர் தனைய மென்சொல் இவளிடை காணுமென்பார் ;
அன்னமென் னடைகாண் என்பார்; அம்புயத்திருவே என்பார்.

575. ஒளிதவழ் மேனியிந்த ஒண்ணகைத் திருவைக் கொள்ள
அளிதவழ் கண்ணன் என்ன அருந்தவம் செய்தான் என்பார்;
களிமயி லனைய சாயற் காமரு கன்னி முன்னம்
விளிவரு தவஞ்செய்துள்ளாள் மேவந்தனை யடைந்தாள்என்பார்.

576. மாந்தருள் மதன னன்னன் மகளிருள் இரதி யன்ன
ஏந்திழை யாளையெய்தி யின்பமீக் கூர நின்றான் ;
ஆந்தவ முடையார்க் கன்றி யடைவரி திப்பே றென்பார் ;
மேந்தருள் இவன்போல் மேன்மை மேவிறை வருள்ளா ரென்பார்.

577. குரிசிலைப் பெற்றோர் என்ன குலத்தவம் செய்தார் என்பார் ;
வரிசிலை நுதலைத் தந்த மாதுமா தவமே தென்பார் ;
பொருசிலை மதனும் அந்தப் பொன்னுல காளும் தெய்வத்
தருநிழ லமர்வோன் றானும் சரியிவன் றனக்காம் என்பார். ()

578. கொடையினில் கன்னன் என்பார் ; கோலத்தில் குமரன் என்பார் ;
நடையினில் இராமன் என்பார் ; நலத்தினில் சயந்தன் என்பார் ;
படையினில் விசயன் என்பார் ; பரிவினில் நகுலன் என்பார் ;
விடையும்வெம் மடங்கலும்மே விறல்நடைக் கெதிராம் என்பார்.(கூ0)

579. கண்ணெடு மனமும் நாணும் நிறையுமுன் கவர்ந்த இந்த
வண்ண வொண் குமரன் மார்பம் மருவிடப் பெறுது வந்த
பெண்ணமை பிறப்பால் என்ன பேறென்பார் ? பிழையே என்பார் ;
அண்ணலைப் பெறுதற் கன்னுள் அருந்தவம் பெரிதே என்பார்.

580. செப்பென எழுந்து தென்னங் குரும்பையில் திரண்டு செம்பொன்
அப்பிய தென்னத் தேமை லடர்ந்துயர்ந் தண்ணுந் தோங்கி
ஒப்பெனக் கில்லை யென்ன வுள்ளகம் செருக்கி மீறல்
தப்பெனத் தலையடக்குந் தனத்திணர் தளர்ந்து நின்றார்.(கூஉ)

581. கோமகன் கோல மார்பில் கொம்மைவெம் முலைகள் பாயப்
பூமல ரமளிமேலாப் பொருந்தியின் பார இந்த
மாமகள் முன்ன மென்ன மாதவம் செய்தாள் கொல்லோ ?
காமினி வீணை நின்று நைவதால் பயனே தென்பார் ? (கூங)

582. இவ்வகை இருந்தா செல்லாம் இருங்களிப் பெய்தி யேத்தக்
கொவ்வையங் குதலைச் செவ்வாய்க் கோதையைக் குமர னீடு
திவ்விய மாகச் செய்த செழுமணி மண்ட பத்துள்
செவ்விதிற் கொண்டு வந்து திருமணக் கொலுவிற் சேர்த்தார்.

கலிநிலத்துறை.

583. திருவும் மாலுமந்நற் சசியும்இத் திரனுமே யென்ன
உருவ மைந்தநற் கன்னியும் காளையும் ஒருங்கே
மருவி யின்புற மணவறை யிருந்தனர் மாண்பாய்
உரிய மேலவர் விதிமுறை செய்தனர் உவந்தே. (நஞ)

584. மருங்கெ லாமுயர் மன்னவர் மங்கையர் மகிழ்ந்து
பெருங்கு ழாங்கொண்டு பேணினின் முர்வமாய்க் காண
ஒருங்க மைந்தநற் சடங்குகள் உரிமையிற் செய்து
பொருங் குணக்குலக் குரிசில்கை பொன்னிணைகொடுத்தார்.

585. மங்க லந்தரு மானவன் செங்கையி லேந்தி
மங்கை யின்கழுத் தின்புடன் பூட்டினன் மகிழ்ந்து
பொங்கு நன்மலர் மாரிகள் பொழிந்தனர் புகழ்ந்தே
எங்கும் இன்னியம் இன்புடன் முழங்கின எழுந்தே. (நக)

586. அழுத வேந்தமென் மழலோன் மொழிகளை யரும்பும்
குழுத வாய்க்குல மங்கையர் குழலிசை குழையத்
தமது தாய்மொழித் தெலுங்கினில் தமிழ்மணப் பாடல்
அமையப் பாடினர் அன்பமைந் தின்பமே லோங்க. (நஅ)

587. நங்கை செங்கையை நம்பிதன் வண்கையால் பிடித்தே
அங்கி யைவலஞ் செய்தரண் மனையுளே புகுந்து
தங்கு மன்புடன் தாயடி முடிபடத் தொழுதான்
கொங்கு லாமலர்க் குழலியும் குணமுடன் பணிந்தாள். (நக)

588. அருமை நற்றிரு மகனோன் மருகியை யன்போ
டுருவ மோக்கியுள் ளுறவுவந் தியன வுதவி
இருமை யும்பெற வின்புற வாழ்த்தியவ் வரசி
பெருமை செய்தனள் பெருமகிழ் வோடிவர் பெயர்ந்தார். ()

நஅ. தமிழ் என்றது இங்கே இனிமையை. "தமிழ் தழிய சாயலவர்" (சிந்தாமணி), "வண்டு தமிழ்ப் பாட்டு இசைக்கும் தாமரையே" (ஞானாமா யணம்) என்புழித் தமிழ் உணர்ந்து நிற்கும் பொருளை அறிக.

589. வந்தி ருந்தவர் யாவர்க்கு மன்னவன் மரபாய்ச்
சந்த னம்பழ மாதிகள் தகவுடன் தந்து
சிந்தை யின்புறச் சிறந்தமே தார் விருந்தினைச் செய்தான்
மைந்தன் அன்புயர் இன்பினை மாந்தியுள் மகிழ்ந்தான். (சக)

590. மணம்பொ ருந்திய மகனும்நன் மங்கையும் இடையே
கணம்பி ரிந்திட மேரினும் ஊழியாய்க் கலங்கி
இணங்கி யன்பமைந் தின்பமே வடிவமாய் என்றும்
குணங்க லந்தபே ரின்பிடைக் குளித்தனர் குழைந்தே. (சஉ)

591. புதிய மாமலர் பொங்குபே ரமளியில் பொருந்தி
அதிச யம்முடன் ஐம்புல இன்பங்கள் துகர்ந்து
துதிசெய் தோழியர் தொழுதயல் ஊழியம் புரிய
மதியும் உரோணியு மாமென மருவியின் புற்றார். (சங)

592. எல்லி நண்பக லீதென இடைதெரி யாமல்
புல்லி இன்பங்கள் பொங்கவுண் மாந்தினர் பொருந்தி
அல்லி புல்லிய அம்புயத் திருவொடு மாலும்
வல்லி புல்லிய கற்பக மும்மென வாய்ந்தார். (சச)

593. பவள வாயிதழ் பருகியும் பணைமுலை தோய்ந்தும்
கவள யானையிற் களித்தினி தாடினன் காளை ;
அவளும் அன்னவன் ஆகமே யுறைவிட மாகத்
திவளு மின்னெனச் செழித்துளங் களித்தனள் திளைத்தே. ()

594. விம்மி மேலெழுந் தொளிசெய்பொன் சுணங்கொடு விளங்கும்
கொம்மை வெம்முலை குமரனன் மார்பிடை யுழுதே
எம்மை யும்பெரு வரியபே ரின்பெலாம் ஒருங்கே
இம்மை யேயிளைத் தினிதுதுய்த் துவந்தவ ளிருந்தாள். (சஉ)

595. மலைய ணைந்ததிண் டோளனே யென்னினும் மதியின்
கலைய ணைந்தநன் னுதலினள் கச்சணைந் தேதாங்கும்
முலைய ணைந்திட வலையணை மெழுகனே யென்ன
நிலைகு லைந்துள முருகினன் நெடுந்திற லென்னே ! (சள)

596. வீர பாண்டிய வேந்தனும் வீரசக் கென்னும்
ஆர வான்சுவை அமிர்தமென் சாயலவ் வணங்கும்
மார தேவனும் இரதியும் மருவிய தென்ன
வார மாயுயி ரொருமையின் மயங்கினர் மகிழ்ந்தே. (சஅ)

597. உழுவ லன்புடன் உள்ளமொத் துயிருற வுவந்து
தழுவி யின்பங்கள் தகவுடன் அருந்தி மெய்ம்மறந்து
பழுதில் நன்மலர் பரப்பிய பஞ்சணை யிடையே
விழிது யின்றனர் களிபெருங் களிப்புடன் விழித்தார். (சக)

598. கலவி யின்பமீக் கூர்ந்திடக் காரண மின்றிப்
புலவி கொண்டவள் பொய்யுற வுறங்கிளள் போர்மன்
விலகி யேயயல் விழிதுயின் றயர்ந்தனன் இடையே
முலைய முந்திட முயங்கினள் முழுக்கள்ளம் என்றுள். (நo)

599. முயங்கி மேல்விழுந் தழுந்திய மங்கையை முதல்வன்
மயங்கி மார்பணைத் திதழமு தருந்திவண் சுரத
வியங்கொள் லீலைகள் விளைத்தனன் விளைந்தபே ரமுதம்
புயந்த ழீஇய்வள் பொம்மலோ டுண்டுளங் களித்தாள். (நக)

600. அழுத மேவிய பொற்கல சங்கள்போ லமைந்த
குழுத வாய்ச்சிதன் கொங்கையில் கொழுநன்கை நகங்கள்
கமழ நல்கிய குறிகளைக் காலையில் கண்டு
அமைய நாணிவண் கச்சினை யணைத்தக மகிழ்ந்தாள். (நஉ)

601. சந்த னச்செழுங் கலவைகள் தழுவிய தனத்தில்
குங்கு மக்கொழுஞ் சேற்றினுல் கோலங்கள் குயிற்ற
மைந்தன் மார்பிடை மருவிய வடுக்கண்டு மகிழ்ந்து
அந்த மில்லதோர் களிப்புட னுடல்கள் புரிந்தார். (நந)

602. சண்ப கத்தனிக் காவினும் சந்தனம் சேதா
விண்பு குந்தொளிர் விரிமலர்ப் பொழிலிலும் மேவி
மண்பு குந்தமா தவப்பய னெனவந்து வளர்ந்தார்
எண்பு குந்தபே ரின்பங்கள் துகர்ந்தினி திருந்தார் (நச)

603. இன்ன வாறிவன் இன்பமா வாரியி லாழ்ந்து
தன்னை யும்மறந் திருந்தனன் அரசிவன் றனக்குப்
பொன்னின் மாமுடி புனைந்திட நினைந்துநன் னாளை
உன்னி ஆய்ந்தனன் உறவொடும் சூழ்ந்தனன் உவந்தே. (நந)

604. புனித மங்கல நீரெலாம் புண்ணிய நதிநின்
றினிய வாக்கொணர்ந் திருக்குரல் விதிமுறை யேத்திக்
கனியு மன்புடன் காவலர் ஆவலாய்க் கதுவத்
தனிய மர்ந்தபி டேகங்கள் தகவுடன் புரிந்து ; (நக)

பட்டம் சூடியது.

605. ஆண்டு கொல்லம்தொள் ளாயிரத் தறுபத்தைந் தமைந்த
பூண்ட தையினில் பூருவ பக்கத்தில் பொன்னாள்
நீண்ட நற்சுப யோகத்தில் நீண்முடி புனைந்தான்
காண்ட கும்பெருங் காட்சியா யனைவரும் களித்தார். (நள)

606. அரசு வாவினை யலங்கரித் தழகுற அதன்மேல்
விரசு கோலங்க ளுடனுலா விதிமுறை வந்து
பரசி யாவரும் பணிந்துநின் றேத்திடப் பண்போ
டுரைசெய் ஆதனத் துவந்தினி தமர்ந்தன னுரவோன். (நஅ)

607. உரிய நீண்முடி புனைந்தபின் உலகியல் நிலையும்
அரிய நீதியின் முறைகளும் குமரனன் முகத்
தெரிய வேண்டியச் செம்மலை யொருதினம் தனியே
பிரிய மாயுடன் வைத்தினி துரைத்தனன் பெரியோன். (நக)

அரச நீதிகள் புகன்றது.

608. ஆதி நாயகன் அருளினுல் அமைந்தனிவ் அரசைச்
சாதி நாயக னுய்நின்று சதுருடன் ஆண்டு
ஞாதி யாகிய நங்குடி நலமுறத் தழுவி
நீதி நாயக னுய்நின்று நிலவுக நெறியே. (கo)

609. என்று மேஅற நெறியினின் றுயிர்களுக் கின்பம்
நன்று செய்பவ னெவனவன் நரர்பதி யாகி
வென்றி ஆண்மையும் மேதகு கீர்த்தியும் மேவிச்
சென்று தெய்வவான் பதியெனத் திகழுவன் சிறந்தே. (கக)

610. தரும நெஞ்சினர் தைரிய மாய்நின்று தனித்துக்
கரும வீரராய்க் கதித்துயர் கதிநிலை காண்பார் ;
அருமை யாமவர் யாண்டுமே யாதினும் அஞ்சார்
உரிய நன்மைசேர் உள்ளம்போ லுறுதியொன் றுளதோ. (கூஉ)

611. ஒத்த மக்களுள் ஒருவனை உலகிடை யுயர்த்தி
வைத்த போதவன் கடமையும் வலிகளும் வளரும்
நித்தலும் அவன் நெறிமுறை நின்றுதன் கடனைச்
சித்த சுத்தியோ டாற்றிடா தொழிவனேல் சிதையும். (கூங)

612. அரிய நூல்பல கற்றவ ணுயினும் அறிவின்
உரிமை யாகிய ஒழுக்கமொன் றிலையெனின் உவர்மண்
பெரிய பாரமாப் பெற்றவெங் கழுதைகுங் குமத்தைப்
பரியத் தாங்கிய பாடெனப் பாடழிந் திழிவான். (கூச)

613. செல்வ மேவிய பொழுதுடன் திமிர்களும் செருக்கும்
கல்வி யாதிய நலங்களைக் கருதிடாக் களிப்பும்
ஒல்கி டாதபே ராசையும் உலோபமும் மூரணும்
மல்கி யேறியே மதமிகச் செய்துமா லுறுத்தும். (கூடு)

614. கல்வி யாளரைக் கனஞ்செய்யா தொழியினே கல்விச்
செல்வம் போய்த்திரு விழந்தவ னுகுவன் அரசன்
நல்ல வித்தையுள் மக்களுந் தோன்றிடார் நவையே
பல்கு வித்துவன் பழியினை வளர்த்தவ னுவான். (கூஎ)

615. மன்னன் யாதினைப் போற்றினன் மாநில மெல்லாம்
அன்ன தைமிக ஆர்வமாய்ப் புகழ்ந்திடும் அதனால்
முன்னம் கற்றவர்ப் போற்றுக ; இல்லையேல் முதல்நீ
மன்னு கல்வியை யழித்தவ னுய்ப்பழி யுறுவாய். (கூஅ)

616. எருவைச் சேர்ப்பது நிலத்தினுக் கிடுவதற் கன்றிப்
பெருமை யாய்க்குவித் துயர்வுறப் பேணுதற் கன்றே
அரிய நன்பொருள் படைத்தவன் அறமின்ப மடையா
தொருமை யாய்த்தொகுத் திடின்பழி யோடஃ தொழியும். ()

கூஅ. எருவை நிலத்தில் பரப்பின் மிகுவிளைவுண்டாம்; குவித்து வைத்திருப்பின் குன்றி யழியும். அதுபோல் பொருளை உயிர்களிடை விரிப்பின், அறம் புகழ் விளையும்; பொத்தி வைத்திருப்பின் பொன்றி ஒழியும் என்க.

617. உள்ளத் தேநல மிலாதவன் உலகிற்கோர் கொடிய
கொள்ளித் தேளெனக் கொடுமையிற் குலவியே நிற்பன்;
எள்ளற் பாடெலாம் எய்தியே யிழிபிறப் படைந்து
அள்ளற் பள்ளமாம் அருநர கடைகுவன் அடைவே. (கூகூ)

618. வாக்கும் காயமும் மனமுநல் வழியினை மருவிக்
காக்கும் சீலம்கைக் கொண்டவர் கதியெலாங் கடந்து
நீக்க மற்றபே ரின்புயர் நிலையினை யடைவார்
நோக்க மாறினர் நோயெலா மடைந்திவ ணுழல்வார். (எ0)

619. உனது *தாயிங்கு வந்ததுண் டோவென ஒருவன்
மனவி டும்புடன் வினவவும் மற்றவ னுடனே
எனது தந்தைதான் வந்துமீண் டானென இசைத்தான்
துனிசெய் புன்மொழி துனியினை வளர்த்திடு மன்றே. (எக)

620. மனத்தி னுடிழி செருக்கினை யுடையவன் மாவின்
இனத்தி னும்கடை யாயிழிந் தொழிகுவன்; எவரும்
சினத்தி னுடவன் செயலினை யிகழுவர்; தீமை
அனைத்தை யும்வினைத் தழித்திடும் அதனினீ யடையேல். (எஉ)

621. உலக டங்கலும் ஒருவன்கை யுடையனே யெனினும்
அலகி லண்டங்கள் பலவுள வென்பதும் அவற்றின்
நிலைக ளும்சிறி துணர்வனேல் தனதுபுன் னிலைமை
இலகு வாகவே தெளிகுவன் இழிசெருக் கெய்தான். (எங)

622. நீரு லாவிய கடலிடை நிலவுறு நிலத்தில்
சாரு நாவலந் தீவெலாம் தான்கொளப் பெறினும்
ஆர வேயதன் அளவினை யாய்ந்துநீ நோக்கில்
மேரு வோடுறும் அணுவென மிகமெலிந் திழியும். (எச)

623. அண்ட கோடிகள் அளவில அவற்றுள்ஓர் அணுவாய்க்
கண்ட இப்டெருங் கண்டமே காணியாய்க் கையில்
கொண்ட போதினும் கொண்டுதான் போவதொன்றிலையே
பிண்ட மாயித னியல்பறிந் தொழுகுவர் பெரியோர். (எரு)

---

*அழகிய வாலிபன் ஒருவனை ஒரு நாள் ஓர் அரசகுமாரன் கண்டான். உருவம் பருவங்களில் தன்போன்றிருந்த அவனை நோக்கி இவன் குறும்பாக, "உன் தாய் இந்தப்பக்கம் வந்து போனது உண்டோ!" என்றான்; அவன், "இல்லை; என் அப்பா இப்படிவந்து போனது உண்டு என்றான். பழிமொழிபகர்வோன் பழிக்கப்படுவான் என்பதை இந்நுட்ப மொழிகளில் உய்த்துணர்ந்து கொள்க.

624. வந்து வந்திந்த மண்ணினே யாண்டுமண் ணுகி
முந்து போய்முடிந் தொழிந்தவர் தமையெலா முறையே
சிந்தை யுள்ளுறத் தினையள வெண்ணினும் செருக்கை
எந்த மன்னனும் எங்குமே கொண்டிடான் என்றும். (எசு)

625. செருக்கெ னப்படும் இழிகுணம் சிறுமக னிடத்தே
பெருக்க முற்றிடும் அஃதுறப் பெற்றவை யெல்லாம்
சுருக்க முற்றிடும் உலகெலாம் வெறுத்திடும் துயர்கொண்
டிருக்க வோரிட மின்றியே யிழிகுவ னினைந்தே. (எஎ)

526. யாவு மேமுழு துடையவன் ஒருவனே அவனகை
மேவி யுள்ளதை யுயிர்களின் நல்வினைக் கீடாத்
தூவு கின்றனன் அப்பெருந் தூவலில் சிலபேர்
கோவெ னப்பெயர் கொண்டிறை குலாவுகின் றாரே. (எஅ)

627. வானும் மண்ணுமிம் மன்னுயிர்த் தொகைகளும் வரம்பில்
ஞான நாயக னுடைமைகள் உடையவ னயந்து
தான மாகவே தகவறிந் தருளுவன் அதனை
ஊனஞ் செய்யிலே னுருத்தவன் ஒழிக்குவ னுடனே. (எகூ)

628. நீரில் தோன்றிய மொக்குளுள் பெரிதென நிமிர்ந்து
பாரில் தோன்றிய நரர்களுள் அரசர்கள் பதிந்தார்;
காரில் தோன்றிய மின்னெனக் கடிதினில் மறைந்து
வாரிப் போமிதை வரவென மதிப்பர்கொல் மதியோர். (அ0)

629. வந்த காரியம் எதற்குநாம் வருமுனம் எங்கே
சொந்த மாயமர்ந் திருந்தனம் தொன்னிலை என்னே?
இந்த வாழ்விடை யிரண்டுநா ளிருந்தபின் இனிமேல்
அந்த மாயடைந் தமர்நில யாதென வறியோம். (அக)

630. சண்ட வெங்கடுஞ் சுழலினுட் சார்ந்தமென் துரும்பு
விண்டி டாதயல் அதன்வழி விரைந்தொழி வின்றி
மண்டி யோடிவெங் கறங்கென மறிந்துழன் றலைந்து
தண்டி டாதுறல் போலுயிர் தினமறந் துழலும். (அஉ)

631. தனைம றந்துதன் றலைமையை மறந்துமுன் னின்ற
நினைவு யாவையு நீளவு மறந்துவெம் மாய
இனைய வாழ்வினை யிடையினி லெதிர்ந்துளம் இதினும்
புனையு நல்வினை புரிகில மாயினென் புகுமோ? (அங)

632. கல்வி யின்பயன் ஒழுக்கமும் அறிவுமே ; கண்ட
செல்வ நன்பயன் ஈதலும் துய்த்தலு மேயாம் ;
இல்லை யேலந்த இருபெருஞ் செல்வமு மிழிந்து
புல்லி தாகிய பழிமிகப் போக்கொடு போகும். (அச)

633. அடுத்த வர்க்கெலாம் அருள்புரிந் தியாவர்க்கும் அன்பாய்க்
கொடுத்து வாழ்ந்தவன் ஒருவனே கொடுத்துவைத் தவனுய்
எடுத்த இப்பிறப் பெய்திய பயனைநன் கெய்தி
விடுத்த தன்பெரும் பதத்தினை விரைந்தடை குவனே. (அஙி)

634. மன்னு யிர்க்கிதம் செய்பவன் மாநிலத் தென்றும்
தன்னு யிர்க்குயர் தனிப்பெரும் பதத்தினைத் தகவாய்
முன்ன மாற்றிடு மூதறி வாளனே யாவான்
அன்ன வன்னுயர் நிலையினை யாரள விடுவார் ? (அசு)

635. புனித மாகிய நெஞ்சினன் புவியினில் அமிர்தாய்
இனிய ஞகியே யிலங்குவன் எங்குமே அவன்முன்
மனித ருயினும் தேவரும் வணங்குதற் குரியான்
தனியு யர்ந்தபே ரின்பினைச் சார்குவன் தழைத்தே. (அஎ)

636. காம மாதிய கடுந்துயர் மூலங்கள் மூன்றும்
நாம மூடறக் களைந்திடின் நலமெலா மடைந்து
தாம மாமெழில் தழைத்தென்றுந் தணப்பிலா துயர்ந்த
ஏம வீடெய்தி யின்பமீக் கூர்ந்தினி திருப்பார். (அஅ)

அச. ஒழுக்கம் இல்லாத கல்விமான் ஈதல் இல்லாத செல்வன்போல் இழிந்து படுவன் என்பதாம். ஈதல், மன்னுயிர்க்கு இதமாய்த் தன்னுயிர் ஓம்பித் தழைத்து நிற்றலால் அது முன்னுற நின்றது. துய்த்தல் உடலிட்டும் ஓம்பித் தன்னளவில் ஒழியும்; ஈதல் உயிர்க்கு உறுதியாய் என்றும் ஒளிசெய்து ஒளிரும் என்க. பேரருளுடன் பிறர்க்கு ஈதலும், ஐம்புல இன்பங்கள் ஆராதுகர்தலுமே ஒருவன் செல்வம் பெற்றதன் பயனும்; இவ்விரண்டையும் அவன் யாதும் இலனாய் ஈன முறுவன் என்றவாறு. ஒழுக்கம் ஈதலுக்கும், அறிவு துய்த்தலுக்கும் ஒப்பாம். வைப்புமுறையால் அவற்றின் உயர் வுறுதி நுட்பங்களை உய்த்துணர்ந்து கொள்க. போக்கு=குற்றம்.

637. அரிய பேறுகள் அனைத்தையும் எளிதினி லடைந்து
பெரிய மேன்மையைப் பெறுவதோர் வழியுள தறிதான்
உரிய தன்மனை யன்றிமற் றுள்ளவ ரெல்லாம்
பிரிய மேவிய தாய்தங்கை யென்றுமே ணுதலே. (அக)

538. பெற்ற தாயெனப் பிறன்மனை யெண்ணுவான், பிறர்கை
உற்ற ஒண்பொருள் ஒடென வுணருவான், உலகில்
மற்றை யாவையும் தன்னுயி ராமென மதிப்போன்
கற்றவன் அவன் கருதரும் பேரின்பம் கண்டான். (கo)

639. தருமம் தாங்கிய மரபுகள் தழைத்தினி தோங்கி
அருமங் தாகிய அமிர்தென அகிலமீ துலாவும்;
கருமங் தீயதேல் கடுவெனக் கடையதாய்க் கழிந்தே
இருமை யுந்துய ரடைந்தழிந் தொழிந்திடு மிழிந்தே. (கக)

640. அந்த மில்லதோர் ஆண்டவ னொருவனே நமக்குத்
தந்தை இங்குள யாவரும் சகோதர ரென்றே
சிந்தை செய்துய ரன்புட னிதம்செய்க சேர்ந்து
வந்த இட்டெரும் பிறவியின் பயனது வாமே. (கஉ)

641. தன்னைப் போலவே மன்னுயிர் யாவையும் தகவாய்
உன்னி நின்றுநல் லருளுடன் ஒழுகுவான் உயர்ந்து
மன்னி யோங்கிய மாபெரும் பதமெலாங் கடந்து
வன்னி யோங்கிய நுதல்விழி வானுல கடைவான். (கங)

அறுசீர் விருத்தம்.

642. முறையொடு குறைகள் சொல்ல முனைந்துநேர் குடிகள் வந்தால்
இறையவர் குறிப்பை வாயா லியம்புமுன் எண்ணி யோர்ந்து
நிறைவழு வாமல் நீதி நெறிகளை விரைந்து செய்து
துறைதொறும் இன்பம் தோயச் சூழ்ந்தருள் புரிய வேண்டும்.

643. தந்தைதா யிடத்தி லோடித் தங்கருத் துரைக்க வந்த
மைந்தரை யன்னர் போற்றும் மரபெனக் குடிகள் தம்மை
முந்தெழும் அன்பால் நோக்கி முகமலர்ந் தருள் புரிந்து
சந்ததம் பேணு மன்னர் சந்ததி தழைக்கு மன்றே. (கஙி)

கஙி. குடிகளை அரசன் அன்புடன் பேணிவரின், அவன் குடி என்றும் இன்புடன் தழைத்து வரும் என்பதாம். சந்ததி = வமிசம்.

644. நலமெலாம் விளையநாடி நானிலம் தழைய நிற்கும்
வலமுயர் செங்கோல் மன்னன் வாம்பறு திருவுணுகி
அலகில்பல் போகந் துய்த்தவ் வரும்பெற லமலவீடும்
இலகினில் எய்தி யென்றும் ஈறிலா இன்பம் ஆர்வான். (கூசு)

645. மழையினுல் பயிர்கள் வாழும் மன்னனுல் உயிர்கள் வாழும்
இழையினுல் உடைகள் போல இறைவனுல் உலக மெல்லாம்
பிழையற வாழுமேமனும் பேணிநின் றாசன் காவா
தொழிலுறின் இந்த வையம் ஒருவழி ஓடா தன்றே. (கூஎ)

646. எண்ணமும் செயலும் சொல்லும் இனியனுய் எவரு மின்பம்
நண்ணஇவ் வுலகம் காக்கும் நரபதி அளவி லாத
புண்ணிய முடையனுகிப் புகழுடன் வளர்ந்து நின்று
விண்ணவர் விழைந்து வாழ்த்த மெய்யின்ப மெய்தி வாழ்வான்.

647. வாக்கொடு மனமும் மெய்யும் வசமுற அடக்கி நல்ல
நோக்கொடு படுத்தி யாரும் நோவுரு வாறு நாக்கித்
தேக்கருள் புரிந்து நன்மை செய்பவர் சிறந்த மும்மை
ஆக்கமும் அடைந்து வீடாம் அருமையின் படைவ ரன்றே.()

648. இனியன பேசி யார்க்கும் இதஞ்செய இசைந்த நாவைத்
துனியுறு வன்சொல் லாடித் துகளுறச் செய்தல் நல்ல
கனிதரு தருவை வாளால் கடிந்தருங் கிளைக ளொந்து
பனிபடு தீயில் பெய்யும் பான்மைபோ லாகு மன்றே. (ஈ)

649. பொய்புறங் கூறல் புன்சொற் புகலுதல் வன்சொ லாடல்
ஐயகோ நரகி லாழ்த்தும் அருந்துய ராகு மன்றே
வெய்யவத் தீமை யாது மேவிடா தின்சொல் லோடு
மெய்யுறை நாவே யின்பம் விளைத்தருள் விமல நாவே. (ஈக)

நாவைக்காவாமல் நகுடன் இழிந்தது.

650. அந்தரத் தமர ரெல்லாம் அடிதொழ அமைந்து நின்ற
இந்திர பதவி தன்னை எய்தியும் நகுடன் அந்தோ
மூந்தொரு பயனில் சொல்லை மொழிந்ததால் முழுதும்நீங்கி
வெந்துய ருழந்தான் வீண்வாய் வெய்யநோய் விளைக்குமன்றே.

கூஎ. ஒரு நாடு எல்லாச் செல்வங்களையும் எய்தி இருந்தாலும் உரிமையான அரசன் ஒருவன் இல்லையாயின் அது வேலியில்லாத பயிர் போலவும், மாலுமி இல்லாத கலம் போலவும் மறுகி நிலைகுலைந்து போம் என்பதாம்.

651. ஆக்கமே பொறுத்தி ருந்தான் ஆறவும் பொருமல் அள்ளி
நாக்கெரிந் தழிந்தான் போல நல்வினைப் பயனுல் நேர்ந்த
பாக்கியம் அனைத்தும் சற்றே பாணித்துப் பாரா தொற்றை
வாக்கினுல் வறிதே போக்கி வன்றுயர்க் கடலில் வீழ்ந்தான்.

652. ஆக்கமும் கேடும் சொல்லால் ஆம்என *அறிஞர் சொன்ன
நோக்கமும் கருத்தும் ஊன்றி நோக்கினின் வாயை என்றும்
போக்குரை ஆடா வண்ணம் போற்றுக பொருள்பொ திந்த
வாக்கினி துடையா ரன்றே வையமும் வாழ்த்த நின்றார். (ரச)

653. வல்லியல் விலங்கி னங்கள் வாய்பேசா வகையா லன்றே
புல்லிய இனங்க ளாகிப் புன்கணுற் றுழலு கின்ற :
நல்லியல் மனிதன் பேசும் நயத்தினுல் உயர்ந்தான் அந்தச்
சொல்லுயர் வடையின் அன்னன் தோற்றமும் உயரு மன்றே.

654. பழிப்பன பகரேல்! யாண்டும் பயனுள இனிய வாக
ஒழிப்பிலா துரைக்க ; உள்ளம் உரையெனும் உரைகல் லாலே
கொழித்துணர் உலகம் இன்பம் கூரவோர்ந் தினிய செய்து
விழுப்பயன் விளைத்து நின்றார் விழுப்பமுற் றுயர்வ ரன்றே. ()

655. பொருள்பொதி விலாத புன்சொற் புகலுவோர் புன்மையான
மருள்பொதி மனத்த ராகி மாநிலம் இகழ நிற்பர்
அருள்பொதி அறிஞர் என்றும் அரும்பயன் அமைந்தசொல்லே
தெருள்பெற மொழிந்து தெய்வத் தோதொடு சிறந்து நிற்பார்.

656. உள்ளுறும் உண்மை தன்னை உரைகளும் துரைத்த லாலே
ஒள்ளிய மொழியால் உள்ள வளவெலாம் உணர்ந்து கொள்க
எள்ளுடன் சொல்லர் என்றும் இழிஞர்என் றிகழ்ந்து தீர்க
தெள்ளியோர் தம்மைத்தேர்ந்து தெளிந்துகைக்கொண்டுவாழ்க.

657. பூவினில் மணமும் தேனும் பொருந்திய வாறு போல
நாவினில் மெய்யும் தூய நயனுயர் இனிய சொல்லும்
மேவிய பொழுதே யாரும் விழைந்துமுன் தொழுது போற்றத்
தேவிய துடைய ராகிச் சிறந்துவீற் றிருப்ப ரம்மா. (ரக)

---

* திருக்குறள் 642 பார்க்க. வெற்றுரை பகராதே என்றவாறு.

ரசு. வாய் பேசாமையால் பிருகவர்க்கம் இழிந்துள்ளது. பேசுந் திறத்தால் மக்கள் வர்க்கம் உயர்ந்திருக்கிறது. அப்பேச்சுப் புனித முடையதாயின் அதனையுடைய மனிதனும் புனிதனுய் உயர்வான் என்பதாம்.

கலிவிருத்தம்.

658. நீதியும் வீரமும் கொடையும் மன்னர்க்குச்
சாதியின் தருமமாய்ச் சார்ந்து நின்றன
ஓதிய மூன்றினில் ஒன்று குன்றினும்
போதிய அரசியல் புகழ்பெ றுதலோ. (ஈ)

659. வீரமே பகைவரை யடக்கும் ; மெய்க்கொடை
வாரமே புகழினை வளர்க்கும் ; நீதியின்
சாரமே தரணியைத் தாங்கும் ; இத்தமுச்
சீரமை யரசனே தேவ னுவனுல். (ஈக)

660. வீரமில் மன்னனும், விளைவில் பூமியும்,
நீரமில் குளமுகன் னிறையில் பெண்மையும்,
தாரமில் வாழ்க்கையும், தகவில் நெஞ்சமும்,
நேரென லாயிழி நிலாயி லாமுமே. (ஈக)

661. செயிருறு கனைகளைச் செகுத்து நீக்கிநற்
பயிர்களைக் காத்தல்போல் படுவெம் பாதக
வயிரனைச் சுட்டற மடித்து மாண்புறும்
உயிர்களைக் காப்பதே உலகம் காப்பதே. (ஈக)

662. நீதியை யிழந்தவன் நிதியி ழந்துதன்
ஆதியின் நலமிழந் தரசி ழந்துமுன்
ஓதிய வுயர்வெலாம் ஒருங்கி ழந்துபின்
ஏதில னிகழ்ந்திட இழிந்து போவனுல். (ஈக)

663. ஆதலால் அரசினுக் குறுதி யாகிய
நீதிநன் னெறியினில் நிலைத்து நித்தலும்
பூதலம் புரந்திடும் புனிதன் பொங்கிய
சாதலும் பிறத்தலு மின்றித் தங்குவான். (ஈக)

ஈக உ. நிறை=கற்பு. தகவு=கடுவுநிலைமை. தாரம்=மனைவி. இல்லாள் இல்லாத மனைவாழ்க்கை இனிதா யிராது ஆதலால் அஃது ஈண்டு எண்ண நின்றது. நெஞ்சுக்கு நேர்மையும், வீட்டுக்கு மனைவியும், பெண்ணுக்குக் கற்பும், குளத்துக்கு நீரும், நிலத்துக்கு விளைவும் போல் மன்னனுக்கு வீரம் மாண்பாம்என்க. வீரம் இல்லாத அரசனைத் தாரம் இல்லாத மனைமுதலிய வற்றோடு நேரவைத்தது அதன் சிர்மை தெரிய. நேர்=ஒப்பு.

664. செல்வமும் கல்வியும் சிறந்த செம்பொருள்
ஒல்கிய வுடலுங்கல் லுயிரும் போன்றுள ;
சொல்லிய இரண்டினுள் ஒன்று சோரினே
புல்லிய தாய்ப்பொலி விழந்து போகுமே. (ஈகசு)

665. எழில்மிகு கல்வியை எய்தி டாதவன்
கழிபெரும் செல்வம்கை கதுவி யோங்கினும்
விழுமிய வுயிரிலா வெற்று டம்பினைத்
தழுவிய தாமெனத் தாழ்ந்து போவனே. (ஈகள)

666. தந்தையிட் டியபொருள் தனையன் கையகம்
வந்துறும் கல்வியவ் வாறு வாய்க்குமோ ?
மூந்துற நின்றுதான் முயன்ற போதன்றி
எந்தவாற் றினுமஃ தெய்தி டாதரோ. (ஈகஅ)

667. ஆதலால் கல்வியை ஆர்வத் தோடுமுன்
ஓதியுள் ளுணர்ந்தவர் உயர்வர் ; ஓதிலார்
பேதைய ராய்ப்பெரும் பழியுள் மூழ்கிவெங்
தீதிடை யிழிந்துபின் தெய்ந்து போவரே. (ஈகக)

668. நாச்சுவை யொன்றையே நாடு மக்கள்நற்
பாச்சுவைப் பருணிதர் பாடு காண்கிலார் ;
பேய்ச்சுரைக் காயெதிர் பெருஞ்சு வைக்கனி
மாச்சுவை யெனவவர் வாழ்க்கை மண்டுமே. (ஈஉ0)

669. பால்கு டிப்பர் பழமுதல் நுங்குவர்
மால்பி டித்த செயலிடை மண்டுவர்
நூல்பி டித்தலை நோக்கிலர் நோக்கிலார்
கோல்பி டித்தல் கொடுமை கொடுமையே. (ஈஉக)

ககஅ. கல்வி பிதிரார்ச்சிதமாய்க் கிடையாது; சுயார்ச்சிதமாகவே அடையத் தக்கது ; ஆதலால் அதனை இளமைபிலேயே முயன்று கற்றுக்கொள்ள வேண்டும் என்பதாம். "Learning by study must be won, It was never entailed from son to son." என்பதும் உண்டு எண்ணத்தக்கது.

கஉ0. கவிச்சுவை யுணராது அவிச்சுவை ஒன்றையே நாடி அலையும் மாக்கள் புவிச்சுமைகளாய்ப் புன்மையுற்று நிற்பர் என்றவாறு. உள்ளத்தே கல்வியுடையவர் வாழ்க்கை சுவைகனிந்து இன்பம் பயந்து நிற்கும். அஃதில்லாத செல்வர் வாழ்க்கை சுவை கெட்டுச் சீர்குலைந்திருக்கும் என்பதாம். பேய்ச்சுரைக்காயைக் குறித்தது வெளியே பெரிதாய்த் தோன்றினும் உள்ளே வறிதாயிருக்கும் அதன் வெறு நிலை கருதி. உவமையைப் பொருளோடு பொருத்தி நயத்தை யுணர்ந்துகொள்க. பருணிதர் = மதிமான்கள்,

670. கவிச்சுவை யறிகிலாக் கண்ணில் மாந்தரைப்
புவிச்சுவை யாமெனப் புணர்ந்து கிட்டுவர்
அவிச்சுவை யமரரும் அமிர்த வாரியாம்
கவிச்சுவை யாளரைக் காணில் நாணுவார். (ாஉஉ)

671. நிலநல முடையவர் நீதி யாறுசெல்
புலநல முடையரைப் போற்ற வேண்டுமால்
பலகலை யுணர்வினர் பண்பு பண்ணவர்
உலகம தின்பினும் உயர்ந்த தாகுமே. (ாஉங)

672. கல்வி யாளரைக் காதலிற் போற்றிய
செல்வ சேடுகழ் சேர்ந்து சிறந்தனர்;
புல்ல லார்பெயர் பொன்றி யொழிந்தனர்
மல்லல் வாழ்வும் மறைந்தது மண்ணுளே. (ாஉச)

673. வரிசை செய்தவர்ப் போற்றிய மாந்தரை
உரைசெ யுங்கவி மானத்தி னுய்த்துமே
திரைசெய் நீருல கெங்கணும் தேசுடன்
பரசி டும்படி பண்ணுவர் பண்புடன். (ாஉஞ)

674. உயிரை யொன்றி உடலொளி செய்தல்போல்
செயிரில் கல்வியர்ச் சேர்ந்தநற் செல்வரே
உயர்வ மைந்தொளி செய்வர் ஒழிந்தவர்
பெயர ழிந்து பெயர்ந்தொழி வாரரோ. (ாஉசு)

675. சடையன் கம்பனைச் சார்ந்தமை யாலன்றே
கொடையி னுயர் கோனென எங்குமே
தடையி லாப்புகழ் சார்ந்து சதுருடன்
நடையி னின்றுளன் நாளில மெங்குமே. (ாஉள)

676. மன்னுயிர் இனியதே யெனினும் மானமவ்
இன்னுயி ரினுமிக இனிய தாதலால்
தன்னுயிர் நீங்கினும் தனது மானத்தை
மன்னுயர் மரபினன் மருவி நிற்பனே. (ாஉஅ)

கஉங: பண்ணவர்—தேவர். புலவர்களுடைய அறிவுநலம் சுவர்க்க இன்பத்தினும் சிறந்தது. ஆதலால் அந் நலமுடையாரை நிலமுடைய அரசர் பலவகையிலும் இனிது போற்றிப் பாதுகாத்து வரவேண்டும் என்பதாம்.

677. அருளினை யார்கணும் புரிக ; நண்பினைத்
தெருளுடை யொருவன்பால் தேர்க ; நீங்கினை
இருளுடை யெவர்க்குமே எண்ணல் ; இம்முறை
உருளுமூ வுலகினும் உறுதி யாகுமே. (ாஉக)

678. ஈதலும் துய்த்தலும் இலாத வன்பொருள்
போதலை நாடியே புழுங்கி நிற்குமால்
வேதனை யுழந்துவெந் நோயில் வீழ்ந்தவன்
சாதலை விழைந்துளந் தளித்தல் போலுமே. (ாஙக)

679. ஆக்கிய பொருளைநல் லறத்தில் ஆக்கினன்
பாக்கிய வானதைப் பதுக்கி வைத்தவன்
தேக்கிய கழிவுநீர்ச் சிறுகி டங்கென
மேக்குயர் பழியொடு வெம்பி வீழுமே. (ாஙக)

680. உண்ணுங்கால் இலைக்குறும் உரிமை யெபொருள்
எண்ணுங்கால் அதற்குறும் ஏற்றம் அன்னது
நண்ணுங்கால் நல்லன நாடிச் செயின்றேல்
மண்ணெடு மண்ணதாய் மடிந்து போகுமே. (ாஙஉ)

681. ஈன லோடி யிறந்துமண் ணெனபின்
ஊன மாயவன் வைத்த வுடைமைகள்
மேன கும்பின்பு மேதினி யார்க்கவை
தான மாகத் தனிவந்து சாருமே. (ாஙங)

682. கழிந்தவெங் குட்டத்துட் கலந்து நிற்குநீர்
பொழிந்தபுண் ணுற்றமே புறத்து வீசல்போல்
இழிந்துறு மூலோபர்பா விருக்கும் வெம்பொருள்
வழிந்தபுன் பழியையே வளர்த்து மங்குமால். (ாஙச)

683. ஊற்றுறு நீரென வுதவி யாளன்கை
தோற்றுறு பொருள்மிகச் சுரந்து தோன்றுமே
ஆற்றுறும் அறம்புகழ் யாவும் நல்கியே
ஈற்றிலோர் இன்பமா யியைந்து நிற்குமே. (ாஙஞ)

கஙக. பொருளால் புண்ணியத்தைச் செய்துகொண்டவன் பின்பு எண்ணிய திருவெல்லாம் எளிதின் எய்தி விண்ணவரும் புகழ விளங்கி நிற்பன் ஆதலால் " அறம் ஆக்கினன், பாக்கியவான் " என நின்றான்.

684. ஈதலை யுடையவன் எவர்க்கு மோலவன்
பூதலம் மீதலம் எங்கும் அன்னவன்
மேதகு புகழொளி மேவி நிற்குமால்
ஆதலால் கொடையினை அடைய யாண்டுநீ. (ாஙசு)

685. ஈட்டிய பொருளினை யீந்த வனிங்கு
நீட்டிய புகழுனைப் நின்று நித்தலும்
பூட்டிய அமரர்கள் போற்றி யேத்திட
வீட்டிய லின்பினை மேவி வாழ்வனே. (ாஙள)

686. மனநலம் மன்னுயிர்க் காக்கம் அஃதுளான்
இனநலங் களுமெளி தெய்தி யோங்குவான்
அனநலம் இலாதவன் அகில லோகமும்
தனதெனக் கொள்ளினும் தாழ்ந்து வீழ்வனே. (ாஙஅ)

687. எள்ளுறு தீவினை எள்ள தாயினும்
தள்ளரு மலையெனத் துன்பம் சார்ந்திடும்
உள்ளகம் நல்லவன் உடைய துன்பங்கள்
வெள்ளமாய் வரினுமே விரைந்து மாயுமே. (ாஙக)

688. உலகெலாம் எய்தினும் உள்ளம் தீயதேல்
நலமவன் கண்டிடான் நாசம் எய்துவான்
இலகிய விழியொளி யிழந்த வன்அயல்
பலபட இருந்துமென் பயன வற்கதோ? (ாசo)

689. மணத்திலுல் மலர்நலம் மருவல் போலுயர்
குணத்திலுல் குலநலம் கூடு மேயன்றிப்
பணத்திலுல் பலத்திலுல் பகட்டி லுல்லந்த
வணத்திலு லும்மது வாய்த்தி டாததோ. (ாசக)

690. பணிவுடன் இன்சொலும் படிந்து நின்றவன்
மணமுடை மலரென மாட்சி யுற்றுயர்
அணியென அவனியில் அவன்வி ளங்குவான்
குணமவை குலநலம் கொழித்து நிற்குமே. (ாசஉ)

கஉo. ஒருவன் மனம் தீயதாலுல் அவன் எவ்வளவு பெருந்திருவையுடையனுயினும் சிறந்து விளங்கான்; இழிந்தே போவான் என்பதாம்.

அமைச்சன் இயல்பு.

691. நெஞ்சகம் நல்லனுய் நீதி யுள்ளனுய்
வெஞ்சினம் இல்லனுய் வினையில் வல்லனுய்த்
தஞ்சென வடைந்தவர் தம்மைக் காத்துநின்
றஞ்சலென் றருள்பவன் அமைச்ச னுவனே. (ாசங)

692. அடக்கமில் அமைச்சனும், அன்பில் சுற்றமும்,
மிடுக்குள மக்களும், மேவில் மன்னவன்
கெடக்குறி யாகமுன் கினைத்த வென்னவே
தொடக்கமுற் றுண்மையைத் துணிந்து கொள்கவே. (ாசச)

693. தீயவெங் கயவர்தம் சேர்க்கை, செய்கடன்
ஆயவை முன்னினி தாகும்; பின்னரோ
நாயுறு புணர்ச்சிபோல் நவைமி குந்துவெந்
நோய்மிகு மாதலால் நோக்க லென்றனன். (ாசஞ)

694. தன்னுயி ராமெனச் சார்ந்து நின்றுள
மன்னுயிர் யாவையு மெண்ணி மாண்புடன்
இன்னரு ளோடிதம் செய்து நின்றவன்
பின்னுயர் பேரின்பம் பெற்று வாழ்வனே. (ாசசு)

695. ஐம்பொறி வென்றுரல் லருள மைத்துடன்
பம்பிய வுயிர்களைப் பரிந்து பேணுவான்
இம்பரில் மனிதனு யிருந்த போதிலும்
உம்பரில் உயர்ந்தவ னுவன் உண்மையே. (ாசள)

696. அன்புயர் அடக்கநல் லமைதி தூய்மைபே
ரின்பருள் நெறியிவை யெய்தி னேர்கொடும்
வன்புலப் பகையினை வென்று மண்டிய
துன்பெலாம் கடந்துயர் சுகங்கொண் டோங்குவார். (ாசஅ)

திறை பெறு முறை.

697. பூவருந் தாமலே பொருந்து தேனினை
மாவரு வண்டுகொள் மாட்சி போலவே
யாவரும் இன்புறும் வகையில் அன்புடன்
காவலன் திறைகொடு காக்க வேண்டுமே. (ாசக)

698. கொள்ளுமவ் வினையையும் குடிக ளின்பு ற
உள்ளிமுன் வேண்டுவ வுணற்கி மீந்தகைத்
தள்ளருந் திறலுடைத் தாணை யாநிகள்
ஒள்ளிய நிலையுற வுதவி யோம்புக. (ாருo)

699. அருளுடன் ஆட்சியை ஆய்ந்து செய்திடா
திருளுடை யுலகினி லிருந்து தன்திறம்
பொருளையே தொகுத்துயர் பொதிசெய் வேணம
ருருவமர் பேயென வுணர வேண்டுமால். (ாருக)

700. அல்லல்கள் ஊறுகள் அடர்ந்து வாழ்க்கையில்
எல்லையில் லாவலை யெய்து மாயினும்
நல்லதென் றெதிர்ந்துநீ நலம்குன் றாமலே
வல்லமை யோடிரு வருவ வந்துறும். (ாருஉ)

701. உற்றபே ரிடுக்கண்கள் ஒன்று மின்றெனில்
பற்றிய வாழ்க்கையில் பாடு தோன்றிடா ;
மற்றதை எதிர்த்திடு மனிதர் மாட்சியைப்
பெற்றிருளிர் கின்றனர் பெருமை யோங்கவே. (ாருங)

702. தாழ்ந்தவர் தமையெலாம் உயர்த்தித் தங்கலம்
சூழ்ந்தவர் தமையெலாம் தொலைத்துத் தூய்மையாய்
வாழ்ந்தவர் தமையெலாம் வழுத்தி யாவர்க்கும்
ஆழ்ந்தபே ரன்பனைய் ஆள்வ தாண்மையே. (ாருச)

பிறர்மனை நோக்காமையே பேராண்மை.

703. வீரவான் எவனென வினவு கிற்றியேல்
நீரநன் னெறியினில் நிலைத்து நின்றுதன்
தாரமா விரதனைய்ச் சால்பி லுங்கிய
நீரனே யவனெதிர் தேவ ரில்லையே. (ாருரு)

704. பிறர்மனை நயந்திடாப் பெற்றி யாளனை
அறமெலாம் நயந்துவந் தடையும் அன்னவன்
விறலினைப் பகைவரும் வியந்து போற்றுவார் ;
உறவினை யும்பரும் உவந்து பேணுவார். (ாருசு)

கருக. அருள் சுரந்து குடிகளைப் பேணமல் தன்வரவையே கருதிப் பொருள் கவரும் அரசன் மனித உருவமான ஒரு பேயாம் என்பதாம்.

705. ஆனையை யடக்கினேன் ; அரியை வீக்கினேன் ;
வானையும் மண்ணையும் வளைத்து நாக்கினேன் ;
நானென நின்றவன் நழுவி ஓர்இல்லில்
பூனையாய்ப் போனதும் புலங்கொண் டோர்கவே. (ாருள)

706. திசையுறு மாவெலாம் வென்று தீரனுய்
இசையுறும் இராவணன் ஏதி லான்மனை
நசைசிறு தணுகவும் நாச மாயினன்
வசையுறு நிலையினை மதித்துக் கொள்கவே. (ாருஅ)

707. பொறிபுல னுகர்ச்சியில் பொங்கி நிற்பினே
செறிமத மறமெலாம் சேர்ந்து புல்லுமே
அறிவுநூல் நுகர்ச்சியி லாயின் தூயநல்
நெறியுயர் இன்பறம் நிறைந்து நிற்குமே. (ாருக)

708. தனக்குறும் அல்லலைத் தாங்கிச் சார்ந்தகன்
இனத்தினுக் கிதமுடன் இனிது நல்குவோன்
வனத்தொரு கற்பக மாகி மன்பதை
மனத்திடை யென்றுமே மருவி நிற்பனே. (ாகூ0)

709. சிறந்ததோர் வினையினைச் தேசம் இன்புற
நிறம்பெறச் செய்தவன் நேர்ந்த தேகம்விட்
டிறந்தன னுயினும் என்றும் கீர்த்தியோ
நுறைந்திவ ணுளிமிகுந் தோங்கி வாழ்வனே. (ாகூக)

710. நமையறி யாமலே நாள்கள் நாசமாய்
அமைவுட னுயுள்நாள் கழியு மன்னதைக்
கமையுட னுணர்ந்துவன் காலன் காணுமுன்
இமையினை யாதறம் இயற்ற வேண்டுமே. (ாகூஉ)

கருள. தேவர் கோனுய்ச் சிறந்திருந்தவன் அகலியை விரும்பிக் கோதமன் மனையில் புகுந்து ஏதம் அடைந்தமை கூறிய படியிது. உலகிலுள்ள எல்லாவற்றையும் அடக்கி உயர்வீரனுய் ஓங்கியிருந்தாலும் தன்உள்ளத்தை அடக்காமல் பிறர் இல்லை விழுவனுயின் அவன் எல்லாராலும் எள்ளப் படுவன் என்பதாம். பூனை என்றது அவன் போன ஈனநிலை தெரிய.

711. அரசெனும் உருவினுக் கங்க மாயைமுன்
சுரமிகு படைகுடி யுரிய நட்பரண்
வாமுயர் பொருளினை மருவி யுள்ளன
தரமன்ன சால்புறிற் சாரு மாட்சியே. (ராசுஙூ)

712. பொருள்முகம், அமைச்சுகண், பொருந்து நட்பினர்
மருளறு செவியரண் வண்கை, திண்படை
உருளுயர் தோள்குடி யுடைய கால்களே,
அருளறம் மனமுயிர் அறிந்து கொள்கவே. (ராசுச)

713. சொல்லிய அங்கங்கள் தொடர்ந்து நல்லவேல்
எல்லையில் எழிலுடன் இன்பம் எய்திடும்
அல்லவை யாயினவ் அரசு புல்லிதாய்
ஒல்லையில் இழிந்துபின் ஒழிந்து போகுமே. (ராசுஞ)

714. புறத்துறு பகைகளை யடக்கல், பூமியைச்
சிறப்புடன் காத்தருள் திண்மை, சீலமுள்
ளூறப்பெறும் பொறிகளை யொடுக்கல், ஊக்கமிவ்
அறப்பெருஞ் செயலினன் அரச னுவனே. (ராசுசு)

முயற்சி நிலை.

715. ஆள்வினை யுடையவன் அரிய செல்வத்தின்
கேள்வனு யுயர்ந்துதன் கிளைக்கெ லாந்தலை
ஆளென விளங்குவன் ; அஃதி லாதவன்
மாள்வினை யுடையனுய் மடிந்து போவனே. (ராசுள)

மடி நிலை.

716. என்றுதான் செய்வினை யிழந்து சோம்பினுன்
அன்றுதன் வலியிழந் தசத்த னுய்நிலை
குன்றுவன் ஆதலால் குறித்து நாளுமே
ஒன்றிய வினையினை ஓர்ந்து கொள்கவே. (ராசுஅ)

ரசுச. செல்வம், மந்திரி, நண்பர், அரண், படை, குடி, அருள், அறம் ஆகிய இவ்எட்டும் அரசனுக்கு முகம் கண் காது கை தோள் தாள் மனம் உயிர் என முறையே மருவி யுள்ளன என்பதும். குறித்த உவமைகளின் இயல்பு களை நுனித்து நோக்கிப் பொருள் நிலையை ஊன்றி யுணர்ந்து கொள்க. அறம் இல்லாத அரசு உயிர் இல்லாத உடல்போல் ஒழிந்துபோம் என்க.

விடியுமுன் எழுக.

717. வைகறை தனிற்றுயில் எழுந்து வாய்ந்துமுன்
செய்வன செய்துளம் தெய்வம் பேணியே
கைவரு வினையினைக் கருதிச் செய்யிதே
உய்திற மினிதுறும் உறுதி யாகவே. (ாகூசு)

718. இனையன நீதிகள் இனிது கூறித்தன்
தனையனை யன்புடன் தழுவிச் சால்புயர்
நினைவுடன் நின்றுநீ ணிலத்தைத் தாங்கெனை
மனநல மிகவுயர் மதியு றுத்தி னன். (ாளo)

கலிநிலத்துறை.

719. அருமை மைந்தனுக் குறுதிநன் கியாவையு முணர்த்தி
பெருமை யோடர சாட்சியைப் பேணுமா றிருத்தி
தரும ஞான நூ லாய்ந்தருள் முருகனைச் சால்பாய்
ஒருமை யோடிவன் பூசனை செய்துவந் திருந்தான். (ாளக)

720. திசையை வென்றனன் சீர்பல கொண்டனன் திக்கு
விசைய னென்றுபேர் பெற்றனன் விண்ணவர் விழைய
அசைவி லாண்மையோ டாண்டனன் அந்தமி லின்ப
இசைவி லேறினன் இசைவிருந் தாகிவீற் றிருந்தான். (ாளஉ)

எ-வது குமரன் கோல்கொண்ட படலம் முற்றிற்று.

ஆகக் கவி எஉo.

ககூக. சூரியன் உதயமாகுமுன் எழுந்து காரியங்கள் புரியின் அவை விரைவில் முடிவுறும் ஆதலால் "வைகறை எழுந்து செய்" என்றார். வைகறை = விடியற்காலம். "வைகறையில் ஓர் கடிகை வாய்ந்துசெயின் நாள் முழுதும், செய்தொழில்வந் தெய்தும் சிறந்து." என்பதும் காண்க. கருத்து ஊன்றிச் செய்யாவழி வினை இனிது முடியாது ஆதலால் "கருதிச் செய்" என்றார். "கருத்தூன்றிச் செய்யாக் கருமம் கடையாய், விருத்தன் கைக் கல்லாய் விழும்" என்பது எண்ணெண்ணத்தக்கது. "Work is only done well when it is done with a will" (Ruskin)

எட்டாவது

குடிபுரந்த படலம்.

வீரபாண்டியக் கட்டபொம்மு பட்டம்தாங்கி நீதிமுறை நின்று நெறிவழு வாமல் அருள்புரிந்து குடிகளைப் பாதுகாத்து வந்த நிலை மையை உரைக்கின்றமையால் இது குடிபுரந்த படலம் என நின்றது.

---

721. குமரன் கோல்கொண்டு குடிபுரந் தருளுமுன் முறைமேய
அமரர் நாயகன் ஆதிய ரனைவரும் வாழச்
சமர நாயக னெய்அயில் தாங்கிமுன் னின்ற
குமர நாயகன் கோயில்போய்ப் பணிந்தவன் வந்தான். (க)

722. தந்தை யுதிய நீதிகள் யாவையும் தகவாய்ச்
சிந்தை யுள்ளுறக் கொண்டுசெங் கோலின னகி
மைந்தன் நின்றிட மாநில மகிழ்ந்தது வானும்
முந்து வந்துநின் றருளுடன் முறைபொழிந் ததுவே. (உ)

723. தம்பி மாரிரு பேருக்கும் தகவுட னெய்ந்து
வம்பு லாமலர்க் கோதையர் மணமினி தாற்றி
அம்பு ராசியி னவனியை யருளுடன் புரந்து
நம்பி யின்புடன் நல்லறந் தழைத்திட நின்றான். (ங)

724. சவுந்த ரத்திரு வடிவினள் சவுந்தர வடிவென்
றுவந்த பேருடை யுயர்குலக் கொடியினை யுமை
உவந்து கொண்டுட னுளமுயி ரொன்றென மருவிச்
சிவந்த வாயிதழ் பருகியன் பின்பினில் சிறந்தான். (ச)

725. ஞான மூத்தெனும் நங்கையை நம்பியின் தம்பி
யான திண்டிறற் றுரைச்சிங்க மணந்தமிர் தனைந்த
வான நாட்டுயர் போகமே வரன்முறை நுகர்ந்து
தேன லர்ந்தமென் மலர்க்குழ லவளொடு திகழ்ந்தான். (ஞ)

726. உருவில் அன்பினில் உயர்குலக் கற்பினில் சிறந்த
திருவி னன்னவச் சேயிழை யவருடன் செறிந்து
மருவி யின்பங்கள் மாந்தியும் வாம்பரி முதலா
உரிய வூர்ந்துமங் குவகைமீக் கூர்ந்தவ னிருந்தார். (கூ)

க. கோயில் = திருச்செந்தூர்.

727. இனிய நீர்மையோ டிசைந்துள வரசரா யின்பம்
கனிய நின்றனர் காவலன் குடிகளைக் கண்ணுப்
புனித மானபே ரன்புடன் இன்புறப் புரந்து
தனிமை யானபே ருவகையின் தலைமையில் தழைத்தான்.(எ)

728. சொன்ன ஆட்சிக்குத் துணைவனுய்ச் சுப்பிரமணியன்
என்னு மந்திரி யினிதிசைந் திருந்தனன் அன்னேனுன்
பன்னு நூல்பல பயின்றவன் உலகியல் பறிந்தேதான்
மன்ன னுக்குயிர் நண்பினன் மாண்பினி லுயர்ந்தேதான். (அ)

729. கங்கை தன்குல மரபினன் கருதிய எதையும்
எங்கும் எண்ணிய எண்ணியாங் கியற்றிடும் இயல்பேபான்
துங்க மானஇம் மன்னவன் மரபினுக் கென்றும்
அங்க மானநல் லமைச்சுயர் மரபினில் வந்தேதான். (கூ)

730. வள்ளல் தாதைதபால் மதியுடை யமைச்செனக் குமாருப்
பிள்ளை யென்றெரு பெரியவ னிருந்தனன் அவன்றன்
பிள்ளை மூவருள் மூத்தவன் இப்பிள்ளை அதனல்
உள்ள தந்தையின் உரிமையை வரன்முறை தொடர்ந்தான்.()

731. வீர பத்திரன் பாண்டியம் பிள்ளையென் றிரண்டு
பேர்க ளும்துணை யமைச்சராய்ப் பின்தொடர்ந் திருந்தார்
ஓரும் அன்புடன் மன்னனை உரிமையிற் போற்றிப்
பார மைந்தநற் காரியம் பார்த்தவர் வந்தார். (கக)

732. இரண்டு தம்பியர் அமைச்சர்கள் இசைமிகுந் திரண்டு
திரண்ட தோள்களும் கண்களு மாய்த்திகழ்ந் திருந்தார் ;
அரண்ட ரும்பெரும் படைகளை யடைவுடன் பேணி
உரம்பெ றுங்குடி களைப்புரந் திவனுவந் திருந்தான். (கஉ)

733. வான்சு ரந்திட வளர்ந்தெழு டயிர்களின் மானக்
கோன்பு ரந்திடக் குவலயந் தழைத்தினி தோங்கி
மான்பு ரந்தகண் மங்கையர் மைந்தர்கள் மகிழ்ந்து
தேன்பு ரந்தசொற் செயலின ராய்த்திகழ்ந் திருந்தார். (கங)

கo. குமாருப்பிள்ளை என்பவர் திக்குறிசயத்துரையிடம் மந்திரியாயிருந்தார். சுப்பிரமணிய பிள்ளை, வீரபத்திர பிள்ளை, பாண்டியம் பிள்ளை என்ற இம் மூவரும் அவருடைய புதல்வர்கள் என்க. உரிமை = சுதந்தரம்.

734. இனிது னீன்றதன் இளந்தனிக் குழவியை யேந்திக்
கனியும் அன்புடன் காத்தருள் தாயென வுலகை
நனிபு ரந்துநல் லருள்புரிந் தெங்கணும் யாதும்
துனிபு குந்திடா வகையினி தாண்டனன் றேதான்றல். (கச)

735. ஒற்றர் தங்களே ஊர்தொறும் முறைமுறை யுய்த்துக்
குற்றம் ஆய்ந்துறு கோதுகள் புரிந்தவர் தம்மைப்
பற்றி வந்தவர் படுகவைக் கிடுமுறை பார்த்தே
எற்றுங் நீமையை எண்ணிடா வகையினி தொறுத்தான். (கஞ)

குற்றம் களைந்தது.

736. குற்ற வாளரைக் கொடுந்தண்டம் புரியிலே குற்றம்
முற்றும் நீங்கிடா தென்பதை முன்னுற வறிந்தான்
பற்றி வந்தவர் பரிவுறப் பண்புரை பகர்ந்து
மற்ற கற்றினுன் மற்றவர் மனந்திரிந் துயர்ந்தார். (கசு)

737. அன்பி னுல்வரு நிலைமையும் அடித்திழித் தொறுத்து
வன்பு செய்வதால் வருகின்ற வகையையும் துருவி
இன்பி வன்செய எங்கணும் இகல்நவை குறைந்த
துன்பி லாவகை உலகுவந் துயர்ந்தது தொடர்ந்தே. (கள)

கரவு காண ஒரு நாள் இரவு நேர்ந்தது.

738. மாறு வேடங்கொண் டோரிர விவனெரு நகர்வாய்த்
தேறு நோக்குடன் உண்மையைத் தெளிந்திடச் சென்றுன்
மாறி லாதவல் லிருளினில் கள்ளர்கள் நால்வர்
ஏறி வந்தனர் இடையிவன் கண்டனன் எதிர்ந்தே. (கஅ)

739. இடையில் வாளுயர் கையினில் கம்பொடும் எதிரே
நடையில் வந்திட நம்மினத் தானென இவனை
அடைய நின்றவர் உசாவினர் ஆம்வகை யுரைத்தான்
தடையி லாதவர் சேர்ந்தனர் தொடர்ந்தனன் சார்ந்தே. (ககூ)

740. களவு செய்தனர் ஓரில்லில் கண்டதைப் பாகம்
அளவு செய்தனர் அவரவர் அயல்பிரிந் தகன்றூர்
உளவு செய்துபோய்க் காலையந் நால்வரை யொருங்கே
தளவு செய்துடன் தன்னைவை யுய்த்திடப் பணித்தான். (உ0)

ககூ. குற்றவாளிகளை அடித்துத் துன்புறுத்தினுல் அவ்வபயம் அடங்கி நிற்பினும் பின்பு வெவ்விலையராகவே விளங்கி நிற்பர்; அன்புடன் அறிவுரைக்கின் அவர் பண்புடன் திருந்தி இன்புடையராவர் என்பதாம்.

741. காவல் வீரர்கள் அவ்வகை கையுடன் கொணர்ந்து
மேவ வைத்தனர் விசாரணைத் தலத்தினில் வேந்தன்
ஆவ லோடவ ணடைந்தனன் அவரைநேர் நோக்கி
நீவிர் கள்ளங்கள் நேர்ந்ததவண் செய்தனிர்? என்றான். (உக)

742. ஒன்று மில்லையே ஆண்டவா! என்றவர் உரைத்து
நின்று காலினில் நெடிதுவீழ்ந் தழுதனர் நேர்ந்து
நன்று நன்றுநீர் நவில்வது நும்முடன் ஒருவன்
ஒன்றி வந்துளான் உண்டுமா? இல்லையா? என்றான். (உஉ)

743. அந்த வாய்மொழி கேட்டதும் அவர்மிகத் திகைத்துச்
சிந்தை யுள்ளுறத் திகில்கொண்டு ஒருவரை ஒருவர்
முந்த நோக்கினர் மூண்டுமீண் டில்லையே என்றார்
வந்த அவ்வுரை வாவையும் உணர்த்திய தன்றே. (உங)

744. இல்லை யென்றவச் சொல்லினல் அவர்கள்ளம் எளிதாய்
மெல்ல வேவெளி யானதை யறிந்தனர் விரகாய்
வல்ல மன்னவன் வாய்மொழி யாடிய திறனைச்
சொல்லி யாவரும் துதித்தனர் அமைச்சரும் புகழ்ந்தார். (உச)

745. சோரர் நெஞ்சகம் அஞ்சியே துளங்கினர் ஒருவன்
யார்கொ லென்றவ ணுள்ளவர் யாவரும் தியங்கி
நேர்வ தென்கொலோ வெனநிலை குலைந்தனர் நின்றார்
வீர மன்னவன் உண்மையை விளக்கினன் விரித்து. (உடு)

746. இரவிற் சென்றதும் அவர்களைக் கண்டதும் இசைந்து
கரவிற் கொண்டதும் கண்டவெம் பொருள்களைப் பகுத்தே
உரவுட் கொண்டுபின் மீண்டதும் உணர்த்திமுன் னுற்ற
வரவைக் கொண்டெதிர் வைத்தனன் வகைபெற மன்னன். ()

உச. இல்லை என்ற அச்சொல்லே அவர் களவு செய்யப் போன உண்மையை ஒண்மையாக உணர்த்தி நின்றது. என்னை? போகவில்லையாயின் ஒருவன் வரவில்லை என்று சொல்ல முடியாது ஆதலால் தம்மை மறந்து அவர் வாயிலேயே வாய்மை வழங்கும்படி மன்னன் இவ்வாறு முன்னுற நன்னயமாக நவின்றான் என்க. இதனல் இவன் உரையாடுந் திறனும், உணர்வு நலனும், குறைகளைந்து முறைபுரியும் நிலையும் உணரலாகும்.

747. வெளியி லிட்டவப் பொருள்களைக் கண்டதும் வெய்யோர்
ஒளிசெய் மன்னனே யுற்றவன் என்பதை யுணர்ந்து
விளிவு கோர்ந்ததென் றுளமுவி வெருவியே நின்றார்
தெளிவு ளோர்களும் திகைத்தனர் செய்வது தெரியார். (உள)

748. அன்ன நால்வரை மன்னவன் அருள்கொடு நோக்கி
இன்ன தாகிய இழிதொழில் எனைநீ யாகும்
துன்னு வெம்பழி பாவங்கள் இம்மையில் துய்த்து
மன்னு வெந்துயர் நாகிடை மறுமையில் மடிவீர். (உஅ)

749. உமது புன்பொருள் ஒருவன்கை கவர்ந்திடில் உள்ளம்
கமையி றந்துறு துயருறக் காண்கிலீர் கொல்லோ?
அனையும் அத்தகை யறுபவ மூள்ளுற வறிந்தும்
தமது நல்லறி விழந்தது செய்வது தாழ்வே. (உக)

750. கொண்டு போயுள்ள பொருள்களைக் கூடிய விரைவில்
கொண்டு வருமென் றவர்களைக் கோமகன் விடுத்தான்
மண்டி யோடினர் மானமும் நாணமும் கொண்டார்
தண்டி வந்துடன் அரசனை வைத்தனர் தாழ்ந்தே. (உஒ)

751. அடியில் வீழ்ந்தனர் கடவுள்மே லாணையா யிந்தக்
கொடிய நீமையைக் கனவிலும் குறித்திலம் இனிமேல்
படிறு நீக்கியிப் படியெமைப் பவித்திர மாக்கிக்
குடிசெய் தாண்டநற் குணமலை யேயெனத் தொழுதார். (உக)

752. உற்ற அப்பொருள் உடையவ னடைந்திட வுதவி
மற்ற வர்க்குண வுடையொடு வளநில முதவி
பெற்ற விந்நிலம் பேணியே எவரினும் விளைவை
முற்றி டச்செய்து முறையொடு வாழ்மினென் றுய்த்தான். ()

753. வள்ளல் செய்தவிவ் வகையினை யாவரும் வியந்தார்
கள்ள நீர்மையில் கழிந்திழிந் தொழிந்திட நின்றார்
தள்ள ரும்பெருந் திருவின ராய்த்தழைத் துயர்ந்தார்
உள்ள மின்புற வுருகியிம் மன்னனைத் துதித்தார். (உஉ)

754. குற்றஞ் செய்தபின் கொடுந்தண்டஞ் செய்வதிற் கொடிதா
உற்ற குற்றமுன் னெழித்திடல் நலமென வுணர்ந்து
பற்று தீங்குகள் பாரினில் பரவிடா தோம்பி
வெற்றி வேந்திவன் விரகுடன் அருள்செய்து காத்தான்.(நச)

755. பாவ காரிய மாகிய களவினைப் பயின்று
ஏவ மாயிழிந் தொழிந்திடா தின்புறக் காத்தான்
காவ லன்பெயர்க் கருத்தினைக் காசினி யுள்ளார்
ஆவ லோடறிந் தார்வமீ தூர்ந்தன ரன்றே. (நஞ)

756. உயிர்க ளின்புற வுலகிடை யுள்ளுறக் கிளர்ந்த
செயிர்கள் நீக்கினன் களைகளைக் களைந்தெழில் சிறந்த
பயிர்கள் ஓங்கிடப் பண்ணுநல் லுழவனே போல
அயில்கொள் வேலுடை யுழவனும் அருந்திறல் மன்னன்.(நசு)

757. இழிந்த வாசனை யுளத்திடை யிருந்திடில் இழிவே
எழுந்து நீவினை யியற்றிவெந் நரகினுக் கிரையாய்
ஒழிந்து மன்பதை யுழந்திடும் என்றுள மிரங்கிப்
பொழிந்த அன்பினல் மறங்கடிந் தறம்பெறப் புரிந்தான்.(நஎ)

738. புன்மை யாவையும் புறங்கழித் தொழித்துயர் புனித
நன்மை யெங்கணும் திகழ்ந்திட நாடிநின் றுய்ந்து
செம்மை யாளரைத் திறந்தெரிந் துறவெனச் சேர்த்தே
எம்மை யின்பமும் இம்மையி லெய்திட நின்றான். (நஅ)

759. ஊருள் ளோங்கிய உண்கனித் தருவென வுயர்ந்து
பாருள் ளோங்கிய பாஞ்சையம் பதியிருந் தமையால்
யாரு மேநிதம் ஆர்வமாய் அடைந்துய நின்பம்
கூட நின்றனர் கலிவளங் கூர்ந்திடக் குவிந்தே. (நகூ)

புலவரைப் புரந்தது.

760. தனது தாய்மொழி தெலுங்கென நிற்பினும் தமிழை
மனது வந்துகற் றுயர்மதி மாண்புடன் சிறந்து
வனையுங் காவிய ஓவியப் புலமையும் வாய்ந்து
புனையும் வண்கவிப் புலவரை யன்புடன் புரந்தான். (சo)

நஞ. தன் குடிகளிடம் இடர்புகாமல் பாதுகாத்துவருவதால் அரசனுக்குக் காவலன் என்று ஒரு பெயர் உண்டு. அப்பெயர்ப் பொருளை உலகறிய இவன் உணர்த்தி நின்றான் என்பதாம்.

761. வீர பாண்டியப் புலவரும் வேங்கட சுப்பு
பார திப்பெயர்ப் பண்புடை யாளனும் பதியில்
சீர மைந்தரூற் செந்தமிழ்ப் புலமையிற் சிறந்து
ஈர மோடுயர்ந் தியலிசை புரந்தமர்ந் திருந்தார். (சக)

762. என்று மேயினம் பிரியல ராயினி தமர்ந்து
துன்று நீதிகள் துதிமிகு கவிதைகள் சுவையா
நன்று கூறியும் நலமுடன் பாடியும் நாளும்
வென்றி வீரனுக் கினியராய் விளங்கிவீற் றிருந்தார். (சஉ)

763. இருவர் தம்முளே முன்னவன் இயன்மிகு புலமைத்
திருவும் சீலமும் செம்மையு முடையவன் பாணர்
மரபில் வந்தவன்; மற்றவன் அந்தணர் மரபோன்
அரிய நல்லிசை வல்லவன் அழகினில் சிறந்தோன். (சங)

754. மன்ன னுக்கிரு கண்ணென இருவரு மருவித்
துன்னு மன்புடன் தூயநல் லுரைகளை யாடி
மன்னு நீதிகள் மனுமுறை யாதிகள் ஆய்ந்து
பன்னு சீருடன் பதியிடம் பண்புட னிருந்தார். (சச)

765. கற்ற நற்றமிழ்ப் புலவரைக் காவலன் மிகவும்
உற்ற மெய்த்துணைச் சுற்றமா வுவந்து கொண்டாடும்
பெற்றி நோக்கியும் பெருங்கொடை நோக்கியும் நாளும்
மற்ற நாட்டுயர் அறிஞர்கள் வளமுற வந்தார். (சஙி)

766. வந்த பாவலர் யாரையும் மன்னவன் மகிழ்ந்து
முந்து மன்புடன் முறையறிந் துபசரித் திருத்திச்
சிந்தை யின்புறச் செழும்பொருள் கொடுத்தருள் புரிந்தான்
அந்த மேன்மையை அனைவரும் அதிசயித் துவந்தார். (சஙு)

767. கன்னன் பாரியே குமணனே காரியே முதலா
முன்னர் நின்றுயர் பூவெழு வள்ளல்சீர் கேட்டோடாம்
இன்ன வள்ளலி யின்றுமேர் கண்டன மென்றே
பன்ன ருந்துதி பலபல பாடினர் புகழ்ந்தே. (சஎ)

768. வீர நாயக ணுகிய இவன்கொடை விறலிப்
பார நீருல கெங்கணும் பரவிய துயர்ந்தே
ஓரு மன்புடன் ஈந்தவன் உம்பரோ டிம்பர்
சீரு யர்ந்துநற் றேறவெனத் திகழுவன் அன்றே. (சஅ)

கொச்சகக் கலிப்பா.

769. இவ்வாறு கவிவாணர் இசைவாணர் எழிற்கலையில்
வெவ்வேறு திறம்வாய்ந்த வித்தகரும் வந்துவந்து
எவ்வாறும் பொன்பெற்றே இன்பமிகப் பெற்றார்கள்
அவ்வாறு வருநாளார் ஆடலணங் காங்கடைந்தாள். (சக)

நடன மாது வந்தது.

770. ஆடலால் பாடலால் அழகினுல் அகிலமெங்கும்
ஈடில்லை யெனநின்றுள் இயல்மதன சேணெயெனும்
பீடுமிகப் பெற்றவளிப் போரசின் சீர்கேட்டுப்
பாடுபுகழ் பெற்றிருந்த பாஞ்சைநகர் வந்தடைந்தாள். (நo)

771. வந்தரசை அடிவணங்கி வருநிலையை யினிதுரைத்துச்
சந்தமுடன் ஒருநடனம் தான்புரிய வேண்டிநின்றுள்
அந்தமொழி கேட்டமன்னன் ஆகட்டு மென்றுருநாள்
முந்தவிதித் தயலகற்றி முறையாக வுபசரித்தான். (நக)

நடனம் கண்டது.

772. அரசனையில் குறித்தநாள் அவள்பரதம் தனைக்காணச்
சரசமுடன் பலவரசர் சார்ந்தார்கள் புலவர்களும்
வரிசையுயர் மற்றவரும் வரன்முறையே வந்தமர்ந்து
கரையகன்ற களிப்போடு காட்சிதனைக் கண்டிருந்தார். (நஉ)

773. தித்தியொடு முகவீணை சிறுகுழலும் சேர்ந்திசைக்க
ஒத்தமுழ வயல்முழங்க வுறுபாட லுடன்வழங்கத்
தத்திமிதி திமிதியெனத் தாளவகை யினிதோங்கப்
பத்தியுடன் அவைமேயறிப் பாவையவள் பதம்பெயர்த்தாள். ()

774. பாட்டினுறு பதப்பொருளைப் பாவனையில் மிகத்தெளித்துக்
காட்டியபி நயம்பிடித்துக் கானமயில் எனக்கலித்து
வாட்டிறல்கொள் வயவேந்தர் மதிகுலைந்து மயல்பூண
நாட்டியத்தின் கலைநிலையை நனிகாட்டி நடம்புரிந்தாள். (நச)

775. கண்காட்டி முகம்காட்டிக் கைகாட்டிக் கால்காட்டிப்
பண்காட்டி இசைகாட்டிப் பவளவாய் நகைகாட்டி
எண்காட்டி யியல்காட்டி. எழில்காட்டி. எதிர்கண்டார்
மண்காட்டை மறந்துபெரு மயல்காண மாட்டிநின்றுள். (நிநி)

776. அரம்பையோ வுர்வசியோ அதிசயத்து மேனகையோ
வரம்படுபே ரழகனைந்து வந்தமதி மோகினியோ
கருங்கூனிய மொழிகாகர் கன்னியோ வென்றெவரும்
மிருட்புமொழி பலதேடி மெய்யாய லோடுணர்ந்தார். (நிசு)

777. அன்னவெழிற் கடைங்காணை ஆர்வமுட னங்குவந்து
முன்னெயிரு நவர்தமது தொன்மாண்புக் கியைந்தபடி
பன்னரணயல் வரன்முறையே மருவியுவந் திருந்தார்கள்
இன்னவகை நிகழுங்கால் இடைநிகழ்ந்த தொன்றுரைப்பாம்.

778. ஆதிகவப் பலவனயல் அமர்ந்திருந்த ஒருபுலவன்
வாதிமை ஆயர்குல மரபிமேனன் வரதனென்பேரான்
நீகா நீகனக் குறும்புமொழி கூறுவோன் குறும்பாயம்
மாதிலை முன் வியப்பான்போல் மற்றிவன்றன் குலம்பழித்தான் (நிஅ)

779. கைகாய்கில்லை * தையல்லனக் தருக்குடனே அப்புலவன்
கையாலீ தெப்புலவன் பாண்தொழிலைப் பரிகசித்து
வெய்யவுரை விசாகரு விரித்துரைத்தான் விரிக்கவே
தய்யவுலவன் அரிந்துடனே தொடர்ந்தெதிராய்த் துணிந்துரைத்தான்.

780. ஆடு நிக்கு மல்லைதையல் அருகேமே அப்டாவன்
பாடு நிக்குஞ் ஆடு நிக்குஞ் பாடுபயனைப் பாராமல்
பாடு நிக்குப் பின்பீபாவ மதியழையும் மதிகெட்டு
வீடு நிக்குஞ் வைகுபுகழை வெளியிட்டு நின்றதேய. (கூ0)

781. வான முரிய விசையாய மினமுலையைத் தந நிலையறிந்து
தானுரிய வினுத்தலைவன் வெளவிவிட மனமகிழ்ந்தார்
ஏனை யர வான வரிவுமையாய தலைவ ரென்று நவிலின்றன்;
மீனை யுரி தித் தலைவரிடமே விழுமிய புகிலின் விடுபாண்டே. (கூக)

---

* கைகாய் வன்பாது வெவ்வசனையும் கைகாய் தொழிலையும் குறிக்கும் ஆதலால் அக்குறிப்பால் அவை இரு குலம் பழித்தான்.

கூ0. ஆடு வன்பாது ஆடுகளையும், ஆடலையும் உணர்த்திவரும் ஆதலால் அவை பற்றி ஆயரது குலநிலையைக் குறிப்பால் இகழ்ந்தார்.

782. நீதிநெறி முறைதெரிந்து நிறைகல்வி நெடுநாளும்
ஓதியுணர்ந் தினியனுய் உயர்சாது வாயிருந்தும்
சாதியினைப் பழித்தவுடன் தன்னுள்ளந் திரிந்துடனே
கோதுமிகக் குறித்துரைத்தான் குலமானம் விடுத்தவராரி? ()

783. அடங்கியவன் அங்ஙகன்றும் அடங்காமல் அயலிடம்போய்
மடங்கலந்து நின்றிவனை மதியாமல் இகழ்ந்துவந்தான்
இடங்கடொறு மவன்செய்யும் இளிவுரையைக் கேட்டிவனும்
கடங்கவிழ்ந்த மதகரிபோல் கனன்றுள்ளே கறுத்திருந்தான்.

784. தாரத்தைத் தாரமென்பேன் மற்றவரைத் தாயாள்என்பேன்
சூரைத்து ளைத்துநின்ற சோதிமேல் ஆணையென
நீரமைந்து நெறியுடனே நிலைத்திருந்த இவனெடவன்
ஆரவுற வாகிநின்றுல் அறிவுநலம் பெறுமன்றே. (கூச)

785. கற்றவர்கள் அகந்தையினுல் கலந்துமகிழ் பெரும்பேற்றை
முற்றிழந்தார்; மற்றவரோ முறையறியா தயல்நின்றூர்;
உற்றபெருஞ் செல்வர்களோ வுளஞ்செருக்கி உணர்வொழிந்தார்;
எற்றேநந் தமிழ்ப்புலமை யின்பமுறப் பெறுநாளே? (கூரு)

786. எனவுலக நிலைநோக்கி எழிற்கலையின் நிலைக்கிரங்கி
மனநலமுள் ளார்மிகவு மறுகியுரை யாடிநின்றூர்;
புனிதமுறு கலையினிதாய்ப் புவியதனில் ஓங்கி நின்றுல்
இனையதுபின் பேரின்ப இயலிடமாய்த் திகழுமன்றே. (கூக)

787. புலவரிவர் வாதாடிப் பொங்கிநிற்க அங்குநின்று
கலவமயி லெனநடித்துக் களிப்பித்த காரிகைக்கு
விலையுயர்ந்த அணியாடை வெறுக்கைகளு மினிதுதவித்
தலைவனிவன் விடைகொடுத்தான் தாழ்ந்தேத்தி அவளகன்றுள்.

788. வந்தவர்கள் மனக்குறிப்பை வாய்திறந்து சொல்லுமுன்னே
முந்தியுணர்ந் தினிதுரைத்து முகமலர்ந்து கொடுத்துதவி
இந்தமன்னன் விடுத்துவரு மியல்நோக்கி யாவருமே
சிந்தைமகிழ்ந் துவந்தேத்தித் தெய்வமெனப் போற்றிநின்றூர் ()

கூச. இவர் ஏகபத்தினி விரதராயிருந்துள்ளமையை "தாரத்தைத் தாரம் என்பேன்; மற்ற மாதரைத் தாயர் என்பேன்" என முருகன்மீது ஆணை யிட்டு உலகம் காண இவர் ஒரு கவியால் கூறியுள்ளார்.

789. அன்னமருள் சத்திரங்கள் அங்கங்கே யமைத்தருளிப்
பின்னமிறை பாராமல் பேதமொன்றுங் கூறாமல்
பண்ணவர்க ளாண்டும் இன்மொழியோ டுபசரித்து
வன்னமுயர் உணவளித்து வரும்படியே வைத்திருந்தான் (சுகூ)

790. செந்திருகர் திருக்குருகூர் சீர்பசுவந் தனாஆத்தூர்
இந்தவுயர் பதிகளிலே இறைவனமர் ஆலயங்கள்
முந்தஅழ குறப்புதுக்கி முறையாகப் பூசனைகள்
சந்ததமும் நடந்துவரத் தக்கநிதி வழங்கிநின்றான். (எய)

791. குறித்ததிருத் தலங்களிலே கோலமணி மண்டபங்கள்
பொறித்தகல்வி நிலையங்கள் புனைந்தருளி விழாக்கள்தொறும்
நெறிப்படியே நேர்சென்று நீணிலத்தோர் கொண்டாடிச்
சிறப்புடனே பரன்கோலம் சேவிக்கச் சீர்புரிந்தான். (எக)

792. இன்றுமுள்ள மண்டபங்கள் இந்தமன்னன் பெயராலே
நின்றுவருகின்றனவே யென்றுலும் நெறியாக
அன்றமைத்த முறைமாறி அயலாகப் பலபுகுந்து
ஆக்கினிலை குலைந்துமே சொல்லளவில் நிலைத்துள்ள. (எஉ)

793. அறநெறிகள் பலபுரிந்தும் ஆருயிரை தனிபுரந்தும்
மறமனியால் இடமொன்றும் மருவாமல் குடிபேணி
உறவாகி யெவ்வுயிர்க்கும் உதவியிவன் வருங்காலத்
திறமாக இடைநிகழ்ந்த செயலொன்றை யினிமொழிவாம். ()

794. திருக்குருகூர்ப் பெருமாள்தந் திருநாளுள் ஒருநாளில்
பெருக்குறுதிக் கூட்டமுடன் பேதமற நின்றதனால்
மருக்கமலம் அங்கணர்வாய் உள்ளவர்கள் எல்லாரும்
வருக்கமுடன் பெயல்மறந்து மறுகிமன மயங்கினர். (எச)

795. மன்னிலகும் பாண்டியர்கள் மன்னவன்வந் துவடன் தொட்டருளின்
அன்னவர்தம் ஆணைதனை இன்னிய தம் சீராகச் செல்லுமென
அன்னவர்தம் வினைத்திறனும் அறநெறியை தழுவியொழிந்தான்
கன்னல் வயற் பாண்டிநாட் டவர்கள் களித்தினிதே வாழ்வுடைந்தார் ()

இது திருகுருகூர் வரலாறு பற்றியது திருநகரியாகும். அங்குப் பெருமாள் கோவிலில் வருடம் பிரமோற்சவமாகி மாசியில் பெரிய திருவிழா நடைபெறும்; அந்த நாளைய பிரம்மோற்சவ நாளில் நிகழ்ந்தது. அங்கிலையில் திருமாலருளால் இவ்வரிய புண்ணிய அதிசயத்தை யுண்டாக்கினர். அது முதல் இவ் ஆலயத்தார் வருடம் தவறாது பிரம்மோற்சவத்தை நடத்தி வந்தது.

796. நேர்ந்துள்ள நிலையுரைத்து நேர்வந்து கருணைசெய்ய
ஓர்ந்துவர வேண்டுமென உரிமையொடு பணிந்துரைத்தார்
சேர்ந்தபெரும் படையுடனே திருவருளை நினைந்தேதத்தி
ஆர்ந்தபேரன்பினுய் அடைவுடனே யவணடைந்தான். (எசு)

797. நின்றமறை யவரெவரும் நெடிதுமகிழ்ந் தருகடைந்து
பொன்றுதைந்த மங்கலங்கொள் பூரணகற் கும்பமுடன்
ஒன்றியுயர் மரியாதை யுடன்முறையே யுபசரித்து
வென்றியுயர் அரசே! இவ் வேளையருள் புரிகவென்றார். (எள)

798. இருமருங்கும் அணிஅணியாய் எழுந்துநின்ற படைகளுள்ளே
ஒருவரையும் தன்னருகே யுறவொட்டா தறவகற்றி
முருகனைமுன் பணிந்தேதத்தி முன்னுசட கோபரையுள்
ளுருகிநினைந் தத்தேர்முன் ஒருவனே எதிர்போனான். (எஅ)

799. பாரமலி நேராகப் பண்பமைந்தேர் அரியேறு
ஆரவரு திறம்போல அடலாண்மை யுடனடந்து
தேரெதிரே அரசன்வரத் தேசமக்க ளெல்லாரும்
சாருநிலை யெதுகொலெனச் சார்ந்துவியந் தயல்நிறைந்தார். ()

800. மூண்டுபலர் நிறைந்தடர்ந்து முனைந்தெடுக்கு மூரிவடம்
ஆண்டகைதன் இருகையால் அணைத்தெடுத்து முன்னீர்த்தான்
நீண்டுயர்ந்த அத்தடந்தேர் நெடுநெடென இவன்பின்னே
காண்டகைய காட்சியொடு காலுருண்டு விரைந்ததுவே. (அ০)

801. அப்பெரிய காட்சியைக்கண் டனவேவாரு மிகவியந்து
செப்பரிய மகிழ்ச்சியுடன் சேர்ந்துவடம் பிடித்திழுத்தார்
தப்பறவே இரதம்வந்து தன்னிலையம் சார்ந்ததுடன்
ஒப்பரிய பெருமானுக் குயர்பூசை செய்துவந்தார். (அக)

802. இம்மன்னன் பெருமைதனை எல்லாரும் புகழ்ந்துநின்றார்
அம்மன்னும் இறையவன்றன் அருட்பிர சாதம்பெற்றுப்
பொம்மென்ன அளிமுரல்தார்ப் பொம்மனிவன் விடைகொண்டே
எம்மன்னும் பணிந்தேதத்த எழிற்பாஞ்சை நகர்சேர்ந்தான். ()

803. பாஞ்சையதி பதிநமது பதிவந்து நின்றதஞ்ல்
வாஞ்சையொடு பரம்பதி மன்மகிழ்ந்து வரவெழுந்து
தேன்சொரியு மலர்ச்செழுந்தார்த் தேரினிது நடந்ததெனத்
தேஞ்சொலொடு தினமுமந்தத் திருநகரார் உரைத்துவந்தார். ()

804. அன்றுமுதல் ஆண்டுதொறும் அரசனிவன் பணிபெற்றுச்
சென்றுவந்து தொட்டபின்பே தேரோட்டம் நடந்தினிதாய்
வென்றியுயர் திருக்குருகூர் விளங்கிவரத் தொடங்கியதென்
றின்றுமந்த வரலாற்றை யிடங்கடொறும் வழங்கியுள்ளார். ()

கலி விருத்தம்.

805. இந்த வண்ணம் இசைமிகுந் தெங்கணும்
உந்து மன்பின் உயிர்களைப் பேணினன்
மொந்தி னுயகன் சீறடி சிந்தையுள்
வந்த வேலையும் எண்ணி யிருந்தனன். (அஞ)

806. அலைமுத்து இன்புடன் சார்ந்திங்ஙன் வாழுநாள்
இலைமுத்த நல்வினை யின்பயன் நேர்ந்தென
மலைமுத்து டம்பகையிம் மன்னவன் முன்னெரு
சுலைமுத்த மதகைக் கோமுனி தோன்றினன். (அசு)

807. மாதவ னல்தக்க மன்னவன் கண்டதும்
காதல் சிலாடு களிந்து டனிந்துநீர்
சீர்மத யானைமெய்த் புண்ணியம் யாதென
நூதி யனாரிவர் மானாரித் தேதத்தினன். (அள)

808. மன்னவன் காரியம் மாரியம் நோக்கியே
அன்னவ மாதவன் ஆயிரஞ் சூர்ந்துடன்
கன்னலி னிந்தி களைந்த மழுதியே
மன்னுய மனாரிவர் மன்றிற்றங் கியிருந்தனர். (அஅ)

809. அடைவுள பாரிகளன் அரசு வங்கூடி
உடனவர் உணர்ந்தி டமாரம் றைந்துவ
பாடின மறைகளர் பண்டிய பாடலர்
மடமய னிருவரும் வாழ்த்துங் கூறினரன். (அக)

810. அறவிய மனத்துட னமர்ந்து நல்வினை
நெறியுடன் புரிபவர் நிமலன் பேரருள்
உறவினை உரிமையி னெய்தி உற்றவெம்
பிறவியை யகன்றுபே ரின்பம் எய்துவார். (கூ0)

811. தான்புரி வினையிலுல் சாரும் இன்பமும்
ஊன்பரி துன்பமும் எனவு ணர்ந்துயர்
நோன்புடன் எங்கணும் நுனித்து நன்மையே
வான்பரி வுடன்செயின் வாய்க்கு மேன்மையே. (கூக)

812. பொருளினுல் இன்பங்கள் பொருந்த லாமென
மருள்வது மடமையே மனந லத்துறு
தெருளுரயர் புண்ணியச் செய்கை யேயின்பம்
அருளிநின் றிருமையும் ஆக்கும் என்றுமே. (கூஉ)

813. தூயநல் வினையிலுல் தொடர்ந்த செம்பொருள்
ஆயபே ரின்பினை யருளி ஆக்கமாம்;
தீயவெவ் வினையிலுல் சேர்த்த புன்பொருள்
நோயினை விளைத்துடன் நொய்தின் மாயுமே. (கூங)

814. இன்னதோர் உண்மையை யினிது ணர்த்தியே
முன்னமோர் நிகழ்ச்சிதான் முளைத்து நின்றுள
தன்னதை யின்றுமக் கன்பிற் சொல்லுவல்
பின்னதை யுணர்ந்துநீர் பேணிக் கொள்கவே. (கூச)

சுகதமன் கதை.

815. மகதநன் னுட்டிடை மருதென் னூரினில்
சுகதமன் என்றொரு தோன்றல் தோன்றினன்
இகலறு குணத்தினன் இனிய நீர்மையன்
தகவரு ளுடையவன் சால்பு மிக்கவன். (கூடு)

816. அன்னவன் றந்தையாண் டொன்றில் மாண்டனன்
அன்னையே அருளுடன் அவனை யார்வமாய்ப்
பன்னரும் வறுமையுட் பட்டும் பாடுபட்
டின்னலோ டுழந்துமே யினிது பேணினுள். (கூசு)

817. பருவயல்வாய் தெய்தவும் பரிபுரந் துதன்
அருளைவரும் முயல்படும் அவலம் நோக்கினன்
உரிமைமீக் கூர்ந்துள முருகி நொந்தனன்
கருமமங்கைக் கொண்டிடக் கருதி நின்றனன். (கூள)

818. சந்தண வன்னுமத் தாயை அன்புடன்
வந்தண செய்துபோய் வயலில் நின்றவோர்
சொந்தநல் லுழவனைத் தொழுது நானுனக்
கந்தமில் லுழியம் ஆற்ற வேன்என்றான். (கூஅ)

819. மதலைமென் மொழியொடம் மைந்தன் சொன்னதை
யிதமுறக் கேட்டவன் இரக்கங் கொண்டனன்
பதமுட னிருவெனப் பணித்துத் தன்பணிக்
குதவிசெய் துறும்வகை உறுதி செய்தனன். (கூக)

820. அவ்வகை யமர்ந்தவன் அரிய பாடுகள்
எவ்வமி லாவகை யியற்றி வந்தனன்
இவ்வகை ஆண்டொன்று கழிய இன்னவன்
செவ்விய நிலையினைச் சிந்தை தேர்ந்தனன் (ஈ)

821. மனநல முடனிவன் மருவி நின்றுள
வினைநலம் யாவையும் வியந்து நோக்கியே
அனையவன் அகமகிழ்ந் தன்பு ளோங்கிநின்
றினையவன் இன்புற எண்ணி யாற்றினன். (ஈக)

822. தனியொரு செய்யினைத் தந்து நீயிதில்
இனியவொண் கனிகளை இயற்றி வாழ்கென
மனனுவந் தவன்சொல மகிழ்ந்து கொண்டிவன்
வினைவிளை வினிதுற விளைத்து வந்தனன். (ஈஉ)

823. மாதுளங் கனிகளும் வருக்கை வாழைமா
ஆதிய கனிவகை யாவும் பேணியே
காதலோ டிவன்வரக் கனிந்து செல்வங்கள்
மீதுற நின்றன மிகவும் விஞ்சியே. (ஈங)

824. உறுபொரு ளணைத்தையும் உடைய வன்றனக்
குறவுடன் தொகுத்திவன் உரிமை யிற்றர
அறிவனும் வியந்தனன் ஐய அன்றுநான்
பெறுகென அன்புடன் பேணித் தந்தனன்; (ாச)

825. ஆதலால் நிலம்பொருள் யாவும் உன்னவே
காதலால் கொள்கெனக் கனிந்து கூறிமேற்
சாதன முதலிய செய்து சால்புடன்
ஈதலு மிவன்மரு தேதத்திச் சென்றனன். (ாஞ)

826. சென்றவன் தோட்டத்தைச் சேர்ந்து செவ்விதாய்
ஒன்றிய மரதுளங் கனியோ ரைந்துடன்
நின்றவப் பொருளையும் நேசத் தாயிடம்
அன்றுபோய்க் கொடுத்தனன் அடிப ணிந்துமே. (ாகூ)

827. பெற்றவள் நோக்கியே பெரிதும் விம்மிதம்
உற்றனள் வறுமைநோய் ஒழிந்த தின்றென
நற்றவப் புதல்வனை நயந்து கைகளால்
பற்றிமெய் நீவியே பரிந்து நின்றனள். (ாஎ)

828. அன்னையை அடிபணிந் தகன்று மீண்டிவன்
தன்னுயர் செய்யினைச் சார்ந் திருந்தனன்
இன்னவா றிவனுற இனிய நாட்டையாள்
மன்னவன் மகள்பிணி மருவி நொந்தனள். (ாஅ)

829. பதுமையென் பேரினள் பருவ மெய்தியும்
இதமுறு மணவினை யிகழ்ந்து கன்னியாய்ப்
பதமுட னிருந்தனள் பண்பு மிக்கவள்
புதல்வியிவ் வொருத்தியே புனிமன் போற்றினன். (ாகூ)

830. அக்குலத் தனிமகட் கண்ட வாயுவென்
றெக்கதோர் நோயுற வுளைந்து வெந்துயர்
மிக்கல மந்தனள்; வேந்தன் வேகமாய்த்
தக்கநூற் *பிடகரைத் தந்து பார்த்தனன். (ாகo)

---

* பிடகர் = வைத்தியர். அரசகுமாரி அண்டவாயு என்னும் நோயினால் வருந்தினள் ஆதலால் அரசன் ஆயுர்வேதியரை வருவித்து அந்நோய் நீக்க நோக்கினன் என்க.

881. நோயுறு நிலையினை நுனித்து நோக்கிய
ஆயுயர் மருத்துவர் அரசை நோக்கியே
வாயுயர் மாதுளங் கனிகள் வல்லியில்
வயுற வேண்டுமென் றிசைத்து நின்றனர். (ாகக)

882. எங்கணும் தேடியும் யாதும் எய்திலன்
அங்கவன் படுதிறம் அறிந்து தாயவள்
பொங்கிய அருளுடன் போந்து தந்தனள்
இங்கதைக் கண்டதும் வத்திக் கொண்டனன். (ாகஉ)

883. வந்தவக் கனிகளை யுடைத்து வாய்த்தசா
றுந்திய மருந்தினை யுதவ வுண்டவச்
சுந்தரி சுகமுடன் சுரந்தெ ழுந்தனள்
யுந்தகல் லருமையை யாச றிந்தனன். (ாகங)

884. கனிகளை யுதவிய கருணைத் தாயினுக்
கினியவவ் விடைக்கிடை தரள மீந்தனன்
அனையவை வந்ததை யறிந்து மூந்துறத்
தனையனை யழைத்தனன் தழைத்த அன்புடன். (ாகச)

885. மன்னவன் அழைத்திட மறுகி யன்னவன்
வன்னையே யினையென இனைந்துள் ளஞ்சியே
இன்னகை யொடாசனை யெய்தி யின்மொழி
பன்னியாய் புகைத்துமுன் பணிந்து நின்றனன். (ாகஞ)

886. வந்தவக் குலமகன் வாய்மை நீதியும்
சிந்தையி னைத்தையும் தெளிந்து சீரியோய்
இந்தகல் லாசிரை யின்று னக்குநான்
தந்தனன் வன்றனன் தனையை தன்னுடன் (ாகசு)

887. இம்மை யுஞ் நிருவினை யெய்த யன்முன்னம்
வம்மை யுஞ் *தவத்தினை யியற்றி னனெனவுஞ்
செம்மை யுறை வியம்பி யவ் வொருங்கு தாயுடன்
மும்மை யுலகு அரசினை வந்தி றைஞ்சினன். (ாகள)

---

* அழகிய பொன்னையும், அரசநிருவும் ஒருங்கே கிடைத்தமையால் இங்ஙனம் உபசரித்து அவன் உயர்ந்து கொண்டான்.

838. மனநலம் மாண்புடன் மருவி வாய்மையும்
விணநலந் தூய்மையும் மேவி நின்றவன்
நினைவரும் பேறெலாம் நிறையி னெய்தியே
அனைவரும் போற்றிட அமர னுவனே. (ாகஅ)

839. தீவினை வகையினுல் சேர்த்த செம்பொருள்
பாவிய கடலெனப் பரந்து நிற்பினும்
ஓவற ஒருங்கதை யிழந்து ஒல்லையில்
நோவினை யடைந்தவன் நொந்து போவனே. (ாகக)

840. வஞ்சின வழியினுல் வந்த வான்பொருள்
நஞ்செனப் பெருகியே நலையும் துன்பமும்
விஞ்சிட விளைத்துடன் விளிந்து போகுமே
பஞ்செரி யுற்றதோர் பரிசு போலவே. (ாஉ0)

841. இங்கிதை விளக்கவோர் இனிய காதையுண்
டங்கதைச் சுருக்கியீண் டுறைவன் அங்கநாட்
டெங்கம னூரினில் இலிங்கன் என்றுமேர்
தங்கிய ஒருவன்முன் சார்ந்தி ருந்தனன். (ாஉக)

இலிங்கன் கதை.

842. புல்லிய வுலோபமே பொருந்தி ஓர்வடி
வெல்லையி லெழுந்தென இயைந்து நின்றனன்
அல்லிலும் பகலிலும் யாரி டத்திலும்
சொல்லிலும் பொருளையே தொகுத்து வந்தனன். (ாஉஉ)

843. இனியவன் போலவே எவரி டத்திலும்
கனிவுடன் பேசுவன் கள்ள நெஞ்சினன்
நினைவெலாம் பணம்பணம் என்ன நீண்டுமே
கனவினு மதனையே கருதித் தூங்குவான். (ாஉங)

844. அடுத்து நின்றவர் தம்மை அமைதியாய்க்
கெடுத்தொ ழிக்கும் கெடுமதி யான்அரை
உடுத்த ஆடையும் உண்டியும் அன்றியே
மடுத்த வேறொன்றும் மாண்பின் மருவிடான். (ாஉச)

845. வட்டி யென்னும் வலையினை வீசியே
பட்டி வஞ்சங்கள் பண்ணிப் பழிவழி
ஓட்டி ஊரவர் ஒண்பொருள் யாவையும்
கட்டி வைத்துக் களிக்கும் களிப்பினன். (ாஉடு)

846. தாய்ப சிப்பினும் தந்தை வருந்தினும்
ளயு மன்போ டிரங்கி உணவிடான்
ஈயெ னப்பிற செய்திய போதிலே
நாயெ னக்கடுத் தேதறி நவிகுவான். (ாஉசு)

847. யாரை யும்எளி தாக விகழ்ந்துதன்
சீரை யேமிகச் சொல்லிச் செருக்குவான்
பாரை யாளும் பவுசுபெற் றுனென
மாரை யெள்ளி யுளங்களித் தோங்கினன். (ாஉள)

848. பிஸ்லர் கையிற் பொருள்வந்து சேரிலே
..யுல்லல் மற்றவர்க் காக்கி யனுதினம்
கல்லே யில்செருக் கேறுவர் என்பதை
மெல்ல வந்திவன் மேவி யுணர்த்தினன். (ாஉஅ)

849. அலைந்த பொன்னகை யீடுகொண் டார்வமாய்ப்
பலைங்கெ டுத்துப் படுவட்டி வாங்குவான்
தலைந்த வல்லேயில் மீட்டதத் தவறியோர்
கலைங்க ழிந்திடின் கையடித் தில்லென்பான். (ாஉக)

கோச்சகக்கலிப்பா.

850. இல்லாது பேபாசை யெய்திநின்ற இவனுளும்
வெல்லாது பலைநிந்து மிகுபொருளைப் பெருக்கிநின்றுன்
அல்லாது நிருவலைடந்தும் அறிவடையா தவமதிப்பே
வல்லாயும் பிறந்தீயாங்க இருந்பழியின் அகத்திருந்தான். ()

851. சுகையில்லார் இவ்வுலகில் இருப்பதிலும் இல்லாமல்
சாகையே கலிபெறும் நுகவுடையார் தேசிவந்த
வாகைபெறு நிதி தானையிலன்றுல் மன்னவழியே போவார்கள்
ஓகைபெறு நிதி யாய்ப்பேசி யுளம்பழித்துச் சென்றார்கள். (ாஉக)

852. யாரென்ன சொன்னலும் எவ்வாறு பழித்தாலும்
நேரொன்றும் பேசாமல் நினைவெல்லாம் பொருள்மீதே
வேரூன்றி மிகநின்றான் வெய்யகடு லோபியர்க்குப்
பாரூன்று பொறையுமொரு படியாகப் படியுமேம. (ாஙஉ)

853. படுபிசுனன் இவன்வீட்டில் பகற்பொழுதோர் சாதுவந்து
கடுவெயிலால் மிகவாடிக் கண்கலங்கிப் பசியென்றான்
கொடியவிவன் பழித்துரைத்துக் கோபித்துப் போவென்றான்
விடியுமுன்னே தெரியுமப்பா என்றவனும் வெளியகன்றான். ()

854. அன்றிரவோர் சத்திரத்தில் அமுதுண்டங் கமர்ந்திருந்தான்
கன்றுநடு நிசியினிலே கள்ளர்பலர் திரண்டோடி
ஒன்றியிவ னிற்புகுந்தார் உருத்திவனைப் பிடித்தடித்துத்
துன்றுபல துயர்செய்து சுட்டுநிதி காட்டென்றார். (ாஙச)

855. அடிபொறுக்க மாட்டாமல் அரையிலுறு திறவுகோல்
கடிதவிழ்த்துக் கைக்கொடுத்தான் கள்ளர்பொரு ளெல்லாமோர்
மொடியதனில் வாரியே நூக்கியிகழ்ந் தயலகன்றார்
விடியவந்து வூரவர்கள் வீட்டைவந்து பார்த்தார்கள். (ாஙடு)

856. பல்லெல்லாம் உடைபட்டுப் பழியடிகள் மிகப்பட்டே
எல்லையிலா வேதனையோ டிழிந்துகிடந் தலமந்தான்
இல்லாளும் ஒருமகனும் இடரடைந்தே யயலுளந்தார்
எல்லாரும் பார்த்துள்ளம் இரங்கினுமே உடன்பழித்தார். ()

857. பொல்லாத பாவியிவன் பொருள்சேர்த்துப் பூதம்போல்
கல்லான மனத்தேதர்டு காத்திருந்தான் இன்றிழந்தான்
கொல்லாது விட்டொழிந்தார் குலத்திருடர் நல்லரெனச்
சொல்லாத சொல்லெல்லாம் சொல்லியயல் தூற்றினின்றார். ()

858. எறும்புக்கும் ஈயானே எச்சிலுறு கையிதிர்ப்பின்
வெறும்புற்கை வீழுமென வெங்காக்கை விரட்டானே
தெறுங்கொற்கைக் கள்ளர்கொள்ளத் தெருமந்து தந்தானே
குறும்புக்கே தரும்பொருளைக் குணமுடையார்க் கருள்வாரோ?

861. பல்லுடையப் போட்டவர்க்கே பணிந்துபொருள் கைக்கொடுப்பார்
கல்லுடையும் கடுமனத்துக் கயவரென வள்ளுவர்முன்
சொல்லிநின்ற பொருளையின்று துகளறநீர் கண்டனமென்
றெல்லவரு மிதவியந்தார் இன்குறளை யேத்திநின்றார். (ாகூகூ)

860. நேற்றுவஞ்சி னார்தவமுனிவர் நேர்ந்திவன்றன் இல்லடையக்
கூற்றுவன்போல் குதித்திகழ்ந்தான் கொதித்தவரும் சபித்த
மாற்றிய அச்சாப வன்மையிலுல் வந்ததென [கன்றூர்
ஆற்றமொடு பலபேசி ஊரவர்க ளுறப்பழித்தார். (ாசo)

861. உள்ளத்தில் உலோபம்உள்ளான் உலகத்தில் அருவருப்பாய்த்
தள்ளாடு பொருளாகித் தாழ்ந்திழிந்து படுவானென்
றெள்ளியர்வா யுரைத்தபடி உற்றிவனும் இழிந்திதழிந்தான்
வள்ளியனே மகன்முன்னே இளித்திருந்தார் இன்றகன்றூர். ()

862. கப்பியிவன் தன்னிடத்தில் நயந்துபொருள் கொடுத்துநின்றூர்
தப்பியெனைத் துடித்துவந்து சூழ்ந்துகடன் தருகவென
வெப்பியிரு வைதிகழ்ந்து வீடுமுத லுள்ளவெலாம்
பறித்தகன்றூர் குலைநடுங்கி யிவனயர்ந்தான். ()

863. இல்லிழந்தான் மனையிழந்தான் இனியமகன் றனையிழந்தான்
பல்லிழந்தான் பகிழந்தான் பதியிழந்தான் படுபழிகள்
வல்லையிலா தெய்தியய லிடங்கள்தொறும் திரிந்தலைந்தான்
அல்லலுறு நிலையழிக்கொண் டுயிராய மாய்இறந்தான். (ாசக)

864. காதியற்ற வினைமாகி கஞ்சகர் எனும்பதியில்
வீதியினை யடைந்திருந்த வெற்றுடம்பை மற்றவர்கள்
ஆதியிய லிடமிதற்கே யுடைத்திவை யளித்தார்கள்
நீதியிலை யெனநினைத்தும் நிலைகலக்கி விட்டுவந்தார். (ாசச)

865. விரிதிரைகள் விரைகடலு விசையுலவுங்கள் மிசைவருந்தி
மரமதில் முதலாக வளங்களையு மறுவளைத்துஞ்
சிகையுயரை யாயிலைவள்ளைக் கடிநின்றூரன் செகுத்தபின்பு
நிகரறுநீர் நிலமாடையுடைய நிலமட்டொழிந்தார். ()

866. புண்ணியத்தால் வந்தபொருள் பொற்குடத்தி லிட்டுவைத்த
தண்ணியநற் கங்கையெனத் தலைமுறைக்கும் சார்ந்துவரும்
பண்ணியதீ வினையினால் பறித்ததுமட் பாண்டத்தே
உண்ணிறைத்த நீர்போல உடனெருங்கே ஒழிந்துபோப். ()

கலி விருத்தம்.

867. வினைவினை விவ்வகை விளக்கி நீதியை
எனைவரும் தெளிவுற எளிது ணர்த்திய
முனிவரன் றனைமனன் முறையிற் போற்றியே
இனிதமர்ந் திருந்தனன் இன்ப மெய்தியே. (ாசஎ)

868. வாரமொன் றகன்றபின் மாத வன்விடை
ஈரமோ டுசிடம் எய்திச் சென்றனன்
பேரறி வுடையவப் பெரிய வனுயர்
ஆரருள் நிலையினை யறிந்து வந்தனன். (ாசஅ)

869. சான்றவர் உறவினைச் சார்ந்து நின்றவன்
ஆன்ற பேரறிவினை யடைந்து யாவரும்
ஊன்றிய அன்புடன் உவந்து போற்றிட
என்றதோர் பெருமையை எய்தி வாழ்வனே. (ாசகூ)

870. மடமையும் கொடுமையும் மருவி யுள்ளவிக்
கடலுல கதனிடைக் கற்ற மேலவர்
இடரொடு வறுமையை எய்தின் மன்னற்கே
டடாது பழியுமேற் பற்றி யோங்குமே. (ாருO)

871. ஆதலால் கற்றவர் அருள மைந்துயர்
மாதவ ரிவர்களை மன்னன் என்றுமே
காதலால் போற்றுதல் கடமை யாமெனும்
நீதியை இவனுளம் நினைந்து நின்றனன். (ாருக)

872. சீலமும் தருமமும் தேர்ந்த கல்வியும்
சாலவும் வாய்ந்துதண் ணளிகொள் சால்புடன்
மேலவர் உறவினை மேவி மேன்மையாய்
ஞாலமின் புறவிவன் நண்ணி வாழ்ந்தனன். (ாருஉ)

873. மன்னவன் நீதியாய் மருவின் வையகம்
பொன்னுல காமெனப் பொலிந்து நிற்குமே
அன்னவன் தீயனேல் அவனி வாழ்க்கைமோய்
துன்னிய நமகெனத் தொடர்ந்து தோன்றுமே. (ாருங)

874. பயிர்களை யுழவன்கை பார்க்கும் பான்மைபோல்
மெயிர்களைக் களைந்துதன் தேச மாண்புற
உயிர்களைப் புரந்திவன் உவந்து வந்ததால்
அயர்களை யறிந்திலர் தொடர்ந்து நின்றவர். (ாருச)

875. மாதமும் மாரியாய் வான்பொ ழிந்தது
பூதலம் எங்கணும் பொன்கொ ழித்தது
யாதொரு துயரமும் இலாமல் யாவரும்
காதலங் களிப்பெனும் கடலுள் வைகினர். (ாருடு)

876. ஆருயிர் இன்புற ஆர்வ அன்னைபோல்
சீருற நின்றிவன் நீதி செய்யுநாள்
பாருல கெங்குமே பரிவு கூர்ந்திட
ஓரிடர் குடியினில் உற்று நின்றதே. (ாருசு)

திக்கு விசயன் தீர்வு.

877. திசையெலாம் வென்றுயர் திறலி ரேஞ்சிய
விசையன்பின் விண்ணிலை விறலி னெய்தலீவ
கசையெயாடு போயின னென்ன நாள்ஒன்றில்
இசையெயாடு சேகினன் எவரும் ஏங்கவே. (ாருள)

878. உலக நாட்டம் ஒடுங்கி உணர்வுறால்
மலர் மிசை யுறை மலர்வழி பாடுசெய்
நிலவு நிகர்ந்த வெறுப்பில மன்னவன்
அலகில் விஞ்சை அருளுங்கி லையர்திறைன். (ாருஅ)

879. கலைப் பிள்ளை கணைக்கிடக் கண்டநாள்
மலைப் பிள்ளை மறை முறை முகில்களைக்
கலைக் கொய்ய சுதர்களைக் கீதத்திய
சிலைக் கையர்தம் சேர்ந்து நிகழ்ந்தனன். (ாருகூ)

880. ஆவி மன்னன் அகன்றதும் அன்புடைத்
தேவி தீவிழு தேமலர்க் கொம்பெனக்
கூவி வீழ்ந்து குலைந்து துடித்தனள்
வாவி நீரற மாழ்கிய மீனென. (ாகூ0)

881. வெற்றி மங்கை விழைந்து தவழ்ந்துயர்
மற்ற டந்திருத் தோளே மணந்தவள்
உற்ற துன்பம் உயிரை யலைத்திடக்
கொற்ற வாவெனக் கூவி யலறினாள். (ாகூக)

882. ஐய னேஎன தாருயி ரேயெனைக்
கையி கந்து கரந்தது நீதியோ
செய்த தீவினை யொன்றுங் தெரிகிலேன்
உய்வ லேஎனி யென்ன உருண்டனள். (ாகூஉ)

883. மாசி லாத மதியுயர் மன்னவா!
ஆசை வென்ற அருந்திற லேஎன
தாசை யின்கனி யேயினி யென்றுநான்
தேசு யர்ந்த திருமுகம் காண்பனே. (ாகூங)

884. செந்தி னையகன் சீறடி நாளுமே
சிந்தை வைத்துப் பணிகின்ற செம்மலே
இந்த வாறிடை நீத்த தறிந்துநான்
நிந்தை யோடுற நின்றழு கின்றனே. (ாகூச)

885. உற்ற ஆவி ஒழிந்தபின் ஊனுடல்
பெற்ற பேறும் பெருமல் இழிந்துபின்
பற்ற மைந்திந்தப் பாரினில் வாழ்வனே?
கொற்ற வாவெனக் கூவிக் குமிறினாள். (ாகூஞ)

886. மற்றுந் தேவியர் யாவரு மண்டியே
பெற்ற சேவல் பிடியுணப் பேடைகள்
சுற்றி நின்று துடிப்பன போலவே
எற்றி யேங்கி யிரங்கி யழுதனர். (ாகூசு)

887. ஆயமுகக் களிறுகளும் அரசியர்கள் அனைவோரும் அலமந்தேங்கித்
தீதறுமுக மிலராகித் தீர்ப்பியறு துருளுங்கால் சேய்கள்வந்து
வேதமுக முரை யாயர் விம்மியறு தன்னையரை விலக்கி வேறே
மாதருமக் கொய்தகிலின் மறைகளைகள் வந்தரசை மாண்புசெய்தார்.

888. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ரசுஅ)

889. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ரசுக)

890. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ரளஅ)

891. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ரளக)

892. தந்தையெங்கே தாயெங்கே தாரமெங்கே தமரெங்கே
தனைய ரெங்கே
வந்ததுனை வாரெங்கே மாபெங்கே உறவெங்கே
வரிசை யெங்கே
முந்தவொரு கனவென்ன முன்றோன்றிப் பின்காணு
முறைமை யான
இந்தமய லியல்வாழ்வில் இறுமாந்து களிக்கின்றார்
என்னே யம்மா? (ாளஉ)

893. வேலாளர் வில்லாளர் விறல்வல்லார் எல்லாரும்
விழைந்து போற்றும்
தோலாத திறல்விசயன் தொலையாத நிலையேறித்
தோய்ந்தா னன்றே
நாளாளின் மேலாளாய் நாள்தோறும் நமரங்காள்!
நடத்தல் கண்டீர்!
தூளாய்ந்து சிலமுற்று நோன்பமைந்து வான்பதத்தை
நோக்கி நின்மின். (ாளஊ)

894. இன்றுள்ளார் நாளையில்லை எனஅல்லும் பகலுமே
யிழவுச் சொல்லை
நின்றிசைத்து வருகின்ற நிலையாத இவ்வுலக
நிலையை நோக்கி
நன்றறிந்து கடைப்பிடித்து நல்லருளைப் பல்லுயிர்க்கும்
நாடிச் செய்மின்
குன்றெறிந்த பரமனருள் கூடவரும் பேரின்பம்
கூடி வாழ்வீர். (ாளசு)

895. திக்கேறிப் பகைவென்ற திறல்விசயன் புரவிசயன்
தேசு வந்து
புக்கேறி யினிதமர்ந்து புனிதமுடன் தனியின்பம்
பொருந்தி நின்றான்;
இக்கேறு சிலமதனென் றெழில்மடவார் மடலெழுது
மியல்ப மைந்த
கைக்கேறு கொடையுடைய காவலன்இக் காசினியைக்
காத்து வந்தான். (ாளரு)

களஊ - நாலாளின் மேலாள் என்றது இறந்தபின் பாடையில் தூக்கிச்செல்லும் பாடு நோக்கி. இறந்து படுதலை நாளும் நேரில் கண்டிருந்தும் தம் உயிர்க்கு உறுதி தேடாமல் இருப்பது ஊனம் என்பதாம்.

806. அறவெறி வேந்த னிலைமை தனியொழுகி அகமகிழ
ஆக்கை கூறி
மறவெறியை மாய்த்து மனவெறியை நீக்கிசெய்து
மாண்பு கூர்ந்தே
உறவளவிலாச் சுற்றமென்றும் உலகமெலாம் இனிதியங்கும்
உவளை பீடமெய்த்
திறனுணர்ந்து இவ்வரசுக்கே செயல்வழியே குடி யமைவாம்
செழுங்குன்று நின்ற. (எஎக)

அரசாளு குடிபுரந்த படலம் முற்றிற்று.

ஆகக் கவி அசஅ.

கதிர் கதிரைத்து பயிர்களைப் பாதுகாக்கும் உழவன் போலப், பிழை கதிரைத்து அரசன் உயிர்களைப் பேணிவரவேண்டும்; யாண்டும் கொடுந்தண் டம் செய்யலாகாது; நூற்ற எண்ணங்கள் நெஞ்சில் படியாவண்ணம் நல்ல அறிவுரைகளை ஊட்டிக் குடிகளை உயர்த்தவேண்டும்; எளியனுயினும் மன வலியுடையவன் உயர்ந்து விளங்குவான்; செல்வனுயினும் உள்ளம் தீய வைல் வல்லாம் இழுக்கி இழிந்தொழிவான்; அறநெறியால் வரும்பொருளே புகழ் இன்பங்களை பொருந்த நல்கும்; பிறவழியில் வருவன பழி துயரங்களை விளைத்துப்பாழாயழியும். அருள் ஒழுக்கமுடையராய் எவர்க்கும் இனியன செய்தொழுகும் மனிதரே புனிதராய் நின்று பேரின்பம் பெறுவர்; என்பன இப்படலத்தில் கருதிக்கொள்ளத்தக்க உறுதிநலங்களாம்.

ஒன்பதாவது

திறைமறுத்த படலம்.

கும்பினியாருக்குத் திறைசெலுத்தாமல் திறலுடன் எதிர்த்து வீரபாண்டியக் கட்டபோம்மு மறுத்து நின்ற நிலைமையை உரைக் கின்றமையால் இது திறைமறுத்த படலம் என நின்றது.

---

897. இசையும் செல்வமும் இன்பமும் ஆட்சியும் ஓங்கித்
திசைகள் எங்கணும் புகழ்மணங் கமழ்ந்திடச் சிறந்தே
அசைவில் ஆண்மையோ டவனியை ஆண்டிவன் வருங்கால்
விசையில் மேர்ந்தீதார் இசைவிலை மேலினி விரிப்பாம். (க)

898. இங்கி லாந்திருந் தீங்குவந் தமர்ந்தகும் பினியார்
சங்கம் நாடொறுந் தழைத்தது செல்வமும் வலியும்
பொங்கி நின்றன போக்கொடு வரவுகள் பெருகி
எங்கு மேநில வுரிமைகள் தனித்தனி யிசைந்த. (உ)

899. இந்த மாநிலம் வழிவழி யாகமுன் ஆண்டு
வந்த மேரெலாம் வரன்முறை யாகமே யரசைத்
தந்து மங்கினர் கும்பினி யார்கொண்டு தகவாய்
முந்த வந்ததம் முறையினை மூண்டுமுன் புரிந்தார். (ங)

900. வணிக நீர்மையில் வல்லவ ராதலால் நிலங்கை
அணுக வும்அதை யம்முறை யாகமே ஆய்ந்து
கணிதம் செய்துமே காணியும் வழுவுறு வகையில்
நுணுகி மேல்வரி விதித்தனர் தொகுத்தனர் நுழைந்தே. (ச)

901. அந்த வாறவர் விதித்தமேதார் வரியினை யெவரும்
முந்த வேதந்து முணுமுணுத் திருந்தனர் இவன்பால்
வந்து கேட்கவும் நேர்ந்திலர் வருமுனை யிவணும்
சிந்தை கன்றியே யிருப்பதை முன்புறத் தெரிந்தார். (ஞ)

902. ஆளும் அந்நில யத்தினில் தலைவனு யிருந்த
தாளு ளான்ஒரு நாளவை கூட்டினன் சார்ந்தார்
நீள ஆய்ந்தனர் நிலைமையைத் தெரிந்தனர் நிலையாய்
நாளும் செய்வதை நவையறத் துணிந்தனர் நயந்தே. (ட)

001. ஆய மதுமை நாற்றுறு முப்பதாம் ஆண்டில்
தேவை வாய்வை யார்த் தேசினன் சென்னனென் றுரைக்கும்
மாய கள்வி டம்பெற்றதால் சென்னனென் றவன்றன்
தாய சூழ்வை யால்இது தோன்றிய தன்மேற. (எ)

002. இன்ன மாகுகர் தன்னிடை நந்தொழில் என்றும்
மன்ன மாவிரு தேகாட்டையை வணந்தனம் வாவும்
தன்னி கில்நது தொழில்களும் செழித்தன தொடர்ந்து
மன்ன நம்மை யாருள் வந்தன பதிகளும் கிடைத்த. (அ)

003. வங்கம் பெற்றனம் கலிங்கமும் அடைந்தனம் மகதம்
மைங்கள் வந்துகம் கையகம் புகுந்தது கீழைச்
சங்கம் இங்குள நாமிடலாம் கொண்டதா லினிமேல்
வங்கம் கம்அய சாட்சியே எனமகிழ்ந் திருந்தேகம். (கூ)

004. காவின் நித்துல வரியினை காட்டவ ரெவரும்
தாய நிந்நிடை துவந்துமுன் தந்தனர்; தயாமல்
மாய நம்நடன் கட்டபொம் மொருவனே மறுத்தான்;
மாய நம்மெய்வ தென்னினி யெனமனந் திகைத்தார். (கo)

005. மாண்பு காட்டினில் பாஞ்சையம் பதியையாள் வீர
பாண்டி யக்கட்ட பொம்மெனும் பார்த்திபன் நமது
வீண்டு கோளையும் விதியையும் மதித்திலன் வெறுத்து
மூண்ட கோபமாய் முனைந்துளான் முடிவறிந் திலமே. (கக)

006. அன்ன வன்பெயர் சொல்லினும் அந்தநாட் டுள்ள
மன்னர் யாவரும் மனந்திகில் கொள்கின்றார் மறந்தும்
சென்ன சொற்கவன் எதிரொன்றும் சொல்கில ரென்றால்
மன்ன வாறவன் றன்னையாம் அடக்குவ தென்றார். (கஉ)

007. இன்ற மன்னவர் திறையெலாம் நெறிமுறை திரட்டி
ஒன்றுங் கேண்மையில் நடாவினுக் கொருசிறி துதவி
மன்றுந் தன்னர சாய்நின்று வாழ்ந்தவன் இனிநாம்
சென்று தாவரி என்றிடில் சேர்வதென் குமோ. (கங)

ஈ. சென்னப்பன் என்னும் குறுநிலமன்னனிடம் சிறிது நிலவுரிமைபெற்று அதில் பண்டு கசாலையும் கோட்டையும் அமைத்துக் கும்பினியார் தம் வர்த்தகத்தை விருத்தி செய்து வந்தார்; அந்த இடம் அம்மன்னன்பேரால் சென்னபுரம் என வழங்கப்பட்டது. இப்பொழுது பட்டணமாயுள்ளது.

910. என்று பற்பல எண்ணியே திரிசிர புரத்தில்
ஒன்றி யுள்ளதங் கிளைச்சனைக் கோலியொன் றுய்த்தார்
சென்று பாஞ்சைமன் னிடம்திறை கொள்ளென்று தீட்டி
அன்று வந்ததைக் கண்டனர் ஆய்ந்தனர் அடைமேவ ; (கச)

911. நெல்லை யுள்ளதம் துணைவனுக் குய்த்தனர் ; உடனே
வல்லன் ஆலனென் றொருவனை அனுப்பினன் அவனும்
ஒல்லை வந்தனன் பாஞ்சையம் பதியினை யுற்றான்
எல்லை யில்லதோர் இருங்கவல் கொண்டயல் நின்றான். (கஙி)

912. அந்த மாநகர் அமைதியை அதிசயித் துவந்தான்
எந்த வாசலும் ஈட்டிவேல் வல்லயம் பிடித்த
சந்த வீரர்கள் சதுருடன் நிற்றலைக் கண்டான்
சிந்தை யுள்ளுற அஞ்சினன் திகிலுமேற் கொண்டான். (கசு)

913. மாட மாளிகை மணியினும் பொன்னினும் இமைத்து
நீடு மேடொளி நெடுநிலம் வீசலை நோக்கி
ஓட கப்பெரும் பதியிது வோவென வயிர்த்தான்
தேட ருந்திரு விதுவென மனமிகத் திகைத்தான். (கஎ)

914. ஏக மாய்வெளி யமைந்துள இந்தவோ ரிடத்தில்
போக பூமிபோல் பொலிந்துள திந்நகர் என்னே!
காக மும்பற வாதவன் கோட்டைமேல் என்ற
வாகை யார்மொழி வாய்மையே யாமென மதித்தான். (கஅ)

915. வீர மன்னனென் றுலகெலாம் பெயர்மிக வோங்கி
யாரும் நேரிலான் எனவுயர்ந் தமர்ந்துள இவன்றன்
சீரும் செல்வமும் திறலுமிந் நகரினுள் தெரிந்த
சார லெங்ஙன முன்னெனத் தயங்கினன் தணிந்தே. (கஙு)

916. தெற்கு வாசலை யடைந்துதான் வந்துள திறத்தை
எற்கு வேண்டிநீர் இறையிடம் உரைமினென் றிசைத்தான்
மற்க வாவிய மன்னவன் காவலர் அவனை
நிற்க என்றவண் நிறுத்தியுள் நெறிமுறை புகுந்தார். (உ0)

கஙி. நெல்லை = திருநெல்வேலி. அங்கிருந்து ஆலன்துரை கும்பினியின் வரியை வசூலிக்கும் பொருட்டுப் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தார். அப்பதியின் பெருமித நிலையை நோக்கி அதிசயித்து மறுகி நின்றார் என்க.

917. மன்னவன் முன்வந்து வணங்கிநின் றொடுங்கிவாய் பொத்தி
அன்ன வெல்லை வுணர்த்தினர் உணர்த்தவும் அரசன்
என்ன காரியம் யாரவர் என்றயல் நின்ற
சின்ன வெம்பரனே விடுத்துடன் அழைத்துவா என்றான். (உக)

918. வந்த வீரன்முன் னின்றவன் மருங்குவந் துசாவி
முந்த முன்மெயாடு சேர்ந்தனன் அரங்கமால் என்னும்
அந்த மாளிகை தனையடைந் தரசினைக் கண்டான்
தந்த மூதலம் தனிலினி தமர்ந்தெதி ரிருந்தான். (உஉ)

919. அரசரும் அண்ணலும் அமைதியும் வரையெனத் திரண்டு
தரையு மெயன்மெடாளிர் சேதாள்களும் தனித்தனி சோக்கி
விரையுலை கமழ்ந்துளம் வியந்தனன் சேவந்தனும் அவனைப்
பரிவு மன்மலர்ப் பண்புடன் பார்த்திது பகர்ந்தான். (உங)

920. வன்மெ முந்துசேர் வருவசீதா? யாதுகா ரியமோ?
இன்ம வன்குறிதன் இசைமினென் றரசினி திசைப்பத்
தன்ம சேமம்புலம் எமதிடம் கீழ்ப்புலச் சங்கத்
தென்னவன் காரிய மாயினெண் வந்தனன் என்றான். (உச)

921. இந்த மாலிலை முழுவதும் நாமிட மிருந்தே
வந்தன் கையகம் வந்துள தாகுசலாம் எமக்கு
முந்த சீவரை தந்துள தம்வரி மட்டும்
வந்த வாறிலை தந்தரும் மன்னவ என்றான். (உஞ)

922. என்ற வாசகம் கேட்டலும் இறையுளங் கொதித்து
கன்று கன்றுகின் வாயை கன்றென நகைத்தான்
என முன் கண்டிலாப் புதுமையியான் நின்றுகண் டேனென்
றெனவு நின்றதன் னளவிலை தெனவிரு வரைத்தான். (உசு)

923. வான மாமலை பொழிதரு மாலிலம் விசைய
ஆன சீபய சியான்புரந் தருளுவன் இடையே
மான மாகவம் தொருவரி தருகவென் றுரைத்தாய்
தான மன்னனிலை தருகுவன் திறையெனில் தாசன். (உஎ)

உச. சேம்புலம் = சோல்நாடு; என்பது இங்கிலாந்தை. கீழ்ப்புலச் சங்கம் என்றது ஸ்டு ஓங்கிய கம்பெனியை. புலம் = இடம்.

924. உழுது தன்குடி ஓம்புமோர் உழவனை போலத்
தொழுது காணிக்கை தந்துநின் சொல்வழி வாழ்தல்
எழுதுங் கீர்த்திசால் மன்குலத் தெம்மனோர்க் கென்றும்
இழுதை நீரதால் இனியிதை யெம்மிடம் இயம்பேல். (உஅ)

925. என்னின் முன்னவர் இசைதிசை பரப்பிமேல் நின்ற
பொன்னி லுட்டியும் புகழ்க்கொடி நாட்டிமுன் னிருந்தார்
பன்ன ருந்திறற் பாஞ்சையம் பதியதி பதியாய்
இன்ன நாளில்யான் இருந்துளேன் இறையுளந் தாழேன். (உக)

926. முன்ன வர்க்குமுன் னகிய முருகன்எம் பெருமான்
தன்ன டிக்கலால் தரணியில் மற்றுள எவர்க்கும்
மன்னன் என்றிரு மணிமுடி வணங்கிடா தென்வாய்
சொன்ன சொல்லையும் வழுவிடா தெழுமையும் துணிபே. (உஎ)

927. அரசை யாள்பவர் அடியராய் வாழ்தலும் உண்டோ?
புரசை யானைமேல் போபவர் பூனைபோ லுவரோ?
வரிசை யாலுயர் மன்னர்தம் மரபினில் வந்தோம்
வரிசெய் யென்றுநீ உரைசெயல் வழிவழி இழிவே. (உக)

928. இனிய நல்லுயிர் தன்னினும் எமக்குயர் மானம்
புனித மாதலால் அதனையே போற்றிமுன் வாழ்வோம்
மனித வாழ்வினை ஒருபொரு ளாகவே மதியேம்
தனிய தெம்வழி யவ்வழி யென்றுமே தளரேம். (உஉ)

929. நாற்பத் தேழுநற் றலைமுறை யாகவே நாங்கள்
ஏற்ப நின்றிந்த அரசினை யின்புற வாண்டு
வேற்ப ரன்அருள் மேவியே வருகின்றோம் எவர்க்கும்
பாற்ப டாத்திறை என்பது தந்திலம் பணிந்து. (உங)

930. என்று மேயிலா வழக்கத்தை எம்மிடம் புதிதாய்
இன்று வந்துநீர் இசைத்திடல் ஏனமே யன்றோ?
நின்று நீதியை நெறிமுறை நோக்குநீர் ஆய்ந்து
நன்று நாடியே நண்புடன் அமைவது நலமால். (உச)

உங. இத்தலைமுறை விவரங்களைப் 'பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம்" என்னும் வசன நூலில் 14ம் பக்க முதல் காண்க. பால்பட=பகுதியாக.

081. தாவ்வி றந்ததன் னிலத்திணைத் தலத்திருந் தாளும்
பூகாவ்வி றந்துயர் கோக்குடி யதனிடை வந்து
காவ்டி றந்துளேன் நலம்பல புரிந்துளேன் நடுமே
காவ்ட றந்துநீர் வந்துகால் ஊன்றுதல் கடனே? (கடு)

082. கன்னிலைக் காப்பது கவிந்துள இமையன்றி அயலே
கன்னலி யுள்ளன நயந்துடன் காக்குமோ? பிறந்த
பன்னிலைக் காப்பது வந்ததிற் பிறந்தமன் குலத்தோர்க்
பெகான்றது மேயன்றி ஒழிந்தவர் செய்வரோ உரிமை. (கக)

083. நிலையை யாய்ந்தின்று தாணியை ஆளுவேம்; அந்த
நிலையை குன்றினுல் நீணிலத் தொருகணம் வாழேம்;
புலையை யாளரைப் போற்றிமுன் வாழ்த்துவேம்; பொல்லா
நிலையை யாளரை நீறுசெய் தாழ்த்துவேம் என்றான். (கஎ)

084. நிலைபெயன் றின்றுநீர் வந்தனிர் சிறிதுகாட் சென்றால்
நிலைபெயர்ந் திங்கமர்ந் திருந்தெமர் தலைமிசை யேறித்
தலைபரித்து றும்பல வரிகளைச் சுமத்தியிக் காட்டின்
நிலையை றிந்தநீர் நிறைவுற நெடிதுமுன் சூழ்ந்தீர்! (கஅ)

085. கன்று கன்றுநாம் வஞ்சமும் ஆசையும் காட்டில்
லுன்று நின்றுயிர் வயிர்களை யுறிஞ்சிட வற்றீர்!
இன்று மங்கையை யிரங்கியிங் கிடங்கொடுத் தேனேல்
வென்று வீசுநா டெங்ஙனை மிழிவுட னெழுமே. (கக)

086. எனைய மன்னரைப் பொருங்கிறுஞ் ஈவதே யல்லால்
பினைய யாம்வைகு பிலைபால செய்துமே மாளாய்
வாழ வன்னவர் பீடு வகுப்பமாய் நின்றுள நுமக்கோர்
கூழும் தங்நீர் பிறவு முடுநரி தெனல்நரேர் கூறித்தான். (சஎ)

087. எனைத்து மாயினும் பீடர் மன்னை யன்னரும் நிகைத்தான்
தனைக்க பிலையில் வீரனன் நுமக்கன்னை பீடுகாண்
நினைத்த பிலையில் வளரனை யாய்பீடு காண இன்றும்
கனைத்து வன்னமாய்க் கன்னி கா பிலம்நகர் கடிந்தான். (சக)

ஈ கூ. தன்னுடைய கிளை அல்லாத மன்னனை பிடிக்காவிட்டால் அந்திய அரசு உரிமையும் மன் பிடிக்கும் என்பதாம். இதில் கூறிக்கொள்ள உவமை நிலை வைக்கு ஏற்ப பொருள் மாற்றத்தை வைத்து உணர்ந்து கொள்க.

938. இற்றை நாள்வரை யாவர்க்கும் யாதொன்றும் செலுத்தான்
வெற்றி வீரனுய் நின்றனன் இன்றுநாம் வந்து
சொற்ற தாலிது சொற்றனன் என்செய்வ தென்று
மற்று மோர்மொழி மறுகினன் மனந்துணிந் துரைத்தான். (சஉ)

939. உள்ள பாலையப் பட்டெல்லாம் உதவுறும் வரியை
எள்ளி யில்லையென் றுரைசெய்து விடுவிசேல் எமரால்
தள்ள ரும்படை மூண்டுவெங் துயர்மிகத் தருமால்
வள்ள லேயதை யறிந்தருள் என்றவன் வகுத்தான். (சங)

அறுசீர் விருத்தம்.

940. நீண்ட வெம்படை மூளுமென் றவன்சொன்ன
நெடுமொழி தனைக்கேட்டு
மூண்ட கோபனுய் நிமிர்ந்துகண் சிவந்தின்று
முடிந்தன னிவனென்மேற
ஆண்டு நின்றவர் அஞ்சிட ஆண்டகை
அவன்றனை முகநோக்கி
மேண்டி யான்சொன்ன வாசகம் உணர்ந்திலை
வீண்மொழி பகர்ந்தாய்நீ. (சச)

941. உன்னை யுய்த்தவர் குறித்ததை யுரைத்தனை
யுனக்குநான் இதுகாறும்
சொன்ன வுண்மையை நினைந்துபோ யவரிடம்
சொல்வதே கடனன்றிப்
பின்ன மாகநீ வேறொன்று பேசுதல்
பேதைமை யாமன்மேற
என்ன வாறிந்த இடத்தினி னடப்பென்ப
தெண்ணிமுன் னெய்தாதாய். (சரு)

942. வரியை வாங்கவந் தவனுயிர் தன்னையே
வாங்குவன் இவனென்னும்
பெரிய வன்படி வருமென்று பொறுத்தனன்
பேணிமுன் னுரைசெய்து
அரிய வுண்மையை யாதும்நீ யறிந்திலை
அரசியல் பறியாதாய்
உரிய வன்குல மேலவர்க் குரையவர்
உணர்வொன் றுரைசெய்தான். (சகூ)

048. சீறி யிம்மொழி கூறலும் அவனுளந்
திகில்கொண்டு திகைப்புற்று
சேலறு கூறிலன் வேர்த்துட னெழுந்தனன்
வெளிவர வெருவுற்றான்;
மாயி லாவலி யயல்நின்ற வீரரை
மன்னவன் முகம்நோக்கிக்
கூய வந்தவன் யாதும்நீர் செய்களீர்
கொண்டுபோய் விடுமென்றான். (சஎ)

ஆலன் அகன்றது.

049. இந்த வாறவன் வெளிவந்து பயமகன்
சீறுவான் நெஞ்சுள்ளே
வந்த வாறிவன் றனைவசப் படுத்துவ
தெளப்பி லநினைவாடே
வந்த வாறுகண் வழியினைக் கூடினன்
வருந்தற்பாண் மீக்கூர்ந்தான்
பந்த சீலமென்று நெல்லையை யடைந்தனன்
றூண்வை சொலலுற்றான். (சஅ)

050. ஆலையும் விளையையும் அருந்திறல் நிலைமையும்
அளவிடலரிதாகி
சீலமும் விளங்கையில் நிலைத்துமேம நிமிர்ந்துள
சிகையும் தலையெல்லாம்
வாளின் விளங்கவைக் கிளைசெய்து நின்றவன்
வாயிறு நிருநீலமாடு
கோலமும் விளங்கவன் கடுஞ்செயும் பாஞ்சையில்
கலங்கியுரைத்து வரும்பின்றூன். (சக)

051. கல வாயுந்துள நிலையையும் தலையையும்
கலையையும் பிடிபோல்கின்றி
கல சிகையும் பிடி மறையும் நிறைதுளும்
சிலையின் மாண்புகளும்
நல வாளின் மன நுங்கள் நிலைத்துள
நிலையையும் துரகமையும்
மல வாளரிமன மஞ்சுமையும் மதியுந்துப்
மலங்களும் மதியாமின். (ஙo)

947. அன்ன மன்னவன் தன்னையான் கண்டனன்
ஆதரித் திருப்பீந்தான்
என்ன காரணம் இவண்வந்த தென்னவும்
இறைவரி யுரைசெய்தேன்
சொன்ன போதவன் துணைவிழி சிவந்தன
துடித்தன புருவங்கள்
இன்னம் அன்னதோர் நிலையினை யெண்ணினும்
என்னுளம் திகில்கொள்ளும். (நிக)

948. திறையை யீவது சிறுமையென் றெண்ணியே
சிந்தையிற் சினமீறி
முறையி கந்தவர் எனநமை யிகழ்கின்றான்
முந்துற நாமிங்கே
யுறைய வந்ததும் உற்றமர்ந் திருப்பதும்
உளமென் றுருத்தெங்கும்
குறைகள் சொல்கின்றான் குடியுற விடுவது
கோதெனக் கொதிக்கின்றான். (நிஉ)

949. பிழைக்க வந்தவர் பெரும்பொருள் கவர்ந்தனர்
போவா வடனெங்கும்
அழைக்க முந்திய விருந்தெனப் புகுந்துநாட்
டமர்குடிக் கினிதாயீண்
டுழைக்க வந்தவர் போல்நடித் துளவறிந்
துட்பிள வுடனூக்கித்
தழைக்க நின்றுதந் நலம்கரு தினமென
தவறுகள் குறிக்கின்றான். (நிங)

950. இங்கு வந்துள நம்மவர் தமையெலாம்
இறையுமே மதியாமல்
தங்க வந்தவர் வாணிகம் செய்துதாம்
சார்ந்தநற் பொருள்கொண்டு
வங்க மேறியே போயொழி யாமலென்
வதிந்துளார் எனநாளும்
பொங்கி நின்றுளான் நம்மிடம் திறைதந்து
புகலடைந் தமர்வானே? (நிச)

951. வாலி சுற்செய்ய வந்தவர் மண்ணெலாம்
வலைந்துபின் அரசாகிக்
காலி யாகவே கைக்கொள நினைந்துதாம்
கருதிய வாறெல்லாம்
மீலி யாவரும் பின்வரும் வகைசெய்து
விருதுகின்னர் எனநம்மை
வீலி லீலியிகழ்ந் தமர்ந்துளான் ஐயனே
மெய்யிதென் றுரைசெய்தான். (நிநி)

952. ...லவன் மொழிந்திய வுரைகளைக் கேட்டனன்
அகமிகக் கணன்மேறுங்கி
மீலை வாக்கினன் நிலைகளை விரித்துமே
லிலையிதான்று வரைந்துய்த்தான் ;
வல மீலையா லிருந்தவர் தம்முட
னிலைசந்துபம் பலசூழ்ந்து
கால மீலைத்துமேல் வருவதை நோக்கியே
கமுந்தூல னிருந்தானை. (நிசு)

953. ...னவ னம்பலன் ...ங்கமைமந் திருந்தனன்
...லையிலை வந்திவந்து
...னவ னவன்றனைச் சுளித்தயல் விடுத்தபின்
...ந்தூல மலைமீசாடு
...னவ னிலங்கையு மந்நிலம் மருவினன்
...ருகிலை வந்திலைத்தே
...னவ னம்பலன் வன்னிலை யென்பதை
...னியிலைவன் இலைசுன்றார். (நிஎ)

...வது திறைமறுத்த படலம் முற்றிற்று.

...ருகுகவி ...றுக.

67. மந்திரம் மருவினன் என்றது, வரி வாங்க வந்த ...லவன்துரை வழி நின்ற பிள்ளையின் பற்றை ...ற விலக்கி சபை கூட்டி மந்திரா லோசிய செய்தலையாம். ...தின ...ற்ற படலத்தில் காண்க.

பத்தாவது

மந்திரம் புரிந்த படலம்.

கும்பினிக்குத் திறைதர மறுத்துநின்ற இம்மன்னர் மந்திரி பிரதானி களுடன் கலந்து அந்நிலையினைக் குறித்து ஆலோசனை செய்த வகை யினை உரைக்கின்றமையால் இது மந்திரம் புரிந்த படலம் என நின்றது. மந்திரம்=ஆலோசனை. புரிதல்=விரும்பிச்செய்தல். அரசகாரியங்களைத் தனியாக அமர்ந்து உரிமையானவர்களுடன் நுணுகி ஆராய்தல்என்க.

---

954. வரியென ஆலன்முன் வந்து போனபின்
அரியென அமர்ந்தருள் அரசன் அன்புடன்
உரியநல் லறிஞரை ஒன்று கூட்டினன்
பெரியதோர் மந்திரம் பேசல் மேயினன். (க)

955. மன்னவர் மன்னராய் வாழ்ந்து வந்தகம்
முன்னவர் முதலிது வரையு முன்னிலாச்
சின்னவோர் திறையெனும் சிறுசொல் எம்வயின்
இன்னதோர் காளினில் எய்த நேர்ந்ததே. (உ)

956. உத்தர திசையிருந் துயர்ந்த மன்னர்கள்
எத்தனை போனிவண் எய்தி நம்முடன்
ஒத்துற வாகியே உவந்து போயினர்
இத்திசை காவலும் எய்தி நின்றுளேம். (ங)

957. ஆரவாய் மொழிவரை யாதும் கள்ளங்கள்
சேரலா வகையென்று நின்று காத்தருள்
கூரவே வரைந்தன்பு கூர்ந்து நம்மிடம்
சேரர் காவலருமே செம்பொ னீந்துளார். (ச)

958. தஞ்சை மன்னனும் தஞ்ச மென்றுமுன்
வஞ்ச மின்றியே வந்த டைந்தனன்
அஞ்ச லென்றவற் கருளி யன்னவன்
வெஞ்சி னப்பகை விலக்கி விட்டுளேம். (ஞ)

959. எத்திசை எம்மன்னர் எவரெம் மாட்சியில்
பத்திமை கொண்டிலார்? பாரும் வானுமே
ஒத்திசை புரிந்திட உயிர்க ளின்புறச்
சத்திவேற் பரனருள் தாங்கி ஆள்கின்றேம். (ஃ)

000. அஞ்சலிய நாட்டினின் றடைந்த வர்க்குநம்
மஞ்சலியல் வரன்முறை மதிக்க லாகுமோ?
புஞ்சலிய வரவையே முழுது நம் எண்ணுவார்
பஞ்சலிய பழைமையைப் பார்த்து நிற்பரோ? (எ)

001. ஏ நருளை வரியென உதவி குற்பின்பு
வருவை நமபெலாம் வணங்க நேருமே
கருவை நோதிலே கலைய லாவிடின்
உருவை நோதிலே உலைய லாகுமே. (அ)

002. தஞ்சலிக நிலாதவோர் தலைவன், சார்ந்தவம்
புஞ்சலை வருள்கொண்ட முனிவர், ஞானியர்,
இஞ்சலவர் தவையலால் எவரை யுந்திறல்
பஞ்சலவர் பெரியரா வணங்கி நிற்பரோ? (கூ)

003. அரிய வை யுலைவந்தகாம் அயலி ருந்திவண்
புரையறு வந்தவர் பொங்கி நீக்கிடா
நிலையமாய் நகல்லமென் றெண்ணி நின்றனம்
வலியிய வந்தவர் மலை றிந்திலர். (கூ)

004. விஞ்சுதவ மஞ்சுதவிர் சேமதி னிக்கணை
வெஞ்சுதவ மீஞ்சுதாய் விளங்கி யுள்ளவர்
மஞ்சுதவ நஞ்சுதர்சீ ரால் வரிகள் தந்துபின்
புஞ்சுதவ வெஞ்சுவாறு பொருந்தி வாழ்வரோ? (கூ)

005. நிலையிலை யுயிர் வெயிலையும் சேர்ந்த வீதுகம்
இலையுலையுமக் கலக்கவும் இருந்து வந்தகம்
புலையுலையுமக் கலக்கவும் புலன்ட தாதலால்
வெலையுலையும் நீயு நெஞ்சுதீர் வெறுந்துர் தொலைம்மினே. (கூ)

அயோமுகி வருகை.

006. வலம்ப மாலை வலையும் இருந்தவர்
மலம்பி நீயை மிதித்தலால் உலைந்தவை
கிலம்ப கிலம்ப வெருவுறுவை வெரிவிலை
கலம்ப கலம்பு மனமுறும் வரவே. (கூ)

மந்திரிப் பிள்ளை பேசியது.

967. வெள்ளை ஆட்சியில் வேட்கை மிகுந்ததால்
வள்ள லேவரி என்னும் பெயரினல்
கொள்ளை செய்யக் குறித்தனர் என்றுமுன்
பிள்ளை மந்திரி பேசினன் முந்தியே. (கச)

968. எந்த நாளும் இலாத வழக்கத்தை
இந்த நாளயல் நின்றிவண் வந்தவர்
முந்த வேசெய நம்மிட முந்தினர்
நந்தம் ஆண்மையை நாடி யறிந்திடார். (கஞ)

969. வங்க மாதி வடதிசை நாடெலாம்
தங்கள் கையகம் சார்ந்தமை யால்திசை
எங்கும் தங்கொடி நாட்ட எழுந்தனர்
சிங்கம் இத்திசை யுள்ளது தேர்கிலார். (கசு)

970. வயிற்றை யிங்கு வளர்த்திட வந்தவர்
பயிற்றி நின்ற படுவணி கத்தினல்
எயிற்றி லேறிய ஈறென ஏறிமண்
குயிற்றி யாளவும் கூர்ந்தனர் தேகலீம. (கஎ)

971. ஐத ராதி அரசரை வஞ்சித்துச்
செய்தி ராத செயல்களைச் செய்தனர் ;
வைதி ராவகை யும்வழி வாட்டினர்
உய்தி சோவென் றுணர்வோர் சபிக்கவே. (கஅ)

972. கெஞ்சி ஞரிடம் மிஞ்சுவர் ; கேள்வலி
மிஞ்சி யேறி மிடுக்குட னின்றிடில்
கொஞ்சி வந்து குலாவுவர் ; தேகளுறின்
வஞ்ச மீறி வாம்பில செய்குவார். (ககூ)

973. சிறியதுக் கினியது காட்டல் போற்சில
குறுகிய நோக்கினர் தமக்குக் கொள்பொருள்
செறிவுடன் கொடுத்தவர் சிறந்த நாட்டினை
அறிவுடன் கவர்ந்தனர் அமைதி யாகவே. (உ0)

974. எட்டியின் கனியென இனிய காட்சியர் ;
கட்டியின் பாகெனக் கனிந்த பேச்சியர் ;
மூட்டிடின் முள்ளதை யுரியும் சூழ்ச்சியர் ;
பட்டியற் வஞ்சமே பயின்ற மாட்சியர். (உக)

975. பிள்ளைக் கண்டு புனல்மண்டு பான்மைபோல்
கள்ளைக் கண்டு கரவுடன் இங்குளார்
உள்ளைக் கண்டே உரமுடன் ஏறினர்
வெள்ளம் கண்ட வரவை விழைந்தனர். (உஉ)

976. உள்ளுற எண்ணிய வுறுதிக் கேற்பவே
எள்ளுறும் வரியினை யினிமை யாகவே
பெள்ளவே விதித்தனர் மேலும் நம்மிடைக்
கொள்ளவும் துணிந்தனர் குணமொன் றோர்ந்திலர். (உங)

977. ஆளையாய் மொழிவரை ஆட்சி கொண்டஅ
சீளையர் முலிகெலாம் நீதி கண்டுயர்
வீளையும் வடனமர் வேந்த னென்றவர்
வாளினை விடண்ணலர் ஏற நின்றனர். (உச)

978. பிறியரம் யிங்கிலம் புகுந்து நுந்தவர்
கறியரம் கிலமிக நிடிர்ந்து நேரவும்
அறிவரம் யாளவர் அவாவி னாசைத
மறியரமாய்ப் பெரிய துரும் மருங்கு மண்டினர். (உஞ)

979. வானிலை யுயர்நதி வகைத்து மேறிக்கன்
தீகாவிரிசை விலைங்கிலைவாய் நுனிந்து வாழ்ந்திட
நுலைப்ப தறிலைவ வற்ற வெள்ளோயர்
சுலைப்ப வெடுத்தகவர் புரிய வகண்டகவர். (உசு)

980. கண்ட வர் வானையும் கவர்ந்து கைகளர்
பெருண்ட வர் ; நீகாக்களாய் நுனிந்து நிகற்றனர் ;
தண்டிய வரிச்சலை சார்ந்து வந்துவர்
மண்டிய மண் மிடத்திலும் வாங்க வந்தனர். (உஎ)

981. ஈர்க்கிடை புகாமலே யிருந்த தாயினும்
நீர்க்கிடை விடினது நெடிது பாயுமால்
பார்க்கிடை தலைமையிற் பதிந்தி ருந்தநாம்
யார்க்குமே வரிதால் அழகன் ரூமரோ. (உ-அ)

* சின்ன பொம்மு பேசியது.

982. என்னமுன் னவன்சொல எதிரி ருந்தநற்
சின்னபொம் மெனும்பெயர்ச் செம்மை யாளனம்
மன்னவன் சின்னையா மதிகொள் மாண்பினன்
அன்னவன் அறிவுரை அமையக் கூறினன். (உ-கூ)

983. தெலுங்குநன் னாட்டிடை யிருந்து தீர்ந்திவண்
மெலிந்தமென் கிளையொடு மேவி வந்தனம்
மலிந்தமெய்ப் பானருள் வாய்த்த மாண்பினல்
பொலிந்தளிவ் வாசினைப் பொருந்தி நின்றனம். (உ-எ)

984. வழிவழி யாகநாம் வந்திவ் ஆட்சியைக்
கழிபெருஞ் சிறப்புடன் கருதிக் காத்தனம்
இழிவொரு சிறிதுமே என்றும் எய்திலேம்
பழிவரி யொன்றின்று பற்ற நேர்ந்தமே. (உ-ஏ)

985. காலத்தின் விளைவையும் கருத்தன் செய்வினைக்
கோலத்தின் நிலையையும் குறிக்க யார்வல்லார்?
ஆலத்தை அமிர்தென ஆக்கும் பொய்யினை
மாலொத்த மெய்யென மயக்கும் மாயமே. (உ-ஐ)

986. இன்னதோர் இடத்தினில் இன்ன காலத்தில்
இன்னதோர் மனிதனுக் கின்ன நேருமென்
றின்னதோர் முடிவினை எவர்முன் தேர்ந்துளார்
அன்னது நேர்ந்தபோ தறிந்து கொள்வமே. (உ-ஒ)

987. வழிமுறை யிலாதவோர் வழக்க மின்றுநம்
வழியிடை வந்ததா வருந்து கின்றனம்
இழிவுறும் அதனைநாம் இனிய நீர்மையோ
டொழிவுறச் செய்தலே உரிமை யாகுமால். (உ-ஓ)

---

* இவர் ஜமீன்தாருடைய சிறியதந்தையார். சிறந்த அறிவாளி. பெருந்தன்மையுடையவர். செம்மை=மனக்கோட்டமின்மை. நேர்மை என்க.

008. ஆதியாய் மாமறையாய் அருளெனித் தந்தனை
நீதியாய் நீண்மொழியாய் வினையிலாய் ஈண்டனம்;
மூதியா அமலை யாய்ந் தருதுயர்ச்சி நீவ்மாகா
மாதியாய் வினைகளாயின் மாய்த்தனர். (கூடு)

009. வாலறிவ முதலாயினோய் வாழ்த்து நினைவாய்
காலனிய (இ)க்காயம் வகுப்பு மிகவும் பூம்
நீலமிய வானவிலை வென்ற நிறத்தை யுடையாய்
மாலையிலை மாயிருளை மாய்த்த நீலவிளையாய். (கூசு)

010. முகிலுயரு நீண்முடி முதல் முழுவுயிர் வாழ்நிலைச்
சகலமுமு வாழ்வளிக்கை தனிமையை யாகுமீவ
அகல்வான வாய்ந் முயலுந்தியு மறிந்து கொள்வதே. (கூஎ)

011. இல்லாமை யாண்மீள இகலே பிக்கொண்டு
வில்லாளர் மாயமீள வெருக்கி நின்றிடில்
வல்லவிலை விரைந்தாமெனத் துயர்மி குந்திடும்
அல்லாவாய் இயல்புரிந் தாற்றல் ஆண்மையே. (கூஅ)

012. வினையிழுது நாட்டினில் இருந்து வந்தவர்
கனியிலென் முவர்களை இகழ்ந்து வெந்திறற்
கனியுடன் கதித்தநாம் கடுத்து நின்றிடின்
இனியவை யாகில லென்றுந் துன்பமே. (கூகூ)

013. மாசிலாயர் பட்டெல்லாம் பணிந்து கப்பத்தை
நாசிலையென் னுமேல நல்கி நின்றன
ஆசிலாயா! ஆண்டுகள் ஆறு நம்மிடம்
சேவிலையை நோக்கியே விலகி நிற்கின்றார். (சய)

014. நறைமலர்த் தொடையுடை நவாடுக் காகநாம்
முறையொடு திறையினை முன்னம் வாங்குங்கால்
மிறைசெய நேர்ந்ததை மிகவும் எண்ணியே
குறைகிலர் கூறியே சேகாள்கள் செய்துளார். (சக)

க கூ. இகல்=பகை, மாறுபாடு. பகை இயல்பு படுதுயர் விளைக்கும் ஆதலால் துன்பம் என்றார். "இகலானும் இன்னை வெல்லாம்" என்பது பொய்யா மொழி. என்றும் என்றது வலியராய் ஓங்கியுள்ள பொழுதும் இகல் ஆகாதென்பதாம். இதனல் அவரது மனநிலை புலனும்.

995. நாடெலாம் நபாவிடம் நயந்து கொண்டபின்
பீடெலாம் பெற்றுயர் பெருமை யாளராய்
ஈடிலா நிதியினை யீட்ட எண்ணியே
கூடியீண் டடைந்துளார் குலாவி நீண்டுமே. (சஉ)

996. முன்னுறு வரவினை முதலி ழந்தனம்
பின்னரும் வரிதரும் படிக்குப் பீழையாய்
இன்னவர் வந்துளார் எனினும் உண்மையைத்
துன்னிநின் றுரைத்தவர் தொடர்பு கொண்டுமே; (சஙு)

997. மாண்டநன் னபாவிடம் மருவி முன்னநாம்
ஈண்டிய நண்புட னிருந்து நாட்டினை
ஆண்டது போலவே ஆளல் ஆண்மையாம்
பாண்டியா! என்றவன் பரிந்து கூறினன். (சச)

சேனபதி ரணசிங்கன் சொன்னது.

998. எனஅவன் மூடிக்குமுன் இரண சிங்கெனும்
வனைகழல் வீரன்முன் வணங்கி நின்றுயர்
வினைநிலை யாவையும் விளக்கிப் பின்புதன்
மனநிலை முழுவதும் வகுத்துக் கூறினன். (சஙி)

999. இந்தநாட் டுரிமையை எய்தி யாவரும்
எந்தையென் றேத்திட இனிது காத்துயர்
முந்தையோர் வழிமுறை முன்னிலாததை
வந்தவேவார் அயலினர் வகுக்க நேர்ந்தனர். (சஙூ)

1000. வாளமர் வலியினை வாய்ந்து காண்கிலர்;
ஆளமர் வலியினை ஆய்ந்து தேர்கிலர்;
தோளமர் வலியினைச் சூழ்ந்து நோக்கிலர்;
தாளமர் வலியையே தாழ்ந்து நோக்கினர். (சஎ)

சஙூ. பாளையகாரரிடமிருந்து வரிகளை வசூலித்து நபாவுக்கு அனுப்புவதில் ஒரு சிறு பகுதி இவருக்கு உரிமையாயிருந்தது; கும்பினியார் இதுபொழுது நேரே அச்சமீன்களிடம் திறைகொள்ள நேர்ந்ததால் அவ் வரவு குன்றியது; அத்துடன் இவரிடமும் வரி தரும்படி அவர் வந்துள்ளமையால் இங்ஙனம் நொந்து கூறினர். முன்வரவு இழந்ததோடு இன்னலும் புகுந்ததென்பதாம். பீழை=பீடை, துன்பம். துன்னி=நெருங்கி. தொடர்பு உறவு.

1001. கார்முகை கீயாலை வினைவை காட்டிஞர்
வீர்முகை வெளிந்தகவர் வெளியில் வந்துமேல்
சீர்முகர் தலைவராய் நிரிந்து நின்றனர்;
நீர்முகை நீயகன்சுகள் வெதிர்ந்து நோதலை. (சஅ)

1002. நீதவன்மை நீலவரைத் தலைசக மாயினர்;
வனவரிக்கும் வலை கவரை யுவல்முக் கூர்மையர்
வானவரும் வீரரைப் வயங்க வாயினர்;
நீதவரும் வாயை யாய் நிகர்ந்து நீயினர். (சக)

1003. காவினைசூழ் தகரைப் வெகள்ளெயில் கா நிலை
மாவை யுந்தி யுயர் மன்னெகள வைகினர்;
மாவை யாய்ந்து மாகர் மறித்தனர்
கூவி யுயிர்வரி கூறும் தகத்தரோ? (ஙo)

1004. ஐவர்பெரு வரியெல வேசயின் காளேய
ரிவர்பெரு வரியெலை நேருரும்; நீளேவ
லெவர்பெயல் வரியெனச் சேரும்; சேரவே
லவர் முரீர வெரியாய் யிருக்க வேறுமால். (ஙக)

1005. ஆருயிர் வரியென அடைந்த போதினே
நாருயிர் கடனெனக் கழறிப் பின்னரும்
நூருமுன் நுரைச்சிங்கம் என்னும் ஒண்டிறல்
சீருகு வடையவன் விளம்பல் மேயினன். (ஙஉ)

துரைச்சிங்கம் சொன்னது.

1006. ஆண்டகை அரசே! அடியனேன் கூறும்
அமைதியை அருளுடன் கேட்டு
வேண்டிய நலனே விரைந்துடன் புரிக
வெள்ளையர் எனநின்ற மேலோர்
தாண்டருங் கரிய தடங்கடல் கடந்து
தங்கினை யுடனிவ ணடைந்து
மீண்டதோர் சங்கம் நிறுவிவா ணிகங்கள்
நிலைபெறச் செய்தனர் நெறியே. (ஙங)

1007. இந்தநாட் டுள்ள இனியநற் பொருளை
இசைவுடன் பெற்றவ ணுய்த்தீத
அந்தநாட் டுள்ள அரியபற் பொருளை
அடைவுடன் கொணர்ந்திவண் பாப்பி
வந்தநாட் டொடங்கி வணிகநன் முறையை
வழுவுறச் செய்துவந் ததனால்
எந்தநாட் டவரும் வியந்திடப் பொருளும்
இசைகளும் எய்தியீமல் நின்றார். (நுச)

1008. முன்னுறப் * போர்த்துக் கேசியர், பின்னர்
முனைந்துடச் சென்பவர், அதன்பின்
மன்னிய பிரஞ்சு நாட்டினர், அதன்பின்
மருவிய ஆங்கிலர் முறையே
இன்னநன் னாட்டில் வாணிகம் செய்தீத
யிரும்பொருள் எய்திட வந்தார்
அன்னவர் தம்மூட் பின்னுற வந்த
ஆங்கிலரே முத லானார். (நுந)

1009. கருமமே கண்ணுய்க் கருதிநின் றதனால்
கருதரும் பெருமைகள் பெற்றார்
மருவிய விந்த நிலதலத் தினையாள
மனத்திலும் நினைந்திலர் என்றே
திருமலி சந்திர கிரியா சிடம் போய்ச்
சேர்ந்துதா மிருக்க ஓரிடமே
உரிமையா வேண்டி நின்றனர் அவனும்
உதவினன் உவந்தனை யடைந்தார் (நுஅ)

1010. அன்னவர் வாழிடமே சென்னையாம் அந்த
அரும்பதிக் கப்பெயர் எதனால்
மன்னிய தென்னின் சென்னன்னன் துரைக்கும்
மன்னனுக் குரியதால் என்றும்
இன்னநற் பெயரால் இருக்கவென் றிசைத்தீத
யின்புடன் இருந்தனர் செல்வம்
துன்னிமேல் வளர்ந்த நிலவளங் களையும்
தொடர்ந்துடன் சேர்த்தனர் துணிந்தீத. (நுக)

---

* போர்த்துக்கேசியர் the Portuguese, டச்சு the Dutch, பிரஞ்சினர் the French, ஆங்கிலர் the English. ஐரோப்பாக் கண்டத்திலுள்ள போர்த்துக்கல் (Portugal) முதலிய தேசங்களிலிருந்து இங்கு வந்துள்ளமையால் இவ்வாறு வேறுவேறான பேரோடு அவர் விளங்கி நின்றனர்.

1011. வெருவரு வினைகள் வெய்யவர் வருவினைவற்று மடிய
வெருவரு கதிரோன் வம்சமே யென்ன
மருவரு மன்னர் மன்னவர் மன்னன்
வையகம் புரக்கும் வண்மையும் வலியும்
வெருவரு கீர்த்தி வெண்குடை நீழல்
கொண்டு கோலொடு குடிபுரந்து
அருவரை யனைய வாண்மையும் பெற்றோன்
அயோத்தி யாளுமோர் அரசன்.

1012. வரவெல்லாம் வரவன் றழுவிய மழலைச்
சிலம்பு மணிக் கிலகாமல் மெல்ல
மலர்மல ரிதழ்த்தி விரிகதி ரிளஞ்சூ
ரனையவன் முகத்தில் வாய்ப்பவும்
நிலவுமுக மலர்ந்து முறுவலித் தெதிரில்
நெடுமொழி பயிற்றுங் கதலைப்
பிலமறி பிதுரங்கள் பேசுக்க
மனைவியர் மழலை தானையே புகழ்வ
தலையவர் விலகுவழி யயர்வே.

1013. மக்களைப் பயந்தார்; இருந்தவர் தாழ்ந்தார்;
வழிவழி யாகவே யரசு
புக்கவர் யாண்டு முழுவதும் நின்று
பொடியிலை நீதுவரை வந்தார்?
அந்தமில்லாங் நில்லா ஒருவனே என்றும்
அறிஞரும் புகன்றரு ளாடல்
தந்திரு ளரிர் கின்றன் இந்தமா னிடங்கள்
தந்தம தெனைக்களிக் கின்றார்.

1014. ஆலையல் லுரிமை யமைந்ததால் நாட்டை
யடைந்துள அரசர்கள் தம்மால்
கேலுடன் வரிகள் தரும்படி விதித்தார்
கேட்குமுன் தந்தனர் அவரும்
மீளவும் முறையில் நம்மிடம் வந்தார்
நேர்ந்துநம் முறைமையை யுரைத்துத்
தோள்வலி மறைத்துத் தோழமை கொண்டால்
துணையென அணைத்துளங் களிப்பார்.

1011. காரன்வாலிஸ் (Lord Cornwallis), வாரன் ஹேஸ்டிங்ஸ் (Warren Hastings) என்பவர் வங்காளத்தில் கவர்னராயும், கவர்னர் ஜெனரலாயும் இருந்து கருதிமுயன்று கும்பினியாருக்கு வேண்டிய உதவிகள் புரிந்தவர்.

1015. மன்னராய் நீண்டு மருவிமுன் னிருந்த
மகம்மதி யர்கள்செய்த முறையை
இன்னவ ரிட நாம் இதமுட னுரைத்தால்
இறையிலை வரையறை செய்வார்
பின்னமாய் வேறு பிழைகளைப் பேசிப்
பிழைக்கவந் தவரென இவரை
மன்னவா! இகழ்தல் நன்றல வென்றுன்
மனநல முடையவன் மதிமான். (கூஉ)

1016. இந்தவா றந்த மதிமகன் இனிதா
இயம்பவும் இறைமகன் எதிர்ந்து
முந்தையோர் முதலா வந்தநம் அரசின்
முறைமையை ஒருசிறி தேனும்
சிந்தையோ ராமல் சிறுமையா யெண்ணிச்
சிறுமொழி பலபுகன் றுள்ளார்
எந்தவா றவரோ டினிமையாய் இனிமேல்
இதமுடன் வாழுவ தென்றுன். (கூங)

கலிநிலத்துறை.

1017. வண்டன் என்றெனை வாய்மதம் பேசியே வந்து
கண்டு நின்றவ ரிடமெலாம் கடும்பழி பகர்ந்தார்;
மண்ட லம்புரந் தருள்பவன் என்பதை மறந்தார்;
தொண்ட னென்னவே துடுக்கொடு நினைந்தனர் துணிந்தே.()

1018. யார்க்கு மேயடங் காதவன் என்னவும், அடர்ந்த
போர்க்கண் ணைநிதம் பொங்கியுளேன் என்றும், பொல்லா
மூர்க்கன் என்றுமே முடிவின்றி யிப்படி முரணிப்
பார்க்கண் ணைபழி பரப்பியென்பரிசினைக் குலைத்தார். (கூடு)

1019. ஆதி யாகிய அறுமுகப் பரனருள் கொண்டு
நீதி யாகிய நெறிமுறை நிலைபெற நின்று
கோதி லாவகை குடிகளைக் காத்துளேன் இங்கே
ஏதி லார்எனை ஏதமே யியம்பினர் இன்றே. (கூசு)

1020. என்று மேவழி வழியர சாகிய என்னை
இன்று வாணிகம் செயவந்தார் இகழ்ந்தன ரென்றுல்
நன்று நன்றுநம் குலமுறை தலைமுறை யாக
நின்று வந்துள மேன்மையும் நீர்மையு மென்றுன். (கூஎ)

1021. [illegible] மறுவிலாப் பணைங்கொடுஞ்சங் கையினில் வந்தால்
அணங்கு மாகலீ தலைமகிழ்கொண் டகமிகச் செருக்கிக்
கணங்கு வாவிலையாய் வாய்மைதுஞ் சீரிலாய கானி
லெனங்கு சீவகயற் கழுவி யழி வொல்லாய்கொல்கொடியோர். (கூ)

1022. லொளிவே யாகையால் வினைகையற் வுபாயமற் விற்றுக்
லொளிவே யாகலீ லெவரையுங் கூட்டிகார் பின்பு
வளவ வாவிய வஞ்சக மாகலீ மதித்து
லெளிவே யாளரீகள் சீவதினி யாவரும் விரைந்தார். (கூக)

1023. இந்த நாட்டினில் உள்ளவர் யாவருஞ் ஆண்மை
சிந்தி யாவரும் நீர்ந்துபின் னூர்எனத் தேர்ந்தார்
வந்து வண்டியிட் டிறிஞ்சியும் மண்சுவை கண்டார்
முந்து வண்டிய முதல்வரை முதல்கொள முனைந்தார். (எ0)

1024. வீர முள்ளவர்க் குரித்திந்த மண்ணெனும் உண்மை
தீர மேவைத்து பெருங்கர வுடன்புகுந் தமர்ந்தார்;
வார முள்ளவர் வஞ்சனை வல்லவர் இங்கோர்
சார மில்லவர் இருப்பதாய் இருப்பிடங் கொண்டார். (எக)

1025. அட்டை மூட்டைகள் அப்பிநின் றுதிரத்தை யுறிஞ்சி
கட்டி வீங்கல்போல் ஈங்குள மன்பதை தம்பால்
பட்டி யாய்ப்பல வரிகளீ விதித்ததிர் பறித்துக்
கட்டி வீங்குவர் இதனையார் கண்டுகாப் பவரே? (எஉ)

1026. இந்த நாட்டுள அரசுகள் ஒன்றினே டொன்று
முந்த நாட்டிய பகைமையும் பொருமையு மூண்டு
வெந்த காட்டெரு வெனநிலை விளிந்துள அதனுல்
எந்த நாட்டவ ரும்மிதை எய்திட விரைந்தார். (எங)

1027. இந்தியா வெனும் இந்தநன் னாட்டிடைப் பிறந்தார்
முந்தி யாவரும் வியந்திட முறைபுரிந் திருந்தார்
சிந்தி யாமலே சிலர்நிலை திரிந்ததால் அயலார்
வந்தியாவையும் வளைந்தனர் விழைந்தனர் வாழ்வ. (எச)

1028. ஊனிருக்கவே யுயிரினை வாங்குவார் போல
வானிருக்கவும் வளநிறைந் திருக்கவும் வளைந்த
கோனிருக்கவும் எங்கணும் வறுமையே குடியாய்த்
தானிருக்கவே வந்தனர் நின்றனர் தழைத்தே. (எடு)

1029. வாணி கத்துறை வல்லாய் வஞ்சமும் சூதும்
பேணி எம்மவர் பெரும்பொருள் குறும்புடன் கவர்ந்தார்
காணி யாகவும் இந்நிலம் கைக்கொள விழைந்தார்
தூணி லாமனை யெனநுழைந் தவாவிமேல் நின்றூர். (எசு)

1030. மேலை நாட்டவர் கீழைநாட் டிடைவந்து தமது
கோலை நாட்டவும் கொடியினை நாட்டவும் குறித்தார்
மாலை நாட்டிய மனத்தவர் மதியிடை யெமது
வேலை நாட்டியே எந்நிலம் எமர்க்கென விதிப்பேன். (எஎ)

1031. ஆண்டு நின்றவா மாணபொன் றும் அறிந்திலர் அவாவே
மூண்டு வந்தனர் முன்னுள நிலையெலாங் குலைத்தார்
வேண்டும் பல்பொருள் வானினர் மேலிடம் விரித்தார்
நீண்டு நின்றனர் நித்தலும் நிலைத்திட நினைத்தார். (எஅ)

1032. கடல்வ ளர்த்துமுன் காட்டிய தீவொன்றி லிருந்து
குடல் வளர்த்தவெம் பசியினுக் கஞ்சியுட் குலைந்தே
உடல் வளர்த்திட வந்தவர் உளமிகச் செருக்கி
அடல் வளர்த்தநம் ஆட்சியை அலைத்திட அடர்ந்தார். (எக)

1033. வந்த வெள்ளநீர் இருந்தநன் னீரினை மடித்து
முந்த வேநிலை யாகிய தன்மைபோல் மூண்டே
இந்த வெள்ளையர் வந்திவண் இருந்தவர் தம்மைச்
சிந்த வேசெய்து தேசங்கள் எங்கணும் நின்றூர். (அ0)

1034. தங்க ளிடம் கேட்டனர் தங்கிப் பின்னர்
வங்க மாதிவண் தேசங்கள் வளைந்தனர் விழைந்தே
எங்கு மேயதி காரங்கள் செய்திட எழுந்தார்
இங்கு வந்திவர் அடைந்தது போலெவண் அடைந்தார்? (அக)

1035. சீல மறிய பிழைசங்க விடையாளர்க் துள்ளார்
மால மறிய இழுக்குவலம் வகைகளை காளுடம்
சால தொகுசீலை வியக்கவிய்ல் வரிகற்றிடை இவர்காம்
வன மயல்லை வற்றுகம் மினைமையை யொழிந்தார். (அஉ)

1036. வெல்சின வல்லையாய் வெளியினில் விளங்கிய சீயனும்
உல்லை யரக்கருக் தாவிலையம் கானினில் வளர்ந்து
கல்ல சீலமும் கருத்தினை யாதலால் இலமை
வெல்ல சீயரை வென்றுகல்லும் விலக்குதல் நன்றே. (அங)

1037. உள்ளி நுக்குலையம் சீகளினிலை யுளைறிந் துரைத்துத்
தள்ள நுய்ல்லைக் தாவிலை ச் சதுருடன் மூட்டி
மூள்வி தாயை வெளாங்கிலின் றுதவுவார் சோலக்
கள்ள மயல்லை ச் சூலந்தாயர் துள்ளதைக் கவர்ந்தார். (அச)

1038. அரிக்க மறிய உரு ழுறு நிருகங்கள் ஒருங்கே
சரிய மயல் லன் வளர்ந்திடும் பெருமையை சோக்கிக்
கரிய வெற்சுகக் கள்ளெநெஞ் சுடையதாய்ப் பிரித்து
கரிபுன் பெய்தவோர் செயலேய யிவர்நயந் துள்ளார். (அஙி)

1039. அல்லி யரைந்தின்முன் எட்டப்பன் ஆய்ந்துபோய்ச் செய்த
சீலம்பு சோளுக்கும் கோளுக்கு மிசைந்து வெல் என்பான்
சீல்ல - நம்முடை ஆட்சியி லிருந்தவூர் இரண்டைக்
சீல்டுசேர்த்தனன் மீண்டுநாம் கொண்டனம் கிளர்ந்தே.(அசு)

1040. அந்த வன்சினம் நெஞ்சினி லுடையவவ் வெட்டன்
வந்த வெள்ளைய சிடமெலாம் வணங்கிவாய் பொத்தி
வந்த வேலையும் எம்முயர் நிலையினை யிகழ்ந்து
நிந்தை செய்துளான் சொந்தமா யவனையுட்கொண்டார்(அஎ)

1041. சோளும் வஞ்சமும் நெஞ்சிடம் கொண்டுள அவன்றன்
நாளும் புன்பழி நயந்தவ ருடன்புகுந் துறவாய்
வேளை நோக்கியே வெந்துயர் விளைத்திட நின்றான்;
வாளை நோக்கியே வாய்க்கிரை வைக்கநான் நின்றேன். (அஅ)

---

* வெல் என்றது கர்னல் மேக்ஸ்வெல்லை. (Lieut. Col. Maxwell) இவர் கும்பினி அதிகாரம் பெற்று கி. பி. 1792ல் செட்டில் மெண்டு ஆபீஸராய் இந்நாட்டில் வந்திருந்தவர். இவரது வரலாற்றைப் "பாஞ்சாலங்குறிச்சி சரசரித்திரம்" என்னும் வசன நூலில் 59ம்பக்கத்தில் காண்க.

1042. இன்ன வண்ணமிந் நாட்டினில் புகுந்திழி நிலையில்
துன்னி யுள்ளவர் சிலருடன் தொடர்புகொண் டுயர்வாய்
மன்னி யுள்ளநன் மன்னவர் மாட்சியைக் குலைக்க
முன்னி நின்றனர் இன்னவர் முறைமைதான் என்னே.(அகூ)

1043. ஆடு தானனைந் தலமரு கின்றதென் றேநாய்
வாடி யேயினைந் தழுதது வஞ்சமாய் எனமுன்
நீடி நின்றதோர் பழமொழி போலிவர் நமது
நாடும் மக்களும் நலமுற வந்ததா கவில்வார். (கூ0)

1044. எந்த வேளையும் வர்விலே கண்ணராய்த் தமது
சொந்த நன்மையே கனவிலும் சூழ்ந்திடும் துணிவோர்
இந்த நாட்டினுக் கினியராய் இதம்பல செய்ய
வந்த தாச்சொலும் வாய்ப்பசப் பறிபவர் யாரே. (கூக)

1045. இந்நி லத்தினி லுள்ளவர் எவரையும் தாழ்த்தி
எந்நி லத்திலும் இலாதவெங் கொடுமையை யிங்கே
மன்னி டச்செய மதித்தனர் அம்மதி மறந்து
பின்னி டச்செய்வேன் பிழையிடச் செய்திடேன் பிறழ்ந்தும்.

1046. என்று வேந்துரை செய்யவும் இருந்தவ ரெல்லாம்
நன்று நன்றென உவந்தனர் வியந்தனர் நயந்தார்;
ஒன்றுங் கேண்மையில் விடைகொடுத் தவையிடையெழுந்து
வென்றி மன்னவன் தன்திருக் கோயிலுட் புகுந்தான்.(கூஙூ)

கo-வது மந்திரம் புரிந்த படலம் முற்றிற்று.

ஆகக் கவி கoசசு.

[illegible] படலம்.

[illegible] திறை செலுத்த [illegible] சென்னையில் கும் [illegible] உரைக்கின்றமை [illegible] படலம் என நின்றது. சங்கம் என் [illegible] துணையை கூறல் — ஆலோசித்தல்.

1045. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (க)

அனிமிசன் பேசியது.

1046. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (உ)

1047. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ங)

1048. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ச)

1049. [illegible]
[illegible]
[illegible]
[illegible] (ஞ)

1950. மற்றுள அரசர்கள் வரியை வாங்கியே
ஒற்றுமை யாகவே உதவி நம்மிடம்
உற்றதோர் இனியலுய் உறைந்து நிற்பனேல்
பெற்றதோர் நிலையினைப் பேணி வாழலாம். (சூ)

1951. யாரையும் மதித்திலன் ஆண்மை மீறியே
வீரமே பெரிதென விழைந்து நின்றுளான்
வாரமொன் றிவனிடம் வாங்க வில்லையேல்
பாரெலா நமைமிகப் பழித்து நிற்குமால். (எ)

1952. எட்டனென் றிருமன்னன் இவன்றன் நாட்டையல்
ஒட்டிநின் றுளனவன் றன்னை யூறுகள்
மடடிலா வகை செய்து வருகின் றனனெனக்
கட்டுகள் வருவன கணக்கி லாதவே. (அ)

1953. தனியர சாகவே தருக்கி நிற்கின்றான்
இனியொரு கணமூகாம் இழந்தி ருப்பமேல்
துனிமிக வளர்ந்துமே துயர்கள் தோன்றுமென்
றனிமிசன் என்பவன் அறைந்து நின்றனன். (கூ)

வெபு விளம்பியது.

1954. அவன் அமர்ந்தபின் அதிகலே * வெபுவெனு மதிமான்
சுவை ததும்பிய மொழியினன் விஜயநலஞ் சூழ்ந்து
நவை யறப்பல வுறுதிகள் நலமுற நவின்றான்
கவன மாகக்கேட் டனவரும் கரைந்தனர் இருந்தார். (கா)

1955. இருப தாகிய வருடங்கள் நபாவிட மிருந்து
ஒருப தாகிய தீதசங்கள் உரிமையிற் பெற்றோரும்
வருவ தாகிய வரியொன் றும் இவனிது வரையும்
தருவ தாயிலை தந்தது மில்லையே யென்றும். (கக)

1956. கலிங்கர் தோய்ந்தனர்; கருநடர் அடங்கினர்; தெடுநாட்
டுலங்கி நின்றவெங் துலுக்கரும் ஒடுங்கினர்; மராடர்
தெலுங்கர் வங்கர்கள் கொங்கர்கள் சோர்ந்தனர்; தென்பால்
இலங்கு பாஞ்சைமன் ஒருவனே யிடாதெதிர் நின்றான். (கஉ)

---

* வெபு (Joseph Webb) என்பவர் கும்பினித் தலைவருள் அப்பொழுது காரிய நிர்வாகியாயிருந்தார். சிறந்த இராஜ தந்திரி.

1057. [illegible]
[illegible]
[illegible]

1058. [illegible]
[illegible] (சக)

1059. [illegible]
[illegible] (சங)

1060. [illegible]
[illegible] ()

1061. [illegible]
[illegible] (கள)

1062. [illegible]
[illegible] (கஅ)

1063. புதிய மாகிய நாமிந்த நிலத்தின்றன் போக்கை
அதிக மாகவே யின்னும்நன் கறிந்திலம் ஆன்ற
மதிவல் லாரொடு பழகியே மக்கடக் நிலையின்
கதிய றிந்துகை கண்டபின் காலிடல் கடனே. (கக)

1064. பண்ட மாற்றியே வந்தநாம் பரிந்துழுன் புரிந்து
கொண்ட வாற்றலைக் கூரிய அறிவொடு கலந்தும்
மண்ட லந்தனை யாண்டுயர் நிலையினை வழியாக்
கண்ட போதுன்றிக் கரைகண்ட காகுமோ கருதின். (உ)

1065. அக்கரைக்கணை யமர்ந்துள நம்மவர் எவரும்
இக்கரைக்கணை யிருந்துள நமக்கென்றுந் திறமாய்ப்
பக்கம் வந்துதேர் பரிந்து நின்றுதவுதல் பலியா;
தொக்க நாமும்நம் சூழ்ச்சியும் அன்றியே துணையார்? (உக)

1066. நாட்டி லுள்ளவர் தமக்குநாம் நலஞ்செய வந்த
கூட்டம் என்டதைக் குணமுடன் துறைதொறும் தெளிவாய்க்
காட்டி மேல்நின்ற காலத்தின் நிலையையும் கருதி
நீட்டி நின்றுள இவனிடம் நெருங்குதல் நெறியால். (உஉ)

1067. பகையை யாக்குதல் என்றுமே நன்றன்று பண்பாய்
நகைபு ரிந்துநன் னயம்பட மொழிந்துமே நலமாய்
வகைசெய் வாரென அறிவுறச் செய்துநம் கையில்
தொகை வரும்படி செய்வதே சூழ்ச்சியின் துணிபால். (உங)

1068. நம்ம யல்நின்று நம்முடன் வந்தவர் நமக்கே
வெம்மை பற்பல வினைத்தனர் பிரஞ்சுடூப் பினை*தான்
அம்ம செய்தமோ பார் அருந்துயர் யாவரே யறியார்
செம்மை யாகவு மின்றுநா மிருந்திலம் திறமாய். (உச)

1069. நின்று நங்கினை நெடிதிவண் தணைத்திட நேர்ந்து
வென்றியுங் *கினை வெலும்டெயர் மேலவன் முன்னம்
ஒன்றி லுங்கினை யாமலே உரம்பெற உழைத்து
நன்று செய்ததால் இன்றுநாம் இருப்டதை நயந்தீதம். (உஞ)

உக. அக்கரை என்ற ஐரோப்பாவை. கடல் கடந்து செல்லும்படி வட்டகின்றுள்ளமையால் சுட்டு சேய்மை குறித்து நின்றது. இக்கரை என்றது இந்தியாவை.

* டூப்பினை (Dupleix) என்பவர் பிரஞ்சு தேசத்தின் பிரதிநிதியாய் இந்தியாவில் வந்து சிறந்த செல்வாக்கைப் பெற்று கி. பி. 1742 முதல் புதுச்சேரியில் கவர்னராயிருந்தார். ஆங்கிலேயரைத் துரத்திவிட்டுத் தமது தேச ஆதிபத்தியத்தை இந் நாட்டில் நிலைநிறுத்த நெடிது முயன்றவர்.

*கினைவ் (Lord Clive) இவன் இந்தியாவில் ஆங்கில அரசாட்சிக்கு அடிகோலி அரண் செய்தவன். அஞ்சா நெஞ்சினன். இவன் இறந்தது, கி. பி. 1774 நவம்பர் மாதம் 22ந்தேதியில் (22-11-1774) என்க.

1070. அல்லை விடுவரம் இறங்கிய பத்தரான் காண்டு
துல்லி யிவ்வரை வகைகளும் இடர்களும் தொடர்ந்து
முல்லி வந்தவை* பலபலவி முடிவிலே முண்டு
வெல்லி யிவ்வுதவி வாவென் றழைத்து வந்தனரே. (உக)

1071. மூதி லிளவரசனை நேரிழை பிறந்தவரை யரசர்கள்
வேத வாயினை நீதமுறை அரு மங்கல நிலவிடல்
வேய வாலிழை விரைபரி தரு வினைமுனி வியற்றிய
வாய நீலிலை வரிவிழி மடவரல் வகுத்தனள் வண்மையால். (உஎ)

1072. வானக வாயினை வாழ்த்தின வெறிந்தன மேனலும்
ஞானக வாயுயர் நீகாடகன் என்பது கேட்டாம்
மீனக வாயினை யறிவையை யிதமுறப் பேசின்
ஆனக வாதரவால் இகைத்தவன் இறையையு மீவான். (உஅ)

1073. வாரி யுலகினை வாழ்முறப் பெற்றதும் நம்மூன்
நீகாரி யுலகண்டவர் குலைந்துமுன் சென்றதும் குடிகள்
நீரி யுலர்வெண் நிலைத்துமேல் வருவதும் நெறியே
காரி யுலவலன் கைவரக் காண்பதே கருமம். (உகூ)

1074. ஆசைய வாறவன் இனியவாய் வினைநலஞ் சூழ்ந்து
காசைவி லேலிக நிலைபெற நெறிமுறை யுரைத்தான்;
ஆசைய வாய்மொழி கேட்டவ ரனைவரும் அடைவே
விசைய ரிதென வியந்தனர் நயந்தனர் விழைந்தார். (உகூ)

1075. யாரை எவலாம் இவனிட மெனநெடி தாய்ந்து
நீர மானவன் சேனையிற் பலமுறை நின்று
வீர மாவினை செய்தவன் விரகறி வுடையான்
சார மானவன் சாக்கசன் ஒருவனே என்றார். (உகூ)

---

* வெல்லெசி (Wellesley) என்பவர் சிறந்த போர்வீரர். நெப்போலியனை நிலை குலைத்தவர். கும்பினி ஆட்சியை இங்குத் தலைமையாக நிலை நிறுத்தினவர். டியூக் ஆவ் வெல்லிங்டன் (Duke of Wellington) என்னும் சிறப்புப் பேர் பெற்றவர். மன்னி என்றது நிலைபெற்ற நிலையை.

1076. அன்ன வன்றனை வரவழைத் தமைந்துள வெல்லாம்
முன்ன தாகவே முழுவதும் தெளிவுற வுணர்த்தித்
தென்ன னுட்டினில் கட்டபோம் மெனப்பெயர் சிறந்த
மன்னன் டால்வரி வரவில்லை வாங்குக என்றார். (கூ உ)

1077. நெல்லை எல்லையில் நிறைந்துள காரிய மெல்லாம்
நல்ல தாகவே முடித்துநம் வரிகளைத் தொகுத்து
வல்ல பாஞ்சையம் பதியினை மதிமிக வூட்டி
மெல்ல வேதிறை வாங்கிநீ அனுப்பென விதித்தார். (கூ ங)

1078. அந்த வுத்தர வடைந்ததும் அவன்விரைந் தெழுந்து
சிந்தை யுள்ளுற மகிழ்ந்துதென் திசையிடைச் சேர்ந்து
வந்து நெல்லையில் தங்கினன் வரவுறு நிலையை
முந்து சூழ்ந்தனன் உடனிருந் தவரொடு முனைந்து. (கூ ச)

1079. இந்நி லத்தமர் குறுநில மன்னர்கள் எவரும்
தந்நி லத்துறு வரிகளைத் தருமுறை தந்தார்
முன்னி லத்துறும் உரிமைகள் யாவையு முறையே
மன்னி லத்துற வரும்வகை வரன்முறை வகுத்தான். (கூ டு)

1080. அடுத்து வந்தவர் யாவரும் பாஞ்சைமன் னென்றும்
கொடுத்தி டான்னம திடமெலாம் வரியைமுன் கொண்டு
மடுத்து வந்துளான் வலிமிக யுடையவன் என்றே
தொடுத் தியம்பினர் கடுத்தவன் சூழ்ந்தனன் துடித்தே. (கூ கூ)

1081. முன்னம் ஆலன்றே போய் முடுக்குற வந்துளான் அங்கே
இன்னம் போவது சரியல வென்றுமுன் றேர்ந்தான்
அன்ன வன்றனை யிங்குநாம் வரவழைத் துறுதி
துன்ன வேஅறி வுறுத்துவன் எனவுளந் துணிந்தான். (கூ எ)

1082. அரச காரிய மாயதி காரங்கள் பெற்றுப்
பரச வேநெல்லை மண்டிலத் ததிபதி யாகி
விரச வந்துள விவரங்கள் முழுவதும் விளக்கி
வரவுக ணவே வரும்படி யுரிமையின் வரைந்தே. (கூ அ)

1081. விசையல் வாரிதி வேலரிடம் கொடுத்ததை விடுத்தான்
அசையா விரதமுடை யடைந்தவர் அரசிடம் தந்தார்
இசையா வெகுதிசை யாயிந்தமுரண் வேலிறுஞ்றம் எண்ணன்
வசையாயிப் வாரத்தூவல் வருவதுமாய் சொலிவழி யயர்த்தான். (சக)

அரசர் வேண்டிய பூவினிந்தது.

1082. அரசர் கன்றாய்வர் அரவரிந்தக் கரவரர் வர் உ ரசரிக்
கலவிலகள வெடுத்தனையங் கரிந்துவரன் வந்தாரசர் நம்மை
அலவரி டங்கொடு தீ ரசர் டி அர்ச்சனை யவன்றோரல்
கலமுட னெல்லையம்பி தந்தவரசர் காரமர்ந்தாயவ் வருமேவாம். (சo)

யானையைப் பூசை மறுத்தது.

1083. கன்று மரசனவன் இயம்பலமும் இசையவன் வணங்கிச்
சென்று மரசனவன் இடம்புகல் சிறுமையா மன்றோ
வன்று மில்லைநீயும் பிரையிலுக் கின்றுநாம் இசைந்தால்
நன்று மைந்தரோ டரண்ணலே! என்றனன் நயந்தே. (சக)

அண்ணல் குறித்தது.

1084. தம்பி நிலையுள்வ துண்மையே யாயினும் தானை
யம்பு கொண்டு நின்றுளான் மறுத்துநாம் விடுத்தால்
பெயர்பி வெம்பகை மூட்டிமேல் வீண்பழி விளைப்பான்
கய்பி நாம்சென்று நிலையினை யறிவது நலமே. (சஉ)

1085. காலைத் தின்றனி நிலையையும் கம்பெனி யார்தங்
கோலைத் தின்கொடு வலியையும் நடாவிட மிருந்து
மாலைத் தையவர் பெற்றநாள் முதல்நன்கு கேட்டோம்
சூலைத் தையின்று நேரிலு முன்னுறக் காண்போம். (சங)

1086. வென்று முன்னவன் இசைத்திடப் பின்னவன் எதிரே
ஒன்றும் பேசிடா துத்தர வென்றமர்ந் திருந்தான்
அன்று நீங்கவும் அமைச்சுடன் அமைவுற ஆய்ந்து
நன்ற மைந்தரோ நாளினை நயந்துமுன் துணிந்தான். (சச)

கக-வது சங்கத் தலைவர் சூழ்ந்த படலம் முற்றிற்று.
ஆகக் கவி கo அ அ.

பன்னிரண்டாவது

சாக்சன் சந்திப்புப் படலம்.

கும்பினியாரின் நியமனம் பெற்றுப் பாண்டிமண்டலத்தில் வந்திருந்த கலெக்டர் ஜாக்சன் துரை (Jackson) உள்வயிரங்கொண்டு கட்ட பொம்மைக் கபடமாகப் பேட்டிக்கு அழைப்ப அதனை உண்மையாக நம்பி உரிமையுடன் அவரை இவர் சந்திக்கச் சென்ற நிலைமையை உரைக்கின்றமையால் இது சாக்சன் சந்திப்புப் படலம் என நின்றது.

1089. இன்ன வண்ணமிம் மன்னவன் தமருடன் எண்ணிப்
பொன்னின் மாமணிச் சிவிகையி லெழுந்தனன் எழுவும்
வன்ன வாம்பரி வீரர்கள் வாள்வலி வயவர்
முன்னும் பின்னுமாய் முழங்கினர் எழுந்தனர் முனைந்தே. (க)

1090. கொல்ல மாண்டுதொள் ளாயிரத் தெழுபத்து நான்கில்
ஒல்லுங் காலநற் சுத்தியில் ஆவணி யொன்பான்
நல்ல தோர்குரு வாரத்தில் தசமிநன் னாளில்
செல்லன் மேயினன் சாக்கசன் செயலினைத் தெளிய. (உ)

1091. தந்தி ரப்பெருந் தலைவர்கள் வரன்முறை சார
மந்தி ரத்துணைச் சுற்றமும் மருங்குடன் மேவ
சந்தி ரப்பெருந் தண்ணெளிச் சிவிகையி னடுவே
இந்தி ரப்பெருந் திருவொடும் எழுந்திவன் வந்தான். (ங)

1092. பல்லி யங்களு மொல்லென வொலித்தன பரிகள்
வல்லி யங்கள்போல் வாவிமுன் விரைந்தன வரியார்
வில்லி யங்குதோள் வீரர்கள் செறிந்தனர் செந்தூள்
புல்லி யெங்கணும் புகையெனச் செறிந்தது புறமே. (ச)

1093. காலை யீங்கிவன் கதிரென வந்தனன் கண்ட
சாலை யெங்குமே நின்றவர் சார்ந்துகை தொழுதார்
வேலை யிங்கித வரைதரச் சாக்கசன் முதலுள்
மாலை யங்குதன் வெஞ்சின மிஞ்சினன் மனத்தே. (ஞ)

சாக்கசன் கனன்றது.

1004. மறிவரை யாகமாய் வெங்கதிரோன் கவ்வ னைச்
வரிவரை யுறுவிலாய் வாங்கிநின்
றிறைவரை கடவளை யிண்டை வடவ யிருந்
யாக குதிரைப் பரிவிலென்ன
வறிவரை கடலிடை தனியர சாகவே
யிருகுலமும் பகைத்துப்
றறிவரை யாவிலை வடிவாகி இருப்பதுபோல்
வெறிகமழ் கணைகளை யெய்தான். (கூ)

1005. வாளை யாடிய வெருவுகொ ளுயிரரவுங்
கோளை யாடிய இளை யபுதை
விடவா யுக வீகீல விடமிடற் றிருவிளை
வாளை யாடிய வுலகெலாம்
மடவா யுறுவிலாய் வாங்கிநின் றிறைவரை
யுறுவிலாய் வாங்கிநின்
றிடவா யுறுவிலாய் வாங்கிநின் றிறைவரை
யிறுவிலாய் வாங்கினானே. (எ)

1006. யாது நீயெனன் பெயர்சொலக் கேட்டபோ
தாதி னிவ்வாய் முழக்கத்தை
நீதி யும்மவர் போலுள நடுங்கியே
நிலைநிலைக் குலைகின்றார்
பாதி மீலையன் றிப்புறத் திலும் இங்ஙனம்
பொருந்திநின் றனலுகில்
பாதி மீலையிவ னெதிர்நிலை நின்றெவர்
பகைவரா யமர்வாரே. (அ)

1007. அஞ்சு போய்வரி யென்ற * ஆலனுமிக
அஞ்சியீண் டடைந்தானே
இன்றும் என்னையும் அன்னவன் போலவே
எண்ணியுள் ளிகழ்ந்துள்ளான்
அன்று மேபொரு ளாகவே யெவரையும்
எண்ணல னிவனென்றுல்
லென்றி யேபொரு ளென்றிவன் கொண்டுள
விறல்நிலை யென்னுமே. (கூ)

---

* ஆலன்துரை வந்துபோன நிலையை க.-வது படலத்தில் காண்க.

1098. இட்ட ஆணையை மதித்திலன் வாரமொன்
றிருமென நமைமேயவி
விட்டு நின்றனன் இன்னமும் வந்திலன்
வெந்திறல் புரிகின்றான்
தட்டன் என்பதும் துணிந்தவன் என்பதும்
சொலாமலே சொலிநின்றான்
கட்ட பொம்மிவன் வலியையும் செருக்கையும்
காண்டுமென் றகங்கொண்டான். (கo)

1099. நெஞ்சில் வெஞ்சின மிஞ்சியே வஞ்சினம்
நெடிதுபற் பல கூறி
அஞ்சி டாதவன் போலவே நின்றவன்
அரசிவன் வருசெய்தி
வஞ்ச மாகவே அஞ்சலாள் வாயிலாய்
வகையுறத் தெரிந்தான்முன்
தஞ்ச மாயிவ ணிருந்தவற் காணுதல்
தகாதெனத் தனி ஆய்ந்தான் (கக)

1100. அவன்ப திக்கிஃ தருகுள தாதலால்
அடங்கிடா தகங்கொண்டு
நிவந்து நிற்பனுல் நெறிசிறி தகன்றமீதல்
நிலையமர்ந் திருப்பானென்
றுவந்து தன்னுளே வஞ்சனை சூழ்ந்தனன்
உரியதோ நிடநாடிச்
சிவந்த நெஞ்சனுய் வெண்ணைகை புரிந்துமே
செலவுடன் பட்டானே. (கஉ)

1101. இன்ன வாறவன் விரகுடன் படைகளை
யெழுந்துமுன் செலச்செய்தே
தன்னை யேநிகர் நெல்லையம் பதியினைத்
தணந்துதன் குற்ருலம்
என்னு நற்பதி யேகினன் எருங்கால்
இருந்தவர் தம்மோடு
மன்ன வன்வரின் பின்வரச் சொலுமென
வகுத்தவன் செலலானன். (கங)

1102. மறுவில் மணிக்குலன் மீளவரின் இப்படி
மனமு மற்ற வன் மாண்டனனே
அறுவ கிரண்மலையாய் வெகுலையம் மடிதலினை
யமை கதனன் அலைவர் மூவரையும்
விறுவெனவே கிளர்வன் விலையுடைய மணிமுடியும்
விளைபுகழ்க் குடிவன் மனமுமொரு மிக
எறுவெனவே தலைவனை வடவரையன் மகள் வடிவை
எனையவு மறை வில்லை என்றான். (கச)

மல்லலன் வெல்லலியது.

1103. கலவி கிரிபு கிளர் வடிகளையர் மூவரும்
கடிமலர் மலர்வனமெய்த
அலவு மறிவிலை வெகுபல மலர் கிரிபுரிவை
அடி கதனன் மறுமலையர்
நிலவு தலை மறுமலையர் மூவரையும்
நிலவிய மலர்வனமெய்தி மறு
மலரு மலை மலர்வனமெய்து மிறை வலிமன்
மிகவுந்தலு மிலையந்தானே. (கரு)

1104. அலர்பு வனமுமந்தி மெல்லியம் பிரானுக்கும்
அலிலையும் முனியரீன்ற
வலர் முகை யகலியாய பிருந்தரு ளம்மைக்கும்
இனியகல் லடிதேடகம்
அகல் முறு கிரிகலங்கள் சுவையமு தாதிகள்
கருதியின் படிசெய்து
மகல் முறு மைகிதாழு திராயிரம் செம்பொன்னை
கிரையரோ டுவந்தீந்தான். (கசு)

1105. மெல்லிய வாசிகள் அரசனை நெறிவந்து
மெடிதுகண் டுரையாடி
வல்லிய யில்லமீதார் அன்புட னின்றனர்
இவணுமின் னருள்கூர்ந்தான்;
வல்லிய ரேகிரிய வருதுகா மிருமென
வலூதினி யுடன்சூழ்ந்து
மல்லல் லோங்குகுற் றுலகற் படியினை
வந்தினி தடைந்தானே. (கள)

அங்கு உளார் என்றது கலிலக்டருடைய காரியாலயத்தில் இருந்த

1. சதி = வஞ்சம், மோசம்.

1106. வந்த செய்தியைச் சாக்கசன் அறிந்திட
மற்றைநா ளுரைத்துய்த்தான்
சிந்தை செய்திரு தினங்கழித் தப்புறம்
தெரிசிப்போ மெனச்சொல்லி
முந்த மேவபல சூழ்ச்சிகள் புரிந்தனன்
முன்னில னிவனென்றும்
விந்தை யாகமே மாளிகை யொன்றினில்
விளங்கிவீற் றிருந்தானே. (கஅ)

1107. அருவி யாடினன் பரமனைப் பணிந்தனன்
அழகிய தண்சாரல்
மருவி யுள்ளநற் காட்சிகள் கண்டிவன்
மனமிக மகிழ்ந்துற்றான்
கருவி லேவிரா குடையவன் மறுகியே
கருது சாதகனென்னும்
ஒருவ னேடுதன் னுளத்துறு சூழ்ச்சியை
யுபாயமா யுரைத்தானே. (ககூ)

சாக்கசன் சதி நினைந்தது.

1108. நல்ல சாதகா பொல்லாதவன் வந்தனன்
நாமிவன் றனையிங்கே
வல்ல வெம்படை யாலகப் படுத்தியே
வன்சிறை தனில்வைத்தால்
நல்ல பேற்றினை நனிபெற லாகுமேல்
நாம்சொலும் வழிக்கெல்லாம்
ஒல்லை யாயிவ னடங்குவன் திறையையும்
உதவுவன் எனச்சொன்னன். (உ०)

1109. என்ற வன்சொலக் கேட்டவன் அஞ்சினன்
இதுமிகத் தீதாகும்
வென்றி வீரனை வெஞ்சின மூட்டினால்
வினைவுமே லென்னுங்கொல்?
ஒன்றும் ஓர்ந்திலை யென்றனன் சரியினி
யிவ்விடம் உதவாதென்
றன்று வேறயல் நகரினுக் கேகுவான்
அகத்திடைத் தனிச்சூழ்ந்தான். (உக).

சாக்கப்பட்டி சிவகிரிகளுக்கு வரச்சொன்னது.

1110. சாக்கப் பாய்ந்தீ யாய்ச் சிவகிரி அடைந்தமே
தாகஞ் சொற்றாழிச்செய்ய
பிக்க காவியம் பலவுறை விளைவகைம்
விளரியினில் விரகாகத்
தக்க வாதுலசைப் புகை வாய் வைகிப்பு
சதுரந் சொற்பூண்தீ யாளைகாய்
சக்கக் கொள்ளெதிரும் பிரவெதிரும் தூய் கருதி சொல்
சொல் யாவை சிவன்தீ யாளைகாய். (உட)

பூசிவிளை தீர்வார் சென்றது.

1111. வாய் யுள்ளவிம் விள்ளிப்புக் தானினில்
வற்பாதீதாய் விரைவாயிவ்தீ
வாய் யாவல்பெய சீவண்டுரா வாண்டுதீ
பாற்பாவை தீயாயகில்
தாய் வாவல்லீ வாணைவா மென்றங்குச்
சாற்தாவி விர்சொல்லி
விர் யீர்ப்பிதீய விளப்பை தேயாடவன்
விளைப்தாழுகன் சென்றூனை. (உக)

மன்னன் மனங்கனன்றது.

1112. யுந்து வார்த்தையைக் கேட்டது மன்னவன்
யுகாரிகச் சினந்தோதாங்கி
(ஜ)ந்து விளாளையன் என்னையென் செய்குவான்
வருவன் தனியென்ற
வந்து சேனையை மீண்டுபோம் படிசொல்லி
மதிரிகு பட்டத்துச்
சுந்த யப்பாரி மீதிவர்ந் தொருவனைப்
தொடர்ந்திடத் துணிந்தானை. (உச)

1113. தார்பி யுமையும் மந்திரிப் பிள்ளையும்
தானைக ளுடன்சேர்ந்து
தார்பி சேரலே னன்றென வுரைத்தலும்
தயங்குவன் சரியென்ற
வெம்பி முன்சென்றூன் டைகளும் தொடர்ந்துடன்
வேகமா யடர்ந்தேதகிப்
பார்பி யப்பதி யடைந்தன மன்னனும்
பரியிழிந் தமர்ந்துற்றூன். (உந)

1114. வில்லி சேர்ந்தவண் இருதின மிருந்தனர்
வீணையென முனேநேரே
சொல்லி வந்தவன் புல்லிய நினைவொடு
தொடர்ந்தொன்றுஞ் செய்யாமல்
மல்ல லோங்கிய இராமநா தன்புரம்
வருகவென் றுரையேயி
மெல்ல வேயகன் றெழுந்துதன் படையுடன்
விரைந்தவண் செல்லலானன். (உசு)

1115. போன போக்கினை மானவ னறிந்தனன்
புன்னகை மிகச்செய்தான்
ஈன மாகவே இழிந்துபுன் செயல்செய
எண்ணினன் இவன்பின்னே
தானை யோடுடன் போதலை யொழிந்துநந்
தண்பதி மீள்வோமென்
றான மந்திரி யுரைசெய அரசனும்
ஆய்ந்தது சொலலானன். (உள)

1116. அஞ்சி னன்வர வென்றுளந் கொள்ளுவன்
அயலிட மெனிலாண்மை
எஞ்சி நின்றிடும் நாமெளி தாவமென்
றெண்ணியிவ் வகைசெய்தான்
வஞ்ச வெங்கணன் சிங்கம்எவ் வனத்திடை
மருவினும் என்னுங்கொல்?
நெஞ்சி லோர்ந்திலன் நிலைமையும் தேர்ந்திலன்
நெறிகெட நிமிர்ந்துள்ளான். (உஅ)

1117. தொடர்ந்து போயிவன் சூழ்ச்சியின் முடிவினைத்
துருவிநேர் நின்றேறூர்ந்து
நடந்து வந்தநந் நிலைமையை நாடிலாம்
நன்கறிந் திடவேண்டும்
கடந்து மீள்வது காரிய மன்றிவற்
காண்பதே கடனுமென்
றடர்ந் தெழுந்தன்ன் படைகளும் தொடர்ந்தன
அதிவிரை வாய்வந்தான். (உக)

எழுசீர் விருத்தம்.

1118. வாகனங் கொண்ட வாகையம் புரத்தில்
மேன்மைகொள் வானிலைக ளொன்றில்
தாங்கிய தங்கைவாய் தாய்பிதாய் மனைவர்ச்சி
தாங்கிய வன் றினிதாய்த் தெரிந்தனன்
வேந்தர்கள் சேனைகள் வாகனை மறித்தன
வீரரு மன் மாக்களன் விளைந்தன
ஏந்திய வாளைகத்த மை யெயிலாக் கொதளந்தன
ஏமனுங் கொடுமைபுரிந் வலைந்தனன். (கூ0)

1119. நரியன் வெளவிக்கு மாய வன் மனத்தோர்
மயிலை கவர்ந்துரைப் பேரிச்
சிரமிசை புரிபு மல்லிகள் றுறை
திரங்களைந்து வெருவுறுத்தியுள் மறைவாய்ச்
சாயலை வலைத்துச் சதுரருட னிருந்து
சாரியல் சேனைடையில் தனிமேய
காரியம் வந்து கண்டுகொ ளென்னைக்
காரியன் ஒருவனை விடுத்தான். (கூக)

1120. யாவன வன் வந்து சொல்லவும் அருகே
யாவர்ந்தவர் தம்முடன் ஆய்ந்து
மாவன வெனமுந்து சிவிகையி லமர்ந்து
வரன்முறை மாண்பொடு வந்தான்
கன்னக ருள்ளா ரனைவரும் கண்டு
கயந்துளம் வியந்தனர் திரண்டார்
இன்ன பேரழகன் என்னவூர் அரசோ
எனவிழைந் தெதிரெதிர் புகன்றார். (கூஉ)

1121. இந்திர திருவும் சந்திர வுருவும்
இவனிட மினிதமைந் துளவென்
றந்தமா நகர முழுவது மகிழ
அந்தர துந்துபி யெனவே
முந்துற இயங்கள் முழங்கிட வீரர்
முறைமுறை தொடர்ந்தயல் நெருங்க
வந்தணன் வரவை யிருந்தவன் மேனை
வாயில்முன் னின்றுகண் டயர்ந்தான். (கூங)

1122. சிவிகைவிட் டிறங்கி மடங்கலே றென்னத்
திறன்மிகு தேசெதிர் திகழக்
குவிகைய ராகி மற்றவர் வணங்கக்
கொற்றவன் நிமிர்ந்துமுன் நடந்து
சவியுற வருங்கால் இருபுற நின்று
சாக்கசன் படைவெடி வீரர்
அவிரொளி வேல்வாள் அணைத்தையு மதியா
தடலுட னுள்ளிட மடைந்தான். (கச)

1123. வாளெலா மதியான் வேலெலாங் கணியான்
வலியவெங் கருமருந் தடர்ந்த
கோளெலா மொன்றுங் குறித்திலன் நிமிர்ந்து
கோளரி யேறெனப் படர
நீளரவ யவன்றன் படையெலாங் திகைத்து
நின்றன அவனுமுள் ளஞ்சி
ஆளெலா நிறுத்தித் தனிமையாய் வருமா
றுணைசெய் தாளினை யுய்த்தான். (கக)

1124. ஆணையை யறிந்தான் அன்னவா றென்றே
அரசுவந் தேதிறன் அமைச்சும்
மாணமை தம்பி யுமையுங் தொடர்ந்து
வலிந்துடன் ஏறினர் நான்கு
கோணவா சலையுங் கடந்துமேல் வந்து
குறித்தமே லிடத்தினிற் கண்டான்
வேணுமென் றமைத்த ஆதனத்திருக்க
விதித்தனன் வேந்தனு மிருந்தான். (கசு)

சாக்கசன் வினவியது.

1125. எதிரமர்ந் திருந்த மன்னனை நோக்கி
யினமுறை விசாரித்த பின்னர்
பதியுடை வரியைத் தந்திலீர் நெடுநாட்
பார்க்கவும் வந்திலீர் நாட்டில்
வதியுமெங் குடிக ளிடமெலாம் வரியை
வாங்கிநீர் வைத்தனீர் என்றும்
அதிபதி யாகி அமர்ந்தனீர் எங்கள்
ஆணையை மதித்திலீர் என்றான். (கஎ)

மன்னன் மாறுரைத்தது.

1106. வரிவெயி லெழிற்புரம் இதுவெனை வாங்கல்
வழியினில் தங்குதி யில்லை

அரியபோர் வாளருஞ் சூரியபிதாவி னிலையுளை
அயலெலாம் வாரிநீ பற்றி தங்கு

மரணவீரன் மனமும் வந்துயர் பாரும்
வகுத்துரை வாரிலென்றாய் நினில்

லெரியெனக் கல்லது பிரியி னிகழ்ந்தநீ
யிலையினில் பிரசை யெதிர்கொள்ளுமே. (நஎ)

1107. வன்றிற வியப்பா னிருகழலும் நிலைத்தான்
வன்புலவோர் மாட்சியு மனமகிழ்ந்து

நின்றிரு நுத்துலை யூரமர்ந் கலத்தை
நீர்வளஞ் செதுமுத்துரைக் குரித்தா

லுன்றனிலை வலைத்தீர் யாருமக் கிந்த
வரிவையையும் புரந்தனர் என்று

கன்றிய நிலத்தோ டுரைத்தனன் உரைக்கக்
காவலன்மன் பிள்ளிது பகர்ந்தான். (நக)

1108. வன்றுணை — நாட்டி லிருந்தருன் னகரை
யிளையசென் னெல்வீளை வுக்கா

லென்னிதேமல் வருமென் றுன்னியே கொண்டேன்
வகைசாதி லென்னையோ வென்றான்

இன்னவல் லுரையைக் கேட்டலும் முன்ன
ரிடம்பெற வைத்தவெம் படையைச்

*பன்னாயி லிவனைப் பற்றுமி னென்று
சாடையில் குறித்தன னுடனே. (சo)

•ஆத்தூர், ஆறுமுகமங்கலம் என்னும் ஊர்கள் இரண்டும் திருச்செந்தூர்த் தாலுகாவில் உள்ளன.

*பன்னாயில் = சூழ்உக்குறி. சங்கேதமாய் முன்னமே ஏற்பாடு செய்து வைத்துள்ள இரகசியக் குறிப்பு. சாடை = இங்கிதம்.

1129. மல்லர்கள் திரண்டு மண்டிமேற் பாய்ந்தார்
மன்னவன் வெகுண்டுடை வாளை
ஒல்லையி லுருவி ஒருகணத் துள்ளே
யிருபது தலைகள்கீ ழுருள
வல்லையில் வீசி வலமிட மாக
வந்தனன் தம்பியும் பாய்ந்து
கொல்லமுன் வந்த கூற்றெனப் புகுந்து
கொன்றனன் நின்றவர் குலைந்தார். (சக)

1130. வெட்டிவெஞ் சோரி மெய்யெலாம் படிந்து
வீரமே கத்தொடு மன்னன்
ஓட்டிமேல் வருங்கால் சாக்கசன் ஓடி
ஒளித்தனன் சீயிந்தக் கோழைப்
பட்டிமா மகனை வெட்டுதல் பழியா
மென்றயல் திரும்பினன் நேரே
மூட்டிய *கிளார்க்கின் வெண்தலை துள்ளி
முன்விழ மாட்டிமேல் முனைந்தான். (சஉ)

1131. மேடைமே லிந்த வெம்பழி வினைய
வெளியினில் நின்றவர் கேட்டுச்
சாடிமேல் வந்தார் வெடிகளை டடர்ந்து
சமர்நிலை நின்றவப் படைகள்
நீடிமேல் மூண்டு நிறைநிறை சுட்டார்
நேர்ந்தவாள் வீரர்க ளவர்மேல்
ஓடிமுன் வெட்டி யுருட்டினர் பலரை
யுருண்டன ரிவருளுஞ் சிலரே. (சங)

1132. வாளொடு வேல்கள் வல்லையம் சுழற்றி
வந்தனர் விரைந்தெங்குந் திரிந்து
தோளொடு தலைகள் தாளொடு கைகள்
துணித்துமுன் குவித்தனர் துடித்து
நாளொழி வற்றூர் நைந்தனர் நின்றூர்
நாமென்ன செய்வமென் றேறங்கித்
தாளுறு வலியைக் காட்டினர் ஓடித்
தப்பினர் தலைமறைந் தொழிந்தார். (சச)

---

* கிளார்க் (Clarke) என்பவன் சேனைத்தலைவன். இராமநாதபுரம் பேட்டியில் இப்போர் நிகழ்ந்தது கி. பி. 1798 செப்டம்பர்மாதம் 10ந்தெய்தியில் என்க. அன்று பகல் 1 மணிக்கு அவன் அங்கு இறந்தான்.

1108. ஏர்பரவு வெருளியி னிரவ னுறைவிற் கடார்ந்து
ஏழுலவு வய்தலெயிலை முடித்துப்
பூர்பரவு வரசரில்லை யுறையினவன் புகல்சேன
பூர்பரவு வாயிலைத் தகர்த்து
விர்பரவு விசை வெளிவெடியாடி லீவந்தவர்
வெளிலைக் கைம்மாறும் வந்தவர்
கிர்பரவுதற்கி லெகனவர்ப் கனல்கிடங்கு வளிந்து
கிடங்கினுற்கி லெகனவர்ப் கனல்கிடங்கு வள்ளாய். (சஞ)

1109. விசையெனவ் பலவிசை விர்வெ யுழி யாயம்
பிசைவுற்ற வெனவ் முகாரி கடந்திக்
கசையிரு வடிவுற்ற கனல் வெயுழிரிய
கரிவெயிலின் வெனவ்கிரை
மசையுண் வடிதுயில் கனல் வெயுழிரிய
மகிழ்வுற்ற வெனவ்துணிந்து
கசையுற்ற கடிந்தார் வெனவ்கிரை யிடம் பரிமேல்
கனல்வெயிலை விசைமந்துமுன் வந்தான். (சக)

1110. மானைமை* மதுரையை யடைந்திர வமர்ந்து
மருளிய பீபாகினி யிறந்து
பீபாகவ்வர் வேளைய வெனவறிந் தாய்ந்தார்
பிபாவ்றிஞர் எழுவரென் றேர்ந்தான்
அவரீதாய் அமைச்சைக் கண்டிலா மையிஞல்
அயலவம் நொந்தனன் மீண்டு
தவரையை யங்கு கடத்திடத் துணிந்தான்
தர்பிவேண் டாமென்று தடுத்தான். (சள)

1111. உயிருட னிருந்தால் மேலுரை யாடி
யுரிமையின் மீட்டலா மன்றே
செயிருட னிறந்து போயிஞ னென்றுற்
சென்றுநாம் செய்வதொன் றின்றே
வையமேமற் கொண்டு வஞ்சகப் பேடி
மகனுடன் மறுத்தும்போய்ப் போரைச்
சயமுறப் புரிதல் தகாதென இளையோன்
சாற்றலும் தணிந்தனன் தக்கோன். (சஅ)

* மானைமை துரை என்னும் ஊர் மதுரைமாநகருக்குத் தென்கிழக்கே 20 மைல் தூரத்தில் உள்ளது.

1137. அந்தநன் னகரில் ஒருபக லமர்ந்தே
அடலமர் படையுட னெழுந்து
மூந்தநண் பகலும் இரவிலும் நடந்து
முன்னுறு வழியெலாங் கடந்து
வந்துதம் பாஞ்சைப் பதியினை யடைந்து
வழிவந்த வருத்தங்கள் தீர்ந்தும்
மந்திரிப் பிள்ளை நிலையினை நினைந்து
மனங்கவன் றிருந்தனன் மன்னன். (சகூ)

டேவிசன்துரையை வரவழைத்தது.

1138. உண்மை யானநல் வெள்ளைமா மரபினன்
உயர்குண முடையவன் றன்பால்
திண்மை யானநண் பினன்றிரு மந்திரச்
செழுநகர் தனிலமர்ந் துள்ளோன்
வண்மை யான அப் பெருந்தகை யாளனை
வந்துபோம் படியொரு மூடங்கல்
அண்மை யானவ னிடந்தந்து விடுத்தனன்
அவன்கொணர்ந் தடைவுடன் தந்தான். (நo)

1139. தந்தவந் நிருபந் தனைவிரித் தறிந்து
தன்மனை யிடம்விடை கொண்டு
சந்தநற் பரிபி லிவர்ந்துதண் குறுக்குச்
சாலையின் வழியதாய் விரைந்து
வந்துயர் பாஞ்சைப் பதியினை யடைந்தான்
மன்னவன் எதிருவந் தணைக்கச்
சுந்தரத் *திருவின் விலாசத்தி லமர்ந்து
சுபமுறை வினவின னினிதே. (நக)

கலிநிலத்துறை.

1140. அழைத்த தென்னென டேவிசன் அரசனை நோக்கித்
தழைத்த நண்புடன் வினவவும் சாக்கசன் வந்து
பிழைத்த நெஞ்சனாய் வஞ்சக நினைவொடு பெருகி
இழைத்த யாவையும் உரைத்தனன் இடரையும் விரித்தான்.()

நo. திருமந்திர நகர் என்றது தூத்துக்குடியை.
* திருவின் விலாசம் = இலட்சுமி விலாசம் என்னும் மாளிகை.

1141. மெல்லை வந்துகாண் என்றவன் நேயமோ டுய்த்த
மொல்லை நம்பியே சென்றனம் தொடர்ந்து குற்ரூலம்
விஸ்வி யூர்முத லலைத்துமே இராமநா தத்தில்
அல்லல் செய்தனன் அமரினை வினைத்தன னென்ரூன். (நிக)

1142. மந்திரிப் பிள்ளை வந்திலன் சமரிடை மாண்டு
நொந்த ழிந்தன னேவுயிர் நூக்கியுள் ளாலே
இந்த வாறிந்த இடத்துக்கும் இழிவிட தொன்று
வந்த தேயென மன்னவன் மறுகிமுன் சொன்னன். (நிச)

1143. சொன்ன யாவையும் டேவிசன் கேட்டுளந் துளங்கிச்
சென்னை நின்றிவண் சேர்ந்தவன் சாக்கசன் மிகவும்
சின்ன நீரனுப்த் தீமதி யாளனுப்த் திரிந்து
இன்ன வெஞ்செயல் வினைத்துளான் என்றனன் பழித்தான்.

* டேவிசன் தேற்றியது.

1144. அவன்றன் புன்மையை அதிபராய் மேலமர்ந் தங்கு
நிவந்து நின்றுளார்க் கெழுதிநின் னிலையையும் விளக்கி
உவந்து மெய்யினை யுணருமா செய்குவன் ஒன்றும்
கவன்று கொள்ளலை மன்னவ வென்றவன் கரைந்தான். (நிசு)

1145. ஆளி யோடமைச் சிருப்பலேல் யாதொரு துயரும்
சோளி டாமலே மீளுவன் மேலினி யுனது
கோளி யற்கையும் குலமுறை நிலையுநன் குணர்ந்து
மாளி னண்பொடு சார்ந்தவ ரிருக்கவும் சமைவார். (நிஎ)

1146. மற்றை யோரெலாம் வரிதந்து வழிமொழிந் தொடுங்கி
நிற்றல் கண்டனர் நின்னையும் அவ்வழி நினைந்தார்
உற்று வந்தவுன் வழிவர வுணர்ந்திலர் உணர்ந்தால்
எற்றை நாளுமே யினியரா யெமரிசைந் திருப்பார். (நிஅ)

1147. கலக லத்தினைக் கருத்தொடு தெளிந்திலன் சேனைத்
தலைவ னுகமே தருக்கொடு நின்றவன் தெற்கே
நிலைமை யாய்நின்று வினைசெய வலனிவ னென்றே
உலகில் சங்கத்தார் உரிமையில் உய்த்தன ரிவனை. (நிகூ)

டேவிசன் (Devison) என்பவர் தூத்துக்குடியில் இருந்தவர்; பாஞ்சைப் பகையிடம் மிகுந்த கண்புடையவர்.

1148. தனக்க மைந்தரோர் பொறுப்பினைத் தானினி துணரான்
மனக்கு வந்தவா மதத்தித செய்தன னகத்தே.
சினக்கொ டும்பகை யுடைமையாற் செம்மையிற் றிரம்பி
உனக்க ருந்துய ருளுற்றிலன் உறுபழி பூண்டான். (கூ0)

1149. உலக நீர்மையை யோர்ந்தவ ணுறைபவர் திறனை
நலம தாகவே தேர்ந்துநல் வினைசெயுந் தன்மை
கலக மேகண்டு வந்தவன் காணுவான் கொல்லோ?
திலக மேயிதைச் சிந்தையிற் கொள்ளலை சிறிதும். (கூக)

1150. மேலுள்ளார்க்குநின் மேன்மையைத் தெளிவுற விளக்கிச்
சால வேநலம் புரிகுவன் சலமினி வேண்டாம்
கால மோர்ந்தினி வருவணீ கலங்கலென் றெழுந்தான்
சில ரண்பினன் சேர்ந்தவர்க் கின்பமே செய்வான். (கூஉ)

1151. அப்பெ ருந்தகை யாளனை அன்புடன் பணிச்
செப்ப ரும்பெரு மகிழ்வுடன் செலவிடை யருளி
ஒப்ப ருந்திரு வுடையவன் உறுவினை கருதி
இப்பெ ரும்புவி யின்புற இனிதமர்ந் திருந்தான். (கூங)

தம்பி நின்ற தானுபதி நிலை.

1152. இங்கு வந்திவன் இன்னவா றிருந்தனன் அங்கே
தங்கி நின்றமந் திரிநிலை தனையினிக் காண்பாம்
பொங்கு நோக்தஅப் போரினிற் சாக்கசன் அஞ்சி
மங்கி யோரிட மறுகிமுன் கிடந்தனன் மறைந்தே த. (கூச)

1153. மூண்ட மல்லர்கள் முண்டங்கள் துண்டங்க ளாக
ஆண்ட கைவடி வாளினுல் அடர்ந்துமேல் வருங்கால்
தாண்டி யோர்மல்லன் தாக்கினன் தாக்கவும் பிள்ளை
மாண்ட னன்னென மயங்கியே அவனயல் வீழ்ந்தான். (கூஞ)

1154. சமர்க லந்தபின் சாக்கசன் தலைநிமிர்ந் தெழுந்தான்
அமர வேயயல் மந்திரி அமைந்ததைக் கண்டான்
தமர்வ ரும்படி கூவியே சார்ந்துபோய்ப் பிடித்தான்
அமரில் வென்றியொன் றடைந்தவன் போலக மகிழ்ந்தான்.

1155. பிள்ளை தான்பிடி பட்டுள பிழையினைத் தெளிந்தான்
கொள்ளை யாகமுன் குவிந்துள குருதியை நோக்கி
வள்ளல் வாளினுல் மாண்டவர் தொகையையு மறிந்தான்
உள்ளம் நாணினுன் ஆயினும் உலக்கமேற் கொண்டான். (கூஎ)

1156. வீர மன்னன்முன் வென்றுபோய்ப் படைகளை மேவிச்
சீர மைந்ததன் னகரினைச் சேர்ந்திருப் பானென்
றர வேஙினைந் தாறுதல் அடைந்தனன் ; மேலை
நேர நின்றதன் னிலையினுக் கிரங்கின னின்றுன். (கூஅ)

1157. நின்ற வன்றனைச் சாக்கசன் நோர்நெதிர் சினந்து
கொன்று தின்பவன் போற்பல கொடுமொழி புகன்றுன்
இன்று வந்தகப் பட்டனை யினியுனை யெமன்வாய்க்
கொன்ற வேயிரை யிடுவனென் றருத்துமுன் நின்றுன். (கூகூ)

1158. வீரச்சில் வல்லவன் என்றுபேர் பெற்றதாற் செருக்கி
ஆட்சி யெங்குமே செய்யலா மென்றகம் ஆர்த்தாய்
ஓச்சி போன்றநீ பொருமத கரியெனும் என்றன்
மூச்சி முன்னிலும் முடிவுறு திருத்திகொல் முனையின். (எ0)

கலிவிருத்தம்.

1159. வங்கடம் ஆட்சியை எதிர றிந்திலை
சங்கமென் றிகழ்ந்தனை தருக்கி நின்றனை
பொங்கிய மன்னனைப் போத மாற்றினை
வங்குமே போரினை இயற்ற எற்றினை. (எக)

1160. வைஞ்சாரில் லாதவன் வாளில் வல்லவன்
தஞ்சமா யெமர்வரி தருதற் கெண்ணினும்
வைஞ்செய லுடையனுய் விரகு சொல்லியே
அஞ்சிடா வகையில் நீ அல்லல் செய்தனை. (எஉ)

1161. மண்டிய நீயுடன் வாய்ந்த காற்றுப்போல்
நிண்டிற லவனெடு சேர்ந்து நின்றனை
மண்டியும் உடையுமே யுவந்து கொண்டனை
கண்டிலே வேறொரு கதியும் காணலே. (எங)

1162. அடுத்தவர் எவரையும் ஆத ரிப்பவன்
தடுத்தமை யாதகட் பாளன் என்றுநீ
எடுத்தவற் புகழ்ந்தனை யின்றிங் குன்னையே
கெடுத்தவன் போயினன் கேண்மை நன்றரோ! (எச)

தாளபதி எதிர்த்துரைத்தது.

1163. என்றவன் வசைபல இயம்ப நின்றவன்
இன்றுநீ செய்வதைச் செய்க ஈனமாய்
ஒன்றுமே யுரைக்கலை யுணர்விலா யெனைக்
கன்றிய மனத்தினன் கடுத்து ரைத்தனன். (எஞ)

1164. காணவந் தருளெனக் கரைந்த தால்மன்னன்
ஆணையை நினைந்துளம் அடங்கி வந்தனன்
வீணரும் செயாதவெவ் வினையைச் செய்தனை
நாணிலை நடுவினில் நானென் செய்வனே. (எக)

1165. உன்னை முன் னுணர்ந்திலை யுணர்ந்து நின்றுள
என்னைநீ யிகழுதல் ஈன மாகுமே
மன்னவன் வாளின்வாய் வைக்க நாணிலை ன்
அன்னதால் இன்னமும் ஆவி கொண்டுளாய். (எஎ)

1166. அருந்திற லுடையவன் போல ஆண்மைகள்
பெருந்தக வுடனின்று பேச வந்தனை
பொருந்தக வுடையளம் பொம்மன் தந்தீவார்
வருந்திய ஆயுளை வைத்து நின்றுளாய். (எஅ)

1167. பிள்ளைநான் வெள்ளைநீ பேச்சும் சூழ்ச்சியும்
கொள்ளையாக் கொண்டனம் குறித்த போரினில்
சொள்ளையா யிருவரும் சோடி சேர்ந்தனம்
எள்ளலீ தென்னையா என்னை நீயுமே. (எக)

1168. புல்லிய மொழிகளைப் புகல லென்றிவன்
சொல்லிய பொழுதவன் துடித்தெ முந்தனன்
வல்லியிற் பூட்டிவன் சிறையில் வைம்மினென்
றெல்லையில் நால்வரை யுருத்து நோக்கினன். (அ0)

1169. பற்றலர் வெருச்சிறைப் படுத்தி நின்றனர்
சுற்றுபடை தழையிலைச் சாகச் சண்ணவற்
குற்றதாகன் மகவெலாம் பட்ட பழங் கிற்றிலன்
பற்றலராகன் பற்தலிலைப் பாற்கடல் வெய்துகனன். (அக)

1170. தீயவைம் தலைக்கவன் வெருச்சி வைத்தா வன்
சாயலின் மிகுஞ்சிலம் தளிர்த்துயர் நீடிய மதன்
வாயிலை யடைத்தலைவர் வருத்தி வைத்திலாகுக்
காயலை யுள்ளுறைவன் கடிந்து புகுவ வன்றே. (அஉ)

1171. கன்னை யினைதலையும் காசம் வெய்துகனன்
தன்னிலீயா டகன் றுயிலை தாரி லீயாடி முதன்
வெளிலீயா டனை கலையும் வெருண்டு நீடாயின
வாரியா துலையாச் சினை மாவலைகள் பற்றினேனன். (அஊ)

1172. பாய்த்தலையும் பற்றிலையும் சிறைப்ப டுத்திலே
ஆய்த்திலைவன் வைத்துரினன் ஆணை நோக்கிமேல்
வாய்த்தலைதல் வெய்துவன் என்று வெம்படை
காய்ந்திதழ் விரித்துவன் கடுத்து நின்றனன். (அச)

1173. இலங்கிலே இன்பங்க விருப்ப வெஞ்சிறை
யிலங்கிலே யின்பங்களம் அமைய முன்புதான்
கலைபுயும் * நீதுவரன் நண்பி னேடுவந்
துலைவகன்றிரும் தீமாயின் உற்ற தோதுவாம். (அரு)

டேவிசன் துரை கும்பினியாருக்கு எழுதியது.

1174. மன்னிய மாகதர் மருவி மன்னவன்
முன்னிய நிலைமையும் முதன்மை நீர்மையும்
வென்றிறை லைமதியும் மேன்மை யுண்மையும்
இன்னிய நிருவரை யிசைந்த தன்மையும்; (அசு)

1175. நீதியும் தருமமும் நெறியும் இன்னன
ஆதியா யுள்ளன யாவும் தீட்டியிக்
கோதிலாவன் றனக்கொரு கோப மூட்டியத்
தீதிலாரன் விளைந்ததைத் தெளியக் காட்டியே; (அள)

* தூயவன் என்றது டேவிசனை.

1176. முன்பமை சங்கத்து முதன்மை யோர்தமக்
கன்பமை திருமுகம் அறிவி னுய்த்தனன்;
வன்பகை யின்றியே வளமும் நண்புமாய்
இன்பமைந் தெவருமே யிருக்க வெண்ணினான். (அஅ)

1177. திருமுகம் இருவரும் நீட்டி விட்டன
ஒருமுக மாகவே ஓடி வந்தன
வருமுக நோக்கியே மாபெ லாந் தெரி
கருமநற் றலைவர்கள் கருதி ஆய்ந்தனர். (அக)

1178. பாஞ்சையம் பதியுயர் நிலையும் பண்புநல்
வாஞ்சையும் வரன்முறை வளைந்து வந்ததால்
தீஞ்செயல் எவரிடம் சேர்ந்த தென்றவர்
ஆஞ்செய லுடன்விரைந் தறிய முந்தினர். (கo)

சாக்கசனுக்குக் கும்பினியார் உத்தரவு.

1179. சிறையிலுள் ளவனைமுன் செலுத்தி நீயுமேர்
முறையில்வந் தருள்கென முடங்க லொன்றினைக்
கறையுறு சாக்கசன் காண உய்த்தனர்
நிறையுறு நெஞ்சினர் நெறியில் நின்றனர். (கக)

1180. அந்தவுத் தரவுவந் தடைந்த போதவன்
முந்துற விரைந்துமுன் சிறையில் மூடிய
இந்தநல் லமைச்சனை எழுப்பி நல்லுடை
தந்திதை யுடுத்திநீ சார்கென் றேவினான். (கஉ)

1181. இழுக்குடை நின்னுடை ஏற்க கிற்றிலேன்
அழுக்குடை யாகவே அதிபர் முன்சென்றென்
விழுக்குடிப் பிறப்பையும் விளைத்த வெம்மையும்
ஒழுக்கமும் பிறவுநன் குணர்த்து வேனென்றான். (கங)

1182. நல்லது போவென நால்வ ரோடவன்
செல்லுறு மாறுமுன் செலவி டுத்துப்பின்
வல்லதோர் பரியினி லிவர்ந்து வந்தனன்
செல்வமார் திருசிர புரத்தைச் சேர்ந்தனன். (கச)

கஉ-வது சாக்சன் சந்திப்புப் படலம் முற்றிற்று.

ஆகக்கவி ககஅஉ.

அக. கும்பினியார் டேவிசனுக்கும், டேவிசன் துரை கும்பினிக்கும் எழுதியனுப்பிய கடிதங்கள். நீட்டல்=எழுதுதல்.

[illegible]

[illegible]

[illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
[illegible] [

1188. மல்லினில் வலியவம் மன்ன னும்மிவன்
சொல்லினில் எளியனுய்த் தொங்கச் செய்துளான்
அல்லிலும் பகலிலும் யாண்டும் தன்னலம்
புல்லுமோர் வழியையே பொருந்த நோக்குவான். (கூ)

1189. நயமுறு வஞ்சகன் நாவில் தேனுறு
பயமெனப் பேசுவான் பணிவும் காட்டுவான்
கயமிகு நெஞ்சிலே கள்ள முள்ளவன்
இயல்பினை யெங்ஙனம் இயம்ப வல்லனே. (எ)

1190. மன்னவன் திறைதர மறுத்து மாறுபட்
டின்னல்மீக் கொண்டிக லாக்கி நிற்றலுக்
கென்னகா ரணமென எண்ணி நோக்கிலுல்
இன்னவ னேயதற் கேது வாகுமால்; (அ)

1191. அன்னவன் றனைவசப் படுத்தி யாண்டுமே
தன்னர சாகவே தருக்கித் தன்பெயர்
துன்னிமேல் நின்றிடச் சூழ்ச்சி செய்திவன்
பன்னரும் வஞ்சகம் பயின்று வந்துளான். (கூ)

1192. கொடுமைகள் செய்துவெங் கோள்கள் மூட்டியே
படுபழி விளைத்துயர் பாஞ்சை யம்பதிக்
கடுகடு விடமென அமைந்து வஞ்சகக்
கெடுமதி யாயிவன் கிளைத்து நின்றுளான். (கo)

1193. நாடெலாம் இவன்பெயர் சொல்லி னஞ்சென
வாடியுள் ளஞ்சுமால் வஞ்சச் சூழ்ச்சியால்
கேடுகள் பலசெய்து கிளைபி ரித்துடன்
கூடவே யிருந்திவன் குடிகெ டுப்பனுல். (கக)

1194. துன்மதி யமைச்சிவன் துணிந்த மன்னனைப்
புன்மதி யாக்கியே போரை மூட்டிநம்
முன்மதி யாவகை முடித்து வைத்தனன்
என்மதி யிவனிடம் இயற்றற் பாலதே. (கஉ)

1105. வல்லதகவைக் காலைவந் தூற்ற மாஞ்சைமன்
னெல்லுலகம் நீசனையர் நிறைந்துப் போயிணை
னல்லறனோர் பிழற்பிலைக் நிழற்து வந்தணன்
வல்லவிதை வரைதீரை வந்து னீர்வைன்றனன். (கந)

1106. அந்த வரசனை யிகழ்வாளை யாளையும்
பிந்தை யாதரமை நீக நிழ் நினைந்தனர்
நந்த வாசமை யெய்தினை நிலையிலை)
முந்த நீசர்களை யெனை முருக்குகவே. (கச)

1107. பெண்ணை நீயெனை நிரிய யாவரீர
வண்ண நீவளர்த்தனை வளர்ப்பை யிலக்கனை
யுண்ண நீவளர்த்தனை யுரைக்கையெகா நீளிந்தில்
வண்ண நீவரும் யாற்றுமை யுணர்ந்திகால். (கஞ)

1108. வல்லரை யுரைத்திட வழுந்து மந்திரி
னில்லையரசர் வானகத்தினீய நீதி யாதெலாம்
கல்லரண் குலைகளீர ! நானிங் கோதுவ
தெல்லையில் புல நிதுன்றலெம் உரைக்க லாயினன். (கசு)

தாழபதி எதிர்மொழிந்தது.

1109. நிகுலையை நிலைனிர்த்தக் தரும மன்றத்தில்
அறிவாய யாயர்க்துள அண்ண லார்முன்பு
மறுகிலே மகனுல மருவி டாமலே
அறுவெகாடுர்ப் படுதிகளை அடுக்கி னனரோ. (கள)

1200. பொய்யெலாம் புனைந்திந்தப் புனித மன்றத்தில்
நுயர்முன் யாதொன்றும் அஞ்சி டாமலே
நுயரீகா! இவன்சொன்ன அநீதி யாவுமிவ்
வெய்யவன் புன்மையை விளக்கி நின்றவே. (கஅ)

1201. நீகாளைக் கொள்ளையும் கொலையு மெங்குமே
காலை நுட்டுவேன் என்று காட்டினன்
ஆகா நேரிலே யாதும் கண்டிலான்
வகாகா யிட்டிவன் இங்ஙனம் ஓதினன். (கசு)

1202. தான்செய்த தவறெலா மறைத்துத் தங்கள்முன்
நான்செயா நவையெலா நயந்து சொல்லினன்
வான்செய்த புகழொடு மருவி யுள்ளவெங்
கோன்செய லொன்றுமே குறிக்கொண் டோர்ந்திலான். (உ0)

1203. காணவா வென்றிவன் அழைக்கக் காவலர்
ஆணையென் றெம்மர சகம கிழ்ந்துமே
வேணவா வுடன்வர நெல்லை விட்டிவன்
கோணலாய் மறைந்துகுற் றேவல் கூடினன். (உக)

1204. அங்கும்பின் தொடர்ந்தனம் அருள்செய் யாமலே
பொங்கிய வில்லிபுத் தூர்க்குப் போகின்றேன்
உங்குவா வென்றிவன் உரைத்துப் போயினன்
சங்கமோ டங்கும்போய்ச் சார்ந்து நின்றனம். (உஉ)

1205. அவ்விடத் திலுமிவன் அமைந்து கண்டிலன்;
இவ்விடம் இவ்விட மென்று வஞ்சித்துச்
செவ்விய இராமநா தத்தில் சேர்த்தனன்
வெவ்விட மணியவன் விளைத்த தென்சொல்வேன்? (உங)

1206. மேலுள மாளிகை யொன்றில் மேவியே
மாலுள மல்லர்கள் வல்ல சேனையைப்
பாலயல் மறையமே வைத்துப் பாண்டியா!
சாலவே வந்துகாண் என்று சாற்றினன். (உச)

1207. வஞ்சகந் தெரிந்திலா மன்னன் மாண்புடன்
தஞ்சமா வந்தனன் சார வந்ததும்
எஞ்சிநீ ஒருவனே யிங்கு வாவென
வெஞ்சின ஆணையை வெளியில் நீட்டினன். (உடு)

1208. நல்லதென் றேறினன் நானும் தம்பியும்
மெல்லவே தொடர்ந்துபின் மேவி நின்றனம்
வல்லன பலபல வாது பேசினன்
எல்லையில் மல்லரை ஏவி விட்டனன். (உசு)

உங. சொக்கம்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய இடங்களுக்கெல்லாம் அலைத்து முடிவில் இராமநாதபுரத்திற்கு இழுத்து வந்தான் என்பதாம்.

1200. யானைகள் போலவர் அடர்ந்து பாய்ந்தெங்கள்
கோனினைப் பற்றினர் கோப மூண்டது
மானமா மன்னவன் வாளில் வீசினன்
சேனைமா முண்டங்கள் எழுந்து துள்ளின. (உஎ)

1210. மூண்டவெம் படைகளை முடித்து மீண்டந்த
ஆண்டகை வரும்பொழு தஞ்சி யோடியே
தாண்டியோ நிடத்தினில் தாவி வீழ்ந்திவன்
மாண்டவன் போலவே மறைந்தொ டுங்கினன். (உஅ)

1211. மல்லைச்செய் போரினில் மதிம ருண்டுநான்
அல்லைமுற் றலமந்துள் அயர்ந்து வீழ்ந்தனன்;
வல்லைவன் துணையுடன் வாவிப் போயினன்
பல்லைவே யெழுந்திவன் விழிதி றந்தனன். (உக)

1212. வம்பெதிரை பற்றினன் வம்பு பேசினன்
பைதாந்திடச் சிறையினில் நூக்கி வைத்தனன்
ஐந்தலைப் பாம்பினை யெய்த நேர்ந்தபின்
சிந்தையுள் மகிழ்ந்துநான் சிறுமை தீர்ந்தனன். (கo)

1213. மல்லலம் மானிலக் கஞ்சி யோடிய
அல்லலீதுவர் சிகமெலாம் அடியன் மேல்வைத்துப்
பின்னலாய பிரப்படி பிழைகள் பேசினன்
இன்னமும் இவன்செய்த ஈனம் என்சொல்வேன். (கக)

1214. மூன்று முகமன் மாமுனி நீராட்டு மூடினன்
ஆன்றபீர மகமை யுலைவச்சன் என்றிவன்
வானநீலை நிகரும்பீர வண்ணனி நோக்கிலன்
கானல் துயில் விரும்பிய நலவிரும் தானதோ. (கஉ)

1215. மின்னல்விய வழிபியலையே கறிவி லக்கமு
கல்லியல் புலை யதுபுரி கரம் நீங்கிய
புல்லிய இவன்செய்த புணர்ப்பால் மனமன்றி
பல்லியல் புலை யதையுங் கொள்கைக ளிந்தவன். (கக)

இது, வாசம் செய்கின்ற மனமது சூர்ப்பனகையது அழகையே மதித்தே மன்மதனது கணைகளை எய்கையில் இவ்வாறு இவன் ஈனம் செய்தான் என்பதாம்.

1216. நல்லவர் தம்மிசை நவையை மூட்டியே
அல்லலி னிளைத்தனன் ஆய்ந்து நீதியைச்
செல்லநற் றுரைகளே! தேர்ந்து செய்மினென்
றெல்லியில் அமைவுடன் இயம்பி நின்றனன். (நச)

கும்பினியார் உண்மை யுணர்ந்து உள மகிழ்ந்தது.

1217. நின்று மந்திரி சொல்லிய நெறியெலாங் கேட்டு
நன்று நன்றென வுவந்தனர் நவையெலாம் அவன்பால்
ஒன்றி யுள்ளவென் றுணர்ந்தனர் ஒருவனுய் நின்றே
அன்றம் மல்லரை வென்றர சகன்றதை வியந்தார். (நரு)

1218. தனிய னுய்நின்றத் தளத்தினை அங்கவன் தடிந்தே
இனிய னுய்எங்ஙன் ஏகினன் என அவர் வியந்து
வினய மாகவே *வினவினர்; வினவவும் பிள்ளை
அனையவே அவ்வா றுயிர மாயினும் அடுவான். (நசு)

1219. உரிய வாளினை யுறைகழித் தெடுத்துமுன் னுருத்து
வரிவ யப்புலி யாமென மன்னவன் பாய்ந்தான்
அரியெ திர்ப்பட்ட நரிகள்போல் அப்படை அனைத்தும்
இரியல் போயின இழிந்தழிந் தொழிந்தன பலவால். (நஎ)

1220. அன்று வீரமன் ஆருயி ரனைத்தையும் ஒருங்கே
கொன்று தின்றிடும் கூற்றெனக் கொதித்துவாள் விதிர்த்தான்
நின்ற வெம்படை நிலைகுலைந் தோடின நேரே
ஒன்றி னுரெலாம் உயிருலைந் தொழிந்தனர் உடனே. (நஅ)

1221. மடங்க லேற்றினை மண்ணுறு கட்டியா லெறிந்து
மடங்க வைக்கலா மென்றபுன் மதியினர் போல
மடங்க லந்தவிவ் வஞ்சக னெஞ்சினன் அன்றம்
மடங்க லாவிற லாளியை மாறுசெய் திழிந்தான். (நகூ)

---

* உண்மையை உணர்ந்துகொண்ட கும்பினியார் ஜமீன்தார் தனியே நின்று வென்று போனதை நினைந்து வியந்தார் ஆதலால் அவ்வீர நிலையை விழைந்து பிள்ளையிடம் மேலும் விவரமாக வினவலாயினர்.

1999. வண்டு மலர்வாயில் விரும்பொய்த் திறலினை யினிதா
கிண்டு மகிழ்தி கூறிட நீகளை வியந்து
மண்டு தீவினைமுற் றுமாறில மகிழ்ந்தனர் என்றும்
வெண்டி விரைமலர் விரும்பிமுல் வியந்திடா வெவமே? (சo)

2000. அன்ன விரகின் மின்னெனிற் கடவுளும் விலைமுற்றுவர்
மன்ன னிங்ஙனம் வருவதீதென் வள்ளமனாய்; வகைமுற்
றென்ன வாய்வகை வருகுவதாயினும் முறைமையாய் நீதியின்
மின்னு வாளினை முயல அவை வலைவகை முறையென்றான். (சக)

2001. அன்னம் வாவியி னுறைவதும் நீரினிறைஞ் சமைகையன்
நீரைப் பிலவகிலை முறைஞ்சி வாழ் காய்திலன் நீயே
நீரை வாழ்நிலைக் கிடமலாய்நெகா டொன்றெது பரியும்
அரசர் அவர்நிலைக் குரிஞ்தனன் றணையயல் விடுத்தார். (சஉ)

2002. இவன்ற வகல்பரில் சயக்கசன் றணையெதிர் நோக்கி
வகைமுற் றுரைமு வெய்துறை நாட்டினில் எமக்கே
அவைமுற் றுரைமு மங்ஙனே விலைதெரிந் தாற்றும்
தவைமுற் றுரைமு வகைத்துள்ளித் தண்டமும் விதித்தார். (சஙூ)

2003. அன்ன நீதிகளன் விடுத்தருற் றிருமுகம் முழுதும்
அன்னர் நீதிநிலைக் தவற்கொரு பதிலினை விடுத்தார்
இன்ன வாவலைத் திருமுகம் எய்தவும் அவன்றான்
மன்ன ரன் மனமிடி மன்பினுல் இன்பமீக் கூர்ந்தான். (சச)

2004. அந்த நன்முகம் அதிபர்கள் மனமிக மகிழ்ந்து
தந்த தாதுலால் அதனுடன் அவன்விரைந் தெழுந்து
வந்து மாப்பெருமையம் பதியினை மருவினன் வரவும்
முந்து மின்னெயும் அவ்வழி அவனெமுன் கண்டான். (சஙி)

2005. இவன்றி பர்களும் எதிரெதிர் வருமுறை வினவிப்
புவன்ற யன்புடன் இன்புற வளநகர் புகுந்தார்
நிவன்றி நீகழ்ந்கினர் யாவரும் சிந்தையுட் களித்தார்
அவன்ற டந்துபோய் அரசமா ளிகையினு ளடைந்தார். (சசூ)

1229. அரசன் கண்டுவந் ததிசய மிகவெய்தி ஆர்வம்
விரசி மேலெழ உடனிரீஇ விளைவெலாம் வினவித்
திரைசெய் செந்திலெம் பிரானரு ளெனத்தெளிந் தேத்தித்
கரைசெ யாப்பெருங் களிப்புடன் கலந்தினி திருந்தான்.(சஎ)

1230. அன்பு மிக்கவோர் அருமைநற் பிள்ளையை அடலார்
வன்பு லித்திரள் முன்புவிட் டொதுங்கிய வண்தாய்
பின்ப தைக்கண்ட போதெனப் பிள்ளையைக் கண்டுள்
இன்ப மோங்கிய ஏந்தல்பின் இழைத்ததை யிசைப்பாம். ()

வந்த தானுபதி வருநிலை யுரைத்தது.

1231. மந்திரி விசாரணை மரபி னுடியே
முந்திரி யும்பிச காமல் முன்னவர்
அந்த ரந்தெரிந்தற நீதி ஆற்றினர்
வந்தரு ளும்படி வாய்மை கூறினர். (சகூ)

1232. போயவர் நிலைமையைப் பொருந்தக் கண்டுநம்
தூயநன் னிலைமையும் துலங்கக் காட்டியே
நேயமோ டமைந்தினி நிலத்து வாழ்வதே
தேயமோ டமர்ந்துநாம் செய்யற் பாலதே. (ஞo)

1233. மறமிகுந் தொழுகிய வஞ்சச் சாக்கசன்
புறமகன் றெழிந்திடப் போக்கி நம்மிடம்
உறவமர்ந் துவகையி னேங்கி யுள்ளனர்
அறமலி சிந்தையர் ஆளுந் தன்மையர்; (ஞக)

1234. என்றுயர் கும்பினி யாரை வத்தியே
நன்றுணர் மதியுடன் நயந்து மந்திரி
வென்றியந் திருவுடை வேந்தன் முன்சொல
அன்றயல் இருந்தவன் அடுத்து ரைத்தனன். (ஞஉ)

1235. பாஞ்சையம் பதிமனைப் பார்க்க வேண்டிநாம்
வாஞ்சையுற் றிருக்கின்றேம் வந்து போகலாம்
ஆஞ்ஞையன் றிதுவெங்கள் அன்பின் வேண்டுகோள்
நாஞ்சில நலங்களை நயந்து நின்றுளேம்; (ஞங)

1206. வானவாவி மீனைவாய் வாழ்நெ டியிப்தான
அனைவாயுற் றிரைவாய்ப் பிடிக்கு மதுவன்
இனைவாயுற் றுதிரைவாய் வீழ்ந்தி றந்தானென்
றனதனு யிரைக்கவர்ந் தவனுந் தானே. (நிச)

1207. அரவெடுக்கு முலகமெலா மழலிற் றிரிக்குமா
லிரவெடுக்கு நிருமலனு மிருளிற் றிரிவனா
லிரவெடுக்கு மிருளையுமி வ்வாழ்க்கை யீடாக
வுரவெடுத்து மவ்வுலகினரு மகிழ்ந்து மீள்வரோ. (நிந)

1208. வான்றரு வானவர்க்கு மரிதா மிவனிலை
கான்றவர் தமக்கு மரிதாங் கருமலை
யேன்றவர் தமக்கு மிவனிலை யிலாத நல்லதாய்
மூன்றவர் தமக்கு மரிதா மென்று மொழிந்தனன். (நிக)

1209. விரிபரவை மீதுலவை யிழந்து தேவரோ
டுரிமையுட னிருவிலே யமர்ந்து வேண்டிய
அரிவையர் நடம் பெறுவ ருள்களே அமைக்க வென்றுரை
யருமையுடன் அனைவர்க்கு மிடம் வகுப்பு செய்தனன். (நிள)

1210. மீளவந்து பெறுவ ருள்களும் வீரர் யாவரும்
வளமுடன் நிறையுடன் இனைந்து நிற்கவும்
அளவு கொ டுயர்த்தும் அகி லார்வமாய்ப்
புளகமு மகிழ் துலவினோ டிராதன் மேவினான். (நிஅ)

கடவுள் நியமம் தெளிந்த படலம் முற்றிற்று.

அகத்தியர் கூ-சு.

பதினென்காவது

துரைகள் நட்புப் படலம்.

நியாயம் தெளிந்த கும்பினி அதிபதிகள் பாஞ்சைப் பதியுடன் உறவுகொண்டு உரிமைசெய்த நிலைமையை உரைக்கின்றமையால் இது துரைகள் நட்புப் படலம் என நின்றது.

1241. கும்பினித் தலைவர்தம் குறிப்பு ணர்ந்துமுன்
வெம்பிய பகைநிலை விலகு மென்றுளம்
நம்பிய படியினுல் நயந்து கோர்செலத்
தம்பியை நம்பியும் தழுவி நின்றனன். (க)

1242. அன்புடன் அழைத்துளார் அமைச்சும் வந்துளான்
மன்படை யுடன்சென்று வல்லை மீளுவன்
பொன்புனை நகரினைப் புரந்து நில்லென
இன்புறு மாமனை டினிது கூறினன். (உ)

1243. முன்னமோர் களியனுல் மூண்ட வெம்பகை
இன்னமோர் வழியினுல் எளிது தீருமென்
றுன்னியுள் முருகனை உருகி எண்ணியே
பொன்னடி மலர்களைப் புகழ்ந்து போற்றினன். (ங)

1244. எண்ணிய யாவையும் இனிது நல்கியென்
கண்ணினுள் ஒளியெனக் கலந்து நின்றருள்
புண்ணிய பூரண புனித செந்தியில்
நண்ணிநின் றருள்புரி ஞான நாயகா. (ச)

1245. மானமும் வீரமும் மருவி நின்னருள்
ஆனபே ரரணினை அடைந்து நின்றெமர்
ஊனமொன் றுறுவகை உலகை யோம்பினர்.
நானும்வந் தவர்வழி நண்ணி நின்றுளேன்; (ஞ)

1246. என்னையும் புரந்திந்த இடத்தின் மேன்மையைப்
பின்னமொன் றுறுமலே டணிக் காப்பது
முன்னவர் முன்னனுய் முழுதும் நின்றருள்
நின்னது கடனென நினைந்து வாழ்த்தியே; (ட)

1247. ...யுமகு நிலையினுக் கமைந்த தாகிய
விமகு கோலங்கள் விழைந்து கொண்டனன்
வமுறு தாயினை வலம்வந் தேத்தியே
பரிசேர் விடைபெறப் பரிந்து வந்தனன். (எ)

அன்னையடிபணிந்து மன்னன் விடை பெற்றது.

1248. ...த்தியருள் சகதேவி சன்னிதியில் தாழ்ந்தெழுந்து
தாய்முன் போந்து
நித்தியச்சே வடிபணிந்து செவ்வாய்கை புதைத்துநின்று
நிருநீ றியப்
...த்தியுட னுதலணிந்து பத்தினிபால் விடைபகர்ந்து
பரிந்து நீத்துச்
...த்தியசா மரைநீளத் தடந்தானை புடைசூழச்
சார்ந்து வந்தான். (அ)

1249. ...ங்கமொழு தங்குநின்ற படைகளெலாம் பெரிதுவந்து
மதிசேர் கண்ட
...ங்கமிகு தண்கடல்போல் சிந்தைகளித் துயர்ந்தேதாங்கத்
தளைச் செவ்வாய்ச்
...ங்கனிகள் வாழ்த்தெடுப்பத் தித்திகள்மத் தளமுழங்கச்
சுருதி கூறச்
...ங்கமிழின் பாட்டிசைக்கச் செந்திநகர்த் திசைநோக்கிச்
சேனை செய்து. (கூ)

1250. ...ரதிமணிச் சிவிகையினில் தேன்றலெழுந் தருளினன்
துணைவ ரெல்லாம்
...ரதிமணிப் புரவிகளில் தாமமர்ந்தார் தேவசனும்
அமைச்சும் சார்ந்தார்
...ரதியர்கள் வாழ்த்திநின்றார் வேல்வலவர் வாள்வலவர்
விரைந்து சூழ்ந்தார்
...ரதிரங்கள் செவிடுபட மன்னியங்கள் பலமுழங்க
வழிமேற் கொண்டான். (கo)

1251. செல்லும்வழி இடைநின்ற நகரங்கள் தொறுமிருந்தார்
சேர வந்து
பல்பழங்கள் மெல்லிலைகாய் நல்லனவெ லாங்கொணர்ந்து
பணிந்து கண்டு
நல்லுபசா ரங்கள்செய்து நனிவாழ்த்த அரசுவந்து
நயந்து நோக்கி
நில்லுமென அருள்கூர்ந்து நிறுத்திநெறி முறையாக
நெடிது சென்றான். (கக)

1252. சென்றுதிரி சிரபுரத்தைச் சேர்ந்தவுடன் வேந்தடைந்த
திறன்தெ ரிந்து
துன்றுபெரு மகிழ்ச்சியுடன் துரைகளெதிர் கொண்டழைத்துச்
சோதி மன்றத்
தொன்றியநல் மாளிகையில் உடனிருத்திப் புடைசூழ்ந்துள்
ளுவகை கூர்ந்து
மன்றவுற வுரையாடி மாபெரிய விருந்துசெய்து
வதிந்தி ருந்தார். (கஉ)

1253. மாரனெனக் கவிகளெலாம் வருணிக்கும் வடிவமொடு
வயங்கி நின்ற
பேரழகும் பெருமிதமும் போத மனத்திண்மை
பிறங்கி யுள்ள
வீரமிகு முகப்பொலிவும் விழிகளிப்பத் தனித்தனியே
விழைந்து நோக்கி
ஓர்வமொடு பலபேசி அனைவோரும் அகமுவந்துள்
அன்பு கூர்ந்தார். (கங)

1254. திறந்தெரியாச் சாக்கசனல் சினந்திருகி யன்றுநீர்
செய்து சென்ற
மறந்தெரிந்து வருந்தினேம் மடமையினல் விளைந்ததனை
மறந்து விட்டு
நிறந்தெரிந்த நட்போடு நிலத்துநா மிருவேமும்
நிற்க வேண்டி
அறந்தெரிந்த வுமையழைத்தேம் அகந்தெளிந்து கொளவிழைந்தேம்
அபய என்றார். (கச)

1255. மன்னவவர் அன்புடனே இசைந்துரைத்த பண்புரையை
இனிது கேட்டு
மன்னன்மன மிகமகிழ்ந்து மாண்புடையார் முகநோக்கி
வானும் மண்ணும்
இன்னநிலை உலகறிய இன்றுமுதல் நண்பமைந்தீதம்
இனிமேல் நீங்கள்
சொன்னபடி செய்தமைவேன் தொன்முறைபின் படியென்றும்
தொடர்ந்து நின்றே. (கஞ)

1256. மன்றரசன் இயம்பஅவர் இனிதுவந்து டழைமைபோல்
இருந்து வாழ்க;
நன்றுதிறை பிறரெல்லாம் தொடர்ந்துதரத் துணைசெய்க;
துன்னூர் மீறி
நின்றெமரோ டமர்புரிய நேர்ந்தனரேல், நீர்துணையாய்
நேரே வந்து
நன்றுதவி செய்தருள்க என்றிசைத்தார் அரசுவந்து
நல்ல தென்றான். (கக)

1257. இன்னபடி வரையறைகள் இனிதுசெய்து தனித்தனியே
இல்லம் தோறும்
மன்னரிய படிவிருந்து பரிந்தாற்றிப் பந்தாடல
பயின்று நாளும்
மன்னியபே ருவகையுடன் மருவிவரும் காலொருநாள்
பரியேற் றத்தில்
மன்னன்மிக வல்லவனென் றறிந்ததனால் அதையறிய
மனம்வி ழைந்தார். (கஎ)

1258. உள்ளம்விழைந் துள்ளதனை உல்லாச மாயிவன்பால்
உரைக்க லானார்
தள்ளரிய பெருவீரத் தருக்குடைய இவனுவந்து
சாரி வல்ல
ஒள்ளியவெம் புரவியிங்கே யுள்ளவெலாம் காண்பமென
உரைத்து நின்றான்
வெள்ளையர்கள் மிகவியந்து வியமுடைய வயங்களனோர்
விரைந்து தோற்றார். (கஅ)

1259. மல்லகதி மயூரகதி முதலியவைங் கதிவகையும்
சாரி யாவும்
வல்லனகல் வடிவுடைய வலமுடைய மணமுடைய
வானும் மண்ணும்
ஒல்லையினில் உலாவிவரும் ஒழியாத கடுவேக
முடைய வான
நல்லபுர விகள்வழும் நன்குதெரிந் தெடுத்துவெளி
நாட வைத்தார். (ருரு)

1260. *செண்டுவெளி வந்துவளர் தேசுமிகுந் தெவராலும்
தெரிய லாகா
மண்டுவளி யேய்பிந்த வடிவெடுத்து வந்தவென
மறுகி யாரும்
கண்டுகளி கொண்டாடத் திண்டிறல்மன் னவன்துரைகள்
காண வேண்டி
மிண்டுபரி ஒன்றின்மேல் வெம்மடங்கல் போல்தாவி
விரைந்து சென்றான். (உ0)

1261. காற்றென்ன மனமென்னக் கட்புலனும் கதுவாமல்
கடிது சுற்றி
மேற்றிசையும் கீழ்த்திசையும் மிக்கிரண்டு திசைகளையும்
வேறு காண
தூற்றமொடு வந்திவ்வா றேரேழு குதிரைகளும்
ஓய்ந்து நின்ற;
வேற்றுமையொன் றில்லாமல் மேலுமிவன் வீறுடனே
விளங்கி நின்றான். (உக)

1262. வாள்வலியில் வேல்வலியில் மல்வலியில் வில்வலியில்
வளர்ந்த டர்ந்த
தோள்வலியில் கைவலியில் சொல்வலியில் வல்லனெனச்
சொல்லக் கேட்டோம்
தாள்வலியில் வல்லவுயர் புரவிகளை முழுயும்தளர்த்தித்
தளர்வொன் றின்றி
நீள்வலியில் வல்லனுய் நின்றஇவன் நிலைமையின்று
நேரே கண்டோம். (உஉ)

---

* செண்டு = குதிரை வாவிவரும் வையாளி வீதி.

1264. இல்லைபெரு வீரனமக் கினியதுணை யாயமைந்த
திதமே யென்னு
மல்லியபே ருவகையுடன் மன்னவனை அருகணைத்து
மருங்கு வைத்து
கல்லாயங்கள் பலசெய்து காலுமுறை யாடி
நயந்தி ருந்தார்;
அன்னபெருந் தகையாளர் அடைந்தவர்கள அனைவருக்கும்
அன்பு செய்தார். (உக)

1265. வெளியிருந்த சேனைக்கும் விதிமுறையே விருந்தாற்றித்
திங்கள் ஒன்று
களிமிகுந்து மருவியமர்ந் துடனிருந்த தேவசன்பாற்
கலந்து சூழ்ந்தி
ஒளிமிகுந்த அரசொடுமம் வழிவருவார் எஞ்ஞான்றும்
உறவாய் வாழ
அளிமிகுந்த வழியினைநாம் அறிந்துசெய வேண்டுமென
ஆய்ந்து தேறி. (உச)

1265. அரியவிலைத் தரளமணி மாலையும்பொற் சிவிகையுமுன்
ஆர்த்து வந்த
புரவிகளே முடன்சங்கப் பெயர்பொறித்த தேர்வாளும்
புகழ்ந்து தந்து
துரைகள்சூ டாமணியென் றுரைபுதிய பட்டப்பேர்
துலங்கச் சூட்டி
உரைகள்பல கொண்டாடித் துரைகளெலாம் அரசனைமுன்
உவந்து நின்றார். (உஙி)

1266. அன்னபெருந் தகையாளர் அருளிநின்ற சிறப்புகளை
ஆய்ந்து நோக்கி
மன்னன்மிக மனமுருகி வாயார வாழ்த்திநின்று
மாண்பு மிக்க
இன்னபெருஞ் சீர்கலையிங் கெய்தகூன் செயததவம்
யாது கொல்லோ
பொன்வனையைச் சேர்ந்தேனுக் கென்னகுறை யெனமிகவும்
புகழ்ந்து போற்றி (உசு)

1267. தொழுதுவிடை கொண்டெழுந்தான் துரைகளெலாம் உடன்
சூழ்ந்து வந்தார் [தொடர்ந்து
முழுதுமுங்கள் உரிமையினி முகமேனன் என அவரை
முன்னி றுத்தி
விழுமியநற் சீர்களுடன் தேவசனும் அமைச்சனும்பின்
விழைந்து மேவ
எழுதுபெருங் கீர்த்தியான் படைகளுடன் எழுந்துவழி
ஏக லுற்றான். (உஎ)

புதுவை அரசு விருந்து புரிந்தது.

1268. வரும்வழியில் புதுக்கோட்டை மன்னனிவன் வருவதைமுன்
அறிந்து வந்து
பெருமகிழ்வோ டெதிர்கண்டு மேபணியொரு நாள்விருந்து
பெட்பிற் கொண்டிங்
கருள்புரிய வேண்டுமென ஆர்வமுடன் வேண்டினன்
அரசி னைசந்தான்
உரிமையுடன் கொண்டுபோய் உயர்மணிமா ளிகையிருத்தி
உபச ரித்தான். (உஅ)

1269. விசயரகு நாதனெண்டை மானென்னும் வேந்தனன்று
விழைந்து செய்த
நசையுறுநல் விருந்துகண்டு நட்புநிலை தனையுவந்தான்
நண்ணி வந்த
அசைவிலுயர் தேவசனும் அமைச்சன்முதல் யாவருமின்
பார்ந்து நின்றார்
வசையிலர சவ்விசய வரதனிடம் விடைகொண்டு
வழிமேற் கொண்டான். (உக)

தொண்டைமான் கொண்டாடி நின்றது.

1270. இம்மன்னன் உயர்திருவும் எழினலனும் வலிநிலையும்
எதிர்ந்து நின்ற
தெம்மன்னும் மனமகிழ்ந்து சீர்கள்பல செய்துவிட்ட
செயலும் நோக்கிப்
பொம்மென்ன அளிமுரலும் பொலந்தாரிப் பொம்மன்போல்
புவனந் தன்னில்
எம்மன்னர் பேர்பெற்றார் எனவந்த மன்னனுவந்
தேத்தி நின்றான். (உ0),

1271. நாட்டிடையே கண்டவரும் நகரிடையே நின்றவரும்
நயந்து கூடி
வாட்டிறலார் வயமேவுந்தன் வழிவரும்போ தெதிர்வந்து
மகிழ்ந்து வாழ்த்திக்
காட்டியதண் ணுயர்மழையைக் கண்டபயிர் போலுள்ளங்
களித்து நின்றூர்
தேட்டிடைநீண் டுயர்ந்திருந்த தென்மதுரா புரிவந்து
சேர்ந்தான் அம்மா. (கூக)

1272. மணிமாட கூடங்கள் மாளிகைகள் மண்டபங்கள்
மறுகு தோறும்
அணியணியா நிறைந்துதிகழ் அப்பதியில் இப்பதிநன்
கமர்ந்தி ருந்து
தணியாத காதலொடு தனிமுதலைத் தொழுவிழைந்து
தகவோ டேகிக்
கணியாத சீரொடுயர் திருக்கோயில் சார்ந்துள்ளே
களித்துச் சென்றான். (கூஉ)

1273. திருமகளின் உறைவிடமாய் நலமிகுந்து வளமலிந்து
திகழ்ந்து நிற்கும்
பெருநகரம் வரன்முறையே புடைசூழ நடுவமைந்து
பெருமைக் கெல்லாம்
ஒருநிலைய மாயொளிரும் ஆலயத்தி னுட்புகுந்துள்
ளுவகை யோங்கி
அருளுருவாய் நின்றருளும் மீனாட்சி யம்மையடி
வணங்கி நின்றான். (கூஙூ)

1274. பக்கநின்று மறையவர்கள் பண்பாற்றி நண்புசெய்யப்
பணிந்து போற்றிச்
சொக்கலிங்கப் பெருமானைத் தொழுதேத்தித் தூயநீ
றினிது பெற்றுத்
தக்கபடி யனைவருக்கும் பொருளீந்து சன்னிதிக்குத்
தனிவி ழைந்தே
ஒக்கலோ டாயிரம்பொன் னுவந்துதவி உளமுருகிப்
புகழ்ந்து மீண்டான். (கூச)

1275. தண்டிகையில் அமர்ந்தருளித் தானையுடன் படர்ந்தேதகித்
தலங்கள் தோறும்
கண்டுநின்றூர் கைகுவிக்கக் கருதரிய சிறப்புடனே
கடுகி வந்து
மண்டுபுகழ்ப் பாஞ்சால மாநகரம் இனிதடைந்து
மன்னர் மன்னன்
கொண்டுவந்த பொருள்களெலாம் செந்திலான் வரவென்று
குறித்து வைத்தான். (நட)

1276. சேமையதி பதிகளிடம் சேர்ந்ததுமங் கமர்ந்ததுமச்
சீரி யோர்கள்
தாழுவந்து விருந்தாற்றி உபசரித்த தகைமையும்பின
தழுவி நின்று
காமருசீர் வரிசைகளைக் களிந்துதவி விடுத்ததுந்தான்
கண்டு வந்த
சேமமல மெல்லாம்தன் தாயினிடம் இனிதுரைத்துச்
சிறந்தி ருந்தான். (நசு)

1277. மன்னரெலாம் திறைசெலுத்தி வழிமுறையே வணங்கிவர
வளமி குந்து
தன்னரசே தனியரசாய் நின்றிலங்கும் பேரரசும்
தகைமை செய்ய
இன்னபெருஞ் சீரடைந்து முன்னமெவர் இந்நிலத்தில்
இருந்தார் என்று
மன்னுபெரும் புகழ்கூர மாண்புறுநல் லறங்கூர்ந்து
மகிழ்ந்து வந்தான். (நஎ)

1278. ஆதிநெறி நீதிமுறை அகிலமெலாம் நிலவிநிற்ப
அமைதி யாகி
எதிலரும் இகலின்றி இனியராய் இசைந்தொழுக
இதமே எங்கும்
ஓதியுயர் மன்பதைகள் உறவாகி இன்பமுற
உவந்து நின்று
நீதியொடு புரந்தருளி ஆதிமனு வெனநின்றூன்
நிருபர் சோமான். (நஅ)

கச-வது துரைகள் நட்புப் படலம் முற்றிற்று.

ஆகக் கவி கஉஎஅ.

பதினைந்தாவது

மல்வலி கண்ட படலம்.

டாஞ்சை அதிபதி கும்பினி அதிபதிகளோடு உறவுகொண்டு அறநெறியே முறைபுரிந்து வருங்கால் வடதிசையிலிருந்து வந்த சிங்கமன் என்னும் மல்லனுடைய வலிநிலையை அறிந்த வகையினை யுரைக்கின்றமையால் இது மல்வலி கண்ட படலம் என நின்றது.

1279. தெவியல் நேமியான் செறிந்த பல்லுயிர்
ஓவறப் புரந்தருள் உரிமை போலிவண்
பூவியல் நிலையினைப் பொருந்த நாடியே
கோவியல் புரிந்தனன் கொற்ற மன்னவன். (க)

1280. வலியவர் மெலியரை வாட்டி டாமலும்
மெலியவர் உயிர்களை வீட்டி டாமலும்
பொலிவுறும் அன்புடன் பொருந்தி யாவரும்
மலிவுறும் இன்புடன் வாழ நின்றனன். (உ)

1281. முறையொடுங் குறையொடும் மூண்டு வந்தவர்
அறைதரும் உரைகளை ஆய்ந்து நீதியை
இறைவழு வாமலே இயற்றி எங்கணும்
நிறைபொறை நிலவிட நிலைத்து வந்தனன். (ஊ)

1282. படுநெறி இதுவென மனிதர் யாவரும்
இனிதுணர்ந் தின்புற இதம்பு ரிந்ததால்
துனிதுயர் ஒழிந்தன சுகங்கள் ஓங்கின
புனிதமார் தருமங்கள் பொலிந்து நின்றன. (எ)

1283. ஒன்னலர் உளந்திகி லுற்றெ டுங்கினர்
நன்னய முடையவர் நலங்கள் கூர்ந்துமேல்
உன்னிய வுவகைய ராயு யர்ந்தனர்
மன்னவன் மதிநலம் மருவி வாழ்ந்தனன். (ஏ)

1284. இத்திறம் இவனர சிருந்து வாழுநாள்
உத்தர திசையிருந் தொருவன் மல்லினில்
எத்திசை களுமிசை எய்தி எங்குமே
ஒத்தவ செவருமே யுறப்பெ றுதவன்; (சூ)

1285. தோளுறும் வலியினைத் தொடர்ந்து பற்பல
நாளுநன் குறப்படியின் றுயர்வு நாடியெவ்
வேளையு மல்லினில் வெல்லும் வேட்கையன்
கோளுயர் மதகரி யென்னுங் கொட்பினன். (எ)

1286. சிங்கமன் எனப்பெயர் சிறந்து நின்றவன்
அங்கநாட் டுள்ளவன் அவனி யெங்கணும்
தங்குதன் திறலினைச் சார்ந்து காட்டியே
பொங்கிய புகழ்பொருள் பொருந்தி யோங்கினன். (அ)

1287. அரசர்க ளிடமெலாம் அடைந்து தன்னுடன்
உரமுறு மல்லினுக் கொருவ னில்லெனத்
தரமிகுந் தெழுந்துளந் தருக்கி நின்றவன்
வரமிகுந் தித்திசை வந்து மண்டினன். (கூ)

எழுசீர் விருத்தம்.

1288. இந்நா டடைந்து குறுநில மன்ன
ரிடந்தொறும் புகுந்துதன் மேனு
முந்தவந் தெதிர்வா ருண்டுகொ லென்று
முறைமுறை நின்றறை கூவி
வந்துட னேர்வா ரிலாமையா லெங்கும்
வரிசைகள் மரபுடன் பெற்றுச்
சிந்தையுள் ளுவந்து * சென்னியை யகன்று
தென்றிசைப் பாண்டியைச் சேர்ந்தான். (கo)

1289. பாண்டிநாட் டுள்ள பாளையப் பட்டார்
பருந்துமீர் வந்துள அவன்றன்
ஈண்டிய நிலையும் வலிமையும் நோக்கி
எதிர்பவ ரிலையென வியந்து
வேண்டிய தந்து விடுத்தனர் தாமன்றி
மேவிநீ பாஞ்சையை யடைந்தங்
காண்டகை மன்னைக் காண்டியேல் உன்றன்
அருந்திற லறியலா மென்றார். (கக)

---

* சென்னி என்றது சோழநாட்டை.

1200. அன்னவ ருரைத்த வுரைகளைக் கேட்டங்
கரியதொன் றறிந்தவன் போல
மன்னிய விய்ப்பு மீக்கொளச் செருக்கி
வளமிகு பாஞ்சையம் பதிவாய்த்
தன்னுயர் படைக ளுடன்வந்து சார்ந்தான்
சார்ந்தவன் நகர்நிலை நோக்கிப்
பொன்னக ராமென் றுளமிக வியந்து
புகழ்ந்துளே நெறிமுறை புகுந்தான். (கூ)

1201. வந்தவன் அரங்க மாலிடை யிருந்த
மன்னனைக் கண்டுமுன் வணங்கிச்
சந்தமாய் நிமிர்ந்து நின்றனன் அவனைத்
தகவரு ளுடன்முக நோக்கி
வந்தவூர்? பெயரென்? இங்குவந் துற்ற
எண்ணம்யா தெனவர சியம்ப
முந்துற அவன்றன் நிலைமையு முறையு
முழுவதும் தெளிவுற மொழிந்தான். (கக)

மன்னன் மல்லனிடம் வினவியது.

1202. நல்லதென் றுவந்துள் ளுறவிறை நகைத்து
நவின்றவன் றனைமுக நோக்கி
மல்லமர் தன்னில் வாளம ரதனில்
வல்லயம் வேலுயர் வில்லென்
சொல்லிய அமருள் யாதுநீ வல்ல
சொல்லுமவ் வமர்களில் சிறந்து
வல்லவர் பலரிங் குள்ளனர் வகுத்து
வகைபெற விடுவலென் றுரைத்தான். (கச)

1203. மன்னவ னுரைத்த வாய்மொழி கேட்டு
வந்தவன் மனமிகத் திகைத்தான்
என்னினும் எங்கும் எதிர்ந்தவர் தம்மை
யிகல்வென்ற வுறுதியா லுக்கி
முன்னுறக் குறித்த அமர்களுள் மல்லே
முறையுடன் பயின்றுளேன் அதன்கண்
என்னுடை வலியை அறிந்தருள் புரிக
வினிதென மனனுற விசைத்தான். (கஞ)

1294. நன்றுநீ உரைத்த படிமுடி வாக
நாளைமல் லமர்நிலை காண்மோபாம்
இன்றுமோ பாயமென் றுயர்படி யருளி
யிருத்தினன் அடுத்தநாள் வரவும்
துன்றிய மல்லன் றனையெதி ரழைத்துத்
துரைமல்லு மதாருமல் லென்ன
ஒன்றியங் கிருந்த வீரருள் இளையோ
னுடன்அம ருஞற்றுக என்றான். (கசு)

1295. என்றலும் நின்றார் யாவரும் இகலின்
எறுழ்வலி யினிதுநேர் காண
ஒன்றிய ஆவ லுடனுவந் தெழுந்தார்
உறுசமர்க் குரியரா யமைந்த
துன்றிய திறலோர் நன்றென மகிழ்ந்து
தொன்முறை யுடன்றுணிந் தெழுந்து
வென்றியை விழைந்து தந்திறல் விளங்க
வீறுடன் மன்றினை யடைந்தார். (கள)

மல்லமர் மூண்டது.

1296. இருவரும் கச்சை வரிந்துடன் கட்டி
யெழுந்தனர் எறுழ்வலி பொங்க
அருவரை யனைய தோள்புடை கொட்டி
ஆளரி யிரண்டெதிர் எதிர்ந்து
மருவிய தென்ன மண்டிமுன் னடர்ந்து
வலமிட மாச்சுழன் றடலோ
டொருவரை யொருவர் உயிர்குடித் திடமுன்
னூக்கினின் றுஞற்றின ருடன்றே. (கஅ)

1297. நீளெழு வனைய கைகொடு கைகள்
கோர்த்துட னெருக்கினர் கொரித்துத்
தோளொடு தோள்கள் தாக்கினர் மார்பு
தன்னியுட் புதைந்திடத் துதைந்து
தாளொடு தாள்கள் தட்டினர் தத்தித்
தாவினர் தறுகண ராகி
மாளுறும் வகையில் முட்டினர் ஓட்டி
மாட்டினர் கட்டினர் மதத்தே. (கக)

1298. கடுத்துளங் கனன்று கண்பொறி சிந்தக்
கைகலந் திங்ஙனம் காய்ந்து
தொடுத்துறும் பொழுது மதாருமல் லென்பான்
துன்னிய மல்லனைவாரி
எடுத்துமண் ணடித்து மார்பினில் முழங்கா
லிட்டுட னிறுக்கியுக் கிரமாய்
மடுத்தனன் கனக னுரங்கிழித் துதிர
மண்டிய நரசிங்க மென்ன. (உ0)

1299. கன்னலோ ரரையிற் கடுத்தெதி ரறைந்து
கருதரும் வெற்றியை யெய்தி
அன்னவ னமர்ந்த நிலையினை நோக்கி
யனைவரும் அதிசயித் தார்த்தார்
மன்னவன் விலக்க மார்பினின் றெழுந்தான்
மற்றவன் மாண்டவன் போல
இன்னலோ டெழுந்து நாணின னின்றுன்
வந்தலங் கவனமுன் தேற்றி; (உக)

1300. வருந்தல்நீ யிங்கே வலியினை யிழந்தா
யாயினும் மன்னிய வுயிரைத்
திருந்துறப் பெற்றுய் எனவினி தருளிச்
சிரொடு சிறப்புகள் செய்தான்
பொருந்தலன் வெட்கித் தன்னுடன் கொணர்ந்த
பொன்னணி முதலிய யாவும்
அருந்திற லெதிரிக் களித்தன னவற்றை
அவனென்றும் கொண்டிலன் மறுத்தான். (உஉ)

1301. எழுபது சோடி யிதுவரை யடித்தேன்
எங்குமே யிசைமிகப் பெற்றேன்
முழுவது மிங்கே முதலொடு மிழந்தேன்
மூண்டநான் வடதிசை மீண்டால்
இழிவுமீக் கொண்டே இறந்திட நேரு
மெனவவன் மறுகவு மன்னன்
அழுனிநீ சின்ன ளிருவெனத் தன்பால்
சாரவைத் தன்புசெய் திருந்தான். (உங)

1302. அன்னவன் மனத்தைத் தேற்றவும் தன்ன
தரும்பெறல் வலியினை எளிதா
முன்னுற வுணர்ந்து கொள்ளவும் வேண்டி
மூண்டமல் வல்லர்கள் நூறுய்
மன்னிநின் றவரை ஒருபுறம் வைத்து
மற்றவ ருடனவன் றனையும்
துன்னிட நிறுத்தித் திண்ணிதார் வடத்தைத்
தொடர்ந்தவர் ஒருபுறம் பிடிக்க; (உச)

1303. தானெரு புறத்தே தனிநின்று கொண்டு
சார்ந்தநீ ரனைவிரும் ஒருங்கே
ஆனதோ ரடல்கொண் டிழுமென விழுத்தார்
யாதுமே யசைத்திலர் அயர்ந்தார்
கோனிவன் பின்னர் ஈர்த்தனன் ஈர்க்கக்
கூடிநின் றவரெலாம் குப்புற்
றானமாய் முன்னுல் வீழ்ந்தனர் வேந்தன்
உத்துங்க வலிநிலை யோர்ந்தார். (உரு)

1304. அடலுறு வில்வே லாதிய படையில்
அருந்திற லுடையவ னென்று
கடலுல கெங்கும் புகழ்ந்திட நின்ற
காவலன் மல்லர்கள் கண்முன்
உடல்வலி தனினும் ஒப்புயர் வின்றி
யுளநிலை யுணர்ந்துளம் வியந்தார்
வடதிசை யிருந்து வந்தமல் லனும்தன்
தோல்வியை வென்றியா மதித்தான். (உசு)

அறுசீர் விருத்தம்.

1305. பேராத வலியுடைய பெருமல்லர் நூற்றிருவர்பேர்
பெருகி ஒன்றாய்
ஆராத ஆவலுடன் அடர்ந்தீர்த்தும் யாதொன்றும்
அசைந்தி டாமல்
நேராக நின்றிருந்தான் நேர்ந்திவன்பின் னீர்க்கவெதிர்
நின்ற தெல்லாம்
பாரோடு முகம்படியும் படிபடிந்த படிதெரிந்து
பயந்தா ரன்றே. (உள)

1306. மன்னனுயர் வலிநிலையை வடதிசையி லிருந்துவந்த
மல்லன் ஓர்ந்தே
இன்னபெருந் திறலுடைய பேரரசை யிதுவரையும்
எதிர்ந்தே மில்லை
என்னதிறல் என்னவெழில் என்னதிரு என்னகொடை
என்ன இன்ன
பன்னரிய படிபுகழ்ந்து பணிந்துவிடை கொண்டெழுந்து
பதிபோய்ச் சேர்ந்தான். (உஅ)

1307. அந்நாட்டில் உள்ளமன்னர் இடங்களெல்லாம் அவன்வலமா
யடையுந் தோறும்
இந்நாட்டின் திலகமென இருக்கின்ற இவ்வரசை
வத்தி நின்றான்
எந்நாட்டும் இனிதாக இசைபரவி எழுந்தோங்க
விசயங் கொண்டு
தென்னாட்டின் சிங்கமெனத் திசைகடொறும் திறல்நாட்டிச்
சிறந்தி ருந்தான். (உக)

1308. பாஞ்சால நாடென்னப் பருவலியில் பெயர்பெற்றுப்
பாரி லோங்கித்
தேஞ்சாறு பாயவளர் செஞ்சாலி வளங்குலவிச்
சிறந்த தேனும்
நஞ்சோலை புடைசூழும் பாஞ்சாலங் குறிச்சியைப்போல்
போர்வீ ரத்தில்
ஆஞ்சாதை அடைந்திலதென் றவனிசால இங்ஙகரம்
அமர்ந்த தன்றே. (ஙo)

1309. வில்வலியில் வாள்வலியில் வேல்வலியில் வெய்யகவண்
விசித்து வீசும்
கல்வலியில் கால்வலியில் தோள்வலியில் கேள்வலியில்
கருதி ஆய்ந்து
சொல்வலியில் மல்வலியில் துணைவலியில் இடவலியில்
தொடர்ந்து போரில்
வெல்வலியில் மதிவலியில் பாஞ்சைநகர் வியனிலையில்
விளங்கிற் றம்மா. (ஙக)

கரு-வது மல்வலி கண்ட படலம் முற்றிற்று.

ஆகக் கவி கஙoக.

பதினாறாவது

ஆட்சி நிலைப் படலம்.

வீரபாண்டியக் கட்டபொம்மு சீரும் சிறப்பும் பெற்று யாரும் புகழப் பாராண்டிருந்த பான்மை, மேன்மைகளின் நிலைகளை யுரைக்கின்றமையால் இது ஆட்சி நிலைப் படலம் என நின்றது.

1310. இன்னபெரும் சீருண்டைய இரும்பதியில் பெரும்புகழ்கொண்
டெவரும் ஏத்தி
மன்னவர்தம் மன்னவென வணங்கியடி தொழமகிழ்ந்து
வாழு நாளில்
இன்னலுற நின்றவர்கள் யாவருமே அடைக்கலமென்
றிவன்பா லெய்தி
மன்னியதம் துயர்நிலையை மறுகியுரைத் திதமடைந்து
வருவ தானார். (க)

1311. அவ்வகையில் காராளர் குலத்தொருவன் அருவரதன்
என்னும் பேரான்
செவ்வியநற் றிருவுடையான் சிற்றரசன் எனநின்றான்
செறுத்து வந்த
தெவ்வர்கையில் பறிகொடுத்துத் தேவியையு முடன்பிரிந்து
செயலி ழந்து
கவ்வையுடன் வந்திவன்பால் காத்தருளென் றுற்றவெலாம்
கரைந்து நின்றான். (உ)

1312. மனமறுகி யவனுரைத்த வாய்மொழியைக் கேட்டவுடன்
மன்னன் பொங்கித்
தினமிரண்டுள் தெவ்வழித்துத் திருவுடனே தேவியையும்
சேர்ப்பல் ஈண்டே
இனிதிருக்க வெனப்பணித்தவ் விகலோர்மேல் அப்பகலே
என்ற சேனை
தனையேவி யினிதிருந்தான் சார்ந்தவர்க்குத் தாயனைய
தறுகண் வீரன். (ங)

1013. சென்னவரா யக்கர்புலி குத்திரா யக்கரெனச்
சிறந்து நின்ற
அன்னபெரும் படைத்தலைவ ரிருவோரும் அப்படையை
நடத்திச் சென்று
சொன்னபகை நகர்சார்ந்து சூழ்ந்தவுடன் அப்பகைவர்
தழங்கிப் பாஞ்சை
மன்னனுயர் படையென்று மனங்கலங்கித் தாணைமன்னர்
மருங்கு வந்து; (ச)

1014. எங்கள்மேல் படையெடுத்திங் கிவ்வாறு வந்தீதென்
எங்கும் வீரச்
சிங்கமென நின்றருளும் தென்பாஞ்சைப் பதியாணை
சிறிதும் தீரோம்
பொங்கியபே ரருளோடு புகலுமெனப் படைத்தலைவர்
பிள்ளை தன்னைப்
பங்கமுறச் செய்தமையால் பாடுசெய வந்தெமெனப்
பதிலு ரைத்தார். (ரு)

எதிரி இணங்கி மொழிந்தது.

1015. புறங்கூறிப் பழித்தெங்கள் புகழழித்து நின்றமையால்
புகுந்து நாம்போய்
மறங்கூறி வென்றுரிமை வவ்விவந்தோம் இன்றுநீர்
வந்த தாலே
அறங்கூர அவையனைத்தும் தருகின்றோம் அவனினிமேல்
யாதும் தீமைத்
திறங்கூரு தமைந்திருக்கச் செயவேண்டு மென்றெல்லாம்
சேரத் தந்தார். (கூ)

1016. சேரற்றாரில் நின்றவற்றைச் சேரவெடுத் தார்வமுடன்
சேனை தன்னை
வேரற்றார்கள் வழியாக வெளிநடத்திப் பாஞ்சைவந்து
வேந்தன் முன்போய்
மாரற்றார்மேல் சென்றதுவும் வந்ததுவும் வரன்முறையாய்
வணங்கி நின்றன்
பூரற்றப் படைத்தலைவர் உரைத்தவெலாம் கேட்டரசன்
உவகை பூத்தான். (எ)

1317. பிள்ளைதனை யுடனழைத்துப் பெருந்திருவும் அருமனையும்
பேணித் தந்தே
எள்ளலுறு கோளுரையை யார்மீதும் இனியியம்பல்;
யார்க்கும் அன்பாய்
உள்ளமுவந் திதஞ்செய்க உன்னுவைக் காவாமல்
உலகைத் தூற்றல்
தள்ளரிய பழியாமென் றளிபுரிந்து வெளிவிடுத்தான்
தகைமை யாளன். (அ)

1318. சீர்வாசு தேவநல்லூர் எனுந்தன் னூர் சேர்ந்தவன்றன்
சிறந்த மர்ந்து
பேர்வாசு தேவனெனும் பிள்ளையொடும் மனைவியொடும்
பெரிது மின்பம்
கூர்வாச வன்னெனவே குறித்திவனைக் கொண்டாடிக்
குலாவிப் போற்ற
ஓர்வாசு தேவனே உலகுபுரந் துளனென்ன
உவந்தி ருந்தான். (கூ)

1319. அவனகன்று போனபின்னர் அடுத்தொருநாள் சின்னனைஞ் [சத்
தேவன் என்பான்
தவமுதவத் தலைமுறையா ஆண்டிருந்த அரசதனைத்
தருக்கு மீறி
அவமாக வெள்ளையத்தே வன்புகுந்து கவர்ந்தகற்ற
யாது மின்றி
நவமாக இவனிடம்வந் தடைக்கலமென் றுரைபகர்ந்து
நண்ணி நின்றான். (கo)

அபயம் அளித்தது.

1320. பல்வளஞ் சிறந்த சொக்கம் பட்டியென் றுரைக்கும் அந்த
நல்லர சிழந்து தன்பால் நண்ணிய அவன்றன் வாயால்
சொல்வகை யாவும் ஓர்ந்து துரிசற வுண்மை தேர்ந்து
வெல்வகை புரிந்த ளிப்பல் வெருவலென் றருளி நின்றான். (கக)

1321. இரண்டுநாள் கழிந்த பின்னர் எழுநூறு போர மைந்த
திரண்டதோர் சேனைதன்னைத் தெவ்வின்மேல் செலுத்திச் சேர்ந்த
அரண்டனை வளைத்தன் னனை அருஞ்சிறைப் படுத்தி நேர்ந்தார்
புரண்டிடப் பொருது வம்மின் என்றருள் புரிந்து விட்டான்.

1322. தும்பிச்சி தளவாய் பெத்தன் துரைமல்லென் றின்ன நால்வர்
பம்பிய சேனைக் குற்ற பதிகளாய்ப் பரிகள் மீதில்
வெம்பியங் கெழுந்து சென்று மேவலன் நகரை யண்மி
அம்பென அவனேர் காண அறிக்கையொன் றெழுதியுய்த்தார்.

1323. உள்ளதை யுணர்ந்த பாஞ்சை யுயர்பதி ஆணை தாங்கி
வெள்ளைபத் தேவா! வுன்மேல் வெய்யபோர்க்கெழுந்துவந்தேம்
நள்ளமாய்க் கவர்ந்த நாட்டைக் கையினில் கொடுக்கின்றுயா?
துள்ளிநேர் வந்துன் னுவி துடித்திட விடுக்கின் றுயா? (கச)

1324. னன்றிவர் எழுதி விட்ட முடங்கலை எடுத்துக் கொண்டு
வென்றிவெந் திறலி னேறு வீரமல் லென்பான் மேவி
ஒன்றியங் கவன்கைத் தந்தான் உற்றதை யுணர்ந்து சீறிக்
கன்றிய போருக் கான காரியம் கடுத்துச் சூழ்ந்தான். (கடு)

1325. என்வலிக் கஞ்சி யோடி யிடங்கண்டு திடங்கொண் டெய்த்தித்
தன்மெலி வழுது தாழ்ந்து சாற்றினன் பாஞ்சை யாளும்
மன்வலிப் படையை யுய்த்தான் மாறினான் அரசை மீள
இங்கிலை யிழந்தே னுயின் இனிநிலை யென்ன மென்று. (கசு)

1326. வந்தவன் றன்னைப் பற்றி வதைத்திட நினைந்து நேர்ந்தான்
முந்துறப் பிடிமி னென்று மூட்டினன் மூட்ட ஐவர்
வெந்திற லோடு பாய்ந்தார் பாயவும் வெட்டி வீழ்த்தி
அந்தர மடித்துச் சேனை யதிபரை யடைந்து கண்டான். (கள)

1327. கொடியவன் செய்ய நின்ற குத்திரச் செயலு மன்னன்
முடிவுசெய் தமரில் மூண்டு முனைந்துள நிலையும் சொன்னன்
கொடியவும் கொடியில் நின்ற நோன்படை தன்னை யூக்கிக்
கடிமதில் வளைந்து கொண்டார் கருதலன் கடுத்தெழுந்தான்.

1328. தன்படை தனைத்தி ரட்டி யெதிர்க்கவும் தானை வேந்தர்
மன்படை தன்னை யூக்க மண்டிமுன் னேறி மாட்டிக்
கொன்படை கொண்டு தாக்கக் கொலைசில விழவும் கூட்டம்
பின்புடை பெயர நின்றுன் புறங்கொடுத் தோடலானன்(கசு)

1329. ஓடவும் தொடர்ந்து பற்றி யுருத்தவன் றனைப்பி ணித்து
நீடிய சேனை தன்னை நெறிப்பட மீட்டி நேரே
தேடிய புகழ்சேர் பாஞ்சை சேர்ந்துமன் னவன்முன் னுய்த்தார்
நாடியங் கவனை நோக்கி நலம்பெற அருள் புரிந்தான். (உ0)

1330. வழியலா வழிமேற் சென்று மற்றவன் அரசை வவ்விக்
கழிபெருஞ் செருக்கி னோடு களிப்புறல் கடனே? அன்ன
பழியினை லிந்தப் பாடு பட்டனை பட்டங் தன்னை
ஒழிவுசெய் துடையான் கையில் ஒப்பிவி யெனவு ரைத்தான்.

1331. அவ்வுரை கேட்டு நாணி அஞ்சலித் தரசே! நும்முன்
இவ்வுரைக் கிடங்கொ டுத்தேன் இனியிறை வழுவு றென்னன்
தெவ்வுரைக் கிரங்கி யென்னை யிங்ஙனம் சிறுமை செய்தீர்
அவ்வர சவன்கொண் டாள்க யானயல் மாள்வ னென்றான்.

1332. என்றவ னுரைக்க வேந்தன் இரங்கின னீயு நானும்
சென்றிவன் றனக்குப் பட்டஞ் செய்துடன் விருந்த ருந்தி
ஒன்றிய கேண்மை யோடே யுறைந்திட வேண்டு மென்ன
நின்றவ னைழுந்து சொக்கம் பட்டியை நெறியிற் சேர்ந்தார்.

1333. சேர்ந்துநன் முகூர்த்த நாளில் சின்னனைஞ் சானுக் கன்பாய்ச்
சார்ந்தநற் பட்டங் கட்டிச் சார்குடிக் கிதமு ரைத்து
நேர்ந்தவன் றனக்கோ ரூரை நெறிமுறை யுதவி நேசம்
கூர்ந்திடச் செய்து வந்தான் கோமகன் சேனையோடே. (உச)

1334. இன்னவன் செய்து போந்த வியல்பினை இரண்டு பேரும்
தன்னுளே வியந்து போற்றிச் சார்ந்தவெம் பகைய கன்று
மன்னிய அன்ப ராகி மருவியங் கிருந்தார் மன்னன்
அன்னவர் நிலையை ஆய்ந்திங் ககமகிழ்ந் தமர்ந்தி ருந்தான். ()

1335. வேந்திவன் செயலை வீரத் திறலினை விரய மாக
ஆந்தக வறிந்த டைந்தார்க் கருந்துணை யாகி நின்று
நேர்ந்தநன் னீதி தேர்ந்து நெறிசெயும் நிலையை யோர்ந்து
மாந்தர்தா மகிழ்ந்து வாழ்த்தி மனங்குளிர்ந் தேத்தி நின்றார்.()

1336. தெவ்வரை யடக்கி நீதித் திறந்தெரிந் தெவ ரும் அன்பாய்ச்
செவ்விய நிலையில் நின்று திருவொடு தேசும் எய்திக்
கவ்வையொன் றின்றி வாழக் கருணைசெய் தருளிக் காத்தான்
வெவ்வினைத் தீய செல்லாம் வெருவியுள் ளொடுங்கி நின்றூர்.()

1337. இவ்வகை மன்னன் ஆட்சி யின்புற இயலு நாளில்
தெவ்விய வளங்கள் மிக்க சிவகிரி யரசன் தேசய்வந்
தவ்வியத் தெஞ்ச ரான அடுத்ததா யாதி யார்செய்
வெவ்விய துயருக் கஞ்சி வேந்திவன் பால டைந்தான்.(உஅ)

1338. சங்கிலி வீரன் என்னும் பேரினன் தாழ்ந்து நின்று
பொங்கிய தாயத் தார்செய் புன்கணைப் புகன்ற போதில்
அங்கணன் அருளி நோக்கி யாதுநீ யஞ்சல் அந்த
வெங்கணர் துயரமாற்றி விடுவலென் றருள்பு ரிந்தான்.(உக)

1339. முடங்கலொன் றெழுதி வேகன் மூதண்டன் என்ன நின்ற
அடங்கலர்க் கனலி போன்ற அருந்திற லார்பால் தந்து
நடங்கலொன் றின்றிச் சென்று தருகவென் றுரைசெய் துய்த்தான்
மடங்கலே றென்னுஞ் செய்ய மானவேல் வீர மன்னன்.(ஈ0)

1340. சென்றவர் நேரே ஓடிச் சிவகிரி யடைந்து வேந்தன்
தன்றிரு முகத்தை யங்குத் தாயத்தா ரிடத்தே தந்தார்
நின்றவர் பிரித்துப் பார்த்தார் நெடுந்திகில் கொண்டார் நேரே
பொன்றுதல் கண்டார் போலப் புலம்புகொண் டுளைய லானூர்.

1341. பாலனுக் காகப் பண்டு பரமனூர் நேரக் கண்ட
காலனூர் போல இந்தக் காவலன் ஓலை கண்ட
வேலையில் அன்ன ருள்ளம் வெருவினின் றலமந் திந்தக்
கோலமா நேர்ந்த தென்று குலைந்தனர் கூடி யாய்ந்தார்.(ஈஉ)

1342. மன்னவர் மன்ன வன்றன் மருங்குவந் துள்ள எங்கள்
மன்னவன் குமரன் றன்னை மாண்புடன் போற்று கின்றேம்
இன்னலொன் றினிமேல் யாதும் யாண்டுமே யியற்ற கில்லேம்
நின்னுயர் ஆணை மீறி நிலைசிறி தயரே மென்று; (ஈஈ)

1343. நன்றமர்ந் தெழுதித் தங்கள் நாமமு முறையே தீட்டி
அன்றவண் அடைந்தார்க் கான அருஞ்சிறப் பமைய வாற்றி
ஒன்றிய வுறவீவார் தம்முள் இருவரை உடன்வி டுத்தார்
சென்றவர் விரைந்து பாஞ்சைத் திருநகர் சேர்ந்தா ரன்றே.

1344. ஆண்டகை யரசன் முன்போய் அடிதொழு தவர்முன் தந்த
நீண்டவம் முடங்கல் நீட்ட நோர்ந்ததைத் தெரிந்து வந்து
காண்டகு குமரன் றன்னைக் கருணையோ டழைத்துணர்த்தி
வேண்டிய பரியொன் றீந்து விடைகொடுத் தனுப்பி னானே.

1345. அல்லலோ டடைந்தான் மீண்டோர் அரும்பரி மீதில் ஏறி
நல்லநீ தார் நிலையில் சார நண்ணலர் எனமுன் நின்றூர்
ஒல்லையில் வந்து நட்பா யுரிமைசெய் துவந்து போற்ற
எல்லையில் மகிழ்ச்சி எய்தி இனிதர சியற்றி வாழ்ந்தான். (நகூ)

1346. வாழ்ந்தவன் அரசன் செய்த மாண்டையுள் மதித்து நாளும்
ஆழ்ந்தபே ரன்ப ஞகி அடிக்கடி வந்து வந்து
தாழ்ந்துடன் அமர்ந்து நீதி தகுமுறை வினவி யின்பம்
சூழ்ந்துயர் நெறியே சென்று தொடர்புடன் அமர்ந்திருந்தான்.

1347. வருந்திவந் தவர்கட் கெல்லாம் வளமிகு களக ணுகிப்
பெருந்தகை யருள்பு ரிந்து பேணிவந் தமையால் வீர
அருந்திறல் வள்ளல் ஆன்ற கற்பக நீழல் என்ன
இருந்தரா தலத்தில் எங்கும் இசைமிகப் பெற்ரு னன்றே. ()

கலிங்கலத்துறை.

1348. வங்க மாதிய வடதிசை களிலெலாம் இவன்சீர்
துங்க மாயெழுந் துயர்ந்தொளி நிலவிடத் தொடர்ந்தே
எங்கும் பாஞ்சையின் புகழ்மிக இனியதென் னுட்டுச்
சிங்க மாமெனச் சிறந்துவீற் றிருந்தனன் செழித்தே. (நகக)

1349. இம்பர் நாடெங்கும் இரும்புகழ் படைத்திங்ஙன் வருங்கால்
சம்பு லிங்கமென் பெயரினன் தமிழ்ப்பெரும் புலவன்
கம்ப னென்னவே கவினுறக் கவிமழை பொழிவோன்
நம்பி தன்னிடம் நலம்பெற நயந்துவந் தடைந்தான். (சஅ)

1350. கற்ற மாந்தரைக் கண்ணெனக் கருதிமுன் போற்றும்
பெற்றி யாளனென் றறிஞர்கள் பெட்புட னுரைக்கும்
உற்ற டைந்த்ர சுடனுவந் துரைசெய்து வரலால்
பற்ற மைந்தய லிருந்தவர் பண்புடன் விடுத்தார். (சக)

1351. வேல்வல் லாண்மையில் சிறந்துரல் வீரமோ டுயர்ந்த
நூல்வல் லாண்மையும் நுண்ணறி வுடைமையு மமைந்து
சால்பு கொண்டுள மன்னனைச் சார்ந்துள தகவால்
கோல்கொள் வேல்வலி வீரரும் குணமுட னின்றார். (சஉ)

1352. வந்த பாவலன் மன்னனைக் கண்டுடன் வணங்கிச்
சந்த மாயொரு பாடலைச் சாற்றிமுன் னின்றான்
உந்தும் அன்புடன் உபசரித் திருக்கைகூன் குதவிச்
சிந்தை யார்வமாய்க் கலிகலம் ஆய்ந்தனர் தோர்ந்தே. (சங)

புலவரோடு புலன் உசாவியது.

1353. தன்னி டத்துள புலவனும் சார்ந்தயல் இருந்தான்
மன்ன னவ்விரு வோரையும் வரன்முறை நோக்கிப்
பன்னு காவியப் புலமையை யுசாவினன் பண்போ
டன்ன போதொரு கேள்வியை அவரிடை யுய்த்தான். (சச)

1354. கற்ற போதறி வின்பயன் யாதெனக் கருதிச்
சொற்ற போதகத்துப் புலவர்கள் இருவரும் சூழ்ந்து
பெற்ற நல்லொழுக் கம்மெனப் பேசினர் ; அரசன்
அற்ற தன்றென மறுத்தனன் அவர்பினும் ஆய்ந்து: (சரு)

1355. வேறு வேறுறச் சொற்றனர் வேந்தனும் அதற்கு
மாறு மாறுற மதிநலம் பெறும்படி தானே
கூறல் மேயினன் குனிந்தவ ரிருவரும் கூடித்
தேறு நோக்குடன் சிந்தையுள் விழைந்தெதிர் கேட்டார். (சகூ)

1356. அறிவி னின்பயன் அறிவிலேன் என்றுமுன் தன்னை
நெறிபெ றும்படி யுணர்தலே யாமென நிருபன்
செறிவு றும்படி செப்பினன் செப்பவும் அன்னோர்
குறியு ணர்ந்துளம் வியந்தனர் குதூகலம் கொண்டார். (சஎ)

1357. தன்னை முன்னறி யாமலே தானெலாம் அறிந்து
மன்னி நின்றதோர் மகானென மதிப்பது மடமை
என்னை கண்டனம் இவ்வுட லுறுமொரு மயிரின்
பின்ன மாவதும் பெயர்வதும் தெரிந்திலம் பிழையே. (சஅ)

1358. என்றும் எங்குமாய் நிறைந்துள பராபரன் எல்லாம்
நன்ற றிந்துளான் அவனையும் நம்மையும் அறியா
தின்று வெங்குரு டாயிழி நெறியிடை எகி
ஒன்றி வீழ்வதை யுணர்ப வரேயுணர் வோர்காண். (சக)

1359. உள்ள நூலெலாம் உலகெலாம் ஓதிநன் குணர்ந்தும்
தள்ள ருந்துயர்ப் பிறவியைத் தனக்கென வளர்த்துக்
கொள்ளு கின்றவர் புலவரோ? குருடரே யன்றே?
ஒள்ளி யார்என்பார் உண்மையை யுணர்பவ ராமே. (ஙo)

1360. பழுதி லாதநூல் பலபயின் றுலகெலாம் பணிய
விழுமி தாகிய மேன்மையோ டிருப்பினும் விநயம்
தழுவு சீலங்கொண் டுறுதியைச் சார்ந்திடா னென்னில்
முழுது மூடருள் முதல்வனுய் முன்னிற்ப னன்றே. (ஙக)

1361. கற்ற கல்வியும் கேட்டநற் கேள்வியும் கனிந்து
பெற்ற பேரறி வியாவையும் பிறப்பிறப் பில்லா
ஒற்றை யான அந் நிலையினை யுற்றபோ தன்றி
மற்றையாவையும் பெறினுமென் மாண்பெனப் படுமோ.(ஙஉ)

1362. எல்லை யில்லதோர் அறிவுரு வாகிய இறைநின்
றெல்லை வந்தநா முற்றுள வுண்மையை யுணர்ந்தால்
புல்லிதாகிய புத்தக அறிவினைப் பெரிதாச்
சொல்லி வீண்செருக் குறுவது தொலைந்துபோ மன்றே.(ஙங)

1363. அளவி லாதபே ரறிவெனும் அமிர்தமென் கடலில்
அளவ ளாவிய நிலையாய் ஆருயிர் அமரும்
பளகி லாவகை பாதுகாத் தருளினை பண்டை
அளவ தாயதன் எதிரழ கொளியுட னவிரும். (ஙச)

1364. தன்னைத் தானினி தறிவதே தத்துவ அறிவாம்
பின்னை வேறுள அறிவெலாம் பித்தறி வாகும்
முன்ன தாகிய அறிவினை யுடையவர் முதன்மை
மன்னி மாண்புய ரின்பினை மருவியுள் மகிழ்வார். (நஙு)

1365. மறுமை நோக்கொடு மருவிய பெரியர்தம் மாண்பைச்
சிறுமை நோக்கொடு திரிதரு சிறியவர் தெரியார்
வெறுமை யாளரென் றிகழவும் செய்குவர் வீணை
பொறுமை யானவப் புனிதரைப் புனிதரே யுணர்வார். (நஙூ)

1366. உலகம் யாவையும் படைத்தளித் தழிக்கின்ற ஒருவன்
அலகி லாதபே ராற்றலை யுடையவ னன்றே
இலகி யுள்ளவச் சோதியி லிருந்துநா மெழுந்து
பலப டப்படி பரந்துளம் உணர்ந்திடிற் பரமே. (நஙஎ)

1367. உண்மை யானதன் னுயர்நிலை யுரிமையை மறந்திங்
கண்மை யானபுல் வினங்களின் படியகந் திரிந்து
திண்மை யானபுன் களிப்புடன் செருக்குமீக் கொண்டே
ஒண்மை யாமென வுழலுதல் வெண்மையா மன்றே. (நஙஅ)

1368. என்று மன்னவன் அறிவுயர் நிலையினை யினிதா
அன்று கூறவும் புலவர்கள் அதிசயித் தகந்தை
ஒன்று மின்றியே யுணர்வொளி யுளத்திடை யோங்கி
வென்றி வீரன்றன் மெய்யுணர் வுடைமையை வியந்தார். (நஙூ)

1369. நெறிய மைந்துநன் னிலையினை நேரூற அறியா
தறிவ மைந்ததா வகமிகத் தருக்குத லறியாக்
குறிய தாமெனக் கூர்ந்துணர்ந் திருவரும் குறித்துச்
சிறிய கல்வியே செருக்கினை விலக்குமென் றிழித்தார். (கூ0)

1370. மன்னன் மாட்சியை மதித்தவர் வியந்திட மன்னன்
தன்னு ளத்தினில் தருக்கொன்று மின்றியே தகவாய்ப்
பொன்னும் பூணுநல் லாடையும் புலவருக் குதவி
நன்ன யம்பெற விடுத்தன னயந்தவர் துதித்தார். (கூக)

1371. அன்பு கூர்ந்துள முருகினின் றருள்தமிழ்ப் பாடல்
இன்ப மீதுற இனிதவ ரிசைத்திட இசையின்
முன்ப ளகிய முருகனைப் பாடுமின் முடிவில்
இன்ப வீடுறு மெனவிறை யியம்பின னிருந்தான். (கூஉ)

1372. அறிவும் ஆண்மையும் வண்மையும் அவையறிந் துரைக்கும்
செறிவும் திண்மையும் சீர்மையும் சீலமும் தெளிவும்
நெறியி னின்றுதன் குடிகளைப் புரந்தருள் நிலையும்
பொறியி னின்னருட் பொலிவையும் புகழ்ந்தவர் மகிழ்ந்தார். (கூக)

1373. வந்த வர்க்கெலாம் வரிசையின் வழாமலே மதித்துத்
தந்து வந்தனன் தமிழ்ப்பெரும் புலவரெல் லாரும்
சிந்தை யுள்ளுற விழைந்துநற் செந்தமிழ்ப் பாடல்
சந்த தம்புனைந் தின்புறப் பெற்றனர் சார்ந்தே. (கூச)

1374. மனமு வந்தவர் பாடிய பாடல்க ளின்றும்
இனம மைந்தன இடையிடை சிலவுள வெல்லாம்
புனையும் வீரமும் கொடைமையும் போற்றியிம் மன்னன்
கனமு னர்த்தியே கவினுற நிலவுவ கனிந்தே. (கூடு)

1375. புலவர் பாடுநற் புகழுடை யோனெனப் பொலிந்து
பலக லைப்பெரும் புலமையைப் பழுதறப் பயின்று
கலவ மாமயில் முருகனைக் கருத்தினி லிருத்தி
அலகி லின்புட னறம்புரிந் தரசியல் புரிந்தான். (கூகூ)*

1376. குற்ற முள்ளவர் குலமிக நடுங்கவும், குணத்தோ
டுற்று நின்றவர் உளமிக மகிழவும், உரிமைச்
சுற்றம் யாவையும் சுகமிக நுகரவும் துன்னர்
முற்ற டங்கவும், முறைபுரிந் திருந்தனன் முறையே. (கூள)

1377. அகதி யாளருக் கருளுறு தாயென மெலிவாய்ப்
புகல டைந்தவர்க் குயர்வளித் துணையெனப் பொருந்தித்
தகவு நீதியுந் தழுவியிந் நிலத்தினை மனுவின்
மகவு போன்றிவன் புரந்தனன் வளர்ந்தன வளங்கள். (கூஅ)

1378. உழுவ லன்புடைத் தம்பியர் உளமுயிர் ஒன்றுய்க்
கெழுமி நின்றுயர் பண்பாராய்க் கிளைத்துட னமர்ந்து
வழுவி லாட்சிக்கு மதிநல மூடன்துணை புரிந்தார்
தழுவி மன்னவன் அன்னவ ருடன்தழைத் துவந்தான். (கூகூ)

1379 வாவு வான்பரி யூர்ந்துயர் மதகரி சார்ந்து
பூவு லாவிய பூம்பொழில் நலங்களை துகர்ந்து
வாவி பொய்கைகள் வளமுற மருவிமன் னீடு
பாவு றுங்குழ லிழையெனப் படிந்துடன் றிரிந்தார். (எ0)

1380. தம்பி மார்தமைத் தழைத்தபி ரன்புடன் தழுவி
அம்பு ராசியின் அவனியை ஆர்வமாய்ப் பேணி
வட்டு லாமலர்க் குழலியை மருவியுண் மகிழ்ந்து
நம்பி யின்புடன் நலம்பல புரிந்தினி திருந்தான். (எக)

கலி விருத்தம்.

1381. இந்த வாறிவன் இன்புற்று வாழுநாள்
முந்தை யோர்கள் முறைப்படி பூசித்துச்
சிந்தை யூடிய ரன்பு செழித்தனன்
செந்திமா நகர் செல்ல விழைந்தனன். (எஉ)

1382. சேனை வீரர் திரண்டனர் சிருடன்
மான வான்பரி மாண்புடன் வந்தன
ஏனை யங்கங்கள் யாவும் எழுந்தன
கோனி வன்றிருக் கோலங்கொண் டோங்கினன். (எங)

1383. பெரும்பொ றைக்கற்பி னோடு பிறந்தாளிர்
அரும்பெ றற்றிருத் தேவியை அன்புடன்
விரும்பு சேடியர் சூழ வியலினள்
அரும்பு மானத் தமர அருளினர். (எச)

1384. அளிகொள் தாரகை சூழ வதனடு
ஒளிகொள் சந்திர மண்டலம் உற்றென
கிளிகொள் சொல்லியர் கேளுடன் போற்றிடத்
தெளிகொள் மாமதித் தேவிமுன் வகினள். (எரு)

1385. உழுவ லன்புடை ஒண்குலத் தேவிமுன்
கெழுத கைப்பெருங் கேளுடன் செல்லவே
தொழுத குங்கழற் சோன்றலும் ஆன்றசீர்
எழுத ருந்திற லோடங் கெழுந்தனன். (எசு)

1386. சங்க மன்னவர் சார்ந்துமுன் தந்தவத்
தங்க மாமணித் தண்டிகை மீதினில்
சிங்கம் என்னத் திருமகன் ஏறினான்
மங்க லம்பெற வாழ்த்தொலி ஏறின. (எஎ)

1387. பல்லி யங்கள் முழங்கின ; பாய்பரி
வல்லி யங்கள் எனவந்து மண்டின ;
புல்லி யோங்கிப் பொருநர்கள் பொங்கினர்
சொல்லி யெங்கும் துதிகள் முழங்கின. (எஅ)

1388. சோதி மானத் தமர்ந்து சுடரவன்
ஆதி வானத் தருநெறி சென்றென
நீதி மான நிருபன் சிவிகையில்
போதன் மேயினன் பூதலம் போற்றவே. (எக)

1389. சீர்ம லிந்த * குருகையைச் சேர்ந்ததும்
ஏர்ம லிந்தொளிர் மாளிகை எய்திநேர்
நார்ம லிந்துயர் நாதனை வாழ்த்தியே
ஊர்ம லிந்து மகிழ உறைந்தனன். (அ0)

1390. இருதி னங்கள் இருந்து பெரியராய்
மருவி யங்குள மாண்புடை யாரெலாம்
வருமு றைப்படி வந்துகண் டன்புடன்
உரிமை கூர வுவந்துகொண் டாடினன். (அக)

கோச்சகக்கலிப்பா.

1391. அங்கிருநாள் அகன்றபின்னர் அரியதிறற் சேனையுடன்
மங்கலவாழ்த் தொலிமுழங்க மன்னனெழுந் தருளினன்
எங்கும்வழி யிடையிடையே எல்லாரு மகிழ்ந்தேத்தப்
பொங்குபுகழ்த் திருச்செந்தூர் போய்ச்சேர்ந்தான் பொம்மலுடன்.

---

*குருகை = ஆழ்வார் திருநகரி. ஏர் = அழகு. நார் = அன்பு.

1392. தனதுதிரு மாளிகையைச் சார்கின்ற அவ்வமயம்
தினகரன்போல் எம்பெருமான் திருவீதி வருங்கோலம்
தனையெதிர்ந்து கண்டவுடன் தார்வேந்தன் விரைந்திரங்கி
மனமுருகித் தரிசித்து மகிழ்கூர்ந்தே எதிர்நின்றான். (அஉ)

1393. அவ்வமயம் மாசிமகம் ஆதலால் எழாம்நாள்
செவ்வியவத் திருக்கோலம் தெரிசிக்க நேர்ந்ததுகாண்
இவ்வமயம் இவ்விடத்தே எனதுமணி மண்டபமேர்
திவ்வியவிக் காட்சிதரல் திருவருளே எனவியந்தான். (அச)

1394. ஆண்டவனே தன்னுடைய அடிமையென யாவருமே
ஈண்டுணரும் படிசெய்த இயல்பிதென வுளமுருகி
நீண்டவிழி நீர்சொரிந்து நேர்நின்று துதித்துமறை
நீண்டரிய திருவுருவைச் சிந்தையுளே நிலைத்துவந்தான் (அங)

1395. குடியடிமை கொண்டவென்றன் குலமணியே! எனக்கிந்தப்
படிசிவிகை முதலான பாக்கியங்கள் தந்தவெலாம்
அடிமையுடன் இவ்வமயம் யாவுமே கொள்கவெனக்
கடிதனைத்தும் கையேந்தான் கண்டவர்கள் மெய்ம்மறந்தார். ()

1396. ஏறிவந்த தண்டிகையும் இனிதணிந்த மணியணியும்
மாறிலுயர் வடிவாளும் வயிரமணி மோதிரமும்
வீறுபெறு பரியைந்தும் வெண்குடையும் தண்கொடியும்
வேறுபல வுள்ளனவும் விழைந்துவந்து தந்துநின்றான். (அள)

1397. வேந்தனிவன் ஈந்தவெலாம் வேல்முருகன் உபயமென
ஆந்தகவால் குறிசெய்தே அயல்நின்றார் அள்ளிப்பே பாய்ச்
சேந்தொளிரும் திருக்கோயிற் கருவூலம் சேர்த்துவந்தார்
ஏந்தலிவன் மாளிகையில்இனமுடனே இனிதமர்ந்தான்.(அஅ)

1398. அன்றிரவு முறைப்படியே அறுமுகனைத் தரிசிக்க
வென்றியர சிவனருமை வியன்மனைவி யுடனெழுந்து
சென்றுசின கரஞ்சேர்ந்தான் தேர்ந்தஅதி காரிகளங்
கொன்றியபே ரன்புடனே யுவந்தெதிர்கொண் டுபசரித்தார்.

1399. கோவிலெங்கும் ஆள்விலக்கிக் கோத்தேவி யுடனரசைச்
சேவைதனி செய்விக்கச் செழுமறையோர் இருவர்வர
ஆவலுடன் சென்றணைந்தங் காண்டவணைக் கண்டுருகிப்
பூவிலுறு வண்டென்னப் பொன்னடியில் மனம்பதித்தான்.

1400. ஐம்புலனும் ஒருமுகமாய் அறுமுகனே அணைந்தமர
நம்பியிவ னுளமுருகி நயனநீர் நனிசோர
எம்பெருமான் அருள்நிலையை எண்ணியெண்ணி ஏங்கிநின்று
செம்பவள வாய்திறந்து செழுந்துதிகள் பலசெய்தான். (கூக)

துதி நிலை.

1401. செங்கமலச் செந்திருவும் செழுங்கமல வெண்டிருவும்
சேர்ந்து வந்து
பொங்கமலத் ததர்வளையூர் செந்திநகர் தங்குபரம்
பொருளே யுன்றன்
துங்கமல ரகிதமெனும் ஆணைநூ புரமணிந்த
துணைத்தாட் போதில்
தங்கமலா னந்தமதுத் தனையகலா தடிமை யுணத்
தயை செய்வாயே. (கூஉ)

மன்னன் தேவி மணியணி தந்தது.

1402. என்றின்ன படியுருகி யினியபல துதிசெய்து
நின்றுள்ள மன்னனயல் நிலவிநின்ற தேவியும்தன்
பொன்றுஞ்சு புணர்முலைமேல் பூண்டமணி யாரமுதல்
அன்றணிந்து சென்றநகை யனைத்தையுமே யவிழ்த்தெடுத்து;

1403. வள்ளலே! நும்மணியை வரதனர்க் கணிந்ததுபோல்
ஒள்ளியஇந் நகைகளையும் உவகையுடன் அவருரிமைத்
தெள்ளுதிருத் தேவியர்க்குச் சேர்த்துமென நாயகன்கை
அள்ளியிட அவன்வாங்கி அருச்சகர்பா லினிதளித்தான்.

1404. வாங்கியவவ் வணிக ளெலாம் வள்ளிநாயகிக் கணிந்து
பாங்குடனே பூசைசெய்யப் பணிந்தேத்திப் பாராட்டி
ஆங்கரிய சிறப்புடனே அரியவிலை நீறுபெற்றே
ஓங்குபெரு மகிழ்ச்சியுடன்உரியமனை தனையடைந்தான்.(கூரு)

1405. தன்னருமைத் திருமனைவி தானணிந்த நகைகளெல்லாம்
பின்னமொன்று மெண்ணுமல் பிரியமுடன் விரைந்தெடுத்துப்
பன்னிருகைப் பெருமான்றன் பத்தினிக்குத் தந்தெண்ணி
மன்னன்மன மகிழ்ந்தவனை மருவிமிகப் புகழ்ந்திருந்தான். ()

1406. அரசனிவன் கோவிலைடைந் தறுமுகனை யன்போடு
பரிந்தின்று வழிபட்ட பண்பினையும் தேவியுடன்
நிரைசெயணி கலன்கள்தந்த நிலையினையும் வியந்தேத்தித்
நிரையெறியும் செந்தில்முதல் தேசமெங்கும்புகழ்ந்துநின்றார்.

1407. நின்ற பெருஞ் சேனையுடன் நிருபனங்கு நின்றெழுந்து
வென்றிமிகு பாஞ்சைநகர் மேவினனன் மேவியபின்
ஒன்றியுயர் அரசியலை யுசாவியுவந் தொளிர்தேவி
அன்றுதந்த அணிகலங்கட் கயல்வேறு செயல்விளைந்தான்.

1408. பூணுதற்கு மணியணிகள் பலவிருந்தும் புதிதாக
மாணைமையச் செயவெண்ணி மாபிலுயர் வயிரங்கள்
ஆணிமுத்த முதலாக அருமையன தேர்ந்தெடுத்துக்
காணுதற்கு மமையாத கைவினையாற் செய்வித்தான். (கூடு)

1409. முந்தமைந்த அணிகளுடன் முழுவயிரப் பதக்கமொன்று
விந்தையுடன் வியனுக விலைவரம்பி லாவகையில்
சந்தமுடன் தனியமைத்துத் தன்மனைவிக் கினிதணிந்து
சிந்தைமிக மகிழ்ந்திருந்தான் தேசநலம் ஆய்ந்துநின்றான். (ா)

முருகவேள் கனவில் அருளாடல் செய்தது.

1410. நன்றமைந்த புத்தணியை நன்மனைவிக் குவந்தணிந்து
வென்றியர சமளிமிசை மென்றுயில்கொண் டருளுங்கால்
அன்றிரவே கனவின்கண் அறுமுகவேள் முன் தோன்றி
இன்றென்மனை வள்ளி யென்னை டிகலாடி யூடிநின்றாள். ()

1411. உன்மனைவிக் குயர்பதக்கம் ஒன்றுசெய்த வளவறிந்தே
என்மனைவி யதுபோல இயற்றியருள் என்கின்றாள்
மன்மனைபோல் வண்குறத்தி மகளுமன்றே பிறவிழைந்தாள்
பொன்மணிக்கு நானெங்கே போவெனப்பா எனப்புகன்றான்.

1412. அந்தவொலி யுள்ளுற வறிந்தவுட னரசெழுந்தான்
எந்தைதமுரு கேசனரு ளின்னுட லென்றறிந்து
சிந்தைகளி கூர்ந்தெழுந்து தேவியையு முடனெழுப்பி
வந்தெழுந்த கனவதனை மரபாக வாய்மொழிந்தான். (ாங)

1413. அவ்வுரையைக் கேட்டவுடன் அரும்பெறற்கற் பவளருகி
இவ்வளவு பேரருளை எம்பெருமான் எமக்கருள
எவ்வளவு தவமுன்னம் இயற்றிலே மென்றழுதாள்
செவ்வியவள் நிலையறிந்து திறல்மன்ன னுளமகிழ்ந்தான். ()

1414. அப்பொழுதே தன்மார்பி லணிந்திருந்த பதக்கத்தை
ஒப்பரிய ஆரமுடன் உவந்தெடுத்து நீராட்டி
செப்பொன்றி னிதமைத்துத் திருமுருகன் மனையதெனக்
கைப்பிடித்த கணவனுடன் கவினுறுபே ழையில் வைத்தாள்.

1415. செங்கதிர்வந் துதித்தவுடன் செந்திநகர்க் கவ்வனியை
மங்கைமன மகிழ்ந்தனுப்ப மன்னனுந்தன் தம்பியையும்
பொங்கமுற வுடனனுப்பிப் போய்ச்சேர்த்து வரச்செய்தான்
அங்கதுதான் இப்பொழுதும் அரசிபெய ரோடுளதே.

1416. பாஞ்சைமன்னர் மரபினர்கள் பண்டுதொட்டுச் செந்திநகர்
வாஞ்சையராய் முருகேசன் வழிபாடு செய்துவந்தார்
காஞ்சனங்கொள் மணியணிகள் கருவுலத் தவர்பெயரால்
ஆஞ்சிறப்பே பாடின்றுமுள அகிலமெலாம் நன்கறியும். (ாள)

அரசிருந்த நிலை.

1417. இவ்வகை அரசன் செந்தில் இறைவனை இறைஞ்சி யேத்திக்
தெவ்வெலா மடக்கித் தேசம் செழிப்புறச் செங்கோலோச்சி
எவ்வழி யோரும் பாஞ்சை யிடத்தினை விழைந்து போற்றச்
செவ்விய அறங்கள் செய்து திருவுடன் சிறந்து வாழ்ந்தான்.

1418. சாலிவண் குளத்தைச் சார்ந்து தழைத்தொளி சிறந்திருந்த
சோலையில் வசந்த காலந் தோன்றவும் துணைவியோடு
பாலுயர் வாவி சூழப் பனிங்கிலல் சமைத்த சித
மேலுயர் மணிமா டத்தில் மேவிவீற் றிருந்தான். (ாக)

1419. சண்பகம் வகுளம் தேமா சந்தனம் அசோகம் பூகம்
பண்பமர் மருதம் புன்னை பாதிரி பலாசம் வேங்கை
விண்பக வோங்கி யெங்கும் வெயில்நுழை வின்றி யந்தத்
தண்பொழி லெழில்மிகுந்து தழைத்தினி திருந்ததன்றே.

1420. மல்லிகை முல்லை பிச்சி மௌவல் செங்குரல் குறிஞ்சி
அல்லியங் காந்தள் குல்லை அனிச்சம் புன்னகம் காஞ்சி
நல்லினர் நரந்த நந்தி நறவம்பைங் குவளை யின்ன
பல்லெழில் மலர்க ளெங்கும் பரிமளம் பயந்த வங்கே. (ரகக)

1421. காலையில் மலரின் கானம் களிப்புட னுலாவிக் கண்டும்,
மாலையில் சிறிய வள்ளம் மருவிமாண் புடனமர்ந்து
சாலியின் வெள்ளத் தோடித் தண்புன லயர்ந்து மந்தச்
சோலையி*லிருதினின்பம் துணையுடன் றோன்றல்துய்த்தான்.

1422 குயிலினம் பேடை கூவக் கொழுஞ்சிறைச் சேவல் மேவிப்
பயிலுமென் சிறகர் நீவிப் பண்புடன் பரிந்து புல்லும்
செயலினைக் கண்டு மன்னன் தேவியை யருகணைத்து
மயலுடன் காட்ட நாணி மணிநகை பூத்து நின்றாள். (ரகங)

1423. போதுலாம் பொதும்பர் தோறும் புதுமணற் றடங்க டோறும்
சீதள நிலை கடோறும் செழுமலர்ப் பொய்கை தோறும்
ஆதரம் கனிந்து லாவி ஆவியு முடலு மன்ன
காதலர் கனிந்து வந்து காமபோகங்கள் துய்த்தார். (ரகச)

1424. அணிமயில் ஆடக் கண்டும் அருங்குயில் பாடக் கேட்டும்
மணமலர் வாச மோந்து மருவிய தென்ற லார்ந்தும்
கணமலி சுவை மிகுந்த கனியொடு கமழுஞ் செய்ய
உணவினி துண்டமர்ந்தும் உலாவியும்உளங்களித்தார்.(ரகஞ)

1425. பூவைமென் கிள்ளை யோடு புதுமொழி மழலை யாடிக்
காவலர் கொய் துலாவிக் கடிகமழ் கமலந் தோய்ந்த
வாவிநீர் குடைந்து தெழுந்து மங்கையர் பணிசெய் தேத்தத்
தேவிவந் தாவி யன்ன சேவகற் சேர்ந்த மர்ந்தாள். (ரகக)

---

* இந்து என்றது வேனில் பருவத்தை சித்திரை வைகாசி மாதங்களாகிய இளவேனில் காலம் என்க. வுளிர்ச்சிக்காகக் குலந்தேவியுடன் அந்த அழகிய பூஞ்சோலையில் அரசன் இனிதமர்ந்து வந்தான் என்பதாம்.

1426. அன்னமென் பெடையைச் சேவல் அருகணைத் தார்வமூர்ந்து
தன்னெழில் அலைகால் கோதித் தழுவியந் தடத்தில் வைகும்
நன்னயக் காட்சி தன்னை நயந்துகண் டுவந்து நின்ற
மன்னவன் தேவிதன்னை மகிழ்ந்தணைத் துளங் களித்தான். ()

1427. மாரனுக் குறையு ளாகி மலர்ந்தென அலர்ந்திருந்த
ஈரமென் பொழிலில் வாசவின்னிளந் தென்றல்வீச
வீரனும் துணையு மேவி விஞ்சைய ரென்ன இன்ப
நீராய் நிலவி நின்றூர் நிறைதவப் பயனுகர்ந்தார். (ாகஅ)

1428. மரகத விளிம்பு டுத்த மாணிக்கச் சுணைம ருங்கே
அரதன மிழைத்த சந்த வணிமணி அரமியத்தே
இரதியும் மதனும் போல இனிதமர்ந் துவந்து லாவிச்
சுரத போகங்கள் துய்த்துச் சுரரின மெனத்திளைத்தார்.

1429. தோழியர் பலபேர் சூழ்ந்து தொழுதடி மகிழ்ந்து போற்றி
ஊழியம் புரிந்துநிற்ப வுழ்முறை யடுக்கி வைத்த
எழிய லமளி மேலா வினிதமர்ந் தரிய வின்பத்
தாழியு ளாழ்ந்தி ருந்தார் அவனியை மறந்திருந்தார். (ாஉ0)

1430. இவ்வண்ணம் வசந்தந் தோறும் இளமரக் காவ டைந்து
செவ்விய மணிமாடத்தில் சேர்ந்தர சுவந்திருந்து
வவ்வுறு புலன் களேந்து மண்டிய களிப்பின் மூழ்கத்
திவ்விய போகந் துயத்துத் திருவுடன் சிறந்திருந்தான்.(ாஉக)

1431. தன்னுயிர் போலத் தன்னைச் சார்ந்துள குடிக ளெல்லாம்
துன்னிய இன்பம் துய்த்துச் சுகமுறச் சூழ்ந்து காத்து
மன்னுயி ரெங்கும் பேணி மன்னன்மா நகரிருந்தான்
இன்னிசை யெழுந்து தேச மெங்கணும் நிறைந்த தன்றே.

ககூ-வது ஆட்சி நிலைப் படலம் முற்றிற்று.

ஆகக் கவி 1431.

பதினேழாவது

நெல்லைக் கொள்ளையிட்ட படலம்.

தானைபதிப் பிள்ளை போய்க் கும்பினியார் நெல்லைக் கொள்ளை செய்து வந்த நிலையினை உள்ளபடி உரைக்கின்றமையால் இது "நெல்லைக் கொள்ளையிட்ட படலம்" என வந்தது. கொள்ளை என்பது கொடிதாய்ச் சென்று வலிந்து கவர்ந்த அந்நிலை தெரிய நின்றது.

1432. செல்வமும் அறிவும் தேசும் சீர்த்தியும் மேன்மே லெய்திப்
பல்வகை யின்பந் துய்த்துப் பாரெலாம் பணிந்து போற்ற
நல்லினை புரிந்து மன்னன் நண்ணுகாள் நயந்து பிள்ளை
நெல்லினைக் கொள்ளை யிட்ட நிலையினை யினிமேல் சொல்வாம்.

மந்திரிப்பிள்ளை மன நிலை.

1433. மன்னவன் தனைய டுத்து மந்திரிப் பிள்ளை நாளும்
தன்னர சாக வுள்ளம் தருக்கினன் தன்சொல் மீறி
என்ன காரியமும் யாரும் எங்குமே இயற்றூர் என்னும்
இன்னதோர் துணிவும் வீணே எழுந்துமேல் வளர்ந்ததன்றே.

1434. திரிசிர புரத்தில் முன்னம் சேர்ந்துதான் பேசி நின்ற
அருமையால் துரைக ளெல்லாம் அகமிக மகிழ்ந்தார் மன்னன்
பெருமையைப் பெற்று வந்திப் பேருல கெல்லா மேத்த
மருவிவீற் றிருந்தான் என்று மனக்களிப் பூர்ந்து நின்றனன்.

1435. * சாகசன் றனையடக்கித் தண்டனை விதிக்கச் செய்தோம்;
வேகமாய் நின்ற வெள்ளைத் துரைகளை விரகால் வென்றோம்;
வாகையே எய்தி மன்னன் வரும்வகை புரிந்தோம் என்னை,
ஓகையே மிஞ்சி நாளும் உளஞ்செருக்கூக்கி வந்தான். (ச)

1436. குறுநிலக் கிழவ ரெல்லாம் கொடியதன் சூழ்ச்சிக் கஞ்சிப்
பொறுமையோ டடங்கி யுள்ளம் பொருமுத லொளிந் தமர்ந்தார்
மறுபுலத் தவரு மிக்க மாண்புசெய் துறவு கொள்ள
உறுவகை நோக்கி யுள்ளார் எனவுளம் உவந்து நின்றனன். (ரு)

---

* சாகசன் என்றது ஜாக்ஸனை. Jackson துரை கும்பினியாரால் தண்டிக்கப்பட்ட நிலையை 13-ம் படலத்தில் காண்க.

1437. நாவொரு சிறிதசைந்தால் நாடெலாம் அசையும் நாட்டில்
யாவரும் தனக்கு மாரு யியம்பிடார் யாண்டும் என்றும்
பாவரும் கீர்த்தி மிக்க பாஞ்சையம் பதியும் தன்கை
ஓவற வமைந்த தென்ரு வுலகையங் கடலுள் ஆழ்ந்தான். (கூ)

கலியாணம் வந்தது.

1438. இந்த வாறக மகிழ்ச்சியிற் றிளைத்திவன் வருநாள்
மைந்தனுக்குயர் மணஞ்செய விழைந்தனன் ஒருநாள்
சந்த னம்பழ மலரிலை காயொடு சதுராய்
வந்து மன்னனைக் கண்டனன் மணவினை யுரைத்தான். (எ)

அரசன் உதவியது.

1439. மேவந்து வந்திரண் டாயிரம் பொன்னுமே லான
வந்து செம்மெல்நூற் றைம்பது மேகாட்டையு மீந்து
மேபாந்து மங்கலஞ் செய்கெனப் புன்னகை புரிய
வந்தி முன்தொழு தில்லிடை யடைந்தன னினிதே. (அ)

1440. இல்ல டைந்ததும் அரசுவந் தருளிய இயல்பைச்
சொல்லி நின்றனன்; இல்லவள் கேட்டுளஞ் சுளித்து
நெல்லி தெங்கனம் காணுநம் நெடுங்கிளைக் கென்ரூள்
வல்ல மன்கிளை மாய்ந்திட வந்ததவ் * வாய்ச்சொல். (கூ)

1441. அச்சொற் கேட்டலும் அமைச்சனும் சரியதற் கென்னே
பச்சைக்கும் மிடி யாதநல் நெல்லினைப் பார்த்துன்
இச்சை யின்படி வேண்டிய வெலாமினிக் கொணர்வேன்
நிச்சயம்என மனைவியும் நெஞ்சகம் குளிர்ந்தாள். (ய)

1442. நெல்லை நாடியே பலபல நினைந்தனன் நேரே
இல்லை யுள்ளது போதுமென் றில்லின்முன் னிசையா
தல்ல லுற்றனன் ஐயகோ அல்வழி நின்று
தொல்லை வல்வினை தூண்டிட ஒன்றுளந் துணிந்தான். (கக)

---

*கண்ட நெல் காணுது என்று கொண்டவள் சொன்ன அச்சொல்லே பின்பு அரசுமுழுவதும் அழிவதற்குக்குக் காரணமாய் நின்றமையால் அவ் வாய்ச்சொல் மன்கிளை மாய்ந்திடவந்த தென்ரூர்.

கக. ஒன்று என்றது உள்ளிநின்ற அத்தீமையின் பெயர் சொல்லக்கூசி.

பிள்ளை கொள்ளையில் துணிந்தது.

1443. விலைகொ டுத்துநெல் வாங்குதல் தனதுமேன் மைக்குப்
புலையதாமெனப் புந்தியில் நினைந்தனன் பொதியா
மலையெனக்குவித் தழகுற வரைந்துவைத் திருக்கும்
நிலையுயர்ந்தநற் சங்கநெல் லெடுத்திட நேர்ந்தான். (கஉ)

கும்பினி நெல் குவிந்திருந்த நிலை.

1444. நெல்லை யெல்லையிலுள்ளநன் னெல்லைலாம் குருகூர்
மல்ல லோங்கிய வைகுண்ட மாநகர் என்னும்
நல்ல சனிடங் களிலமைத் திருந்தன ரதனை
ஒல்லை வந்துகைக் கொள்ளமூன் னுளத்திடைத் துணிந்தான்.

எண்ணி யுள்ளதை இல்லிடம் சொல்லியது.

1445. தான்துணிந்ததைத் தன்மனை யிடம்தனி யுரைத்தான்
தேன்துணிந்ததைக் கேட்டதும் குலைமிக நடுங்கி
ஊன்துணிந்தவெங் கொடுங்கன வொன்றுநேற் றிரவு
நான்துணிந்துகண் டேனென நாவுலர்ந் தறைந்தாள். (கச)

கனவு நிலை யுரைத்து மனைவி மறுகியது.

1446. கண்ட வுன்கன வென்னெனக் காரிகை வெருவிக்
கொண்ட நாயக! கூறவும் கூசுவல் கொடிதே!
மண்டு சீர்த்திரும் மன்னவன் பட்டத்து யானை
தண்டு பட்டுடல் துடித்துயிர் மடிந்திடக் கண்டேன்; (கரு)

1447. முத்துராம் எனும் பட்டத்துக் குதிரையே முதலாச்
சித்தி ரப்பரி யாவுமே செத்திடக் கண்டேன்;
சத்திரம் கொடி சாமரை பஞ்சணை மெத்தை
மொய்த்த தீயிடை மூண்டுமுன் எரிந்திடக் கண்டேன். (கசு)

கஉ. சங்கம் என்றது கும்பினியை. கும்பினியார் வரியாகத் தொகுத்து வந்த நெல்லை ஸ்ரீவைகுண்டத்திலும், ஆழ்வார் திருநகரிலும் பொதிசெய்து வைத்திருந்தார்; ஆதலால் அந்த அம்பாரத்தை அள்ளிவரப் பிள்ளை துணிந்தார்.

கங. நெல்லை = திருநெல்வேலி. குருகூர் = ஆழ்வார் திருநகர்.

கசு. ஜமீன்தாருடைய பட்டத்துக்குதிரைக்கு முத்துராம் என்று பெயர்.

1448. மன்னன் தேவியின் மலர்க்குழல் கருகிட, நகரம்
இன்னல் மீறியே யிரத்தங்கள் பொழிந்திடக் கோட்டை
சின்ன பின்னமாய்ச் சிதைந்திடக், கரும்புகை யெங்கும்
துன்ன, ஐயகோ மன்னனும் துஞ்சிடக் கண்டேன். (கஎ)

1449. நமது வீட்டிலோ சிடிவிழுந் தெரியுக நரந்தம்
கமழு நன்மலர் எலுமிச்சம் கதலியே முதலா
அமைய நின்றநம் தோட்டமும் அழிந்ததி லிருந்த
கமல வாவியும் கட்டழிந் தொழிந்திடக் கண்டேன். (கஏ)

1450. கொல்லை யுள்ளநங் கிணற்றினைக் குனிந்து நான் பார்த்தேனோ
ஒல்லை யாகளன் தாலியற் றெழிந்தமே தகு மந்தோ!
அல்லல் ஐயனே என்சொல்வேன் நீங்களோர் மரத்தில்
தொல்லை யாயுயிர் துடித்துமுன் தூங்கவும் கண்டேன். (கஐ)

1451. தீய வெங்கொடுங் கனவினை நினைப்பினும் தீயை
வாயி லிட்டது போலுயிர் துடிக்குமே மன்னு
ஆயி ழைச்சிறி தயலினி யகலுவ தாகா
தேயுங் காரியம் ஈங்கமர்ந் திருந்துநாம் செயலாம். (உ)

1452. செல்ல மாமகன் திருமண முடியுமுன் என்ன
அல்லல் நேருமோ என்றுளம் அஞ்சினான் அயர்வேன்
நல்ல காரியம் தொடங்கினம் நாசவெங் குறிகள்
எல்லை யின்றிமுன் தோன்றின என்னையீ தந்தோ! (உக)

1453. முன்ன தாகிய சாமமேல் ஆண்டொன்றுள் முடியும்;
அன்ன தன்னயல் ஒன்பது திங்களாம்; அதன்பின்
மன்னின் ஆறுமாதங்களாம்; பின்னெனில் மதிமூன்
றென்னும் எல்லையுள் ஆமெனக் கணிப்பல னிசைப்பார். (உஉ)

1454. என்ற இக்கன விறுதிவை கறைபினில் எனக்குத்
தோன்றி நின்றதால் சொல்லிய துயரெலாந் துணிவாய்
மூன்று திங்களுள் மூண்டுவந் தடருமென் றுள்ளம்
ஊன்று தியுறு மெழுகென வுருகுமே தகு மன்றுள்.
(உங)

உஉ. கனவு பலன் தரும் கால நிலைகளை இதில் கருதி அறிக. விரிவைக் கணநூலில் காண்க. ஒரு சாமம் ஏழரை நாழிகை அளவினது.

உங. தான் கண்ட கனவு கடைசிச் சாமத்தில் ஆதலால் அதன் கொடிய விளைவு கடிதில் வரும் என்று இங்ஙனம் கலங்கி மொழிந்தாள்.

1455. நெல்லு வந்தது போதுநாம் நினைந்துள மணத்தை
மெல்ல வேசெய லாமிந்த ஆனியில் வேண்டாம் ;
வெல்லும் வீரரா யுள்ளநம் வேந்திடம் இதனைச்
சொல்லு வீரென‌த் தொடர்ந்தவள் துயருடன் சொன்னாள்.

மறுகிய மனைவிக்குத் தானைபதி உறுதியுரைத்தது.

1456. மாசி லா*முத்து வடிவேனும் மங்கை யிவ்வாறு
பேசி முத்தெனக் கண்கள்நீர் சிந்திடப் பேர்ந்து
நாசி சீந்திமுன் னின்றனள் நாயகன் நோக்கி
வாசியாதவள் ஆதலால் மயங்கினை யென்றான். (உஙி)

வாய் வேதாந்தம் வழங்கி நின்றது.

1457. நனவிற் கண்டதே பொய்யென நழுவிடும் இந்தக்
கனவிற் கண்டதை மெய்யென நம்பிநீ கலங்கல்
பனையிற் கண்டவோர் ஒலியினைப் பேயெனப் பயந்து
மனையிற் கண்டுயிர் மடிந்தவள் மடமையை ஒக்கும். (உசு)

அரசிடம் சொல்லாது அகல நேர்ந்தது.

1458. தீய தாயவிம் மொழியினை அரசிடம் போய்நான்
வாயுரைப்பனேல் நகைத்தனை மனைவிவாய் பார்த்த
பேயன் என்றவ ரிகழுவர் ஆதலால் பேதாய் !
நீயடங்கி நில் நெல்வரும் என்றவன் எழுந்தான். (உஎ)

கருதிய கரவில் கருவ முற்றது.

1459. வருவ தின்னதென் றறிகிலான் மரபையு மறந்தான்
பருவங் கண்டுதான் வீரகுடன் பணிசெய்வ தாகக்
கருவங் கொண்டனன் கரவொடு வம்பர்கள் சிலரை
உரிமை கொண்டுதன் கருமம்கை சூழ்ந்தன னுள்ளே.(உஅ)

களவுக்கான அளவுகள் கண்டது.

1460. ஏற்ற மாம்பொதி எருதுகள் இரண்டுநூ றினைத்தான் ;
ஆற்றல் வெம்படை வீரரைந் நூறுபேர் அமைத்தான் ;
மாற்றம் யாருமே அறியலா வகைமறை வாகப்
போற்றி *யல்வழி நடத்தினன் தொடர்ந்துடன் போனான்.

---

* முத்துவடிவு என்பது தானைபதியுடைய மனைவியின் பேர்.

* அல்வழி என்றது இரவு நடந்தான் என்பதோடு தீமையில் திமிர்ந்து போனான் என்பதும் தெரிய நின்றது. அந்தக் காலத்தில் இக்காலம்போல் மோட்டார்கள் இல்லாமையால் பொதிமாடுகள் திரட்ட நேர்ந்தது.

கொள்ளைக்குச் சென்ற பிள்ளையின் கோலம்.

1461. ஐம்பது பேர்குறி காரர் அன்புடன்
கம்புக ளுடனயல் கதுவி யேவரச்
செம்பரி யொன்றின்மே லேறிச் சென்றனன்
வெம்பரி பவத்தையே விளைக்க முந்தினன். (கூய்)

வழியிடை நேர்ந்த சகுனத் தடை.

1462. ஏகுமவ் வழியினில் இடையோர் ஆந்தைவாய்
வேகமாய்க் கீச்சென வீறிட் டோரொலி
சாகநேர் குறியெனச் சாற்றக் கேட்டனன்
போகவுள் ளஞ்சினன் புலந்து நின்றனன். (கூ4

நிமித்திகன் உரைத்தது.

1463. நின்றவன் அயல்வரு * நெல்லை நாயகன்
என்றவன் றனையழைத் தியல்பு ரைத்தனன்
துன்றிய குறியிது துயர மேதரும்
இன்றினி மீளலே யினிய தாமென்றான். (கூ2)

உள்ளத் துடுக்குடன் பிள்ளை மறுத்தது.

1464. என அவன் உரைக்கவும் இந்தக் கூகையின்
துனியுரைக் கஞ்சியென் துணிவு தீர்வனே ?
அனையது கிடக்கமேல் நடக்க என்றனன்
வினையது விளைவினை வெல்ல லாகுமோ ? (கூகூ)

விரைந்து போனது.

1465. அல்லிடைப் படைகளை நடத்தி ஆண்மையாய்த்
தொல்லையை விளைத்திடத் துணிந்து சென்றனன் ;
எல்லவ னெழுமுனே யெண்ணி வந்துள
நெல்லமர் நகரினை நெடிது கூடினான். (கூச)

கூ0. குறிகாரர் என்றது கம்புச் சிலம்பத்தில் கைதேர்ந்தவர்களை. பரிபவம்=துன்பம். இந்த நெல்லின் விழைவால் அல்லலே விளைந்தது ஆதலால் அதனைச் சொல்லிபபடியிது. பிள்ளை போனது பெருங்கேடென் பதாம்.

* இவன் கொடிக்கால் பிள்ளை மரபினன்; சகுனசாத்திரத்தில் வல்லவன் ஆதலால் நிமித்த நிலையை நேரே சொல்லினன்.

விடியுமுன் சேர்ந்தது.

1466. வைகுண்ட மாநகர் அடைந்து வந்ததன்
வெய்யவெம் படைகளை வேறு வேறுவைத்
தையமொன் றுறுவகை அமர்ந்து நொய்தினிற்
செய்வதை நாடியே தேர்ந்து சூழ்ந்தனன். (நடு)

உளவுகள் தெரிய உசாவி நின்றது.

1467. செய்த்தலைச் சின்னமா வேரி என்னுமோர்
கைத்தலை வீரனைக் கபட மாகவே
இத்தலை நிலைகளை யினிது பாரெனா
உய்த்தினி திருந்தனன் உளவு நாடியே. (நசு)

போக்குரை புரிந்து சாக்கொடு திரிந்தது.

1468. விலைக்குநெல் வாங்கவே விழைந்து வந்ததாத்
தலைக்கொரு கோணியைத் தோளில் தாங்கியே
அலைத்திர ளெனத்தெரு வலைந்து நின்றனர்
புலைத்திற மறைத்துமே பொதியை நாடினர். (நஎ)

நேற்பொதி அணுகிச் சொற்பொதி அவிழ்த்தது.

1469. ஆயிரம் கோட்டையாய் அளவ மைந்துள
மாயிரு நெற்பொதி மருங்கு வஞ்சமாய்ப்
போயுறு நெல்விலை புகலும் என்றனர்
காயுறும் இரும்பெனக் கடிய நெஞ்சினர். (நஅ)

காவலாளர் நிலை.

1470. அளவுசெய் வோர்களும், யாரும் என்றுமே
களவுசெய் யாவகை காவல் செய்நரும்
வளமுற வருநெலை வரவு செய்துமேல்
களமுறக் குவித்ததைக் கரைசெய் வார்களும். (நக)

நடு. வைகுண்டம் என்றது ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரை. இது திரு நெல்வேலிக்குக்கிழக்கே 18மைல் தூரத்தில் உள்ளது. நொய்து = விரைவு, இழிவு.

நசு. செய்த்தலை என்பது ஓர் ஊர். கோவில்பட்டித் தாலுகாவில் உள்ளது.

நஎ புலைத்திறம் என்றது களவு நிலையை. புலை = நீசம்.

1471. இத்திறம் நூறுபேர் என்றும் காவலாய்ப்
பத்திரம் அமைந்தவப் பண்ணை நெல்லினைக்
குத்திர மாகவே கொள்ளை செய்திடச்
சித்திர மாயிவர் திரண்டெழுந்தனர். (சய)

அல் அடைய நெல் அடைந்தது.

1472. இரவுவந் தடைந்ததும் எருதி னங்களைக்
கரவுடன் கொணர்ந்தனர் காவ லாளரை
உரமுடன் அடித்தனர் உருத்து நெல்லினை
விரைவுடன் எடுத்தனர் விரிகள் கட்டினர். (சக)

கொள்ளை புரியவும் அங்கு உள்ளவர்ஓடினது.

1473. சாத்தனும் சடையனும் சங்கனும் மெனக்
காத்திருந் தவரெலாம் கலங்கி யோடினர்
மாத்திரைப் பொழுதினில் வந்து காப்பினைக்
கோத்தலை வனுக்கிது கூற லாயினர். (சஉ)

தலைமைக் காவலன் வந்தது.

1474. பாண்டியத் தேவனென் றுரைக்குப் பண்பினன்
ஈண்டிய காவலர் எவர்க்கு மேலவன்
ஆண்டகை கேட்டதும் அடர்ந்தெழுந்துமே
வேண்டிய கம்புடன் விரைந்து வந்தனன். (சங)

தடிகொண்டடித்தது.

1475 ஏற்றிய பொதியவாய் ஏக நிற்கின்ற
ஏற்றினங் களைமுதல் எற்றி ஓட்டினன்
வீற்றுவீற் றுயின வெகுண்டு வீரர்கள்
கூற்றென வளைந்தனர் கொடுமை யாகவே. (சச)

1476. ஒண்டியில் வந்துளான் என வுருத்தவர்
கொண்டலல் வளைத்துடன் கொதித்தடர்ந்தனர் ;
தண்டுகள் மேலெதிர் தாக்க அன்னவன்
செண்டெனப் பாய்ந்துமே திரிந்து மாட்டினன். (சடு)

மூண்டு பொருதது.

1477. வந்தவர் தாக்கவும் வலிய காவலாய்
முந்துற நின்றவன் முனைந்து தாவியே
எந்திரம் திரிந்தென எழுந்து சுற்றினன்
தந்திர முழுவதுந் தாவி யேறினன். (சசு)

1478. அடித்திடுங் கம்புகள் அனைத்தும் தட்டிநேர்
கடுத்துடன் அடித்தனன் காவ லாளரும்
தொடுத்துடன் அயல்வந்து தொடர லாயினர்
மடுத்தது போர்மிக வலிமை யாகவே. (சஎ)

அடிவிழுந்த பிள்ளை படிவிழுந்தது.

1479. பிள்ளைக்கும் ஓடி பிடரி மேல்விழத்
துள்ளிமுன் விழுந்துமே துடித்தெ ழுந்தனன்
வள்ளலெம் மன்னனை அடித்த தேயலால்
வெள்ளலாய் என்னையீ தடித்த தன்றெனை; (சஅ)

கோபத்தை மூட்டிக் கொடுங்கோலை கண்டது.

1480. மூட்டினன் வெகுளியை மூண்டு வீரர்கள்
பூட்டிய கம்புடன் புகுந்து பாய்ந்தனர்
மாட்டினர் எதிரிகள் மாண்டு வீழ்ந்தனர்
நீட்டிய காலராய் நிலைகு லைந்தனர். (சகூ)

காவலன் காட்டிய கைத்திறம்.

1481. திண்டிறற் பாண்டியத் தேவனேநின்று
மண்டிய போரினில் வலிய வீரரை
அண்டவொட் டாமலே அடர்ந்து கைத்திறம்
கண்ட மட்டும் மன்று காட்டி னனோ. (ருய)

சஅ. அடிபட்டபிள்ளை அயல்நின்ற வீரர்களைப்பார்த்து "இது என்னை அடித்த அடி அல்ல; கட்டபொம்மை யடித்ததாம்"என்று அரசனைச்சுட்டிக் கோபமூட்டவே, பாவம்! கம்பளங்கள் கம்புகளுடன் மூண்டு கடுத்துப் பாய்ந்தனர். பிறரை மூட்டிவிட்டுப் பேரிழவு செய்வதில் பிள்ளை பெருகி யுள்ள நிலை இதனால் அறியலாம்.

1482. ஏறியும் இறங்கியும் எதிர்த்தும் சுற்றியும்
மாறியும் வலமிட மாக வந்துமேற்
சீறியும் அன்றவன் செய்த போரினில்
ஆறிரு வீரர்கள் ஆவி போயினர். (நக)

காமய நாயக்கன் கடுத்து மூண்டது.

1483. அடுந்திற லோடவன் அமர்செய் காலையில்
கடுந்திற லுடையவன் காமயன் எனும்
நெடுந்திற லாளன்முன் னேரில் பாய்ந்துமே
கொடுந்திற லுடன்கம்பு கோத்து மூண்டனன். (நஉ)

இரண்டு வீரரும் முரண்டு பொருதது.

1484. கொள்ளியின் வட்டம்போல் கொடிது சுற்றினர்
உள்ளுற வெகுளியே யூக்கி நோக்கினர்
தள்ளரும் இருவரும் தமது கைத்திறம்
உள்ளன யாவையும் ஒருங்கு காட்டினர். (நங)

சிலம்பப் போர்நிலை.

1485. அடியினைக் கட்டுவர் ; அணைத்துத் தட்டுவர் ;
மூடியென மூட்டுவர் ; முறித்து மீளுவர் ;
கொடியெனச் சுற்றுவர் ; கொதித்துக் குத்துவர் ;
இடியென எற்றுவர் ; எதிர்த்து வெட்டுவர் ; (நச)

1486. *வன்றுலுக் காணத்தின் வகையிற் சீறுவார் ;
நின்றிலக் கடியென நேரில் கூறுவார் ;
பொன்றினை நீயெனப் பொங்கி மீறுவார் ;
கொன்றுயிர் குடித்திடக் குறித்துத் தேறுவார் ; (நஙு)

1487. எடுத்தடி பெயர்க்குமுன் எற்றிப் பாயுவார் ;
அடுத்தடி யாற்றிமேல் அடர்த்துக் காயுவார் ;
கடுத்தயல் ஓட்டுவார் ; கறுத்து நீட்டுவார் ;
மடுத்துடன் மூட்டுவார் ; மறித்து மாட்டுவார். (நசு)

---

* துலுக்காணம் என்பது சிலம்பப்போரில் ஒரு பிரிவு. இது கால்வாங்கிக் கடிதுசுற்றி, மேலோங்கி வெஞ்சமராடும் விரைவு மிகவுடையது.

1488. இவ்வகை நெடும்பொழு திடை விடாமலே
வெவ்வலி யுடையவர் வெகுண்டு போர்செய்தார்;
தெவ்வலி தேய்ந்திடத் தேர்ந்து காமயன்
இவ்வெனப் பாய்ந்துமே லெழுந் தடித்தனன்.

காவலன் பட்டது

1489. அடியினுல் பாண்டியன் அயர்ந்து நின்றனன்;
பிடிஎனப் பிள்ளவந் தேவ நால்வர்போய்க்
கடிதினிற் பற்றினர் கையில் சிக்கினன்
கொடுமையாய்த் தூக்கினர் அமைச்சன் கூற்றினுல்.

நிலவறையில் இட்டது

1490. நெல்லிடு நிலவறை தன்னில இட்டுமேல்
வல்லையில் நெல்லினை வாரிக் கொட்டினர்
ஒல்லையில் பூட்டினர் உருத்து மீண்டனர்:
அல்லலோ டவன்துடித் தாவி நீங்கினன். (59)

உள்ளவர் உடைந்தது.

1491. மண்டைகள் உடைந்தவர் மாண்டு போனவர்
கண்டதோ ரிடமெலாம் காயம் பட்டவர்
அண்டையில் அகன்றுமே அயர்ந்து நின்றவர்
உண்டவர் இங்ஙனம் ஒழிந்து போயினர். (60)

1492. போரினுக்கு அஞ்சிநெற் போரிற் புக்கனர்;
காரியம் எமக்கிலை காவல் செய்திலேம்
வாரிநீர் போமென வாய் மொழிந்துமே
ஊரினில் ஓடியே ஒதுங்கி னர்பலர். (61)

கொள்ளை கொண்டு மீண்டது.

1493. காவலர் இவ்வகை கலைந்து போகவே
ஏவலால் பொதிகளை ஏற்றி ஏகினர்
ஆவலாய் விரைந்தனர் அல்லு நண்பகல்
ஓவற நடந்தனர் ஊர டைந்தனர். (62)

---

59. தலைமைக் காவலன் ஆன பாண்டியத் தேவன் இறந்து பட்டதை அறிந்ததும் அவன் மனைவி கனகி என்பவள் விரைந்து வந்து போர்க் களம் புகுந்து புலம்பி யழுதாள். பெரிதும் பரிதாபமான அந்தநிலை அயலே அறிய வருகிறது.

1494. பேரியல் ஓட்டப் பிடாரம் என்னுமச்
சீரிய ஊரினைச் சேர்ந்த தும்பிள்ளை
காரியம் முடிந்ததும் கவர்ந்து வந்ததும்
வீரிய முடன்சொலி வியந்து கொண்டனன். (63)

1495. **பிள்ளை மகிழ்ந்தது.**

கொள்ளையிற் கொணர்ந்தவந் நெல்லைக் கோலமாய்ப்
பிள்ளையின் இல்லிடைப் பெருக்கி வைத்தனர்;
வெள்ளையர் நெல்லிது ஞினையென் றெண்ணலர்
உள்ளக முவந்தனர் ஊக்கி நின்றனர். (64)

1496. வந்தவர் அனைவர்க்கும் வரிசை யாகவே
முந்துற விருந்தினை முடுகிச் செய்தனன்;
சந்தன முதலிய தந்த கற்றினன்
சிந்தையு ளுவந்தனன் செழித் திருந்தனன். (65)

காவலன் மனைவி கனகி வந்தது.

1497. இங்கிவ்வா றிவனிருக்க அங்கமரில்
இரிந்தவர்கள் விரைந்து சென்று
தங்கியபே ராற்றலுடன் சமர்புரிந்து
நிலைகுலைந்து தனியே மாண்டு
மங்கிநின்ற பாண்டியன்றன் மனைவிளனும்
கனகியிடம் மறுகிச் சொன்னர்
பொங்கியவள் எழுந்தோடிப் போர்க்களத்தே
புலம்பிவந்து புரண்டு ருண்டாள். (66)

கணவனைக் கண்டு கலங்கிப் புலம்பியது.

1498. நிலவறையில் இறந்துநிற்கும் நிலைகண்டு
குலைநடுங்கி நெடிது வீழ்ந்து
தலையிலடித் தையையோ தனிவீரக்
குலமகனே! தலையி லிந்தக்
கொலையெழுத்தா எழுதிநின்ற தினியெந்தக்
காலமுன்றன் கோலச் செவ்வாய்க்
கலைமுகத்தைக் காண்பேனே என்னுயிரே!
என்கணவா! எனக் கரைந்தாள். (67)

1499. மாலையிட்ட நாள்முதலா மதகரியும்
இளம்பிடியும் மருவி நின்ற
கோலமெனக் கலைமானும் பிணையுமெனக்
கூடிநாம் குலாவி வாழ்ந்தோம்;
மாலைவரை கண்டுமன மகிழ்ந்திருந்தேன்
மடங்கலெனப் போன வுன்னைக்
காலையிந்த நிலைகண்டேன் என்னரசே!
யினியென்று காண்பேன் கொல்லோ? (68)

1500. பாலிலயல் நீர்கலந்து பணத்துக்கு
விற்றறியேன்; பழுது சொல்லிக்
கூலிதனைக் குறைத்தறியேன்; கோட்சொல்லிக்
குலைத்தறியேன்; கோலி வைத்த
வேலிதனை யழித்தறியேன்; மேலோரைப்
பழித்தறியேன்; வினையேன் கொண்ட
தாலிதனை யழித்ததென்ன தெய்வமே!
எனத்தலையில் தாக்கி வீழ்ந்தாள். (69)

1501. தண்டடர்ந்து வந்தாலும் தனிஎதிர்ந்தே
எளிதடிக்கும் தறுகண் வீரா!
கொண்டையங் கோட்டை மறவர் குலமணியே!
விலைமதியாக் கோவா முத்தே!
பண்டைவினைப் பயனிதுவோ என்தலையில்
இப்படியும் பாவித் தெய்வம்
கொண்டெழுதி யிருக்குமெனக் கனவிலுநான்
குறித்திலனே கோவே! கோவே! (70)

1502. கையிலே கம்பெடுத்தால் காண்டீபம்
எடுத்துவந்த காளை முன்னே
வெய்யபகை விலகுதல்போல் விலகுமே
விலகாத வீரம் வாய்ந்த
ஐயனே! என்னுவி அருந்துணையே!
ஆணழகா! அரசே இந்த

---

70. தண்டு=படை. கொண்டையங் கோட்டை என்றது மறவருள் ஒரு பிரிவு. சிறந்த வீரமரபினன் என்று உள்ளம் மகிழ்ந்து உயிர் துயராய்க் கரைந்து அழுது புலம்பியுள்ளாள்.

வெய்யவனீ வெறுத்தொழித்த விதமென்ன?
ஒருவார்த்தை விளம்பு வாயே! (71)

1503. மாமன்மகள் என்றென்னை மருவிமணம்
புரிந்துமன மகிழ்ந்து கொண்டாய்!
நாமிருவ ரிதுவரையும் நகம்சதையா
யிணைந்தமர்ந்து நலமாய் வாழ்ந்தோம்:
சாமியினி யுனைப்பிரிந்து தனியிருந்து
வாழ்வேனே? சார்ந்து வந்தேன்
மாமிமகனே! ஒருசொல் மறுகலென
வாய்திறந்து வழங்காய் கொல்லோ! (72)

1504. வெள்ளையர்கள் நெல்லோடு என்தாலி
வீரனையும் வீணை வந்து
கொள்ளைகொண்டு கொலைசெய்து கொடுமையாய்ப்
போன அந்தக் கோள னை
பிள்ளைமேல் வெள்ளிடிதான் வீழாதா?
அவன்மனையும் பீழை கொண்டு
துள்ளிவிழுந் தடித்தென்போல் துடியாளா
தெய்வமே! துணையில் லேனே! (73)

துரையிடம் சென்றது.

1505. என்றிவ்வா றழுதெழுந்து சங்கமுயர்
தலைவனும் பிற்கட் டென்னும்
நன்றறிந்த துரைமகன்பால் தன்தமரை
யுடனழைத்து நடந்து நெல்லை
சென்றவனைக் கண்டுதொழு தடிவிழுந்து
நெடிதழுது தேச மன்னு!
குன்றமென நின்றநெல்லைக் கொள்ளைகொண்டென்
கணவனையும் கொன்றூர் அந்தோ! (74)

நிகழ்ந்தது சொன்னது;

1506. காளையென நின்றஎன்றன் கட்டழகன்
இறந்தொழிந்தான்; கடையா ளிந்த

---

71. காண்டீபம் = அருச்சுனனுடைய வில். வில்லில் விசயன் போல் கம்பில் தன் கணவன் வல்லவன் என்பதாம். சிலம்பப் போரில் இவன் சிறந்த வீரன். உரிய துணைவனது அரிய திறலை நினைந்து நினைந்து உருகி அழுதுள்ளாள்.

வேளையுங்கள் முன்புயிரை விடுவனென்றூள்:
பிற்கட்டு விரைந்தி ரங்கிப்
பாளையமாம் எங்கள்நெல்லைப் பயமின்றி
எடுத்தவரார்? பயப்ப டாமல்
நீளவுரை! நின்னைநான் காத்தருள்வன்
என்ன அவள் நெறியே சொன்னாள்: (75)

1507. பாஞ்சாலங் குறிச்சிமன்னன் படைகளொடு
மந்திரியாம் பிள்ளை வந்து
பூஞ்சாலி நெல்லைஎல்லாங் கொள்ளைகொண்டான்
என்புருடன் புகுந்து தாக்கத்
தாஞ்சால மிகுந்தமையால் அடித்துநில
வறையில்வைத்துத் தாவிப் போனூர்:
நாஞ்சாமி யினியிருக்க ஞாயமில்லை
என்றழுது நவின்று நின்றூள். (76)

பிற்கட்டு சினந்தது.

1508. என்றவுரை செவிப்படலும் இருவிழியும்
பொறிப்பறக்க எழுந்து பொங்கி
நன்றிகெட்ட மனிதர்செயல் நன்றுநன்று
நங்காய்!நீ அஞ்சல் ஒன்றும்
வென்றிமிகு காவலையுய் நின்றிருந்த
உன்கொழுநன் மேன்மைக் காக
இன்றுனக்கே எழுகோட்டை விதைப்பாட்டை
யினிதளித்தேம் என்றுங் கொள்க. (77)

1509. எனத்தேற்றி அவளைவிடுத்து எழில்மிகுந்த
பரியொன்றி லேறி நேரே
சினத்தோற்றத் துடன்வந்து வைகுண்ட
மாநகரஞ் சேர்ந்து நெல்லின்
வனத்தோற்ற நிலையறிந்து வயிறெரிந்தான்
நிலவறையை நோக்கி வீரன்
கனத்தோற்றம் கண்டழுதான் காரியஞ்சீர்
செய்யுமெனக் கழறி மீண்டான். (78)

அரசுக்குக் கடிதம் அனுப்பியது

1510. இல்லடைந்து கட்டபொம்முக் கொருகடிதம்
கடிதாக எழுத லானன்:
கல்ல மன்னன் என்றுன்னை நயந்தழைத்து
நாங்கள்பல சிறப்புஞ் செய்தோம்;
வல்லையிந்த மண்ணறிய வானறிய
நண்பனென வாக்குத் தந்தாய்!
நெல்லைவந்து கொள்ளைகொண்டு காவலரைக்
கொன்றகன்றாய் நீதி தானே? (79)

1511. பிள்ளைமகன் ஒருவனுன்றன் குடிகெடுக்கப்
பிறந்துள்ளான்; பேணி நாளும்
வெள்ளமெனத் துயர்கள்மிகச் செய்துமே
வருகின்றான்; வெளிவே டத்தான்;
உள்ளமெலாம் கள்ளமே யூறிநின்றான்
நயவஞ்சன் ஒளிந்து நெல்லைக்
கொள்ளைசெய்து போயுள்ளான்: நீயறியாய்
என்பதுவுங் குறித்துள் ளேமால். (80)

1512. துன்மதியாம் இவனையுமோர் அமைச்சாகத்
துணிந்துநீ சூழ்ந்து கொண்ட
தென்மதியோ? அரசாட்சி என்றுமே
அரியசெயல் ஆத லாலே
நன்மதியாளரை யாய்ந்து நட்பாகத்
துணைக்கொண்டால் நாளு நன்றும்;
முன்மதியா மகிழ்ந்துலக முழுதேதத்தும்
பெருநலனு மூளு மன்றே. (81)

1513. கெடுகாலன் அவனுறவை யுடனெழிக்க;
நெல்லைவந்து கொள்ளை செய்த
படுபாவி அவனைஎன்கைப் படுத்துகபாழ்
செய்ததற்கும் ஈடு பண்ணிக்

---

79. கும்பினியாரோடு உறவாடி துரைகள் சூடாமணி என்ற பட்டமும் இரட்டை வாளும் பல பரிசுகளும் இந்த மன்னன் முன்னம் பெற்று வந்திருக்கிறான். அந்த நட்பு நிலை இங்கே நயமாச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொடிதாக இனியொன்றும் நிகழாமல்
காப்பதெனக் குறிப்புஞ் செய்து
முடிவாக ஒருபதிலை வாரம்ஒன் றுள்
விடுக;இன்றேல் முடிவு கண்டாய்! (82)

1514. என்றெழுதி யஞ்சலா லிடமனுப்பிச்
சங்கமுத லவர்க்கு மேலே
ஒன்றெழுதிப் போரிலுயிர் துறந்தவர்தங்
கிளைக்கினையந்த துதவி நின்ற
துன்றுபொதி நெற்களத்தைச் செம்மைசெய்யும்
படிதூண்டிப் பிள்ளை மீது
கன்றியவெங் கோபமாய் என்செய்வ
தெனச்சூழ்ந்து கடுத்தி ருந்தான். (83)

கடிதம் கண்டு அரசன் கவன்றது.

1515. அனுப்பியஅத் திருமுகமும் பாஞ்சைநகர்
தனையடைந்தது அரசன் கண்டான்:
மனுப்படிநாம் முறைசெய்யு மாட்சிமிக
நன்றுநன்றே! அமைச்சே யிங்நுன்
துனிப்படியும் பழிச்செயலைத் துணிந்துசெய்தால்
பிறரைநாம் சொல்வ தென்னே?
இனிப்படியான் இவன்படித்த படிப்பெல்லாம்
ஈனமென இகழ்ந்து நின்றான். (84)

1516. சங்கமுதல் தலைவர்நமை யுவந்தழைத்துத்
தகைமைசெய்து நாம்செய் துள்ள
பங்கமெல்லாம் அறமறந்து பண்புபா
ராட்டியுயர் பரிகள் ஏழும்
தங்கமணிச் சிவிகைமுதற் பலவுந்தந்
துறவாடித் தமிழ்த்தென் னாட்டின்
சிங்கமெனப் புகழ்ந்துவிட்ட சங்கநெல்லைக்
கொள்ளையிட்ட தீமை என்னே! (85)

நன்றியை நினைந்தது.

1517. ஒருநன்றி செய்தாரை யுள்ளத்தே
நினைந்தென்றும் உயிர்நட் பாகப்

பெருநன்றி யுடன்பேணிப் பெரியர்நிற்பர்;
சிறியரன்றே மறந்து போவர்:
தருநன்றி தனைமறந்தும் தாமவர்க்குப்
பிழைபுரிதல் சண்டா ளர்க்கே
வருமன்றி மற்றவர்க்கு வருங்கொல்லோ?
வந்ததிவன் பாலீ தென்னே! (86)

1518. பிறரெல்லாம் திறைசெலுத்திப் பணிசெய்யப்
பெருமையுடன் பேணி நம்மை
உறவுகொண்டு வரியகற்றி யுரிமைசெய்தார்
ஓராண்டும் நிறைய வில்லை;
மறமிகுந்திச் செயல்புரிந்த வகைதெரிந்தால்
நம்மையவர் மதிப்பார் கொல்லோ?
அறமிகுந்த பதியிருந்தும் அரசிருந்தும்
அநியாயம் செய்தா னன்றே. (87)

1519. கள்ளர்களைத் தலையடக்கிக் களவெல்லாம்
நிலையொடுக்கிக் கருதா ரென்ன
உள்ளவரை யுளமடக்கி யுலகமெலாம்
நலமடைய வுயர்ந்து நின்றேம்;
பிள்ளைமகன் உள்ளிருந்தே கள்ளமக
னுஞ்செய்யாப் பிழையைச் செய்தே
எள்ளலுடன் அடக்கமா யினியவன்போல்
இருக்கின்றான் இருப்பு நன்றே! (88)

மந்திரியை அழைத்துவரச் சொன்னது.

1520. என்றயலே நின்றவர்பால் ஏந்தலிசைத்
தகம்வருந்தி யிப்போதே போய்
ஒன்றுமவ னுடனுரையா துடன்அழைத்து
வாருமென நால்வ ரோடிச்
சென்றவனைக் கண்டரசு கொண்டுவர
வருளியதென் றினிது செப்ப
நன்றெனவே முன்னெழுந்து நால்வர்பின்னே
தொடர்ந்துவர நடந்து வந்தான். (89)

நிருபம் தந்தது.

1521. வந்தவனை அருகிருத்தி வருசினத்தை
மனத்திருத்திப் பிற்கட் டென்னும்
அந்தமகன் அனுப்பியுள்ள நிருபத்தை
நிருபன்கை யகத்து வைத்துச்
சந்தமுடன் இதைப்படித்துப் பாருமெனப்
பிள்ளையிடம் தந்தான்; வாங்கி
முந்தஅதை நோக்குமுன்னே முகங்கருகி
அகங்கலங்கி மூச்செ றிந்தான். (90)

1522. சொல்வந்தான் வாய்திறந்து வேறொன்றும்
சொல்லாமல் தொல்லை யாக
நெல்வந்த நிலைநாணி நிலைநின்ற
தலைகுனிந்து நிற்றல் கண்டு
மல்வந்த திண்டோளான் மனமிரங்கி
வினைநிலையை மறுகி எண்ணிப்
பல்வந்த போதிருந்து படிதெரிந்தான்
முடிவறிந்து பகர லானன். (91)

உள்ளம் வருந்தி உரைத்தது.

1523. கொள்ளைசெய் தாரென் றொருபழி இந்தக்
கோதிலா அரசினுக்கு என்றும்
எள்ளலாம் வகையி லியற்றினை அந்தோ
என்றினி யிப்பழி மறையும்?
தெள்ளுமா மதிய னென்றுனை யுணர்ந்து
தேர்ந்துகைக் கொண்டனன் தெளியாப்
பிள்ளைமா மதிய லையினை பெரிய
பிழையிது பிள்ளைமா மகனே! (92)

1524. உன்றனில் லகத்தி லுறமுறை யறிய
ஒருமகன் தனக்கு நீயுவந்து

---

91. சொல்லில் வல்லவரான பிள்ளை இங்கே ஒன்றும் பேசாமல் ஒடுங்கி நின்றது பிழைபாடுகளை நினைந்தும், அரசனது மனநிலையை உணர்ந்தும் என்க. பல்வந்த போதிருந்து படி தெரிந்தான் என்றது இளமையிலிருந்தே உலக நிலைகளை நன்கு தெரிந்துள்ள மன்னன் என்றவாறு. படி=பூமி. உலகம் தெரிந்தவன் உண்மை தெளிந்து உரைத்தான்.

மன்றல்செய் முன்னம் மறுபுலத் தவர்க்கு
வரன்முறை யுரியதாய் மன்றில்
நின்றநெல் லனைத்தும் நிறைகுலைத் தெடுத்தாய்
நேர்ந்தவர் தமையெலாம் படுத்தாய்
நன்றுநின் மணத்தி னிலையென வெறுத்து
நகைத்தனன் நரசிங்க மனையான். (93)

1525. நெறிமுறை எவரும் நிலைத்துநின் றொழுக
நேர்ந்துமுன் னின்றவர் தாமே
அறிவழிந் திழிந்து பழிவழி புகுந்தால்
அயலவர் செயல்நிலை என்னும்?
மறுபுல மன்னர் திறைதரக் கொண்டு
மனுநெறி கண்டுநாம் நின்ற
பொறிநில மெல்லாம் ஒருசிறு தொழிலால்
போக்கினை நோக்கம்வே றென்னே? (94)

1526. முறைபுரிந் தொழுகும் அரசினைத் தெய்வம்
முன்னின்று காக்குமென் றுரைத்த
மறைமொழி மறந்தாய்! மனுவழி துறந்தாய்!
மதியிழிந் துறுபழி புகுந்தாய்!
கறையழி குளம்போல் வளமெலாம் தொலையக்
கருதுநன் னிலையினைக் கடந்தாய்!
நிறையழி மகளிர் நீர்மைபோல் நிமிர்ந்து
நின்றனை நன்றுநின் நிலைமை! (95)

1527. தன்னைவே றடக்கு வாறிலை யென்று
தருக்கிமேல் நிமிர்ந்துதன் மனம்போல்
மன்னவன் ஒழுகின் மாநிலம் அவனை
மாவின மெனமதித் திழிக்கும்:
முன்னவர்க் கெல்லாம் முன்னவ னனை
முழுமுதற் பரமனும் அவனைச்
சின்னவர்க் கெல்லாம் சின்னவ னுகச்
செய்தருள் புரிகுவன் சினந்தே. (96)

1528. பதவிமே லுயர்ந்தான் தன்னுயர் நிலையின்
பான்மையை முன்னுற அறிந்து

மதமொழிந் தெவர்க்கும் எளியனு யினிய
வாய்மொழி யுடையனுய் என்றும்
இதமுடன் ஒழுகின் இருமையும் பெருமை
இன்பமும் புகழுமென் மேலாய்
நிதமும்வந் தெய்தும் நித்தனும் அவனை
நித்தனுச் செய்குவன் நினைந்தே. (97)

1529. பத்திமான் போல நடித்தனை நல்ல
பாவனை காட்டினை நாளும்
புத்திமான் என்னப் புறத்தவர் மெச்சப்
புகழ்ந்துபற் பலவினை புரிந்தாய்
குத்திர மான இச்செயல் தன்னைக்
கூசிடா தியற்றினை யாலுல்
எத்திறம் இன்னம் உன்னைநான் நம்பி
இவ்வர சியற்றுவ தென்முன். (98)

1530. ஒருமகன் மணமென் றுரைத்தமை யால்யாம்
உவந்திரண் டாயிரம் பொன்னும்
அருமைநற்சென்னெல் நூற்றைம்பான் கோட்டை
யளவுமே அருளினேம் அவைதாம்
உரிமையிற் போதா வெனினும்யாம் மீள
உதவுவேம் ஒன்றுமே சொலாமல்
இருமையும் கெடுக்க அயலவர் நெல்லை
எடுத்தனை ஈனமே அந்தோ! (99)

1531. கேடுதான் வருமுன் மதிகெடு மென்னும்
கேடிலா வுண்மையை இன்று
நாடுமுன் னிடத்தே நான்கண்டு தெளிந்தேன்
நானில மெங்குமே நகையாய்த்
தேடிய புகழும் பெருமையும் திருவும்

---

99. இருமை—இம்மையும் மறுமையும். உன் செயல் பழியும் பாவமும் உடையது எனக் கொள்ளை செய்த அந்த இழிநிலை யை விழி தெரிய விளக்கினன்.

100. கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே என்பது பழமொழி. கொடிய கேட்டுக்கு நெடிய வழிதேடி விட்டாய் என்று மனம் நொந்து குறித்துள்ளான்.

சேரவே கெட்டுயர் குடியும்
பாடழிந் தொழியும் என்பதை நீசெய்
பழிவினை எளிதுமுன் பகரும். (100)

1532. மந்திரி கண்ணும் மாநிலம் புரக்கு
மன்னவற் கென்னவே மனுநூல்
முந்துற வுரைத்த மொழிநிலை சிறிதும்
முன்னிலை; என்னிலை யறியாய்!
இந்தவா றீன இழிகொடுஞ் செயலை
இயற்றினைப் நீயெனின் இனிமேல்
நிந்தைவே றென்னே? நிலைமைதான் என்னே?
நீணிலத் துயர்வுதா னென்னே! (101)

1533. ஐயகோ நல்ல அருளினை வளர்க்கும்
அறிவுடை மரபினிற் பிறந்தாய்!
செய்யநூல் படித்தாய்! தெய்வங்கள் துதித்தாய்!
தினஞ்சிவ பூசையும் செய்தாய்!
வெய்யவிச் செயலும் விளைத்தனை என்னூல்
வேறினி விளம்புவ தெவனே?
வையகத் தென்றும் வசையினை வளர்த்து
மரபையும் என்னையும் கெடுத்தாய்! (102)

1534. திரிசிர புரத்தில் எமைவிழைந் தழைத்துச்
சீமைநன் மக்கள்தாம் சிறந்த
உரிமைகள் செய்து வரியினை யகற்றி
யுபசரித் துறவுகொண் டாடி
அருமைநற் பரிசு பலகொடுத் தன்போ
டனுப்பினர்; அந்நன்றி மறந்தால்
இருமையு மிழந்து கெடுவதே யன்றி
இன்பம்வே றெய்தலு முண்டோ? (103)

முடிவில் சொல்லியது.

1535. நெல்விலைக் குரிய பொருளெலாம் வாரி
நேரிலே கொண்டு பிற்கட்டை
நல்வகை யாகக் கண்டுமுன் வைத்து
நயந்துமுன் னின்றுநான் செய்த

புல்வினை யனைத்தும் பொறுத்தருள் என்று
போற்றிநீ வருதலே புகழாம்;
இல்லையேல் இழிவும் பழியும்வெம் பகையும்
இடர்களும் தொடர்ந்துமேல் விளையும். (ாசு

பிள்ளை திகைத்தது.

1536. என்று மன்னன் இயம்ப எதிரதாய்
ஒன்றும் பேசா தொடுங்கி யிருந்தனன்;
கன்றி நெஞ்சம் கலங்கினன் செய்ததை
நின்று நீள நினைந்து வருந்தினன். (ாரு)

1537. முன்னம் வெள்ளையர் மீது முரணுடன்
மன்னன் நின்ற வகையை மதித்துமே
இன்ன வாறெளி தாக இயற்றினன்
பின்ன மாயது பேசுவ தென்னினி. (ாசூ)

1538. நெல்லை நாட்டினில் உள்ளநல் நெல்லெலாம்
வல்லை யீட்டி வரைந்துமுன் வைத்தனர்
எல்லை நம்மர சுள்ளதென் றெண்ணியே
வல்லை வாரியிவ் வாறுவந் தேனெனு. (ாஎ)

பிதற்றி மொழிந்தது.

1539. எண்ணி வேந்தன் எதிர்முகம் நாணியே
அண்ணை லேஅறியா திது செய்தனன்;
எண்மை யாகநெல் வேண்டி யிருந்ததால்
வெண்மை யாகஇவ் வண்ணம் விளைந்ததே.

1540. வெள்ளைச்சாமி என் மைந்தன் வியன்மணம்
பிள்ளைச் சாதி பெருகி வரும்பிற
கொள்ளைச் சாதியும் கூடுமென் றுள்ளியே
அள்ளச் சாமி அறிய அமைந்ததே. (ாகூ)

1541. விலைகொடுத்து நெல் வாங்க விழைந்தனன்:
புலையெ டுத்தவர் பொங்கி எதிர்ந்ததால்
தலையெ டுத்துடன் வந்தவர் தாவினர்
நிலையெ டுத்த சமரிடை நேர்ந்தே. (ாஏ)

1542. கள்ளம் ஒன்றும் கருதிநான் செய்திலேன்
உள்ளம் ஒன்றிய வுண்மையீ தாதலால்
வள்ளலே! இதை மன்னித் தருளெனப்
பிள்ளை மாமகன் பேசி நிறுத்தினன். (111)

1543. இனிமை யாக இசைத்துமுன் சூழ்ந்தவன்
கனிவு தொன்றக் கரைந்ததும் காவலன்
மனமி ரங்கி மறுகி யெழுந்ததன்
சினம கன்று செயலை மறந்தனன். (112)

மன்னன் மறுகி நின்றது.

1544. வீர மன்றி விரகொன்றுங் கண்டிலாப்
பார மன்னன் பரிந்து பிற்கட்டினுக்
கார வென்னசெய் வேமென ஆய்ந்தனன்
வாரம் ஒன்று கழிந்து மறைந்ததே. (113)

பிற்கட்டு நினைந்தது.

1545. பாஞ்சை மன்னன் பதினெப் பிற்கட்டு
வாஞ்சை யோடெதிர் பார்த்தும் வராமையால்
நாஞ்செய் துள்ளதன் னன்றி மறந்தனன்
ஆஞ்ஞை மீறினன் என்றடல் மீறினன். (114)

1546. பிள்ளை வந்துநாம் பேணிய நெல்லினைக்
கொள்ளை கொண்டு கொலைசெய்து போனதை
உள்ள மொன்ற வுரிமையிற் றீட்டியும்
எள்ள லாக இருந்தனன் இன்னமும். (115)

1547. என்ன தன்மை இவனேர் அரசென
முன்னம் நன்மை முதன்மை பலசெய்தோம்;
சொன்ன சொல்லை மறந்து துடுக்குடன்
இன்ன தொல்லை யிசைந்துநின் றுனரோ. (116)

1548. நீதி செய்து நெறிமுறை யாண்டருள்
ஆதி மன்னர் மரபில் அமர்ந்துமிக்
கோதி லேயிவன் கூடிநின் றுனெனின்
ஓதி என்பல ஊரவர் தம்மையே. (117)

1549. என்று சீறி எழுந்தனன் நேரிலே
சென்று தேர்வம் எனச் சிந்தை தேறினன்

வென்றி வெம்பரி யேறி விரைந்தனன்
கன்றி வந்து கடிநகர் சேர்ந்தனன். (118)

1550. பாஞ்சைக்கு வந்தது.

பிற்கட் டென்னுமப் பெரியவன் பெருநிலம் எங்கும்
சொற்கட் டாகவே சூழ்ந்திறை வாங்கிடுந் தொழிலான்:
நெற்கட் டோடுபொற் கட்டையும் நிறைத்தவன் நேரே
கற்கட் டோங்கிய பாஞ்சையம் பதிவந்து கண்டான்.

1551. அரசன் உபசரித்தது.

பதியமைந்துள்ள நிலைமையும் தலைமையும் பார்த்தான்
அதிச யம்மிக வெய்தினன் அற்புதம் என்று
மதிமறந்தயல் நின்றனன் வரவறிந் தரசன்
முதிய அன்புட னழைத்தரு கிருத்திமுன் மொழிந்தான்.

1552 இருவரும் உறவாடியது.

இந்த நாள்வரை இருவரும் எதிரெதிர் நேர்ந்து
சிந்தை யுள்ளுற மகிழ்ந்திலம்; செவியினில் கேட்டாம்:
முந்த நாமின்று கண்டனம் என அவன் மொழிந்தான்:
வந்த காகிதம் அறிந்தனன் என இவன் வகுத்தான்.

1553. துரை உரைத்தது.

நெல்லை வாரியே நெடுங்கொலை செய்துன தமைச்சன்
ஒல்லை வந்ததற் கொருபதி லிதுவரை யுரையா
தெல்லை மீறியே யிருந்தனை யி.: துனக் கழகோ?
நல்ல மன்னன்என் றுன்னைநான் நாடியே வந்தேன்.

1554.

நமக்குள் நேர்ந்துள உரிமையை நாளுமே யிந்த
அமைச்சன் உள்ளிருந் தகந்திரிந் தழிவுசெய் கின்றான்
இமைக்கு நேரமும் இவனையிவ் விடத்தினி லிருத்தின்
சுமைக்கு மீறிய பழிதுய ரிழிவுகள் தொடரும்.

1555.

உன்னை யுங்கெடுத் துலகையும் கெடுத்தய லிருந்த
என்னை யுங்கெடுத் திடர்பல சூழ்ந்துநின் றெண்ணி
முன்ன மும்கெடுத் தின்னமும் கெடுத்திட முனைந்து
தன்னை யும்கெடுத் தினியவன் போல்தழைத் துள்ளான்.

1556.

காட்டி லுள்ளநற் குடிகளுக் கிவன்செயுங் கொடுமை
கேட்ட றிந்தனன் உன்னையும் வஞ்சமாய்க் கேண்மை
காட்டி நின்றுளே கரவுடன் கெடுக்கின்றான் இவனை
கீட்டி வைப்பிலே நெடும்பழி கொடுந்துயர் என்றான்.

1557.

கொள்ளைசெய்தனன் கொலைபல விழுந்தனமேலே
யுள்ள பேர்எனை எள்ளலா யிகழுவர் உரைத்தென்?
உள்ள நெல்விலை யாவையும் ஒருங்குமுன் தந்திப்
பிள்ளை தன்னையும்பிடித்தென்கைகொடுத்திடும்என்றான்

1558.

என்ற வார்த்தையைக் கேட்டதும் அரசுளம் இரங்கி
நன்ற றிந்துயர் அரசியல் புரிந்திடு நல்லோய்!
நின்றன் நெல்லினுக் குரியநற் பொருளெலாம் நேரே
இன்று தந்திடு வேன்உரை எவ்வள வென்றான்.

1559.

ஏழு நூறுயர் கோட்டைநெல் லழிந்துள தேற்ற
தாழு றும்விலை மூவாயிரத் தொருமுந் நூறுகும்
ஊழு றத்தரு கென்றனன் என்றலும் உடனே
ஏழு நூறுடன் சேர்த்து நாலாயிரம் ஈந்தான்.

1560. வெள்ளைத்துரை பிள்ளையைக் கேட்டது.

கொள்ளை நெல்விலை வந்தது கொலையினுக் கந்தப்
பிள்ளை தன்தலை தந்தருள் என்றனன்; பெரிதும்
உள்ள நொந்தது பொறுத்தருள் அமரிடை யொழிந்த
எள்ள ருங்கிளைக் கியைந்ததை யீகுவன் என்றான்.

1561.

நன்று கூறினை நானிந்த விலைப்பொருள் வாங்க
இன்று வந்திலன் இவன்துயர் இந்நிலத் தினிமேல்
என்று மில்லெனச் செய்திட எண்ணியே வந்தேன்;
ஒன்றுஞ் சொல்லிடாதவனை முன்ஒப்பிஎன்றுரைத்தான்.

1562. மன்னன் பரிந்து வேண்டியது.

கறுத்து நின்றுநீ காய்ந்திடேல் கருத்தின்றிச் செய்தான்
மறுத்து மேலினி யாதொன்றும் செய்திடான்; மதிமான்
சிறுத்த மாக்களைச் சேர்ந்ததால் நேர்ந்தது மிகவும்
பொறுத்து நின்றருள் புரிஎனப்போற்றினன் மன்னன்.

1563. **மந்திரி சினந்து கூறியது**

அன்ன வன்கையை மன்னவன் பற்றிநின் றிங்ஙன்
பன்னி யேஉள்ம் பரிந்துமன் ருடுங்கால் பிள்ளை
சன்னை யாயய லொதுங்கியே தருக்குடன் நின்றிச்
சின்ன வன்னிடம் மன்னவா! என்னெனச் சினந்தான்.

1564.

தெலுங்கில் மெல்லவே திட்டினன் அச்செயல் நிலையை
இலங்க வேயவ னறிந்துளம் துடித்தனன்; ஏதோ
துலங்கி டாமலே வைகின்ருன் துணிந்தெனத் துணைந்து
புலிங்கம்என்னவேகொதித்தனன்புழுங்கினன்புகைந்தே

1565 **பிற்கட்டு சீறிப் போனது.**

அரசின் கைவிடுத் தவன்கையை யெடுத்திவ ளல்உன்
அரச ழிந்ததென் றெண்ணுக; அறிவிலா இவனைப்
பரசி நின்றனை படுதுயர் பழிவரு மென்றே
விரசி வெம்பரி மீதிவர்ந் தகன்றனன் விரைந்தே. (134)

1566 **அரசு மாறி வருந்தியது.**

அவன கன்றபின் அரசுநொந் தமைச்சனை நோக்கி
கவை புரிந்தனை நாநல மிழந்தனை வீணே
அவமி கும்படி செய்தனை அறநெறி பிறழ்ந்து
தவறு வந்தனை தாழ்வினை யடைந்தனை சரதம்.

1567.

நலமு ணர்ந்திதம் சொல்லவே நானுனை நயந்தேன்
நிலைதி ரிந்துநீ நின்றனை என்றுநெஞ் சுளைந்து
தலைவ னீங்கவும் சார்ந்தவன் போயினன்; அயலே
விலகி நின்றவர் யாவரும் பிள்ளையை வெறுத்தார்.

பொதுமக்கள் புகன்றது.

1568. வெய்யதுரி யோதனன்றன் குடிகெடுக்கச்
சகுனிமுனம் விஞ்சந்த தேதோபால்
ஐயஇவன் அமைந்து நின்ருன்; அரசிவனுல்
அவலமிக அடையு மந்தோ!
செய்யமதி மன்னவனும் தேர்ந்திவனை
நீக்காமல் சேர்ந்து நின்ருன்
வையமெலாம் தனதாகப் பிள்ளைமகன்
மனஞ்செருக்கி வளர்ந்தா னம்மா! (137)

1569. மதியுரைக்கும் மந்திரியே யிவ்வாறு
மதிகெட்டால் மண்ணுள் கின்ற
அதிபதிபின் என்செய்வான்? அரசனுக்குச்
செவிகண்ணும் என்ன முன்னோர்
முதுமொழியும் கேட்டுள்ளோம் இவன்மொழியால்
என்னவினை மூளு மோதான்
விதிவழியே ஒழுகிவந்த இப்பதிக்கோர்
வினையாக விளைந்துள் ளானே. (138)

1570. உள்ளுறையும் உறவினரை ஒட்டாமல்
கோட்சொல்லி யுலைத்து வைத்தான்;
மெள்ள அவன் சொற்கேளா விட்டவரை
வெட்டவெளி யாக்கி விட்டான்;
கொள்ளை செய்து கொண்டுவந்த நெல்எல்லாம்
தன்வீட்டில் கொட்டி வைத்து
வெள்ளையரை வெங்கோப மூட்டிநின்றான்
பிள்ளைசெய்யும் வேலை யென்னே! (139)

1571. என்ன இவன் சொன்னாலும் எச்செயலைச்
செய்தாலும் யாதும் தட்டி
மன்னவனும் கேளாமல் மனம்போன
போக்கெல்லாம் வளர விட்டான்;
இன்னலுள்ளே மிகப்புரிந்தும் இனியவன்போல்
வெளிவேடம் எளிது காட்டித்
தன்னரசா யாள்கின்றான் தனியரசுக்
கிதனையெவர் சாற்ற வல்லார்? (140)

1572. உற்றவுற வாகநம்பி யுள்ளவனே
உள்ளமெலாம் கரவு மண்டிக்
குற்றமிகச் செய்கின்றான்; குடிகேடு
புரிகின்றான்; கோள்கள் மூட்டிக்
கற்றவரைக் கலைக்கின்றான்; கயவர்களை
நயக்கின்றான்; காண வந்த
மற்றவரை மறைக்கின்றான்; மன்னவனைக்
கெடுக்கின்றான்; மதிகே டென்னே! (141)

1573. சேராதா ருடன்சேர்ந்தால் சிறுமைபல
விளையுமெனத் தேர்ந்து முன்னோர்
நேராகச் சொன்னமொழி யுண்மையென
எண்மையாய்ப் நேரே காட்டி
ஓராளும் தனக்குநிக ரில்லையெனத்
தீமைகளை உளுற்று கின்ருன்;
பாராளும் மன்னவனும் பாராமல்
இருக்கின்ருன் பாவம் அந்தோ! (142)

1574. கொடுங்கோலின் கீழிருந்து குடிவாழ்க்கை
புரிவதினும் குடிவாங் கிப்போய்க்
கடுங்காடு புகுந்துறைதல் கண்ணியமாம்
என்றெவரும் கலங்கி நொந்தார்;
நெடுங்காலம் இனியவன்போல் நேரிருந்தான்
இன்றுநிலை திரிந்து நின்ருன்
கெடுங்காலம் வருமுன்னே கெடுகுறியாய்
இவன்நெடிது கிளர்ந்தான் அம்மா! (143)

1575. வாய்த்துடுக்காய் எவரோடும் வாதாட
நேர்கின்ருன்; வஞ்சம் கொண்டு
பேய்த்துடுக்காய் எங்கணுமே பிழைகள்மிகச்
செய்கின்ருன்; பீடை காட்டித்
தீய்த்துடுக்காய் யாண்டுமே தீங்கூக்கி
வருகின்ருன்; தீமை யான
நோய்த்துடுக்காய் நாடஞ்சி நிலைகுலைய
நுவல்கின்ருன்: நுவல்வ தென்னே? (144)

1576. நீதிமுறை தெரியாமல் நிலைமைகளை
உணராமல் நெடுஞ் செருக்காய்க்
கோதுகளே புரிகின்ருன் கொடுமைகளே
செய்கின்ருன் குடிகள் அஞ்ச
வாதுகளே எவ்வழியும் வளமாக
வளர்க்கின்ருன் வழக்கம் எல்லாம்
தீதுகளே எனின்இனிமேல் தீமையன்றி
நன்மையுண்டோ தெளியின் அம்மா! (145)

1577. சிவலிங்கம் தனைவைத்துச் சிவபூசை
செய்கின்றன் திருநீ றேடு
நவகண்டி புனைகின்றன் நல்லபல
புராணங்கள் நாளும் பாடிச்
சுவையாகச் சொல்லுகின்றன் தூயவன்போல்
நடிக்கின்றன் தோற்ற மெல்லாம்
சிவவேடம் ஆனலும் அவகேடே
பெருகியுளான் செயலீ தென்னே! (146)

1578. கொள்ளைகொடுத் துள்ளமெலாம் கொதித்துவந்த
பிற்கட்டின் கோபம் நோக்கித்
தள்ளரிய பேரன்போ டுறவாடி
யுபசரித்துத் தகுதி சொல்லி
உள்ளமுவந் தருளும்வகை அரசனயந்
துறுதிசெய்ய இடையே நின்று
வெள்ளைமூஞ் சிக்குரங்கென் றிகழ்ந்திந்தப்
பிள்ளைவினை விளைத்திட் டானே! (147)

1579. என்னவினை விளையுமோ இங்கிருந்து
சென்றஅவன் அங்கே யுள்ள
மன்னவர்முன் நெல்லெல்லாம் கொள்ளையிட்டு
வைதிகழ்ந்த வகையும் கூட்டிச்
சொன்னபொழு தவர்சும்மா இருப்பாரோ?
தொல்லையே தொடரு மென்றே
இன்னவகை பேசியவ ரிருந்தனர்முன்
போனவனை யினிமேற் காண்பாம். (148)

கள-வது நெல்லைக் கொள்ளையிட்ட படலம் முற்றிற்று.

ஆகக் கவி கருஎகூ.

---

147. வெள்ளைத் துரையைப் பிள்ளை இப்படி எள்ளி இகழ்ந்திருக்கிறார். வெள்ளை மூஞ்சிக் குரங்கு என்று தெலுங்கில் இங்ஙனம் இவர் சொல்லவே அவன் உள்ளம் கொதித்து உருத்துப் போனன். மன்னவனும் மறுகி நின்றனன். இன்னல் விளைவை எண்ணி யாவரும் வருந்தினர். வினை விளைந்திருக்கும் விளைவுகளை நுணுகி யுணர்பவர் எவரும் பாஞ்சை அரசுக்கு நேர்ந்துள்ள பரிதாப நிலைகளைத் தெளிந்து வருந்திப் பரிந்து மறுகுவர்.

பதினெட்டாவது

படை எழுச்சிப் படலம்.

பாஞ்சாலங்குறிச்சியாரோடு போர் புரிய மூண்டு கும்பினியார் படைஎடுத்து நீண்டு வந்துள்ளதைஇதுகூறுகின்றது.

1580.

போன பிற்கட்டு நெல்லையுட் புகுந்ததும் பொங்கி
மான மீதுற மந்திர நகர்வந்து மறுநாள்
ஆன தோணிமேல் ஏறியே சென்னையை யடைந்தான்
தான மன்னவர் சபையினைத் தகவுறச் சார்ந்தான். (1)

1581.

வந்த தென்னென முன்னவர் வரன்முறை வினவ
முந்து நின்றுதன் கண்கள்நீர் சிந்தினன் மொழியான்
நைந்து விம்மினன் நயந்தவர் கண்டுள மிரங்கி
நொந்த தென்உனை நோவுறச் செய்ததார்? நுவல்க. (2)

1582. பிற்கட்டு பேசியது.

ஒன்றும் அஞ்சல்நீ உரையென அவர்ஒருங் குரைத்தார்:
நின்று யர்ந்ததென் பாஞ்சைமன் நிலைதிரிந் தெவர்க்கும்
பொன்று துன்பங்கள் புரிகின்றுன் புகலரி தந்தோ!
என்றும் தன்னர சாகவே எண்ணிமீ தெழுந்தான். (3)

1583.

வலிந்த ழைத்துநாம் வரிசைகள் செய்ததால் நம்மை
மெலிந்த தன்மையர் எனமிக இகழ்ந்தனன் மேலாய்
நலிந்து நாட்டிடை நவைபல புரிகின்றுன் நாளும்
மலிந்து நின்றுமே மாறுகள் செய்கின்றுன் மதத்தே.

1584.

வரியை மன்னித்து மாண்பவற் செய்ததே நமக்குப்
பெரிய துன்பமாய் முடிந்தது; பிறரையும் அந்த
உரிமை யின்படி நின்றெுன்றும் உதவலீர் என்று
விரகு சொல்லியே கலகங்கள் பலவினைத் துள்ளான்.

1585.

அல்ல லிவ்வள வாகுமோ ஐயகோ நமது
நெல்லை யும்அவன் மந்திரி நேர்வந்து கொள்ளை
ஒல்லை யாடியே யுற்றகா வலரையும் கொன்று
வல்லை ஏகினன் வந்தவெம் படையுடன் மறைந்தே. (6)

---

1. மந்திர நகர்=தூத்துக்குடி. தான மன்னவர்=கும்பினித் தலைவர்கள். வெள்ளையர் உள்ளம் உவைய உரைத்துள்ளான்.

பிள்ளை என்னுமப் பெரியதோர் வஞ்சகன் நம்மை
வெள்ளை மூஞ்சியர் எனமிக இகழ்ந்துளான்; வீணே
கொள்ளை செய்யவே வந்துள கூட்டமென் றெங்கும்
எள்ள லாகவே யிழிபழி யேற்றுகின் றனே! (7)

மறுபு லத்தினர் மறுகியிங் நாட்டிடை யடைந்தார்;
வறுபு லத்திலும் வரவையே பார்க்கின்றார் பொருள்கை
உறுபு லத்தையே உள்ளுற நோக்கியிங் குள்ளார்
பெறுவ லத்தினர் எனமிகப் பிழைபுகல் கின்றனன். (8)

அந்த வேந்தனைத் தன்வச மாக்கியே என்றும்
சொந்த நன்மையே சூழ்ந்துட னிருந்தனன் நம்மை
எந்த வேளையும் இகழ்ந்தவன் வருதலால் அரசும்
சிந்தை கன்றியே முந்தைய நண்பினைத் தீர்ந்தான். (9)

என்ன செய்யினும் யாதவன் சொல்லினும் அந்த
மன்ன னும்தடை கூறிடா தவன்மனம் போல
இன்ன லானவெவ் வழியினி லிழிந்துளான்; எங்கும்
அன்ன வன்புரி அவங்களை யளவிட லரிதே. (10)

நாட்டி லேபல கலகங்கள் விளைத்துநம் மீது
கோட்ட மீறவே குடிகளைக் குலைத்துளான் தன்னைக்
காட்டி நின்றிடான் கள்ளநெஞ் சுடையன்உள் ளிருந்தே
மூட்டி விட்டதன் முடிவினைக் கண்டுளங் களிப்பான்.

பாழ்மகன் அவனுள்ள வரையும் பாஞ்சைமன்
வாழ்மதி யாளனுய் மருவி நின்றிடான்:
வீழ்மதி யுடையனுய் வெகுண்டு நம்மையும்
தாழ்வுறச் செய்யவே தருக்கி நிற்பனுல். (12)

தென்திசை யிருந்துநம் சீமைக் காரியம்
ஒன்றுமே யினியவன் உளுற்ற ஒட்டிடான்;
என்றுமே யரசைநாம் இழந்து போகவே
கன்றிமுன் சூழ்ந்துமே கடுத்து நின்றுளான். (13)

---

8. வறுபுலம்=வறண்ட நிலம். விளையாத பொட்டல் நிலங்களுக்கும் வரிகளை விதித்து வாவுகளைத் தொகுக்கின்றார் என வசைகள் கூறுகிறன் என்று தம்முடைய பிழைகளைப் பிள்ளை சொல்லியபடி வெள்ளையர் உள்ளம் கொதிக்கச் சொல்லினன்.

வெள்ளை யர் தங்களை வேரறுப்பனென்
றுள்ளமூ டவன்மிக வுறுதி கொண்டுளான்;
பிள்ளையும் சேர்ந்தனன் பெரிய தீங்கையே
கொள்ளையிற் புரிந்தவன் கொதித்து நிற்கின்றான். (14)

மற்றினி யுரைப்பதென் பாஞ்சை மன்னவன்
உற்றவண் இருந்திடில் உரிமை யாகநாம்
பெற்றுள அரசையும் பெருமை யாவையும்
பற்றற இழந்துநாம் பறிய வேண்டுமால். (15)

தலைவர்கள் துணிந்தது.

எனை அவன் இசைத்ததும் இருந்த யாவரும்
மனமிகத் திகைத்தனர் மறுகி நின்றனர்
முனைமவன் வந்ததும் மொழிந்து போனதும்
இனைவகை யானதும் எண்ணி ஏங்கினர். (16)

அழுங்கினன் வீரவான் ஆதிநாள் முதல்
விழுமிய மரபிடை வந்த வேந்தெனப்
பழுங்கினம் நண்புடன் பண்பு செய்தனம்
விழைவொடு பரிசுகள் வியந்து தந்தனம். (17)

அன்றுநாம் செய்துள அருமை யாவையும்
ஒன்றுமே நினைந்திலன் உருத்து நின்றனன்
என்றபோ தினியிவன் றன்னை எப்படி
நன்றுசெய் வானென நம்பி நிற்பதே. (18)

தள்ளிய வரியையும் செலுத்திச் சார்ந்தவக்
கொள்ளையின் தண்டமும் கொடுத்துச் செய்தவும்
பிள்ளையும் கையுடன் பிடித்துத் தந்திடில்
எள்ளலொன் றின்றியே யிருக்கலா மன்றேல். (19)

படைகொடு பாஞ்சையம் பதியைப் பற்றியே
அடைவுடன் ஆள்வமென் றறுதி யிட்டுமே
உடனெரு நிருபத்தை யுதவிப் பிற்கட்டைத்
திடமிகு சேனையைக் கொண்டு செல்கென்றார். (20)

பெருமகிழ் வுடன்விடை பெற்றுப் பேணிய
திருசிர புரம்வந்து சேர்ந்து சேனையை

---

15. பறிதல்=பதறி ஓடிப்போதல்.

விரைவுடன் திரட்டினன் வெய்ய சேனையின்
வருபெருந் தலைவர்கள் வந்து கூடினர். (21)

கூடிய தலைவருள் கொற்ற மிக்கவன்
பீடுயர் காலனென் றுரைக்கும் பேரினன்
நீடுபல் போரினில் நேர்ந்து வென்றவன்
தேடிய புகழினன் சிறந்து நின்றனன். (22)

அப்பெருஞ் சேனகட் கதிப னாகவே
எப்பெரும் போரிலும் எதிர்ந்து சென்றவன்
ஒப்பரும் பானர்மேன் என்று ரைத்திடும்
வெப்புடை நெஞ்சின்ன் விரைந்தெ ழுந்தனன். (23)

ஆறுறும் ஆயிரம் அமைந்த வீரர்கள்
ஏறிய வலியினர் எதிர்ந்த தெவ்வரைச்
சீறிய செயலினர் செறிந்த அப்படை
தேறிநின் றெழுந்துதென் திசையை நோக்கிற்றே. (24)

மதுரையை யடைந்தது மருவி மூன்றுநாள்
சதுருடன் வைகையைச் சார்ந் திருந்தது
கதுமென எழுந்துபின் கடுகி யேநடந்
ததிர்வுடன் சாலைவா யடைந்து வந்ததே. (25)

தென்திசை வழித்திரு மங்கலஞ் செறிந்
தொன்றிய விருதையூர் கடந்துள் ளூக்கமாய்ச்
சென்று சாத்தூரினைத் தீர்ந்து கோவில்வாய்
நின்றுதென் விரைந்துபின் நிமிர்ந் தெழுந்ததே. (26)

சார்கயத் தாற்றினில் தங்கிப் பற்பல
ஊர்கடந் தருநெறி யொருங்கு நீங்கிநற்
சீருறு நெல்லையைச் சேர்ந்து றைந்தது
போருறு நிலையினைப் பொருந்தி ஆய்ந்ததே. (27)

---

22. காலன் என்றது காலினஸ (Collins)என்னும் தளபதியை.

23 Major Bannerman மேஜர் பானர்மேன் என்பவர் எல்லாச் சேனகளுக்கும் தலைமை அதிபதியாய் நிலவி நின்றுன்.

27. திரிசிரபுரத்திலிருந்து புறப்பட்ட படை மங்கம்மா சாலை வழியே நடந்து பல இடங்களிலும் தங்கி முடிவில் கயத்தாறு என்னும் ஊரை அடைந்தது. அதன்பின் பாளையங் கோட்டை போய்ச் சேர்ந்தது. செறிந்து ஆய்ந்தது.

சேனைகள் சேர்ந்தன

1607 பாஞ்சையங் கோட்டையை அடைந்த வெள்ளையர்
பாஞ்சையங் கோட்டிகொள் பாஞ்சைக் கோட்டைமேல்
பாஞ்சையங் கோட்டியே படுபோர் ஆற்றிடப்
பாஞ்சையங் கோட்டமுன் பரிந்து சூழ்ந்தனர். (28)

சேனைத் தலைவர் சூழ்ந்தது.

1608 ஒன்னலர் திறலையும் ஊரின் போரையும்
மன்னவன் விறலையும் மாறி மாறியே
உன்னினர் உளைந்தனர் உறுதி ஓர்ந்தனர்
என்னவா றெழுவதென்று எண்ணி ஆய்ந்தனர்.

1609 வேட்டைமேல் விரிகிற வேடர் போலவன்
காட்டைநேர் வளைகிற காடர் என்னநம்
நாட்டையே வளைந்துள நாடர் பாஞ்சைமன்
கோட்டைமேல் கொடுஞ்சமர் கொள்ள மூண்டனர்.

1610 சூழ்ச்சிகள் பலபல துன்னினர்; படை
வீழ்ச்சிகள் வருமென வெருவினர்;இடை
தாழ்ச்சிகள் உறுமெனத் தயங்கினர்;மயல்
ஆழ்ச்சிகள் உறஅவர் அலமந் தஞ்சினர். (31)

1611 உள்ளத்தில் அச்சங்கள் உருத்து நிற்பினும்
மெள்ளத்தம் வலிகளை விளக்கிப் பாஞ்சைமன்
உள்ளத்தைக் கலைத்தவன் உறவைக் கைக்கொளின்
எள்ளத்த எதிரியும் இலையிந் நாட்டிலே. (32)

---

28. பாஞ்சையம்=பாஞ்சையகாரரான குறுநில மன்னர். படை; பாசறை. 2-வது அடிமுதல் மூன்றும் முறையே தோன்றக் குறித்துள்ளன.

29. ஒன்னலர்=பகைவர். உறவாய் ஒன்றுதவர். உன்னினர் உளைந்தனர் என்றது பாஞ்சை மேல் படை எடுப்பதில் அவர் கொண்டுள்ள பெருஞ்சந் திகில்களை நேரே தெளிவா விளக்கி நின்றது.

30. பொருள் வரவையே நாடி இந்நட்டை ஆங்கிலேயர் வேட்டை யாட நேர்ந்தனர். வேடர், காடர், நாடர் என்னும் குறிப்புகள் நாடி அறிய வுரியன.

31. மறுகி வெருவியுள்ள மருமங்கள் மருமமாய்த் தெரிய வந்தன.

32. பாஞ்சை மன்னன் ஒருவனே இந்நாட்டில் திரமாய் எதிர்க்கின் றனன். அவனை வசப்படுத்திக் கொண்டால் அல்லல் இன்றி வாழலாம்.

1612 மூண்டஇவ் வீரனை முன்இ ணக்கிலை
ஈண்டினி யாருமே எதிர்வ தில்லையால்
ஆண்டவ ராகவே யாண்டும் ஆளலாம்;
நீண்டநாள் வாழலாம்; நெடிது காலமே. (33)

1613 தென்திசைக் கதிபதி என்னும் சீர்த்தியை
நின்றிசைத் தெவருமே நெடிது போற்றிட
நன்றிசைக் களிப்புடன் நாளும் வாழ்ந்தெங்கும்
வென்றிசைத் திறலுடன் விளங்கி யுள்ளவன்.

ஓர்ந்தது.

1614 அன்னதோர் மன்னனை அடக்கி ஆளவே
இன்னதோர் படையுடன் ஈண்டு வந்துளோம்;
முன்னதோர் வனவெலாம் முறையின் ஓர்ந்துநாம்
பின்னதோர் உறுதியைப் பெறுதல் வேண்டுமால்.

தோராமல் சேரலாகாது.

1615 எதிருறு நிலைமைகள் எவையும் முன்னுறச்
சதுருடன் தேர்ந்தபின் சார்வ தேநலம்;
அதிசய வலியினர் ஏனும் ஆய்ந்துணர்
மதிநலம் இலைஎனின் மாயும் யாவுமே. (36)

காலம் கருதிக் கருமம் புரிக.

1616 காரியம் கருதியும் காலம் ஓர்ந்துமுன்
நேரிய வலியிடம் நிலைமை யாவையும்
கூரிய நோக்குடன் கூர்ந்து உணர்ந்தபின்
சீரிய பணியினைச் செய்ய வேண்டுமால். (37)

---

33. ஆங்கிலேயர் ஈண்டு நெடிதுவாழக் கடிது சூழ்ந்துள்ளனர். அவ் வுண்மை இதில் நுண்மையாய் உணர வந்துளது.

34. பாஞ்சை அதிபதியினுடைய நிலைமை தலைமை வலிமைகளை நினைந்து தெளிந்துள்ளமை இதில் வனைந்து காண வந்தது.

36. ஆற்றல் இருந்தாலும் அறிவின் துணை ஏற்றமாய் வேண்டும் என எண்ணியுள்ளனர். சதுர் = சாதுரியம்: புத்தி.

37. இடம் காலம் வலி முதலிய நிலைமைகளை நன்கு தெரிந்தே காரியம் புரிய வேண்டும் என்று கருதியுள்ளனர். வினையாண்மை விநயமாய் விளங்கி அவர் தம் கருமத்திறல்களை விளக்கி நின்றன.

ஒற்றி அறிய ஓர்ந்தது

1617 உற்றுள திறங்களை ஓர்ந்து நன்குணர்
ஒற்றனை முன்னுற உய்த்து மற்றவன்
சொற்றமெய்த் துணிவுகள் தொடர்ந்துணர்ந்தபின்
மற்றநம் படைகளை நடத்தல் மாட்சியாம். (38)

ஒற்றனைத் தேர்ந்தது

1618 அன்னவர் அத்திறம் துணிய அங்கவர்க்கு
என்னதோர் வகையிலும் இதம்செய் எட்டப்பன்
கன்னையன் எனும்பெயர்க் கரவு ளான்தனை
இன்னவன் இனியன்என் றுஇனி துநல்கினன்.

எட்டப்பன் இணைந்தது.

1619 அன்னிய வெள்ளையர்க்கு அடிமை யாய்நின்று
பன்னிய பணியெலாம் பணிந்து செய்தனன்;
உன்னிய பொருள்வளம் உறுமென் றெண்ணினன்;
மன்னிய இழிபழி வருவ தோர்ந்திலன். (40)

ஒற்றனை உய்த்தது.

1620 நேர்ந்த அவ்ஒற்றனை நெஞ்சம் தேற்றியே
பேர்ந்துநீ பகைவனூர் புகுந்து பின்பங்கே
சார்ந்துள சார்புகள் யாவும் சாரமாய்
ஓர்ந்துடன் வருகென உணர்த்தி விட்டனர். (41)

ஒற்று உற்றது.

1621 விடுத்தஅவ் ஒற்றனும் விரகுள் ஓங்கியே
மடுத்தஓர் உருவினை மருவிச் சென்றனன்;
கடுத்தகந் துணிந்துமே கரந்து போயினும்
அடுத்துளந் திகிலுடன் அயர்ந்தடைந்தனன்.

உள்ளே புகுந்தது.

1622 வீரமா நகரென விளங்கி யுள்ளஅத்
தீரமா புரியிடைச் சேறல் மேயினன்;
பாரவேல் வல்லயம் பறித்த காவலர்
யாரையும் கடந்துபோய் அகம் புகுந்தனன். (43)

---

41 எதிரியினுடைய இயல் செயல் நிலைகளை எல்லாம் கூர்ந்து ஓர்ந்து வரும்படி ஒற்றனிடம் உளவுகள் கூறி விடுத்துள்ளனர்.

ஓர்ந்து ஆய்ந்தது.

1623 பகையிடம் ஆகிய பாஞ்சை யம்பதி
தகையுடன் நின்றுள தன்மை யாவையும்
தொகைவகை யாகவே அறியச் சூதுடன்
மிகைதெரி யாவகை விரைந்து நாடினன். (44)

ஒற்றன் மீண்டது.

1624 ஒற்றிநின் றுளவுகள் ஓர்ந்து நோக்கினன்:
வெற்றிவெம் படையின்றி வேந்தன் மட்டுமே
உற்றவர் சிலருடன் உறைந்தி ருப்பதை
முற்றவும் அறிந்தனன் முடுகி மீண்டனன். (45)

உரைத்து நின்றது

1625 புதியுறு நிலைமையும் படையி லாமையும்
எதிர்வரு திறல்களை எண்ணி டாமலே
அதிபதி அமர்ந்துள அமைதி யாவுமே
மதியுடன் உரைத்தனன்: மகிழ்ந்து கொண்டனர்.

உவந்து கொண்டது.

1626 வாய்த்துள வாய்ப்புகள் வளமை யாகவே
காய்த்துள என்றவர் களித்து நின்றனர்;
போய்த்துணி வுடன்வந்த பொருநற்கு ஒண்பொருள்
சாய்த்துடன் தந்தனர் சமரில் முந்தினர். (47)

மந்திரியைப் பற்ற முந்தியது.

1627 மந்திரிப் பிள்ளை ஆத் தூரில் வாசமாய்த்
தந்திர மாகவே சார்ந்தி ருந்ததை
முந்துற அறிந்தொரு படையை முன்னதா
வெந்திற லுடனங்கு விரைந்து அனுப்பினர்.(48)

நாடிச் செய்தது.

1628 கும்பினித் தளபதி குறித்த யாவையும்
நம்பிமெய்த் துணிவுடன் நாடிச் செய்தனர்;

---

48 மந்திரி சிவசுப்பிரமணிய பிள்ளை ஆத்தூர் என்னும் ஊரில் தந்திர மாய் ஒதுங்கியிருந்தார். அவரைப் பிடிக்க ஒரு படையை அங்கே முந்துற அனுப்பினர்.

பம்பிய பகையினைப் பாடு கண்டிடத்
தும்பியின் குழாமெனச் சூழ்ந்து நோக்கினர்.

பகையைக் கருதிய வகை.

1629 அருந்திற லாளன்என் றறு அகிலம் யாவுமே
பெருந்திகி லுடன்எங்கும் பேச நேர்ந்தவன்
திருந்திய பகைவனைத் தேர்ந்து நின்றுளான்;
வருந்தியும் அவனைநாம் வருத்த வேண்டுமால்.

வழி தெளிந்தது.

1630 எவ்வழி எவ்வகை எனைய சூழ்ச்சிகள்
அவ்வழி யாவுமே அவன் அறிந்திடாது
இவ்வழி யூகமாய் இணைத்து நின்றுளேம்;
தெவ்வழி வழியையே தெளிதல் நன்றரோ. (51)

நிலைமையை நினைந்தது

1631 என்றவர் விரகுடன் எண்ணி ஆய்ந்தனர்;
ஒன்றிய வலிகளை உணர்ந்து வந்தனர்;
வென்றிகை வருமென வியந்து நிற்பினும்
பொன்றிட வருவதும் புகல நேர்ந்தனர். (52)

பிற்கட்டு பேசியது.

1632 மன்னவன் தன்மையும் மான வன்மையும்
முன்னமே உணர்ந்தபிற் கட்டு மூண்டுள
அன்னவெஞ் சேனையின் அதிபர் தேர்ந்திட
நன்னய மாகவே நவில்வ தாயினன். (53)

ஆங்கிலேயர் அரச அடைந்த விதம்.

1633 கருங்கடல் பலபல கடந்திந் நாட்டிடை
மருங்குடன் வாணிபம் செய்ய வந்தனம்;
பெருங்கடன் தந்ததால் அரசு பெற்றனம்;
பொருங்கடல் கடக்கவும் புகுந்து நின்றுளோம்.

நெடிய சோதனை.

1634 மூண்டபோர் இதனைநாம் முடிவு கண்டிடின்
ஈண்டுநாம் வளமுடன் இனிது வாழலாம்;

---

54 போர் ஆகிய பெரிய கடலைக் கடக்க வேண்டுமே என்று கருதி மறுகியுள்ளனர். வெள்ளையர் கவலைகள் வெளியாகி யுள்ளன.

யாண்டும்நம் ஆணைகள் செலுத்தி ஆளலாம்;
நீண்டுள பகையிது நெடிய சோதனை. (55)

சாதனை புரிய வேண்டும்.

1635 வேதனை விளையினும் விளைவல் லாண்மையால்
சாதனை புரிந்துநாம் சமரில் வென்றமேல்
வாதனை யின்றிநம் வழிவழிக்கெலாம்
போதனை செய்ததாம் பூண்ட வாழ்வையே. (56)

இவனை வென்றுல் எவரையும் வெல்லலாம்.

1636 சிற்றரசு என்றுநாம் சிறுமை யாகவே
உற்றுள பகைவனை உணர்தல் ஊனமாம்;
பெற்றபே ரரசெலாம் பேர வெல்லலாம்
மற்றிவன் தனைவெல்லல் அரிது மாண்பினீர்!

பாஞ்சை வீரன் பான்மை

1637 போரையே கருதிஎப் போதும் உள்ளவன்;
சீரையே கருதிமெய்ச் சிறப்பில் வாழ்பவன்;
பாரையே ஆளஇப் படியில் வந்தநம்
வேரையே அகழ்ந்திட வெகுண்டு மூண்டுளான்.

அடல்கொள் வீரன்.

1638 ஆண்டகை ஆளனைய் அடல்கொள் வீரனைய்
நீண்டநாள் ஆட்சியை நேர்ந்து கொண்டவன்;
பூண்டநம் மாட்சியைப் புன்மை யாகவே
ஈண்டவன் எண்ணியே இகழ்ந்து நின்றுளான்.

நீதி நெறியினன்.

1639 நின்றுள இவனுயர் நிலையை நெல்லையில்
ஒன்றிநான் இருந்துநன் குணர்ந்து வந்துளேன்;
நன்றியும் நீதியும் உடையன் ஆயினும்
கன்றிய பகைமையால் கருத்து மாறினன். (60)

---

55. ஆற்காடு நபாவு பெரிய கடன்பட்டிருந்தமையால் நாட்டைக் கும்பினியாருக்கு ஈடு வைக்க நேர்ந்தான். அது பின்பு இவர்க்கு முழுதும் உரிமை யாயது. ஆட்சி புரிய நேர்ந்தனர்.

பிள்ளை பேச்சால் பித்தன் ஆயினன்.

1640 பிள்ளைசொற் கேட்டவன் பித்தன் ஆயினன்;
உள்ளமும் திரிந்தனன்; உறுவ தோர்ந்திலன்;
வெள்ளையர் எவரையும் வெறுத்து நிற்கின்றான்;
கொள்ளையர் எனநமைக் குறித்தி ருக்கின்றான்.

வகை அறிந்தே செய்ய வேண்டும்.

1641 ஆனதால் பகைவகை அறிந்து முன்புறப்
போனதும் புகுந்ததும் உணர்ந்து போரிடை
ஏனைய துணைகளை ஏய்ந்து கொண்டுநாம்
ஊனம்நே ராவகை உளுற்றல் யூகமாம். (62)

வீரம் முதலியன விளக்கினன்.

1642 வெம்பகை வலிமையும் வீர மேன்மையும்
தம்பியர் நிலைமையும் சார்ந்து நின்றுள
கம்புவேல் வீரரின் கைவல் லாண்மையும்
கும்பலின் திறலையும் குறித்துணர்த்தினன். (63)

யாவும் உணர்ந்து கூறினன்.

1643 அருந்திறல் உடையவன் அரிய இப்படை
வருந்திறன் அறிந்திடில் வனமம் மீறியே
திருந்திய படைகளைச் சேர்ப்பன்; சேர்த்திடில்.
பொருந்திறல் அழிந்துநாம் பொன்ற நேருமால்.

யாவரும் துணிந்து தேறினர்.

1644 ஆதலால் அவன்அறி யாமல் அல்லிடைப்
போதலே நலமெனப் பொருந்தச் சொல்லினன்;
சாதனை யோடுயர் சமரில் வல்லவர்
சோதனை செய்துடன் துணிந்து தேறினர். (65)

கரவு புரியவே கருதி நின்றனர்.

1645 கரவுடன் சென்றுதம் கருமம் கைக்கொள
இரவிடை எழுவதே இனிதென் றெண்ணினர்;
பரவிய விரகுகள் யாவும் பாஞ்சையுள்
விரவிய விறல்களை விளக்கி நின்றன. (66)

உள்ளங்களும் திகில்கள் உற்றன.

1646 வெள்ளையர் படைகளை வெள்ள மாக்கொண்டு
கள்ளவெம் போரினைக் கருதி நிற்பினும்,
உள்ளமும் செயல்களும் உரைக ளும்பெரும்
பள்ளவெந் திகில்களே படிந்தி ருந்தன. (67)

பாஞ்சை மன்னனை நினைந்து நீண்டது.

1647 இந்திய நாட்டினை இங்கி லாந்தினர்
உந்திய வலியினுல் ஆள வுக்கினர்;
சிந்திய நிலையராய்ச் சிதையப் பாஞ்சைமன்
முந்தியுள் ளானென முனைந்து மூண்டனர். (68)

அரவமின்றி இரவில் எழுந்தது.

1648 தம்முடை ஆட்சியைத் தகர்த்துத் தம்மினம்
வெம்முடை வீழ்ச்சியில் வீழ வீறுகொள்
பொம்மனென் றுருமியே பொங்கி வந்தவர்
இம்மெனும் அரவமும் இலாது எழுந்தனர். (69)

நிசியில் நேர்ந்தனர்.

1649 வாரமொன்று அவணமர்ந் திருந்து வன்சமர்ப்
பாரமொன் றியவகை பலவும் பார்த்துமேல்
வீரமொன் றியபடை வீரர் வீறுடன்
நேரமொன் றியதென நிசியில் நேர்ந்தனர். (70)

தளபதிகள் பரிகளில் ஏறினர்.

1650 அடுந்திறற் சேனையை அணி வகுத்தனர்;
கொடுந்திறற் படைக்கலம் குறித்தமைத்தனர்;
கடுந்திறற் பரிகளில் காலன் பிற்கட்டு
நெடும்படைத் தலைவர்கள் நிறைந்த மர்ந்தனர்.

---

69 பொம்மன் என்றது தெலுங்கு மொழியில் அரசன் என்பதாம். இந்தியாவில் தம்முடைய ஆட்சியை நிலைநிறுத்துதற்கு நேரே தடையா யுள்ளவன் வீரபாண்டியனே; இவனை வென்றுல் நாடு நம்மதே! என்று கருதி வெள்ளையர் வீறு கொண்டு எழுந்தனர்.

படை வந்த வழி.

1651 நெல்லூநன் னகரய லிருந்து நேர்வடக்கு
எல்லையின் கீழ்த்திசை இருபத் தைந்தெனச்
சொல்லிய வழியினைத் துணிந்து நோக்கியே
நல்லதோர் பொழுதென நடத்தல் மேயினர்.(72)

தருக்கி நடந்தது.

1652 செல்லுக என்றலும் சேனை சீருடன்
ஒல்லையில் நடந்தது்ள் ஊக்கம் மிஞ்சியே
வல்லவர் முன்பினும் வரிசை யாகவே
எல்லையில் செருக்குடன் எழுந்து வந்தனர். (73)

கொடிய கொலைக் கருவிகள்.

1653 குண்டுகள் பீரங்கி கொடிய வெம்புகை
கண்டிடு கருமருந் தாதி கட்டிய
பண்டிகள் உடன்வரப் படைகள் மூண்டுமே
மண்டிமுன் வந்தன மாண்டு போகவே. (74)

நபாவு ஒற்றி உணர்ந்தது.

1654 இப்படி இப்படை வருதல் பிற்பகல்
எப்படி யோதெரிந்து எனது பாட்டனும்
ஒப்பருந் திறலினன் உறுதி யாகவே
தப்பற இடைவழி சார்ந்து நின்றனன். (75)

ஊக்கி நின்றது.

1655 அரசனுக் குறவினன் ஆற்றல் மிக்கவன்
பரசிடு பண்பினன் பகைவர் செய்கையை
விரசிமுன் உணர்ந்தனன் விநய வீறுடன்
வரவெதிர் நோக்கியே வழியில் ஊக்கினன். (76)

76 ஆங்கிலப் படை யாரும் அறியாவகை இரவிடை மருமமாய் வரு வதை நவாபு துரை அறிந்து வழியிடையே உடைவாளோடு ஒளி வைத்து நின்றார். அரசுக்கு நெருங்கிய உறவினரான இவர் அதிசய ஆற்றலும் மதியூகமும் உடையவர்.

படை வருகிற நிலை.

1656 கும்பினிப் படைகள்வெங் கொடுமை யாகவே
வம்புகள் விளைத்திட வருவது ஓர்ந்திந்த
நம்பிநேர் நடுவழி நாடி நிற்குங்கால்
தும்பிநேர் படைகளும் தொடர்ந்து வந்தன. (77)

இடைவழியில் தெரிந்தது.

1657 சீவலப் பேரியூர் மார்க்கம் சீருடன்
ஏவரும் தெரிகிலா வகையில் ஏறியே
யாவரும் வருவதை ஆய்ந்து ணர்ந்துமுன்
ஆவதைச் செய்திட அடல்கொண் டேகினன்.

நபாவு வந்தது

1658 ஒட்ட நத்தம் நபாவெனும் உயர்குல வீரன்
கட்டி யேஎதிர் காத்துநின் ருன்படை வரவும்
ஒட்டி முன்னறிந்து ஓடிவந்து இரவொருமணிக்குத்
தட்டி னன்அர சரண்மனைத் தனிப்பெருங்கதவை.

இடித்து எழுப்பியது

1659 கழுதும் கண்அயர்ந் துறங்குமிக் காரிருளிடையே
பழுது வந்ததே பாண்டியா! தூக்கமா? உடனே
எழுதல் நன்றென இடித்தனன் அடுத்தடுத் தெவரும்
தொழுதுநிற்குமத் தொன்முறைவாயிலைத்தொடர்ந்தே.

அரசன் எழுந்தது.

1660 என்றும் யாருமே இப்படி எழுப்பலர் ஏன்?என்று
அன்று வேந்தனே அடர்ந்துடன்வந்துமுன் திறந்தான்;
நின்ற வன்புகுந்து அருகடைந் துறுபடை நெடிதா
ஒன்றி வந்திடுஞ் செயலினை உரிமையோ டுரைத்தான்.

பகைப் படை வருதலை உரைத்தது.

1661 படைதிரண் டெழுந்து இரவிடைப் படுவஞ்ச மாக
அடைய வேவரு செயலினை அறிந்துடன் வந்தேன்
இடைஎதிர்ந்துகொம் பாடியின் சாலைநேர் கண்டேன்;
விடையில்ஓடிநான்முந்தினேன்விரைந்ததும் வருமே.

---

80 கழுது=பேய். பேயும் உறங்குகிற இந்த நள்ளிருளிலே வெள்ளைப் பேய்கள் துள்ளி வருகின்றன என்று எழுப்பியுள்ளார்.

82 கொம்பாடி என்னும் ஊர் பாஞ்சாலங்குறிச்சிக்குத் தென்மேற்கே ஆறு மைல் தூரத்தில் வழிஅருகே உள்ளது.

வருமுன்னர்க் காவாமல் நின்றது மடமை.

1662 வந்தபின்புநாம் செய்வதை வருமுனே தெரிந்து
முந்த வேசெயாது இவ்வகை இருந்தது முறையோ?
நிந்தை யாகவே நெடும்பகை பிள்ளையால் மூண்டும்
சிந்தை செய்திலைவிரைந்தினிச்செய்எனச் சினந்தான்.

முருகனை நினைந்தது.

1663 கோபத் தோடவன் குலமுறைஉரிமைமீக் கூர்ந்தே
ஆபத் தானதை அறிந்துமுன் அடலுடன் யாவும்
நீபத் தாரணி முருகனை நெஞ்சிடை நினைந்து
தீபத்தோடெதிர்செய்வனசெய்!எனத்தெளித்தான்.

மன்னன் கொதித்தது.

1664 மன்னன் கேட்டதும் மனமிகத் திகைத்தனன்
[கொதித்தான்;
இன்ன வாறிடை மூண்டதோ? நன்றுநன் றிந்தச்
சின்ன நீரர்தம் செயல்முறை எனச்சினந் தெழுந்து
சொன்ன வீரனை டரங்கமால் வந்தனன் துணிந்தே.

வீரரை எழுப்பிப் பேரிகை முழக்கியது.

1665 படுத்துறங்கிடும் வீரரைப் பரிவுடன் எழுப்பி
அடுத்த சேனையை ஆயத்தம் செய்மின்என் றறு
[அறைந்தான்;
தொடுத்த கொத்தளம் தோறுமே பேரிகை ஏற்றிக்
கடுத்த டித்திடும் என்றுரை தந்தனன் கடிதே.

படை வீரர் திரண்டது.

1666 கொடிய தூக்கத்தில் அரசுநேர் குறிக்கவும் உடனே
நெடிய காவலர் விரைவுடன் நேர்ந்தனர்; நேர
நொடியில் வீரர்கள் அடுபடை யுடனுனி ஏறி
மடிய நேர்ந்தவெம் படைஎதிர் வரவினை ஓர்ந்தார்.

நடுநிசியில் நேர்ந்தது.

1667 அத்த *சாமத்தில் இவ்வகை ஆயத்தம் ஆகி
ஒத்தி ருந்தனர் ஒன்னலர் படைதிரண்டுஓங்கிச்

* ஆங்நிலப் படைகள் பாஞ்சைக் கோட்டையை அடைந்தபொழுது இரவு பதினெட்டு நாழிகை ஆயிருந்தது.

சத்த மின்றியே வந்தயல் சார்ந்தது சாரப்
பத்தொடுளட்டுறு நாழிகை பாறியது இரவே.

முரசங்கள் முழங்கின.

1668 பாதி ராத்திரி கழிந்தபின் படைகளங்கு அடையோ
மோதி மூண்டெ முமன்னவன் முரசங்கள் முழங்கச்
சாதி வீரர்கள் சமரினை நினைந்துளங் களித்தே
ஏதி ஏந்திய கையராய் எங்கணும் நின்றூர். (89)

வந்தவர் மருண்டது.

1669 யாரும் ஈண்டறி யாவகை யாம்கரந்து இரவே
சேர வந்தனம்; சேர்வதை எதிரறிந் துடனே
வீர பேரிகை முழங்கின விண்ணிடை யிடிகள்
கோர மாகவே முழங்கிய முழக்கெனக் கொதித்தே.

பேரிகை முழக்கத்தின் விளக்கம்.

1670 போரை யேஎதிர் நோக்கியுள் ளுக்கமே பூண்டு
வீர மாய்அவன் வீற்றிருப் பதனேநேர் விளக்கித்
தீரமான இப் பேரிகை முழக்கங்கள் தெளிவாய்ச்
சார மாகவே காட்டின சாருவ தென்னே! (91)

அஞ்சாத அருந்திறலாளன்.

1671 அச்ச மின்றியே அருந்திற லுடையனு யாண்டும்
உச்சம் ஆகவே இருந்துளன்; உற்றுள நம்மைத்
துச்சம் ஆகவே நினைந்துளன்; தொடுசம ரிடையே
நிச்சயம்இவன் வெல்வனே? எனநினைந்தயர்ந்தார்.

கருவிகளுடன் வந்தவர் வெருவி நின்றது.

1672 கொடிய பீரங்கி கொலைபல புரிகிற தீய
பொடிகள் பூண்டுவெம் புகைவகை புலைகளும்
[பொருந்தி
நெடிய தூரத்தில் உள்ளவர் எவரையும் நேரே
மடியச் செய்திடு வெடிகளும் மருவியுளிருந்தும்:

---

90 பாஞ்சை மன்னன் விழித்து வீர பேரிகை முழக்கியுள்ளான். வெள்ளையர்க்கு அது வியப்பை விளைத்துள்ளது.

விடிந்தபின் பார்ப்போம்.

1673 வந்த வெள்ளெயர் வன்சமர் வலிந்துமுன் புரியச்
சிந்தை செய்திலர்;இரவிடைகழிந்துசெங்கதிரோன்
முந்தவே எழுந்து ஒளிவெளி செய்தபின்முதல்வன்
எந்த வாறுளன்? என்பதை அறியவே துணிந்தார்.

பாசறையில் இருந்தது.

1674 பாஞ்சைக் கோட்டையின் அயலொரு
பாசறை அமைத்து
வாஞ்சை யோடதில் வரிசையாய்
வதிந்தனர்; இரவின்
டூஞ்சை போவதை இரவிநேர்
புகுவதை நினைந்தே
ஆஞ்சை யால்வந்த அவரவண்
அமர்ந்தினி திருந்தார். (95)

அரசன் துணிந்தது.

1675 அந்தக் கும்பினிக் கும்பல்கள் அவ்வகை அமர
இந்தக் கோமகன் இயல்பையும் செயலையும்இனமா
முந்தமூண்டுள முடிவையும் துணிவையும்முறையே
சிந்தை கூர்ந்துநாம் தெளிந்துளம் தேர்ந்திட
[நேர்ந்தேம்.

வீரர்கள் நின்றது.

1676 மூண்டு சேனைகள் வஞ்சமாப் போர்செய
[முனைந்தே
ஆண்டு வந்துள நிலைமையை அறிந்ததும் மாந்தர்
டூண்டி ருந்ததம் துயில்மயல் ஒழிந்தனர்; புறத்தே
நிண்டு நின்றனர்; நிறைநிறை கூடினர் நெடிதே.

நகர மாந்தர் நினைந்தது.

1677 என்ன நேருமோ? எவ்வகை ஆகுமோ? இகலோர்
பன்ன ருந்திறற் படுகொலைக் கருவிக ளோடு
துன்னி வந்துளர்; துணைவலி படைவலி எதுவும்
மன்னி நின்றில;மன்னவன் என்செய்வான் தனியே!

தம்பியர் இல்லையே!

1678 இந்த வேளையில் தம்பியர் இருவரும் இங்கே
வந்து சேர்ந்திலர் வந்துள வரவையும் அறியார்;
செந்தில் மாநகர் சென்றுளார்; சேவலங்கொடிசேர்
கந்த வேள்இரு கழல்களே துணைநமக் கினியே.

பரிவு கொண்டது.

1679 என்று மாநகர் மாந்தர்கள் யாவரும் இரங்கி
ஒன்றி நின்றுள உரிமையால் உளமிக உளைந்தார்;
என்றும் வீரமா புரிஎன இசைமிகுந் திருந்த
வென்றி யம்பதி அன்றல மந்தது விரைந்தே.

மறுகி நின்றது.

1680 பருமை யாய்வந்து படிந்துள பகைமையை
நினைந்தே
உரிமை யாளர்கள் யாவரும் உள்ளநொந்
தினைந்தார்;
அருமை யாயவண் வாழ்ந்துள வாழ்வையும்
அரசின்
பெருமை அன்பையும் கருதினர் மறுகினர்
பெரிதே. (101)

உறுதி பூண்டது.

1681 இரவு நாழிகை இருபதில் ஊரெலாம் எழுந்த
கரவு கொண்டவண் அடைந்துள வெள்ளையர்
[கணத்தை
இரவி வந்தபின் காணலாம்; கண்டபின் எய்தும்
பரவு போரையும் பார்க்கலாம் எனப்பரிந் திருந்தார்.

தாணுபதியின் தம்பி மறுகியது.

1682 அல்லி ருட்கணே அப்படை அடைந்ததைக் கண்டு
தொல்லை மந்திரிப் பிள்ளையின் தம்பிமுன் தோன்றி
வல்ல வெம்பகை வந்திவண் வளைந்துள தரசே!
அல்லல்என்செய்வேம்? என்றல மந்துநின் றயர்ந்தான்.

உள்ளம் கலங்கி உரைத்தது.

1683 அண்ணன் * சுப்பிர மணியரும் இல்லையே; அமைந்த
திண்ண மானநற் சேனையும் இல்லையே; இந்த
வண்ண வெள்ளையர் வன்படை வந்துமூண் டுளதே!
அண்ண லேஇனி என்னநாம் ஆற்றுவது? என்றான்.

வேல் உண்டு வெல்லும்.

1684 வீர பத்திர பிள்ளையிவ் வாறுளம் வெருவிப்
பேர பத்தினை எண்ணிமுன் பேசிய பொழுது
சார பத்தங்கள் அனைத்தையும் தகர்த்தெமைக் காக்க
வீர பத்திர வேலுண்டு வெல்லுமென் றுரைத்தான்.

மன்னன் கூறிய வீரமொழி.

1685 ஒன்றும் அஞ்சலை உறுசமர் முன்புபோய் நானே
நின்று வந்துள படைகளை நிலைகுலைத் தொழித்து
வென்று வல்லையில் மீளுவன்; வெள்ளையர் வஞ்சம்
இன்று கண்டனன்என் னையும் இனி அவர்காண்பார்.

கறுத்துச் சிரித்தது.

1686 படையிலாதஓர் சமயம்பார்த் திரவிடைப்பதுங்கி
அடைய வந்திவர் வளைந்தனர் அயலறி யாமல்
தடையி லாதுகைப் பற்றலாம் எனநினைந் தன்றோ
கடையதாமிவர்கருத்தெனச்சிரித்துளம்கறுத்தான்.

அரி முன் நரிகள்.

1687 நரிகள் பற்பல நயந்துடன் நாடியே நீடிப்
பெரிய கூட்டமாய் வந்துமுன் வளையினும் பிழையா
அரியின் ஏறெழுந் தடர்ந்தபோ தவைஎலாம் ஒருங்கே
இரியல் போமன்றி என்செயும்? அன்னதே இன்ன.

---

* தாணுதிபதி சிவசுப்பிரமணிய பிள்ளையின் தம்பியர் இருவர். வீர பத்திரபிள்ளை, பாண்டியம் பிள்ளை என்னும் பேரினர். மூத்த தம்பி இங்கே வார்த்தையாடியுள்ளார். கொடிய கொலைக் கருவிகளுடன் வெள்ளையர் மூண்டு வந்துள்ளதை அறிந்து பிள்ளை உள்ளம் கலங்கி அரசனிடம் பரிவாய் உரையாடி யிருக்கிறார்.

மறலிக்கு ஒரு விருந்து.

1688 கருமருந்தொடும் கலங்கிய நெஞ்சொடும் கலந்தே
ஒருவ ரும்அறி யாவகை ஒளித்துவந் திங்கு
மருவி யுள்ளஇவ் வன்படை முழுவதும் மறலிக்கு
ஒருவி ருந்தென உதவுவன் என்றுருத் துரைத்தான்.

வீரம் விளக்குவன்

1689 இரவு வந்தஇப் படையெலாம் இறந்துக நூறி
வரவு கண்டவர் செலவையும் காணமுன் வகுத்துக்
கரவு கொண்டநெஞ் சுடையவர் கண்முனே எனது
விரவு மேன்மையும் வீரமும் விளக்குவன் என்றான்.

நீறு செய்வேன்.

1690 எனது சேனையும் என்குல வீரரும் இலாத
அனைய செவ்வியை அறிந்துளம் செருக்கிவந்தடைந்த
இனைய தானையை என்ஒரு வாளினல் இன்னே
நினையு மாத்திரை நீறுசெய் வேன்என நிமிர்ந்தான்.

வெற்றி பெறுவேன்.

1691 இன்று வந்தெனை வளைந்துள படைகளை யானே
சென்று தாக்குவன் திரிபுரம் நீறெழச் சிரித்த
குன்ற வில்லியின் குமரவேள் அருளினல் என்றான்
வென்றி அல்லது வேறொன்று தெரிகலா வீரன்.

வஞ்ச நெஞ்சினர்.

1692 வஞ்ச நெஞ்சொடு வருதினி யுடன்வரு காலன்
எஞ்சல் இல்லதோர் வலியினன் என்னினும் என்னை
செஞ்ச டைப்பரன் சேவடி பெயர்க்குமுன் தீர்ந்த
அஞ்ச னத்திறல் மறலிபோல் அழிவன்என் றறைந்தான்

---

109 மறலி=எமன். கூற்றுவன் உண்டு களிக்க இன்று ஆற்றுவன் என்பது விருந்து என்றதால் தெரிய வந்தது.

112. குன்றவில்லி=சிவபெருமான்.

113 ஆங்கிலப் படைகளுக்குத் தளபதியாய் வந்துள்ள காலன் (Collins) என்பவன் இன்று காலனுக்கு இரையாவன் என்று உரையாடியுள்ளார். வருதினி=படை.

1693 எந்த நாளினும் யாருமே இங்ஙகர்ப் பேரைச்
சிந்தை செய்யினும் திகில்கொண்டு விலகுவர்; இன்று
வந்திவ் வாறிவர் வளைந்தனர்; வாழ்வினை இழந்தார்;
முந்த வல்வினை தூண்டிட மூண்டனர் முனைந்தே.

என்றும் இசையுறச் செய்வேன்.

1694 வெற்றி வேற்பரன் அருளினுல் எனகுல வீரக்
கொற்ற மாட்சியைக் குவலயம் அறிந்திடக் குடியாய்
முற்ற வந்தவர் முன்னுறத் தெரிந்துபின் வாங்க
எற்றை நாளும்என் பெயருற இன்றுநான் செய்வேன்.

வேலன் அருள் உண்டு.

1695 வீர வேலுண்டு; வேலவன் அருளுண்டு; மேலோர்
பூர மாச்செய்த புண்ணிய பலமுண்டு; புயத்தே
தீர மாய்ச்செழித் துள்ளமெய்த் திறலுண்டு; செருவே
வார மாய்விழைந் துள்ளகூர் வாள்உண்டு; வாழ்வே.

மான வீரன்.

1696 மானம் ஒன்றுமே மனிதனுக்கு உயிரினும் சிறந்து
வான மாமணி எனஒளி வழங்கியுள் உளதால்;
ஆன *பேரொளி அளவுமே வாழ்வ.: திலையேல்
ஈனம் ஆமென உளந்துணிந் துறுதிகூர்ந்துரைத்தான்.

§ தேவியைத் தொழுதது.

1697 உரிய தன்குல தெய்வமாய் ஒளிமிகுந் துள்ள
அரிய தேவியின் ஆலயம் புகுந்தவள் அடியில்
பிரிய மாய்த்தொழு தெழுந்தனன்; என்றுமே பேணும்
பெரிய தெய்வமே! அருள்எனப் பொருளுடன்
[துதித்தான்.

---

* வாழ்ந்தால் மானமாய் வாழவேண்டும்; அந்த ஒளி ஒழியின் உயிர்வாழ்வு ஈனமே என எண்ணியுள்ளான்.

§ தனது குலதெய்வம் ஆகிய சகதேவியை வணங்கித் தொழுது வழிபட்டுள்ளான். இந்த வீரசத்தியின் கோயில் கோட்டையுள் மேல்பால் உள்ளது. உருவம் யாதும் கிடையாது. கூரிய வாள் ஒன்றே சீரிய முறையில் மேலே மறைவாய் மருவியுளது; சிவநிசிதோறும் புனிதமான பூசனைகள் புரிந்து இந்த மரபினர் வழிபாடு செய்து விழுமிய அன்புடன் தொழுது வருவர்.

தொத்து நோய்கள்.

1698 சத்தி யாய்ச்சிவ மாகியும் தனிப்பர நிலையின்
சித்தி யாகியும் தேசுபெற் றுள்ளளம் தாயே!
தத்தி வந்திந்த நாட்டினுள் சதுருடன் புகுந்த
தொத்து நோய்களைத் தொலைத்தருள் தொலைத்
[தருள் என்றான்.

* கொடிய பிணிகள்.

1699 கொடிய குட்டவெம் பிணிகளுள் இருவகைக்குலங்கண்
முடிய உள்ளன; வெள்ளையும் கருமையும்: முன்னே
படிய நின்றது கொடியதே; படியுடல் அழகை
நொடியில் மாற்றிடும் நோய்மிகச் செய்திடும்நுழைந்தே.

‡ இந்நிலத்தின் நிலை குலைந்தது.

1700 எந்த வண்ணமும் வெளியதாப் போலியா யிழித்துச்
சொந்தவண்ணமே முழுவதும்தொலைத்திடும் துணிந்தே
அந்த வண்ணமே வெள்ளையர் ஈண்டுவந் தடைய
இந்த நாட்டுள மொழிவலி கலையெலாம் இழிந்த.

தலைமை நீங்க நேர்ந்தார்.

1701 தலைமை யாயிங்குத் தழைத்துமுன் இருந்தவர் தமது
நிலைமை யாவையும் நிலைகுலைந்தொழிந்திட நேர்ந்தார்;
புலைமை புன்மைகள் பொங்கிமுன் புகுந்திடப்புகுந்தார்;
கொலைமை தீமைகள் குலமுறை யாகவே கொண்டார்.

ஆங்கிலம் ஈங்கு ஆட்சி ஆயதே!

1702 தனது தாய்மொழி நம்மவர் தலையினில் ஏற்றி
மனது வாய்மொழி செயல்எலாம் மாறிட மாற்றி
எனது யான்எனும் செருக்குடன் யாண்டும் ஆங்கிலமே
முனதென் றுன்னிட மூட்டினர் நாட்டிடை மூண்டே.

---

* கருங்குட்டம் வெண்குட்டம் எனத் தொழுநோய்கள் இருவகையின. இந்த நாட்டுக்கு நேர்ந்துள்ள வெள்ளை நோயின் கொடுமையை நினைந்து உள்ளம் கவன்றுள்ளான்.

‡ இந் நாட்டுத் தமிழ்மொழி வெள்ளையர் மொழியால் மெலிந்து எள்ளலடைந்ததே! என்று இரங்கியிருக்கின்றான்.

ஊனநிலையை உணர்பவர் இல்லையே!

1703 ஆங்கி லம்சிறி தறியினும் அன்னவர் மிகவும்
ஈங்கு யர்ந்தவர் என்றுநம் மவரெலாம் எண்ணப்
பாங்கி னேடுஅவர் புரிதரு படுவஞ்சம் நாளும்
ஓங்கி யுள்ளதே! உணர்பவர் ஒருவரும் இலையே! (124)

*** புண்ணிய நாடு கண்ணியம் இழந்ததே!**

1704 இந்த நாடுயர் புண்ணிய நாடென என்றும்
எந்த நாடுமே புகழ்ந்திட இருந்துள தது; இன்றே
வந்த வெள்ளையர் எள்ளலை வளர்த்திட வளைந்தார்;
முந்த நின்றிந்த இடரினை நீக்குக முனைந்தே: (125)

அரசன் எண்ணி இருந்தது.

1705 என்று தேவியின் சந்நிதி எதிர்நின்று போற்றி
வென்றி வீறுடன் மீண்டனன்; மேலுறும் விளைவை
ஒன்றி ஆய்ந்தனன்; உரியவர் யாவரும் உறவாய்த்
துன்றி நின்றனர்; துணிவுடன் இருந்தனன் தோன்றல்.

எதிரிகள் சூழ்ந்தது.

1706 இன்ன வாறிந்த மன்னவன் இருக்கவே இரவில்
மன்னி அங்கயல் இருந்தவெள் ளையர்எலாம் மறுநாள்
என்ன செய்யலாம்? எவ்வகை அரசினை இதமாத்
துன்னி வந்திடப் புரியலாம்?என் றுசூழ்ந்துறைந்தார்

வகுறை வந்தது.

1707 சிங்கமுள்ள ஒருமலையைச் சேரவந்து
கரிகள்பல செறிந்தொான் றுகித்
தங்கிநின்ற தன்மைனைத் தயங்கியுளம்
தியங்கியுறு சமரை எண்ணிப்
பொங்கமுடன் அமர்ந்தணியாய் மவுனமாய்ப்
பொதிந்திருந்தார் புலரி தோன்றச்

வீர தேவதையின் சந்நிதியில் நின்று இவ் வீரமன்னன் கருதி மறுகி உருகி உரையாடியுள்ள உரைகள் உணர்வின் ஒளிகளாய் வெளிவந்துள்ளன. யாவும் கூர்ந்து ஓர்ந்து சிந்தித்துத் தேர்ந்து தெளிந்து கொள்ளவுரியன.

சங்கமுடன் முழங்கியன சார்ந்தஇருள்
மெல்லமெல்லத் தணந்த தெங்கும். (128)

சேவல் கூவியது.

1708 வைகறைவந் தடைந்தவுடன் வன்கோழி
கூவியது: மாற்ருர் இன்று
செய்யமரில் எல்லாரும் சேரமடிந்
தழிவார்கள்; செயம்உனக்கே;
ஐயமிலை அறிகவென அறுமுகத்தெம்
பெருமான்கை அமர்ந்தி ருக்கும்
துய்யகொடி முன்எழுந்து துள்ளிமகிழ்ந்
துரைத்ததெனத் தோன்றிற் றன்றே. (129)

காக்கைகள் கரைந்தன.

1709 மருங்கிருந்த சோலைகளில் மரங்களில்நின்
றிரைந்திரைந்து மாருது ஓங்கி
ஒருங்கெழுந்து காக்கையினம் ஓலமிட்ட
இன்றமரில் ஒன்னுர் மாண்டு
பெருங்குவிய லாய்விழுவர் பிணக்காடும்
பேய்க்காடும் பெருகும் என்ன
வருங்குறியை முன்னறிந்து வாய்பதறி
அறைவனபோல் வயங்கிற் றன்றே. (130)

*** சூரியன் உதித்தது.**

1710 சூரன்உரங் கிழித்தோடித் தொடுகடலில்
குளித்தெழுந்த சுடர்வேல் என்ன
சீரமைசெங் கதிர்பரப்பித் திசைகள்தொறும்
ஒளிவீசிச் செறிந்து நின்ற

---

* கி.பி. 1799 செப்டம்பர் மாதம் நாலாந்தேதி (4-9-1799) இரவு 18 நாழிகைக்கு ஆங்கிலப் படைகள் பாஞ்சாலங்குறிச்சிக்கு வந்தன. அந்த நிலையை அறிந்து சினந்த அரசன் தன் குலவீரர்களை ஆயத்தம் செய்தான். விடிய ஐந்து நாழிகை அளவில் தேவியைத் தொழுது மீண்டு மறுநாள் விளைவதை விழைவுடன் எதிர்பார்த்திருந்தான். சூரியன் உதயம் ஆயினன்; ஆகவே காரியங்கள் வீரியமாக் கருத நேர்ந்தன.

காரிருளை அறஒழித்துக் காசினியெல்
லாம்மகிழக் கதிரோன் அன்று
போருறுதி காணமுந்து போந்தவன்போல்
குணதிசையில் பொலிந்து எழுந்தான்.

காலன் சாகக் காலம் வந்தது.

1711 ஒருபாலன் உயிர்கவர ஊழிவாய்
அனலென்ன உருத்து முன்னே
வருகாலன் உயிர்கொள்ள வந்தெழுந்த
செஞ்சடைவா னவனை மானப்
பொருகாலம் கருதிஎதிர் போந்திருந்த
காலனுயிர் போக நேரே
தருகாலம் ஈதென்று தன்காலம்
தவருமல் தபனன் சார்ந்தான். (132)

சூழ்ச்சி புரிந்தது.

1712 சூரியன்வந் துதித்தவுடன் படைத்தலைவர்
சூழ்ந்தெழுந்து பாஞ்சை நோக்கி
வீரியத்தின் நிலையறிந்து வியப்புற்றார்;
பிற்கட்டு மேவி மேற்செய்
காரியத்தைக் கலந்தாய்ந்து காலையுண்டி
கொண்டபின்பு வேந்தன் வீரப்
போரியற்கைத் திறனுணர்ந்து பொல்லாத
சூழ்ச்சியொன்று புரிய லானான். (133)

சொல்லிவிடத் துணிந்தது.

1713 நெல்லைமுன்னம் கொள்ளையிட்ட நிலைகேட்க
வந்துள்ளோம்; நேரில் வந்து
சொல்லாடிச் செல்லலாம்; என்றுநாம்
இங்கிருந்தோர் தூதன் தன்னைச்
செல்லவிடுத் தோமாலை மன்னவனும்
உடன்வந்து சேர்வன்; சேரின்
மெல்ல அவன் தனைப்பிடித்துக் கொள்ளலாம்
மேலெளிது வெல்லல் என்று: (134)

தூதனை விடுத்தது.

1714 தம்முள்ளே சூழ்ந்துகொண்டு கோட்டையுள்ளே
சார்ந்துரைத்து மீள வல்ல
வெம்மையுள்ளான் யார்என்ன ஆராய்ந்து
வேகன்எனும் விவேகன் தன்னைச்
செம்மையுள்ளார் போல்விடுத்தார்;தேர்ந்தவனும்
துணிந்தெழுந்து சேர வந்தான்
எம்மருங்கும் வீரர்நிற்கும் இயல்நோக்கி
அஞ்சியுள்ளே இனிது புக்கான். (135)

துணிவுரைத்தது.

1715 அரசனேர் கண்டவுடன் ஆச்சரியம்
அடைந்துள்ளே அடங்கி நின்று
பரசிவந்த பரிசுரைத்து வரவெதிர்பார்த்
திருக்கின்றார் பதியே! என்றான்;
சரசமாய் அவனுரைத்த மொழிகேட்டுச்
சார்ந்தவரை இங்கே பார்க்க
விரசிநான் இருக்கின்றேன் விழைந்தென்று
வேந்தன்எதிர் விளம்ப லானான். (136)

*** அரசு மொழிந்தது.**

1716 உரிமையுடன் எனைக்காண ஒருவருக்கும்
தெரியாமல் ஒளிந்து வந்து
பரிபடையோடு இவணடைந்து நகரயலே
பதுங்கிநிற்கும் பான்மை என்னே?
பிரியமுடன் உள்வந்தால் பேசுவன
யாவையுமே பேசி அன்பாய்
ஒருபெரிய விருந்துண்டு போகலாம்
என்றவர்பால் உரைபோய் என்றான். (137)

---

* வந்த தூதுவனிடம் இந்தவாறு மன்னன் உரைத்து விடுத்துள்ளான். நேரே வராமல் தீய கொலைக் கருவிகளுடன் வஞ்சமாய் வந்திருப்பதை வெறுத்து வீறுடன் உரைத்திருக்கிறான். உரைகளில் உறைந்துள்ள உணர்வுறுதிகளை ஓர்ந்துகொள்ள வேண்டும்.

தூதன் மீண்டு போனது.

1717 இவ்வாறு கூறுங்கால் ஏதொன்றும்
கோபமின்றி இனிமை யாகச்
செவ்வாய்முன் மலர்ந்தாலும் சிந்தைநிலை
வந்தவன்நேர் தெரிந்து கொண்டான்;
எவ்வாறும் மறுத்தினிமேல் உரைத்தக்கால்
இடர்நேரும் என்று தேறி
அவ்வாறே அவரிடம்போய் அறைகின்றேன்
விடையருள்என் றகன்று போனான். (138)

நகரை வளைந்தது.

1718 போனஅவன் மீண்டுவந்து சேனையதி
பதியினிடம் பொறுமை யாகக்
கோனிவன்முன் குறித்தவெலாம் குறித்துரைத்து
நிற்கும்கால் இரவ டித்த
வானமுர சொலிகேட்டு வாள்வீரர்
திரண்டோடி வருதல் கண்டான்:
ஆனபடை அணிஅணியாய வகுத்துநகர்
அயல்எங்கும் வளையச் செய்தான். (139)

வருபவரைத் தடுத்தது.

1719 பந்திபந்தி யாய்அடர்ந்த பரித்திரளும்
வெடித்திரளும் படர்ந்து நின்று
வந்துவந்து மண்டுகின்ற மன்னவன்தன்
படையையுள்ளே வரவொட் டாமல்
சந்துசந்தா இடைமறித்துத் தடுத்தயலே
நிறுத்திமிகத் தருக்கி நீண்டு
முந்திமுந்தி எதிர்த்துருத்து முறுக்குமுனை
முகம்கடுத்து மூண்ட வன்றே. (140)

அயலே வீரர் மயலாய் நின்றது.

1720 அயல்வளைந்த படையிவ்வா றடல்புரிந்து
நின்றமையால் ஆர்த்து வந்து
வயல்வெளியும் வரப்பிடமும் மருங்கெல்லாம்
நெருங்கிமனம் மறுகி யாற்றும்

செயல்மறந்து மன்னவன்தன் சேனைவெளி
நின்றிடவும், ஆதனூர் வாழ்
வயமிகுசென் னவன்என்பான் வயவீரர்
பலருடனே வாவி வந்தான். (141)

வீரசென்னன் வீரைந்தது.

1721 காலைஎட்டு நாழிகையில் கதிரவனும்
மேல்எழுந்தான்; வடபால் நேர்ந்த
மூலையிலச் சென்னன்வந்து முட்டினன்
அவ்வமையம் முப்பத் தெட்டு
வாலவய வீரருடன் மன்னனுக்குத்
தம்பிஎனும் மாண்பு வாய்ந்த
கோலமிகு சிவத்தையா குதிரைமீ
திவர்ந்துகோப் புலிபோல் வந்தான். (142)

சிவத்தையா புகுந்தது.

1722 பரியிவர்ந்து வந்தஅவன் படையடர்ந்து
நிற்கின்ற பரிசை நோக்கி
எரியிவர்ந்த நெஞ்சினனுய் எவ்வகையில்
கோட்டைக்குள் புகுவது? என்று
வரியிவர்ந்த வேலோடு வயல்அயலே
உலாவிவந்தான் வடகீழ்த் திக்கின்
புரியிவர்ந்த இடைசிறிது தெரியவே
புரவியைநேர் கடாவிப் புக்கான். (143)

தாவிப் பாய்ந்தது.

1723 விடுவழியை என்றந்த வீரமகன்
விரைந்துவர வெள்ளை வீரர்
நடுவழியீண் டில்லைநீ நாடாமல்
அயலோடி நடபோ! என்ருர்;
படுபழியீ தென்றுரைத்துப் பரியுகைத்து
நேர்பாய்ந்தான்; பாய மூண்டு
சுடுவெடியால் சுட்டார்கள்: குதிரையங்கே
துடித்துவிழத் துள்ளிப் பாய்ந்தான். (144)

குதிரை வீழவே குதித்துப் போனது.

1724 ஏறிவந்த போர்க்குதிரை எதிரிசுட்ட
குண்டுகளால் இறந்து வீழ
வீறுடனே மேலிருந்த வீரன் அயல்
தாவியே வேல்கை ஏந்திச்
சீறிவிரைந் தடலோடு கோட்டையுள்ளே
சென்றுன் அத் திறலே நோக்கி
மாறிநின்ற மாற்றலரும் மாறுமல்
அதிசயித்து மதிம ருண்டார். (145)

மன்னன் மகிழ்ந்தது.

1725 உற்றதம்பி வெற்றியுடன் ஊக்கமாய்
வந்தடைந்த உறுதி நோக்கிக்
கொற்றவனும் மிகமகிழ்ந்து கொண்டாடிக்
குலவீரக் குரிசி லேநீ!
உற்றகடுஞ் சமையத்தில் உறுதுணையாய்
உள்வந்தாய் இனிமேல் இந்தப்
பற்றலரை அழித்தொழித்து வெற்றியுறல்
எனக்கேதும் பாரம் அன்றே. (146)

நேர் ஆக்க நினைந்தது.

1726 வாசிமேல் வந்த அந்த வயவீரன்
செயல்நிலையை வளைந்து சூழ்ந்து

---

145 சிவத்தையா என்பவன் அரசனுக்குத் தம்பி முறையி ஆன். சிறந்த போர்வீரன். இரவு பாஞ்சையில் முழக்கிய வீர பேரிகையின் ஓசையைக் கேட்டு ஏதோ ஆபத்து நேர்ந் துள்ளது என்று உணர்ந்து உடனே குதிரையில் ஏறித் தன் னரிலிருந்து வேகமாய் வந்தான். காலே ஏழு நாழிகை அளவில் வடகீழ்த் திசை அடைந்தான். பகைவர் தடுத்தார்; தடுக்கவே வாசியைத் தட்டி உள்ளே பாய்ந்தான்; பாயவே வெள்ளையர் சுட்டார்; குதிரை துள்ளி விழுந்து மாண்டது. மாளவே மேலே தாவிக் கோட்டைக்குள் பாய்ந்தான். அந்த அதிசய வீரக் காட்சி ஆங்கிலேயருக்கு அரிய வியப்பையும் பெரிய திகைப்பையும் நேரே விளைத்தது.

மூசியங்கே மூண்டுநின்ற அயல்நாட்டு
வீரரெல்லாம் மிகவி யந்து
பேசிநின்ரூர்; பெரும்பகைமை பூண்டிருந்தும்
பேராண்மை கண்ட போது
நேசமுடன் நேர்ந்துவந்தார்; நேரலனே
நேராக்க நினைந்து செய்தார். (147)

நேசம் புரிந்தது.

1727 போர்மூண்டால் இருதிறத்தும் பொல்லாத
கேடுறுமென்று ஓர்ந்து மீண்டும்
ஓர்மூண்ட உபாயத்தைப் பிற்கட்டும்
தளபதியும் ஊக்கிச் செய்தார்:
நேர்மூண்ட மன்னவன்தன் மாமனையே
நேர் அழைத்தார்; நிலைமை யாவும்
சீர்மூண்டு தேர்ந்துவர அவனுள்ளம்
தெளிவாகத் தெளித்துச் சொன்னூர். (148)

மாமனை இழைத்தது.

1728 கும்பினியார் நெடும்பகைகள் கொடுமையாய்
மூண்டுளகாண்! குறித்து நாங்கள்
நம்பகமாய் இதம்புரிய நாடிவந்தோம்
மன்னவனை நயந்த ழைத்தோம்
தெம்பாக அவன் இங்கு வாராமல்
திண்ணமாய்ச் செருக்கி யுள்ளான்:
வம்பாக அல்லல்களை வளர்த்துவரல்
நல்லதன்று; வாழ்வு கேடாம். (149)

மருமங்களை உரைத்தது.

1729 முன்புநாம் இனிதழைத்துத் திருச்சியிலே
பலசிறப்பும் முதன்மை யாக
அன்புடனே செய்தளித்தோம்; அன்னவனும்
ஆர்வமுடன் உறவாய் நின்ரூன்:
பின்புபல இடர்களே பெருகிவரப்
பிள்ளைவந்து நெல்லை டுத்துத்
துன்பங்கள் மிகச்செய்தான்; துயரங்கள்
எவ்வழியும் தொடர லான. (150)

பிள்ளை மேல் பிழை தூற்றியது.

1730 வெள்ளையரை இந்நாட்டில் யாண்டுமே
இல்லாமல் வேர் அறுப்பேன்;
கொள்ளைசெய்ய வந்தஒரு கொடுங்கூட்டம்
என்றெங்கும் குறையே கூறி
பிள்ளைஎங்கள் இனத்தையெல்லாம் பிழையாகத்
தூற்றியே பெருகி யுள்ளான்;
எள்ளலே செய்துவரும் அவனை இவன்
அடக்காமல் இசைந்தே நின்றான். (151)

பொல்லாத கோளன்.

1731 பொல்லாத கோளனவன் புகுந்தஇடம்
புலையாகும்; புன்மை யாளன்;
எல்லாரும் இந்நாட்டில் தன்சொல்லே
கேட்டுவர வேண்டும் என்று
செல்லாத வழியெல்லாம் செல்கின்றான்;
தீமைகளே செய்து யாண்டும்
சொல்லாத சொல்லெல்லாம் சொல்கின்றான்;
துயர்களையே தொடர்ந்துள் ளான்காண்.

புலையை நீக்கி ஒழி.

1732 தானதி பதிஎன்னும் அவனையித்
தானத்தை விட்டு நீக்கிச்
சேனதி பதியான இவருடைய
சொல்கேட்டுச் சீர்மை யோடு
கோனகி நின்றுள்ள கும்பினியார்க்
கினிதடங்கிக் குணமாய் வாழின்
ஆனதை புகழோடு பாஞ்சைஅரசு
ஓங்கிவரும் அறிக ஆய்ந்தே. (153)

வெய்ய போர் விளைந்துவிடும்.

1733 கொள்ளைசெய்த பிள்ளையைஎன் கையகத்தே
முன்கொடுத்துக் குறித்து நின்ற
தள்ளரிய திறைகளைமேல் ஆண்டுதொறும்
தவறுமல் தந்து வந்தால்

எள்ளரிய பகையின்றி இன்பமுடன்
இருக்கலாம்; இன்றேல் இன்றே
வெள்ளையர்தம் படைமூண்டு வெம்போரை
விலக்குமென விளம்பி விட்டான். (154)

மாமனிடம் மன்னன் உரைத்தது.

1734 மாமன்வந்து மன்னவன்முன் அவன்சொன்ன
வாறெல்லாம் வகுத்துச் சொன்னான்;
காமன்என நின்றஇவன் கண்ணனை
பிள்ளைதனைக் கடுத்து நேரே
ஏமன்வந்து கேட்டாலும் இசைந்துநான்
கொடுத்திடேன்; இன்று இவர்க்குத்
தாமமிகு பொருள்வேண்டின் இப்பொழுதே
வேணமட்டும் தருவேன் என்றான். (155)

எடைக்கு எடை தங்கம் தருவேன்.

1735 பிள்ளைஎடைக் கிடைநிகராய்ப் பேரொளிசெய்
தங்கமே வேண்டும் என்ன
உள்ளமுற விழைந்தவர்தாம் உரைத்தாலும்
உவந்தின்றே உதவு கின்றேன்;
எள்ளலுற அவனைநான் கைவிடேன்:
இப்படையே அல்ல வேறே
வெள்ளமென வந்தாலும் வெள்ளையரை
வேரறுத்து வெல்வேன் என்றான். (156)

அடுத்தவரைக் கைவிடேன்.

1736 ஆருயிரை விடுத்தாலும் அடுத்தவரைக்
கைவிடுதல் அழகோ? போரில்
ஒருயிரும் இல்லாமல் ஒழியினும் என்
உடம்பிலுயிர் உள்ள மட்டும்
சீரழிந்து வந்தவர்க்குத் திறைசெலுத்தி
நின்றிடேன் என்றான்; சேர்ந்த

---

154 தளபதி இவ்வாறு உள்ளம் திறந்து உறுதிமொழிகளை உரைத்து விடுத்தான். மாமன் உணர்ந்தான்; மன்னனிடம் வந்தான்; அவன் சொன்னவை யாவும் உரைத்தான்.

ஊரழிய நேர்ந்தாலும் உலகழியாப்
புகழ்கொண்ட உரவுத் தோளான். (157)

முன்னமே கொடுத்தேன்.

1737 கொள்ளைகொண்ட நிலைதெரிந்து கொடுந்தண்டப்
பொருளைமுனம் * கொடுத்து விட்டேன்;
பிள்ளைதனை யுங்கொடுக்க வேண்டுமென
இன்றுவந்து பிதற்று கின்ருன்;
வெள்ளைமதி யுடையஇவன் வீணுரையை
இனியிங்கு விளம்ப வேண்டா;
உள்ளபடை போதும்மேல் உருத்துவந்த
படைகளைநேர் உடற்றும் என்ருன். (158)

போர் புரிய மூண்டது

1738 நெடியபடை யுடையம்என நீண்டசெருக்
கோடெழுந்து நிமிர்ந்து நேரே
விடியுமுனே வந்தெனது வீரமா
நகரயலே விரகு சூழ்ந்து
கொடியவெடித் திரள்களுடன் கூடியுள்ள
மாற்றலரைக் கூட்டோ டின்று
படிபடிந்து படவெல்வேன்: படைஎழுந்து
பொருகளன்று பணித்து நின்ருன். (159)

கள்ளமும் கரவுமாய் மூண்டு வெள்ளையர் வேலைசெய்து வந்துள்ளமையால் **விரகு சூழ்ந்து** என்று வெறுத்து உரைத்தான். விரகு==கபடம். மாற்றலர்==பகைவர். மாறுபட்டுப் போராட நேர்ந்தவர்.

கஅ-வது படைஎழுச்சிப் படலம் முற்றிற்று.

ஆகக் கவி 1738.

---

* பிள்ளை போய்க் கொள்ளை செய்து வந்த நெல்லுக்கு உரிய பொருளை முன்னமே ஜமீன்தார் பிற்கெட்டிடம் செலுத்தி விட்டார். இந்நூல் 1559-வது பாட்டைப் பார்க்க.

மூண்டுள்ள நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து உணர்பவர் பாஞ்சை அரசுக்கு நேர்ந்துள்ள அவலக் கேடுகளைக் கவலையோடு தேர்ந்து தெளிந்து சிந்தை வருந்துவர்.

பத்தொன்பதாவது

போர் மூண்ட படலம்.

பாஞ்சாலங்குறிச்சி மேல் மூண்டு வந்த கும்பினிப் படைகளுக்கு ஆங்கிலத் தளபதிகள் பலர் பாங்கோடு அமர்ந்திருந்தனர். அவர் பெயர்களை அயலே காணுக.

ஜான் பானர்மேன் (John Bannerman) தலைமையான தானைத் தலைவன். சுமார்ட் (Major Smart), காலின்ஸ் (Lieut. Collins), ராபர்ட் (Captain Robert , டல்லாசு (Dallas), ஓரீலி (O'reilly), புரூஸ் (Bruce), டங்களஸ் (Douglas), பிரௌண் (Lieut. Brown), பிளாக்கி (Blake), முதலானவர்கள் உபதளபதிகளாய் உற்றிருந்திருந்தனர். தென்னாட்டுக்காரிய விசாரணையின் பெரிய அதிகாரியான பிற்கட்டு மேஸ்தரும் (Perket) வந்திருந்தார். இவரே எல்லா உளவுகளையும் கூட இருந்து சேனாதிபதிகளுக்குக் கூறி நின்றார். சமாதான வழிகள் யாதும் பலியாமல் போனமையால் சமர் மூண்டது. கும்பினிப் பட்டாளங்கள் கோட்டையைச் சுற்றி முற்றுகை யிட்டுச் சுடுவெடிகளோடு அடல்புரிய நேர்ந்தனர். நேரவே அரசன் படைகள் கடுவேகமாய்க் கலித்து எழுந்தன.

வீரர்கள் எழுந்தனர்.

1739 போர்என மன்னவன் புகன்ற போதினில்
வீரர்கள் எழுந்தனர்; வேல்கள் வாள்கள்மேல்
நேருறு வலயங்கள் நெடிய கம்புகள்
சூருறு சூலங்கள் துள்ளி வந்தன. (க)

வீறுடன் மூண்டனர்.

1640 போர்கிடை யாமலே புலந்தி ருந்தவில்
வீரர்கள் இச்சமர் விளைந்த தும்மிக
ஆர்வமுற் றெழுந்தனர்; ஆண்மை மீறினர்;
கார்வர வளர்பயிர் கலித்த தென்னவே. (உ)

கார்கண்ட பயிர்போல் போர் கண்டதும் வீரர்கள் பொங்கி வந்துள்ளனர். இந்த உவமையால் அவருடைய சிந்தை நிலைகளும் தீர வீரங்களும் தெரிய வந்தன.

போர்க் கருவிகள் பொங்கின.

1741 வில்லுகள் எழுந்தன; வெடிகள் முந்தின;
கல்லுகள் துள்ளின; கவண்கள் வந்தன;
வல்லயம் தோமரம் மழுக்கள் பாலங்கள்
எல்லுறும் ஈட்டிகள் எங்கும் ஈண்டின. (கூ)

சமரில் மண்டினர்.

1742 கண்டகோ டாலிகள் கையில் கொண்டனர்;
மண்டியுள் மூளையை வாங்கும் சக்கரம்
கொண்டபூண் கம்புகள் கொழித் தெடுத்தனர்;
தண்டுகள் தாங்கினர்; சமரில் மண்டினர். (சு)

செருவில் ஏறினர்.

1743 என்றும் போரின்றி ஏங்கி யிருந்தனம்;
இன்று வந்தெளி தெய்திய திங்கெனைக்
கன்றி யுள்ளம் களித்துக் கறுத்துமேல்
சென்று சென்று செறிந்து செருக்கினர். (நு)

மதில்மேல் நின்றனர்.

1744 கோட்டை மாமதில் மீதினில் கோவையாய்
மேட்டை வாய்த்தென வீரர்கள் ஏறினர்;
மாட்டை நோக்கி மதப்புலி நின்றெனக்
கூட்டம் நோக்கிக் கொதித்திவர் நின்றனர். (கூ)

1745 கொத்த ளங்களில் ஏறிக் கொடுமுரசு
ஒந்த டித்துள் ளுருத்ததிர் ஆர்த்தனர்;
பத்தி யாயமை கோபுர வாசலில்
ஒந்த மர்ந்தனர் ஊக்கி எழுந்தனர். (எ)

---

1 பகைஞர் வீரர்கள் பற்றி வந்துள்ள கொடிய ஆயுத வகைகளை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம்.

6 கோலை = வரிசை. அணி அணியாய் அடர்ந்து நின்ற நிலை தெளிவு தெரிய வந்தது. போரை ஒரு விளையாட்டாகவே இவர் கருதியுள்ளனர். அவ்வுண்மை மேல் வரும் பகுதியால் நன்கு விளங்கி நின்றது.

கொத்தளம் = கோட்டை மதிலை ஒட்டி அமைந்துள்ள மேடைகள். பகைவர் புகாமல் பாதுகாத்து நின்றனர்.

1746 வில்லெ டுத்து வெகுண்டுவந் தார்பலர்;
கல்லெ டுத்துக் கடுத்துவந் தார்பலர்;
வல்ல வெங்கவண் வாங்கிவந் தார்பலர்;
எல்லை யில்படை ஏந்திவந் தார்பலர். (அ)

வெற்றி காண விரைந்தனர்.

1747 இன்று வந்திங் கெதிர்ந்த படைகளைக்
கொன்று கொன்று குவித்து நரிகள்நாய்
தின்று மென்று களித்துச் செழித்திட
வென்றி காணுவம் என்று விரைந்தனர். (கூ)

களித்துக் கலித்தனர்.

1748 வெள்ளை யாளர் விரிபடை யாவையும்
கொள்ளை கொள்ளக் கொடுந்திற லோடிவர்
கள்ளை யுண்டு களிக்கின்ற வண்டென
உள்ளம் மண்டி உருத்துவந் தேறினர். (ஙி)

புலிகளும் எலிகளும்

1749 வலிய வந்து மதில்வளைந்து ஓங்கிய
பொலிவ மைந்தஅப் போர்ப்படை நோக்கினர்;
புலிக ளைப்பொரப் பொங்கி வளைந்தபுல்
எலிக ளாகவே எண்ணி இகழ்ந்தனர். (ஙக)

எதிர் ஏறினர்.

1750 மாறு பட்ட மறுபுலத் தார்என
வீறு பட்டெழு வீரர்கள் யாவரும்
கூறு பட்டுக் கொடுந்திற லோடவர்
நீறு பட்டிட நீண்டெதிர் ஏறினர். (ஙஉ)

பொருது மாண்டது.

1751 மூண்டு வந்தவர் தம்மொடு முன்னெதிர்
தாண்டு வெம்பரி வீரர்கள் தாக்கினர்;
ஈண்டி நின்ற இருதிறத் தும்பலர்
மாண்டு வீழ்ந்தனர் மண்டி நெருங்கியே. (ஙஊ)

1752 வாள்க ளோடெதிர் வாள்கள் வலீந்தன;
நீள்கொள் வேலோடு வேல்கள் நிமிர்ந்தன;
தோள்க ளோடெதிர் தோள்கள் தொடர்ந்தன;
தாள்க ளோடெதிர் தாள்கள் தலீந்தன. (கச)

1753 கருங்கடல் எனவெளி கடுத்து நின்றஅப்
பெரும்படை அடலுடன் பெருகி மூண்டயல்
வரும்படை அனீகத்தையும் மறுத்து வந்துமேல்
பொரும்படை யுடன்எதிர் பொருதுடன்றதே. (கரு)

வெள்ளையர் சுட்டனர்.

1754 மதில்வ ளைந்துள மாற்றலர் மண்டியே
முதிர்கொ டுஞ்சினத் தோடெதிர் மூண்டனர்;
அதிர்வெ டித்திரள் ஆர்த்தனர்; ஆர்த்திடப்
பிதிரெ றிந்தன பேருல கெங்குமே. (கசு)

வீட்டி வீழ்த்தினர்.

1755 கோட்டை வாசல்கள் நான்கினும் கோன்படை
சுட்டி வேல்கள் எழுமழு சூலங்கள்
கீட்டி மேல்வரு நேரலர் யாரையும்
வீட்டி வீழ்த்தினர் வீறுடன் வென்றுமே. (கள)

1756 குத்தென வெட்டெனக் கொல்லு கொல்லென
எத்திசை மருங்கினும் இரைந்தெ ழுந்தன;
குத்துமேல் வருபரித் தலீவர் தந்தலீக்
கொத்துகள் உருண்டன கொடுமை யாகவே. (கஅ)

வாள் வீரர் ஆடல்கள்.

1757 வலக்கையின் வாள்கொடு வெட்டி மாற்றலர்
இலக்கினை இடக்கையிற் பரிசை ஏற்றுமேல்
விலக்குரு வகைஎதிர் விரைந்து பாய்ந்துமே
லிலக்கண்வெம் பிணக்குவை நெளியச் செய்தனர்.

1758 இடித்துமுன் மருந்தினை ஏற்றி வெவ்வெடி
பிடிக்குமுன் அடித்தனர்; பிடித்து நின்றவர்
துடித்திடத் துணித்தனர்; துள்ளி வந்தவர்
மடித்துடன் விழுந்திட மாட்டி நின்றனர். (உ0)

வில் வீரர் வீழ்த்தினர்.

1759 கல்லமர் உண்டையைக் கையில் கொண்டதம்
வில்லிடை வைத்திவர் வெகுண்டு விட்டனர்;
பல்லுடை பட்டன; பருத்த நெற்றியில்
ஒல்லையில் பட்டவர் உருண்டு வீழ்ந்தனர். (உக)

வீழ்ந்து மாய்ந்தனர்.

1760 எவ்வழி இருந்துகல் எய்து கின்றதென்று
அவ்வழி வீரர்கள் அறிய கிற்றிலர்;
வெவ்விய உற்கைகள் வீழ்வ போல்விழ
தெவ்வுயிர் கலங்கினர் செத்து வீழ்ந்தனர். (உஉ)

‡ மாயம் என மருண்டனர்.

1761 காயமும் கண்டிலம்; கையும் காண்கிலம்;
தீயகல் உண்டைகள் சீறி ஏறியே
வாயிலும் கண்ணிலும் வந்து பாய்கின்ற
மாயவெம் போர்என மயங்கி மாய்ந்தனர். (உங)

சுட்டவர் பட்டனர்.

1762 அம்பினும் கடுவிசை யாக வந்துகல்
கும்பலில் பாய்வன; குறியும் தப்பில;
வெம்பிமுன் சுட்டவர் வெருண்டு பட்டனர்;
தும்பியில் துடித்தனர்; சுருண்டு வீழ்ந்தனர். (உச)

பல்வகைப் போர்.

1763 வில்லுகள் பழகிய வீரர் வீறுடன்
கல்லுகள் சொரிந்தனர்; கம்பில் தேர்ந்தவர்
வெல்லுறு விறலுடன் விரைந்து மண்டியே
ஒல்லையில் பாய்ந்துமுன் உருத்தடித்தனர். (உடு)

சூறையாடினர்.

1764 வில்லெறி கல்களால், வேல்கள் வீசலால்,
* வல்லயம் மீட்டலால், வாள்கள் வாட்டலால்,

---

‡ வில்லாளிகள் எய்த திறம் வெள்ளையர் எல்லாரையும் கதிகலங்கச் செய்தது. மதிமருண்டு மாண்டனர்.

* வலிய இரும்பினுல் வேல்போல் கூர்மையாச் செய்த ஆயுதம் வல்லயம் என வந்தது. அயம்=இரும்பு.

கல்லெறி கவண்களால் கைகொள் தண்டினுல்,
சொல்லிய உயிர்களைச் சூறை யாடினர். (உசு)

வெடியினர் ஓடினர்.

1765 வெடிகளை விரித்தவர் சுடுமுன் வில்லினுல்
கடுவிசை யோடிவர் கணித்தங் கெய்தலால்
தொடுகரம் மார்புதோள் தொலேவில் கல்லுகள்
அடுசரம் எனவிழ அலறி ஓடினர். (உள)

கண்டவர் கலங்கினர்.

1766 வில்லி னுலுயர் வீரர்கள் வீசிய
கல்லின் மாரியைக் கண்டு கலங்கினர்;
பல்லும் கண்ணும் பருத்த செவிகளும்
சொல்லும் போய்ப்பலர் துள்ளினர் தூரமே.(உஅ)

சென்னன் செய்த போர்.

1767 ஆவுடை யாபுரம் சென்னன் என்னும்ஓர்
மாவுடை வீரன்வன் சமரில் மண்டியே
போவுடை நூலெனப் பாய்ந்துள் ஏறியே
காவுடை யாரெலாம் நடுங்க வெட்டினன். (உக)

ஆங்கில வீரர்கள் அடலமர்.

1768 பீரங்கிக் குண்டுகள் பெருகி வந்தன;
போரெங்கும் நடுங்கின படைகள் ஏறியே
கேரெங்கும் நெருங்கின நெட்ட ழிந்தது
போரெங்கும் மூண்டது பொருது மாண்டனர். (ஈ0)

குதிரை வீரர் கொதித்தனர்.

1769 தெவ்வரும் பரிகளைச் செலுத்தி மண்டியே
வெவ்வயில் வேல்களால் விரைந்து குத்தினர்;
இவ்வெனப் பாய்ந்திட சாரி யாகவும்
வவ்வினர் பின்வல சாரி வந்துமே. (ஈக)

கருந்தலைகள் துள்ளின.

1770 பருந்துவந் தடர்ந்திடு பான்மை போல்தரை
இருந்தவர் தமைப்பரி மேலி ருந்தவர்

விரைந்துவந் தடர்ந்துடன் வெகுண்டு வெட்டினர்
* கருந்தலை துள்ளின கணக்கி லாதவே. (கூஉ)

தலை இழந்தவர் நிலை.

1771 பரிவிரைந் தோடுங்கால் பாய்ந்து வெட்டவே
தரிதலை யாகவே சார்ந்தி ருந்தவன்
அரிதலைக் கேதுவே போல மர்ந்துதன்
சொரிதலைச் சோரியால் தோய்ந்து சோர்ந்தனன்.

குதிரை வீரர் போர் நிலை.

1772 வாவிவெம் ப்ரிவரும் போது வல்லயம்
மேவிய வீரர்கள் மேல்ஒ துங்கிமேல்
தாவியே குதித்தனர் சரிந்து வெங்குடல்
ஆவிபோய் அழிந்தன அவையும் ஆளுமே. (கூச)

குலைந்து வீழ்ந்தனர்.

1773 குத்திய வேலொடு குடல்கள் வந்தன;
தத்திய பரிநுரை தள்ளி மாய்ந்தன;
கத்திகள் காய்ந்தன கழுத்தில் பாய்ந்தன;
கொத்துக ளாய்த்தலை குலைந்து வீழ்ந்தன. (கூடு)

சாரி திரிந்தனர்.

1774 மேலுறும் ஆள்விழ விரைந்து சென்றவர்
காலுறு பரியில்இக் காவல் வீரர்கள்
சாலுறத் தாவியே சாரி செய்துபின்
மாலுற மீண்டவர் மாள வெட்டினர். (கூசு)

சாய்ந்து மாய்ந்தனர்.

1775 காலின்மேல் வருபடை கையும் கால்களு
மாலுற இழந்தன; மறுகி மாண்டன;
பாலுற வந்தவெம் பரியின் சேனையால்
சாலவே இப்படை சாய்ந்து மாய்ந்தன. (கூஎ)

இருதிறத்தரும் பொருது இறந்தனர்.

1776 இருவகைப் படைகளும் எதிர்த்து மண்டியே
வருகுலக் காலர்போல் வன்மம் மீறியே

---

* பாஞ்சை வீரர்கள் பலர் மாண்டு மடிந்தனர்.

ஒருவரை ஒருவர்முன் உயிர்கு டித்திடப்
பொருதிறம் யாவையும் புரிந்து முட்டினர். (கஅ)

உடல்கள் உடைந்தன.

1777 தலைகளும் தோள்களும் தாள்க ளும்பல
மலைகளும் திடர்களும் மாக வெங்களம்
நிலைதெரி யாவகை நிறைந்து நின்றன;
விலைதெரி யாமணிப் பூணும் மின்னின. (கக)

கொலைகள் குவிந்தன.

1778 வெட்டினர் குத்தினர் விரைந்து கொட்டினர்
முட்டினர் தட்டினர் முசலம் விட்டனர்
ஒட்டினர் எற்றினர் உருத் தடித்தனர்
கட்டினர் கடித்தனர் கடுத்தொ டித்தனர். (சO)

குதிரைகள் அழிந்தன.

1779 வனத்துறு கலைகளை வளைத்து வேட்டையில்
சினத்தொடு செகுத்திடு செய்கை போலவே
மனத்தினும் கடியவெம் பரிகள் பாழ்பட
இனத்தொடும் சிதைத்தனர் ஏற்றம் இன்றியே.

1780 மண்டிகள் இட்டிவர் குத்தி வாளினல்
கண்டங்கள் அறும்படி வெட்டிக் கம்பினல்
மண்டைகள் சிதறிட மாட்டி வன்கழு
துண்டுளம் மகிழ்ந்திட உதிரம் ஊட்டினர். (சஉ)

உதிரங்கள் ஓடின.

1781 அலகைவாய்ச் சோரியும் அயில்கொள் வேலுடைப்
புலவுவாய்ச் சோரியும் பொருத ழிந்தவர்
தலையின்வாய்ச் சோரியும் சமர பூமியின்
இலகுவாய்ச் சோரியும் எங்கும் சேந்தவே. (சக)

1782 திண்புயம் இழந்தவர்; சிரங்கள் தீர்ந்தவர்;
கண்பொழி கோபவெங் கனல விந்தவர்;
விண்புகழ் வீரராய் விரைந்து வந்தவர்
மண்புக மாய்ந்துமே மறிந்து வீழ்ந்தனர். (சச)

1783 மூஞ்சுகள் சிதறியும் முகங்கள் சிந்தியும்
வாளொடு பரிசைகொள் வன்கை நீங்கியும்
தாளிடை தோள்செவி சரிந்தும் தம்முடை
மீளிமை இழந்தும்வெவ் வீரர் வீந்தனர். (சுரு)

1784 குண்டு பட்டுயிர் மாய்ந்தவர் கொண்டவாள்
மண்டி வெட்ட மடிந்தவர் வன்பரி
மிண்டி ஏற விளிந்தவர் வெய்யவேல்
கொண்டு குத்தக் குலைந்தவர் கோடியே. (சுசு)

1785 குடல் சரிந்து குலைந்தும் அதைஎடுத்து
உடல்பொதிந்துள் உடையால் இறுக்கிமேல்
அடல்மி குந்தெழுந் தார்த்தமர் ஆற்றியே
இடைத ளர்ந்து விழுந்திறந் தார்பலர். (சுள)

1786 வெய்ய செங்குரு திப்புனல் வீழ்ந்துமுன்
கொய்த ழிந்த கொழுந்தசை கூடிவன்
தொய்யி லாகிச் சுழிந்து வழிந்துசூழ்
செய்த செய்யெனச் சேர்ந்தது செங்களம்.

1787 பருந்தும் காகமும் பந்தரிட்டு ஆடிட
அருந்தும் பேய்களும் நாய்களும் கூளியும்
விருந்து வாய்த்தென வெம்மிடி யாளனேர்
பெருந்த னம்வரப் பெற்றது போன்றன. (சுகூ)

குறிகாரர்கள் கொதித்து மூண்டனர்.

1788 இப்ப டிக்களம் ஈடழி யப்படை
வெப்பு டன்எதிர் ஏறி மிடைந்தன;
அப்பொழு தர சன்படை வீரருள்
செப்பி லும்குறி காரர் திரண்டனர். (ருO)

முத்தையா மூண்டது.

1789 முள்ளுப் பட்டியூர் முத்தையன் என்பவன்
தெள்ளு சீர்த்திறற் சேவகன் சீறிமுன்
துள்ளிப் பாய்ந்து சுடர்வடி வாளினல்
அள்ளிப் போட அருந்தலை வெட்டினன். (ருக)

காமயன் காய்ந்தது.

1790 கட்ட மல்லனூர்க் காமயன் என்பவன்
அட்ட திக்கும் புகழ்கின்ற ஆற்றலான்
முட்டி மீறி முறுக்கிப் படைகளை (நுஉ)
வெட்டி ஏறி வெகுண்டமர் ஆடினன்.

கருத்தையா கதித்தது.

1791 கன்னக் கட்டைக் கருத்தையன் என்பவன்
வன்னக் கட்டுடை வாளினன் வல்லயம்
முன்னக் கட்டி முனைந்து நமனுயிர்
தின்னக் கட்டிச் செருவிளை யாடினன். (நுஊ)

மல்லையன் உருத்தது.

1792 எல்லை நாய்க்கனூர் மல்லையன் என்பவன்
வல்லை யந்தனில் வல்லவன்; வன்சமர்
எல்லை யாவும் எளிது தெளிந்தவன்;
ஒல்லை ஏறி உருத்தமர் ஆடினன். (நுசு)

ஆனை மல்லன்.

1793 ஆனை மல்லன் எனும்பெய ரான்ஒரு
வானை வெல்லும் வலியினன்; மாற்றலர்
தானை வெல்லும் தருக்குடன் பாய்ந்துமேல்
ஊனை மெல்ல உருத்தமர் ஊக்கினன். (நுடு)

ஆதனூரன்.

1794 ஆத னூர்இர சின்னன் அரசடி
நாதன் கொல்லங் கிணறுறு நாகணன்
போத வன்குதி ரைக்குளம் பொம்மையன்
மோதி மூண்டு முனைந்தமர் செய்தனர். (நுசூ)

பொம்முலு.

1795 செட்டி யூரணிப் பொம்மு லெனக்கழல்
கட்டி மீறிய காலன்; களங்களில்
வெட்டி ஏறிய வீரன்; விரைந்துபோய்
மட்டி லாவகை வன்சமர் ஆடினன். (நுஎ)

ரணசிங்கன்.

1796 மங்க லம்ரண *சிங்கன்என் பான்திசை
எங்க ணும்இசை கொண்டவன் போரினில்
சிங்கம் என்னச் சினந்துமுன் பாய்ந்துதன்
பொங்கு பேரைப் புதுக்கிப் பொருதனன்.

வீரர் ஏறினர்.

1797 வீர கஞ்சயன் வீரணன் கெச்சிலன்
போரு யர்ந்த அய்யாவு புலிகுத்தி
சூர சங்கரன் சுந்தரன் சோமகன்
வீர பொம்மு வெகுண்டிவர் ஏறினர். (நுகூ)

நாகமன்.

1798 காய லூரணி நாகயன் கண்டகர்
மாய நூறும் வலியினன்; வல்லயம்
தோய நின்றகைச் சூரன் பகைவர்முன்
சாய நூறிச் சமரினில் ஏறினன். (சுஂO)

கூழையா எய்தது.

1799 கூத்த லூரணிக் கூழையன்; வில்லினில்
கோத்த கல்லினன்; கொண்ட குறியினைப்
பார்த்த போதே படுத்திடும் பான்மையன்;
ஏத்தி உண்டைகள் எங்கணும் எய்தனன்.

சின்னையன் செய்தது.

1800 சிந்த லக்கரைச் சின்னையன் என்பவன்
எந்த லக்கும் எளிதில் அடிப்பவன்;
முந்தி லக்குவன் மூண்டது போல்எதிர்
வந்தி லக்கம் வழுவற மாட்டினன். (சுஂஉ)

செல்லையா சீறியது.

1801 சிங்கி லிபட்டிச் செல்லையன் என்பவன்
மங்கி டாத வலியினன் வாளினில்

ரணகளத்தில் சிங்கம்போல் பாய்ந்து யாண்டும் மூண்டு அடலாண்மைகள் புரிந்து வந்தான் ஆதலால் தனக்கு இயல்பாய் அமைந்துள்ள **ரணசிங்கன்** என்னும்பேரின் பொருளே அன்று நயமாய் நன்கு விளக்கி நின்றுன்.

எங்கும் போர்கொண் டிருந்தவன் இங்கெதிர்
பொங்கி ஏறிப் புகுந்தமர் ஆடினன். (சுஙு

முத்தையா முனிந்தது.

1802 முடிம னூருறை முத்தையன் கைத்திறம்
படியு யர்ந்தவன் பாயும் புலியையும்
அடிமுன் ஓடி அடிக்கும் அடலினன்
முடிமின் என்று முனிந்தமர் மூட்டினன். (சுசு)

சங்கணன் சாடியது.

1803 சங்கம் பட்டியூர்ச் சங்கணன் என்பவன்
சிங்கம் கட்டிச் செருக்கும் திறலினன்;
தங்கம் கட்டிய தாளுடை வாளினன்;
எங்கும் வெட்டி எழுந்தம ராடினன். (சுஙு)

போசன் பொருதது.

1804 கன்னல் கத்தி மதாருமல் போசன்என்று
இன்ன பேரினர் என்னுடை ஊரினர்;
மன்ன னுக்கு மருங்கு நெருங்கினர்;
மின்னல் போலொளிர் வாளினர் வேலினர்:

அரிகள் முன் கரிகள்.

1805 போரில் பாய்ந்து பொருதனர் பொங்கரி
நேரில் பாய நிலைகுலைந் தோடிய
காரில் பாயும் கரித்திரள் என்னவே
வீரப் போரர் வெருண்டயல் ஓடினர். (சுஎ)

வீரலக்கன் விறல்.

1806 சின்ன வீரலக் கன்எனும் பேரினன்;
முன்னை வீரர் முதன்மைகொள் சீரினன்;
அன்ன வீரன் அருந்திறல் ஆண்மையை
உன்ன வீரம் உளத்திடை ஓங்குமே. (சுஅ)

போராடிய திறல்.

1807 வாள்வலக்கையில் வாங்கி இடக்கையில்
கோள்விலக்கும் பரிசைகொண் டோங்கிமேல்

ஆள்வழக்கம் அறும்படி சீறியே
தாள்வலித்த சமரிடை ஏறினன். (சுகூ)

1808 சாரி செய்து சமர்தனில் முந்தினன்;
நேரில் எய்தும் நெடும்படை சிந்தினன்;
சோரி பெய்து துடித்து மடிந்துடல்
பாரில் பெய்து பதைத்துயிர் போயினர். (எ0)

1809 குருதி யின்கறை எங்கணும் கோத்துமெய்
பருதி யின்கதிர் போலொளி பாறிட
வருதிர் என்று வலமிடம் பாய்ந்திவன்
பொருது நின்ற புலன்புகல் வாரெவர்? (எக)

குதிரை வீரர் குலைந்தது.

1810 வாவி வாம்பரி மேல்வரு வார்களைத்
தாவி வெட்டித் தடிந்து கடிந்தவர்
கூவி எங்கும் குலைந்து நடுங்கிட
ஆவி வாங்கி அடலமர் ஆடினன். (எஉ)

தொடுத்துச் சுட்டது.

1811 இன்ன வாறிவன் ஏறி வருவதை
அன்ன வீரர் அடலுடன் நோக்கியே
வன்ன மான முகத்திலும் மார்பிலும்
துன்னி ஏறத் தொடுத்தெதிர் சுட்டனர். (எஙு)

மாய்த்து மாண்டது.

1812 விட்ட வெம்புகை மீது விரைந்துமுன்
சுட்ட வன்றன் கழுத்தைத் துடித்திடக்
கட்டிக் கவ்விக் கடித்திவன் மாண்டனன்;
ஒட்டி வீழ்ந்தவ னும்முயிர் போயினன். (எசு)

கல்லில் நின்றது.

1813 அன்று இவன்றன தாண்மையை யாவரும்
ஒன்றி நின்றுள் உவந்து வியந்தனர்;
இன்றும் காண இவனோர் கல்லினில்
நன்று நாட்டி நயந்து பணிகின்றார். (எடு)

1814 இன்ன வீரர்கள் இவ்வகை ஏறியே
மன்னன் உள்ளம் மகிழப் பொருதனர்;
துன்னி வந்த படைகள் துளங்கின
என்னி னிச்செய்வது? என்றயர்ந் தேங்கினர்.

1815 படையு டைந்து படுநிலை நோக்கியே
*கடையி ருந்தவர் யாரும் கடுத்தனர்
அடைய நின்ற படைகளை ஏற்றிமுன்
மிடைய வந்தனர் வெஞ்சினம் மீறியே. (எஎ)

1816 பத்தி செய்து படுசமர் பாங்குடன்
ஒத்து நின்றெதிர் ஊக்கி உளைற்றிட
வித்த கத்திற லோடு விதித்தவர்
கொத்த மைந்து குறித்தெதிர் ஏறினர். (எஅ)

1817 கரும ருந்துறு கைவெடி யாதிகள்
பொரு வருந்திற லோடு பொருந்திமுன்
வெருவ ருந்திற லோடு விரைந்தெதிர்
ஒருவ ருந்தெரி யாவகை ஊக்கினர். (எக)

1818 விடங்கள் தோய்ந்தன; வெவ்வழல் காய்ந்தன;
அடங்கொள் வேல்முத லானவை யாவுமே
இடங்கள் தோறும் எழுந்து மிடைந்தன;
திடங்கொள் வீரர் சினந்து செருக்கினர். (அ0)

வெள்ளை வீரர்கள் வெடிப்போர்.

1819 கால்கள் மாற்றிக் கவாத்துகள் ஆற்றினர்;
வேல்கள் ஏற்றி வெருகொளத் தூற்றினர்;
சூல்கொள் மேகங்கள் என்னத் தொடர்ந்துயர்
மால்கொள் வெங்கரி மேல்கொண்டு மண்டினர்.

வெகுண்டு விரைந்தனர்.

1820 கொல்லும் வெங்கொடுங் கூற்றென மண்டியே
எல்லை யின்றி எழுந்துகா லாட்படை
ஒல்லை வந்தெதிர் ஊக்கி உருத்திகல்
வெல்லும் என்ன விரைந்து வெகுண்டதே.(அஉ)

---

*கடை இருந்தவர் என்றது பின் அணியில் நின்று படைகளை ஏவி வந்த தளபதிகளை. படை உடைந்து வரவே படைத் தலைவர்கள் வெகுண்டு விரைந்து மூண்டனர்.

குண்டுகள் பாய்ந்தன.

1821 இத்தி றம்படை எங்கும் கொதித்துமேல்
ஒத்தெ ழுந்துள் ளுருத்தெதிர் ஊன்றவும்
எத்திறத்தும் இடியொலி என்னவே
பத்தி யாய்வந்து குண்டுகள் பாய்ந்தன. (அஉ)

பீரங்கி வெடிகள்.

1822 யாண்டும் தீய வெடிகள் அடர்ந்தன;
நீண்ட பீரங்கி நேர்ந்தெதிர் காய்ந்தன;
மூண்டு சீறி முனைந்துமுன் னேறினர்;
மாண்டு வீழ்ந்து மடிய வலித்தனர். (அஊ)

தொடுத்துச் சுட்டனர்.

1823 வெள்ளை வீரர்கள் வீறுடன் ஏறியே
கொள்ளை கொள்ளும் கொடிய வெடிகளை
அள்ளி அள்ளி அடர்ந்து படர்ந்தெதிர்
துள்ளி வீழத் தொடுத்துடன் சுட்டனர். (அரு)

மூண்டு மூட்டினர்.

1824 மூண்டு நின்றவர் மூட்டுறும் வெஞ்சமர்
ஆண்ட கைப்படை வீரர் அறிந்ததும்
தாண்டு வெம்பரி சாரிகள் சார்ந்தனர்;
வேண்டு வெந்திறல் வெம்படை தேர்ந்தனர்.

பாஞ்சை வீரர் பரிகளில் ஏறினர்.

1825 வாவுவெம் பரிமுதல் உள்ள வான்படை
யாவுமே விரைந்தெழுந் தடல்கொண் டேறவே
கோவுயர் படைகளில் கொற்ற வீரர்கள்
தாவிமேல் ஏறினர் சமரில் முந்தினர். (அள)

சிவத்தையா.

1826 கால்வரு படையொடு கடிய வெம்பரி
மேல்வரு படைநிலை மேவி நோக்கினன்;
கோல்வரு கோமகன் சிவத்தய் யாஎனும்
வேல்வரு வீரன்வெம் பரியில் ஏறினன். (அஅ)

குதிரை ஏற்றம்.

1827 தடக்கையில் நெடியவாள் தாங்கிச் சார்குசை
லுடக்கையில் எழிலுடன் பிடித்துக் காவினுல்
தொடப்பொருக் குதிரையைத் தொடுத்தடக்கிமுன்
நடத்திவந் தமர்முகம் நண்ணி னனரோ. (அசு)

படை மேல் பாய்ந்தது.

1828 சோமனேர் குதிரையில் தோன்றி னன்கொலோ?
காமனேர் வாசியில் கதுவி னன்கொலோ?
மாமகன இவன்என வந்த அக்குலக்
கோமகன் படைஎதிர் கொதித்துப் போயினன்.

எதிரிகள் திகைத்தனர்.

1829 இவன்வரு நிலையின எதிர்ந்து கண்டனர்;
கவனவே கத்துவெம் புரவி கால்களின்
நவமுடன நடைபயில் நளினம் நோக்கினர்;
அவர்மிகத் திகைத்தனர்; அதிச யித்தனர்.

குதிரைப் படைகளின் போர்.

1830 நீரின்மேலுறு நெருப்பெனப்பரியின்மேல்நிலவிப்
போரின் மேலுறு வீரனைப் பார்த்ததும் பொருந்தார்
பாரின் மேலுருப் பரிகளைப் பத்திசெய் துடனே
சாரி செய்துவெம் போரினில் ஊக்கினர் சதுராய்.

போர் வீரம்.

1831 வாரும் வாரும்என்று எதிர்த்துமேல்
நின்றவெம் படையை
வீர வேட்கையால் விளித்துவெங்
கூற்றென வெகுண்டு
போரில் ஏறினுன் பொருபரி
தூண்டிமுன் புகுந்தான்;
பாரில் வானினில் திசையிடை
விசைகொடு பறந்தான். (கூஉ)

குதிரையின் வேகம்.

1832 குலால னூக்கிய திகிரியிற் கொட்புறத் திரிந்தே
உலாவ ரும்பரி மேலுறைந் துலாவிய வீரன்
நிலாவு வாளினுல் நெடும்படை நிலைகுலைந் தழிய
வலாரி போல்வல சாரிகள் பலபல வகுத்தான்.

தெவ்வர் திகைத்தனர்.

1833 இன்ன திக்கினில் இப்படி இத்திறம் பாய்ந்து
வன்ன வெம்பரி வருகின்ற தென்பதை யாரும்
சின்ன மும்தெரி யாதுளம் தியங்கினர்; வீரன்
மின்னல் போன்ருெளிர் வாளொளிவீசுதல் கண்டார்.

சமர்முனை சரிந்தது.

1834 கொள்ளி வட்டம்போல் குலாவிமேல்வருகின்றபோதே
துள்ளி வெந்தலை துடித்தன எங்கணும் தொடர்ந்தே
கள்ளி யின்றலை கட்டிய தோட்டியால் கடியத்
தள்ளி வீழல்போல் சாயந்தன சமர்முனை சரிந்தே.

சிவத்தையா செய்த போர்.

1835 பக்கம் நின்றவர் பரிந்துகண் புதைக்கவும் படையுள்
ஒக்க நின்றவர் உடைந்துளம் பதைக்கவும் உம்பர்
மிக்கு நின்றவர் மிகவியந் துரைக்கவும் மேவித்
திக்கு வென்றவன் திருமகன் சேவகம் புரிந்தான்.

வீர வெறி.

1836 எறியும் வேல்கலை இடையிடை
விலக்கிமேல் எதிர்ந்தார்
முறியு மாறுவெம் முரணுடன்
முனைந்துமுன் தாவி
குறிசெய் தோச்சிய வழியெலாம்
கொலைத்தலை துமித்து
வெறிகொள் வீரனைப் வெங்களம்
எங்கணும் விரைந்தான். (கூஅ)

குதிரை ஏற்றம்.

1837 காலிடுக்கிலை கைக்குசை அசைப்பிலை கதித்து
மேலிருந்தவன் மனநிலை முழுவதும் தெளிந்து
வேலடர்ந்தஅவ் வெம்முனை விதமெலாம் உணர்ந்தப்
*பாலராமன்று பயின்றதை எவர்சொல்ல வல்லார்?

---

*இவ்வீரன் அன்று வீரேடு ஏறிப் போராடிய குதிரைக்குப் **பாலராமு** என்று பேர். கதிவேகமும் மதியூகமும் உடையது. உற்ற தலைவன் உள்ளம் உணர்ந்து வெற்றி வீறுடன் பொருகளத்தில் அடலுடன் ஆடல் புரிந்து வந்தது.

1838 சுட்ட குண்டுகள் யாவையும் கடந்துமேல் துள்ளி
எட்ட வீசிய படையெலாம் இடையிகந் தொழிய
ஒட்டி வெட்டிய ஊறெலாம் கடந்தொரு ஊறும்
பட்டி டாவகை பாதுகாத் துயர்ந்ததப் பரியே.

ஏக வீரன்

1839 மாக வூர்தியில் மருவிய விஞ்சையன் மான
வேக மோடுட னூர்ந்தயல் நின்றவர் தம்மைச்
சாக நூறிய தன்மைபோல் சமரினில் ஓடி
ஏக வீரனுய் அம்மகன் இகல்மிகச் செய்தான்.

அதிசய வியப்புகள்.

1840 வாவி வந்தவன் பரியினை வியப்பதோ? அதன்மேல்
மேவி நின்றஅவ் வீரனைப் புகழ்வதோ? வேலால்
ஆவி சிந்துறு நிலையினை அறிந்தும் அஞ்சாமல்
தாவி மண்டிய படைகளைத் துதிப்பதோ? அறியேன்.

நபாவு போராடியது.

1841 பாலராமு இவ்வாறு படைபுகுந்து
பணியாற்றப் பக்கம் மேய
*நீலமா வேணிஎனும் குதிரைமேல்
நபாவெனும்பேர் நெடிய வீரன்
வேலுடைவாள் உடனேந்தி வெங்கோபக்
கனல்மூள விரைந்து பாய்ந்து
காலனெனக் களம்புகுந்தான் கண்டவர்கள்
திண்டாடிக் கலங்க லானர். (ஈகூ)

பகைப்படை பட்டது.

1842 காற்றோடு கலந்துவரு கூற்றென்னக்
கடும்பரிமேல் கலித்தெழுந்து
பாற்றோடு † பறந்தோடிப் படுவேலால்
படைபடுக்கும் பான்மை நோக்கி

---

*இவ்வீரன் ஏறிவந்த குதிரைக்கு **நீலவேணி** என்று பேர். அதிசய வேகமும் ஆற்றலும் உடையது. கருமை கலந்த செம்மை நிறம் வாய்ந்தது. நெற்றிச் சுட்டி தோய்ந்தது.

† பாறு=பருந்து. நிணங்களை விருந்தாக உண்ண விழைந்து மேலே பருந்துகள் வட்டமிட்டு வந்துள்ளன.

வீற்றேடி விலகியும்பின் வீறேடு
படைகள்வந்து வெகுண்டு மொய்த்தே
ஆற்றது போராடி அலமந்து
தோற்றேடி அயர்ந்த வன்றே. (ாசு)

ஆதிராமுவின் அடலாண்மை.

1843 ஆதிரா மெனும் பெயர்கொள் அதிவீரன்
அடுபரிமே லிவர்ந்து பாய்ந்து
மோதிவரு படைமுரிய முடிவரிய
பெரும்போரை மூண்டு செய்தான்
சாதியுயர் புரவிகளில் தனித்தனியே
இனிதேறித் தறுகண் வீரர்
காதியமர் ஆடினர் களமெங்கும்
கவந்தமொடு கழுகும் ஆட. (ாரு)

நிணச் சேறு.

1844 வேல்வீரர் இவ்வாறு வெஞ்சமரம்
ஆடிவர வெகுண்டு வந்தார்
கால்வேறு தலைவேறு கைவேறு
மெய்வேறு கதுவி நின்ற
தொல்வேறு தொடைவேரூய்த் தொல்லுருவம்
அழிந்துநிணச் சேற்றில் தோய்ந்து
பால்வேறு தெரியாமல் படுகளம்எல்
லாம்பரந்து பட்டா ரன்றே. (ாசூ)

வெள்ளைத் தலைவன் வெகுண்டது.

1845 படைகுலைந்த நிலைநோக்கிப் படைத்தலைவர்
பதிஏவப் பரிந்து வந்த
அடுதிறல்வெங் * காலன்எனும் அதிபதிதன்
அரும்பரிமேல் அடர்ந்து தாவி
நெடியவடி வாள்ஏந்தி நீள்வடவை
எனச்சினந்து நிமிர்ந்து வந்தான்;
தொடுகழற்கால் வீரரெலாம் சுடுவெடிகள்
அயலேந்தித் தொடர்ந் தடர்ந்தார். (ாஎ)

---

* இங்கே காலன் என்றது (Collins) என்னும் தளபதியை.

காலன் ஏறிவந்த கடும் பரி.

1846 அத்தலைவன் ஏறிவந்த அடலுடைவெம்
பரிநிலையை அளந்து கூற
எத்தலைவ ராலுலும் இயலாதே;
எத்தலையும் எளிதில் சுற்றித்
தத்தியொரு நொடியில்வரும் தகவுடையது;
அழகுடையது; அமரில் தேர்ந்தது;
உத்தமநற் குணமுடையது; உரமுடையது;
உம்பர்பதிக் குரியது; ஒன்றே. (ஈஅ)

வீரப் பரியின் விறல் நிலை.

1847 போர்முரசம் கேட்டவுடன் பொங்கியிரு
செவிநெரித்துப் பொலிவு கூர்ந்து
கார்முகிலைக் கண்டுமனம் களித்தாடு
மயில்என்னக் களிப்புற் றோங்கிப்
பார்நிலையில் பதியாமல் பரதமுடன்
படுவேகம் படர்ந்து மேலே
சார்தலைவன் நிலைநோக்கிச் சமர்நிலையில்
மிகவூக்கிச் சார்ந்த தன்றே. (ஈசு)

கதிவேகங்கள்.

1848 கதிஐந்தும் சாரியையும் கைதேர்ந்த
கடும்பரிமேல் காலன் ஏறி
அதிவேக முடன்வரவே அடுத்தபடை
வீரரெல்லாம் ஆற்றல் மிக்கு
முதிர்வேக முடன்மூண்டு முனைமுகத்தில்
புகுந்தார்கள்; அரசன் சேனை
கொதியாழுன் குதித்தேறிக் குறித்தெதிரக்
கொடுஞ்சமரம் மூண்ட தன்றே. (ஈய)

நெடிய போர்.

1849 வாள்வீரர் வேல்வீரர் வல்லயத்தின்
வல்வீரர் மழுக்கள் பாலம்
ஆள்வீரர் கோல்வீரர் அங்கங்கே
தொடர்ந்தேறி அடர்ந்து தங்கள்

தோள்வீறு தோன்றஇவர் பொருதார்கள்;
அவர்கள்சுடு வெடிகள் நீட்டி
நீள்வீரப் பீரங்கி கலைநாட்டி
நெட்டுநெட்டாய் நெடும்போர் செய்தார்.

போர் வெறி.

1850 இருதிறத்தும் வெறியேறிப் படைவீரர்
அடல்மீறி எதிர்த்துத் தத்தம்
பொருதிறத்தை மறுதரத்தில் ஒருதிறத்தும்
வையாமல் பொங்கி மூண்டார்;
குருதித்திக் குதிகொண்டு நதிகொள்ளக்
குலத்தலைகள் குவிந்து துள்ள
அருகில்அத்தி நிணம்பிணங்கள் அடுக்கடுக்காய்
நிறைந்தோங்கி அடர்ந்த வன்றே. (ாயஉ)

பாஞ்சையர் பட்டு மாண்டனர்.

1851 சுட்டகடுங் குண்டுகளால் சுடுகின்ற
வெடிகளால் தொடுத்து நின்று
வெட்டியவெவ் வாள்களால் விரைந்துபரிப்
படைவந்து வெகுண்டு பாயத்
தட்டியநீள் வேல்களால் தாக்குண்டு
தளராத தனிப்போர் வீரர்
பட்டுருண்டு விழுந்தனரப் படுகளத்தின்
கொடுமைஎவர் பகர வல்லார்? (ாயஊ)

கோரமான கொலைக் களம்.

1852 கொடுங்கோப முடன்புகுந்து கொல்படைகள்
கொண்டெறிந்து கொதித்து மூண்டு
நெடும்போது நிலையாக வுலையாமல்
நேரலர்கள் நேர்ந்து எதிர்ந்து
கடும்போர்கள் புரிந்தமையால் களமெல்லாம்
கொலைக்களமாய்க் கவந்தம் ஆட
அடுங்கால தூதர்களும் அஞ்சஅதி
கோரமாய் அமைந்த தன்றே. ((ாயசு)

மடிந்துகிடந்த நிலை.

1853 மடித்தவாய் மடித்தபடி மாறியிடை
இமையாமல் மடுத்து நோக்கித்
துடித்ததலை பலதுள்ளித் தொடர்ந்ததலை
பலபல்லைத் தொடுத்து மென்று
கடித்ததலை பலமீசை கதித்ததலை
பலமீறிக் கடுத்தெழுந்து
நடித்ததலை பலகொதித்து நகைத்ததலை
பலவங்கு நடந்த அம்மா! (ாய்ரு)

உயிர் போயும் உருத்து நின்றது.

1854 வேல்பிடித்தும் வாள்பிடித்தும் விற்பிடித்தும்
வெய்யகவண் விசித்து மாட்டி
வால்பிடித்தும் கோல்பிடித்தும் வல்லயங்க
ளுறப்பிடித்தும் மழுக்கள் பிண்டி
மேல்பிடித்தும் விறல்பிடித்தும் வெங்கோப
முடன்வந்த வீரர் எல்லாம்
கால்விடுத்தும் தோள்விடுத்தும் கைவிடுத்தும்
தலைவிடுத்தும் கடுத்து மாண்டார். (ாய்சூ)

காலன் கொதித்து வந்தது.

1855 மன்னவன்தன் படைவீரர் மாண்டிந்தப்
படிவீழ மண்டி வந்த
ஒன்னலர்தம் படைவீரர் ஒருசிலரே
ஒதுங்கிநின்ருர்; ஒழிந்தார் எல்லாம்
சின்னபின்ன மாய்ச்சிதைந்து செத்தொழிந்தார்;
சேனையதி பதியாம் காலன்
அன்னகொடுங் காலன்போல் அடல்மீறி
அடுபடையோடு அடர்ந்து வந்தான். (ாய்எ)

மன்னன் மூண்டு புகுந்தது.

1856 படைவீரர் திரண்டுக்கிப் பக்கம்வரத்
துணைத்தலைவர் பாங்கு சுற்றக்
கடுவேகப் பரிகடவிக் கையிலுயர்
வாள்ஏந்திக் கடுத்துப் பொங்கி

அடல்மீறி எதிர்த்தவர்கள் அனைவரையும்
அழித்தொழித்துள் ஆர்த்து மண்டி
வடதிசைவாய் உயர்கோட்டை வாசல்வந்தான்;
மன்னன்வெகுண் டெழுந்து மூண்டான்.

இருபது வீரர் தொடர்ந்தது.

1857 மன்னனுயர் வாள்ஏந்தி வருமுன்னே
அருகுநின்ற வயவேல் வீரர்
துன்னியிரு பதுபேர்முன் துள்ளினர்
வெள்ளையனும் காவல் வீரன்
முன்னேடி நீள்வேலால் குத்தினன்;
அக்குத்தைக் காலன் ஏந்தி
தன்னெளிர்வாள் கடிதோங்கி வெட்டினன்
தலைதுள்ளிப் பறந்த தன்றே. (ாயகூ)

வெள்ளையத் தேவன் வீந்தது.

1858 வேல்குத்தை வாங்கியிந்த வெள்ளையனை
அந்தவெள்ளை வீரன் வெட்டி
மேல்கத்தி எடுக்குமுன்னே இருபதுவேல்
வல்லயங்கள் விரைந்து பாய்ந்த
கால்தத்திப் பரியோடு காலன்வீழ்ந்
துயிர்துறந்தான்; களித்து வீரர்
கோல்குத்திக் குலவையிட்டுக் குறித்ததுணைத்
தலைவரையும் கொன்று தீர்த்தார். (ாஉ0)

வெள்ளைத் தளபதிகள் மாண்டனர்.

1859 வெள்ளையத்தே வன்எனும்பேர் வீரனுயர்
தலைவெளியே விரைந்து வீழ்ந்து
துள்ளுமுன்னே வெள்ளையர்தம் தலைவர்எழு
பேருயிர்கள் துடித்து மாண்டார்;
பிள்ளைமகன் நெல்லெடுத்த பிழையாலிப்
பெருங்கொலைகள் பிறந்த அந்தோ;
எள்ளியதீ வினைஅணுவாய் இருந்தாலும்
இடர்மலையாய் எழுமே அம்மா! (ாஉக)

---

121. பிள்ளை மகன் நெல் எடுத்த பிழையால் பல உயிர்கள் மாண்டன; படுகொலைகள் நீண்டன. தீவினையால் தீயதுயர்கள் விளையுமே! என்பதை இது விளக்கி நின்றது.

காலனும் இறந்தான்.

1860 கருங்காலன் அந்நாளில் செங்கால
லுல்வீழ்ந்த கதைபோல் இன்று
பொருங்காலங் கருதியுயர் பரியேறிப்
படையுடனே பொங்கி வந்த
அருங்காலன் எனும்பெயர்கொள் வெண்காலன்
அழிந்தான்என் ரூர்த்த ஓசை
இருங்கால எழுகடலின் பேரொலியாய்
எங்கணுமே எழுந்த தன்றே. (ாஉஉ)

1861 மேலான கும்பினிக்கு மேன்மையா
யிருந்துபல வெற்றி கண்ட
காலன்எனும் தளபதியும் கடுகிவந்த
வெள்ளையரும் கடிது வீழ்ந்து
மாலுழந்து மாண்டொழிந்தார்; மற்றவர்கள்
மீண்டிழிந்து மறுகி நின்ரூர்;
வேலனரு ளால்வென்று வெற்றிகண்டோம்
என்றரசன் வியந்து நின்ரூன். (ாஉக)

மாற்றலர் உடைந்தனர்.

1862 எஞ்சிநின்ற படைவீரர் இரிந்தோடப்
பிற்கட்டும் விரைந்து கூடி
அஞ்சியுடன் அயலகன்ரூன்; அகல்வானில்
அமர்நிலையை அமர்ந்து நோக்கி
நெஞ்சுவந்த செங்கதிரோன் நிருபனுயர்
வென்றியைமேல் நின்ரூர் எல்லாம்
தஞ்சமுடன் உணரவுரை தருவான்போல்
தடங்கடலுள் குளித்த கன்ரூன். (ாஉச)

பொழுது அடைந்தது.

1863 போர்நோக்கி வெளிஎடுத்த பொங்கொளிகொள்
செவ்வேலைப் பொருத பின்பு

---

* கருங்காலன்=எமன். செங்காலன் சிவபெருமான். வெள்ளைக்காலன் பாஞ்சை வீரர் வேல்களால் ஈண்டு மாண்டு பட்டான். நீண்ட வெற்றி நிலவி நின்றது.

நேர்நோக்கி உறைசெறிக்கும் நீர்மைபோல்
கதிர்நீருள் மறைய வானம்
பார்நோக்கிப் படுகளச்செங் குருதியினுல்
பயந்ததெனப் பசந்து தோன்றக்
கார்நோக்கி வரநின்ற காவலன்மேல்
நின்றவினை கருதிச் செய்தான். (ாஉடு)

படுகளம் துடைத்தது.

1864 எழுநூறு தோட்டிகளை இனிதேவிப்
படுகளத்தில் இறந்து பட்டுக்
கழுதாரக் கிடக்கின்ற பிணக்காட்டைக்
கடிதகற்றிக் களத்தை எல்லாம்
பழுதாரப் பார்த்துவரு கெனப்பணித்தான்
பணிந்தவர்போய்ப் பரிந்துள் ளேறி
இழுதார எடுத்தகற்றி இடையிரவு
முடியுமுன்னே எழுந்து வந்தார். (ாஉசூ)

அடுசமர் ஆறியது.

1865 வந்தவரை உவந்தனுப்பி மண்டியவெம்
போரிலன்று மாண்டொழிந்து
நொந்தவர்தம் கிளைகளைமுன் நுனித்தறிந்து
தனித்தனியே நோக்கி ஆய்ந்து
வந்தபழி நிலையினுக்கு மனம்வருந்தி
யுயர்வென்றி வரவை ஓர்ந்து
சிந்தையுவந் தறுமுகனைச் சிந்தித்து
வினைவிளைவைத் தேர்ந்தி ருந்தான். (ாஉள)

போர் நிகழ்ந்த காலம்.

1866 * கொல்லம் தொளாயிரத் தெழுபத் தைந்தினில்
சொல்லுசித் தார்த்தி தொடர்ந்த ஆவணி
வல்லவெம் போரிது வந்து மூண்டது
வெல்லுதலாய் இவர் விளங்கி நின்றனர்.

---

* கொல்லம் ஆண்டு 975 சித்தார்த்தி வருடம் ஆவணி மாதம் பாஞ்சாலங்குறிச்சியில் இந்தப் போர் மூண்டது. ஆங்கிலேயர் கணக்குப்படி கி. பி. 1799 செப்டம்பர் மாதம் ஐந்தாந் தேதி (5—9—1799) ஆம்.

பொருது மாண்ட நேரம்.

1867 நன்பகல் நாழிகை பத்தில் மூண்டது
பின்பகல் நாழிகை இருபத்தெட்டினில்
வன்பகை மாண்டது; வாகை சூடியே
மன்படை மனமிக மகிழ்ந்து நின்றது. (ாஉசூ)

கால காலன்.

1868 பாலன்மேல் வந்தஅக் காலன் பண்ணவன்
காலயல் ஓங்கவே கலங்கி வீழ்ந்தனன்;
மாலுடன் வந்தஇக் காலன் மன்னன்கை
வேலுறு முன்னரே விழுந்து மாண்டனன் (ாஙO)

சேனைகளின் ஒழிவு.

1869 இன்றுவா நாளைவா என்று நாள்பல
சென்றுதேய் வுறச்செயும் தீயர்தங்குடி
பொன்றிய தென்னவே புகுந்த சேனைகள்
ஒன்றுமீ ளாவகை ஒழிந்து போகவே. (ாஙக)

போனவர் ஏங்கினர்.

1870 போனஅப் பிற்கட்டு புழுங்கி நொந்தனன்;
மானவேல் மன்னவன் மரபின் மாட்சியும்
ஆனபோர்த் திறங்களும் அறிந்துள் அஞ்சினன்;
ஈனம்நேர்ந் ததுவென எண்ணி ஏங்கினன்.

---

129 முற்பகல் பத்து மணிக்குப் போர் மூண்டது. பிற்பகல் 5½ மணிக்கு முடிந்தது. மூண்ட இப் போரில் காலன் (Collins), டங்களஸ் (Douglas), டார்மீக்ஸ் (Dormieux) பிளாக்கி (Blake), முதலிய படைத் தலைவர்களும் பல சிப்பாய்களும் இறந்து போயினர். எஞ்சி நின்றவர் பாளையங்கோட்டையை நோக்கிப் பறந்து போயினர்.

130. மார்க்கண்டேயரைப் பற்ற வந்த காலன் மகாதேவர் கால்உதையால் மறிந்து வீழ்ந்தான். பாஞ்சை மன்னனைப் பிடிக்க வந்த காலன் வீரர் வேலால் விளிந்து மாய்ந்தான்.

131. வஞ்ச நெஞ்சராய் வறியரைத் துயர் செய்யும் தீயவர் குடி மாய நேர்ந்ததுபோல் மருவலர் மாய்ந்து ஒழிந்தனர்.

சேனைத் தலைவன் உளைந்தான்.

1871 சேனையின் தலைவனுய்ச் சேர்ந்த பானர்மேன்
யானையின் திரளென அடந்த தம்மவர்
ஊனையும் உயிரையும் உகுத்த துன்னியே
ஏனைய மானமும் இழந்து ளைந்தனன். (ாஙஙு)

கோட்டையை வியந்தது.

1872 குண்டுகள் ஆயிரம் குறித்து மாட்டியும்
மண்டுகள் பட்டில மன்னன் கோட்டையே!
திண்டிற லானெனச் செப்பக் கேட்டனம்
கண்டனம் இன்றெனக் கதிகலங்கினன். (ாஙச)

பாஞ்சையர் வென்றது.

1873 பன்னிரு போரினில் பாய்ந்து வென்றவன்
கன்னிகர் தோளினன் காலன்என்றுபேர்
மன்னிய புகழினன் மாண்டு மண்விழ
இன்னவன் செய்தனன் இனிஎன் செய்வதே!

மாற்றலர் மறுகி வியந்தது.

1874 கருவியல் மருந்தெலாம் கரிந்து மங்கிய
எருவென இகழ்ந்திவன் எதிர்ந்து வென்றனன்;
வெருவருந் திறலுயர் வீரச் சேனையன்
பொருவருந் திறலினன் எனப்பு கன்றனன்.

மலை கலங்கினும் நிலை கலங்கான்.

1875 அலையடர்ந் தெனஎழுந் தடர்ந்த வெம்பரித்
தலைநிமிர்ந் தவரெலாம் தடிந்து வீழவே
நிலைகலங் காதுநேர் நின்று வென்றனன்
மலைகலங் கினும்கலங் காத மன்னனே. (ாஙஎ)

---

134. நெடிய பீரங்கிகள் கொடிய குண்டுகளை வீசியும் சிறிது மண்ணும் கோட்டை மதிலில் நின்று உதிரவில்லையே! என்று வெள்ளையர் உள்ளம் உளைந்துள்ளனர். அவ் வுண்மைகளை அவர் வாய்மொழிகள் வெளி செய்துள்ளன.

பிள்ளையால் மூண்டதே!

1876 தள்ளருந் திறலுடைத் தானை வேந்தனை
எள்ளரும் பகைவனு ஏற்க நேர்ந்ததே!
பிள்ளைஎன் பவனிடை இருந்து பேதித்த
கொள்ளையால் அல்லவோ? கொடுமை மூண்டதே!

வெள்ளையர் நொந்தது.

1877 வஞ்சமில் லாதவன்; மான முள்ளவன்;
அஞ்சிடா நெஞ்சினன்; ஆண்மை யாளன்;முன்
தஞ்செனச் சார்ந்தநற் பாளன்; தன்னைநாம்
வெஞ்சினம் மூட்டிவீண் விளைவிளைத் தனம்.

நெல்லையை அடைந்தனர்.

1878 என்றிவன் இயல்பையும் இகலையும் நினைந்து
அன்றவர் அகமிக வருந்தி நெல்லையை
ஒன்றியுள் இருந்தனர்; ஊழ்வி னைப்பயன்
துன்றிய போதெவர் துடைக்க வல்லரே? (ரசூ0)

படைத் தலைவர் புரிந்து உளைந்தது.

1879 படையுயர் தலைவனும் படிந்த பிற்கட்டும்
தடையற வெல்லலாம் என்று சார்ந்தவர்
இடையெதிர் திறலினை ஏன்று கண்டதும்
மிடைபகை நிலையினை வியந்து ளைந்தனர். (ரசூக)

பாஞ்சையர் அமர்ந்தது.

1880 இவ்வகை அவருளைந் திருக்க இவ்வழித்
தெவ்வழிந் தகன்றபின் சேனை வீரர்கள்
செவ்விய அரசிடம் செலவு பெற்றுப்போய்
அவ்வவர் நிலைகளில் அமர லாயினர். (ரசூஉ)

மறுநாள் உதயமாயது.

1881 வீரவெண் புகழொளி விரித்து மன்னவன்
ஏருயர் அமளிவாய் எழுமுன் எங்குமே
சீரிய செவ்வொளி பரப்பிச் செங்கதிர்
வாரிநின் றெழுந்தெழில் வயங்க வந்ததே.

மன்னனும் எழுந்தான்.

1882 பானுவந்து எழுந்ததும் பாஞ்சை வேந்தனும்
தானுவந்து எழுந்தனன்; சமரில் நேர்ந்துபின்
போனவர் நிலைகளைப் பொருந்த எண்ணியே
மானவீ றுடனிவன் மதித்தி ருந்தனன். (ாசுசு)

மருவலரை நினைந்தான்.

1883 மூண்டவெம் போரிடை முரிந்து போனவர்
வேண்டிய படைகளை விரைந்து சேர்த்துமே
மீண்டிவண் வருவரேல் மீள லாவகை
ஆண்டகை யுடன்அமர் ஆற்றல் வேண்டுமால்.

எதிர்வதை எண்ணினான்.

1884 எதிர்வதை நாடியே யாவும் எண்ணினன்;
அதிர்கழல் வீரரின் அவையைக் கூட்டினன்;
சதுருடன் ஆயவே சார்ந்து முந்தினன்;
மதிவலோர் யாவரும் மருங்க டைந்தனர். (ாசுஊ)

ஆவதை ஆய்ந்தனர்.

1885 வெற்றியந் திருவுடன் மேவி மன்னவன்
முற்றிய மகிழ்வுடன் முதல் அமர்ந்தனன்;
மற்றவர் யாவரும் வந்து கூடினர்
* அற்றைநாள் ஆவதை ஆய்ந்திருந்தனர். (ாசுஎ)

அதன்பின் நேர்ந்தது.

1886 இங்கிவர் இங்ஙனம் இருக்கப் பிள்ளைமேல்
பொங்கிமுன் போனவப் பொருநர் செய்கையும்
தங்கிய தன்மையும் சார்ந்த வன்மையும்
அங்குற அமைந்ததும் அறிந்து மேற்செல்வாம்.

ககூ - வது போர் மூண்ட படலம் முற்றிற்று.
ஆகக் கவி 1886.

---

* முதல் நாள் போரில் வெற்றி கண்டான். மறுநாள் (6—9—1799) வந்தது. பொருது உடைந்து போன வெள்ளையர் நெடிய படைகளைத் திரட்டி மீண்டு போராடவரினும் வருவர்; அவ்வாறு வந்தால் ஆற்ற வேண்டிய திறங்களைக் குறித்து வீரர்களுடன் விவேகமாய் ஆராய்ந்திருந்தான்.

இருபதாவது

தானுபதி தப்பி வந்த படலம்.

அமைச்சராயிருந்த சிவசுப்பிரமணிய பிள்ளை ஆற்றூரில் போய் அமர்ந்திருந்தார். ஆற்றூர் என்பது பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து தெற்கே திருச்செந்தூருக்குப் போகிற வழியிடையேயுள்ள ஒரு கிராமம். பொருநை நதிக்கரையில் இருத்தலால் ஆற்றூர் என்று அதற்குப் பேர் அமைந்தது. ஆத்தூர் என்று வழங்கப் படுகிறது. சமீனுக்கு உரிய மாளிகைகள் முதலியன அங்கு வளமாய் அமைந்திருந்தன. வெள்ளையர் பகை மூண்டதை அறிந்ததும் பிள்ளை அங்கே தந்திரமாய் தங்கியிருக்கநேர்ந்தார். பாளையங்கோட்டையிலிருந்து முன்னதாகச் சேனைத்தலைவன் அனுப்பி இருந்த படைகளுக்குத் தப்பி அவர் பாஞ்சைக்கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அந்த நிலைமைகளை இது விளக்கியுள்ளது.

சேனைத் தலைவன் எண்ணியது.

1887 சேனதி பதிஎனச் சேர்ந்தி ருந்தவன்
தானதி பதியினைத் தளைந்து கொண்டுபின்
மானதி பதியையும் மரும மாகவே
ஆனத படைகளால் அடர எண்ணினன். (க)

படை அடைந்தது.

1888 மந்திரிப் பிள்ளை ஆற் றூரில் மாண்புடன்
தந்திர மாகவே சார்ந்தி ருந்ததை
முந்துற அறிந்துமுன் முடுக்கி விட்டஅவ்
வெந்திறற் சேனைகள் விரைந்த டைந்தன. (உ)

பிள்ளை இருந்த நிலை.

1889 கும்பினி யார்பகை கொடுமை யாகவே
பம்பிய தாதலால் பாஞ்சை யம்பதி
நம்பிநாம் இருப்பது நலமன் றென்றவர்
தெம்புடன் வேற்றிடம் சேர்ந்திருந்தனர். (ஊ)

ஊரவர் கலங்கினர்.

1890 முந்துற எழுந்துமுன் மூண்ட சேனையுள்
மந்திரி மீதினில் வகுத்த னுப்பிய
அந்தவெம் படையவண் அடைய அங்குளார்
சிந்தைகள் கலங்கினர் திகைத்து நொந்தனர்.

அயர்ந்து நின்றனர்.

1891 போரிவண் புகுந்தமுன் இரவு போயந்த
ஊரினை யடைந்தனர்; ஊரி லுள்ளவர்
காரியம் யாதுமே காண்கி லாமையால்
யாருமே அஞ்சினர் அயர்ந்து நின்றனர். (ஙு)

உள்ளங் குலைந்தது.

1892 வெள்ளையர் படைவந்து வெளிவ ளைந்ததைப்
பிள்ளையுள் அறிந்ததும் பிழைபு குந்ததென்று
உள்ளுறச் சினந்தனன் ஒருவ ருந்துணை
கொள்ளவில் லாமையால் குலைந்து நின்றனன்.

உள்ளவர் அஞ்சினர்.

1893 கொள்ளைசெய் தவன்எனக் கொதித்து வந்தஅவ்
வெள்ளையர் வெடிகளை வேட்டெ ழுப்பினர்:
உள்ளிருந் தவரெலாம் உளறி அஞ்சினர்
எள்ளுறப் பகைவருள் ஏறி வந்தனர். (எ)

பிள்ளை ஒளிந்தார்.

1894 பிள்ளைமுன் மெள்ளவே பெயர்ந்து துள்ளிபோய்க்
கள்ளமாய் அயலிடம் கரந்தொ ளிந்தனன்:
தள்ளரு மனைவிநன் மக்கள் தன்கிளை
உள்ளவர் எவரையும் உடன்க வர்ந்தனர். (அ)

உள்ளம் உளைந்தார்.

1895 சொல்வலி யுடையவன்; சூழ்ச்சி மிக்கவன்:
பல்வலி யுடன்வந்து பற்ற லார்பற்ற
இல்வலி யாவையும் இழந்து ளைந்தனன்;
மல்வலி மன்னனை மருவ எண்ணினன். (கூ)

போருள் மறைந்தார்.

1896 போருற அஞ்சிநெற் போருள் * புக்கவண்
யாருமே அறிவுரு வகைய மர்ந்தனன்;
பாருயர் புகழுறு பாஞ்சை மாநகர்
நேருற நினைந்தனன் நெடிது நாடியே. (கo)

விரைந்து வந்தார்.

1897 ஆப்பரி சின்னதென் று அறிகி லாதுளம்
தேம்பினன் திகைத்தனன் தியங்கித் தேர்ந்துபின்
வாம்பரி ஒன்றின்மேல் வாவி மண்டியே
வேம்பரி வோடிவண் விரைந்து வந்தனன். (கக)

நகர் அடைந்தார்.

1898 அல்லினில் வல்விரைந்து அமைச்சன் அச்சமாய்
ஒல்லையில் புரவியை ஊக்கித் தூண்டியே
எல்லெழு பொழுதிடை எய்திஞன் பின்பு
நல்லநண் பகல்வந்து நகர் அடைந்தனன். (கஉ)

மன்னனைக் கண்டார்.

1899 பாஞ்சையம் பதிவந்து புகுந்து மன்னனை
வாஞ்சையாக் கண்டுமுன் வணங்கி நின்றனன்;
ஆஞ்சையை மீறியே அமர்வி னாத்தவர்
தாஞ்செய்த செயலெலாம் சார்ந்து கூறினன்.

உற்ற துயர்களை உரைத்தார்.

1900 மக்களை மனைவியை மருவி நின்றதன்
ஒக்கலைச் சிறைபிடித் தோங்கி ஒன்னலர்
மிக்கவெந் திறலுடன் விரைந்து சென்றதும்
துக்கமுற் றுள்ளதும் சோர்ந்து சொல்லினன்.

---

* பகைவர் புகுந்ததை அறிந்ததும் பயந்து ஒதுங்கிக் கொல்லைப் புறத்தில் குவித்திருந்த வைக்கோல் போருள் புகுந்து ஒளிந்திருந்தார். அந்த ஒளிவினை இது விழி தெரியவிளக்கியுள்ளது. போர் = வைக்கோல் பொதி.

கொற்றவன் நொந்தான்.

1901 வெற்றியுற் றேமென வியந்தி ருந்தவக்
கொற்றவன் இம்மொழி கூறக் கேட்டதும்
உற்றவுள் மகிழ்வெலாம் ஒழிந்து வெம்பழி
முற்றிய தெனத்துயர் மூழ்கி நொந்தனன். (கரு)

ஆற்றித் தேற்றினன்.

1902 ஆயினும் அமைச்சனை ஆற்றி அன்புடன்
மேயவன் மொழிகளை விளம்பித் தேற்றினன்:
தீயவல் இராவணன் சிறையில் வைத்தவத்
தூயவள் நிலைமுத்து வடிவும் தோய்ந்தனள்.

அபயம் அருளினன்.

1903 கற்புடைச் சீதையைக் கவர்ந்து சென்றஅப்
பொற்புய அரக்கனைப் பொன்ற மாட்டிஅவ்
விற்பனத் திருவினை விரைந்து மீட்டிய
அற்புதன் என்னநான் ஆக்கி ஈகின்றேன். (கள)

தானுபதி தவித்தான்.

1904 அஞ்சல்நீ என்றரசு அருளிச் சொல்லியும்
நெஞ்சுறு துயருடன் நிலைகு லைந்தனன்;
தஞ்சம் இலாமலே தவித்து ளைந்தனன்;
வெஞ்செயல் வினைத்தனன் விளைவில் நோகின்றான்.

அல்வினை அல்லலாம்.

1905 நெல்வினை விழைந்துபோய் நிறைகுலைத்ததை
வல்வினை செய்துமுன் வவ்வி வந்தவன்
இல்வினை இழந்திழி துயரம் எய்தினன்
அல்வினை விளைவினை அகலு வார்எவர்? (கசு)

தீவினை தீயதே.

1906 தீவினை தினையள வேனும் தீயென
ஆவியை வருத்துமே; அதனைச் செய்தவர்
நோவினை யுறுவரே; நொந்து மாள்வரே!
தேவியல் நியதியைத் தீர்வர் யாவரே? (உ0)

நெஞ்சம் தீயதேல் நஞ்சாம்.

1907 நெஞ்சகம் திரிந்துதீ நினைவை நேர்ந்தவர்
நஞ்சையுண் டாரென நாசம் நண்ணுவார்;
நெஞ்சகம் சூதுகள் வளர வாழ்ந்தவர்
நஞ்சம் இலாமலே தளர்ந்து தாழ்வரால். (உக)

கெடுவினை கேடே தரும்.

1908 மன்னுயிர் இன்புற மதித்துச் செய்தவர்
தன்னுயிர் இன்புறத் தழுவி வாழ்கின்றூர்;
அன்னியர்க் கலக்கணை ஆற்று கின்றவர்
இன்னலைத் தன்னுயிர்க்கு ஏற்று கின்றனர்.

வினையின் விளைவுகள்.

1909 நினைவுசொல் செயல்களை நெறியில் காத்தவர்
இனியராய் எங்கணும் இன்பம் எய்துவார்;
அனையன தியவேல் யாண்டும் அல்லலே
வினையென நீண்டுவெந் துயரம் மேவுவார்.

நல்லவர் அல்லவ ராஞர்.

1910 கல்விநன் குடையவர் கருதும் காட்சியில்
வல்லவர் வாக்குரை வன்மை மிக்கவர்
நல்லதோர் குடியினில் பிறந்த நன்மையர்
அல்லவர் தொடர்பினுல் அவல ராயினர். (உச)

மூண்ட முனைப்பு.

1911 மந்திரி என்றதோர் மதிப்பும் மாண்புயர்
தந்திரி என்றதோர் தருக்கும் சார்ந்தவர்
முந்துறப் பணிகின்ற முனைப்பும் தன்னையோர்
இந்திரன் என்னவே எண்ணச் செய்தன. (உரு)

முற்றிய செருக்கு.

1912 வெள்ளையர் ஈண்டுவந்து ஆள நேர்ந்தது
கொள்ளையர் மூண்டதாக் குறித்திகழ்ந்தனர்;
உள்ளகம் திரிந்தஅவ் வெறுப்பில் ஊறியே
பிள்ளைவெந் திறலொடு பெருக நேர்ந்தனர்.

பற்றிய துயரம்.

1913 நீண்டநாள் வெறுப்பினில் நிமிர்ந்து வந்தவர்
ஆண்டவர் நெல்லினை அள்ள நேர்ந்தனர்;
மூண்டவெம் படைவந்து முனைந்து முட்டவே
ஈண்டிய துயர்களை எண்ணி ஏங்கினர். (உஎ)

தம்பியர் வந்தது.

1914 அன்னவர் வருந்தியவ் வாறி ருக்கவே
இன்னருள் முருகனை இறைஞ்ச எண்ணியே
பொன்னெளிர் செந்தியில் போயி ருந்தநம்
மன்னவன் தம்பியர் வந்து சேர்ந்தனர். (உஅ)

இன்னல் உழந்தனர்.

1915 முன்னைநாள் மூண்டவச் சண்டை தன்னையும்
மன்னிளங் குமரர்கள் அறிந்து வல்விரைந்து
இன்னலோ டெய்தினர் எய்தி அண்ணல்தன்
பொன்னடி தொழுதனர் பொங்கி நின்றனர்.

இனைந்து மொழிந்தனர்

1916 சிங்கங்கள் உறுமிய செய்கை போலிரு
தங்கவொண் பதுமைகள் போன்ற தம்பியர்
செங்கண ராய்ச்சினந் துரைத்த போதினில்
அங்கண்நின்றவரெலாம் அஞ்ச லாயினர். (ஈ0)

எண்ணி இருந்தனர்.

1917 உற்றதோர் போரினில் உதவி யின்றியே
பெற்றதோர் துணைஎனப் பெருகி நின்றனம்
முற்றவும் நன்றென முனிந்து முன்னவன்
வெற்றியை நினைந்துளம் விழைந்து நின்றனர்.

அரசனுக்குத் தம்பியர் இருவர். தளவாய்க் குமாரசாமி, துரைச்சிங்கம் என்னும் பேரினர். ஆவணிமூலத் திருவிழாவைமுன்னிட்டு வழக்கப்படி முருகக்கடவுளைத்தொழுதுவரத் திருசெந்தூருக்குப் போயிருந்தனர். இங்கே மூண்ட சண்டையைக் கேள்வியுற்றனர். மீண்டு விரைந்து வந்து நிகழ்ந்ததையறிந்து நெஞ்சம் வருந்தி நிலை தெளிந்திருந்தனர்.

தம்பியருடன் நம்பி யிருந்தான்.

1918 தம்பியர் தமைத்தழீஇத் தழைத்த அன்புடன்
வம்புலாம் தார்புரள் மார்பம் புல்லியே
எம்பிரான் அருளினை ஏத்தித் தேற்றினன்
நம்பியுள் மகிழ்ந்தனன் நயந்திருந்தனன். (கூஉ)

மந்திரி கவன்றான்.

1919 மன்னவன் மகிழ்ந்தினி திருக்க மந்திரி
இன்னலும் கவலையும் இகழ்வும் நாணமும்
பன்னரும் படரொடு படர்ந்தி ருந்தனன்
அன்னவன் துயர்நிலை அளவி லாதவே. (கூங)

மறுகி நின்றான்.

1920 உற்றதன் மனைவியை உரிய மக்களை
மற்றுள கிளைஞரை மனைவ ளங்களைப்
பற்றலர் பற்றியே பறந்து போனதை
முற்றுற நினைந்துளம் முறிந்துளைந்தனன். (கூச)

எண்ணி ஏங்கினன்.

1921 கிள்ளைமென் மொழியுடைக் கேள்கொள் இல்லினைப்
பிள்ளைமுன் பிரிந்ததால் பேதுற்று அல்லினில்
உள்ளகம் கலங்கினன்; உறக்கம் நீங்கினன்;
எள்ளுறப் பலபல எண்ணி ஏங்கினன். (கூடு)

நெடிது நாணினன்.

1922 மனைவியைப் பிரிந்துநான் மறுகி வந்தது
நினைவரும் துயரென நெடிது நாணினன்;
இனைவரும் இழிபழி எங்கும் நீண்டதே
அனைவரும் இகழ்வரென்று அலமந் தஞ்சினன்.

இல்லை நினைந்தான்.

1923 கோடிஒண் பொருள்மிகக் கூடி நீடினும்
மாடுயர் மக்களும் மற்றும் கேள்களும்
பீடுறப் பெருகியே பேணி நிற்பினும்
ஈடுயர் இல்இன்றேல் இல்லை யாவுமே. (கூஎ)

இழி பழி யாயதே.

1924 ஒளியினை இழந்தகண் உலகை நோக்கினும்
தெளிவுற லின்றியே தேம்பி நிற்குமால்
அளியுடை மனைவியை அகன்ற வாழ்க்கையும்
இளிவுறு மேயன்றி இன்பம் இல்லையே. (கஅ)

மானம் கெட்டதே.

1925 மனைவியை இழந்தபின் மானம் கெட்டுநான்
மனையிடை யிருப்பது மாண்ப தாகுமோ?
வினைமிக மூண்டது மேலும் வெம்பகை
முனையுமுன் முனைவதே முடிவென் றுன்னினேன்.

ஆனதை ஆய்ந்தான்.

1926 மற்றைநாள் மன்னன்பால் மறுகி வந்தனன்
பற்றலர் நிலைகளைப் பாரித்து ஓதினன்
அற்றைநாள் சாகசன் செய்த அல்லல்போல்
இற்றைநாள் இடையிவர் இடர்கள் ஏற்றினர்.

ஆவதை நினைந்தான்.

1927 வந்திவர் வன்சமர் வலிந்து செய்ததும்
வெந்திற லாற்பல கொலைகள் வீழ்ந்ததும்
சிந்தியென் மனைவியைச் சிறை புரிந்ததும்
முந்திய கேண்மையை முழுதிகழ்ந்ததும். (கக)

பணடுகொண்டதை மொழிந்தான்.

1928 முற்றிய நண்புடை * முதன்மை யாளர்பால்
உற்றுடன் உண்மையை உரைத்து முன்னம்போய்ப்
பெற்றது போலவே பெருந லங்களைப்
பற்றிநாம் வருதலே பண்ப தாகுமால். (கஉ)

திருச்சிக்குச் செல்வோம்.

1929 இனியிவண் இருந்திடில் இகல்வ ளர்ந்திடும்
துனிமிகுந் தணியணி யாகத் தொல்படை

---

* முதன்மையாளர் என்றது கும்பினித் தலைவர்களை.

நனிவரும் நாசங்கள் நண்ணும் ஆதலால்
இனமுடன் *திருச்சிக்கின் றேகல் வேண்டுமால்.

1930 மூண்டபோர் வகையினை முதல றிந்துநாம்
வேண்டிய வகையினை விரைந்து செய்தலே
ஆண்டகை யாகுமால் அயர்ந்தி ருந்திடில்
நீண்ட வெந்துயர்களாம் நினைக நெஞ்சமே. (சுசு)

பல பல பன்னினன்.

1931 என்றுநேர் பலபல இசைத்து மந்திரி
ஒன்றவே தன்திறம் உரைத்து நின்றனன்;
வென்றிவேல் மன்னவன் விழைந்து கேட்டுப்பின்
நன்றுநின் னிலையென நகைத்தி கழ்ந்தனன்.

பிள்ளையை எள்ளியது.

1932 வெள்ளையர் படையினி மேலும் மேலுமே
வெள்ளமாய் வந்திவண் வெய்ய போரினைத்
தள்ளுற விளைத்திடும் தப்புவோம் என்றுய்
பிள்ளையே! நல்லதுன் பேச்சென் றெள்ளினன்.

வினை விளைவை விளக்கியது.

1933 நெல்லினை எடுக்குங்கால் நேர்வ தொன்றுமே
இல்லையென் றெண்ணினை போலும் தீவினை
மெல்லிய அணுவதே எனினும் வெந்துயர்
எல்லையில் மலையன எழுந்து நிற்குமே. (சுஎ)

அயலே போதல் தீது.

1934 பகைமிக மூண்டது; பட்ட வெங்கொலைத்
தொகைகளோ அளவில; துன்ன லார்கள்பால்
நகையுற நாமினிப் போதல் நஞ்சைவாய்
மிகையுறு விட்டுயிர் வீந்த தொக்குமே. (சுஅ)

---

* கும்பினி அதிகாரிகளின் காரியாலயம் திருச்சிராப்பள்ளியில் உள்ளது. அங்குள்ள அதிபதிகளைக் கண்டுபேசிச் சமாதானம் செய்து கொள்ளலாம் என்று நேரே குறித்துள்ளார்.

ஒட்டாரை ஒட்ட லாகாது.

1935 பற்றலர்க் கெளிமையைப் பகர்ந்து பாரினில்
பற்றிய வளமுடன் படிந்து வாழ்தலின்
வெற்றியந் திருவுடன் வெட்டி வீழ்தலே
பெற்றதோர் பேறெனப் பேணி நிற்பனே. (சுகூ)

நின்று வெல்வதே நிலை.

1936 போர்வந்து மூண்டது புகுந்து வென்றுபின்
நேர்சென்று சொல்லிலே நிலைமை என்படும்?
பாரொன்ற நெடும்படை படர்ந்து மண்டினும்
சூர்வென்ற பரனருள் துதித்து வெல்வனே.

இடம் பெயர லாகாது.

1937 இருந்தஇப் பதியைவிட் டெழுந்து நாமினிப்
பெருந்தக வோடயல் பெயர்ந்து போயிலே
*வருந்திமுன் அகன்றவன் வந்து மெல்லவே
பொருந்திற லுடனிங்குப் புகுந்து கொள்வனே.

தானம் நீங்கின் மானம் நீங்கும்.

1938 வலியதன் குகையினை இகந்து வாய்ந்தவெம்
புலியயல் போயதேல் புல்லி தாகிய
எலியும்வந் ததனிடை எளிதில் ஏறியே
நலிவுசெய் துலாவிடும் நவைகள் செய்திடும்.

இடம்பிரியின் ஈனமாம்.

1939 அடங்கலா வலியுடன் அடர்ந்தி ருந்தவெம்
மடங்கலே ஆயினும் வதிந்த காடுவிட்டு
அடங்கிய அயலிடம் அடையின் ஆண்மைபோம்;
இடம்பிரிந் தகலுதல் ஈனம் என்றனன். (சுஙூ)

வீண் பேச்சை விடுக.

1940 மனைவியைப் பிரிந்ததால் மதிக லங்கினை
வினையமும் இழந்தனை வெருவி நின்றனை
இனையன பேசினை என்று மன்னவன்
அனையவன் வாயினை அடக்கி நின்றனன். (சுசூ)

---

*வருந்தி அகன்றவன் என்றது முன்பு பொருது உடைந்து போன சேனைத் தலைவனை. நாம் வெளிஏறிப் போனால் எதிரி களி ஏறி விரைந்து உள்ளே அடலோடு வந்து புகுந்து கொள்வன் என்று புகுவதை உணர்த்தினன்.

மந்திரி அகன்ருன்.

1941 மன்னவன் வாய்மொழி கேட்டு மந்திரி
உன்னியுள் ளூஊந்தனன் உறுவ தோர்ந்திலன்
என்னநான் செய்வதென் றிரங்கி ஏங்கினுன்
அன்னதோர் போதினில் அயல கன்றனன்.

மறுபடியும் கூலத்தான்.

1942 அப்பொழுது அகன்றுபோய் அடுத்து வந்தனன்
ஒப்பருந் திறலினேய்! உனது அமைச்சன்நான்
இப்படி மனைவியை இழந்திருப்பது
செப்பரும் பழியிதைச் சிந்தை செய்திலை. (நுகூ)

மறுகி உரைத்தான்.

1943 குதலைமென் கிள்ளையைக் கொடிய பூனைவாய்
விதலையோ டளித்தது போல வெண்ணகை
மதலைமென் சொல்லியை வலிய தெவ்வர்கைச்
சிதலையோ டிழந்துநான் தேம்பு கின்றனன்.

குணம் என்று குறித்தான்.

1944 மேலதி காரிகள் மிகவும் நல்லர்நம்
பாலுற வாளர்கள் பண்பிற் சென்றுநாம்
மாலுற இப்படை வந்து செப்தவிக்
கோலத்தைச் சொல்லினுல் குணமுண் டாகுமே.

உரிமை என்ருன்.

1945 பழியுடன் பட்டுநான் பதைக்க நேர்ந்ததே
வழியுடன் பட்டுநீ வந்து மன்னஎன்
இழிவினை அகற்றினி எய்தும் போரினை
ஒழிவுற இயற்றுதல் உரிமை யாமன்றே. (நுகூ)

மன்னன் இரங்கினுன்.

1946 என அவன் மறுகவும் இளகி மன்னவன்
மனமிக இரங்கினன் வலிய வெய்யதீ
வினைவிளை வுறுவதை விலக்கு வாரெவர்?
துனைவுடன் ஏகவே துணிவு கொண்டனன்.

உறுதி குலைந்தது.

1947 கலைப்பவர் கலைத்திடில் கல்லு மேகரைந்து
உலைப்படும் மெழுகென உருகும் என்றுமுன்

நிலைப்படு பழமொழி நேர்ந்து நின்றவன்
புலைப்படு நிலையினில் பொலிந்து நின்றதே.

வெளிஏற நேர்ந்தான்.

1948 சாதனை யாகவே எதையும் சாதித்துப்
போதனை யொடுபதி பொருந்தி நிற்பினும்
வாதனை அவனுறும் வகையை நீக்கவே
வேதனை யுடனவெளி யேற நேர்ந்தனன். (சுஉ)

சேர்ந்த இனமே மனம்.

1949 சார்ந்ததன் வண்ணமாய் உயிர்கள் சாருமென்று
ஆர்ந்தநூல் அறிஞர்கள் அருளி யுள்ளனர்;
நேர்ந்தவர் எவரவர் நிலைமை நேருமே
சேர்ந்தவர்க் கென்பது தெரிய நின்றது. (சுஊ)

நம்பி நம்பினன்.

1950 கும்பினி அதிபரைக் கூடிக் கண்டிவண்
பம்பிய துயர்களைப் பகர்ந்து மேலினி
வம்புகள் உருவகை வழிவகுத்துமே
நம்பக மாய்வர நம்பி நம்பினன். (சுசு)

உளம் இரங்கினன்.

1951 நேர்ந்துள நிலைகளை நினைந்து தேர்ந்திலன்;
சார்ந்துள சூழலைச் சற்றும் ஆய்ந்திலன்;
சேர்ந்துள பிள்ளையின் சிந்தை நோவையே
ஓர்ந்துளம் இரங்கினன்; உறுதி குன்றினன்.

அறுதி யிட்டான்.

1952 உறுவதை உணர்ந்திடான்; உற்று நின்றவன்
மறுகிய மறுக்கமே மனத்துட் கொண்டனன்;
பெறுவது பீழையும் பிழையும் என்றிவன்
அறுதியிட் டறிந்துமே அகல மூண்டனன். (சுசூ)

உறுதியுடன் மூண்டான்.

1953 ஆண்டகை யாளராய் அறிவும் தீரமும்
பூண்டவர் ஆயினும் புறம்பொ திந்தவர்
நீண்டவெந் தீயராய் நேர்ந்து நிற்பரேல்
மூண்டவர் உரைவழி மூள நேர்வரே. (சுஎ)

உ0 - வது தானபதி தப்பி வந்த படலம் முற்றிற்று.

ஆகக் கவி 1953.

இருபத்தோராவது

பதிபெயர்ந்த படலம்.

தாளைபதிப்பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்கி அரசன் கோட்டையை விட்டு வெளியேற நேர்ந்ததை இது தெளிவாய்க் கூறுகின்றது. கும்பினி அதிபதிகளே நேரே கண்டு பேசினால் யாவும் சமாதானமாய் விடும் என்று நம்பித் திரிசிராபுரிக்கு உரிய வரிசைகளோடு இவர் செல்ல நேர்ந்தார். தாயாரிடம் போய் வணங்கி விடை கேட்டார். மறுகி உருகி நின்ற மனைவியைத் தேற்றினர். அந்தக் குலமகள் பரிந்து மொழிந்த மொழிகள் பரிதாபமா யிருந்தன. உரியவளைப் பிரிந்துபோக மனம் இல்லாதிருந்தும் பிள்ளை சொல்லுக்கு இசைந்தே பெயர்ந்து செல்லத் துணிந்தார். அந்தச் செலவு நிலைகளையும், விளைவுகளையும் இங்கே அறிய வருகின்றோம்.

அயல் அகல இசைந்தது.

1954 ஊரைவிட்டு வெளியேறல் ஊனமெனப்
பலபலநேர் உரைத்தும், பிள்ளை
நீரைவிட்டுச் சந்தரைக்கும் நீர்மைபோல்
நீங்காமல் நிலையாய் நின்று
சீரைவிட்டுப் பேரைவிட்டுச் சேர்ந்திருந்த
மனைவியையும் சேர விட்டுப்
போரைவிட்டு வந்தரசைப் பேதித்தான்
அவனும்அயல் போக நேர்ந்தான். (க)

தாய் இடம் விடை கேட்டது.

1955 தான்துணிந்த துணிவதனைத் தன்னருமைத்
தாயிடம்போய்த் தாழ்ந்து சாற்றிக்
கோன்பணிந்து விடைகேட்கக் குலவரசி
உளமுருகிக் குளிர நோக்கி
நான்கனிந்து பெற்றெடுத்த நன்மகனே!
அயலகலல் நவையே என்று
தேன்பொதிந்த திருவாயால் இனிதாகச்
சிலமொழிகள் செப்ப லானாள்: (உ)

அன்னை கூறிய அறிவுரைகள்.

1956 அறநீதி வழுவாமல் மனுநெறியாய்
இதுவரையும் ஆண்டு வந்து
பெறலரிய பெருநலன்கள் பெற்றிந்தப்
பெரும்பதியில் பெருகி யுள்ளோம்;
விறலுறுவன் திசைவென்ற வில்விசயன்
திருமகனே! வினையாய் மூண்டு
மறமுடன்போய்க் கொள்ளைசெய்து பிள்ளைமகன்
அல்லல்மிக வளர்த்து விட்டான். (ஈ)

பிள்ளை செய்த பிழை.

1957 நெல்லெடுத்த தீவினையால் நேசமாய்
நின்றவெள்ளை நிருபர் எல்லாம்
கல்லெடுத்த பகையாகிக் கடற்படையோடு
அடர்ந்துவந்து கடும்போர் மூண்டார்;
எல்லெடுத்த படைவீரர் எத்தனைபேர்
இருதிறத்தும் இறந்தார் அந்தோ!
இல்லெடுத்துப் போயினர்என்று ஏங்குகின்றான்
பிள்ளைமகன் எள்ளல்! என்னே! (சு)

பிழையாளன் பேச்சைக் கேளாதே.

1958 வெள்ளாளன் பெற்றமகன் வீற்றிருந்த
ஊரைவந்து வெள்ளை யாளர்
எள்ளாத படைகளுடன் எதிர்வளைய
இல்லையிழந்து ஓடி வந்தான்;

---

3. வீரபாண்டியன் தந்தையின் பெயர் திக்குவிசயத்துரை ஆதலால் "வில்விசயன் திருமகனே!" என்றுள். தாய் பதியைப் பிள்ளை மகன் என்று செல்லமா அழைத்து வருவது அரண்மனையாருள் வழக்கமா யிருந்தது.

4. உறவாயிருந்த கும்பினியார் பகையாய் மூண்டதை நினைந்து அன்னை இன்னல் உழந்துள்ளாள். உரைகள் அந்த உள்ளத்தின் துயரங்களை வெளிப்படுத்தி யுள்ளன.

5. தன் மனைவியை இழந்துவிட்டுப் பிள்ளை பிழையாய் ஓடி வந்திருப்பது பேடித்தனம் என்று வருந்தி யிருக்கிறாள்.

தள்ளாத திறல்விசயன் தனிவீரக்
குலமகனே! தரும மோதான்?
உள்ளாமல் நிலையொன்றும் உணராமல்
சொல்லுமவன் உரைகே ளாதே! (ரு)

இடம் பெய ராதே.

1959 பொல்லாத பகைமூண்டு பொங்கியுள்ள
பொழுதயலே போக நேர்ந்து
சொல்லாட வந்தனையே! தொல்லையரைக்
கணமுமிந்த நகரை விட்டுச்
செல்லாதே; என் அருமைத் திருமகனே!
முருகன் அருட் செயலால் இங்கே
எல்லாமே நல்லதாம்; இவண்இருந்தே
எதிர்வவெலாம் எதிர்ந்து காண்பாம். (சு)

ஊரைவிட்டுப் போகாதே.

1960 கூடுவிட்ட தேன்குளவி கொட்டாதென்று
உலகோர்கள் குறித்து நின்று
பாடுகின்ற பழமொழியும் பார்த்திலையோ?
நீரில்நின்று பகட்டை வெல்லும்
பீடுபெற்ற முதலையுமே வெளிவந்தால்
பிடிநாயும் பிய்த்துக் கொல்லும்;
வீடுவிட்டுப் போகாதே வினையாண்மை
விறலாண்மை விடாமல் நின்றே. (எ)

தானமே யார்க்கும் வலி.

1961 மானமே பெரிதாக மதித்துள்ள
மதியுடைய மகனே! நேரே
வானமே வருமெனினும் ஒருசிறிது
வசையுள்ளே மருவி நின்றால்
ஆனபே ரின்பமெலாம் வேண்டாம்என்று
அகல்வதே ஆண்மை யாகும்;
தானமே யாவர்க்கும் உயர்வலியாம்;
தலம்பெயர்தல் தகுதி யன்றே. (அ)

இடம் நீங்கின் இடர் ஓங்கும்.

1962 நீரிலே நெடிதாக விரைந்தோடும்
நெடுமீனும் நிலைபி ரிந்து
பாரிலே வந்துவிழின் படுதுயராய்ப்
பரிந்திழிந்து பதைத்துச் சாகும்;
போரிலே வலியுடைய போர்வீரர்
ஆனலும் புறம்பெ யர்ந்தால்
வேரிலே புழுவிழுந்த மென்கொடிபோல்
மேலொளிபோய் விளிவ ரன்றே. (கூ)

எதிர்வதை எண்ணுக.

1963 நேர்ந்துவரு பகைவர்களை நேர்நின்று
நெறிமுறையே பொருது வென்று
தேர்ந்துவரு புகழ்புரிந்து தேசோடு
வாழ்வதே சிறப்பாம்; போரில்
ஆர்ந்தபெரும் படைகளைநாம் அடலோடு
வெல்லாமல் அழிந்து வீழ்ந்து
பேர்ந்துயிர்போய் மாண்டாலும் பெரும்புகழே
பிறந்தபயன் பெற்ற மன்றே. (எ)

இறைவன் அருளைக் கருதி இனிது வாழுக.

1964 எந்தஇடர் நேர்ந்தாலும் எப்படைகள்
வந்தாலும் இனமா யிங்கே
இந்தநகர் தனிலிருந்தால் ஏற்றமாய்
வெல்லலாம்; இசையும் உண்டாம்;
செந்திநகர் எம்பெருமான் திருவருளே
பொருவரிய திருவாய் என்றும்
வந்துநமக் குதவிவரும்; வரமுடனே
வாழ்ந்துவரல் மரபா மன்றே. (கக)

உன்னி உளைந்தது.

1965 அன்னைசொன்ன அறிவுரைகள் யாவையுமே
அமைதியுடன் அமர்ந்து கேட்டான்;

---

11. பெற்றதாய் கூறியுள்ள புத்தி போதனைகள் எல்லாம் ஈண்டு உய்த்து உணர்பவர் உள்ளம் உருகி மறுகுவர்.

இன்னலுறு நிலைகளையும் எதிர்த்துள்ள
புலைகளையும் இடையே வந்து
பன்னரிய துயரோடு தாஞதி
பதிதுடிக்கும் பரிவும் நோக்கி
உன்னியுன்னி உளம்உளைந்தான்; ஒருவகையும்
தேராமல் ஒடுங்கி நின்ருன். (கஉ)

உறுதியாய்த் துணிந்தது.

1966 தாய்வார்த்தை யினிதுணர்ந்தும் பிள்ளைநிலை
தனைநினைந்தும் தளர்ந்து மன்னன்
நாய்வார்த்த செம்புலிபோல் நடுங்கிநின்று
மீண்டும்தாய் அடியில் வீழ்ந்து
போய்வார்த்தை ஒன்றுசொல்லித் துரைகளைக்கண்
டுடன்வருவேன் பொறுக்க என்ருன்:
வாய்வார்த்தை ஒன்றுமின்றித் தலையசைத்து
மவுனமாய் இருந்தாள் மன்னே! (கஙு)

மனைவியிடம் விடைபெற வந்தது.

1967 விடைபெற்று வெளியேறி அயல்மணிமா
ளிகையடைந்தான்; விழிநீர் சிந்தித்
தொடைபெற்ற மென்மயில்போல் துளங்கிநின்ற
மனைவியைக்கண் டுளம்க லங்கிக்
கொடைபெற்ற தடங்குடங்கை கொண்டணைத்துக்
குலைந்தயரல் கோதாய்! யான்போய்
இடையுற்ற பகைஅகல இனிதுரைத்து
நனிவருவன்; இரங்கல்! என்ருன். (கசு)

---

12. தன்னிளையுடன் தாய் உரைத்த அறிவுரைகளைக் கருதி மன்னன் மறுகியிருக்கிருன். உறுதி ஒன்றும் தெரியாமல் பரிதாபமாய்ப் பரிவு கூர்ந்துள்ளான்.

13. இங்கே நிகழ்ந்துள்ள துயரக் காட்சிகளைக் கூர்ந்து நோக்கி உணர்ந்து கொள்ள வேண்டும்.

14. தொடை=தொடுத்துவிட்ட அம்பு. உற்ற துயரங்களை நினைந்து உள்ளம் துடித்துள்ளமையால் அயில் அம்புகள் பட்ட மயில் என நேர்ந்தாள்.

மனைவியின் விநயமொழிகள்.

1968 என்றலுமே எதிர்ஒன்றும் சொல்லாமல்
விம்மியழு திரங்கி ஏங்கி
நின்றயலே ஒதுங்கிஎன்றன் நெஞ்சம்நிலை
குலைகின்றது அரசே! இங்குத்
துன்றியவெம் பகையிருக்கத் துரைநேரே
தொலைபோதல் அழகோ? என்றும்
வென்றியுறு குலக்கொழுந்தே! வினைநிலைதேர்ந்
தினிதமர்தல் விதியாம் என்னுள். (கரு)

மனம் கலங்கி மறுகியது.

1969 பொல்லாத கனவுகளும் புரையான
கெடுகுறியும் புகுந்து சின்னுள்
நில்லாமல் நிகழ்கின்ற நிலையாக
என்னுள்ளம் நிலைக லங்கிச்
சொல்லாமல் இருக்கின்றேன் தோன்றலே!
தோக்கலவார் குலத்துக் கெல்லாம்
எல்லோனு யிலங்கொளியே! இல்அகலா
திலங்கியிவண் இருத்தல் நன்றே. (கசு)

கனவுகளை எண்ணிக் கலங்கியது.

1970 அரியவிலைத் தரளமணி மாலையற்று
விழக்கண்டேன்; அரசே! முன்கைச்
சரிகையுடைந் திடக்கண்டேன்; சண்டாளர்
பலர்தொடர்ந்தோர் தலையை வெட்டிப்
பெரியமரக் கிளையில்விட்டுப் பேசாமல்
போகின்ற பீழை கண்டேன்;
கரியகொடுங் கனவுநிலை என்சொல்வேன்?
கண்ணுளா! கலங்கு கின்றேன். (கள)

---

16. அரண்மனையைவிட்டு எந்த வகையிலும் வெளியே போகலாகாது என்று அழுது கண்ணளாய் இயம்பியுள்ளாள்.

17. மூண்டுள்ள கொடிய கனவு நிலைகளைக் குறித்துள்ளாள். அல்லலான அவல நிலைகள் உள்ளத்தை உருக்கியுள்ளன.

தேவி சென்ற நிலை.

1971 தேவிதிருக் கோவில்நின்று சிறுபருவ
வாலமங்கை சிந்தை நொந்து
மேவுபழஞ் சேலைசுற்றி வெந்துயரம்
முகம்தேக்கி வெளியில் ஏறிக்
கோவியல்நம் கோட்டையினைப் பலமுறையும்
பரிவுடனே கூர்ந்து நோக்கிக்
கூவியழு தவலமுடன் வடதிசையில்
போயினளே! கொடுமை அந்தோ! (கஅ)

1972 நாடெங்கும் கீர்த்தியுடன் நலமாக
வாழ்ந்துவரும் நம்குடிக்குக்
கேடென்றும் இல்லையென எவ்வுயிர்க்கும்
கேண்மையே கிளர்ந்து வந்தோம்;
பாடொன்று பண்புடனே நண்பர்களா
யிருந்தவரைப் பகைவர் ஆக்கி
வீடொன்றும் தெரியாமல் வினைவிளைந்து
நீண்டுளதே விதிதான் என்னே! (கக)

நிலை நிற்றலே புகழ்.

1973 ஆருயிரின் அருந்துணையே! யானைபரி
சேனைதளம் யாவும் இங்கே
நேரமர்ந்து நிறைந்திருக்க நிறைகுலநம்
வீரரெல்லாம் நேர்ந்திருக்க
ஓர்துணையும் இல்லாத ஒருமகன்போல்
தனியகலல் உரனே? மீண்டு
போரடர்ந்து வந்தாலும் பொருதிங்கே
நிலைநிற்றல் புகழா மன்றே. (உ)

வலி நிலை தெரிதலே நன்று.

1974 காலமுடன் இடவலியும் கருதலர்கள்
நிலைவலியும் கலந்து நின்ற

---

18. தம் குலதெய்வம் ஆகிய சகதேவி கோயிலைவிட்டு நோயுமுந்து வடதிசை நோக்கி அழுதுபோயுள்ள அவல நிலையைக் கவலையோடு தொழுது உரைத்துள்ளான்.

மூலமுறு படைவலியும் முன்வலியும்
பின்வலியும் முற்றும் நோக்கி
ஞாலமுறு காவலர்கள் நண்ணலரை
வெல்வரென நல்லோர் சொல்வர்;
ஏலஎதிர் வலியறியாது இகலூக்கல்
நவையாக்கும் என்பர் மன்னே. (உக)

உரிய மனைவி முன் உருகி நின்றனள்.

1975 என்றந்தக் கற்பரசி யிரங்கிமனம்
கரைந்தினிதாய் இயம்ப லோடும்
வென்றிமிகு மன்னவனும் உருகிநின்றனன்;
அவளுரையை வியந்து கொண்டு
துன்றியநம் பிள்ளைமகன் துடிக்கின்றனன்
போய்வருவல் துளங்கல் என்றனன்;
நின்றுளைந்தக் குலமகளும் நெஞ்சமிக
அஞ்சுதென நேர்ந்து சொன்னள். (உஉ)

பதி பிரியவே பரிந்து நின்றனள்.

1976 அஞ்சியுளம் வருந்திநீ அயர்ந்தழேல்
அகன்றுவிரைந் தடைவேன் என்று
வஞ்சியிடம் சொல்லிவிட்டு வல்விரைந்து
வெளிவந்தான்; மங்கை அந்தோ!
நெஞ்சுதுடித் தலமந்து நெடுவிழிநீர்
நிலஞ்சோர நீள நோக்கிப்
பஞ்சமலர்க் கணைமதனைப் பிரிந்திரதி
பதைத்ததுபோல் பரிந்து நின்றனள். (உங)

அவலப் பிரிவு.

1977 தாய்பரிந்து பலவாறு தடுத்துரைத்த
தகவுரையும் தன்பால் அன்பால்

---

22. நேர்ந்துள்ள பரிதாப நிலைகளையும் பிரிவுகளையும் நினைந்து உணர்பவர் நெஞ்சம் கரைய நேர்வர்.

23. அரசி மறுகி உருகி நின்ற பரிதாபமான அவல நிலை எவரையும் அங்கே அழுது புலம்பச் செய்தது.

வாய்மையுறு மனைவிவாய் மதிமொழியும்
மனத்தைமிக உருக்கி னலும்
சேய்மையுற வேண்டுமென்று பிள்ளைசொன்ன
தீமொழியே திடமாய் நின்று
நோய்மையுடன் புறம்தள்ள நம்பிஎதிர்
தம்பியரும் நுவல நேர்ந்தார். (உச)

தம்பியரும் தடுத்தார்.

1978 நங்குலத்து வீரமக்கள் பலர்மாண்டார்;
பகைப்படையும் நாச மாகி
மங்கியொழிந் ததுமேலே வருவதொன்றும்
தெரியவில்லை மகிழ்வு மில்லை
இங்கிவ்வா றிருப்பதொன்றும் கருதாமல்
இடம்பெயர்தல் இழிவே என்று
சிங்கவிளங் குருளைகள்போல் தம்பியரும்
இதமாகச் செப்பி நின்றார். (உடு)

உள்ளம் துணிந்து போனான்.

1979 உள்ளவர்கள் சொல்நிலையும் உளநிலையும்
உணர்ந்தாலும் மன்னன் அந்தப்
பிள்ளைமகன் சொல்மறுக்க மாட்டாமல்
பிரயாணம் துணிந்து நின்றான்;
தள்ளரிய தம்பியரும் தன்கிளைவீ
ரரும்தொடரப் பிள்ளை ஏக
ஒள்ளியநற் பரியேறி இரவேழு
நாழிகையில் ஊர கன்றார். (உசு)

நகரம் நைந்த நிலை.

1980 கோசலைசேய் பிரிந்தநகர் போலந்தப்
பாஞ்சைநகர் குலைந்து நைய
மாசனங்கள் மறுகிநின்றார்; மந்திரியை
மிகஇகழ்ந்தார்; நாச காலன்
யோசனையால் நம்முடைய உயர்அரசும்
இந்நிலையில் உலைந்த தென்று

பேசாத பேச்செல்லாம் பேசிநின்றூர்;
துயரடைந்தார் பேசார் கொல்லோ! (உஎ)

சனங்கள் கொதித்து வைதது.

1981 அன்றுபோய்க் கொள்ளைசெய்தே அநியாய
மாய்ப்பகையை ஆக்கி வைத்தான்;
ஒன்றிவந்த பிற்கட்டை உறவுசெய்ய
ஒட்டாமல் உலைவு செய்தான்;
இன்றுபோர் நேர்ந்திருந்தும் ஏந்தலையூர்
விட்டெழுப்பி இழுத்துப் போனான்;
என்றுமிவன் கெடுமதியன் நம்குடியைக்
கெடுத்தான்என்று எள்ளி வைதார். (உஅ)

எட்டப்பன் இசைத்தது.

1982 பதிபெயர்ந்து மன்னன்வெளிப் பட்டதறிந்து
எட்டப்பன் பறந்து வந்தே
அதிபதியாம் பிற்கட்டுக் கானதெல்லாம்
அறிவுறுத்தி ஆளை நீவிர்
இதுசமையம் விட்டுவிடின் இனிப்பட்டு
மடிவிர்!என ஏத்தி நின்றான்;
மதிகலங்கி இருந்தஅவன் இதையறிந்து
மிகவிரைந்து வஞ்சம் சூழ்ந்தான். (உகூ)

சேனைத் தலைவன் செய்தது.

1983 வடதிசையில் உள்ளமன்னர் எல்லார்க்கும்
நிருபங்கள் வரைந்து போக்கி
இடமறிந்து பிடித்திவனைக் கொடுப்பவர்கள்
பெரும்பேற்றை எய்து வாரென்று
அடைவுடனே தனியுணர்த்தி அங்கங்கே
அடுபடையை அமைத்து வைத்தான்;

---

27. இராமனைப் பிரிந்த அயோத்திபோல இந்த மன்னன் பிரிந்துபோனபோது பாஞ்சை நகரம் பரிதாபம் படிந்தது; மாந்தர் எல்லாரும் படுதுய ருழந்து பரிந்து நொந்தனர்.

எட்டையாபுரம் ஜமீன்தார் எட்டப்ப நாயக்கர் மூட்டிய கோள் மூண்டு நீண்டு கடிது வேலை செய்ய நேர்ந்தது.

திடவிசயன் இவன்ஒன் றும்அறி யாமல்
வடதிசையை நோக்கிச் சென்றான். (கூ0)

சென்ற வகை.

1984 ஐம்பதுபேர் குறிகாரர் ஏழுபரி
ஒருசிவிகை அமைச்ச ரேடு
தம்பியர்கள் நெருங்கிவர இடையிடையே
இடங்கண்டு தங்கித் தங்கி
வம்புமலர்ப் பொழில்புடைசூழ் கோலாரு
பட்டியுற்றான் அவ்வூர் மன்னன்
நம்பிதனை எதிரழைத்து நல்விருந்து
செய்யஅங்கு நண்ணி நின்றான். (கூக)

வேளை பார்த்திருந்தான்.

1985 கோலாரு பட்டிமன்னன் இவனையுவந்
தழைத்துப்போய்க் குறித்துப் போற்றி
மேலான விருந்தொன்று மேன்மையுடன்
செய்தளித்தான் மேவி அங்கே
காலாறி இனிதிருந்து *கும்பினியின்

---

30 பாஞ்சைப்பதி வெளியேறியதை அறிந்ததும் படைத் தலைவன் மிக விரைந்து வேலை செய்ய நேர்ந்தான். எதிரி முதிர் வேகமாய்ச் செய்து வருகிற செயல்களை யாதும் அறியாமல் இவர் இயல்பாகவே பிரயாணம் செய்துள்ளார்.

31 கோலார்பட்டி என்பது ஒரு சிறு ஜமீன். சாத்தூருக்குக் கிழக்கே உள்ளது. ஜமீன்தார் பேர் **இராஜகோபால நாயக்கர்.** பாஞ்சை அரசு வருவதை அறிந்ததும் எதிர்கொண்டு கண்டு உவந்து அழைத்து வந்து அரண்மனையில் விருந்து புரிந்தார். அந்த உபசாரத்தை ஏற்று அங்கே இவர் தங்கியிருந்தார். ஒரு பல்லக்கு, ஏழு குதிரைகள், ஐம்பது போர் வீரர்கள், தம்பியர் தாணபதிப் பிள்ளைகளோடு இவர் சென்றிருப்பதை இங்கே தெளிவாகத் தெரிந்து கொள்கின்றோம்.

*கும்பினியின் தலைமை அதிபதிகள் முன்பு தன்பால் அன்புடையராய் நண்பு புரிந்திருந்தார் ஆதலால் இந்நம்பி இவ்வாறு நம்பி இருந்தார். வினை வெம்பி நின்றது.

அதிபதியைக் கண்டு நேரே
பாலான பயனெடு மீளலாம்
எனவேளை பார்த்தி ருந்தான். (கூஉ)

பகைப் படை வளைந்தது.

1986 இப்படியங் கிருக்குங்கால் எட்டப்பன்
பெரும்படையும் இயல்சங் கத்தின்
வெப்பமிகு பரிப்படையும் விரைந்தோடி
வந்தந்தக் கோட்டை தன்னை
ஒப்பரிய திறலுடனே உடன்வளைந்த;
உள்ளிருந்த மன்னன் ஓர்ந்தான்;
எப்படிநேர்ந் ததுகண்டாய் பிள்ளையே!
என்றிரங்கி இடித்துச் சொன்னன். (கூங)

மூண்டு வந்துள்ள படை நிலை.

1987 ஐந்நூறு போர்வீரர் அடல்குதிரைப்
படைகளுடன் அடர்ந்து வந்தே
எந்நேரம் பிடிப்பதென எதிர்நோக்கி
விரைந்துள்ளார் இந்நேரத்தே
முன்னேறிப் பொருதனைத்தும் மூண்டுதொலைத்
திடுவன்என முனைந்தெ ழுந்தான்;
அந்நேரம் தம்பியரும் ஆர்த்தெழுந்தார்;
அமைச்சயலே அயர்ந்து நின்றான். (கூச)

மன்னன் பாய்ந்தான்.

1988 மன்னனுடை வாள்ஏந்தி வன்பரிமேல்
தாவினன் மருங்கு சூழ்ந்தே
அன்னதுணைத் தம்பியரும் மைத்துனரும்
ஆறுபேர் அடுத்து மண்டித்

---

33 பரிப்படை=குதிரைப் பட்டாளங்கள். உம்முடைய பேச்சைக் கேட்டு என் கோட்டையை விட்டு வெளியேறி வந்ததனால் விளைந்துள்ள கேட்டைப் பாரும்! என்று பிள்ளையிடம் உள்ளம் உளைந்து உருத்து உரைத்திருக்கிறான். எட்டப்பன் மூட்டியுள்ள கோளும், மூண்டு வந்துள்ள படைகளும் நீண்ட வினை விளைவுகளாய் நிமிர்ந்து நிலவி நின்றன.

துன்னிநின்ற பெரும்படைமேல் துணிந்துநேர்
பாயவே சூழ்ந்து மொய்த்தார்
சின்னபின்ன மாய்வீழச் செங்குருதி
நீராடித் தீர்ந்து சென்றார். (கூடு)

வெட்டி ஏறி விரைந்து போனான்.

1989 வெட்டிமேல் பரிதட்டி வடதிசையில்
விரைந்தேக வீய்ந்தார் போக
ஒட்டிநின்ற படைவீரர் உள்ளிருந்தார்
அனைவரையும் பிடித்துக் கொண்டார்;
முட்டியவப் போரில்நின்றார் முப்பத்து
நான்குபேர் பிள்ளை முன்னைப்
பட்டவராய்ப் பிடிபட்டார்; அனைவரையும்
படுசிறையாப் பற்றிப் போனர். (கூசு)

பிள்ளையை எள்ளிச் சென்றார்.

1990 நெல்லாலே பகைவிளைத்து நெடும்போரை
மூட்டி விட்டான்; நேரே நின்று
சொல்லாலே வெளியேற்றி அரசுமுதல்
அனைவருக்கும் துயரே செய்து
கொல்லாமல் கொன்றுநின்றான்; கொலையுறவே
போகின்றான்; கொடுமை சூழ்ந்த
பொல்லாத பிள்ளையுடன் போந்ததே
பிழையென்று புலம்பிப் போனர். (கூஎ)

மூண்டு தொடர்ந்தவர் மீண்டார்.

1991 வன்புலிபோல் பாய்ந்துகெலித் தடலோடு
வடதிசையில் வாவிப் போன
மன்பரியைப் பின்தொடர்ந்து மதிப்புடைய
படைகளைமேல் வகுத்து விட்டார்;
கொன்படைகள் கொடிதேந்திக் கொடும்பரிகள்
கடிதேதவிக் கொதித்துச் சென்றார்

---

37 தாணுபதிப்பிள்ளையும் அவருடைய தம்பியும் பாஞ்சை வீரர்கள் முப்பத்திரண்டு பேர்களும் அன்று அங்கே அகப் பட்டார். சிறைப் பட்டவர் சிந்தை நொந்து வைதார்.

என்புலனும் தெரியாமல் இடந்தோறும்
தேடியலைந் தினைந்து நின்றூர். (கூஅ)

வெள்ளையன் பிள்ளையை இகழ்ந்தான்.

1992 பிடிபட்ட பேர்களுடன் பிள்ளை தனை
நாகலா புரம்கொ ணர்ந்தார்
அடிபட்ட அந்நகரைக் கைப்பற்றி
மன்னனையும் சிறையில் ஆக்கிக்
குடிபட்டுக் கூடாரம் கொண்டிருந்த
பேனமனும் சேனைக் கோன்முன்
கடிபட்டு நிறுத்திஞர் அமைச்சை அவன்
கண்டவுடன் கடுத்தி கழ்ந்தான். (கூகூ)

சிறையில் இட்டான்.

1993 அன்றுநீ ஆற்றூரில் தப்பி அயல்
ஓடிஞைப் அரசைக் கூட்டிச்
சென்றுமே திருச்சிக்குத் திடமாகச்
சேரநின்ருய் சீர ழிந்தே
இன்றகப்பட் டிங்குவந்தாய்! இனிஎங்கே
நீபோவாய்? இடமும் சொல்வேன்:
ஒன்றியிடை சிறிதிருபோ என்றவனைக்
கொடுஞ்சிறையில் ஒடுக்கி வைத்தான்.

கொடுமை சூழ்ந்தான்.

1994 கொல்லுகின்ற கூற்றுவன்போல் கொடுமையாய்
நோக்கியவன் குறித்துச் சொன்ன

---

38 கோலார்பட்டியில் மூண்டு வளைந்த படைகளை வென்று வெளிஏறி குதிரைமேல் தாவி வடதிசை நோக்கி மன்னன் வாவிப் போனன். தம்பி முதலிய ஆறு வீரர்களும் குதிரைகளில் உடன் ஊக்கிப் போனர். பின்தொடர்ந்து பிடிக்கப் போன படை வீரர்கள் பிழைபட்டுத் திரும்பினர்.

39 பேனமன் என்றது கும்பினிப் படைகளுக்கெல்லாம் தலைமைத் தளபதியாயிருந்த பானர்மேனை. (Kannerman) இவன் மிகவும் கொடியவன். கும்பினி ஆட்சிக்குப் பிள்ளையே பெரிய இடையூறு யிருக்கிறுன் என்று உள்ளம் கடுத்து உருத்துக் கொலை நோக்கோடு கொதித்து நின்றுன்.

சொல்லினையும் பொருளினையும் சூழ்ந்துள்ள
நிலைகளையும் சுற்றி எண்ணி
அல்லலுழந்து அலமந்து தம்பியுடன்
பிள்ளையங்கே அவமாய் நொந்து
பல்வகையும் துயர்மூண்ட படியறிந்து
முடிவறியப் பதைத்தி ருந்தான். (சுக)

கொலை குறித்தான்.

1995 அன்றுபோய் மூன்றுநாள் அகன்றபின்பு
அமைச்சனேர் அழைத்து வந்து
கன்றியவெஞ் சிந்தையுடன் கடுத்திருந்த
பேனமன்முன் நிறுத்த நோக்கி
இன்றுனக்குத் தூக்கென்றான்; இடைநின்றூர்
நடுங்கினர்; பிள்ளை ஏங்கி
ஒன்றியவக் கொலைநிலையை உணர்ந்துள்ளம்
கலங்கியே உளைந்து நொந்தான். (சுஉ)

பிள்ளை உள்ளம் கலங்கினர்.

1996 மன்னன்சொற் கேளாமல் மதிகெட்டு
வெளியேறி மடமை யாக
இன்னவகை அகப்பட்டிங் கெய்தினேன்
இடம்பெயரா திருந்தால் இந்தச்
சின்னமகன் இன்னபடி செப்புவனு?
எனவுள்ளே தியங்கி நொந்தான்:
என்னபிழை செய்தேன்நான் ஏனிந்தக்
கொலைத்தண்டம்? என்று கேட்டான். (சுங)

கொன்று தொலைத்தான்.

1997 குற்றங்கள் பலசெய்தாய்! கொடுமைகளை
நாட்டிலே கூட்டி விட்டாய்!
மற்றவரும் எமையிகழ்ந்து வரிதரா
வகைபுரிந்தாய்! வன்மம் மூட்டிக்

---

41 தானுபதி தம்பி பேர் வீரபத்திரபிள்ளை. இந்த இருவரையும் கொடிய சிறையில் வைத்தான். பிள்ளையைக் கொன்று தொலைக்கவே கடிது சூழ்ந்து அக் கொடியவன் மூண்டான்.

கொற்றவனைக் குணங்கெடுத்துக் கொலைகள்பல
வீழ்வித்தாய் கொடிய தூக்கே
உற்றதுனக் கெனவுரைத்தான் கொலைஞர்பாய்ந்
துடன்தூக்கில் ஊக்கி யிட்டார். (சுசு)

தலையை அறுத்தான்.

1998 பிள்ளை துடித் துயிர்மாளத் தம்பிமுதல்
அனைவருமே பெரிதும் கூவி
வெள்ளமென விழிநீர்கள் வீழவாய்
விட்டழுதார்; வெள்ளைப் பாவி
உள்ளமிகக் கொடியதென உள்ளவரெல்
லாம்தம்முள் உளைந்து நொந்தார்;
துள்ளியுயிர் போனபின்பு பிள்ளை தலை
தனையறுத்துத் தூக்கிக் கொண்டு: (சுரு)

கழுவில் மாட்டினான்.

1999 கடிமதில்சூழ் பாஞ்சாலங் குறிச்சிநகர்
மேல்பாலோர் கழுவை நட்டி
வடிகொளதன் முடிமீதில் அம்முடியை
மாட்டிவைக்க வகுத்து விட்டான்;
கொடியஅந்த நிலையினைக்கண்டு அனைவருமே
குலைநடுக்கம் கொண்டு நின்றார்
படியிலிந்தப் படிவருமென்று ஒருவன்முடிவு
எவரறிந்து பகர வல்லார்? (சுசூ)

கொடிய கொலை பாதகம்.

2000 *செத்தொழிந்து போனபின்பும் செயிர்த்துவந்து
தலையறுத்துச் சிறுமை யாக
வித்தொன்றும் இல்லாமல் வெய்யகொலை
பாதகத்தை விரைந்து செய்தான்

---

45. பிள்ளையின் கொலையையும், தலையை அறுத்துக் கொண்டுபோன புலையையும் கருதி யுணர்வார் கண்ணீர் சொரிவார்.

*அந்நிய நாட்டு வெள்ளையன் இந்நாட்டுள் புகுந்து துணிந்து செய்துள்ள கொடிய கொலைபாதகச்செயலை நெடிது நினைந்து நெஞ்சம் கவன்று எல்லாரும் வருந்தி நின்றார்.

மத்தொன்று தயிர்என்ன மாநிலத்தார்
உயிர்பதைத்தார் மனத்தே ஆசைப்
பித்தொன்றி நின்றமையால் வெள்ளையர்கள்
பிழைகள்செய்து பிழைக்க லானர். (சுஎ)

நெடிய நீசம்.

2001 இந்நாட்டில் உள்ளவர்கள் எல்லாரும்
தமக்கடங்கி இருக்க வேண்டி
முன்னெட்டிப் பாஞ்சைமேல் மூண்டுவந்தார்
போராடி முரிந்து போனர்;
பின்னெட்டிப் பதிபெயர்ந்த ததியறிந்து
பிள்ளைதனைப் பிடித்துக் கொண்டார்;
எந்நாட்டும் இல்லாத கொடியகொலை
பாதகத்தை என்று செய்தார். (சுஅ)

வெள்ளைத் தீயன்.

2002 சேனதி பதிஎன்று சேர்ந்திருந்த
வெள்ளைநிறத் தீயோன் அந்தத்
தானதி பதிஎன்னும் பிள்ளைதலை
தனைத்துணித்துத் தயவே இன்றி
ஆனைத பெரும்புலையை அழியாத
கொடும்பழியை ஆக்கி நின்றான்;
ளனைதி உடலெடுத்தார் எல்லாரும்
பாதகன்என்று உருத்து வைதார். (சுகூ)

---

49. பிள்ளையைக் கொன்ற பின்பு தலையை வெட்டிக் கொண்டுபோய்ப் பாஞ்சைக்கோட்டை எதிரே பலரும் காண்டு கலுழக் கழுவில் நட்டுவித்தான். இந்த நாட்டு மக்கள் அஞ்சி நடுங்கி அடங்கி ஒடுங்கி வெள்ளையர்க்கு வணங்கிநிற்க வேண்டும் என்றே கொடிய கொலைபாதகமான நெடிய இந்த நீசச் செயலை அந்த வெள்ளையன் உள்ளம் துணிந்து செய்துள்ளான். தான்செய்ய மூண்டுள்ளதைத் தலைமை அதிபதிகளுக்கு விரைவாய் எழுதிவிட்டான். 11—9—1799-ல் அவன் மருமமாய் எழுதி விடுத்துள்ள ஆங்கில நிருபத்தைப் **பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்** முதல் பாகம் பக்கம் 179ல் பார்க்க. படுபாதக நிலைகள் அடு புலைகளாய் நின்றன.

பழி பாதக வழி.

2003 இந்நாட்டுள் வாழுகின்ற யாவருமே
என்றுமே எதிர்பே சாமல்
தன்நாட்டில் உள்ளவர்க்கு வழிவழியே
தாசர்களாய்ச் சார்ந்து வாழ
மூன்னுட்டி விரகோடு மூர்க்கமாய்க்
கொடுங்கொலையை மூண்டு செய்தான்
எந்நாட்டோ இருந்தவந்த எட்டருடன்
எட்டனுமே இணைந்தான் அந்தோ! (நுய)

படு நீசப் பரிசு.

2004 எட்டப்பா எட்டப்பா எட்டப்பா
என்றெவரும் எள்ளி ஏசும்
திட்டப்பா டெல்லாமே திரணமென
எண்ணிவெய்ய தீமை நண்ணி
வெட்டப்பா! கொல்லப்பா! என்றுபிள்ளை
தனைப்பிடித்து விரைந்து தந்து
பட்டப்பா டானபல பரிசுகளைப்
பாவியிடம் பணிந்து கொண்டான். (நுக)

அல்வினை அழிவே.

2005 சொல்என்ன! பொருள்என்ன! சூழ்ச்சிஎன்ன!
மாட்சிஎன்ன சுருதி யுத்தி
வல்விரைந்து வரத்தொடுக்கும் வனப்பென்ன!
மதிப்பென்ன மன்ன னை
வெல்வருசீர்ப் பாண்டியனுக் கீண்டியநட்
பாகிநின்ற மேன்மை என்ன
அல்வினையாம் நெல்வினையால் அத்தனையும்
பாழாகி அழிந்த அந்தோ! (நுஉ)

பின்னும் ஒரு கொலை.

2006 இவன்தூக்கில் இறந்தபின்னர் இரவப்பன்
என்னுமந்த மன்னன் தம்பி

---

51 எட்டப்பா = தூர விலகிப் போ: எட்டி அப்பால் போய் விடு. வையம் இவ்வாறு வைய அவன் வெய்ய னுயினன்.

நவம்தூக்கும் அழகுடையான் சவுந்தரபாண்
டியன்என்னும் நாம முள்ளான்
அவன்தூக்கில் இடப்பட்டான்; ஐயகோ!
எனஎவரும் அலற லானர்:
பவம்தூக்கும் வினைப்பயனே பழவினையின்
படுபயனே பார்த்தோர் யாரே? (நூஉ)

பாஞ்சையைப் பற்றினர்.

2007 பதிபெயர்ந்து போனபின்பு பாஞ்சைநகர்
நிலையறிந்து படைக ளோடு
ததியறிந்து பிற்கட்டும் பேனமனும்
சார்ந்துவந்து பற்றிக் கொண்டார்;
மதியயர்ந்துள் இருந்தவர்கள் மனம்கலங்கி
அயலிருந்தார்; வளஞ்செ றிந்த
நிதிகளெலாம் கண்டவர்கள் மிகவியந்து
நேர்ந்ததென நினைந்து கொண்டார். (நுசு)

அதங்கள் செய்தார்.

2008 பேனமன்என் பான்புதிதாய்ப் போந்தபெரும்
படைத்தலைவன் பெரும்போர் வல்லான்
சேனையதி பதியாகித் தென்திசையெல்
லாம்அடக்கச் சங்கத் தார்பால்
மானஅதி காரங்கள் பெற்றுவந்தோன்
வன்னெஞ்ச வஞ்சன் பிற்கட்டு
ஆனவனைத் துணைக்கொண்டிங் கடங்கலரை
யடக்கிமிக அதங்கள் செய்தான். (நுஙு)

இனி மன்னனைக் காண்போம்.

2009 அன்னவனே பாஞ்சையையும் அயலிருந்த
நாகலா புரமும் பற்றி

---

88 நாகலாபுரம் ஜமீன்தாருடைய தம்பி சவுந்தரபாண்டியன் என்னும் பேரினன். தீரமும் ஊக்கமும் உறுதியும் உடையவன்; அவனையும் கொடுமையாகத் தூக்கிலிட்டுக் கொன்றான்.

89 வெள்ளைத் தளபதி இந்நாட்டவர் உள்ளம் கலங்கக் கொடிய படு கொலைகளைக் கடிது செயதுள்ளான்.

உன்னரிய கொலைத்தூக்கை இன்னவகை
யுடனியற்றி உலகொடுக்கித்
தன்னரசு கொண்டிங்கே தருக்கியிருந்
தான்; முன்னம் தாவிப் போன
மன்னனிலை இன்னதென வல்விரைந்து
நாமினிமேல் வருந்திக் காண்பாம்: (நுசு)

வெற்றி வீரன் விரைந்தது.

2010 சுற்றி நின்ற படையைத் துணித்துமுன்
வெற்றி வெந்திற லோடு விரைந்தவன்
அற்றை நாள்பதின் காவதம் போனதால்
மற்றை ஏழு பரிகளும் மாண்டன. (நுஎ)

குதிரையின் கதிவேகம்.

2011 கண்ணும் உள்ளமும் காண்டற் கரியதோர்
எண்ணில் வேகத் தெழுந்து பறந்தன;
விண்ணில் மேவிய வெம்பரி வேறிடை
மண்ணில் வீழ்ந்து மறிந்தன போன்றன. (நுஅ)

முத்துராமன் முடிவு.

2012 முத்து ராமென முன்பெயர் பெற்றவத்
தத்து வாம்பரி தன்குடல் அற்றிடை
செத்து வீழ்ந்ததைக் கண்டதும் மன்னவன்
சித்தம் நொந்து தியங்கி மறுகினன். (நுகூ)

2013 வாயு வென்ன மனம்எனப் பாயுமத்
தூய ஒண்பரி துள்ளி இறந்ததைச்
சீய மன்னவன் கண்டு தெருமந்து
மாய நேர்ந்த வகைஎன மாழ்கினன். (சுஎ)

---

56 கோலார்பட்டியிலிருந்து தப்பி ஆறு குதிரை வீரர்களோடு தனது பட்டத்துக் குதிரையில் ஏறி வீரேடு தாவிப்போன வீர மன்னன் நிலைமையை இனி அறிய வருகிறோம்.

59 மன்னன் ஏறிப் போன பட்டத்துக் குதிரைக்கு முத்துராமு என்று பேர். வெள்ளை நிறம் உடையது. அழகும் வேகமும் அறிவும் உடையது. அதிசய நிலையது; அழிவுற நேர்ந்தது.

60 உரிய பரி மாய்ந்து போகவே தன் உயிர் மாய்ந்தது போல் உள்ளம் ஓய்ந்து உறுதி குலைந்து வீரன் தேம்பினன்.

பரியின் பான்மைகள்.

2014 தெள்ளு பால்எனத் தேசு மிகுந்தொளிர்
வெள்ள மேனியும் மேலுள நாயகன்
உள்ளம் ஓர்ந்துகொள் ஒண்மையும் திண்மையும்
தள்ள ருந்தகை சார்ந்துள தன்மையும்: (சுக)

உள்ளம் உருகினன்.

2015 அழகும் வேகமும் அன்பும் அமைதியும்
விழைவ றிந்து விரைந்தெழு மேன்மையும்
பழகி நின்ற கதிகளின் பான்மையும்
உழையி ருந்ததும் உள்ளி யுருகினன். (சுஉ)

பரியை நினைந்து பரிதபித்தான்.

2016 இந்தி ரன்பரி அன்ன அதன்முகம்
முந்தி வந்து முகந்துகண் ணீர்வடித்து
இந்த வுழும்எற் கெய்திய தேதஎன
நொந்து போயினன் நோவறி யாதவன். (சுங)

அழுது போனான்.

2017 உள்ளம் கன்றி உயர்பரிக் கானதோர்
பள்ளம் அங்குப் பகுத்துப் புதைத்துடன்
வெள்ளம் நீர்விழி சோர விரைந்தனர்
வள்ள லோடுபின் வந்தவர் யாவரும். (சுச)

---

62 தலைவனுக்குஅபாயம் நேர்ந்ததுஎன்று அறிந்து விரைந்து தாவி வெகுதூரம் வேகமாய் போனமையால் ஆவி போயது.

63 அந்தக் குதிரை இறந்துபடும்பொழுது அரசனைக் கடைக் கண்ணால் கனிந்து நோக்கிக் கண்ணீர் மல்கி உயிர் நீங்கியது. பரியின் அந்தப் பரிதாப நிலை பதியின் உயிரை உருக்கியது; விழிகள் நீரைச் சொரிந்தன. வெய்ய துயரங்கள் விரிந்து நின்றன; அழுது கொண்டே வழியே போயினன்.

64 உள்ளங்களை உருக்கி உயிர்களைத் துயருறச் செய்யும் நிகழ்ச்சிகள் இவ் வீரன் பெயர்ச்சியில் நிகழ்ந்துள்ளன.

யாவும் ஆவி போயின.

2018 வாவி ஓடிய வாசிகள் யாவுமே
ஆவி போயின; யாவரும் தம்முயிர்
தாவி ஓடிய தாமெனத் தாழ்ந்துடன்
மேவி நாடி விரைந்துபின் சென்றனர். (சுஞ)

நெடு நெறி போயினன்.

2019 வீரம் அன்றி விரகொன்றும் கண்டிலா
நீரன் நேர்வரு தம்பிய ரோடொரு
மாரன் வல்வன வாசம் புகுந்தென
நேர டர்ந்து நெடுநெறி போயினன். (சுசு)

கடுகி நடந்தான்.

2020 சிவிகை யூர்ந்தும் செழும்பரி ஏறியும்
சவிகொள் சீருடன் சார்ந்து திரிந்தவன்
கவிகை பாதுகை இன்றிக் கடுவெயில்
புவியின் மண்சுடப் போந்தனன் பொங்கியே.

கால்கள் கடுத்தன.

2021 நடந்து முன்பழ காமையி னலடி
படர்ந்து கொப்புளம் பாயப் பதைத்தனன்;
திடங்கொள் சிந்தை யுடன்செயிர்த் தேறியே
கடந்து போயினன் காவதம் காலினே. (சுஅ)

தும்பியர் வெம்பினர்.

2022 அண்ணல் மண்ணில் அடிபட ஏகுதல்
கண்ணின் நோக்கிக் கலுழந்து தொடர்ந்துபின்
உண்ணிறைந்த உறுதியின் ஊக்கியே
நண்ணி யேகினர் நற்றுணைத் தம்பியர். (சுக)

நம்பி இரங்கினன்.

2023 தம்பி மார்கள் தவித்துத் தருக்குடன்
வெம்பி ஏறி விரைவதை நோக்கினன்;
நம்பி யுள்ளம் இரங்கி நயனங்கள்
அம்பி னைக்கவல் அம்பெனச் சென்றனன். (எய)

---

65 எழுபது மைல்கள் வேகமாய்த் தாவி வந்துள்ளமையால் குதிரைகள் குடல்கள் அறுந்து கொடிது மாண்டன.

ஆனியூர் அடைந்தனர்.

2024 காடும் மேடும் கடந்து சிவகங்கை
நாட டைந்தனர்; நாடியோர் ஊரிடைக்
கூடி நின்றனர்; கூட அவ் வூரவர்
ஓடி முன்வந் துபசரித் தோம்பினர். (எக)

ஊரார் பார்த்தனர்.

2025 உருவும் திண்மையும் ஒண்மதி என்னவே
திருவ மைந்து திகழ்முகம் தேசுயர்
பருவம் யாவையும் பார்த்திவர் யாவரோ
பெருமை யான பிறப்பினர் என்றனர். (எஉ)

உபசரித்தனர்.

2026 பாஞ்சை யம்பதி என்பதைப் பாங்குடன்
வாஞ்சை யோடு தெரிந்து வணங்கினர்;
ஆஞ்சை செய்யும் அரசென ஆர்வமாய்ப்
பூஞ்சை கூர்ந்து புகழ்ந்துடன் போற்றினர். (எங)

மறவர் உறவு

2027 மறவர் என்னும் மரபிடைக் கள்ளர்என் றுறவர் ஆகி உயர்ந்துள அன்னவர்
அறவர் என்னநின் றன்புடன் மன்னனை
முறைமை யோடெதிர் பேணினர் முன்னின்றே.

ஒரு வாரம் ஆயது.

2028 ஊருளே யுறின் ஊறுறும் என்றயல்
சார நின்றவர் குன்றுயர் சாரலில்
பூர மாயிவர் போந்திருந் தாரவண்
வாரம் ஒன்று வசமாய்க் கழிந்தது. (எரு)

நண்பன் நாடி வந்தான்.

2029 வாசி யூர்ந்து வடதிசை நோக்கியே
தூசி யூரத் தொடர்ந்துமுன் போனவன்
ஆசில் எவ்வழி ஆயதென் றுய்ந்தங்கே
மூசி வந்தனன் முன்னுற வானவன். (எசு)

அன்பு புரிந்தான்.

2030 வீர கஞ்சயன் என்பவன் வேந்தனுக்கு
ஆரும் அன்பன் அடைந்ததைக் கண்டதும்
சாரும் இவ்விடம் தம்பி! நீ சார்ந்தது
வீரம் வந்து விளைந்தது மேலுற. (எடு)

யாவும் விளைவினன்.

2031 எங்கி ருந்துநீ எவ்வழி வந்தனை?
இங்கி ருப்பதை எப்படி ஓர்ந்தனை?
அங்கு நின்றுள காரியம் யாது? எனப்
பொங்கி நின்று புரிந்து வினவினன். (எசு)

வந்தவன் நொந்தான்.

2032 என்று மன்னன் இயம்ப அவனையும்
ஒன்றி யுள்ள கிளையையும் உற்றவர்
துன்றி நிற்கும் நிலையையும் தூக்கியே
கன்றி நின்று கரைந்து கலங்கினன். (எஎ)

வீர கஞ்சயன் வெதும்பியது.

2033 நின்றிருந்த நிலை என்னே! நிலைகுலைந்து மலையடைந்து
சென்றிருந்து நாட்கழிக்கத் தீவினை ஒன்றிருந்ததுவோ?
அன்றிருந்தே அமைச்சைநிலை அடக்காமை யால்அரசே!
இன்றிவ்வாறு அடைந்ததென இரங்கிமிக ஏங்கினன்.

பெருமை போயதே!

2034 வெற்றியே புரிந்துவந்த வேந்தனே! நம்முன்னோர்
பெற்றிருந்த பெருமையெல்லாம் பிள்ளைவந்து
[கெடுத்தானே;
கொற்றமலி தோக்கலவார் குலத்துக்கெல் லாம்பெரிய
குற்றமிக நேர்ந்ததே! கோமகனே! எனக்குலைந்தான்.

---

75. வீரகஞ்சயன் என்பவர் காடல்குடி ஜமீன்தார். பாஞ்சாலங்குறிச்சியார்க்கு உறவினர். மன்னன் இடம்பெயர்ந்து போய் இன்னல் அடைந்துள்ள நிலைகளை உன்னி உளைந்து உரிமையோடு விரைந்து நேரே காண வந்தார்.

தெவ்வர் தேடித் திரிகின்ருர்.

2035 இடம்பிரிந்த நிலையறிந்தே எட்டப்பன் எக்களித்தான்
உடன்பிறந்து கொல்லுகின்ற நோய்என்ன ஒன்னலரை
மடம்பிறந்த நெஞ்சினனுய் மருவிநின்று படைஎழுப்பிக்
கடம்பிறந்த கரிதேடும் காளைஎனத் திரிகின்ருன். (80)

கோளன் கொலைச் செயல்.

2036 கோள்மூட்டிக் கொலைமூட்டிக் குடிகெடுக்கும் வகை [நாடி
வாள்மூட்டும் படையுடனே வழியெங்கும் தேடுகின்ருன்;
வேள்மூட்டும் கோலாரில் வேந்தேநீ வென்றகல
ஆள்மூட்டும் வீரரையும் அமைச்சனையும் பிடித்தகன்ருர்.

பிள்ளையை எள்ளினர்.

2037 சிறையாகப் பற்றியவர் செருக்கூர்ந்து சேர்ந்துபோய்க்
குறையோடு கும்பிநின்ற கும்பினியின் தளபதிமுன்
முறையோடு நிறுத்தினர் மூண்டுகொதித் தவன்தீய
நுறையோடு சூழ்ந்துநின்று சுடுமொழிகள் பலபுகன்ருன்.

கொலை புரிந்து தலை அரிந்தார்.

2038 நாகலா புரந்தன்னில் நாடறியப் பிள்ளைதனைச்
சாகவே தூக்கிலிட்டுத் தலையினைநம் பாஞ்சைஎதிர்
போகவரு வார்கண்டு புலைதெளிந்து குலைநடுங்கக்
காகங்கள் சூழ்ந்துகத்தக் கழுமுனையில் குத்திவைத்தான்.

நிலை குலைந்தான்.

2039 பிள்ளை இறந்தான்என்று பேச்சைஅவன் பேசவே
உள்ளமிகத் துடிதுடிக்க உயிர்பதைக்கக் கண்ணீர்கள்
வெள்ளமென விழுந்தோட வெய்துயிர்த்து மேல்ஏங்கித்
தள்ளரிய தனிமேரு தளர்ந்ததென நிலைகுலைந்தான்.

கலங்காதவன் கலங்கினன்.

2040 அலைகலங்க வந்ததென அடுபடைகள் அடர்ந்தேதறிக்
குலைகலங்க வெடிதீர்த்துக் குண்டுகள் ஆயிரமூட்டி
மலைகலங்கப் பொருதுநின்ற வன்சமரில் ஒருசிறிதும்
நிலைகலங்கா நின்றநெஞ்சும் நிலைகுலைய நின்றயர்ந்தான்.

வெளி ஏற்றிப் பழி ஆற்றினன்.

2041 தன்மதியே மேலாகத் தனிநிலையே தருக்கிநின்றான்;
முன்மதியோர் உரைத்தநூல் முழுதறிந்தும் அறியாமல்
என்மதியும் கேளாமல் என்னையுமே வெளியேற்றி
வன்மதியாய் உயிரிழந்தான் வழிக்கெல்லாம் பழியாக.

எல்லாம் இழந்தேன்.

2042 பதியிழந்த போதேயென் பலிசிழந்தேன் பண்பிழந்து
மதியிழந்து வலியிழந்து மான்பிழந்து மரபினுக்காம்
துதியிழந்து தொடர்பிழந்து தொல்லிலவினைத் தொடர்பான
விதியுழந்து படுகின்றேன் விளைவறிந்து மெலிகின்றேன்.

நெடுந்துயரம் கண்டேன்.

2043 நின்றநிலை குலையாமல் நேர்நின்று நேரலரைக்
கொன்றுகுவித்து என்னுடைய குலவீரம் உலகறிய
வென்றிபுனைந்திருக்காமல் விதிபிடர்நின்றுந்தியதால்
கன்றியயல் வந்திடையே கடுந்துயரம் கண்டுள்ளேன்.

பழி புகுந்தேன்.

2044 நீஅயலே போகாமல் நிலைத்திங்கே இருக்களன்றன்
தாயுரைத்தும் மனையுரைத்தும் தம்பியர்கள் தனியுரைத்தும்
பேயுரைத்த வகைநின்ற பிள்ளைமகன் உரைக்கிரங்கிப்
போயுரைத்து வருவலெனப் போந்துபழி புக்குழந்தேன்.

மதி அயர்ந்து பதி பெயர்ந்தேன்.

2045 ஊரைவிட்டுப் பேராமல் உறுதியாய் நின்றிருந்தால்
போரைவிட்டுப் புறங்காட்டிப் புலையாடிப் போன அவர்
பாரைவிட்டுப் பதியைவிட்டுப் படைகளெலாம் மடியவிட்டுச்
சீரைவிட்டுத் தேசம்விட்டுச் சீமையுறச் செய்திருப்பேன்.

அதிபதிகளைக் காணின் யாவும் நலமாம்.

2046 சங்கஅதி பதிகள்பால் சார்ந்தபோர் நிலையுணர்த்தி
மங்களமாய் வரஎண்ணி வந்தடைந்திவ் வாறடைந்தேன்
இங்கினிமேல் இருப்பதிழிவு இயல்பான நண்புடையான்
பொங்குபுதுக் கோட்டைமன்பால் போவல் எனத்துணிந்

[தெழுந்தான்.

கூடவராதே.

2047 கூடவே வருவன்என் றுகுலமரபின் குணம்படிந்து
காடல்குடி அதிபனன்று கனவாஞ்சை யுடனுரைத்தான்;
வீடரிய தீரமாய் வீறுகொண்டே தொடரஅவன்
பாடறிந்து கூடவரல் பழுதென்றே இவன்தடுத்தான்.

அகன்றுபோ.

2048 தம்பிநீ இங்கிருந்தே தனிஅகன் றுநகர்அடைக
வம்பிலினி எங்களுடன் வந்தலைந்து வருந்தல்என
நம்பிநிலை தனைநோக்கி நயனநீர் சிந்தியவன்
எம்பிரான் செயல்வழியே இயலுமென எழுந்தகன்றான்.

துணைவருடன் சென்றான்.

2049 அன்னவன்தான் போனபின்னர் அங்குள்ளார்
[இடமுரைத்து
மன்னவன்தன் துணைவருடன் வல்விரைந்து சோளபுரம்
என்னும்ஊர் அடைந்தானங் கிருந்தவர்கள் கண்டுமகிழ்ந்து
இன்னகர்இ ருந்தருள்க என்றுவிருந் தாற்றினர். (94)

சேனைத் தலைவன் தேடவிட்டான்.

2050 இவ்வண்ணம் இவர்அவ்வூர் இருக்குங்கால்
[எண்ணிமுன்னே
எவ்வரியும் கட்டபொம்மை எதிர்பற்றிக் கொணர்வார்க்குச்
செவ்வியசீ ரும்பொருளும் சேரவரும் எனத்தீட்டித்
தெவ்வர்மிக விரைவாகத் தேசமெங்கும் செலவிட்டார்.

எங்கும் கட்டளைகள் அனுப்பினான்.

2051 விட்டஅந்தக் கட்டளையின் விவரங்கள் கண்டவுடன்
மூட்டஇவர் மீதிருந்த முனிவுகளை நினைவுக்கி
அட்டதிசை எங்குமே அடக்கிமிக மகிழ்ந்திருந்தான்:
கட்டம்வந்துசேர்ந்ததா கட்டபொம்முக்கெனக்களித்தார்.

எட்டனது தலைமை.

2052 சிற்றரசர் பலர்திரண்டு தேடினர் அதில்எட்டன்
முற்றட்டில் எட்டியெங்கும் மூண்டலைந்தான் பிற்கட்டுக்கு
உற்றவுள வெல்லாம்போய் உடனுடனே உரைத்துவந்தான்
பற்றஅவன் பறந்துநின்ற பாட்டை எவர் சொல்லவல்லார்?

பொருமைகள் பொங்கின.

2053 இன்னவா றிவ்வரசன் மீதிலவர் எல்லாரும்
துன்னிவரக் காரணம்தான்யாது? என்னில் தொகுதிறையை
சின்னநபா வென்னநின்று சேகரித்த போதியைந்த
இன்னல்களும் அழுக்காறும் இகல்சங்கத்து அச்சமுமே.

தேசத் துரோகிகள்.

2054 அயலானை மகிழ்விக்க அடுத்திருந்த குலத்தவனை
இயலாத துயர்செய்ய எழுந்தோடித் திரிந்தார்கள்;
மயலாக இனத்துக்கும் வதிந்திருந்த நாட்டிற்கும்
செயலாகாத் துரோகங்கள் செய்யாமல் செய்துநின்றார்.

நீசமாய்த் தேடினர்.

2055 வல்விரைந்து பாய்ந்துகொன்று வலிந்தோடிப் [போனஒரு
கொல்லியலும் புலிப்போத்தைக் கொடுவேடர் கடிதாகக்
கல்லதரும் கானகமும் காலோடித் தேடுதல்போல்
மல்லியலும் தோளானை வல்லாளர் தேடிவந்தார். (100)

திசைகள்தோறும் நாடினர்.

2056 வடதிசைவாய் வாசியொடு மறைந்துள்ளான் [பாஞ்சைமன்னன்
திடவிசைய முடனீவிர் தேடியே பிடியுமெனக்
குடதிசையும் குணதிசையும் குறிப்பாக ஆள்நிறுத்தி
அடைவுடனே புதுக்கோட்டைக்கு ஆணைமிக ஆக்கினர்.

புதுக்கோட்டைக்குத் தனி உத்தரவு.

2057 விசயரகு நாதனுக்கு விளக்கமாய்த் தனிஎழுதி
வசமாக வுன்னாட்டுள் பாஞ்சைமன்னன் வந்துள்ளான்;
இசைவாகப் பிடித்தளித்தால் என்றுமே ஆங்கிலர்க்கு
நசையான துணையாகி நலமாக நாடாள்வாய்! (102)

புதுவை அரசன் புலம் திகைத்தான்.

2058 என்றுவந்த உத்தரவை எண்ணியவன் எதிர்நோக்கிக்
கன்றியநெஞ் சினனாகிக் கவன்றுபல நினைந்துளைந்தான்:

ஆன்றியநல் நட்புடையான் ஒருபகையும் இல்லாதான்
மான்றிவனுக் கிடர்புரிதல் நீதியோ? எனத்திகைத்தான்.

மனம் மாறினான்.

101:9 அடுத்தடுத்து நிருபங்கள் அடர்ந்துவருந் திறனறிந்
[தான்;
101:0 தயலார் கைப்பற்றக் கலித்துநிற்கும் நிலைதெரிந்தான்;
படுத்திதைநாம் செய்திலமேல் துரைத்தனத்தின் பகை
[யாகி
101:0 தயர் வினையுமென மதித்துமனம் மாறிநின்றான். (104

சிந்தனைகள் செய்தான்.

101:0 அஞ்சாத நெஞ்சுடையான்; அடலாண்மை வீரனை
[நாம்
பஞ்சாரப் பிடித்துமே நேர்கொடுப்பது எப்படி?என்று
சஞ்சாத கவலையுடன் இனைந்துமிக எண்ணிநின்றான்;
அஞ்சாறு பேர்வந்திவ் அரசிருக்கும் நிலையுரைத்தார்.

மன்னன் சென்றான்.

101:1 தன்னகருக்கு அருகுவந்து சார்ந்திருக்கும் நிலையறிந்து
மன்னையமா அழைத்துவர நண்புடனே ஆள்விடுத்தான்;
மன்னவனும் துணைவருடன் மனமகிழ்ந்து விரைந்தெழுந்தே
அன்னைநகர் தனையடைந்தான் அரண்மனைக்குள் ளேபுகுந்
[தான்.

நடையேறி வந்தான்.

101:2 குடையோடும் கொடியோடும் கோலமணிச்
சிவிகையொடும்

101:1 புதுக்கோட்டை அரசனை விஜயரகுநாத தொண்டை
மான் இந்த வீரபாண்டியன்பால் நண்புடையவன். கும்பினி
நிருபங்கள் வந்தவுடன் பலவாறு சிந்திக்க நேர்ந்தான்.
கோழை நெஞ்சம் திரிந்து வஞ்சம் புரியத் துணிந்தான்.

101:1 வெள்ளையர் ஆதரவுகளை அடையக் கருதிப் புதுக்கோட்
டை யான் உள்ளம் திரிந்தான். ஊறு புரிய மூண்டான்;
மனைடாலும் நெஞ்சம் கலங்கி நெடிது மயங்கி நின்றான்

101:1 சோளபுரம் என்னும் ஊரில் இவ்வீரன் வந்திருப்பதை
அறிந்தான்; விரகு புரிந்தான்; உறவு கூறி அழைத்துவர
ஓர் திய தன் ஆள்களைக் கரவுடன் அனுப்பினான்.

படைபரிகள் முதலான பவிசோடு முன்வந்தான்;
உடைமாறி உருமாறி உற்றதுணை நிலைமாறி
நடையேறி வந்தடைந்தான் நல்வினையோ? தீவினையோ?

* உற்றிருந்த நிலை.

2063 ஓராண்டு முன்னமிவன் உற்றபொழுது ஓடிவந்து
பாராண்டு புரந்தருளும் பாண்டியா! எனப்பணிந்து
சீராண்ட வரிசையுடன் சிறந்தணைத்து விருந்துசெய்தான்;
நேராண்டு போயடைந்தும் நேராமல் நேர்ந்திருந்தான்.

† உள்ளக் கள்ளம்.

2064 வெளியிருந்து வருபவனை விழியறிந்தும் அறியாமல்
ஒளியிருந்தும் இல்லாத கண்ணனுய்ப் உள்ளுறைந்தான்;
அளியிருந்த நெஞ்சனுய்ப் ஆண்டுவந்த பாஞ்சைமன்னன்
களியிருந்த கள்ளவுள்ளம் காணுமல் காணவந்தான்.

கள்ள உபசாரம்.

2065 கண்டவுடன் வருகவென்று கள்ளமுடன் உபசரித்துக்
கொண்டமர்ந்து புறம்பொதிந்து குலாவினனை;இடைநேர்ந்த
சண்டை ஒன்றும் தெரியான்போல் சதியாக வினவியிங்கே
உண்டமர்ந்து தனியிருங்கள் ஒருதுயரும் உருதென்றனன்.

‡ உறவாய்த் தேற்றினன்.

2066 உள்ளவாய் இனிமையாய் உரையாடி நின்றாலும்
கள்ளமன முடையவர்கள் கடுங்கேடே கருதுவார்;
எள்ளளவும் அவரைநீ இதமாக எண்ணல்! எனும்
தெள்ளியோர் மொழியன்று தெளிவாகத் தெரிந்ததுவே.

---

* திருச்சியில் முன்னம் துரைகளோடு உறவாடி உயர்ந்த பரிசுகள் பெற்று இம்மன்னன் மீண்டு வரும்போது புதுவை மன்னன் எதிர்கொண்டு வந்து உவந்து அழைத்துப் போய் உபசரித்தான். இந்நூல் கவி 1268 முதல் பார்க்க.

† வஞ்சம் அறியாத நெஞ்சனுய்ப் பாஞ்சை மன்னன் வாஞ்சையுடன் வஞ்சகனிடம் வந்தான்.

‡ கள்ள உள்ளம் உடையவர் கடுங்கேடே புரிவர் என்பது புதுவையாளனுல் அதிக நீளமாப் புலனுய் நின்றது.

கரவை விரைவாய்ச் செய்தான்.

2067 நண்பனென எண்பதமாய் நம்பியே நம்பிவந்து
பண்போடு தங்கியங்கே பரிவாற நேர்ந்திருந்தான்;
திண்படைகள் நிறைந்திருந்தும் செருச்செய்ய நேராமல்
கண்படைகொள் அமையமவன் காரியத்தைச் செயநேர்ந்
[தான்.

கடிய துரோகம்.

5068 புலிமுழையில் போய்ப்புகுந்த புள்ளிமான் போலிவர்
[கள்
வலியவந்து புகுந்தவுடன் மனமகிழ்ந்து விரைவாகப்
பலியாக நின்றவனைப் பற்றிநான் வைத்துள்ளேன்
கலியாக வந்துடனே கைக்கொண்டு போங்கள்என்றுஃ

*** கள்ளமாய்க் கடிதம் எழுதினன்.**

2069 கடிதம்ஒன்று கரந்தெழுதிக் கடிதுய்த்தான்;
[அதைக்கண்டு
நெடிதுவந்து பிற்கட்டும் நேர்ந்துநின்ற எட்டனுமே
கொடிதாகப் படைதிரட்டிக் கொதித்தோடி வந்தார்கள்
விடியாமுன் வளைந்தார்கள் வெளியெல்லாம் நிறைந்தார்கள்.

‡ எதிரே கண்டது.

2070 மூன்றுநாள் ஆங்கமர்ந்து முழுத்துயில்கொண்
[டிளைப்பாறி
ஆன்றதுணை எனநம்பி அயலொன்றும் அறியாமல்
ஊன்றியநண் பினராகி உயர்மேடை வீட்டிருந்தார்
ஏன்றபடை வீரருள்ளே ஏறிவர எதிர்கண்டார். (115)

ஊமையன் உருத்தான்.

2071 ஆயுதமொன் றில்லாத அச்சமையம் போய்நேரே
பாயுமென ஏவியதால் பாய்ந்தேறி மேல்வந்தார்;

---

* வெள்ளையர்க்குக் கள்ளமாய் எழுதினன். நான்காவது நாள் குதிரைவீரர்களோடு கும்பினிப்படைகள் வந்து அரண்மனையைச் சூழ்ந்து வளைந்து கொண்டன.

‡ பகலில் உணவுண்டு அயர்ந்து உறங்கினர். அவ்வமையம் ஏவிவிட்டதால் ஏழு போர் வீரர் வீரேடு உள்ளே ஏறி வந்தார்.

ஐயுரையா ஊமன் அங்கோர் வன்தடியைப் பாய்ந்
[தெடுத்துச்
சீயமெனக் காய்ந்தடித்தான் செத்திருவர் கீழ்வீழ்ந்தார்.

மன்னன் தடுத்து நிறுத்தினன்.

2072 மண்டிஎழுந் தெதிரோடி மாற்றலரை மாட்டிய
[வன்
தண்டுதிரித்து அடலேறித் தழல்வடவை எனச்சீறி
அண்டிவந்தார் உயிரையெல்லாம் அள்ளியுண்ண
[ஆர்த்துநின்றான்
திண்டிறல்வேந் துடன்எழுந்து செயல்ஒழிக எனத்
[தடுத்தான்.

*** மாற்றலரை நோக்கி உரைத்தான்.**

2073 தம்பிகையைத் தான்பிடித்துத் தடியைஒடித்
[தயலெறிந்து
வெம்பியினிப் போர்செய்தல் வீணுகும்; விணைமூண்டது;
எம்பியே! நில்லென்றான்; எதிரிகளே! அமர்செய்யேன்
கும்பியே அகப்பட்டேன்; நடப்பதைமேற் செய்யும்
[என்றான்.

† ஐயம் நீங்க விரித்தான்.

2074 கையகத்தே ஆயுதங்கள் கரவாக வைத்துளனே?
வெய்யகொடும் போர்புரியின் வெங்கொலைகள் வீழுமென
ஐயுறவாய் அவர்நோக்கி அஞ்சுதலை நோக்கியிவன்
கையில்ஒன் றும்இல்லைஎன் று கைவிரித்துக் காட்டி
[நின்றான்.

கைதி செய்தார்.

2075 என்றவுடன் படைத்தலைவன் எழுந்துவெளி
[வாரும்என்றான்

---

* நண்பன் என நம்பி இங்கே வந்தேன்: இவ்வாறு நேர்ந்துள்ளது; இனி நீங்கள் செய்ய வேண்டியதை விரைந்து செய்யுங்கள் என்று வீரபாண்டியன் இவ்வாறு கூறியும் யாரும் அருகே அணுகாமல் அஞ்சியே நின்றார்.

† ஆயுதம் ஏதேனும் உள்ளதோ? என்று அஞ்சுகின்றீர்; யாதும் இல்லை; யான் இனி அமர்செய்யேன் என்று கையை விரித்துக் காட்டினன்.

நன்றெனவே மன்னன்வர் நாற்புறமும் படைசூழ
நின்றிவனை விலங்கிட்டார் நிரையாக அறுவரையும்
ஒன்றுசிறை செய்தரசை ஒருசிவிகை யுறவைத்தார்.

*** நண்பனிடம் விடைபெற விரும்பினர்.**

2076 செல்லநின்ற சமையத்தே சேர்ந்திருந்த
[புதுவைமன்பால்
சொல்லிவிடைபெறவெண்ணிச் சூழ அயல் நோக்கினன்;
இல்லையவன் அவ்விடத்தே இல்லாமல் போயினன்
[என்று
ஒல்லைநீர் சொல்லிடுமென் றுற்றவர்பால் ஒன்றுரைத்
[தான்.

§ நன்றி மறவேன்.

2077 தொண்டைமான் சூழ்ந்துசெய்த தொண்டைநான்
[போற்றுகின்றேன்;
அண்டையிலும் காணுமல் அகன்றொழிந்தான்; ஆயினு
[மிங்கு
உண்டிருந்த நன்றிதனை ஊழியினும் யான்மறவேன்;
தண்டிநீர் செல்மின்! என்றுன் தாண்டிவழி மேற்
[சென்றார்.

சிறை செய்து சென்றார்.

2078 நடத்திவழி கூடினர் நண்ணலர்கள் நாடியது
கிடைத்ததெனக் களிப்போடு கெக்கலித்துக் குதூகலித்
[தார்;
படைத்தலைவர் வாள்வெடிவேல் பற்றியடர்ந் தயல்
[வரவே
திடத்துடனே சென்றேறித் தென்திசையை நோக்கி
[வந்தார்.

---

* உங்களுக்கு இங்கே இடம் கொடுத்தமையால் கும்பினியார் பகை மூண்டது; ஆகையால் எங்கள் அரசர் எங்கேயோ போய்விட்டார் என்று அயலே நின்றவர் வஞ்சமாய் வாய்விட்டு உரைத்தார்.

§ தொண்டைமான் செய்த இந்தத் தொண்டை யான் போற்றுகின்றேன். மூன்று நாள் ஈங்கிருந்து உண்ட நன்றியை ஒருபோதும் மறவேன்என்று பரிவோடு கூறியிருக்கிறார்.

மதுரைமா நகரை அடைந்தார்.

2079 வருகின்ற வழியிடையே மன்னனுயர் மரபினர்கள்
பொருகின்ற திறலோடு புகுந்திடுவர் என்றுபயந்து
அருகெங்கும் இடையிடையே அயல்நோக்கி அதிவிரை
[வாய்ச்
செருவென்ற செழிப்போடு தென்மதுரைப் பதிசேர்ந்தார்.

எட்டப்பன் களித்துப் போனன்.

2080 கட்ட பொம்மு பிடிபட்டான் என்றவுடன் எட்டப்பன்
அட்ட திக்கும் பெற்றவன்போல் அடங்காத களிப்பேறி
வட்டமிட்டு வாசிதட்டி வாவியே தளபதிபால்
இட்டமுடன் எதிருரைக்க எழுந்தோடி எய்தினன்.

சேனைத் தலைவன் தெரிந்து மகிழ்ந்தான்.

2081 ஓடிவந்து பேனமன்முன் உற்றநிலை யுடனுரைத்
தான்;
கோடிவந்து கிடைத்ததுபோல் கொண்டாடி அவன்
[மகிழ்ந்தான்;
கூடியிரு வரும்களித்தார்; குடிகேடே யுளம்நினைந்து
நாடியதைச் செயவிழைந்து நவையோடு மிகவிரைந்தார்.

கயத்தாறு புகுந்தான்.

2082 நாகலா புரமிருந்து நயந்துகயத் தாறடைந்து
வேகமுடன் விரகெண்ணி மேலோர்க்கு மிகவெழுதி
ஓகையுறு பிற்கட்டை யுடன்கொண்டு சேனையர்கோன்
வாகையுறப் பெற்றவன்போல் வன்மமுள்ளே மூண்டுசெய்
[தான்.

பாளையகாரர்களை வரப் பணித்தான்.

2083 சிற்றரசர் எல்லாரும் சேரவந்து கயத்தாறூர்
உற்றடைய வேண்டுமென உறுதினத்தை யுடன்குறித்துப்
பற்றெழுதி விரைவாகப் பாரெங்கும் பரப்பினன்
அற்றைவினை எதிர்எண்ணி அடலுடனே அமர்ந்திருந்தான்.

மன்னன் மதுரையில் இருந்தான்.

2084 பேனமன்இவ் வாறங்குப் பிழைபுரிந்து பெருகிநிற்க
கானவர்தம் கொடுவலையில் கடிதாக அகப்பட்ட
மானவரிப் புலிபோல மன்னவனும் தம்பியரும்
வானமுயர் பெருமையுறு மதுரைமா நகர்இருந்தார்.

மறுகி நின்ருன்.

2085 ஆலவாய் அண்ணலையும் அங்கயற்கண் அம்மை
[யையும்
வேலவாய் ஏந்தியுள்ள மெய்யனையும் மெய்யன்பால்
சாலவே தனிநினைந்து தானடைந்த நிலைக்கிரங்கி
மாலவாய் நியமமின்றி மன்னனுளம் மறுகி நின்ருன்.

கயத்தாற்றை அடைந்தான்.

2086 வாரநாள் கழியாமுன் மன்னவனைக் கொண்டுதன்முன்
சேரவர வேண்டுமென்று திருமுகம்ஒன் றுய்த்ததலை
மாமில்லாப் படைத்தலைவர் எம்மருங்கும் வெம்மையாய்
வீரனைக்கொண் டங்நகர்வாய் விரைவாகச் சேர்த்து
[நின்ருர்.

விதியின் சோதனையே!

2087 *திங்கள்ஒன் றுமுன்பாகச் செருமூண்ட
[வெள்ளையரைப்
பங்கமுற வென்றுயர்ந்த பாஞ்சைமன்னன் சிறைப்பட்டுச்
சிங்கம்ஒன் று கூட்டிடையே சிக்கிவந்த செயலேபோல்
இங்குவந்து சேர்ந்தானே இதுவிதியின் சோதனையே!

பலரும் நொந்தனர்.

2088 சாதனையாய் எதனையுமே சாதித்துச் சார்ந்தவர்கள்
வேதனையொன்றெய்தாமல் விறலோடு பேணிவந்தான்;
மாதனையாய் இவ்வாறு வந்தடைந்தான் வல்விதியின்
சோதனையே என்றுபலர் துயரோடு சொல்லிநொந்தார்.

உள்ளம் உளைந்தனர்.

2089 வெந்திறல்கொள் வேந்தனுய் வீறேடு வாழ்ந்துவந்
[தான்
மந்திரிபுன் மதியினுல் மதியிழந்து வெளிவந்து

---

*வெள்ளையர் சேனைகளை வென்று 5-9-1799-ல் வெற்றி வீரனுய் விளங்கிநின்றவன் எதிரிகள்பால் அகப்பட்டு நேரே ஒரு மாதத்தில் கயத்தாற்றை அடைந்துள்ளான். சிங்கம் சிக்கிய செயல் என்றது இடம் பெயர்ந்து போய் வஞ்சகரால் இவ் வீரன் இடர்ப்பட்டுள்ளமை தெரிய நின்றது.

தந்திரமே வடிவான தரியலர்தம் பால்சிக்கிப்
புந்திநொந்து நின்றுள்ளான் புகுவதென்னே? என்று
ஊந்தார்.

சிந்தை நொந்து மொழிந்தனர்.

2090 இந்திரனே ஆனலும் இனியமதி மாண்புடையே
மந்திரிநேர் இல்லையெனில் மாட்சியுயர் ஆட்சியெல்லாம்
எந்திரம்சீர் இல்லாத எண்கலம்போ லேயிழிந்து
முந்திரியும் பயனின்றி முழுதுமழிந் தொழிந்திடுமே.

பாஞ்சைமன்பால் வாஞ்சை.

2091 அல்வழியே பழகிவந்த அமைச்சனைமுன் ஆய்ந்தடக்கி
கல்வழியில் உய்க்காமல் நாடியவன் சூழ்ச்சியுறு
சொல்வழியே வந்தமையால் துன்பமுற வந்ததெனப்
பல்வழியும் புகழமைந்த பாஞ்சைமன்பால் வாஞ்சையுற்றார்.

தென்நாட்டுச் சிங்கம்.

2092 தென்னாட்டுச் சிங்கம்எனத் திசைகள்தொறும் இசை
[நாட்டி
பன்னாட்டு மன்னவரும் பாஞ்சைஎனின் வாஞ்சையுற்று
முன்னாட்டு வீரன்என்று புகழ்ந்துவர முதல்நின்றான்
பின்னாட்டு மதியமைச்சன் பிழைவழியால் பிழையுற்றான்.

மானவீரன்.

2093 மானமுயர் குலவீரன் மதியுடையகொடையாளன்
வானமுயர் புகழுடனே வாழ்ந்திருந்தான்; வன்பகைவர்
ஊனமுறப் புகுந்துமே ஊறுகளைச் செய்துள்ளார்;
ஈனமிந்த நாட்டுக்கென் றெண்ணுவீரா? மண்ணுள்வார்.

ஒளி உயர்ந்தான்.

2094 வெளியிருந்து வந்துள்ள வெள்ளையருக் காளாகி
இளிவடைந்து வாழுவே எண்ணுகின்றார் எண்ணுதே
தெளிவுடைய வீரனைத் தென்பாஞ்சை மன்னவனே
ஒளியடைந்து நிற்கின்றான் ஒளியிழந்தார் ஒழிந்தவரே.

மாண்பாளர் மரபு

2095 மானமுடன் வாழ்வதே மாண்புடையார் மரபாகும்
னனமுற நேரிலே உயிர்வாழார் அன்னவர்கள்
கானமுறு விலங்கான கவரிமான் ஒருமயிர்தான்
சனமுற நேருமேல் இருந்துயிர்பின் வாழாதே.

பழவினை விளைவோ?

2096 அஞ்சாத குலவீரன்; அசையாத திறலாளன்;
நெஞ்சாரப் பிழையதும் நேராதான்; நேர்மையுளான்;
மஞ்சாரும் கொடையுடைய மன்னனிவன் இன்னலுற
எஞ்சாத பழவினைதான் எவ்வழியில் இருந்ததுவே?

அரசு நிலை

2097 அருந்திறலும் பெருந்திருவும் ஆற்றல்களும் அமைந்
[தாலும்
திருந்தியுள மந்திரிநேர் சேர்ந்திலனேல் அவ்வரசு
வருந்தியுளந் தயரும்எனும் வாய்மொழிஇப் பாஞ்சைமன்
[பால்
தெரிந்துலகம் தெளியவே செறிந்துளதே! என்றுளந்தார்.

ஊரார் பரிவுரைகள்.

2098 ஊரவர்கள் இவ்வாறு உரையாடி உளமுளைந்து
நேரலர்கள் நிலைகளையும் நேர்ந்துள்ள புலைகளையும்
சாரமிலாப் பாளையங்கள் சார்ந்துவரு சார்பினையும்
சமுடன் எண்ணியே எதிர்வதனை ஆய்ந்துநின்றார்.

சிறையில் இருந்தான்.

2099 பன்னிருநாள் அந்நகரில் பரிவுடைய துணைவருடன்
மன்னியிருந் தருவினையின் வரவுகளை மன்னனுன்னித்
தன்னிருதோள் களைநோக்கிச் சமர்முகத்தில் நில்லாமல்
இந்நிலையில் நிற்கவோ? எய்தியதென் றினைந்திருந்தான்.

---

141. புதுக்கோட்டையில் பிடிபட்ட பாஞ்சைப்பதியைக் கயத்தாற்றுக்குக் கொண்டு வந்தனர். அங்கே பன்னிரண்டு தினங்கள் தம்பியருடன் சிறையில் தங்கியிருந்தான்.

இருபத்திரண்டாவது

விதி விளைந்த படலம்.

வெள்ளூபர் சேனைகளை வென்று வெற்று பெற்றிருந்த **வீரபாண்டியன்** பிள்ளையின் பேச்சைக் கேட்டுக் கோட்டையை விட்டு வெளியேறினன். கும்பினித் தலைவரை நேரே கண்டு சேனைத் தலைவனுல் வீணை விளைந்த வம்புகளை விளக்கிக் காட்டிச் சமாதானத்துடன் வரலாம் என்று நம்பியே திரிசிராபுரிக்குச் சென்றுன். இடையே புதுக்கோட்டையில் கபட வஞ்சனைகளால் பிடிபட்டான். சிறையிடைப்பட்டுக் கயத்தாற்றுக்கு வந்து சேர்ந்தான். தானைத்தலைவனை **பானர்மேன்** தீய நெறிகேடனைய் வெறிகொண்டு நின்று நீதி விசாரணை செய்பவன்போல் வெளியே பாவனைகாட்டிக் கோதுகள் புரிந்து கொடிய கொலைத் தண்டம் விதித்தான். நெடிய நீசமாய் நீண்டு அவன் அவ்வாறு கூறவே இவ்வீரன் யாதும் கலங்காமல் ஏதும் தளராமல் அவனை நோக்கிச் சில அறிவுரைகள் கூறினன். அதன்பின் இந்நாட்டுப் பாளையகாரர்களைப் பரிந்து பார்த்தான்: "மானவீரமாய் வாழாமல் ஈனமாய் இழிந்திருப்பது என்றும் இழிவேயாம்" என்று தெளிவுற மொழிந்தான். பின்பு தன் அருகே யாரும் வரலாகாது என்று ஆணைகூறி விலக்கித் தானைவே மானவீறுடன் இவ்வீர மன்னன் தூக்கில் ஏறி மாண்டான். இக்குலமகன் மாண்டுபோனநிலை உலக உள்ளங்களை எங்கும் உருக்கி நின்றது. கும்பினி அதிபதிகளாயிருந்த வெள்ளைத் தலைவர்களும் இந்நம்பி மாண்டதை அறிந்து நீண்ட துயரமாய் நெடிது வருந்தினர். முண்டு பழகிய மன்னனை இழந்தது அவர்க்குப் பரிதாபமாயிருந்தது. நீண்ட சதியும் நெடிய கோளும் மூண்ட விதியும் முடித்துள்ள முடிவுகளை ஈண்டு அறிய வருகிறோம்.

சேனைத் தலைவன் சிந்தனைகள்.

2100 ஆங்கிலப்படைக் கதிபதி யான அவ் வஞ்சன் ஈங்கமைந்துள நிலைகளை எளிதினில் தெளிந்தான்;

பாங்கு சூழ்ந்துள பாளைய காரர்கள் யாரும்
தாங்கு கும்பினித் தாசராய்ச் சார்வர்என் றுணர்ந்தான்.

பாஞ்சை மன்னனே எதிரி.

2101 இமய மேமுதல் குமரியின் முனைவரை எவரும்
நமையெ திர்த்திலர்; நாடெலாம் நமதுகை வசமாய்
அமைய வந்தது; அடலுடன் பாஞ்சைமன் எதிர்த்துச்
சுமைய தாய்ப்பல துயர்களைப் புரிந்துளன் தொடர்ந்தே.

இவன் ஒழியின எவரும அடியரே.

2102 பாஞ்சைமன்னனைப் பாடழித்து ஒழித்திடில் மற்றோர்
வாஞ்சை யாகவே வெள்ளையர்க் கடியராய் வாழ்வார்;
ஆஞ்சை எங்கணும் செலுத்தலாம்; யாருமே எதிர்த்து
மீஞ்சல் செய்திடார்; நெடுநிலம் முழுவதும் நமதே. (3)

பிள்ளை செத்தான்; பொம்மன் உள்ளான்.

2103 வெள்ளைக் காரர்கள் பணவெறி பிடித்தவர்; வெய்ய
கொள்ளைக் காரர்கள்; ஈங்குவந் துளர்எனக் குறித்தே
பிள்ளை எள்ளலாய்ப் பிழைபல புரிந்தனன் இறந்தான்;
உள்ள பொம்மனும் ஒழிந்திடில் ஒழிந்தது பகையே. (4)

தீயமாய்ச் சூழ்ச்சிகள்.

2104 இந்த வாறந்தத் தளபதி இழிபழி வழியே
சிந்தை செய்தனன்; தீமையே செய்திடத் துணிந்தான்;
முந்தை யாகவே பலபல சூழ்ச்சிகள் சூழ்ந்தே
அந்த மாகவே யாவையும் ஆவலாய் அமைத்தான். (5)

கொலையே துணிந்தான்.

2105 தலைமை யாயுள்ள கும்பினி அதிபதி தமக்கு
நிலைமை யாவையும் நெறிமுறை யின்றியே வரைந்து
புலைமை யாகவே புரைபடப் புனைந்துமுன் விடுத்து
கொலைமை செய்யவே கொதித்துளம் குறித்துடனின்றான்.

தீமையே கருதினான்.

2106 நாட்டில் உள்ளபல் பாளைய காரரும் நாடி
ஈட்ட மாய்வர வேண்டுமென் றெங்கணும் ஆணை
கூட்டி விட்டனன் கூட்டத்துக் கானமுன் குறிப்பை
மூட்டி வைத்தனன்; மூண்டனன் தீமையை முனைந்தே.

குறித்தநாள் வந்தது.

2107 குறித்த நாள்வரக் குறுநில மன்னர்கள் முன்னம்
பொறித்த கட்டளைப் படிவந்து புகுந்தனர்; புகுத
வெறித்த நோக்குடைப் பேனமன் பிற்கட்டு விரைந்து
செறித்த காரியம் செய்திடத் துணிந்தனர் சேர்ந்தே.

படைகளை நிறுத்தினன்.

2108 ஊரின் மேல்புரம் சாலையின் அருகெதிர் உற்ற
பார வேல்வெடிப் படைகளை அடைவுடன் பணித்து
வார மாகவே அவையினை வகையுடன் வகுத்துச்
சார மாயவண் சங்கமொன் றமைத்தனன் சமைத்தே.

வீரபாண்டியன் வந்தது.

2109 வந்த மன்னவர் எவரையும் வரன்முறை கூட்டி
அந்த வல்லவை யிடையினில் அடலுடன் அமர்ந்தே
இந்த மன்னனை அழைத்தவண் வரும்படி இசைத்தான்;
*நிந்தை யாயிவன் வந்ததிர் அமர்ந்தனன் நிமிர்ந்தே.

வீரமா யிருந்தது.

2110 சங்க§ ஆட்சியின் நிலைமையும் தலைமையும் வலியும்
எங்கும் காணவே விரகுடன் இழைத்தவன் அழைக்கப்
பங்க மாய்வந்து பதுங்கியங் கிருந்தமன் னவர்முன்
சிங்க மாமெனச் சிறந்தயல் இருந்தனன் செருக்கி. (11)

---

*தன்னை நிந்தையாகச் செய்துள்ளவரைத் தன் உள்ளே நிந்தையாக எள்ளி எண்ணி இவன் வந்து அமர்ந்துள்ளான். அந்த உண்மையான திண்மை நிலையை இதில் நுண்மை யாய் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

§சங்கம் என்றது கிழக்கு இந்தியக் கழகத்தை. Company என்னும் ஆங்கிலச் சொல் தமிழில் கும்பினி என நேர்ந்தது. வெளிநாட்டு வெள்ளையர் ஆளுகையின் வலிமையை இந் நாட்டுப் பாளையகாரர்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டி யே சேனைத் தலைவன் ஆன பானர்மேன் (Bannerman) பாஞ்சைவீரனைப் பலியாக்க மூண்டு நின்றான். கொலைநோக் கோடு கூடியுள்ள புலையான அக்கொடிய நிலையின் முடிவை அறிந்தும் இவன் யாதும் தளராமல் சிங்கஏறுபோல் வீறுடு அங்கே அவன் எதிரே வந்தமர்ந்திருக்கிறான். அந்த இருப்பைக் குறிப்பாக இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம்.

* வீரன் நிலை.

2111 வலையி டைப்பட்ட மடங்கல்போல் மனநிலை
[கலங்காது
உலையி டைப்பட்ட இரும்பென உளமிகக் கனன்று
கொலையி டைப்பட்டுத் தப்பிய கோழைகள் இங்கே
புலையி டைப்பட்டுப் புன்மையைப் புரிகின்ற என்னை.

2112 நெஞ்சில் எள்ளிய நினைவொடு சினமிக மூண்டே
அஞ்சி டாதிவன் இருந்தனன்; ‡அயல்நின்று கண்ட
வஞ்சி நுண்ணிடை மடந்தையர் அடைந்தவர் எவரும்
தஞ்சம் இல்லைகொல்? இக்குல மகற்கெனத் தவித்தார்.

மாந்தர் மறுகி மொழிந்தனர்.

2113 வீர மாமகன் வினைவிதி விளைவிதோ? என்பார்;
மார னும்இவன் அழகெதிர் வருவனே? என்பார்;
தீர மாயிவன் செயலென்ன செய்தனன்? என்பார்;
வார மாயிவர் வஞ்சனை செய்வர்கொல்? என்பார்: (14)

வள்ளலுக்கு வந்ததே!

2114 வெள்ளை யாளரை வெறுத்ததால் விளைந்ததீ
[தென்பார்;
பிள்ளை செய்தவெம் பிழையினல் பிறந்ததீ தென்பார்:
கொள்ளை செய்தவன் கொடுந்துயர் புரிந்ததால் இந்த
வள்ள லுக்கிது வந்துமுன் வளர்ந்ததே! என்பார்: (15)

பிள்ளை செய்த பிழையே.

2115 அன்ன பிள்ளையை அறிவுடன் அடக்கிவைத்
[திருந்தால்
இன்ன புன்பிழை ஈங்கிவற் கெய்துமோ? என்பார்;
மன்ன வன்இவன் மதிவலி யுடையனு யிருந்தும்
முன்னை யூழ்வினை இப்படி மூண்டதே என்பார்: (16)

---

* பாலையகாரர்கள் கோழைகளாய்ப் பணிந்து படிந்துள்ள இழிநிலைகளைப் பாஞ்சை மன்னன் உள்ளே எள்ளி இகழ்ந்துள்ளான்.

‡ அயலே சூழ்ந்து நின்று கண்ட பொதுமக்கள் இக்குல மகனுக்கு நேர்ந்துள்ள பரிதாப நிலையை நினைந்து பரிந்துள்ளனர். பரிவோடு கூறியுள்ள அவ்வுரைகளை அயலே அறியலாகுமே. யாவும் கருதியுணர வுரியன.

வெற்றிவீரன் இசையான்.

2116 மற்ற மன்னவர் போலவே வரிகளைச் செலுத்தி
உற்றவெள்ளையர்ப் பணிந்துமுன் ஒடுங்கியேஇருந்தால்
இற்றை நாளி.: தெய்துமோ? எய்திடாது என்பார்;
வெற்றி வீரனவ் விழிவினுக் கிசைவனே? என்பார். (17)

வீர மரபினன்.

2117 மானம் அல்லது மன்னுயிர் பெரிதென மதியா
வான வன்றிறல் மன்னவர் மரபினில் வந்தோன்;
ஈனம் ஒன்றிய வாழ்வுற இசைவனே? என்பார்;
ஞானம் ஒன்றிய நல்லமைச் சில்லனே? என்பார். (18)

இன்று என்ன நேருமோ?

2118 திக்கு வென்றவன் திருமகன்; முருகனை நாளும்
நெக்கு நின்றுறப் பணிகின்ற நெறியினன்; வீரம்
கக்கு கின்றதிண் டிறலினன்; கபடமாய்ப் பிணிக்கப்
புக்கு நின்றனன்; புகுவதின் றென்கொலோ? என்பார்.

பதி பெயராதிருந்தால் இக் கதி நேருமா?

2119 மதியை விட்டஅப் பிள்ளையின் சொல்லினைக்
[கேட்டுப்
பதியை விட்டயல் பெயர்ந்திலை யின்இப் பதிதான்
கதியை விட்டிந்தக் கதியினை அடைவனே? என்பார்;
விதியை விட்டெவர் உலகினில் விலகினர்? என்பார்.

கோளன் செயல் கொடியது.

2120 எட்டை யாபுரத் தரசன்இவ் அரசனுக் கிடராய்
எட்ட நின்றுபல் கோள்களை இடையிடை மூட்டி
ஒட்டி யேயுடன் பிடித்திட உற்றனன் என்பார்;
பட்டி வஞ்சங்கள் படியில்இப் படியுள என்பார் .(21)

இந்த நாட்டு நிலை.

2121 எந்த நாட்டிருந் தோவந்த அவருடன் சேர்ந்து
முந்த மூட்டிய பகைமையும் பொறுமையும் மூண்டு
சொந்த நாட்டினன் தனக்குவெந் துரோகங்கள் செய்வார்
இந்த நாட்டன்றி எந்தநாட் டினும்இலை என்பார். (22)

என்று இப்பழி தீரும்?

2122 என்ன நாடிது வஞ்சனை சூதுகள் நிறைந்து
சின்ன மாக்களே செழித்துளர்; தேசுயர் வீரம்
மூன்ன மாக்கிய முறைமையும் முதன்மையும் மறந்து
பின்ன மாயுள தென்றினி இப்பழி பெயர்ரும்? (23)

இழிதுயர் பழியே.

2123 வெய்ய தீவினை இவ்வகை விளைகின்ற விதத்தால்
ஐய கோஇந்த நாட்டவர் அவமதிப் படைந்து
வைய முள்ளநன் மானிகள் ஈனரென் றிகழ
நொய்ய ராய்ப்பழி நுகர்ந்திழிந் துளைகுவர் என்பார்.

பொருமைத் தீ

2124 நெஞ்சில் வஞ்சமும் பொருமையும் நிறையினேநேரே
பஞ்சில் உள்ளுறு தீயென லாயவை பழியாத்
துஞ்சி டச்செயும்; சுடுதுயர் பிறர்க்கெவர் செய்தார்
அஞ்சி அன்னவர் அழிவது சரதமே என்பார். (25)

யாவரும் இரங்கினர்

2125 இன்ன வாறயல் நின்றவர் யாவரும் இரங்க
மன்னன் மேல்மிக வன்மையாய்ப் பேனமன் வரைந்து
துன்னி அங்குளார் அறிந்திடக் குற்றங்கள் தொடர்ந்து
பன்னிநின் றனன் பார்த்திபன் தன்னைமேல் பார்த்தான்

சேனைத் தலைவன் குறித்த குற்றங்கள்

2126 திறைத ராதுநீ இருந்தனை தென்திசை யிருந்து
முறைசெய் கின்றளம் *வலசிங்கன் முன்னுற விடுத்த
கிறைக ளுக்கொரு பதிலையும் தந்திலை நேரே (27)
இறைபு ரிந்ததிர் வந்திலை எங்குமே இகழ்ந்தாய்!

பிள்ளை செய்தது.

2127 எங்கள் கும்பினி நெல்லினை உனதமைச் சென்னும்
வெங்கொடுஞ்செயல்பிள்ளை வந்தெடுத்தனன் விரைந்தே
அங்க டுத்துமுன் தடுத்தவர்ப் படுத்தவன் அகன்றான்;
பொங்கி நின்றுள அவனைநீ புறம்பொதிந் திருந்தாய்!

---

* வலசிங்கன் என்றது அங்கே அன்று கலெக்கட்டராயிருந்த லஷிங்கட்டனை. (S. R. Lushington)

வெள்ளையரை வீட்டியது.

2128 சால வந்துன தூரினை யடைந்திதம் சார
ஏலவேமுனம் இனமுடன் விடுத்தளன் படையைக்
கால னேடுநீ வளைத்ததிர் கொன்றனை கடிதாய்க்
கோலம்எத்தனை கொடுமைகள் புரிந்துளாய்கொதித்தே.

வெள்ளையரைக் கொள்ளையர் என்றது.

2129 வெள்ளைக் காரர்கள் வேறயல்நாட்டினர்; விரகாய்
மெள்ள வேவந்து இந்தநா டெங்கணும் மேவிக்
கொள்ளைக் காரராய் மூண்டுளார்என்றெமைக்குறித்துப்
பிள்ளை யோடுநீ பிழைகளைப் பேசியே நின்றாய்! (30)

மன்னன் மறுத்தது.

2130இன்ன குற்றங்கள் செய்துளாய் உண்மையா? இலையா?
என்ன அன்னவன் இசைத்திட: மன்னவன் எதிர்நீ
சொன்ன யாவையும் உண்மையே; குற்றம்என் றுரைத்தாய்
அன்ன தேபெருங் குற்றம் உன்பால்என அறைந்தான்.

பிழை புரிந்தும் பிழை பேசுகிறாய்.

2131 செய்த தப்புகள் குற்றமே இலையெனச் செருக்காய்
வைது நிற்கிறாய்! வாதமே புரிகிறாய்! வசையே
பெய்து பேரிறு மாப்பொடு பேசுகின் றாய்நீ
உய்தி எவ்வகை நவையிவை இலைஎன உரைத்தான்.

மன்னன் விளக்கினான்.

2132 என்று மேதிறை தந்துமுன் அறிந்திலம் எவர்க்கும்;
இன்று நீர்வந்து வரிஎன இரந்ததால் இகழ்ந்து
நின்று நீக்கினேன்; நேரினில் எவரையும் நான்போய்ச்
சென்று காண்பதும் சிறுமொழி இசைப்பதும் இலையே.

அடுத்தவனை ஆதரித்தேன்.

2133 பிள்ளை நெல்லினை எடுத்தது பெரும்பிழை; அதற்கா
யுள்ள தோர்தொகை முழுவதும் உதவியுள் ளேன்முன்
எள்ளி அன்னவன் தனைப்பிடித் தீந்திட இசைத்தீர்
தள்ளி யேஅதை இகழ்ந்தனன் சார்ந்தவற் புரந்தேன்.

மதியை மதி.

2134 மடுத்து நின்றதன் களங்கத்தை வானுயர் மதியும்
கடுத்தி கழ்ந்திடக் கண்டதும் உண்டுகொல்? கையில்
அடுத்து நின்றவர்க் காப்பதே ஆண்கடன்; அதனல்
விடுத்தி டாதுநான் நின்றனன் என்றனன் விறலோன்.

2135. வம்பாய் மூண்டார் மாண்டார்.

பாய்ந்து மேல்வந்தென் பதியினை வளைந்தவுன் படைமுன்
காய்ந்தெ ழுந்துபோர் மூண்டதால் கடுத்தென துறவோர்
வாய்ந்தெ திர்த்தனர் வந்தவெம் படைஞர்கள் மாண்டார்;
ஆய்ந்து குற்றங்கள் யாரிடம் உள்ளன? அறிக. (36)

மேலே சென்றேன்.

2136 சங்க மேலதி காரிகள் தம்மிடம் சார்ந்தே
இங்கு நேர்ந்ததை உரைத்துடன் வரஎண்ணி எளிதாய்
அங்கெ ழுந்தனன்; வழியிடை அடலுடன் வளைந்தீர்!
பங்கம் நேர்ந்தது; பட்டிவண் வந்துளேன் பரிந்தே.(37)

நீ ஒரு மனிதனு?

2137 பதிபெ யர்ந்ததும் என்பெரும் பதியுளே புகுந்து
நிதிகள் யாவையும் கவர்ந்தனை! நிறைகரி பரிகள்
பொதிகள் செல்வங்கள் அனைத்தையும் உனக்கெனப்பொத்தி
அதிக ஆவலாய்க் கொண்டனை! ஆள்என நின்றுய்!(38)

அதிபதியிடம் அனுப்பு.

2138 நீதி யாய்நின்று நெறிமுறை விசாரணை செய்யும்
சாதி யானநற் குலமகன் என்னில்நீ என்னை
*ஆதி யானமேல் அதிபர்கள் இடத்தினில் அனுப்பிக்
கோது கண்டுநீ குறித்ததைச் செய்திட வேண்டும்.(39)

---

*கும்பினியின் தலைமை அதிபதியான கவர்னர் ஜெனரல் இந்த வீரபாண்டியன்பால் பிரியம் உடையவர். ஓர் ஆண்டுக்கு முன் நேரே அழைத்து உவந்து உபசரித்துப் பல பரிசுகள் தந்து அனுப்பினர். பின்பு பிள்ளையால் நேர்ந்த பிழை பாடுகளைக் கேள்வியுற்று உள்ளம் வருந்தியிருந்தார். பிற்கட்டு நேரேபோய் மூட்டிய உரைகளால் படைகளை அனுப்பினர். படைத் தலைவனுக்கு எல்லா அதிகாரங்களையும்

2139. **நீதிமானு நீ?**

போரில் மூண்டனே! புறங்கொடுத்து ஓடினே! புழுங்கிப்
பாரில் நீண்டபே ராசையாய்ப் பலபல சூழ்ந்து
காரில் நீண்டவெங் கரவுடன் கடுத்தகம் இருந்தும்
நேரில் நீண்டவோர் நீதிமான் என்னவே நின்றுய். (40)

கால நிலையே.

2140 என்று மேஅர சாய்வரும் இசையுயர் குடியில்
ஒன்றி வந்துளேன்; உறுமுறை செய்துளேன்; ஒருநீ
இன்று வந்தெனை இவ்வகை கேட்கவும் எதிர்நான்
நின்று சொல்லவும் நேர்ந்தது காலவெங் நிலையே. (41)

எதிர்வது தெரிந்துளேன்.

2141 நல்ல நீதிமான் போலவும் நவைபல ஆய்ந்து
சொல்ல வல்லவன் போலவும் சூழ்ச்சிகள் சூழ்ந்து
ஒல்லை நீசெய உறுதியாய் உருத்துள தீய
எல்லை கண்டுளேன்; எதிர்வதைத் தெரிந்துளேன்
[எதிர்ந்தே.

2142. **தலைமையாளர் பால் விடுக.**

மெய்யை வேண்டியும்மேன்மையை வேண்டியும்மேலாச்
செய்ய வேண்டிய நீதியைச் செய்யநீ நேர்ந்தால்,
ஐய! வேண்டிய அதிபதி யாளர்பால் ஆய்க;
உய்ய வேண்டிநான் உன்னிடம் ஒன்றுமே கேளேன். (43)

கொடுத்திருந்தாலும் "கட்டபொம்மைக் கைப்பிடித்தால் இங்கு நேரே அனுப்பி விடுக" என்றே குறித்து விடுத்தார். சேனைகள் வந்து பாஞ்சையை வளைந்தது; போர் மூண்டது; ஆங்கில தளபதிகள் நான்கு பேரும் பல சிப்பாய்களும் மாண்டு பட்டனர். படைத் தலைவன் அவமானமாய்க் கொதித்திருந்தான். விசாரணையின் போதும் இவர் அவனை யாதும் மதியாமல் எதிர்ந்து இகழ்ந்து பேசியதால் அவன் கோபமாய்க் கொலைபுரிய நேர்ந்தான்.

"நீ நல்ல குலமகன் ஆனால் என்னைச் சென்னைக்குக் கும்பினி அதிபதி முன் அனுப்புக" என்று இவர் கூறியிருப்பது தலைமையாளரின் உறவுரிமையை உறுதியாக் கருதியே யாம். இடையே வந்தவன் கடையாய் இறுதி சூழ்ந்தான்.

கொலைத் தணடம் குறித்தது.

2143 என்று மன்னவன் இயம்பிடப் பேனமன் பல்லைத்
தின்று வெஞ்சினம் திருகினன்; செயிர்த்தனன்; சிறிக்
கொன்று தின்பவன் போலுளம் கொதித்துமுன் குதித்தே
இன்று தூக்குனக் கென்றுநேர் விதித்தனன் எழுந்தே.

பலர் பரிந்தனர்: ஒருவன் உவந்தான்.

2144 நின்ற யாவரும் நிலைகுலைந் தலறினர்; சிலபேர்
ஒன்றி யுள்ளகம் உவந்தனர்; எட்டப்பன் உள்ளே
அன்று கொண்டபே ருவகையை யார்சொல்ல வல்லார்?
வென்று வானகம் கொண்டவ ணம்என விரிந்தான்.

* மன்னன் மன நிலை.

2145 மன்னன் ஓர்மன வாட்டமும்
கொண்டிலன் மகிழ்ந்தான்;
இன்ன பேடிகள் முன்னரிவ்
இழிமகன் வாயால்
சொன்ன சொல்லினைக் கேட்டபின்
தொல்லுயிர் விட்டான்
என்ன நேர்ந்ததே! என்பதை
நினைந்துளம் இனைந்தான். (46)

விதி யாரை விட்டது?

2146 ஊரை விட்டுமுன் பெயர்ந்தபோ
தேஎன துயிரும்
பேர விட்டனன்; பிள்ளையைப்
பழிசொலல் பிழையே;
போரை முட்டிநான் பொன்றிடப்
பெற்றிலன் அந்தோ!
யாரை விட்டது விதிவலி
அதனையார் அறிவார்? (47)

---

*மரணத்தைக் குறித்து மன்னன் யாதும் கருதவில்லை, நேர்ந்த நிலைகளுக்கும் புலைகளுக்குமே நெஞ்சம் பரிந்து மான வீரமாய் மறுகி இரங்கி யிருக்கிறான்.

யாரை நோவது?

2147 வீர வெந்திறல் மரபினில் வேந்தனுய் வந்தும்
போர டங்கலும் பொருதுளம் களித்திடப் பெருமல்
ஈர நெஞ்சமில் வஞ்சகர் வலையினில் இடையே
சார நேர்ந்தே! யாரைமேல் நோவது? சலித்தே. (48)

பதி இழந்து முடிந்தேன்.

2148 வந்த வந்தவெம் படைகளை வாரிவா யுண்டு
சிந்தை நாட்டமும் தென்திசை தெவ்வருக் கின்றி
இந்த நாட்டுயர் மேன்மையும் என்குலத் திறலும்
முந்த நாட்டுவேன்பதியினை யிழந்ததால் முடிந்தேன்.

பாளையகாரரை நோக்கிப் பரிந்தது.

2149. பாண்டி நாட்டினில் பாளைய காரராய்ப் பரவி
ஈண்டி யுள்ளநீர் இசையுடன் வாழ்ந்திட இசையீர்!
நீண்ட ஆசையும் பொருமையும் வஞ்சமும் நிறைந்து
பூண்ட புன்மையாய்ப் புலைவழி வாழ்வுறப் புகுந்தீர்!

மான வாழ்வா?

2150 ஈன நாய்களும் இழிவஞ்ச நரிகளும் எங்கும்
ஊன மாகவே உழன்றிடும்; உயர்குல மனிதன்
மான மாயுயர் மதியுடன் வாழவே உரியன்;
ஆன சீருடன் வாழ்ந்திடான் அழிந்திடல் அழகே. (51)

இழிவு என மதிமின்.

2151 ஒத்தி ருந்துளீர்! உங்களுக்கு ஒருமொழி யுரைப்பேன்:
இத்த லந்தனில் எத்துணை நாளிருந் தாலும்
செத்து நீங்குதல் திண்ணமே; ஆயினும் மானம்
வைத்து நீங்குதல் மன்னவர்க் கிழிவென மதிமின்! (52)

புலை நிலை.

2152 தலைமை யானநல் வாழ்வினைச் சார்ந்தவர் தாமே
நிலைமை யாலுயர் நெறிமுறை வாழ்வினை யுடையார்;
தலைமை குன்றியே தாசராய் வாழும்அவ் வாழ்வு
புலைமை யாயிழி புன்பழி யுடையதெப் புறமும். (53)

வருவதை மறந்தீர்.

2153 எந்த வாழ்வையும் வருகின்ற சாவையும் மறந்தீர்!
எந்த வேளையும் பொருமையும் கோள்களும் ஏய்ந்து
முந்த நேர்ந்தநன் முறைமையும் முதன்மையும் ஒழிந்து
நிந்த நேர்ந்தனிர்! சிந்தனை முழுவதும் சிதைந்தே. (54)

பழி படிந்தீர்!

2154 உள்ள நாளெல்லாம் வெள்ளையர்க்கு ஊழியம் புரிந்து
துள்ளி யாடுகள் போலவே பழியொடு படிந்தே
எள்ள லாகவே இழிவுடன் கழியநீர் இருந்தீர்!
ஒள்ளி யார்முனம் ஒளியிழந் துழல்வதை உணர்விர்! (55)

நெடிய நீசம்.

2155 தேளும் பாம்பும்வெந் தியன வாயினும் தீண்டித்
தாளி லுல்மிதித் தவரையே சார்ந்தவை தாக்கும்;
நாளும் கோளர்கள் நல்லவர் தமக்குமே நவையை
நீள வேசெய்து நீசராய்த் திரிகுவர் நெடிதே. (56)

2156. நேர்ந்தது விதியே!

கோளை மூட்டிய கொடியவர் தலைகளைத் துமித்துளன்
வாளை நீட்டிஇவ் வையகம் காட்டுவேன்; எனது
நாளை நீட்டிமுன் நான்முகன் வைத்திலன்; இந்த
வேளை மூட்டிய விதியினை நினைந்துநான் அமர்ந்தேன்.

மனம் மறுகு கின்றது.

2157 ஆயி னும்என தாண்மையை அருந்திற லதனைத்
தேயம் மாண்புறச் சீர்பெறச் செய்திடா திடையே
நாயி னும்கடை யாயவர் முன்னம்நா னின்று
மாய நேர்ந்ததே! எனமனம் மறுகுகின் றதுவே. (58)

பேதை யானேன்.

2158 பொருக ளத்தினில் புக்கவெம் பகைவரை எல்லாம்
ஒருக ளப்படுத் தவர்களை ஒழித்துமுன் உயர்ந்தேன்;
வருக ளந்தொறும் அவ்வகை செவ்வையா வகுத்துப்
பெருகி டாமலே பேதையாய்ப் பதியினைப் பெயர்ந்தேனே

தீயவர் எதிரே மாயவா?

2159 தெவ்வர் கையிடைத் தீமையாய்ச் சிக்கிய போதே
அவ்வி டத்திலே அமர்புரிந் தழிந்திடா தடைந்தேன்;
இவ்வி டத்திலே இவ்வகை இழிவுகள் கண்டேன்;
வெவ்வி டத்தினும் கொடியவெந் தீயவர் எதிரே. (60)

கடமையைக் கருதி அடங்கினேன்.

2160 இக்க ணத்தினும் எறும்வலி மடங்கல்போல் பாய்ந்து
பக்கம் நீண்டுள பகைவரைப் படுத்துயிர் குடித்துத்
தக்க என்திரு நகரினைச் சாருவேன்; தடையாய்க்
கைக்க டைந்தபின் கடப்பது கடைனெனக் கழித்தேன்.

இழிந்து வாழுங்கள்.

2161 குனிந்து கும்பிட்டுக் கோட்சொல்லி இச்சகம் பேசி
வனைந்து தம்முடல் வளர்க்கின்ற வசையுடை யார்முன்
புனைந்து தன்குல வீரமே பூண்டமன் ஒருவன்
இனைந்து நாணியே இறந்தனன் என்பதும் இசையே.

ஈனப் பேடிகளே !

2162 எட்டை யாபுரத் தானையும் இயல்சிவ கிரியைக்
கட்டி யாள்பவன் கடுமன வன்னியன் என்னும்
பட்ட முற்றுள பாளையத் தானையும் பழிசேர்
மட்டி யானபுன் பேடிகாள்! எனவலித் திகழ்ந்தான். (63)

பேடிகள் இடையே வீரன் இருக்கலாமா?

2163 பேடி யாளராய்ப் பெருகிமுன் னிற்பவர் இங்கே
கூடி வாழலாம் அன்றியே கோக்குல வீரம்
சூடி யுள்ளவர் துணிவுடன் அயலிடம் தொடர்ந்து
நீடி நிற்றலே நலம்எனும் நிலையைநேர் கண்டேன். (64)

நரிகளுடன் அரி ஏறு அமருமா?

2164 நரிகள் கூடிவா ழிடத்தினில் நலமிகு திறலார்
அரியின் ஏறுரு தருவருத் தகன்றிடும் அன்றே:
மருவு கோழைகள் மண்டிய நிலத்தினில் மானத்
திருவு மைந்தநற் குலமகன் சேர்ந்திடான் சிறிதும்.

கள்ள மாக்கள்.

2165 உள்ள மானம்விட் டுயிருடன் வாழ்வதில் உடனே
துள்ளி மாள்வே சூரர்கள் துணிவுடன் காண்பார்;
எள்ள லாயிழி நிலையினில் இழிந்துடல் வளர்க்கும்
கள்ள மாக்களக் காட்சியைக் கனவினும் காணர்.

என் இசை திசைதொறும் எழுக.

2166 முழுதும் ஆசையில் மண்டிய முண்டங்கள் முன்னே
தொழுது நின்றிழி தொண்டுகள் தொடர்ந்துநீர் வாழ்மின்!
விழுமி தானஎன் வழிவழி வீரமே விளங்கி
எழுவ தாகநல் இசைதிசை எங்குமென் றியம்பி. (67)

வீரன் எழுந்தான்.

2167 சிங்க ஏறெனத் திண்டிற லுடன்திகழ்ந் தெழுந்தான்;
அங்கி ருந்தவர் தமைமிக அவமதித் திகழ்ந்து
வெங்கண் பார்வையாய் எட்டனை விழித்துமேல் பார்த்துப்
பொங்கி நின்றவப் புளியடி தெளிவுடன் புகுந்தான்.

2168: தம்பியை நினைந்து தயங்கினன்.

தம்பி ஊமையை நினைந்தனன் தயங்கினன் நின்ருன்:
எம்பு ரந்தனில் இருந்தெதிர் பகைவரை எதிர்த்து
வெம்பு போர்புரிந் திறந்திருந் தால்மிக நன்ரும்:
நம்பி இவ்வகை நாடியே பீடுடன் நவின்ருன். (69)

தூக்கில் ஏறியது.

2169 புளிய மாமரக் கிளையினில் பூட்டிவிட் டிருந்த
நெளிய நீளிய வலிநிலைக் கயிற்றுக்கு நேரே

நாட்டிலுள்ள பாளையகாரர்கள் யாவரும் வேறு பலரும் வந்திருந்தனர். கயத்தாற்றுக்கு மேல் புறத்தில் சேனைத் தலைவன் படைவீரர்களைச் சூழ நிறுத்திச் சபையைக் கூட்டினன். இருபுறமும் வரிசையாக யாவரும் அமர்ந்திருந்தனர். பொது மக்கள் பரிதாபமாய் அயலே சுற்றி நின்றனர். பாஞ்சை மன்னனை நேரே அழைத்து நீதி விசாரணை செய்பவன் போல் பானர்மேன் பாவனை புரிந்தான். மன்னன் யாதும் தளராமல் ஏதும் இணங்காமல் எதிர்வாதம்ஆடினன். வாதமுறைகள் யாவும் யாரும் கருதி யுணர உரியன.

எளிய தாய்நின்ற ஏணிநாற் காலியில் ஏறிக்
களிசெய் விருடக் கயிற்றிடைக் கழுத்தினை நுழைத்தான்.

ஊக்கி மாண்டது.

2170 இட்ட வெங்கொடுந் தூக்கினில் இவன்தலை மாட்ட
வட்ட மிட்டிரு கருடர்நேர் வானுறக் கண்டான
தொட்டு நின்றநாற் காலியைத துளளிட எற்றி
விட்ட வன்னுயர் மெய்ப்பதம் மேவினன் விரைந்தே.

கண்டவர் கலுழ்ந்தனர்.

2171 கண்ட யாவரும் கண்கள் நீர் சிந்தினர்; பகையாய்
மண்டி நின்ற வரும்இவன் மனநிலை மதித்து
விண்ட நெஞ்சராய் வியப்பொடு விம்மிதம் கொண்டார்;
திண்டி றற்பெருந் தீரன்என் றெங்குமே துதித்தார்.

அந்த வெள்ளாயனும் உள்ளம் உளைந்தான்.

2172 மான விருடு மன்னவன் மாண்டுள்ள நிலையைச்
சேனை வீரனுய்ச் சேர்ந்துநின் றிக்கொலை புரிந்த
பேனமன்எனும் பெருங்கொலை யாளியும் விபந்தான்;
ஆன அன்னதை அன்றவன் *எழுதியும் வைத்தான்.

கும்பினித் தலைவரும் அறிந்து வருந்தினர்.

2173 தலைமை யாளராய்ச் சங்கத்தில் இருந்தவர் இந்தக்
கொலைவி ளைந்ததைக் கூர்ந்தறிந் துளம்மிக நொந்தார்;
நிலைமை இன்னதை நேர்ந்துணர் கின்றவர் எவரும்
புலைபு குந்துள்ள புன்மையைத் தெளிந்துளம் நோவார்.

2174: ‡ **மாண்ட காலம்**

ஆண்டு கொல்லம்தொ ளாயிரத்தெ ழுபத்தைந் ததனில்
பூண்ட நற்புரட் டாசியின் முடிவில்இப் போர்மன்
நீண்ட மெய்ப்புகழ் நிலத்தினில் என்றுமே நிலவ
மாண்டு போயினன் மானமும் வீரமும் மருவி. (75)

---

‡ இவர் மாண்டது 16—10—1799-ல் என்க.

* "It may not be amiss here to observe, that the manner and behaviour of the Polegar, during the whole time of his being before those who were assembled yesterday at

the examination which took place, was undaunted and supercilious.

He frequently eyed the Etteapuram Polegar, who had been so active in attempting to secure his person, and the Polegar of Sivagiri with an appearance of indignant scorn; and when he went out to be executed he walked with a firm and daring air, and cast looks of sullen contempt on the Polegars to his right and left as he passed.

It was reported to me, that on his way to the place of execution he expressed some anxiety for his dumb brother alone; and said, when he reached the foot of the tree, on which he was hanged, that he then regretted having left his fort, in the defence of which it would have been better for him to have died."

Camp at Kytar,
17th Oct. 1799

(Signed) John Bannerman.

"கூடியிருந்த பாளையக்காரர் கூட்டத்தின் முன்னே நேற்று விசாரணை நடந்தது. அப்பொழுது ஜமீன்தார் கட்டபொம்மு இருந்த நிலையும் நடந்துகொண்ட விதமும் அதிசயமுடையன. அவற்றை இங்கே சொல்வது பிழையாகாது. விசாரணை நடந்த நேரம் முழுவதும் அவர் யாதும் தளராமல் ஏதும் கலங்காமல் தீரமான அகந்தையோடு உறுதியாய் நிமிர்ந்தே யிருந்தார்.

தன்னைப் பிடித்துக் கொடுப்பதில் கடுமுயற்சி புரிந்திருந்த எட்டையாபுரம் ஜமீன்தாரையும், சிவகிரி ஜமீன்தாரையும் மிகுந்த இகழ்ச்சிக் குறிப்போடு அடிக்கடி அவர் கடுத்துப் பார்த்தார்.

தான் இறந்துபோகத் துணிந்து தூக்கு மரத்தை நோக்கி அவர் நடந்துபோகும் பொழுது வலம், இடம் என்னும் இரண்டு புறங்களிலும் வரிசை வரிசையாயிருந்த பாளையகாரர் எல்லாரையும் அவமதிப்பாய் இகழ்ந்து நோக்கி மிகுந்த துணிவான தைரியத்தோடு அதிகம்பீரமாய்ச் சென்றார்.

சாகப் போகிற நேரம் தனது தம்பி ஊமைத்துரையை மாத்திரம் நினைந்து சில கவலைகளை அடைந்தார்; தனக்குத் தூக்கு இட்டிருந்த அந்தப் புளிய மரத்தின் அடியை அடைந்தவுடன் சிறிது நின்று மறுகினர்; தன்னுடைய கோட்டையைவிட்டு வெளி ஏறுமல் அங்கேயே நின்று உரிமையைப் பாதுகாத்து எதிரிகளை எதிர்த்துப் போராடி மாண்டு போயிருந்தால் தனக்கு மிக நன்றாயிருந்திருக்கும்! என்று நீண்ட பரிதாபத்தோடு மொழிந்து அதன்பின் மாண்டு போனர்.''

இந்த வீரனுடைய தீர தைரியங்களைக் குறித்து எதிரியும் இவ்வாறு வியந்து எழுதியிருக்கின்றான்.

மரணம் என்றால் எவரும் கலங்குவர். யாதும் கலங்காமல் ஏதும் தளராமல் இவ்வீரன் உறுதி உளக்கங்களோடு சென்றிருப்பது யாருக்கும் அதிசயவியப்பாய் நின்றது. பகைவனும் பரிந்து கூற நேர்ந்தான்.

Undaunted: He walked with a firm and daring air: என்னும் இந்த ஆங்கில வாசகத்தின் பொருட் குறிப்புகளை இங்கே கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்ள வேண்டும்.

யாவரும் மறுகினர்.

2175 ஆவி போனபின் அத்திரு மேனியை அங்கே
கூவி நின்றதன் உறவினர் கொண்டுபோய்க் கோலம்
யாவும் செய்தனர் அரசியல் அமைதியில் அழகாய்
மேவு சந்தன இந்தன மேலினி துய்த்தார். (76)

வீரப்பொலிவு.

2176 சிங்கம் சீறிய செயலெனச் சினத்தொடு வீரம்
பொங்கி நின்றெளிர் திருமுகப் பொலிவினை நோக்கி
அங்கண் ஞாலத்தில் ஆண்மையை விளக்கிய அரசை
எங்கு நாமினிக் காண்பமென் றேங்கினர் இரைந்தே.

ஏங்கி நொந்தனர்.

2177 பாங்கு சூழ்ந்துநின் றுளமிகப் பரிந்தவர் பலரும்
ஈங்கிம் மன்னனுக் கிவ்விதி எய்திய தந்தோ!

யாங்கும் இத்தகை அருந்திற லரிதென அழுதே
ஏங்கி நொந்தனர் எவ்வகை யோர்களும் இனைந்தே.

தழல் மூட்டினர்.

2178 வீர நாயகா! விண்ணுல கடைந்ததையோ? என்பார்;
போரை ஆண்டுறு பாண்டியா! மாண்டையோ? என்பார்;
மார ஞமெனும் வடிவமே! மாய்ந்ததையோ? என்பார்;
ஆர வேஅழு தழலினை மூட்டினர் அடுத்தே. (79)

தவித்து நின்றனர்.

2179 ஒள்ள முற்பள்ளிப் பாயலில் உலகெலாம் ஒடுக்கும்
தள்ள ருந்திறல் வீரனைச் சார்த்திய பின்னர்க்
கொள்ளி கொண்டவர் கொளுத்தவும் உள்ளமும்
[கொதித்துத்
துள்ளி நின்றனர் கண்ணினீர் வெள்ளத்தில் துடித்தே.

ஊமையன் வீர சபதம்.

2180 அண்ணல் மேனியில் அழலுற ஊமையன் ஏங்கிக்
கண்ணி றைந்தநீர் மண்ணிறைந்தோடிடக் கலுழ்ந்தான்;
உண்ணி றைந்தவெங் கோபவன் கனலுருத் தோங்கி
எண்ணி றந்தபேர் இப்பழிக் கிரையென எழுந்தான்.

துரைச்சிங்கம் துணிந்தது.

2181 ஊழித் தீயென உள்ளகம் கொதித்திட வுருத்துப்
போழித் தோள்வய இளையவன் பற்களைக் கடித்தான்:
சூழிப் போர்க்கதக் களிறெனத் துனியினை மறைத்துக்
காழிப் போடுறு காலமுட் கருதினன் கடுத்தே. (82)

கங்கையில் கரைத்தது.

2182 செய்யவேண்டிய கருமங்கள் யாவையும்செய்து
துய்ய கங்கையில் சாம்பரைக் கரைத்திட எவி
ஐயி ரண்டுநாள் ஆவன செய்திட அமைந்து
பைய வந்தனர் பண்புடை உறவினர் பரிந்தே. (83)

இனைந்து எண்ணியது.

2183 நீண்ட கீர்த்திகள் திசைதொறும் பரவிட நின்ற
ஆண்ட கைக்கிந்த அல்லலும் அவலமும் அடர்ந்து

மூண்டு வந்தன முன்செய்த வினையன்றி இந்நாள்
ஈண்டு இவன்செய்த தென்?என எண்ணினர் இனைந்தே.

ஆண்டவன் மாண்டான்.

2184 திசைகள் வென்றவன் என்றுபேர் சிறப்புறப் பெற்ற
விசையன் மாமகன் வீரபாண் டியன்விறல் வீரன்
அசைவில் ஆண்மையாய் ஆண்டனன் அவலமாய்
[மாண்டான்
பசையி லாதஇவ் வுலகவாழ் வென்னெனப் பகர்ந்தார்.

நிலைமை என்னே!

2185 அஞ்சாத தனிஆண்மை அயராத
பெருமேன்மை யாண்டும் யாதும்
எஞ்சாத மனவுறுதி இவ்வீரக்
குரிசிலிடம் இயல்பாய் வாய்ந்து
நஞ்சான பகைதோய்ந்து நாசமே
கருதியுள்ள நண்ணர் முன்னே
நெஞ்சார நிலைதெரிந்தும் நிலைநிமிர்ந்து
நின்றனவே நிலைமை என்னே! (86)

உயிர்விடுதல் அரிதே!

2186 சாவென்றுல் யாருமே தடுமாறி
நிலைகுலைவர்; சமரில் ஏறி
வாவென்று மருவலரை அறைகூவி
வாளாடல் புரிந்து வீட்டிக்
கோவென்று வீரவெறி கொண்டங்கே
மாள்வதினும் கூடி யுள்ளார்
ஆவென்று கண்டலற அவர்எதிரே
உயிர்விடுதல் அரிதே அம்மா! (87)

உயர் வீரன் உரைத்தான்.

2187 கொல்லுகின்ற எமன்போலக் கொடுமையாய்ப்
பலசூழ்ந்து குறிக்கோ ளோடு
வெல்லுகின்ற படைகளேநேர் அயல்எங்கும்
வீரூடு விரித்து வைத்துப்

புல்லுகின்ற நீதிமுறை புரிபவன்போல்
படைத்தலைவன் புகலும் தோறும
ஒல்லுகின்ற வழிஎல்லாம் உயர்வீரம்
ஒளிபுரிய உரைத்தான் வீரன். (88)

எல்லாரும் ஏத்தி நின்றார்.

2188 மூண்டுவந்த பகைவனையும், மூட்டிநின்ற
கோளரையும், முடிவு கண்டும்
ஆண்டகையிம் மன்னனங்கே யாதொன்றும்
அயராமல் அரியே றென்ன
நீண்டுநின்ற நிலைமையையும் நெடியவுயர்
தலைமையையும் நினைந்து வந்தே
ஈண்டிநின்ற எல்லாரும் எவ்வழியும்
இவன்திறலை ஏத்தி நின்றார். (89)

நாடறியின் நன்மையாமே!

2189 பேடிகளாய்ப் பேதைகளாய்ப் பிழையாக
வாழ்ந்திழிந்து பிழைக்க நேர்ந்து
கூடியுள்ள கோழைகளே! என்றந்தக்
கூட்டத்தைக் குறித்து நோக்கி
நீடியபே ராண்மையுடன் நெறிமுறைகள்
பலதெரிய நேரே யாரும்
நாடியுணர்ந் துய்ய இவன் நவின்றவுரை
நாடறியின் நன்மை யாமே. (90)

வீர நாடாவது என்று?

2190 கும்பினென்றிந் நாட்டில் ஒருகூட்டம்
கும்பாகக் கூடி வந்து
வம்புகளை மிகவினைத்து வரிசையுடன்
வாழ்ந்துவந்த வீரர் தம்மைப்
பம்பியவன் பகைஎன்றும் பணியாத
பேரென்றும் பழிச்சொல் நீட்டி
வெம்பிவரும் வெளிநாட்டார் விளிந்தொழியும்
காலமே வீர நாடாம். (91)

உலகம் எங்கும் இரங்கியது.

2191 என்றுமக்கள் எவ்வழியும் இவ்வீரர்க்கு
எய்தியதை எண்ணி எண்ணிக்
கன்றியவெந் துயரோடு காலத்தின்
விளைவுகளைக் கருதி நொந்தார்;
அன்றெவரும் இம்மன்னன் ஆண்மைகளை
வியந்தாலும் அழிவை நோக்கி
ஒன்றியுளம் உளைந்திருந்தார்; உலகமெங்கும்
ஓர்இரக்கம் ஓங்கிற் றன்றே. (92)

மன்னன் தேவி மறுகிப் புலம்பியது.

2192 மன்னனங்கே மாண்டசெய்தி மனைவியிங்கே
கேட்டவுடன் மயங்கி மாழ்கித்
தன்னுயிர்போய் ஒழிந்ததெனச் சாய்ந்துநெடும்
போதுயிர்ப்புத் தான்போய் மீண்டு
மின்னலிளங் கொடிநிலத்தில் வீழ்ந்துருள்வ
தெனப்புரண்டு வீணை நாண
இன்னிசைவேய்ங் குழலினைய இருந்தமொழி
வருந்தியழு தேங்க லானாள். (93)

பெரு வீரம் பேடியர்முன் பேர்ந்ததே!

2193 கோடிசனம் நிறைந்திருக்கக் குலநகரம்
நிலைத்திருக்கக் கொற்றம் இல்லாப்
பேடியர்முன் பிழையாகப் பிழையாத
பெருவீரம் பிழைத்து நீயும்
வீடினையே விறல்மதனு! இதையறிந்தும்
என்ஆவி வீயா தின்னும்
நீடியுடல் நிலைத்துளதே நிலைதெரியாக்
கொடுவினையின் நிலைதான் என்னே! (94)

எழில்கள் எல்லாம் எங்கே?

2194 கோலமுழு மதியனைய திருமுகத்தின்
பொலிவெங்கே? குலத்தோள் எங்கே?
மாலைதவழ் மார்பெங்கே? வண்குமுத
மலர்என்ன மலர்ந்த செவ்வாய்க்

கோலம்எங்கே? குணம்எங்கே? குலவீரத்
திறல்எங்கே? குளிர நோக்கும்
நீலவிழி நிலைஎங்கே? நிமிர்மீசைச்
செறிவெங்கே? நெறிதான் எங்கே? (95)

வேலவனைப் பூசிக்கும் விஞ்சையா?

2195 காலையிலும் மாலையிலும் கமழினிய
நீராடிக் காமர் செந்தில்
* வேலவனைப் பூசித்து விஞ்சையன்போல்
எழுந்துவரும் மேன்மை எங்கே?
சிலமுடன் அமர்ந்தடியாள் திருவமுதம்
ஊட்டவுண்ணும் சிர்மை எங்கே?
ஏலமுயர் பாகருந்தி இன்மொழிகொண்
டிருந்தாடும் எழில்தான் எங்கே? (96)

மாட்சியான காட்சிகள் எல்லாம் எங்கே?

2196 கதிமிகுந்த பரியேறிக் காமருடன்
வெளியேறும் காட்சி எங்கே?
துதிமிகுந்து தொழுதேத்தச் சோதிமணிச்
சிவிகைவரு சோபை எங்கே?
மதிமிகுந்த புலவருடன் மகிழ்ந்தமர்ந்து
சொல்லாடும் மாட்சி எங்கே?
நிதிமிகுந்து கொடுத்தருளும் நிறைவண்மைச்
செயல்எங்கே? நீதி எங்கே? (97)

---

* வீரபாண்டியன் தந்தை ஆளுகின்ற திக்குவிசயத்துரை பூசித்து வந்த முருகப் பெருமான் உருவம் அதிசய அழகு உடையது; சிறந்த தங்கத்தால் அமைந்தது. திருச்செந்தூர் ஆலயத்தில் சண்முகப் பெருமான் சந்நிதி முன்புறம் யாரும் கண்டு தொழும்படி காட்சிக்கு இன்றும் மாட்சியாய் வைக்கப் பட்டுள்ளது. "பாஞ்சாலங்குறிச்சி ராஜா பூசித்து வந்த விக்கிரகம்" என மேலே எழுதப் பட்டுளது. சிற்பக் கலையின் சிறப்பு அமைந்த இந்த அற்புத விக்கிரகத்தையே வீரபாண்டியனும் முறையே பூசித்து வந்தான். வேலவனைப் பூசித்து விஞ்சையன் போல் எழுந்து வரும் காட்சியை நேரே கண்டவள் ஆதலால் நெஞ்சம் கரைந்து நெடிது புலம்ப நேர்ந்தாள்.

வள்ளலையும் இழந்தேனே !

2197 பிள்ளையில்லாப் பாவினை இதுவரையும்
பிழைகொண்டேன்; பேணிக் கொண்ட
வள்ளலையும் இன்றிழந்து மாபாவி
எனநின்றேன்; மண்ணில் என்போல்
தள்ளரிய தீவினையைத் தள்ளாமல்
செய்திங்ன் தவித்தா ருண்டோ?
உள்ளியவெங் கொடுந்தீய ஊழிவினைப்
பயனிதுவோ உணரேன் அந்தோ! (98)

அதிபதியே ! அருந்துணையே !

2198 பதிபெயர்ந்து வெளியேகல் பழியாகும்
என்றுமுன்னே பரிந்து சொன்ன
மதியிகந்து வெளியேறி வன்கொலையாய்
மடிந்தாயே மதியான் மிக்க
அதிபதியே! என் ஆவி அருந்துணையே!
ஆண்டகையே! அமிர்தே! இங்கே
சதிபதியாய் இருந்தென்னைத் தள்ளிவிட்டும்
போயினையே தகவோ? கோவே! (99)

பேர் அரசும் பேர்ந்ததே !

2199 வெள்ளைமகன் நெல்லெடுத்து விளைவினைத்துப்
பகைவளர்த்து வினையாய் நின்ற
பிள்ளைமகன் சொல்லைநம்பிப் பெயர்ந்தெனது
பேரரசும் பேர்ந்த தந்தோ!
தள்ளரிய பெருவீரத் தனிமானக்
குலமகனைத் தனியே விட்டு
வெள்ளமென விழிநீரைக் கள்ளமுற
விட்டுயிரை விடுகில்லேனே. (100)

குலவீரச் சிங்கமே !

2200 குலவீரச் சிங்கத்தைக் குறுநரிகள்
பலகூடிக் கொடிது சூழ்ந்து
தலமாறி நின்றவிடம் சதியாகக்
கொன்றதெனும் தகையாய் எங்கும்

குலையாத பெருவீரக் குலவரசைக்
கொடுவிரகாய்க் கொண்டு சென்று
புலையாகப் புல்லரந்தோ பொல்லாத
கொலைசெய்து போக்கி னரே. (101)

என் பிறப்பின் தீவினை என்னே!

2201 மண்ணிறைந்த பெருந்திருவும் மாறுத
அருந்திறலும் மானம் வண்மை
விண்ணிறைந்த பெருங்கீர்த்தி மிகநிறைந்து
சிறந்திருந்த வேந்தர் வேந்தே!
கண்ணிறைந்த கட்டழகா! கண்காண
துனையிழந்து கதறு கின்றேன்;
எண்ணிறைந்த பெண்பிறப்பில் என்பிறப்பின்
தீவினைதான் என்னே! என்னே! [102)

தெய்வமே! என் செய்தேன்?

2202 போரரசை மணந்தபெரும் புனிதவதி
எனவுலகம் புகழ்ந்து போற்றப்
போரரசி என்றெவரும் பெருமைசெய்து
பணிந்தேத்தப் பெருகி நின்றேன்;
பாரரசை இழந்துபடு பாவியாய்ப்
பரிதவித்துப் பாரில் நையச்
சீரரசு செய்தகலத் தீவினைநான்
செய்ததென்ன தெய்வ மேயோ! (103)

பாவி பழி யுண்டேனே!

2203 ஐயகோ என்அரசை முன்னிழந்து
பின்இறக்க அடியாள் செய்த
வெய்யகொடுந் தீவினையின் விளைவிருந்த
படியென்னே? விண்ணோர் வாழச்
செய்யவடி வேல்எடுத்த திறல்முருகன்
திருவருளும் தீர்ந்த தேயோ?
வையமதில் உய்யவினி வழியுண்டோ?
வன்பாவி பழியுண் டேனே. (104)

யார் இருந்தும் பயன் என்னே !

2204 தந்தைதாய் இருந்தாலும் தன்னுடனே
ஒருவயிற்றில் சார்ந்தன் பாக
வந்ததுணை இருந்தாலும் வளர்கிளைகள்
இருந்தாலும் மகிழ்ந்து பெற்ற
மைந்தர்தாம் இருந்தாலும் மற்றவெல்லாம்
இருந்தாலும் மணந்து கொண்ட
* சுந்தரன்தான் இல்லையெனின் அந்தமகள்
உயிர்வாழ்க்கை துயரம் அன்றே ? (105)

கண்ட ஒளிகள் காணேனே !

2205 ஏந்தியதிண் தோள்காணேன்; எழிலொழுகு
திருமுகத்துப் பொலிவு காணேன்;
சாந்துளைந்த தடமார்பம் தனைக்காணேன்;
தாழ்ந்ததடக் கைகள் காணேன்;
போந்தொளிர்புன் னகைகாணேன்; புத்தமுத
மொழிகாணேன்; போரே றென்ன
ஆர்ந்துவரும் நடைகாணேன்; அடல்காணேன்;
அயல்காணேன்; அந்தோ! அந்தோ ! (106)

காலனே வென்றுய் ! காலன்வாய் நினறுயே !

2206 வந்தோடி வளைத்துநின்ற படையுடனே
வன்காலன் தனையும் வென்றுன்
இந்தோடு முடியுடையான் அருள்குமரன்
அருளுடையான் என்ன ஏத்தச்
சந்தோட முடனின்ற தனிவீரக்
குலமகனே! சார்ந்து வீணே
முந்தோடி முடிந்தனையே! முதிர்காலன்
பெயர்க்காக முடித்தான் கொலோ? (107)

---

* ஒரு மங்கையின் வாழ்க்கை அவள் கைக்கொண்ட கணவனுலேயே இன்பமும் ஒளியும் எய்தியுள்ளது. அவன் இல்லையானுல் உயிர் இழந்த உடல்போல் துயரமேயாம்.

உரியவனைக் காவாமல் ஒளியலாமா?

2207 என்னுயிரே! என்உணர்வே! என்கண்ணே!
என்துரையே! என்னை யிங்கே
துன்னுதுயர்க் கடல்விடுத்துத் துணையின்றித்
தனியிருத்தல் சுகமோ? சொல்லாய்!
பன்னியடுத் தார்தம்மைப் பாதுகாத்
தருள்வதென்றும் பாஞ்சை மன்னர்க்கு
உன்னரிய உரிமையன்றே? உரியவனைக்
காவாமல் ஒளிய லாமோ? (108)

அடுத்தவனைக் காக்க யாவும் விடுத்த குலமகனே!

2208 அடுத்தஒரு வனைக்காக்க ஆருயிரும்
அருங்கிளையும் அரசும் அந்தோ
கொடுத்துநின்ற குலமகனே! உலகமெலாம்
நனிகாணக் கொண்ட என்னைத்
தடுத்தாண்டு கொள்ளாமல் தள்ளிவிட்டுச்
சென்றனையே தகவோ? சொல்லாய்!
எடுத்தாண்ட வில்லாளா! இல்லாளை
எடுத்தாளல் இனிமை யன்றே? (109)

தாயும் தவித்து ஆவி பிரிந்தாள்.

2209 என்றேங்கி அழுதரற்றி இன்னுயிரை
நீத்திடவுள் எண்ணி நேர்ந்து
சென்றோட அயல்நின்றூர் அடிவீழ்ந்து
நெடிதழுது செறிந்து கொண்டார்;
தன்தாயும் அலமந்து தாலிபோய்
அருமகனும் தணந்தான் அந்தோ!
இன்றோடென் னுயிர்சரியென் றேங்கினள்
ஆங்காவி யிரிந்த தன்றே. (110)

எங்கும் துயர் ஒலி

2210 இன்ன வண்ணம் துயரொலி எங்குமே
மன்னி ஓங்க மறுகிப் புலம்பினர்;
அன்ன வெங்கொடும் அல்லலைச் சொல்லவே
உன்னின் உள்ளம் உருகி உலையுமே. (111)

யாவரும் கலங்கினர்

2211 கண்ட கண்டவர் கண்புடைத் தேங்கியே
தொண்டை வீயத் துடித்தல மந்தனர்;
மண்டி எங்கும் துயர்த்தீ வளர்ந்தயல்
உண்ட தோங்கி உருத்தெரி யாமலே. (112)

பரிதாப நிலைகள்

2212 ஐய கோ! எனக் கூவி யலறுவார்;
தெய்வ மேயெனத் தேம்பித் தியங்குவார்;
செய்வ தொன்றும் தெரிந்தில ராய்த்துயர்
உய்தி யின்றி யுலர்ந்து புரண்டனர். (113)

ஊரும் நாடும் உருகின

2213 ஊரும் நாடும் உருகி மறுகின;
யாரும் துன்ப அனலில் கருகினர்;
பேரும் சீரும் பெருகி யிருந்தவர்
பாருள் எங்கும் பரிந்து பதைத்தனர். (114)

கிடந்து புலம்பினர்

2214 பிள்ளை செய்த பிழையால் பெருகியே
வெள்ளைக் கூற்றம் விரைந்துடன் வந்துகம்
தெள்ளு சீர்மன்னைத் தின்றதென் றேங்கியே
கிள்ளை வாயர் கிடந்து புலம்பினர். (115)

மறுகி உருகினர்

2215 வீர மன்னன் விளிந்தன னேயினித்
தாரம் இங்குத் தரிக்குங்கொலோ? என்பார்;
ஆரும் அன்புடைத் தாயாம் அரசியும்
போ நேர்ந்ததே பேர்ந்திலமே யந்தோ! (116)

அரண்மனை அமைந்தது

2216 என்று கோட்டை யிருந்தவர் யாவரும்
துன்று கேட்டைத் தொடர்ந்து துடித்தனர்;
சென்று சின்னபொம் மையன் செறிந்துமே
நின்று மாற்றி நெறிமுறை யாற்றினன். (117)

உரியவன் உற்றான்

2217 சின்ன பொம்மெனும் செவ்வியன் திக்குயர்
மன்ன னேடு பிறந்தவன்; மாண்பினன்;
அன்ன நீதியன் முன்னம் அரசுடன்
பின்ன மாகிப் பிரிந்தயல் போயினன். (118)

வந்து வருந்தினன்

2218 எல்ல மாபுரம் என்னும் நகரினில்
செல்வ மோடு சிறந்திருந் தானிடை
அல்லல் நேர அறிந்து வருந்தினன்;
வல்லை வந்து மறுகி யுருகினன். (119)

உதிர உறவு உள்ளம் உருக்கியது

2219 முதிர் சினங்கொடு மூண்டயல் போயினும்,
பதிகு லைந்ததைப் பார்த்துப் பதைத்தனன்;
அதிர வன்பகை யாய்அயல் நிற்பினும்
உதிர சம்பந்தம் உள்ளம் உருக்குமே. (120)

சீர்மையாளன்

2220 சின்ன பொம்மெனும் சீருயர் பேருடை
இன்ன பண்பினன் யார்க்கும் இனியவன்;
நன்ன யமுடன் நாட்டினை நாட்டமாய்
முன்னம் ஆண்டு முதன்மை புரிந்தவன். (121)

மன்னனுடைய சிறிய தந்தையான சின்ன பொம்மையா ஜமீனை நன்கு பாதுகாத்து வந்தார். இவர் ஆட்சி புரிந்து வந்த மாட்சியைக் குறித்துக் கும்பினியின் அதிகாரி நன்கு வியந்து எழுதி வைத்துள்ளார். கி. பி. 1797-ம் ஆண்டு

நீதிமான்

2221 நேர்மை யாளன்; நெறிமுறை யுள்ளவன்;
கூர்மை யான அறிவும் குணங்களும்
சீர்மை யாகச் சிறந்து திகழ்ந்தவன்;
நீர்மை யாலுயர் நீதி நிறைந்தவன். (122)

நெடிது புரந்தவன்

2222 நெடிது காலம் நெறிமுறை யாகவே
படிபு ரந்து பலவளம் செய்தவன்;
குடிச னங்கள் உவந்து கொண்டாடவே
முடிமன் என்ன முதலில் உயர்ந்தவன். (123)

நீங்கி யிருந்தான்

2223 ஆங்கி லேயரும் இன்னவன் ஆட்சியைப்
* பாங்கி னோடு புகழ்ந்துளர்; பண்பிலாத்
தீங்கினர் செய்த தீயவெஞ் சூழ்ச்சியால்
நீங்கி னன்பதி நெஞ்சம் வெறுத்துமே. (124)

வெறியர் விலக்கினர்

2224 சிறிய தந்தையின் சீர்மையும் நீர்மையும்
நெறியில் நின்றுசெய் நீதி நிலைமையும்
அறிய நேர்ந்தும் அரசன் அறிவிலா
வெறியர் சொல்லினுல் விட்டு விலக்கினன். (125)

அல்லல் புகுந்தது

2225 நல்லவன் விலகவே நவைகள் நண்ணிய
புல்லியர் புகுந்தனர் புன்மை பூண்டதால்
அல்லல்கள் மூண்டன அவலம் நீண்டன
எல்லையி லாதவெந் துயர்கள் ஏறின. (126)

இவர் பதவியை விட்டு விலகினர். அயலே வருகிற ஆங்கிலக் குறிப்பு ஈங்கு அறிய வரியது.

* "This man managed the country for many years. He was dismissed by his nephew last year, bears a good character, and is said to be respected by the people."

(W. C. JACKSON, 9th June, 1798)

அவல அழிவு ஆயது

2226 உள்ளம் நல்ல ஒருவன் பிரியவே
எள்ளல் கோடி எழுந்து புகுந்தன;
தள்ள ருந்துய ரோடு தவித்துமன்
துள்ளி மாண்டனன் துன்புற யாருமே. (127)

கேடு வந்த வகை

2227 கோடிபேர் பகைகளைக் கொளினும் கொள்ளலாம்;
நாடியோர் * நல்லவன் தொடர்பைக் கைவிடின்
வீடருந் துயரமாய் வீய நேருமே
கூடினின் றுணர்ந்திதைக் கூர்ந்து தேர்கவே. (128)

துயரில் உதவினன்

2228 தமையன் மாமகன் தனை யிகந்ததால்
அமைதி யின்றியே அயல் ஒதுங்கினன்;
சுமைமி குந்தவெந் துயர்கள் நேர்ந்ததும்
கமையி னேடிவன் கலந்து காத்தனன். (129)

ஆற்றி யருளினன்

2229 துக்கமாய்த் துடித்தயர் கின்ற சுற்றத்தைப்
பக்கமாய் நின்றிவன் பரிந்து தேற்றினன்;
மிக்கவெந் நோயினை நீக்கும் நேயன்போல்
தக்கநன் மொழிகளைச் சாற்றி யாற்றினன். (130)

உலக நிலைகளை உணர்த்தினன்

2230 உலக வாழ்வின் நிலைகளை ஓதினன்;
கலக வீழ்வின் கதிகளைக் காட்டினன்;
பலவும் கூறினன்; பண்புடன் தேற்றினன்;
நலமு றும்படி நாடினன் பேணினன். (131)

---

* பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல். (குறள் 450)

அரிய உதவிகள் புரிந்தான்

2231 வேட பட்டி எனும்பெயர் ஊரினில்
பீடு பெற்ற இவன்மர புள்ளது;
நாடு பெற்றுயர் வாழ்வி லிருந்தவர்
கூடு பெற்ற குடியிடை நின்றுளார். (132)

நேர்ந்தவை நினைந்து தெளிக

2232 வாழ்ந்த வாழ்வையும் மன்னவன்
மடிந்துள வகையையும் தொகையினைக்
சூழ்ந்து நோக்குவார் யாவரும்
தொடர்ந்துள சூழலை உணர்வாரேல்
ஆழ்ந்த கோளர்கள் அடுத்துள
தோளர்கள் அவரவர் வளமாக
வாழ்ந்து கொள்ளவே வஞ்சனை
புரிந்துள்ள வழிகளைத் தெளிவார்கள். (133)

வினையின் விளைவு

2233 இன்ன காலத்தில் இன்னதோர்
இடத்தினில் இன்னவர்க் கிதுநேரும்
என்ன முன்னுற உணர்பவர்
எவருளர்? எதிர்ந்தபின் தெரிவார்கள்;
மன்னன் மாண்டதும் மந்திரி
மடிந்ததும் வன்கொலை புலைஎன்றே
உன்னி நாடெலாம் வருந்தின
உளைந்தன உழுவலை நிலையோர்ந்தே. (134)

வீர நாடு

2234 வீர நாடென விளங்கிமுன்
இருந்துள விழுமிய நம்நாட்டின்
சீரைப் பாஞ்சைமன் ஒருவனே
விளக்கினன் திறலுடன் தெளிவாக;
காரை முட்டிய இடிகளும்
வெடிகளின் கருமருந் துடன்வந்து

---

132 வேடபட்டி என்னும் இவ்வூர் கோவில்பட்டித் தாலுகாவில் உள்ளது. சின்னபொம்மையா வழியில் வந்தவர் அங்கேயே இன்னும் வாழ்ந்து வருகின்றனர்.

போரை முட்டிய வெள்ளையர்
உள்ளுற வெருவினர் புகழ்ந்துள்ளார். (135)

வீர பாண்டியன்

2235 இமயந் தொட்டுமே குமரியின்
முனைவரை எவருமே எதிரில்லை;
அமைதி யாகவே ஆளலாம்
எனவந்த ஆங்கிலர்க் கெதிராக
உமது நாட்டமும் உளதிய
நோக்கமும் ஒழிமின்என் றுருத்தேறி
அமர்பு ரிந்தெதிர் பாஞ்சைமன்
இறந்தனன்; அவன்புகழ் இறவாதே. (136)

பொன்னுடு புகுந்தான்

2236 எந்நாட்டும் திறைநாட்டி இரும்பொருளை
மிகஈட்டி எங்கும் ஆட்சி
முன்னுட்டி மூண்டுவந்த கும்பினியும்
கம்பமுற முனைந்தெ திர்ந்து
கன்னுட்டி அமர்பொருது கட்டபொம்மென்
றட்டதிசை களும்சீர் நாட்டித்
தென்னுட்டுச் சிங்கமெனச் சிறந்திருந்தான்
பொன்னுடு சேர்ந்தான் அம்மா ! (137)

இந்நாடு இருந்தது

2237 சந்திரனை இழந்திருந்த தனிவானம்
போல்இந்தத் தகைசால் நாடு
வெந்திறல்சேர் வேந்தனிலா வெறுமையிலல்
சிறுமையுற்று வெதும்பி நாளும்
புந்திநொந்து பொலிவிழந்து புலர்ந்திருந்த
தெவ்வழியும் புதிதாய் வந்த
அந்தஅயல் நாட்டாளர் இந்தவழிக்
கவம்செய்த தயலே காண்பாம். (138)

22-வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 2237.

இருபத்து மூன்றுவது

சிறையிருந்த படலம்.

வீரபாண்டிய மன்னன் மாண்டுபோன பின்னர்ப் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கும்பினியார் தமக்கு உரிமைசெய்து கொண்டனர். அவ்வளவோடு அமையாமல் தம்பி ஊமையன் முதலானவர்களைப் பாளையங்கோட்டைக்குக் கொண்டுபோய் அங்கே சிறையில் வைத்திருந்தனர். விரைவில் வெளியே விட்டு விடுவர் என்று முதலில் ஊமைத்துரை கருதியிருந்தார். பதினறு மாதங்களாகியும் விடாமல் படுதுயர்ப்படுத்தியிருந்தமையால் முடிவில் அவருடைய மரபினர் திரண்டு வந்து சிறையை உடைத்து அவரை மீட்டினர். மீண்டு வந்த அவர் மீண்டும் பாஞ்சைக் கோட்டையைப் பலப்படுத்தி ஆண்டகைமையோடு ஆள நேர்ந்தார். அதிசயமான அந்த அருந்திறலாண்மைகளையும் பெருந்தகைமைகளையும் இந்தப் பகுதியில் அறிய வருகிறோம்.

பாஞ்சையரை வருத்தியது

2238 வீர வேந்தை வதைத்தபின் வேறுள்ள
பேரை எல்லாம் சிறையிடைப் பெய்தனர்;
வார மாக மனுநெறி குன்றியே
ஈரம் இன்றி இயற்றினர் இன்னலே. (1)

பாளையங்கோட்டைச் சிறையிலிட்டது

2239 பாள யம்பதி தன்னில் படுசிறை
நாள யொன்றி யிருமென நாட்டினர்;
ஆள வந்த அரசினத் தார்கள
மாள வந்த வகையென வைத்தனர். (2)

பதியுள் புகுந்தது

2240 பாஞ்சை யம்பதி பாடுறப் புக்கனர்;
வாஞ்சை யாயங்கு வாழ்ந்திருந் தார்கள
தேஞ்சு போகெனச் சீறி அகற்றினர்;
ஆஞ்சை கூறி அமர்ந்திருந் தாரவர். (3)

பலவும் கவர்ந்தது

2241 மத்த யானைகள் மாண்பரி மாடுகள்
ஒத்த செல்வங்கள் யாவையும் ஒன்னலர்
தத்த மக்கெனத் தாம்கவர்ந் தள்ளியே
மொத்த மாகவும் விற்று முடிந்தனர். (4)

பானர்மேன் படுகொள்ளை

2242 பேன மன்மிகப் பேரவா வுற்றனன்:
வான மன்ன வளங்களை வாரினன்;
தானை மன்னர் தமக்குரித் தாமென
ஆன மன்னர்க் கறிக்கைகள் ஆற்றினன். (5)

தென்திசை அதிபன்

2243 வந்தி ருந்தவர் தம்முள் * வலிங்கன்
சிந்தை நல்லவன்; தென்திசை யாதிபன்;
முந்தை யோர்கள் முறையினை நாடியே
அந்த மாநகர் ஆணையிற் பேணினன். (6)

பாஞ்சை ஒளி யிழந்திருந்தது

2244 வெற்றி வீரன் விளங்கி யிருந்தவப்
பொற்ப மைந்த பொலிவுடைப் பொன்னகர்
பற்றி நின்ற பதியைப் பிரிந்தபின்
உற்றி ருந்த ஒளியை இழந்ததே. (7)

சிங்கக் குகையுள் நரி இருந்தது

2245 சிங்கம் வாழ்ந்த செழுங்குகை யுள்ஒரு
‡ கங்கம் வந்து கலந்திருந் தாலென
அங்க மர்ந்த படையொ டயல்மகன்
தங்கி நின்றனன் தன்னுயிர் அஞ்சியே. (8)

---

* கொள்ளைபுரிந்த வெள்ளையர் குழுவுள் லஷிங்கட்டன் (Lushington) கலெக்கட்டர் நல்லவன். சேனைத்தலைவனாயிருந்த பானர்மேன் (Bannerman) மிகவும் கொடியவன்; கொலை நோக்கு உடையவன்; பேராசைமண்டிப் பாஞ்சைச் செல்வங்களைத் தனக்கென வாரிக்கொண்டான்.

‡ கங்கம் – கழுகு. பிண ஆசை கொண்டது ஆதலால் பிண ஆசை கொண்டவர்க்கு இங்கு உவமையாய் வந்தது.

சீமை ஆள நேர்ந்தது

2246 மில்லர் என்னும் பெயரினன் மிக்குயர்
வல்ல மன்வளம் யாவும் வரைந்தனன்;
ஒல்லை யாக வுரிமைகள் செய்துமே
நல்ல நாளில் புகுந்தங்கு நண்ணினன். (9)

கொடுவினையின் கோரம்

2247 ஆறெட் டென்னும் தலைமுறை யாகவே
வீறிட் டோங்கி விளங்கி யிருந்தவர்;
மாறிட் டேக்வும் மற்றொரு வன்புகக்
கூறிட் டிந்த கொடுவினை கோரமே. (10)

கடுமையே கருதியது

2248 மேலி ருந்த அதிபர்க்கு மெல்லவே
கால மோடிவர் செய்த கடுமையைக்
கோல மாகப் புனைந்து குணமுடன்
சால இன்புறச் சாற்றி யிருந்தனர்; (11)

அந்த நாள் நிலை

2249 தந்தி இல்லை தபால்இல்லை சார்ந்திட
அந்த நாளினில் ஆளிடம் தந்தது
வந்து போகவே வாரங்கள் செல்லலால்
சிந்தை செய்தன செயதிட நேர்ந்தன. (12)

அதிகாரிகளின் அவல நிலை

2250 நாட்டில் நாம்அதி காரிகள் என்றிங்கே
கூட்ட மாய்வந்து கூடி யிருந்தவர்
சட்டம் ஒன்றையே எண்ணிய தால்உளம்
கோட்ட மாகிக் கொடுமைகள் சூழ்ந்தனர். (13)

பகையையே வகையா மூட்டியது

2251 பாஞ்சை மன்னவன் பண்பினைப் பார்த்துமுன்
வாஞ்சை கூர்ந்து வரிசைகள் செய்துள
ஆஞ்சை யாளர்க் கவல இகலையே
ஊஞ்சல் ஆட்டினர் ஊறுகள் கூட்டினர். (14)

கும்பினி அதிபதிகள் இரங்கியது

2252 இந்த மன்னனை இங்கிவர் தூக்கினில்
முந்தி யிட்டதை முன்னவர் நோக்கினர்;
சிந்தை நொந்து திகைத்தனர்; முன்புநேர்
வந்த போதுற்ற மாண்பை நினைந்தனர். (15)

நேரில் கண்டதை நினைந்து கவன்றது

2253 உருவும் மேன்மையும் ஒண்டிறல் ஆண்மையும்
திருவும் வண்மையும் சீர்மையும் நேர்மையும்
அருமை யானவை யாவையும் எண்ணியே
உரிமை யாக உருகினர் உள்ளமே. (16)

அழகை உவந்தது

2254 அழகை நோக்கியும், ஆண்மையை எண்ணியும்,
பழகி நின்றவப் பான்மையை யுன்னியும்,
கழகம் ஒன்றி யிருந்த கனிவையும்
விழைவு கூர்ந்து வியந்து வெதும்பினர். (17)

ஆற்றலே வியந்தது

2255 குதிரை ஏற்றத்தில் அன்றிவன் கொண்டதை
அதிர அன்றுகண் டாற்போல் அறிந்தனர்;
முதிரு நண்புடன் முன்னர் அகன்றவன்
விதலை வெம்பகை யாகி விளிந்தனன். (18)

நேர்ந்ததை நினைந்தது

2256 என்னை ஈதென எண்ணி-இரங்கினர்;
மன்ன னுக்கு மருங்கமர் மந்திரி
சின்ன நீர்மையில் சேர்ந்து களித்ததால்
இன்ன வாறிவன் எய்திட நேர்ந்ததே! (19)

மந்திரியின் கேடு

2257 அடுத்த பிள்ளை அடாதன செய்துமே
மடுத்த வெம்பகை யாக்கி மனத்தினைக்
கடுத்து மாற்றியிக் காமரு மன்னனைக்
கெடுத்தெதாழித்தனன்; கெட்டவன் என்றனர். (20)

வீரன வீணை இறந்தான்

2258 வென்றி வீரமன வீணைய் இறந்தனன்
நன்று கூறி நலமுறப் பேணலாம்;
பொன்றி ஓய்ந்தபின் போனதைப் பேசிஎன்?
எனறு நொந்துள் இரங்கினர் யாவரும். (21)

உள்ளம் உளைந்தனர்

2259 தானை வேந்தன் தனக்கதி காரங்கள்
ஆன வெல்லாம் அளித்தமை யால்இந்த
ஊன்ம நேர்ந்தஇ்தன்று உள்ளம் உளையினும்
ஏனை வென்றியை எண்ணி யிருந்தனர். (22)

காலம் கருதி யிருந்தனர்

2260 மூல மன்னன் முடிந்தமை யால்அயல்
சால நின்றுள தம்பியர் தம்மிடம்
ஞாலம் தந்திட நாடினர்; நாடியும்
காலம் கண்டு தரும்படி கண்டனர். (23)

சேனைத் தலைவன் செருக்கி நின்றது

2261 இந்த நாட்டின் இயல்பிருப் பாதிகள்
முந்தை நாட்டிய பேனமன் மூண்டுமுன்
வந்த நாள்தொட்டு வாய்ந்துள் அறிந்தனன்
தந்த நாட்டினைத் தாமதத் தாற்றினன். (24)

நாடு நடுங்கியது

2262 கட்ட பொம்மனைத் தூக்கிடக் கண்டதால்
அட்ட திக்கும் நடுங்கி அடங்கின;
மட்டி லாத வலியினர் என்றுளே
பட்டு ளைந்து பதுங்கினர் யாவரும். (25)

தலைமையான கும்பினி அதிபதிகள் இந்த நம்பியைக் குறித்து எண்ணியுள்ள எண்ணங்களையும் நண்புரிமை களையும் மேலே வந்துள்ள ஒன்பது கவிகளிலும் தொகையாய் அறியலாகும். அங்கே யிருக்கின்ற மேலானவர்களுக்குச் சரியாய்த் தெரிவிக்காமலே இங்கே வந்துள்ள கீழானவர்கள் இந்நாட்டுக் கோளர்களோடு கீழ்மையாய்க் கூடி நின்று அதிவஞ்சமாய்ச் சதிபுரிந்து பாஞ்சை அரசைப் பாழ் படுத்தி யுள்ளனர். அவ்வுண்மையை இடங்கள்தோறும் நுண்மை யாய் ஊன்றி உணர்பவர் தேர்ந்து தெளிந்து கொள்வர்.

அச்சுறுத்தியது

2263 புலியை வென்றனம்; பூனைகள் போன்றநீர்!
நலிவு நாடிநே நாசங்கள் செய்வம் என்று
ஒலிசெய்து ஆணையை எங்கணும் ஓச்சினன்;
எலிகள் என்னவே மன்னர் அடங்கினர். (26)

களித்து நின்றது

2264 அவ்வ டக்க நிலையை அறிந்ததும்
தெவ்வ டக்கிய செய்கையை எண்ணியே
எவ்வி டத்தையும் எய்திய தாகவே
இவ்விடத்தில் இருங்களிப் பேறினன். (27)

கருவிகளைக் கவர்ந்தது.

2265 கத்தி வல்லயம் கம்புகள் ஆகிய
ஒத்த ஆயுதம் ஒன்றும் இலாமலே
மொத்த மாகத்தன் முன்கொணர்ந் துய்த்திடச்
சித்தம் செய்தனன்; செய்தவர் நின்றனர். (28)

கம்பும் காண அஞ்சியது.

2266 கையில் ஆயுதம் வைத்தவர்க் காணிலே
வையகம் தன்னில் வைத்திலன்; என்றுதன்
வெய்ய ஆணையை வீசினன்; ஐயகோ!
நொய்ய கோலையும் நோக்கவும் அஞ்சினர். (29)

பாளைய காரரின் பரிதாப நிலை.

2267 வல்ல மன்னவர் என்ன இருந்தவர்
பல்லி முந்த புலியெனப் பாடிமுந்து
எல்லை யில்பயம் எய்தினர்: வெள்ளையர்
சொல்லும் தெய்வங்கள் என்று துதித்தனர். (30)

அடல் புரிந்தது.

2268 வீர கேசரி என்ன விளங்கியே
பாரை வென்றுயர் பாஞ்சைமன் பட்டனன்;
நேரில் வெள்ளையர் முன்இனி நேர்பவர்
யாரும் இல்லை அகிலமும் என்றனர். (31)

ஆண்மை காட்டியது.

2269 இந்த மன்னனைக் கொன்றதோர் ஏற்றத்தை
எந்த மன்னரும் எண்ணியுள் அஞ்சிட
முந்தக் காட்டி முழுதும் அடக்கினன்;
அந்த ஆண்மையை ஆதர வாக்கொண்டான். (32)

ஊமையனை வாட்டியது.

2270 சங்க ஆட்சி தழைத்திட வேண்டுமேல்
பொங்கும் ஊமையன் தன்னைப் புறத்தினில்
எங்கும் காண விடாமல் இருத்தலே
அங்க மாமென் றகத்துள் வலித்தனன். (33)

அதிகாரத்தை நீட்டியது.

2271 மேல வர்க்கும் விழைவுற மேன்மையாய்ச்
சால நன்மை தகவுடன் செய்வதாக்
கோலம் காட்டிக் கொடுஞ்சிறைக் கூட்டிலே
வால வீரரை வைத்து வதைத்தனன். (34)

சதி கூட்டி வந்தது.

2272 தீய நெஞ்சினன் தீயரைச் சேர்த்துமே
ஆய தீமை அனைத்தும் புரிந்தனன்;
நேய நெஞ்சுடன் பாஞ்சையைச் சேர்ந்தவர்
நோயு ழந்திட நோக்கின னூக்கினன். (35)

2273 **பாஞ்சை வாஞ்சையரைப் படுதுயர் செய்தது.**

இவ்வீரப் போர்மனுடன் இயல்பாக இசைந்திருந்த
அவ்வீரர் யார்என்ன ஆராய்ந்து தனித்தனியே
தெவ்வீரச் செருக்கேறிச் சேனையுடன் திரண்டு சென்று
தவ்வீர மில்லாமல் சார்ந்தவெலாம் தான்கவர்ந்தான். (36)

2274 **பாளையங்களைப் பாழாக்கியது.**

காடல்குடி நாகலா புரம் குளத்தூர் காமருயர்
ஏடலர்கோ லார்பட்டி ஏழாயிரம் பண்ணை
பாடமைந்து நின்றஇந்தப் பாளையங்கள் யாவையுமே
ஈடழித்தங் குள்ளவரை இருஞ்சிறையி லுறவைத்தான். (37)

---

37 காடல்குடி, குளத்தூர், நாகலாபுரம், கோலார்பட்டி,

2275 அரண்களை அழித்தது.

கோட்டைகளை இடித்தழித்துக் கொள்ளைசெய்தங்
குள்ளவெலாம்
வேட்டைனக் கொண்டுவந்து விழைந்தபடி செய்து
நின்றுன்;
காட்டிலுள்ளார் யாவருமே நடுங்கினர்; நாடியதைத்
தேட்டமுடன் செய்தவனும் செழித்துமிகச் செருக்கி
நின்றுன். (38)

2276 துரைத்தனங்களை நீக்கியது

தோக்கலவார் குலத்தவர்கள் துரைத்தனங்கள்எல்லாமே
போக்கினன்; இவனேடு போரினிமேல் யாவருமே
தோக்கிநில்லார் என்றெங்கும் நோன்புகழை நூக்கிஎழு
.யக்கியகம் மிகமகிழ்ந்தான்; ஆகாச வரையுயர்ந்தான்.

2277 குறுநிலக் கிழவர் நிலை.

யாவென்று சொன்னவுடன் வந்துவாய் பொத்திநின்று
போவென்னக் கும்பிட்டுப் போனமன்னர் பேனமனர்
.யவென்னை அழைத்தன்பாய்ஆர்வமுடன்பேசினர்என்று
யவென்று தனித்தனியே உள்உவந்து நின்றுவந்தார்(40)

2278 பணிந்து பரிந்தது

.யாஎவத்து நின்றுலும் அந்நியனுக்கு ஏவலராய்ப்
பாஎயத்தார் எல்லாரும் பணிவோடு பரிந்து நின்றூர்;
தோஎனத்தால் கூறலாம்? கும்பினியார்க் கினியராய்
நாஎனத்தால் கழிக்கலாம்? என்பதையே நாடி நின்றூர்.(41)

2279 பரிதாபங்கள்

கூட்டம்எல்லாம்நசைவழியே நண்ணிநின்றூர்;ஆதலினல்
ஈட்டம்எல்லாம் இழிவழியில் எய்திவந்தார்; எவ்வழியும்
தோட்டம்எல்லாம் உள்நிறைந்தும் கூட்டமுற்று
நின்றூர்கள்
வாட்டம்எல்லாம் வெளிமறைத்து வசையாக வாழ்ந்து
வந்தார். (42)

யமாயிரம்பண்ணை, என்னும் இந்த ஜமீன்கள் பாஞ்சாலங்
ஸிச்சியார்க்கு உறவாய் நின்று உதவிபுரிந்து வந்தன என்று
ள்ளம் கடுத்து அவை யாவும் கொள்ளையாகக் கவர்ந்து
கொண்டான். அவர் யாவரும் நிலைகுன்றி நின்றனர்.

2280 **பழியனுக்குப் பரிசு**

இன்னவகை இந்நாட்டை இனிதடக்கி எங்குமே
தன்னரசாக் காட்டியிவன் தழைத்துவரும் தகைநோக்கி
முன்னவரும் மிகமகிழ்ந்து முழுப்பரிசு முதல் கல்கிப்
பன்னரிய சிறப்புகளும் பலசெய்தார்; பார்த்துவந்தான்.

2281 **வெய்யவன் கொலைகளை வையம் வைதது.**

இந்நாட்டில் இவன்செய்த இடர்களையும் கொலைகளையும்
எந்நாட்டி லுள்ளவரும் இகழ்ந்தார்கள்; இழிவாகக்
கன்னெட்டி நின்றனைய கடுநெஞ்சன்; படுவஞ்சன்;
அந்நாட்டில் வாழ்பவர்க்கும் அவப்பழியே ஈட்டிநின்றான் (44)

2282 **மடிந்த பின்பும் கடிந்தது.**

தூக்கிலிடப் பட்டன்று துடித்திறந்த பின்னையின்தன்
யாக்கையையும் அவன்கிளைகளைஅளித்துவிடாதேயிவன்றன்
ஊக்கியுருத் தெடுத்ததனை ஊர்ப்புறத்தே யிட்டுவைத்துக்
காக்கைகளும் கழுகுகளும் களித்துண்ணச் செய்தானே! (45)

2283 **பாதகச் செயல்**

வெள்ளையர்கள் ஆட்சிக்கு வேர்ப்புழுவாய்ப் பிள்ளைமகன்
கொள்ளைநோ யாகவே கொதித்துள்ளான் என்றவன்மேல்
தள்ளரிய வெங்கோபம் தலைதூக்கி நின்றதனால்
விள்ளரிய பாதகத்தை விரைந்து செய்து நின்றான். (46)

2284 **கொடிய கொலைப் பழியன்**

இறந்தபின்பும் தலையைவெட்டி இவன்எடுத்துக் கோட்டைஎதிர்
மறந்திகழ நாட்டிவைத்த வன்கழுவில் மாட்டியன்று
புறந்திகழச் செய்தஅந்தப் புலைப்பழியைப் பூதலத்தில்
மறந்துவிட முடியுமா? மனமுடையார் யாவருமே! (47)

2285 **பிள்ளை மனைவி துள்ளி அழுதது.**

தன்கொழுநன் இறந்தநிலை தான்கேட்டு மனையியன்று
பொன்கொடிபோல் வீழ்ந்துருண்டு புரண்டழுதுபுலம்பினாள்;
முன்கனவு கண்டபடி மூண்டுவந்து முடிந்ததே!
என்கணவா! என்பதியே! என்றலறி ஏங்கிநைந்தாள். (48)

2286 **உள்ளம் நொந்து புலம்பியது**

பொல்லாத கனவுகண்டேன்; போகாதீர் என்றன்று!
சொல்லாடி முன்மறுத்தேன்; சொல்மறுத்துப் போயந்தோ!

நெல்வாரி வந்ததனல் நீண்டகொடும் பழிமூண்டு
வல்வாயர் வன்கொலையா வதைத்தொழித்து மடித்தாரே.(49

2287 உருகி மறுகியது.

பாராளும் மன்னனுக்குப் பாரமதி மந்திரியாய்
சீராளும் நிலமெங்கும் நெடியபுகழ் பூண்டுநின்ற
பேராளா! என்னையிங்குப் பேர்ந்தொழிந்தீர்! பேராத
காராளர் குலமணியே! கண்மணியே! காண்பதென்றே?

2288 பலவும் நினைந்தது.

கண்டவர்கள் யாவருமே கைகட்டி வாய்புதைத்துத்
தண்டமிட்டுத் தாழ்ந்துநிற்கத் தனிநின்ற என்பதியே!
கொண்டவனை விட்டொழித்துக் கொடிதாகப் போனதுதான்
பண்டையுறு வெவ்வினையே? படுபாவி செய்வினையோ? (51)

2289 பரிந்து வருந்தியது.

வெல்வீர வேந்தனுமே மெச்சுமதி மந்திரியாய்ச்
சொல்வீரம் காட்டிநின்ற துரைமகனே! துரைமக்கள்
நெல்வீர மோடள்ளி நெடுங்கொலையாய் மாண்டீரே!
பல்வீர மும்மிழந்து பவிசிழந்தேன் பாவியுமே. (52)

2290 நெஞ்சம் கவன்றது.

ஈசனடி போற்றியே இனியமலர் கொண்டேத்தி
நேசமுடன் நெற்றியிலே நீள்சந்தப் பொட்டிட்டுப்
பூசைமுடித் தெழுந்துவரும் பொற்கோலம் காண்பதென்றே?
ஆசையுறு கனியேயென் ஆருயிரின் நாயகமே! (53)

2291 எண்ணி ஏங்கியது.

மணமிழந்த புன்மலர்போல்,மதியிழந்த வானகம்போல்,
குணமிழந்த வன்சிலைபோல்,கொம்பிழந்தமென்கொடிபோல்,
மணமகனே! உனையிழந்து மாநிலத்தில் சாகாத
பிணமெனநான் வாழ்வேனே? பிழையொழிய மாள்வேனே.

2292 இனைந்து இருந்தது.

என்றழுது புலம்பிநின்ற இல்லவளோ டுள்ளவரை
நின்றசிறைத் தனைநீக்கி நிலைநகர்க்குப் போகவிட்டார்;

அன்றவர் போய்ப் பாஞ்சைநகர்க் கயலிருந்த பதியமர்ந்து
துன்றுதுய ருடையராய்த் தொல்வினையை நொந்திருந்தார்.

மன்னன் மரபினர் மறுகி உளைந்தது.

2293 இன்ன வாறவர் நீங்கி யிருந்தனர்;
மன்னன் தம்பியர் வண்கிளை யாளர்கள்
துன்னி வெஞ்சிறை தோய்ந்து தொலைவிலா
இன்ன லோடங் கிருந்து வருந்தினர். (56)

எண்ணியிருந்தது.

2294 இன்று நீக்குவர் இன்றெனில் நாளையே
சென்று நீக்குவர் என்று தினந்தினம்
நின்று நின்று நினைந்து நினைந்தவர்
கன்றி நெஞ்சம் கலங்கி உளைந்தனர். (57)

இரங்கி நின்றது.

2295 செல்ல மன்னன் சிறுவர்கள் நாளுமே
அல்லல் கொண்டங் கலமந்து நின்றனர்;
வெல்லும் மானமும் வீரமும் வீறுற
எல்லை நோக்கி யிரங்கி யிருந்தனர். (58)

கொடுஞ்சிறை எனக் கடுந்துயர் கூர்ந்தது.

2296 நாடிழந்து நகரும் இழந்துதம்
பீடி ழந்து பெருமிதம் குன்றியே
பாடு ழந்து பரிந்தனர் ஈதென்றும்
வீட ருஞ்சிறை என்று விரைந்தனர். (59)

ஊமையன் உருத்து உரைத்தது.

2297 நம்பி ஊமைஓர் நாளுளம் கன்றியே
தும்பி என்னத் துணிந்து வெகுண்டனன்;
தம்பி யோடங்குச் சார்ந்தவர் தம்முடன்
வெம்பி நோக்கி விரைந்து விளம்பினன். (60)

---

53 தாணுபதி சிவசுப்பிரமணிய பிள்ளையின் மனைவி **முத்து வடிவு;** மகன் **வேலாயுதம்,** மைத்துனர் **இராமநாத பிள்ளை,** அநவரதம் பிள்ளை, தம்பி வீரபத்திர பிள்ளை முதலானவர்களை விடுதலைசெய்து கும்பினியார் வெளியே அனுப்பி விட்டனர்.

காலஎல்லை

2298 ஆண்டொன் றுகி அகன்றிரு திங்களும்
தாண்டி நின்றன; தண்ணளி கொண்டுமே
வேண்டி நின்று விடுதலை செய்திலர்;
மாண்டு போகவே வஞ்சனை சூழ்ந்துளார். (61)

பகைவரின் மிகை.

2299 பகைவர் வல்லுநர் என்று பயந்துநாம்
குகைய டங்கிக் குறைந்துள தாகவே
நகைபுரிந்து நலிவுற நாடிமேல்
மிகை புரிந்தனர்; மிஞ்சினர் மேலுமே. (62)

நஞ்சு நெஞ்சம்

2300 வல்ல அண்ணலை வன்கொலை யாகவே
புல்லிச் சூழ்ந்து புகுந்துமுன் கொன்றனர்;
கொல்ல லின்றியே கொல்லுகின் றூர்நமை
நல்ல தேயிவர் நஞ்செனும் நெஞ்சகம்! (63)

அருள் இலர்.

2301 இன்றி ரங்குவர் நாளை இரங்குவர்
என்று நாளும் இரங்கி யிருந்தனம்;
ஒன்று மேயவர் உள்ளருள் ஒன்றிலர்;
நின்று நாமிங்கு நீள்வது நீதியோ? (64)

கரியவிடம்.

2302 உருவில் வெள்ளையர் ஆயினும் உள்ளகம்
கரிய வெய்ய கருவிடம் ஆனதே;
வரவி லேகுறி கொண்டவர் மாணருள்
கருவி லும்இவர் கண்டதும் உண்டுகொல்! (65)

கொடிய புலை

2303 மாட்டைத் தின்னும் மரபினர்; மக்களின்
வாட்டம் கண்டு வருந்தி யருள்வரோ?
ஈட்டமே நினைந் தேங்கி யுழல்பவர்
நாட்டம் நேர்மையும் நன்மையும் நாடுமோ? (66)

துனியர்

2304 மனிதர் தம்மையும் தின்னும் மரபினர்
நனிய மர்ந்தொரு நாட்டினில் உள்ளனர்;
இனியர் போன்றுயிர் யாவும் உறுஞ்சுமித்
துனியர் போலவர் தோமிலர் என்றுமே. (67)

நவைகள் புரிந்துளர்.

2305 இனிய இந்த எழிலுயர் நாட்டினில்
தனியு யர்ந்து தகவுடன் நின்றவர்;
துனிமி குந்து துயர்கள் தொடர்ந்திட
நனிபுகுந்து நவைகள் புரிந்துளார். (68)

பழிபாயப் பாய்ந்துளர்.

2306 மொழியும் மாறி, முறைமையும் மாறிஎவ்
வழியும் மாறிய வாழ்வுகள் வாய்ந்திட,
இழியும் தீய பழக்கங்கள் ஏய்ந்திட,
பழியும் பாய்ந்திடப் பாய்ந்துளர் எங்குமே. (69)

மாலை நாட்டினர்.

2307 மேலை நாட்டினில் மேவி யிருந்தவர்
மாலை நாட்டி மருண்டிங்கு வந்துதம்
காலை நாட்டிய போதே கடும்பழி
வாலை யாட்டி வளர்ந்து கிளர்ந்ததே. (70)

தீமையை நீட்டினர்

2308 இந்த நாட்டில் இறைமுறை எய்தியே
எந்த நாட்டையும் எண்ணு திசைகளை
முந்த நாட்டி முதன்மையாய் நின்றவர்
சிந்த நாட்டினர்; தீமையை நீட்டினர். (71)

ஈனம் ஏற்றினர்.

2309 ஆனை ஏறி அரும்பரி யூர்ந்துநன்
மான மோடுயர் மாண்புற் றிருந்தநாம்
பூனை போலப் புகுந்திச் சிறையினில்
ஈன மாக இருக்கவும் நேர்ந்ததே. (72)

மறுகி உழல்கின்றேம்.

2310 பாலை யுண்டு பழங்களைத் தின்றுமன்
கோலம் கொண்டு குலாவி யிருந்தனம்;
காலை யுண்டு கழிபகல் கண்டுபுன்
மாலை யுண்டு மறுகி யுழல்கின்றேம். (73)

மாற்றலரை மாற்றுவேன்

2311 கோல்கொள் கையினில் கொல்செய் விலங்கினைத்
தோல்கொ ளும்படி தொட்டனர் இட்டனர்;
மால்கொள் நெஞ்சுடை மாற்றலர் மெய்யில்என்
வேல்கொள் வேலையை வீறுடன் செய்வனே. (74)

ஊனம் ஒழிப்பேன்.

2312 மானம் கெட்டு மரபின் நிலைகெட்டுத்
தானம் கெட்டுத் தளர்ந்துயிர் வாழ்தலின்,
ஊனம் கட்டும்·உடலை ஒழித்திடல்
வானம் கட்டிய வன்புகழ் ஆகுமே. (75)

மாட்சியை மறந்தனர்.

2313 ஆட்சி யாசை அகத்தில் பெருகிநம்
மாட்சி யாவும் மறந்தனர்; வன்மமாய்
கீட்சி செய்ய நிமிர்ந்தனர்; நம்மையோர்
பூட்சி யாக நினைந்தனர் புன்மையே. (76)

அரி ஏறு ஆவேன்.

2314 மத்த யானையை மாய்த்திடும் கோளரி
சத்த மின்றிச் சவுங்கலாய் நின்றிடில்
ஒத்த குள்ள நரிகளும் ஓங்கிமேல்
தத்தி ஏறிடும் தாவிக் குதித்திடும். (77)

ஆண்மையை ஆற்றுவேன்.

2315 ஒடுங்கி நாமிவண் மேலும் உறைந்திடல்
மடங்க லந்தபுன் மாக்கள் இயல்பதாம்;
அடங்க லாவலி ஆண்மையர் என்பதை
இடங்கள் எங்குநாம் ஏற்றிட வேண்டுமே. (78)

சால்பு காட்டுவேன்.

2316 உருவில் சின்னவன் ஊமைய னேஎன
மருவி என்னை மதித்துள் இகழ்ந்துளார்;
பருவ அண்ணலைக் கொன்ற பழிக்குநான்
சருவ கொள்ளைசெய் சால்பினிக் காண்பனே. (79)

தட்டி அடக்குவேன்.

2317 கட்ட பொம்மனைக் கட்டனம் ஆதலால்
அட்ட திக்கும் அடங்கின; நாமினி
இட்ட மானதை எங்குமே செய்யலாம்;
தட்டிக் கேட்பவர் இல்லையிந் நாட்டினில்: (80)

நின்ற நிலையை நீக்குவேன்.

2318 என்றுள் ளுக்கம் எழுந்து வளர்ந்தது;
வென்றி வேந்தராய் வீறுற்று நின்றனர்;
நின்ற மன்னர் நிலையைத் தெளிந்தனர்;
நன்று நன்றென நாச்சுவை கண்டனர். (81)

பேடிகள் பெருகி நின்றனர்.

2319 போடு கும்பிடுஎன் ருலுடன் போற்றியே
ஏட மர்ந்துடன் எண்ணுங்கள் என்றுமே
பாடி முந்து பணிந்திடப் பாரினில்
பேடி யர்பலர் பேர்பெற்று நின்றனர். (82)

பட்டிகள் பரவி யுளர்.

2320 முட்டி நாம்எதிர் மூண்டதால் முற்றுமே
கெட்ட தாகவும் கேலிகள் செய்கின்ருர்;
பட்டி மக்கள் பவிசுடன் வாழ்வதாய்
மட்டி மானம் இலாமல் மதிக்கின்ருர். (83)

உயிரினும் மானம் உயர்ந்தது.

2321 மானம் கெட்டுயிர் வாழ்வது மாட்சியா?
ஈனம் உற்றவர் எண்ணுவர் ஏற்றமா?
ஊனம் விட்டுயர் வீரர் உயிரினும்
மானம் கட்டி மதியுடன் மாள்வரே. (84)

மாய வாழ்வு.

2322 நாயும் வாழும்; நரிகளும் வாழும்; இம்
மாய வாழ்வை மதிப்பது மையலே;
தேயம் காத்துச் சிறந்த புகழுடன்
தூய ராகிச் சுகிப்பது மாட்சியே. (85)

கோளரின் கொடுமைகள்.

2323 ஆளும் தன்மை அமைந்துநன் மக்களாய்
நாளும் வாழ்பவர் நம்மிடம் அன்புடன்
கேள மைந்துளர்; கெட்டிடை வந்தவர்
கோள்கள் மூட்டிக் குலைத்தழிக் கின்றனர். (86)

மாண்பு கண்டிலர்

2324 இழிந்து வந்திங் கிடையில் நிமிர்ந்துமே
கழிந்துள் ளோங்கிக் கடுப்பவர் தம்மைநாம்
பொழிந்த அன்புடன் போற்றினும் புன்மையே
வழிந்து காட்டுவர் மாண்பென்றும் கண்டிலர்.(87)

இசையில் ஏறுவேன்.

2325 வசையுட் பட்டு வருந்தி இருந்தனம்;
நசையுட் பட்டினி நாமுயிர் வாழ்வதோ?
அசைவில் ஆண்மையோ டேகி அமரையே
இசையி னெடெதிர் செய்வ தினிமையே. (88)

மண்ணின் வாழ்வு

2326 மண்ணில் வந்து பிறந்தவர் யாவரும்
எண்ணில் காலம் இருப்பதிங் கில்லையே;
விண்ணில் மின்என வில்என வேகமாய்க்
கண்ணில் நீங்கிக் கழிவதைக் காண்டுமே. (89)

நீரில் குமிழி.

2327 நீரில் தோன்றும் குமிழியின் நேரெதிர்
பாரில் தோன்றிப் படுகின்ற வாழ்விதை
நாரில் தோன்றிய பூவென நாடிநாம்
சீரில் தோன்றிச் சிறப்பது சீர்மையே. (90)

புலைச் சிறை.

2328 அல்லல் ஆன பிறவிச் சிறையினை
ஒல்லை நீங்கியே உய்ய உரியநாம்
புல்லர் செய்த புலைச்சிறை புக்கினி
எல்லை நோக்கி இருப்பது இழிவரோ. (91)

இழிவினை நீக்குவேன்.

2329 நின்றவிச் சிறையினை நீங்கி நம்பதி
சென்றுசேர்ந் தமர்ந்துமேல் தெவ்வர் வந்திடின்
ஒன்றிய போரினை உடற்றி நாமங்குப்
பொன்றிட நேரினும் புகழ தாகுமே. (92)

புகழினை ஆக்குவேன்.

2330 புகழுற வாழ்வதே புனித வாழ்வதாம்;
இகழுற வாழ்வதின் இறந்து போவதே
திகழுயர் சீர்மையாய்ச் சிறந்திதந் நாளுமே
நிகழுயர் புகழதாய் நிலவி நிற்குமே. (93)

உரியவரை உசாவினன்.

2331 ஆதலால் நாம்இவண் அடங்கி நிற்பது
சாதலுக் கிடங்கொண்ட தன்மை யாகுமேல்
போதலே நலம்; உங்கள் புந்தி தேர்ந்ததை
ஓதிட வேண்டும்! என் றுரைத்து நின்றனன். (94)

2332 **உள்ளவர் உவந்தது.**

ஊமைச் சிங்கமங் குரைத்தவிம் மொழிகளைக் கேட்டுத்
தாமத் திண்புயம் விங்கினன் தம்பியும்; சார்ந்து
சேமத் தோடவண் இருந்தவர் யாவரும் இசைந்தார்:
நாமத் தோடியல் மாமன்மட் டிசைந்திலன் நயந்தே. (95)

2333 **மாமன் மறுத்தது.**

வயதில் மூத்தவன் கெடிலன்என் பேரினன் மன்னன்
தயவு மிக்கவன் தாயுடன் பிறந்தநன் மாமன்
இயல் குணத்தர சிறந்தபின் ஏங்கிய மனத்தன்
நயமொ டங்கவன் துணிந்ததை நவின்றனன்நயந்தே. (96)

2334 பகைவலி குறித்தது.

கொடுமை யாகவே கொதித்துநம் பகைவர்கள் உள்ளார்;
கடுமை யாகவே தண்டனை புரிகின்றார் கடுத்தே;
திடுமெ னச்சிறை நின்றுநாம் சீறியே மாலை
படுமெ னப்படு கொலைகளைச் செய்குவர் பாய்ந்தே. (97)

2335 பொறுக்க வேண்டியது.

ஊக்கி நாமிவண் உருத்திடும் நிலைகளை ஓர்ந்தால்
தூக்கில் இட்டவர் துடித்திடக் கொல்லுவர் துணிந்தே;
வாக்கி லுலும்வன் பகையினை வளர்த்திட வேண்டா;
போக்கி நாளினைக் கழித்தின்னும் பொறுத்திட வேண்டும்.

2336 நாடி இருப்பதே நல்லது.

சிறை யிருந்துநாம் சிலபகல் கழித்தன மாயின்
நிறைய றிந்தவர் நெஞ்சகம் இரங்கியே விடுவார்;
இறைமை யோடுநம் இரும்பதி எய்தியின் புறலாம்;
பொறைமை யோடிவண் இருப்பதே நலமெனப் புகன்றான்.

2337 முதியவன் மதித்தது.

பருவம் பார்த்தவன் பலவகை நிலைகளைப் பலகால்
துருவ மாகவே சூழ்ந்துநன் கறிந்தவன்; தொடர்ந்து
சருவ காலமும் சமர்வழி சார்ந்தசஞ் சலங்கள்
உருவ மாகவே கண்டவன்; ஓர்ந்திவண் உரைத்தான். (100

2338 முத்தையா முனைந்தது.

என்ற வார்த்தையை முத்தையன் என்பவன் கேட்டு
நன்று தந்தையார் உரைத்தது! நம்மர சனைத்தும்
ஒன்ற வேகவர்ந் துறுசுவை கண்டவர் நம்மை
என்று மேவெளி விட்டிட இசைந்திலர் இனிமேல். (101)

2339 இனி இருப்பது மடமை

வருடம் ஒன்றுக்கு மேலதாய்க் கழிந்துமே மனத்தில்
அருள்பு ரிந்திலர்; அரசுடை மரபினர் என்று
தெருள்பு ரிந்திதம் செய்திலர்; சீறியே நின்றார்;
மருள்பு ரிந்தினி யிவணமர்ந் திருப்பது மடமை. (102)

2340 வெளி ஏற வேண்டும்.

காத்து நின்றுள காவலர் தலைகளைத் துமித்துக்
கோத்த வெஞ்சிறை தகர்த்தயல் குதித்திட வேண்டும்;
வேத்த வைக்கணை யிருந்தநாம் வெய்யவெந் தளைகை
பூத்தி ருக்கவே பார்த்திவண் இருப்பது புன்மை. (103)

2341 உறுவதே கருமம்.

முத்தையா எனும் மன்னவன் மைத்துனன் மூண்டு
மத்த யானையின் மதமுறு சினமிகுந் தோங்கிப்
பித்தை யாமினி இங்குநாம் இருப்பது: பேர்ந்தே
ஒத்த நம்பதி உறுவதே கருமமென் றுரைத்தான். (104)

2342 துரைச்சிங்கம் துடித்தது.

என்று சொல்லிவாய் மூடுமுன் துரைச்சிங்கம் என்னும்
வென்றி வீரனுள் வெகுண்டனன்: அண்ணனே வீணே
கொன்று தூக்கிய கொலைஞர்கைப் பட்டிது வரையும்
ஒன்றி யிங்குறைந் திருந்ததே பழியென உருத்தான். ( )

2343 தங்குதல் தகாது.

சிங்க வெந்திறற் குருளைகள் சிறுநரிக் கணத்துள்
தங்கி நிற்பது போலிவண் தாழ்ந்துநாம் இருந்தால்
பொங்கி ஏனவர் புன்மைகள் புரிந்திடார்? புகுந்த
அங்கம் ஓம்பவோ? அரும்புகழ் ஓம்பவோ? அமர்ந்தோம்.

2344 பழி படியலாகாது.

பகைவர் கைப்பட்டுப் பாழுடல் வளர்ப்பது பழி என்று
இகல்மிகுந்தெழுந்துஎதிர்ந்தவர்எவரையும் தொலைத்துத்
தகைசெய் தேகிநம் திருநகர் சார்ந்து மேல் அமரை
வகைசெயாதிது வரையும்நாம் வசையினை வளர்த்தோம். ( )

2345 குலமுறைக்கு இழுக்காம்.

சிறையிருந்துநாட் கழித்தபின் தெவ்வர்கள் இரங்கி
முறைசெ யும்படி செய்யினும் முன்னிலை குலைந்தே
இறைத ரும்படி நேருமே! அங்ஙனம் இசைந்து
குறைசெய் தாளுதல் குலமுறைக் கிழுக்கமே யன்றே? (108)

2346 **மாண்பே காண்பாம்.**

முன்னவன் தனைக் கொன்றவெம் பகைவருக் கடங்கிப்
பின்ன வர்நின்று பெய்திறை தந்தனர் என்னும்
இன்ன புன்பழி யோடர செய்திவாழ் தலினும்
மன்னு போர்செய்து மாள்வதே நமக்கினி மாண்பாம். (109)

2347 **குலமுறை குறைய லாகாது.**

அரிய திண்டிறல் அண்ணலே யிழந்தபின் இந்தப்
பெரிய தண்கடல் உலகெலாம் பெறினும்என் பேறே?
உரிய நங்குல உரிமையும் முறைமையும் இழந்து
பிரிய மாகவே எதையுமே பேணுத லாகா. (110)

2348 **வீரமே நம் மரபின் உரிமை.**

செய்ய வெண்கதிர் மதியினில் சீதமும், சிறந்த
துய்ய வொண்கதிர் ஒளியினில் வெம்மையும்தொலைந்து
பைய வேநிலை குலையினும் பாஞ்சையம் பதிவாழ்
மெய்கொள்மன்னர்கள் விறல்நிலை குலைந்திடார்என் றும்.

2349 **அழியாப் புகழே வழியின் ஒளி.**

வழிவ ழிப்பெருந் திறலொடும் விறலொடும் வாழ்ந்து
அழிவி லாப்புகழ் அகிலமும் நாட்டிய மரபில்
பழிவ ரும்படி பார்த்துநாம் படிவது பண்போ?
கழிவி ரக்கத்தைக் கற்றவர் கைக்கொண்டு காணுர். (112)

2350 **புண்ணிய வாழ்வே கண்ணியம்.**

புண்ணி யம்புகழ் எனும்பொருள் இரண்டுமே புவிமேல்
நண்ணி வாழுநன் மக்களுக் குரியன; நலமாய்
எண்ணி நின்றஅவ் விரண்டினுள் ஏதும்எய் தாமல்
மண்ணில் வாழ்தலின் மாண்டுடன் ஒழிவது மாண்பே.(113)

2351 **நம் பதியே கதி.**

இன்னும் இங்குநாம் இருந்திடில் இழிவொடு பழியும்
துன்னு மேயன்றித் தொடர்வதொன் றில்லை; ஆதலினல்
பன்னி என்பல? படுசிறை பாழ்பட நூறி
மன்னு பாஞ்சையம் பதியினை மருவுதல் மரபே. (114)

2352 **ஆளுதலே அறிவு.**

அமரில் வந்தடர் பகைவர்தம் ஆருயிர் வௌவி
எமனு வந்திட ஈந்துடல் கழுகினுக் கிறைத்து
நமது தொல்குல வீரத்தை நாட்டிடை நாட்டி
அமைதி கொண்டர சாண்மையோடாளுதல் அறிவே.(115

2353 **தம்பியைத் தமையன் தழுவினன்.**

என்று கூறிய உரைகளை ஊமையன் கேட்டு
நன்று நன்றெனத் தம்பியை நயந்துடன் தழுவி
அன்று சூழ்ந்தத்தை யாவரும் அறிந்திடா வண்ணம்
ஒன்று தூதினை உற்றவர்க் குரைத்திட உய்த்தான். (116)

2354 **குலத்தவரிடம் குறித்தது.**

சென்ற தூதுவன் குலத்தவர் சிலரிடம் தெரித்தான்;
ஒன்று கூடினர்; உற்றதை ஆய்ந்தனர்; உவந்தார்;
வென்றி வீரரை விரகுடன் சேர்த்தனர் விரைந்தே
நின்ற நாளினை நிலையெதிர் நோக்கியே நின்றார். (117)

2355 **கூடித் திரண்டது.**

சுட்டி நின்றஅந் நாள்வரச் சொல்லிய படியே
ஒட்ட நத்தம்வந் தனைவரும் திரண்டனர் ஒருங்கே
பட்டி னம்புகுந் தரியவெஞ் சிறையிடைப் பாய்ந்து
தட்டி மீண்டிடத் தருக்குடன் துணிந்தனர் தழைத்தே.(118)

2356 **மூண்டு துணிந்தது.**

கொடிய வெஞ்சிறைக் கூட்டினில் கொடுமையாயடைத்து
மடிய வைத்துள மாற்றலர் மடியவே மடித்து
நெடிய சீருடன் நிலத்தினை ஆளுதல் இன்றேல்
முடிய நேருதல் முடிவெனத் துணிந்துமுன் மூண்டார். (119)

2357 **ஆர்த்து வந்தது.**

யாரும் ஐயுறு வகையவர் தனித்தனி அகன்றார்;
பாரம் இன்றியே பாளையங் கோட்டையை அடைந்தார்;
சேர ஓரிடம் செறிந்தனர்; படைக்கலம் தெளிந்தார்;
ஆர வாணிகம் செய்பவர் போலவே அமைந்தார். (120)

2358 அமைந்து புரிந்தது.

புல்லுக் கட்டிலும் விறகிலும் வாள்வெடி பொதிந்து
மல்லுக் கட்டிய தோளினர் மாலையில் வந்து
கல்லுக் கட்டிய சிறைப்பெருங் கூடத்தைக் கலந்தார்;
சொல்லுக்கட்டிய திறலுடன் முறைமுறை தொடர்ந்தார்(121)

2359 சிறையுள் விரைந்தது.

வெளியில் வந்துள நிலையினை விரகுடன் ஒருவன்
ஒளிவு செய்துபோயுள்ளவர்க் குரைத்தனன்; உரைக்கத்
தெளிவு கொண்டவர் சிந்தையுட் செருக்கினர் சிறையை
விளிவு செய்துடன் வெளிவர விரைந்தனர் வெகுண்டே. (122)

2360 வெளியில் பாய்ந்தது.

பொழுத டைந்ததும் புலித்திரள் புதரினுள் இருந்து
தழுவி ஏறல்போல் தருக்குடன் மீறினர்; காத்து
வழியில் நின்றவர் மறித்தனர்; மறிக்கவே வாளால்
அழிவு செய்தனர் அனைவரும் வெளியினில் பாய்ந்தார்.(123)

2361 எங்கும் பறந்தது.

கத்தி கம்புகள் கண்டகோ டாலிகள் கொண்டு
தத்தி வந்தெதிர் தடுத்தவர் எவரையும் தகர்த்துக்
கொத்தி வீழ்த்தினர்; குலவைகள் இட்டனர் குதித்துப்;
பத்தி பத்தியாய்ப் பட்டினம் எங்கணும் பறந்தார். (124)

2362 கெலித்து எழுந்தது

புலிக்கு ழாங்களைக் கண்டபுல் வாய்களைப் போல
கலித்துள் அஞ்சியே கலங்கினர் நடுங்கினர்; கருதார்
வலித்த நெஞ்சராய் மறுகினர் ஓடினர் மறைந்தார்;
கெலித்து வந்தனர் கெக்கலி கொட்டினர் கிளர்ந்தார்(125)

2363 கிளர்ந்து சென்றது.

அல்லல் வெஞ்சிறை நீங்கினர் அருந்திறல் ஓங்கிக்
கொல்லும் வெஞ்சினக் கூற்றெனக் கொதித்தனர் குதித்தே
ஒல்லை நீங்கினர்; ஒன்னலர் படைகளும் உடைந்தே
எல்லை நீங்கின மறைந்தன; எதிர்ந்திலர் எவரும். (126)

2364 **பாஞ்சை புகுந்தது.**

மன்னன் மக்களை மாண்புடன் தழுவினர் மகிழ்ந்தார்;
அன்ன வல்லிருள் இரவினில் அனைவரும் விரைந்து;
பன்னு சீருயர் பாஞ்சையம் பதியைவந் தடைந்தார்
துன்னு செங்கதிர் உதித்தது சோதியை வீசி. (127)

2365 **பரிதி எழுந்தது.**

மங்கி நின்றஅவ் அரசுயர் மாட்சியை அடையப்
பொங்கி வந்தஅக் கோக்குலக் குமரர்கள் போலத்
தங்கி ளங்கதிர் வாளொளி சவியுற வீசி
எங்கும் இன்புற எழிலுடன் தினகரன் எழுந்தான். (128)

2366 **பகைவர் பெயர்ந்தது.**

மான வீரர்கள் மாநகர் புகுந்ததும் அங்கே
கோன னுய்கின்ற கும்பினி அதிபதி குலைந்தான்;
ஊனம் ஒன்றுமே உளுற்றிடோம் ஓடுக! என்றூர்;
ஆன போதவன் அகன்றனன் துணைவரோ டஞ்சி. (129)

2367 **குமரையன் கொதித்தது.**

முல்லன் முன்னுறச் செல்லவும் மன்னனை முன்னம்
வல்லை தூக்கிய வன்பழிக் கெதிர்செய வலிந்து
கொல்ல வுக்கியே குமரையன் என்பவன் குதித்தான்;
ஒல்லை யாகவே ஊமையன் தடுத்தனன் உரைத்தே.(130)

2368 **ஊமைத்துரை தடுத்தது.**

ஒன்றும் சொல்லிடா தொடுங்கிமுன்செல்கின்றஇவனைக்
கொன்று தூக்கிடக் கொதித்துநீ குதித்தனை! வீரம்
நன்று நன்றென நகைத்தனன்; நகைக்கவும் நாணி
அன்று மீண்டவன் அகநகர் புகுந்தனன் அயர்ந்தே. (131)

---

130 முல்லன் என்றது மில்லர் (Miller) என்னும் ஆங்கில அதி பதியை. பாஞ்சைக்கோட்டையைக் கும்பினியார் கைப் பற்றிக் கொண்டபின் அங்கே இவன் தலைவனுய் நிலவி இருந்தான். உரியவர் வரவே உள்ளம் வெருவி ஒருவினை.

2369 **வெள்ளத்துரை வெள்கியது.**

உயிர்பிழைத்ததென் றுள்ளூற வூமையை உவந்து
செயிர்ஒழித்தவன் நெல்லையைச் சேர்ந்திவண் நிகழ்ந்த
செயல்எலாம்கண்டு திதைத்துளம் தியங்கினன் வியந்தான்;
அயர்வி லேடமர்ந் திருந்தனன் ஆவதை ஆய்ந்தே. (132)

2370 **வெருவி ஓடியது.**

உரிய வீரர்கள் வந்ததும் உறுதியாய் அங்கே
பெரிய வீரன்போல் பெருமைகள் பலபல பேணி
அரிய கும்பினி ஆட்சியை ஆற்றவீற் றிருந்தான்;
வெருவி ஓடிய விதத்தினை விளம்பினர் வியந்தே. (133)

2371 **வேண்டுவன செய்தது.**

மூண்டு கும்பினி முன்னுறக் கவர்ந்ததம் பதியை
மீண்டு வந்திவர் கைக்கொண்டு விறலுடன் விரிந்து
ஈண்டு நின்றுள நிலைகளை நிறைவுடன் நோக்கி
வேண்டும் மேன்மைகள் நாட்டினர் செய்திட விரைந்தரர்.

2372 **உறவினர் உவந்தது.**

ஊமை மன்னவன் உரிமையைக் காத்திட வந்தான்;
சேம மேயினி நமக்கென யாவரும் செழித்தார்;
மாம னுதிய உறவினர் மரபினர் மகிழ்ந்து
நாமம் ஆயிரம் நம்பனைப் புகழ்ந்தனர் நயந்தே. (135)

2373 **ஊக்கி நின்றது.**

வீர மாநகர் வீரவேல் வேந்தனை விரைந்து
சேர நேர்ந்தது; சேர்ந்துமுன் இருந்தவெம் பகைவர்
பேர நேர்ந்தனர்; பிழையினி நுழைந்திடா வண்ணம்
யாரும் சேர்ந்தனர்; யாண்டுமூண் டமர்ந்தனர் அடர்ந்தே.

23-வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 2373.

———

இருபத்து நான்காவது

அரண் ஆற்றிய படலம்

ஊமைத்துரை முதலானவர்களைக் குப்பினியார் வம்பாகப் பாளையங்கோட்டைச் சிறையில் அடைத்து வைத்திருந்தனர். பதினறு மாதங்கள் அங்கே இவர் பொறுத்திருந்தனர். விடுதலை செய்யாமல் கொடுமைபுரிந்து வந்தமையால் முடிவில் உறவினருடன் சூழ்ந்துகொதித்துளழுந்துசிறையிலிருந்த படைகளை வென்று வெளியேறி மீண்டுவந்து பாஞ்சாலங் குறிச்சியைஅடைந்தனர். அங்கே அதிகாரியாயிருந்த ஆங்கிலேயனை அயலே விரட்டி விட்டுக் கோட்டையைப் பலப்படுத்திச் சீமைத்துரைகளோடு போராட மூண்டு நீண்ட ஆயத்தங்களுடன் ஊமைத்துரை உக்கிர வீரமாய் உருத்து நின்றார். அந்த வீரத்திறல்களை இந்தப்பகுதி விளக்கியுள்ளது.

2374 **ஆங்கிலேயன் நீங்கியது.**

பாஞ்சையம் பதியைப் பற்றிக்
கொண்டனம் இனிமேல் பாரில்
ஆஞ்சையைச் செலுத்த லாம்என் றே
அடலுடன் அவாவி அங்கே
வாஞ்சையாய் வதிந்தி ருந்தான்
மரபினர் வரவும் வாடிப்
பூஞ்சைபோல் அஞ்சி யோடிப்
போயினன் புறத்தொ ளிந்தே. (1)

2375 **பதியைப் பார்த்து நொந்தது.**

அங்கவன் அகன்ற பின்னர் அணிநகர் நிலையை நோக்கி
இங்கிவர் இரங்கி நின்றார்; எழிலுறப் புறத்தே சூழ்ந்து
துங்கமாய் நின்ற கோட்டைச் சுவரெலாம் தொலைந்து தூளாய்ப்
பங்கமுற் றிருந்த யாவும் தனித்தனி பார்த்துநொந்தார்.

2376 **பரிந்து நின்றது.**

காலனே முதலாய் வந்த கடும்படை யனைத்தும் வென்று
வேலுயர் வீர ராயுள் வீறுகொண் டிருக்க இந்த
மாலுயர் மதிலே நின்ற தென்னவே வன்ம மீறிப்
பாலுயர் பகைவர் தட்டிப் பாழுறப் படுத்தி வைத்தார் (3)

2377 **உருத்து உரைத்தது.**

அன்னதை நினைந்து பொங்கி ஆண்டகை ஊமைகோபம்
துன்னினின் றவரை இந்தச் சுவரெனத் தூளாத் தட்டி
மன்னிய மண்ணிலேடு மண்ணெனப் படுப்பேன் என்னை
யுன்னிய கருத்தை யாரும் உணர்ந்திட உரைத்தா னன்றே.

2378 **ஆயத்தம் ஆனது.**

இனியிறை தாழ லாகா திடித்தஇவ் அரணை மீளத்
தனிவலி யுடைய தாகச் சதுருடன் சமைக்க வேண்டும்
துனியுறு பகைவர் வந்து தொடுத்தமர் மூளு முன்னே
நனியெதிர் மூண்டு நாமும் நமரொடு நிற்க வேண்டும். (5)

2379 **ஊக்கி எழுந்தது.**

என்றவன் உரைத்த போதே
எழுந்தனர்; திசைகள் எங்கும்
சென்றனர்; வரகும் வைக்கோல்
பொதிகளும் சேரக் கொண்டு
ஒன்றிய உரிமை யோடு
வந்தனர் உறுதி யாக
நின்றரண் எழுப்பி நான்கு
நெட்டையும் கட்ட லானர். (6)

2380 **அரண் ஆக்கிய திறம்.**

தென்திசை நான்கு காதம்
செறிந்திடை விடாமல் ஆட்கள்
நின்றனர்; பனிநீர் கட்டி
நிறைத்தவண் நேர்ந்த வெல்லாம்
ஒன்றுற வாரி வாரி
ஒருவர்கை ஒருவர் வாங்கி
மன்றியல் நகரில் உய்த்தார்
மலைகளாய்க் குவிந்து நின்ற. (7)

---

5 ஆங்கிலேயர் நீண்ட படைகளோடு மூண்டு வருவர் என இந்த ஆண்டகை எதிர் பார்த்து உறுதி பூண்டுள்ளான். அந்த உண்மை ஈண்டு முந்துற அறிய வந்தது.

2381 மதில்கள் ஓங்கின.

பனைவரு பதினி நீரால்
பண்புடன் மண்கு ழைத்தே
அனைவரும் திரண்டு பொங்கி
அடைவுடன் வினைகள் செய்தார்;
எனைவரும் வியந்து நோக்க
ஏழுநாள் முடியு முன்னே
புனையுமம் மதில்கள் ஓங்கிப்
பொலிந்தன பொம்மல் ஓங்க. (8)

2382 நின்ற நிலை.

தட்டுண்டு கிடந்த அந்தத்
தடமதிள் தழைத்துள் ளோங்கி
எட்டுண்ட திசைகள் எல்லாம்
எம்மிறை வெல்வான் என்று
நெட்டுண்டு நிலைத்த தென்ன
நிலைபெற நீண்டு தோன்றி
இட்டுண்டார் செல்வம் போல
எழுந்துமேல் வளர்ந்த தன்றே. (9)

2383 நிலை பெற்ற முறை.

நிலைபெற்று நின்ற கோட்டை
நிலைகுலைந் தழிந்து மீண்டு
தலைமைபெற் றெழுந்த தோற்றம்
தரணியில் சார்ந்த வெல்லாம்
அலையென எழுந்த டங்கி
ஆர்த்துப்பின் ஓங்கி யின்ன
நிலையினில் நிலையில் லாமல்
நிலைத்தலை உரைத்த தன்றே. (10)

2384 நீள்கடல் அணை என நிலவியது.

அலைஎறி கடலில் முன்னம் அடலுறு கவிகள் கூடி
மலைகளை மரங்க ளோடு வாரிநேர் கொணர்ந்து நீண்ட
நிலையுயர் அணையைக் கட்டி நின்றன போல நின்றூர்
தலையுயர் வீரர்எல்லாம் தருக்குடன் களிப்புள் ஓங்கி.(11)

2385 அரணின் அளவு.

ஆறடி அகலம் நீளம் ஆயிரம்ஆக மேலே
ஏறிய உயரம் நாலா றென்னவே மதில்எழுப்பிக்
கூறிய முறையே நான்கு திசையிலும் குலவச் செய்தார்
வீறுடன் தோன்றிக் கோட்டை விறலுடன் விளங்கிற்றன் றே.

2386 ஊமைத்துரை உவந்தது.

வென்றிசேர் இராமன் சொல்ல
விரைந்து வானரங்கள் அன்று
சென்றுயர் சேது கட்டிச்
சேர்ந்துவந் தனபோல் இன்று
நின்றுயர் கோட்டை கட்டி
நெஞ்சுவந் துரிமை யாக
ஒன்றிய பேரை யெல்லாம்
ஊமைகண்டு உவந்து நின்றான். (13)

2387 உலகம் புகழ்ந்தது.

மன்னன்பால் குடிகள் கொண்டு
வாய்ந்துள அன்பும் மாண்பும்
அன்னவன் திறலும் செல்வாக்
கமைதியும் பிறவும் காட்டி
மன்னிமுன் கோட்டை நிற்கும்
மாட்சியைக் கண்டோர் எல்லாம்
இன்னபேர் அரசன் அன்றோ
இரும்புவிக் குரியன் என்றார். (14)

2388 குடி ஏற்றியது.

குலநகர் அகன்று கொல்லம்
பரும்பினில் குடிபோ யுள்ள
தலைவியர் முதலோர் தம்மைத்
தகவுடன் அழைத்து முன்னம்

---

12 வெள்ளையரால் தட்டித் தரைமட்டமாய்த் தகர்ந்து கிடந்த கோட்டையை மீண்டும் விரைந்து கட்டி யாரும் வியந்து நோக்க வீரவேகமாய்ப் பாஞ்சையர் நின்றுள்ளனர். அந்த உண்மையை உண்டு உணர்ந்து கொள்கின்றோம்.

நிலவிய நிலையில் அந்தப்
புரத்தினில் நெறியே வைத்து
நலமுறச் செய்தான் வீரம்
நலமுற நின்ற மன்னன். (15)

2389 கோலம் செய்தது.

கவனவாம் புரவி யாதி
கருதரும் பொருள்கள் எல்லாம்
நவமுறத் தொகுத்து வைத்து
நவமணி மாட கூடம்
உவளகம் முதல எங்கும்
ஒளிபெறப் புதுக்கித் தொன்மைத்
தவமுயர் நகர மாகத்
தனிப்பெருங் கோலம் செய்தான். (16)

2390 நகர் விளங்கியது.

நிலகுலங் திருந்த அந்த
நெடுநகர் நேர்ந்த வீரன்
தலைமைகொண் டமர்ந்த போது
தழைத்தெழில் சிறந்து தெய்வப்
பொலனகர் என்ன ஓங்கிப்
பொலிந்தது; புறத்தே போன
தலைமகன் வந்த போது
குலமகள் தன்மை சார்ந்தே. (17)

2391 உறவினர் உவந்தது.

மரபுறும் உறவோர் யாரும்
மன்னவன் வரவும் வாயால்
உரைசெயற் கரிய பேரன்
புளங்களி தூங்க ஓங்கித்
திரைசெய்நீர் ஞாலம் எல்லாம்
சேர்ந்தனம் இனிமேல் என்னை
வரமுறு தெய்வம் பேணி
மகிழ்ந்துமுன் புகழ்ந்தி ருந்தார். (18)

2392 வீரர் விழைந்தது.

திண்டிறல் வீரர் எங்கும்
செறிந்தனர் நிறைந்து நின்ரூர்;
மண்டிய படைக்க லன்கள்
வரன்முறை வகுத்து வைத்தார்;
கண்டிலம் அமரை என்று
களித்தெதிர் கடுத்து வந்தார்;
உண்டியின் உயர்ந்த போரே
உறுதிஎன் றுவக்கும் நீரார். (19)

2393 போரை நாடியது.

தங்குல அரசைக் கொண்ட
சதியினை நினைந்து செய்த,
வெங்கொலை தன்னை எண்ணி,
வெய்துயிர்த் துருத்து நெஞ்சுட்
பொங்கிய கோபம் மூளப்
பொருமுக வரவை நாடித்
தங்கியுள் ளிருந்தார் வெய்ய
சலத்தொடு தருக்கிச் சார்ந்தே. (20)

2394 பொல்லாரை வெறுத்தது.

அரசிடை அழிந்த தென்ன
அயலிருந் தகங்க ளித்துப்
புரைபட வசைகள் பேசிப்
பொல்லாங்கு புரிந்து கோள்கள்
விரசிமுன் விளைத்து நின்ற
வெய்யரை எல்லாம் தங்கள்
துரைவரத் தொலைக்க எண்ணித்
துடித்துளம் துணிந்து நின்ரூர். (21)

2395 தலைவனை நயந்தது.

மதியுறு வானம் போல
மாநிலம் தனக்கு மாண்பார்
அதிபதி யுற்ற போதே
அகம்மிக மகிழ்ந்து நந்தம்

பதியுயர் பதிய டைந்து
பண்டுபோல் விளங்கி நிற்க
விதிமுறை மகுடம் சூட்ட
வேண்டுமென் றுவந்தெ ழுந்தார். (22)

2396 முடிபுனைய முனைந்தது.

உரியஇந் நாட்டை யாரும்
ஊமையன் சீமை என்னப்
பெரியதோர் பேறு பெற்ற
பேராளன் தனக்குப் பட்டம்
உரிமையிற் சூட்ட எண்ணி
உற்றவர் உவந்து சூழ்ந்தார்:
அரியஓர் நாளைத் தேர்ந்தார்
ஆவன ஆற்றி நின்றார். (23)

2397 ஆன்ற அரண்.

அரண்வலி யுடைய தேனும்
ஆனஓர் தலைவன் அங்கே
முரணுடன் நில்லான் ஆயின்,
மூண்டபோர் வீரர் எல்லாம்
திரணமா யிழிய நேர்வர்;
தேர்ந்தஓர் அரசன் சேர்ந்து
சரணமா யிருந்தால் யாரும்
சரணமாய்ச் சார்வ ரன்றே. (24)

2398 ஊன்றிய உறுதி.

என்றுபற் பலவும் நாடி
எதிர்வதை எண்ணிச் சூழ்ந்து
நின்றுயர் தலைவன் தன்னை
நிலைபெற நிறுத்தி நேரே
துன்றிமேல் தொடர்ந்து தோன்றும்
துன்னலர் தொலைய நூறி
வென்றியை விளைத்து வாழ்தல்
விழுமிதென் றுணர்ந்து நின்றார். (25)

2399 நம்பியை வேண்டியது.

குறித்தநாள் வரவும் நின்ற
குலத்துயர் தலைவர் எல்லாம்
சிறப்புடன் குமரன் தன்பால்
சேர்ந்துதம் கருத்தை மெல்லப்
பொறுப்புடன் உரைத்துப் பட்டம்
பொருந்திட வேண்டி நின்றார்;
வெறுப்புடன் விருப்பும் இன்றி
விழைந்துள நிலையைச் சொன்னன்: (26)

2400 தம்பி மொழிந்தது.

அண்ணலே இழந்த பின்னர்
அரசினை அடைந்து வாழ
எண்ணலன்; இங்கே எண்ணி
எய்தியது இழந்த நாட்டை
நண்ணலர் தம்பால் நின்று
மீட்டிஎன் நாட்டம் நாட்டத்
திண்ணமாய் வந்து நின்றேன்
தெளிந்ததை யினிமேல் செய்வேன். (27)

2401 வந்த வகை.

பாரினைப் பேணி இன்பம்
பலபல விழைந்து துய்த்துச்
சீரினைப் பெருக்கிச் செல்வச்
செழிப்புடன் வாழ வேண்டி
ஊரினை அடைந்தேன் அல்லேன்;
உலகினை அடைய வந்தார்
போரினை அடைய வென்று
புகழினை அடைய வந்தேன். (28)

2402 அண்ணலே எண்ணியது.

அதிபதி யாகி நின்ற
அண்ணல்அவ் அமைச்சன் சொல்லால்
பதிபெயர்ந் தகன்ற போது
பதமறிந்து ஓடி வந்து

சதிசெய்து கொன்ற அந்தச்
சதிக்குநேர் சதிசெய் யாமல்
விதிமுறை நின்றே எண்ணில்
வெங்கொலை விளைப்பேன் என்றான். (29)

2403 குலவீரம் குறித்தது.

கோக்குலக் குமரன் தன்னைக்
கொன்றஅப் பழிக்கு நேரே
பேய்க்குலம் களிக்க வெள்ளைப்
பிண்ங்களைக் குவித்துப் பெய்து
மேக்குற அமர்ந்து வீர
வெற்றியந் திருவோ டொன்றித்
தோக்கல வார்கு லத்துத்
தொன்முறை புரிய வந்தேன். (30)

2404 துணிந்து நின்றது.

உள்ளெலாம் வஞ்சம் மிக்கு
உளவுகள் ஒளிந்து கூறி
வெள்ளையர்க் கினியர் போன்று
வெம்பகை மூட்டித் துன்பம்
தள்ளறப் புரிந்து நின்ற
சழக்கரை என்கை வாளால்
துள்ளிமுன் வீழ வெட்டித்
தொலைத்திடத் துணிந்து நின்றேன். (31)

2405 செய்ய நேர்ந்தது.

வெள்ளையர் சிறையை அங்கே
வேரற நூறி இங்கே
துள்ளிநான் வந்த தெல்லாம்
துரைத்தனம் தொடர அல்ல:
பிள்ளையின் பேச்சைக் கேட்டுப்
பிழையாக வெளியே சென்று
வள்ளலைக் கொன்ற அந்த
வகைக்கெதிர் செய்ய வந்தேன். (32)

2406 முடி பூண்டது.

ஆதலால் அரசை யாள
அணிமுடி புனைய லாற்றேன்
காதலால் அமரை நாடிக்
களித்துளேன் என்ருன்; நின்ரூர்
சாதனை செய்யப் பட்டம்
தான்கட்டிக் கொள்ள நேர்ந்தான்;
பூதலம் புரக்கும் கோலம்
பூண்டுபொன் முடியும் பூண்டான். (33)

2407 காட்சி தந்தது.

உற்றவர் எல்லாம் தத்தம்
உரிமையின் உவந்து சூழ்ந்து
பெற்றனம் அரசை என்று
பெருமகிழ் வுடன் களித்தார்;
வெற்றிவேல் வீரர் வாழ்த்த
வீரசிங் காத னத்தில்
கொற்றவன் அமர்ந்து காட்சி
கொடுத்தனன் குறித்தி ருந்தே. (34)

2408 பவனி வந்தது.

மத்தமால் களிற்றின் மீது
மாண்புடன் அமர்ந்து முன்னே
சத்திரம் கொடிக ளாதி
சதுருடன் தாங்கிச் செல்ல,
எத்திசை மருங்கும் சால
இன்னியம் முழங்க, யாரும்
சித்தங்கள் மகிழ்ந்து போற்றச்
சிறப்புடன் பவனி வந்தான். (35)

2409 விருந்து புரிந்தது.

நகர்வலம் வந்து செய்ய
நன்மணி மாடம் எய்தித்
தகவுயர் பீடம் சார்ந்து
சால்புடன் தனி அமர்ந்து

நகைவிருந் தாற்றிப் பின்னர்
நண்ணினுர்க் கெல்லாம் இன்பம்
மிகவிருந் தளித்து மேன்மை
மிகுந்தருள் புரிந்து நின்ருன். (36)

2410 **அரசு புரந்தது.**

போரினில் இறந்து போன
பொருநர்தம் கிளைகட் கெல்லாம்
சாரும்ஒண் பொருள் நிலங்கள்
தகவுடன் அளித்து நின்ருர்
யாரும்இன் புட்னே வாழ
ஆதரித் தருளிப் போரை
நேருநாள் எண்ணி ஆட்சி
நெறிமுறை புரிந்தி ருந்தான். (37)

கும்பினி கும்பியது.

2411 இன்ன வண்ணம் இருக்க இருஞ்சிறை
சின்ன பின்ன முறச்செய்து சீறியே
மன்னன் மைந்தர்கள் மாநகர் சேர்ந்தனர்
என்ன செய்வது?என் றேங்கினர் அன்னவர்.(38)

அதிபதி அயர்ந்தது.

2412 அதிபன் ஆன வலசிங்கன் அஞ்சினன்;
மதியொ டெண்ணிமுன் மாண்புடன் மைந்தரைப்
பதிய டைந்திடும் என்று பரிவுடன்
விதிசெய் தேவின் விளைவதொன் றில்லையே. (39)

நாணி நின்றது.

2413 பகைவ ளர்த்துப் பருவரல் கொள்வது
மிகைஎன் ருேர்ந்து மிகவும் மறுகினன்;
தகைசெய் தின்னம் தழுவின் எவருமே
நகைசெய் தெள்ளுவர் என்றுளம் நாணினன்.(40)

இரங்கி இனைந்தது.

2414 ஒத்து நின்ற உறவுடன் ஓர்ந்துமே
சித்தம் நொந்து தெரிந்து தியங்கினன்;

---

39. லஷிங்டன் கலெக்டர் பலவும் கருதி மறுகியிருக்கிருன்.

எத்தி றத்தினி இப்பகை வெல்வதென்
றெய்த்து நொந்துள் ளிரங்கி யினைந்தனன். (41)

வெருவி மறுகியது.

2415 கும்பி னிக்குற வாகிமுன் கூடியே
நம்பி நின்றவர் நம்பி இவன்சிறை
தும்பு செய்து துணிந்திவண் வந்ததால்
வெம்பி யுள்ளம் வெருவி மறுகினர். (42)

துளங்கி உளைந்தது.

2416 நெஞ்சம் அஞ்சி நெடுந்திகில் கொண்டனர்;
தஞ்சம் இன்றித் தவித்தனர்; சார்ந்துமுன்
வஞ்சம் செய்தவர் வந்திவன் சேரவே
துஞ்ச லின்றித் துளங்கி யுளைந்தனர். (43)

உள்ளம் கலங்கியது.

2417 எட்ட னேமுத லாயிக லூக்கிமுன்
ஒட்டி நின்றவர் யாவரும் ஊமையன்
பட்டம் கட்டிய பாங்கை யறிந்ததும்
கட்டம் வந்ததென் றுள்ளம் கலங்கினர். (44)

பேதுற்று நின்றது.

2418 வாய்படைத்தவர் யாவரும் வாயிலாச்
சேய்படைத்தவச் சீர்மையைச் செப்பவும்
நோய்படைத்தவ ராகி நுடங்கினர்
பேய்புடைத்தெனப் பேதுற்று நின்றனர். (45)

அஞ்சி அலமந்தது.

2419 வஞ்சம் சூழ்ந்து வழியிடை முன்புவந்து
எஞ்சல் இன்றி எதிர்ந்தவர் நெஞ்சங்கள்
நஞ்சம் தோய்புனல் நண்ணிய மீன்கள்போல்
துஞ்ச லின்றித் துடித்தல மந்தன. (46)

ஏங்கி நைந்தது.

2420 வெள்ள யாளரை மேவி யிருந்துமுன்
எள்ள ரும்இடர் செய்தவர் யாவரும்

உள்ளம் கன்றி உளைந்து கலங்கினர்;
தள்ள ருந்துயர் சாருமென் றேங்கினர். (47)

பேடிகள் பேதுற்றது

2421 ஓடி ஓடி உறுதிமுன் நாடினர்;
வாடி வந்து வருந்தி வலசிங்கைக்
கூடி நின்று குறித்த துரைத்தனர்;
பேடி மக்கள் பெரிதுளம் பேதுற்றார். (48)

கோள்கள் மூட்டியது.

2422 நாட்டில் எங்களை நாடவொட் டாமலே
வாட்டி ஊமையன் வன்பழி வாங்குவான்;
காட்டி எம்மைநீர் கைவிட்ட தாகுமே
நீட்டி மேலினி நின்றிடை நேரிலே. (49)

குறித்து உரைத்தது.

2423 நின்ற வெஞ்சிறை நீங்கிமுன் நேர்ந்தவர்க்
கொன்று வந்து குலநகர் கூடியே
துன்று கோட்டை துளைந்து வளைந்துளே
வென்றி வெந்திற லோடு விரிந்துளான். (50)

இனி வாழ்வு இல்லை

2424 வெல்லும் வெம்படை யோடு விரைந்துநீர்
ஒல்லை ஏறி உருத்தமர் ஆற்றிடாது
எல்லை நோக்கி இருப்பின் இடர்மிகும்;
இல்லை வாழ்வுமக் கிங்கினி என்றனர். (51)

கலெக்கட்டர் கருதியது.

2425 கோளர் வந்து குலைத்திட நாமிந்த
வேளை என்செய்வ தென்று வலசிங்கன்
நீள நோக்கினன்; நீணகர் போயுள்ள
ஆளை நோக்கினன்; ஆவதை நோக்கினன். (52)

---

48 மாவட்ட அதிபதியாயிருந்த கலெக்டர் லஷிங்கட்டனை அணுகி எட்டப்பன் முதலானோர் கூடி ஆலோசனைகள் செய்து உள்ளம் உளைந்து அல்லல் அடைந்தனர். ஊமையன் ஓங்கி நின்றால் சீமையர் நீங்கி விடுவரே என்று அவர் நெஞ்சம் கவன்று நெடிது மறுகி நிலைகுலைந்து நின்றனர்.

முல்லனை வினவியது.

2426 முன்னம் ஓடிய முல்லனை நோக்கியே
மன்னன் தம்பியர் வந்ததும் உன்னைமுன்
என்ன செய்தனர்? என்றவன் கேட்டனன்;
அன்ன வன்மிக அஞ்சி மொழிந்தனன். (53)

முல்லன் மொழிந்தது.

2427 வீர வெம்படை யோடு விரைந்தவர்
ஊர டைந்தனர் உள்ள நிலைகளை
நேரில் கண்டு நெடுஞ்சினம் கொண்டனர்
சேர வந்து செயிர்த்தெனைச் சீறினர். (54)

நலிவு செய்திலன்.

2428 புலிக ளைக்கண்ட புல்வாயைப் போலவே
ஒலிசெய் யாமல் ஒடுங்கி யிருந்தனென்
பொலிவு கொண்டெதிர் பொங்கிய ஊமையன்
நலிவு செய்திலன்; நாடிமுன் நோக்கினன். (55)

நான் வெளி ஏறினேன்.

2429 நின்ற நின்படை யோடு நிமிட நீ
சென்று தீர்க; சிறிதினி நின்றையல்
பொன்றி வீழ்வை புறப்படென் றேட்டினன்;
ஒன்றும் பேசா துடன்வெளி யேறினேன். (56)

கொலையை விலக்கினன்.

2430 செல்ல நான்வழி சேரவும் வாளுடன்
ஒல்லை ஓடி ஒருத்தன் உருத்தெனைக்
கொல்ல வந்தனன்; கோமகன் நில்லெனச்
சொல்ல வேஅவன் சோர்ந்துடன் நின்றனன்.(57)

உயிர் தந்த நீதிமான்.

2431 உயிர் பிழைத்ததென் றுஒண்பரி ஏறியே
வெயர்வை சிந்த விரைந்திவண் சேர்ந்தனன்;
செயிர்கொள் சிந்தையன் ஆயினும் ஊமையன்
உயர்கொள் நீதியன் என்றவன் ஓதினன். (58)

வெள்ளையன் வியந்தது.

2432 அந்த வார்த்தையைக் கேட்டதும் ஆர்வமாய்
இந்த மன்னன் இயல்பினை மெச்சினான்;
சிந்தி வெஞ்சிறை தீர்ந்ததை எண்ணியே
முந்தி வன்சினம் மூண்டு முனைந்தனன். (59)

வினைசெய்ய மூண்டது.

2433 இன்னம் தாழ்ந்திங் கிருப்பின் இளித்தெமைச்
சின்ன மாகச் செருக்கி இகழுவர்;
முன்ன வர்க்கிவர் மூர்க்க நிலையினைப்
பன்னிப் பாழ்செய்வல் என்று பறந்தனன். (60)

தளபதிகளுக்கு எழுதியது.

2434 சேனை நாதனைச் சேர்ந்த துணைவரை
ஆன காரியக் காரரை ஆய்ந்தனன்
மான வீரருடு மாட்சி மிகுந்துள
ஏனை யோர்க்கும் இசைந்த தெழுதினன். (61)

மேலோர் திகைத்தது.

2435 மேலிருந்த பதிக்கெழுதி மேவிநின்ற
பிற்கட்டை விலைரந்து கூடிச்
சாலவுடன் செய்வினையைச் சார்ந்தவரோ
டினிதாய்ந்து தளர்ந்தான்; அன்று
காலன்முதற் படையனைத்தும் கொன்றவனைக்
கபடமாய்க் கொன்றோரும் அன்றி
ஏலஅமர் எதிர்நின்று வென்றிலேம்;
இனிஎதிரின் என்னும் கொல்லோ? (62)

படுபழி படுவமே.

2436 கட்டமைந்த சிறையுடைத்துக் காப்பழித்துச்
சென்றவரைக் கருதா தின்று
விட்டுவிடின் நமையுலகம் வீணுக
இகழ்ந்துபழி விரைந்து தூற்றும்;
ஒட்டிமுனம் அடங்கிநின்றூர் உளம்செருக்கி
ஓங்கிமே லுயர்வார்; நாமுன்
பட்டபா டெல்லாம்போய்ப் பாரிழந்து
படுபழிமேற் படுவ மன்றே. (63)

2437 அடுபடை திரட்டியது.

ஆகலால் இப்பொழுதே அடுபடையை
மிகத்திரட்டி அடலோ டெய்தி
மோதியந்தப் பாஞ்சைநகர் தனைமுற்றி
மூண்டழித்து முழுதும் தீர்த்துக்
காதினிற மன்மரபைக் கட்டழிக்க
வேண்டுமென்று கடுத்து ரைத்துச்
சாதிவெள்ளைக் காரருயர் தனிப்படையின்
தலைவனுக்கு நிருபம் விட்டார். (64)

2438 யாவும் தோர்ந்தது.

விட்டஅந்த நிருபம்வர விளைந்தங்கு
நிகழ்ந்தவெலாம் விவர மாக
முட்டறநன் கினிதாக முழுதுணர்ந்து
மூண்டவினை நிலையை நோக்கிக்
கட்டபொம்மன் எனும்பெயர்கொள் கட்டாண்மைத்
திறலுடைய கடும்போர் வல்லான்
பட்டழிந்தும் அவன்தம்பி பகையாகிப்
படுத்திநிற்கும் பான்மை தேர்ந்தான். (65)

2439 தலைமைத் தளபதி

மக்காளி எனும்பெயர்கொள் வல்வீரன்
பலபோரில் மண்டி ஏறி
மிக்கான வெற்றியொடு மேன்மையாய்
மேவிநின்றுன் விறலோ டெங்கும்
எக்காலும் போர்வேட்டே எழுகின்ற
இயல்புடையான் எதிர்ந்து பட்ட
அக்காலன் நிலையினைக்கேட் டதுமுதலா
இப்பதிமேல் அடல்மீக் கொண்டான். (66)

---

66 மக்காளி என்றது மெக்காலே (Major Macaulay) என்னும் ஆங்கில தளபதியை. பாளையங்கோட்டைச் சிறையைத் தகர்த்து ஊமைத்துரை வெளியேறிய பொழுது இந்தச் சேனைத்தலைவன் அங்கே கும்பினி மாளிகையில் தங்கியிருந்தான். நேர்ந்த நிகழ்ச்சியை அறிந்து நெடிது நாணினான்; பின்பு கடிது போருக்கு ஆயத்தம் செய்தான்.

2440 சேனைத் தலைவர் சினந்தது.

ஆங்கிலரின் ஆணையைக்கண்டு அகிலமெலாம்
அடங்கிநின்றது; அடங்காது என்றும்
ஓங்கிமிக வுளம்செருக்கிப் பாஞ்சாலங்
குறிச்சிமன்னன் ஒருவன் மட்டும்
பாங்கமைந்த படைதிரட்டிப் படுவீரத்
துடனின்றுன் பட்டும் தேரான்
ஈங்கிவனை இருக்கவிடின் இனி நமக்கிங்
கிருப்பில்லை எனச் சினந்தான். (67)

2441 படைகள் திரண்டது.

படைவீரர் ஒருபதினா யிரம்பேரைப்
பதமாகப் பார்த்துச் சேர்த்து
நடைவேக முடையவயப் புரவிகளை
நயமாக நாடிக் கொண்டு
புடையேறிப் பொழிகின்ற பீரங்கி
முதலாகப் பொருதற் கான
அடலாறு படைகளெலாம் ஆய்ந்தெடுத்துக்
காய்ந்துமே லெழுந்தா னன்றே. (68)

2442 சேர்ந்து வந்தது.

மண்டிவரு கடலலைபோல் வாவிவரு
பரிகளுடன் மடுத்து மீறித்
தண்டடர்ந்து படர்ந்தேறி அங்கங்கே
யிடங்கண்டு தங்கி நின்று
தண்டமிழ்நா டினிதடைந்து பாளையங்கோட்
டைவந்து சாரச் சார்ந்த
திண்டிறல்வெம் படைத்தலைவர் மக்காளித்
துரையுடனே சேர்ந்தி ருந்தார். (69)

2443 கயத்தாறு அடைந்தது.

சங்கரனர் கோயிலிடை யிருந்தபடை
தனைத்திரட்டிக் கயத்தா றென்னும்
பொங்கியவந் நகரடைந்து புதுப்படையும்
மிகச்சேர்த்துப் பொல்லாச் சூழ்ச்சி

தங்குமனத் தொன்னலரைத் தயவாக
வுடன்கொண்டு சமரை நாடி
அங்கமர்ந்த துணைவருடன் ஆவனவெல்
லாம்கூடி ஆய லுற்றான். (70)

1444 பகைவகை பகர்ந்தது.

பிற்கட்டு வலசிங்கன் முதலாக
அங்கிருந்த பெரியோ ரெல்லாம்
மற்கட்ட வந்திருக்கும் வன்சேனைத்
தலைவர்களை மகிழ்ந்து பேணிக்
கற்கட்டின் சிறைமீறி ஊமையன்போய்க்
கடிநகரம் கலந்த தெல்லாம்
முற்கட்டித் தெளிவாக நிலைமுழுதும்
தலைமையுடன் முறையே சொன்னான். (71)

1445 படுசினம் கொண்டது.

அவ்வுரையைக் கேட்டவரும் அகம்திகைத்திவ்
வடற்சிறையை அகன்று துள்ளி
எவ்வகையில் எழுந்து சென்றார் ? என்ன அவர்
செயலியலென்றெண்ணி எண்ணித்
தெவ்வலியின் திறல்நோக்கிச் செய்தசமர்
நிலைநோக்கிச் சிந்தை யுள்ளே
எவ்வமிகக் கொண்டஞ்சி யிருந்தாலும்
எறுழ்வலிமீக் கொண்டு நின்றார். (72)

1446 ஒற்றனே உய்த்தது.

இன்னவா றங்கிருக்கப் படைவந்த
இயல்பெல்லாம் எதிர் அறிந்தே
அன்னவர்தம் மனநிலையும் அமர்நோக்கி
எழுநிலையும் அயலே வந்து
துன்னியுட னிற்கின்ற துணைவலியும்
ஓர்ந்துவர ஒற்றர் தம்மை
மன்னன்இவன் விடுத்திருந்தான் மறைவாக
ஆய்ந்தவரும் விரைவில் வந்தார். (73)

ஒற்றர் உரைத்தது.

2447 வந்து மன்னை வணங்கி மருவலர்
சிந்தையும் அங்குச் சேர்ந்த படைத்திரள்
முந்தி யுள்ள முரணும் முடிவுமேல்
அந்த ரங்கங்கள் யாவும் அறைந்தனர். (74)

யாவும் குறித்தது.

2448 சேனை வேந்தராய்ச் சேர்ந்துள வெள்ளையர்
மானம் மீதுற மண்டி மனம்கொதித்
தூன வெம்படை ஓர்ந்துள் ளுறைந்துள
தானம் யாவும் சதுருடன் சாற்றினர். (75)

எட்டனைச் சுட்டியது.

2449 எட்டன் எட்டி இருங்களிப் போடுவந்து
ஒட்டி நின்றமர் உளக்கி யுறும்படி
பட்டி வஞ்சங்கள் பண்ணிப் படுபுலை
சுட்டி யுள்ளதும் சுட்டியுட் சொல்லினர். (76)

உளவாளர் நிலை.

2450 சோமன் சாமகன் என்னுமச் சாரணர்
தாம் அறிந்து தகவுடன் வந்ததை
ஏம மாக இனிதின் இயம்பவும்
தாம மார்பன் தழைத்துள் ளுணர்ந்தனன். (77)

ஊமையன் ஊக்கிபது.

2451 மன்னன் உள்ளம் மகிழ்ந்து தமருடன்
துன்னி ஆய்ந்துதன் தொல்படை யாவையும்
அன்ன போதே அடலுடன் வந்துற
உன்னித் தூதரை ஒல்லையில் ஏவினன். (78)

வீரர் விரைந்தது.

2452 சென்று தூதுவர் சீறிவன் போர்நிலை
ஒன்றி யுள்ள உறுதியை ஊர்தொறும்
நின்று கூற நெடிது மகிழ்ந்துடன்
வென்றி வீரர் விரைந்து நிறைந்தனர். (79)

உவந்து வந்தது.

2453 தூதர் சொல்லவும் துள்ளி எழுந்தனர்;
காது வாளயில் கையினில் எந்தினர்;
ஆதரத்துடன் அந்நகர் துன்னினர்;
சாதி மன்னனைச் சார்ந்து மகிழ்ந்தனர். (80)

உறுதி சூழ்ந்தது.

2454 ரிக்க வெம்பசி மேவிய பேர்தமை
ஒக்க நல்விருந் துண்ண வருகெனப்
பக்கம் வந்து பரிந்து பகர்ந்திடத்
தொக்க வந்தவ ராமெனச் சூழ்ந்தனர். (81)

அமரை விழைந்தது.

2455 அன்று வேந்தை அநீதி யுறக்கொன்று
நின்று வெஞ்சிறை செய்த துயர்களைக்
கன்றி எண்ணிக் கடுத்துமுன் நின்றனர்
அன்று வந்தம ராற்ற அடர்ந்தனர். (82)

மனம் துணிந்தது.

2456 மூண்ட தெவ்வர் முரண்வலி யோடடல்
நீண்ட வெவ்வினை யாளர் நெடும்படை
யாண்டும் உள்ளவர் ஆயினும் பாஞ்சைமுன்
மாண்டு வீழ்வர் எனமனம் கொண்டனர். (83)

மதித்து நின்றது.

2457 நாட்டின் மானத்தை நண்ணிய வீரத்தை
ஈட்டி வல்லயம் வாளயில் ஏந்திமுன்
காட்டி வெள்ளையர் கண்டு கலங்கிட
வாட்டி வெற்றியை வாங்க வலித்தனர். (84)

சேர்ந்தவர் தொகை.

2458 நேர்ந்த போரை நினைந்து மகிழ்ந்தங்கே
சேர்ந்த பேரைச் செறிந்த படைகளைக்
கூர்ந்து நோக்கிக் குறித்தவர் எண்ணினர்
ஆர்ந்த ஆயிரம் ஆறெனத் தேர்ந்தனர். (85)

உற்றவருடன் உசாவியது.

2459 வந்த தன்குல வீரரை வரிசையின் வரைந்து
சிந்தை யுள்ளுற உவந்துறு செருநிலை தெரித்து
வெந்தி றற்பகை வெல்லுறும் விதத்தினை வேந்தன்
தந்திரப்பெருந் தலைவரோ டுசாவினன் தனித்தே(86)

2460 உரியவர் உவந்தது.

சின்ன பொம்மையன் குமரையன் சிவத்தயன் தளவாய்
சென்னன் தும்பிச்சி செயமல்லு சென்னவ ராயன்
சின்ன வீரணன் பெரியமல் சேதுமன் செருமல்
அன்னன் மாதவன் ஆதிவத் திவரவை அமர்ந்தார். (87)

2461 கொற்றவன் குறித்தவை.

உற்றி ருந்தஅவ் வுறவினர் தமைமுகம் நோக்கி
அற்றை நாள்முதல் அரசினை ஆண்டுவந் துள்ளேம்;
எற்றை நாளுமே எய்திடா இடர்மிக இடையே
பெற்று நொந்திந்த நிலையினில் பிழைத்திட நேர்ந்தேம்.

2462 கூறிய மொழிகள்

சீர மைந்தநம் அரசினை வஞ்சமாய்ச் சிதைத்துப்
பார வெஞ்சிறை தனிலெமைப் பழிபடப் படுத்தி
ஈரம் இன்றியே இடர்பல பகைவர்கள் இழைத்தார்;
வீர வேற்பரன் அருளினல் வெளிப்பட்டு வந்தேம். (89)

2463 தெவ்வர் செயல்.

வந்து கோட்டையை வளைந்தனம்; வரன்முறை அரசை
முந்து போலவே செய்திட முயன்றுளேம்; தெவ்வர்
சந்து செய்துறு படைகளைச் சதுருடன் திரட்டி
வெந்தி றற்கொடும் சமரினை விளைத்திட நின்றார். (90)

2464 இகலுடன் எழுந்தார்

மன்னர் மன்னவ னுயிர்ந்த மாநிலம் புரந்து
முன்னர் நின்றநம் அண்ணலை மோசமாய்க் கொன்றார்;
என்னை ஊமையன் எனமிக இகழ்ச்சியாய் எண்ணி
இன்ன போரினை இகலுடன் இயற்றிட எழுந்தார். (91)

2465 **செறுநரை ஒழிப்பதே சிறப்பு.**

வீர வாழ்வினை விழைந்துள மரபினர் என்று
கொறிந்திலர்; நெறிமுறை நின்றிலர்; நெஞ்சில்
சரம் லன்றியே இழிதுயர் இழைத்தனர்; அவரைச்
சீர ழித்துயிர் செகுத்திடா திருப்பது சிறப்போ? (92)

2466 **வீரத்திறலே விளைப்பேன்.**

கெரும் நெவ்வரை நெட்டழித் தித்திசை இனிமேல்
செரும் ஆசையைக் கனவிலும் சிந்தியா தொழித்து
கிரு லாவிய நிலத்திலும் வானிலும் நமது
வீர மாந்திறல் விளங்குற விளைத்திட வேண்டும். (93)

2467 **மானவீரமே மன்னவர் வாழ்வாம்.**

தாலை வீரமாய் வாழ்வதே மன்னவர் வாழ்வாம்;
நூலை சீலமாய் வாழ்வதே ஞானிகள் இயல்பாம்;
ஆலை இவ்விரு வழிகளில் அமைகலா வாழ்வோ
சலை மாகவே இழிவுறும் வழிவழி இழிவே. (94)

2468 **நமது தொழில்**

தலைமை யானநல் வாழ்வையே தகவுடன் நாடி
நிலைமை யாகவே நெறிமுறை வாழ்ந்த நம் நீர்மை
புலைமை யூர்தரப் புறத்திருந் திவண்வந்து புகுந்த
தொலைமை யாளரைத் தொலைப்பதே நமக்கினித்
தொழிலே. (95)

2469 **கடமையைச் செய்வோம்.**

செய்ய வேண்டிய கடமையைச் செய்வதே சிறப்பாம்;
கைய வேண்டிய பகைவரை நைத்திடா திருந்தால்
உய்ய வேண்டிய ஒருபெரு நெறியினை யிழந்து
வைய வேண்டிய வழியினில் இழிவுற வருமே. (96)

2470 **புகழை அடைவோம்.**

பிறந்த போதிலே இறந்திடும் பேற்றினைப் பெற்றுச்
சிறந்து வந்துளேம்; சிறியநீர்க் குமிழிபோல் உடலம்
மறைந்து போகுமுன் வான்புகழ் மண்ணிடை நிறுவி
றந்து போவரேல் என்றுமே இறப்பிலா ரவரே. (97)

2471 பிழையை ஒழிப்போம்.

பாரும் வானமும் ஒருகுடை நீழலில் படைத்துச்
சீரும் செல்வமும் சிறப்புடன் சேர்ந்துமுன் இருந்தார்
யாரும் நின்றிலர்; அழிவையே கண்டனர்; அழியாப்
பேரும் கீர்த்தியும் பிழைத்திடப் பிழைப்பது பிழையே.

2472 வென்று வாழ்வோம்.

இட்டு வாழ்ந்தனம் இதுவரை; எதிரிகள் இகல்மீப்
பட்டு வம்புகள் பண்ணிடத் துணிந்ததால் இனிமேல்
வெட்டி வாழ்ந்திட வேண்டியே இப்பெரும் பட்டம்
கட்டி நின்றனம்; காட்டவும் நேர்ந்தனம் கடுத்தே. (99)

2473 விழுமிய நிலையினர்.

இன்றி ருந்தவர் நாளையே இறந்துமண் ணுகி
ஒன்று மின்றியே ஒழிவதை நாளும்நேர் கண்டு
நின்றி ருக்கின்றேம்; நிலைமையும் தெரிகிலேம்; நேரே
பொன்றி வீழுமுன் பொன்றிடாப் புகழ்பெற வேண்டும்.(100)

2474 வீர வாழ்வினர்

நீர மைந்தநீள் நிலத்துயர் அரசென நிமிர்ந்து
பார வாழ்க்கையில் பதிந்தவர் படுபகை போர்மேல்
சேர நேர்ந்திடின் சினந்தவர்ச் செகுத்தலே அன்றி
வீர வாழ்க்கையர் வேறொரு வாழ்வையும் வேண்டார்(101)

2475 மான மரபினர்.

மான வீரங்கள் மருவிய மரபினர் என்று
வான மும்புகழ் வளர்ந்திட வளர்ந்துநாம் வந்தோம்;
ஊன மாகவந் தொண்டியிங் குறைந்திட வுற்றூர்
ஈனம் செய்திட எழுந்தனர் இழிவுற இணைந்தே. (102)

2476 போரில் ஏறுவர்

நீண்ட வெம்பகைக் கடங்கியிந் நிலத்தினை முன்போல்
ஆண்ட போதினும் அழிவவ மானமே யாகும்;
மூண்ட போரினை முனைந்துமுன் வெல்லுவேன்; அன்றி
மாண்ட போதினும் வானுயர் சுவர்க்கமே அடைவேன்(103)

2477 வெற்றிவேலே உற்றதுணை.

வெய்ய வெம்படை விரைந்துமேல் வருதலால் நீவிர்
மெய்யன் போடிவண் மேவினீர்! வேற்கைளம் பெருமான்
செய்ய சிறடி சிந்தையில் இருத்தியித் தெவ்வை
ஐய றுறிநாம் நற்புகழ் பெற்றிட வேண்டும். (104)

2478 விறலுடன் அமர்ந்தனர்.

என்று மன்னவன் இயம்பிட இருந்தவர் எல்லாம்
முன்றி யன்புடன் ஊக்கமும் உறுதியும் பூண்டு
என்று நன்றென உவந்தவன் உரைகளை நயந்து
வென்றி வேட்கைய ராயவண் விறலுடன் அமர்ந்தார்.

2479 முரணற முண்டனர்

அன்னை வீரருள் ஆதிரா மென்பவன் அரசே!
முன்னை லார்மிக உயர்படை யுடனிவண் உறுமுன்
முன்னம் ஏறிநாம் மூண்டவர் முரணற முடித்துச்
சின்னை பின்னங்கள் செய்திடலாம்எனச் சினந்தான். (106)

2480 கோமகன் தடுத்தான்.

வறி மேல்வரும் வரையுநாம் இருப்பதின் எதிர்போய்ச்
சிறி யன்னவர் உறைவிடம் சேர்ந்துமுன் செகுத்து
மாறி யோடிடச் செய்தலே மாண்பென வகுத்துக்
கூறினன் உளக் கொதிப்புடன்; கோமகன் தடுத்தான்.

2481 முறையுடன் பொருவோம்.

வந்த பின்புநாம் செய்வதை வருமுனே விரைந்து
முந்தி நாம்செயல் முறையல; மூண்டவெம் பகைஞர்
வந்த மாநகர் இயல்பையும் வலியையும் என்றும்
சிந்தை கொண்டுயர் திகிலுறச் செய்வது திறமே. (108)

2482 காலனையும் வென்றோம்.

கடந்து முன்வந்த காலனைக் காலனுக் கிரையா
மடந்து நின்றுநம் வண்மையும் வன்மையும் உலகம்
தொடுத் தறிந்திடச் செய்தனம்; தொடர்ந்தினித்
தொகையாய்
அடுத்து மேல்வரும் அனைத்தையும் அவ்வகை அழித்து(109)

2483 வெற்றியை விளக்குவோம்.

என்றும் பாஞ்சையம் பதியின தடலினை இகலோர்
நன்று தேர்ந்திந்த நாட்டினில் நாட்டமும் இன்றி
ஒன்றி ஓடிட வுறுவலி காட்டிநம் முன்னோர்
வென்றி மேன்மையை விறலுடன் விளக்கிட வேண்டும்(110)

2484 ஒன்னுரை ஒழிப்போம்.

ஆத லால்படைக் கலன்களை அடைவுடன் தொகுத்துச்
சாதி வீரரும் சார்ந்தபோர் வீரரும் சேர்ந்து
மோது போரினில் மூண்டுமுன் முனைந்தமர் ஆற்றி
ஏதி லார்களை ஏதிலார் எனச்செய்மின்! என்றான். (111)

2485 உறவினர் உவந்தனர்

ஊமை நாயகன் உரைகளைக் கேட்டுளம் உவந்து
தாம வீரர்கள் யாவரும் தறுகண்மை மிகுந்து
நாம வன்படை யாவையும் நலமுறத் தொகுத்துச்
சேம மோடவண் இருந்தனர் செருவினை விழைந்தே.(112)

2486 மருவலர் மருவி நின்றது.

இவ்வகை வீரர் இங்கே இடம்பொருள் ஏவல் எல்லாம்
செவ்வையாய்த் தொகுத்து வைத்துத் தெவ்வர்தம் வரவு நோக்கி
வெவ்வலி யுடனி ருந்தார்: மேவலர் மேவி அங்கே
எவ்வகை இருந்தெ ழுந்தார் என்பதை இனிமேல் சொல்வாம். (113)

2487 வெள்ளையர் உள்ளம் உளைந்தது.

சேர்ந்தவெம் படைக ளோடு சேனகா வலரும் சேர்ந்து
ஆர்ந்தமர்ந் தாய்ந்து நோக்கி அமர்புரி அமைதி தேர்ந்து
நேர்ந்தவண் இருந்தார் நேர்ந்த நெடும்பகை நிலையை நீள
ஓர்ந்துணர்ந் துளைந்து தத்தம் உளத்துளே உளையலானர். (114)

2488 நினைப்பின் நிலைகள்

பேனமன் வந்து முன்னம் பேரிழ வெய்தி மீண்டு
போனதை நினைவார்; போர்மேல் போவதை நினைவார்; போனால்

ஆனதென் னேமோ? என்ன ஐயமுற் றுளைந்துள் கைவார்;
மானமும் திறலும் இன்ன வகையுற மறுகி நின்றார். (115)

2489 உறுதி ஓர்ந்தார்.

வெல்கோயர் இந்த நாட்டில் வேருற வேண்டு மாலைல்
தன்னருந் திறல்சேர் பாஞ்சைத் தனியர சதனை நேரே
வெளிமுன் எறிதல் வேண்டும் கிளர்பெரும் பகையீ
தென்றே
உள்ளினர் உளைந்தார் உள்ளம் கலங்கினர் உறுதி ஓர்ந்
தார். (116)

2490 மூண்டுள்ள நிலை.

மூண்டுமுன் நின்ற முன்னேன்
முடிந்தனன்; முழுதும் வெற்றி
மூண்டுநாம் பெற்றோம் என்றே
இருங்களிப் பெய்தி நின்றோம்;
மீண்டும் அன்னவன் றன் பின்னேன்
மிடலொடு பெருகி நேரே
நீண்டெதிர் நிற்கின் றனே
நிலையிது நெடிதே என்றார். (117)

2491 பேசாத பெருவீரன்.

மலையெலாம் கூடி னலும் உலகெலாம் ஒருங்கே வந்து
போரெலாம் புரிவோம் என்று பொங்கிமுன் நின்றபோதும்
முனையை எதிரே பேசான் ஆணையன் உள்ளத் துள்ளே
யாரையும் துரும்பா எண்ணி அடலுற அமர்ந்துள் ளானே!

2492 மாற்றலர் மறுக்கம்.

மாற்றலன் ஆகி மூண்டு
மறமுடன் மருவி நம்முன்
கூற்றென நீண்டு நிற்கும்
கோனைநாம் வெல்லோம் ஆயின்
ஆற்றலும் படையும் ஆளும்
ஆட்சியும் அடைந்து நின்ற
ஏற்றமும் இசையும் யாவும்
இழந்துநாம் இழிய நேர்வோம். (119)

2493 சீமையர் சிரிப்பரே.

ஊமையன் ஒருவன் தன்னை
உறுபடை எல்லாம் கூட்டிச்
சேமமாய் வெல்ல மாட்டீர்!
சேனையின் பதிகள் என்ன
நாமமே கொண்டு நின்றீர்!
நமக்கினி மதிப்பே தென்று
சீமையில் உள்ளார் எல்லாம்
சிரிப்பரே எனக் கவன்றார். (120)

2494 செல்ல நேர்ந்தனர்.

நின்றுமுன் நெடிது சூழ்ந்து
நீள்பெருஞ் சேனை மன்னர்
ஒன்றிய பகையை வெல்லும்
உறுதியை ஓர்ந்துள் ஆய்ந்து
வன்றிறல் அமைய வூக்கி
வதிந்தவப் படையைப் போர்மேல்
சென்றிட அமைத்து நின்று
செருக்கிமேல் செலுத்த நேர்ந்தார். (121)

2495 உள்ளம் உளைந்தனர்.

பாஞ்சையை எண்ணும் தோறும்
பகைவனைக் கருதுந் தோறும்
வாஞ்சையாய் முன்பு இருந்த
வகையினை உணருந் தோறும்
தாஞ்செய நேர்ந்து நின்ற
சமரினை நினையுந் தோறும்
ஆஞ்சையை அறியும் தோறும்
அவருளம் மறுகி நின்றார். (122)

2496 உறுதி குலைந்தனர்.

சிறையினை உடைத்துச் சென்ற
திறலுடை வீரன் தன்னை
நிறைபெருஞ் சேனை யோடு
நேர்ந்துநேர் பொருது வென்று

முறையுடன் பற்றி மீள
மூண்டுளோம்; எனினும், நம்முள்
உறைபவர் உயிர்கள் மீண்டு
வருங்கொல்? என் றுளகின் றேமால். (123)

திகில் அடைந்தனர்.

2497 அருந்திறல் ஆண்மை வீரம்
அதிசய ஆற்றல் யாவும்
பொருந்திய பகைவன் தன்னைப்
பொருதுடன் வென்று கொள்ளத்
திருந்திய சேனை யோடு
செல்கின்றேம்; எனினும், சிந்தை
பெருந்திகில் அடைய நேர்ந்து
பேதுறு கின்றேம் என்னே! (124)

2498 **கருதி எழுந்தனர்.**

உளமையன் என்னும் பேரால்
உறைந்துள ஒருவன் தன்னைச்
சீமையர் எல்லாம் நெஞ்சத்
திகிலுடன் தெரிய நேர்ந்தார்;
நாமிவன் நகர்மேல் இன்று
நம்படை நடத்து கின்றேம்;
சேமமாய் வென்று மீளும்
செயலினித் தெளிய நேர்ந்தோம். (125)

24-வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 2498.

---

125 பாஞ்சைமேல் போர்புரிய நேர்ந்த வெள்ளையர் உள்ளங்களில் நேர்ந்துள்ள போராட்டங்களையும், பொருந்திய கவலைகளையும் ஓரளவு ஈண்டு உணர்ந்து கொள்கின்றேம்.

இருபத்தைந்தாவது

அஞ்சி மீண்ட படலம்.

கும்பினியின் தலைமைச் சேனாதிபதியாயிருந்த மேஜர் மெக்காலே (Major Macaulay) பல இடங்களிலுமுள்ள படைகளைத் திரட்டினன். கொடிய சுடு வெடிகளோடு சேனைகள் திரண்டு நின்றன. கேப்டன் மார்ட்டின் (Captain Martin) மேஜர் ஷெப்பேடு (Sheppard), லெவ்டினெண்டு வெசி (Lieut Vesey) முதலாயினோர் உபதளபதிகளாய் ஊக்கி நின்றனர். சிறையிலிருந்து தப்பிப்போன ஊமைத்துரையைப் பிடிக்க மூண்டு படைகளை எழுப்பி வந்தார். 1801 பிப்ரவரி மாதம் 8-ந்தேதி (8—2—1801) பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் படைகள் மூண்டு வந்தன. இடையே **குலையநல்லூர்** என்னும் ஊர் அயலே பாஞ்சை வீரர்களால் அல்லல்கள் அடைந்தன; முடிவில் 9—2—1801 காலை ஒன்பது மணிக்குப் பாஞ்சைக் கோட்டையைக் கண்டனர். தரை மட்டமாய்த் தட்டியிருந்த கோட்டை நெட்டு நெட்டாய் நிமிர்ந்து இரண்டாயிரம் போர் வீரர்களோடு நிலைத்து நிற்பதைக் கண்டதும் சேனைத் தலைவன் திகைத்தான்; போராட நேர்ந்தால் யாவரும் அடியோடு அழிய நேர்வர் என்பதை அறிந்தான். தந்திரமாய்ப் படைகளைத் திருப்பி நடத்திச் சாதுரிய சாகசமாய் மீள நேர்ந்தான். அவ்வாறு அஞ்சி மீண்ட நிலைகளை இந்தப் பகுதி தகுதியாய் விளக்கி யுள்ளது.

2499 **சேனை எழுந்தது.**

ஊமை மன்னனை உருத்துடன் பிடித்திட ஊக்கிச்
சீமை மன்னிய வெள்ளையர் சிந்தையுட் செருக்கிச்
சேமம் மன்னிய பாஞ்சையஞ் சீர்ப்பதி சேர
நாமம் மன்னிய சேனையை நடத்தினர் நயந்தே. (1)

2500 **செருக்கி வந்தது.**

தருக்கி மேல்வந்த படைகளைச் சதுருடன் எழுப்பி
நெருக்கி வந்திந்த நெடுநகர் நேர்ந்துமுன் முற்றி
வெருக்கொ ளும்படி பொருதிட வேண்டுமென் றூக்கிப்
பொருக்கெனப்படைத் தலைவர்கள் எழுந்தனர் பொங்கி.

2501 **கதிநடை கண்டது.**

பத்தி பத்தியாய்ப் படைகளைப் பாங்குடன் பகுத்து
வைத்த மர்த்தினர் வாள்வெடி வேல்களை வகையா
தெத்தெ டுத்தவர் உள்ளுற வுக்கிமுன் நின்று
தித்த மக்குளே சமர்புரி தருக்குடன் சார்ந்தார். (3)

2502 **தானைத் தலைவர்கள் நிலை.**

தலைவ ராயங்குச் சார்ந்துமுன் நின்றவர் எல்லாம்
கொலையி லேமிகப் பழகிய கொடுந்திற லுடையார்;
விலையி லாமணிப் பூணெடு விருதுகள் பெற்றூர்;
மிலையி லாதுயர் பரிகளில் ஏறினர் நிமிர்ந்தே. (4)

2503 **தலைமைத் தளபதி**

தானை மன்னவர் யாவர்க்கும் தனிப்பெருந் தலைவன்
ஆனை வீரனும் அரியஓர் பரியினில் அமர்ந்தான்;
வானை ஆயுத வகைகளும் எழுந்தன; இயங்கள்
வானை மாமென முழங்கின சேனைகள் மகிழ்ந்த. (5)

2504 **ஆரவாரங்கள்**

போரி னுக்குறு முரசங்கள் எங்கணும் பொங்கிக்
காரி னுக்குறும் ஒலியென முழங்கவும் கடுத்துப்
பாரி னுக்குறு படுசுமை படிதரும் வெற்றி
யாரி னுக்குறு மோஎன அறைந்தனர் அயலோர். (6)

2505 **வாசிகள் வாவின.**

வாள்கள் மின்னிட வாசிகள் தாவிட வெடிகள்
தோள்கள் மின்னிடச் சுடரயில் ஒளிவிடத் தொடர்ந்து
தாள்கள் மன்னிய சமர்தரு நடையொடு சார்ந்து
கோள்கள் முன்னிய கொடுமையி னணிகொடு கூர்ந்தார்.

2506 **விரைந்து வந்தனர்.**

சமரி னுக்குயர் நடைகொடு சதுருடன் தொடர்ந்து
நமரி னுக்குயர் வென்றியைச் சமைத்திட விரும்பி
அமரு ளத்தின ராயடல் அருந்திறல் ஆர்ந்து
மமர வேஇயிற் பரந்தனர் விரைந்தனர் பறந்தே. (8)

2507 **இடையே தங்கினர்.**

இன்ன சீருடன் சேனைகள் எழுந்தன இகல்மேல்;
கன்னல் ஐந்தினில் காவதம் நான்கையும் கடந்து
மன்னு பாஞ்சையம் பதிஅயல் *குலையமா நல்லூர்
என்னும் அவ்விடம் பாளையம் இறங்கியது இனிதே. (9)

2508 **கூடாரங்கள் கொண்டனர்.**

பந்தி பந்தியாய் வீரர்கள் தங்கினர்; பரிகள்
சிந்து மேவிய திரைஎன நின்றன; தலைவர்
சந்த மாய்ப்பட மாடங்கள் சமைத்துளே சார்ந்தார்;
வந்த போருற வழிவந்த பேரிளைப் போய்ந்தார். (10)

2509 **உண்டு உறைந்தனர்.**

உண்டு வந்தபின் ஒருமுக மாயிளைப் பாறிக்
கொண்ட மர்ந்துள பொழுதினில் கூட்டமாய்த் திரண்டு
மண்டு பாஞ்சையம் பதிநின்று மனம்கொதித் தெழுந்த
தண்டு வந்திந்தத் தானையை வளைந்துகொண் டதுவே. (11)

2510 **பாஞ்சைவீரர் பாய்ந்தனர்.**

என்று வெம்படை வரும்வரும் என்றெதிர் நோக்கிக்
கன்று சிந்தைய ராய்நின்ற கனைகழல் வீரர்
அன்று வந்ததை அறிந்ததும் அடல்வெறி ஏறித்
துன்றி இங்ஙனம் வந்தனர் துள்ளிமுன் துடித்தே. (12)

2511 **உருத்து வளைத்தனர்.**

கோட்டை வந்தவர் கூடுமுன் நாம்குதித் தேறி
வேட்டை ஆடுவம் என்றிவர் விரையவும், வேந்தன்
நாட்டம் நல்லதே நாடிய படிசெய்மின்! என்ரூன்;
ஓட்ட மாய்வந்து பாட்டையில் வளைத்தனர் உருத்தே.

---

* **குலையநல்லூர்** என்பது பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு மேற்கே நான்குகல் தூரத்தில் உள்ளது. அந்தச் சிற்றூர் அருகே சேனைகள் தங்கின. கூடாரங்கள் அமைத்து யாவரும் உணவுகள் அருந்தி இளைப்பாற நேர்ந்தனர்.

2512 **சமர் புரிந்தனர்.**

அஞ்சு நூற்றிரு நூறுபேர் அருந்திற லாளர்;
இஞ்சி மத்தங்கள் கக்குசெங் கண்ணினர்; தெழித்து
வஞ்சி மத்தங்கொள் வாள்வெடி வேல்கனை ஏந்திப்
பெஞ்சி மத்தங்கள் உண்டிடப் பெருஞ்சமர் புரிந்தார். (14)

2513 **சாவுகள் சார்ந்தன.**

கால பக்கமும் தியுற நடுவுறு வைக்கோல்
சாலும் போரெனத் தானைகள் தட்டழிந் தன்று
சாலும் கைகளும் தலைகளும் கண்டங் களாகி
மேலும் பாய்கின்ற குருதிநீர் வெள்ளத்தில் மிதந்த. (15)

2514 **பழிக்குப் பழி.**

ஏங்கள் வேந்தனை இடையினில் வஞ்சமாய்ப் பிடித்து
வெங்கொ லைசெய்த வெம்பழிக் கின்றுநாம் நேரே
ஊங்கள் வெண்தலை பலபல உருட்டிட வந்தோம்;
ஓங்கு மக்கினி இடமிலை படுமென இடித்தார். (16)

2515 **வீரர்கள் ஏறினர்.**

சிங்க மாவலி ரணசிங்கன் தேசிங்கன் சிறுமல்
கங்கன் நாகணன் செல்லையன் நாகையன் நம்பி
வன்னை வாலயன் சின்னபொம் மிரசின்னு வரதன்
என்ன வீரவெங் தலைவர்கள் ஏறிமுன் பொருதார். (17)

2516 **கருதலர் கலங்கினர்.**

அரியி னங்கள்போல் அடர்ந்துபாய்ந் தமரிவர் புரியக்
கரியி னங்கள்போல் நின்றவர் கலங்கினர்; தலைவன்
விரைய முந்தியே பீரங்கிக் குண்டிட்டுச் சுடுமாறு
உரைக டாவினன்; உறுதிகொண் டெழுந்தனர் உடனே.

2517 **வெடிகள் வெடித்தன.**

சேனை காவலர் செருமுனைந் தொருமுக மாக
மான மீதுற மண்டிய பீரங்கி வடித்தார்;
வான மாமுக டுடைபட வெடிகளும் வகுத்தார்;
ஊனை வீரர்கள் நிலைகுலைந் தெதிரெதிர் இறந்தார். (19)

2518 **வென்று போயினர்.**

உண்டி ருந்தஅப் படையினை உருத்துடன் வளைத்துக்
கொண்டு கொன்றவர் கொலைசில விழுந்திடக் கொதித்து
மண்டி யுட்புகுந்து ஆருயிர் பலபல மாய்த்தார்
தண்டு டைந்திடத் தாவியே அவரயல் போனர். (20)

2519 **வெள்ளத் தலைவன் வெகுண்டான்.**

இந்த வீரருள் எண்பத்து நான்குபேர் இறந்தும்
சிந்தை யூடுயர் வென்றியின் களிப்பினில் செருக்கி
முந்து பாஞ்சையுட் புகுந்தமர்ந் திருந்தனர்; முன்னே
வந்த சேனையின் மன்னவன் மனமிகக் கொதித்தான்(21)

2520 **உள்ளம் புகைந்தான்.**

எழுந்து வந்தஎன் படையினை இடைமறித் திங்ஙன்
விழுந்த டித்தனர் வெங்கொலை பலபுரிந் தகன்றார்;
ஒழிந்து போனவர் போகஇங் குள்ளவர் உடன்போய்
பொழிந்து குண்டுகள் பொருதழிப் பேன்எனப் புகைந்தான்.

2521 **போர்மேல் எழுந்தான்.**

அங்கி ராவிடை அமர்ந்தவன் ஆயத்தம் செய்து
தங்கி நின்றனன் சமரினில் தவித்துமுன் இறந்து
மங்கி னர்தமை மண்ணிடை மதிப்புடன் புதைத்துப்
பொங்கி வீறுடன் போரினை நினைந்துமேல் எழுந்தான்.

2522 **பாஞ்சையைக் கண்டான்.**

பட்டு ளைந்ததன் படைகளைப் பாடுசெய் தெழுப்பிக்
கட்டி ஏகினன் கடிநகர்ப் பாஞ்சையைக் கண்டான்;
தட்டி நீக்கிய கோட்டையின் தடமதிள் மீள
ஓட்டி ஓங்கிய நிலையினை ஓர்ந்துளம் திகைத்தான். (24)

2523 **பதறி நின்றான்.**

கோட்டை மாமதில் ஒழிந்தன குண்டுகள் இட்டு
வேட்டை ஆடியே விரைவினில் பிடிக்கலாம் என்று
நாட்ட மோடவண் நண்ணினன்; நாட்டிய மதிலின்
மீட்டம்நோக்கினன்;நெஞ்சிடை நெடுந்திகில்கொண்டான்.

2524 **பயந்து திகைத்தான்.**

காலை * ஒன்பது நாழிகை அளவினில் கலந்தான்;
கோலை கோகக்கிய மன்னவன் கோட்டையை நோக்கி
வேலை என்னோயீ தென்றுளம் நினைந்தனன் வியந்தான்;
மேலை என்னைநாம் செய்வதென் றின்னலோ டினைந்தான்.

2525 **அரணை வியந்தான்.**

அனல் மாதபேர் அடர்ந்துநின் று ஆண்டுகள் பலவா
அனை மைத்துநின் று ஆற்றினும் ஆற்றுதல் அமையா;
அனை மைந்தசில் பகலிடை அரண்நிலை இவ்வாறு
அனைமைத்தனன் யாரிவன் அளவினை அளப்பார்? (27)

2526 **அதிசயம் அடைந்தான்.**

மாய மோவன்றி மற்றிவன் வலியினுக் கஞ்சிப்
போயி னங்களே பேணிநின் றியற்றிய வேகொல்?
ஆயின் உண்மையென் றறிந்திலை னேனென அகத்தில்
ஏய வேபல பலநினைந் திகலொடும் இனைந்தான். (28)

2527 **பார்த்துப் பதைத்தான்.**

கொத்த ளங்களும் கோட்டையும் கொடிமதில் நிலையும்
கத்தி வல்லயம் வேல்வெடி கரங்களில் ஏந்தி
யுத்த சன்னத்த ராயுயர் வீரர்கள் ஊக்கிப்
பத்தி யாய்நிற்கும் நிலையையும் பார்த்துளம்
பதைத்தான். (29)

2528 **ஆய்ந்து சூழ்ந்தான்.**

அடுத்து நின்றதன் துணைப்படைத்தலைவரோடாய்ந்தான்
கடுத்து வந்தனம் கருதிய படியிங்குக் காணும்;
எடுத்தகோட்டையீண் டெழுந்துளநிலைமையும்இகலோர்
தொடுத்து நிற்கின்ற துணிவையும்சூழ்ந்துநீர்காண்மின்!

---

* 9-2-1801 காலை 9 மணிக்குப் படைகளோடு வந்து சேர்ந்த சேனைத்தலைவன் பாஞ்சைக் கோட்டையின் பான்மையை நோக்கினன்; உள்ளம் கவன்று உளைந்து நின்றான்.

2529 **இனிச்செய்வது என்னே !**

கோட்டை போயது குமரர்கள் சிறையிடைக் கிடந்து
வாட்டம் மீறியே வல்விரைந் தேகினர்; என்னை
ஓட்ட மாகவந் துடன்பிடித் திடநினைந் துற்றோரும்
ஈட்டம் வேறதா யுள்ளதே! இனிச்செய்வ தென்னே! (31)

2530 **தெளிந்து சொன்னன்.**

இன்று போரினை இயற்றிட இப்படை போதாது;
ஒன்றி யூக்கிநாம் உடற்றின மாயினே, ஒருங்கே
பொன்றி வீழுவோம்; பொருதொழில் ஒழிந்துடன் மீண்டு
சென்று தீர்தலே நலமெனத் தெளிவுடன் சொன்னன் (32)

2531 **வெருவி அமர்ந்தார்.**

கேட்ட யாவரும் நன்றென இசைந்தனர்; கிளர்ந்து
மீட்டச் சேனையை விரகுடன் எழுப்பிட விரைந்தார்;
ஓட்டம் காட்டினே ஒன்னலர் வஞ்சத்துடன் உருத்து
வேட்டம் கொள்ளுவர் எனவுளம் வெருவினர் அமர்ந்தார்.

2532 **திகில் மிகுந்தார்.**

பொங்கி மூண்டுநேர் பொருதிடப் புகுந்தவர் போலத்
தங்கு பாசறை சதுருடன் சமைத்தனர்; படைகள்
எங்கும் தோற்றவே இருத்தினர் இனத்துடன் விழித்துச்
சிங்க சொப்பன மாகவே திகில் மிகுந் திருந்தார், (34)

2533 **மீள நினைந்தார்.**

உள்ளம் அஞ்சியும் புறத்தினில் உரமுடை யார்போல்
கள்ள மாகவே கலந்தவர் இருந்தனர் கரந்து
மெள்ள வேசெலும் வகையையும் வழியையும் விரைந்து
கொள்ள வேயவர் குறிப்புடன் கூர்ந்தனர் ஓர்ந்தே. (35)

2534 **பாஞ்சையர் துணிந்தார்.**

அண்ட கோளகை பிதிர்ந்திட அதிர்வெடி யிட்டுச்
சண்டை செய்திட வந்தவர் சமரினை அஞ்சிக்
கொண்டி ருக்கின்ற கோலத்தைக் கூர்ந்துண ராமல்
மண்டி மேல்வரு வாரென இவர்மதித் திருந்தார். (36)

2535 மூண்டு நின்றார்.

வெடிகள் மீட்டியே மேவலர் விரைந்துமுன் வெகுண்டு
கடிய கோட்டையை நெருங்கிவன் பரிகளைக் கடாவிக்
கொடிய போரினை ஆற்றுவர் கூற்றெனக் கொதித்தே
முடிய நூறிட வேண்டும்என் றீண்டவர் மூண்டார். (37)

2536 அமரை அவாவினர்.

வீரர் யாவரும் வீறுடன் விளைசெய விரைந்து
போர யானைடன் பொருபடைக் கலன்களைப் பொருந்தி
ஏர மைந்தொளிர் நகர்மருங் கெங்கணும் எதிர்ந்தே
ஆர மின்றனர் ஆறுறும் ஆயிரர் ஆர்ந்தே. (38)

2537 வந்தவர் தோர்ந்தார்.

மின்ற வீரர்கள் நிலைமையும் தலைமையும் நோக்கிப்
பின்ற நேர்ந்தவ ராமெனப் புறம்பொதிந் திருந்தார்;
துன்ற காமினி இவ்விடம் தாமதி யாமல்
சென்ற நீர்வதே நன்றெனச் சேர்ந்தவர் தேர்ந்தார். (39)

2538 வருவதை ஓர்ந்தார்.

துவ வந்ததேல் எதிரிகள் நம்மிடை ஏறிப்
பாய நின்றபல் படைகளால் பாழ்பட அழித்து
விசையி லேயவர் வென்றியை வீறுடன் பெற்றுக்
கயி லேநமைக் கட்டழித் தோம்எனக் களிப்பார். (40)

2539 மாளவே நேர்வோம்.

மூண்டு போர்செய வந்தநாம் முனைந்தமர் துறந்து
மீண்டு போவதை அன்னவர் அறியிலே மிகவும்
நீண்ட கேலியாய் நெடுஞ்செருக் குடன்வந்து நம்மை
மாண்டு போகவே மாட்டுவர்; மாளவே நேர்வோம். (41)

2540 கரவுவழி கருதினர்.

தொற்றி நின்றநம் தோல்வியைச் சூழ்ச்சியாச் சூழ்ந்து
வெற்றி யாகவே விரகுடன் செய்திடல் வேண்டும்;
எற்றும் பற்றலர் ஏதுமே தெரிகிலா வகையில்
ஒற்றி நின்றுநாம் ஒருவலே உரமென ஓர்ந்தார். (42)

2541 பாவனை படிந்தார்.

நேர்ந்து போர்செய மூண்டவர் போலவே நீண்டு
பேர்ந்து போகவே எண்ணினர்; ஆயினும் பேர்தல்
கூர்ந்து பாஞ்சையர் ஓர்ந்திடா வகைசெயக் குறித்துச்
சார்ந்த மர்க்கணி செய்பவர் போல்படை சமைத்தார்(43)

2542 பரிகளை நிறுத்தினர்.

பரிகள் யாவையும் பின்னுற நிறுத்தினர்; பக்கம்
தெரிய லாவகை திரைகளைச் செய்தனர்; தேர்ந்த
பெரிய வான்படைத் தலைவர்கள் வெடிகளைப் பிடித்தே
அரிய வாமணி யார்க்குதல் போலுரை யார்த்தார். (44)

2543 கள்ளமே புரிந்தார்.

உள்ளி ருந்தவப் படைகளை ஒருங்குபின் வாங்கிக்
கள்ள மாகவே கடுத்துடன் நடத்தினர்; கடந்து
மெள்ள நீங்கவே வீரராய் நின்றவர் விரகாய்த்
துள்ளி ஏகினர்; கால்நடை காட்டியே தொடர்ந்தார்.(45)

2544 இவர் ஏமாந்து நின்றார்.

படைவ குக்கின்றார்; பரிகளைப் பணிசெய வூக்கி
நடைவ குக்கின்றார்; பீரங்கி நாட்டிமேல் நிறுத்திப்
புடைவ குக்கின்றார்;பொருபடைத் தலைவர்கள்பொருந்தி
இடைவ குக்கின்றார்; இனிஎதிர்ந் தேறுவார் என்றே:(46)

2545 அவர் போவதை அறிந்தார்.

அடர்ந்து நின்றுபோ ராவலோ டணிநகர் அயலே
தொடர்ந்து நின்றவிம் மன்னவன் படைஞர்கள் துன்னர்
கடந்து போங்குறி கண்டனர்; காணவே கடுத்துப்
படர்ந்து பின்தொடர்ந் தடுசமர் புரிந்திடப் பறந்தார்(47)

2546 சீறி விரைந்தார்

ஓடிப் போகின்ற உளவினை யுணர்ந்ததும் வீரர்
கூடி நாடினர் குதித்தெழுந் தார்த்துடன் கொதித்துப்
பேடிப் போரர்என் றிகழ்ந்துபின் தொடர்ந்துபோய்ப்பிடித்து
வீடிப் போகவே வீறுடன் சீறினர் விரைந்து. (48)

2547 **எதிரே பாய்ந்தார்**

என்று கன்று நும் போர்முறை என்றுமுன் நக்குக்
கொன்றி மத்தங்கள் குடித்திடக் குதித்துநாம் வந்தோம்;
இன்று போர்செய்து நேர்வதை நேர்ந்தின்று காண்மின்!
என்று வேல்களை நீட்டியே எதிரெதிர் பாயந்தார். (49)

2548 **போரில் மூண்டார்.**

தென்று முன்னிவர் பாயவே முனைந்துமே லேறி
மின்று போகவே வழியின்றி அவர்மிக வெருண்டு
தான்று வெம்பரி யூக்கியே சமர்மிகச் செய்தார்;
மான்று வீழ்ந்தனர் பலர்பலர் மண்ணிடை மறிந்தே. (50)

2549 **கொலைகள் குவிந்தன.**

தலையி முந்தனர் தாள்களை யிழந்தனர் சாரி
யிலையி முந்தனர் நெட்டுடல் இழந்தனர் நெடுந்தோள்
மலையி முந்தனர் மார்புகை யிழந்தனர் மருண்டு
கொலையு முந்தவர் பட்டதை யாவரே குறிப்பார்? (51)

2550 **கடுத்துக் கலக்கினர்.**

நட்ட முரிந்தவர் தாவிமுன் ஓடினும் தடுத்து
வெட்டி வீழ்த்தினர் வெற்றுடல் துடித்தன நேரே
மொட்டி னின்றவர் உயிரெலாம் ஒருங்குலைந் தொழிந்தார்
கட்டி யெனியக் களமெலாம் கலக்கினர் கடுத்தே. (52)

2551 **வெள்ளையர் சுட்டனர்**

படைகள் பட்டழி பாட்டினைத் தலைவர்கள் பார்த்தார்;
புடை பொ ளித்துயர் வெடிகளைப் பொருமுகம் பொழிந்தார்;
அடைய நின்றவர் சூட்டினுல் அழியினும் அயலோர்
தடையி லாதுபோய்த் தனித்தனி தலைகளைத் துமித்தார்.

2552 **இருவகையிலும் இறந்தனர்.**

இருதி றத்திலும் கொலைபல விழுந்தன; எங்கும்
குருதி நத்திவெங் கொழுநிணம் குழைபடு சேரூப்
பெருகி நின்றது; பிணப்பெருங் குவியல்கள் பிறங்கி
யுருகெ லாந்தெரி யாவகை அடர்ந்துமேல் வளர்ந்த. (54)

2553 அழிவு நீலை.

தொட்ட வெவ்வெடி தொடுத்திடு முன்கடுத் தோடி
வெட்டி வீழ்த்திட விளிந்தனர் சிலர்சிலர் வேலால்
ஒட்டி யோச்சிட ஒழிந்தனர் சிலர் சிலர் மழுவால்
முட்டி எற்றிட முடிந்தனர் சிலர்முரிந் தொழிந்தார். (55)

2554 பெயர்ந்து போனர்.

மன்னன் போர்ப்படை மண்டிமேற் பொருதிட மறுகி
இன்ன லோடிகல் எதிர்ந்தவர் பரிந்தனர் இரிந்தார்;
முன்னர் வந்தஅத் தலைவரில் இருவர்கள் முடிந்தார்;
பின்னர் நின்றவர் பெருந்திகி லுடன்பிரிந் தொழிந்தார்.

2555 மறுகி ஒழிந்தார்.

தானை வேந்தனும் தருக்கினை இழந்துதத் தளித்து
மான மீதுற வுளபரி மீதினில் இவர்ந்தே
ஏனை யோர்களை யாதுமே யிகழ்ந்திடா தினைந்து
மோன மோடுடன் போயினன் முன்னுற முனைந்தே.(57)

2556 கெலித்து மீண்டது.

போருடைந்து புறங்கொடுத்துப் படைவீரர்
போம்பொழுது புறத்தே இந்த
வீரரும்பின் தொடர்ந்தேதறி வெய்யபடைக்
கலன்களுடன் வெடிக ளாதி
சாரவந்த யாவையுமே சமராடிச்
சதுராகப் பறித்துக் கொண்டு
கோரமுடன் கொக்கரித்துக் குலவையிட்டுக்
கொண்டாடிக் குதித்து வந்தார். (58)

2557 பறித்து வந்தது.

கைவெடிகள் முந்நூறு கடும்பரிகள்
பன்னிரண்டு காவ லோடே
எய்வகையாய்க் கொண்டுவந்த பீரங்கி
யிரண்டிவற்றோ டினமா யன்னர்
மெய்யணிந்து வந்திருந்த அணியாடை
வியன்பொருள்கள் விரைந்து வவ்வி
செய்யமணி மாடமுயர் செழும்பதியை
அடைந்து மன்முன் சேர வைத்தார். (59)

2558 **மறித்து வென்றது.**

கொத்தாள முத்தென்னும் கொண்டையங்கோட்
டைமறவன் கொதித்துப் பாய்ந்தே
எத்தாலும் வெலற்கரியான் எனநின்ற
தலைவனுடன் எதிர்ந்து நான்தான்
செத்தாலும் உன்னேவிடேன் என்றுசினந்
தவனுயிரைத் தின்றன் ஞன்கை
வைத்தாடல் புரிந்திருந்த வாள்வெடியை
முன்வைத்து வணங்கி நின்ருன்; (60)

2559 **பரிசுகள் வழங்கியது.**

அன்னவன்றன் அருவலியும் அயல்வீரர்
அடுதிறலும் ஆர்வத் தோடு
மன்னன்முறை முறைநோக்கி மனமகிழ்ந்து
மிகப்புகழ்ந்து வரிசை யாகப்
பொன்னணியும் மணியணியும் புகழ்க்குரிய
பெருந்தகவும் பொருந்தத் தந்தான்;
இன்னகுல மன்னனதெம் இன்னுயிரென்
றவரெவரும் எத்தி நின்ருர். (61)

2560 **போரில் மாண்டவர்.**

இச்சமரில் எதிரிகளுள் இறந்தவர்கட்
கெல்லேதெரி கில்லே; இந்தக்
கைச்சமர வீரருள்ளே நூற்றைறந்து
பேர்மாண்டார்; கண்ட வெற்றி
உச்சநிலே யடைந்ததனுல் ஒழிந்தவரை
ஒருபொருளா வுள்ளா தூக்கி
எச்சமையம் இனிப்போர்வந் தெய்துமென
எதிர்நோக்கி யிணைந் திருந்தார். (62)

2561 **போனவர் போக்கு.**

இவ்வாறு பெருங்களிப்போ டிங்கிவர்கள்
அமர்ந்திருக்க எதிர்ந் துடைந்தார்
செவ்வாறு குருதியுறத் திகிலடைந்து
திரண்டோடிப் பொருதை என்னும்

அவ்வாறு கடந்துமரு தூரயலே
சிறிதாறி யமர்ந்தார்; பின்னர்
எவ்வாறு நடந்துபோய் என்செய்தார்?
என்பதைநாம் இனிமேல் சொல்வாம். (63)

2562 நெஞ்சத் திகில்.

இரவெல்லாம் பரிபவமாய் வழியெங்கும்
விழிபரப்பி எதிரி ஏன்று
கரவொன்றி வருகின்ற சேனைகளைக்
கட்டழிக்கக் கருதிக் காட்டுள்
நிரலொன்றும் தெரியாமல் நிலைத்திருக்கச்
செய்வனென நினைந்து நெஞ்சம்
அரவொன்று தேரைஎன அஞ்சியஞ்சி
அவர்நகரை அடைய லானர். (64)

2563 நிகழ்ச்சி நிலை.

நெல்லைதனை நேரடைந்து நேர்ந்தகொடும்
போரில்நிலை குலைந்த தெண்ணி

---

64 நீண்ட சேனைகளுடன் மூண்டு போராட வந்த வெள்ளையர் பாஞ்சைக் கோட்டையின் வலிநிலையைக் கண்டதும் அஞ்சி மீண்டனர். கரவாய் அவர் மீண்டு போவதை அறிந்ததும் பாஞ்சைவீரர் பின்தொடர்ந்து அடர்ந்து பொருதனர். அந்தப் போரில் இருதரப்பிலும் பலர் மாண்டனர். மீண்டு போன கும்பினிப்படை இரவு முழுவதும் பரிந்து பயந்து விரைந்து நடந்து பாளையங்கோட்டையை அடைந்தது. அஞ்சி மீண்ட சேனத் தலைவர்கள் தம் படைகளுடன் அன்று இரவு நடந்து போன நிலைமையைக் குறித்து எழுதி வைத்துள்ள ஆங்கிலக் குறிப்பு ஈங்கு அறியவுரியது.

"Severe march, which lasted all night, by imagination which placed an enemy behind every bush on the road. We safely reached Palamcottah at nine o'clock A. M. on the 10th."

"இரவு முழுவதும் கடினமான பயணம்; வழியிடையே ஒவ்வொரு புதரிலும் பகைவர் பதுங்கி யிருப்பரோ? என்று பயந்தே வந்தோம். 10-ந்தேதி காலை 9 மணிக்குப் பாளையங்கோட்டையை அடைந்தோம்."

நேர்ந்துள்ள நிலைமைகளை இந்தக் குறிப்பால் கூர்ந்து உணர்ந்து ஓர்ந்து தேர்ந்து தெளிந்து கொள்கின்றோம்.

அல்லலுடன் அகநாணி யாவருமே
அயர்ந்திருந்தார்; அடுத்த நாளில்
வல்லவல் சிங்கன்வந்து வன்சமரின்
வகைவினவ வயமக் காளி
மெல்லவங்கு நிகழ்ந்தவெலாம் விவரமா
விசனமுடன் விளம்ப லானன். (65)

2564 படைத்தலைவன் பகர்ந்தது.

சென்றபடை கலையிடையே வழிமறுத்துச்
சீரழித்தார்; சேர்ந்து பாஞ்சை
நின்றநிலை தனைநோக்கி நேர்ந்தபடை
போதாதென் றேர்ந்து மீண்டு
சென்றடையத் துணிந்துமிக விரகாகத்
திரும்பிமேல்: தெரிந்து சீறி
ஒன்றிவந்தம் மன்படைஞர் கொன்றுழக்க
உயிர்பிழைத்திங் கோடி வந்தோம். (66)

2565 அரண் நிலை.

தரையோடு தரையாகத் தட்டிவிட்ட
கோட்டையைவான் தட்டக் கட்டிக்
கரையோடு பொருகடல்போல் கடும்பரியும்
காலாளும் கணக்கி லாமல்
நிரையோடு நிறைத்துவைத்து நெடுந்தோளின்
தினவோடு தினமும் நேரே
வரையாமல் வருபோரை வழிநோக்கி
மன்னனுள்ளான் வன்மை என்னே! (67)

2566 முரண் அழிந்தது.

பன்னிரண்டு கெடித்தலங்கள் பிடித்துள்ளேன்
பலபோரில் பாய்ந்து வென்றேன்
என்னுடைய மனவலியும் எறுழ்வலியும்
இகல்வலியும் இழந்தே னம்மா!
பன்னரிய திறலுடைய பாஞ்சைநகர்
தனில்நேர்ந்து பட்ட தேபோல்
முன்னறியேன் பின்னறியேன் முடிவறியேன்
எனமொழிந்து மூச்செ றிந்தான். (68)

2567 எதிரியின் இயல்பு.

குண்டிட்ட பீரங்கி கஜமதியான்;
கொற்றவாள் வெடிவேல் என்னும்
தண்டிட்ட படைக்கலன்கள் எதையுமே
பொருளாகத் தானுட் கொள்ளான்;
வண்டிட்ட மதுமலர்த்தார் மன்னனிவன்
மனநிலையும் மரபின் போரும்
கண்டிட்டுக் கதிகலங்கிக் கைவிட்டுக்
கால்விட்டுக் கருத்தும் விட்டேன். (69)

2568 அதிசய ஆற்றல்.

அச்சமென்ப தின்னதென அறிகிலான்;
அடலாண்மை யுடையான்; முன்னே
வைச்சகால் பின்வாங்கா வல்வீரக்
குலமன்னன் மதிப்பும் மாண்பும்
உச்சநிலை யுடையனைய் உயர்ந்திருந்த
முன்னவனை முன்னம் கொன்ற
கொச்சைவினைக் கெதிர்க்கொலைகள் பலசெய்யக்
குறித்துள்ளே கொதித்துள் ளானே! (70)

2569 நேர்ந்ததற்கு இரங்கல்.

இன்னவனே டிகலாடி ஏன்று பொரல்
இடராகும் இளிவு செய்து
முன்னிவனைத் தமரோடு சிறையிலிட்டு
மூடிவைத்து மூண்ட கோபம்
தன்னைமிக வளர்த்து விட்டீர்! தகவறிந்து
தரமறிந்து சமையம் நோக்கி
நன்னயங்கள் செய்தரசை நல்கியிருந்
தால்மிகவு நலமா மன்றே. (71)

2570 நிலைமையை உணர்தல்.

காலமிடம் அறியாமல் கடும்பகையை
மிகமூட்டிக் கலகம் கொண்டால்
ஞாலநமை என்சொல்லும்? நான்கண்ட
அரசர்களுள் பாஞ்சை வேந்தன்

சாலநல முடையான்மெய்த் தறுகண்மை
மிகவுடையான் தணிந்து போகும்
கோலமொன்றும் அறியாதான் எனக்கேட்டேன்
கொடுமையாய் மாய்த்தோம் அன்றே. (72)

2571 உறவை நினைந்தது.

முந்துநமர் தம்மோடு முதிர்நண்பு
பூண்டிருந்தான்; மூண்டு நேரே
வந்துசங்க மன்னரிடம் வரிசைபல
பெற்றகன்றான்; மதியி லாத
மந்திரியால் வந்தகொடு வல்லிழவுக்
கென்செயலாம்? மாபி னோரை
நிந்தைசெயா தருளிநீர் விடுத்திருந்தால்
இன்றுறவாய் நிற்ப ரன்றே. (73)

2572 பரிவு கூர்ந்தது.

போனதைநாம் இனிப்பேசல் புன்மையாம்
பொருபடைகள் பொங்கி னன்றி
வானமுறு வளஞ்சிறந்த பாஞ்சையினை
நாமடைய வாயா தென்று
சேனையதி பதியுரைக்கத் தேச அதி
பதிநிகைத்துச் செய்வது ஓர்ந்தான்;
ஆனபொழு தெட்டப்பன் அவசரமாய்
அங்கவரை அடைந்தா னம்மா! (74)

2573 கோளன் கூடியது.

உள்ளாளாய் அமைந்துளவவ் வுறவோனைக்
கண்டவுடன் உவந்து கொண்டு
தள்ளாத தனியிடத்தே தனியாக
இனிதமர்ந்து சார்ந்தா ராய்ந்தே
எள்ளாத பெரும்படைகள் வரும்படிமேல்
எழுதிவிடுத் திருந்தான்; பின்னே
வெள்ளமெனப் பலசேனை வெளியெங்கும்
இருந்தங்கே விரைந்தவன்றே. (75)

2574 சேனைகள் திரண்டது

பங்குனிக்கு முன்னிருந்தே பதினைந்தாம்
தேதிவரை பலவி டத்தும்

தங்கிநின்ற படைகளெல்லாம் தனித்தனியே
திரண்டெழுந்து சாத்தூர் மார்க்கம்
பொங்குகடல் எனவந்து கயத்தாற்றில்
பொருந்திநின்ற; பொருவீரத்தில்
எங்குமிசை பெற்றவெள்ளைத் தலைவர்பலர்
திரண்டதிலே இசைந்திருந்தார். (76)

2575 சீமையர் எண்ணியது.

அடலாண்மை மிகுந்துள்ள பாஞ்சாலங்
குறிச்சியினை அடக்கின் அன்றிக்
கடலாண்மை புரிந்தெங்கும் கருதுபொருள்
கைக்கொண்டு கனமாய் நீண்டு
மிடலாண்மை யுடனிந்த இந்தியா
முழுவதையும் மேவியுள்ள
திடலாண்மை யாவுமே சிதைந்திழிய
நேருமெனத் தெளிந்திருந்தார். (77)

2376 ஊக்கி நின்றது.

எப்படியும் பாஞ்சையினை எதிர்பொருது
கைப்பற்றி இறையா யங்கே
செப்பரிய திறலோடு செருக்கியுள்ள
ஊமையனைச் சிறைசெய் தேகி
இப்பெரிய நாடெங்கும் இங்கிலாந்
தாட்சியினை இசைய நாட்டி
ஒப்பரிய வலியினர்என் பதைக்காட்ட
வெள்ளையர்கள் ஊக்கி நின்றார். (78)

2577 ஊமைத்துரை புரிந்தது.

இங்கிவர்கள் இவ்வாறு படைதிரட்டிப்
பீரங்கி வெடிக ளாதி
வெங்கொடிய படைக்கலன்கள் மிகத்தொகுத்து
காலநிலை விழைந்து நோக்கித்
திங்களிடை கழிந்திருந்தார்; அவ்வமையம்
இம்மன்னன் சேனை தன்னைப்
பொங்குவள மிகுதூத்துக் குடியிலுய்த்துப்
பொருந்தலர்மேல் பொருதச் செய்தான்.

25-வது படலம் முற்றிற்று.

இருபத்தாறுவது

நளபதியைத் தளையிட்ட படலம்.

[illegible] களோடு பாஞ்சைமேல் போராட மூண்டு வந்த [illegible]சேனைத்தலைவன் கோட்டையின் நிலையையும் பாஞ்சைவீரர் திறமையும் நோக்கி அஞ்சி மீண்டு சேனைகளோடு அகன்று போயினன். போனவன் கும்பினி அதிபதிகளோடு கூடி ஆராய்ந்து பெரிய படைகளைத் திரட்டிப் போருக்கு உரிய சமயம் கருதி யிருந்தான். அங்கே அவன் அவ்வாறிருக்க இங்கே ஊமைத்துரை முன்பு இழந்திருந்த உரிமைகளை எல்லாம் கும்பினியாரிடமிருந்து மீளவும் கவர்ந்து கொண்டார். முடிவில் தூத்துக்குடியைக் கைப்பற்றும்படி ஒரு சேனையை அனுப்பினர். **வீரபராக்கிரம பாண்டியன்** என்பவன் தலைமைத் தளபதியாய் நின்று அந்தப் படைகளை நடத்திச் சென்றனன். அங்கே கும்பினிக் கோட்டையை வளைந்தனர்; வெள்ளைத் தலைவர்களைச் சிறைப்படுத்தி மீன் படகுகளில் ஏற்றிச் சீமைக்குப் போகும்படி விரட்டி விட்டனர். எல்லாருக்கும் தலைமை அதிகாரியாயிருந்த (Baggott) பங்கட் துரையைக் கைதியாக்கிப் பாஞ்சைக் கோட்டைக்குக் கொண்டு வந்து ஊமைத்துரை முன் நிறுத்தினர். அந்தச் சீமைத் துரையை அங்கே சிறையிலிடும்படி ஊமைத்துரை பணித்தார். அந்தச் சேனாதிபதியின் மனைவி வந்து ஊமைத்துரை யிடம் மறுகி வேண்டினள். வேண்டவே அவரைச் சிறை நீக்கி நிறையப் பொருளும் கொடுத்து இருவரையும் உபசரித்து இவர் அனுப்பியருளினர். அந்த அரிய வரலாறுகளையும், பெரிய நீர்மைகளையும் இதில் அறிய வருகின்றோம்.

வந்து வளைந்தனர்.

2578 மந்தி ரம்மெனும் மாநகர் நோக்கியே
தந்தி ரப்பெரும் தானைகள் சார்ந்தன
முந்தி மூண்டங்கே கும்பினிக் கோட்டையை
வந்து சூழ்ந்து வளைந்திட நேர்ந்தனர். (1)

---

1 **திருமந்திர நகரம்** எனத் தூத்துக்குடிக்கு ஒரு பெயர் அமைந்துள்ளது. அங்கே கும்பினியார் கோட்டை அமைத்து வணிக முறைகளை வளமாய் நடத்தி வந்தனர். ஆங்கில அதிபதி தலைமையாய் ஆங்கே பாங்கோடு அமர்ந்திருந்தான்.

கும்பினியின் கிளை.

2579 சங்க ஆட்சியைச் சார்ந்த கிளையதாய்
அங்கொர் கோட்டை அழகுற் றிருந்தது;
பொங்கு சேனைக ளோடுயர் போகன்முன்
தங்கி ஆள்வினை தாங்கி யிருந்தனன். (2)

சுங்க வரி

2580 கலத்தில் வந்த கரையில் பொருள்கட்கும்.
நிலத்தில் வந்த பொருள்கட்கும். நித்தலும்
வலத்த சுங்க வரிகளை வாங்கினன்;
பலத்த கோட்டைப் படையொ டிருந்தனன். (3)

வளமுடன் வாழ்ந்தனர்.

2581 அரிய பாஞ்சை நகரில் அமைந்தவப்
பெரிய கோட்டையைப் பேர்த்துமுன் தீர்த்தவர்
உரிய கோட்டைகள் கட்டி உறுபொருள்
வரிகள் ஈட்டி வளமுடன் வாழ்ந்தனர். (4)

சிந்தி ஓடினர்.

2582 வந்த வீரர் வளைந்ததும் சேனைகள்
சிந்தி யோடின; சேனைத் தலைவனுய்
முந்தி நின்றவன் தன்னை முனைந்துபோய்
தந்தி ரத்தொடு தாவிப் பிடித்தனர். (5)

பிடிபட்டவன் பேதுற்றது.

2583 பிடித்த போதவன் பேதுற் றயர்ந்தனன்;
அடுத்த சேனை அதிபதி யாயுடன்
மடுத்து நின்றவன் வாலயன் என்பவன்
தடுத்த வன்தனைத் தன்கையில் கொண்டனன். (6)

மாடு என மறுகினன்.

2584 இந்த நாட்டு மொழிகள் எதுவுமே
அந்த நாட்டவன் யாதும் அறிந்திலன்;
வந்து மாட்டிய வன்புலிச் சூழலில்
தந்த மாடெனத் தத்தளித் தேங்கினன். (7)

திகிலுடன் நின்ருன்.

2585 செத்தொ ழிந்தனம் இன்றுநாம் என்றவன்
சித்தம் கன்றித் திகிலுடன் நின்றனன்;
அத்தை நோக்கி அருள்புரிந் தின்னவர்
மெத்த வும்இத மாக விளம்பினர். (8)

பாஞ்சையர் தேற்றினர்.

2586 தோணி ஏற்றித் துறைமுகத் தின்றுநாம்
பாணி யாது விடுக்குவம்; பையவே
காணி யாகவுன் சீமையைக் காணலாம்;
வீணில் அஞ்சல்! எனக்கை விளக்கினர். (9)

நெஞ்சம் தெளிந்தான்.

2587 வாயி னல்சொலும் வார்த்தை அறிகிலான்;
பேயி னல்பிடி பட்டவன் போலவே
நோயு ழந்துளம் நொந்தவன் இன்னவர்
நேயம் காணவும் நெஞ்சம் தெளிந்தனன். (10)

ஐய! போவேன்.

2588 கையி னலிவர் காட்டிக் களறிய
சைகை கண்டு தலையை அசைத்தவன்
வெய்ய வேகமாய் மேல்திசை நோக்கியே
ஐய! போய்விடு வேன்என ஆட்டினன். (11)

படகில் ஏற்றினர்.

2589 ஓடி உன்னுடை ஊரை அடைந்தங்குக்
கூடி வாழ்கெனக் கொண்டு கடலிடை
நீடி நின்ற படகொன் றில் ஏற்றினர்;
கோடி வந்தனை செய்தவன் கும்பிட்டான். (12)

சீமைக்கு ஏகினன்.

2590 சென்னைசென் றுஎன் றன்சீமையைச்சேர்கின் றேறன்
இன்ன நன்றியை என்றும் மறந்திடேன்;
மன்ன நில்! என மாண்புடன் அன்னவன்
சன்னை செய்து சதுருடன் போயினன். (13)

அதிபதியைப் பற்றினர்.

2591 படையின் வேந்தைப் பரிந்து விடுத்தந்தக்
கொடையின் மாட்சியர் கூடி வருமுனே
தடையி லாதுயர் கோட்டையுட் சார்ந்தவண்
அடைய நின்ற அதிபனைப் பற்றினர். (14)

யாவும் அள்ளினர்.

2592 உள்ளி ருந்த வுயர்பொருள் யாவையும்
கொள்ளை கொண்டனர்; கூடிய சேனைமுன்
தள்ளிப் போன சமர்வெடி யாதிகள்
அள்ளி வாரினர் ஆர்த்தயல் ஏறினர். (15)

தளபதி தவித்தான்.

2593 போகன் தன்னைப் புடையில் பிணித்துடன்
வேக மாக விரைந்திவர் சென்றனர்;
சாக ஏகும் தனிவிலங் கென்னவே
போக நேர்ந்தனன் பொன்றினன் போலவே. (16)

பிடித்துப் போயினர்.

2594 சீமை வெள்ளையன் சேனைக ளோடுயர்
சாமி என்னத் தழைத்தங் கிருந்தனன்;
ளமை யன்படை வீரர் உருத்து வந்து
ஏமன் என்னப் பிடித்துடன் ஏகினர். (17)

ஆங்கிலேயன் அவதி.

2595 ஆங்கி லேயன் அரிய அதிபதி
ஈங்கு கும்பினிக் கேற்ற தளபதி
பாங்கி னெடுயர் பான்மையில் வாழ்ந்தவண்
ஏங்கி எய்தி இவர்வச மாயினன். (18)

மன்னன் முன்வந்து நின்றான்.

2596 என்ன மாயம் இதுவென யாவரும்
பன்னி நின்றனர்; பாஞ்சை நகரினை
அன்ன வீரர் அவனைக் கொணர்ந்துதம்
மன்னன் முன்னுய்த்து மாண்புடன் நின்றனர். (19)

கட்டை நீக்கு வித்தான்.

2597 நின்ற வெள்ளை யன்தன் னைநிருபனும்
ஒன்றி மெல்ல உவந்தெதிர் நோக்கினான்;
கன்றி யுள்ளவன் கட்டை அவிழ்த்திட
வென்றி வீரரை நோக்கி விதித்தனன். (20)

சிறையில் இட்டு வைத்தான்.

2598 ஏழு நாள்வரை வன்சிறை யிட்டுயர்
கூழை வார்த்துக் கொடுத்திடும்; அண்ணலைப்
பாழும் தூக்கினில் இட்ட பழிக்குநேர்
வீழும் போக்கில் இவனை விடும்! என்றான். (21)

எமன் வாய் உயிராய் இருந்தான்.

2599 ஊமைச் சிங்கம் உருத்துரை செய்யவும்
போமெ னத்தள்ளிப் போயினர் புன்சிறை
தாம டுத்திரு தாளிட்டு வந்தனர்;
ஏமன் வாயுயிர் என்ன இருந்தனன். (22)

அலமந்து நொந்தான்.

2600 சேனை வேந்தெனும் சீருடன் செவ்விய
போன கங்களை யுண்டு பொருந்திய
மான வீறுடன் வாழ்ந்தவன் மாறியே
ஈன மாக இருந்தங் குளைந்தனன். (23)

அரசி இரங்கினாள்.

2601 அந்த வெள்ளையன் அல்லல் உழந்தங்கே
பந்த முற்றுள பான்மையைப் பாஞ்சைமன்
சிந்தை யுற்றுள தேவி அறிந்துளம்
நொந்து நல்ல உணவுகள் நல்கினாள். (24)

அருள்புரிந்து உதவினாள்.

2602 தாய்மை அன்பு தழைத்த சவுந்தரம்
வாய்மை யொன்றி வசதிகள் செய்யவே
தீய நோக்கில் சினந்தவெஞ் சேவகர்
நேய நோக்கில் நிலவி யிருந்தனர். (25)

உள்ளம் உளைந்தாள்.

2603 பிள்ளை செய்த பிழையால் பெருகியே
வெள்ளை யர்பழி செய்தனர்; வீணிலே
உள்ள வெள்ளையர் யாவரும் துன்பமீக்
கொள்ள நேர்ந்தனர்; என்ன கொடுமையே! (26)

தாய்மை உள்ளம் தண்ணளி புரிந்தது.

2604 என்ன அந்தப் புரத்தில் இருந்தநம்
மன்னன் தேவி மறுகவும் மற்றவர்
இன்னல் ஏதும் சிறையில் இருப்பவற்
குன்ன நேர்ந்திலர்; ஓர்ந்திதம் செய்தனர். (27)

பாஞ்சையர் வாஞ்சையர்.

2605 பாஞ்சை மன்னன் மரபினர் யாவர்க்கும்
வாஞ்சை யானவர்; வன்பகை யாய்மண்டி
ஆஞ்சை யோங்கி அடல்களைச் செய்யவே
வாஞ்சை மாறினர் வன்மங்கள் மீறினர். (28)

வஞ்சின வெஞ்சிறை.

2606 வம்பு கூறி வருமங்கள் மீறியே
வெம்பு கும்பினி வெய்ய துயர்களை
நம்பி ஊமைக்கு நாடி வருதலால்
பம்பு வெஞ்சிறை பக்கட்டை வைத்தனன். (29)

வெள்ளையன் மனைவி வந்தது.

2607 இன்ன வண்ணம் இருஞ்சிறை யில்துரை
மன்னி நொந்து மறுகி இருக்கவே
அன்ன வன்மனை யாகிய மேரியாள்
இன்ன லோடிங் நகரினை எய்திளள். (30)

---

29 பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் சிறை வைத்துள்ள ஆங்கில அதிபதியின் பெயர் (Baggott) **பக்கட்.** அப்பொழுது அவனுக்கு வயது முப்பத்தெட்டு.

30 அந்த ஆங்கிலேயன் மனைவி பெயர் மேரி விலைலா. அவள் இன்ன லடைந்து பாஞ்சை நகர்க்கு ஏங்கி வந்தாள்.

அழுது தொழுதது.

2608 வந்து வேந்தை வணங்கியென் மங்கலம்
தந்து தண்ணருள் செய்! எனத் தாழ்ந்தவள்
எந்தை யே!என ஏங்கி அழுதனள்
மைந்தன் நோக்கி மனமுள் உருகினன். (31)

கண்டு இரங்கியது.

2609 தமிழ றிந்திலள்; ஆயினும் தன்மொழி
அமிழ்தம் என்ன மிழற்றி அழுதுகண்
குமிழி யோடக் குழைந்தவள் நின்றதைக்
கமழும் கண்ணியன் கண்டுகண் ணேடினன். (32)

கருணை புரிந்தது.

2610 அந்த ஆங்கில மாதை அமைதியாய்
இந்த மன்னன் இதமுடன் நோக்கியே
முந்தொ ராசனம் தந்திரு என்றுபின்
சிந்தை யுன்னிச் செயல்முறை செய்தனன். (33)

2611 சிறை நீக்கியது

சிறையிருந்த துரைமகனைச் சீக்கிரம்போய்க்
கொணர்மின்! என
இறைமகன்முன் உரைசெய்ய எழுந்திருவர்
விரைந்துபோய்
முறைமையுடன் கொண்டுவந்து முன்விடுத்தார்;
அன்னவனைப்
பொறைமையுடன் அவள்கையில் பொருந்த அளித்
தருள் புரிந்தான். (34)

2612 கவர்ந்து வந்த பொருளை அருளியது.

கருமருந்தும் கைவெடியும் கடுங்கொடிய படைக்
கலன்கள்
அருமருந்து போன்றமணி அணிபிறவும் அவற்கருளி
பெருவிருந்தொன் றினிதாற்றிப் பெண்ணவளுக்
குரிமையா
ருபெரிய பட்டாடை உவந்தரசன் உதவினன். (35)

2613 ஊர்தியில் உய்த்தது.

பெட்டி வண்டி ஒன்றருளிப் பேரன்போ டவ்விருவர்
ஒட்டியதில் ஏறியிருந்து ஊர்போக உவந்தளித்தான்;
எட்டிவழி யிடையேதும் இடையூறு நேராமல்
கட்டிஅயல் செல்லஇரு காவலரைக் காட்டியுய்த்தான்.()

2614 உள்ளம் உவந்தது.

மன்னவன்றன் செயல்முறையும் மனநிலையும்மதிநலமும்
இன்னபெரும் பகைக்காலத் திகல்இனத்தைச் சேர்ந்த
வன் என்று
அன்னவகை யாதொன்றும் பாராமல் அருள்புரிந்தது
என்னபெருந் தகைமை! என எண்ணியிருவரும் வியந்
தார். (37)

2615 உவந்து மொழிந்தது.

தாயும்நீ தந்தையும்நீ தன்னருமைக் கொழுநனேர்
ஈயுமந்த இசைவினுல் இன்மாமி மாமனும் நீ
ஆயுமுன்றன் குலமுறையும் அருந்திறலும் அடுத்தவரை
ஏயும்அரு ளுடன்காக்கும் இருந்தகவும் இன்றறிந்தேன்.

2616 விடை பெற்றகன்றது.

நன்றறிந்த குலமகனே! நல்கும்விடை எனவுரைத்து
நின்றுதொழு தவளுவந்து சேர்ந்ததுணை யோடகன்ருள்;
சென்றுதிரு மந்திரம்போய் சேர்ந்தவுடன் பெற்ருருக்கு
ஒன்றியிங்கு நிகழ்ந்ததனை ஒருகடிதத் துறவிடுத்தாள்.()

2617 பெற்ருர் உவந்தது.

அன்னதிரு முகமடைய அவருண்மை அறிந்தவுடன்
இன்னலொடு மகிழ்வெய்தி இம்மன்னன் பெருந்தகவும்
நன்னருயர் மனுமுறையும்நயந்துபுகழ்ந்தொருமுடங்கல்
பன்னரிய படிபுகழ்ந்து பரிசொன்ரு டனுய்த்தார்(40)

2618 சீமையின் பரிசு

சீமையுறு பெற்ருர்கள் சீர்மையுடன் தன்மகட்குச்
சேமமுடன் அனுப்பியவத் திருமுகமும் தெளிபரிசும்
நேமமுடன் வரக்கண்டு நெடிதுவந்தப் பரிசைநேர்
ஊமைமனுக் குவந்தனுப்பி உபசாரம்புரிந்திருந்தாள்.(41)

2619 ஊமைமன் உவந்தது.

அப்பரிசும் திருமுகமும் அடைந்தவுடன் அரசறிந்து
வெப்பமுறு பகையினத்தை மேவிநின்றும் மெய்யன்பை
இப்படியும் இப்படியில் எய்தியுள்ளார் உளரன்றே!
எப்படியும் இதம்புரிவார் இதம்பெறுவார் எனவுவந்தான்.

2620 வியந்து புகழ்ந்தது.

கடல்கடந்து நெடுந்தூரம் கருத்தோடு வந்தடைந்த
விடலுடைய பரிசதனை மிகவியந்து துரைவியந்தான்;
அடலுடனே எனைச்சிறையில் அடைத்துவைத்த அதற்
[காஇம்
மடலுடைய மிடலென்று மனைவியிடம் மகிழ்ந்துரைத்தான்.

2621 வெகுமதியின் விளைவு

நிமையுறு வெள்ளையனைச் சிறைவிடுத்த சீர்த்திக்கா
மமையனும் ஓர்பரிசை உலகறிய உவந்துகொண்டான்
மமமுறும் அரியசெயல் எவ்வகையில் செய்தாலும்
தாமமுறும் வெகுமதிகள் தாம்வந்து சேருமன்றே. (44)

பரிசின் நிலை.

2622 அன்னபரிசு என்னை? எனின்,
அருமைமகள் கொழுநனுடன்
பன்னிநேர் அயலிருக்கும்
படிபொன்னுல் வடிவமைத்து
மன்னனிவன் அருள்புரிந்த
வகைதெரிய இனிதுணர்த்தி
உன்னியபே ரன்புடனே
உய்த்திருந்த தெனவுணர்க. (45)

2623 நன்றி யறிவு.

ஒருநன்றி செய்தாரை உள்ளத்தே யுறவைத்துப்
பெருநன்றியுடன்பேணும் பெருந்தகையர்சிறந்துயர்வர்;
திருவொன்றி யிருந்தாலும் செய்தநன்றி மறந்தவர்கள்
கருமன்றில் அழிந்தேங்கக் கடையராய் இழிந்தொழிவார்.

2624 **உதவியின் உயர்வு**

சிப்பியுறு புன்மணலும் தெள்ளியஒண் முத்தாகி
ஒப்பரியபெருமையுடன் ஒளிமுடியில் உயர்ந்தொளிரும்;
அப்படியே சிறியவுப காரமும் ஓர் அருந்தவசி
கைப்படிலே மிகவளர்ந்து கடலுலகம் தொழுமினிரும்.

2625 *** உரிமை உறவு.**

சண்டைகளும் சச்சரவும் சதிக்கொலையும் மிகப்பெருகிக்
கண்டகண்ட இடங்கள்தொறும் கலகங்கள்கடுத்தோங்கி
மண்டிநின்ற பொழுதுமிந்த மன்னனிடம் இனவகை
கொண்டவுற வுடனகூடிக் குணம்புரிந்து பலரிருந்தார்.

2626 **நம்பியின் நிலை.**

கும்பினியார் கொடும்பகையாய்க் கூட்டங்கள் பலகூட்டி
வம்புகளை மிகமூட்டி வன்மங்கள் நீட்டினங்கும்
அம்புவியில் கரவாக அவர்செய்து வருவதனை
நம்பியிவன் நனி ஓர்ந்து நாளும்வலி ஈட்டிவந்தான். (49)

2627 **எதிர் ஆக்கினன்.**

தெவ்வர்கடுந் திறலோடு சேர்ந்தாய்ந்து நாள்தோறும்
எவ்வழியும் எங்கணுமே யிருந்துபெரும் படைதிரட்டி
வெவ்வலியோ டடர்ந்துவரும் விரிவெல்லாம் விரைவாக
அவ்வமையம் தொறுமறிந்திவ் வரசுமெதிர் ஆக்கி நின்றனன்.

2628 **போர்க் கருவிகள்.**

பொன்னுண்டு பொருளுண்டு பொருவீரர் திரளுண்டு
மன்னுண்டு வலியுண்டு மதியுண்டு மதியாமல்
முன்னுண்டு வந்தமரில் முரிந்தோடிப் போனபடை
பின்னுண்டு போகவரும் போர்க்கருவிபெறவிழைந்தான்

---

* ஆங்கில தளபதியைக் கைதி ஆக்கிக் கொண்டுவந்து பாஞ்சைக்கோட்டையில் சிறைவைத்திருந்ததும், அவன் மனைவி வந்து பரிந்து வேண்டியதும், ஊமைத்துரை இரங்கி அந்தச் சீமைத்துரையை விடுதலை செய்து அனுப்பியதும், **பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம்** 2-ம் பாகம் 2-ம் பதிப்பு 133-வது பக்கத்தில் விவரமாக அறிந்து கொள்ளலாம்.

2629 **காஎ கருதியது.**

காஎயங்கள் தொறுமிருந்து படைக்கலன்கள் தமைப்
[பறித்துத்
தொகுஎய பேனமன்முன் சிந்துபூந் துறையயலே
கூளையில் வஎத்தொருங்கே நிறைத்துநிலை செய்திருந்தான்
காஎயிவன் அவற்றை எல்லாம் கைக்கொள்ளக் கருதினன்.

2630 **வீரன் ஏவியது.**

கோலர்கள் நிலையாக நிறைத்துள்ள கருவிகஎத்
தீமுடன் நேரேபோய்ச் சேர்ந்தள்ளி வாருமென
மீமகன் உரைசெய்ய விரைந்தெழுந்து படைவீரர்
காரிருளில் வழிநடந்து கருதியவவ் விடமடைந்தார். (53)

2631 **விரைந்து வந்தது.**

ஒருநூறு போர்வீரர் எழுநூறு சுமையாட்கள்
பொருவீரத் துடன்புகுந்து போற்றிநின்ற காவலர்கள்
ஒருநூறு பேர்கஎயும் உருத்தொழித்தங் குள்ளவெல்லாம்
பெருவீரத் துடனள்ளிப் பெருமுழக்கம் செய்துவந்தார்.

2632 **வாழ்த்தி நின்றது.**

வில்லார்கள் பணப்புதையல் எய்தியது போற்போரில்
வல்லார்கள் படைக்கலன்கள்வந்தவுடன் கண்டுமகிழ்ந்து
எல்லாரும் வடிவேற்கை எம்பெருமான் தனைத்துதித்து
மல்லாரும் திண்டோள்கள் வளர்ந்தரசை வாழ்த்தி
[நின்றார்.

2633 **எதிர்நோக்கியது.**

தண்டுகஎத் தயாரித்துச் சமராற்றற் குரிய கொடுங்
கூண்டுகஎ எவ்வழியும் கும்பினியார் கூட்டுங்கால்
மண்டியபோர்க் கருவிகஎ மன்னவனும் முன்சேர்த்துக்
கொண்டமரை எதிர்நோக்கிக் கொதிப்புமீக் கொண்டு
[நின்றான்.

2634 **நண்ணலர் நாடியது.**

கும்பினியார் முன்பறித்துக் கொண்டவெலாம் மீண்டு
[மிவன்
தம்புடனே கவர்ந்துகொண்டு சேனைகஎமிகத்திரட்டிக்

கம்புகத்தி வேல்களையே கைவைத்துக் கடுமையாய்
நம்பியிவன் நிற்பதனை நண்ணலரும் நாடிநின்றார்.

2635 **மார்தட்டி நின்றான்.**

கொடியசிறை தனையுடைத்துக் குதித்துடனே வெளிஏறி
நெடிய அரண் கடிதமைத்தான்; நேரலரே நேர்ந்துநீர்
மடியவிவண் வாரும்! என மார்தட்டி நிற்கின்றான்;
படியிலிவன் வீரத்தைப் பார்த்துநமைப் பழித்துள்ளார்.

2636 **சீமையர் நாணியது.**

இவனைநாம் விட்டுவிடின் இனியிந்த நாட்டைவிட்டுக்
கவனமுடன் வெளியேறிக் கடல்கடந்து போயங்கே
உவமையிலா வீரன்என ஊரையனைச் சீமைஎங்கும்
நவமாகக் கூறிநாம் நாணவரும் என நைந்தார். (59)

2637 **அடுபடை ஆய்ந்தது.**

மூண்டுள்ள வலிகளையும் முன்னம்போய்ப் புறங்காட்டி
மீண்டுவந்த நிலைகளையும் மிகநினைந்து மறுகியவர்
நீண்டஅவ மானமாய் நெஞ்சுடைந்து நின்றாலும்
ஆண்டகைமை யுடன்செருக்கி அடுபடைகள் ஆர்த்து
[வந்தார்.

2638 **செருக்கித் திரண்டது.**

பீரங்கி முதலான பெரும்படைக ளுடன்சென்று
பாரெங்கும் புகழுடைய பாஞ்சைநகர் தனைவளைத்துப்
போரங்கே புரிந்ததனைப் பொடியாக்கி னலன்றிச்
சீரெங்கும் இனிநமக்குச் சேராதென் றெனத்திரண்டார்.

2639 **ஆண்டகை இருந்தது.**

மூண்டுமுன்னே வந்தவர்கள் முனைமுகத்தில்முரிந்தோடி
மாண்டவர்போல் போய்ஒழிந்தார்; மனந்தேறித் துணை
[சேர்த்து
மீண்டுவரு வாரென்று மிகவிழைந்து வழிநோக்கி
ஆண்டகையிங் கமர்ந்திருந்தான்; அவர்நிலையங் கினிக்
[காண்பாம்.

26–வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 2639.

இருபத்தேழாவது

சேனைகள் சேர்ந்த படலம்

பாஞ்சைக் கோட்டையைப் பிடித்தற்கு வலியுடைய பெரிய படைகள் வேண்டும்என்று சேனைத்தலைவன் கும்பினி அதிபதிகளுக்கு எழுதிவிட்டான் விடவே சேனைகள் பல வழிகளிலுமிருந்து திரண்டு வந்தன. **கயத்தாறு** என்னும் ஊர் அயலே பாசறை செய்து தங்கின. குதிரைப் படைகளோடு ஆங்கிலேயர் பலர் அதில் தளபதிகளாய் அமர்ந்திருந்தனர். நாற்பது நாள் வரையும் நான்கு பக்கங்களிலும் திருந்து படைகள் வந்து சேர்ந்துகொண்டிருந்தன. முடிவில் தலைமைத் தளபதி மக்காளி (Macaulay) படைகளை எழுப்பி வந்தார்; வருங்கால் வழிஇடையே **குதிரைக்குளம்** என்னும் ஊர் அயலே பாஞ்சை வீரர் எதிர்த்தனர்; இருதிறத்திலும் இடர்கள் நேர்ந்தன. அந்த இகல் கடந்து அன்று **பசுவந்தனை** என்னும் ஊரையடைந்து ஆங்கிலப் படைகள் தங்கியிருந்தன. மறுநாள் மார்ச்சு மாதம் 31ந் தேதி (31—3—1801) பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தன. பாசறை சமைத்துப் போருக்கு ஆயத்தமாயின. அந்த நிகழ்ச்சிகளை இந்தப் படலம் விளக்கி யுள்ளது.

படைகள் படர்ந்தன.

2640 அடலுறு பாஞ்சையை வெல்ல ஆவலாய்
மிடலுயர் சேனைகள் மேவி வந்தன;
திடலுறு பாசறை சேர்ந்து நின்றன;
கடலென எங்கணும் கலித்தி ருந்தன. (1)

வெடிகள் விரிந்தன

2641 சுடுகிற வெடிகளும் சூழ்ந்து நின்றுபோர்
இடுகிற பீரங்கி யினங்கள் யாவுமே
அடுகொலை செய்திட அடர்ந்த டைந்தன;
படுபரித் திரள்களும் படர்ந்து வந்தன. (2)

வெள்ளைத் தலைவர்கள்.

2642 தள்ளருந் திறலுடன் சமரில் தேர்ந்துள
வெள்ளையர் தலைவராய் விளங்கி மேவினர்

உள்ளவன் சிறையினை உடைத்துப் போனஇவ்
வள்ளலை எண்ணியே மறுகி நின்றனர். (3)

நேர்ந்துள்ள நிலை.

2643 ஊமையன் ஒருவனைப் பிடிக்க வுக்கியே
சீமையர் இங்ஙனம் திரண்டு நிற்கின்றார்:
சேமமாய் மீள்வரோ? செத்து வீழ்வரோ?
ஏமனூர் புகுவர்போல் ஈண்டி சைந்துளார். (4)

நாட்டவர் நவின்றது.

2644 என்றிந்த நாட்டவர் இகழ்ச்சி தோன்றவே
ஒன்றிய உரைகளை உரைத்து வந்தனர்;
கன்றிய கவலைகள் கலந்தி ருப்பினும்
வென்றியை விழைந்தவர் விரைந்து வந்தனர்.

2645 **சேனைகள் சேர்ந்த செயல்.**

சென்னைகொல்லம் திருச்சிமுதல் தேயங்கள்தொறும்
[தொடர்ந்து
மன்னிநின்ற சேனைகளை வரிசையுடன் வரவழைத்துத்
துன்னிநின்ற பீரங்கி சுடுவெடிகள் தொடர்படைகள்
இன்னவகை தொகுத்தான்னர் இகலூக்கி எழுநின்றார்.

2646 **தானைத் தலைவர்கள்.**

வெசிகேம்பல்* கிராண்டுகிராம் வெந்திறல்கொள்
[செப்பேடு
அசிலாங்கு லயன்சிமித் தாசார்டு மேக்கிலல்
விசியேகன் ஜில்கிரைசன் வெல்சியுயர் பேக்குசா
பொசிடாரி யன்பிரசர் போர்சாங்கு மாங்கனீல். (7)

2647 **தலைமைத் தளபதி.**

இன்னபெரும் படைத்தலைவர் எண்பதுபேர் இனஞ்
[சேர்ந்து

---

*பட்டாளங்களின் வகைகளையும், படைத்தலைவர்களின் பெயர் விளக்கங்களையும் பாஞ்சாலங்குறிச்சி வீரசரித்திரம் 2-ம் பாகம் 2-ம் பதிப்பு 168-ம் பக்கத்தில் ஆங்கிலக் குறிப்புகளுடன் விவரமாய்க் காணலாம்.

மன்னனென மருவினின்ற மக்காளித் துரையுடனே
உன்னியமர் நேர்ந்துள்ள உயர்நிலையை ஓர்ந்துணர்ந்து
முன்னம்வந்து மாண்டவரின் முடிவுகளும்முதலாய்ந்தார்.

2648 **எண்ணி மறுகியது.**

சீமையிலே பிறந்திருந்தார் தென்பாஞ்சைப் பதியென்னும்
மைமையனூர் வந்துபலர் உருவழிந்து மாண்டதனை
நாமமுடன் எண்ணி எண்ணி நண்ணலனநண்ணிமேல்
சோமமுடன் செயவுரிய செருவெல்லாம் தேர்ந்திருந்தார்.

2649 **வெசி வியந்தது.**

வெள்ளமென வந்திருக்கும் வெந்திறல்கூர் ஆட்படையும்
துள்ளிவரு பரிப்படையும் துரைப்படையும் துணைப்
[படையும்
துள்ளரிய பீரங்கித் தனிப்படையும் கருமருந்தும்
உள்ளவெலாம் உறநோக்கி உளந்திகைத்து வெசியுரை
[த்தான்.

2650 **வியப்பு நிலை.**

எந்நாட்டும் ஆங்கிலரோ டெதிர்ப்பார்நேர் இல்லை என்றே
தந்நாட்டம் தடையின்றித் தனிச்செலுத்தித் தழைத்திருந்
[தோம்
இந்நாட்டும் எல்லாரும் எதிர்பணிந்தார்; இம்மூலத்
தென்னைட்டில் உள்ளஒரு சிற்றரசோ செயிர்த்தெதிர்த்தான்.

2651 **தனி அரசா?**

வெட்டவெளி யாய்ப்பரந்து விரிந்துள்ள இக்கரிசல்
பொட்டல்நிலத் துள்ளவொரு புல்லியபா ளையப்பட்டில்
கட்டபொம்மன் என்னுமொரு கருமனிதன் வெள்ளையரைத்
தட்டழியச் செய்துதான் தனியரசு செயநின்றான். (12)

2652 **எதிரி திறல்**

முன்னவனை மூண்டுநாம் முதல்தொலைத்தோம்;
[இப்பொழுதோ
பின்னவனும் மூண்டுநமைப் பேயாட்டம் ஆட்டுகிறான்;
இன்னபெரும் படைகளெலாம் ஈண்டெதிரே யீண்டிவனை
என்னவலி! என்னபடை! எதிரியிடம் உள்ளனவோ?

2653 **இவ்வளவு படையா?**

எவ்வளவு பீரங்கி! எவ்வளவு வெடித்திரள்கள்!
எவ்வளவு படைக்கலன்கள்! எவ்வளவு போர்ப்படைகள்!
எவ்வளவு துரைமார்கள்! எவ்வளவு திகில்! இதற்குத்
தெவ்வளவோ, எவ்வளவோ சிற்றளவே; எனச்சிரித்தான்.

2654 **இத்தனை பேரா?**

தேசமன்னர் பலர்திரண்டு சேர்ந்துபொரும் பெரும்
[போர்க்கும்
ஓசையுறும் இப்பெரிய படையெழுச்சி யுரியதன்றே;
ஈசல்எனத் தமிழ்நாட்டில் இங்கிருக்கும் ஒருதெலுங்கப்
பூசைதனைப் பொருதிடவோ, இத்தனைபேர் புறப்பட்டோம்!

2655 **கலக்குகின்ருன்.**

நாடெல்லாம் திறைசெலுத்தி நமைப்பணிய நாமிந்தப்
பாடெல்லாம் படும்படிக்குப் பகைநீட்டிப் படைகூட்டிப்
பீடெல்லாம் மிகப்பெருக்கிப் பெருகியுளான்; இக்கரிசல்
காடெல்லாம் கைக்கொண்டு கடலெல்லாம் கலக்குகின்ருன்.

2656 **பேசாதவன் பேராண்மை.**

பேச்சைமிகப் பேசாமல் பேரூமை எனநின்ருன்;
பேச்சைமிகப் பேசுவார் எல்லாரும் பேயரெனக்
காட்சியுறக் காட்டியே காசினியெ லாம்புகழ்கள்
நீட்சியுற்று நிலவிவர நெடியவனுய் நிற்கின்ருன்.

2657 **நன்று! நன்று!**

நன்றுநன்றென் றவனுரைத்து நகைத்தபொழு தயலிருந்த
துன்றுதிறற் பிற்கட்டு சொன்னவனை எதிர்நோக்கி
இன்றுநீ மனந்துணிந்திங் கிசைத்தவெலாம் இனந்தெரியாக்
கன்றுரையே யல்லாமல் கருத்துரையன்றெனக் குறித்தான்.

2658 **பிற்கட்டு உணர்த்தியது.**

மற்கட்ட நேர்ந்துள்ள மன்னவனை எளிதாக
மூற்கட்டிப் பேசுவது முறையன்று; மூண்டுமுன்னே
கற்கட்டி நின்றபல கோட்டைகளைக் கைக்கொண்டு
சொற்கட்டி நின்ருலும் தோல்வியிங்கே கண்டுள்ளோம்.

2659 நம்மை இகழ்ந்துள்ளான்.

நம்முடைய சேனைகளை நம்முடைய கருவிகளை
நம்முடைய ஆட்சிகளை நம்முடைய மாட்சிகளை
யம்முனையி லுள்ளவரும் ஏத்திநின்ரு ரானலும்
இம்முனையி லுள்ள இவன் எள்ளியிகழ்ந் தேயுள்ளான். (20)

2660 தென்னாட்டுச் சிங்கம்.

தென்னாட்டின் சிங்கமெனச் சிறந்திருந்து செயக்கொடி [யை
யங்நாட்டும் இனிதாக இயல்நாட்டித் திசைகள்தொறும்
முன்னாட்டித் தனதிசையை மூட்டிநிற்கும் இவனுடைய
தன்னாட்டம் தெரியாதார் தவருட்டம் தானேர்வார். (21)

2661 இங்கே இழிந்துள்ளோம்.

வங்கம்கைப் பிடித்ததுவும், வடதிசையை வென்றதுவும்,
அங்கமுதற் கங்கமெலாம் அமைத்துநாம் கொண்டதுவும்
எங்குமே பொருளீட்டி இசைநீட்டி நின்றதுவும்,
இங்கிவனுல் எல்லாமே இல்லையென இயைந்தனவே.

2662 எமன் ஆகி நிற்கின்ருன்.

வெள்ளையர்கள் எல்லாரும் விரைந்தோட வேரறுத்தே
எள்ளளவும் இந்நாட்டில் இடமில்லை எனத்தெரித்துத்
தள்ளரிய பேரிடரைத் தடையின்றிச் செய்துள்ளே
எள்ளியிகழ்ந் திங்குநமக்கு எமனகி நிற்கின்ருன். (23)

2663 காலனுக்கும் காலன்.

முன்டபோர் தொறும்புகுந்து முரணேற்றிப் பகைவென்று
தொண்டரிய பலவரணும் தான்கொண்ட தறுகணுயர்
ஆண்டகையாம் காலனுமே அமர்புரிய இங்குவந்து
மாண்டொழிந்துபோனனேமற்றினிநான்சொல்வதென்னே?

2664 பாஞ்சையின் பேராற்றல்.

போரமர்ந்து பாஞ்சைமேல் போனவர்கள் இதுவரையும்
ஊரமர்ந்து மீண்டவர்கள் ஒருவரையும் நான்காணேன்;
தேரமர்ந்திங் கப்பேரை நினைந்தாலும் நெஞ்சமெலாம்
சோமர்ந்த வுப்பாகி நிலைகுலைந்தால் நிலை என்னும்? (25)

2665 ஊமையன் உளநிலை.

முன்னவன்முன் மூண்டுநின்று முடிவரிய போராற்றிப்
பன்னரிய படைதொலைத்துப் படுவஞ்சத் தால்பட்டான்;
பின்னவனப் போதெழுந்த பெரும்பழியை நிலைநந்தோங்கி
வன்னியென வளர்ந்துள்ளான் வாழ்வுநமக் கென்னுமோ?

2666 உக்கிர வீரன்.

பகைவீரம் உளநிலையைப் பகுத்துணர்ந்து பாராமல்
தொகைவீரப் படையயலே சூழ்ந்திருக்கும் துணிவினால்
நகைவீரம் புரிவதெலாம் நவையாகும்: இப்போரில்
தகைவீரம் பெற்றவரே தனிவீரம் பெற்றவரே. (27)

2667 பேசாதவன் எதிரே பேயும் அஞ்சுமே.

வாய்பேசா ஊமைஎன வாய்ந்திருக்கும் பாஞ்சைமன்னைப்
போய்வீசி வென்றுவரப் போர்ப்படைகள் மிகத்திரட்டிப்
பேய்போலே வந்தாலும் பேரெதிரே கண்டவுடன்
வாய்போசா தோடுமெனில் வாய்பேசி யாவதென்னே!

2668 வெல்லுதல் அரிது.

கல்லெதிர்ந்த தேங்காய்போல் கருதலர்கள் பாஞ்சை
[யின்மேல்
மல்லெதிர்ந்து வந்துவந்து மாண்டார்க ளேயன்றி
வெல்லும்வகை கண்டார்கள் என்னுமந்த வெற்றுரை
[யைச்
சொல்லும்வகை கேட்டறியேன் தொல்லுலகில் இது
[வரையும்

2669 எதிரி அதிசய வலியினன்

இன்றெதிர்ந்து போகும்நாம் எவ்வாறே யிகல்கடந்து
வென்றுவரப் போகின்றோம்? விதிநிலையின் வினைவென்றே?
என்றுபல நினைந்துநினைந் தினைந்துள்ளேன்; எதிரிநிலை
நன்றறியா திகழுவது ஞாயமல வென்றுரைத்தான்.

2670 எல்லாரும் கலங்கினர்.

இன்னவகை பிற்கட்டங் கிகல்நிலையின் இயல்பெல்லாம்
சொன்னவுடன் எல்லாரும் துளங்கினர்: மக்காளி

மன்னவனும் உண்மையிந்த வன்பகையை வென்றுவந்தால்
இன்னவுய ருலகமெலாம் எய்தியதே யாமென்ருன். (31)

2671 ஊக்கி எழுந்தார்.

அன்னவா றவன்கூற யாவருமே மிகவியந்திம்
மன்னனுயர் பெருவீர மாட்சிதனை மதித்தெண்ணி
இன்னைதொரு பெரும்போரில் என்னமுடி வாமோவென்
றுன்னியுளந் திருந்தார்பின் ஊக்கிஒரு நாள்எழுந்தார். (32)

2672 பாஞ்சையர் மூண்டு நின்ருர்.

எங்ஙாளில் எழுவார்கள்? எந்தவழி வருவார்கள்?
எங்ஙாளில் எந்நேரம் இங்குவந்து சேர்வர்? என
அங்ஙாள அவ்வழியை அவ்வரவை ஆராய்ந்து
முன்னடி முன்னருற மூன்றுபேர் மூண்டிருந்தார். (33)

2673 நேர்ந்து தேர்ந்தார்.

கூடிநின்ற படையங்கே கூட்டமா எழுவதனை
கூடிநின்று கண்டவர்கள் நயமாக வெளியேறி
ஓடிவந்து பாஞ்சைமன்பால் உற்றவெலாம் உரைத்தார்கள்
நேடிநின்று நேர்வதனை நெறியோடு நேர்செய்தான். (34)

2674 வருவதை ஓர்ந்தார்.

சேர்ந்துகயத் தாறிருந்த சேனையெல்லாம் சேனையர்கோன்
ஓர்ந்துரைத்த நேரத்தே உறுதியுடன் எழநேர்ந்த:
ஆர்ந்தஉப தளபதிகள் அவரவர்கள் குதிரைகள்மேல்
நேர்ந்துவர நேர்ந்தார்கள் நிரைநிரையே சேர்ந்தார்கள்.

சேனைகள் எழுந்தன.

2675 தானை மன்னர் சமரமை கோலங்கள்
ஆன யாவும் அணிந்தனர்; ஆர்த்துடன்
சேனை தன்னை எழுப்பினர் செல்லென
ஏனை வல்லியம் எங்கும் இயம்பின. (36)

குதிரைப் படைகள் குதித்தன.

2676 குதிரை வீரர்கள் கொல்படை கொண்டனர்;
அதிரும் பீரங்கி ஆன கருவிகள்

எதிர்கொள் போர்ப்படை எல்லாம் எடுத்துடன்
முதிரும் வேகத் தொடுமுன் முடுகினர். (37)

நடைகள் காட்டினர்.

2677 படைகொள் வீரர்கள் பத்திமை கொண்டுகேர்
அடைய மேவி அணியணி யாகவே
நடைகள் கொண்டு நடந்தனர்; காட்டிய
விடைகள் என்ன விளங்கி விரைந்தனர். (38)

பாஞ்சை நோக்கி வந்தன.

2678 நேர்க டந்து நெறியிற் படர்கடம்
பூர் கடந்துளம் ஊக்கி யுருத்துகேர்
பார்பு ரந்தருள் பாஞ்சையை நோக்கியே
போர்க டந்திடப் போந்தது சேனையே. (39)

இடைவழியில் தடை.

2679 ஒட்ட றம்பட்டி ஊரயல் நேருங்கால்
முட்ட நோக்கிமுன் மூண்டிந்த மன்படை
கட்டி நின்றது; கண்டதும் பாய்ந்துனே
வெட்டி வேட்டைகள் ஆடி விரைந்ததே. (40)

அறுநூறு வீரர்கள் அடர்ந்தனர்.

2680 ஆறு நூறெனும் வீரர்கள் ஆர்த்துடன்
சீறி யேறிச் செகுத்திடச் சேனைகள்
மாறு கொண்டு மறுகி மயங்கின;
வேறு கண்டு விழித்து விளிந்தன. (41)

சிங்க ஏறுகள் எனச் சீறினர்.

2681 யானை யின்திர ளூடரி யேறுகள்
கானம் ஒன்றிக் கடுத்துடன் பாய்ந்தெனச்
சேனை யின்னிடை வீரர்கள் சேரவும்
ஊனம் ஒன்றி உடைந்து கலங்கினர். (42)

வந்தவர் கலங்கினர்

2682 செய்வ தின்ன தெனத்தெரி யாமலே
கைம்ம றந்து கலங்கிய சேனைகள்

மெய்ய றிந்து வெகுண்டு விரைந்தன
வெய்ய போரை விளைத்தன வீறுடன். (43)

விரைந்து சுட்டனர்.

2683 தத்து வாம்பரி வீரர்கள் தாவியே
ஒத்த வேல்கொ டுருத்தமர் ஆடினர்;
கொத்த மைந்த கொலைவெடி பீரங்கி
மொய்த்த மைந்து முறுக்கிமுன் சுட்டனர். (44)

இருவகையிலும் கொலைகள்.

2684 சுட்ட குண்டுகள் பாயத் துடித்துயிர்
பட்ட ழிந்தனர்; ஆயினும், பாய்ந்துநேர்
நெட்ட ழித்து நெடுந்தலை கொய்துடல்
வெட்டி வீரர்கள் வெங்கொலை வீழ்த்தினர். (45)

குதிரைப் படைகள் அழிந்தது.

2685 வழிம றித்து வழிதெரியா வகை
அழிவு செய்திவர் ஆடவும், ஆடல்மாத்
தொழில்படைத்துள தொல்படை சூழ்ந்துகொண்
டொழிவு செய்திட வூக்கி யுடன்றன. (46)

பகைவர் பட்டனர்.

2686 வெய்ய போர்ப்புலிப் போத்துகள் போலவே
எய்யும் அம்பென ஏறி யடர்ந்தமர்
செய்யும் காலைச் சினந்திவர் வல்லயம்
மெய்யில் ஏற விழுந்து விளிந்தன. (47)

பரிந்து சிதைந்தனர்.

1687 குடல்ச ரிந்து கொழுந்தசை சிந்திநல்
உடல்சி தைந்துயர் ஒண்தலை யற்றுமேல்
தொடரும் கால்கள் துணிந்து துடித்தன
படருங் கால்எனப் பாய்ந்த பரிகளே. (48)

மடிந்து விழுந்தனர்.

2688 ஏறி வந்த பரிகள் இழந்தவர்
தேறி நின்று திரண்டயில் வேல்களால்

சிறி வந்து செயிர்த்தமர் ஆடினர்
மாறி நொந்து மடிந்து விழுந்தனர். (49)

மாண்டவர் நிலை.

2689 தாளி ழந்து தலைகள் இழந்துயர்
தோளி ழந்து தொடைகள் இழந்துகை
வாளி ழந்து வலிகள் இழந்துதம்
நாளி ழந்துளம் நைந்துயிர் மாண்டனர். (50)

அஞ்சி நொந்தனர்.

2690 மூண்டு பாய்ந்துமொய் வேல்கொடு குத்திநேர்
தாண்டி ஏறித் தடாரித்துச் சாரிகள்
வேண்டு மட்டும் விரைந்திவ ராற்றிடும்
ஆண்ட கைத்திறல் கண்டுளம் அஞ்சினர். (51)

அகன்று சென்றனர்.

2691 நேர்ந்த போரினில் நேரலர் பீரங்கி
கூர்ந்து வைத்துக் கொளுத்தினர்; குண்டுகள்
சேர்ந்து பாயச் சிலருயிர் தீர்ந்தனர்;
ஆர்ந்த காலை அவர்பின் அகன்றனர். (52)

பாஞ்சை வீரார் 96 பேர் மாண்டனர்.

2692 எண்ணி வந்தவிவ் வீரர் இனத்துளே
மண்ணில் வீழ்ந்து மடிந்து மறைந்தவர்
தொண்ணூற் றாறுபேர் என்னும் தொகையராய்
நண்ணி நின்றனர்; நண்ணலர் தம்முளே. (53)

ஆங்கில வீரர் சிலர் அழிந்தனர்.

2693 சேனை மன்னர் எழுவர்கள் செத்தனர்;
தானை வீரர்கள் சாவையும் தாவிய
மான வன்பரி மாண்ட அளவையும்
ஏனை யோருடன் எண்ணி யறிகவே. (54)

இடையில் நேர்ந்த இழவுகள்.

2694 வழியில் இந்த இழவுகள் வந்ததும்
குழியில் வீழ்ந்து கொதிக்கும் புலிகள்போல்

பழியில் வீழ்ந்து பதைத்துடன் மீறியே
அழிவில் ஏற அடர்ந்துமுன் ஏறினர். (55)

கோபம் மூண்டது.

2695 மூண்ட கோபம் முடுக்க முனைந்தவர்
நீண்ட வேக நிலையில் நெறியிடைத்
தாண்டு வெம்பரி யூக்கித் தளத்துடன்
ஆண்ட சேனைத் தலைவர் அடர்ந்தனர். (56)

கொதிப்பு நீண்டது.

2696 நேர்ந்து மூண்டு நெறியெதிர் நீண்டிவர்
சேர்ந்து செய்த செருவினைச் சேரலர்
கூர்ந்து ணர்ந்து கொதிப்புகள் கொண்டனர்;
தேர்ந்து நின்று செயலை வியந்தனர். (57)

வெருண்டு வெருவினர்.

2697 கோட்டை கூடிக் கொடும்படை நாட்டிமேல்
வேட்டை யாட விழைந்து விரைந்தவர்;
பாட்டை கூடுமுன் பாஞ்சையர் கூடிநேர் (58)
வேட்டை யாட வெருண்டு வெருவினர்.

மருண்டு மறுகினர்.

2698 வலிய வந்து வழியிடை வாய்ந்துமுன்
நலிய கிற்கும் நமனென நண்ணலர்
ஒலிசெய் தோங்கி உயிர்கள் துயருறக்
கெலிசெய் தேகுதல் கேலிக ளாயின. (59)

மதித்து உளைந்தனர்.

2699 தீயைக் கக்கின்ற தீவெடிக் குண்டுகள்
மாயச் செய்யும் வலியை மதித்திலர்;
காயம் பட்டுக் களத்தில் இறப்பதை
நேயம் பட்டிவர் நேர்ந்தெதிர்க் கின்றனர். (60)

வியந்து நின்றனர்.

2700 சாக அஞ்சலர்; சாவதை ஒருயர்
யோக மாக உளத்தில் உவந்துளர்;

வேக வீரர் விறலினர்; என் றவர்
ஏக மாக இவரை வியந்தனர். (61)

நினைந்து அயர்ந்தனர்.

2701 இன்றி ருப்பினும் நாளை யிருப்பினும்
என்று மேஇறப் பேன்றெதிர்ந் துள்ளதே;
அன்று சாவதை இன்றே அமரினில்
நின்று சாவதே நீதியென் றேர்ந்துளார். (62)

எண்ணி எய்தினர்.

2702 இன்ன வாறவர் பாஞ்சை யினத்தினர்
மன்னி யுள்ள மரபை வலியினைத்
துன்னி வெல்லும் தொழிலை வியந்துளே
உன்னி யுன்னி உரைத்துடன் போயினர். (63)

பசுவந்தனை சேர்ந்தனர்.

2703 தாவி வந்து பசுவந் தனைஎனும்
மாவ ளஞ்செறி மாநகர் சேர்ந்ததும்
தாவ ளம்மிது தங்குதற் கென்றவண்
மேவி நின்றனர் மெய்யிளைப் பாறினர். (64)

விழிப்பா யிருந்தனர்.

2704 பகைவர் பாய்ந்து படுதுய ராயிடை
மிகைகள் செய்குவர் என்றுமுன் எண்ணியே
புகைகொள் பீரங்கி போர்வெடி சூழவே
மிகவும் வைத்து விழிப்பா யிருந்தனர். (65)

இருந்த நாள்.

2705 ஆயி ரத்தெண் ணூற்றுயர் ஒன்றினில்
மேய மார்ச்சுறு முப்பதில் மேவலர்
தீய குண்டுக ளோடுதென் பாஞ்சைமேல்
பாய வந்தங்குப் பாணித் திருந்தனர். (66)

பாஞ்சாலங்குறிச்சி மேல் மூண்டு போராட வந்த ஆங்கிலப் படைகள் கி. பி. 1801 மார்ச்சு மாதம் 30ந் தேதி இரவு பசுவந்தனையில் வந்து தங்கி யிருந்தன. இந்த ஊர் பாஞ்சைக்கு வடமேற்கே 9 கல் தூரத்தில் உள்ளது.

4706 எட்டப்பன் இணைந்தது.

[illegible] வாறவண் இருக்கையில் எட்டையா புரத்து
[illegible]ன் சேனைக ளுடன்வந்து சேர்! என வரைந்து
[illegible]ம் விட்டஓர் முடங்கலின் படிபடை திரட்டி
[illegible] வன் அங்குச் சேர்ந்தனன் ஆர்வமீக் கூர்ந்தே.

4707 உதவிப் படைத் தலைவன்.

[illegible] முந்தெனும் சேருவை ஐந்துநூ றென்ன
[illegible] றுத்திய படையினன்; உயர்பரி யுடையான்;
[illegible]த்தலும் பல்படை பயின்றவன்; எட்டன்
[illegible] றைக்கமர் ஊழியம் புரிபவன் வந்தான். (68)

4708 ஓட்டிய எட்டன்.

[illegible]ன் வாலயன் வெள்ளையன் சிறுபெருந் தளவாய்
[illegible]ன் கெச்சிலன் சித்தயன் வக்கயன் சினமல்
[illegible]ம் பேர்முத லாக ஈராயிரம் பேர்கள்
[illegible] வந்தனம் மன்னவன் தொழுதுமுன் நின்றார்.

4709 உளவாளியை உவந்தது.

[illegible]யு கூறியுள் ளாளென நின்றுதுப் பெல்லாம்
[illegible]யு செய்துபோய் அடிக்கடி யுரைத்திந்தப் பகையை
[illegible]யு செய்தவன் விளபலன் கண்டிட விழைவாய்
[illegible] பிழ்ந்தவன் உற்றபோ தவரெலாம் உவந்தார்.

4710 உற்று நின்றது.

[illegible] திப்படு வெள்ளநீர் பெருகிமேல் வருங்கால்
[illegible] நக்கொரு கிளையெனச் சார்ந்தயல் சிறிதாய்
[illegible] நப்புனல் வந்துடன் கலந்தது போல
[illegible] நப்புடைப் படைகளும் எதிர்கலந் துயர்ந்த. (71)

4711 வழியில் உற்றதை உரைத்தது.

[illegible]டை யாபுரத் தரசிடம் வரும்வழி யிடைத்தாம்
[illegible] பாட்டையும் பாட்டையும் பரிந்தவர் உரைத்தார்;
[illegible]க் கேட்டனன் உளமிக வெருவினும் ஊக்கம்
[illegible] வாய்மொழி பலபல கூறினன் தழுவி. (72)

2712 எட்டன் எட்டியது.

பிறந்த நாட்டையும் பெருங்குலத் துறவையும் அறவே
மறந்து மற்றயல் நாட்டினர்க் கினியனாய் மருவி
இறந்து போகவும் துணிந்துடன் இசைந்தனன்; என்ரூல்
சிறந்த அன்னவன் சீர்மையை யாவரே மறப்பார்? (73)

2713 ஆர்வமாய் அணைத்தது.

இந்த நாட்டினின் நிலையையும் இயல்பையும் இசைவாய்
வந்த நாட்டவர் தெளிவுற வரன்முறை யாக
முந்த நாட்டவும் காட்டவும் மூண்டவன் என்றே
அந்த எட்டப்பன் தனையவர் ஆர்வமாய் அணைத்தார்.

2714 துப்பனை ஒப்பியது.

துப்பில் லாமலே கோட்டையைப் பிடித்திடத் துணிதல்
அப்பில் லாமலே அரும்பயிர் வளர்க்கவும். இரைமுன்
வைப்பில் லாமலே தூண்டில்மீன் பிடிக்கவும். வாய்த்த
உப்பில் லாமலே உறுசுவை யமைக்கவும் உறலே. (75)

2715 நண்ணலர் நயந்தது.

என்று முன்னவர் இசைத்தவம் மொழியினுக்கிசைவாய்
அன்று துப்பனைய் எட்டப்பன் அமைந்ததை எண்ணி
நன்று நன்றென நண்ணலர் நயந்தவன் தன்னை
ஒன்றும் கேண்மையில் உபசரித்தேர்ந்துகைக்கொண்டார்.

2716 காலையில் எழுந்தது.

படைகள் வந்துற வடைந்ததும் படைப்பெருந் தலைவன்
அடைய எட்டப்ப னுடன்கலந் தன்றிர வகல
நடையை முப்பிமேற் படைகளை நடத்தினன் நயமாய்
அடைய வந்தனர் அருந்திறற் பாஞ்சையின் அருகே.

2717 கடுகி அடைந்தது.

ஆத்த லோடைன் றுரைபெறும் ஊரயல் அமைந்த
மீத்த லந்தனில் பாசறை யமைத்துவெம் படையின்
நீத்தம் அவ்விடம் நிறைநிறை முறையுடன் நிறைத்துக்
காத்த மர்ந்தனர் கண்ணிமை காத்தெனக் கடுத்தே (78)

2718 **பாஞ்சை அருகே மருவியது.**

கடிய திற்றிருப் பாஞ்சையம் பதிக்குநேர் தெற்கே
கடிகை தூரத்தில் உள்ளது கவினுறு குளத்தின்
அடிய மைந்தபே ரகலிடம் அதனிலே படைகள்
கெடிது ருந்தன நேர்பெரும் போரினை நினைந்து. (79)

2719 **பாசறை அமர்ந்தது.**

சேனை காவலன் சேனையைத் திறம்பட இருத்தி
ஆன வுண்டிகள் அமைவுடன் அமைந்தபின் யாவும்
மான வீறுடன் உபதள பதிகளோ டுசாவி
சேனை வென்றிகள் எய்துறும் வழிகளை ஆய்ந்தான். (80)

2720 **உண்ட பின்பு ஊக்கி நின்றது.**

பொரு டற்றெதிர் பொருதிறம் யாவையும் புடைநின்
றரு கன்கமர்ந் தாய்ந்தட லாற்றுறு நிலையைத்
தீர வோர்ந்தபின் சேனையைச் செவ்வனே நிறுத்தி
கெடுத் தமர்க்குறுவன யாவையும் நிறைத்தார். (81)

2721 **பீரங்கிகளை நாட்டியது.**

கருமை நுந்தடப் பீரங்கி யிருபது வடமேற்
கிருமை நுங்கினும் தொடர்புற மேட்டினில் நாட்டிப்
பொருது றங்தெரி வீரரை அணிவகுத் தடைவே
லருகு றம்படை வலிபெற வகைசெய்து வைத்தார். (82)

2722 **குறிகள் ஆய்ந்தது.**

வட்ட குண்டுகள் கோட்டைமேல் துள்ளிமுன் பாய்ந்து
கட்ட றிந்திடும் என்பதைக் கணக்கெலாம் சரியாய்
நோட்டி ஆய்ந்தட லுறுபடை வீரரை ஊக்கி
கெட்டு கெட்டுயர் பரிகளில் தலைவர்கள் நின்றார். (83)

2723 **மூண்டு நின்றது.**

குண்டு முன்னுறு கோட்டையைத் தகர்க்கவும்,முனைந்து
கிண்டு நுள்ளியுள் ளேறவும், நேர்ந்தடல் புரிந்து
வெண்டும் வெற்றியை எய்தவும், விரகுடன் விரைந்து
ஆண்டு சேனையின் அதிபதி ஆற்றினன் ஆய்ந்தே.

27–வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 2723.

இருபத்தெட்டாவது

அடுசமர் ஆற்றிய படலம்

கொடிய பீரங்கிப் படைகள், நெடிய குதிரைப்படைகள், கடிய காலாட் படைகளோடு கடுத்து வந்த சேனாதிபதி. பாஞ்சைக் கோட்டைமேல் மூண்டு போராடினான். வந்த படைகள் பல மாண்டு பட்டன. ஐரோப்பியத் தளபதிகள் பலர் அழிந்து வீழ்ந்தனர். தலைமைத் தளபதி பெரிதும் வருந்தினன். கோட்டை அருகே இறந்துகிடந்த பிணங்களை எடுத்து இராணுவ மரியாதையோடு புதைக்க வேண்டும் என்று விரும்பிச் சமாதானக் கொடியுடன் ஊமைத்துரையிடம் ஒரு தூதுவனை அனுப்பினன். "சீமைத் துரைகள் இங்கே வந்து செத்த சவங்களாயினர்; சீக்கிரம் எடுத்துப் போங்கள்" என்று ஊமைத்துரை உல்லாச விநோதமாய் உத்தரவு கொடுத்தார். கொடுக்கவே அவர் எடுத்துப்போய் ஏற்றபடி அடக்கம் செய்தனர். அதன் பின்பு அடுத்து ஆற்ற வேண்டியதைக் கடுத்து ஆய்ந்து நின்றார். அந்த நிலைகளை எல்லாம் இந்தப் பகுதி இனமாய் விளக்கியுள்ளது.

அமர் மூண்டது.

2724 ஊக்கி ஏறி உறுசமர் ஆற்றவே
நோக்கி வந்த படைகள் நுதிகொள்வேல்
ஆக்கி நிற்கும் அரணை அடலுடன்
தாக்கி மேலுறத் தாவ விரைந்தனர். (1)

தானைத் தலைவன் ஏவியது

2725 நின்ற போரை நெறியின் நிலைபெற
ஒன்றி யேறி உளைற்ற உணர்த்தியே
வென்றி யேறும் விதத்தை விழைந்துவெல்
என்று சேனைத் தலைவன் இயம்பினன். (2)

முரசங்கள் முழங்கின.

2726 பல்லி யங்கள் முழங்கப் பரித்திரள்
வல்லி யங்கள்போல் வந்தடர்ந் தேறினை;
கல்லி யங்கு மனத்தவர் கைவெடி
புல்லி எங்கும் புகைந்திடச் சுட்டனர். (3)

பீரங்கிகள் சுட்டன.

27 27 இடிகள் மின்னல்கள் என்ன இடையரு
தடிகொள் பீரங்கி வாய்களி னின்றுமே
நெடிய குண்டுகள் நீள்மதில் எங்கணும்
கடிதின் வந்து கணக்கின்றி வீழ்ந்தன. (4)

தளபதிகள் ஏவினர்,

27 28 வெள்ளை வீரர்கள் வெம்பரி மீதினில்
நள்ள ருந்திற லோடு தருக்கிநேர்
துள்ளி வந்து சுடும்படி தூண்டினர்;
அள்ளி யள்ளி அடலுடன் ஏவினர். (5)

தலைமை அதிபதி நிலைமை.

27 29 பாஞ்சைக் கோட்டை மதிலைத் தகர்த்திட
யாஞ்சை கூர்ந்து வருவதை யோர்ந்துமூண்
டாஞ்சை கூறி அதிபதி யாண்டுமே
ஓஞ்ச லென்ன வுலாவி யுடற்றினன். (6)

போர் ஒலிகள் பேரொலிகளாயின.

27 30 எங்கும் பேரொலி ஏற அயலெலாம்
மங்கி வெம்புகை மண்ட மருவலர்
வெங்கொ டுந்திற லோடு விரைந்திடத்
துங்க வெம்போர் தொடங்கிய தோங்கியே. (7)

27 31 ### போர் மூண்ட தேதி.

*பங்குனி மாதம் பதினெட்டாந் தேதி
பாஞ்சையம் பதியின்மேல் படையைப்
பொங்கிமேல் எழுப்பிப் போர்ப்பறை முழக்கிப்
பொருதிறல் பலபட இயற்றி

---

*கி. பி. 1801-ம் ஆண்டு பங்குனி மாதம் 18-ந் தேதி பாஞ்சைக் கோட்டையை ஆங்கிலப் படைகள் அடர்ந்து பொருதன. சிறிய ஈயக் குண்டுகள் வெடிகளிலிருந்தும், பெரிய இரும்புக் குண்டுகள் பீரங்கிகளிலிருந்தும் பேரொலி யோடு ஓயாமல் நேரே பாய்ந்து கொண்டிருந்தன.

அங்கங்கே வீரர் அடல்புரிந் தேற
அதிர்வுறு பேரிடி என்ன
வெங்கடுங் கொடிய குண்டுகள் பாய
வெய்யவெம் போரினை விளைத்தார். (8)

2732 போராடிய திறம்.

கோட்டைமா மதில்மேல் கொத்தளங் களின்மேல்
கோமகன் படையுறு வீரர்
வேட்டைமேல் நின்ற விதமென விழைந்து
வீரவெந் திறலொடு துணிந்து
சுட்டிவாள் வேல்வில் எறிகவண் வெடிகல்
இன்னன பலபடை ஏந்தி
மாட்டினர் பகைவர் வருந்தொறும் தலைகள்
மறிந்துமண் ணிடைவிழுந் துருள. (9)

2733 உயிரொழிந்தது.

இருப்பினில் இருந்த பன்றியை நாய்கள்
எதிர்ந்தெனக் கோட்டையை வளைந்து
நெருப்புறு வெடிகள் குண்டுகள் பொழிந்து
நேரலர் நெருங்கினர்; நெருங்கச்
செருப்புரி திறலோ டிவர்எதிர் கொதித்துச்
சீறிவாள் வேல்களால் தாக்க
உருப்படி தெரியா திழிந்துடல் சிதைந்தே
உயிரழிந் தொழிந்தனர் பலரே. (10)

2734 துயருழந்தது.

மண்டிமே லடர்ந்து வருந்தொறும் சினந்து
மடங்கலின் திரளெனப் பாய்ந்து
தண்டுகள் கொண்டு தாக்கியுட் புகுந்து
தாள்தலை தோளுடல் துள்ளித்
துண்டுக ளாகத் துணிபட வெட்டிச்
சூறையின் சுழலெனச் சாரி
கொண்டெங்குந் திரிந்து கண்டங்கள் களத்தில்
குவிந்திடப் புரிந்தனர் கொதித்தே. (11)

27 35 **கருவிகள் வகை.**

கவரு கவண்கல் எறியினுல் விற்கள்
கடுததுமிழ் கற்களால் குறியாய்
எய்விவிடித் திரளால் எழுமழு முசலம்
ஈட்டிதோ மரம்குந்தம் என்னும்
வெய்ய வெம் படையால் வீரர்கள் கொதித்து
வீசலால் மேவல ருடைந்து
மொய்வலி யிழந்து கைதலை சிதைந்து
முனையழிந் துருண்டனர் முடிந்தே. (12)

27 36 **மூண்டவர் மாண்டது.**

எறிமேல் வருவார் எவரையும் கோட்டை
யிடத்திருந் தெறுழ்வலி யோடு
சீறிமேல் பாய்ந்து செருப்புரிந் தேறிச்
சினந்துவல் லயங்களால் எறிய
மாறிமீண் டுடைந்து மறுத்துடன் திரண்டு
மானமும் தாபமும் மிகுந்து
வீறுடன் விழுந்து ஈருட லாகி
விதிர்த்துயிர் மாண்டனர் பலரே. (13)

27 37 **வில் வீரர் விறல்.**

விற்களில் வல்லார் கோட்டைமேல் நின்று
வீசிய கற்கள்வான் வழிநின்
றுற்கைகள் வீழ்வ போலமுன் துள்ளி
ஒல்லையில் ஓடியே ஒன்னர்
பற்களில் நுதலில் கண்களில் மூக்கில்
பட்டன; படவுயிர் துடித்து
நிற்குமந் நிலையே தட்டழிந் தயர்ந்து
நெட்டுடல் வீழ்ந்தன நெடிதே. (14)

27 38 **இருநூறு வில்லாளர்.**

*பண்டைநாள் வில்லில் மந்திர முறையில்
பகழிகள் எய்துபற் றலைக்

---

*பண்டு வில்லில் வல்லவர் இருவர் என்றது இராமனையும், விசயனையும். அதிசயமான அந்த இரண்டு வீரர்கள் போல் இருநூறு வில் வீரர்கள் அன்று பாஞ்சைப் போரில் மூண்டு எய்தனர்; ஆகவே பலர் வேகமாய் மாண்டு மடிந்தனர்.

கண்டவா றழித்த கடுந்திற லாளர்
இருவரைக் கதைகளில் கேட்டோம்;
மண்டிய இந்தப் பாஞ்சையம் போரில்
மாற்றலர்க் கெமன்களாய் நின்று
கொண்டவில் வீரர் இரண்டுநூ றென்னின்
கொலைநிலை யாவரே குறிப்பார்? (15)

2739 குண்டுகள் உருண்டன.

கொடியபீ ரங்கி கொண்டவர் பொழியும்
குண்டுகள் கோட்டைமா மதிலின்
அடியிலே வீழ்ந்து பணிவன போல
அடலொழிந் துருண்டன; இவர்கைப்
பிடியிலே அமைந்த வில்லுகள் உமிழ்ந்த
கல்லுகள் பேணலர் உயிரை
நொடியிலே கவர்ந்து படியிலே யுடல்கள்
நூக்கிமே லெழுந்தன வன்றே. (16)

2740 வில்லுகள் வீட்டின.

மின்னலங் கொடிகள் போலவிற் கற்கள்
விரைந்துவந் தடலுடன் பாய
ஒன்னலர் துள்ளி யுருண்டனர்; பரிகள்
உடைந்தன; வுயர்ந்துமே லிருந்தார்
என்னவா றிந்தக் கொலைநிகழ் கின்ற?
எங்கிருந் துறுவகல்? என்றே
முன்னம் ஓர்ந் தரணின் முழுவலி யதனுல்
மூண்டதென் றுணர்ந்துளே முனைந்தார். (17)

2741 கோட்டையின் வலிமை

கோட்டைமா மதிலை யுடைத்தபோ தன்றிக்
கொற்றவன் வீரர்கள் நம்மை
வேட்டையில் அமைந்த விலங்குகள் என்ன
விரைந்துகைக் கொள்ளுவர்; என்று
நாட்டமுற் றுணர்ந்து சேனையின் தலைவன்
நாற்பது பீரங்கி யருகே
கூட்டிமுன் னிட்டிக் குண்டுகள் பொழிந்து
கோட்டையை யுடைமின்! என் றுரைத்தான்.

2742 **பீரங்கிகள் பிதிர்ந்தன.**

வெந்திறற் றலைவன் உரைத்திட வெகுண்டு
விண்ணெடு மண்ணெலாம் நடுங்க
முந்திமேல் பதித்த பீரங்கி யனைத்தும்
மூட்டிமுன் சுட்டனர்; மூண்டு
கொந்துகொந் தாகக் குண்டுகள் வந்து
கோட்டைமேல் பாய்ந்தன; குவித்துச்
சிந்திய பதராய்ச் சிதறிய நெல்லாய்ச்
சீரழிந் தொழிந்தன எல்லாம். (19)

2743 **அரணின் அதிசயம்.**

நெடியமா மலைமேல் எறிந்தமண் கட்டி
நிலைகுலைந் தழிதல்போல் நேரார்
கொடிய பீரங்கிக் குண்டுகள் எல்லாம்
கோட்டைமேல் பாய்ந்தொரு துகளும்
அடியிலே யுதிர்க்கா தவைகளே யுதிர்ந்தங்
கயலெலாம் பரந்துருண் டுழன்ற
படியிலே மடிகொள் மடையர்தங் குடிகள்
படுபயன் இழந்துபட் டனபோல். (20)

2744 **மண் அரண் கண்ணனே ஒத்தது.**

கல்விஞல் மாரி காத்தகண் ணனைப்போல்
கருதலர் இடைவிடா தடலோடு
எல்லையில் லாமல் பொழிதரு தீய
ஈயவெங் குண்டுகள் எல்லாம்
புல்லிய எரியின் பொறியெனச் சிதறிப்
புறத்திடை யொழிந்திடப் பொங்கித்
தொல்லெயில் உள்ளே பல்லுயிர் பேணித்
தோற்றமுற் றிருந்தது தொடர்ந்தே. (21)

பாஞ்சைக்கோட்டை அரண் கண்ணனைப்போல் எண்ணரிய திறலோடு எதிரே நின்று பாஞ்சை வீரர்களைக் காத்தருளியது. பண்டு பெய்த கல் மாரியையவன் தடுத்துக் காத்தான்; அன்று பெய்த குண்டு மாரியை அது தடுத்துக் காத்தது.

2745 பாஞ்சையர் வலி ஓங்கியது.

புண்ணியம் புரிந்தோர் எண்ணிய பயனைப்
புரையறப் பொருந்தல்போல் இவர்கை
நண்ணிய படைகள் நண்ணலர்மீது
நாட்டிய குறிகளிற் பட்டுத்
திண்ணிய திறலை விளைத்தன; அவர்கை
சேர்ந்துள கருவிகள் தீமை
பண்ணினர் இன்பப் பயனவிழைந் ததுபோல்
பயனின்றிப் பட்டழிந் தனவே. (22)

2746 படைகள் பட்டது.

கடுத்துவந் தடர்ந்து கனன்றுகண் சிவந்து
கடியவெம் படைகளை வீசி
அடுத்தவர் எல்லாம் அடுத்தவக் கணத்தே
ஆவிபோ யழிந்திட; அமர்மேல்
தொடுத்ததிர் ஏறித் துறைதொறும் புகுந்து
துள்ளிமுன் தொல்லமர் புரிந்தார்;
எடுத்தவன் படைகள் எவற்றினும் வல்ல
இறையவன் வயப்படை வீரர். (23)

2747 பாஞ்சையர் அட்டது.

கொல்லுகொல் என்னக் கொதித்துமுன் குதித்துக்
கொலைத்தலை பலபல துமித்து
நில்லுநில் லென்று நேரலர் நேர்போய்
நெட்டுடல் பிளந்துகட் டழித்து
மல்லுயர் திண்டோள் மன்னவன் படைஞர்
வல்லவன் வகுத்தபம் பரம்போல்
ஒல்லையில் சுற்றி யுற்றவெம் படையை
ஒருகளப் படுத்தின ருடன்றே. (24)

2748 வெற்றி வீறுற்றது.

வேல்களால் வீசி வாள்களால் வெட்டி
வில்லுமிழ் கல்லினால் வீட்டிக்
கால்கள்போல் வந்த கடும்பரித் திரளைக்
கடியவல் லயங்களால் வாட்டி

வால்கள்வெங் குடல்கள் உடல்கள்வெண் தலைகள்
மாறுமா றுற்றிட மாட்டி
மால்கொடு களத்தில் கால்கொடு மறலி
மண்டிய வாறெனத் திரிந்தார். (25)

1749 **சேனைகள் அயர்ந்தது.**

வறிமுன் வந்தார் இறந்துபட் டழிந்த
இயல்பினை யறிந்துபின் நின்றூர்
மாறிமீண் டயலே மறுகிமேற் செய்யும்
வழிதெரி யாதிழி வெய்தச்
சீறிமே லடர்ந்த சேவகர் செருக்கிச்
செருப்புறு களிப்புமீக் கூர்ந்து
மீறிமே லார்த்து வேல்கணை விதிர்த்தார்;
மேவலர் வெய்துயிர்த் தயர்ந்தார். (26)

1750 **தலைவன் ஊக்கியது.**

வெல்லுறும் வகையோர் சிறிதுமே யின்றி
வெம்படை வெளிநின்று வீணே
அல்லலுற் றயரும் நிலையினைத் தானை
யதிபதி அறிந்தகம் கொதித்து
ஒல்லையில் நெருக்கிப் பீரங்கிப் படையை
உருத்தடர்ந் துடற்றுமா றூக்க
எல்லையில் லாமல் கல்மழை என்ன
ஏறிமுன் பெய்தனர் இரைந்தே. (27)

1751 ***கோட்டை உடைந்தது.**

காலையில் எட்டு நாழிகை தொட்டுக்
கடுத்திடை விடாமலே சுட்டார்;
மாலைவந் தணுக எட்டுநா ழிகைமுன்
வடக்குறு நெட்டுடன் மேற்கு
மூலையும் உடைந்து முன்னிலை குலைந்த;
மூண்டவெம் பகைவர்கள் நோக்கி

* முற்பகல் 9 மணியிலிருந்து பீரங்கிகள் மூண்டு சுட்டன; பிற்பகல் 3 மணிக்குக் கோட்டையின் வடமேற்கு அரண் உடைந்தது. உடையவே வெள்ளையர் துள்ளி ஆர்த்தனர்.

வேலபில் எழுந்த ஒலிஎன முழங்கி
வெந்திற லுடன்குதித் தார்த்தார். (28)

ஒன்னர் உற்றது.

2752 உற்ற கோட்டை உடைந்தது: நாமுளே
முற்றும் ஏறி முடித்திட லாமென
வெற்றி வீர விறலுடன் மேவலர்
சுற்றி யார்த்துத் தொடர்ந்து நெருங்கினர். (29)

யாவரும் மூண்டனர்.

2753 குதிரை வீரரும் கொல்படை வீரரும்
அதிர வந்தனர்; ஆர்த்துடன் யாவரும்
முதிர ஈண்டிமுன் மூண்டனர்: மூளவே
கதமி குந்திவர் காய்ந்தெதிர் முட்டினர். (30)

அமர் ஆடினர்.

2754 வந்து வந்துடன் மண்டினர் வாள்களால்
முந்தி முந்தி முடிந்து மடிந்தனர்:
பந்தி பந்தியாய்ப் பாய்பரி ஏறினர்
சிந்தி மீண்டு செருத்தமர் செய்தனர். (31)

சீறி ஏறினர்.

2755 சேர வந்து செறிந்தவர் சீறுமுன்
வீர வெந்திற லோடு வெகுண்டிவர்
கோர வன்சமர் கொண்டு கொலபல
கூர மண்டிக் கொதித்துமுன் ஏறினர். (32)

வீரர் விரைந்தனர்.

2756 நெட்டு நெட்டெதிர் நேரவும் நேரலர்
ஒட்டி முன்வந் துருத்தனர்: ஊனுடல்
பட்ட ழிந்து பதைத்திடப் பாடுடன்
வெட்டி யேறி விரைந்தனர் எங்குமே. (33)

வீழ்ந்து புரண்டனர்.

2757 தோள்கள் அற்றுத் துணிந்து விழுந்தனர்:
தாள்கள் அற்றுத் தவழ்ந்து கிடந்தனர்:

வாள்கள் அற்று மறிந்தனர்; வாய்ந்ததம்
நாள்கள் அற்றுயிர் நைந்து புரண்டனர். (34)

அழிந்த நிலை.

2758 வெட்ட வீழ்ந்தனர்; வீறுடன் பாய்ந்துவேல்
நட்ட வீழ்ந்தனர்; தண்டொடு பாலங்கள்
முட்ட வீழ்ந்தனர்; மூண்ட மழுக்களால்
கட்ட வீழ்ந்தனர்; கண்ட களமெலாம். (35)

அவர் சுட்டனர்.

2759 தூரம் நின்று சுடுந்தொறும் துள்ளிப்போய்
நேர டர்ந்து நெடுவடி வேல்களால்
ஈர வெங்குடர் சிந்தி யிறந்திட
வீர வெஞ்சமர் ஆடி விரைந்தனர். (36)

இவர் வெட்டினர்.

2760 சுட்ட குண்டுகள் பட்டிவர் வீழுமுன்
தொட்ட வெவ்வெடி வீரர்கள் துள்ளியே
பட்ட ழிந்து பதைத்திடப் பாய்ந்திவர்
வெட்டி வீழ்த்தி வெகுண்டயல் ஏறினர். (37)

கொதித்து மூண்டனர்.

2761 வாவி மேல்வரு வன்பரி வீரர்கள்
ஆவி போயல மந்து விழுந்தனர்;
மேவி எங்கணும் வெங்கொலை வீழவே
கூவி எங்கும் கொதித்திவர் ஏறினர். (38)

கொலைகள் நீண்டன.

2762 எங்கும் வெண்டலை துள்ளி எழுந்தன;
கங்கும் பேயும் கவந்தமும் ஆடின;
பொங்கி ரத்தம் புறம்பொதிந் தோடிண;
வெங்கொ டுங்கொலை வீறுடன் மீறின. (39)

குடல்கள் சரிந்தன.

2763 ஈர வெங்குரு திப்புனல் ஈர்த்திடச்
சேர நின்ற குடல்கள் செழும்புனல்

ஆர ஓடி அளறுக ளாயின
நேர வெங்கும் நெளிந்து கிடந்தன. (40)

சிதைந்து கிடந்தனர்.

2764 குறிகள் நோக்கிக் குறித்துமுன் நின்றவர்
வெறிகொள் வெங்களம் வீழ்ந்து வெடியுடன்
பொறிகள் சிந்திப் புலன்தெரி யாமலே
தறிகள் போன்று சமைந்து கிடந்தனர். (41)

வெட்டிய தலைகள்.

2765 வெட்டி வீழ்ந்த தலைகளிவ் வீரர்கை
எட்டி நீட்டிய வேலிடை ஏறவும்
ஒட்டி மூழையின் உட்புகு காம்பினைத்
தொட்டு நின்றன போன்றன தோன்றின. (42)

கும்பினிப் படை கும்பியது.

2766 கும்பி னிப்படை கும்பிக் குழம்பியே
வெம்பி எங்கும் விளிந்து விழுந்தது;
நம்பி ஊமையன் நற்படை யாண்டுமே
பம்பி ஏறிப் பறந்து சிறந்தது. (43)

சேனைத் தலைவன் சீறி ஏவியது.

2767 இன்னவா றடலாற்றி இவர்ஏறி
வருந்திறலை இகல்வெஞ் சேனை
மன்னனறிந் துளங்கொதித்து மருவியயல்
நின்றதுணைத் தலைவர் தம்மை
உன்னரிய பரிப்படையும் உயர்படையும்
ஒருமுகமாய் ஒருங்கே யூக்கிச்
சின்னபின்ன முறச்செய்து செருவாற்றும்
எனச்சீறிச் சினந்து நின்ருன். (44)

படைகள் பாய்ந்தது

2768 படைத்தலைவன் மிகக்கொதித்துப் பணித்தவுடன்
படைவீரர் படர்ந்து பொங்கி
நடைத்தலையில் மிகச்சிறந்த பரிகளின்மேல்
அரிகளென நண்ணி யோங்கி

மடைத்தலையில் உடைத்தெழுந்த வாரிநீர்
வெள்ளமென வரம்பு மீறித்
துடைத்தழித்தின் றணிநகரைத் தொலைத்திடுவே
மெனத்துணிந்து தொடர்ந்து வந்தார். (45)

குதிரைப் படைகள் குதித்தது.

2769 காற்றென்னப் படர்ந்தேதறிக் கடும்பரிகள்
கலித்தெழுந்த; கனல்கள் மண்டி
ஏற்றென்னச் சுடுவெடிகள் இடிகளெனப்
படிமுழங்க இடங்கள் தோறும்
கூற்றெனனக் கொடுந்திறல்கொள் கொலைவீரர்
கொதித்தெழுந்து குருதி நீர்கள்
ஆற்றென்ன மிதந்தோடும் அடுகளத்தே
அடர்ந்தேதறி யார்த்தா ரம்மா! (46)

கோட்டை அயல் மூண்டது.

2770 கரைபுரண்டு வருகடல்போல் கருதலர்கள்
படைதிரண்டு கனன்றெ ழுந்து
முரசுமுதற் பல்லியங்கள் மூண்டடர்ந்து
முறைமுழங்க முனைந்து பொங்கி
விரசியுடன் எதிர்த்தவரை வென்றடக்கிக்
கோட்டையயல் விரைந்தார்; அப்போது
அரசறிந்து கொதித்தருகே நின்றவரைக்
கடிதேவி ஆர்த்தெ ழுந்தான். (47)

2771 **பாஞ்சைப் படை எதிர்த்தது.**

கொலைவடிவேல் கொதித்தெடுத்துக் கொற்றவனும்
கெழுந்தவுடன் குறித்து நின்ற
தலைவரெல்லாம் வல்லயங்கள் வாள்வேல்வில்
கடிதேந்தித் தாவிப் பாய்ந்தார்;
அலையெறிந்து மண்டிவரு கடலெதிரோர்
அருங்கடல்வந் தடர்ந்த தென்ன
நிலைதெரியா திருபடையும் நேர்ந்தவுடன்
நெடுங்கொலைகள் நிமிர்ந்த அம்மா! (48)

பகைப் படை பட்டது.

2772 தத்தியடர் படைத்திரளைத் தாண்டிவரு
பரித்திரளைத் தாவி ஏறிக்
குத்திநெடுங் குடல்சரித்துக் கொலைத்தலைகள்
விழத்துமித்துக் குறித்துச் சுட்ட
பத்திபடு வெடித்திரள்கள் பற்றினரைப்
பாழ்படுத்திப் பக்கம் பாய்ந்தே
எத்திசையும் வேல்வேல்என் றிவரோடி
இகலாடி வென்ரு ரன்றே. (49)

2773 **தலைவர் சமர் நிலை.**

வெந்திறல்கொள் புலித்திரள்கள் வெகுண்டடர
விடைக் குலங்கள் வெருண்டு சிந்திக்
கொந்துகொந்தாய்க் குலைந்தயர்ந்து கொலைப்பட்ட
வாறுபோல் கொற்ற வேந்தன்
தந்திரப்போர்ப் பெருந்தலைவர் சமராடச்
சார்ந்த படைவீரர் எல்லாம்
எந்திரத்தில் பட்டகரும் பினமென்ன
இனந்தெரியா திழிந்த ழிந்தார். (50)

வீரணன் விறல்.

2774 வீரணன்என் ரொருவீரன் வேலோடு
விரைந்தோடிக் கேம்பல் என்னும்
பேரமைந்த படைத்தலைவன் பேர்ந்துதலை
துள்ளிவிழப் பெய்தன் னன்முன்
தீரமுடன் ஏறிநின்ற திண்பரிமேல்
பாய்ந்தேறிச் சீறி நேர்ந்தோர்
பாரடையப் பாழ்படுத்திப் படுகளமெல்
லாம்கடிது பறந்து வந்தான். (51)

கேம்பெல் என்பவன் (Lieut. Campbell) 74-வது ரெஜிமெண்டின் படைத்தலைவன். அவனை வெட்டி வீழ்த்தி அவன் ஏறி இருந்த குதிரையில் ஏறி **வீரணன்** என்னும் வீரன் வீரோடு வந்துள்ள வித்தக நிலையை இதில் உய்த்துணர்ந்து கொள்கிறோம். பாஞ்சை வீரர் திறல் பகைவரை நிலைகுலைத்தது.

1775 வென்று வந்தது.

தானைமன் னைத் தடிந்தவ'ன் முன் சார்ந்துநின்ற
பறியேறித் தாவி மீறி
யானையென வந்தமலாய் மல்லர்களை
அழித்ததஞ்செய் தமர்க்க ளத்தே
மானமற முடன்திரிந்து மாற்றலரைக்
கூற்றின்வாய் மடுத்து மண்டிக்
கோனிடம்வந் தடிவணங்கிக் குதிரையயல்
தனிநின்ரூன் கொற்ற வீரன். (52)

1776 ஊமைத்துரை உவந்தது.

நின்றவனை முகநோக்கி நேர்ந்தவனைக்
கொன்றவன்ரூன் ஊர்ந்து வந்த
வென்றிமிகு பரிகவர்ந்து விறல்புரிந்து
வந்தடைந்த வீரணை! முன்
பொன்றியவென் நேரண்ணன் போரண்ணன்
போர்க்களத்தே புகுந்தான் என்ன
இன்றுமன மகிழ்ந்துநின்றேறன் இனிஎனக்கு
நீஅண்ணன் என்ரூன் மன்னன். (53)

1777 வீர பொம்மன் விளைத்தது.

அவ்வுரைகேட் டவன்நாணி அடிதொழுது
மீண்டும்பாய்ந் தமர்மேல் போனன்;
வெவ்வலியோ டவன்போன வுடன்வீர
பொம்மெனும்பேர் விறலோன் ஓர்கை
வவ்வியசெந் தலையோடும் வாளோடும்
வந்தரசை வணங்கி நின்ரூன்;
செவ்வியவன் திறல்நோக்கி மிகவியந்து
சிரம்எவன தென்று கேட்டான். (54)

1[1] எதிரியின் குதிரையோடு வந்து ஊமைத்துரை முன் வணங்கி நின்ற வீரனை நோக்கி இவ்வாறு வியந்துள்ளான்.

2778 **தலைவன் தலை இழந்தது.**

வந்தபடைத் தலைவருளே மண்டியமோர்
வலியுடையான் சங்க மன்னர்
சொந்தமெனும் உறவுடையான் தொடர்ந்துபல
போர்களிலும் துணிந்து வென்றோன்
சந்தமுறு படைவீரர் ஆயிரம்போர்க்
கொருதலைவன் *ஈகன் என்னும்
முந்தவுயர் பெயருடையான் முடித்தலையே
முடிந்ததலை என முடித்தான். (55)

2779 **படைத் தலைவர் பட்டது.**

படைவீரர் தம்மையெல்லாம் இவ்வகையே
ஒவ்வொருவர் பரிகள் மேல்பாய்ந்து
அடலோடு கொன்றொழித்துத் தலையெடுத்துத்
தலைவனிடம் அடைய இந்தக்
கொடைவீரன் அவர்கொடுக்கும் தலைக்கொடையைக்
கொண்டாடிக் குதூக லித்தான்;
புடைசூழும் நீருலகில் பொன்றுத
புகழுடைய பொருவில் மன்னன். (56)

2780 **வெள்ளையர் தலைகள்.**

பிள்ளையைமுன் னுறக்கொன்று பேய்த்தனமாய்த்
தலையறுத்துப் பேயும் செய்யா
எள்ளலுறும் இழிபழியை இரக்கமின்றிச்
செய்தவந்த இனத்தா ரான
வெள்ளையரைக் கொன்றொழித்து வெண்டலைகள்
பலகொண்டான் வீரன் என்றே
தள்ளரிய புகழ்மொழியைத் தரணியுள்ளார்
சாற்றிநின்றூர் சார்பு கூர்ந்தே. (57)

---

55 *ஈகன் (Lieut. Egan) 3-வது பட்டாளத்தின் தலைமைத் தளபதி. இத்தலைவன் தலையையே வீரபொம்மு வீறோடு கொண்டு வந்து ஊமைத்துரை முன் வைத்து வணங்கி நின்றுள்ளான். வீரக் கொலை கோரமாய் நின்றது.

2781 **கொலைக்குக் கொலை.**

ஒருதுணை யாய் நின்றவென தயிர்த்துணையைக்
கொன்ற அந்த ஒன்னர் தம்முள்
வருதுணை யாய் வந்தஇந்த வன்படையின்
தலைவர்தலை பலவும் இன்று
பொருதுணை யாய் நின்றஎன்றன் போர்வீரர்
கொண்டு வந்தார்; புகுந்து நானும்
மருவுதலை பலகொள்வேன் எனவடிவாள்
கடிதெடுத்து மன்னன் பாய்ந்தான். (58)

2782 **எதிரிகள் இரிந்து போனது.**

இன்னவகை அரசேற இருமருங்கும்
படையேற எதிர்ந்து வந்த
அன்னபடை வீரருடைந் தலமந்தங்
கயலோட அதிப னுகி
மன்னிநின்ற மக்காளி மனம்கொதித்து
மிகத்தடுத்தும் மறித்து நோக்காது
என்னவிடம் போவதென இனந்தெரியா
தனைவோரும் இரிந்து போனர். (59)

2783 **உடைந்து ஓடியது.**

முறிந்தபடை தனைமுறுக்கி மூண்டபடைக்
கலன்களால் முனைந்து சுற்றி
எறிந்தெய்து கடிதோச்சி யிடங்கள்தொறும்
தொடர்ந்து குத்தி இவர்தாம் ஏறச்
செறிந்தெங்கும் பிணங்களாய்ச் செங்குருதித்
திரையெறியச் சிதைந்த ழிந்து
நெறிந்துநின்ற படையொன்று நிலைதெரியா
தறவொழிந்து நீங்கிற் றன்றே. (60)

2784 **மடிந்து கிடந்தது.**

ஓடினர் பலபேர்கள்; உற்றபடைக்
கலன்களுடன் ஒழித்தெ றிந்து
நீடியயல் மறைவாக நின்றொழிந்தார்
பலபேர்கள்; நெடும்பி ணத்துள்

மூடிமுகம் தெரியாமல் முகிழ்த்திருந்தார்
பலபேர்கள்: முன்னேர் கண்டார்
வாடியடி தொழுதுவிழ மன்னருளால்
மண்டிவழி மறைந்தார் பல்லோர். (61)

2785 இழிந்து அழிந்தது.

தள்ளரிய கருமருந்தும் தடுப்பரிய
படைக்கலனும் தாங்கி யோங்கி
வெள்ளமென வந்தடைந்த வெய்யபடை
வீரரெல்லாம் விரைந்து நீங்கி
எள்ளலுறு தீவினையால் எய்துபொருள்
போயதென இழிந்து போனர்:
உள்ளியநல் வினையுடையார் உவந்திருந்து
படியிவர்தாம் உயர்ந்தி ருந்தார். (62)

2786 பகைவருள் இறந்த தொகை.

அன்றுடைந்து பெருந்திகில்கொண் டயலுடைந்து
போனவருள் ஆங்கி லர்க்குள்
துன்றியபே ரிருநூறு: துணைத்தலைவர்
ஏழுபேர்: தொடர்ந்து வந்து
நின்றபடை நிலையழிந்த நிலைநெடிது
நெடும்பரிகள் இருநூற் றைந்து
பொன்றினவர் பேரிழவோ ஒரிடத்தும்
நேரளவு புகன்றூர் இல்லை. (63)

2787 பாஞ்சை வீரர் மாண்ட தொகை.

இம்மன்னன் சேனையிலன் றெழுநூறு
பேரிறந்தார்; காயம் பட்டு
வெம்மையுடன் வீழ்ந்தவர்கள் நூற்றெண்பத்
தாறுபேர்: வீர ருள்ளே
பொம்முதுரை போசன்மதார் ஆதிராம்
எனுந்தலைவர் பொன்றி மாண்டார்:
தெம்முனையில் தெறுகாலர் எனநின்று
திறல்செய்த தீரர் அம்மா! (64)

பறித்து வந்த பொருள்கள்.

2788 படைகளிட மிருந்திவர்கள் பறித்தபீ
ரங்கிபத்து வெடிகள் நூறு
நடையிலுயர் பரிகள்ஐந்து கருமருந்துப்
பேழைஒன்று நவமாக் கொண்டே
அடையவந்த தலைவர்கைவாள் ஆறுவேல்
ஐந்நான்காம் அவற்றோ டாங்கே
யிடைவிழுந்த உடைகள்பல படைகள்சில
அணிகள்பல எடுத்து வந்தார். (65)

புலி முன் ஆடுகள்

2789 கொடியவரிப் புலிபாயக் கூடிநின்ற
ஆடுகள்நேர் குலைந்துள் அஞ்சி
நெடியதிகில் கொண்டோடி நிலைகுலைந்த
நிலையென்ன நிகரில் வீரக்
குடியதனில் பிறந்திருந்த கோமகன்முன்
பாய்ந்தவுடன் குலைந டுங்கிப்
படையுடைந்த படிநினைந்து படைத்தலைவர்
எல்லாரும் பயந்தா ரன்றே. (66)

உடைந்து ஓடியது.

2790 உள்ளமெல்லாம் திகிலேறி உடலெல்லாம்
மிகப்பதறி ஓடிப் போன
வெள்ளையர்கள் இவ்வேந்தன் விறல்நிலையும்
வீரருள விதமும் எண்ணிக்
கொள்ளநின்ற எமன்வாயில் குறிதப்பிப்
போனவர்போல் கோடி யோடித்
தெள்ளுபுகழ்ப் பாஞ்சைநகர்த் திசைநோக்கா
தயல்நோக்கிச் சென்றூர் சேர்ந்தே. (67)

சேனைத் தலைவன் மறுகியது.

2791 ஓடியகன் றொழிந்தவர்கள் ஒழியவங்கு
நின்றபடை யுலைந்து ளைந்து
கூடியபின் படைத்தலைவர் நடத்திவரச்
சேனையர்கோன் கூர்ந்து நோக்கி

வாடிமிக மனமறுகி மானமுடன்
பாசறையை மருவி னுன்முன்
தேடியசீர் எல்லாம்போய்த் தேம்பிநின்ற
ஒருவன்போல் தியங்கி நின்ருன். (68)

2792 படைகளைப் பரிந்தாற்றியது.

நின்றவன்பின் மனந்தேறி நேர்ந்தபடை
வீரர்களை நெறியே நோக்கித்
துன்றியொரு முகமாகத் தொடர்ந்தினிதா
யமர்ந்திருக்கச் சூழ்ந்தி யற்றி
அன்றமரில் அடைந்தபெரும் படரகல
ஆய்ந்தருளி அருமை யாக
ஒன்றியநல் லுணவளித்துள் ளுறவூக்கி
யுற்றவரோ டுறைந்தி ருந்தான். (69)

2793 எட்டப்பன் எய்தியது.

ஒட்டிவந்த எட்டப்பன் உரையொன்றும்
பேசாமல் ஊமன் போலப்
பட்டபாட் டொடுதனது படையிலுற்ற
பாரிழவும் பன்னி எண்ணிக்
கெட்டழிய நேர்ந்தாலும் கேளான
துணைவந்து கிடைத்த திந்த
இட்டமுறு சமையத்தும் இதுவானல்!
இனித்துயரம் என்னும் கொல்லோ? (70)

2794 இனைந்து நின்றது.

என்றுபல பலநினைந்தே இகல்சேனைத்
தலைவனிடம் இனித டைந்து
துன்றியயல் அமர்ந்தந்தத் துரைமுகத்தை
நோக்கஅவன் தொடர்ந்து நோக்கி
இன்றிந்தப் படிநமக்கிங் கெய்தியதென்
றுளம்நாணி இனைந்தி னைந்து
கன்றியசிந் தையனுகிக் கடுத்திருந்தான்
அடுத்தவன்பின் கழற லானன்: (71)

2795 வெள்ளைத் தலைவன் விளம்பியது.

கட்டபொம்மன் என்னுமந்தக் கட்டாண்மைத்
திறலுடைய காளை பின்னே
பட்டம்வந்து கட்டியுள்ள இவ்வுமைப்
பாண்டியன்றன் படைமா வீரர்
வெட்டியெறிந் தடுபடையை வெஞ்சூறை
யாடினர்; விளிய விட்டே
எட்டியிவண் அடைந்துள்ளேம்; என்னபழி!
இன்னதென இகழ்ந்து சொன்னான். (72)

2796 எட்டன் கொட்டியது.

அன்னவுரை கேட்டவுடன் எட்டப்பன்
அகம்கலங்கி அளவ றிந்தம்
மன்னனவன் மனம்தேற்றும் வகைசூழ்ந்து
நாமெழுந்து வந்த நாள்தான்
பின்னமுறு புதன்கிழமை ஆதலினிப்
பிழைபட்டுப் பீழை யுற்றோம்;
இன்னநமக் கினிதாக வெற்றியுண்டாம்
ஏந்தல்!என இசைத்து ரைத்தான். (73)

2797 வாளினுல் வந்தது.

நாளினுல் வந்தவொரு நவையென்ன
நயமாக நயந்து நாடிக்
கோளினுல் கொலைமூட்டிக் குடிகெடுக்கும்
எட்டப்பன் குறித்துச் சொல்லத்
தேளினுல் கொட்டுண்டு துடித்தவன்போல்
இருந்தஅவன் சிரித்துத் தெவ்வர்
வாளினுல் வந்ததன்றி மற்றொன்றுல்
இல்லையென மறுத்த றைந்தான். (74)

2798 இருபடையும் இழிந்தது.

உன்படையும் என்படையும் ஒருமுகமா
யுருத்தேற்றி உடன்றெதிர்த்தோம்;
முன்படையாய் நின்றபல பீரங்கிக்
குண்டுகளை முடுக்கி விட்டோம்;

தன்படையொன் றேகொண்டு சமர்க்களத்தில்
அடர்ந்தேதறிச் சார்ந்தா ரெல்லாம்
என்படைய நிணமடையப் பிணமலைகள்
ஆக்கினன் இகல்மேல் என்னே! (75)

2799 நெஞ்சம் இரங்கியது.

அஞ்சாத போர்வீரன் அநியாய
மாப்பகையாய் அமைந்தான் அந்தோ!
எஞ்சாத வலியுடைய இவ்வரசோ
டிசைவாக இணைந்தி ருந்தால்
மஞ்சாரும் புனல்சேர்ந்து வளர்பயிர்போல்
எமராட்சி வளரு மென்ன
நெஞ்சார அவன்புகன்ரு ன்நிலைதெரிந்து
நேர்மையுடன் நேர்ந்தா னன்றே. (76)

2800 வஞ்சன் துணிந்தது.

நெஞ்சறிந்த நிலைமையவன் நீர்மையுடன்
நேர்சொல்ல, நேர்ந்து கேட்ட
வஞ்சமுயர் எட்டப்பன் மனமயர்ந்து
மதிகலங்கி மறுகி வாரி
நஞ்சருந்தி னனென்ன நைந்துழந்தா
னையினும்வன் பகைதான் மூண்டு
மிஞ்சிநிற்கும் விரகுணர்ந்து மீளாது
நீளுமென விழைந்தி ருந்தான். (77)

2801 அந்தி வந்தது.

இந்தவகை யிருவோரும் இகலெதிர்ந்த
நிலையெண்ணி யினைந்து ளைந்து
மூந்தவுரை முறையாடி முடிவதனை
எதிர்நாடி முடிந்து நேரே
வந்தவிடர் தனைநினைந்து வாயாடி
வதிந்திருந்தார்; வதியுங் காலை
அந்தமகன் மனம்போல அந்திவந்த
தவன்போய்த்தன் னிடம் அமர்ந்தான். (78)

2802 ஒளி ஒளிந்தது.

பாரெல்லாம் ஒளிபரப்பிப் பல்லுயிரும்
பணியாற்றப் பகல்செய் தாற்றி
நீரெல்லாம் ஓய்ந்திருமென் றருள்புரிந்து
நெறிசெய்து நீங்கி நேரே
வரெல்லாம் எய்திநின்ற ஒருதலைவன்
பணியினரை யிருத்தித் தான்போய்ச்
சீரெல்லாம் செறிந்தமனை சேர்ந்ததுபோல்
செங்கதிரோன் மேல்பால் சேர்ந்தான். (79)

2803 இருள் கவிந்தது.

கல்வியில்லார் உள்ளம்போல், கருணையில்லார்
தருமம்போல், கற்ற றிந்த
கல்லவரில் நகரம்போல், நரபதியில்
நாடுபோல், நலங்க னிந்த
இல்லவளில் இல்லம்போல், இன்மகவில்
செல்வம்போல், இழிந்த வுலோபி
புல்லியவன் புன்பழிபோல், பொங்கியிருள்
எங்குமே பொதிந்த தன்றே. (80)

2804 இரவு இருந்தது.

அன்றமரில் அடைந்ததுயர் அழிவவமா
னங்களுடன் அமர்ந்து நெஞ்சம்
கன்றியவன் படைவீரர் கண்துயிலா
தயர்ந்திருந்தார்; காவ லாளர்
நின்றயலே பரிகளுடன் நேரலர்நே
ராதபடி நிலைத்து நின்றூர்;
ஒன்றியதன் துணைவருடன் உயர்சேனை
யதிபன்மிக வுளைந்தி ருந்தான். (81)

2805 எண்ணி நொந்தது.

நேர்ந்தநந்தம் படைகளெலாம் நேரலன்றன்
வயவீரர் நேர்ந்த போதில்
ஆர்ந்துலர்ந்த புல்லினங்கள் அனலடர
அழிந்தனபோல் அழிந்த அந்தோ!

சார்ந்தபல போர்களிலும் தறுகண்மை
யுடனின்று சமர்க ளாடித்
தேர்ந்திருந்த திறலோரும் செயலழிந்திங்
கோடினரே! செய்வ தென்னே? (82)

2806 இனைந்து நின்றது.

சிறுநகர்என் றெளிதாகச் செருக்கிவந்து
செருவேறிச் சீர ழிந்து
வெறுமையுடன் இருமுறையும் வெந்துயரம்
மீக்கூர்ந்து வெதும்பி நின்றேம்;
கறுவுடைய இப்பகையைக் கருவறுக்கும்
வகைநாடிக் கடுத்து நம்மோடு
உறவுடனிங் கொட்டியுள்ள எட்டனுமுன்
அஞ்சிஅயல் ஒடுங்கி யுள்ளான். (83)

2807 பலவும் சிந்தித்தது.

இனியென்ன செய்வது? எனப் பலபன்னி
இகல்வலியை எண்ணி எண்ணித்
துனிமிகுந்து முனைபுகுந்து தோல்விவந்த
நிலையெல்லாம் தொடர்ந்து நோக்கித்
தனியுளைந்து மனமுடைந்து தானைமன்னன்
தளர்ந்திருக்க; மான மன்னன்
நனியடர்ந்த சமரிலன்று நண்ணியதும்,
நண்ணுவதும், நாடி நின்றான். (84)

2808 பாஞ்சையர் இருந்தது.

மன்னவன்றன் படைவீரர் மாண்டவரை
எடுத்தடக்கம் மருவச் செய்து
துன்னியுட லூறுபட்டும் தொல்லமரை
மிகவிழைந்து துடித்து வீரம்
மன்னிநின்றூர் தமைப்பேணி மருத்துவங்க
ளுறச்செய்து வாய்த்த வாகை
தன்னைநினைந் தனைவோரும் தனித்தனியே
பெருமகிழ்ச்சி தழைத்தி ருந்தார். (85)

2809 **பாடி புகுந்தது.**

இங்கிவர் இந்த வண்ணம் இனிதுவந் தமர்ந்து மேலே
அங்கிய சமரை நாடிச் சார்ந்துநின் ரூர்ந்து சூழ
மங்கிமுன் மறுகிப் போன மருவலர் பாடி மண்டி
அங்கமர்ந் தாய்ந்திருந்த அமைதியை இனிமேல் காண்பாம்.

2810 **பரிந்து மறுகியது.**

போசறை அடைந்த பின்னர்ப் படையுயர் தலைவன் மீண்ட
கோசரை அயலே வைத்து நிலைகுலைந் துலைந்து வந்த
தேசறு படையைச் சேரச் சீர்பெற நிறுத்தி அன்று
பாசலில் புகுந்த தெண்ணிப் புழுங்கியுள் ளுளைந்து நைந்தான்.

2811 **சேஞ்திபதி சிந்தனை**

வந்ததன் நிலையை எண்ணும்;
வரநின்ற வகையை எண்ணும்;
இந்திய நாட்டை எண்ணும்;
இந்நகர் வீரம் எண்ணும்;
முந்தியிப் பகையை மூட்டி
முடித்தவர் முறையை எண்ணும்;
சிந்திய புகழை எண்ணும்;
சேர்ந்தவெம் பழியை எண்ணும். (88)

2812 **எண்ணி இனைந்தது.**

மூண்டவெம் போரை எண்ணும்;
முட்டிய திறலை எண்ணும்;
மாண்டவர் தம்மை எண்ணும்;
மானமும் மதிப்பும் விட்டு
மீண்டகன் ரோடிப் போன
வெள்ளையர் தம்மை எண்ணும்;
ஆண்டகை நிலையை எண்ணும்;
ஆற்றிய ஆற்றல் எண்ணும், (89)

---

10 மானமைத்துரையை இங்கே **ஆண்டகை** என்று ஆங்கில சேனாபதி வியந்திருப்பது, போரில் இவர் அதிசய ஆற்றல் ஆற்றியுள்ள அந்த அருந்திறலாண்மையை நினைந்து என்க.

2813 **அலமந்து நின்றது.**

எய்திய இழவை எண்ணி, எதிர்நிகில விளைவை எண்ணிச்,
செய்திறம் இன்னதென்று தெரிகிலா தலமந் துள்ளம்
வெய்துயிர்த் தயலிருந்த வெம்படைத் துணைவர் தம்மோடு
உய்திறம் உசாவி நின்ருன் உயர்திறம் உசாவி வந்தான்.

2814 **வெசி வெட்கியது.**

புல்லிய பொட்டல் காட்டில்
பொருந்தியுள் ளவனென் றெள்ளிச்
சொல்லிய *அவனுள் நாணிச்
சொல்லொன் றும் சொல்லா னகி
வல்லியம் பாயத் தப்பி
மருண்டுயிர் பிழைத்து வந்த
மெல்லிய விலங்கே போல
வெருவியங் கிருந்தான் ஓர்பால். (91)

2815 **பலரும் பரிந்தது.**

மற்றவர் எல்லாம் அன்று மருவிய துயரால் வாடி
உற்றவர் ஒருவர் நேர்நேர் உள்ளுற நாணி ஓடப்
பெற்றவர் பிழைத்தா ரேனும், பிழைமிகப் பெற்ருர் என்னு
அற்றவர்க் கிரங்கு வார்போல் அருவுரை யாடி நின்ருர்.

2816 **இறந்தவரை எண்ணியது.**

போரினில் இறந்து பட்ட பொருநருள் வெள்ளை யாளர்
ஆரவீழ்ந் தழிந்தி ருந்தார்; அப்பிணங் களைய டுத்துச்
சீருடன் அடக்கம் செய்யச் சிந்தித்துச் சேனை மன்பால்
நேரிலன் புடன்உரைத்தார் நேர்ந்தவன் ஆய்ந்துநின்ருன்

2817 **பிணங்களை எடுக்க அஞ்சியது.**

மடிந்துள பிணங்கள்கோட்டை மருங்கெலாம் குவிந்தடர்ந்து
படிந்துள ஆத லாலே பரிந்துநாம் எடுக்கப் போனுல்

---

*அவன் என்றது வெசியை. இவன் வீரரோடு பேசியதை 27-வது படலம் 10-ம் பாட்டு முதல் பார்க்க. புலி வாய்க்குத் தப்பிய புல்வாய் போல இவன் கிலி படிந்துள்ளான். அந்த நிலைமையை இது விளக்கியுளது. வல்லியம்=புலி.

அடைந்தவர் தம்மை எல்லாம் அழித்தவற் றோடடுக்கி
மிடைந்திடச் செய்வர்தெவ்வர் வெவ்வலி யுடைய ரம்மா?

2818 இரவில் இரங்கி யிருந்தது.

ஆதலால் இந்த அல்லில் அங்குநாம் போக நேரின்
ஏதமே நேரும் என்னு எதிர்வதை யினிது யம்பி
மீவதனை மிகுந்தி ருந்தான் விடிவுறும் அளவும் சூழச்
சோதனை செய்து கொண்டு துளக்கமுற் றிருந்தார்
[சோர்ந்து.

2819 உதயம் ஆயது.

மணமலி மாலை மன்னன் வாகையால் ஓகை மிஞ்சிக்
கணமலி வீர ரோடு களித்தினி திருந்தான்; காமர்
குணமலை யான மேலோர் குலப்புகழ் பரந்த தேபோல்
குணமலை எழுந்துசெய்யோன் குவலயம் விளக்கினனே.

2820 பாஞ்சைப் பதி பரமனை வழிபட்டது.

பரிதிவா னவன்வந் தெய்தப்பாஞ்சைமா னவன்எழுந்து
மருவிய புனித மான மங்கல நீரில் தோய்ந்து
சுருதியின் படிய மர்ந்து சோதிவேல் முருக வேளின்
இருகழல் இறைஞ்சி ஏத்தி இறைமுறை இயம்ப லானான்.

2821 கருமம் கருதி யிருந்தது.

நுன்னலர் வந்து முட்டித் தோற்றயல் போனு ரேனும்
இன்னமும் வருவர் என்றே எதிர்வதை இனிது நாடி
மன்னிய வீரர் தம்மை மரபுடன் வகைசெய் தூக்கி
மன்னவன் துணையோ டாய்ந்து மருவியங் கமர்ந்திருந்
[தான்.

2822 தெவ்வர் தேம்பியது.

இவ்வகை அரசன் நேர்ந்த இகலினை எண்ணித் தேர்ந்து
வெவ்வலி யுடைய ஞகி வென்றியை விழைந்து நின்றான்
அவ்வழி அமரில் மாண்ட அழிபடை நிலையை எண்ணித்
தெவ்வர்கள் தேம்பிச் செய்த செயலினை இனிமேல்
[சொல்வாம்.

2823 **படுகளம் பட்டது.**

நீண்டவேல் வெடிக ளோடு நேரலர் நேர்ந்து போரில்
மூண்டுமுன் பொருதுநின்ரூர் முரணறமுடிந்து வீழ்ந்தார்
மாண்டவெம் பிணங்கள் கோட்டை மருங்கெங்கும் பரந்து
[மண்டி
ஈண்டிய சவக்கா டாகி யிருந்தன எவரும் காண. (100)

2824 **பிணங்களின் நிலை.**

இரவிடைச் சிறிது வானம் இருண்டுதூ வினதா லங்குப்
பரவிய படுக ளத்தில் பட்டவெம் பிணங்கள் எல்லாம்
விரவிமே லூதி வெய்தாய் வீங்கிநைந் துழந்தி ருந்த
தரமதை அறிந்து மாற்ரூர் சாலவும் வருந்த லானர்.

2825 **பருந்துகள் அருந்தின.**

அருந்திற லுடைய வெள்ளே வீரர்கள் அயல்நாட் டிங்கே
பொருந்திற லுடன்புகுந்து பொருதுநேர் பொன்றி வீழ்ந்தார்
திருந்தலர் சிரித்து நோக்கச் சேர்ந்தவோர் நாதி யின்றிப்
பருந்துணும் பிணங்க ளாகப் படவிடல் பழியா மன்றே.

2826 **நாய்கள் தின்றன.**

நாய்கள்வெங் கழுகு காகம் நரிகளும் நச்சித் தின்னப்
பேய்கள்நள் ளிரவில் வந்து பிடிங்கிவா யுண்ணப் பேணி
ஈய்கள்மேல் மொய்த்து வீழ இழிவுடன் கண்டோர் எல்லாம்
சீயென இகழ்ந்து பேசச் செத்தவர் கிடந்தா ரங்கே. (103)

2827 **தளபதி தயங்கியது**

என்றுளம் வருந்திச் சேனை பதியிடம் சிலர்போய் நின்று
ஒன்றிய நிலையைச் சொன்னர்; உடனவ னுணர்ந்து நன்றே
இன்றுபோய் நின்று நாமங் கெவ்வகை எடுப்ப தென்னத்
துன்றிய துணைவ ரோடு சூழ்ந்துநேர் துணிய லானன்.

2828 **சூழ்ந்து துணிந்தது.**

வெந்திறற் பகைவ னூர்பால் மேவிய பிணங்கள் தம்மைச்
சொந்தமென் றெடுக்க நாம்போய்த் தொடங்கினல் துன்னர்
[சூழ்ந்து
மூந்துறப் பொருவ ராயின் முடிவுமேல் முடியு மன்றே
அந்தரம் தெரிந்த பின்பே அணுகுதல் வேண்டும் என்ரூன்.

2829 **நிருபம் வரைந்தது.**

என்றவன் துணிந்து ரைத்த இயல்பினைத் துணைவர் எல்லாம்
நன்றென உவந்தி சைந்தார்; நாடிய அதனை இந்த
வென்றிவேல் வேந்தன் றன்பால் விநயமாய் விளக்கிப்
[பின்னர்
நின்றதைச் செய்ய எண்ணி நெறிமுறை வரைய லானான்.

2830 **நினைந்து புரிந்தது.**

இறந்துபட் டவரை யெல்லாம் எடுத்தெமர் மரபுக் கேற்ப
மறந்தரு படையின்மாட்சி மருவநாம் புதைக்க வேண்டும்
அறந்தரு வீர மேன்மை யறிந்தநீர் அமைதி யோர்ந்து
சிறந்தருள் செய்ய வேண்டும் சேர்ந்தருள் புரிக!என்றார்:

2831 **தூதுவனைத் தேர்ந்தது.**

கடிதம்ஒன் றெழுதி நின்ற கருணிகன் ஒருவன்கையில்
அடைவுடன் தந்துநேச அமைதியின் குறியைக் காட்டும்
கொடிபுனை கோலத் தோடு கொற்றவ னிடம்போ யுற்ற
படியுரைத் தன்னன் சொல்லும் படியினை அறிந்து மீள்க!

2832 **துணிந்து விடுத்தது.**

என்றவன் தன்னை யுய்த்தான் ஏகுவான் ஏகும் போதே
தென்றிசைக் கால னூர்க்குச் செல்லல்போல் திகில்மேற்
[கொண்டு
நின்றுநான் மீளு வேனே இறந்தங்கு வீழு வேனே
என்றுமே உணர கில்லேன் எனஅவன் உளைந்து போனான்:

2833 **கொடி ஏந்தி வந்தது.**

துறவியர் கோலம் கொண்டு துகிற்கொடி ஒன்று தாங்கி
உறவுறு நிலையில் மெல்ல வுறுகின்ற அவனை வீரர்
திறமுற வியந்து நோக்கிச் சென்றர சிடம்தெ ரித்தார்;
அறவிய மனத்தான்மாடத் தமர்ந்தவன் வரவை ஆய்ந்தான்.

2834 **கோட்டையை அடைந்தது.**

வருகின்ற அவனை உள்ளே வரவிடும் யாதும் அச்சம்
தருகின்ற வகையில் ஒன்றும் சாற்றலிர்!என்று மன்னன்
உருகிநின் றுரைக்கக் கேட்டார் உத்தர வெனநேர் ஓடி
அருகொன்றி அடைந்தான் தன்னை அன்பொன்றிக்
[கொணர்ந்தா ராங்கே.

2835 **ஊமைத் துரையிடம் வேண்டியது.**

வந்தவன் வணங்கி நின்று வன்படை யதிபன் தந்த
அந்தநன் னிருபம் நீட்ட அயல்நின்ற அமைச்சன் வாங்கி
மூந்ததில் உள்ள வெல்லாம் முழுவதும் வாசித்தோர்ந்து
சிந்தையின் நிலையைச் சொன்னன் தெரிந்திவன்
[முறுவல் பூத்தான்.

2836 **மன்னன் இசைந்தது.**

உற்றவர் தம்மை எல்லாம் உயிருடன் கொண்டு வந்து
பற்றலர்க் கிரையாத் தந்து பட்டழிந் தொழிந்த பின்னர்
வெற்றுட லங்கள் வேண்டி விழைந்திது விடுத்தான் நேரே
மற்றிவன் உறவைக் காக்கும் மாண்புநன் றென்ன நக்கான்.

2837 **சவங்களை எடுக்கச் சொன்னது.**

பிணங்களை வேண்டி யுங்கள்
பெரும்படைத் தலைவன் எம்பால்
வணங்கிநேர் கேட்ட தாலே
வாரிநீர் போமின்! ஆனல்
அணங்குறும் ஆயு தங்கள்
யாதொன்றும் இன்றி ஒற்றை
உணங்கிய உடையோ டுற்றே
யுறுசவம் தூக்க வேண்டும். (114)

2838 **மீண்டும் தூதன் வேண்டியது.**

வேறொரு வகையில் வந்து வெம்பிணம் எடுக்க நேரின்
மாறிநீர் மீள மாட்டீர்! என்றுநேர் மன்னன் சொல்லக்
கூறியபடியே செய்வேம் கொற்றவா! என்று கும்பிட்
டேறிய வுவகை யோடங் கெழுந்தவன் இனைய சொன்னன்:

2839 **வாய்ச்சொல்லே வாய்மை.**

சொல்லிய சம்ம தத்தைச் சுருக்கமா எழுதி ஈதல்
நல்லியல் பாம்என்றன்னன் நவின்றனன்; நகைத்து மன்னன்
எல்லியல் வெள்ளைக் காரர் எழுத்தினும், எங்கள் வாய்ச்சொல்
வெல்லியல் உறுதி என்று விளம்பென விரைந்து போனன்.

2840 அதிசயித்து அகன்றது.

போகின்ற பொழுதே மன்னன்போர்முகப் பொலிவும்,வீர
யாகுவின் நிலையும், நீதி வரம்புயர் நெறியும், மாண்பும்,
மாகுன்ற மென்ன நின்ற மாடங்கள் நிரையும், வான்வந்
தாகின்ற வளமும் எண்ணிஅதிசயித் தகன்று போனான்.

2841 சேனைத் தலைவனிடம் உரைத்தது.

போனவன் புகலிடத்தைப் பொருந்தஅங் கிருந்தா ரெல்லாம்
ஆனவோ ரதிசயங்கொண் டடைந்தவன் றனைக்கண் டாற்
[போல்
மானவ னவனை மொய்த்து மகிழ்ந்தனர்; அவன் விரைந்து
சேனைமன் னவன்பால் சென்று சேர்ந்ததை யுரைத்து நின்
[றான்.

2842 உவந்து எடுத்தது.

செற்றமீக் கொண்டு சீறித் தெவ்வென நின்ற னேனும்
உற்றநேர் நீதிமாண்புள்ளுடையவன் உவன்என் றுள்ளே
முற்றவு மகிழ்ந்து மூண்ட மொழிப்படி முறையிற் புக்கு
வெற்றுடல் அடுக்கல் எல்லாம் விரைந்தெடுத் தடுக்கும்
[என்றான்.

2843 கடன்முறை கழித்தது.

சொல்லிய படியே சென்று தொக்கவப்பிணங்கள் தம்மை
மல்லையில் வாரி யள்ளி யுரியதோர் இடத்திற் கொண்டு
வல்லவர் நிலைக்குத் தக்க வரிசையும் மாண்பும் தோன்றக்
கல்லியங் கடக்கம் செய்து கடன்முறை கழித்துவந்தார்.

2844 கோரிகள் வளர்த்தது.

கோட்டையின் வடமேல் திக்கில் கோரிகள் வளர்த்து
[முன்னாள்
வேட்டையில் மடிந்தபேரின் விவரங்கள் விளக்கிக் காட்டி
காட்டிய நகரை வென்றிந் நாட்டினை யடைந்த மேன்மை
காட்டிய இன்றும்அந்தக் களத்தினைக் கவின்செய் கின்
[றார்.

2845 மாண்டவர் மறைந்தார்.

சீமையில் பிறந்தி ருந்தார் திரைக்கடல் கடந்து வந்து
நாமுறு பொருள்கைக் கொண்டுதாயகம் சார்ந்திடாமல்

ஊமையன் நகர்வாய் மாண்டார் ஓரிவாய் மீண்டார் மீண்டு
பூமிவாய் மறைந்தார்; ஊழின் போக்கையார் புகல வல்லார்?

2846 நாட்டவர் நகைத்தார்.

பகைப்புலம் புகுந்து செத்த படுபிணக் காட்டை மேலே
தொகைப்புல மாகச் சாகத் துன்னிநின் ரூர்கள் வந்து
தகைப்புலம் போடெடுத்துச் சார்தொறும் அயலே சார்ந்து
நகைப்புலம் பொருந்த நோக்கிநண்ணினர் நாட்டி லுள்ளார்.

2847 மன்னன் வீரர் உன்னி நின்ரூர்.

ஈவின்றி எடுத்தார் என்ன இகழ்ந்துவெங் காயும் பேயும்
ஓய்வின்றித் திட்டி நிற்க வுறுதொழில் ஓய்ந்து போனூர்;
தேய்வின்றி நின்ற கீர்த்தித் திறல்மன்னன் சேஜை வீரர்
காய்வின்றிப் பகையைவெல்லும் கருமமே கருதிநின்ரூர்.

2848 வெள்ளைத் தளபதி வினவியது.

பொருகளம் புனித மாக்கிப் புகுந்தவர் தம்மை நோக்கி
மருவல ரிடம்அடைந்து மருவிய தொழில்கள் செய்தீர்!
தருவிடை யூறே தேனும் சார்ந்ததொன்றுண்டோ? என்று
செருவடர் சேஜை மன்னன் தெரிவுற வினவி நின்ரூன்.

2849 வியந்து மகிழ்ந்தது.

ஒன்றுமே யில்லை எங்கட் குதவியாய்ச் சிலரை ஏவி
நின்றவர் அயலே நின்று நேர்மையே செய்தார்என்று
சென்றவர் சொல்லக் கேட்டுச் சேஜைவேந் தகமகிழ்ந்து
நன்றிவ னன்ரே நீதி நரபதி எனப் புகழ்ந்தான். (126)

2850 *சீரான போர் வீரன்.

போரெதிர் மூண்டபோதே பொருநரைப்பொருதுபோக்க
வீரமா மறலிஎன்ன வெகுண்டுவென் றடக்கு கின்ரூன்:
ஆரம ரின்றி நின்ற போதினில் அருள்மீக் கூர்ந்து
சாரமா யமர்ந்து சாந்தம் சார்ந்துளான் எனவி யந்தான்.

---

*போரில் இறந்துபட்ட கும்பினிப் படைகள் பாஞ்சைக் கோட்டை அருகே பரிதாபமாய்க் கிடந்தன. அந்த உடல்களை எடுத்து இராணுவ மரியாதையோடு புதைக்க விரும்பிய

ஊமையனைச் சீமையர் வியந்தது.

2851 ஊமையன் இயல்பைஎல்லாம் ஓர்ந்துணர்ந் துவந்து
[நோக்கிச்
சீமையன் வியந்து நின்ற செயலினைச் சிந்தை செய்வார்
நேமமும் நெறியும் நீதி நிலைமையும் நேர்மை யாவும்
ஓமையாய் எவர்க்கும் இன்பம் ஈயுமென் றினிது தேர்வார்.

பெருந்தகைமையன்.

2852 இருந்தவர் யாவரும் எதிரி யாயினும்
பெருந்தக வுடையவன் என்று மன்னவன்
திருந்திய பண்பையும் செயலை யும்புகழ்ந்
தருந்தலோ டாடல்கள் ஆர்ந்து வந்தனர். (129)

கருமம் தேறினர்.

2853 சமர்நிலை யாதுமே தம்முட் கொண்டிடா
தமைதியாய் அன்றவர் அமர்ந்தி ருந்தனர்;
எமர்களும் இகலுதல் ஏது மின்றியே
கமையுடன் இருந்தனர் கருமம் தேறியே. (130)

சீனாத் தலைவன் ஊமைத்துரையிடம் அனுமதி வேண்டிச் சமாதானக் கொடியுடன் (a flag of truce) ஒரு தூதுவனை அனுப்பினான். இவர் உடனே இசைந்தார். யாவும் எடுத்து முறைப்படி அவர் அடக்கம் செய்தார். தோல்வி நிலையில் இருந்தபோதிலும் அன்று (1-4-1801) அவர்க்கு யாதொரு தீங்கும் புரியாமல் ஊமைத்துரை உள்ளம் இரங்கி இருந்தார். இவரது அமைதியையும் அருளையும் நெறிமுறைகளையும் நினைந்து அந்த வெள்ளைத் தலைவரும் வியந்து நின்றார்.

"The enemy, setting us a bright example of humanity, made not the smallest attempt to disturb us." (R. G)

"பரிதாப நிலையிலிருந்த எங்களுக்கு எதிரி யாதொரு தீங்கும் செய்யவில்லை; சிறந்த மனிதத் தன்மையின் உயர்ந்த கருணைக்கு அவன் அன்று ஓர் உதாரணமாயிருந்தான்" என்று இவ்வாறு அவர் வரைந்து வைத்துள்ளனர். இதனால் இவரது இயல்பான உயர்நிலைகள் உணரலாகும்.

பொருதல் தீது.

2854 அன்றுபோய் மற்றைநாள் அடையச் சேனைமன்
நின்றதன் துணைவரை நோக்கி நாமினித்
துன்றிய படைகளைத் தொகுத்து வந்தன்றி
ஒன்றிய போரினை உளற்றல் தீதென்றான். (131)

யாவரும் இசைந்தனர்.

2855 அதிபதி உரைசெய யாரும் நன்றென
மதியுடன் பட்டனர் மறுகி எட்டப்பன்
விதிவினை விதுவென மேவி யன்புடன்
துதிபல செய்தனன் தொழுது சொல்வினான்.

எட்டன் தீட்டியது.

2856 நாட்டினில் மேலவர் என்ன நண்ணினீர்!
தீட்டிய புகழொடு செல்வம் சேர்த்தனிர்!
ஈட்டிய வலியிலை என்று நின்றிங்கு
மீட்டினி ஏகினை மேன்மை யில்லையே. (133)

கோள் மூட்டியது.

2857 இவ்விடம் விட்டுநாம் ஏக நேரினே
வெவ்விட மனையவெம் பகைவர் மீறியே
வவ்விமுன் வழியிடை மறித்து வன்துயர்
எவ்வமீக் கூர்ந்திட இயற்று வார்களே. (134)

குறித்து நீட்டியது.

2858 இட்டவெஞ் சிறையினை இடித்து வந்தனம்;
திட்டமாய்க் கோட்டையைக் கட்டிச் சீருடன்
பட்டமும் கட்டினேம்; பகைத்து வந்துமேல்
முட்டினர் தமையெலாம் முடித்து விட்டனம்.

பழியே நேரும்.

2859 என்றுளம் செருக்கியே இகல்க ளுக்கிமேல்
கன்றிய மனத்தராய்க் கடுத்தி ருக்கின்றூர்;
இன்றிவர் இகழ்ந்திட இடம்பெ யர்ந்திடின்
துன்றிய பழிகளே சுமக்க நேருமால். (136)

பகைவர் நகைப்பர்.

2860 கடுத்துமுன் வந்தஅக் காலன் பொன்றினுன்;
அடுத்துப்பின் வந்தவர் அஞ்சி ஓடினர்;
மடுத்தும்வன் படையுடன் மண்டி முட்டியே
விடுத்துப்பின் போயினர் எனவி ளம்புவார்.

வெள்ளையரை வேரறுப்பான்.

2861 வெள்ளையர் யாரையும் வேர றுத்திங்கே
உள்ளவர் எவரையும் ஒடுக்கி ஊமையன்
தெள்ளிய சீமையென் றிந்தத் தேசத்தைக்
கொள்ளவே இவனுளம் கொண்டு நிற்கின்றுன்.

ஓடலாகாது.

2862 ஓடுதல் ஒழிந்திவண் உற்று றைந்துநாம்
நாடிய படைகளை நன்கு கூட்டியே
நீடிய இவனேநேர் நிலைகு லைத்துமேல்
சூடிய வாகையைச் சூட்ட லாகுமே. (139)

இடம் பெயரின் கடும் பழியாம்.

2863 அடிக்கடி வந்துவந் தகலின் அச்சம்போம்;
பொடிக்கடி கண்டபுன் புலியின் குட்டிபின்
இடிக்குரல் வேழமும் எற்றிக் கவ்வுமிப்
படிக்கிடங் கொடுப்பது பழிய தாகுமே. (140)

விளிவு நேரும்.

2864 பாளையப் பட்டெலாம் பகைக ளாயிவன்
மூளையை யுறுஞ்சவே மூண்டு நின்றுள;
நாளைநாம் கடத்தினே நாசம் செய்வனிவ்
வேளையை விட்டிடின் விளிவு நேருமால். (141)

சேனைகளைத் திரட்டுக.

2865 ஆகையால் இவணிருந் தெழுதிச் சேனைகள்
ஓகையாய் உடன்வரப் பெற்றுள் ளூக்கமாய்ச்
சேருடன் பொருதுதெவ் வழித்துச் சீக்கிரம்
வாகையைக் கொள்ளலாம் வழியி தென்றனன்.

பரிந்து கூறினன்.

2866 கொடியவெங் கோளரவுக் கூடி வஞ்சனை
நெடியபுன் பொருமையே நீண்ட எட்டப்பன்
அடியவன் போலவண் அமர்ந்தன் ஞருளம்
படியவிவ் வுரைகளைப் பரிந்து கூறினன். (143)

தளபதி இசைந்து எழுதினன்.

2867 அன்றவன் விரகுடன் அறைய நன்றென
நின்றசே னதிபன் நெடிது தீட்டியே
வன்றிறற் படைகளின் வரவு நோக்கினன்
ஒன்றியங் கிருந்தனன் உறுதி நாடியே. (144)

2868 படைகள் வந்தன.

இரண்டு வாரங்கள் கழிந்ததும் இருங்கடல் என்னத்
திரண்ட சேனைகள் வந்தன திசைதொறு மிருந்து
முரண்ட ரும்படை மூண்டதைக் கண்டதும் எட்டன்
புரண்ட சிந்தைய னுய்ப்பெருங் களிப்பினுட் புகுந்தான்.

2869 எய்தி இருந்தன.

வந்த சேனைகள் யாவையும் வரம்புசெய் தொருங்கே
பந்தி பந்தியாய்ப் பகுத்துடன் வைத்தனன் பணித்தே
அந்த நாளினில் அடைந்தவம் மூலவன் பலம்போல்
இந்த நாளினில் எய்தியங் கிருந்தன இரைந்தே. (146)

2870 நாளும் வந்தன.

நதிகள் பற்பல நவமுறப் பெருகியோர் முகமாய்
அதிக வேகத்தின் அடர்ந்துவந் தார்ந்தன போலத்
துதிகொள் பாஞ்சையம் பதியயல் தினந்தொறும்
[தொடர்ந்து
விதிகொ டுந்தவந் தடைந்தன விரைந்துவெம் படைகள்.

2871 நயந்து உறைந்தனர்.

அடைந்த அப்பெருஞ் சேனைகள் அணியணி யாக
மிடைந்தி ருந்தன மிடுக்குடன் மேலுற விரிந்து
தொடர்ந்த தானையம் பதிகளும் துணிவுமீக் கொண்டு
கடந்த யாவையும் வினவியங் குறைந்தனர் நயந்தே.

2872 அணி வகுத்து இருந்தனர்.

மூண்ட போர்தொறும் முனைந்துமுன் புகுந்தவர்முடிந்து
மாண்டு வீழ்ந்திட மற்றவர் மறுகிநின் றேறங்க
ஈண்ட வெற்றியாய் நிற்கின்ற பாஞ்சையை நேரே
ஆண்ட ழித்திட வேண்டுமென் றணிவகுத் திருந்தார்.

2873 பாஞ்சைப் பதி பணித்தது.

படைகள் வந்துள பான்மையைப் பாஞ்சைமன் னவனும்
இடைய றிந்துதன் இனத்துள வீரரை எல்லாம்
அடைய வந்திடும் படியெங்கும் ஆணையை விடுத்தான்:
விடைகள் என்னவே வீறுடன் வந்தனர் விரைந்தே.

2874 குலவீரர் திரண்டது.

நன்கு லத்துறு பாளையப் பட்டெனச் சார்ந்த
மன்கு லத்திரு வகையினும் மன்னிய படைகள்
கொன்கு லப்படைக் கலன்களைக் கைகளில் கொண்டு
முன்கு லப்பகை முடித்திடத் துடித்துமுன் வந்த. (151)

2875 பாளையகாரர் சேர்ந்தது.

காடல் மாகுடி காமரு சோலைசூழ் குளத்தூர்
ஓட மைந்தவம் மன்னவர் இருவரும் உறவாய்ப்
பாட மைந்ததம் படைமுனம் படர்ந்தபின் பண்பாய்
ஆடல் வெண்பரி ஏறிவந் தன்புடன் அடைந்தார். (152)

2876 உவந்து உபசரித்தது.

வந்த மன்னரை இருந்தமன் வரிசையின் கோக்கி
முந்தும் அன்புடன் உவந்துப சரித்தனன் முறையே:
இந்த வேளையில் இன்புறு துணைகளா யிசைந்தீர்!
எந்த வேளையும் இனம்செய்வ தெவர்செய்கு வாரே?

2877 விழைந்து நின்றது.

என்று மன்னவன் இனியநன் முகமன்கள் இயம்பித்
துன்றி யுள்ளதன் படைகளைத் துறைதொறும் பேணி
நன்றி யுள்ளவெம் பகைநிலை யுளவுக ளாய்ந்து
வென்றி எய்திடும் விதங்களை விழைந்துவீற் றிருந்தான்.

2878 **கருவிகளின் நிலை.**

கொடிய பீரங்கி முதலிய கொலைக்கொடுந் தீய
வெடிக ளங்கவ ரிடநிறைந் திருந்தன; இவர்பால்
பிடிய டங்கிய வாள்களும் வேல்களும் பெரிதாய்
நெடிது நீண்டுள வல்லய வலிகளே நின்ற. (155)

2879 **நெருப்பு என இருந்தார்.**

மாறு பட்டுள கருவிகள் வகைவகை யாக
வேறு பட்டுள வாயினும் வீறுடன் போரில்
ஊறு பட்டுள கும்பினிப் படைகளு ளன்று
நீறு பட்டுள நெருப்பென நேர்ந்தவ ணிருந்தார். (156)

2880 **உன்னி நின்றது.**

முன்னம் போரினில் உடைந்தவர் முறிந்துபோனது
[போல்
இன்ன போரிலும் தோற்றவர் இழிந்தொளிந் தோடி
மன்னு பாஞ்சையங் கோட்டையை மருவுவார் என்றே
உன்னி நின்றனர் பாஞ்சையர் உறுதிமீக் கூர்ந்தே. (157)

2881 **எதிரி நிலை அறிந்தது.**

இவர்கள் எண்ணிய படியந்த இடத்தைவிட் டிரிந்தே
அவர்கள் சென்றிலர்; ஆவதை அயலமர்ந் திருந்தே
கவர்க ளோடங்குக் கணித்தனர் நுனித்துடன் கலந்தே;
எவர்க ளேயந்த வெள்ளையர் உள்ளங்கள் அறிந்தார்?

2882 **வெள்ளையர் கருதியது.**

இடம்பெ யர்ந்தினி ஏகிலல் இழிவுகள் எங்கும்
தொடர்ந்து சூழ்ந்திடும் என்னவே தானமன் துணிந்து
திடம்ப டிந்துயர் பாசறை யாகவே செய்து
தடம்படிந்தங்கே சதுருடன் சமரையாய்ந் திருந்தான்.

2883 **வேரூன்றி இருந்தது.**

ஓடி மீள்வது பழுதென உறுதியாய் ஓர்ந்து
நாடி யங்கவன் இருக்கின்ற நாட்டத்தை நயமாய்
நேடி நெஞ்சுறத் தெளிந்தனன் பாஞ்சைமன் நேரே
கூடி மேல்வரு போரினைக் கூர்மையாக் குறித்தே. (160)

2884 பாசறை அமைத்தது.

பாடி வீடெனப் பாசறை நேசமாய்ப் படைத்து
கூடி நேர்ந்துள படைகளை நிலைபெற நிறைத்து
வாடி கொண்டுயர் பாஞ்சையை வெல்லுறு பொழுதை
நாடி நின்றனன் நலமுடன் பலபல நயந்தே. (161)

2885 பாதுகாப் புற்றது.

மாரம் மூன்றுகள் கழிந்தன வந்தநாள் பொருது
கோர மாகவே மடிந்தன கும்பினிக் கும்பல்
ஓர மாகவே ஒதுங்கியிங் கிருந்துள ஊக்கி
நேர நேரிலே நீறுசெய் திடுமென நிறுத்தி. (162)

2886 ஊமைமன் இருந்தது.

ஊமை மன்னவன் சேனைகட் குறுதிகள் உரைத்துச்
சேம மாகவே ஆயுத வகைகளைத் திருத்தி
நாம வீரர்கள் தலைவரை நயமுடன் ஊக்கி
நேம மாகவே இருந்தனன் நேர்வதை நினைந்தே. (163)

2887 உணர்ந்து நின்றது.

பகைவர் சூழ்ந்துள படிகளைப் படுசமர் வலியை
நிகைபு ரிந்தவர் விரகுடன் விரிகின்ற விளைவைத்
தொகைய தாகவே கருதிஇத் தோன்றலும் துணிந்து
பகைபு ரிந்தெதிர் நின்றனன் வருவன உணர்ந்தே.(164)

28–வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 2887.

———

சேனாதிபதியாய் வந்துள்ள சீமைத்துரை ஊமைத் துரையிடம் தூது அனுப்பி ஆதரவு பெற்றதும், இவரது நியல்பான குணநலன்களை உணர்ந்து அவர் உயர்வா வியந் துள்ளதும், இந்

இருபத்தொன்பதாவது

பாசறை படிந்த படலம்.

பாஞ்சைக் கோட்டை மேல் மூண்டு வந்து பொருத ஆங்கிலச் சேனைகள் மாண்டு மடிந்து போயின. போகவே சேனாதிபதி சிந்தை தளர்ந்தான். நேர்ந்துள்ள நிலைமைகளை விளக்கி மேலும் பெரும் படைகள் வேண்டும் என்று மேலே எழுதினன். தானைகள் வந்து சேர்ந்தன. பாசறையில் பலமாயிருந்து கொண்டே எதிரியை வெல்ல வேண்டும் என்று உள்ளம் துணிந்தான். காலம் வலி முதலிய நிலைகளைக் கருதி நின்றான். உரிய சமையம் வரவே படைகளை ஊக்கி நடத்திப் போராட நேர்ந்தான். அந்தப் போராட்ட நிலைகளை இதில் முறையே அறிய வருகிறோம். பகைவர் மேல் போருக்குச் சென்றவர் சேர்ந்து தங்கியிருக்கின்ற இராணுவ நிலையத்துக்குப் **பாசறை** என்று பேர்.

2888 **முன்னி முனைந்தது.**

இன்ன வண்ணமிம் மன்னவன் இருக்கவும், இகல்மேல்
மன்னி நின்றவம் மருவலர் சேனையின் பதிதான்
துன்னி நின்றதன் துணைவர்க ளுடனினி தாய்ந்து
முன்னி நின்றவெம் போரினை மூட்டிட முனைந்தான். (1)

2889 **சேனைத் தலைவன் நிலை.**

படைகள் வந்துள பரப்பினைப் பார்த்துளம் களித்தான்;
நடைகள் ஏறிய பரிகளின் திரள்களை நயந்தான்;
தடைகள் இன்றியே எங்கணும் வென்றுள தலைவர்
அடைய வந்துள அடல்களை அறிந்தகம் மகிழ்ந்தான்.

2890 **சிந்தைக் களிப்பு.**

இன்று பாஞ்சையை எளிதினில் வென்றுகைக் கொண்டு
வென்றி வீறுடன் நின்றுள பகைவனை வேரோடு
ஒன்று மின்றியே ஒழிந்தனன் என்றுநாம் செயலாம்
என்று சேனையின் அதிபதி எணியிறு மாந்தான். (3)

2891 மூண்டு நின்றது.

உற்ற தானை யந் தலைவரை உறவுடன் நோக்கி
முற்ற வுற்றுள நிலைகளை முறைமுறை உணர்த்தி
பற்ற லன்உயர் வலிகளைப் படைகளைப் படுத்து
வெற்றி கொள்ளவே வேண்டிமுன் மூண்டனன் விரைந்
[தே.

2892 நீண்டு எழுந்தது.

ஆண்டு நின்றவர் எவரையும் அடலுடன் ஏவி
மாண்டு தானையின் அதிபதி முரணுடன் முனைந்து
சண்டு போரினை இன்றொடு முடிவுற முடிக்க
வெண்டும்என் றவன்நீண்டவெண் பரிமிசை நிமிர்ந்தான்.

2893 நீர் மேல் நெருப்பு.

கரின் மேல்நெருப் பெனுமுயர் தளபதி நேரே
போரின் மேலுறும் படிபெரும் படைகளைத் திரட்டிக்
காரின் மேலுறும் உருமெனப் பீரங்கி கடுப்பப்
பாரின் மேலுறு காலெனும் பரியின்மேல் பாய்ந்தான்.

2894 தளபதிகள்.

கின்ற தானை யந் தலைவர்கள் யாவரும் நிரையாய்
வென்றி நின்றதம் பரிகளி லுருத்துட னிவர்ந்து
வெல்றி வேட்கைய ராய்வெடித் திரள்களை ஏந்தித்
துன்றி யோங்கிய படைகளை ஏவினர் துணிந்தே. (7)

2895 படைகள்.

போரென் றேவவும் பொருநர்கள் வெடிகள்வேல்
[முதலாச்
சார நின்றவெங் கொலைப்படை சதுருடன் தாங்கி
நேர நின்றனர்; நெடும்பரி எழுந்தன; நேரே
காரெ ழுந்தன வெனக்கடும் பீரங்கி கடுத்த. (8)

2896 * போரில் மூண்ட தேதி.

நித்தி னைத்நிங்கள் பத்தினில் சேனைகள் செருவில்
மத்த டம்ந்துதம் முளத்துறு கடுப்புட னூக்கிப்

பத்தி பத்தியாய்ப் படர்ந்தன பரிப்படைபொங்கி *
மொய்த்த சாகரத் திரையென முறைமுறை மூண்ட.

2897 **பீரங்கி வரிசைகள்.**

முன்னு றக்குறித் தியற்றிய மோருசா மீதில்
மன்னு பீரங்கி வடதிசை வரிசையின் வைத்தார்;
அன்ன பீரங்கிப் படையயல் அருந்திறல் வீரர்
துன்னு தீவெடித் திரளுடன் துணிந்தங்கு நின்றூர். (10)

2898 **இயங்கள் இயங்கின.**

பல்லி யங்களும் படையுளம் அடலுறப் பகுத்துக்
கல்லென் றெங்கணும் கலித்துடன் எழுந்தன கடுத்து
வல்லி யங்களே வந்தன வன்சமர்க் கென்னக்
கொல்லி யற்படை கொண்டுயர் வீரர்கள் கொதித்தார்.

2899 **குதிரை வீரர்கள்.**

தானை வேந்தர்கள் தத்துவாம் பரிகளில் தாவி
மான வெந்தறு கண்ணராய் மண்டினர் மருங்கே
சோனை மாரியிற் சுடுதிற லுடைவெடி வீரர்
வானை வென்றிடும் வலியராய் வலித்துடன் வந்தார்.

2900 **போரில் ஏறினர்.**

முன்னின் றூர்களை முறைமுறை மேலுற முடுக்கிப்
பின்னின் றுரெல்லாம் பேரணி போரணி பூண்டு
மன்னி ஏறினர்; வாளரி யேறென மண்டி
என்னி தாமென ஏவரும் ஏங்கினர் இரைந்தே. (13)

---

*கி. பி. 1801 மார்ச்சு மாதம் 31-ந் தேதி பாஞ்சாலங் குறிச்சி மேல் மூண்டு கும்பினியார் போராடினர். தளபதி களோடு பல போர் வீரர்கள் மாண்டனர். அன்று இறந்து பட்ட பிணங்களை மறுநாள் 1—4—1801-ல் ஜமைத்துரை யிடம் உத்தரவு பெற்று எடுத்துப் போய்ப் புதைத்தனர். சேனாதிபதி மக்காளி (Macaulay) அங்கேயே பாசறை அமைத்துத் தங்கி யிருந்தார். பெரிய படைகள் வந்து சேர்ந்தன; உரிய சமையம் பார்த்து மீண்டும் 22-4-1801ல் போராட மூண்டார். அந்தக் காலக் குறிப்பை இது காட்டி யுள்ளது. யாவும் கருதி உணர்ந்து கொள்ள வேண்டும்.

2901 பாஞ்சை வீரர் பாய்ந்தது.

வெள்கா வீரர்வெம் படைகள்மேல் எழுதலும் விரைந்து
துள்ளி மன்னவன் படைகளும் சுடரயில் மழுவாள்
உள்ள வெங்கொலைக் கருவிக ளுக்கிநேர் எடுத்துத்
தள்ள ருந்திற லோடெதிர் தாக்கினர் சமரில். (14)

2902 போர்க் கருவிகள்.

கந்தி வல்லயம் வேல்வெடி கப்பணம் தண்டு
பந்தி பத்தியாய்ப் படைக்கலன் பலவும்கை ஏந்தி
ஏந்த ரிந்தையர் ராயுருத் துடன்றெதிர் ஏறி
வந்த கந்திறல் வீரர்வெஞ் சமர்க்களம் விரைந்தார். (15)

2903 பீரங்கிகள் பொழிந்தன.

இருந்து றப்பெரும் படைகளும் எதிரெதிர் இகலிப்
பொருந்தி றம்படப் பொங்கிமுன் புகுந்தன; புறத்தே
கருமு கிற்கணம் இடித்தெனப் பீரங்கிக் கணங்கள்
முருமு கம்பட ஒலித்துடன் பொழிந்தன வுடன்றே. (16)

2904 குண்டுகளுக்கு ஒதுங்கினர்.

வந்து பாய்ந்திடுங் குண்டுகட் கிடங்கொடாது ஒதுங்கி
அந்த ரந்தெரிந் தயலயல் இடந்தொறும் பதுங்கி
முந்து போர்முனை முனைந்துமுன் மூண்டெதிர் அடர்ந்து
பந்தி பந்தியாய்ச் சென்றுவெம் படைகளைப் படுத்தார்.

2905 வீரர்கள் வீந்தது.

தூரம் நின்றவர் சுடுந்தொறும் சுடுந்தொறும் சுருண்டு
வீரர் பற்பலர் விழுந்தனர் இவ்விடம்; அங்கே
கோ டம்திவர் நெருங்கிவாள் வீசிய நிலையால்
பாய டைந்துவெம் பருவுடல் புரண்டன பலவால். (18)

2906 வேல்கள் வீசினர்.

மன்ற தீயென வாளரி யேறென மதமீக்
கொண்ட வெம்புலி சீறிமுன் குதித்தெனக் கொதித்துத்
தண்டு ளெறிநேர் தறுகண ராய்ச்சம ருக்கிப்
பிண்டி பாலங்கள் ஆதிய பெரும்படை பெய்தார். (19)

2907 **வில்லுகள் எய்தனர்,**

வில்வில் எய்திடு கல்லுகள் ஏறின; வேல்கள்
ஒல்லை ஏறின; உயர்மழு முசலங்கள் சூலம்
வல்லை ஏறின; வல்லயம் ஏறின; வாள்கள்
எல்லை இல்லன எங்கணும் ஏறின இரைந்தே, (20)

2908 **எதிரிகள் சுட்டனர்.**

பரிகள் மேல்வரு வார்களைப் பாய்ந்திவர் வெட்டி
அரிக ளேறுகள் போல்அட லாற்றினர்; அவர்தாம்
எரிகள் எங்கணும் சிந்திட எதிரெதிர் சுட்டுக்
கரிக ளாகவே கதித்தம ராடினர் கடுத்தே. (21)

2909 **இவர்கள் அட்டனர்.**

குறிகள் கூர்ந்தவர் சுடுந்தொறும் குழிகளில் குனிந்து
மறிகள் போன்றிவர் மண்ணெடு பதுங்கி முன்னேறி
வெறிகொள் வீரராய்ப் பாய்ந்துவேல் வாள்கொடு வீசப்
பொறிகள் சிந்தியேதறிகள்போல் விழுந்தனர்புரண்டே.

2910 **சாய்ந்து மாய்ந்தனர்.**

எட்ட நின்றவர் சுட்டிடும் போதிகல் செருக்கிக்
கெட்டி யாளராய்க் கெக்கலி கொட்டினர் கெழுமிக்
கிட்டி நேர்முகம் படர்ந்திவர் கெலிப்புடன் வெட்டத்
தட்ட ழிந்தவர் சாய்ந்தனர் மாய்ந்தனர் தணந்தார்.

2911 **வீர வெறிகள்**

நின்ற நின்றதோர் இடமெலாம் நெடியவேல் ஏந்திச்
சென்று சென்றுநேர் எறிந்திடச் சிதைந்தவர் அழிந்தார்
கொன்று கொன்றுவெங் குருதியில் குளித்திவர் கொதி
[த்து
வென்றி வென்றிஎன் றெங்கணும் வெறியொடு திரிந்
[தார்.

2912 **சூறை ஆடினர்.**

ஏறி மேலடர்ந் தெதிரிகள் தலைகளை யுருட்டி
ஊறி எங்கணும் உதிரங்கள் பெருகிட வுருத்துச்
சூறை யாடினர்; சுடுபடை சுருங்கிமெய் துடித்து
மாறி யோடின வளியுறு செல்லென மறிந்தே. (25)

2913 தலைவர்கள் மூண்டனர்

அன்னை போதினில் அரும்படைத் தலைவர்கள் அடர்ந்து
பின்னை மாகிய தானையைப் பிழையறத் திருத்தி
முன்னை மேற்றிவெம் முரணுடன் அரண்செய்து மூண்டு
வன்னை வாம்பரி யிவர்ந்தட லாற்றிட வந்தார். (26)

2914 தருக்கி நீண்டனர்.

மைமு டைந்துபின் வாங்கிய யாவரும் மீண்டு
சினம டைந்தெதிர் ஏறினர்; சேனையின் தலைவர்
முனைமி டைந்துதேர் சுடுமென மூட்டினர்; மூட்ட
னலமடைந்துவெம் படைக்கலம் எரிபட எழுந்த. (27)

2915 வெடிகளின் விளைவுகள்.

வெடிகள் சுட்டனர்; வேல்களை ஓச்சினர்; விரைந்து
கொடிய பீரங்கிக் குண்டுகள் பொழிந்தனர்; கொதித்
[துப்
படிய டைந்திடா வகைநெடும் பரிகளைக் கடாவி
நெடியில் வந்தனர் படைகளை நூறினர் நுனித்தே.

2916 எங்கும் கரும் புகை.

மண்டி வெம்புகை எங்கணும் மருவிட வாள்வேல்
தண்டு கொண்டெதிர் தாக்கிடத் தழலொடு முழங்கிக்
கொண்ட பீரங்கி குண்டுகள்பொழிந்திடக் கொடிதாய்ச்
சண்டை மூண்டது தளமழிந் துருண்டது சரிந்தே. (29)

2917 துள்ளி மாண்டனர்.

வெள்ள வெந்திறற் படையடர்ந் தேறிவெவ் வெடிகள்
கொள்ள யாகவே கொளுத்திடக் கோன்படை வீரர்
துள்ளி வீழ்ந்தனர்; துடித்துயிர் மாண்டனர்; சுழித்தே
உள்ளு ருத்தனர் உருத்தெரி வில்லனர் உருண்டார்.

2918 அழிவுகள் நீண்டன.

பொழியும் குண்டுகள் அனலெனப் பாயினும் புடைபே
ழிகி லாதெதிர் உடன்றனர் உயிரழிந் தொழிந்தார்;
அழிவு கண்டவ ரளவில ராகவே படையின்
கழிவு கண்டது கலங்கின் றயர்ந்தது கரிந்தே. (31)

2919 பாஞ்சையர் கொதித்தனர்.

படையு ழிந்திடு பான்மையைப் பார்த்ததும் பாஞ்சை
அடைய நின்றவர் யாவரும் அகங்கரித் தெழுந்தார்:
விடைகள் என்னவே வெகுண்டுவெம் படைகளை ஏந்தி
இடைக லந்தனர் இடைந்தவர் ஏறினர் எதிர்ந்தே. (32

2920 தலைவர்கள் விரைந்தனர்.

இன்று போரினில் எதிரிகள் எவரையும் எமன்வாய்
தின்று தேக்கிடச் செய்திடு வேமெனச் சினந்து
கொன்றி ரத்தங்கள் குடித்திடும் கொலைவெறி யோடு
வென்றி வீரவெந் தலைவர்கள் விரைந்தனர் வெகுண்டே

2921 பரிகளில் பறந்தனர்.

சின்ன பொம்மெனும் திறல்மிகு சேனையந் தலைவன்
வன்ன வாம்பரி யிவர்ந்தொளிர் வாள்கரத் தேந்தித்
துன்னி நின்றதன் படைகளைத் துறைதொறும் ஏவி
மன்னன் நெஞ்சகம் மகிழ்ந்திட வன்களம் புகுந்தான்.

2922 படுகளப் படுத்தினர்.

சண்ட மாருதம் எனப்படர் பரிமிசைத் தனியே
மண்டு வெங்கொடு மறலிபோல் மருவிய வீரன்
கொண்ட வாளினுல் கொலைத்தலை பலபல துமித்துக்
கண்ட துண்டங்கள் களமெலாம் கண்டிடக் கடுத்தான்.

2923 தலைகள் உருண்டன.

வீச்சுக் கொன்பது தலைவிழ விரைந்துவாள் விதிர்த்து
மூச்சுக் கோர்கண முடியுமுன் முனைமுகம் திரிந்து
பேச்சுக் கோங்கிய பெருந்திறல் புகுந்தமர் புரிந்த
காட்சி நோக்கினர் காவலன் படைஞர்கள் களித்தார்.

2924 குதிரைகளின் திறல்.

காலி டுக்கையும் கலினத்தின் அசைப்பையும் கைவாள்
மேலெ டுப்பையும் வீச்சையும் வெண்தலை துள்ளிப்
பாலெ டுக்கடுக் காய்விழும் பான்மையும் பார்த்துக்
காலை னேவெனக் கருதலர் கருதினர் கடுத்தே. (37)

2925 வீரர் வெந்திறல்.

எட்ட நின்றிடில் குண்டுக ளிட்டெளி தாகச்
சுட்ட ழித்திடு வாரெனத் துணிந்துடன் துணைந்தே
ஏட்டி யுட்புகுந் துருத்துவெம் பரியொடு பறந்து
வெட்டி வீழ்த்தினன் வீரவெங் திறலொடு விரைந்தான்.

2926 பாஞ்சை வீரர்கள்.

வீர பாண்டியன் முத்தையன் வீரமல் லேசன்
தீரன் சங்கயன் சென்னவன் மதாருமல் சிறுமல்
போரஞ் சாமிமஞ் சணன்முதற் பொருபடைத் தலைவர்
நேரஞ் சாதெதிர் ஏறினர் நெடுஞ்சமர் புரிந்தார். (39)

2927 படுகளம் பட்டது.

ஆளி மொய்ம்பினர் அடுபடை யுடனடர்ந் தேறித்
தோளி கொண்டிடப் பரிகளைக் கடவிமுன் துணித்தார்;
தோளி முந்துகண் செவியுர மிழந்தெதிர் துதைந்தார்
தாளி முந்தனர் தலைகளை யிழந்தனர் சாய்ந்தார். (40)

2928 வடவை வெங்கனல்.

வெடிபி டித்தவர் சுடுமுனம் வெண்டலை துள்ளிப்
படியில் வீழ்ந்திடப் பாய்ந்திவர் வெட்டிமேற் படர்ந்து
நொடியில் எங்கணும் திரிந்தடர் படைகளை நொறுக்கி
மடிய நூறினர் வடவைவெங் கனலென வாய்ந்தார்.

2929 புலிப்போத்துகள்.

வெய்ய வன்புலிப் போத்துகள் பாய்ந்திட வெருண்டு
நொய்ய தாகிய விலங்குகள் நொந்தழிந் தனபோல்
மொய்கொள் வீரர்கள் புகுந்திட முன்னணி யுடைந்து
செய்ய லாவகை ஒழிந்தன சிந்தின சிதைந்தே. (42)

2930 நண்ணலர் நைந்தார்.

வாளி னல்வெட்டி வல்லயம் வேல்கொடு குத்தித்
தோளில் ஏறிய வலியொடு வீரர்கள் சுற்றக்
கோளில் ஏறிய கொடியவன் குடியழிந் ததுபோல்
காளில் ஏறிய நண்ணலர் நாளுலந் தழிந்தார். (43)

2931 **வெருவி மறுகினர்.**

அதிர வந்தவர் ஆருயிர் அழிந்திடத் தலைகால்
பிதிர மண்டிய பிணந்திடல் கொண்டிடப் பெருகி
உதிர வெம்புனல் ஊற்றெடுத் தோடிட ஒழிந்தார்;
விதலைகொண்டுளம் வெருவினர் விரைந்தயல்ஒளிந்தார்.

2932 **தளபதி விரைந்தது.**

அழிந்து பட்டொழி படைகளை அதிபதி கண்டு
கொழுந்து பட்டெழு கோபவெங் கனலெனக் கொதித்
[தான்
உழுந்து பட்டுரு ளாமுனம் ஒண்பரி கடாவி
விழுந்து பட்டவன் தாளினை மேவினன் விரைந்தே.

2933 **தொடுத்துச் சுட்டனர்.**

தாளை வேந்தன்வந் தெழுதலும் தாளையந் தலைவர்
மான மீதுற மண்டினர் மருங்குவந் தடைந்தார்;
ஏனை வெம்படை யாவையும் இடந்தொறும் எழுப்பிச்
சோனை மாரியிற் சுடும்படி தூண்டினர் தொடுத்தே.

2934 **குண்டுகள் பாய்ந்தன.**

ஒழிந்த அப்படை யுடையவன் அடையவும் ஒங்கிக்
கொழிந்து பட்டெறி கோபவெங் கனலுறக் கொதித்துக்
கிழிந்து பட்டது வானம்என் றெதிரொலி கேட்பப்
பொழிந்து விட்டனர் குண்டுகள் போர்ப்பறை முழக்கி.

2935 **செருமுகம் புகுந்தனர்.**

காற்றில் ஏறிய கூற்றெனக் கடும்பரித் திரளில்
தோற்ற மீறிய தலைவர்கள் துணுக்குறத் தோன்றி
ளற்ற மீறிய ஒளிர்படைக் கலன்களை ஓச்சிச்
சீற்ற மீறுசெந் தீயெனச் செருமுகம் புகுந்தார். (48)

2936 **சீறி மாய்ந்தனர்.**

எரியும் குண்டுகள் இடந்தொறும் பொழிந்தனர்; எங்கும்
விரியும் வெம்புகை விம்மிநின் றடர்ந்தன; வேலின்
நிரைகள் நீண்டுவெண் ணிணத்தொடு நிமிர்ந்தன;நேரே
பரிகள் மூண்டுமுன் பாய்ந்தன மாய்ந்தனர் பலரே. (49)

2937 **சாரிகை திரிந்தனர்.**

மண்டி ஏறிமுன் வன்படைத் தலைவர்கள் சூழத்
துண்டி றற்பெருஞ் சேனையின் அதிபதி சீறிக்
கண்ட கண்டதோ ரிடமெலாம் கடுஞ்சமர் புரிந்து
நண்ட ழித்துவெஞ் சயமொடு சாரிகை திரிந்தான். (50)

2938 **இவர் பலர் இறந்தனர்.**

அன்ன வன்னுயர் பரியினைக் கடாவியாங் காங்குத்
தன்னி நின்றுதன் படையினை ஏவவும் துணிந்து
மன்னி யேறிமுன் மாட்டினர் மாட்டவும் மறுகி
வன்ன சேனையிற் பற்பல வீரர்கள் இறந்தார். (51)

2939 **ஊமைமன் உருத்தது.**

தானை வேந்தவன் சமர்புரி தருக்கையும் தனது
சேனை பட்டழி செயலையும் திறலையும் நோக்கி
மான மீதுற வடவைவெங் கனலென மண்டி
மோன வேந்திவன் மூண்டுமுன் எழுந்தனன் முனைந்தே.

2940 **பரியில் ஏறினன்.**

போர மைந்தபொற் கோலங்கள் பொருக்கென அணிந்து
கார மைந்தமின் னுமெனும் கடியவாள் எடுத்தான்
நேர மைந்தவெம் படையினை நீறுசெய் தேற
வர மைந்ததன் பரியினில் ஏறினன் இவர்ந்தே. (53)

2941 **காலன்போல் கடுத்தான்.**

கீலை வேணியென் றுரைபெறு நெடும்பரி மீது
சூலை பாணிபோல் சுடர்வடி வாள்கரத் தேந்தி
வாலை மாமதன் போன்றவ னுயினும் அன்று
காலை னுமெனப் பாய்ந்தனன் களத்திடைக் கடுத்தே.

---

52. மோனவேந்து = ஊமைத்துரை.

கும்பினியின் சேனைத் தலைவன் உப தளபதிகளையும் படைகளையும் ஊக்கிச் செலுத்தித் தனது தானை வீரர்களை அழித்து வருவதைக் கண்டதும் ஊமைத்துரை உருத்து எழுந்தார். குதிரை மேல் தாவி உக்கிர வீர பராக்கிரமாய்ப் போர் முகம் புகுந்து பொருதார்.

2942 மாற்றலர் மாண்டனர்.

பாய்ந்து வெம்பரி பறந்தலை பறந்துற விரைந்து
காய்ந்து தன்வடி வாளொடு கறங்கெனத் திரிந்தான்
மாய்ந்து வீழ்ந்தனர் மாற்றலர்; பலர்தலை யுருண்டு
சாய்ந்து முண்டங்கள் தனித்தனி துள்ளின தரையில்.

2943 மறுகிப் பதைத்தனர்.

வந்து மேல்விழு வன்படை மறுகணம் தலைகால்
சிந்தி வீழ்ந்துசெங் குருதியில் புரண்டன; திரண்டு
முந்தி மூண்டுதம் பரிகளை முரணுற முடுக்கிப்
பந்தி பந்தியாய் வந்தவர் பட்டுயிர் பதைத்தார். (56)

2944 புழு எனத் துடித்தனர்.

பரியில் ஏறிய மறலியிற் படுகள மேறி
அரியின் ஏறென ஆண்டகை வாளொடு திரியக்
கரியில் ஏறிய கனலெனக் கனன்றுமுன் கடுத்தார்
எரியில் ஏறிய புழுவென இறந்துபின் துடித்தார். (57)

2945 சேனபதி திகைத்தான்.

எய்த குண்டுகள் இடிமழை எனவிழ எதிர்ந்தே
ஐயன் வேலனை அகத்தினில் நினைந்தடல் வாளை
வெய்து வீசிமுன் வீரவெந் திறலொடு விரைந்து
செய்த போரினைச் சேனமன் கண்டுளம் திகைத்தான்.

2946 அமராடிய திறம்.

சுட்ட குண்டுகள் தப்பியும், தொடர்ந்துமுன் னேறித்
தொட்ட வேல்களைத் தட்டியும், துணிவுடன் அயலே
எட்ட நின்றடர் எறிகளை விலக்கியும், மன்னன்
வெட்டி ஏறிய விரகினை ஏவரே வியவார்? (59)

2947 பாஞ்சை வீரர் ஏறினர்.

வீர மன்னவன் வினையினி லேறவும் துணையாய்ச்
சேர நின்றவன் தலைவரும் சேனையும் செருக்கி
ஆர வேறிநின் றடலமர் புரிந்தனர்; அமரார்
சீர ழிந்தனர்; திசைதிசை யிரிந்தனர்; சிதைந்தே. (60)

2948 **படைத் தலைவர் பதைத்தார்.**

போர் முழங்குபின் புறங்கொடுத் தோடிய படையைச்
சார் நின்றவத் தானையின் பதிமிகத் தடுத்துச்
சேர் வைத்தனன்; செருவுறு சிதைவினை நினைந்து
பார் நொந்தனன்; பரிந்தகம் கொதித்தனன் பதைத்தே.

2949 **பாசறை யுற்றோர்.**

தேரினி அமர்மேல் இந்தப் படையினை ஏவின் வீணே
சென்றிவீழ்ந் தொழியுமென்று புந்தியி லுணர்ந்து
[மீட்டிக்
கொன்றிய மனத்த ஞெகிக் கைவரு துணைவ ரோடு
சென்றுபா சறையைச் சேர்ந்து சேனையை அமர்த்தி
[நின்றோன்.

2950 *** மக்காளி நொந்தான்.**

சேனையில் அன்று நேர்ந்த சேதமும் திறலோ டேறிக்
கோனிவன் படைகள்செய்த கொடுஞ்சமர் நிலையும்
[எண்ணி
மானம்வந் துற்ற தென்ன வுள்ளுளே யுளைந்து ளைந்து
மானமீ தூர நின்று மறுகிமக் காளி நொந்தான். (63)

2951 **உருத்து உணர்ந்தான்.**

புயலைடைந் தயர்ந்துநின்ற அருந்துணைத் தலைவர் தம்மை
நயமுடன் படையைப் பேணி யிருமெனப் பணித்துமூண்ட
செயலினைச் செருவில் நேர்ந்த சிறுமையைநினைந்து பொங்கி
பயமுடன் வென்று தெவ்வை ஒழித்திட வுருத்துணர்ந்தான்.

2952 **வெகுண்டு நின்றோன்.**

நின்றுள படையிலேறு நெடும்படை யொன்று கூட்டித்
துன்றிமே லேறிப் போரைத் துணிந்துடன் தொடர்ந்
[தியற்றி

---

* மக்காளி என்றது தலைமைச் சேனுபதியை. மெக்காலே (Macaulay) என்னும் ஆங்கிலப் பெயர் தமிழில் **மக்காளி** என வந்தது. இந்த வெள்ளைத் தளபதியின் பெயரைப் பாழ் படுத்துகுறிச்சி மரபினர் சிலர் இன்றும் தம் பிள்ளைகளுக்கு வள்ளலான குறிப்போடு இட்டு வழங்கி வருகின்றனர்.

வன்றிறற் பகைய ழித்து வளநகர்ப் பிடித்து வாகை
வென்றியை யடைவேன் என்ரு வெதுப்பொடு வெகுண்
[டிருந்தான்.

2953 மற்றவர் மறுகினர்.

உற்றுள துணைவர் எல்லாம் உருதவெந் துயரு ழந்து
பற்றிய வலியோ டெய்திப் பாஞ்சையம் பதியை வந்து
முற்றுகை செய்து வெல்ல முயன்றனம்; முடிந்து முற்றி
இற்றனர் பலபேர் இங்கே யிருப்பவர் சிலரே என்ருர். (66)

2954 அயர்ந்து நின்ருர்.

இப்படை கொண்டு வெல்வ தெப்படி என்று ளைந்து
வெப்படை நெஞ்சராகி வெய்துயிர்த் தயர்ந்து நின்ருர்
அப்படி அவரி ருக்க அமரிடை யழிந்தார் தம்மை
ஒப்படி செய்து மன்னன் ஊக்கியிங் குவந்தி ருந்தான்.

2955 தலைவன் நிலை.

போரிடை யுடைந்து போன பொருபடைத் தலைவன்
[நெல்லை
யூரிடை யிருந்தோர் சேனை யுறுகவிவன் ருலை போக்கிப்
பாரிடை யுயர்ந்த பாஞ்சைப் பதியழிந் நிலையை நோக்கி
நீரிடை நெருப்பே என்ன நேர்ந்தவன் நிமிர்ந்தி ருந்தான்.

2956 அன்றும் உடைந்தான்.

இரண்டுநாள் கழிந்த பின்னர் இகல்நிலை தெரிந்து மண்டி
திரண்டதோர் சேனைவந்து சேர்ந்தது; சேர வேந்தன்
அரண்டனை யழிக்க லாமென் ருர்த்தெழுந்தமரை யாற்றி
முரண்டொடு பொருதான்அன்றும் முனையழிந் துடைந்து
[மீண்டான்.

2957 அல்லலே அடைந்தான்.

கல்லினேடெதிர்த்து முட்டிக் கடுந்துய ரடைந்தார் போல
மல்லினே டுயர்ந்த வீர மன்னனே டெதிர்த்து மண்டி
அல்லலே அடைந்தா னன்றி யாவதொன்றறிய கில்லான்;
எல்லையில் நாணம் எய்தி எதிர்நினைந் தினைந்தி ருந்தான்.

2958 எட்டன் ஏங்கினன்.

இருந்துணை யாகி நின்ற எட்டனும் இழவை யெண்ணி
அருந்துய ரடைந்து நாணி அகமிகப் புழுங்கி நின்ருன்;
பொருந்துணை யாக வந்து புகுந்தனன் பொருமி நின்றும்
வருந்பயன் ஒன்றும் காணுன் வருந்தியே யுளைந்து நொந்
[தான்.

2959 எண்ணி யுளைந்தான்.

கொளினை மூட்டி வெய்ய கொடும்பகை கூட்டித் தானும்
தூளினே டாளாய் நின்றே அமரினை யாற்றிப் பார்த்தும்
வேளெனும் பாஞ்சை வேந்தை வெலும்வழி காணு தன்னுன்
வாளுயர் வலியை எண்ணி வயிறெரிந் துளைய லானுன்.(72)

2960 இனைந்து நின்ருன்.

வெவ்வலி யுடைய வெள்ளை வேந்தர்தம் துணையைப்
[பெற்றேம்
றிவலி அழித்து வென்று செயமொடு புகழும் எய்தி
வைய திருவி ணேடு வாழலா மெனம கிழ்ந்தோம்;
இவ்வகை யுள்ள தே!என்றினைந்தவன் ஏங்கி நின்ருன். (73)

2961 குத்திரம் புரிந்தது.

குத்திறம் எண்ணி ஏங்கி யிருந்தவன் உள்ளத் துள்ளோர்
குந்திரம் உணர்ந்தான் கோட்டைக் குள்ளுறை குடிகட்
[கெல்லாம்
தந்திற மேனும் யாரும் இயலுண வாதி யான
பொத்திய பண்டம்கொண்டு போதலைப் போக்க வேண்டும்.

2962 குடிகேடு சூழ்ந்தது.

வெளியயல் நின்ருர் யாரும் வியனகர் மேவா வண்ணம்
ஒளிவுசெய் தகற்றின் உள்ளே யுறைபவர் பசியால் ஒல்கி
வளிவரு நிலைய ராவர் ஆயபின் எளிதே வென்று
விளிவுசெய் திடலாம் என்று வினையினை விளைவு செய்தான்.

2963 * வழிகளை அடைத்தது.

பிறலுடைத் தானைவேந்தும் விரகுடன் இவனு ரைத்த
நறவுரைக் கிசைந்து நான்கு வழியினும் வரவி டாமல்

*வெளியிலிருந்து யாரும் யாதொரு பண்ட-மும் பாஞ்சாலங்

திறலொடு காவல் செய்து திசைதொறும் விலக்கிவைத்தான்
அறநெறி தெரிந்தும் இந்த அவநிலை புரிந்தான் அம்மா!

2964 ஊமைமன் உறுதி சூழ்ந்தது.

மன்னவன் இதை யறிந்து மாறொன்றும் எண்ணு ணுகித்
தன்னக ருள்ளார் எல்லாம் சஞ்சல மின்றி வாழ
மன்னிய பொருள்கள் யாவும் மரபுடன் வழங்கச் செய்து
முன்னிய நிலையை எண்ணி மூண்டுளம் முனைந்திருந்தான்.

2965 குதிரைகளுக்குப் புல்

இவ்வகை யிருக்க ஓர்நாள் இருங்கதி வல்ல நல்ல
திவ்விய குதிரை கட்குச் செழும்பசும் புல்லு வேண்டி
கவ்வையோ டெழுபத்தைந்து கடும்பரி யாட்கள்மேல்
[பால்
செவ்விய சாரல் நோக்கித் திறலுடன் எழுந்து சென்றார்.

2966 எதிரிகள் தடுத்தது.

சென்றவர் கொய்து புல்லைத் திரள்செய்து சுமைகள் கட்டி
ஒன்றியங் கிருக்குங் காலை எட்டப்பன் உரையால் ஓங்கிக்
கன்றியோர் படை எழுந்து கடுத்தவ ணடைந்துகாட்டில்
நின்றவர் தமையு ருத்து நேரெதிர் தடுக்க லானார். (79)

2967 புல்லைத் தடுத்த புலைச் செயல்.

புல்லலர் வளைந்து புல்லைத் தடுக்கவும் புரவி யுண்ண
நல்லதோர் இரையை நாடி நாங்கள்வந் தடைந்தோம்
[ஈண்டும்
அல்லல்செய் தகற்ற நீங்கள் அடைந்தது அநீதி என்று
சொல்லெலாம் சொல்லிப் பார்த்தும் துன்னலர் துடுக்கே
[செய்தார்.

குறிச்சிக்குள் போகாதபடி எட்டப்பன் பேச்சைக் கேட்டுச் சேனைத் தலைவன் செய்ய நேர்ந்தான். இவ்வாறு முற்றுகையிட்டால் எல்லாரும் பட்டினியால் பதைத்துப் பணிய நேர்வர் என்று கருதி நின்றான். படுதுயரங்களைப் பலவழிகளிலும் கடிது சூழ்ந்து கொடிதே புரிந்தான்.

1968 * புல்லுக் கட்டால் மூண்ட மல்லுக் கட்டு.

மெய்யவும் சின்ன வாலன் என்பவன் சினந்து பாய்ந்து
கையுறு வாளால் வெட்டிக் கடுத்தனன் அடுத்து நின்றார்
மெய்யவெந் தடிகள் கொண்டு வீசினர்; வீச லோடும்
மெய்யமர் மூண்ட தங்கே முனைந்திரு திறத்தும்
[மாண்டார்.

1969 பாஞ்சை வீரர் பாய்ந்தது

கூடிடை நின்றார் தம்மைக் கருதலர் கடுத்துச் சண்டை
மூடினர் என்ற செய்தி மன்னவன் செவியில் முட்ட
வாடிவேல் வல்ல யங்கள் எடுத்தனர் இருநூ றென்னும்
வாட்டிறல் வீரர்ஓடி வந்தனர் வளைந்து கொண்டார். (82)

1970 எதிரிகள் இழிந்து ஓடியது.

வந்தவர் மண்டி யேறி வன்சமர் புரிய நின்றார்
சிந்தினர் சிதறி ஓடிச் சேனையைச் சென்று சேர்ந்தார்;
வந்தரம் தெரிந்து சேன யதிபதி எட்டன் செய்த
மந்தனென் றிகழ்ந்துரைத்து வெறுத்துளே வெகுண்டி
[ருந்தான்.

1971 புதிய சேனை வந்தது.

மூடிச் சிறுமை மீறி இடையிடை யிடையூ றுக
வெய்ப்புடைச் செயல்கள் செய்து வினைகளை விளைத்து
[றுங்கால்
மூடுடன் புதிய சேன யிரண்டுவந் துடன்க லந்த;
மூடுபடை நிலையை நோக்கி அதிபதி அகம கிழ்ந்தான்.

1972 மீண்டும் மூண்டது.

மலைந்துட னிருந்த தானைத் தலைவர்கள் தம்மோ டாய்ந்து
சேர்ந்தவன் பகையை எண்ணி நெடுஞ்சினங் கொண்டு
[நீண்டு
சேர்ந்துள படை எழுப்பிச் செருப்பறை முழக்கச் செய்
[தான்

---

* புல்லலர்=பகைவர். பசியால் வாடிக் கிடக்கிற குதிரை களுக்குப் பசிய புல்லைத் தொகுத்தபோது தடுத்து அல்லல் செய்ய நேர்ந்தார். பாஞ்சை வீரர்கள் ஒல்லையில் வென்றார்.

ஆர்ந்தவெங் கடல்போ லார்த்தங்கடற்படைஎழுந்ததன்றே.

2973 **குதிரைப் படைகள்.**

தாரணி புரவி யெல்லாம் தடந்திரை எனக்க லித்துப்
போரணி கொண்டு மண்டிப் புலியினமென்னப் பொங்க
வாணி முரசம் விம்ம வயவர்கள் வெடிகள் ஏந்தி
நேரணி புரிந்தெழுந்து நிரைநிரை நேர்ந்து நின்றூர். (86)

2974 **ஊமைமன் ஊக்கியது.**

படைஎழு பான்மைநோக்கிப் பாஞ்சைமன்னவனும் தன்னை
அடையநின் றவரை எல்லாம்அமர்நிலைக் கூக்கித் தானும்
நெடியவாள் கையில் ஏந்தி * நீலவே ணியினில் ஏறி
வடதிசை மருங்கு பாய்ந்து மறலியும் மறுக வந்தான்.

2975 **வீரர் விரைந்தார்.**

கடும்பரி யிவர்ந்தெ ழுந்து காலனும் கலங்க வந்து
நெடும்படைத் தலைவர்க்கெல்லாம் நேர்பெருந்தலைவனாகி
அடும்பரி சூக்கிப் பொங்கி ஆளரி யென்ன நின்ற
கொடுந்திறல் நோக்கி வீரர் கொலைத்திறம் குறித்து
[நின்றூர்.

2976 **அமர் மேல் பாய்ந்தார்.**

வாளெழு மழுக்கள் வேல்கள் வல்லயம் கையில் ஏந்தி
நீளெழு வனைய தோளார் நிறைநிறை நேர்ந்து மண்டி
ஆளரி யென்ன வீர ஆர்ப்புடன் அமர்மேல் பாய்ந்தார்
தாடலை தோள்கள் சிந்தித் தரியலர் தரையில் சாய்ந்
[தார்.

2977 **அவரும் மூண்டார்.**

பற்றலர் கொதித்தெழுந்து பரிகளைக் கடாவிப் பொங்கி
வெற்றெழுலி யின்றி யெங்கும் வெடிகளைவிடாது சுட்டே

---

* ஊமைத்துரையின் உரிமையான பட்டத்துக் குதிரைக்கு **நீலவேணி** என்று பேர். இது சாலவும் மேன்மையான குணங்கள் உடையது. அழகும் வேகமும் ஆற்றலும் இதனிடம் வியனுய் விளங்கியிருந்தன.

...றுநீர் வெள்ளத் தேறி யினேபவர் என்னச் சோரி
...றுமெய் முழுகிச் சோர மூண்டமர் முனேந்துபுக்கார்.

2978 பட்டபாடுகள்.

...டிடப் பட்டார் சில்லோர்; சுரிகைவாள் சுளித்துவீசி
...ட்டிடப் பட்டார் சில்லோர்; வேல்களே விரைந்தெடுத்துத்
...ட்டிடப் பட்டார் சில்லோர்; துனேபரி துள்ளிப் பாய்ந்து
...டிடப் பட்டார் சில்லோர்; தாக்கிடப் பட்டார் சில்லோர்.

2979 பட்டவர் உற்றது.

...நிறப் படையுள்நின்ற இரும்புலி யேறு போன்ற
...ருதிற வீர ரெல்லாம் பொருமுகம் புரிந்து பொங்கி
...முக மாகி மண்டி யூக்கிநே ருடற்றித் தத்தம்
...வுட லழியத் தாம்போ யமருல கடைந்து நின்ருர்.

2980 படு போர் மூண்டது.

...னணி நின்ற வீரர் முடியவும் முனேந்து சேனை
...னைவர் மனங்கொதித்து வண்பரி கடாவி வந்தார்;
...னைவர் வரவும் பாஞ்சை யதிபதி யருகே நின்ற
...னைபொம் மாதி வீரத் திறலினர் சீறிப் பாய்ந்தார்.

2981 முட்டி முறுக்கினர்.

...ட்டினர் விரைந்துபாய்ந்து மேல்வரு பரிக்கொதுங்கித்
...ட்டினர்: மீண்டு மூண்டு தாக்கினர்; தாவி யேறி
...ட்டினர்; முனேந்து கட்டி முறுக்கினர்; மூரித்தண்டால்
...ட்டினர்; உருத்த டித்தார்; ஒன்னல ருயிர்குடித்தார்.

2982 முரிந்து மீண்டார்.

...டைபடுநிலேயை நோக்கிப் படைப்பதி பதங்கண்டேறி
...டைநின்று விலக்கி மீட்டி யினியபா சறைய டைந்து
...டையரண் செய்து காத்துப் பொருபரி பவங்களெல்
[லாம்
...டையற வாற்றி நின்ருன் சமருற வாற்றி நின்ருன்.

2983 ஊற்றம் ஊறியது.

தோற்றவர் வெல்வர் என்னும் துணிவினுல் தமது [தோல்வி
ஆற்றவும் நன்மை யாமென் றவனறிந் தடங்கி நின்றுன்
ஊற்றமும் வலியும் பின்னு ளுறவே உறுதி கூர்ந்தே
ஏற்றமாய்ப் பகையை வெல்லஎண்ணினுன் இறுதியாக.

நின்ற தளபதி நினைந்து துணிந்தது.

2984 அன்றுகழிந் தகன்றபின்னர் அயலிருந்த
துணைவர்களை அருக ழைத்து
துன்றுதிறற் பகைவலியைத் துளக்கமுடன்
சூழ்ந்தெண்ணித் துணிந்து சீறி
இன்றமரில் வென்றிலமேல் இனிவேறல்
அரிதாமென் றிடித்து ரைத்து
நின்றபெருஞ் சேனைகளை நிலைநோக்கி
அமர்க்கெழுப்பி நேர்ந்து வந்தான். (97)

வெகுண்டு மூண்டது.

2985 முரசங்கள் மிகமுழங்க மூண்டுபெருஞ்
சேனைவரு முதன்மை நோக்கி
வரசங்கம் மிகமுழக்கி மன்படையை
யிங்கெழுப்ப மரபின் ஏறி
சிரசெங்கும் தொப்பிகளாய்ச் செறிந்துநின்ற
தெவ்வர்களைச் சீறி நோக்கி
அரசங்கே அமர்கவென அருந்திறலோர்
அனைவோரும் ஆர்த்தெ ழுந்தார். (98)

நேரலரை நேர்ந்தது.

2986 வெய்யபடைக் கலன்களுடன் வெகுண்டெழுந்த
வயவீரர் விரைந்து பாய்ந்து
மொய்யமரில் மூண்டுநின்ற முன்னணியை
மாண்டுவிழ முறுக்கி யேறிக்
கையெதிர்ந்த யாவரையும் கால்வேறு
தலைவேறு கண்டம் கண்டு
நெய்யனலி எனக்கொதித்து நேரலரை
நேரெரித்து நெரித்த டர்ந்தார். (99)

பரிகளில் ஏறிப் பாய்ந்தனர்.

1987 அடர்ந்தேறி அமர்முறுக்கி ஆர்த்துவரு
படைநிலையை அதிபன் நோக்கி
இடந்தோறும் இருந்தபெருஞ் சேனைகளை
இரைந்தெழுப்பி ஏறி நின்று
கடந்தோய்ந்த மதகரிபோல் கதமீறிக்
கையருகே நின்ரூர் தம்மைப்
படர்ந்தேறும் எனப்பணித்தான்; பரியேறி
அனைவோரும் பாய்ந்து வந்தார். (100)

செயம் பெற்றது.

1988 வாவுவாம் பரிகடவி வயப்புலிகள்
போல்பாய்ந்து வந்து மண்டிக்
கூவிநேர் குண்டிட்டுக் குறியோடு
சுட்டவர்கள் குலைந்து சிந்தி
ஆவிபோய் வீழ்ந்தாரே யல்லாமல்
அமரேறி யகன்ரு ரில்லை;
தேவியருள் பெற்றவிவர் செயஞ்செயமென்
றேறமுழக்கிச் செருக்கி வென்ரூர். (101)

பொழுது அடைந்தது.

1989 மண்டியபோர் முனைபுகுந்து வாளரிகள்
போற்பாய்ந்து வாள்வேல் ஏந்தித்
திண்டிறலோ டிவரமர்செய் திறனேக்கிச்
சேனைமன்னன் திகைத்து நின்று
தண்டினையன் றமராற்றிச் சதுரோடு
பாசறையைச் சாரச் செய்தான்;
எண்டிசையும் இருள்சூழ எல்லோனும்
மேல்கடலி னிடையே சேர்ந்தான். (102)

பாஞ்சையர் உவந்தது.

1990 ஒன்னலர்கள் உடைந்தகல வூக்கியுயர்
வெற்றியுடன் உவந்தெ ழுந்து
மன்னவன்றன் படைவீரர் மாநகரம்
புகுந்துமனம் மகிழ்ந்தி ருந்தார்;

அன்னதிறற் சேனைதனை ஆர்வமொடு
நனிபேணி அரசு வந்து
துன்னியவெம் பகைதொலைத்துச் சொற்கீர்த்தி
பெற்றவன்போல் சுகித்திருந்தான். (103)

பரிதி உதய மாயது.

2991 மருமாலை புனைந்தணிந்து மணந்தகன்ற
கொழுநனையே மனத்தில் ஏந்தி
வருமாலை தனைநினைந்து மறுகிநின்ற
மடந்தை அவன் வரவு கண்டு
பெருமாலை யுடன்மகிழ்ந்து பெருகிநின்ற
தெனவுலகம் பெருகி யோங்கத்
திருமாலை மார்பிலணி செம்மணிபோல்
விண்மணிவந் துதயம் செய்தான். (104)

அமருக்கு ஆயத்த மாயது.

2992 ஆதவன்வந் துதித்தவுடன் அரசெழுந்து
முரசறைந்தன் றமருக் கான
மோதுபடைக் கலன்களுடன் முனைவீரர்
தமையூக்கி மூண்டு நின்றூன்;
சாதனங்கள் உறவமைத்துத் தரியலர்பா
சறைநின்று தானை ஏவிக்
கேதனங்கள் முன்னடக்கக் கிளர்வீரர்
பின்னடக்கக் கிளர்ந்து வந்தார். (105)

மறுநாள் மூண்டது.

2993 வந்துபடை யணிவகுத்து வல்விடிகள்
நேர்பிடித்து மண்டி நின்று
மூந்துகனல் மழைபொழிந்த முறையென்ன
முறைமுறையே மூண்டு சுட்டார்;
வெந்திறல்கொள் வேந்தனிவன் விறற்படைஞர்
வெகுண்டெழுந்து வேல்வா ளாதி
உந்துபடைக் கலன்களினுல் உருத்தடர்ந்து
பொருதேறி யுயிர் குடித்தார். (106)

இரு படைகளும் பொருதன.

1994 சுட்டகொடுங் குண்டுகளால் இப்படையுள்
சூரர்பலர் துடித்து வீழ்ந்தார்;
வெட்டுகளால் குத்துகளால் அப்படையுள்
வீரர்பலர் விளிந்து பட்டார்;
தொட்டதொட்ட இடந்தோறும் துண்டங்கள்
முண்டங்கள் துள்ளி யாட
ஒட்டியுருத் திருபடையும் உலையாமல்
நெடுநேரம் உடற்றி நின்ற. (107)

வீரக்குரிசிலரின் வீரப் போர்.

1995 ஊமைமன்னன் தம்பிதுரைச் சிங்கமுடன்
உற்றசமர் உறுதி நோக்கி
வேமெரிபோல் உளங்கனன்று வெம்பரிமேல்
விரைந்தேறி வெகுண்டு பாய்ந்து
மாமதனன் தம்பியொடு வாம்பரிமேல்
வந்தபரி சென்ன வந்தான்;
கோமகனைக் கண்டவுடன் குலவீரர்
தலைமையொடு கொதித் தடர்ந்தார். (108)

துணைத் தலைவர் துணிந்தது.

1996 தூமமிகு சுடுகனலுள் சுளித்தேறித்
துன்னலர்கள் துடித்து வீழத்
தாமவடி வேல்கொண்டு தாக்கியெங்கும்
தடாரித்துத் தாவி யேறி
வேமெரியும் வெஞ்சூறை வளியுமென
வெகுண்டடர்ந்து விரைந்து கொன்ரூர்;
தோமடைந்து படைகுலையத் துணைத்தலைவர்
பரிகடவித் துணிந்து மூண்டார். (109)

தளபதிகளின் சமர்.

1997 தானையுயர் தலைவரன்று தறுகண்மை
யுடனின்று சமர்க்க ளத்தில்
சோனைமழை யெனக்கொடிய குண்டுகளை
ஓயாமல் சொரிந்து நின்ரூர்;

மானமிகும் இப்படையுள் மாண்டுபலர்
மண்வீழ்ந்து மடிந்தொ ழிந்தார்;
ஆனபொழு தூமையர சகங்கொதித்து
வடவையென ஆர்த்தெ ழுந்தான். (110)

துரைச்சிங்கம் உருத்தது.

2998 முன்னவனைப் பின்னிறுத்தி முனைமுகத்தில்
இளவரசன் மூண்டு பொங்கி
வன்னமத கரிகளிடை மாமடங்கல்
பாய்ந்ததுபோல் வந்து பாய்ந்து
சின்னபின்ன மாய்ச்சிதைந்து தெவ்வர்விழ
வெவ்வடிவாள் சிலைத்து நின்ருன்
அன்னதுரைச் சிங்கமவண் ஆற்றியபே
ராண்மைநிலை யாவர் சொல்வார்? (111)

பாசறைக்கு மீண்டது.

2999 மந்தரத்தால் நிலைகுலைந்த மறிகடல்போல்
சேனைதளம் மறுகி யெங்கும்
சிந்தியல மந்தோடச் சேனையதி
பதிகனன்று சீறி நின்று
தந்திரத்தைத் தந்திரமாய்த் தனிமீட்டிப்
பாசறையைச் சார்ந்த மர்ந்து
வெந்திறல்கொள் வெம்பகையின் விறல்நிலையை
எண்ணிஎண்ணி வெதும்பி நின்ருன். (112)

மீண்டும் பொருதது.

3000 அன்றுபோய் மற்றைநாள் அமர்புரிய
அடுமுரசம் ஆர்ப்பச் செய்து
துன்றுதிறற் சேனைகளைத் தொடர்ந்தெழுப்பிச்
சூழ்ச்சியுடன் துணிந்து வந்து
வென்றியுறு மெனக்களித்து வெம்போரை
யாற்றிநின்ருன் வேந்தன் சேனை
ஒன்றியெதிர் அடர்ந்தேற வுள்ளமுடைந்
தன்றுமந்தோ வுடைந்து மீண்டான். (113)

வெள்ளையர் வெருவியது.

3001 வந்துவந்து பொருதுடைந்து மருவியபா
சறையடைந்து மறுகி நின்று
வெந்திறல்கொள் ளுமையனே வெல்லும்வகை
யாவதென வெள்ளை வீரர்
சிந்தனைசெய் திடையிடையே சேர்ந்தபெரும்
படைச்செருக்கால் செருவி லேறி
தந்திரங்கொண் டடுசமரைச் சலியாமல்
மிகவூக்கித் தாக்கி நின்றார். (114)

எண்ணி ஏங்கியது.

3002 இத்திறம் பத்துநாள் இடைவி டாமலே
ஒத்தமர் புரிந்தனர் உடைந்து டைந்துபோய்ப்
பத்தியாய்ப் பாசறை பதுங்கித் தங்கினர்;
எத்திறம் வெல்வதென் றெண்ணி யேங்கினர்.

இடை நிகழ்ந்தது..

3003 இன்னதோர் நிலையினில் இனைந்து நொந்தவர்
பன்னரும் பழியொடு பட்டி ருக்குங்கால்
மன்னவன் படையினில் இருவர் மாறுபோய்
அன்னவ ரிடம்செய்த ஆண்மை கூறுவாம்: (116)

வாடியிருந்த நாள்.

3004 ஏடுறு சித்திரை இருபத் தொன்றினில்
ஈடுறு பெரும்படை எதிர்ந்த ழிந்துபோய்
நாடிய பாசறை நண்ணி நின்றன;
வாடிய தலைவரும் மறுகி நின்றனர். (117)

தலைவன் தேற்றினன்.

3005 வந்தழி படையையும் வசையும் எண்ணினர்;
வெந்திறல் மன்படை வீரம் நோக்கினர்;
சிந்தையுள் உளைந்தனர்; தியங்கி நொந்தனர்;
தந்திரத் தனிப்பெருந் தலைவன் தேற்றினன்.

வேளையை விளக்கினன்.

3006 நாளையிங் கொருபடை நமக்கு நண்ணுமப்
பாளையம் வந்ததும் படையை ழுப்பியிப்
பாளையப் பட்டைநாம் பாட ழிப்பமிவ்
வேளையில் அமர்ந்திரும் எனவி தித்தனன். (119)

படைகள் வந்தன.

3007 அவ்வகை யேபடை யடர்ந்து மற்றைநாள்
வெவ்வலி யுடன்வர மிகம கிழ்ந்தனர்:
இவ்விவொரு நாளிடை யிருந்து நாளைநாம்
தெவ்விவொடு பொருவமென் றென்னத் தேற்றினன்.

மகிழ்ந்திருந்தனர்.

3008 வந்தவப் படைகளை வகுத்து வாகுடன்
தந்திரத் தலைவர்கள் சார்ந்து நின்றனர்:
சிந்தையுள் ளுவந்துயர் சேனை வேந்தனும்
மந்திரம் புரிந்துடன் வதிந்தி ருந்தனன். (121)

குலாவி நின்றனர்.

3009 உண்டுளம் களித்தனர்; உலாவி வந்தனர்:
தண்டுகள் நோக்கினர்; சால வூக்கினர்;
மண்டுவெம் பகைநிலை வகையு சாவினர்;
கொண்டவப் பகலெலாம் குலாவி நின்றனர். (122)

மன்னன் உணர்ந்தது.

3010 இன்னவா றவரமர்ந் திருக்க மன்னவன்
துன்னிய படைவந்து தொடர்ந்து நின்றதை
முன்னியங் குணர்ந்தனன் மூண்டு நின்றுள
தன்னுடைத் தானையந் தலைவர்க் கோதினன்.

உன்னி உரைத்தது.

3011 இருப்பினி இங்கிவர்க் கில்லை யாகவே
நெருப்புறு புல்லென நிலைது லைத்துநாம்
செருப்புரிந் தொழித்திடல் சீரி தென்றனன்;
விருப்பொடு கேட்டனர் விரைந்து நின்றனர்.

ஊக்கி நின்றது.

1011 இன்றிடை கழிந்துமேல் எதிரும் போரினில்
பொன்றிடும் பகையெனப் பொம்ம லோங்கினர்;
வென்றியை விழைந்துவெம் பகல்க ழித்தனர்
அன்றிர வடைந்ததும் அமர்ந்த யர்ந்தனர். (125)

இருவர் எண்ணியது.

1012 இரவிடை அனைவரும் இனிது றங்கினர்;
உரமிகு துரைமல்லன் உருமன் என்பவர்
தரமுடன் எழுந்தனர் சார்ந்து தெவ்வரைக்
கரவுடன் புகுந்துநேர் கடிய எண்ணினர். (126)

உறுதி பூண்டது.

1013 கொடுங்கடு மருந்துகள் கொண்டு நம்மிடை
அடுந்துயர் அடிக்கடி அடர்ந்து செய்கின்றார்;
விடும்பரி சிலரைநாம் வென்று நீக்கிடின்
நெடும்புக ழாமென நினைந்து நின்றனர். (127)

கரவு கருதியது.

1014 நேரெதிர்ந் தமரினை நெறியிற் செய்தலே
வீரர்தம் மரபதாம் எனினும் வெய்துற
ஈரமில் நெஞ்சராய் இகலி நிற்குமிக்
கோரரை வஞ்சமாய்க் கோறல் தக்கதே. (128)

இரவில் புகுந்தது.

1015 என்றுளந் துணிந்தவர் எதிர்ந்து கச்சையை
நன்றுற வரிந்தனர் நயந்து கட்டினர்
வென்றிகொள் வாளிடை விசித்துக் கைவெடி
ஒன்றுகைக் கொண்டனர் உவந்து சென்றனர்.

படு பகை நிலை.

1016 நடுநிசி வேளையில் நகரம் நீங்கியே
அடுதிறல் உடையவர் அமைதி யாகவே
படுபடை யமர்ந்துள பாச றைக்கயல்
கடுகினர் பகைநிலை கருதி நின்றனர். (130)

கடுங் காவல்.

3018 பரிகளுக் குணவிடும் பருத்த தாழிகள்
அருகினி தமர்ந்தனர் அரவம் நோக்கினர்:
வெருவரு காவலர் வெடியும் கையுமாய்த்
திரிதரு நிலையினைத் தெரியக் கண்டனர். (131)

காவலன் கண்டான்.

3019 இப்படி இவர்மறைந் திடங்கண் டாயுங்கால்
அப்படிக் காவல்செய் அவருள் ஓர்மகன்
எப்படி யோசிறி தையம் எய்தி அம்
மைப்படி யிருட்டினில் மறுத்து நோக்கினன்.

காட்டி நின்றான்.

3020 நோக்கினன் துணைவரை நுனித்துக் காட்டியிப்
போக்கினில் ஆள்நிலை பொருந்தக் கண்டனன்:
ஊக்கமாய் நுனித்துநீர் உணர்மின் என்றனன்:
தாக்கிநேர் சிரித்தனர் தாழி என்னவே. (133)

அவர் மாறிப் போனார்.

3021 மிடாவினை ஆள்என வெருண்டு கண்டுநேர்
கடாவினன் காப்பினில் கடுமை யாளனே:
அடாவிவன் ஆண்மையே ஆண்மை யென்றவர்
விடாநகை செய்தனர் வேறு போயினர். (134)

இவர் தேறி நின்றார்.

3022 காணுற நேர்ந்தது கருமை யாமென
நாணிநின் றவனும்பின் நகர்ந்து நீங்கியே
பூணுறும் அயலிடம் பொருக்கென் றேகினன்:
மாணுறும் இவர்மனம் மகிழ்ந்து கொண்டனர்.

தீரமாய் எழுந்தார்.

3023 காவலின் கடுமையும் கணக்கும் கண்டிவர்
ஓவர வியந்தனர் ஊக்கம் ஓங்கினர்:
மேவல ரிடையின்று மேவித் தாம்கொண்ட
ஆவலைத் தீர்த்திட அடர்ந்தெ ழுந்தனர். (136)

வீரமாய் எழுந்தார்.

3024 நிலைதெரி யுருவுற நிமிர்ந்து செல்லினே
தொலைதெரி காவலர் சுட்டு வீழ்த்துவர்;
தலைதெரி யாமலே சார்வம் என்றுமற்
கலைதெரி வீரர்கள் கருதிச் சூழ்ந்தனர். (137)

ஊர்ந்து சென்றார்.

3025 பாம்பெனப் பாரிடைப் படர்ந்து மார்பினுல்
நாம்பெனத் தவழ்ந்துகைச் சமர்த்தி னுல்கசர்த்
தாம்பரி சாற்றியே அடர்ந்துள் ளேறினர்
போம்பரி சேவரும் பொருந்தத் தேறிலார். (138)

பாடி புகுந்தார்.

3026 ஒன்னலர் மிடைந்துள உறையு ளாகிய
பன்னருந் திடலுடைப் பாடி வீட்டினுள்
இன்னவர் இருவரும் எவரும் யாதொரு
சின்னமும் தேர்கலா வகையில் சேர்ந்தனர். (139)

3027 சேனைத் தலைவனைக் கண்டார்.

படம்பொதி மாடத்தில் படையின் வேந்தவன்
கடம்பொதி களிறெனக் கண்டு யின்றனன்;
விடம்பொதி கருவிகள் வெய்ய வீரர்கள்
இடம்பொதிந் திருப்பன எங்கும் கண்டனர். (140)

3028 உறங்குபவனுக்கு இரங்கினார்.

சேனையின் தலைவனைச் செகுத்து நீக்கலாம்
ஆனவன் உறங்கும்போ ததனைச் செய்வதோ
னமென் றிரங்கினர்; இகலை ஏற்றியே
மனங்கள் விளைத்திட ஊக்கி நோக்கினர். (141)

3029 படைகள் அழிய வகை புரிந்தார்.

ஆண்டகை யாளரவ் வல்லின் நாப்பணே
ஏண்டரும் எவருமே எய்த லாவிடம்
காண்டகு திறலொடு கலந்து தெவ்வர்கள்
மாண்டொழிந் திடும்வகை வகுத்து வார்த்தனர். (142)

பகை பகை என்று கூவினர்.

3030 பகைபகை என்றுவாய் பதறிக் கூவியே
புகையுறக் கைவெடி பொருந்தச் சுட்டனர்;
தொகையுறு படையெலாம் துணுக்க முற்றுடன்
வகைதெரி யாமலே மறுகி மண்டின. (143)

மருண்டு மூண்டனர்.

3031 எதிரிகள் புகுந்தனர் என்றுள் எண்ணியே
முதிர்சின முடன்மிக மூண்டு நேர்ந்தவர்
பிதிர்வுறக் கொன்றனர் பிழைக ளாகவே
அதிர்வுடன் அவரவர் அடித்து மாண்டனர். (144)

மாறிச் சுட்டனர்.

3032 உள்ளுற நின்றிவர் ஒன்ன லார்தலை
துள்ளிட வெட்டினர்; தொடுத்துச் சுட்டனர்;
கள்ளமென் றறிகிலார் கைக லந்தனர்;
தள்ளரும் படையொடு படைகள் தாக்கின. (145)

இறந்து பட்டனர்.

3033 தூக்கத்தின் தொடர்ச்சியால் தொடர்பு கண்டிலர்;
ஊக்கத்தின் டிறலினர் உணர்வு குன்றினர்;
நோக்கத்திற் பட்டவர் நொந்து கீழ்விழ
ஏக்கத்திற் சுட்டனர் இறந்து பட்டனர். (146)

எங்கும் திகில்.

3034 கொல்லுகொல் என்றசொல் எங்கும் கூறியே
வெல்லுவெல் என்றுவாள் வீசிச் சென்றனர்;
அல்லிலன் றெங்கணும் அவல மீறியே
எல்லையில் முண்டங்கள் எழுந்து துள்ளின.

அனந்தலோடு அழிந்தனர்.

3035 இனந்தெரி யாமலே எதிரி யென்றவர்
சின்தெறி வேலினுல் தீய குண்டினுல்
மனந்தெரி நட்பினர் மாறு மாறுகொண்
டனந்தலோ டடர்ந்தனர் அழிந்தொ ழிந்தனர்.

மாண்டு வீழ்ந்தனர்.

3036 ஒருவரை ஒருவர்நேர் உணர லாமையால்
மருவின பேரெலாம் மாண்டு வீழ்ந்தனர்;
துருவின இருவரும் துள்ளி எங்கணும்
ஒருவினர் தலைகளை உருட்டி யோங்கினர். (149)

கடுத்து மாய்த்தனர்.

3037 உளவறிந் துள்ளிடம் எங்கும் ஓடியே
களவுடன் பலதலை கடுத்துக் கொய்தனர்;
அளவறு கொலைகளங் கடர்ந்து வீழ்ந்தன
தளமிருந் திருவரும் தாவி யேகினர். (150)

மடிந்து மண்டினர்.

3038 ஊரொரு சிறிதுமே உடலில் இன்றியே
வேறிரு மனிதர்போல் வெளியில் ஏறினர்;
வீரொடு பகையினை வெல்ல எண்ணியே
மாரொடு வந்தவர் மடிந்து மண்டினர். (151)

உற்றவர் ஒருவினர்.

3039 மற்றவர் ஒருவரும் மடித லின்றியங்
குற்றவ ரேயுலந் துள்ள தன்மையால்
பற்றலர் சூழ்ச்சியால் படுத்த தாமென
அற்றம துணர்ந்தனர் அகங்கொதித்தனர். (152)

அதிபதி நொந்தான்.

3040 அன்றவண் இறந்தவர் ஆறு நூறென
நின்றவர் கண்டனர் நெடிய சேனையின்
ஒன்றிய அதிபதி உற்ற தோர்ந்துளம்
கன்றினன் பகையினைக் கடுத்து நொந்தனன்.

ஆய்ந்திருந்தான்.

3041 விடிந்ததும் படையினுள் வெய்ய தாகமுன்
மடிந்தன நீக்கிவன் மான மீதுற
நெடுஞ்சினம் கொண்டனன் நின்ற சேனையை
அடும்படி ஏவிட ஆய்ந்தி ருந்தனன். (154)

விரகர் வியந்தார்.

3042 இவ்வகை அவணுற இரவில் போனஅவ்
வெவ்வலி யிருவரும் விரகொ டொன்றிவெந்
தெவ்வரைச் சிதைத்தவச் செயலை எண்ணியே
செவ்விய துயிலிடைத் திளைத்தி ருந்தனர். (155)

மன்னன் அறிந்தான்.

3043 வைகறை தனில்துயில் எழுந்து மன்னவன்
செய்கடன் முடித்தபின் தெவ்வர் சேனையில்
எய்திய யிழவினை எதிர றிந்தனன்
செய்தவர் யார்?எனத் தெளிந்து தேர்ந்தனன்.

உசாவி ஓர்ந்தான்.

3044 ஆனவர் தம்மைநேர் அழைமின் என்னவம்
மானவர் இருவரும் வந்து நின்றனர்;
போனதும் வந்ததும் புகலக் கேட்டனன்
வானுற வியந்துளம் மகிழ்ந்து கொண்டனன்.

யாவரும் வியந்தார்.

3045 ஊமையன் வீரரென் றுலகம் போற்றிட
ஊமைபோல் சென்றவர் உளூற்றி வந்ததை
ஏமுற அறிந்ததும் எவரும் ஏத்தினர்;
தாமுறப் பெற்றதாத் தழைத்து நின்றனர்.

பரிசு அருளினன்.

3046 அரும்பெருங் காரியம் ஆற்றி வந்தவப்
பொருந்திற லாளரைப் போற்றி மன்னவன்
பெரும்பரி சருளினன்; பேண லாரிடை
வரும்பரி சறிந்திட வாய்ந்தி ருந்தனன். (159)

எதிரி சூழ்ந்தது.

3047 வஞ்சக மாகவன் படையுள் வல்லிர
வஞ்சிடா தடைந்துபே ரழிவு செய்தனர்
வெஞ்சினப் பகைவரென் றெண்ணி மேவலன்
நெஞ்சகம் கொதித்தனன் நெடிது சூழ்ந்தனன்.

எண்ணி மறுகியது.

மன்முறை எதிர்ந்துநம் பாட ழித்தனன்;
மின்முறைக் குறுதிறை மறுத்து நின்றனன்:
பொன்முறைக் கிசைந்திலன் தொல்லை செய்கின்றான்
மன்முறை செய்வதென் றெண்ணி ஏங்கினன். (161)

தளபதி உளவறிந்தது.

1041 அன்றுபோய் மற்றைநாள் அமரை யாற்றிட
முன்றிய துணையுடன் உசாவிச் சேனையை
வென்றிற லுறவணி வகுக்க வென்றனன்
பின்றியை விழைந்தவவ் வெள்ளை வேந்தனே.

வெல்ல விரைந்தது.

1042 மன்றல் வென்று நேரிலேறிப் பொருதுகொன் றுவெற்றி [யைச்
சென்றி டைமறித் திளை யின்று தேறும் என்று கூறியே
என்றும் முன்று கானம் என்று காதம் எங்கும் ஏறவே
வென்றி யங்கள் தூரி யங்கள் பெருகி எங்கு மீறின. (163)

வீரூடு மூண்டது.

1043 மலையமர்ந்த ஓதை யங்கு மூள நின்ற சேனைகள்
அலையெ றிந்து கடலெழுந்து கடுகி வந்த தாமென
விலையி மண்டி வெடிக ளாதி வெய்ய கையில் ஏந்தியே
அலையெ றிந்து தளரு மாறு தளர்வி லாது சார்ந்தன.

வாசி ஏறி வீசினர்.

1044 சேலை வீரர் மீறி நின்று சீறி எங்கும் ஏறியே
வாலை விற வந்து மண்டி மாற டர்ந்து பொங்கினர்;
ஆலை போது தானை யாதி ஆல கால மானவே
காலை வீரர் சூழ வாசி யேறி வீசி ஏவினன். (165)

சமரில் ஊக்கினன்.

1045 வேலை வீரர் வெம்படை விரைந்தெழுந்து பொங்கியே
வேலை மென்ன வந்தடர்ந்த வீறு கண்டு மன்னவன்
தோலை சங்கொ தித்து நின்ற ஒண்டிறற் படைகளைத்
தூலை சூந்து றத்தி னேடு சமர்முகத்தில் ஊக்கினன்.

3054 **இகல்கள் ஏறின.**

மன்னன் ஏவ மான வீரர் மாம டங்கல் போலவே
வன்ன வேல்கள் வாள்கள்கை வகுத்தெடுத்து வன்மை [யாய்ந்
துன்னி நின்ற தானை யூடு சூறை யென்ன ஏறினர்
இன்ன லோடு கொலைகள் ஏற இகல்கள் எங்கும் ஏறின.

3055 **முடிந்து மங்கினர்.**

சுட்ட குண்டு பட்டெழுந்து துள்ளி வீழ்வர் வீழுமுன்
வெட்டி வீரர் ஏறவெண் தலைக ளங்கு வீழ்ந்தன;
ஓட்டி நின்று ருத்தடர்ந்துள் ளூறு கொண்டு சீறவே
மூட்டி நின்ற வீர ரெங்கும் முடிவடைந்து மங்கினர்.

3056 **நிறை அழிந்து சிந்தினர்.**

கொலைபடர்ந்த வேல்களோடு கொடிய வாள்கள் வீசவே
மலை படர்ந்த தோள்க ளோடு வந்த வீரர் யாவரும்
தலைய ழிந்து தோளழிந்து தாளழிந்து சார்ந்ததம்
நிலையழிந்து நெஞ்சழிந்து நிறையழிந்து சிந்தினர். (169)

3057 **சுடுசரங்கள் தூவினர்**

மன்ன வன்றன் வீர ரேறி மாறு கொண்டு சீறவே
முன்ன மைந்து நின்ற சேனை முனையழிந்த தங்ஙனே
பின்ன மைந்து நின்ற வீரர் பெய்யு மாரி என்னவே
துன்னி வந்து சுடுசரங்கள் தொலைவிலாது தூவினர்.

3058 **வீரர் ஏறினர்.**

சோனை மாரி யாமெனச் சொரிந்த குண்டு துள்ளியே
ளனு லாய வுயிர்முறுக்கி யூடகன்று போயின;
மான வீரர் மண்டிவீழ்ந்து மண்ணிழிந்து மாண்டனர்;
ஏனை நின்ற வீரர் கன்றி இகலடர்ந்துள் ளேறினர்.

3059 **சீரழித்து வந்தனர்.**

வீசு கின்ற குண்டு கட்கு விலகி நின்று வேல்களோ
டோசை யோட ஓடிமே லுருத் தடர்ந்து துன்னலர்
வாசி யோட மானம் ஓட மாறு மாறு மண்டியே
சீசி யென்றி கழ்ந்து கொன்று சீரழித்து வந்தனர். (172)

1060 **மாய்த்து மண்டினர்.**

தொகணைத்துள் வென்ற வீரர் மறுகணத்தில் ஊனுடல்
கருகி நின்று வெடிகளின் கனல்களால் கரிந்தனர்;
அருகு நின்ற வீர ரோடி அடைய நின்ற தெவ்வர்கை
வருகி நின்ற வெடிபறித்து மாய்த்தெழுந்து மண்டினர்.

1061 **பாய்ந்து வெட்டினர்.**

மலைபு தப்பி ஓடவே குறித்துநின்று சுட்டவர்
நிலைபு பட்டு வீழ்ந்திடத் தொடர்ந்து பாய்ந்து வெட்டி
[னர்;
மலைடிநேர் வருந்தொறும் வடித்த குண்டு மாட்டியே
அலைடை யெங்கும் நேருறுமல் அவருநின்று தட்டினர்.

1062 **இருவகையிலும் அழிவுகள்.**

நெருநிறப் படைகளும் இகலி யேன்றுதம்
பெருநிறம் யாவையும் புரிந்து பொங்கின
நிருநிகள் ஓடியே கொழித்து மண்டின
பெருகிய தலைமலை பிணங்க ளெங்குமே. (175)

1063 **பொருது நின்றனர்.**

வீரவெவ் வெறியொடு வேந்தன் சேனையின்
சூரர்கள் துறைதொறும் தொடர்ந்து வென்றனர்;
கோலர் நிலைகுலை யாது நேர்ந்துநேர்
போரினை விடாதுடன் பொருது நின்றனர். (176)

1064 **குண்டு மழை.**

நிலைகுலை யாதெதிர் நேர்ந்து நின்றவர்
நிலைபல தரைவிழச் சமரில் மண்டியே
கொலைபல விழுந்திடக் கொடிய குண்டுகள்
நிலைமழை யாமெனச் சினந்து பெய்தனர். (177)

1065 **பாஞ்சையர் மாய்ந்தது.**

வெடியொடு பீரங்கி விரைந்து பொங்கியே
நெடியென எங்கணும் இரைந்து மண்டின;
அடியிட லின்றியே அரசன் சேனைகள்
படியிடைத் துடித்துயிர் பதைத்து மாய்ந்தன. (178)

3066 **மறுகி மாண்டனர்.**

தீயுறு சூழலில் சிக்கிச் சிங்கங்கள்
வாயுறச் சீறியுள் மடிந்த வென்னவே
காயுறு வெடிகளின் கனலில் பட்டிவர்
மாயுற மறுகிவாய் மடித்து மாண்டனர். (179)

3067 **சின்ன வீராவு.**

மன்னவன் படையிங்ங்ன் மாயக் கண்டதும்
சின்னவீ ராவெனும் சேனை காவலன்
தன்னரும் பரியின்மேல் தாவி ஏறினன்
மின்னெளிர் வாளொடு விரைந்து பாய்ந்தனன். (180)

3068 **தலைகள் துள்ளின.**

வல்லியம் ஊர்ந்தொரு வாள்கை ஏந்தியே
கொல்லியல் கூற்றுவன் கொதித்த தாமெனச்
சொல்லிய வீரன்முன் துள்ளிப் பாயவும்
எல்லையில் தலைகளங் கெழுந்து துள்ளின. (181)

3069 **சூறை ஆடினன்.**

காற்றெனக் கனலெனக் கடிய கூற்றெனச்
சீற்றமீக் கொண்டவன் சென்று தெவ்வரை
ஏற்றிய வாளினுக் கிரையிட் டெங்குந்தன்
தோற்றமே தோன்றிடச் சூறை யாடினன். (182)

3070 **வீர வேகம்.**

வாளினை வலக்கையில் சுழற்றும் வன்மையும்.
தாளினைப் பரிவயிற் றிடுக்கும் தன்மையும்,
கோளரி யெனவது கொதித்துப் பாய்தொறும்
தோளொடு தலைவிழும் தொகையும் யார்சொல்வார்?

3071 **படைத் தலைவன் அயர்ந்தான்.**

ஆடல்வெம் பரிவரு திறனும் அன்னவன்
வீடருந் திறலொடு வெட்டி வெங்கொலை
நீடிடச் செய்திடும் நிலையும் நோக்கியே
பாடழிந் தயர்ந்தனன் படையின் வேந்தனே. (184)

உருத்து ஊக்கினன்.

1072 தன்னயல் நின்றிடு தலைவர் நால்வரை
மன்னிய சினத்தொடு மறுகி நோக்கினன்;
இன்னவன் உயிரினை எடுத்து வம்மினென்
றுன்னிய வுறுதியோ டுக்கி நின்றனன். (185)

அவனும் நோக்கினன்.

1073 கோனவன் உரைசெயக் கொதித்து நால்வரும்
மானமீ தூர்ந்திட வாசி யூர்ந்துகைம்
மேனகு படையுடன் விரைந்து பாய்ந்தனர்;
.ஆனவர் வருதிறம் அவனும் நோக்கினன். (186)

விரைந்து மேவினன்,

1074 தன்னுயர் பரியினைத் தட்டி நேரெதிர்
முன்னுற முடுக்கினன் மூண்ட கோபத்தீ
மன்னிய கண்களில் மண்டி யோங்கிட
மின்னெளி வாளுற விரைந்து மேவினன். (187)

சார்ந்து சூழ்ந்தனர்.

1075 விரைந்திவன் வரும்பரி சறிந்து வெம்பரி
வரைந்தவர் விரகுடன் வகுத்து வஞ்சமாய்க்
கரந்துநாற் புறத்தினும் கடுகி மீண்டுடன்
தரம்பெறச் சூழ்ந்தனர் சதுரொ டொன்றியே.

வெட்டி வீழ்த்தினன்.

1076 உள்ளுற வஞ்சத்துநின் றுருத்து நால்வரும்
தள்ளருந் திறலொடு தாக்க லாயினர்;
துள்ளிமேற் பாய்ந்திவன் தொடர்ந்து *சோன் [செனும்
வெள்ளையன் தலையற வெட்டி வீழ்த்தினன்.

கடுகி மண்டினன்.

1077 மாண்டவன் வீழ்ந்திட மற்றை மூவரும்
மூண்டவெம் போரினை முடுகி முட்டினர்;

---

*ஜான்ஸ் என்பவன் ஆங்கிலப்படைத்தலைவருள் ஒருவன்.

ஆண்டகை இவன்பரி தூண்டி ஆர்த்துமேல்
காண்டகு திறலொடு கடுகி மண்டினன். (190)

புரவி தட்டினன்.

3078 சாரிகை திரிந்தவர் சார்ந்து வெட்டுங்கால்
நேரிவன் ஒதுங்கிமேல் நிமிர்ந்து கட்டினன்;
ஓர்முறை மூவரும் உடன்று வெட்டினர்
போர்முறை புரிந்திவன் புரவி தட்டினன். (191)

யாவரும் திகைத்தனர்.

3079 தாவிவெம் பரிவரு தன்மை கண்டந்த
மூவரும் மறுகினர் முனைந்த நெஞ்சிடை
ஆவலும் அச்சமும் அடைந்து நின்றனர்;
ஏவரும் திகைத்தனர் என்ன தாமென. (192)

தாவி எற்றினன்.

3080 வலத்தவர் சாரிகை வருந்தொ றும்மிவன்
நில்த்திட சாரிகை நிமிர்ந்து சுற்றினன்
உலத்தொடு பொருததோள் உரங்கொண்
[டொன்னலர்
தலைத்தலை சிதறிடத் தாவி எற்றினன். (193)

தெரிந்து மெச்சினர்.

3081 பரியினை யூர்திறம் பதங்கண் டொற்றிமேல்
அரியெனப் பாய்ந்துவந் தடரும் ஆண்மைமுன்
பொருபெரும் போரிலும் உருத காட்சியாய்த்
திரிதரு மிவனிடைத் தெரிந்து மெச்சினர். (194)

வீரவாள் மாட்டினர்.

3082 தீட்டிய குலாலன்கைத் திகிரி யாமெனக்
காட்டிய வளியிடைக் கறங்கு போன்மென
மூட்டிய பரிமிசை மூண்டு வீரவாள்
மாட்டிநேர் வருந்தொறும் மறிந்தொ துங்கினர்.

படிய நூறினன்.

1083 ஒதுங்கியும் மூவருள் ஒருவ னகிய
கதம்படு * காக்கெனும் கடிய வீரனை
விதம்படு வாளினல் வீசி வெண்டலை
பதம்படு படியிடைப் படிய நூறினன். (196)

வீரன் மாண்டான்.

1084 இருவரும் இறந்திட இகலி நின்றவர்
வெருவரு திறலொடு வெகுண்டு பாய்ந்தனர்
ஒருபெரும் படையிடை யுற்ற டைந்தது
கருமருந் தேவினர் கடிது மாண்டனன். (197)

போரும் பட்டது.

1085 ஒருபெரும் புயலென ஓடிச் சுற்றிநின்
றிருபெருந் தலைவரை யுருட்டி யேன்றிடை
மருவிய படையினை மாட்டி வென்றவப்
பொருதிற லான்படப் போரும் பட்டதே. (198)

மண்டி ஆர்த்தனர்.

1086 வன்னவாம் பரியொடு வால வீரனும்
அன்னவன் மடியவும் அமரில் வேற்றிமேல்
துன்னிய தாமெனத் துன்ன லார்மிக
மன்னிய களிப்பொடு மண்டி யார்த்தனர். (199)

பார்த்தனர் திகைத்தனர்.

1087 ஆர்த்திடும் ஓசைசென் றண்டம் தூர்த்திட
நீர்த்திரை யாமென நெடும்ப ரித்திரள்
போர்த்திடும் சேனையுள் பொம்ம லோங்கிட
பார்த்தனர் திகைத்தனர் பட்ட தோர்ந்தனர்.

மன்னன் மறுகினன்.

1088 சூரர்கள் துதித்திடும் சூர னஞ்சின்ன
வீரவா விறந்தனன் என்னும் வெம்மொழி
பாரவாம் பண்புடை அரசன் கேட்டதும்
போரவா ஒழிந்துளம் பொருமி நின்றனன்.

---

*காக்கு என்பவன் உபதள பதிகளுள் ஒருவன்.

கண்ணீர் சிந்தினர்.

3089 செருவினில் சிங்கவே றென்னச் சென்றெங்கும்
மருவிய கீர்த்தியை வளர்த்து வந்தவன்
ஒருவினன் என்னவும் உளைந்தி யாவரும்
அருவியங் கண்ணினீ ராடி நின்றனர். (202)

துணிந்துள் ஏறினர்.

3090 நின்றவர் நேரலர் நிலையை நோக்கினர்;
வன்றிற லுடன்படை வகுத்து மண்டினர்;
வென்றியை விழைந்தனர் வேல்க ளாதிய
துன்றிய படையுடன் துணிந்துள் ளேறினர்.

சூழ்ந்து எழுந்தனர்.

3091 மன்னனும் தம்பியும் வாளும் வேலொடு
வன்னவாம் பரியினில் வாவி வந்தனர்;
அன்னவர் அருகெலாம் அரிய வீரர்கள்
துன்னிய படைகொடு சூழ்ந்தெழுந்தனர். (204)

தலைகள் துள்ளின.

3092 அருந்திறல் மன்னவன் அடைந்த போதினில்
பொருந்திற லுடன்படை புகுந்து பொங்கின;
கருந்தலை வெண்டலை கலந்து துள்ளின
விருந்துகள் கூளிகள் விழைந்து நுங்கின. (205)

ஆள்கள் அழிந்தன.

3093 வாள்களும் வேல்களும் வல்ல யங்களும்
நீளெழு மழுவளை நெடிய கோல்களும்
தூளெழு களமெங்கும் துன்னி நின்றன
ஆளழி குருதிகள் ஆறு மண்டின. (206)

3094 **முண்டங்கள் உருண்டன.**

கண்டவர் கண்டவர் கைக லந்துநேர்
கொண்டவெம் படைகொடு கொதித்து மூண்டதால்
மண்டைகள் உருண்டன; மார்பு தோள்கள் தாள்
துண்டங்கள் முண்டங்கள் தொடர்ந்து துள்ளின. (207)

எங்கும் வெங்கொலை.

3095 வெட்டுகள் குத்துகள் வெடிகள் வீச்சுகள்
தட்டுகள் எற்றுகள் தாவும் தாக்குகள்
முட்டுகள் கட்டுகள் மூண்ட மோதுகள்
நெட்டுநெட் டெங்கணும் நிறைந்தெ ழுந்தன.

பொன்றி வீழ்ந்தனர்.

3096 வாவிவாம் பரிவரு வலிய வீரர்கள்
ஆவிபோ யுகும்படி அயில்கள் ஒச்சினர்;
மேவிய குண்டுகள் மெய்யிற் பட்டிவர்
பூவியல் முகம்படப் பொன்றி வீழ்ந்தனர். (209)

கழுதுகள் நிரம்பின.

3097 படுகொலை இருதிறப் படையு ளும்மிகக்
கெடுநிலை யாகவே கிளர்ந்தெ ழுந்தன;
அடுதொழில் மறலியும் அஞ்ச வெங்களம்
நெடுநிரை கழுதுகள் நிரம்பி நின்றன. (210)

உடல்கள் உருண்டன.

3098 குத்தென வெட்டெனக் கொடிய வெம்மொழி
எத்திசை மருங்கினும் இரைந்தெ ழுந்தன;
தத்திய பரிகளும் தானை யாளரும்
ஒத்துயிர் அழிந்துட லுருள லாயின. (211)

மாண்டு மாய்ந்தனர்.

3099 தொடுவெடி சுடுதொறும் சுருண்டு வீழ்ந்திவர்
படுபழி யாகவே பதைத்து மாண்டனர்;
அடுபடை அடர்தொறும் அவரும் ஆவிபோய்
இடிபடு தருவென இடிந்து மாய்ந்தனர். (212)

உயிரை உண்டனர்.

3100 சேனையின் காவலர் செறுத்தெ ழுந்துவெங்
கானுறு கனலெனக் கடுத்து மண்டினர்;
மானவன் வீரரும் மாறு சீறியே
ஊனகு படைகளால் உயிரை யுண்டனர். (213)

உருத்து உடற்றினர்.

3101 கொன்றுயிர் குடித்திரு திறத்தும் கோத்தெதிர்
நின்றவர் நின்றவர் நிலைய ழிந்துமண்
பொன்றினர் பொன்றினும் பொங்கி மேல்படர்ந்
தொன்றிய போரினை யுருத்து டற்றினர். (214)

மன்னன் மூண்டது.

3102 அடர்ந்தேறி யிருபடையும் அடுசமரம்
ஆற்றுங்கால் அரசன் ஆர்த்துத்
தொடர்ந்தேறிப் பரிகடவிச் சுடர்வடிவான்
கடிதோச்சித் துனைவி லேகி
இடந்தோறும் நின்றதெவ்வர் இடைந்துவிழுந்
திழிந்தழிய எற்றி யேகிக்
குடந்தோயும் திகிரியெனக் கொடுங்களமெ
லாநொடியிற் கொதித்து வந்தான். (215)

சமராடிச் சரித்தான்.

3103 கோலமயி லூர்ந்துவரு குமரனைத்தன்
உளங்கொண்டு கொற்ற வாள்கை
மேலெழுந்து மின்வீச மிடலோடு
மேல்வீசி மேவார் தங்கள்
காலனெனக் கழுகோடு கழுதாடக்
கவந்தமுடன் களித்தங் காடத்
தாலபல மெனத்தலைகள் தரையாடச்
சமராடிச் சரித்தா னன்றே. (216)

துரைச்சிங்கம் தொடர்ந்தது.

3104 தம்பிதுரைச் சிங்கமுமோர் திசைபுகுந்து
பரிதட்டித் தடவாள் ஏந்தி
வெம்பியெதிர் பகைவர்களை வெங்காலற்
கிரையாக்கி விரைந்து மண்டித்
தும்பிநிரை யிடையிலொரு சுடர்சிங்கக்
குருளையெனத் துணிந்து பாய்ந்தே
அம்பினிலும் கடிதாக அடுகளமெங்
குங்கடிதா யார்த்த டர்ந்தான். (217)

இருவரும் பொருதது

3105 மன்னவனும் இளையவனும் வன்சமர
பூமியெங்கும் மருவி யேறிச்
சின்னபின்ன மாயுடல்கள் சிந்திவிழச்
சேனைகளைச் சிதைத்த ழிக்கும்
அன்னதிறற் செய்கைகளை அதிபதிகண்
டுசினத்தோ டார்த்தெழுந்து
தன்னரிய பரியேறித் தானையெலாம்
தொடர்ந்துவரத் தாவி வந்தான். (218)

நீலவேணி நிலை.

3106 வந்துபடை வளைத்தவுடன் மன்னுமைச்
சிங்கம்தன் வாசி தன்னைச்
சந்தமுடன் காலிடுக்கித் தட்டினன்
தட்டவே நீல வேணி
இந்திரன்றன் பரியென்ன இடசாரி
வலசாரி எழுந்து பாய
அந்தவொரு கணத்துள்ளே அடுதலைகள்
பலவீழ அரிந்தா னம்மா! (219)

வாளால் மடிந்தார்.

3107 வல்லியத்தின் போத்தொன்று வந்தோடிப்
பாய்ந்தவுடன் மந்தை யாகப்
புல்லியவெங் காளைகள்தம் புலன்கெட்டு
வெருண்டோடிப் போக்கொன் றின்றிக்
கொல்லியலும் படிகுவிந்து குப்புற்று
வீழ்ந்தவெனக் கோத்தா ரெல்லாம்
மல்லியலும் தோளுமை வடிவாளுக்
கிரையாகி மடிந்தா ரன்றே. (220)

இரிந்து போனார்.

3108 மன்னவன்றன் இவ்வாறு வன்சமரில்
வலியாடி வருங்கா லங்கே
பின்னவனும் தொடர்ந்தேறப் பெரும்படையும்
அடர்ந்தேறப் பேணர் எல்லாம்

சின்னபின்ன மாய்ச்சிதைந்து செத்தொழிந்தார்
மற்றவர்கள் சிதறி யோடி
இன்னதிசை போவதென இனந்தெரியா
திடந்தோறும் இரிந்து போனர். (221)

ஏங்கி நின்ருர்.

3109 படையழிந்து பட்டிரியப் படைத்தலைவன்
படாதவனுய்ப் பட்டு நீங்கி
நடையறிந்த புரவியினல் உயிர்பிழைத்தான்:
பிற்கட்டு நண்ணு தோடித்
தடையகன்ற வனவிலங்கு தாவியவா
றெனவிரைந்து தப்பி நெல்லை
யிடையடையும் தொறுமுயிரை யிடையிடையே
இழந்தவன்போல் ஏங்கிச் சேர்ந்தான்.

இவர் மகிழ்ந்தார்.

3110 குளமுடைந்த நீர்போலக் கூடிநின்ற
படைகளெல்லாம் குலைந்து மாண்டு
களமிரிந்து போனவுடன் காவலன்றன்
படைவீரர் களிப்போ டார்த்துத்
தளமிருந்த தலமாய்ந்து படைவெடியா
திகளெல்லாம் சார்ந்து வாரி
வளமிகுந்த பாஞ்சைநகர் வந்தடைந்து
வென்றியுடன் மகிழ்ந்தி ருந்தார். (223)

சாற்றி நின்ருன்.

3111 படைவீரர் வாரிவந்த படைக்கலனைப்
பதிநோக்கிப் பற்ருர் தந்த
கொடைவீரப் பொருளிதுகொல்? கொண்டுபோய்
ஆயுதங்கொள் கோயில் வைமின்!
இடைமீறி யினியுமவர் எய்துவரேல்
இவற்றையெல்லாம் எடுத்தன் ருல்
தடைதீரத் தந்தவர்தம் முயிர்வாங்கித்
தம்மின்எனச் சாற்றி நின்ருன். (224)

வெற்றியை வியந்தார்.

3112 உற்றவுயர் வெற்றியெல்லாம் உம்பரோ
டிம்பருய்ய ஒளிருஞ் செந்தில்
வெற்றிவேற் பரனருளால் விளைந்ததென
நினைந்தரசு விழைந்து பேணி
அற்றைநாட் சந்நிதியில் அபிடேக
அருச்சனைகள் ஆர வாற்றிப்
பெற்றபெருங் கிளையுடனே களிசூர்ந்து
தொழுதேத்திப் பெருகி நின்றான். (225)

பற்றலர் பரிந்தார்.

3113 போருடைந்து புறங்கொடுத்துப் போன அதி
பதிமானம் போன தென்ன
நேருடைந்து நெஞ்சுடைந்து நெல்லியடை
யாதயலே நிலைம றைந்தான்;
சீருடைந்த தினியிந்தத் தென்னிட்டில்
நம்மரசு செல்லா தென்று
பேருடைந்த பிற்கட்டு பேதுறவுற்
றுளமுடைந்து பெரித யர்ந்தான். (226)

துளங்கி நொந்தார்.

3114 காற்றேடு கலந்தெழுந்த கடுங்கனல்போல்
நெடும்பரிமேல் கலந்து பொங்கிக்
கூற்றேடு கொலைபயின்ற நிலையவன்போல்
கோணுமை கொடிதாய்த் தோன்றி
மாற்றேடு மண்டிநின்ற வன்படையை
மண்படிய மாட்டி யன்று
தோற்றேடும் படிபுரிந்த தொல்லாண்மைத்
திறநினைந்து துளங்கி நொந்தான். (227)

மறுகிப் போனார்.

3115 இன்னபெருந் திறலுடைய இவ்வரசை
எவ்வலியால் எதிர்ந்து நேரே
என்னவகை யால்வெல்வ தினியென்ன
செய்வதென ஏங்கி ஏங்கி

அன்னதிறற் பிற்கட்டுள் ளாய்ந்தாய்ந்து
கடைசியா யார்ந்த சங்க
மன்னவர்பால் சென்றிசைந்த துரைத்துமென
மனந்துணிந்து மறுகிப் போனன். (228)

3116 **தலைவரை அடைந்தான்.**

கோனிவன் நிலையை அஞ்சிக் குலமிக நடுங்கிநின் று
போனவன் சங்க மன்னர் பொருந்திய அவைபுகுந் து
மானமும் மதிப்பும் நீங்கி மறுகிய நிலைய னாகி
ஆனதோர் அவலம் கூர அடிதொழு தயலே நின்றான்.

3117 **கும்பினியார் கும்பினர்.**

நின் றபிற் கட்டைநோக்கி நேர்ந்ததென் பாஞ்சைமன்னா
வென் றுகைக் கொண்ட துண்டா? வேறென்று விளைந்த
[துண்டா?
இன் றுநீ வந்து நிற்கும் இயல்பினை நோக்கின் எல்லாம்
பொன் றிட நீயே தப்பிப் போந்தனை போலாம் என்றார்.

3118 **பிற்கட்டே பிழைத்தான்.**

என் றவர் குறிப்பி னாலே எய்திய தறிந்து கூற
நின் றவன் இரங்கி நாணி நேர்ந்திவண் திரண்டு முன்னம்
வென் றியை விழைந்து சென் ற சேனையுள் வினையேன்
[மட்டும்
பொன் றிடா துய்ந்தேன் மற்றோர் பொன் றினர் போயி
[னரே.

3119 **பகை வலி பகர்ந்தான்.**

நேர்ந்தநம் படைகள் நேரே நேரலன் நேர்ந்த போது
காய்ந்தபுன் புற்கள் தீமுன் காய்வன போலக் காய்ந்து
மாய்ந்தனர் அந்தோ அன்னான் வலியையும் வரம்பி
[லாற்றல்
தோய்ந்துள மரபின் போரும் சொல்லயார் வல்லா ரையா?

3120 **எள்ளி யுள்ளான்.**

வெள்ளையர் கிளையை எல்லாம் வேரறக் களைந்து தெற்கே
உள்ளதன் அரசை யிந்த வுலகெலாம் பரப்ப எண்ணித்
தள்ளருந் திறலோ டன்னான் தருக்கிநிற் கின்றான்; நாளும்
எள்ளலே புரிந்து நம்மை எளியரென் றிகழ்ந்துள் ளானே.

3121 வீரமாய் நின்றுளான்.

தன்படை பலவும் மாண்டு தாழ்ந்துள னெனினும் தானே
முன்படை யாத கோபம் மூண்டுமேல் முனைந்து கோடி
யன்படை வரினும் வெல்வேன் வருவன வருக! என்று
கொன்படை பயின்ற வீரக் குறிப்புடன் குறித்து நின்றான்.

3122 பெரிய படைகள் வேண்டும்.

வல்லபல் தானை யின்னே வல்விரைந் தேவி இந்தப்
புல்லிய பாளையத்தைப் போக்கிட வேண்டும்; இன்றேல்
செல்லுதென் றிசையில் நாம்கொள் திருவெலாம் இழந்து [யாதும்
சொல்லிடா தகன்று நீங்கித் தொலைந்துடன் போக வேண்டும்

3123 ஊமையன் இருந்தால் சீமையர் இல்லை.

தென்திசைப் பாஞ்சை பூமன் திறலுட னிருக்கும் காறும்
நன்றிசை யோடு செல்வம் நயந்தர சாட்சி எய்தி
நின்றிசைந் திருக்க விங்கே நீதியொன் றில்லை; நேரே
பொன்றினர் போலத் தீர்ந்து போதலே புகலா மென்றான்.

3124 சிந்தி நாம் போக வேண்டும்.

இந்திய நாட்டில் ஏறி இறைமையின் முறைமை எய்தி
முந்திநாம் நாட்டியுள்ள முதன்மையை முழுதும் மாற்றிப்
பிந்திய நிலையில் நின்று பெயர்ந்துடன் விரைந்து நீங்கிச்
சிந்திநாம் போக வேண்டும் செயலையே செய்துள்ளானே!

3125 ஊமையன் உறுதி.

ஊமையன் சீமை யிங்கே உடலினை வளர்க்க நாடிச்
சீமையி லிருந்து வந்த சித்தையர் தேச மெங்கும்
சோமமாய்ப் அரசை நாட்டி நிலைத்திட நேர்ந்தார் என்றே
ஏமமாய் நம்மை அன்னன் இகழ்ந்தெங்கும் எதிர்த்தே [யுள்ளான்.

3126 அதிபதி அயர்ந்தது.

அன்னவன் உரைத்த லோடும் அதிபதி அகந்திகைத்து
மன்னவன் ஊமை யோடு வன்பகை மூட்டி மாறு

இன்னலே விளைத்து நின்ருய் இனிஎன்ன விளைப்பாய் [கொல்லோ?
முன்னமே குறித்துச் சொன்ன மொழியொன்றும் [உணர்ந்தா யில்லை.

3127 நண்பனைப் பகைத்தோம்.

சிறையிடை வைத்துத் துன்பம் செய்திடா தரசு செய்ய
முறையுடன் விடுத்தி ருந்தால் முன்புபோல் நண்பனுகித்
திறையையும் செலுத்தி நம்பால் செறிந்தபே ரன்புபூண்டே
உறைகுவன் நீவிர் வீணே உறுபகை வளர்த்து விட்டீர்!

3128 சேனைகளைச் செலுத்தினர்.

இனியதை எண்ணி யாவ தொன்றிலை யிகல்வளர்ந்து
துனிமிகுந் துள்ளதென்று சூழ்ந்துயர் சேனை தன்னை
நனியுடன் அழைத்த மைத்து நாயக னுகை வீரத்
*தனிமகன் அங்கி என்னும் தளபதி தனைப்பணித்தார்.

3129 ‡ இறுதியில் கூறிய உறுதி.

இறுதியாய் அனுப்பு மிந்த ஏண்படை பொருது வென்றி
பெறுவதொன் றில்லையாயின், பேணலன் தன்னைப் [பேணி
உறுதியா யுறவு கொண்டுள் ளுருவென்று மின்றி வாழ
அறுதியிட் டமைக என்ன ஆணைதந் தவனை யுய்த்தார்.

29–வது படலம் முற்றிற்று.
ஆகக் கவி 3129.

---

* அங்கி என்றது அக்கினியை.

இந்தப் பெரிய சேனைகளுக்குத் தலைமைத் தளபதியாய் வந்தவன் சிறந்த போர்வீரன். **கர்னல் அக்நியூ** (Colonel Agnew) என்னும் பேரினன்.

‡ இதுதான் கடைசியாக அனுப்புகிற படை. இந்தப் பெரிய சேனைகளாலும் வெல்ல முடியவில்லையானுல் பாஞ்சை மன்னனேடு இதமாய்ச் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்று கும்பினி அதிபதிகள் உறுதிகூறி அனுப்பியுள்ளனர். மேலே வந்துள்ள நான்கு பாடல்களையும் பாங்கோடு ஊன்றி நோக்குங்கள்; ஆட்சித் தலைவர்கள் கருதியிருக்கும் கருத்துக் கனைத் திருத்தமாக உணர்ந்து தெளிந்து கொள்ளலாம்.

முப்பதாவது

அக்கினி மூண்டு பொருத படலம்.

மெக்காலே என்னும் ஆங்கில சேனாதிபதி பெரிய படைகளைக் கொண்டு வந்து பாஞ்சைக் கோட்டை மேல் பலமுறை போராடியும் படுதோல்விகளையே அடைந்தான். பாசறையில் இருந்து கொண்டு படைகளை வரவழைத்து ஆனவரையும் மானவீரோடு மூண்டு போராடினான். யாதும் பலியாமையால் முடிவில் கும்பினி அதிபதிகளுக்கு எழுதினான். பிற்கட்டும் நேரே போய் நிலைமையை விளக்கிப் பகைமையைக் கடுமையா மூட்டினான். மூட்டவே அவர் கொடிய கொலைக் கருவிகளோடு நெடிய சேனைகளை நேரே அனுப்பினர். அந்தப் பெரிய படைகளுக்குத் தளபதியாய் கர்னல் அக்னியூ (Colonel Agnew) என்னும் பேர் பெற்ற போர் வீரன் தலைமை தாங்கி வந்தான். வேறு சில உபதளபதிகளும் உடன் வந்தனர். அந்த ஐரோப்பியர் நடத்தி வந்த சேனைகள் பாஞ்சைப் பாசறையை அடைந்தன. மெக்காலே (Macaulay) துரை புதிய தளபதியை எதிர்கொண்டு அழைத்து உபசரித்து யாவும் விளக்கினான். மே மாதம் 21-ந் தேதி (21—5—1801) வந்தவன் இரண்டு நாள் ஓய்ந்திருந்தான். மூன்றுவது நாள் படைகளைக் கடுமையாய் நடத்திக் கொடுமையாய்ப் போராடினான். அந்தக் கொடிய போராட்ட நிலைகளை இந்தப் பகுதியில் நேரே காண வருகிறோம். ஆங்கில தளபதியின் பெயர் தமிழில் **அக்கினி** என வந்தது. அவனுடைய கொடுமை கடுமைகள் நெருப்பு என நீண்டு மூண்டன. அந்த நிருப்பை இந்த நாமம் குறிப்பித்துள்ளது.

3130 **புதிய படைத் தலைவன்**

அக்கினிச் சென்னல் என்னும் அருந்திற லுடைய
[அன்னான்
திக்கெலாம் வென்று கொண்ட திண்ணியன்; சேனை
[வேந்தாய்த்
தக்கசீர் பெற்றுத் தெற்கே தானையை நடத்தி வேகம்
மிக்கவெண் பரியி வர்ந்து விறலுடன் வெகுண்டு வந்தான்.

3131 **உப தளபதிகள்.**

*மன் றமன் மார்சல் என்னும் வன் றுணைத் தலைவர்சூழத்
தென் திசை நோக்கிச் சேனைத் திரளினைச் செலுத்திப்
[பக்கம்
ஒன் றிய பிற்கட் டோங்கி யுறுவழி காட்ட ஓடிக்
கன் றிய மனத்த ணுகிக் கடிதுவந் தினித டைந்தான். (2)

3132 **வந்த தலைவன் சிந்தித்தது.**

வந்தவன் அயலமர்ந்து வளமலி பாஞ்சை தன்னை
முந்துற நோக்கி நின்று முகம்சுளித் தகந்திகைத்தே
இந்தமண் கோட்டை மீதா என்னையை ஏவி நின்றூர்
நிந்தையீ தென்றிகழ்ந்தான் நேர்ந்துபிற்கட்டறைந்தான்.

3133 **உண்மையை யுணர்த்தியது.**

மண்ணுறு கோட்டை என்று மதித்துநின் றெளிய தாக
எண்ணினீ இகழு கின்றுய்! எறுழ்வலி படைத்து வந்த
திண்ணிய காலன் ஆதி சேனையந் தலைவர் தம்மோடு
எண்ணில்பல் படையும் உண்ட திந்தமா நகர மந்தோ!

3134 **உறுதி கூறியது.**

வந்துவந் தெதிர்ந்தோர் எல்லாம் மாண்டுமண் ணுய்ம்மடிந்து
சிந்திணு ரன்றி நின்று செயித்தவர் எவரு மின்றே
இந்தமண் கோட்டை ஒன்றை எய்திடின் உலக மெல்லாம்
முந்துற வென்று கொண்ட முதன்மையாய் முடியும் என்றுன்.

3135 **புலிப்புதர்.**

புலியுறு புதரை நோக்கிப் புல்லிதென் றிகழ்ந்து சொல்லும்
மெலிவுரை போல இந்த வியனகர் வெளியை நோக்கி
நலிவுரை யாடு கின்றுய்! நண்ணியுள் ளிருக்கும் வீரத்
தலைமகன்நிலையைக் காணின் தவறென வுணர்ந்து தேர்வாய்.

3136 **பொருந்தி யிருந்தது.**

என்றவன் பாஞ்சை வேந்தன் இயல்பினை எடுத்துக்கூறு
நன்றென உணர்ந்து கொண்டு நண்ணலன் நிலையை
[எண்ணி

---

*மன்றமன் என்றது ஜாண்மன்ரோவை. "Captain John Munro, Major of brigade, Captain Marshall" முதலியோர் உபதளபதிகளாய் உடன் வந்திருந்தனர்.

அன்றவண் அயலி லான அரியபா சறை அ மைத்தே
ஒன்றிய சேனை யோடங் குவந்தினி துறைந்திருந்தான்.

3137 எட்டன் ஒட்டியது.

ஒட்டிநின் றுளவு கூறி உரிமையாய் உற்று நின்ற
எட்டனும் பிற்கட் டுய்த்த இன்னுரை கண்டு மெச்சிக்
கூட்டிய படையி னோடு கடுத்துவந் தடைந்தான் சேனைப்
பட்டமுற் றவனை டொன்றிப் பாடுகொண் டாடிக்
[கொண்டான்.

3138 மன்னன் துணிந்தது.

பகைப்படை வந்திருக்கும் பான்மையைத் தெரிந்து
[மன்னன்
தகைப்படைத் துணைவரோடு சார்ந்துடன் சூழ்ந்துநின்ற
தொகைப்படை தன்னை யூக்கித் துன்னலர் துணிவை
[யின்னே
நகைப்படச் செய்ய வேண்டும் நாமென நயந்துநின்றான்.

3139 பள்ளி கொண்டது.

அல்லுற அடுத்து நின்ற அடலமர் நிலையை ஆய்ந்து
வெல்லியல் நிலையை வீரச் சோரிமெய் வெதும்ப எண்ணிக்
கொல்லியல் கூற்றம் என்னக் கொதித்துமன் னவன்துயின்
[றான்
எல்லிவந் தெழவும் அன்னன் எழுந்துதன் கருமம் தேர்ந்
[தான்.

3140 உள்ளி நின்றது.

வீரனன் விசயன் ஆதி விறல்மிகு தலைவர் எல்லாம்
நேரடைந் தரசைச் சூழ்ந்து நேர்ந்துள நிலையை ஓர்ந்து
சாரணர் இருவர் தம்மைத் தானையை அறிய வுய்த்துப்
போரணங் குவகை பூப்பப் பூசனை புரிந்து நின்றார்.

சாரணர் ஆய்ந்தது.

3141 சென்றவச் சாரணர் தெவ்வின் சேனைய
ஒன்றிநின் றுணர்ந்தனர் உள்ள யர்ந்தனர்
துன்றிய கடலெனத் துனைந்து வந்தவண்
நின்றுள நிலையினை நெடிது நோக்கினர். (12)

திரும்பி வந்தனர்.

3142 பரியினத் திரளையும் பதாதி வீரர்கள்
அரியினத் திரளென ஆர்த்த டர்ந்துள
விரிவையும் தனித்தனி வியந்து நோக்கினர்
திரிதரும் உணர்வொடு திரும்பி வந்தனர். (13)

சிந்தையில் உணர்ந்தனர்.

3143 வந்துள படைகளின் வலியை வாய்ந்ததம்
தந்திரி நிலைகளைத் தழுவி நின்றுள
எந்திரத் திறல்களை இகலி னங்களை
சிந்தையி லுணர்ந்தனர் திகைக்க நேர்ந்தனர்.

பாஞ்சையர் மூண்டது.

3144 அரசிடம் உரைத்தனர் அகம்கொ தித்தனர்
விரசுறு தானைகள் விரைந்து சேர்ந்தன
முரசுகள் முழங்கின முன்றில் எங்கணும்
கரைசெய லரும்படை கலந்து நின்றன. (15)

வீரர்கள் நின்றனர்.

3145 வாள்களும் வேல்களும் வல்ல யங்களும்
நீளொளி செய்தெங்கும் நெருங்கி நேர்ந்தன:
ஆளரி யேறென ஆடல் வீரர்கள்
தோளொளி பொங்கிடத் துதைந்து நின்றனர்.

வெகுண்டுள் ஓங்கினர்.

3146 கோட்டையுள் எங்கணும் குறிக ளோடெதிர்
வேட்டையை விழைந்துளம் விரைந்து மண்டினர்:
நீட்டிய படைக்கலம் நெடிது தாங்கியே
வீட்டிடப் பகைவரை வெகுண்டுள் ஓங்கினர்.

ஊக்கி மூண்டனர்.

3147 கொள்ளையர் என்னவே குவிந்து வந்துள
வெள்ளையர் படைகளை வேரறுத் தின்று
தள்ளரும் வெற்றியைச் சார லாமென
உள்ளினர் களித்தனர் ஊக்கி மூண்டனர். (18)

சேனைத் தலைவன் சீறி ஏறியது.

1148 இத்திறம் இன்னவர் நிற்க அக்கினி
சித்திரப் பரிமிசைச் சீறி ஏறினன்
எத்திறத் தும்படை ஏவி ஆர்த்தனன்
தத்திய கடலெனத் தாவி வந்தன. (19)

வெடிகள் விரைந்தன.

1149 குடிவெறி கொண்டவர் கூடி மண்டியே
சுடுவெடித் திரளுடன் சூழ்ந்த டர்ந்தனர்
அடுபடை வீரர்கள் ஆர்த்தெ ழுந்தனர்
படுபகை படுமெனப் பணித்து வந்தனர். (20)

பீரங்கிகள் பெய்தன.

1150 வடபுறம் மேல்புறம் வார்த்து நாட்டிய
அடலுறு பீரங்கி ஆறும் காரென
மிடலுடன் முழங்கின வெய்ய குண்டுகள்
படரெரி சிந்தியே பறந்து பாய்ந்தன. (21)

குண்டுகள் நீண்டன.

1151 குண்டுகள் கோட்டையைக் குலைக்க மூண்டன
எண்டிசை களிலிகல் ஏறி நின்றவர்
மண்டினர் வகைவகை வரிசை யாகவே
அண்டினர் கடுத்தனர் அடுத்துச் சுட்டனர். (22)

சமர் மூண்டது.

1152 இன்றொடு பகையினை இடர்க ளைந்துநாம்
வென்றியை அடைந்திட வேண்டு மென்றவர்
கன்றிய கடுப்புடன் கடுகி எங்கணும்
துன்றினர் தொல்லமர் தொடர்ந்துடற்றினர்.

சிரங்கள் சிந்தின.

1153 வந்தெதிர் படைகளை மன்னன் சேனைகள்
முந்தெதிர்ந் தடர்ந்துமுன் முனைந்து மாட்டின;
சிந்தின சிரங்களும் செறிந்த தோள்களும்
வந்திழி குருதிகள் மண்டி நின்றன. (24)

உயிர்கள் போயின.

3154 கைவரு படைகொடு கடுத்தடித்தவர்
மெய்வரும் உயிர்களை வேறு செய்தனர்;
எய்வரு குண்டுகள் இடைய ருதுபெய்
துய்வரும் இவர்களை உம்பர் ஏற்றினர். (25)

இறந்துபட்டனர்.

3155 ஒருவரை ஒருவர்முன் குத்த ஊடுற
இருவரும் சேர்ந்தவண் இறந்து பட்டனர்;
பொருவரு திறலினர் பொன்றி வீழினும்
செருவரு சினவிழி சிவந்து நின்றவே. (26)

அழிவு நிலைகள்.

3156 வல்லையம் சுழற்றவும் வாள்கள் வாட்டவும்
வில்லுகள் தெறிக்கவும் வேல்கள் நீட்டவும்
கல்லுகள் எறிந்துகைத் தண்டம் மாட்டவும்
எல்லையில் உயிர்களங் கிறந்து பட்டன. (27)

உலைந்து ஓடினர்.

3157 வெட்டிய தலைகள்போய் வேல்க ளில்விழ
ஒட்டிய கலங்கள்போல் உருவம் தோன்றின;
முட்டிய வீரர்முன் மூண்ட வெள்ளையர்
தட்டழிந் தோடினர் சாரி மாறியே. (28)

குலைந்து சிந்தினர்.

3158 குத்தென வெட்டெனக் கொல்லு கொல்லென
எத்திசை மருங்கிலும் இரைந்தெ ழுந்தவச்
சத்தங்கள் சத்தசா கரத்தைச் சார்ந்தன
கொத்துறு தலையினம் குலைந்து சிந்தின. (29)

செறுத்து முற்றினர்.

3159 பரியொடு பரிகொடு பாய்ந்து தாவியே
எரியிடை சிதறிட எதிர்ந்து வெட்டினர்
வெருவரு திறலினர் விரைந்து சாரிகை
திரிகையிற் சுற்றினர் செறுத்து முற்றினர். (30)

உருத்து வெட்டினர்.

3160 குத்திய குத்துகள் குடலற் ரோடிடத்
தத்திய பரியினம் தவித்து வீழ்ந்தன;
வித்தகத் திறலொடு மேலி ருந்தவர்
ஒத்தயல் குதிக்குமுன் உருத்து வெட்டினர். (31)

தரியலர் நடுங்கினர்.

3161 பரிவிழு முனம்படை வீரர் பைந்தலை
எரிவிழும் இளனிகள் என்ன எங்கணும்
குருதியிற் குலைகுலை யாக வீழ்ந்தன
தரியலர் நடுங்கினர் சமரம் அஞ்சியே. (32)

இழிந்து அழிந்தனர்.

3162 அடுசமர் அடலுடன் ஆர்த்து மண்டிநேர்
நெடிதிவர் புரிந்திட நெட்டு நெட்டவர்
படுகொலை பட்டனர்; பரிகள் பட்டன;
இடிபடும் அரவென இழிந்த ழிந்தனர். (33)

மருவி ஏறினர்.

3163 குருதிநீர் குடலொடு கோத்து மண்டியே
பருதிநீர் மண்டிலம் போலப் பாருறப்
பொருதுநீர் உண்டிடாப் பொருநர் பொங்கிநேர்
வருதிர்நீர் என்றெங்கும் மருவி ஏறினர். (34)

மூண்டு சுட்டனர்.

3164 எதிர்ந்தெழும் இவர்நிலை கண்டு வெள்ளையர்
முதிர்ந்தெழு கோபராய் மூண்டு சுட்டனர்;
அதிர்ந்தொலி அண்டமும் அயலும் மண்டவே
பிதிர்ந்திவர் விழுந்தனர் பிணங்கள் ஆயினர்.

புலர்ந்து உருண்டனர்.

3165 நின்றுழி நின்றுழி நெடிது துள்ளியே
கன்றிய மனத்தொடும் கடித்த வாயொடும்
ஒன்றிய சினக்கனல் உருத்த கண்ணெடும்
பொன்றிமுன் விழுந்தனர் புலர்ந்து ருண்டனர்.

பதைத்து மாண்டனர்.

3166 அடுகனற் சூழலில் அரியி னங்களுற்
றிடுவழி காண்கிலா தெரிந்த ழிந்தபோல்
சுடுவெடிச் சூழலில் துதைந்து நின்றிவர்
படுகொடுந் துயரொடு பதைத்து மாண்டனர்.

இனம் பிரித்தது.

3167 சுட்டவெம் புகையெங்கும் துள்ளி ஏறியே
பட்டநண் பகலையும் பான்மை மாற்றிநேர்
நட்டநள் ளிரவென நண்ணச் செய்தயல்
எட்டநின் றவரையும் இனம்பி ரித்ததே. (38)

அவலம் ஆயது.

3168 தொடுகழல் வீரர்கள் துன்னி ஏறினர்;
படுகளம் எங்கணும் படர்ந்து பாய்ந்துவெங்
கொடுவெடி வாள்கொடு கொன்ற ழித்தனர்
அடுகள மாயதங் கவல மேயது. (39)

மூண்டு கொன்றனர்.

3169 கொற்றவன் படைஞர்கள் குலாலன் கைவிசை
பற்றிய திகிரியிற் பறந்து சுற்றியே
வெற்றியின் வெறிமிக வெகுண்டு மேவலர்
முற்றழிந் தொழிந்திட மூண்டு கொன்றனர்.

மாறு சீறினர்.

3170 சுருட்டுவாள் எனப்பெயர் துன்னி நின்றவவ்
வெருட்டுவெம் படைகொடு வீசி மெய்களை
உருட்டினர் உதிரநீர் ஒழுக ஒன்னலர்
மருட்டிமுன் கிடந்திட மாறு சீறினர். (41)

பரிந்து ஒழிந்தனர்.

3171 சுடுகனல் வெடிகளைத் துள்ளிப் பாய்ந்திவர்
அடுகனல் எனமண்டி ஆர்த்து வவ்வினர்;
தொடுபடை தொலையவும் தொலைந்து பின்னுறப்
படுபழி பற்றிடப் பரிந்தொ ழிந்தனர். (42)

வீரர் கொன்றனர்.

3172 ஆட்படை ஆர்த்தெதிர் அடர்ந்து சீறின;
வாட்படை வேற்படை வளைந்து மண்டின;
தோட்படை வலியினுல் தொடர்ந்த டர்ந்துமே
கோட்படக் கொன்றனர் குலங்கொள் வீரரே.

அயர்ந்து வீழ்ந்தனர்.

3173 வில்லுறு கல்லுகள் வேறு நின்றிவர்
செல்லுறு மினலெனத் தெறிக்கத் தெவ்வர்கள்
பல்லொடு கண்நுதல் பட்டுத் துள்ளியே
அல்லலுற் றழிந்தனர் அயர்ந்து வீழ்ந்தனர். (44)

அழிந்து சிந்தினர்.

3174 எங்கிருந் திவ்வகை இந்தக் கல்லுகள்
பொங்கிவந் துறுவன? என்று புல்லலர்
சங்கைகொண் டாய்ந்தனர்; சார்வ தொன்றுமே
அங்கவர் அறிந்திலர்; அழிந்து சிந்தினர். (45)

நைந்து மாய்ந்தனர்.

3175 கூவிவந் ததிரெதிர் கோத்தடர்ந்தவர்
ஆவிகள் சிந்திமெய் அழிந்து வீழ்ந்தனர்;
பூவியல் முகம்படப் புல்லி நின்றவர்
நாவியல் நீரற நைந்து மாய்ந்தனர். (46)

இவர் தழைத்து நின்றனர்.

3176 வெங்கொலை இங்ஙனம் விரைந்து மண்டியே
எங்கணும் எழுந்திட எதிர்ந்து டன்றவர்
மங்கிய வலியராய் மறுகி நின்றுபின்
தங்கினர்; இங்கிவர் தழைத்து நின்றனர். (47)

அக்கினி உளைந்தான்.

3177 அக்கினி எனும்பெயர் அடைந்து வந்தவன்
பக்கம்நின் றூக்கியும் படர்ந்து மூட்டியும்
தொக்கவப் படையினம் துடித்து மாளவே
துக்கமிக் கோங்கிடச் சூழ்ந்துளைந்தனன். (48)

பாஞ்சை வீரர்.

3178 நேர்முக மாயெதிர் நேர்ந்து டன்றிடில்
பார்முகத் தெவருமே பாஞ்சை வீரரைப்
போர்முகத் தென்றுமே பொருது வென்றிடார்;
ஓர்முகத் தயல்வழி யுடற்று வேமெனு. (49)

வலிந்து நின்றுளார்.

3179 சேனையின் தலைவர்கள் சேர்ந்து சூழ்ந்தனர்;
யானையின் திரளென அடர்ந்த வெள்ளையர்
ஊனையும் உயிரையும் உண்ட பாஞ்சையர்
வானையும் வென்றிட வலிந்து நின்றுளார். (50)

தளபதி எழுந்தான்.

3180 என்றுளந் துணிந்தவர் எழுந்து சென்றனர்;
துன்றிய தானையின் பதியைத் துன்னினர்;
ஒன்றிய நிலையினை உரைத்து நின்றனர்;
வென்றியை விழைந்தவன் விரைந்தெ ழுந்தனன்.

ஆர்த்து எழுந்தனர்.

3181 குதிரையின் உயர்படைக் கொற்ற வீரரைச்
சதிருடன் எழுந்துநேர் சார்மின்! என்றுமேல்
முதிர்முர சறைந்திட மொழிந்து மூண்டனன்;
அதிரொலி கேட்டதும் ஆர்த்தெ ழுந்தனர். (52)

புரவிகள் புகுந்தன.

3182 போரறி புரவிகள் போரென் றுள்ளமும்
நேருறு செவிகளை நெரித் தெழுந்தன;
பாரொடு காலிடை படுத்து நின்றில
நீருறு திரையென நிரைந்து வந்தன. (53)

வெள்ளையர் விரைந்தனர்.

3183 வல்லியம் இவர்ந்தெழு வன்கட் சீயங்கள்
எல்லையில் லாதன எழுந்து வந்தென
ஒல்லையில் ஒண்பரி யூர்ந்து வெள்ளையர்
வெல்லுறு வேல்கொடு விரைந்து வந்தனர். (54)

வீரர்கள் எழுந்தனர்.

3184 கைவரு வேலொளி கஞலக் கல்லென
மொய்வரு திறலொடு முனைந்து பாய்பரி
மெய்வரு கலனொளி மின்ன வீரர்கள்
உய்வரு விறலுடன் உருத்தெ ழுந்தனர். (55)

மன்னவன் ஏற்றினன்.

3185 அன்னவர் பரிகளை ஆர்த்து மண்டியே
உன்னருந் திறலுடன் ஊக்கி ஏறவும்
மன்னவன் நோக்கினன் மனங்கொ தித்துடன்
தன்னுயர் தானையைச் சதுரொ டேற்றினன்.

படைகள் ஏறின.

3186 முரசங்கள் எங்கணும் முழங்கி நின்றன;
அரசுயர் சேனைகள் ஆர்த்த டர்ந்தன;
பரசுவாள் வல்லயம் பிண்டி பாலங்கள்
விரசியே எங்கணும் வீறுற் றேறின. (57)

படர்ந்து அடர்ந்தனர்.

3187 வில்வலி யாளர்கள் விரைந்து மூண்டனர்;
மல்வலி யாளர்கள் மண்டி மிண்டினர்;
கல்வலி யாளர்கள் கடுத்து நின்றனர்;
பல்வலி யாளரும் படர்ந்து அடர்ந்தனர். (58)

கூற்று என வந்தனர்.

3188 காற்றெனத் தாவியே கதிகொள் வாசிமேல்
கூற்றென வீரர்கள் கொதித்து வந்தனர்;
மாற்றருந் திறலுறு மன்னன் மாண்பரி
யேற்றங்கள் எங்கணும் எழுந்து பொங்கின.

வீரர்கள் ஓங்கினர்.

3189 நெஞ்சுறு நிலையெலாம் நேர்ந்து கொண்டடல்
மிஞ்சிய திறலொடு வெய்ய போரினில்
வெஞ்சிறைக் கலுழனில் விரையும் வெம்பரி
எஞ்சலில் வீரர்கள் ஏறி யோங்கினர். (60)

3190 குதிரை வீரர்கள்.

தானையந் தலைவர் எல்லாம் தாண்டுவெம் பரிகள் ஏறி
மானவெங் கண்ண ராகி மண்டிமேல் வந்தார்; மன்னன்
சேனையில் நின்ற வீரத் திறலினர் சினந்து பொங்கி
வானெழு பரிக டாவி வந்ததிர் பொருதார் அன்றே.

3191 சமர் ஆற்றினர்.

கொள்ளியின் வட்டம்என்னக் குலாலன்வெங் திகிரிமான
உள்ளரும் வேகத் தோடி ஒருவரின் ஒருவர் முந்தி
ஒள்ளொளி தவழும் வெள்வேல் ஓச்சினர் ஊக்கி மூண்டு
தள்ளருந் திறலோ டொன்றிச் சமர்செடி தாற்ற லானர்.

3192 முனைமுறுக்கினர்.

வெட்டுவர்; தட்டி யேறி விலகுவர்; விரைந்து மீண்டு
கொட்டுவர்; கொதித்து மூண்டுகுத்துவர்; குறித்துநின் றுங்
கட்டுவர்; கடுப்பர் சாரி கறங்கெனத் திரிவர்; பாய்ந்து
முட்டுவர்; முனைவர்; ஒட்டி முறுக்குவர்; முனைந்து நேரே.

3193 கொதித்து மண்டினர்.

வாவுறு வாசி தாவி வருந்தொறும் வாள்வேல் வீசி
ஆவிபோய் உலைய மெய்கள் அலமந்து வீழ நோக்கிக்
கூவிமேல் ஆர்த்தெழுந்து குதித்தனர் கொதித்து மண்டி
மாவியல் அறிந்த வீரர் வன்சமர் புரிந்து டன்றார். (64)

3194 ஆடலை யாவர் சொல்வார்?

தாண்டுவெம் பரிக ளூர்ந்து தறுகண்மை யாளர்தங்கை
நீண்டவேல் ஏற்றி ஓச்சி நேரெதிர் நின்றார் எல்லாம்
மாண்டனர் மறிந்து வீழ்ந்து மண்ணுற விண்ணிற்
[பாய்ந்தே
ஆண்டகை யவர்பு ரிந்த ஆடலை யாவர் சொல்வார்? (65)

3195 ஆங்கிலர் ஏங்கினர்.

ஆங்கில நாட்டி ருந்தே ஆசையால் ஓங்கி யீங்குப்
பாங்குடன் வந்து நின்ற பகையினத் தவர்எல் லாரும்

ஆங்கிய கொதிப்போ டெங்கும் இவுளிகள் கடாவி
[ஈண்டித்
தாங்கரும் திறல்க ளாற்றிச் சமர்முகத் தடர்ந்து வந்தார்.

1196 நபாபு துரையின் சமர் நிலை.

இவ்வகை இருதி றத்தும் எதிரெதிர் பரிகள் தூண்டி
வெவ்வலி யோடு மூண்டு வெஞ்சமர் விளைத்து நின்றார்;
அவ்வழி நபாபென் றோதும் ஆடல்மா வீரன் ஆர்த்துத்
தெவ்வலி தேய நூறித் திகிரியிற் சுற்றி வந்தான். (67)

1197 குதிரை ஏறி விரைந்தான்.

பரியைத் தட்டி ஏறி வடிசுடர் வாள்கை ஏந்தி
வரி வெண் தலைகள் சிந்த வீரவெவ் வெறிய ஞகி
அரைகள் தோறும் மண்டி அடுசமர் ஆற்ற அஞ்சிக்
கரின படைகள் சிந்திக் குறைந்தன குலைந்து போன.

1198 எதிரிகள் இரிந்தனர்.

கோளைகள் சிதறி ஓடும் செயலினை நோக்கி நெஞ்சில்
மாளவெந் துயர மூள வானவாம் பரியி வர்ந்து
தாளைகா வலன்முன் னேறித் தானையை ஏவி நின்றான்;
மாளைய தலைவர் எல்லாம் இவர்ந்துடன் எழுந்து பாய்ந்
[தார்.

1199 யாவரும் விரைந்தனர்.

யாவையு எங்கும் நின்ற இகல்மிகு பரிமா வீரர்
மாவலி யுடைய ராகி மானவீ ரோடு மண்டித்
தாவரும் புரவிதூண்டிச் சமர்முகத் தார்த்து வந்தார்
சாவதோ? அன்றி வென்றி சார்வதோ?எனவி ரைந்தார்.

1200 ஒருவனே வென்றான்.

அரியினம் ஆர்த்து மண்டி அடர்ந்தென அளவி லாத
பரியினம் படர்ந்து சூழப் பாரவெவ் வெடிகள் எங்கும்
எரியினம் சிதற வெய்ய இகல்மிக எழுந்த தன்றே
முரணினிவ் வரவோன் நின்றே யுறுசமருடற்றி வென்றான்

3201 வீர மடங்கல்.

எறிகின்ற வேல்கள் எல்லாம் எதிரெதிர் விலக்கி வெய்ய
பொறிசிந்த வந்து வீழும் புகைக் குண்டுக் கொதுங்கி
[போர்மேல்
வெறிகொண்டு கொல்லும் வீர மடங்கல்போல் வெகுண்
[டடர்ந்து
நெறிநின்ற படையை எங்கும் நேரழித்துலாவி வந்தான்.

3202 குதிரை வீழ்ந்தது.

வீரமா வெறிய ஞகி விறலொடு திரிந்து நேர்ந்த
பேரெலாம் பொன்றி வீழப் பெருஞ்சமர் புரிந்துபாய்ந்து
போரெலாம் கடந்து போகும் பொழுதயல் நின்றுசுட்டார்
நேரெதிர் குண்டு பட்டு நெடும்பரி வீழ்ந்த தன்றே.

3203 தரையில் தாவினன்.

உள்ளறிந் தூக்கி ஓடும் ஒண்பரி வீழ உள்ளம்
தள்ளருந் துயரோ டேங்கித் தாவிமேல் இருந்த வாறே
துள்ளியோ ரிடத்திற் பாய்ந்து சுடர்வடி வாள்கை வீசி
அள்ளினன் அடுத்தடர்ந்தார் ஆவிகள் அனைத்தும் அம்மா!

3204 குண்டு பாய்ந்தது.

வெட்டிமேல் ஏறும் வேளை வெய்யதோர் குண்டு வந்து
பட்டது படவும் கிந்திப் பக்கமோர் வயல்வ ரப்பில்
தட்டழிந் தயர்ந்து வீழ்ந்தான்; சார்ந்தவர் எவரும் இல்லை
ஒட்டியப் பொழுதோர் வீரன் ஒண்பரி கடாவி வந்தான்.

3205 *ஆங்கில வீரன் ஆங்கு வந்தது.

வந்த அவ் வெள்ளை வீரன் வரப்பிடைப் படுத்திருந்த
இந்தமா வீரன் கையில் இருக்கின்ற வாளைத் தன்பால்
தந்திடு மாறு கேட்டான்: தருகுவன் தாழ்ந்து வந்து
குந்திநீ கொள்க! என்று குறிப்பினல் குறித்துரைத்தான்.

---

*இந்தப் பாஞ்சை வீரன் தமிழிலோ தெலுங்கிலோ பேசினல் அந்த ஆங்கிலேயனுக்குத் தெரியாது ஆதலால் கைச்சாடையால் தன் கருத்தைக் குறித்துக் காட்டினன்.

1206 வெள்ளைத் தலை துள்ளி விழுந்தது.

வாசியைச் சாரி செய்து வந்தவன் குனிந்து கேட்டான்:
ஆசையால் தருவான் போல் அடலுடன் எடுத்து வாளை
வீசினன் தலைபோய்த் துள்ளி வீழ்ந்தது; பரியும் வீழ
மூசையால் உருத்துக் குத்தி ஒளிறுவாள் மண்ணில்
[உய்த்தான்.

1207 வீரன் ஆவி நீங்கியது.

மன்னனிடைத் தன்கை வாளை மாண்புடன் புதைத்த
[போதே
உன்னிறை ஆவி நீங்க ஓய்ந்துடல் கிடந்த தாங்கே;
கன்னனிடைச் சீவன்நின்ற பொழுதிலும் காமர் வீரர்
எண்ணரு திறலோர் என்ன இசைமிகுந் தெழுந்த
[தன்றே.

1208 *சேனைத் தலைவன் வியந்தது.

உடலுயிர் நீங்கும் போதும் ஒன்னலன் உயிரை வௌவி
அடலுடன் போன இந்த ஆண்டகை திறலை நோக்கிப்
படையுயர் தலைவன் தானும் பரிந்துடன் புகழ்ந்து
[நின்றான்
நடமுறு வீரர் தம்மை யாவரே சிந்தை செய்யார்?

1209 யாவரும் புகழ்ந்தது.

இருவகைச் சேனை யுள்ளும் இருந்தவர் எவரும் இந்த
அரியபோர் வீரன் செய்த அதிசய நிலையை எண்ணி
ஒருவரும் இவனுக் கொப்பார் உலகினில் இல்லை என்றே
பெருமகிழ் வுடன்வியந்து பேசினர் உளம் உவந்தே.

---

*படையுயர் தலைவன் என்றது ஆங்கிலப் படைகளுக்கெல்லாம் தலைமைத் தளபதியாயிருந்த கர்னல் அக்கினியை. (Colonel Agnew) பாஞ்சைப் போரில் கோரமாய்க் கொடுமை மண்டியிருந்த அவனும் இந்த அதிசய வீரனைத் துதிசெய்து நின்றான். கொடிய பகைவனும்உருக அரியவீரம் மருவியுள்ளது.

3210 *வீரமகன் போர் புரிந்தது.

தந்தைபோய் மாண்ட செய்தி தனயனும் *பாண்டியப்
[போர்ச்
சுந்தரன் கேட்டான் உள்ளம்துடித்தனன் துணிந்துள்ளெறி
எந்திரம் திரிந்த தென்ன எங்கணும் எதிர்ந்து வென்றி
மந்தரம் அனைய தோளான் வாளமர் புரிந்து வந்தான்.

3211 வென்று வந்தது.

வென்றிமேல் வென்றி எய்தி வீறுடன் விரைந்தடர்ந்தே
ஒன்றிய பகைவர் எல்லாம் உயிர்களை யிழந்து மாள
வன்றிறல் எங்கும் தோன்ற வாகையே சூடிவந்தான்:
நின்றவ ரெவரும் நெஞ்சம் நிலைகுலைந் தோட லானார்.

3212 தந்தையும் மைந்தனும்.

இந்தமா வீரன் தன்மேல் எதிரிகள் தலைவர் மூண்டு
வந்துடன் வளைந்து சுட்டார்; வாளினல் தடிந்தொன்னை
அந்தரத் தேற்றித் தானும் அமருல கடைந்தான்; பெற்ற
தந்தையைத் தேடிப் போன தன்மைபோல் சார்ந்தான்
[அன்றே.

3213 குமரனை வியந்தனர்.

முதியதன் தந்தை தன்னை முன்னுற இழந்து பின்னர்
புதியஓர் அபிமன் போலப் பொருகளம் புகுந்துஒன்னை
அதிசய மாக வென்றே அடலுடன் மாண்ட இந்த
மதியுயர் குமரன் மாண்பை வாழ்த்தினர்வியந்துநின்றார்.

3214 என் முன்னோர்.

என்னுயர் முன்னை ரான இன்னமா வீரர் தம்மை
வன்னமாம் கல்லில் இன்றும் வழிபட்டு வருகின்றேமால்:
துன்னிய போரில் ஆவி துறந்தவர் துறக்கம் துன்ன
மன்னிய மரபோர் இங்கு வழிபடல் மரபா மன்றே. (85)

---

*போரில் அதிசயமாய் மாண்ட நபாபுதுரையின் அருமைத் திருமகன் செகவீரபாண்டியன் என்னும் பேரினன். பேரழகன். பெரிய போர்வீரன். அரிய அமர் ஆடினன்.

1211 * வீரரின் வழிபாடு.

வீரக்கல் நாட்டி உற்றூர் மேன்மையாய் வழிபட்டேத்த
வையகக் நாட்டி லுள்ளார் ஓகையாய் வாகை சூட்டப்
பொய்யாக்க வென்று மாண்ட பொருநரை யுன்னுங்
[தோறும்
வையக வியந்து நின்றூர் சீமைவெள்ளையரெல் லாரும்.

1212 மன்னன் மறுகியது.

சேனையுட் சிறந்து நின்ற சீருடை வீரர் மாண்டு
போனதை யறிந்து மன்னன் புலம்பிநின் றலமந் தேங்கி
யாயிர வீரர் சூழ ஏண்பரி யிவர்ந்து பொங்கி
வாளையும் வெல்வேன் என்று வல்விரைந் துருத்து
[வந்தான்.

1213 வீரர் மூண்டது.

வந்தமன் னவனே வீரர் மாண்புடன் நிறுத்தி யாமே
முந்துபோய் வெல்வேம் என்று மூண்டுடன் முனைந்து
[பாய்ந்தார்
தந்தாய்த் தலைவன் கண்டு தானையைத் தகவோ டுக்கி
வந்துமேல் நின்றூன் வெம்போர் ஓங்கிமேல் எழுந்த
[தன்றே.

1214 சமரில் ஏறியது.

மூவாடு வெஞ் சேனையுள்ளும் இருந்துள வீர ரெல்லாம்
மூவாடுவன் சமர்மே லேறிச் செருக்களத் தெதிர்ந்த
[போது
மூவாடரு பரிகள் மூண்டு முனைந்தன; வெடிவாள்
[வேல்கள்
மூவாடரும் படிபடர்ந்தே அயலெலாம் அடர்ந்து நின்ற.

---

* இந்தக் காவியக் கவிஞருடைய ஐந்தாவது தலைமுறை யினரான பாட்டனர் **நபாபு துரை.** அவருடைய அருமை மகன் **ஜெகவீரபாண்டியன்.** இந்த இருவரும் பாஞ்சைப் போரில் ஒருங்கே மாண்டனர். அந்த வீரமரணம் 31—5—1801 மாலையில் நிகழ்ந்தது. **ஒட்டநத்தம்** என்னும் ஊரில் ஆதலால் அங்கே இவருக்கு வீரக்கல்லுகள் நாட்டி யுள்ளனர். ஆண்டுதோறும் சிவநிசியன்று ஆயுதபாணி களாய்ச் சென்று இன்றும் அவ்வீரச் சிலைகளை யாவரும் ஆர்வமுடன் வணங்கித் தொழுது வழிபட்டு வருகின்றனர்.

3219 அமர் ஆடியது.

இருதிறப் படையும் இவ்வா றிகலுடன் அடர்ந்தெழுந்து
பொருதிறத் தெதிர்ந்து வெம்போர் புரிந்தன: புரிய
[எங்கும்
குருதிகொந் தளித்துச் சிந்த குலத்தலை குலைந்து குந்தி
அருகெலாம் வீழ்ந்து துள்ள அமரெல்லாம் ஆட லானஞ்.

3220 எண்ணிலர் இறந்தனர்.

பொருபரி தூண்டி மூண்டுபொருகளம் எங்கும்பாய்ந்தே
அரியினம் அடர்ந்த தென்ன அடலமர் புரிந்து பொங்கி
ஒருவரின் ஒருவர் முந்தி உயிரற வுருத்து டன்ரூர்
இருபெருந் தளத்தி னுள்ளும் எண்ணில ரிறந்தா ரன்றே.

3221 ஒழிந்தவர் ஒருவர் இல்லை.

பட்டவர் பட்டு வீழப் படாதவர் பரிகள் தூண்டி
வெட்டினர்: விரைந்து பாய்ந்து வெங்களம் எங்கும்
[மண்டி
முட்டினர்: முறுக்கி மூண்டு முனைந்தனர்: முடிவில்
[மாண்டார்:
ஒட்டிய போரில் மீண்டங் கொழிந்தவர் ஒருவர் இல்லை.

3222 கடுத்து எதிர்த்தார்.

படையழி பான்மை நோக்கிப் படைப்பெருந் தலைவன்
[பக்கல்
அடலுடன் நின்ற வீரர் ஆர்த்துடன் எழுந்து வந்தார்:
விடையென நின்ற மன்னன் வீரரும் வெகுண் டெழுந்து
கடையுறு கனலின் மண்டிக் களத்திடைக் கடுத்தெதிர்த்
[தார்.

3223 கொலை பல குவிந்தன.

நின்றவர் நின்ற நின்ற நிலைதொறும் நேர்ந்தா ரோடு
கன்றினின் றமர்புரிந்து கைக்கடுப் புடைய ராகி

வெல்லரியை விழைந்து தத்தம் விறலெலாம் விரைந்
[தடர்ந்து
கொல்லுயிர் குடித்தார் எங்கும் கொலைபல குவிந்த
[வன்றே.

1224 **கோன்படை கொதித்தது.**

கொடும்பொழு தாக இங்ஙன் நேர்முக மாக மண்டி
அடுந்திறல் புரிந்து நின்ரூர் அமரினில் வெற்றி தோல்வி
படும்பரி சொன்று மின்றிப் பகுதியாய் இறந்துபட்டார்
கொடுங்கத மிஞ்சி மூண்டு கோன்படை கொதித்
[தெழுந்த.

1225 **ஆர்த்து நின்ரூர்.**

கொற்றவன் வீரர் வாள்வேல் கொண்டட லோடு பாய்ந்து
முற்றிய வெறியி ஞேடு மூண்டமர் முனைந்து செய்தார்;
பற்றலர் பற்றில் லாமல் பதைத்தயல் பதுங்க லானர்;
வெற்றிமேல் விழைந்த தென்ன விழைந்திவர் ஆர்த்து
[நின்ரூர்.

1226 **எங்கும் சுட்டனர்.**

அடுத்திவர் ஆர்த்து நின்ற களிப்பினைக் கண்டு தானை
அடுத்தமர் தலைவ னென ஆடல்*மன்றமன் வெகுண்டு
மடுத்துயர் பரியி வர்ந்து வான்படை நடத்தி வந்தான்
தொடுத்தயல் வெடிகள் எங்கும் சுட்டனர் சுடுதீயன்னர்.

1227 **சினந்து வந்தார்.**

மலையிய புகையினூடு வருகின்ற கொள்ளி என்னக்
கலைகளை வந்து வீழக் கோன்படை கொடிது துள்ளி
மலைவிலம் மறிந்து வீழ்ந்து மடிந்தனர்; மன்னன் கண்டு
இலைவிறல் தலைவர் தம்மைச் செலுத்தினன் சினந்துவந்தார்.

1228 **வெம்போர் பெருகியது.**

அருந்திற லாளர் மண்டி அடர்ந்துமேல் வரவும் அங்கே
பொருந்திறல் மிகுந்தார் எல்லாம் புரவிமேல் இவர்ந்து
[பாய்ந்து
வருந்திறற் படையை வந்து வளைந்தனர் வளைய எங்கும்
பொருந்திய லடைய வெம்போர் பெருகிமேல் எழுந்ததன்றே.

*மன்றமன் = ஜான் மன்ரோ. (Captain John Munro)

3229 **தலைகள் இழந்தன.**

வெண்டலை துள்ளி வீழ வெட்டினர் வெட்டுந் தோறும்
விண்டலை எழுந்துவீழக் கருந்தலை வீழ்த்தார் வெய்தாய்
மண்டலை யுதிரம் பாய்ந்து வன்களம் எங்கும் ஓடி
வண்டலை யடைய வன்போர் வளர்த்தனர் வளர்ந்த வீரர்.

3230 **தலைவர் புகுந்தார்.**

சரிசமன் ஆக நேர்ந்து சமர்புரி வீரர் இவ்வா
றிருபெரும் பிரிவாய் எங்கும் இறந்திடச் சிறந்து நின்ற
பொருவரு தலைவர் அங்கே பொருதொழிற் குரியர் ஆகி
வெருவரு திறலோ டோங்கி வெங்களம் விரைந்து புக்கார்.

3231 **பரிந்து பட்டார்.**

ஒத்திரு படையின் உள்ளும் உற்றவெவ் வீரர் ஊக்கி
எத்திறப் படையும் வீசி இகலுடன் எதிர்ந்த போது
செத்தவர் அளவில் லாராய்ச் சிதைந்தனர்; சிதையத்
[தெவ்வர்
பத்திகொண்டு அடர்ந்து சுட்டார் பதைத்திவர் பரிந்து
[பட்டார்.

3232 **வெட்டும் பெருமாள்**

பட்டழி படையைப் பார்த்துப் பாஞ்சைமன்னவன்கொதித்து
நெட்டழித்து எழுவேன் என்னுநெடும்பரி தூண்டிவந்தான்;
வெட்டுமெய்ப் பெருமாள் என்னும் வெந்திறல் தலைவன்
[வேந்தை
ஒட்டிமுன் நிறுத்தித் தானே உருத்துநேருடன்று பாய்ந்தான்

3233 **வெடி பிடித்தார் வீந்தார்.**

பாய்ந்தவன் பரியைத் தட்டிப் பற்றலர் நிரையில் ஏறிக்
காய்ந்தொளிர் வடிவாள் ஓச்சிக் கறங்கெனத் திரிந்தடர்ந்
[தான்
சாய்ந்துடல் தலைகள் எங்கும் தரையிடைப் புரண்டு துள்ள
மாய்ந்தனர் மாய மாகி வல்வெடி பிடித்தார் எல்லாம்.

3234 **ஒட்டலர் பட்டார்.**

வெட்டுமெய்ப் பெருமாள்என்று வீரனுக் கமைந்த பெற்றோர்
இட்டமெய்ப் பெயருக்கு ஏற்ப இடந்தொறும் சாரி ஓடி

[illegible]லர் தலைகள் துள்ள உருத்தவன் வெட்டுங் காலைத்
[illegible]ழிந் துயர்ந்து நின்றூர் தத்தளித் தயல்ஒளிந்தார்.

1215 வீரன் மூண்டான்.

[illegible]தலைப் படைகள் இங்ஙன் அழிவுறும் படிஅடர்ந்து
[illegible]தகத் திறலோடோங்கி விரைந்தவன் வருதல்நோக்கி
[illegible]துயர் தலைவர் பொங்கி ஒண்பரி கடாவி வந்து
[illegible]த்தனர் மொய்க்க வீரன் மூரிவாள் ஆடல் மூண்டானன்.

1216 களம் புகுந்தார்.

[illegible]அரசன்தன்பால் அடலுடன் அமர்ந்து நின்ற
[illegible]விரர் தம்மை விரகுடன் விளித்து நீவிர்
[illegible]ழித்து எழுமின் என்றுசெப்பினன் செப்பச் சீறி
[illegible]பழந்து பாய்ந்தார் இருங்களம் புகுந்திதிர்ந்தார்.

1217 பொருநர் பொன்றினர்.

[illegible]துயர் தலைவர் எல்லாம் பரிகளை இவர்ந்து பாய்ந்துத்
[illegible]று சமர பூமி சார்ந்துவன் சமர் புரிந்தார்
[illegible]தோள் தோள்தோள் எங்கும் இழந்துடன் இழிந்துவீழ்ந்து
[illegible]டல் உருண்டு போகப் பொன்றினர் பொருநர்
[அம்மா?

1218 முத்தையா மூண்டான்.

[illegible]தையா என்னும் பேரோன் மூண்டவெஞ் சேனைக்
[கெல்லாம்
[illegible]துயர் தலைவன் உள்ளத் தூக்கமிக் குடையோன்மன்னன்
[illegible]துனன் மதியும் வல்லான் வன்சமர் புரியத் தண்பொழ்
[illegible]பரியி வர்ந்து செருக்களம் செருக்கி வந்தான்.

1219 அலமந்து நின்றூர்.

[illegible]வன் அயலே வீரர் அளவிலார் தொடரச் சில்லோர்
[illegible]வம் பரிக டாவி வந்துவன் சமர்புரிந்தார்
[illegible]பின் னங்களாகித் தெவ்வுயர் சேனை வீரர்
[illegible]றுத் தானை வேந்தன் பெரிதல மந்து நின்றூன்.

3240 **அயர்ந்து சூழ்ந்தார்.**

உடைந்ததன் சேனை தன்னை ஒருமுகப் படுத்தி ஊக்கி
மிடைந்துமேல் அமர்புரிந்த வெந்திறல் விறலை நோக்கி
இடைந்துள முடைந்து வேறே ரியல்பினுல் அமரைமேலே
தொடர்ந்திட வேண்டும் என்று துணிவுடன் சூழ்ந்து
[கொண்டான்.

3241 **பீரங்கிப் போர்.**

குதிரைவெம் படையி னுலும் கொடும்படை கொண்டு
[மண்டி
முதிரமர் புரியும் ஆளின் முழுத்திறப் படையி னுலும்
எதிரியை வேறல் அம்மா எய்திலம் என்று தேறி
அதிருபீ ரங்கி கொண்டே அமர்செய அமர்ந்து தேர்ந்தான்.

3242 **வெற்றி எய்தும் விதம்.**

முழையிடைப் பதுங்கிநிற்கும் முரட்டடம் சீயம் என்னத்
தழைவுறு கோட்டை யுள்ளே தலைமகன் சார்ந்து நின்ருன்;
பிழையற வெளியில் ஏற்றிப் பேரமர் புரிந்தால் அன்றி
விழைவுறு வெற்றி எய்தும் விதம்நமக் கில்லை என்ருன்.

3243 **கோட்டையை இடி.**

கோட்டையை இடித்துள்நின்ற கோனைமுன் வெளியில்ஏற்றி
வேட்டையில் வெளிவந் துற்ற விலங்கென மலங்க வென்று
நாட்டையும் பிடித்துப் பாஞ்சை நகரையும் இடித்து நந்தம்
வீட்டைமேல் அடைந்து வெற்றி மேவிநாம் விளங்க
வேண்டும்.

குண்டுகள் இடித்தன.

3244 என்ற வன்துணிந் தெழுந்தனன் கோட்டையின்
இடந்தொறும் பீரங்கி இதமாய்
ஒன்ற வைத்தனன் உறுபடை அருகெலாம்
ஊக்கிநேர் நிறுத்தினன் ஒருங்கே
நின்று நீர்சுடும் என்றனன் குறியுற
நெறியுடன் நின்றவர் சுட்டார்;
கன்று தீஎழக் குண்டுகள் இடிஎனக்
கலித்தெழுந் திடித்தன கடுத்தே. (115)

கோட்டையுள் நின்றனர்.

3245 தெற்கு மேற்புறத் திடையினும் மேற்கினும்
திரண்டுநின் றடர்ந்தவர் சுடவும்
மற்கு நோக்கிய மன்னவன் படைகளை
மாறுசெய் யாவகை மறித்து
நிற்க நீரெனக் கோட்டையுள் நிலைபெற
நிறுத்தினன்; குறித்துநேர் பாயும்
கற்கொள் குண்டுகள் கணிப்பில வாயினும்
கணக்குடன் கணித்திவன் இருந்தான். (116)

நிரை நிரை வகுத்தான்.

3246 வென்றி மன்னவன் வெம்படை மேல்வந்து
வீழ்ந்தழி யாவகை விரைந்து
நின்று சுட்டிடு பீரங்கி அயல்எங்கும்
நிரைநிரை அணிபெற வகுத்துத்
துன்று சேனையைச் சூழவும் நிறுத்திமுன்
தொல்மதில் குறியுறக் குணித்தே
அன்று நின்றவன் அடல்புரி ஆடலை
யாவரே சொல்லிட வல்லார்? (117)

உருத்துச் செறுத்தான்.

3247 வந்து வந்துவல் இடிஎன விழுகின்ற
வன்கொடுங் குண்டுகள் எல்லாம்
சிந்தி வண்மதில் அயல்எங்கும் சிதறின;
தீப்புகை கதுவிமுன் கொடிதாய்
முந்தெ ழுந்தடர்ந் தந்தரம் படர்ந்தது;
மூண்டெழு முனிவெனும் கொடுந்தீ
சிந்தை யுள்ளுறத் தெவ்வுயர் அதிபதி
செருக்கிநின் றுருத்தனன் செறுத்தே. (118)

எதிர்த்து நின்ருர்.

3248 இன்ன வாறவன் இகலுடன் அயலுடன்
றிடையரு தடலொடு முனைந்து
பின்ன மாம்படி மதிலினைக் குறிவைத்துப்
பிழையறப் பெய்துமேல் நின்ருன்;

அன்ன போதுநம் மன்னவன் சேனையை
அகநகர் அணிவகுத் தடைவே
என்ன போதவர் ஏறியுள் வருவர்என் றுரை
எதிர்குறித் தினமுடன் இருந்தான். (119

கோட்டையின் நிலை.

3249 நாட்டி வைத்துள பீரங்கி இருபதும்
நண்பகல் உறும்வரை நாடி
மூட்டி நின்றவர் முரணறச் சுட்டனர்;
மூதெயில் யாதொரு வகையும்
வாட்டம் இன்றியே மாண்புடன் நின்றது;
மாற்றலர் உயிர்களை வாங்கும்
கோட்டை என்றதன் குலநிலை உணர்ந்திலர்;
கொலையுறத் தலையற நின்றார். (120)

நிலை கலங்காமல் நின்றது.

3250 சொன்மழை பொழியும் பாவலர்க் குவந்து
சுடர்மணித் தடக்கையால் வாரிப்
பொன்மழை பொழியும் மன்னவன் நகர்மேல்
புல்லலர் பொங்கிவெங் கனலின்
கன்மழை பொழிந்து கடுத்தனர்; கடுத்தும்
கடிமதில் நிலைகலங் காமல்
வன்மழை பொழியப் பொன்மலை நின்ற
வகைஎன நின்றது வளர்ந்தே. (121)

எண்ணி இனைந்தான்.

3251 மண்ணுறு கோட்டை என்றெளி தாக
மதித்துமுன் இகழ்ந்தவன் மதிலின்
திண்ணிய நிலையைக் கண்டுளம் திகைத்துத்
திகிலடைந்து என்னைகொல்? இதுவே!
கண்ணியல் நிலையில் மண்எனக் காட்டிக்
கருங்கலால் கட்டிய தெனவே
எண்ணியுள் இனைந்தான்; எண்ணரி தாய
ஈயவெங் குண்டுகள் எய்தான். (122)

1252 **சினந்து திரிந்தான்.**

இவ்வரண் அழிந்த போதலால் உள்ளே
இருந்திடு மன்னவன் தன்னை
எவ்வகை யாலும் எய்திட முடியாது
என்றவன கன்றிநின்று ஏங்கி
வெவ்வலி யோடு குண்டுகள் விரைந்து
சொரிமின் என்றூக்கி நேர்ஏவி
தெவ்வழித் தடல்கொள் நிலையினைச் சிந்தை
செய்தவன் திரிந்தனன் சினந்தே. (123)

1253 **தெற்கு நெட்டு அழிந்தது.**

பத்தொடு படிந்த எட்டுநா ழிகையாய்ப்
பாரவெங் குண்டுகள் படர்ந்து
கொத்துடன் எழுந்து கொடிமதில் வந்து
குறியுற விழுந்தன கொடிதாய்
எத்திசை மருங்கும் இடியரு கிடித்த
தெனவுயர் பெருமுழக் கெழுந்த
ஒத்துறு முடிவில் தெற்குநெட் டந்தோ
ஒருபடி உடைந்திடிந் ததுவே! (124)

1254 **தெவ்வர் குதித்தார்.**

கோட்டைமுன் உடைந்தது என்னவே ஒன்னர்
குதித்தனர் களிப்புடன் ஆர்த்தார்:
ஓட்டைநெஞ் சினராய் உடனுடைந் திருந்த
எட்டனும் பிற்கட்டும் ஒருங்கே
வேட்டியை வீசி மேலெழுந்து ஆர்த்தார்:
மேவலர் அதிபதி இனிமேல்
வேட்டையை எளிதா விளைக்கலாம் மேற்கு
நெட்டையும் வீழ்த்தும்என் றிசைத்தான்.

1255 **ஊமைமன் உளைந்தான்.**

தென்திசை மதிலின் திறலழிந்து இடிந்து
சிதறிடத் தெவ்வர்கள் திரண்டு
நின்றிசைக் கின்ற நெடுங்குரல் நிருபன்
நிறைசெவிப் பட்டது படவும்

முன்றிசை வென்று நன்றிருந் தாண்ட
முதுநகர் அரண்அழிந் ததனுல்
இன்றிசை யழிந்து பொன்றிட நேர்ந்த
இயல்பெனச் சிறிதுளம் இனைந்தான். (126)

3256 வெளி அரண் அழிந்ததே.

வெளியரண் அழிந்து வீழ்ந்ததே எனினும்
மேதகும் என்னுளத்து அமைந்த
ஒளியரண் ஒழிந்த தில்லையா தலினுல்
ஒன்னலர் உயிரெலாம் பருகி
இளிவரு நிலையர் ஆக்கிஇந் நாட்டை
எட்டியும் பார்த்திடா தோட்டி
விளிவறு புகழை மேதினி எங்கும்
விரிப்பன்என் றுரைத்துருத் திருந்தான்.

3257 வெள்ளையர் விரைந்தார்.

உள்ளுற வூக்கி மன்னவன் இங்ஙன்
உறைந்திடப் புறம்பொதிந் துடன்ற
வெள்ளையர் மிகவும் விரைந்து மேல்அரணை
வீழ்த்திடத் துணிந்துவெம் புகைகொள்
ஒள்ளெரி தவழ்ந்து துள்ளிமேல் ஓங்க
ஒளிவறு குண்டுகள் பொழிந்தார்:
தள்ளரும் திறல்கொள் அம்மதில் முழுதும்
தகர்ந்தது தரையொடு தரையே. (128)

3258 பரிகள் ஏறினர்.

விழுந்தது மதில்என் றறிந்ததும் மேவார்
வெந்திற லுடையராய் விரைந்தே
எழுந்தனர் பரிகள் ஏறினர் படைகள்
எடுத்தனர் கடுத்தனர் நகர்மேல்
பொழிந்தடர் வெடிகள் தீர்த்தனர்: ஆர்த்துப்
புகுந்தனர்: புடையுயர் பதியும்.
தொழுந்தகைப் பரிமேல் இவர்ந்துமுன் னைக்கித்
துடித்துடன் வந்தனன் துணிந்தே. (129)

1159 **பாஞ்சைப் பதி பணித்தான்.**

பற்றலர் துணிந்து படைஎடுத் துறவும்
பாஞ்சையின் அதிபதி உள்ளே
உற்றதன் படையை அணிவகுத் துணர்த்தி
ஒன்னலர் உள்வரும் வரையும்
வெற்றெருவி ஒன்றும் செய்திடா து அமர்ந்து
வீற்றிருந் துள்வரப் பாய்ந்து
முற்றயல் வளைத்து முற்றவும் முனைந்து
முடித்திடும் என்றவன் முடித்தான். (130)

1160 **படைவீரர் வளைந்தனர்.**

மன்னவன் சொன்ன வகையினில் வீரர்
மன்னியுள் இருந்தனர்; வெளியே
துன்னிய படைகள் துன்னலர் நேரே
துணிந்துவந் தெதிர்ந்திலர் அஞ்சி
இன்னதோர் நிலையில் இருந்தனர் வேறல்
எளிதென எக்களிப் புடனே
நன்னகர் மருங்கு நண்ணினர் நண்ண
நரலைகொண்டு எழுந்துடன் வளைந்தார். (131)

1161 **படுகொலை செய்தனர்.**

கொற்றவன் வீரர் கோநகர் அயலே
கும்பலாய் வந்துளே கிடைத்த
பற்றலர் தம்மைப் படுகொலை செய்தார்;
படைவெடித் திரளெலாம் பறித்தார்;
அற்றதாள் தோள்கள் ஆகிவீழ்ந் துழந்தார்
ஆவதை அறிந்திலர் அயர்ந்தார்
எற்றைநா ளினுமே இன்றுபோல் இறந்தது
இல்லெனத் துள்ளியங் கிறந்தார். (132)

1162 **போர் வெறி.**

தொழுவிடை அடைந்த எருதுகள் தம்மை
தொல்புலிக் குழாங்களுட் புகுந்தே
அழிவுறச் செய்யும் வகைஎன அரசன்
ஆடல்வெம் படையடல் மிகுந்து

கழுதுகண் புதைக்கக் காலனும் நடுங்கக்
காற்தலை தோள்எலாம் தடிந்து
புழுதியில் புரட்டிப் போர்வெறி யோடு
பொருகளம் எங்கணும் திரிந்தார். (133)

3263 **வெடி வீரர் வீட்டினர்.**

திடுமெனப் பாய்ந்து வளைந்திவர் கொன்ற
செயலினுல் செயலழிந் துயங்கிப்
படுபழி பட்டார் பட்டிடத் தானைப்
பதிஒரு படையுடன் கடையே
கடிதிவர் பரிமேல் நின்றுளம் கனன்று
கடுத்துடன் சுட்டிடப் பணித்தான்:
வெடியின வீரர் இடினைச் சுட்டார்
வீழ்ந்துயிர் அழிந்தனர் இவரும். (134)

3264 **விறலுடன் மேவினர்.**

தொட்டவெவ் வெடிகள் தொடுத்தவர் சுடவும்
துடித்திவர் துள்ளிவீழ்ந் திறந்து
பட்டனர் கிடந்து பதைத்தனர் உழந்து
பாணிஎன் றுலர்ந்தனர் பரிந்தார்:
எட்டிய போரில் இருபடை யுள்ளும்
இறந்தவர் அளவிலர் எனினும்
வெட்டிமேல் எழுந்து வேந்துயர் தலைவர்
விறலுடன் மேவினர் அன்றே. (135)

3265 **தளபதி கொதித்தான்.**

பாஞ்சைமா நகருட் புகுந்தெளி தாகப்
பற்றிட லாம்எனத் துணிந்து
வாஞ்சையாய் அடைந்த சேனையின் பதியும்
மனைவன் வலிநிலை நோக்கி
நாஞ்செய லுற்ற செயலினுல் நமர்கள்
நாசமா யினர்என நாணி
போஞ்செயல் நிலையை நினைந்துமுன் வருந்திப்
பொருமியுட் கொதித்தனன் புகைத்தே.

3266 **நின்று கரைந்தான்.**

நின்றவந் நிலையே நிணப்பெருங் குன்றும்
நெடும்பிணப் பிறங்கலும் குருதி
ஒன்றியுள் ஓடி உறைந்துள நிலையும்
உற்றதன் படைஞர்கள் சிதைந்து
பொன்றிவீழ்ந் துள்ள புலைக்கொலை நிலையும்
பூண்டவெம் பழியையும் எண்ணிக்
கன்றிய மனத்தோ டன்றவன் நின்று
கரைந்துள நிலைஎவர் கண்டார்? (137)

3267 **ஊமைமன் நொந்தான்.**

ஊமைமன் னவனும் உற்றவன் போரில்
உள்ளதன் படைபல ஒழிந்து
வேமெரிக் கிடந்த வெம்புலிக் குழாம்போல்
வெய்யவெங் குருதியில் படிந்து
காமர்மெய் யெல்லாம் கருதலர் சுட்ட
கடும்புழைப் புண்ணெடு கலந்து
போயின ராகிக் கிடத்தலை நோக்கிப்
புந்தியுள் நொந்தனன் புலந்தே. (138)

3268 **பொன்றிய நிலை.**

அன்று போருற அமைந்தஅவ் அமர்க்கள நிலையை
இன்று நெஞ்சிடை எண்ணினும் இரும்பயம் எழுமே!
கன்று கூறிடின் நாள்பல கழியுமால சிறிது
நின்று கூறுவல் நிகழ்ந்ததை நெறிமுறை நினைந்தே.

3269 **இரணகள நிலை.**

மண்டி நின்றநம் மன்னவன் படைகளும் வந்த
திண்டிறற்பெருஞ் சேனையும் சிதைந்துசெங் குருதி
வண்டை லிட்டுவெங் நிணத்தொடு வாரிகொண் டோடக்
கண்ட யாவரும் கண்புடைத் தேங்கினர் கலங்கி. (140)

3270 **பிணங்கள் பிறங்கின.**

விரை மாநகர்த் தெற்கிலும் மேற்கிலும் பிணங்கள்
சுரை மாகிய குருதிநீர் இடையிடை ஓங்கிப்

பார மாகிய குன்றுகள் ஆமெனப் படிந்து
தூர மாகிய இடந்தொறும் தோன்றினின் றனவே. (141)

3271 கழுகுகள் களித்தன.

கழுகும் சேனமும் பந்தரிட் டாடின; காகம்
விழிகள் நுங்கின; வெந்நரிக் குழாங்களு மிடைந்த
அழுது மங்கையர் அலமர லாயினர் அந்தோ!
தொழுது கூளிகள் துணங்கைகொண்டாடின துதைந்தே.

3272 படைக்கலன்கள்.

ஒடிந்த வாள்களும் ஊறுபட்டு ஒன்னலர் உடம்பில்
படிந்த வேல்களும் பாரவல் லயங்களும் பலவாய்த்
தொடர்ந்த வெம்படைக் கலன்களும் துண்டங்கள் ஆகிக்
கிடந்த எங்கணும் நடந்திட லரியன கிளர்ந்தே. (143)

3273 வெள்ளையர் உடல்கள்.

கொண்ட வெவ்வெடித் திரளுடன் குடல்எலாம் சரிந்து
மண்டு செங்குரு திப்புனல் ஈர்த்திட மறுகிக்
கண்ட கண்டதோ ரிடந்தொறும் வெள்ளையர் கணங்கள்
புண்டி றந்தமெய் புழுதியில் புரண்டிடப் புலர்ந்தார்.

3274 வாசிகளின் நாசம்.

வாவும் வாசிகள் மார்புகால் வயிறெலாம் சிதைந்து
மேவி நின்றதம் தலைவரை வேறுறப் பிரிந்தே
ஆவி நின்றல மந்திட அயல்எலாம் கிடந்த
கூவு காகங்கள் கண்களை நுங்கிடக் குலைந்தே. (145)

3275 வீரர்கள் உலர்ந்தனர்.

கையில் கொண்டவெவ் வேலொடு கண்கள்தீப் பறக்க
மெய்யில் கொண்டசெம் புண்ணெடு வெய்துயிர்த்
[துழன்று
செய்யில் கொண்டபுன் சேறென நிணப்பெருஞ் சேற்
[றில்
உய்யக் கொண்டவல் வீரர்கள் உயிர்துறந் துலர்ந்தார்.

3276 **தடிந்து சாய்ந்தனர்.**

யுகம் எங்கணும் குருதிநீர் அயலுக உள்ளே
நாகம் கொண்டுதண் ணீர்எனத் தவித்துயிர் துறந்தார்:
லோகம் கொண்டெழு வீரர்கள் மேலெழல் இன்றிச்
சாக முந்தினர் தலைகளைத் தடிந்துடன் சாய்ந்தார். (147)

3277 **உயிரினை ஒழித்தார்.**

ஆள மூட்டிய வெகுளியின் உரமெடும் ஊக்கித்
தாள ருந்திறல் உடனயல் உருண்டுபோய்ச் சாய்ந்து
வாள்ளை யாளராய் வீழ்ந்துள பேர்கள்மேல் வீழ்ந்தே
ஆள ஆவியும் குடித்துத்தம் உயிரினை ஒழித்தார். (148)

3278 **சீவனை விடுத்தார்.**

சேனந்தன் வீரர்தம் வெந்திறல் ஆண்மையை அஞ்சிப்
போந்த வீரர்கள் புறங்கொடுத் தோடினும் புகைந்து
மாந்து கண்ணினர் ராய்க்கடுத் தடலுடன் கடித்துச்
சேந்த செம்புனல் வாயுறச் சீவனை விடுத்தார். (149)

3279 **ஒரு சிங்கம் போதும்.**

ஆமைச் சிங்கம்ஒன் றுள்ளதே போதும்என் றுவந்து
வேமச் சிந்தையின் வெங்களம் வீழ்ந்துள வீரர்
நாமத் தோங்கிய நண்ணலர் மண்ணுற நலிந்து
சாமச் சார்பினைச் சார்ந்துகண் டுயிரினைத் தீர்ந்தார்.

3280 **ஓட்டைக் காயத்தை உகுத்தார்.**

நாட்டைக் காத்திட, நகரினைக் காத்திட, நமது
கோட்டை கொத்தளம் கோனையும் காத்திட, இன்று
வேட்டை மேவிய மேவல ரோடெதிர் பொருது
ஓட்டைக் காயத்தை உகுத்தனம் உயிர்உயர்ந் துளமால்.

3281 **மான வீரர்கள் மாண்டனர்.**

என்று மன்னவன் வீரர்கள் இகலுடன் மிகுந்து
துன்றி வந்ததிர் துன்னலர் உயிர்களைக் குடித்தே
பொன்றி நீங்கிடப் புகுந்திறு பொழுதினும் புகழோடு
ஒன்றி யுள்ளகம் உவந்துயிர் நீங்கினர் ஒருங்கே. (152)

3282 **கோர வெங்கொலைகள்.**

இருத ளத்தினும் இழவுகள் அளவில எய்திப்
பொருக ளத்தினில் பொருவரு பிணமலை ஒங்கிக்
குருதி கொண்டெழு கோரவெங் நிலையினைக் கண்டே
அருக டைந்திடாது அகன்றனர் யாவரும் அஞ்சி. (153)

3283 **குலை மிக நடுங்கினன்.**

வானை முட்டிடும் வகையினில் வந்தெதிர் அடர்ந்த
தானை பட்டழி தன்மையைத் தானைநாயகனும்
கோனறிந்துதன் குலைமிக நடுங்கினன் குறித்தே
ஏனை நின்றுள படையினை இதமுடன் காத்தான். (154)

3284 **பாசறைக்கு ஒதுங்கினன்.**

உள்ள சேனையை உணர்வுடன் பாசறைக்கு ஒதுக்கி
எள்ளல் எய்திய நிலையையும் இழவையும் எண்ணித்
தள்ள ருந்துயர் தன்னுளே தழைத்திடத் தளர்ந்து
வெள்ளை வீரரை வேறுறீஇ விநயமோ டாய்ந்தான். (155)

3285 **சேனைத் தலைவன் திகைத்தான்.**

அக்கி னிச்சென்னல் என்னும்அவ் அருந்திற லாளன்
பக்கம் நின்றுள துணைவரைப் பண்புடன் கூட்டி
எக்க ணக்கினில் இனிஎதிர் இவனெடு பொருது
மிக்க வென்றியை மேவிட லாம்என விழைந்தான். (156)

3286 **பாஞ்சை வீரரை வியந்தான்.**

இன்ன வெந்திறல் மன்னவன் போல்இது வரையும்
முன்னம் மூண்டஎத் திசையினும் முனைந்தெதிர்
[காணேன்;
என்ன போர்வலி! எத்துணை ஆள்வலி! இந்தச்
சின்ன மாநகர்த் திறல்நிலை என்! எனத் திகைத்தான்.

3287 **பட்டுள்ள இழவை நினைந்தான்.**

மண்டு பீரங்கி வன்கரு மருந்தெலாம் வாரிக்
கொண்டு வந்திந்தக் கோட்டையை வளைத்தடல் சூழ்ந்து
மிண்டு போரினை வெந்திற லோடெதிர் விளைத்தேம்;
கண்ட தோர்பயன் இல்லையே! கண்டனம் இழவே! (158)

எவ்வளவு அழிவுகள்!

எந்து சேனைப்படை மருந்துகள் எவ்வளவு! இங்கே
ஏந்து மிந்துள பொருள்களுக் கோர் அள வுளவோ?
இந்து சேனைப்பெரும் போரிலும் யாதொன் றும் கலங்கான்
சிந்தம் கொண்டிவன் திறலொடு செழித்துள னன்றே!

வெள்ளையன் உளைந்தான்.

வந்த நம்பெரும் வன்படை மடிந்தன; மன்னன்
மூந்து சேனையும் மூண்டுமுன் முடிந்தன; முடிந்தும்
வெந்து றங்கொடு வெற்றியை விழைந்திவன் இருந்தான்;
இந்த வேளையில் நாம்செயக் கிடந்ததென்? என்றான்.

உள்ளம் தெளிந்தான்.

சாய்ந்து போனமக் காளியை உடன்வர வழைத்துக்
காய்ந்து போரினில் கைகண்ட நிலையெலாம் கேட்டுத்
தோய்ந்து துன்னலன் நிற்கின்ற துணிவையும் சூழ்ந்து
ஆய்ந்து கொள்வதோர் வழியினை நலமுடன் தெளிந்தான்.

ஓர்ந்து உணர்ந்தான்.

ஆலைக்கற் தொன்பதி னாயிரம் குண்டுகள் எய்தே
ஆலைக்கண் பற்பல ஆர்த்துநாம் செய்யினும் யாதும்
கலைக்கம் இன்றியே கடுந்தறு கண்மையன் ஆகி
நிலைத்து நிற்கின்றான்; நெஞ்சகம் நெகிழ்ந்தில னன்றே?

உறுதியை வியந்தான்.

சாய்ந்த டைந்தபல் படைகளும் ஒழிந்தன; உறவாய்ச்
சார்ந்தி ருன்றவண் கிளைகளும் தொலைந்தன; சூழ்ந்து
போர்ந்தி ருன்றதிண் கோட்டையும் முரணழிந்து ஒருபால்
ஈர்ந்து டைந்தது; மன்னவன் எய்திலன் இன்னும். (163)

விதியினுல் விளைந்தது.

வேந்தில் மந்திரி வன்பிழை புரிந்ததால் வந்த
ஆந்த கோ டும்பகை அடலுடன் அரசிவன் ஏற்றான்;
வீந்த கோ டுந்திய விளைவிது; மேலினி நமது
காந்த கோ டுந்திய வழியினுல் மாற்றிட வேண்டும். (164)

3294 வீணே வீழலாகாது.

இன்னும் போரினை இகலுடன் இயற்றினே இங்கே
துன்னி நின்றவர் யாவரும் தொலைகுவர்; தொடர்ந்து
மன்னன் மாபெரும் கிளைகளும் மாண்டுபோம்; வீணே
அன்ன தீமையை ஆற்றிடாது அகற்றுதல் அழகே. (165)

3295 நண்பாயிருந்தான்.

சங்க மன்னவர் ஆகிய நம்பெருந் தலைவர்
துங்கம் ஆகிய நண்பொடு தொடர்ந்துதென் னிட்டுச்
சிங்கம் என்றிவன் தன்னெடு சேர்ந்துமுன் இருந்தார்;
வெங்கொ டும்பகை விளைந்தது வேறொரு வழியே. (166)

3296 அதிபதி விளைந்தான்.

மூண்ட போர்தொறும் முனைமுகம் புகுந்தொரு முகமாய்
மாண்ட பேரற மலனிநின் றவரெலாம் மருவி
மீண்டு வாழ்ந்திட வேந்தொடு சம்மதம் கொள்ள
வேண்டும் என்றுயர் விரகுடன் அதிபதி விழைந்தான்.

3297 உறுதியை உரைக்க வேண்டும்.

பகைவ ளர்ந்தது; படைகளும் பட்டன; இனிமேல்
நகைசெய் நண்பினை நயந்துநாம் வேண்டினும் நண்ணுர்
இகலி ஏற்றிடார் என்றவன் இருப்பினும் இருப்பான்:
தகவொ டொன்றிநம் உறுதியைச் சாற்றிட வேண்டும்.

3298 சமாதானம் புரிய முயன்றது.

என்று சேனையின் அதிபதி எண்ணிஓர் தூதை
நன்று தேர்ந்தெடுத் தவனிடம் நயமுடன் உரைகள்
சென று கூறிநல் லுறவுகள் தெளிவுற விளக்கி
வென்றி வீறுடன் வருகெனவிரகுடன் விடுத்தான். (169)

3299 தூதனை உய்த்தது.

சேனை நாயகன் கருத்தையும் குறிப்பையும் செருவில்
ஆன சேதங்கள் அனைத்தையும் மனத்தினில் ஆய்ந்து
போன தூதுவன் உறவுற இதமுடன் புகன்றான்:
மான வீரனும் தெளிவுற மொழிஎன வகுத்தான். (170)

3100 தூதுவன் உரைத்தது.

[illegible] எழுந்துவன் பழிபல பட்டன; எனினும்
[illegible] தெ ரிந்தெதிர் வந்துடன் பட்டுநீர் வரியைத்
[illegible] செய் நண்புடன் தந்திடின் சார்ந்தவர் உறவாய்
[illegible] கல்லி கந்தினி தேகுவர் யாவரும் இன்றே. (171)

3101 உரைக் குறிப்புகள்.

[illegible] மன்னவர் ஆளுகைக் கடங்கிநேர் திறையை
[illegible] இன்றியே விழைவுடன் செலுத்திநீர் வரிஞே
[illegible] லம்பெற வாழலாம்; இல்லையேல் மடிவு
[illegible] மாயெழும் என்பது துணிவது துரையே! (172)

3102 சீருடன் கேட்டான்.

[illegible] சேனையின் அதிபதி இவற்றினை இயம்பி
[illegible] நுண்மையையுணர்ந்துவா என்றெனை உய்த்தான்
[illegible] ஆகிய அரசொடு தழைத்தினி திருக்கும்
[illegible] மே!கருத்து என்?எனச் சீருடன் கேட்டான். (173)

3103 ஊமைமன் உரைத்தது.

[illegible] வந்தவன் துணிவுடன் சூழ்ந்தெடுத் துறவாய்
[illegible] வோடினி துரைக்கவும் இறைமகன் கேட்டு
[illegible] ன்றித் நின்றுள படைஎலாம் மடிந்து
[illegible] மேரிலும் தாழ்ந்துநான் திறைதரேன் என்ருன்.

3104 மறந்தும் மருவேன்.

[illegible] மற்றவர்க் கரசினை ஆளுறும் நிலையை
[illegible] லங்தெமர் இருந்தநாள் தொடர்ந்தித் வரையும்
[illegible] நின்றிலர்; யானது தொடுவது துணிவோ?
[illegible] லந்தஇவ் வுறவினை மருவிலேன் மறந்தும். (175)

3105 சூரன் சொன்னது.

[illegible] போலவே திறையின்றி முதிர்ந்தநண் பாகி
[illegible] வாழ்நீர் இசையிலே இசைகுவன்; இன்றேல்
[illegible] மேரிலும் இகலினை இகந்துடன் பாடு
[illegible] நின்றிலன்; சொல்லுபோ! என்றனன் சூரன்.

3306 தளபதி கனன்றது.

வேந்தன் உள்ளத்தின் விழைவினைத் தூதுவன் விரைந்து
போந்து சேனையின் பதியிடம் புகன்றனன்; புகலக்
காந்து கண்ணினன் ஆகிவெங் கதமுளே கொண்டான்:
ஆர்ந்த வெம்படை அடலுடன்வருகஎன் றறைந்தான்.

3307 புதிய சேனைகள் வந்தன.

சேன மண்டியே செங்கட லாமெனத் திரண்டு
வானவென்றிடும் வகையினில் வந்துவந் தடைந்த;
ஆன போதினில் மாதுலன் ஆதியர் ஆய்ந்து
கோனிடம்வந்து குணமுடன் பலபல குறித்தார். (178)

3308 யாவரும் அரசிடம் வந்தார்.

மூண்டு நின்றுள நிலைஎலாம் முழுவதும் உணர்ந்து
மாண்டு போனவர் தொகையெலாம் வகையுறத்தெரிந்து
நீண்டு மூண்டுள பகைவரின் நெடுஞ்சினம் நினைந்தே
ஆண்டு நின றவர் யாவரும் அரசிடம் வந்தார். (179)

3309 மாமன் மறுகினான்.

மாமன் ஆம்கெடி வெட்டுமல் என்பவன் மன்னன்
தாம மாளிகை அடைந்துவன் சமர்நிலை சாற்றி
தீமை யாம்பகை ஒழிந்துதெவ் வுரைத்திடு திறையை
சேம மோடுதந் தினியுற வுறுதலே திறமாம். (180)

3310 மன்னனிடம் உரைத்தான்.

படைகள் பற்பல அழிந்தன; பாலையம் பலவாய்க்
கெடுதல் உற்றது; மக்களும் கிளைகளும் கிளர்ந்து
படுக ளத்திடைப் பட்டனர்; பகைப்படை ஓங்கி
மடையில்வெள்ளம்போல் வந்துகொண் டுள்ளனநாளும்.

3311 உள்ளம் தெளிய மொழிந்தான்.

பிள்ளை செய்தவெம் பிழையினுக் காகநாம் பிணங்கி
வெள்ளை யாளர்க ளோடிந்த வினையினை விளைத்தோம்:
வள்ளல் மன்னனும் மாண்டனன்; வண்கிளை மாய்ந்த:
உள்ள பேர்களும் ஒழிந்திட நின்றனர்; உறுதி. (182)

3112 காலம் கருதுக.

மேலும் மேலும்வெம் படைவர வெந்திற லொடுநாம்
ஏலும் போரினை எதிர்ந்தடல் செய்யினும் வெற்றி
சால நம்கையில் சாருமென் றில்லையே அந்தோ!
காலங் கண்டுமுன் கருத்துடன் ஒழுகுதல் கடனே. (183)

3113 கடும்பகை தெரிக.

அந்த மம்துள எட்டப்பன் அனுதினம் கோளே
ஈந்த மூட்டிவெம் பகைவருக் குளவுகள் எல்லாம்
ஏந்த நுரைத்துநம் இடத்தினை எடுத்திட எண்ணிக்
காந்த நின்றுளான் கழிபெருங் களிப்புடன் கதித்தே.

3114 வேந்தர் விதி தெளிக.

வெந்த வெம்படை நெடிதெனின் அக்கணம் ஒடுங்கிச்
சந்த மாயுடன் பட்டவர் சொல்வழி சார்ந்து
வந்த போதலே நெறிமுறை; நீதியும் ஆகும்;
வெந்த தந்திறம் மேவிநாம் வாழ்வதே விதியாம். (185)

3115 சமாதானமே நல்லது.

கலந்துயர் வீரர்கள் நம்பொருட் டாக
மலைகளத்தினில் வன்கொலை யாய்விளிந் தொழிந்தார்;
குலமும் இன்னலும் இடர்களும் தொடர்ந்துள; இன்னே
சலமே லெந்தொடு சார்ந்துடன் படுதலே சதுரம். (186)

3116 மாமனே இகழ்ந்தான்.

மன்ன மாதுலன் இசைத்திட இறைமகன் சிரித்து
மன்ன நன்றுநும் கிழவுரை; நான்பகைக் கடங்கி
மன்ன வாழ்ந்திட நீதிகள் பலபல நிறைத்தீர்!
மன்னை வீழுமோம் என்றுநீர் அஞ்சினீர் போலும்?

3117 ஏன் அஞ்சுகிறீர்?

அரசு தாங்கிய வயதினை அடைந்துளீர்! அமரில்
இரவு தாங்கிய சீர்த்தியை எதிர்ந்துளேம் என்னை
உரவு தாங்கிய பேற்றினை உவந்திடா துள்ளே
பிரசு தாங்கிய அஞ்சலை எங்ஙனம் சேர்ந்தீர்! (188)

3318 **அச்சம் கொச்சையே.**

உள்ளத் தஞ்சிய கோழைகள் உற்றுழி எல்லாம்
துள்ளிப் பன்முறை சாகுவர்; தொல்லுயிர் படுமுன்
ஒள்ளி தாகிய வீரனே ஒருமுறை உணர்வான்;
எள்ளும் சாவினை அஞ்சுதல் என்றுமே இழிவே. (189)

3319 **சாவின் தகைமை**

உரிய போதன்றி உலகெலாம் தள்ளினும் மரணம்
வருவ தில்லையே; வந்துழி அயனும்மாற் றனே;
அரிய உண்மையை அறிந்து வீறுளுக! அச்சம்
புரியின் பேடிஎன் றிகழ்ச்சிமீக் கூர்ந்திடும் புலையே.

3320 **பிறப்பும் இறப்பும்.**

பிறந்து வந்தநாள் இறந்திடும் பேற்றையும் பெற்றுச்
சிறந்து வந்துளேம்; சேர்தரு மரணத்தை அஞ்சிப்
புறந்து டிப்பது புன்மையே; பொருதிறல் வீரர்
அறந்தி கழ்ந்தமெய்ஞ் ஞானியர் அதுவர மகிழ்வார்.

3321 **இறப்பின் துயரம்.**

நோயடைந்துறு துயரொடு நொந்துளம் நடுங்கிப்
பாயடைந்திழு பறிஎனப் பதைத்துயிர் நீங்கித்
தீயடைந்துபுன் சாம்பலாய்த் தீர்ந்திடும் இந்தக்
காயம் நின்றுள மாயம்நீர் கண்டிலீர் அந்தோ! (192)

3322 **மானம் பேணுக.**

வான வில்என மருவிய மின்எனத் தோன்றி
மீன கன்றதோர் நெறிஎன மறைந்துபோம் இந்த
ஊனு டம்பினை ஓம்பிட விரும்பிஒன் னலர்பால்
மானம் நீத்துடன் படுவரோ மாண்புறு மரபோர்? (193)

3323 **அரசு ஆள நினையேன்.**

வீர அண்ணலே வெங்கொலை புரிந்தனர்; எம்மை
ஈரம் இன்றியே இருஞ்சிறை வைத்தனர்; என்றும்
வாரம் ஒன்றியே வாழ்க்கையை நடத்தினர்; இந்த
நீர ரோடுநான் நேர்ந்தர சாளுதல் நினையேன். (194)

1124 பிறப்பின் பயனைப் பெறுவேன்.

அடர்ந்து நின்றவெம் படைகளைச் சுளித்தடர்ந் தேறி
யெடுத்து கொள்ளுதல் வேறலொன் றிலதெனின் விளிந்து
மடிந்து இப்பிறப் பெய்திய பேற்றினைப் பெறுதல்
விடும் கான்கொண்ட உறுதியீ தறிதிஎன் றிசைத்
[தான்.

1125 பிழையாகப் பிழையேன்.

ஏவை கட்கித மாகவே ஈந்துயர் இசையை
யாவை நேர்வழி யாகவே வளர்த்திடல்; மருவார்
பிழை யாகவே பெருகிநேர் முறுகிஞே பிழையா
தாழி வாய்அனல் எனவுருத் தொழித்திடல் உறவே.

1126 வீரமே என் உயிர்.

ஆண்மை வண்மையும் வீரமும் இருநிலம் புரக்கும்
வேண்மன் தங்களுக் குயிரினும் சிறந்தனதார் மாண்பாம்;
ஆண்மை சீர்களை இழந்துயிர் வாழ்தலின் அழிந்து
மீண்மை பின்னமாய்ச் சிதைந்திடல் அன்னவர் சிறப்பே.

1127 போரே என் சீர்.

புகல்மறந்தஇப் புவியினில் இருப்பதின் போரின்
சுகம்மறந்தவெங் களத்தினில் கருதலர் தங்கள்
தகைமறந்தழி குருதியில் தவழ்ந்திடத் தாக்கி
இகல்மறந்தமெய் வெற்றியை நேரல்என் நெறியே.

1128 மருண்டு மயங்கேன்.

தானை நூ ணிந்ததோர் துணிவினைத் தரியலர் அடர்ந்து
யானை நூ ணிந்ததோர் நிலையன வளரினும் மறுகி
வானை நூ ணிந்தடர் வடிநெடு வேலுடை உரவோர்
மானை நூ ணிந்தயர் மருளென மயங்கிநீங் குவரோ? (199)

1129 அடங்கி வாழேன்.

கானில் ஓர்துளி உதிரம்உள் ளளவும்ஒன் னலருக்கு
ஆனகி வாழ்ந்திலன்; அடுசமர் அடலுடன் புரிந்து
மானகம் லேறென வாகையே சூடுவன்; வழுவின்
ஊனகம் லைந்தமெய்க் கீர்த்தியை இருத்தியான் இறப்
[பேன்.

3330 **ஆண்மையில் தாழேன்.**

ஊழித் தீஎன உருத்தெழுந்து அக்கினிச் சென்னல்
பாழித் தோளுடல் பருந்தினுக் கிரைஎனப் படுத்தும்
காழிப் போடுயர் காலனுக்கு உயிரினைக் காட்டி
ஆழிப் பாரினை ஆளுவென் ஆண்மையில் தாழேன்.

3331 **அச்சம் அறியாத குலத்தினேன்.**

அச்சம் என்பதை அறிகிலாது ஆண்மையே அமைந்த
உச்ச வீரஒண் குலத்தினில் உதித்துளேன்; முன்னை
வைச்ச காலைப்பின் வைத்திலன்; வசையுறும் இந்தக்
கொச்சை வார்த்தையை ஒழித்துநீர் அகலுதல் குணமோ

3332 **மாமன் ஏங்கி நீங்கினன்.**

என்று மன்னவன் இயம்பவும் நேர்எதிர் மாமன்
ஒன்றும் கூறலன் ஊழ்வழி உறுவன உறுமால்;
இன்று நாமிடை என்செய லாம்என இரங்கி
நின்று நீங்கினன் நேருறும் நிலையினுக் கேங்கி. (203)

3333 **மன்னன் ஊக்கினன்.**

நீங்கி அன்னவன் அகலவும் மன்னவன் தனது
பாங்கு நின்றுள படைகளை அடைவுடன் படுத்து
ஓங்க ருந்திறல் தலைவரை உறுவன உணர்த்தி
ஆங்கமர்ந்தினி திருந்தனன் அமலனை நினைந்தே. (204)

3334 **சமரின் நிலை.**

எதிர்வதை எண்ணி மன்னன் இங்ஙனம் இருப்ப அங்கே
அதிர்படை அடைய நோக்கி அதிபதி மிகவுள் ளூக்கி
முதிர்கனல் என்ன மண்டி முனைமுகத் துறுவ எல்லாம்
சதிருடன் ஆய்ந்து கொண்டு சமருற ஓங்கி நின்றான்.

3335 **அக்கினி கொதித்தான்.**

இகல்ஒழிந் தினியம்ஆகி இசைந்துட னிருக்கலாம் என்
றகமகிழ்ந் துரைத்த அந்த அமைதியை ஏதும் ஓரான்
மிகைசெய மீறி நின்றான் வேரற இவனை வென்று
புகழுடன் எழுவேன் என்று பொங்கிமேல் எழுந்தா

உலாவி வந்தான்.

இயற்றதன் படையை எல்லாம்
நிலைபெற நிறுத்தி நேரே
அயற்றுபீ ரங்கி தம்மைச்
சுடும்படி பணித்துச் சுற்றி
முயற்றிய கோட்டை தன்னை
உருவழித்து ஒழிப்பேன் என்னு
வயற்றிறல் துணைவ ரோடு
மருங்கெலாம் உலாவி வந்தான். (207)

குண்டுகள் பொழிந்தனர்.

எய்யுடொடர் மேகம் மண்டி
வெவ்விடி வீழ்த்தால் என்ன
குண்டுகள் இடைய ருது
கோட்டைமேல் பொழிந்தார்; கொண்ட
நுண்டிறல் எல்லாம் கூட்டித்
தெவ்வர்நேர் பெய்த யாவும்
மண்டியல் ஒதுங்கி நின்றது
உயர்மதில் ஊருன் றின்றி. (208)

நெருக்கி நின்ருர்.

அம்பொரு சிறிது மின்றி ஒண்மதில் நிற்கும் அந்தச்
சிலைக் கண்டு தெவ்வர் சினந்துகைக் கடுப்பி னேடு
அம்பையும் பொங்கி எங்கும் கன்மழை கடிது பெய்தார்
இம்பரும் நிலத்து நோக்கி நிரைநிரை நெருக்கி நின்ருர்.

கெக்கலி கொட்டினர்.

பட்டது தெற்கும் மேற்கும்
படாதுநேர் நிற்கும் இந்த
நெட்டையும் அழியும் என்று
நெடும்படைத் தலைவன் ஊக்கி
வட்டணை கொண்டு நின்ருன்
வடக்குநெட்டு அழிந்த தந்தோ
கெட்டது பகைஎன்று ஓங்கிக்
கெக்கலி கொட்டி ஆர்த்தார். (210)

3340 **அரண் அழிந்தது.**

கற்பினைக் காத்து நிற்கும்
காமரு நிறைபோல் பாஞ்சை
அற்புத நிலையைக் காத்தே
அயலவர் நெருங்கா வண்ணம்
பொற்புடன் நின்ற வீரப்
போரரண் பொடியாய் வீழ
மற்புய வீரர் உள்ளே
மண்டிமேல் எழுந்தார் அன்றே. (211)

3341 **மன்னன் மூண்டு நின்றான்.**

எழுந்தவர் தம்மை மன்னன்
இருமெனப் பணித்து மாற்றூர்
எழுந்துமேல் வருங்கால் செய்யும்
இகலினை விலக்கி எங்தும்
தொழுந்தகை நிலையில் நின்ற
தொன்னகர் துன்ன லாரால்
விழுந்தகை அரண மான
விதம்எண்ணி வெகுண்டு நின்றான். (212)

3342 **மனம் துணிந்தான்.**

இன்றுடன் அமரும் இங்கே
ஈண்டிவந் திருக்கும் வெள்ளை
ஒன்றிய பகையும் சேர
ஒழிந்திட உயிர ழித்து
வென்றியை எய்தி வெற்றி
வேலனைப் பணிவேன்; இன்றேல்
பொன்றிமுன் விழுவேன் என்னப்
புந்தியுட் புகைந்தி ருந்தான். (213)

3343 **கடுஞ்சமர் விளைந்தது.**

அரணற அழிந்து வீழ அகங்கரித் தார்த்தெ ழுந்த
முரணுறு தெவ்வர் பின்னர் முடிவதை முன்னர்எண்ணூர்;
சரணம்வந் தடைவன்வேந்தன்சார்ந்திடும் வெற்றிஎன்று
கரணமுட் களித்து நின்றூர் கடுஞ்சமர் விளைக்க வந்தார்.

சேனைத் தலைவன் செருக்கி வந்தது.

1144 உற்றபெரும் படையனைத்தும் ஒருமுகமா
யணிவகுத்துள் ளூக்கம் மீறி
வெற்றியினி அடைந்திடலாம் எனச்செருக்கிச்
சேனையுயர் வேந்தன் முன்னம்
பெற்றவிரு துகள்எல்லாம் பேணியணிந்து
ஆண்மையுடன் பெருகி வெம்போர்
கற்றவுயர் பரியிவர்ந்து கல்லென்று
படைநடத்திக் கடுத்து வந்தான். (215)

வீரர்கள் விரைந்தது.

1145 வெடிவீரர் பரிவீரர் வேல்வீரர்
வெய்யவடி வாட்கை கொண்ட
படைவீரர் அணியணியாய்ப் பாடுகொண்டு
பீடுபெறும் படிந டந்து
தடைமீறி நின்றநகர் தனைவளைந்து
தருக்கோடு சமர்பு ரிந்தார்
கொடைமீறி நின்றிருந்த கோன்படையும்
கொதித்தெழுந்து கோத்த தன்றே. (216)

எள்ளலுற இறந்தார்.

1146 வெள்ளையர்தம் படைவீரர் வெடியாதி
கடிதோச்சி விரைந்து சீறி
டள்ளேறி வருந்தோறும் ஊமையர
சுயர்வீரர் ஊக்கி நின்று
நள்ளரிய திறலோடு தாக்கினர்
தாக்கவே தலைகள் சிந்தி
ள்ளலுறும் படியுடல்கள் இடந்தோறும்
கிடந்துபுரண் டிழிந்த அம்மா! (217)

இழிந்து மாண்டார்.

1147 வாள்வீரர் வேல்வீரர் வல்லயத்தின்
வல்வீரர் வண்கல் என்னும்
தோள்வீரர் தொடர்ந்தேதறித் துன்னலரைத்
தனித்தனியே துன்னி நின்று

கோள்வீரம் குலையாமல் கொதித்ததிரக்
கொலைஎங்கும் குலையா ஓங்கி
மாள்வீர ராயிழிந்து மண்ணீரம்
குருதிகொள மாண்டொ ழிந்தார். (218)

உதிரங்கள் ஓடின.

3348 குத்தியவேல் வயிறேறறிக் கொழுங்குடலை
ஈர்த்துவரக் குறித்தெ றிந்த
கத்திநெடுங் கழுத்தேறறிக் கண்டங்கள்
கொண்டாடக் கடுந்தண் டங்கள்
மொத்தியெதிர் தலைமூழ்கி மூளைகளை
உறிஞ்சிவர முனைந்து நேரே
ஒத்தடர்ந்த உடல்எங்கும் உதிரங்கள்
சொரிந்தோட உற்ற அன்றே. (219)

இவர் ஆற்றிய அடல்.

3349 கைவடிவாள் ஒடிந்துவிழக் கருதலர்மெய்
துணிந்துவிழக் கடிது தாவி
எய்வருவெங் கணைபோல எதிர்வருவன்
பரிவீழ ஏறி வந்த
மொய்வருதிண் டோள்வீரர் முடித்தலைகள்
அற்றுவிழ மூண்டெ ழுந்தே
உய்வரிய பெரும்போரை உள்ளூக்கி
மன்படைகள் உளுற்றி நின்ற. (220)

வெட்டிய விறல்.

3350 சுட்டுநிற்கும் வெடிநிரையைச் சுடுகனல்போல்
பாய்ந்திவர்கள் துணிந்து குத்தி
வெட்டுகிற்கும் பொழுதவர்கள் மெய்ம்மறந்து
கைசோர விண்ணில் ஏற்றி
நெட்டழித்து நிலைகுலைத்து நேரலர்மேல்
நேராமல் நிறைஅழித்துத்
தட்டழித்துச் சமர்முறுக்கித் தருக்கேறி
அடல்புரிந்து தாவி வந்தார். (221)

பிணக் குவியல்கள்.

1351 வருகின்ற வீரர்பலர் மாற்றலர்கள்
அயலாக மறைந்து நின்று
பொருகின்ற வெடிக்கனலால் பொன்றியுயிர்
போயொழிந்தார்; பொருது நேர்நேர்
எரிகின்ற வெங்கனல்போல் எறிகின்ற
கொடும்படையால் இறந்து பட்டார்;
அருகெங்கும் பிணக்காடாய் அழிகுருதி
ஆறுகி ஆர்ந்த தம்மா! (222)

படைத் தலைவன் பதைத்தான்.

1352 இருதிறத்தும் பெரும்படைகள் இறந்துபட்ட
ஆலைலும் இகல்மேல் ஊக்கிப்
பொருதிறத்தில் உறவந்த புதுப்படைகள்
மிகப்போன போர்மே லூக்கிப்
பரியிவர்ந்து நின்றபெரும் படைத்தலைவன்
பழிநிலையைப் பார்த்துப் பார்த்துள்
எரியிவர்ந்த நெஞ்சினையே எண்ணுத
எண்ணமெல்லாம் எண்ணி நொந்தான்.

கலங்காத தலைவனும் கலங்கினன்.

1353 அரண்அழிந்தது இனிஎளிதா அழித்துவிட
லாம்என்ன ஆர்த்து வந்தார்
முரண்அழிந்து மாண்டுவிழ முனைமுகத்தின்
கொலைநிலையை முழுதும் நோக்கி
இரணகழித்து இப்பகையை எப்படிநாம்
வெல்வது? என எண்ணி எண்ணிக்
கரணமெலாம் கதிகலங்கக் கலங்காத
தளபதியும் கலங்கி நின்றான். (224)

அயர்ந்து உளைந்தான்.

1354 பத்திபத்தி யாய்வந்த படைத்திரள்கள்
பதிபுகுமுன் பட்டுப் பட்டுக்
கொத்தமைந்த தலைகள்பல குலைகுலையாய்
விழுந்துருளக் கொலைமேல் கொண்டு

தத்தியவேல் வீரர்கையில் சாகாமல்
பிழைத்துநின்ற தானை தன்னை
ஒத்ததுணைத் தலைவருடன் உடன்மீட்டி
அயல்நிறுத்தி உளைந்து நொந்தான். (225)

அஞ்சி மீண்டான்.

3355 உள்ளற ஒட்டாமல் உருத்தேறி
வெட்டுகின்ருர்; உள்ளே என்ன
கள்ளேறு பெரும்படைகள் கலித்தேறி
உள்ளனவோ? எனக்க லங்கி
முள்ளேறு வேலியையும் முன்கடக்க
மாட்டாமல் முனைய ழிந்து
எள்ளேற மீண்டான்என்று இகழ்ஏறப்
பயம்ஏறி இளைந்து மீண்டான். (226)

மறுகி நின்ருன்.

3356 கோட்டைபிடி பட்டதினிக் கோன்படுவான்
எனக்களித்துக் குதித்து வந்தான்;
ஏட்டமிகு பெருபடையை எதிர்ஏற்றி
எழில்நகருக் கிரையாய்த் தந்து
வாட்டமிகுந்து அயர்வடைந்து மருவியபா
சறைபுகுந்து மறுகி நினருன்;
தேட்டமிகு மன்னனும்தன் திண்படையின்
திறல்நினைந்து செருக்கி நின்ருன். (227)

ஊமை மன்னன் உவந்தான்.

3357 புறமிருந்த கோட்டைதனைப் பொருதுடைத்தோம்
எனப்புகுந்த பொருநர் தம்மை
மறமிகுந்த வடிவாளால், வல்வேலால்,
வில்எறியால், மாய்த்து வெற்றி
நிறமிருந்த நெஞ்சினராய் நேர்ந்துவரும்
வீரருயர் நிலையை நோக்கித்
திறம்மிகுந்த அரசுவந்து செயம்மிகுந்த
தெனவியந்து சிறப்புச் செய்தான். (228)

30-வது படலம் முற்றிற்று.

ஆகக் கவி 3357.

———

முப்பத்தோராவது

சதி புரிந்த படலம்.

புதுநாய்க் கதி கொண்டு வந்த பெரிய சேனாதிபதி [illegible] படைகளும் குதிரைப் படைகளும் கைவெடிகள் [illegible] காலாள் படைகளும் அடர்ந்துசூழப் பாஞ்சாலங் [illegible] கோட்டையை வளைந்து கடும்போர் புரிந்தார். [illegible] வீரர்களும் எதிர்த்து மூண்டு உக்கிர வீர [illegible] பராக்கிரமங்களோடு போராடினர். இரு திறங்களிலும் [illegible] பேர் மாண்டு மடிந்தனர். கி. பி. ஆயிரத்தெண் [illegible] ஒன்று மே மாதம் இருபத்து மூன்றும் தேதி (23—5—1801) பகல் முழுவதும் கொடும் போர் நடந் [illegible] பிரங்கிக் குண்டுகள் கடுவேகமாய் வந்து பாய்ந்து [illegible] கோட்டைகளின் மதில்கள் உடைந்துபோயின. [illegible] மாட மாளிகைகள் பலவும் தகர்ந்தன. அரண் [illegible] போலும் பாஞ்சை வீரர்கள் முரண் அழியா [illegible] மூண்டு போராடினர். முன் எச்சரிக்கையாய் நகரம் [illegible] நிலவறைகள் அமைத்திருந்தனர். அந்தக் [illegible] களில் பதுங்கியிருந்து கொண்டு உள்ளே ஏறி [illegible] வெள்ளையர் சேனைகளை வேல்களால் குத்தி [illegible] தினர்; வாள்களால் வெட்டி மாய்த்தனர். வெடிகள் [illegible] சிப்பாய்கள் யாவரும் அடியோடு செத்து ஒழிந் [illegible] யால் சேனத் தலைவன் சித்தம் கலங்கினன்: "இந்த இறுதிப் படையால் வெல்லமுடியவில்லையானால் [illegible] சை மன்னனை சமாதானம் செய்து கொள்ள [illegible] ம். கும்பினியாருக்கு அடங்கி நடப்பதாக ஒரு [illegible] உறுதியை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டு [illegible] நிபந்தனைகள் ஒன்றும் கடுமையாய் விதிக்காமல் [illegible] இணக்கி வருக" என்று கும்பினி அதிபதிகள் [illegible] விடுத்திருந்தனர் ஆதலால் அந்த வகையில் [illegible] பதி உளம் இறங்கி ஒப்பந்தம் செய்ய ஆலோசனை [illegible] கொண்டிருந்தான். உபதளபதிகளோடு கலந்து [illegible] சீமைத்துரை ஊமைத்துரையுடன் உறவுற சேர்ந்

தான். அந்த நிலையை எட்டப்ப நாயக்கர் அறிந்தார். நெஞ்சம் கலங்கினர். விரைந்து வந்து தளபதியோடு அளவளாவினர். "வெற்றிபெற வுரிய இச் சமையத்தில் நீங்கள் இவ்வாறு விபரீதமாய்ச் சமாதானம் செய்வது நேர்ந்தது கும்பினிக்கும், உங்கள் குலத்துக்கும் கொடிய வசையாம். நிலவறைகளுள் பதுங்கியுள்ள பகைவரை நச்சுப் புகையால் வெளியேற்றி நாசம்செய்துவிடலாம்" என்று யோசனை கூறினர்: "கிச்சுக் குடுக்கைகளைக் கோட்டைக்குள்ளே போடுவது கொடிய பழி: நெடிய பாவம்" என்று முதலில் மறுகிய வெள்ளைத் தளபதியும் கோளன் மூட்டிய தீய கோளுரைகளால் உள்ளம் மாறி உறுதி பூண்டான். நீசமான அந்த நாசப் போராட்டங்களை இந்தப் படலத்தில் பார்க்க நேர்ந்திருக்கின்றோம்.

கிச்சு = நெருப்பு.

மிளகாய் வத்தல்களை இடித்துப் பொடியாக்கி வுமத்தம் சாறு முதலிய மயக்க மருந்துகளைக் கலந்து சுரைக்குடுக்கைகளுள் நிறைத்து நெருப்பைப் பொருத்திக் குறிப்போடு உள்ளே உச்சமாய் எறிந்து செலுத்தி உயிர்களைக் கொல்வதே **கிச்சுக் குடுக்கையின்** செயல்.

3358 **தளபதி தளர்ந்தது.**

இவ்வழி மன்னன் இங்கே இருந்திட இகலு டைந்து
வவ்விய பழியி னோடும் வன்துய ரோடும் போன
தெவ்வுயர் தலைவன் நின்ற சேனையின் துணைவர் சூழ
அவ்வழி இருந்து செய்த அமைவினை இனிமே லாய்வாம்.

3359 **உளம் உளைந்தது.**

பகைமிக எளிய தென்று படுபழி அறியா தோங்கித்
தொகையுற வந்து சூழ்ந்து துணிந்தமர் விளைத்தேம்;
[தெவ்வர்
சிகையினல் என்னச் சீறிச் செருவினில் ஏறத் தேய்ந்து
சுகையுற நின்றேம் என்னு நாணுற நைந்து ளைந்தான்.

1160 பழியை நினைந்தது.

மன்னுற வந்த காலன் ஆதியர் முடிவை எண்ணும்,
மன்னவர் தானம தித்து மாண்புசெய்து ஒளக்கி விட்ட
இன்னிசை நிலையை எண்ணும், இகல்வென்று வருவேன்
[என்று
சொன்னதன் சொல்லை எண்ணும், துன்னிய பழியை
[எண்ணும்.

1161 மறுகி நொந்தது.

மண்டவெம் போர்கள் தோறும் முனைந்துமுன் வெற்றி
[யோடு
நின்றதன் விறலை எண்ணும், வீரர்கள் எல்லாம் தன்னை
ஆண்டகை என்று போற்றும் அமைதியை எண்ணு மிங்கே
மாண்டழி படைய ஞகி மறுகிய நிலையை எண்ணும். (4)

1162 எதிரியை எண்ணியது.

ஆவலைகை எய்த வந்த இடத்தினில் தனக்கு நேர்ந்த
வெவ்விய நிலையை எண்ணி வெய்துயிர்த் துளைந்து
[நின்ற
தெவ்வையர் நிலையை வீரத் திறலினை நகரம் மேய
செவ்விய நிலையை எல்லாம் சிந்தனை செய்து நின்ருன்.

1163 வீரத்தை வியந்தது.

மன்னுறு கோட்டைஎன்று மதித்துமுன் இகழ்ந்தேன்;
[இன்றே
என்னுறு வீரர் தம்மை இரைகொடுத்து இழிந்து
[நின்றேறன்;
அன்னமிய நிலையில் நின்ற திறலினர் பலரைக் கண்டேன்;
அன்னமிய இந்த வீர நயத்தினை எங்கும் காணேன். (6)

1164 மருவலர் மாட்சி.

கோட்டையும் உடைந்தது உள்ளே கொடிநெடு மணிமா
[டங்கள்
ஓட்டையா யிடிந்து வீழ்ந்தங் கூறுபா டுற்ற; உற்றும்
ஈட்டிய வேல்க ளோடு நிரைநிரை நேர்ந்து தெவ்வர்
மாட்டிய திறலின் வீர மாட்சியே மாட்சி யம்மா! (7)

3365 **கவலை யுற்றது.**

எனஅவன் பாஞ்சை வீரர் இயல்பையும் எதிர்ந்து நேரே
முனமவர் முறுக்கி நின்ற முறையையும் மூண்ட போரில்
வனநிலை திரிய வந்த மடங்கல்கள் போல வந்து
தனநிலை திரிய வென்ற தகவையும் நினைந்துகைந்தான்.

3366 **ஏங்கி யிருந்தது.**

இப்படை இன்ன தாயின் இகலுற எதிர்ந்து மேலே
எப்படை கொண்டு வென்றுள் எப்படிச் செல்வதென்ன
வெப்படை உளத்த னாகி வெகுளியும் தளர்வும் நேர்நேர்
ஒப்படைந் தோங்கி நிற்க உள்ளுற ஏங்கி நின்றான். (9)

பாஞ்சையைப் புகழ்ந்தது.

3367 தென்திசைப் பாஞ்சைப் போர்மேல்
சென்றவர் எல்லாம் அங்கே
பொன்றினர் அல்லால் மீண்டு
போந்தவர் ஒருவர் இல்லை;
என்றிசை மிகுந்து நிற்கும்
இயல்பினை யானும் நேரே
இன்றிசைந் தினிது கண்டேன்;
இனிமிசைந் தழுவ தென்னே? (10)

வெல்வது அரிது.

3368 போர்எலாம் கடந்து வென்று
புகழெலாம் அடைந்து வீரப்
பேரெலாம் சுமந்து நின்ற
பெரியவன் ஆன நானே
சீர்எலாம் இழந்து பாஞ்சைச்
செருவினில் திகைத்தேன் என்னும்
யாரினி இவனை வெல்வார்?
என அவன் அயர்ந்து நின்றான். (11)

கும்பினியார் குறித்தது.

1369 இன்னதோர் படையால் வெற்றி
இலதெனின் இகல்ஒ ழிந்து
மன்னவன் உடன்நட் பாகி
மாண்புசெய் துறுக என்று
நன்னய முடனே சங்க
நாயகர் தன்பால் முன்னம்
சொன்னதை எண்ணி அன்ன
சூழ்வையே துணிந்து கொண்டான். (12)

1370 ***நண்புற நாடி யது**

அவ்வழி அவன் துணிந்த அமைவினை அரசன் தன்னைடு
எவ்வழி இசைத்து நட்பை எய்துவ தென்று நேரே
செவ்வியை நோக்கி நின்ருன் சேர்ந்த அந் நிலையிலந்தோ!
வெவ்விய எட்டன் ஒட்டி விரகுடன் விளைபு ரிந்தான்.

1371 **எட்டப்பன் இசைத்தது.**

கேர்ந்தெழு போரில் எங்கும் நேரலர் தம்மை வென்று
சேர்ந்தெழு புகழி னைடும் செயத்தொடும் சிறந்துவந்தீர்!
சார்ந்தஇப் பகைமேல் வந்து தாழ்ந்துநீர் போவீர் ஆகில்
ஆர்ந்தபுன் பழியாம் யாரும் அவமதித் திகழ்வர்எங்கும்.

1372 **வசை நேரும்.**

அரணுடன் நின்ற கோட்டை அழிந்தது; படைகள்
[எல்லாம்

---

*தலைமைச் சேனதிபதி நேர்ந்துள்ள நிலைமைகளை எல்லாம் நினைந்து சிந்தித்தான். கும்பினி அதிபதிகள் குறித்துவிடுத்த படி மைமத்துரையோடு பகைமையை நீக்கி நட்பினை ஆக்கிக் கொள்ள நயந்து நின்ருன்: உபதளபதிகளுடன் கலந்து ஆலோசித்தான். உறுதி குன்றி உள்ளம் திரிந்து வெள்ளேத் தலைவன் அவ்வாறு சமாதானம் செய்துகொள்ளத் துணிந்து நின்ற பொழுது எட்டப்ப நாயக்கர் இடையே புகுந்து கடை புரிய நேர்ந்தார்; சதி செய்யத் தூண்டினர்; அந்த அதிபாதகச் செயலை அயலே அறிய வருகின்ருரும்.

முரணுடன் மூண்டு வந்து முனைந்ததிர்ந்து ஒழிந்து
[போகா
இரணவெம் புண்ணேடுள்ளே இருப்பவர் சிலரே: இந்தத்
தருணம்நீர் இழந்து விட்டால் சார்ந்திடும் வசைமேல்
[என்றும்.

3373 **பழி சேரும்.**

இசையுடன் வாழும் வெள்ளை இனத்தவ ரான நீங்கள்
அசைவிலா மனத்த ராகி யாண்டுமே வெற்றி கண்டு
திசைதிசை இசைகள் ஏறச் செழித்தெங்கும் சிறந்துள்
[ளீர்கள்
பசையறப் பகையை வெல்லா தொழியினே பழியா
[மன்றோ.

3374 **விளிவு விளையும்.**

போரியல் நிலைகள் எல்லாம் பொருவறப் புரிந்துநின்ற
ஊரியல் நிலைத லைத்தே உறுதிகள் பலவும் செய்து
காரியம் கைமேல் எய்தும் காலத்தே கருத்து மாறி
வீரியம் இன்றி மீளல் வீண்பழி விளிவும் ஆமே. (17)

3375 **பகைவர் நிலை.**

ஒன்னலன் படைகள் உள்ளே ஊக்கிய வேல்களோடு
மன்னிநின் றங்கு நம்மை மருவஓட் டாமல் ஏறிச்
சின்னபின் னங்கள் செய்து சீறுகின் றூர்கள் என்றூல்
அன்னவர் நிலையை ஓர்ந்தே அருஞ்சமர் ஆற்றவேண்டும்.

3376 **நிலவறை வலி.**

பலமுறை வந்து குண்டு படுகின்ற நிலையைக் கண்டு
புலமுடன் ஓர்ந்து வேந்தன் பொருபடை வீரர்எல்லாம்
நிலவறை செய்து நின்றூர்; நேரலர் நேரும் போது அத்
தலமிருந் தெழுந்து சீறித் தாக்குகின் றூர்கள் ஊக்கி.

3377 **வெல்ல வழி.**

அந்நில வறையில் நின்றும் அவர்களை வெளி எழுப்பின்
வெந்நிடு நிலையர் ஆகி விளிகுவர்; வெற்றி யோடே

வரைப்பும் எய்தி, இரும்புகழ் எய்தி, என்றும்
திருவினோடு மகிழ்ந்துநீர் வாழ்விர் என்றான்.

திகைத்தது.

இவ்வகை எட்டன் உள்ள
இயல்பினை எடுத்தி சைக்கத்
தெவ்வுயர் தலைவன் உள்ளம்
திரிந்தனன்; செயமேற் கொண்டு
வெல்லிய புகழும் கொள்ளும்
வழிவந்த தென மகிழ்ந்தான்;
எவ்வழி வெளி அன் னரை
எழுப்புவது? எனத்தி கைத்தான். (21)

*** ங்சுப் புகை.**

திகைத்தவன் நிற்கும் போது
சேர்ந்துநின் றெட்டன் நேரே
திகைத்திதிர் பொருதால் வேறல்
அரிது;வீண் விளிவே யாகும்;
மகைத்துயர் நாபி ஆதி
வன்மருந் தூட்டி உள்ளே
புகைத்துயர் குண்டு பெய்தால்
பொன்றுவர் எனப் புகன்றான். (22)

---

† பட்டப்பன் ஓட்டி நின்று படுசூழ்ச்சியோடு பேசியிருக்கிறார். இந்தப் பாஞ்சாலங்குறிச்சியானை வெள்ளைக்காரர்கள் வெல்லாமல் போய்விட்டால் தன் பாளையம் பாழாய்ப் போய்விடுமென்று அவர் உள்ளத்தில் ஒரு பெரிய திகில் மூண்டுள்ளது. அந்த உண்மையை அவருடைய வாய்மொழிகள் தெள்ளத்தெளிவாக விளக்கி வருகின்றன. கோள் சொல்லுதல், கொடுஞ் சூழ்ச்சிகள் செய்வதிலும் குடிகேடுகள் புரிவதிலும் விரகோடு பேசுவதிலும் நன்கு பழகி எங்கும் பேர் பெற்றிருக்கின்றார் என்று தெரிகிறது.

* நாபி = பச்சை நாவி. நஞ்சு கலந்த பொருள். நஞ்சுப் பூசிய கிச்சுக் குடுக்கைகளைக் கோட்டைக்குள்ளே போட்டால் நிலவறையில் பதுங்கியுள்ள வீரர்கள் எல்லாரும் ஒல்லையில் வெளியேறி விடுவர்; விடமேயாவரை எளிதே கொன்றுவிடலாம் என்று குறித்துச் சொன்னான்.

3380 * அஞ்சி நின்றான்.

நஞ்சினும் கொடிய தான நாவினுல் நவிற்றும் அந்த
வெஞ்சொல்லைக் கேட்டபோது வெந்திறற் சேனை
[வேந்தன்
நெஞ்சிடை அஞ்சித் தீய நிலையிதென் றிகழ்ந்து நின்றான்
தஞ்சம்வே றில்லை என்று தாழ்ந்தவன் தடுத்துரைத்
[தான்.

3381 † கோளன் மூட்டினான்.

போரினில் வெற்றி கொண்டு புகழுடன் மீள இந்தக்
காரியம் செய்தால் அன்றிக் கதிஅயல் இல்லை மன்னா!
சீரியர் பலர்முன் தத்தம் செயம்குறித் திவ்வா றான
காரியம் பலசெய் துள்ளார்; கருமமே எனக்கரைந்தான்.

3382 ‡கொடுமையில் மூண்டான்.

பற்றலன் தன்னை வென்று படுபுகழ் பற்ற வேண்டின்
உற்றதோர் செயலி தாகும் என்றவன் உரைக்க வுள்ளே
மூற்றிய ஆசை யாலே மூண்டவன் நேர்ந்துகொண்டான்
கொற்றவான் அதனின் அந்தோ! கோளுரை கொடிதே
அம்மா!

3383 நச்சுப்புகை அமைத்தது.

நஞ்சுதோய் புகைகட் கான நவையுறு மருந்தை எல்லாம்
வெஞ்செய லுடையார் கூட்டி விரகுடன் செய்ய லானார்

---

*தீய நஞ்சினும் கொடிய தீய நாவினுல் சொன்ன அந்தக் கொடியவன் சொல்லைக் கேட்டதும் தளபதி உளம் துடித்தான்; அது கொடிய பாபம்; நெடிய பழி என்று மறுத்தான்.

†இந்தச் சதி வஞ்சம் செய்தால் அன்றிப் பகைவனை வெல்ல முடியாது; மூண்ட பகைவனை அடியோடு தொலைக்க வேண்டுமானுல் இந்தக் குடிகேட்டைச் செய்தே தீரவேண்டும் என்று எட்டன் கடுமையா மீண்டும் வற்புறுத்தினன்.

‡முதலில் அதி பாதகம் என்று உள்ளம் பதைத்த வெள்ளத் தளபதி வெற்றி பெறுதற்கு வேறு வழியில்லை என்று தெரியவே அந்தக் கொடிய நீசச் செயலுக்கு இசைந்தான்.

[illegible]நாய் கனலின் ஆசை பற்றிய நெஞ்சன் ஆகி
[illegible]ா வளர்த்து வந்தான் வலியுடன் ஊக்கி நின்றான்

[illegible] மயக்க மருந்து கலந்தது.

[illegible]லாம் மறைத்து மிக்க மயக்கினை அளிக்க வல்ல
[illegible]டும் திகைப்பு வர்க்கம் அனைத்தையும் கூட்டி
[மேலே
[illegible]யும்வல் ஊமத்தங்காய்ப் புன்கொடுஞ்சாறும்
[சேர்த்து
[illegible] சமைக்க லானர் ததியறிந் துடைந்து சார.

[illegible] கொடுமை கூர்ந்தது.

[illegible]தவல் உருண்டை தம்மைச் சார்கரு மருந்திடித்தே
[illegible]தடர் பீரங்கிக்குள் அடைத்தனர் அமையம்
[ஆய்ந்தார்
[illegible]தழு முன்னம் வெற்றி எய்திடும் எனக்
[களித்தார்
[illegible]தழு பாஞ்சைக் குள்ளே செலுத்திடச் செறுத்
[தமர்ந்தார்.

[illegible] கோளன் உவந்தது.

[illegible]முடிந்த தென்று விழைந்துநின் றெட்டனன் றும்
[illegible]மகிழ்ந்து கொண்டான்; மாற்றலன் அற்றம்
[நோக்கிக்
[illegible] கடிய வெய்ய கரும்புகைக் குண்டை யுள்ளே
[illegible]ற விடுமின் என்றான் நேரம்நேர் குறித்து நின்றார்.

[illegible] இரவி மறைந்தது.

[illegible]டும் பாவம்ஆன அவந்தனைப் புரிய ஆய்ந்து
[illegible]யாடு சமயம் நோக்கிச் சார்ந்தவர் தருக்கி நின்றார்;
[illegible]ன்று நேரா தந்தோ! இதுசெய்ய நேர்ந்தார்என் றும்
[illegible]ன் காண நாணிக் கரந்துமேல் பால் மறைந்தான்.

[illegible] இருள் சூழ்ந்தது.

[illegible]ா மிருந்து தீய மாயவல் வினைகள் ஆற்றும்
[illegible]கம் உடையார்க் குற்ற நெடும்பழி போலநீண்டு

துஞ்சிருள் சூழ்ந்த தெங்கும் சூழ்ச்சியால் துணிந்து
[நின் ற
வெஞ்செய லாளர் வேளை வாய்த்ததென் றுளம்
[விழைந்தார்.

3389 **இகலர் இருந்தது.**

குண்டுகள் ஒலியா வண்ணம் கூடமாய்க் குவிந்தெழுந் து
திண்டிறல் நகரின் உள்ளே சென்றுவீழ்ந் திடங்கள்
[தோறும்
மண்டிவெம் புகைகள் மூளு மாறுநேர் குறிகள் ஓர்ந்து
கண்டிறந் தயரா துள்ளம் களித்தனர் கதித்திருந்தார்.

3390 **இருந்த இருப்பு.**

மாற்றலர் தீய மாய வஞ்சனை புரிய ஓர்ந்து
சீற்றமும் சினமும் தீர்ந்து சீமையர் ஊமை யாகி
ஆற்றல்கள் அழிந்தார் போல அழிமதி யுடனமர்ந்து
வேற்றுமை தெரியா வண்ணம் விரகுடன் விரிந்து
நின்றார்.

3391 **கொலை பல குறித்தனர்.**

நின்ற அந்நிலை நெடும்பழி கடும்பகை நிறைந்தே
ஒன்றி நின்றன: ஊருடன் உயிரெலாம் அழிய
அன்று நஞ்சினும் தீயவன் நெஞ்சினர் ஆய்ந்து
கொன்றுவெங்கொலை பலபல குறித்தனர் கூர்ந்தே.

3392 **நாசமே நாடினர்.**

நீச மானபுன் னெஞ்சரும் நினைந்திடா நெடிய
நாச மானதை நாடியே நண்ணலர் நண்ணி
ஓசை யின்றியே உறைந்தனர் உறுவதை ஓர்ந்தே
ஆசை யானவெம் பிசாசுகள் அடர்ந்தென அடைந்தே.

3393 **நீசமே நினைந்தார்.**

நெடிய வன்பகை நெஞ்சிடை நீளிரே நீசக்
கொடிய பாதகச் செயல்களைச் செய்திடக் கூசார்:
படியில் வெம்பழி பாவங்கள் படர்வன பாரார்:
கடிய தீயராய் முடிவர்என் பதையவர் கணித்தார். (36)

பாஞ்சையர் அறியார்.

3394 பாஞ்சை மாநகர் படிந்துள யாவரும் பாழாய்
வாஞ்செய் தீமையில் நாசமே ஆவர்என் றவர்தாம்
வாஞ்சை யோடவண் இருந்தனர்: வருவன அறியார்
ஆஞ்சை மன்னவன் அடலினை அறிந்திவர் அமர்ந்தார்.

மருவலரின் மாயத் தீமைகள்

3395 தீய குண்டுகள் சொரிகின்ற பீரங்கி தெறித்தும்
காயும் தீவெடி கணக்கின்றிக் கடுத்தவர் சுட்டும்
ஆய ஓர்பயன் அடைந்திலம் என அவர் அடர்ந்து
மாயத் தீமைகள் செய்திட மனந்துணிந் திருந்தார். (38)

இருவகை நிலை.

3396 வஞ்ச நெஞ்சராய் வழிவழி பழிவளர் புலையை
அஞ்சி டாமலே செய அவர் அகந்துணிந் தமர்ந்தார்;
எஞ்சி யுள்ளதன் படைகளை நிலைகளை எண்ணி
நெஞ்சு ளைந்துளே பாஞ்சைமன் நேர்ந்தெதிர் நின்றான்.

உறுவதை ஓர்கிலன்.

3397 மருவ தோர்கிலன்; வந்துள பகைவர்கள் வசையாய்க்
கருமம் சூழ்ந்துள காரியம் யாதுமே கருதான்;
மருமம் மாகவே மருவலர் மருவியங் கிருப்ப
முருமை யாயிவன் ஓர்ந்துளைந் துசாவியிங் கிருந்தான்.

ஊமைத்துரை நிலை.

3398 வீரமா நகர்மேல் மூண்டு
வெய்யபோர் விளைத்தார்; பின்பு
கோரமாய்ச் சூழ்ந்து தீய
கொடும்பழி செய்ய நேர்ந்தே
ஓரமா யிருந்தார்; அந்த
உளவொன் றும் உணரா மன்னன்
தீரமாய் அரண் சிதைந்த
செயலினை நினைந்து நொந்தான். (41)

கோயிலை அடைந்தது.

3399 பகைவர்கள் திரண்டு வந்து படுதுயர் புரிந்த யாவும்

வகையுட னறிந்து வெற்றி வருவதும் அரிதென் றோர்ந்து
தகையுற இரவு சாமம் தணிந்தபின் தனியே தேவி
நகையுறு கோயில் நண்ணி நாடியே தொழுது நின்றாள்.

3400 தேவியைத் தொழுதது.

வீரமா தேவி யேவுன் மெய்யரு ளுடனே கூடி
வாரமாய் ஈண்டு வந்து வளமுயர் அரச டைந்து
தீரமாய் இசைகள் எங்கும் திசைதொறும் பரவிஓங்கப்
பாரமாய் உலகம் காத்துப் பலமுற வாழ்ந்து வந்தோம்.

கருதி நின்றது.

3401 மூண்டவெம் பகையால் முன்பு
முதல்வனை இழந்தேன்: பின்பு
நீண்டவெஞ் சிறை புகுந்து
நெடுந்துயர் அடைந்து நொந்தேன்;
மீண்டிவண் வந்தேன் மேலாம்
அரணையும் விரைந்து செய்தேன்;
தாண்டியே பகைவர் ஈண்டித்
தருக்குடன் பொருதொ ழிந்தார். (44)

கருதலர் கண்டது.

3402 வெள்ளையர் படைகள் எல்லாம்
வெள்ளமாய் விரைந்து வந்து
கொள்ளைய ராகித் தீய
கொடியபோர் குறித்துச் செய்தார்:
துள்ளியே மாண்டார்: மீண்டும்
தொகைதொகை யாக வந்தும்
எள்ளள வேனும் வெற்றி
எய்திலர் இறந்தே போனார். (45)

3403 ஐந்தாவது முறை வந்த படை.

ஐந்தெனும் முறையால் இங்கே அடலுடன் கூடிவந்தார்
வெந்துயர் கொடிதாய்ச் செய்தும் வெல்லுதல் அரியராகி
நொந்தயல் இருந்தார் வெய்ய நோயெலாம் செய்யலானீ
சிந்தையோ டுள்ளார் தீயர் செயல் ஒன்றும் தெரியேன்

[அம்மா!

1404 **சிந்தனை புரிந்தது.**

இன்றெடும் இந்த ஆட்சி
முடியும்என் றெண்ணு கின்றேன்
வென்றுநான் கொண்ட வெற்றி
வெறுமையாய் வீயு மென்றே
கன்றிஎன் உள்ளம் கண்ட
கடுந்துயர் கழற வந்தேன்
என்றிறை மொழிந்தான் கண்ணீர்
இமைகடந் தெழுந்த தன்றே. (47)

அழாதவன் அழுதது.

1405 என்றுமே அழாத கண்கள்
இரவிடை இருபத் தைந்தாய்
ஒன்றிய கடிகைப் போதில்
உளம்மிக உருகிக் கண்கள்
துன்றிநேர் சொரிந்த எல்லாம்
தோன்றலின் மார்பில் தோய்ந்த
அன்றவன் அழுத தேனே?
யாரதை அறிய லாவார்? (48)

1406 * **கண்ணீர் சொரிந்தான்.**

மலையெலாம் கலங்கி னலும் மறிகடல் கலங்கி னலும்
நிலையென நின்ற இந்த நெடுநிலம் கலங்கி னலும்
நிலையென நேர்ந்த யாவும் தனித்தனி கலங்கி னலும்
நிலைகலங் காதான் அன்று நெடுங்கணீர் சொரிந்து
[நின்றான்.

கண்ணீர் காட்டியது.

1407 ஒருதுளி கண்ணீர் உள்ளத்
துறுதுயர் வெள்ளம் எல்லாம்
தெரிதர வெளியே காட்டும்
தெளிவிலை ஊமை வேந்தன்

---

* மே மாதம் இருபத்து மூன்றும் தேதி (23—5—1801) இரவு இருபத்தைந்து நாழிகையில் தமது குலதெய்வம் ஆகிய ஜகதேவி கோவிலுக்குத் தனியே போய் ஊமைத் துரை தொழுது துதித்து உள்ளம் உருகி மறுகி அழுதுள்ளார்.

கருவிழி சொரிந்த நீர்தான்
கருதிநொந்து அன்னென் உற்ற
பருவரல் யாவும் யாரும்
பார்த்திடப் பகர்ந்த தன்றே. (50)

அழுதது ஏன்?

3408 தன்அரசு அழிந்த தென்று
தளர்ந்ததோ? தனது வாழ்வின்
இன்னலை எண்ணி உள்ளம்
இனைந்ததோ? இனம் இசைந்து
துன்னிய அழிவை ஓர்ந்து
சோர்ந்தனோ? இந்நாடு அன்றோ!
அன்னியர் வசமா யிற்றென்று
அயர்ந்தனோ? அழுத தம்மா! (51)

மீண்டு வந்தது.

3409 தேவியைத் தொழுது போற்றித்
திருவுளம் தெரியான் ஆகி
ஓவியம் என்ன நின்றான்
உணர்வுடன் மீண்டு வந்தான்:
கோவியல் முறைகள் எல்லாம்
குறைவறச் செய்தான்: கூர்ந்து
மேவிய பகைவர் செய்யும்
விரகினை மறந்தி ருந்தான். (52)

மறுநாள் மூண்டது.

3410 மறுதினம் வந்தது மருவ லார்படை
முறுகிமூண் டெழுந்தது முட்டி நொந்தது
உறுதியொன் றுணர்ந்தில துள்ளம் மாறியே
இறுதியின் றிரவென எண்ணி நின்றனர். (53)

பாஞ்சையர் நிலை.

3411 அங்கவர் இத்திறம் அமைந்து நின்றதை
இங்கிவர் யாதொன் றும் எதிர் அறிந்திலர்;
பொங்கிய வெற்றிகைப் போந்த தென்றுளம்
தங்கிய மகிழ்ச்சியால் தழைத்தி ருந்தனர். (54)

பகை வகை அறிந்திலர்.

1412 அளவரு படைகளை இழந்த யர்ந்துமே
உளமலி துயரமோடு ஒழிந்து போயினன்;
தளபதி இனிப்படை சார்தல் இன்றென
இளநகை புரிந்திவர் இருந்து வந்தனர். (55)

திறலுடன் இருந்தனர்.

1413 வெள்ளையர் வெம்படை வெகுண்டெழுந்துமேல்
வெள்ளமாய் வந்தது விளிந்து போயதென்று
உள்ளவர் அனைவரும் உவந்து நின்றனர்
தள்ளரும் திறலுடன் சார்ந்தி ருந்தனர். (56)

ஊமைமன் ஓர்ந்தது.

1414 உற்றதன் கிளையொடும் உரிய பல்படை
பற்றலர் உடன்றெதிர் படுகளத்தினில்
இற்றெழிந் துள்ளதை எண்ணி ஏங்கினும்
வெற்றியை நினைந்துகோன் வியந்த மர்ந்தனன்.

உள்ளி நொந்தது.

1415 அழிந்துள அரண்களை ஆய்ந்து ளைந்தனன்
பொழிந்துள குண்டெதிர் புகுந்து போரினில்
கழிந்துள படைகளைக் கணித்துக் கண்ணெதிர்
ஒழிந்துள யாவையும் உள்ளி நொந்தனன். (58)

துயில் உற்றது.

1416 படுகளம் பட்டுள்ள பாட்டை எண்ணியே
தொடுகழல் மன்னவன் துயரம் எய்தினும்
முடிவறு வெம்பகை முடிந்த தென்றுகண்
படுதுயில் உற்றனன் படுவ தெண்ணிலான். (59)

குண்டுகள் வீசினர்.

1417 இருளினில் இங்கிவர் இருக்க அங்குமுன்
அருளற நின்றவர் ஆய்ந்து குண்டுகள்
மருளுறப் பெய்தனர் மண்டி மாநகர்த்
தெருவிடை எங்கணும் செறிந்து வீழ்ந்தன. (60)

நகருள் வீழ்ந்தன.

3418 ஒலியுரு வகைளழுந்து ஓங்கி மேல்வந்து
நவிவுற லின்றியே நகருள் வீழ்ந்தது
கலிஎன வெடித்தன கடிய குண்டுகள்
வலியவெம் புகைளங்கும் மண்டி ஏறின. (61)

புகைகள் மண்டின.

3419 குண்டுகள் வீழவும் கொடிய வெம்புகை
மண்டிமேல் சூழவும் மறுகி மாநகர்
கண்டுயில் அகன்றது கடிதெ ழுந்தது
எண்டிசை எங்குமே இனைந்து நின்றது. (62)

கூடிக் கூவினர்.

3420 உற்றதை இன்னதென் றுணர கிற்றிலர்;
பற்றிய தீப்புகை படரப் பாடழிந்து
இற்றது நகரம்என்று எண்ணி ஓடியே
கொற்றவன் கோயிலைக் கூடிக் கூவினர். (63)

இனைந்து நின்ருன்.

3421 இன்னது செய்வதென்று ஏதும் தேர்கிலாது
அன்னகர் உள்ளவர் அலமந்து ஏங்கவும்
மன்னனும் எழுந்தனன் மறுகி வந்தனன்
என்னையோ! இதுவென் இனைந்து நின்றனன்.

நீசச் சதி என நினைந்தது.

3422 நின்றவன் நேரலர் நேர்ந்து செய்ததோர்
வன்றிறல் சதிஎன மனங்கொண் டோடியே
தன்றிறல் பரிமிசைத் தாவி ஏறினன்
வென்றிவாள் எடுத்தனன் விரைந்து வந்தனன்.

நாசம் என வந்தது.

3423 மற்றுள வீரரும் மன்னன் பின்னுறக்
கொற்றவேற் படையுடன் கொதித்து வந்தனர்
செற்றவெம் புகையினுல் திகைத்து நின்றனர்
மூற்றவும் மயங்கினர் முடிவென் றுன்னினர்.

மக்கள் மறுகி மயங்கியது.

1424 அந்தப் புரமும் அயலும் புறநகரும்
எந்தப் புறமும் இரைந்தெழுந்து கூவியே
சிந்திப் புறம்போகத் தேம்பினர் தேம்பினவர்
முந்தப் புகையால் முழுதும் மயங்கினர். (67)

கலங்கித் தவித்தது.

1425 கூவி அலைந்து குலைந்து நிலைகலங்கி
வாவி மறுகும் மலர்ச்சோலை யின்மருங்கும்
பாவில் உறுகுழல்போல் பாடாகப் பாடழிந்தே
ஓவிலாது ஓடி உளைந்தார் உளமறுகி. (68)

குலைந்து துடித்தது.

1426 மாடங்கள் தோறும் மதிமுகத்து மங்கையர்கள்
பாடங்கள் ஓதிப் பயின்றிருந்தார்; பட்டபுகை
மிடைங்கும் மண்டி விரையவே வெய்துயிர்த்துக்
கூடங்கள் வந்து குலைந்துமறு கேறினர். (69)

கொடிய அவதி.

1427 நின்று தவித்து நிலைதெரிந்து நேர்முகமாய்
ஒன்றும் தெரியாமல் ஊர்எங்கும் உட்கலங்கி
கன்றி அலமந்து கால்ஓடிக் கையற்றே
லுன்றவர்கள் பட்ட அவதிநிலை யார் அறிவார்?

* நச்சுப் புகையின் நாசம்.

1428 நிச்சுக் குடுக்கை கிளர்ந்து விழஎழுந்த
ச்சுப் புகையால் நகரம் நிலைகுலையக்
கச்சுக் கடங்காக் கனதனத்து மங்கையர்கள்
ச்சைத் தளிர்மேனி பாடழிய வீடகன்றார். (71)

---

*மயக்க மருந்துகள் கலந்த சுரக்குடுக்கைகளை நீரங்கிக் [illegible] பிணைந்து கோட்டைக்குள் வீசியதால் எங்கும் விஷப்புகைகள் பொங்கி எழுந்தன. பொல்லாத புகையால் எல்லாரும் நிலைகுலைந்து பதைத்துத் துடித்தனர். [illegible] நாழிகைகள் யாண்டும் மூண்டு நீண்டன. கிச்சு = விதைநூற்பு.

3429 **ஏங்கி மயங்கினர்.**

பூங்கொம் பனையார் புகைஅடரப் பொய்த்துயில்கண்
நீங்கி எழுந்தார் நிலைதெரியார் நீள்தெருவை
ஏங்கி அடைந்தார் இடந்தெரியாது உள்மூச்சு
வாங்கி விழுந்து மயங்கினர் மாடெல்லாம். (72)

3430 **துன்பங்கள் ஓங்கின.**

பொன்புனைந்த பொம்மற் புணர்முலையார் தாம்மணந்த
அன்பரொடு மேவி அரமியங்கள் தோறமர்ந்தே
இன்பமே துய்த்தங் கினிதிருந்தார்: அன்றுகொடும்
துன்பம் தொடரத் துடித்துவெளி ஏறினர். (73)

3431 **துயரமாய் வெளி ஏறினர்.**

மேன்மாடம் விட்டு வெளியில்வரா மின்அனையார்
நூன்மாடம் விட்டு நொசியும் இடைநுடங்கக்
கான்மாடம் விட்டுக் கனகமணி நூபுரங்கள்
பான்மாடு தெற்றப் பரிந்துவெளி ஏறிவந்தார். (74)

வாடி அலமந்தார்.

3432 ஊடி உவந்தங்கு உருகி உடன்கலந்து
கூடி யிருந்தார் கொழுநர் குலைந்தோட
ஓடி மறுகி உடல்ஒசிந்தார் ஒண்ணகையார்
வாடி மயங்கி வதங்கி அலமந்தார். (75)

3433 **அல்லல்கள் உற்றனர்.**

அந்தோ துயர்என்று அலமருவார்: கைக்குழந்தை
இந்தா பிடி!என்று இடைதருவார்: இக்கொடுமை
முந்தோடிச் செய்தார் முதுபகைவர்: நாமிங்கே
வெந்தோட நேர்ந்ததே! என்று விரைவுற்றார். (76)

3434 * **மாந்தரோடு வேந்தனும் மறுகியது.**

இவ்வகை நகர மாந்தர் இன்னல்மீக் கூர்ந்து நொந்து
செய்வகை தெரியாது ஏங்கித்திரிதரு காலை மன்னன்

---

* தீய நச்சுப் புகை நகருள் மண்டி வர எங்கும் மக்கள் மறுகி மயங்கி மிக்க துயரங்கள் அடைந்தனர். ஊமைத்துரை தெற்குக் கோட்டை வாசலை நெருங்கி நேரே நோக்கினர்.

தேவர்கள் செய்த வஞ்சச் செயலெனச் சீறி ஏறி
வேல்வலி யோடு தெற்கு வாசலை விரைந்தடைந்தான்.

14 15 மன்னன் கண்டது.

அடையவும் படைகள் அங்கே
அடைவுடன் வளைந்து சுற்றி
இடைவிடாது எதிர்ந்து நிற்கும்
இயல்பினை உள்ளி ருந்தே
நடையறத் தெரிந்து கொண்டு
தன்னுளம் கொதித்தான்; என்னே
கடைபடு வஞ்சம்! என்று
காய்ந்துடன் மீள லானான். (78)

14 16 மறுகி நொந்தது.

தீயெலாம் புகையை உள்ளே செலுத்திமுன் சேனை
[வேந்தன்
மாயைதன் தானை தன்னை வேறுவேறு அணி வகுத்து
வாயில்கள் தோறும் வைத்து வருபவர்ச் சுட்டுத் தள்ளி
மாயுறச் செய்மின்! என்று மாறுடன் குறித்து வைத்
[தான்.

14 17 உள்ளம் துணிந்தது.

வடக்கொடு தெற்கு மேற்கு
மருவிய கிழக்கும் எங்கும்
தொடுத்தவெம் படைக ளோடு
துன்னலர் சூழ்ந்து துன்னிக்
கடுத்தடர்ந்து உருத்து நிற்கும்
கணக்கினைக் கண்டு மன்னன்
மடுத்துவாட் கிரைசெய் தேக
மனத்திடைத் துணிந்து கொண்டான். (80)

14 18 ஊக்கி எழுந்தது.

ஆயிரத்துடன் தொடர்ந்து இரண்டா யிரத்தறு நூறு வீரர்
ஏயின நியமங் கிருந்தார் எல்லாம் ஒருமுக மாய்த்திரண்டு
வேயன நிவேல் வேந்தற் சூழ்ந்து விரைந்துடன்வெகுண்டு
[எழுந்தார்
ஆயிரநிறல் பரியைத் தட்டி மன்னவன் கிழக்கு வந்தான்.

3439 **பகைவர் கடுத்துச் சுட்டார்.**

வந்தவன் வளைந்து நின்ற மாற்றலர் நிறைமேல் மண்டி
முந்துறப் பாய்ந்தான்; வீரர் முழுவதும் தொடர்ந்து
[பாய்ந்தார்
எந்திரப் பொறியின் நின்ற எதிரிகள் கடுத்துச் சுட்டும்
கொந்துகொந்தாகக் குத்திக்கொன்றனர்கொடுமையாலே.

பாஞ்சையர் துடித்து மாண்டார்.

3440 துயிலிடை அயர்ந்து தூமத்
தெர்டர்பினுல் உயங்கி நேர்ந்த
மயலினுல் மறுகி நின்ற
மன்னவன் வீரர் அந்தோ!
செயலறி யாது பட்டார்;
தெவ்வர்கள் செருக்கிச் சீறி
உயலினி இல்லை என்ன
ஒருத்துயிர் குடித்தா ரன்றே. (83)

3441 **கொடிய கொலைகள்.**

ஊர்ந்ததன் பரியும் பட்டே உற்றவல் வீரர் பாதி
நேர்ந்தவெம் போரில் பட்டு நிலையழி நிலையை நோக்கி
ஓர்ந்தகம் கொதித்து மன்னன் ஒளிருவாள் ஊக்கி ஓச்சி
ஆர்ந்தவன் படையை வெட்டி அடுகொலை யாடலுற்றான்.

3442 **கடிது போராடினான்.**

பரிகள்எண் ணூறு பாயப் பாரவேல் வீரர் வீசக்
கரிகள்போல் அடர்ந்து காலாட் படைகளும் கடுத்து மூச
அரிஎனத் திரிந்து பாய்ந்திவ் ஆண்டகை அன்று செய்த
பெரியவன் போரை எங்ஙன் பேசுவ திங்கே அம்மா!

3443 **மயங்கி வீழ்ந்தான்.**

நீண்டபோ தயராது ஏறி நேரல ரோடு நேர்ந்து
மூண்டுபோர் புரிந்து நின்றான் முடிவினில் உடல்கள்
[எங்கும்

[illegible]வேல் வாள்கள் பாய்ந்து கிளர்ந்துவெங் குருதி
[பாய
[illegible]வன்எனமயங்கி மண்ணிடை மறிந்துவீழ்ந்தான்.

1444 இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

[illegible]யம் பிணங்கள் அங்கே அணியணி யாக வீழ்ந்து
[illegible]பிறங்கல் போல விளங்கிட வீரன் உள்ளே
[illegible]கண்ணன் ஆகிச் செய்யவெங் குருதி மெய்யில்
[illegible]பரிதி வட்டம் படிந்தெனப் படுத்தி ருந்தான்.

1445 பொருது போனர்.

[illegible]ஆதலாலே இனம்ஒன்றும் தெரியார் ஆகி
[illegible]மாற்ருன் தப்பி மறைந்தனன் என்ன மீண்டு
[illegible]சேனைவேந்தை உற்றிவண் வளைந்துகொண்டு
[illegible]வீரர்பொன்றிப் போனதும் புகன்றுநின்ருர்.

1446 வென்றதை வியந்தார்.

[illegible]நின்றெழுந்த நெடும்படை தன்னுள் பாதி
[illegible]செய்துவந்தோம் நேர்ந்தமன் மறைந்துபோன
[illegible]ன்றும் தெரிய வில்லை; பொன்றிமுன் போயிரு
[ளே?
[illegible]நின்றுள் ளாளே? தனியினி அறிய வேண்டும்.

1447 வெள்ளையன் உள்ளம் நைந்தது.

[illegible]ன்றென்று எட்டப்பன் தன் இரும்படை சூழ உள்ளம்
[illegible]களிப்பி னுக்கி உரைத்தனன்; உரைக்கச்சேனை
[illegible]தலைவன கேட்டு மகிழ்ந்தனன்; எனினும்
[வெற்றி
[illegible]யன்றில்லை என்ன நெஞ்சுளே நினைந்து நைந்தான்

1448 ஊமையன் பிழைத்தால் நாம் பிழையோம்.

[illegible]ஆன ஊமைப் பாண்டியன் தன்னை விட்டு
[illegible]படையை எல்லாம் மாய்ப்பினும் நமக்குவெற்றி
[illegible]ஒன்றில்லை; அன்னன் உயிர்பிழைத் திருப்பான்
[ஆகில்
[illegible]நம்மை எல்லாம் படுகளம் படுப்பன் என்ருன்.

3449 தளபதி கடுத்து ஏவியது.

ஊமையன் தன்னைப் பற்றுது உள்ளழிந்து ஓடி இங்கே ஊமைகள் ஆகி வந்தீர்! உருத்தினி மறுத்தும் சென்று தாமதம் செய்து நிற்கும் தலத்தினை அறிந்து கொண்டு ஏமுறப் படையை ஏவி எதிரியைப் பிடிமின்! என்றான்.

3450 நகரைக் கொள்ளை செய்ய நாடியது.

என அவன் இயம்பி நின்ற சேனையை இடங்கள்தோறும் மன்னுறக் காத்து நிற்க வரன்முறை பணித்து வந்து தினகரன் உதித்த பின்னர் திருநகர் புகுந்து வெற்றி தனதெனநாட்டிக்கொள்ளத் தன்னுளே தருக்கினின்றான்.

3451 மன்னன் நிலை.

அன்னவன் இவ்வா றங்கே அகம்களித் தமர்ந்து பாஞ்சைத் தொன்னகர் தன்னைப் பற்றத்துணிவுகொண் டிருந்தான் [போரில்
சின்னபின்னங்கள் ஆகிச் சிதைந்தவெம் படையுள் வீழ்ந்த மன்னவன் நிலையை இங்கே மனனுற இனிது காண்பாம்.

3452 * பிணங்களிடையே கிடந்தது.

முழையை விட்டு எழுந்த சிங்கம் முரிந்திடை மறிந்தால் [என்னத்
தழையும்தன் நகரை விட்டுத் தத்தளித் தயல்அடைந்து பிழைமிகப் பகைவர்செய்த பீழையால் பெரிது நொந்து உழைஎலாம் பிணங்கள் சூழ ஊறுபட் டுட்கி டந்தான்.

கிடந்த நிலை.

3453 மெய்எலாம் வேல்கள் பாய்ந்து
வெய்யசெங் குருதி எங்கும்
பெய்யுமா மாரி போலப்
பெருகிநேர் ஓடப் பேசாது

---

*தான் தங்கியிருந்த மலைக்குகையை விட்டு வெளி ஏறிய சிங்க ஏறுபோல் பாஞ்சைக் கோட்டையை விட்டுப் பரிதாபமாய் வெளிப்பட்டுப் பகைவரோடு போராடி அடிபட்டுப் பிணக்குவியல் இடையே மன்னன் மயங்கிக் கிடந்தான்.

எய்எனக் கிடந்தான் அந்தோ!
எறுழ்வலிப் புலிப்போத்து ஒன்று
மொய்எலாம் அடங்கி யுற்ற
முறைமைபோல் மூரி மன்னன். (96)

3454 **இரவு பத்து நாழிகை.**

அங்கணம் கிடக்குங் காலை ஆதவன் மறைந்து பத்து
தங்கிய கன்னற் போதில் சார்ந்தொரு தெரிவைவந்து
பொங்கிய பிணங்கள் தம்மைப் புரட்டியுட் பார்த்துப்
[பார்த்து
மங்கிய மனத்தள் ஆகி மறுகினள் உருகி நாடி. (97)

3455 **முத்தம்மாள் வந்தது.**

முத்தம்மாள் என்னும் பேராள் முரணுறு மறக்கு லத்தாள்
முத்தமன் வயிற்றில் வந்த ஒருமகன் அமரில் அன்று
செத்தனன் என்று கேட்டுத் திகிலடைந்து ஓடி வந்து
தத்தளித் துளைந்து தேடித் தவித்தனள் சமர்க்களத்தில்.

3456 **சிவ சங்கு.**

அங்கவள் வயிற்றில் வந்த ஆண்டகை சிவசங்கு
[என்னும்
சிங்கம் நேரலரை நேர்ந்து செருவழித் துயிர்கு டித்துப்
பொங்கிய வேல்கள் மார்பில் புக்கதால் புலன்ஒடுங்கி
மங்கிய உயிரன் ஆகி மண்ணிடைக் கிடந்தான் அங்கே.

3457 *** தாய் கண்டது.**

ஆவிதான் புறத்தே தோ? அன்றி அகத்ததே தோ? எனக்கிடந்து
போவுறு நிலையி லுள்ள புதல்வனைப் பெற்ற தாய்கண்டு
ஓவென அலறி அள்ளி ஒண்கவான் வைத்துள் ஏங்க
ஆவலோடு அவளை நோக்கி அம்மகன் உரைக்கலுற்றான்:

---

96. உடல் எல்லாம் வேல்கள் பாய்ந்து உதிரம் சோர ஒரு புலிப்போத்து வலியிழந்து கிடந்ததுபோல் ஊமை மன்னன் உணர்வழிந்து கிடந்தான். எய்=முள்ளம் பன்றி. படைக் கலன்கள் மெய்யில் ஊடுருவிப் பாய்ந்துள்ளமையால் உயிர் ஒய்ந்து செயலிழந்து துயருழந்து கிடந்துள்ளான்.
மொய்=வலிமை. மூரி=பெருமை; வீரம்.

*பாஞ்சைப் படைவீரர்கள் பலர் மாண்டு போயினர்.

கோட்டை உடைந்த பின் ஊமைத்துரையோடு தொடர்ந்து வெளி ஏறினவர்களுள் ஆயிரத்தறு பேர் மாண்டு போயினர். அவருள் **சிவசங்கு** என்பவன் ஒருவன்; மறவர் மரபினன்; சிறந்த போர்வீரன்: உயிர் ஊசலாடிக் கிடந்தான்; அவனைப் பெற்றதாயான **முத்தம்மாள்** என்பவள் இரவு பத்து மணிக்குப் பிணங்கள் குவிந்து கிடந்த இடத்துக்கு வந்தாள்; தன் மகனைத் தேடினுள்; உதிரச் சேற்றிடையே கண்டாள்; அள்ளி எடுத்தாள்; அலறி அழுதாள்; அந்த அன்னையை நோக்கி அவ்வீர மகன் பரிவோடு சொன்ன விழுமிய உரைகளை அயலே காண வருகிறோம்.

*** வீரமகன் விளம்பியது.**

3458 அன்னையே! என்ன எண்ணல்;
அங்கதோ கிடக்கும் நந்தம்
மன்னனைப் பாது காத்து
மனையிடைக் கொடுபோய் ஆற்றி
இன்னுயிர்க்கு இனிமை செய்க!
என்னுயிர்க் கிரங்கல்! என்று
தன்னுயிர் நீத்தான் அந்தோ!
தாயும்அத் தகவே செய்தாள். (101)

3459 **மரண வேதனையிலும் அன்பு.**

கரணம்யா வையும் கலங்கிக் கடுந்துயர் அடையா நின்ற
மரணவே தனையி லும்தன் மன்னன்பால் மனம் செலுத்தி
இரணங்கள் ஆற்று கென்ன இரந்துயிர்இறந்த அந்த
இரணவீ ரன்றன் அன்பை எங்ஙனம் புகழ்வேன் அம்மா!

3460 **தாயும் சேயும்**

பெற்றதாய் மகன்இறந்த பெருந்துயர் உயிரைவாட்ட
உற்றஒண் கண்ணீர் ஆறுய் ஓடவுள் உருகி நின்ற
மற்றவள் அந்தச் சேயின் வாய்மொழிப் படியே நாடி
வெற்றிவேல் வேந்தன் பக்கல் விரைந்தனள் விழைந்து
[வந்தாள்.

---

*இந்த வீரமகனுடைய நீர்மை சீர்மைகளை நினைந்து உணர்பவர் எவரும் நெஞ்சம் கரைந்து உருகி மறுகுவர்.

1461 அரசு கிடந்த அவலம்.

ஆதியின் வெள்ளத் தூடே கோமகன் குலைந்து சிந்திப்
பொருதொழி வேல்கள் பாய்ந்த புழைகளோ டயர்வுமீறி
மோயிய புலன்கள் மாறி மடித்துவாய் கடித்து மண்ணில்
அரிய யர்ந்ததென்ன அயர்ந்தவண் கிடந்தா னன்றே.

1462 கண்டு எடுத்தது.

காலையைக்கண்டபோதே கருத்தெலாம்கலங்கிமெய்யில்
வாய புயில் ஒடிந்த எல்லாம் வசமுறக் களைந்த கற்றித்
தாயினி னிறு சேர்த்துத் துணிவுடன் எடுத்துக்கொண்டு
வேகமாய் விடியுமுன்னே வீடுவந்து அடைந்தாளம்மா!

1463 கருதிப் போற்றியது.

சுகமாம் பட்டி என்னும் காமரூர் கடிதடைந்து
தொகுதுயில் விடு புக்குச் சுகமுடன் படுக்க வைத்துத்
தகுதாய் வகையில் போற்றிச் சமருறு புண்கட்கெல்
லாம்
மகுதாயம் உறப்புரிந்து பரிந்துபா லித்து வந்தாள். (106)

1464 மன்னன் தெளிந்து மொழிந்தது.

ஆறுயிர் மாய்க்கிடந்த குலமகன் நிலைதெளிந்தே
உறுதுயர் உணர்வு வந்தங் குற்றுள உளவறிந்து
மறுமுகு வீரமாதை மகிழ்வுடன நோக்கி என்னைப்
பெறுதாயாய் நீயே அம்மா! என்றனன் பெரிதும் பேணி.

1465 அன்னை செய்த அருமை.

தன்மகன் இறந்துபட்ட தளர்வையும் மறந்தாள் அந்தப்
பொன்மகன் புகன்ற வாறே பொருகளம் விழுந்த யர்ந்த
மன்மகன் தன்னைத் தூக்கி வந்துயிர் புரந்து வாய்த்த
என்மகன் இவனே என்னு இரங்கினள் இருந்து காத்தாள்.

1466 கவியின் வணக்கம்.

தன்னுயிர்க்கு இரங்கான் ஆகிச் சார்ந்தமன் உயிர்க்கிரங்கி
முன்னுயிர் விடுத்த அந்த முதல்மகன் தனையோ, அன்றி

அன்னவன் தணைப்பயந்த அன்னையை வியப்ப தேதகொல்?
இன்னதென் றறிய கில்லேன் இருவரை †ஏத்து கின்றேன்.

3467 **மறுநாள் நிகழ்ந்தது.**

இங்கிவ்வாறு இறைமகன்தான் இருந்துவர எழில்நகரில்
அங்கவர்தாம் புகுந்துசெய்த அவநிலையை இனி
[அறிவாம்;
கங்குல்போய்க் கழிந்தகலக் கதிரவன்தான் உதித்தவுடன்
பொங்குபடைத் தலைவனுள்ளே புகத்துணிந்து புறப்பட்டான்

3468 **தளபதி துணிந்தது.**

கோனேடே வீரரெலாம் குடிபோனர் ஆனலும்
மானமுறும் வீரர்சிலர் மருவிநிற்பர் எனநினைந்து
வானமுறு திகில்கொண்டு வன்படைகள் எம்மருங்கும்
ஊனமற வரப்பணித்தான் உடைவாளோ டுற்றெழுந்
[தான்.

3469 **பாஞ்சையுள் புகுந்தது.**

புலிமுழையுள் புகநேர்ந்த புதுமைபோல் போர்வீரர்
வலியஅயல் எங்கும்வர மதித்துணைவர் பக்கம்வர
ஒலிகிளர்ந்து முரசுஒங்க உள்ஒங்கி எழுந்தஅவன்
பொலிவுறுதென் வாசல்வழி போதந்தான் போதருங்கால்.

---

†இந்தப் பகுதி யாவும் வியப்பும் உருக்கமும் உடையன. எண்ணி உணர்பவர் எவரும் கண்ணீர் சொரிய நேர்வர். பகைவராய்க் கொல்ல மூண்டு நின்ற வெள்ளைத் தளபதி களும் இந்த நிகழ்ச்சிகளைப் பின்பு தெரிந்து பெரிதும் வியந்து புகழ்ந்துள்ளனர். பாஞ்சைப் போரில் அவர் வெற்றி பெற்ற வரலாறுகளை எழுதி வைத்தபொழுது இதனையும் குறித்து வைத்துள்ளனர். அந்த அரசாங்க சாசனக் குறிப்பு (Record) இன்றும் எவர்க்கும் வியப்பை விளைத்து வருகிறது. பாஞ்சா லங்குறிச்சி வீர சரித்திரம் இரண்டாம் பாகம் 2-வது பதிப்பு 275-வது பக்கத்தில் இந்த வீரமகன் நிலைமையைக் காணுக.

மே மாதம் இருபத்து நான்காம் தேதி (24—5—1801) இரவு நிகழ்ந்துள்ள பரிதாப நிகழ்ச்சிகளை மேலே வந்துள்ள 25 பாடல்களால் அறிந்து கொள்ளலாம். எல்லா நிலைகளை யும் ஓர்ந்து உணர்பவர் உள்ளம் உருகி மறுகுவர்.

3470 நகரின் துயரம்.

தென்திசைவெங் கூற்றுள்ளே சேர்ந்ததெனப் பகைவேந்தன்
றின்றிசைகொண் டினிதிருந்த நீள்பாஞ்சை நகர் புகுந்தான்
என்றிசைத்த மொழிகேட்டே எம்மருங்கும் வெம்மைமிக
அன்றங்கே நின்றவர்கள் அருந்துயரம் மிகவுழந்தார்.

3471 வாழ்வை வெறுத்தது.

வெற்றியுறு நிலையோடு வெய்யபகை வேந்தெழுந்து
கொற்றநகர் புகவந்தான் என்றமொழி கோமனையுள்
உற்றிருந்தார் கேட்டவுடன் உள்ளழிந்தார் இன்றேடே
இற்றதுநம் வாழ்க்கைஎன எண்ணிஉயிர் வாழ்விகழ்ந்
[தார்.

3472 உயிரை மாய்த்தது.

மாற்றுன்தான் உள்வந்தான் மற்றினிநாம் உயிர்வாழ
ஆற்றேம்என்று ஆயிழையார் ஆருயிரை அகல்விடுத்தார்
கோற்றேவி முதலான குலமகளிர் எல்லாரும்
ஊற்றேறும் உவளகத்தே உள்ளுயிரை மாய்த்தொழிந்
[தார்.

3473 அந்தப்புரத்தின் அழிவு.

வாவியுள்ளே பாய்ந்துசிலர் மாண்டார்கள்; மண்டிஎழும்
ஆவியடர் தீயுள்விழுந்து அவிந்தார்கள் சிலமாதர்;
கூவலுள்ளே வீழ்ந்துசிலர் குலைந்தார்கள்; கோமனையுள்
ஏவமன்று விளைந்ததுயர் எவர்மொழிய வல்லாரே?(116)

3474 மரபினர் மாண்டது.

பகைவேந்தன் மேல்வந்தான் பாரிழவு பட்டதினி
இகலேறி எதிர்வெல்லும் இயல்பில்லை இனியிங்கே
சுகமாக இருப்பதினும் தொகையாக இறப்பதுவே
வகையாகும்எனஎண்ணி மாண்டுஒழிந்தார்மரபினர்கள்.

3475 குழந்தைகள் அழிந்தது.

அமர்முனைக்குப் போகாமல் அருங்கிழமாய் அமர்ந்திருந்த
தமர்எல்லாம் வாள்கொண்டு தம்உயிரைத் தாம்மாய்த்தார்
எமன்ஏறி வந்தாலும் எதிர்நிற்கும் வீரர்இளங்
குமரர்களும் மடிந்தார்கள்; குழந்தைகளும் அழிந்தார்கள்.

3476 **வீரலட்சுமி வென்றது.**

இன்னவாறு அனைவோரும் இறந்துபடும் காலத்தே
மன்னவன்றன் மாமன்மகள் மாவீர லட்சுமிமுன்
தன்னுயிரை மாய்க்கஎண்ணித் தான்எழுந்தாள்
[அவ்வமயம்
ஒன்னலர்உள் ஏறிவரும் உறுதியைக் கண்டுளம் வெகு
[ண்டாள்.

3477 **பகைவனைக் கொன்றுபட்டது.**

அழகொழுகு திருமுகத்து அவ் ஆரணங்கு தன்னுயிரை
விழைவாக விடுமுன்னே வேல்ஒன்றை விரைந்துஎடுத்து
[அங்கு
உழையூர்ந்து நின்றஒரு ஒன்னலனை உயிர்மாய்த்தே
இழையோடும் இடைநுடங்க எதிர்வாவி இடைமாய்ந்
[தான்.

3478 **வீர மரணம்.**

அடலோடு மனம்களித்தங்கு ஆண்மையுடன் அடைந்த
[அவன்
குடலோடு மண்வீழ்ந்து குலைந்தாவி தீர்ந்து ஒழிந்தான்;
மிடலோடு நேர்வந்து வென்றஇவள் வேலொடுதன்
உடலோட எறிந்துடனே உயிர்துறந்து புகழ்சிறந்தாள்.

3479 **எவரும் வியந்தது.**

மண்வீரம் உடையதுஎன மாநிலத்துப் பாஞ்சைநகர்
எண்வீர முடையதா யிரும்புகழ்கொண் டிருந்ததிந்தப்
பெண்வீரம் நேர்கண்ட பேர்எல்லாம் பெருங்குலத்தின்
திண்வீரம் தணைவியந்து திறம்புகழ்ந்து நின்றார்கள்.

3480 **சேனைத் தலைவன் திகைத்தது.**

அவ்வீரக் குலமகளின் அருந்திறலைப் பெரும்படையின்
தெவ்வீரத் தலைவன்நேர் தெரிந்துஅஞ்சி மிகவியந்தான்;
இவ்வீரப் பதிமகளிர் இயல்புஇதுவேல், இகல்எழுந்த
வெவ்வீர மைந்தர்திறம் விளம்பலாம் தகைமையதோ?

3481 **குலவீரத்தின் ஒளி.**

றந்துபடும் பொழுதும்ஓர் இளமங்கை எதிர்ஏறிச்
றந்தநிறல் ஆண்மகனைச் சீறிஅடல் வேல்எறிந்து
றந்திறம்பா வகைமாண்டாள் மாண்புடைய இம்மரபின்
றந்தெரிய இவ்ஒன்றே சிறந்தபெருங் குறியாமே.

3482 **வீரமா நகரம்.**

ம்மாஇப் பதிவென்றேம் அச்சமின்றிப் புகுகின்றேம்
ம்மாநீர் வாரும்எனச் சொன்னலும் துணிந்துவரார்
கம்மாவின் திறலனைய கருதலரும் கருதாரேல்
ம்மாண்பில் அந்நகரம் இருந்துளது! என் றுணர்ந்திடலாம்.

3483 **அரி ஏறுகள் அகன்றன.**

ரிஏறும் புலிஏறும் அடர்ந்திருந்த அருவனத்தில்
ரிஏறி வந்ததென நண்ணுர்கள் நண்ணி அங்கே
ரிஏறிக் கரிஏறிப் பவனிவந்த வீதிஎல்லாம்
ரிஏறிப் புகைஏறி இருந்தபடி தெரிந்து உவந்தார்.

3484 **யாவரும் மாண்டார்.**

ன்றபெருங் குடிகள்எல்லாம் நீள்திதவ்வர் புகுமுன்னே
ன்றஅயல் மறைந்தகன்ருர்; மற்றவர்கள் மாண்டழிந்தார்;
ன்றுஅகர் அழிந்திருந்த அழிநிலையை மொழியாலே
ன்றஉரைப் பரிதாகும்; உள்ளின்உயிர் உருகி விடும்.

3485 **பகைவரும் வியந்தனர்.**

குடிபோன நகர்போலக் கோன்நகரம் குலைந்திருக்கப்
படைவேந்த னுள்புகுந்து பார்த்தான்அப் பதிநிலையைக்
கெடிவீரர் பலர்திரண்டு கிளர்படையோ டுடன்வந்து
முடிவாக மூண்டிருந்த முதுபதியோ? எனவியந்தான்!

3486 **பரிந்து புகழ்ந்தனர்.**

போர்வீரர் அமர்ந்திருந்த புரைதீர்ந்த நிலவறையை
நேர்போந்து நின்றுகண்டு நிலைதெரிந்து மிகவியந்தான்

யார்வீரர் இவன்போல அருந்திறலோடு அமர்ந்திந்தப்
பேர்வீரம் கொண்டுநின்றூர் பேருலகில் எனப்புகழ்ந்
[தான்.

3487 பார்த்து உவந்தனர்.

புறநகரம் கண்டுநின்று போர்மன்னர் வீற்றிருந்த
திறநகரம் இனிதடைந்தான் செழுமணி மாடங்களுடன்
அறமிருந்து குடிகொண்ட அரண்மனையும் பார்த்துவந்து
பெறலரிய பேறுஎன்று பெருமகிழ்ச்சி மீக்கூர்ந்தான்.

3488 அஞ்சாதான் அஞ்சியது.

உள்வியந்து நின்றஅவன் உள்புகுந்து நோக்கினன்
கள்விரிந்த மலர்க்கூந்தல் காரிகையார் வீரியமாய்
ஒள்எரியில் வீழ்ந்துஇறந்த ஊறுகண்டு நெஞ்சுருகி
அள்ளுபழி என்றுஅயர்ந்தான் அஞ்சாதான் அஞ்சி
[நொந்தான்.

3489 இரங்காதான் இரங்கியது

நின்றினிமேல் இரங்குவதால் நேர்பயன்ஒன்று இல்லைஎனத்
துன்றியஅவ் வுடல்கள்எலாம் துரிசறவே கடிதுஅகற்றி
நன்றியொடு சங்கமன்னர் நற்பெயரால் தான்கொண்ட
வென்றியுறு கொடிநாட்டி வீற்றிருந்தான் விறலுடனே.

3490 ஐரோப்பியர் இனி ஆள்வார்.

போராளர் பலர்திரண்டு பொங்குகடல் போல்வந்த
பேராளர் உயிரைஎல்லாம் பேணியுண்ட பாஞ்சைதனை
நேராள நின்றின்று நேர்ந்துகொண்டேன் எமர்இனிமேல்
பாராள்வார் பயமின்றிப் படியுயர்வார் எனப்பகர்ந்தான்.

3491 கும்பினிக்கு அறிவித்தது.

பாஞ்சைநகர் பிடிபட்ட பான்மைதனை மேலோர்க்கு
வாஞ்சையுடன் எழுதிவிட்டு மன்னவனைப் பிடியாமல்
ஆஞ்செயலை அறியாம லமர்ந்திருத்தல் தகாதுஎனப்பின்
போஞ்செயலை நாடிஎட்டன் பொருதலைவன் பால்உரைத்
[தான்.

3492 எட்டப்பன் ஓயாமல் உரைத்தது.

வாய்பேசா ஊமைமன்னன் மாண்டானே? மீண்டானே?
மாயாமல் நின்றானேல், வன்பழியை வாங்குவன்; மேல்
ஆயாமல் இங்கிருத்தல் அடாதுஎன்றே எட்டப்பன்
ஓயாமல் உரைக்கஅவன் உடன்தேடும் எனவிடுத்தான்.

3493 தேடவிட்டது.

எங்குளங்கே போனானே எவ்விடத்தில் நின்றானே
அங்குஅங்கே ஒட்டியறிந்து அறிவிக்க வேண்டும் எனப்
பொங்கிநின்ற எட்டப்பன் பொருபடையை வகைவகை
[யாச்
சங்கையறப் பிரித்துவிட்டான் சார்ந்தவர்கள் ஆய்ந்தார்
[கள்.

3494 தேட நேர்ந்தது.

போர்முகத்தில் மாளவில்லை; பொருகளத்து வீழ்ந்தவனை
ஓர்முகமா ஒருத்திஎடுத் தூருள்ளே வைத்துளதாச்
சார்முகமாய் ஒருதுப்புச் சார்ந்ததைக் கேட்டவுடன்
நேர்முகமாய் எட்டப்பன் நெடுமகிழ்ச்சி மீக்கொண்டான்

3495 ஊமைமன் இருந்த ஊர்.

தாண்டும்உயர் பரிஏறித் தண்டுதளம் மிகக்கூட்டி
வேண்டியவெம் படைகளையும் மேற்சேர்த்து வெய்தாக
ஈண்டியவேற் படைகளுடன் இசைந்தெழுந்து தேடியே
ஆண்டகைதான் அமர்ந்திருக்கு மவ்வூரை நோடைந்தான்.

3496 அரசைப் பாதுகாத்த விதம்.

ஒத்திவர்கள் வந்திருக்கும் உளவறிந்து களவாக
முத்தம்மாள் என்றஅவள் முன்னவன்மேல் மஞ்சளிட்டு
எத்தலையும் இனிதப்பி இலைவேப்பம் தழைசேர்த்துச்
சத்தமிடா தமர்ந்திருந்தாள் சார்ந்தவர்கள் வரும்வரை
[யும்

3497 **முத்தம்மாள் அழுத வித்தகம்.**

பையஅவர் ஓட்டிநின்று பார்க்கவந்த அப்பொழுதில்
ஐயகோ! என்மகனே! ஆருயிர்போய் அழிந்தாயே!
தெய்வமே எனப்புலம்பித் தெருமந்து தலைமார்பில்
கையிலுல் அடித்துஅடித்துக் கடுத்தலறிக் கதறினுள்.

3498 **ஒப்பாரி வைத்தது.**

தன்மகனை உள்நினைந்து சார்ந்தவர்கள் கேட்டொழிய
மன்மகனை விரகுடனே மாய்ந்தவன்போல் நேர்கிடத்தி
என்மகனே! இறந்தாயே! இனிஎந்தப் பிறப்பில்உன்றன்
பொன்முகத்தை நான்காண்பேன் போரேறே! எனப்
[புரண்டாள்.

3499 **உருகிப் புலம்பியது.**

ஒருத்திஎனக்கு ஒருமகனுய் உற்றிருந்தாய்! உதவாமல்
வருத்திஎனைத் தள்ளிவிட்டு மாண்டாயே! மணிவிளக்கே!
கருத்தறியாப் பாலகனே! காலன்எனும் படுபாவி
பிரித்தகன்றுன் இனிஉலகில் பிழைத்திரேன் எனத்துடித்
[தாள்.

3500 **மறுகிக் கலுழ்ந்தது.**

போரில்உற்று மாளாமல் பொன்தேடி மாளாமல்
பாரில்உற்ற இன்பமெலாம் பண்பாகத் துய்த்தபின்பு
நேரில்உற்று மாளாமல் நேர்ந்த அம்மை என்னுமுத்து
மாரியுற்று மாண்டாயே! மாமகனே! எனக்கலுழ்ந்தாள்.

3501 **நெஞ்சோடு கிளந்தது.**

கண்ணேடிக் காப்பாற்றிக் கையாலே கடன்கழித்திம்
மண்ணேடு புகழோடு வாழ்ந்திருப்பாய் என்றிருந்தேன்
விண்ணேடி இன்றுநீ வேருக மறைந்தாயே!
புண்ணேடும் நெஞ்சோடு புலம்புகின்றேன் பொன்னுமல்

3502 **குறிப்பாய் வைதது.**

பேய்சூழும் பிணக்காட்டில் பிழைத்தெழுந்து வந்தாலும்
நாய்சூழும் படிவந்து நண்ணுகின்ற நாடதனில்
தாய்சூழத் தமர்சூழத் தன்கிளைஞர் அயல்சூழ
வாய்சூழ வாய்த்திருந்த மாமகனே! மாண்டாயே!

3503 இருக்க ஒல்லேன்.

கண்ணேஎன் கண்மணியே! கைநிறைந்த கற்பகமே?
எண்ணேஎன் எண்ணமெலாம் இன்றிழந்தேன் நீபிரிந்து
விண்ஏறி வீற்றிருக்க வீணைய்இம் மண்ணிழிந்து
உண்ணேஎய்என் உயிர்நலிய உற்றிருக்க ஒல்லேனே.

3504 சூழ்ந்து சொல்லியது.

என்றிவ்வா றினைந்துஏங்கி இருநிலத்தில் வீழ்ந்துபுரண்
டன்றவள்தான் கொண்டுநின்ற அல்லல்நிலை தனைக்
[கண்டே
ஒன்றிவந்தார் என்னை?என உசாவினர்; உசாவவுமே
துன்றிஅயல் நின்றவர்கள் சொல்லினர் சூழ்ந்தபடி.

3505 பெரிய அம்மை என்றது.

ஊட்டிமிக வளர்த்துவந்த ஒருதாய்க்கே ஒருமகனும்
நீட்டிஇங்கே நின்றிருந்தான் நேர்ந்துபேர் அம்மைமிகப்
போட்டிருந்தது ஒருமாதம் பொன்றினன் இன்றுஅந்தோ
காட்டியபே ரன்புடையாள் கதறுகின்றாள் எனக்கரைந்
[தார்.

3506 வெருண்டு ஓடியது.

அம்மைஎன அவர்சொல்ல அம்மொழியைக் கேட்டவுடன்
நம்மையுமே தொடர்ந்திந்நோய் நாசமுறச் செய்யும்என
வெம்மையுட னுள்வெருவி வெருண்டகன்றுமீண்டார்கள்
எம்மையுமே திரும்பாமல் இரிந்தோடி இடம்புகுந்தார்.

3507 ஊரார் நகைத்தது.

வாள்வீரன் தனைப்பிடிக்க வந்தவர்கள் ஒருகிழவி
சூள்வீர மொழியாலே சொல்லாமல் தொலைந்தோடித்
தாள்வீரம் காட்டினர்அத் தாய்செய்த சாகசத்தை
நாள்தோறும் அவ்வூரார் நவின்றுநகைத் திணிதுவந்தார்.

3508 **ஆதரித்தது.**

படைக்கலன்கள் பட்டுள்ள படுபுண்ணே இனிதுஆற்றி
இடைக்கலந்த இடம்எல்லாம் எதிர்விலக்கி எதிரில்லாக்
கொடைக்கலந்த தனிவீரக் குலமகனே நலமாக
அடைக்கலந்த போரன்பால் ஆதரித்தாள் அவ்வன்னே.

3509 **பாதுகாத்தது.**

கொடியவர்தம் கைப்பட்டுக் குலைந்தழிந்தான் என்னும்
[ஒரு
படுபழிதான் பற்றும்மல் பாதுகாத்து இனிதுஅளித்த
வடுவறுசீர் அம்மாதை மன்னன்மனம் கனிந்தேதத்தி
அடுபகையை வென்றழிக்க ஆராய்ந்து நின்றுளைந்தான்.

3510 **தாய் என வணங்கியது.**

உற்றபெரும் புண்எல்லாம் உள்ஆறி நன்றுக
முற்றவுமே குணம்அடைந்தேதன்; முதல்மகனே முன்
[இழந்தும்
பெற்றதாய் ஆய்நின்று பேணிஎனை ஆதரித்தாய்!
எற்றேநிற்கு எதிர்செய்வேன்? என்தாயே! எனப்புகழ்ந்
[தான்.

3511 **தனியே அகன்றுன்.**

இங்கினிமேல் நின்றிருந்தால்எதிரிகள்மூண்டு ஏறிவந்து
வெங்கொடுமை மிகச்செய்வார்; வீணுக உனக்குமே
பொங்குதுயர்புரிந்திடுவர் போய்வருவேன் தாய்என்றே
கங்குலிடைத் தனிஎழுந்து கால்நடையாய்த் தனிஅகன்
[றுன்.

3512 **கணக்கன் போற்றியது.**

அல்அடர்ந்த வழிதனியே அரசுநடந்து எல்விடியக்
கல்மடவென் ஊர்அடைந்தான் கணக்காயன்எதிர்கண்டு
மல்வலியார் திண்டோள்நம்மன்னவன்என் றுள்மகிழ்ந்து
பல்வகையி னுபசரித்துப் பண்பாகப் போற்றிநின்றுன்.

3513 குலவீரர் அடைந்தார்:

சாம்பசிவம் பிள்ளைஎனத் தழைத்திருந்த அக்கணக்கன்
ஆம்பரிவோ டினிதுஓம்பி ஆதரித்து வைத்திருந்தான்:
வம்பலுடன் அரசங்கே இருந்துவரும் இயல்பு அறிந்து
கூம்பிநின்ற குலவீரர் கும்பலுடன் வந்தடைந்தார். (156)

3514 தம்பியும் வந்தான்.

தும்பிஎனும் துரைச்சிங்கம் சமர்முகத்தில் தப்பிஅன்று
வம்புலிங்க புரம்என்னும் தலத்திருந்தான்; தமையனிடம்
வெம்பியங்கு வந்தடைந்து மெய்குழைந்து கைதொழு
[தான்
தும்பியுவந்து எடுத்தணைத்து நற்றுணையே! எனக்கலுழ்
[ந்தான்.

3515 கரைந்து உருகினர்.

உற்றாரும் உறவினரும் உரியநகர் இடையிருந்த
மற்றாரும் மாண்டசெய்தி மறுகிஅழுது அண்ணனிடம்
சொற்றனத் தம்பிதனைத் துணைக்கையா லணைத்தன்று
கற்றுவிற் கரைந்துருகிக் கடுத்துமே அடுத்திசைத்தான்.

3516 வீரமா நகர் இழந்தோம்.

வீரமா நகர்இழந்து வெளிஏறி வெந்துயரம்
கூரநின்றேம் கோட்டையுள்ளே கூடிநின்றார் எல்லாரும்
சோழிந்து செத்துஒழிந்தார்; தெவ்வருயிர் வவ்வியினிப்
போருழந்து பொன்றுவதே புகழாகும் என்றுரைத்தான்

3517 அன்றே அழிந்தோம்.

அண்ணலுயி ரிழந்தஅன்றே அழிந்துள்ளேம்; இனிஎந்த
வண்ணம்வந்து சேர்ந்தாலும் மனம்கலங்கல் மாண்பா
[மோ?
திண்ணமுடன் நின்றுதெவ்வைச் சீரழித்துச் சேரவென்றே
எண்ணியதை முடித்துவிண்ணில் ஏறுவதேஇன்கடனும்

3518 **இரவிடை எழுந்தார்.**

என்றுதுணைத் தம்பிதனை இதமாக உளம் தேற்றி
நின்றபடைத் தலைவரையும் நேரூக்கி வேறூர்க்கே
சென்றிருக்க வேண்டும்எனச் சிந்தைசெய்து பிள்ளை [யிடம்
நன்றியுடன் மொழிகூறி நள்ளிரவில் புறப்பட்டான்.

3519 **கமுதி நகர் அடைந்தார்.**

உற்றபடை வீரரொடும் உரிமைமிகு தம்பியொடும்
பற்றுமனத் துயரோடும் பற்றலர்மேல் செற்றமொடும்
கொற்றமுறும் நினைவோடும் கூடிநடந்து இறுதியாய்க்
கற்றுவளம் மிகுந்திருந்த கமுதிநகர் வந்தடைந்தான்.

3520 **சின்ன மருது சேர்ந்தது.**

அன்னநக ரிடைப்பலநாள் அடங்கிநின்றே அடங்கலரை
என்னவகை யாமெல்வது? என்றெண்ணி இருக்கும்கால்
சின்னமருது எனும்பேரான் சிவகங்கைத் தலைவன்இந்த
மன்னன்வர வறிந்துமன மகிழ்ந்தழைத்து மாண்புசெயதான்

3521 **பெரிய மருது நின்றது.**

வெள்ளைமரு தெனும்வீரச் சேருவைதன் பிள்ளைகளாய்
உள்ளவர்கள் சிறுமருது பெருமருதுஎன் றுரைபெற்றுத்
தள்ளரிய திறலினராய்த் தழைத்திருந்தார் அன்னவரும்
வெள்ளையரை உள்ளள்ளி வெம்பகையை விலக்துநின்றார்.

3522 **கருதி மகிழ்ந்தது.**

படைவீரர் மிகவுடையார் படைக்கலன்கள் பலபயின்றார்
கொடைவீரம் உடைமையால் குவலயத்தோர் எல்லாரும்
தொடைகூறித் தொழுதேத்தத் தோன்றிநின்று ரான்றதுணை
இடைசேர்ந்து வந்ததனல் இன்பமீக் கூர்ந்துகொண்டார்.

3523 **களிப்பு உற்றது.**

உடன்பிறந்த இருவர்களில் உற்றிருந்த இளையவனே
கடம்பிறந்த மதகரிபோல் கடுந்திறல்கள் மிகவுடையான்

அடங்கலருக் கிடிஏறும் அரிஏறும் ஆய்நின்ருன்
நடம்கலந்த இம்மன்னன் எய்தஇருங் களிப்புற்ருன்.

3524 **காற்றும் தீயும்.**

அடுதிறலில் கைகண்ட அம்மருதும் *இவ்அரசும்
கடுதீயும் காற்றும்எனத் துணைசேர்ந்து துன்னலரைப்
படுபழிகள் பலசெய்து பாடழித்து வந்தார்கள்
கடிநிவரை வென்றடக்கக் கடும்படைகள் கடுத்தெழுந்த.

3525 **நின்றுள்ள நிலை.**

தென்திசை ஊமை வேந்தன் சிவகங்கை மருதி னேடே
சென்றிநின் றுள்ளான்; பொல்லா ஊறுகள் பலசெய் கின்ருன்;
சென்றுவெஞ்சேனை சூழ்ந்துசெருவிடைப் பிடித்தோ அன்றிக்
கொன்றுயிர் குடித்தோ வம்மின்என்றவன் குறித்துவிட்டான்

3526 **வெள்ளைத் தலைவன் விரைந்தது.**

வெள்ளையர் சேனைக் கெல்லாம் வெற்றியின் தலைவன்
[என்று
தள்ளரும் பெருமை யோடு தருக்கிநின் றுள்ள அன்னுன்
எள்ளருந் திறலோ டுள்ள எதிரியை அறவே வெல்ல
வுள்ளெரி என்ன ஊக்கி உருத்துமேல் உய்த்து வந்தான்.

3527 **படைகள் வளைந்தன.**

விட்ட வெம்படை விழைந்துடன் எழுந்தது விரைந்து
பட்டம் உற்றுள தலைவர்கள் பரிகளில் இவர்ந்து
மிட்டி லாதவேல் வெடிகளும் வாள்களும் மருவி
மொட்டி வந்தடர்ந் துள்ளுற வளைத்தனர் உருத்தே. (170)

3528 **புலிப் போத்து.**

வேட்டை யாட்டத்தில் தப்பிய வெம்புலிப் போத்து
கூட்ட மாய்அயல் விலங்குக ளுடன்குழீஇ யிருக்க
மோட்ட மாய்வந்து வளைந்தவல் வேடர்போல் ஊக்கி
மீட்டி வேல்வெடி நிமிர்த்துமுன் நின்றனர் நெருக்கி. (171)

---

*வெள்ளையர் மீது மருது உள்ளம் கொதித்திருந்தாலும் ஊமைத்துரையை அடைந்த பின்பே அவர் ஊக்கி மூண்டுள்ளார். அவ்வுண்மையை உவமைக் குறிப்பால் உணர்ந்து கொள்கிறோம். வீரத்துணை வேகத்தை விளைத்துள்ளது.

3529 **ஊமைமன் உருத்தது.**

வந்து வன்படை வளைந்ததை ஊமைமன் நோக்கி
முந்து வாளுரீஇ முனைந்துமுன் மூண்டெதிர் ஏறி
வெந்திறங்கொடு வெட்டினன் வெண்தலை எங்கும்
சிந்தி வீழ்ந்தன; சிதறின உடலங்கள் சிதைந்தே. (172)

3530 **படைகள் உடைந்தன.**

பரிதி வானவன் தனைஎதிர் மறைத்திடப் படிந்த
கரிய மேகங்கள் கணத்திடைக் கலைந்தன எனவே
அரிய திண்டிறல் அரசனை அடரமுன் சூழ்ந்த
பெரிய சேனைகள் பிரிந்தழிந் துடைந்தன பெயர்ந்தே.

3531 **மன்னன் ஏகினன்.**

வந்து மண்டிய சேனையை வாள்கொடு பாய்ந்து
முந்து மண்டியிட் டேறிஅம் முனைமுகம் எங்கும்
மந்த ரம்எனத் திரிந்தமர் ஆடிய மன்னன்
அந்தரம்பட அயல்அகன் றேகினன் அன்றே. (174)

3532 **மானவீரர் இருந்தார்.**

சேனை வீரர்கள் சிலருடன் தம்பியும் சேர்ந்து
மான வீரங்கள் மருவிய ஒருவனைக் கூடி
ஆன போரினை ஆம்வகை ஆற்றுவாம் என்னை
வானம் ஏறிய வன்சினம் மண்டியங் கிருந்தார். (175)

3533 **மருது பிரிந்தான்.**

மருது வீரனும் மன்னவன் போரினை மதித்தே
அரியின் ஏறென ஆர்வமீக் கூர்ந்துளம் வியந்தான்
உரிய பல்பல உதவிகள் இடையிடை உதவிப்
பெரிய நண்பொடு பேணிஅங் கிருந்தனன் பிரிந்தே.

3534 **ஊமைமன் இருந்தான்.**

வெள்ள யாளர்கள் விடுத்தவெஞ் சேனையுள் அழிந்து
தள்ள ருந்துய ரோடிழிந்து ஒழிந்தது தளர்ந்தே
எள்ள லோடுயர் தலைவரும் இரிந்தனர் இரிய
உள்ளமோடுயர் ஊமைமன் ஊக்கியங் கிருந்தான். (177)

3535 **உடைந்தவர் ஓடினர்.**

மருது சேனையில் மருவியுள் இருக்கின்ருன் அவனைப்
பொருது வென்றிட லாமெனப் புறப்பட்டு வந்தார்;
உரிய யாவையும் ஒருங்கிழந் துயிர்பிழைத்து ஓடிப்
பரியு நெஞ்சராய்ப் படைப்பெரும் பதியிட மடைந்தார்.

3536 **உற்றதை உரைத்தார்.**

அடைந்த வீரரைக் கண்டதும் அப்பெருந் தலைவன்
நடந்தது யாது?என வினவினன் வினவும் நாணி
மிடைந்து போயவண் வளைந்ததும் ஊமைமன் சீற
உடைந்து மீண்டது முயிர்பிழைத் துய்ந்தது முரைத்தார்.

3537 **தளபதி இகழ்ந்தான்.**

கேட்ட சேனையின் தளபதி கிலேசமீக் கூர்ந்து
வாட்ட முற்றனன் வன்மமும் கொண்டனன் வளர்ந்து
நாட்டில் உள்ளநம் தலைமையை நகைபுரிந் திகழ்ந்து
காட்டில் உள்ளவன் தன்னையும் கட்டிலீ ரன்றே. (180)

3538 **குறித்து விடுத்தான்.**

நன்று நம்பெரு வலிஎன நவையுற நகைத்து
நின்று வேறொரு படையினை நிலைபெறச் சேர்த்து
வென்று கைக்கொண்டு வீறுடன் மீளுமின் இன்றேல்
கொன்று வன்தலை கொண்டுவந்திடும்எனக் குறித்தான்.

3539 **கூடி முயன்ருன்.**

இன்ன வாறவன் சேனையை இடம்பெறக் கூட்டித்
துன்னு வெங்கதம் கொண்டுமுன் சூழ்ந்துள போதில்
மன்னன் அங்குள மண்டிய துணையுடன் மருவி
என்ன செய்தனன் என்பதை யாமினி இசைப்பாம்.

திருமயம் சேர்ந்தது.

3540 ஒருமையி னின்றுயர் படையை வென்றவண்
அருமையில் சென்றவன் அரிய கூட்டுடன்
பெருமையில் சிறந்தொளி பெருகி நின்றுள
திருமயம் எனும்பதி சேரல் மேயினன். (183)

பொன்னுத் தேவன்.

3541 திருமலிந் துள்ளஅத் திருமு யத்துளே
மருமலி தொடையல்இம் மன்னன் சேரவும்
பொருவலி படைத்தவன் பொன்னுத் தேவன்என்
றுருமலிந் திருந்தவன் உவந்து கொண்டனன்.

மன்னனே மதித்தான்.

3542 அந்நகர் அதிபதி அயல்ல லாம்பெரு
மன்னன்என் றுயர்புகழ் மருவி நின்றவன்
இன்னவற் கண்டதும் இன்பம் மீக்கொண்டு
தன்னுடன் வைத்துளம் தழைத்திருந்தனன்.

உன்னி உளைந்தான்.

3543 அவனும்ஓர் அருந்திறல் ஆளன் ஆதலால்
இவன்அயர்ந் துற்றதும் இடுக்கட் பட்டதும்
நவநகர் இழந்ததும் நைந்து வந்ததும்:
கவலையோ டறிந்தவன் கருதி நொந்தனன். (186)

கொதித்து நின்றான்.

3544 கேட்டனன் துயரமீக் கொண்டு தன்இரு
நாட்டம்நீர் சிந்தினன்; நமது நாட்டுஒரு
வாட்டிறல் மன்னனே இங்ஙன் வன்செயல்
கூட்டின ரேஎனக் கொதித்து மூண்டனன். (187)

சதிகாரரை இகழ்ந்தான்.

3545 புதியவர் ஆகிய புறத்து நாட்டவர்
அதிபராய் நின்றிவண் ஆடல் செய்கின்றார்;
மதியில ராய்ச் சிலர் மண்டி நின்றுடன்
சதிசெய லாயினர் சாதி கெட்டவர். (188)

துணைபுரிய நேர்ந்தான்.

3546 மன்னவா! நீஇனி மறுகல் நானுனக்கு
நன்னய உதவிகள் நன்கு செய்குவேன்
அன்னவர் என்னையும் அடர்ந்து நின்றுளார்;
துன்னிநின் றவரைநான் தொலைத்து நீக்குவேன்.

வணிகராய் வந்தவர்.

3547 வாணிகம் செய்திட வந்திங்கு ஒண்டிணர்;
பேணிமண் ணுசையும் பெருகி மண்டிணர்;
காணியாய் நிலைபெறக் கருதி மிண்டிணர்;
வீணிலே வெவ்வரி விதிக்க முண்டிணர். (190)

வலியராய் நலிகின்றார்.

3548 இத்திரு நாட்டுயர்ந் திருந்து வந்துள
மெய்த்திறல் வீரர்மேல் வீம்பு கொண்டனர்;
ஒத்துயர் படைகளால் ஊறு செய்கின்றார்;
சித்திர வதைஎதிர் செய்ய வேண்டுமே. (191)

வெய்யரை வீழ்த்துவேன்.

3549 என்றவன் இயம்பவும் இந்த மன்னவன்
நன்றென நயந்தனன் நலிந்த வெய்யரை
வென்றினி வீழ்த்திட வேண்டும் என்றுளம்
கன்றிமுன் கொண்டனன் கடுத்து நின்றனன்.

தெவ்வர் திரண்டது.

3550 இவ்வகை மன்னவன் இங்கி ருக்கஅத்
தெவ்வர்கள் படைகளைச் சேர்த்தி வந்தலை
எவ்வகை ஆயினும் வவ்வி ஏகவே
வெவ்வலி யுடனங்கு விரைந்து நின்றனர். (193)

எட்டன் எட்டியது.

3551 அன்னவர் நிற்கின்ற நிலையும் எட்டப்பன்
தன்னுயர் படையொடு சார்ந்து வீறுடன்
துன்னியங் குற்றுள துடிப்பும் நோக்கியும்
மன்னவன் அன்பினர் மறுகி நொந்தனர். (194)

நாகையன் நவின்றது.

3552 உற்றபேர் அன்பினன் உண்மை யுள்ளவன்
நற்றிறல் உடையவன் நாகை யன்எனப்
பெற்றதோர் பேரினன் பேணி வந்து நேர்
பற்றலர் நிலையினைப் பரிந்து கூறினன்: (195)

வருவதை உணர்ந்தது.

3553 மூண்டுமேல் வருகின்ற முடிவை முந்துற
நீண்டபேர் அன்புடன் நேர்ந்து ரைத்தஅவ்
ஆண்டகை தனையுவந்து ஆத ரித்தனன்
ஈண்டிய துணையுடன் இனிது இயம்பினன். (196)

கொல்ல நேர்ந்துளார்.

3554 உள்ளுறு நண்பினுல் ஓடிவந்து மேல்
வெள்ளையர் வருவதை விளம்பி நின்றனன்!
கொள்ளைகள் செய்தனர் குறித்தென் கோட்டையை
எள்ளுற என்னையும் கொல்ல நேர்ந்துளார். (197)

கொன்று வெல்லுவேன்.

3555 என்தலை எடுக்குமுன் எதிர்ந்து நின்றுளார்
வன்தலை பலபல வாங்கி என்றுமே
நின்றலை சுலாவிய நீணி லத்தினில்
பொன்றலை இலாததோர் புகழை எய்துவேன்.

வீரத்தை விளக்குவேன்.

3556 சாகவே துணிந்துள என்முன் சார்ந்தெவர்
வாகைமேல் கொள்ளுவர்? வந்து நேர்ந்தவர்
ஆகம்நாய் கழுகுகள் ஆர ஆற்றினென்
வேகவாள் நிலையினை விளக்கிக் காட்டுவேன்.

வெள்ளையர் தீமையர்.

3557 வெள்ளையர் செய்துள வெய்ய தீமையை
உள்ளினும் உளம்சுடும்; உரைப்பின் நாவும்வேம்
கொள்ளையும் கொலைகளும் கொடிய தீமையும்
தள்ளரும் பழிகளும் தழுவி நின்றுளார். (200)

படுபழி செய்தனர்.

3558 பழிபடு பாதகப் புகையைப் பாஞ்சையுள்
இழிபடு தீயராய் இரவில் உய்த்தனர்;
அழிபடு கொலைகளை அமரில் அன்றியே
வழியிடை விளைத்தனர் வன்க ணுளர்கள். (201)

நாசம் செய்ய நாணினேன்.

3559 பாசறை இருப்பினில் படையை எம்மவர்
நாசமே செய்திட நாடி நின்றனர்;
மோசம்என் றவரைநான் முனம்வி லக்கினேன்
நீசவெங் கொடுமைகள் நேர்ந்து நொந்தனன்.

நாசம் அடைய நோர்ந்தேன்.

3560 பாடிவீட் டிருந்துள பகையைப் பாடுஅழித்து
ஓடிமீ ளாவகை ஒழித்தி ருப்பனேல்
வாடிஎன் பதியினை இழந்து வந்திவண்
பீடழிந் திருப்பனே? பேசி ஆவதென்? (203)

தெவ்வரை வெல்வேன்.

3561 எவ்வகை ஆயினும் எதிர்ந்த தெவ்வரை
வெவ்வலி தேய்ந்திட வென்று வீறுடன்
அவ்வுலகு அடைவனே அன்றி யாதுமே
இவ்வுலகு ஆசையை எண்ணி நின்றிலேன். (204)

தேவன் மகிழ்ந்தான்.

3562 எனஇவன் இயம்பவும் இனம்கொண் டுள்ளவன்
மனம்மிக மகிழ்ந்தனன் மன்ன னேடுஅவன்
முனைமுகம் புகுந்தபின் முடிவில் செய்வதோர்
வினைகளை முந்துற விதித்தி ருந்தனன். (205)

சேனைத் தலைவன் சினந்தான்.

3563 பதிபெயர்ந்து ஓடியும் பாஞ்சை மன்னவன்
அதிபதி யாய்நின்றே ஆடல் செய்கின்றான்;
கதிமிகு நம்படை கண்டும் அஞ்சிலன்;
கொதியுடன் இம்முறை கொன்று மீளுக. (206)

இறுதி என்றனர்.

3564 என்றுயர் தளபதி இயம்பி ஏவவும்
நின்றுயர் படையினர் நெடிது மூண்டனர்;
வென்றுயர் வீறுடன் விரைந்து எழுந்தனர்;
இன்றுடன் பகைவனுக்கு இறுதி என்றனர்.

போர் மூண்டது.

3565 மூண்டெழு படைகளை முதன்மை யாகவே
ஈண்டிய தலைவர்கள் இயக்கிச் சென்றனர்:
ஆண்டகை ஊமையை அல்லில் சூழ்ந்தனர்
நீண்டவெம் போரவண் நெடிது கேர்ந்ததே. (208)

ஊமைமன் துணிந்தான்.

3566 மாற்றலர் படைவந்து வளைந்து நின்றுள
ஊற்றமும் உறுதியும் ஊக்கி வெங்கொலை
ஆற்றவே துணிந்துளர் அழிந்து போகுமுன்
ஏற்றதை இயற்றுவம் எனத் துணிந்தனன்.

நடுங்க வீசினன்.

3567 ஊழிவெந் தீஎன ஊக்கி ஊமைமன்
பாழியந் தோள்வலி பலரும் கண்டிடக்
காழிமை யோடுகைக் கொண்ட வாளினால்
நாழிகை ஒன்றினில் நடுங்க வீசினன். (210)

நாடி ஏறினன்.

3568 வீசிய வேல்களை வேறு செய்துமேல்
மூசிய படைகளை முறுக்கி முண்டங்கள்
ஓசைகொண் டுருண்டிட உருட்டி உள்ளூற
நாசங்கள் செய்தனன் நாடி ஏறினன். (211)

கண்டங்கள் கண்டான்.

3569 மண்டிமேல் வருந்தொறும் மாண்டு மண்ணுற
முண்டங்கள் விழுந்தன; முடிந்து துள்ளின;
துண்டங்கள் எங்கணும் தொடர்ந்து ருண்டன:
கண்டங்கள் கண்டனன்: கணக்கொன் றின்றியே

மறைந்து போயினன்.

3570 அல்லிடை நடந்தஅப் போரில் தப்பியே
வல்லியம் எனஇவன் மறைந்து போயினன்;
கொல்லியல் வெறியொடு கூடி வந்தவர்
வெல்லியல் வலியுடன் விரைந்து பாய்ந்தனர்.

தெவ்வர் ஏறினர்.

3571 புறத்தடர் படைகளைப் பொருது டைத்திவன்
திறத்தொடு சென்றதைத் தெவ்வர் தேர்ந்தனர்;
மறத்தொடு மறைந்தனன் மன்னன் என்றுளம்
கறுத்தனர் தெழித்தனர் கடுத்துள் ஏறினர். (214)

அழித்து ஒழித்தனர்.

3572 உள்ளுறு படைகளை உருத்து அழித்தனர்;
தள்ளியத் தேவனைத் தலைஅ றுத்தனர்;
வள்ளல்பின் வந்தஅத் தம்பி தன்னையும்
எள்ளுறப் பிடித்தனர் எவரும் எய்தினர். (215)

நாற்பது பேர் சிக்கினர்.

3573 துரைச்சிங்கம் எனப்பெயர் துலங்கிநின்ற அவ்
வரைச்சிங்கக் குருளையும் மற்று நாற்பது
நிரைச்சுறு வீரரும் நேரில் சிக்கினர்
உரைச்சுறு வெள்ளையர் உளம் உவந்தனர். (216)

கொல்ல நேர்ந்தனர்.

3574 பற்றலர் பற்றிய பாஞ்சை வீரரைச்
செற்றமாச் சிறையிடைச் சேர்த்து வைத்தனர்;
முற்றவும் அழித்திட முடிவு செய்தனர்
உற்றநாள் ஓர்ந்தனர் ஒருங்கு கொல்லவே. (217)

ஊமைமன் தப்பினான்.

3575 தப்பிய ஊமையைத் தரணி எங்கணும்
அப்பெரும் படையினர் ஆய்ந்து தேடினர்;
எப்படி யோஇவன் எவர்க்கும் எய்திடாது
ஒப்பறு சுருளிமா மலையில் உற்றனன். (218)

உளைந்து நின்றான்.

3576 மானமும் வீரமும் மனக்கொ திப்புமே
ஆனநேர் துணைகளா அங்கி ருந்தனன்;
சேனையின் பதிஎங்கும் தேட விட்டனன்
ஊனமா யுளைந்தனன் உறுதி கண்டிலன். (219)

3577 **கொண்டு போயினர்.**

கொடுஞ்சிறையிலிருந்தாரைக்கூட்டோடுகொன்றழிக்கக்
கடுஞ்சினமீக் கூர்ந்தவன் கண்ணேட்டம் யாதுமின்றி
அடுங்கொடிய கூற்றெனவே யாவரையும் கொண்டுவர
நெடும்படையை ஏவினன் நேர்ந்துபோய்ச் சேர்ந்துவந்
[தார்.

3578 **பிடிபட்ட தம்பி.**

பிடிபட்ட தம்பிதனைப் பேணலர்கள் பேணிப்போய்
முடிபட்ட பாஞ்சைநகர் முன்கொண்டு நிறுத்தினர்;
கடிபட்ட புலிக்குருளை கானவர்கோன் கண்முன்னே
அடிபட்டு நின்றதென அப்பதிமுன் இவன் நின்றான்.

3579 **கலங்காமல் நின்றான்.**

கொல்லவந்த எமன்போலக் கொதித்துமே கோபமாய்ப்
பொல்லாத குறிப்பினவன் பொங்கிநின்ற போதுமிந்தச்
செல்லமகன் உள்ளத்தே சிறிதேனும் கலங்காமல்
மெல்லவரு நகையோடு வீறுகொண்டே மீறிநின்றான்.

3580 **கொலை நிலையை நோக்கினன்.**

கோட்டைஎதிர் நாட்டியுள கொடுந்தூக்கு மரத்தினையும்
வேட்டையிடைப் பிடிபட்ட விலங்குகளைக் கொலைவேடர்
கூட்டிஒன்று வதைக்கின்ற கொலைத்தொழிலின் புலையினையும்
நாட்டமுடன் நோக்கியிவன் நகைபுரிந்தே நிலைநின்றான்.

3581 **துடித்து இறந்தான்.**

நின்றவனை நேர்நோக்கி நெடுஞ்சினமீக் கொண்டிவனை
இன்றிங்கே கொடுந்தூக்கில் இடுமென்று படைவேந்தன்
கன்றிமிகக் கடுத்துரைத்தான் கடுங்கொலைஞர்கடிதாகத்
துன்றியங்குநாட்டிநின்றதூக்கிலிட்டார்துடித்திறந்தான்.

3582 **கண்டவர் கதறினர்.**

கண்டவர்கள் எல்லாரும் கதறிஅழுது எங்கியிந்த
மண்டலத்தை ஆண்டுவந்த மன்னவர்க்கா இம்முடிவு?
பண்டைவினைப் பயனிதுவோ? பழிசாவும் அழிதுயரும்
மண்டியெழப் பரிவுகொண்டே மறுகிநின்றூர் யாவருமே.

3583 **பகைவரும் பரிந்தார்.**

பொல்லாத பகைவராய்ப் பொங்கிநின்ற வெள்ளையரும்
வல்லாளன் இவண்மாண்ட வகைதெரிந்து மிகவியந்தார்;
வெல்லாமல் போனலும் வென்றவனைப் விறல்மிகுந்தே
நில்லாமல் நீங்கியுளான் நிலையான புகழுடனே. (226)

3584 **வீரமுடன் மாண்டான்.**

தென்னாட்டுச் சிங்கமெனத் திசைஎங்கும் இசைஓங்க
முன்னாட்டி நின்றவருள் மூத்தவனே முன்மாண்டான்;
தன்னாட்டம் சிறிதேனும் தளராமல் தம்பிஇன்று
மன்னாட்டு வீரமுடன் மாண்டுள்ளான் எனப் புகழ்ந்தார்.

3585 **நாட்டு மக்கள் அழுதனர்.**

நாட்டுமக்கள் எல்லாரும் நாடாண்டு நாளுமே
நீட்டுபுக முடன்வாழ்ந்த நெடியகுடி படுகேடாய்க்
கூட்டுவழி அயல்நாட்டுக் கும்பினியால் குலைந்ததென
ஏட்டுவழி அடங்காத எழுதுயரால் அழுதயர்ந்தார்.

3586 **பகைவர் பழி ஏறி நின்றூர்.**

போர்ஏறிப் பொருதுநின்ற புலம்எங்கும் மாளாமல்
சீரேறி வென்றுவந்த திறல்வீரக் குலமகனே
நாரேறிப் பேணுமல் நவைஏறிக் கொன்றதனால்
பாரேறி நீளுகின்ற பழியேறி நின்றுள்ளார். (229)

3587 **வெள்ளையர் விரகு.**

வெள்ளையரை எதிர்த்தவர்கள் வெந்துயரம்மிகவடைந்து
துள்ளிமடிந் தழிவரெனும்துணிவதனைக் காண்மின்எனக்
கள்ளமற யாவருமே கண்டடங்கி நின்றுவரத்
தள்ளரிய தந்திரத்தைத் தந்திரமாய்ச் செய்துள்ளார்.

3588 **பெரிய தோல்வி.**

நீண்டபெருஞ் சேனைகளை நிரைநிரையா நீட்டிவந்து
மூண்டகொடும் போர்ஆற்றி முரணழியா அரண்அழித்
[தோம்;
மாண்டகடும் பகைவனுயிர் மண்டிநின்ற மன்னவனை
ஈண்டுநாம் பற்றவில்லை இதுபெரிய தோல்வியன்றே?

3589 **நிருபங்கள் விடுத்தார்.**

மறைந்தகன்ற ஊமையனை மாநிலத்தில் எங்கேனும்
உறைந்திருக்கும் இடங்காட்டி உதவுவரேல் அவர்க்குடனே
நிறைந்தபெரும் பரிசுகளும் நிலநலமும் தருவம்என
அறைந்துபல நிருபங்கள் அங்கங்கே விடுத்தாய்ந்தான்.

3590 **பொருள்களை எடுத்தார்.**

சேனையதி பதியிங்ஙன் தேசம்எங்கும் தேர்ந்தாய்ந்தும்
ஆனபயன் ஒன்றுமின்றி அகமயர்ந்தான்; அழிந்தவனும்
வானடைந்தான் எனஎண்ணி மாநகரம் தனிலிருந்த
ஏனையுயர் பொருள்கள்எலாம் எடுத்தேற்றி இடம்சேர்த்
[தான்.

3591 **வெள்ளையர் கொள்ளையராயினர்.**

வெள்ளையர்என்று அயலறிய மேவலராய் மேவிவந்தார்
கொள்ளையர்என் றுலகறியக் கோட்டையுள்ளே கூடியே
உள்ளபொருள் எல்லாமே உள்ளமுவந்து அள்ளினர்
வெள்ளமெனப் பேராசை விரியவே வெறிகொண்டார்.

3592 **கண்டபடி வாரினர்.**

பிணவெறியர் ஆகியே பெருங்கொலைகள் புரிந்தார்பின்
பணவெறியர் ஆய்நீண்டு பாஞ்சைநகர் உள்புகுந்து
குணமுடைய மணியணிகள் கூறரிய கனகமுதல்
கணமுடைய பொருள்களெலாம் கண்டபடி வாரினர்.

3593 **எல்லாம் கவர்ந்தார்.**

காலிலக்கம் பொன்களொடு நவமணிகள் நல்லணிகள்
காலெழுத்துப் பாய்கின்ற கடும்பரிகள் கரிநிரைகள்

வேலஒத்த விழிமடவார் விளிந்தபொழு திடைவிழுந்த
பாலஒத்தமுத்துவடப் பத்திஎலாம் பாய்ந்தெடுத்தார்.

3594 யாவும் அள்ளினர்.

நூடைகொடிகள் சாமரங்கள் கோலமணித் தண்டிகைகள்
உடைகளுயர் நெற்பொதிகள் ஒட்டகங்கள் கட்டமைந்த
படைவெடிகள் வாள்வேல்கள் பல்வேறு பணிவகைகள்
விடைகள்பசு நிரைகள்எலாம் வேறுவே றுறக்கவர்ந்தார்.

3595 உள்ளம் களித்தார்.

திருமகளுக்கு உறைவிடமாய்ச் செழித்திருந்த பாஞ்சைநகர்ப்
பெருவளங்கள் யாவுமே பேணலர்கள் மிகவாரி
ஒருகளத்தில் உறத்தொகுத்தார்; உயர்அரசவளமுறவே
அருவளத்தர் ஆயினர்; அகமகிழ்ச்சி மீக்கூர்ந்தார்.

3596 உருமாறி நின்றது.

பெருவரரி நீர்இழந்த பெற்றிபோல் பெருநகரம்
உருமாறி உயிர்பிரிந்த உடலாகி ஒளியிழந்து
திருமாறி நின்றதந்தோ திரையாழி நிலவாழ்வை
ஒருவாழ்வா உள்ளியுளம் செருக்குவரோ? உணர்வுடை
யார்.

3597 உலகோர் பரிதபித்தார்.

போர்மகட்கும் கலைமகட்கும் புகழ்மகட்கும் நிலையமாய்ச்
சீர்வளங்கொண் டினிதிருந்த தென்பாஞ்சை சீரழிந்தே
ஓர்வளமும் இல்லாமல் ஒன்னலன்கைப் பட்டதுஎனப்
பார்வழங்கிப் பலபுலம்பிப் பரிதபித்து நின்றதுவே.

3598 எட்டனுக்கு அளித்தார்.

தென்பாஞ்சைக்குரித்தாகச் சேர்ந்திருந்த நகர்களெலாம்
அன்பாக எட்டப்பற்கு அளித்துஆன வரிசெலுத்தி
இன்பாக வருகவென இனிதியம்பி இதம்செய்தார்
முன்பாக அவன்புரிந்த முதல்உதவிக்கு இதுபுரிந்தார்.

3599 உளம் களித்தான்.

செய்யாத அழிசெயல்கள் செய்தாலும் செழியபொருள்
கையார வந்தமையால் கருதியவன் உளங்களித்தான்:
பொய்யான இவ்வுலகில் புலையாடி யானாலும்
எய்யாத பொருள்எய்த எண்ணுவார் மண்ணுவார்.

3600 வணங்கி நின்றான்.

உற்றபெரு வளங்கொக்கண் டுள்மகிழ்ச்சி மீக்கொண்டு
பெற்றபிள்ளை உமக்குநான் ஆதலினல் பேணலரால்
எற்றேனும் துயரங்கள் எய்தாமல் காத்துநீர்
முற்றுள வேண்டுமென முடிவணங்கி முன்நின்றான்.

3601 வாக்கு உறுதி தந்தார்.

நின்றவனை நேர்நோக்கி நேரலரால் இடர்ஒன்றும்
ஒன்றுமல் காத்துன்னை உவந்தருள்வேம் உளம்கலங்கல்
என்றவனை உளம்தேற்றி இருத்தியபின் இறுதியாய்
அன்றவனைச் செயும்படியா அறுதியிட்டுஒன்றுரைசெய்
[தான்.

3602 பாஞ்சையை அழி.

பற்றலர்க் கிடமாய்நின்ற பாஞ்சையம் பதியைவென்று
முற்றும்கைப் பெற்றேம்; உள்ள முதல்எலாம் வாரிக்
[கொண்டோம்;
மற்றிதை இனிமேல் இந்த வடிவுடன் மாநி லத்தில்
உற்றிட விடாமல் யாவும் உருவற ஒழிக்க வேண்டும்.

3603 உருவற ஒழி.

வெள்ளமாய் மேவி வந்த வெள்ளையர் படைகள்எல்லாம்
துள்ளிமுன் துடிக்கக் கொன்று தொலைவிலா வலியர் ஆகி
உள்ளமர்ந் திருக்க ஒன்னர்க் குறுதியா யிருந்த திந்த
ஒள்ளியே நகரே இத்தை உருவுடன் விடுத லாமோ?

3604 **சிதைத்து விடு.**

இந்நகர் வலியால் அன்ரே
இம்பர்நா டெங்கும் வீர
மன்னன்என் று உயர்ந்த கீர்த்தி
மருவிவீற் றிருந்தான் மாற்ரூன்;
அன்னவன் தனைப்போல் இந்த
அணிநகர் தனையும் மாய்த்துச்
சின்னபின் னங்கள் செய்து
திறனழித் திடுதல் சீரே. (247)

3605 **பதியைப் பாழாக்கு.**

பற்றலன் ஆகி நின்ற
பதியினை வென்றேம் ஏனும்
உற்றவற்கு இடனுய்ந் நின்ற
ஒண்பதி இதைவி டுத்தால்
முற்றவும் வெற்றி கொண்ட
முதன்மையை அடையேம்; மற்ரோர்
கொற்றவன் நுழைந்து வெம்போர்
கொள்ளினும் கொள்ளு மன்றே. (248)

3606 **கருவறக் களை.**

திருவெலாம் இழந்து நின்ற
சீர்எலாம் இழந்த தேனும்
உருவினை யுடைய தாகி
இன்னகர் உறைந்து நின்ரூல்
பெருமிதம் குன்றி மீண்டும்
பிழையில்நாம் பிழைக்க நேர்வேம்;
கருதலர் கருதா வண்ணம்
கருவறக் களைதல் நன்றே. (249)

3607 **உழுது புழுதி ஆக்கு.**

ஆதலால் இந்தப் பாஞ்சை
அணிநகர் அதனில் உள்ள
மீதொளிர் மாட கூடம்
யாவையும் தட்டி வீழ்த்திப்

போதிய புழுதி ஆக்கிப்
புவியொடு புவியாச் சேர்த்துக்
கோதற உழுது கொட்டை
முத்தினை விதைக்க வேண்டும். (250)

எட்டன் இசைந்தான்.

3608 அவ்வுரை கேட்ட லோடும்
அகமகிழ்ந்து எட்டப் பன்தான்
தெவ்வருக்கு இடனுய் நின்ற
இதனையும் சிதைத்து அழித்துச்
செவ்வையாய் உழுது செற்றம்
தீர்ந்திடக் குருக்கு முத்தும்
வவ்விநான் விதைத் தொழிப்பேன்
மன்ன!என்று உவந்து சொன்னான். (251)

தலைவன் போனான்.

3609 சொன்னபின் அவன் எழுந்து
சூழ்ந்தவெம் படைக ளோடு
மன்னிய நெல்லை சார்ந்து
வலசிங்கன் பிற்கட் டாதி
துன்னிநின் றவர்பால் எல்லாம்
சுகமுடன் விடைகள் பெற்றுத்
தன்னுளம் மகிழ்ந்தெ ழுந்து
சங்கமன் னவரைச் சார்ந்தான். (252)

தருக்கி இருந்தான்.

3610 சார்ந்துமுன் தொழுது நின்ற
தானைநா யகனை அன்னர்
சேர்ந்துப சரித்து வைத்துச்
சீர்பல செய்து வெற்றி
நேர்ந்ததை வினவி ஓர்ந்து
நெஞ்சுவந் தவனை உய்த்தார்:
பேர்ந்துதன் மனைய டைந்து
பெருமையோ டவன் இருந்தான். (253)

கும்பினியார் மகிழ்ந்தார்.

3611 அருந்திற லாளன் ஆகி
அமரெலாம் அடர்ந்து வென்று
பெருந்திகில் புரிந்து பாஞ்சைப்
பெரும்பதி யிருந்து வந்த
திருந்தலன் திறல ழிந்து
தீர்ந்தனன்; இனிமேல் யாதும்
வருந்துதல் இல்லை என்ன
மன்னவர் மகிழ்ந்தி ருந்தார். (254)

நகரம் அழிந்தது.

3612 சின்னட்கள் அகன்றபின்னர்ச் சேனமன்னன்
சொன்னபடி எட்டப் பன்தான்
தன்னட்கள் தமைஏவித் தருக்கோடு
பாஞ்சைநகர் தன்னைச் சார்ந்து
மின்னென மாளிகைகள் மேலான
யாவையுமே இடித்து வீழ்த்தி
முன்னுக உழுதுகொட்டை முத்தைவிதைப்
பித்துவினை முடித்துப் போனான். (255)

கண்ணீர் சொரிந்தார்.

3613 விண்ணேடு கொடிகளுடன் விளங்கிநின்ற
மணிமாட கூடம் எல்லாம்
மண்ணேடு மண்ணுகி மலர்த்தடங்கள்
மேடாகி வாவி யாவும்
உண்ணீர்ஒன் றில்லாமல் உலர்ந்துபோய்
உற்றவெலாம் உருக்கு லைந்து
கண்ணுரக் கண்டவர்கள் கண்ணீர் அங்கு
உகுமாறு கழிந்து நின்ற. (256)

உலக வாழ்வின் நிலை.

3614 வீரமா நகரம்என மேதினியில்
மெய்ப்புகழை விளைத்து மன்னர்
பாரமா முடிபுனைந்து பாராள
நிலைத்திருந்த பாஞ்சை இன்று

பூரமாய் நிலைதிரிந்து புல்முளைத்துப்
போயுளதே! புவியின் வாழ்வை
ஆரம்மா நிலையாக அடைந்திருந்தார்?
அடைந்தஎலாம் அழிவே அன்றே? (257)

யாவும் கானல் நீரே.

3615 அழியாத பேரின்ப அமலவாழ்வு
அடையாமல் அதை மறந்தே
இழிவான இகவாழ்வை இனிதினிதுஎன்று
ஏமாந்திங் கிருப்பது எல்லாம்
கழிவாகிப் பொய்யாகக் கனிந்துஎதிரே
தோன்றிநின்ற கானல் நீரைப்
பொழிவாச நறுமலர்த்தண் பொய்கைஎனப்
போந்ததுஓர் புலையாம் அன்றே? (258)

அழிந்த தேதி.

3616 வில்லாண்டு வேலாண்டு வெந்திறல்கொள்
படைக்கலன்கள் எல்லாம் கொண்டு
மல்லாண்ட திண்டோள்எம் மன்னவர்கள்
வழிவழியே மகிழ்ந்து வாழப்
பல்லாண்டு தழைத்திருந்த பாஞ்சாலங்
குறிச்சிநகர் பகைவாய்ப் பட்டுச்
செல்லாண்டு தொளாயிரத்தோர் எழுபத்தேழ்
வைகாசி சிதைந்த தம்மா! (259)

அரசு மாறியது.

3617 தொண்ணூற்று றெனஅமைந்த தொல்வளங்கொண்
நகர்களொடு சொந்த மான
கண்ணூற்று பண்ணைகளும் கடல்வளமும்
பிறவளமும் கவர்ந்து கைக்கொண்டு
எண்ணூற்றேர் ஆண்டுமுதல் எட்டப்பன்
திறைசெலுத்தி இசைந்தி ருந்தான்
விண்ணூற்று புகழோடு வேந்தனிவன்
வேருகி வீழ்ந்தி ருந்தான். (260)

ஒரு மகன் இருந்தான்.

3618 மன்னனுறு குடியில்ஒரு மங்கைமட்டும்
நிற்றசூலி மதிஒன்றின்முன்
அன்னகர் இடைநீங்கி அயல்இருந்தான்
கும்பினியார் அவளைப் பற்றி
நன்னயமாக் கொண்டுபோய் நலமாகப்
பேணிவந்தார் அவள் வயிற்றில்
மன்னிஒரு மகன்பிறந்து செல்லமய்யா
எனும்பெயரால் வளர்ந்து வந்தான். (261)

மறு கிளை மருவியது.

3619 அத்தோன்றல் அங்கமர்ந்து கலைபயின்று
பருவமுற அடைந்த பின்னர்
இத்திசைவந் தினமுடைய செக்காரைக்
குடிஎனும்ஊர் இடம்அ மர்ந்தே
ஒத்ததிரு மணமுடித்துள் உவந்திருந்தான்
அவன்வழியில் உற்றோர் இன்றும்
அத்தலத்தே அமர்ந்துமுறைப் படிபடியும்
அடைந்துகிளை யடைந்துள் ளார்கள். (262)

முதன்மையான கிளை.

3620 முன்னிருந்த மன்னன்முதல் கிளைஒன்று
வேடபட்டி என்னும் ஊரில்
மன்னியுள்ளது; உறவோரும் மரபோரும்
மற்றுள்ள இடங்கள் தோறும்
அன்னியம்ஒன் றில்லாமல் அமர்ந்துள்ளார்;
அரசழிந்து போன பின்னர்
தொன்னிலைமை தனையிழந்து துயர்கூர்ந்தார்
பின்தெளிந்து தொடர்ந்துள் ளார்கள். (263)

எழுநூறு ஆண்டு.

3621 வேட்டைமேல் தொடர்ந்துவந்த எழுநாயை
ஒருமுயல்முன் வெருட்டி வென்ற
பாட்டைநேர் பார்த்தரசன் பணித்தமைத்த
பாஞ்சாலங் குறிச்சி என்னும்

கோட்டைஎழு நூருண்டு கொற்றமொடு
குலவிநின்றது; இன்று குன்றி
ஓட்டையாய் ஒழிந்ததே! அவ்வேழின்
ஒழிவுண்மை உணர்த்திற் றன்றே. (264)

அதிசய மனிதன்.

3622 *நான்கண்ட மனிதருள்ளே ஊமையன்ஓர்
அதிசயத்தின் உருவாய் நண்ணி
வான்கண்ட வளமோடு வாழ்ந்துவந்தான்
மருமம்ாய் மறைந்தான் இன்று
கான்கண்ட படையுடையான் கருதலரும்
பெருமிதமாக் கருதிக் காண
ஊன்கண்ட வடிவேலான் ஒருவருக்கும்
தெரியாமல் ஒருவி நின்ருன். (265)

---

*ஊமைத்துரையின் உறுதி ஊக்கங்களையும் வீரத் திறல் களையும் ஓர்ந்து சீமைத்துரைகள் யாவரும் வியந்திருக்கின்ற னர். சேணத் தலைவன் எழுதியுள்ள குறிப்பு ஒன்று ஈங்கு அறிய வுரியது.

"One of the most extraordinary mortals I ever knew."
(R. G.)

"நான் அறிந்த எவரினும் இவர் ஓர் அதிசயமான அற்புத மனிதர்" என்று எதிரிகளும் இப்படி வியந்துள்ளமை யால் இவருடைய நிலைமை தலைமைகளை நாம் ஓர்ந்து உணர்ந்து உள்ளம் பரிந்து நிற்கின்றேரும்.

துரைச்சிங்கம் மாண்டபொழுது ஜெனரல் வெல்ஷ் (General Welsh) தளபதி வரைந்துள்ள குறிப்பை அறிந்தவர் எவரும் அழுது மறுகுவர்.

"He was at last doomed to grace a gallows, in reward for the most disinterested and purest patriotism." (G. W.)

"சிறிதும் தன்னலம் கருதாத பரிசுத்தமான தேசாபிமா னத்தால் போராடி முடிவில் தூக்கில் அவர் மாண்டார்" என்னும் இது ஈண்டு எண்ணி உணர வுரியது.

தாம் பிறந்த நாட்டின் மானத்தைக் காப்பாற்றிச் சுதந்தி ரத்தை நிலைநிறுத்தவே பாஞ்சை மன்னர் மூண்டு போராடி மாண்டு போயுள்ளனர். அந்த உண்மையை இந்தக் காவி யம் சீவிய ஓவியமாய் யாண்டும் நேரே விளக்கியுள்ளது.

பரமனுக்கே உரிமையாய் நின்றான்.

3623 என்றுவெள்ளத் தளபதியும் சேனைகளும்
ஏங்கிநிற்க; எவரும் எங்கும்
துன்றிநின்று சுடுவெடிகள் சூழ்ந்தடர்ந்தும்
தோன்றுமல் தோய்ந்து சென்றான்;
அன்றுமுதல் இன்றுவரை யாருமே
அவனிலையை அறிய கில்லார்;
என்றுமுள்ள பரமனுக்கே அவனுரிமை
யாய்நின்றான் இறைமை யூர்ந்தே. (266)

சென்ற நிலை.

3624 தேசஅதி பதியாகிச் சிறந்திருந்து
தெவ்வரைநேர் செயிர்த்து மூண்டு
பேசரிய திறலோடு பேராண்மை
ஆற்றினான்; பிழையாய் மாற்றூர்
நீசமுறு சதிபுரிய நிலைகுலைந்து
நிலைபெயர்ந்து நிலையை எல்லாம்
யோசனைசெய் துளந்தேறி ஈசனருள்
உறுவதையே ஓர்ந்து சென்றான். (267)

இனிமேல் காண்பாம்.

3625 இவ்வாறு முடிவடைய; இகலுடையார்
உளமகிழ; இனமாய் மீந்தோர்
ஒவ்வாத இடர்கள்எலாம் உற்றுலைந்து
துயரமுற; ஊழ்வாய்ப் பட்டும்
தெவ்வேறு படைக்கடலைக் கடந்துமலைத்
தடமேறிச் சேர்ந்த மன்னன்;
எவ்வாறங்கு இருந்தான்பின் என்செய்தான்?
என்பதனை இனிமேல் காண்பாம். (268)

31-வது படலம் முற்றிற்று.

ஆகக் கவிகள் 3625.

———

மூப்பத்திரண்டாவது

கதி எய்திய படலம்.

பாஞ்சைக்கோட்டை மேல் படைஎடுத்து வந்த ஆங்கிலேயர்களை எதிர்த்து அதிசய வீரேடு ஊமைத்துரை போராடி வந்தார். பலமுறையும் வென்றார். வென்றும் மூடிவில் பகைவர் படுமோசமாய்ப் புரிந்த கொடிய சதி வஞ்சனையால் கோட்டையைவிட்டு வெளி ஏறினர். சிவகங்கைச் சிற்றரசனுகிய மருதுபாண்டியனை மருவிப் பொருபடை திரட்டி மீண்டும் போருக்கு மூண்டு நின்றார். நீண்ட ஆங்கிலப் படைகள் நெடிது மூண்டு வந்து கடிது போராடின. அப்போரில் இருதிறத்திலும் பலர் மாண்டனர். இறுதியில் தனது அருமைத் தம்பி முதலாகப் பல துணைவர்களை இழந்துவிட்டமையால் உள்ளம் வெறுத்து உலகைத் துறந்து வடதிசை நோக்கி நடந்தார்; காசியை அடைந்தார். விசுவநாதரைத் தெரிசித்துச் சிலநாள் அங்கே தங்கியிருந்தார். பின்பு இமயமலையை அடைந்தார். அரிய துறவிகளும் பெரிய முனிவர்களும் யோக சித்தர்களும் உலகப்பற்றுகள் அற்று உண்மைப் பொருளையே கருதி ஆன்ம சிந்தனையாளராய் அமர்ந்திருப்பதைக் கண்டார்; உள்ளம் தெளிந்தார். உறுதி உண்மைகளை உணர்ந்தார். உற்ற கவலைகளை எல்லாம் மறந்தார். பரம்பொருளையே சிந்தித்துச் சித்த சாந்தியுற்றுச் சிவபதம் பெற்றார். அந்த அரிய நிலைமை நீர்மைகளை எல்லாம் இந்தப் பகுதியில் தலைமையாய்க் காணவருகிறோம். யாவும் கருதி உணர்ந்து தெளிய வுரியன.

சிறுமலையுற்றது.

3626 திருமயத்தினில் தெவ்வர்கள் சேர்ந்துடன்
பொருமயக்கினில் பொங்கி அடரஅப்
பெருமயக்கில் பிழைத்துப் பிழையிலா
ஒருமயக்கில் சிறுமலை உற்றனன். (1)

திண்டுக்கல் சேர்ந்தது.

3627 உற்று நின்றவன் ஊக்கி எழுந்துபின்
அற்றம் நோக்கி அகன்றடர் திண்டுக்கல்
பொற்றை வந்து பொருந்தி இருந்தனன்;
வெற்றி எய்தும் விதத்தினை நாடியே. (2)

சுருளிமலை அடைந்தது.

3628 அந்த மாமலை தன்னில் அமர்ந்தவன்
வெந்திறற்பகை மேவவும் மேலடர்
தந்தி ரத்தொடு தாவி எழுந்துமே
முந்தி வந்து சுருளியை முன்னினன். (3)

கண்ட காட்சிகள்.

3629 அருளில் ஏறி அறத்தில் அமர்ந்துள
மருளில் மாதவர் மன்னி வதியும்அச்
சுருளி மாமலை தோன்றல்வந் தேதறவும்
தெருளில் ஏறிய சிந்தையன் ஆயினன். (4)

உவந்து உலாவினன்.

3630 பொறிகள் ஓடிப் புலன்களில் வாடிடாது
அறிவை நாடி அகத்தை அடக்கிமெய்
நெறியை நேடிய நீள்தவ யோகிகள்
உறைய நாடி உவந்தங்கு உலாவினன். (5)

மலையின் நிலை.

3631 கோங்கு வேங்கை குரவம் வகுளம்விண்
ஓங்கு சாலம் அசோகம் மருதுயர்
தேங்கும் மாவும் பலாவும் செருந்தியும்
பாங்கர் எங்கும் படர்ந்து மிடைந்தன. (6)

வியந்து நின்றனன்.

3632 குறவ ரும்குலை அஞ்சி மருளுற
நிறைவை எய்திய நீள்பெருஞ் சோலைகள்
துறைதொ றும்திரள் துன்னி நிலைத்துள
பொறையை நோக்கிப் புகழ்ந்து வியந்தனன். (7)

அல்லல் நீங்கினன்.

3633 விண்அளாவிய பூம்பொழில் மேவியே
கண்அளாவிய காட்சிகள் கண்டதும்
மண்அளாவிய கீர்த்திகள் மண்டிய
அண்ணல் உள்ளத்து அலமரல் நீங்கினன். (8)

தனி அமர்ந்தான்.

3634 மானும் வேழமும் வாளரி வேங்கையும்
பானும் வந்த படிதெரி யாதடர்
கானும் எங்கும் கலந்தஅக் காவினுள்
தானும் நெஞ்சும் தணந்தங் கமர்ந்தனன். (9)

வேடுவர் பேணினர்.

3635 கான வேடுவர் கண்டு கனிந்திந்த
மான வன்தனை மாண்புடன் பேணியே
தேனும் செந்தினை மாவும் தினம்தினம்
ஆன அன்பொடு அளித்தனர் ஆர்வமாய். (10)

உண்டு உறைந்தான்.

3636 நாட்டை ஆண்டு நகரில் அமர்ந்துயர்
தேட்டம் யாவையும் சேர்ந்து சிறந்தவன்
காட்டில் வந்துவெங் கானவர் தந்திடும்
ஊட்டம் உண்டுஅங்கு உறைந்திட லாயினன். (11)

ஊழ்வலி ஓர்ந்தான்.

3637 சார்ந்தி ருக்கும் தவத்தினை நோக்கினன்;
நேர்ந்த வெய்ய நிலையினை எண்ணினன்;
ஆர்ந்த துன்ப அனுபவம் ஊழினல்
கூர்ந்து நின்ற கொடுமைஎன் றுஓல்கினன். (12)

உள்ளம் உளைந்தான்.

3638 வெய்ய தெவ்வர் விரகுடன் சூழ்ந்தடல்
செய்ய நின்று சினந்தட ராவகை
மெய்யில் ஏறிய வெஞ்சுரம் மீறலால்
உய்ய நேர்ந்ததுஎன் றுஉள்ளம் உளைந்தனன்.

ஒழிந்ததை உணர்ந்தான்.

3639 போரில் மூண்டு பொருநரைக் கொன்றெனது
ஊரில் நீண்டுள ஒன்னலர் யாரையும்
வாரி வாட்கிரை வைத்தல் ஒழிந்திந்த
மூரி மால்வரை உற்றது மூடமே. (14)

நேர்ந்ததை நினைந்தான்.

3640 மூண்ட போர்தொறும் மூண்டவர் யாவரும்
மாண்டு வீழ மடுத்தமர் செய்தனென்
நீண்டு நின்றுள இம்மலை நேர்ந்துநான்
தாண்டி வந்தது சாலவும் தாழ்வரோ! (15)

கருதி மறுகினான்.

3641 கொன்று இரத்தம் குடித்திடும் வீரமே
ஒன்றி யுள்ள உயர்குலத் தொன்றியும்
துன்று வெம்பிணி சூழ்ந்த தொடர்பினால்
நின்று தீர்ந்தது நீள்பழி யாம்என்றான். (16)

எண்ணி இனைந்தான்.

3642 தானை யோடுதன் தம்பியும் மிக்கநண்
பான யாவரும் அங்கவர் கையினில்
ஊனம் உற்றிட உய்ந்திவண் உற்றதே
ஈனம் ஆம்என எண்ணி இனைந்தனன். (17)

சின்னபொம்மு எய்தினான்.

3643 இன்ன வாறு பலபல எண்ணிநீள்
இன்னல் எய்தி எதிர்வதை எண்ணியே
மன்னன் உள்ளம் மறுகி இருக்குநாள்
சின்ன பொம்மெனும் தீரன் அங்கு எய்தினான்.

மன்னனைக் கண்டான்.

3644 தலைவன் நீங்கித் தனிஅகன் றுள்ளதோர்
நிலையை ஓர்ந்தவன் நேயம்மிக் கோங்கிஅம்
மலைஅ டைந்தனன் மன்னனைக் கண்டனன்
தலைவ ணங்கினன் தாழ்ந்துமுன் நின்றனன். (19)

உன்னி உசாவினன்.

3645 நின்ற வன்தனை நோக்கிநீ எவ்வகை
இன்று வந்திவண் எய்தினை என்றுளம்
ஒன்றும் அன்போடு உவந்துகொண் டோரிடம்
நன்று தங்கி நலங்கள் உசாவினன். (20)

உற்றதை உரைத்தான்.

3646 உற்ற செய்தி உரைக்கநேர் அஞ்சியே
மற்றவன் மனம் நொந்து மறுகினன்;
கொற்ற வன்நிலை கூறுக கூறென
முற்ற மைந்து மொழிந்திட லாயினன். (21)

3647 **உளநிலை குலைந்தான்.**

வெய்ய போரினில் வீரவெஞ் சேனையை அழித்துச்
செய்ய தம்பியைத் தீக்கொடுந் தூக்கினில் இட்டே
ஐயகோ அவர் கொன்றனர் என்றவன் அழுதான்;
ஐயன் அங்கது கேட்டதும் அகம்நிலை குலைந்தான். (22)

3648 **துடித்துப் பதைத்தான்.**

தம்பி மாண்டனன் எனுமொழி செவியினில் விழுமுன்
வெம்பு கண்ணினீர் விரிநிலம் விழுந்தது; விழுந்து
தும்பி பட்டவெந் துடிப்பெனத் துடித்தவன் பதைத்தான்
நம்பி பட்டதை நாவினுல் நவில்வதிங் கெவனே? (23)

3649 **கருதி அயர்ந்தான்.**

துடித்து நின்றவன் துணிந்துபோய்ப் பகைவரை இன்னே
முடித்தும் என்றெழும் முடிவினில் முடிந்ததை முன்னும்
மடித்து வாயிதழ் கடித்திடும் மருவிய பழியை
அடுத்த டுத்தகத் தழல்எழக் கருதிநின் றயரும். (24)

3650 **ஆவலித்து அழுதான்.**

தெண்டி ரைப்பெருங் கடல்எனத் தெவ்வர்கள் திரண்டு
மண்டி நின்று அமர் புரியினும் மறலிவந்து உயிரை
உண்டு போவல்என் றுருப்பினும் உளம்கலங் காத
திண்டி றற்பெருஞ் சேவகன் ஆவலித்து அழுதான்.

3651 **தம்பியை எண்ணித் தவித்தான்.**

ஐயனே! எனது அரும்பெறல் துணைவனுய் அமைந்த
மெய்யனே! உனை வெம்பகை இடம்கொடுத்து அந்தோ!
வெய்ய னேன்வெளி வந்தது வினையினுல் அன்றே?
உய்யவேஇனி உயிருடன் அழுவதிங்கு உரவோய்! (26)

3652 **வெற்றி வீர!**

உற்ற உன்வயது இருபத்தொன்று ஆகுமுன் உலகை
முற்றும் நீத்துயிர் முடிந்தனை முடிவிலாது எதிர்ந்த
பற்ற லார்படைக் கடலினை வடவையின் உண்ட
வெற்றிவீர! நான் விளிகிலாது இருப்பதுஎன் வினையே!

3653 **மாண்டு நீ போக ஈண்டு நான் உள்ளேன்.**

ஆண்டு முப்பது வயதுஎனும் பருவத்தை அடைந்தேன்
மூண்ட போர்தொறும் முனைமுகம் புகுந்தடல் புரிந்தும்
மாண்டு போகிலேன்; மாண்டுநீ போனதை அறிந்தும்
ஈண்டு நிற்கின்றேன்; இருநிலம் ஆளவோ ஐயா! (28)

3654 **புழு எனப் பதைத்தான்.**

என்று மன்னவன் எய்திய இழவுஎனும் கொடிய
துன்று வெந்துயர்த் தீச்சுடப் புழுவெனத் துடித்துக்
கன்றி நொந்தனன்; காளையாய்க் கழிந்துள துணைவன்
தன்றி றங்களைத் தனித்தனி நினைந்துளம் தளர்ந்தான்.

*** திக்கு விசயன் திருமகனே!**

3655 திக்கெலாம் உறவென்ற திறல்விசயன்
திருமைந்தர் எனத்தி கழ்ந்து
மிக்கசீ ருடன்மூவர் மேவினின்றேம்;
மேதக்க முன்னேன் அன்னே!
தக்கதுணை மந்திரிஒன்று இல்லாத
தாழ்விஞல் தாழ்ந்து பட்டான்;
ஒக்கவுனை இன்றிழந்தேன்; ஒருவன்நான்
நின்றிழிந்திங்கு உழல்கின் றேனே! (30)

---

* திக்குவிசயத்துரை என்று பேர் பெற்றிருந்த செகவீரக் கட்டபொம்மனுக்கு மூன்று மைந்தர்கள் ஆன்ற சீருடன் பிறந்தனர். வீரபாண்டியன், தளவாய்க் குமாரசாமி, துரைச் சிங்கம் என்னும் பேரினர். முன்னவனையும் பின்னவனையும் இழந்ததை எண்ணி இன்னலுழந்து இவன் வருந்துகிறுன்.

கண்ணுன தம்பியே!

3656 அண்ணு!என்று எனை அழைக்கும் ஆர்வச்சொல்
இனிஎங்கே ஆர்ந்து கேட்பேன்?
நண்ணுர்எல் லாம்நடுங்க நண்ணுசமர்
பூமியிடை நண்ணி ஏறி
விண்ணேரும் வியந்திடநீ வினையாடும்
விறல்இனிவேறு எங்கே காண்பேன்?
கண்ணுன தம்பிஉனைக் கையகன்று
மெய்யமர்ந்து கலுழ்கின் றேனே. (31)

துரைச்சிங்கமே!

3657 வரைச்சிங்கம் மதம்ஏறி வன்கோபத்
துடன்மண்டி வந்த போதும்
நிரைச்சங்கே மாண்டதுஎன நேரமூண்டு
பொருதழித்து நிருபர் எல்லாம்
தரைச்சிங்கம் இதுஎனவே தாளரிகொண்டு
ஆளரிபோல் தழைத்திருந்த
துரைச்சிங்கமே!உன்னைத் தொடர்ந்துநான்
வருகின்றேன் துணைவன் அன்றே? (32)

விதி மூண்டதே!

3658 நின்றநிலை பிரியாமல் நிலையாகத்
திருநகரில் நிலைத்து நின்ருல்
துன்றிவரு பகைவர்எலாம் துகள்படவே
தொலைத்தொழித்துத் தொலையாது என்றும்
வென்றியுடன் விளங்கிநிற்பேன்; விதிமூண்ட
வெம்புகையால் வெளியே வந்து
கன்றுதுயர் உடையனுய்க் கழிகின்றேன்
நீயும்எனைக் கழித்தாய் அந்தோ! (33)

துணையே! உனை இழந்தேன்.

3659 வாள்வலிபோய் வேல்வலிபோய் வன்பரியா
திகள்வலிபோய் மருவி நின்ற
ஆள்வலிபோய்க் கேள்வலிபோய் அடுபகைவர்
கொடுவிரகால் அல்லற் பட்டு

மாள்வலியாய் நின்ருலும் மன்னியவுண்
துணைநினைந்தே மகிழ்ந்திருந்தேன்
தோள்வலியாய் நின்றளன்றன் துணையே!இன்று
உனை இழந்தேன்; தொலைந்தேன் எல்லாம்.

அந்தோ! அழிந்தாயே!

3660 வில்எடுத்து நீநின்ருல் விறல்விசயன்
இவன்என்பார்; வேல்கைக் கொண்டு
மல்எடுத்து வந்தனையல் மாமுருக
னேஎன்பார்; வாள்கை ஏந்தி
வல்எடுத்த களம்புகுந்தால் வாள்அபிம
னேஎன்பார்; வாளா அந்தோ
கல்எடுத்த மனப்பகைவர் கையகப்பட்டு
அழிந்தாயே! கருமம் என்னே! (35)

கொற்றமுறு குலக் கொழுந்தே!

3661 பெற்றதுணை யாவுமே பிரிந்தெழுந்து
வந்தனைனப் பின்தொடர்ந்திங்கு
உற்றதுணை யாய்என்றும் ஒருவாமல்
உறுதிசெய்துள் உதவி நின்ற
கொற்றமுறு குலக்கொழுந்தே! கோமகனே!
மாமதனே! கொடியேன் உன்னை
இற்றிழந்தேன்; இனியிந்த உலகமெலாம்
எய்தினும்என்? இழவே அந்தோ! (36)

உயிரை விடத் துணிந்தது.

3662 என்றின்ன பலபன்னி இன்னல்மீக்
கூர்ந்துநைந்த இறைவன் தன்னை
அன்றங்கே வந்தடைந்த சின்னபொம்மன்
எனும்அறிஞன் ஆற்றித் தேற்றி
நின்றுமிக உபசரித்து நிலைதெளியப்
பலமொழிந்தான்; நெஞ்சம் தேறாது
ஒன்றியதன் இன்உயிரை ஒழித்துவிடத்
துணிந்துளத்தே ஊக்கி நின்ருன். (37)

3663 **உற்றவன் உளைந்தது.**

முன்னவனே முதலிழந்தேன் மூண்டுதொடர்ந்துடனிருந்த
பின்னவனே இன்றிழந்து பெரும்பாவி யாகி நின்றேன்;
இன்னமிந்த உலகதனில் இருப்பதினும் இறப்பதுவே
நன்னரெனத் துணிந்தெழுந்தான் நண்ணினவன் நடுங்கி
[நின்றான்.

3664 **ஊக்கித் தடுத்தது.**

எழுந்தவனே விரைந்துதொழு திடைதழுவி உடைவாளை
அழுந்துறத் தன்கை அனைத்துளம்அண்ணலே அவலமிது
தொழுந்தகைய கோமகனே! சூழ்ந்தருள்என் றுரைத்தழு
[தான்
ஒழிந்தவனும் துணிந்ததனே ஒருமுகமா யுள்ளுணர்ந்
[தான்.

3665 **உண்மையை ஓர்ந்தது.**

வடிவாளால் என்தலையை வன்தரையில் விழவுருட்டி
மடிவேனே ஆமாகில் மானிலத்தோர் ஏசுவரே;
படியாக இவ்வுடலைப் படைத்தபிரான் பணித்துளநாள்
முடிவாகு மேயன்றி முடிவிடையில் மூளாதே. (40)

3666 **உணர்ந்து நின்றது.**

புல்லாதி யாயிழிந்த புன்பிறப்பில் புல்லாமல்
வல்லாண்மையாலுயர்ந்த மன்குலத்தில் வந்துதித்தேன்
எல்லாரும் தொழுதேத்த இருந்தரசு புரிந்துநின்றேன்;
அல்லாரும் பழிவழியில் அழிந்தொழிதல் அழகன்றே.

3667 **நிலையினை இகழ்ந்தது.**

பற்றலரைப் பாடழித்துப் படுகளத்தில் பாடெய்தி
வெற்றிமிகப் பெற்றதெல்லாம் வீணுகி விளிந்தனவே
உற்றகொடும் போர்களிலே உயிர்ஒழிந்து போகாமல்
இற்றிந்த நிலையிருத்தல் இழிவிழிவே என இகழ்ந்தான்.

3668 **கதி இழந்தேன்.**

காடிழந்து நகரிழந்து நலமிழந்து குலமிழந்து
பீடிழந்து கிளையிழந்து பேரிழந்து பெருவீரப்
பாடிழந்து பதம்இழந்து பற்றிநின்ற துணையிழந்து
நாடுழந்து படுகின்றேன் கதியிழந்து கழிகின்றேன்.

3669 **ஒண்டியானேன்.**

மண்டிவந்த போர்கள்தொ றும்
மாற்றலர்மண் ணுகிவிழத்
திண்டிறல்கொண்டு அடல்ஏறிச்
சிங்கம்எனத் திசைகள்எங்கும்
கொண்டிருந்த கீர்த்தி அந்தோ
குலைந்திந்த நிலைமலையில்
ஒண்டியா யுறைந்திடவும்
ஊழ்வினைஒன் றிருந்துளதே! (44)

3670 **நைந்துள்ளேன்.**

கரியூர்ந்து பரியிவர்ந்து காவலர்கள் புடைசூழ
அரிஏறென்று இருந்தநான் அரசிழந்து பழியூர்ந்து
நரியாதி இடைசூழ நண்ணியிங்கே நைந்துள்ளேன்
எரியேறு தீவினையின் இயல்பிருந்த வாறிதுவோ? (45)

3671 **காசி சென்று கங்கை ஆடுவேன்.**

என்னேஇவ் உலகவாழ்வு எனமிகவும் வெறுத்திகழ்ந்து
நன்னேய முடனங்கே நண்ணினவன் தனைநோக்கித்
துன்னுகொலைப் பழிதீரத் தொல்காசிப் பதியடைந்து
பன்னுகங்கை ஆடிவர மனம்துணிந்தேன் ஆதலினால்:

3672 **வேலன் அருளே துணை.**

உன்னுடைய ஊர்க்குநீ
உடன்எழுந்து போய்வாழ்க:
என்னுடைய நிலைஒன்றும்
யார்க்குமே இயம்பற்க:
மன்னுடைய மாண்புடையேன்
மாதவம்போய்ச் செய்கின்றேன்
மின்னுடைய வேலன்அருள்
மேவும்என விடைகொடுத்தான். (47)

3673 **விலகிச் செல்க.**

போயகல்க! என்றரசன் புகன்றவுடன் பொம்மனவன்
நேயமுடன் நின்றுஅழுது நேர்ந்துநான் உடன்வருவேன்
ஆயபணி புரியஅயல் யாரும்இல்லை ஆதலினல்
மேயஎனை விலக்கற்க மெய்த்தவனே!எனத்தொழுதான்

3674 **பற்று அற்றேன்.**

தொழுதவனை முகம்நோக்கித் துரைமகனும் உளம்மறுகி
அழுதயரல்! எனக்குஎன்றும் ஆறுமுகம் துணையுண்டு:
முழுவதுமே துறந்துள்ளேன் மூண்டுநீ தொடர்ந்துவரின்
பழுதாகும் பற்றினிமேல் பழியாகும் எனப்பகர்ந்தான்.

3675 **வந்தவன் போனான்.**

மன்னனுளம் துணிந்துளதை மற்றவனும் நன்குணர்ந்து
பன்னியினி உரையாடல் பயனில்லை எனத்தெளிந்து
துன்னியபே ரன்போடு தொழுதழுது விடைபெற்றுத்
தன்னுடைய ஊர்நோக்கித் தனியாக அவன்போனான்.

3676 **வேடரிடம் விடை பெற்றான்.**

அவன்அகன்று போனவுடன் அங்குள்ள வேடரிடம்
இவன்உவகை மொழியாடி இனியவிடை கொண்டெழுந்து
தவமுடையார் தனிவாழும் சாலைகளைத் தொழுதுஏத்திச்
சிவமுடைய காசிநகர்த் திசைநோக்கிச் செலநடந்தான்.

3677 **காசிப்பதி அடைந்தான்.**

பார்தோறும் பெருங்கீர்த்தி படர்ந்தேறப் புரிந்தஅவன்
ஊர்தோறும் இடைத்தங்கி உளத்துறவு மீக்கொண்டு
யாரோடும் பேசாமல் அகமுகமே நிலையாகிச்
சீரோடு திகழ்காசித் திருப்பதியைச் சென்றடைந்தான். (52)

3678 **கங்கை நீர் படிந்தான்.**

திங்கள்பல செலநடந்து திருத்தலத்தைக் கண்டவுடன்
பொங்குவகை மீக்கொண்டு புனிதமுறு புண்ணியம்சேர்
கங்கைநீர் படிந்தெழுந்து கடவுளடி தொழுதுஏத்திச்
சங்கையறத்தெளிந்துள்ளம் தனிமையாய் அங்கமர்ந்தான்.

3679 **கடவுளைத் தொழுதான்.**

அவ்வகை அங் கமர்ந்திருந்தா ணெண்டொன்று கழியவே
நிவ்வியம்சே ரிமயமலைச் செழுஞ்சார லினிதடைந்தான்
அவ்வியம்நீத்து அருந்தவம்செய் அரியநிலம் இதுஎன்றே
செவ்விய அம் மலைநிலையைத் தெரிசித்துக்களிகூர்ந்தான்

3680 **இமயமலையை எய்தினன்.**

யானைடு வந்திறங்கி வதிந்திருந்த வகைஎன்னத்
தேனேடு பொற்புடைப்பூஞ் சோலைகளும் செழுமணிகள்
மீனேடு நேர்இமைத்து மின்னுமுயர் சாலைகளும்
ஆனமல் உறநோக்கி அதிசயித்து மிகமகிழ்ந்தான். (55)

3681 *** கண்டு மகிழ்ந்தான்.**

தாங்கிநின்ற பனித்திரள்கள் தனிமலைபோல் தழுவிஎரி
ஓங்கிவரு காலத்தே உருகுகின்ற நிலைஇறைவன்
தேங்கருளைச் சேராமுன் திண்ணிதாய் நின்றமனம்
ஆங்கவன்றன் அருளணைய ஆயதுபோல் ஆவகண்டான்.

3682 **இமயக் காட்சி.**

தேமலரின் பொழில்கள்தொறும்
செழும்பசுந் தோகைகள் விரித்து
மாமயில்கள் ஆடுவதும்
வரிக்குயில்கள் பாடுவதும்
காமர்இள அன்னங்கள்
களித்தாடக் கவின்நிறைந்த
தாமரைவண் தடங்களும்நேர்
தனித்தனியே கண்டுவந்தான்.

---

*இறைவனுடைய திருவருளைஎண்ணுமல் திண்ணிதாய்த் திமிர் கொண்டுள்ள மனம் அவனது கருணைத் திறங்களைக் கருதி யுணர்ந்தபோது உருகிவிடுகிறது: இறுகியிருந்த பனிப் பாறை இரவியின் ஒளிபடிந்தபொழுது நீராய்க் கரைந்து ஓடுகிறது. ஆகவே இதற்கு அது உவமையாய் வந்துள்ளது.

3683 ஞானிகள் நிலை.

வெளியுலகில் பகை அடக்கி விறல்கொண்டு நின்ற இவன்
ஒளியுலகி லுளமடக்கி உயர்தவம்மேற் கொண்டுநின்ற
தெளிவுடைய ஞானிகளும் செய்யதவ யோகிகளும்
அளியுடனே அமர்ந்திருக்கும் அரியநிலை பலகண்டான்.

3684 அரிய தவ நிலை.

நில்லாத பொருள்களையே நிலையாக நினைந்துநெடும்
பொல்லாத பவநெறிக்கே போகின்ற போக்கொழிந்தங்கு
எல்லாரும் மெய்ஞ்ஞான எழிலுடனே களிதூங்கச்
சொல்லாடாது உறைகின்ற தூயநிலை பலகண்டான்.

3685 முனிவரைத் தொழுதது.

இன்னவாறு இடந்தோறும் இனியராய்ப் புனிதமுடன்
மன்னியவ ணுறைகின்ற மாதவரின் மாண்பறிந்து
மன்னனிவன் மகிழ்ந்துவரும் பொழுதுஒருநாள் ஓர்முனிவன்
பொன்னடியைத் தொழுதேத்திப் புகலடைந்தேன்எனப்
[புகன்றான்.

3686 மன நிலையை வினவியது,

அருந்தவமே உருவாக அருள்சுரந்து தெருள்கூர்ந்து
திருந்தியமெய்ஞ் ஞானஒளி திகழ்கின்ற அம்முனிவன்
பொருந்திநின்ற இவனேநேர் பொங்களியோ டுறநோக்கி
மருந்தனைய மொழிபுகன்று மனநிலையை வினவினான்.

3687 மாதவனைப் பணிந்தது.

உன்னைநீ உணர்ந்துயர உளந்துணிந்து வந்துள்ளாய்!
என்னைநீ எதுவேண்டி இங்கடைந்து நிற்கின்றாய்?
மன்னவென மாதவன்முன் வினவுதலும் மலரடிமேல்
பின்னும்விழுந்து அடியேன்தன் பிறப்பறுக்க வேண்டும்
[என்றான்.

3688 வந்த வகை உணர்ந்தது.

அரும்புமனத் தாசைஎலாம் அறஒழிந்திவ் அகிலமெலாம்
துரும்பெனவே துணிந்துயர்ந்த துணிவுடைய னுய்என்றும்
பரம்பொருளைப் பற்றிநின்று பற்றியதன் பற்றறுக்க
விரும்பியிவன் வந்திருக்கும் விரகறிந்தான் விறல்முனிவன்.

3689 ஆதரம் புரிந்தது.

வேத கன்எனும் பெயருடன் விளங்கிய அந்த
மாத வன்இந்த மன்னவன் மனநிலை தெரிந்து
போதம் மேவிய பொருள்மொழி அருளுடன் பொழிய
ஆத ரம்புரிந் தமர்கள்என்று இருத்தினன் அயலே. (64)

3690 அருளுரை ஆடினன்.

வினையம் ஆகஅங் கமர்ந்துமெய் ஒடுங்கிமுன் இருந்த
இனைய மன்னனை இன்னகை புரிந்துஎதிர் நோக்கித்
துனிசெயும்பவத் தொடக்கினைத் துணித்திடு மொழிகள்
அனைய மாதவன் அருளுடன் ஆடினன் அன்றே. (65)

3691 போதனை புரிந்தது.

தனக்கு நல்லன நாடிநீ தத்துவம் விழைந்து
மனக்கு நல்லதோர் வழிஎன வந்திவண் அடைந்தாய்!
உனக்கு நல்லதா ஓர்ந்திவண் உரைக்கின்ற உறுதி
எனக்கும் யாவர்க்கும் இனியதாம் இயம்புவன் கேண்மோ!

3692 நிலை தெரிந்தது.

மலையில் நின்றெழும் அருவிநீர் வளமுற ஓடி
அலையில் வந்தினிது அமர்ந்திடும் அமைதிபோல் எனது
தலையில் நின்றெழும் நீதியும் தரணியில் எவர்க்கும்
உலவில் இன்பமா முன்னகத்து ஓங்குக உயர்ந்தே. (67)

3693 உரைகளின் சுருக்கம்.

அன்ன மாமுனி அன்றருள் செய்தஅவ் அறங்கள்
இன்ன வாம்என யாவையும் எடுத்திவண் இயம்பின்
மன்னும் இக்கதை வளர்ந்திடும் ஆதலால் சுருக்கி
நன்ன யம்பெற நலமுடன் நவிலுவன் இனிதே: (68)

3694 நில உலகம்.

செய்ய மண்புனல் தீவளி வான்என நின்ற
ஐவ கைப்பெரும் பூதங்கள் ஆயஇவ் வுலகம்
உய்ய மானுட ராதிய உயிர்களுக்கு இடமாய்ப்
பொய்ய தாயினும் மெய்எனப் பொருந்தியுள்ள துவே.

3695 நிலையில்லாதன.

நிலையில் லாதஇந் நிலைகளை நிலைஎன நினைந்து
தலைமை யானதன் நிலையையும் தகவையும் மறந்து
புலைமை யானபுன் பொறிவழி அறிவழிந்து ஓடி
அலையும் மானுடம் அலையுறு துரும்பென அயர்ந்தே.

3696 பிறவியில் உழல்கின்ருர்.

தன்னை முன்னுற உணர்ந்திலர் தாவிமேல் ஆசை
மன்னி ஓங்கிட மாலொடு கால்கொடு திரிந்து
துன்னு தீவினை தொடர்ந்திடத் தொலைவரும் காலம்
இன்னல் மீக்கொளும் பிறவியில் இழிந்துழல் கின்ருர்.

3697 துறந்தவர் உயர்ந்தார்.

பிறந்த இப்பெரும் பிறவியில் பெறலுறும் பேற்றை
மறந்து வேறயல் வழிகளில் மயங்கிய மாக்கள்
இறந்து மீண்டுமீண்டு இழிபவ நிலைகளில் இழிந்தார்;
துறந்து நின்றவர் தொல்பவத் தொடக்கறுத்து உயர்ந்
[தார்.

3698 பிறவி துன்பமே.

பிறப்பில் உள்ளது துன்பமே; இன்பமோ, பிறவாச்
சிறப்பில் உள்ளது; தெளிவுற இதனைநீ தெரிந்து
மறப்பில் என்றுமே மருவிடாது அருந்தவம் புரியின்
இறப்பி லாதபே ரின்பம்வந் தெய்திடும் இனிதே. (73)

3699 ஆசையறுக.

துன்பம் ஆகிய தொல்லைவெம் பிறவிகள் தொடர்ந்து
மன்ப தைக்குள தல்லவரும்? என்னிலே மனத்தில்
மூன்ப தாய்முளைத்து எழுகின்ற அவாவினை மூளும்
அன்ப! நீஇதை அடியற அறுத்திட வேண்டும். (74)

3700 **அவாஅழியின் பிறவி ஒழியும்.**

பிறவி ஆகிய பெரியதோர் நச்சுமா மரத்துக்கு
உறுதி ஆகிய ஆணிவேர் உள்ளுறும் அவாவே;
அறிவி னல்அதை ஆய்ந்தடி யோடறுத்து எறிந்தால்
மறவி இல்லதோர் பேரின்பம் மருவிவீற் றிருப்பார்.

3701 **ஆசை நீசமே,**

ஆசை உள்ளத்தில் அற்றவ ரேஅருந் துறவோர்;
மாச தாம்அது கடுகள வாயினும் மனத்தே
மூசி நின்றிடின் முன்னிய நலமெலாம் இழந்து
நீசம் ஆகிய நிலையினில் நிலைத்திடு வாரே. (76)

3702 **நசை வசையே.**

நசையுளத் திடை யுடையவன் நான்துறந் தேன்என்று
இசைவ ளர்த்திட இசைப்பனேல் அவ்வுரை எவர்க்கும்
இசையும் வேசிநான் இனியகற் புடையவள் என்னும்
வசையை ஒத்திழி வசைபடும்; வையமும் வையும். (77)

3703 **ஆசை அல்லலே.**

யாவும் விட்டவன் எனும்பொருள் உலகெலாம் அறிய
மேவும் வேடத்தை மெய்யிடைப் புனைந்தவன் உள்ளே
ஏவம் ஆகிய ஆசைஓர் இம்மிஎய் திடினும்
பாவம் ஆம்படு பழியும்ஆம் பவம்பல படுமே. (78)

3704 **சிங்கமும் நாயும்.**

ஆசை அற்றவன் அருந்திறல் சிங்கமாய் எங்கும்
ஓசை பெற்றுயர் வெற்றியை எய்துவன்; உள்ளே
ஏசும் ஆசையை உற்றவன் நாய்என இழிந்து
சீசீ என்னவே திரிகுவன் சீரெலாம் இழந்தே. (79)

3705 **துறவியின் மகிமை.**

உலகெலாம்ஒரு குடைநிழல் ஒருங்குகொண்டு ஆளும்
திலக மாமுடி மன்னரும் அடிதொழும் செல்வ
நிலையம் ஆகிய துறவினை ஐயகோ! ஆசைப்
புலைகொள் நெஞ்சினர் பொருந்துதல் பெரும்பவம்ஆமே.

3706 **துறவியும் அரசனும்.**

எத்து ணைப்பொருள் உடையனே அத்துணை அரசன்
இத்த லத்தினில் சிறந்தொளி எய்துவன்; துறவி
எத்து ணைப்பொருள் இல்லையோ அத்துணை உயர்ந்தே
ஒத்த சீர்த்தியை உடையனுய் ஒளிருவன் உலகில். (81)

3707 **ஈசனைச் சேர்ந்தவர்.**

எல்லை யில்லதோர் திருவெலாம் உடையனுய் இலங்கும்
செல்வன் ஆகிய ஈசனைச் சேர்ந்தவர் இந்தப்
புல்லி தாகிய நாசமாம் பொருளினைப் புலன்கொண்டு
அல்லல் கொள்வரோ? கொள்ளலர்; கொள்ளுவா ரயலே.

3708 **உலகெலாம் தொழுமே.**

ஒன்றும் வேண்டிய தில்லையன்று உயர்ந்துள அந்தத்
துன்று செல்வனும் துறவியை உலகெலாம் தொழுது
நின்று போற்றிடும் நிலையினை நேர்எதிர் கண்டும்
நன்ற றிந்திலா மாக்கள்மீக் கொள்ளுவர் நசையே. (83)

3709 **ஆசை அறின் ஈசன்; உறின் நீசன்.**

ஆசை எவ்வள வுடையனே அவ்வளவு ஒருவன்
மாச டைந்திழி மனிதனுய் மறுகுவன்; அதனை
நீசம் என்றுளம் தெளிந்துகை விட்டவன் நேரே
ஈச னும்உயர் பதவியை எய்துவன் இனிதே. (84)

3710 **பிறவாமையே பேரின்பம்.**

அகத்தில் ஆசைதான் எதுவரை உண்டது வரையும்
சகத்தில் எங்கணும் பிறவியில் சுழன்றவன் தாழ்வான்;
இகத்தில் அன்னதை அறுத்தவன் என்றுமே பிறவா
மகத்து வம்பெறும் சுகத்தினை மருவுவன் அன்றே. (85)

3711 **உள்ளம் தெளியின் உய்தி வெளியாம்.**

வெளிமுகத்துறு நோக்கமாய் வெய்யபே ராசை
வளியில் வீழ்ந்தவர் மாருதச் சூழலில் மயங்கி
ஒளிவி லாதுழல் துரும்பெனச் சுழலுவர்; ஒழிந்தார்
தெளிவு லாவிய செய்யமெய் யின்பிடைத் திளைப்பார்.

3712 ஆசை நீசம் நாசம்.

ஆசை யால்மனம் அசைந்திடும்; அம்மனம் அசையின்
மோசை யாய்வினை விளைந்திடும்; அவ்வினை விளையின்
கீசம் ஆகிய பிறவிகள் நேர்ந்திடும் நேரே
நாசம் ஆகிய துயரங்கள் நண்ணிடு மன்றே. (87)

3713 பேரின்பப் பேறு.

பெறல ரும்பெரும் பேறென நின்றபே ரின்பம்
றுவர் ஆர்?எனின், உள்ளமுன் தூயதா வுற்றுத்
றவி னலுறும் அறநலம் துகளறக் கொண்டு
றமெய்ஞ் ஞானங்கை யுடையராய்த் தேசுடன் திகழ்வார்.

3714 சித்த சுத்தியே முத்தியாம்.

ள்ளம் தூயதா உற்றபோ தேஉயர் தவமும்
நள்ளு ஞானமும் தேசும்கைப் பெற்றுய ரின்ப
வெள்ள மாம்பர முத்தியை மேவுவர்; வீணே
கள்ள வேடங்கொண் டுற்றவர் கடையராய்க் கழிவார். (89)

3715 உள்ளத் துறவே உய்தி தரும்.

டைவ ளர்ப்பினும் முண்டிதம் சாரினும் காவி
டைத ரிப்பினும் கண்டிகை புனையினும் ஒருங்கே
டைய நீற்றினை மெய்எலாம் பூசினும் மேன்மை
டைய நேருமோ? அகத்துறவு ஒன்றிலை ஆயின். (90)

3716 வஞ்ச வேடம் நஞ்சின் கூடம்.

புலியின் தோலினைப் பசுபடிந் துறுவிளை புலத்தில்
மெலிவி லாமலே மேய்தல்போல் மெய்யெலாம் ஞானம்
பொலியும் வேடங்கள் புனைந்துபுன் புலன்வழி புகுந்து
வலிய மேய்ந்துளம் மறுகுவர் வருவதை மறந்தே. (91)

3717 மாய நிலை மாயும் புலை.

காய்ஒளித்தொரு சூல்இல்லை தனதுநெஞ்சு ஒளித்த
மாயம் ஒன்றிலை; வானுறு பரமனும் உணரும்;
தூயர் போன்றுநேர் தோன்றினர் தீயன புரியின்
மேய தம்மனம் மெய்ப்பரன் இகழ்ந்திட விளிந்தார்.

3718 **உயிரைத் துயர் உறுத்தாதே.**

என்ன மாயங்கள் புரியினும் எத்தனை செயினும்
தன்னது ஆருயிர் தாழ்ந்திடச் செய்தவர் தாழ்ந்து
பின்னம் ஆவரே அன்றிஓர் பிழைப்பவர்க் குண்டோ?
உன்னு கின்றிலர் உறுதியை ஊனமாய் உழல்வார்.

3719 * **உய்தியை உணர்க.**

அரிய தம்முயிர் அவமுற ஆக்கையைப் பேணப்
பெரிய வஞ்சங்கள் பண்ணுவார் பேயரே யாவார்;
உரிய கண்ஒளி ஒழிந்திட ஊனமாக் குத்திக்
கரிய அஞ்சனம் கவினுறத் தீட்டுவார் அவரே. (94)

3720 **கதிநலம் காணுக.**

அளவி லாதபே ரின்பம்கை யுடையதை அயர்ந்து
களவி லல்சிறு பொறியின்பம் கருதுவார் கதியை
உளவ றிந்தவர் உள்ளுற இரங்குவர்; துறவின்
வளம்அறிந்திலர் வலிந்ததை மேற்கொளல் வம்பே. (95)

3721 **ஈசன் ஆவார் யார்?**

ஆசை அற்றமெய்த் துறவியை அரசர் ஆதியரும்
ஆசை யுற்றடி தொழுவது தம்மினும் மேலாய்
ஓசை பெற்றவன் உள்ளதை உணர்ந்ததால் அன்றே
ஈசன் அன்னவன் இயல்பினை எவரளந் துரைப்பார்?

3722 **மாயை நீங்கினர் மகிமை ஓங்கினர்.**

பரமன் செய்துள படுதிறல் மாயையைக் கடந்து
வரமு றும்பதம் மருவிமேல் வருபவர்க் கண்டால்
அரனும் மாயனும் பிரமனும் அதிசயித் துவப்பார்
தரம்அறிந்தவர் தனிமதிப் பாற்றுவர் தாமே. (97)

3723 **புலன் நசை புலையே புரியும்.**

போரில் ஏறிய வீரன்பின் புறங்கொடுத்து ஓடி
ஊரில் ஏறினை உறுபழி: அதனினும் இழிவே

---

* உயிரைப் பழுதுபடுத்தி உடலை ஓம்ப நேர்ந்தவர் கண் ஒளியை ஒழித்து அஞ்சனம் தீட்டி அழகு பார்க்க அமைந்தவர்போல் அழிபேதையரா யிழிந்து ஒழிகின்றார்.

[illegible] துறவிபின் ஆசையில் திரிந்து
[illegible] புலன்களில் படுவது பரிந்தே. (98)

17.24 **பிறவி ஒழியும் வழி**

[illegible] பிறவியை ஒழித்திட வேண்டின்
[illegible] ஆசையைப் போக்கற ஒழிக்க
[illegible] என்றும்நீங் காதென முனிவன்
[illegible] உள்ளுணர்ந் துவந்துகை தொழு
[தான்.

17.25 **உடம்பும் ஓர் சுமை.**

[illegible] நீக்கிடப் பெட்டெழுந்து உலகைமுன் துறந்த
[illegible] கட்குஇந்த உடம்பும்ஓர் சுமைஎனத் தோன்றும்;
[illegible] ஆகிய அவர்அயல் எதனையோ விழைவார்?
[illegible] ஆய்ப்பழி மண்டுவர் தொடர்பொன்று மருவின்.

17.26 * **பற்று அற்றவரே பரமனைப் பற்றுவார்.**

[illegible] வேரற விட்டபோ தன்றிஅப் பரத்தை
[illegible] வேரொரு வழியினல் மருவுதல் அமையாது;
[illegible] வன்தனை அற்றபோ தன்றிஓர் கன்று
பெற்ற தாயினை எங்ஙனம் பேணிவந்து அடையும்? (101)

17.27 **நல்ல மனமே நலமெல்லாம் நல்கும்.**

[illegible] வேரறப் பெற்றிட வேண்டினே மனத்தை
[illegible] நல்லதா ஆக்கிமுன் அடக்குக; அதுவே
[illegible] லாம்புரிந்து இந்தவன் பிறவியை வளர்த்துத்
[illegible] தாய்நின்று தீர்ந்திடா வகைசெய்து திரியும். (102)

17.28 **முடிவிலா இன்பம் வரும்.**

[illegible] ஓர்மனம் இனியதாய் உன்வசம் ஆயின்
[illegible] நீபெரு மாண்பொருள் மாநிலத் தில்லை;
[illegible] வெம்பவம் அற்றது; முடிவிலா இன்பம்
பெற்று யர்ந்தனை பேசருந் திறலுடைப் பெரியோய்!

பாசக் கட்டிலிருந்து முற்றும் நீங்கிய பின்புதான் ஆன்மா பரன்மான்மாவை அடைந்து இன்புறும். இதில் குறித்துள்ள உவமை நயத்தைக் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து கொள்க.

3729 பத்தியும் ஞானமும்.

பத்தி ஞானங்கள் என்றிரு வகையினும் முத்தி
சித்தி யாம்எனத் தெரியினும் முன்னது பரத்தின்
சத்தி ஈர்த்தெழும் சார்பினை யுடையது; பினதோ
ஒத்த புத்தியால் ஓங்கிமேல் எழுவதுள் உணர்ந்தே.

3730 குழந்தையும் பாலனும்.

தாயின் ஒக்கலைச் சார்ந்தகைக் குழந்தையும், கையில்
மேய தாய்நடை மேவிய பாலனும், போல
ஆய பத்தியும் ஞானமும் அமர்ந்துள; அதனால்
தூய வாகிய அவற்றின்மெய்த் தகவுகள் தோன்றும்.

3731 பத்தியின் பான்மை

உரிமை யாகிய ஒருபரம் பொருளினைப் பிரிந்தே
கருமை ஆகிய கதிகளில் கலங்கிநொந் தழிந்தார்;
அருமை ஆய்அந்த உண்மையை அறிந்தபோ துள்ளம்
உருகி ஓடுவது உள்ளுறு பத்திஎன் றுணர்க. (106)

3732 ஞானத்தின் மேன்மை.

பிரிந்த அந்தவன் நிலையையும் பேதையாய் உழந்து
திரிந்த வெம்பவ நிலையையும் திரிபிலாது உணர்ந்து
பரிந்த சிந்தையர் ஆகிஅப் பரத்தினில் பதிந்து
தெரிந்த தேசுடன் திறம்பெற நிற்பது தெளிவே. (107)

3733 ஞானியை வானும் வணங்கும்.

ஞானம் ஆகிய மெய்த்திரு வுடையவர் நரரின்
ஊன ளாவிய உடம்பிலுற் றிருப்பினும் உம்பர்
தேன ளாவிய மலர்கொடு பணிகுவர்; சிறந்து
வான ளாவிய புகழுடன் மகிழ்ந்துவீற் றிருப்பார். (108)

3734 எமனையும் கடப்பார்.

அருந்த வப்பெருந் தகையவர் ஆற்றலை உணர்ந்து
பெருந்த கைப்பெருந் தேவரும் பேதுறு வாரே;
வருந்த வத்தைகள் யாவையும் மாய்த்து மாசின்றி
இருந்த வத்தினை ஆற்றுவார் எமனையும் கடப்பார்.

3735 **தவத்தின் ஆற்றல்.**

கடல்குடித்ததும், கருமலை கலித்ததும், கணக்கில்
அடல்கள் செய்ததும், அமரர் ான் அரவென இழிய
உடலு ரைத்ததும், உலகினை 'த்ததும், குறிய
குடம்பு தித்தவன் கொண்டதோர் அன்றே?

3736 **பேரின்பம் பெறுபவர்.**

அரிய தாயஇப் பெருந்தவத் திருவினை யுடையார்
பெரிய தாயஅப் பேரின்பப் பேற்றினை அடைவார்;
உரிய பூமியை உழுதுரம் செய்தவர் அன்றே
நிரைய நல்வளம் நேர்ந்துகைக் கொண்டுளம் மகிழ்வார்.

3737 **தவத்தரும் அவத்தரும்.**

இனிய தன்னுயிர்க்கு இதம்செய நாடினோர் என்றும்
புனித மாயருந் தவம்புரிந் துயருவர்; புரியார்
மனித வாழ்வினை மருவினும் மாக்களின் இழிந்து
துனிசெ யும்பவக் கடலிடைத் துயருழந் தயர்வார். (112)

3738 **உயர்வும் இழிவும்.**

தனக்கு நல்லவன் தன்செயல் ஆகிய தவத்தைச்
சினக்குறும்பெறிந்து அருளுடன் சேர்ந்துமுன் செய்வான்;
மனக்கு நல்லன நாடிவன் புலன்வழி அலைவார்
கனக்கும் வெந்துயர்க் கடல்விழுந்து உழந்துகை யறுவார்.

3739 **உணர்பவர் உய்வார்.**

எய்தி நின்றுள யாக்கையின் அருமையும் அதுதான்
செய்து வந்துள நாளது நிலையையும் சிறிதே
ஐய மின்றிமுன் ஆய்ந்துளம் உணரினை ஐயோ
உய்தி நாடிடாது உண்டுளம் களிப்பனை ஒருவன்.

3740 **பிறவியின் பயன்.**

கற்ற கல்வியைக் கதிதரு நெறிகளில் செலுத்தி
உற்ற பேரின்ப உறுதியை அடைந்தவன் உய்ந்தான்;
பெற்ற இப்பெரும் பிறவியின் அறிவுக்குப் பிறவி
அற்று நிற்றலே அல்லதொன் றில்லைகாண் அறியின்.

3741 பார் மேல் வாழ்வு நீர் மேல் குமிழி.

பாரின் மேல்உழல் பல்பெரும் பிறவியும் தப்பிச்
சீரின் மேலுயர் இவ்வுடல் சேர்ந்துளேம்; எனினும்,
காரின் மேலுறு மின்னினும் கடிதயல் மறையும்
நீரின் மேலுறு குமிழியில் நிலைகுலைந்து ஒழியும். (116)

3742 பலர் பாழாய் ஒழிகின்றார்.

அன்ன தானபேர் அருமையும் சிறுமையும் உடைய
இன்ன மெய்யினை எய்தியும் எதிர்வதை எண்ணாது
உன்னி ஆயிர கோடிஎண் ணங்களே உள்ளே
பன்னி எண்ணிவெம் பாழினில் ஒழிகின்றார் பலரே.

3743 உய்திபின் உளதோ?

ஈன மானபுன் பிறப்பினில் இழிந்து ஒழியாது
ஞான மானநன் மானுட யாக்கையைப் பெற்றும்
ஆன பேற்றினை ஆய்ந்துடன் அடைந்திடாது அந்தோ!
ஊன மாய்க்கழிந்து ஒழியிலை உய்திபின் உளதோ?

3744 ஊழியும் உய்யார்.

இந்த மானுடம் எளிதினில் எய்திட முடியாது;
அந்தம் இல்லதோர் பிறப்பின்பின் அருந்தவப் பேற்றால்
வந்த தாம்இது; வாய்த்துள போதுமேல் பதத்தை
உந்தி எய்திடாது ஒழிபவர் ஊழியும் உய்யார். (119)

3745 பெரிய பேதைமை.

அரிய மானுட யாக்கையை அரிதினில் அடைந்தும்
உரிய முத்தியை ஊக்கிமுன் உற்றிடாது ஒழிதல்
பெரிய பேதைமை; பெறலரும் அமிர்தத்தைப் பெற்றும்
தெரிய உண்டிடான் தெருவினில் கவிழ்த்ததை ஒக்கும்.

3746 நலம் ஒழிந்தனரே.

கலத்தி னல்கருங் கடலினைக் கடத்தல்போல் இப்புற்
கலத்தி னல்பெரும் பவக்கடல் கடக்கலாம் அன்றி
வலத்த வேறேரு வழியினும் வாய்த்திடாது அந்தோ!
நலத்த யாக்கையை நண்ணியும் நலம்ஒழிந் தனரே. (121)

புற்கலம்=உடம்பு. கலம்=கப்பல்.

3747 முத்தி நேர் எய்தும்.

எனது நான்எனும் இயல்பினை இடமற மாய்த்தே
இனியன் ஆகிஎவ் வுயிர்கட்கும் இன்னருள் புரிந்தே
அனக மாநெறி அமைவுடன் அமர்ந்தினி தொழுகின்
நினைய லாவகை நிலையுயர் முத்திநேர் எய்தும். (122)

3748 உயிர் இன்பமயம்.

ஒப்பி லாததோ ரின்பம்ஓர் இடத்துள தாக
ஒப்பி நீயுளம் மயங்கிடல்; உன்னுளே அதுதான்
அப்பின் நீர்மையும் அமிர்துறு சுவையும்போல் என்றும்
அப்பி நின்றுளது அவம்அறின் அதுமயம் ஆவாய்.

3749 உன்னை உணர்க.

சச்சி தானந்த வடிவமாய்த் தழைத்துஒளி சிறந்தே
எச்சம் இன்றியே எங்கணும் நிறைந்துள ஒன்றை
நச்சி வேறயல் உள்ளதாய் நாடிநீண்டு அலைதல்
கொச்சை யானபுன் னைகைக்கிடம் ஆகுமே குறிப்பின்.

3750 உள்ளம் தெளிக.

பள்ளம் தோண்டிய இடத்தினில் பனிமழை பொழிய
வெள்ளம் வந்துநேர் நிறைந்திடும்; விதிமுறை ஒழுகி
உள்ளம் தூயதாய்ப் பக்குவம் உற்றமைந் திருப்பின்
தெள்ளி தாம்பரன் அருள்வெள்ளம் வந்துதேக் கிடுமே.

3751 பரம ஆனந்தம்.

நெஞ்சம் தூயதாய் நிலைபெற அமைந்துநன் னெறியில்
தஞ்ச மாயமர் தண்ணளி யுடையவர்க்கு அன்றி
வஞ்ச வேடத்தால் வாய்மதம் பேசலால் அந்த
எஞ்ச லில்பர மானந்தம் எய்துதல் அரிதே. (126)

3752 பிறவி அறுக.

எடுத்து வந்துள இந்தஒண் பிறவியால் இனிதாய்
மடுத்தடைந்திடும் மாண்பயன் யாது?என வினவின்
அடுத்த எந்தஓர் பிறவியும் அணுகிடாது அமுதம்
உடுத்து றைந்துள பேரின்ப வுலகினை உறலே. (127)

பிணக்கு ஒழிக.

3753 உருவொடு பேரும் இல்லா
ஒருபொருட்கு உலக மக்கள்
உருவமும் பெயரும் சூட்டி
ஒருவரோடு ஒருவர் மாறுய்த்
திருவது பெரியது ஈது
சிறியதுஎன்று உரைகள் ஆடி
மருவறு பிணக்கு மீறி
வருகின்றூர் வரவு காணூர். (128)

உண்மையை உணர்க.

3754 என்தெய்வம் உயர்ந்தது உன்னது
இழிந்ததுஆம் ஈதே முத்தி
முன்தரும் அதனல் யாதும்
முடிந்திடாது எனமுனைந்து
மன்றினும் தருக்கம் ஆடி
மனம்மிகத் தருக்கு கின்றூர்;
ஒன்றுஎனத் தெரிந்தும் உண்மை
உணர்ந்திடாது உழல்கின் றூரே. (129)

புனிதன் ஆகுக.

3755 பல்பெரும் சமயம் இன்ன
படிபடர்ந் தடர்ந்து தத்தம்
சொல்வலி அளவில் நின்று
தொலைகின்ற; தொலைவி லாத
எல்லையில் பரமன் என்றும்
இகலுறவு இன்றி யாண்டும்
புல்லலன் ஆகி யுள்ளான்;
புனிதரே பொருந்து கின்றூர். (130)

அருள் நிலை அறிக.

3756 அருள்அறம் வாய்மை ஆன
அரும்பெரும் தகைமை யேஅப்
பொருளினுக்கு உருவம் ஆகும்;
புனிதநன் னீர்மை யோரே

உரிமைமீக் கூர்ந்து நேரே
ஒருமையை எய்து கின்ருர்;
பெருமைவாய் பேசி நின்ருர்
பேதமாய் ஒழிந்து நின்ருர். (131)

வாய்மையே தூய்மை.

3757 வாய்மையை என்றும் பேணி
மன்னுயிர்க்கு அருளைச் செய்து
தூய்மையை உடையான் தன்னைத்
தொல்லறம் எல்லாம் சூழ்ந்து
தாய்மையாய்த் தழுவி நிற்கும்;
தாரணி மனிதன் ஏனும்
சேய்மையில் உள்ள தேவர்
எவரினும் சிறந்தான் அன்னேன். (132)

சத்தியம் காத்த வித்தக வேந்தன்.

3758 அருந்ததிக் கற்பி னுளும்
அரும்பெறல் மகவும் செங்கோல்
திருந்திய அரசும் சேரத்
தீர்ந்திட நேர்ந்த போதும்
வருந்திஇம் மெய்யைக் காத்த
மன்னவன் மாண்பை யாரே
இருந்திரைப் பரவை ஞாலத்து
இன்னமும் மறந்து ளார்கள்? (133)

முத்தேவரும் முன் நின்ருர்.

3759 சத்திய நிலையில் என்றும்
தளர்வின்றி நின்ற தாலே
முத்திறத் தேவர் எல்லாம்
முன்வந்து நின்று வாழ்த்தி
இத்தலம் முழுதும் நல்கி
ஏத்தினர்; அவனும் இன்ப
முத்தியை அடைந்தான் கீர்த்தி
மூவுல கத்தும் போர்த்து. (134)

பொய் ஈனம்.

3760 தன்நெஞ்சம் அறிந்தது ஒன்றைத்
தலையற வந்த போதும்
பின்னமாய்ப் பேசல்! பேசின்
பிழைபடும் என்று முன்னம்
சொன்னமெய்ப் புலவன் மெய்யைத்
துலக்கிய நிலையும் ஓர்க;
என்ன ஆ னலும் பொய்யை
இசைப்பதோர் ஈனம் ஆமே. (135)

மெய்யே பேரின்ப வீடு.

3761 சொல்வினுல் செயலால் யாதும்
தோடங்கள் தொடரா வண்ணம்
புல்லிஓர்ந்து ஒழுகி யாண்டும்
புனிதனுய் எவ்வு யிர்க்கும்
நல்லருள் புரிந்து நிற்பின்
நாடிய போகம் துய்த்தே
எல்லையில் பரமா னந்த
இன்பவீடு எய்து மன்றே. (136)

இன்ப நிலை.

3762 இல்லற நிலைநின் ருலும்
யாவையும் துறந்து நின்ற
சொல்லற நெறிநின் ருலும்
தூயநற் குணத்தார்க் கன்றி
அல்லவர் மாட்சி யாதும்
அடைந்திலர்; அவமே காண்மார்:
நல்லறம் உடையார்க்கு எல்லா
நலன்களும் நயந்து கூடும். (137)

துன்பப் புலை.

3763 காமமே கொலையே கள்ளே
களவுபொய் என்னப் பட்ட
தீமைகள் ஐந்தும் தீய
நரகினில் செலுத்தித் தீரா

நாமவெம் பிறப்பில் ஆழ்த்தி
நாசங்கள் செய்யும்; அன்ன
ஏமவா தனைகள் தம்மை
இகந்தவர் உயர்ந்தார் அன்றே. (138)

சீலமே தெய்வத் திரு.

3764 அமிர்தம்கை இருக்க அத்தை
அகலவிட்டு அழிவே செய்யும்
உமிழியல் நஞ்சை உண்டுள்
உயிர்ஒழி ஊனர் போலச்
சமதமம் உடைய சீலம்
தழுவிமேல் எழாமல் வெய்ய
மமர்இயல் மருவி அந்தோ
வன்துயர் வளர்க்கின் றூரே! (139)

இன்ப நலம் எய்துக.

3765 இல்ஒழுக் கிருந்து வந்த
இனவிருந்து இனிது பேணி
நல்ஒழுக்கு அமர்ந்து நின்று
நாடிஇன் அருள் புரிந்து
செல்ஒழுக்கு இயைந்து நின்ற
செவ்வியோர் எவ்வம் நீங்கி
எல்ஒழுக்கு உடைய இன்ப
நிலையமாய் இனிது நின்றூர். (140)

ஒழுக்கமே சுவர்க்கம்.

3766 சீலமே சுவர்க்கம் என்னும்
தெய்வநல் திருவை எய்த
மூலகா ரணமா யுள்ளது;
அ.:திலார் முடிவி லாத
காலம் ஆனலும் இன்பம்
கண்டிலர்; கழிந்து இழிந்து
சாலவும் துன்பத்து ஆழ்ந்து
தவித்தயர்ந்து உழல்வார் அம்மா! (141)

ஆனந்தம் அடைவர்.

3767 ஒழுக்கம்என் றுரைக்கும் சிந்தா
மணியினை உளம்கைக் கொண்டோர்
இழுக்கம்ஒன் றுஇன் றிஎல் லா
மேன்மையும் எளிதின் எய்தி
விழுக்குடி யுடையோர் ஆகி
மேதினி வாழ்த்த வாழ்ந்தே
அழுக்குஅகன் றுஅந் தம்இல் லா
ஆனந்தம் அடைவர் அன்றே. (142)

அறநலம் மருவுக.

3768 அறநலம் அடையா துஇந் த
அவனியில் செல்வம் மிக்குப்
பிறநலம் எல்லாம் பெற்றுப்
பெருகினும் என்னே? பின்னர்
உறவதை யாதும் காணாது
உயிர்க்கு ஒரு பயனும் இன்றி
மறநிலை இழிந்து உழந்து
மறுகிமாய்ந் துஒழிவர் மாதோ! (143)

வெறியன் ஆகாதே.

3769 பொறிவழி ஓடு கின்ற
புலன்களைத் தொடர்ந் துவீணே
அறிவழிந் துஓடி ஓடி
அலமரு கின்ற நெஞ்சைச்
செறிவுஎனும் தொடரால் பற்றிச்
சிக்கென ஆர்க்க; இன்றேல்
வெறிமிகுந் துஉழன் றுதீமை
விளைத்துவெம் பவத்தில் வீழ்த்தும். (144)

உறுதி அறிதி.

3770 எரிதழல் விறகால் ஓங்கி
எழும்;அ.ஃது இல்லை ஆயின்
உருவற ஒழியும்; அந்த
உண்மைபோல் அவாவி னுலே

மருவிய வினைகள் மண்டும்;
மற்றைஅவ் வினையால் மாளாது
ஒருவரும் பிறவி நீளும்;
உறுதிஈது அறிதி! என்றான். (145)

உன் உயிரை உறுக.

3771 தன்னுயிர் தன்னைத் தானே
அறப்பெறின் உலகில் உள்ள
மன்னுயிர் எல்லாம் அன்னான்
மாணடி தொழும்என்று ஓர்ந்து
சொன்னதோர் தெய்வ வாக்கைச்
சூழ்ந்துநீ உணர்ந்து கொள்க;
உன்னுயிர்க்கு இதமே ஆன
உயர்தவம் செய்க என்றான். (146)

சிவனே சீவன்.

3772 ஒருபரம் பொருளின் நின்றே
உதிர்ந்திங்ஙன் பலவேறு ஆன
உருவுகொண்டு உலாவு கின்றேம்;
உபாதிபோய் ஒழிந்தது ஆயின்
மருவரும் ஈசன் தன்னை
மருவிநாம் மகிழ்ந்து கொள்வோம்;
அரியஇவ் உண்மை தேராது
அயர்ந்திழிந்து அழிந்தோம் அந்தோ! (147)

குணத்திலுல் உயர்க.

3773 மணத்திலுல் மாட்சி யுற்ற
மலர்என மாண்பு அமைந்த
குணத்திலுல் உயர்வே அன்றிக்
குலத்திலுல் கொழுத்து நின்ற
பணத்திலுல் பதவி யால்எப்
பகட்டி லுலும் படாதே;
பிணத்தினை நிகர்ப்பர் நல்ல
பெருந்தன்மை இலரேல் அம்மா! (148)

செருக்கு உருதே.

3774 தெண்டிரை வளாகம் எல்லாம்
சேரஓர் குடைக்கீழ்க் கொண்டு
திண்டிறல் உடையர் ஆகிச்
செய்யகோல் செலுத்தி னலும்
அண்டகோ டிகளை நோக்க
அதன்அளவு என்னும்? அந்தோ!
மண்டலம் ஆளும் மன்னர்
வன்செருக்கு உறுகின் றுரே. (149)

தீயன் ஆகாதே.

3775 எல்லையில் லாத செல்வம்
எய்திமேல் இமையோர்க்கு எல்லாம்
வல்லதோர் அரசாய் நின்ற
மன்னனும் செருக்கால் அன்றே
புல்லிதாய் இழிந்து வீழ்ந்து
போயினன்; போவ தான
செல்வமேல் செருக்கல் தீமை
சிறுமையும் ஆகும் அன்றே. (150)

உலக மாக்களின் புலை.

3776 மறுமைநோக்கு ஒன்றும் இன்றி
வாய்த்ததை உண்டு உறங்கி
உறுவதுஓர் நிலையும் ஓராது
உழல்கின்ற உலக மாக்கள்
பெறுவதுஓர் இன்பப் பேற்றைப்
பெற்றிலர்; பிறவிக்கு ஆன
சிறுமையே செய்து நாளும்
செருக்கியுள் களிக்கின் றுரே! (151)

மாயக் கனவு.

3777 மனுமுதல் ஆன மன்னர்
மாண்டுமண் ணோடு மண்ணாய்
நினைவற ஒழிந்தார் அன்றி
நீள்நிலத்து யாவர் ஏனும்

இனியராய் இன்று காறும்
இருந்தவர் உளரோ? சொல்லாய்!
கனவுஎனக் கழியும் இந்தக்
காட்சிஓர் மாட்சி ஆமோ? (152)

அழுத கண்ணீரை அளந்து பார்!

3778 தந்தைதாய் மனைவி மக்கள்
தமர்எனப் பிறவி தோறும்
வந்தவர் அளவை எண்ணின்,
வாரியின் மணலின் மிக்கார்;
நொந்தவர் பிரியும் தோறும்
நுடங்கிநின் றழுது கண்கள்
சிந்திய நீரை எண்ணின்
தெண்திரைக் கடலின் மேலாம். (153)

பிறவி நிலையை நினைந்து பார்.

3779 எனக்குஒரு தாயாய் வந்தாள்
என்னைவிட்டு இறந்து ஒழிந்து
தனக்குஒரு தாயை நாடிச்
சார்ந்தனள்; அவளும் செத்து
நினைப்பறு பிறவி உற்றுழி;
நிரைநிரை இங்ஙன் நீள
வினைப்பவத் தொடக்கில் பட்டு
விளிந்துஒழிந்து உழல்வர் அம்மா! (154)

ஆயுளை ஆய்ந்து அறி.

3780 கோடியாம் ஆயுள் கொண்டு
கோன்என உலகில் ஓங்கி
நீடிநின் றுலும் என்னை
நிலையிலா வாழ்க்கை அந்தோ!
பாடிய ஆயுள் எல்லை
படாப்பெருங் காலத் தோடு
கூடிநேர் நோக்கின் ஒன்றும்
குறியில தாகும் அன்றே. (155)

ஒரு பொருளே உள்ளது.

3781 சூரனே முதலோர் முன்னம்
தொலைவிலா ஆயுள் பெற்று
வீரமோடு இருந்தார் எல்லாம்
விளிந்து ஒழிந்தார்கள் அன்றிப்
பாரிடை நின்றூர் இல்லை;
பரம்பொருள் ஒன்றே என்றும்
சீரொடு திகழ்ந்து நிற்கும்;
சேர்ந்ததில் திளைக்க வேண்டும். (156)

நினைவும் சொல்லும் செயலும்.

3782 மனத்தொடு வாக்கு காயம்
மருவிய கரணம் மூன்றும்
வினைத்திறம் விளையும்; அந்த
விளைபுலன் புனிதம் ஆகி
நினைப்புசொல் செயல்கள் எல்லாம்
நெறியமைந்து இனிய வாயின்
மனக்கினி தாய இன்பம்
மருவிமேல் வளரும் மாதோ! (157)

நல்லதையே ஆற்றுக.

3783 தீயன நினைத்தல் பேசல்
செய்திடல் தீங்காய் ஒங்கி
ஓய்விலாத் துன்பம் ஆக
வுற்றிடும்; நலமாய் ஊக்கின்
தூயநல் வினையாய்த் தோன்றித்
தொடர்ந்து பேரின்பம் நல்கும்;
ஆயதை உணர்ந்து நன்மை
ஆற்றுதல் அறிவாம் அன்றே. (158)

இரு வினையும் ஒருவுக.

3784 இருவினைப் பயன்கள் ஆன
இன்பதுன் பங்கள் துய்த்து
வருவரு பிறவி தோறும்
மருவிய வினை வளர்த்து

ஒருவரும் பவங்கள் எய்தி
உழல்கின்றேம்; ஒருங்கே அந்த
அருவினை இரண்டும் நீங்கின்
அமலவீடு அடைவம் அன்றே. (159)

இன்பமும் துன்பமும்.

3785 இன்பம்வந்து எய்தும் காலை
இருங்களிப்பு எய்து கின்றார்;
துன்பம்வந்து உற்ற போது
துடித்துஅயர் கின்றார்; சூழ்ந்து
முன்புநாம் செய்து கொண்ட
முழுவினைப் பயன் இரண்டும்;
பின்பதில் வருந்தி நிற்றல்
பேதைமை ஆகும் அன்றே. (160)

விதைத்தே விளைவாய் வரும்.

3786 நெல்லினை விதைத்த மாந்தர்
நெல்லையே அடைவர்; நேர்ந்து
புல்லினை விதைத்தார் புல்லே
பொருந்துவர்; புறத்துஒன்று எய்தார்;
நல்வினை உடையார் இன்ப
நலங்களை நுகர்வர்; நஞ்சாம்
அல்வினை உடையார் ஆறுத்
துன்பமே அடைவர் அம்மா! (161)

வினைப்பயன் விடாது.

3787 விளைப்புறு விளைவே அன்றி
வேறுஒன்று விளைந்து வாரா;
கிளைப்புற மூண்டு நின்று
கிளர்ந்துமுன் விழைந்து செய்த
இளைப்பறு வினைகள் தத்தம்
இனப்பயன் ஊட்டி அன்றிக்
களைப்படைந்து ஒழியா; வீணே
களித்தலும் கவலும் எல்லாம். (162)

தீயதைக் கனவிலும் கருதாதே.

3788 நோய்எலாம் நோய்செய் தாரை
நோக்கிவந்து அடைந்து துன்பம்
மாயுமாறு உளுற்றும் அன்றி
மற்றொரு பக்கம் எங்கும்
போய்அடை யாதே; இந்தப்
போக்கினைப் புலன்கொண்டு ஓர்ந்தார்
தீயதைக் கனவி லேனும்
செய்வரோ? பிறருக்கு அம்மா! (163)

அனுபவத்தை அறிக.

3789 தன்னுயிர்க்கு இன்பம் வேண்டித்
தளர்வின்றி முயல்வோர் மற்றை
மன்னுயிர்க்கு இன்னல் எண்ணல்
மடமையே ஆகும் அன்றே?
பன்னிய மறையை நோக்காது
ஒழியினும், பட்டுத் தம்முள்
துன்னிய அனுப வத்தின்
துறையையும் மறந்தது என்னே? (164)

யாவும் பரமன் உருவங்களே.

3790 ஊர்வன பறப்ப நிற்ப
உலாவுவ எனப்பல் வேறுய்ப்
பார்வரு தோற்றம் எல்லாம்
பரம்பொருள் ஒன்றின் நின்றே
பேர்வன ஆகி வந்து
பிறந்துள; பின்போய்ச் சேர்ந்து
நேர்வன அதையே; நீரின்
நுரைதிரை நேர்தல் போல. (165)

மானிடத்தின் மாட்சி.

3791 ஆறறி வுடைய இந்த
அரும்பெறல் மானி டத்தில்
ஓரறி உயிர்க்கும் ஊறுஒன்று
உளுற்றிடாது அருள் புரிந்து

போறி வடைந்து நின்று
பெரும்பதம் பெறலாம்: அன்றிக்
கூறறி வுடைய தேவர்
குலத்திலும் கூடாது அன்றே. (166)

இருள் நீங்கி இன்பம் ஓங்குக.

3792 அருள்உளம் உடையன் ஆகி
அறநெறி வழாது நின்று
மருளுறும் எவ்வு யிர்க்கும்
மறந்தும்ஓர் தீங்கு செய்யாது
இருளற ஒழுகின் இன்பாம்
எனமுனி இனிது சைத்த
பொருளுரை உணர்ந்து மன்னன்
*பொருமியுள் உருகி நொந்தான். (167)

ஊமைமன் உருகி அழுதான்.

3793 படுகொலை பலவும் செய்த
பாதகன் எனக்கு முத்தி
வடிவைநேர் காணு மாண்பு
வாய்க்குமோ? எனம யங்கி
நெடிதுநின்று அழுதான் மன்னன்;
நிறைதவன் மீண்டு நோக்கி
ஒடிவறு கருணை கூர்ந்தே
உவந்துபின் இன்ன சொன்னன்: (168)

முனிவர் தேற்றினர்.

3794 மன்னன்ஆய் நின்ற போது
மருவலர் தம்மை வாளால்
சின்னபின் னங்கள் செய்த
செயலினை நினைந்து தேம்பல்!

---

* அருள் சுரந்து ஞான முனிவர் போதித்து வந்த பொருள் உரைகளை எல்லாம் உள்ளம் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்த மன்னன் தனது பழைய நிலைமைகளை எல்லாம் நினைந்து இனைந்து பரிதாபமாய் நொந்து மறுகி உருகி யிருக்கிறான்.

அன்னது கடமை யேயாம்;
அதுசெய்யாது ஒழிவை ஆயின்
இன்னலும் பழியும் எய்தி
இழிவுமீக் கூரும் அன்றே? (169)

ஞான போதனை.

3795 நின்றதுஓர் நிலைக்குத் தக்க
நீதியை நெறியோடு ஆய்ந்தங்கு
ஒன்றவே செய்ய வேண்டும்;
உறும்வினை செய்யாது ஓயின்
நன்றறிந் தவன் ஆ ளலும்
நவையிடை நைந்து தேய்வன்;
மன்றமர் திருவும் மாயும்;
வசைமிக வளர்ந்து நீளும். (170)

வினை செயல் வகை.

3796 செய்யவேண் டியதைச் செய்யாது
ஒழியினும் தீமை; செய்யா
நொய்யதோர் வினையைச் செய்ய
நூக்கினும் பழியாம்; நோக்கி
உய்யவே உணர்ந்து கன்மம்
உளுற்றுதல் நன்மை ஆகும்;
ஐய!நீ செய்தது எண்ணி
அயரல்இங்கு ஆண்மை யன்றே. (171)

எல்லாம் இறைவன் செயலே.

3797 கொன்றதும் கொலையில் நேர்ந்து
கொடுமையாய் இறந்து ஒழிந்து
சென்றதும் ஒன்று நின்று
செய்ததோர் செயலே யாகும்;
இன்றதை எண்ணி நையல்!
இறையருள் இன்றி என்றும்
ஒன்றுமே அசையா தன்றே?
உறுவன உற்றே தீரும். (172)

தவம் செய்து உய்க.

3798 முன்னம்நீ முனைந்து நின்ற
முரணுறு நிலையை விட்டே
இன்னதோர் தவத்தைச் செய்ய
எய்தினை! இனிமேல் உன்னைத்
துன்னிஓர் துயரும் சேராது
ஒழிந்துபோம் தூயன் ஆகி
மன்னிய தவம்செய்து உய்க!
வானுறின் மண்ணு ருதே. (173)

பிறவி ஒழிந்துபோம்.

3799 அருந்தவம் என்பது ஐய!
ஆருயிருக்கு அருளைச் செய்து
பொருந்திய தன்னை வாட்டிப்
பொறிகளை அடக்கிப் போதம்
திருந்திய நிலையில் நின்று
செம்பொருள் தெளிந்து சேர்தல்
பெருந்தகை அவன்பின் மீண்டு
பிறந்துஇறந்து உழலான் அன்றே. (174)

மாதவனைத் தொழுது மன்னவன் வாழ்த்தினான்.

3800 இன்னிலை புரிந்து நின்றே
இறப்பொடு பிறப்பும் இல்லாத்
தொன்னிலை அடைந்து வாழ்க!
என்றுதெள் ளமிர்தம் பில்க
அன்னமா தவன்மொ ழிந்தான்
அரசனும் மகிழ்ந்து கேட்டுப்
பொன்னடி தொழுது வாழ்த்திப்
போற்றினன் ஏத்தி நின்றான். (175)

என்ன புணணியம் செய்தேன்?

3801 அறந்தலை மணந்து நில்லாது
அடுதிறல் அதிலே மண்டி
மறந்தலை புரிந்து நின்ற
வலியனேன் மீண்டும் இங்கே

பிறந்தலே யாமல் செய்த
பேரரு ளாளா! என்ன
சிறந்தபுண் ணியங்கள் முன்னம்
செய்தனன் நின்னைச் சேர? (176)

உயர்கதி உற்றேன்.

3802 தேவநின் திருவாய் வந்த
தெளிந்தமெய்ஞ் ஞான வாசப்
பூவலர் கங்கை என்னும்
புனிதநீர் படிந்தேன்; வெய்ய
பாவவெவ் வினைகள் எல்லாம்
பற்றற ஒழிந்தேன்; என்றும்
ஓவலில் பரமா னந்த
உயர்கதி உற்று உயர்ந்தேன். (177)

பிறவி நீங்கிப் பேரின்பம் பெற்றேன்.

3803 தெள்ளமிர் தனைய தெய்வத்
திருமொழி செவிகள் ஆர
உள்ளுறப் பருகி உள்ளம்
உயிர்எலாம் உருகி என்றும்
தள்ளரும் பிறவி நீங்கித்
தனித்தபே ரின்பம் துய்த்தேன்;
வள்ளலே! எனப் பணிந்து
மாதவன் தனைத் துதித்தான். (178)

அருந்தவம் செய்க.

3804 உன்னைநீ உணர்ந்தாய்! உன்னுள்
உறைந்தினி திருந்த இன்பம்
தன்னையே அடைந்தாய்! வேறே
சார்ந்ததாய் நினைந்து அயர்ந்தே
என்னைநீ ஏத்து கின்றாய்!
யானும்நீ யாவும் ஒன்றின்
பின்னமே பேச்சுஎன்? பேசாது
அருந்தவம் செய்போ என்றான். (179)

ஞான யோகம் புரிந்தான்.

3805 அம்மொழி அமையக் கேட்ட
அரசனும் உணர்ந்து நீங்கிச்
செம்மையாம் பொழில் புகுந்து
சிறந்தஓர் இடத்து அமர்ந்து
வெம்மைசேர் புலன்கள் ஐந்தும்
வேரற வென்று ஞானப்
பொம்மலோடு இருந்து யோகம்
புரிந்தனன் போதம் ஓங்க. (180)

சித்தித் திருவைச் சேர்ந்தான்.

3806 உள்ளுறு கரணம் எல்லாம்
ஒடுங்கின; உணர்வின் உள்ளே
துள்ளுமா மனம்பு குந்து
துடிப்பற நின்றது; என்றும்
தள்ளரும் தறிபோல் மன்னன்
தனித்தினிது உறைந்தி ருந்து
தெள்ளிய யோக சித்தித்
திருவினைச் சேர்ந்து நின்றான். (181)

முத்தி நிலை யுற்றான்.

3807 ஞானமா நெறியின் நின்று
நற்றவம் புரிந்து பல்லாண்டு
ஆனமா தவர்க்கும் எட்டா
அரும்பெறல் இன்பம் எய்தி
* மோனநா யகனுய் முன்னம்
முனைந்துவென் றிருந்தான்: இன்றும்
மோனநா யகனுய் மூண்டு
முத்தியில் முதன்மை யுற்றான். (182)

---

* மோன நாயகன் = ஊமைத்துரை. அரசன் ஆய் இருந்த பொழுது மோனமாய் இருந்தவன் அதனைத் துறந்து ஞான நாயகன் ஆன பின்பு மோன நாயகனுய் அமர்ந்து முத்தித் திருவை எய்தி நித்திய பேரின்பம் துய்த்திருந்தான்.

பேரின்பம் பெற்றான்.

3808 அருவினை என அமைந்த
அரும்பெருந் தவங்கள் ஆற்றி
இருவினை விளைவு நீங்கி
இரவொடு பகலும் இன்றி
ஒருமயம் ஆகி யுள்ள
உயர்பர நிலையை எய்திக்
கரைதெரி வருபே ரின்பக்
கடலிடைக் களித்திருந்தான். (183)

3809 சீவிய காவியம்.

வீர மன்னவர் மெய்யருள் நெறியினை மேவிச்
சார மாயுயர் பேரின்ப நிலையினைச் சார்ந்தார்;
வார மாயவர் சரிதங்கள் வளமுற வரைந்து
வீர காவியம் எனஇது விளைந்தெழுந் ததுவே. (184)

3810 இந் நூலின் பயன்.

இன்ன வீரமாக் கதையினை இன்புறப் படித்தோர்
அன்ன வர்க்கரும் பொருள்கொடுத்து அன்புடன்கேட்டோர்
நன்ன யம்பெற வரைந்தவர் நயந்தவர் எல்லாம்
பன்ன ரும்பயன் பெற்றுயர் பதத்தினை அடைவார்.

3811 வாழ்த்து.

வாழி மாமழை வானவர் மாதவர் மறையோர்
வாழி மாநிலம் மன்னவர் மன்னுயிர் யாவும்
வாழி வீரமும் வண்மையும் வாய்மையும் அறமும்
வாழி இந்தநூல் ஊழியும் வளமுடன் வளர்ந்தே. (186)

32–வது கதி எய்திய படலம் முற்றிற்று.

ஆகக் கவி 3811.

வீர முருகன் வெற்றி அருள்க.

வீரபாண்டியம்

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
(அ)	
அக்கரை	180
அக்கினி	601
அக்கினிள	609
அக்கினிச்	632
அக்குல	140
அகதுதி	720
அகதியா	238
அங்கண்	99
அங்கய	61
அங்கவ	660
அங்கவன்	444
அங்கவள்	669
அங்கிரா	476
அங்கிரு	240
அங்கும்	206
அங்ஙனம்	669
அச்சம்	486
அச்சம்ள	640
அச்சமி	292
அச்சொற்	248
அஞ்சல்	342
அஞ்சாத	379
அஞ்சாத	387
அஞ்சாத	406
அஞ்சாத	536
அஞ்சியு	358
அஞ்சிஞ	190
அடடை	173
அடக்கமி	120
அடங்க	348
அடங்கி	134
அடங்கிம	635
அடர்த்து	32
அடர்ந்து	480
அடர்ந்தே	573
அடர்ந்தே	594
அடலாண்	488
அடலுறு	226
அடலுறு	501
அடலொடு	674
அடிக்கடி	549
அடித்தி	255
அடிபொ	144
அடிய	85
அடியில்	129
அடியிஞ	257
அடியினை	256
அடுகனற்	608
அடுசமர்	607
அடுத்தவ	49
அடுத்து	182
அடுத்த	200
அடுத்த	111
அடுத்தடு	379
அடுத்த	413
அடுத்தநி	477
அடுத்தமர்	637
அடுத்த	423
அடுத்து	142
அடுதிறல்	683
அடுந்திற	288
அடுந்தி	256
அடுபடை	60
அடைந்த	550
அடைந்தவீ	685
அடையவு	665
அண்ட	109
அண்டகோ	82
அண்டகோ	478
அண்ணல்	372
அண்ணல்	405
அண்ணலை	451
அண்ணன்	295
அண்ணனு	681
அண்ணளை	710
அணிந்த	143
அணிமயி	245
அத்தசா	291
அத்தலை	329
அத்தலைப்	621
அத்திசை	59
அத்திசை	75
அத்தோன்	701
அதிகலை	19
அதிகமை	35
அதிகொ	655
அதிபதி	451
அதிபதிஉ	548
அதிபர்	203
அதிபன்	454
அதிரவ	562
அந்தஆ	495
அந்தஓர்	80
அந்தக்கு	11
அந்தக்கும்	293
அந்தந	196
அந்தந	209
அந்தநா	69
அந்தநாள்	7
அந்தநூல்	10

செய்யுள்	பக்கம்
அந்தப்பு	663
அந்தமா	705
அந்தமாந	154
அந்தமி	112
அந்தமில்	98
அந்தவாய்	34
அந்தவ	175
அந்தவா	89
அந்தவா	128
அந்தவா	152
அந்தவா	85
அந்தவா	189
அந்தவா	205
அந்தவா	458
அந்தவு	182
அந்தவு	202
அந்தவெ	493
அந்தவே	278
அந்தவொ	244
அந்தாத்	113
அந்தோது	664
அந்நகர்	686
அந்நாட்	227
அந்நிலவ	652
அப்படிச்	85
அப்பதி	62
அப்பரிசு	497
அப்பெரி	136
அப்பெரு	198
அப்பெரு	211
அப்பெரு	280
அப்பொழு	244
அப்பொ	349
அப்போரி	65
அம்பினு	314
அம்மா இ	675
அம்மை எ	679
அம்மொழி	743
அமர்மு	673
அமரர்கோ	16
அமரம	102
அமரில்	440
அமிர்தம்	731
அமிழ்த	86
அமுதமை	38
அமுத	48
அமுதனை	104
அமுத	106
அயல்வ	303
அயலடை	565
அயலானை	378
அயலை	29
அயன்ப	12
அரங்க	23
அரசகா	182
அரசதி	53
அரசர்	222
அரசவை	132
அரசவை	137
அரசறு	289
அரசன்	210
அரசனி	243
அரசனை	302
அரசிடம்	604
அரசிடை	449
அரசின்	273
அரசு	26
அரசு	98
அரசுவ	57
அரசுறு	213
அரசு	107
அரசென	163
அரசெனு	123
அரசை	156
அரண் அ	645
அரண் வ	450
அரணற	642
அரணுட	651
அரம்பை	133
அரிஎறும்	675
அரிகளா	175
அரியதம்	722
அரியதா	725
அரியதிண்	33
அரியபா	490
அரியபே	112
அரியமா	726
அரிய	439
அரியவி	356
அரியவி	217
அரியநல்	87
அரியநூல்	108
அரியின	45
அரியின	475
அரியினம்	613
அருந்தவ	716
அருந்தவ	724
அருந்ததி	729
அருந்தவ	741
அருந்தி	200
அருந்தி	285
அருந்திறல்	287
அருந்திற	387
அருந்திற	471
அருந்திற	542
அருந்திற	592
அருந்திறலா	619
அருந்திற	699
அரும்பெ	20
அரும்பெ	584
அரும்பும	717
அருமறை	18
அருமறை	71
அருமைஎன்	9
அருமைமை	101
அருமை ந	104
அருமைமைந்	124

செய்யுள்	பக்கம்
அருவியா	188
அருவினை	744
அருள் அற	728
அருள் உற	739
அருளினை	83
அருளினை	118
அருளில்ல	708
அருளுரு	77
அருளுட	121
அல்அடர்	680
அல்லல்	121
அல்ல	277
அல்லல்	436
அல்லல்	441
அல்லல் ஆ	723
அல்லலோ	234
அல்லிடை	252
அல்லிரு	294
அல்லினி	341
அல்லிடை	690
அல்லுற	603
அல்வழி	386
அலகிலா	98
அலகைவா	317
அலகடல்	69
அலகல	375
அலஎறி	446
அலயடர்	336
அவ்வகை	139
அவ்வகை	228
அவ்வகை	578
அவ்வகை	715
அவ்வடக்	425
அவ்வம	241
அவ்வழி	621
அவ்வழிஅ	651
அவ்வாறு	484
அவ்விட	206
அவ்வீரக்	674

செய்யுள்	பக்கம்
அவ்வுரை	232
அவ்வுரையை	244
அவ்வுரை	461
அவ்வுரை	529
அவ்வுரை	698
அவரவ	60
அவரவ	183
அவளு	87
அவன்அ	178
அவன்ப	186
அவன்ற	197
அவன்அ	714
அவனக	230
அவனகன்	273
அவனும்	686
அவனவ	64
அழகிரு	67
அழகின	279
அழகும்	46
அழகும்	155
அழகும்	371
அழகு	513
அழகை	423
அழகொ	674
அழிந்துப	562
அழிந்துள	661
அழியாத	700
அழைத்த	196
அழைத்து	62
அளவருப	661
அளவிலா	236
அளவிலா	477
அளவிலா	722
அளவுசெ	253
அளிகொ	239
அறங்கெ	6
அறந்த	741
அறநல	135
அறநல	732

செய்யுள்	பக்கம்
அறநீதி	352
அறநெறி	151
அறவிய	138
அறிவினி	235
அறிவுளா	94
அறிவும்	238
அறுத்த	70
அறுபதா	637
அன்பமை	100
அன்பிலல்	127
அன்புடை	41
அன்பு பூ	43
அன்புடை	50
அன்புயர்	120
அன்புமி	210
அன்புசூ	238
அன்புட	212
அன்பை	497
அன்றவ	187
அன்றம	537
அன்றவ	550
அன்றவ	583
அன்றிர	72
அன்றில	41
அன்றிர	241
அன்றிர	144
அன்றுமு	137
அன்று	185
அன்றுவி	208
அன்றுநா	279
அன்றுஇ	322
அன்று	360
அன்றுநீ	364
அன்றுபோ	365
அன்றுவே	463
அன்றுடை	532
அன்றுபோ	548
அன்றுகழி	572
அன்றுபோ	576

செய்யுள்	பக்கம்
அன்றுபோ	585
அன்றுபோ	629
அன்றுட	665
அன்னமா	17
அன்னம்	23
அன்னமா	25
அன்னம	30
அன்னவர்	59
அன்னவன்	62
அன்னவ	62
அன்னவர்	68
அன்னகா	85
அன்ன	87
அன்னநா	129
அன்னவெழி	133
அன்னம	135
அன்னவ	138
அன்னவ	153
அன்னம	160
அன்னவோ	170
அன்னவீ	187
அன்னவ	182
அன்னவ	161
அன்னவ	204
அன்னவீ	209
அன்னபெ	217
அன்னவ	223
அன்னவ	226
அன்னமெ	246
அன்னவன்	273
அன்னதோ	282
அன்னவர்	344
அன்னவ	369
அன்னவன்	377
அன்னபி	391
அன்னதை	445
அன்னவீ	467
அன்னவ	483
அன்னதி	496
அன்னவா	507
அன்னவு	535
அன்னபோ	559
அன்னவ	563
அன்னவன்	599
அன்னவர்	611
அன்னவன்	621
அன்னவ	668
அன்னந	682
அன்னவர்	687
அன்னமா	717
அன்னதா	726
அன்னிய	283
அன்னிய	163
அன்னிய	177
அன்னையை	140
அன்னை	354
அன்னையே	670
அனுப்பிய	263
அனைய	101
ஆ	
ஆக்கமு	114
ஆக்கரா	64
ஆக்கவே	114
ஆக்கிய	118
ஆகம்ள	631
ஆகையால்	549
ஆங்கிலநா	612
ஆங்கிலப்	388
ஆங்கிலம்	299
ஆங்கிலரி	460
ஆங்கிலே	416
ஆங்கிலே	492
ஆசை அற்	719
ஆசை அற்	722
ஆசைஉள்	719
ஆசைஎவ்	720
ஆசைகள்	95
ஆசையாம்	96
ஆசையால்	721
ஆசைவ	51
ஆட்சியா	431
ஆட்டுக்	133
ஆட்படை	609
ஆடுதா	176
ஆடல்	588
ஆடலா	132
ஆண்டகை	169
ஆண்டகை	234
ஆண்டகை	286
ஆண்டகை	581
ஆண்ட	350
ஆண்டவ	241
ஆண்ட	28
ஆண்ட	41
ஆண்டவ	76
ஆண்டகொ	402
ஆண்டு	107
ஆண்டு	174
ஆண்டுநி	555
ஆண்டுமூ	7
ஆண்டுமு	709
ஆண்டொ	175
ஆண்டொ	431
ஆணென	79
ஆணையை	192
ஆத்தலோ	574
ஆதலால்	27
ஆதலால்	65
ஆதலால்	83
ஆதலால்	84
ஆதலால்	115
ஆதலால்	116
ஆதலால்	140
ஆதலால்	146
ஆதலால்	169
ஆதலால்	287

ஆதலால் 436
ஆதலால் 453
ஆதலால் 459
ஆதலால் 468
ஆதலால் 541
ஆதலால் 697
ஆதலாலு 89
ஆதவன் 45
ஆதவன் 574
ஆதனூர் 319
ஆதாநா 107
ஆதிசெ 220
ஆதிமேன் 10
ஆதியாகி 172
ஆதியிலி 203
ஆதியில் 167
ஆதிரா 328
ஆதினப் 133
ஆம்பரி 341
ஆயிரத் 153
ஆயிரத் 475
ஆயிரத் 512
ஆயிரம் 44
ஆயிரம் 253
ஆயிரப்பி 667
ஆயின்நா 209
ஆயினும் 339
ஆயினும் 342
ஆயுத 381
ஆர்த்து 61
ஆர்த்தி 591
ஆரவாய் 57
ஆரவாய் 66
ஆரவாய் 162
ஆரவாய் 165
ஆரறிவு 738
ஆருயி 308
ஆருயிர் 147
ஆருயிரி 357
ஆலவாய் 385
ஆலன் 161
ஆவிதான் 669
ஆவிபோ 404
ஆவிமன் 148
ஆவியோ 197
ஆவுடை 315
ஆள்வினை 52
ஆள்வினை 123
ஆளிமொ 561
ஆளுநல் 171
ஆளும்அ 152
ஆளும் 159
ஆளும் 435
ஆனஒத் 427
ஆறடிஅ 447
ஆறுநூ 31
ஆறுநூறு 508
ஆறுமுக 149
ஆறுறும் 280
ஆறெட் 422
ஆனசீரு 8
ஆனதால் 287
ஆனவர் 584
ஆனஏறி 432
ஆனயில் 319
ஆனயை 122

இ

இக்கண 400
இக்குமது 65
இகல்ஒ 640
இங்கிதை 142
இங்கிலா 152
இங்கிவ் 258
இங்கிவ் 672
இங்கிவர் 338
இங்கிவ 488
இங்கிவ 539
இங்கினி 680
இங்குவ 92
இங்குவ 198
இங்குவ 160
இச்சம 483
இசையுட 652
இசையும் 152
இட்டஆ 186
இட்டவெ 402
இட்டவெ 548
இட்டுவ 466
இடம்பி 375
இடம்பெ 552
இடிகள் 517
இடித்து 313
இடையி 127
இத்த 46
இத்திறம் 60
இத்திற 222
இத்திற 254
இத்திறம் 567
இத்திற 324
இத்திறம் 605
இத்திறம் 577
இத்திருநா 687
இதுவரை 205
இந்தநா 168
இந்தநா 170
இந்தநா 173
இந்தநா 173
இந்தநா 222
இந்தநா 271
இந்தநாட் 367
இந்தநா 299
இந்தநா 432
இந்தநா 424
இந்தநா 490
இந்தநா 514
இந்தமா 152
இந்தமா 155
இந்தம 423
இந்தமன் 426

இந்தமா 726
இந்தமாவீ 616
இந்தவ 137
இந்தவ 536
இந்தவா 159
இந்தவா 172
இந்தவா 239
இந்தவா 248
இந்தவா 389
இந்தவீ 476
இந்தவே 294
இந்திர 191
இந்திரன் 371
இந்திரனே 386
இந்தியநா 549
இந்திய 288
இந்தியா 173
இந்நகர் 697
இந்நாட் 368
இந்நாட் 428
இந்நிலத் 176
இந்நில 182
இப்படி 289
இப்படிக் 318
இப்படி இ 580
இப்படிச் 569
இப்படிய 362
இப்படை 566
இப்படை 650
இப்பெரு 141
இம்பர் 234
இம்மன் 136
இம்மன் 218
இம்மன் 532
இமயங் 419
இமயநி 78
இமயமே 389
இரண்டு 127
இரண்டு 209
இரண்டுநா 230
இரண்டு 617
இரண்டு 550
இரண்டு 566
இரவிற் 128
இரவிடை 542
இரவிடை 579
இரவிடை 667
இரவிடை 667
இரவுநா 294
இரவுவ 254
இரவுவ 296
இரவுவ 479
இரவெல் 484
இருதளத் 632
இருதிறப் 58
இருதிற 330
இருதிறத் 481
இருதிறத் 645
இருதிறப் 557
இருதிறப் 571
இருதிறப் 587
இருதிறப் 618
இருதின 240
இருந்த 348
இருந்துணை 567
இருந்தவர் 547
இருநூறு 499
இருப்பினி 518
இருப்பினி 578
இருபதா 178
இருமரு 136
இருவர் 131
இருவரும் 41
இருவரும் 224
இருவகை 316
இருவகை 615
இருவரும் 591
இருவினைப் 736
இருளினில் 661
இல்லொழு 731
இல்லடை 248
இல்லடை 262
இல்லார்க 499
இல்லற 730
இல்லிழந் 145
இல்லேயேல் 56
இல்லை 128
இலக்கண 3
இலக்கத் 633
இவ்வகை 60
இவ்வகை 63
இவ்வகை 104
இவ்வகை 167
இவ்வகை 233
இவ்வகை 244
இவ்வகை 257
இவ்வகை 337
இவ்வகை 468
இவ்வகை 541
இவ்வகை 568
இவ்வகை 584
இவ்வகை 613
இவ்வகை 649
இவ்வகை 653
இவ்வகை 664
இவ்வகை 687
இவ்வண் 246
இவ்வெண் 377
இவ்வரண் 625
இவ்வழிம 648
இவ்வாறு 57
இவ்வாறு 132
இவ்வா 143
இவ்வாறு 303
இவ்வாறு 483
இவ்வாறு 703
இவ்விடம் 548
இவ்வீர 426
இவர்கள் 552
இவன்தா 368

இவன் அ 209
இவன்வ 325
இவனதா 32
இவனிலை 201
இவனுள 78
இவனேநா 500
இழந்தக 70
இழிந்த 78
இழிந்த 130
இழிந்து 435
இழுக்கு 202
இறனற 31
இற்றை 158
இறந்தபி 428
இறந்துப 543
இறந்துப 675
இறுதியா 600
இனபம்வ 737
இன்பமே 93
இன்றிவ 177
இன்றிரு 466
இன்றிருப் 512
இன்றிடை 579
இன்றினி 565
இன்றிர 431
இன்றுடன் 642
இன்றுநீ 430
இன்றுபா 554
இன்றுபோ 560
இன்றுபே 478
இன்றும் 135
இன்றும் 439
இன்றும்போ 634
இன்றுள் 150
இன்றுவந் 296
இன்றுவ 312
இன்றுவா 335
இன்றெ 79
இன்றெதி 506
இன்னெரு 169
இன்னெருரு 605
இனெருரு 659
இன்ன 88
இன்ன 138
இன்ன 42
இன்னசீர் 65
இன்ன 393
இன்னகு 394
இன்னகா 418
இன்னசி 474
இன்னதி 326
இன்னதுசெ 662
இன்னதோ 69
இன்னதோ 76
இன்னதோ 166
இன்னதோ 577
இன்னதோ 651
இன்னபடி 215
இன்னஉ 26
இன்னபெ 217
இன்னபெ 228
இன்னபெ 597
இன்னபெ 502
இன்னம் 458
இன்னமாப் 14
இன்னமா 153
இன்னவ 176
இன்னவ 184
இன்னவ 232
இன்னவ 414
இன்னவ 428
இன்னவ 454
இன்னவ 486
இன்னவ 494
இன்னவ 506
இன்னவ 531
இன்னவண் 554
இன்னவண் 639
இன்னவா 35
இன்னவா 54
இன்னவா 67
இன்னவா 77
இன்னவா 101
இன்னவா 107
இன்னவா 161
இன்னவா 186
இன்னவா 799
இன்னவா 322
இன்னவா 378
இன்னவா 430
இன்னவா 461
இன்னவா 512
இன்னவா 513
இன்னவா 526
இன்னவா 578
இன்னவாற 623
இன்னவாறு 674
இன்னவா 685
இன்னவாறு 707
இன்னவாறு 716
இன்னவீ 323
இன்னவீ 744
இன்னவெ 632
இனந்தெ 582
இன்னிலை 741
இனிதினீ 127
இனிமை 270
இனிய 22
இனிய 28
இனிய 85
இனியஇ 432
இனியபூ 88
இனியந 89
இனியநீ 126
இனியநா 156
இனிய 346
இனியதன் 725
இனியதை 600
இனியவ 142
இனியன 113

இனியிறை 445
இனியெ 538
இனைய 23
இனைய 28
இனையவா 97
இனையவ 181
இனையன 124

ஈ

ஈகையி 143
ஈசன் 23
ஈசனடி 429
ஈட்டிய 119
ஈண்டுவ 54
ஈதலும் 118
ஈதலையு 119
ஈரவெங் 525
ஈர்க்கி 166
ஈவின்றி 546
ஈனநாட் 398
ஈனமான 726
ஈனலோபி 118

உ

உச்சியம் 70
உடம்பில் 639
உடலுயிர் 615
உடலை 54
உடன்பிற 682
உடைந்த 622
உடைந்து 633
உண்டதே 79
உண்டி 476
உண்டு 4
உண்டுவ 474
உண்டுள 578
உண்ணுங் 118
உண்மை 10
உண்மை 196
உண்மை 237
உத்தர 162
உதவிக் 32
உமது 129
உயிர்க 130
உயிர்பி 443
உயிர்பி 457
உயிருட 195
உயிரை 117
உரமிக 83
உரிமை 35
உரிமை 97
உரிமை 302
உரிமையா 724
உரிய 107
உரியத 297
உரியவா 208
உரியஇ 450
உரியபோ 638
உரியவீ 443
உருவம் 46
உருவமெ 39
உருவில் 38
உருவில் 125
உருவில் 431
உருவில் 434
உருவும் 373
உருவும் 423
உருவொ 728
உரைத்த 157
உலகட 109
உலகநா 147
உலகநீ 198
உலகம் 1
உலகம் 237
உலகவா 417
உலகில் 7
உலகுயிர் 13
உலகெ 719
உலகெல் 40
உலகெலா 119
உலகென 79
உவந்தெ 205
உழுதுத 156
உழுவலன் 9
உழுவல 106
உழுவல 239
உழுவலன் 240
உழைத்து 24
உள்ளுற 646
உள்வியங் 676
உள்ளமே 12
உள்ளத் 109
உள்ளம்க 6
உள்ளத் 145
உள்ளபா 158
உள்ளம் 215
உள்ளதை 231
உள்ளநூ 236
உள்ளத் 281
உள்ளவ 359
உள்ளம் 371
உள்ளவா 380
உள்ளநா 399
உள்ளமா 401
உள்ளம்ந 417
உள்ளம் 478
உள்ளமெ 533
உள்ளறிந் 614
உள்ளமூட் 631
உள்ளத் 638
உள்ளசே 632
உள்ளம்தூ 721
உள்ளாள 487
உள்ளிரு 175
உள்ளிரு 480
உள்ளிரு 492
உள்ளுற 165
உள்ளுறு 81
உள்ளுறு 114
உள்ளுறை 274

செய்யுள்	பக்கம்
உள்ளுற	582
உள்ளுற	589
உள்ளுற	626
உள்ளுறு	688
உள்ளுறுப	691
உள்ளுறுக	743
உள்ளெ	452
உளவறிந்	583
உளவுசூ	513
உற்ற	129
உற்றஆ	148
உற்றஃகா	524
உற்றசெ	708
உற்றஉ	709
உற்றஓர்	723
உற்றடை	633
உற்றத	305
உற்றத	345
உற்றத	661
உற்றதானை	555
உற்றதை	662
உற்றதோ	344
உற்றபடை	682
உற்றபெ	643
உற்றபெ	680
உற்றபெ	696
உற்றபே	121
உற்றபே	687
உற்றவ	453
உற்றவர்	544
உற்றவு	274
உற்றவுய	597
உற்றவூ	87
உற்ருரு	681
உற்றிரு	86
உற்றிரு	464
உற்றுள	283
உற்றுளது	566
உற்றுநீ	705
உறுபொ	140
உறுவதை	350
உன்படை	535
உன்மனை	243
உன்றனி	265
உன்னுடை	713
உன்னை	81
உன்னைநீஉ	716
உன்னைநீ	742
உன்னை	271
உன்னைமு	200
உன்னையு	158
உனது	109

உள

உளக்கமுன்	30
உளக்கி	437
உளக்கிஎ	516
உளட்டிமி	679
உளடிஉவந்	664
உளமைச்	436
உளமைச்	493
உளமைச்சி	631
உளமைநா	468
உளமைம	443
உளமைம	472
உளமைமன்	547
உளமைம	553
உளமைமன்	575
உளமைம	629
உளமையன்	45
உளமைய	470
உளமையன்	471
உளமைய	502
உளமைய	584
உளமைய	599
உளமைய	668
உளர்ந்த	666
உளர்வன	738
உளரவர்	387
உளரிலுள்	34
உளரின	390
உளரும்நா	414
உளருள்	130
உளருளே	373
உளரெங்	52
உளரெலா	469
உளரைவி	351
உளரைவி	376
உளரைவி	397
உளழித்தீ	405
உளழித்தீள	640
உளழிவெங்	690
உளற்ற	62
உளற்றுறு	118
உளருருசி	583
உளருரு	641
உளைக்கண்	78
உளனிருக்	174
உளனுடை	97

எ

எங்கணு	66
எங்கணும்	141
எங்கட	199
எங்கள்	229
எங்கள்	393
எங்கள்வே	475
எங்கள்சே	635
எங்கிருந்	78
எங்கிரு	155
எங்கிரு	374
எங்கிருந்	609
எங்குழு	93
எங்கும்பே	517

செய்யுள்	பக்கம்
எங்கும்வெ	525
எங்குஎங்	677
எஞ்சிநி	333
எட்டனை	178
எட்டப்	368
எட்டநின்	558
எட்டநின்	561
எட்டனே	455
எட்டன்	462
எட்டியின்	165
எட்டியு	189
எட்டைய	63
எட்டை	185
எட்டை	392
எட்டைய	513
எட்டையா	400
எடுத்த	256
எடுத்து	727
எண்ணரு	79
எண்ணரு	113
எண்ணி	26
எண்ணிநோ	29
எண்ணி	86
எண்ணிய	212
எண்ணி	269
எண்ணிவ	570
எத்தலத்	34
எத்திசை	162
எத்துணை	633
எத்துணைப்	720
எதிர்ந்	607
எதிர்வ	338
எதிர்வதை	640
எதிரம	192
எதிரிகள்	582
எதிருறு	282
எந்த	7
எந்தநா	164
எந்தவே	176
எந்தநா	297
எந்தவ	298
எந்தஇ	354
எந்தநா	392
எந்நாட்	419
எந்நாட்	503
எந்நாளி	507
எப்படியு	448
எய்தியஇ	540
எய்திநி	725
எய்தகுண்	564
எரியும்	562
எரிதழல்	732
எருவை	108
எல்லநன்	105
எல்லமா	415
எல்லைநா	319
எல்லையில்	720
எல்லையி	236
எல்லையில்	734
எவ்வழி	285
எவ்வழி	314
எவ்வளவு	504
எவ்வகை	689
எழில்மி	116
எழுந்து	57
எழுநூறு	334
எழுந்து	476
எழுந்தவ	642
எழுந்தவ	712
எழுபது	225
எள்ளுறு	119
எளிய	46
எறிகின்ற	614
எறியும்	326
எறும்பு	144
என்தலைஎ	688
என்தெய்	728
என்வலி	231
என்றவ	78
என்றவா	155
என்றவ	188
என்றர	193
என்றவ	200
என்றவ	205
என்றர	215
என்றலு	224
என்றவ	232
என்றவு	261
என்றய	264
என்ற	272
என்றவர்	285
என்றலு	356
என்றந்	358
என்றவு	382
என்றழு	429
என்றவா	437
என்றவா	445
என்றவன்	543
என்றவன்த	543
என்றவர்	598
என்றவ	602
என்றவன்	622
என்றவன்	687
என்றிவன்	71
என்றிரு	211
என்றிவ	231
என்றின்	242
என்றிவ்	260
என்றிவ	337
என்றிந்	502
என்றிவ்	679
என்றின்	711
என்று	55
என்றுவா	56

செய்யுள்	பக்கம்
என்றுமே	83
என்று	88
என்றுமு	97
என்று	107
என்றுதா	123
என்றுமே	131
என்றுமி	133
என்றுப	154
என்றுமே	156
என்றும	163
என்றுமே	172
என்றுவே	176
என்றும	183
என்றுமு	183
என்றும	209
என்றுய	210
என்றும்	236
என்றும	237
என்று	269
என்றுசீ	270
என்றும்	290
என்றுமா	294
என்றுதே	299
என்றும்	311
என்றுநே	347
என்று	374
என்றுவ	378
என்றுமே	394
என்றுமே	396
என்றும	397
என்றுமக்	408
என்றுகோ	415
என்றுள்	434
என்றுசொ	438
என்றுசூ	440
என்றுப	450
என்றும	467
என்றும்	468

செய்யுள்	பக்கம்
என்றுவெ	474
என்றுமு	514
என்றுப	534
என்றுள	542
என்றுளம்	548
என்றும	557
என்றுள	579
என்றுளந்	610
என்றும	631
என்றுசே	634
என்றுமா	637
என்றுமன்	640
என்றுமே	659
என்றுநி	667
என்றுது	682
என்றுயர்	689
என்றுவெ	703
என்றும	709
என்றெழு	263
என்றேறங்	413
என்னதா	93
என்னமு	166
என்னவ	215
என்னத	270
என்னஇ	274
என்னவி	276
என்னசெ	278
என்னநே	293
என்ன	393
என்னமா	492
என்னஅ	494
என்னமா	722
என்னிரு	50
என்னின	156
என்னுடை	193
என்னுயி	413
என்னுயர்	616
என்னேஇ	713

செய்யுள்	பக்கம்
என்னை	7
என்னைநீ	17
என்னையி	79
என்னையிவ்	96
என்னையு	212
என்னை	423
எனஅவ	168
எனஅவ	252
எனஅவன்	279
எனஅவ	349
எனஅவ	650
எனஅவன்	668
எனக்கு	98
எனக்குஒ	735
எனத்தே	261
எனதுசே	296
எனதுநா	727
எனவர	80
எனவவ	211
எனவுல	134

ஏ

ஏகமாய்	154
ஏகுமவ்	252
ஏடுறுசி	577
ஏந்திய	412
ஏவமே	613
ஏழுநா	272
ஏழுநா	493
ஏழைம	157
ஏழைக	639
ஏற்றமா	251
ஏற்றிய	254
ஏறிமுன்	523
ஏறிமே	467
ஏறிமே	579
ஏறிமேல	558
ஏறியும்	256

செய்யுள்	பக்கம்
ஏறிவந்	241
ஏறிவந்	305
ஏறிவந்	509
ஏன்றஇ	250
ஐ	
ஐதராதி	164
ஐதர்	181
ஐந்துமக்	44
ஐந்தெனுந்	8
ஐந்தெனு	658
ஐந்நூ	362
ஐம்பது	252
ஐம்பது	361
ஐம்புல	242
ஐம்பொறி	120
ஐயகோ	268
ஐயகோ	411
ஐயகோ	414
ஐயனே!	709
ஒ	
ஒட்டநத்	8
ஒட்டந	290
ஒட்டறம்	508
ஒட்டிநின்	603
ஒட்டிவ	534
ஒடிந்த	630
ஒடிங்கி	433
ஒண்டியி	254
ஒத்தமக்	108
ஒத்திரு	398
ஒத்திரு	620
ஒத்திவ	677
ஒத்துநி	454
ஒதுங்கி	591
ஒப்பிலா	727
ஒருகணை	79

செய்யுள்	பக்கம்
ஒருகணத்	587
ஒருகுலத்	65
ஒருத்திள	678
ஒருதுளிக	659
ஒருதுணை	531
ஒருநன்	263
ஒருநன்	497
ஒருபரம்	733
ஒருபால	301
ஒருபெரு	591
ஒருமக	267
ஒருமையி	685
ஒருமுறை	163
ஒருவன்	13
ஒருவனே	81
ஒருவரை	583
ஒருவரை	606
ஒலியுருவ	662
ஒழிந்தஅ	562
ஒழுக்கம்	732
ஒழுகொ	39
ஒள்ளடி	405
ஒளிதவழ்	103
ஒளியினை	346
ஒற்றர்	127
ஒற்றிநி	284
ஒன்றும்	720
ஒன்றுமி	128
ஒன்றும்	277
ஒன்றும்	295
ஒன்றும்	442
ஒன்றுமே	546
ஒன்னலர்	221
ஒன்னலர்	281
ஒன்னலர்	573
ஒன்னலர்	581
ஒன்னலன்	652

செய்யுள்	பக்கம்
ஓ	
ஓசை	97
ஓடவும்	232
ஓடிஉன்	491
ஓடிஓடி	456
ஓடிப்போ	480
ஓடிமீள்	552
ஓடியக	533
ஓடிவந்	384
ஓடிஞர்	531
ஓடினும்	58
ஓடுதல்	549
ஓறி	95
ஓராண்டு	380
ஓரியன்	191
ஓலை	102
க	
ககரம்	671
கங்கை	126
கச்சை	100
கட்டமல்	319
கட்டபொ	384
கட்டபொ	424
கட்டபொ	434
கட்டமை	458
கட்டஞ	57
கட்டபொ	535
கடல்கட	497
கடல்குடி	725
கடலில்	89
கடலென	31
கடல்வ	174
கடிதம்	381
கடிதம்ஓ	543
கடிய	88
கடிமதில்	366

செய்யுள்.	பக்கம்.
கடிமதிற்	515
கடுத்தவ	619
கடுத்து	225
கடுத்து	467
கடுத்துவ	522
கடுத்துமு	549
கடும்பரி	570
கண்கலை	75
கண்காட்	133
கண்ட	38
கண்டவ	60
கண்ட	100
கண்டவ	165
கண்டவு	249
கண்டகோ	311
கண்டவு	380
கண்ட	402
கண்டக்	414
கண்டவ	429
கண்டவா	520
கண்டவர்	592
கண்டவர்	693
கண்ணி	39
கண்ணில	75
கண்ணும்	370
கண்ணை	679
கண்ணை	157
கண்ணெ	68
கண்ணெ	74
கண்ணெ	103
கண்ணை	678
கண்ணி	72
கணமா	94
கணித்த	102
கத்திக	441
கத்திவ	425
கத்திவல்	557
கதிஐந்	329

செய்யுள்.	பக்கம்.
கதிமிகு	409
கம்பளம்	24
கப்பு	25
கரணங்	81
கரணம்	670
கரவுட	287
கரிய	99
கரியூர்	713
கருங்க	285
கருங்க	313
கருங்கா	333
கரும்பி	27
கருமமே	170
கருமரு	296
கருமரு	323
கருமருந்	495
கருமருந்	575
கருவினு	93
கருவிய	336
கரைபுர	527
கல்லமர்	314
கல்லிணை	521
கல்லிணை	566
கல்லெதி	506
கல்விநன்	343
கல்வியா	108
கல்வியாள	117
கல்வியி	111
கல்வியில்	537
கல்வியும்	94
கலத்தை	85
கலத்தி	726
கலத்தில்	490
கலவியி	106
கலிங்கர்	178
கலியுக	10
கலைநல	197
கலைநி	47

செய்யுள்.	பக்கம்.
கலைப்பவ	349
கலைபல	40
கலையமை	13
கலைய	99
கலைவளர்	30
கவனவா	448
கவிச்சு	117
கழிந்த	118
கழுகும்சே	630
கழுதும்	290
கள்ளம்	270
கள்ளர்	264
களவு	127
கற்பகம்	40
கற்பனை	4
கற்பினி	39
கற்பினை	642
கற்புடை	342
கற்புறு	74
கற்றக	236
கற்றகல்	725
கற்றந	131
கற்றபே	235
கற்றமர்	235
கற்றவ	134
கன்னக்க	319
கன்னல்	321
கன்னலோ	225
கன்னன்	131
கனவிடை	68
கனிகளை	141

கா

காசியம்	67
காட்டி	55
காட்டிடை	569
காடல்கு	426
காடல்மா	557

செய்யுள்	பக்கம்
காடும்	373
காடெல்	52
காணவா	200
காணவ	206
காணுற	580
காததிவ	77
காத்துநி	438
காதைநா	11
காமமே	100.
காமமா	111
காமமே	730
காமனும்	40
காயமு	314
காயலா	320
காரன்வா	171
காரியம்	282
காரென	19
கால்க	323
கால்வ	324
காலத்தி	166
காலத்து	183
காலம்நி	147
காலம்நீ	187
காலமா	12
காலமிட	486
காலமு	357
காலமும்	80
காலனே	444
காலிடுக்	326
காலிடுக்	560
காலின்	316
காலெ	477
காலெட்	304
காலெயில்	245
காலெயில்	523
காலெயி	409
காலெயீ	184
காலெயும்	22
காவல்	128
காவலர்	257
காவலின்	580
காளென	260
காளையை	671
காற்றில்	562
காற்றை	216
காற்றை	527
காற்றென	588
காற்றை	611
காற்றை	327
காற்றை	597
கானவே	706
கி	
கிச்சுக்கு	663
கிள்ளை	345
கு	
குடல்	25
குடல்ச	318
குடல்சரி	509
குடிபோன	675
குடிமகிழ்	33
குடியடி	241
குடிவெறி	605
குடைகொ	695
குடையோ	379
குண்டிட்	486
குண்டுக	289
குண்டுக	336
குண்டுக	605
குண்டுக	656
குண்டுகள்	662
குண்டுத	587
குண்டுப	318
குணத்தி	95
குத்திய	316
குத்தியகு	607
குத்தியசை	644
குத்தென	313
குத்தென	593
குத்தென	606
குதலை	349
குதிரை	423
குதிரையி	610
குதிரைவீ	507
குதிரைவீ	524
குதிரைவெ	622
குப்பினி	212
கும்பினி	284
கும்பினி	290
கும்பினியா	306
கும்பினி	339
குப்பினி	350
கும்பினி	407
கும்பினி	455
குப்பினிய	498
கும்பினியா	499
கும்பினிப்	526
குமரன்	125
குமரிரு	88
குயிலின	245
குரிசிலை	103
குருதிநீர்	607
குருதியின்	671
குருதியி	322
குலநகர்	447
குலவீர	410
குலாலனூ	325
குளமுடைந்	596
குற்றங்	52
குற்றங்	365
குற்றஞ்	130
குற்றமு	238
குற்றவா	127

செய்யுள்	பக்கம்
குற்றுயி	671
குறவரும்	705
குறிகள்	526
குறிகள்கூ	558
குறித்த	135
குறித்த	390
குறித்தநா	451
குறுநில	247
குனிந்து	400
கூ	
கூடலூர்	61
கூடவே	377
கூடிநின்	507
கூடிய	280
கூடுவிட்	353
கூத்த	320
கூவிஅலை	662
கூவிவந்	609
கெ	
கெஞ்சி	164
கெடுகா	262
கே	
கேட்டசே	685
கேட்டயா	478
கேட்டன	686
கேடுதா	267
கை	
கைகளை	50
கையசத்	382
கையிலே	259
கையில்	425
கையில்கொ	630
கையிலை	491
கையெழு	74

செய்யுள்	பக்கம்
கைவடிவா	644
கைவருப	606
கைவரும்	519
கைவருவே	611
கைவெடி	482
கொ	
கொடியவ	231
கொடிய	291
கொடியபீ	292
கொடிய	298
கொடிய	440
கொடியசி	500
கொடியபீ	520
கொடியவ	535
கொடியவெ	550
கொடியபீ	552
கொடியவ	680
கொடுங்	275
கொடுங்	330
கொடுங்க	579
கொடுஞ்சி	692
கொடுமை	204
கொடுமை	437
கொடை	103
கொண்ட	630
கொண்டு	129
கொத்த	23
கொத்தள	311
கொத்த	477
கொத்தா	483
கொல்லம்	21
கொல்லம்	43
கொல்ல	184
கொல்லம்	334
கொல்லை	692
கொல்லு	121
கொல்லு	364

செய்யுள்	பக்கம்
கொல்லுகி	406
கொல்லு	522
கொல்லுகொ	582
கொல்லை	250
கொலைபட	586
கொலைவடி	533
கொள்ளி	95
கொள்ளி	256
கொள்ளி	326
கொள்ளியி	612
கொள்ளு	121
கொள்ளை	29
கொள்ளை	203
கொள்ளை	258
கொள்ளை	265
கொள்ளை	272
கொள்ளைநெ	272
கொள்ளை	276
கொள்ளை	307
கொள்ளைகொ	309
கொள்ளை	340
கொள்ளைய	604
கொற்றவ	608
கொற்றவ	619
கொற்றவ	627
கொன்றதும்	740
கொன்றிட	707
கொன்றுயி	594
கொன்னி	44
கோ	
கோக்கு	452
கோங்குசெ	705
கோசலே	359
கோட்டை	48
கோட்டை	311
கோட்டை	313
கோட்டை	427

செய்யுள்.	பக்கம்.
கோட்டை	474
கோட்டை	476
கோட்டை	478
கோட்டை	511
கோட்டை	518
கோட்டை	520
கோட்டையி	545
கோட்டையு	604
கோட்டையை	622.
கோட்டைமு	625
கோட்டையி	646
கோட்டையு	649
கோட்டைள	692
கோடிஓ	345
கோடிச	408
கோடிபே	417
கோடியாம்	735
கோதுபதி	62
கோபத்	291
கோம்பை	61
கோமகன்	103
கோல்கோ	433
கோலமயி	594
கோலமூ	408
கோலா	361
கோவிலெ	242
கோள்மூ	375
கோளர்	456
கோளரி	65
கோளினை	567
கோளும்	175
கோளும்	205
கோளூமூ	399
கோனவன்	589
கோனிவன்	598
கோலே	672

செய்யுள்.	பக்கம்.
ச	
சகவீர	14
சங்கஅ	376
சங்க	390
சங்க	395
சங்கஆ	426
சங்கஆ	490
சங்கம்	321
சங்கம்	240
சங்கம	634
சங்கமன்	635
சங்கமு	263
சங்கரணை	460
சங்கிலி	233
சச்சிதா	727
சடைய	117
சடைவ	721
சண்ட	110
சண்டமா	560
சண்டை	498
சண்பக	106
சண்பக	245
சண்முக	39
சத்திய	213
சத்தியா	298
சத்தியாசி	729
சந்தனை	139
சந்தன	106
சந்திரன்	86
சந்திரனை	419
சமய	27
சமர்க	198
சமர்நி	547
சமரிணு	473
சமைத்த	655
சரிசமன்	620
சவுந்தர	125

செய்யுள்.	பக்கம்.
சா	
சாகஅ	571
சாகசன்	247
சாகதேவ	688
சாத்தனு	254
சாதனை	350
சாதனை	385
சாதிகா	54
சாம்பசிவ	681
சார்கய	280
சார்ந்த	350
சார்ந்தி	698
சார்ந்தி	706
சார்ந்து	569
சாரிகை	590
சாரிசெய்	322
சாலவ	394
சாலிவண்	29
சாலிவ	244
சாவென்	406
சான்றவ	146
சி	
சிங்கஏ	401
சிங்கங்	344
சிங்கம்	404
சிங்கம்	421
சிங்கம	222
சிங்கமு	299
சிங்கவெ	438
சித்தம்	81
சித்திரை	555
சிந்தலக்	320
சிந்துமே	49
சிப்பியுறு	498
சிவகிரி	59
சிவந்த	38

செய்யுள்.	பக்கம்.
சிவலிங்	276
சிவிகை	192
சிவிகை	372
சிற்றர	377
சிற்றச	384
சிற்றசு	286
சிறந்த	122
சிறியது	164
சிறிய	416
சிறுநகர்	538
சிறையா	375
சிறையி	437
சிறையி	438
சிறையிடை	600
சிறையினை	470
சிறையிரு	495
சிறையி	202
சின்னபொ	415
சின்னபொ	415
சின்னபொ	464
சின்னபொ	560
சின்னமா	475
சின்னவீ	321
சின்னன்	513
சின்னுட்	699
சீ	
சீமைய	220
சீமையி	503
சீமையி	545
சீமையு	496
சீமையுறு	497
சீமைவெ	492
சீர்மலி	240
சீர்வாசு	230
சீரமர்ந்	14
சீரமைந்த	10
சீரமைந்	464
சீ	
சீலம்	14
சீலமிக்	38
சீலமிக்க	48
சீலமும்	146
சீலமே	731
சீவலப்	290
சீறியிம்	159
சீனமா	175
சு	
சுக்கிலம்	91
சுட்டக	330
சுட்டகு	327
சுட்டகு	509
சுட்டகு	515
சுட்டகு	525
சுட்டகுண்	564
சுட்டகொ	575
சுட்டகு	586
சுட்டவெ	608
சுட்டி	440
சுட்டிடப்	571
சுட்டுநி	644
சுடுகனல்	608
சுடுகிற	501
சுவையில்	6
சுருட்டுவா	608
சுற்றி	370
சுற்றிநி	639
சூ	
சூர்வலி	21
சூரர்கள்	591
சூரனே	736
சூரன்உ	300
சூரியன்	301
சூழ்ச்சி	281
செ	
செகவீ	66
செங்கதி	244
செங்கம	242
செட்டி	319
செண்டு	216
செத்தொ	366
செத்தொ	491
செந்தி	47
செந்தில்	75
செந்தி	135
செந்தி	148
செந்தீ	149
செப்பெ	103
செய்த்த	253
செய்த	394
செய்ய	439
செய்யம	718
செய்யவும்	569
செய்யவே	405
செய்யவே	465
செய்யவே	740
செய்யா	696
செய்வ	508
செயிரு	115
செருக்	110
செருவி	592
செல்ல	430
செல்ல	457
செல்லநி	383
செல்லமா	250
செல்லு	214
செல்லுக	289
செல்வ	93
செல்வமி	95
செல்வ	108
செல்வமு	116

செய்யுள்.	பக்கம்.
செல்வமும்	247
செற்றமீ	545
சென்ற	84
சென்ற	140
சென்றஆ	179
சென்றது	440
சென்றப	485
சென்றவர்	233
சென்றவ	568
சென்றவ	603
சென்று	11
சென்று	86
சென்று	214
சென்று	462
சென்ன	229
சென்னே	491
சென்னே	502
சே	
சேர்ந்	232
சேர்ந்த	468
சேர்ந்து	507
சேரவ	524
சேராத	275
சேற்றூ	229
சேனதி	339
சேனதி	367
சேனைகள்	613
சேனைகா	58
சேனைகா	475
சேனைகா	515
சேனைந	634
சேனைநா	458
சேனைம	636
சேனைமன்	510
சேனையி	336
சேனை	565
சேனையி	581

செய்யுள்.	பக்கம்.
சேனையி	593
சேனையி	610
சேனையு	617
சேனையை	694
சேனைவீ	239
சேனைவீ	585
சேனைவீ	684
சேனைவே	462
சேனைவே	493
சொ	
சொக்க	189
சொல்ல	368
சொல்ம	624
சொல்லி	123
சொல்லி	207
சொல்லி	544
சொல்லி	730
சொல்லிய	545
சொல்வந்	265
சொல்வ	340
சொள்ளை	173
சொன்ன	126
சொன்ன	197
சொன்னபி	698
சோதிப	213
சோதிமா	240
சோமனே	325
சோமன்	462
சோரர்	128
சோனைமா	586
ஞ	
ஞானநன்	14
ஞானம்ஆ	724
ஞானமா	743
ஞானமுத்	125

செய்யுள்.	பக்கம்.
த	
தக்கினை	4
தங்கஓ	174
தங்குல	449
தஞ்சைம	162
தடக்கை	325
தட்டுண்டு	446
தட்டழி	481
தண்டடர்	259
தண்டமிழ்	3
தண்டிகை	220
தண்டுக	449
தண்ண	89
தததியடர்	528
தத்துவம்	92
தத்துவா	509
தந்தவந்	196
தந்திஇ	422
தந்திரப்	184
தந்தைதா	112
தந்தையீ	116
தந்தை	125
தந்தைதா	412
தந்தைதா	735
தந்தைபோ	616
தந்தையெ	150
தப்பியஉள	691
தப்பிஉள	401
தம்பிளனு	681
தப்பிகை	382
தம்பிது	594
தம்பிநீ	183
தப்பிநீ	377
தம்பிமா	125
தப்பிமா	239
தம்பிமார்	372

செய்யுள்.	பக்கம்.
தப்பிமா	708
தப்பியா	45
தப்பியர்	345
தப்பியூ	189
தப்முடை	288
தப்முள்	302
தமிழறிந்	495
தமையன்	417
தருக்கி	472
தருண	101
தருமசிந்	83
தருமதெ	108
தருமம்	14
தருமம்	26
தருமம்	112
தலையோ	485
தலத்தை	35
தலைகளும்	317
தலைமகன்	44
தலைமகன்	43
தலைமை	5
தலைமை	298
தலைமை	389
தலைமைய	402
தலைமையா	157
தலைமையா	398
தலைமை	465
தலையிழந்	481
தலைவரா	473
தலைவன்	707
தழுவிய	41
தழைத்த	137
தள்ளரிய	532
தள்ளரிய	279
தள்ளரும்	337
தள்ளரும்	501
தன் அரசு	660
தன் குலத்	551
தன்கொழு	428
தன்நெஞ்	730
தன்படை	231
தன்படை	599
தன்மதி	376
தன்மகன்	671
தன்மகனை	678
தன்கை	329
தன்னயல்	589
தன்னரு	243
தன்னிக	163
தன்னிட	235
தன்னுயர்	589
தன்னுயி	120
தன்னுயி	246
தன்னுயிர்	671
தன்னுயி	733
தன்னுயி	738
தன்னைப்	49
தன்னைமு	82
தன்னையே	94
தன்னைப்	112
தன்னைமு	236
தன்னைத்	237
தன்னை	266
தன்னைமு	718
தனக்குறு	122
தனக்கு	198
தனக்கு	717
தனக்குந	725
தனதுதா	130
தனதுதி	241
தனது	298
தனித்த	53
தனியர	178
தனியரை	208
தனியர	29
தனியர	139
தனை	111
தா	
தாங்கிநின்	715
தாண்டு	612
தாண்டும்	677
தாமரை	40
தாய்ஒளி	721
தாய்ப	143
தாய்பரி	358
தாய்மை	493
தாய்வா	355
தாயின்ஒ	724
தாயும்	84
தாயும்நீ	496
தாரணி	570
தாரத்தை	134
தாவிவந்	512
தாவிவெ	590
தாழ்ந்த	121
தாளிழந்	510
தான்செ	206
தான்து	249
தான்து	351
தான்து	639
தான்பி	157
தான்பு	138
தாணதி	307
தானை	54
தானைகள்	58
தானைம	473
தானைம	607
தானைமன்	529
தானையர்	612
தானையின்	56
தானையு	575
தானையை	707
தானைவே	424

செய்யுள்	பக்கம்.
தாணவே	482
தாணவே	556
தாணவே	562
தாணவே	563
தாணெரு	226
தி	
திக்கு	392
திக்கெலா	709
திக்கேறி	150
திகைத்த	653
திங்க	63
திங்கள்	385
திங்கள்ப	714
திசைகள்	406
திசையுறு	122
திசையெ	147
திசையை	124
திசைவெ	63
திடுமென	628
திண்டி	28
திண்டிற	255
திண்டிறல்	449
திண்புயம்	317
தித்தியொ	132
திரண்டு	20
திரிசிர	247
திரிசிர	268
திருக்கு	57
திருக்கு	135
திரும	55
திருமக	219
திருமகளு	695
திருமய	704
திருமலி	686
திருமுக	202
திருவும்	26
திருவும்	104

செய்யுள்.	பக்கம்.
திருவெலா	697
திரைத	177
திறந்தெ	214
திறைத	179
திறைத	398
திறையெ	157
திறையெ	163
திறையை	160
தீ	
தீட்டிய	590
தீயகள்	27
தீயகுண்டு	657
தீயதாய	251
தீயநெஞ்	426
தீயவெங்	120
தீயவெங்	250
தீயவெம்	665
தீயனநி	736
தீயுறுசூ	588
தீயைக்க	511
தீவினை	142
தீவினை	342
து	
துக்கமா	417
துடித்த	33
துடித்து	708
துப்பில்	514
தும்பிச்	231
துயிலிடை	666
துரைச்சி	691
துறவியா	543
துன்பம்	718
துன்மதி	204
துன்மதி	262
துன்னலர்	541

செய்யுள்.	பக்கம்.
தூ	
தூக்கத்	582
தூக்கிலி	428
தூதர்	463
தூதுவந்	635
தூமமிகு	575
தூயந	138
தூரம்நி	525
தூரம்நின்	557
தெ	
தெண்டி	708
தெண்டி	734
தெலுங்கு	24
தெலுங்கு	166
தெலுங்கு	273
தெவ்வ	233
தெவ்வ	315
தெவ்வர்	400
தெவ்வர்	498
தெள்ளமி	742
தெள்ளு	371
தெற்குவா	154
தெற்கு	623
தென்திசை	278
தென்தி	280
தென்தி	282
தென்தி	445
தென்தி	599
தென்தி	625
தென்தி	650
தென்தி	673
தென்திசை	683
தென்பா	695
தென்றிரு	15
தென்னங்	27
தென்ன	30

செய்யுள்.	பக்கம்.
தென்ணை	64
தென்ணைட்	386
தென்ணை	505
தென்ணைட்	693
தேசஅதி	703
தேச	4
தேசம	504
தேசு	1
தேடல	715
தேவர்கள்	72
தேவநி	742
தேவரை	51
தேவிகோ	27
தேவிதி	357
தேவியல்	221
தேவியை	660
தேளுப்பா	399
தேனளா	37
தை	
தையல்நல்	133
தொ	
தொட்ட	482
தொட்ட	628
தொடர்ந்	190
தொண்டை	383
தொண்ணூ	700
தொடுக	608
தொழுது	218
தொழுதவ	714
தொழுவி	627
தொற்றி	479
தொடுவெடி	593
தோ	
தோக்கல	427
தோகை	61
தோணி	491
தோழிய	246
தோள்கள்	524
தோளுறு	222
தோற்ற	572
தோன்றி	94
தோன்றின	169
ந	
நகர்வ	453
நகரமை	159
நங்குலத	359
நங்குல	637
நங்கை	104
நசையு	719
நஞ்சினு	654
நஞ்சு	654
நடத்தி	383
நடந்து	372
நடுநிசிவே	579
நண்பா	64
நண்ப	381
நட்படை	201
நட்பி	102
நம்பியி	145
நட்பிஉ	430
நம்மயல்	180
நம்முடை	505
நம்மை	177
நமக்குள்	271
நமதுளீ	250
நமைய	122
நயமுறு	204
நரிகள்	295
நரிகள்	400
நரிகள்	550
நல்லசா	188
நல்லது	202
நல்லதெ	60
நல்லதெ	206
நல்லதெ	223
நல்லநா	43
நல்லநா	101
நல்லநீ	396
நல்லவ	203
நல்லவ	208
நல்லவ	416
நல்விஞ	82
நல்விஞ	96
நலமுண	273
நலமெ	113
நவைஒ	6
நறைமல	167
நன்பகல்	335
நன்றம	234
நன்றமை	243
நன்றறிந்	496
நன்றுநன்	157
நன்றுநீ	224
நன்றுகூ	272
நன்று	481
நன்றுநன்	504
நன்றுநம்	685
நனவிற்	251
நா	
நாகலா	375
நாகலா	384
நாச்சுவை	116
நாஞ்சி	56
நாட்டிடை	169
நாட்டில்	49
நாட்டிலினி	64
நாட்டிலுள்	180
நாட்டின்	181

செய்யுள்.	பக்கம்.
நாட்டி	219
நாட்டி	272
நாட்டிலே	278
நாட்டில்	389
நாட்டில்	422
நாட்டம்	427
நாட்டில்	456
நாட்டின்	463
நாட்டினி	548
நாட்டினை	624
நாட்டும்	693
நாட்டை	631
நாட்டை	706
நாட்டையும்	3
நாடிழ	430
நாடிலை	713
நாடெலா	168
நாடெலா	204
நாடெங்	357
நாடெல்	504
நாதிய	145
நாம்விதி	153
நாம்வள	169
நாய்கள்	542
நாயும்வா	435
நாலுபக்	475
நாவிலக்	694
நாவொரு	248
நாளிரு	535
நாளையிங்	578
நாளொ	73
நாற்பத்	156
நான்கண்	702
நி	
நித்த	47
நித்தலு	73
நில்லாத	716
நிலநல	117
நிலவறை	667
நிலவறை	258
நிலைக்கோ	61
நிலைகுலைத்	64
நிலைகுலையா	587
நிலைகுலைந்	448
நிலைதெரியா	581
நிலைபெற	446
நிலையில்லா	718
நின்றவர்	59
நின்ற	136
நின்றம	153
நின்றவ	199
நின்றபெ	243
நின்றல	252
நின்றனி	376
நின்றயா	397
நின்ற	436
நின்ற	456
நின்றனி	457
நின்றவீ	479
நின்றவெ	493
நின்றபோ	526
நின்றவ	529
நின்றவ	534
நின்றதா	555
நின்றனி	558
நின்றவ	592
நின்றபி	598
நின்றவ	618
நின்றவ	629
நின்றத	641
நின்றஅ	656
நின்றவ	662
நின்றபெ	675
நின்றவ	692
நின்றவினை	696
நின்றவ	708
நின்றது	740
நின்றிரு	374
நின்றினி	676
நின்றுக	180
நின்றுள	286
நின்றுமு	470
நின்றுள	565
நின்றுழி	607
நின்றுத	663
நின்றும	208
நினைவுசொல்	82
நினைவு	343
நீ	
நீஅயலே	376
நீங்கிஅ	640
நீசமான	656
நீண்டவெ	158
நீண்ட	179
நீண்டநா	344
நீண்ட	405
நீண்ட	466
நீண்டவே	542
நீண்டபோ	666
நீண்டபெ	694
நீதிசெய்	270
நீதிநெறி	134
நீதிமுறை	275
நீதியா	395
நீதியும்	115
நீதியும்	201
நீதியை	115
நீர்க்கடல்	2
நீர்சூழ்	149
நீர்வளம்	15
நீரமைந்	466
நீராட்டி	149

செய்யுள்.	பக்கம்.
நீரில்	110
நீரில்தோ	435
நீரிலை	354
நீரின்	325
நீரின்மே	555
நீருலா	109
நீலவேணி	563
நீளெழு	224
நீற்றினை	203
நெ	
நெஞ்சக	65
நெஞ்ச	120
நெஞ்சக	343
நெஞ்சம்	455
நெஞ்சம்	536
நெஞ்சம்	727
நெஞ்சி	17
நெஞ்சி	186
நெஞ்சில்	391
நெஞ்சி	393
நெஞ்சு	611
நெஞ்சை	81
நெட்டு	524
நெடிது	416
நெடிய	309
நெடியம	521
நெடிய	656
நெடும்	619
நெல்லை	15
நெல்லைஎல்	26
நெல்லை	154
நெல்லை	182
நெல்லைவா	187
நெல்லைவ	197
நெல்லை	248
நெல்லையெ	249
நெல்லு	251
நெல்லிடு	257
நெல்லை	269
நெல்லை	271
நெல்லைந	289
நெல்லைமு	301
நெல்லி	347
நெல்லெ	352
நெல்லா	363
நெல்லி	342
நெல்லைத	484
நெல்லி	737
நெல்வி	268
நெறிமு	266
நெறிய	237
நே	
நேர்கட	508
நேர்ந்	136
நேர்ந்த	283
நேர்ந்	354
நேர்ந்த	463
நேர்ந்த	510
நேர்ந்த	537
நேர்ந்த	598
நேர்ந்த	637
நேர்ந்து	57
நேர்ந்து	61
நேர்ந்து	350
நேர்ந்து	480
நேர்ந்து	511
நேர்ந்தெ	651
நேர்முக	610
நேர்மை	416
நேரலர்	499
நேரும்	465
நேரெதி	579
நேற்று	145
நேற்றை	92
நோக்கி	580
நோய்எ	738
நோயடை	638
நோயுறு	141
ப	
பக்கநி	219
பக்கம்	326
பகைஎழு	635
பகைபகை	582
பகைப்ப	603
பகைப்புல	546
பகைமி	347
பகைகெ	648
பகைமை	180
பகையிட	284
பகைவர்	431
பகைவர்	438
பகைவ	454
பகைவர்	512
பகைவர்	553
பகைவள	634
பகைவர்	657
பகைவீ	506
பகைவே	673
பங்குனி	487
பங்குனி	517
பஞ்சணை	41
பட்டவர்	618
பட்டழி	620
பட்டது	641
பட்டுஎ	476
படம்பொ	581
படியு	86
படுகாய	661
படுகொலை	593
படுகொலை	739
படுத்துற	291

செய்யுள்.	பக்கம்.
படுபிசு	144
படைக்க	46
படைக்கல	680
படைகள்	55
படைக	481
படைகள்	514
படைகளி	533
படைகள்	551
படைகள்வ	554
படைகள்	636
படைள	570
படைகு	328
படைகொ	279
படைகொ	508
படைத்த	526
படைதிர	290
படைபடு	571
படையழி	560
படையழி	596
படையழி	618
படையி	295
படையின்	492
படையு	323
படையு	337
படையுய	621
படைவ	480
படைவீ	331
படைவீ	460
படைவீ	530
படைவீ	596
படைவீ	682
பண்டமா	173
பண்டமா	179
பண்டுநா	83
பண்டை	519
பணம்ப	149
பணிந்து	57
பணிவுட	119

செய்யுள்.	பக்கம்.
பத்திமா	267
பத்திசெ	323
பத்திபத்	473
பத்திபத்	645
பத்திளா	724
பத்தொடு	625
பதவி	266
பதிபெய	187
பதிபெய	360
பதிபெய	369
பதிபெய	395
பதிபெய	410
பதிபெய	689
பதியமை	271
பதியய	22
பதியிழந்	376
பதியுறு	284
பதுமை	140
பந்திப	303
பந்திபந்	474
பயிர்க	147
பரமன்செ	722
பரமனு	47
பராபர	80
பரிகள்	480
பரிகள்	558
பரிகள்	666
பரிகளு	580
பரிதி	36
பரிதிவா	541
பரிதிவா	684
பரியில்	564
பரியிவ	304
பரியினை	590
பரியினை	604
பரியொ	606
பரிவிரை	318
பரிவிழு	607

செய்யுள்.	பக்கம்.
பருந்து	315
பருந்து	318
பருமை	291
பருவந்	46
பருவம்	139
பருவம்	437
பல்பொ	728
பல்லிய	184
பல்லிய	240
பல்லியங்	516
பல்லிய	556
பல்லுடை	145
பல்லெ	144
பல்வள	230
பலமுறை	652
பவள	105
பழகி	25
பழிப்பன	114
பழிபடு	688
பழியுட	349
பழுதிலா	236
பள்ளம்	165
பள்ளம்தோ	727
பற்றல	348
பற்றலர்	570
பற்றலர்	627
பற்றல	667
பற்றலர்	691
பற்றலர்	696
பற்றலை	712
பற்றலன்	684
பற்றலன்	697
பற்றினர்	201
பற்றுவோ	723
பன்முறை	585
பன்னிர	485
பன்னிரு	336
பன்னிருநா	387

செய்யுள்.	பக்கம்.
பணைவரு	446
பா	
பாக்கிய	56
பாங்கு	404
பாசறை	539
பாசலை	689
பாஞ்சா	227
பாஞ்சா	261
பாஞ்சை	202
பாஞ்சை	210
பாஞ்சை	244
பாஞ்சை	270
பாஞ்சை	293
பாஞ்சை	341
பாஞ்சை	373
பாஞ்சை	389
பாஞ்சை	420
பாஞ்சை	422
பாஞ்சை	444
பாஞ்சை	470
பாஞ்சைம	494
பாஞ்சை	517
பாஞ்சைமா	628
பாஞ்சை	657
பாஞ்சைந	676
பாஞ்சை	137
பாட்டி	132
பாடிவீ	553
பாடிவீட்	689
பாண்டிநா	153
பாண்டி	222
பாண்டிய	254
பாண்டி	398
பாதிரா	292
பாம்பின்	86
பாம்பெ	581
பாய்ந்த	201
பாய்ந்த	620
பாய்ந்து	395
பாயந்து	564
பார்த்தெ	80
பார்தோ	714
பாரதம்	8
பாரபலே	136
பாராளு	429
பார்ன்மே	726
பாரினில்	82
பாரினை	451
பாரும்	466
பாரெல்	537
பால்குடி	116
பாலசூரி	43
பாலரா	327
பாலறு	233
பாலவை	335
பாலில	259
பாலியு	433
பாலொடு	90
பாவகா	130
பாழ்மக	278
பாளைய	167
பாளைய	281
பாளைய	420
பாளையங்	499
பாளையங்	549
பாணு	36
பாணுவ	338
பி	
பிடித்த	490
பிடிபட்ட	364
பிடிபட்ட	692
பிணங்களை	544
பிணவெறி	694
பிரிந்தஅக்	724
பிழைக்க	160
பிள்ளைஇ	375
பிள்ளைள	278
பிள்ளைள	308
பிள்ளை	270
பிள்ளைக்கு	255
பிள்ளைசெ	414
பிள்ளைசெ	494
பிள்ளைசெ	636
பிள்ளைசெரா	287
பிள்ளைத	230
பிள்ளைதா	199
பிள்ளைது	366
பிள்ளைநா	200
பிள்ளைநெ	394
பிள்ளைபக	262
பிள்ளைமு	340
பிள்ளையி	410
பிள்ளையே	205
பிள்ளையை	530
பிற்கட்டு	271
பிறகட்டு	461
பிறந்த	4
பிறந்த	465
பிறந்ததி	718
பிறந்தநா	514
பிறந்து	95
பிறந்துவ	638
பிறப்பில்	718
பிறர்மனை	121
பிறரெல்	264
பிறவிஆகி	719
பிறவிநீக்	723
பிறவிவே	723
பீரங்கி	315
பீரங்கிமு	500

செய்யுள்.	பக்கம்.
பு	
புகழுற	436
புடையெ	23
புண்ணிய	23
புண்ணிப	146
புண்ணிய	439
புண்ணிய	521
புதியனை	31
புதியமா	105
புதிபரா	165
புதிய	179
புதியவ	686
புல்லர்	143
புல்லலர்	568
புல்லாதி	712
புல்லிப	142
புல்லிய	200
புல்லிபபெ	540
புல்லுக்	441
புலமை	48
புலவன	12
புலவரி	134
புலவர்	238
புலவியிற்	21
புலிக்கு	441
புலிகளை	457
புலிமுழை	381
புலிமுழை	672
புலியின்	721
புலிபுறு	602
புலியை	425
புலைநிறை	639
புவிபுரந்	13
புளியமா	401
புறங்கூ	229
புறத்து	123
புறந்தட	691
புறநகர	676
புன்மை	130
புனித	107
புனிதமா	111
பூ	
பூங்கொ	664
பூசை	47
பூஞ்சோ	15
பூணுதற்	243
பூமிசை	2
பூலம்	55
பூலம்புக்	56
பூவருந்	120
பூவினில்	114
பூவுறு	41
பூவைமெ	245
பெ	
பெட்டை	16
பெரிய	84
பெருந்தி	80
பெருநதி	513
பெரும்பொ	239
பெருமகி	279
பெருவா	695
பெற்றஓர்	89
பெற்ற	52
பெற்றத	88
பெற்றதா	112
பெற்ற	140
பெற்றதா	670
பெற்றது	711
பெறலரு	721
பே	
பேச்சில்	199
பேச்சை	504
பேடிகளா	407
பேடியா	400
பேய்சூழு	678
பேராத	226
பேரியல	258
பேனமன்	369
பேனமன்	384
பேனம	421
பேனமன்	468
பை	
பையஅவ	678
பொ	
பொங்கி	478
பொட்டி	496
பொய்யு	24
பொய்ம்	30
பொய்பு	113
பொய்யே	205
பொருக	546
பொருக	399
பொருவ	618
பொருதி	58
பொருள்	114
பொருள்	123
பொருள்	171
பொருளி	138
பொல்லா	307
பொல்லா	144
பொல்லா	353
பொல்லா	356
பொல்லா	428
பொல்லாத	693
பொழியு	559
பொழுத	441
பொள்ள	94
பொறிகள்	705

செய்யுள்.	பக்கம்.
பொறிபு	12
பொறிபுல	42
பொறிபுல	42
பொறிபு	91
பொறிபு	96
பொறிபுல	122
பொறிவ	732
பொண்பு	664
பொண்ணி	15
பொன்னி	98
பொன்னு	498
போ	
போகன்	492
போகின்	545
போடியி	60
போடுகு	434
போதுலா	245
போயவ	210
போயகல	714
போர்	24
போர்	348
போர்ள	310
போர்ள	650
போர்ஏறி	693
போர்சி	310
போர்நோ	333
போர்மூ	306
போர்மூ	329
போர்மக	695
போர்முக	677
போர்வீ	675
போரடர்	515
போரமர்	505
போரமை	563
போரர	411
போரழி	565
போரறி	610

செய்யுள்.	பக்கம்.
போராட	47
போரா	676
போரிடை	566
போரியல்	652
போரில்மா	8
போரில்	32
போரில்	321
போரில்மூ	396
போரில்உ	678
போரில்மு	707
போரில்ஏ	722
போரிலி	585
போரிவ	340
போரினி	454
போரினி	540
போரினி	654
போரினுக்	257
போரினி	473
போருடை	482
போருடை	597
போருற	341
போரெதி	549
போரேன	555
போரை	286
போரையே	292
போன	179
போனபோ	190
போன	277
போனஅ	303
போனஅப்	335
போனதை	487
போனவ	545
ம	
மக்களு	42
மக்களே	341
மக்காளி	459
மகதந	138

செய்யுள்.	பக்கம்.
மங்கல	22
மங்கல	104
மங்கல	320
மங்கிநி	442
மடங்க	208
மடமையு	146
மடித்தவா	331
மடிந்துள	540
மடியிரு	52
மடுத்து	395
மண்கல	100
மண்டிள	382
மண்டிஏ	563
மண்டிகள்	317
மண்டிநி	629
மண்டிமே	518
மண்டிமே	690
மண்டிய	199
மண்டிய	573
மண்டிய	619
மண்டிவ	460
மண்டிவந்	713
மண்டிவெ	559
மண்டுதீ	557
மண்டுபீ	632
மண்டுபு	135
மண்டை	257
மண்ணர	5
மண்ணிடை	615
மண்ணில்	435
மண்ணிறு	74
மண்ணிறை	411
மண்ணுறு	602
மண்ணுறு	624
மண்ணுறு	649
மண்வீரம்	674
மணத்தி	119
மணத்தினு	733

செய்யுள்	பக்கம்.
மணம்பொ	105
மணமலி	541
மணமிழ	429
மணிகளின்	19
மணிமா	219
மணிமுடி	96
மணியிற்	48
மத்தமா	453
மத்தயா	100
மத்தயா	433
மத்தயா	421
மதத்த	34
மதலை	139
மதிளலா	655
மதியில்ம	633
மதியுரை	274
மதியுறு	449
மதியை	392
மதில்வ	313
மதுரை	280
மதுவிரி	42
மந்தரத்	576
மந்திர	201
மந்திர	489
மந்திரி	197
மந்திரி	210
மந்திரி	268
மந்திரி	284
மந்திரிப்	339
மந்திரி	343
மரகத	246
மரபுறும்	448
மருங்கி	300
மருங்கெ	20
மருங்கெ	104
மருதுவீ	684
மருதுசே	685
மருமலை	574

செய்யுள்.	பக்கம்.
மருவும்	40
மல்லக	216
மல்லம	194
மல்லர்	207
மல்லிகை	245
மல்லினி	204
மலைய	105
மலையில்	717
மலையெலா	659
மழையி	113
மற்கட்	504
மற்றமன்	392
மற்றவர்	540
மற்றவ	583
மற்றனி	279
மற்றுள்	148
மற்றும்	44
மற்றுள	178
மற்றுளவீ	662
மற்றையா	185
மற்றை	197
மற்றை	346
மறமிகு	210
மறவர்	373
மறுதினம்	660
மறுபுலத்	278
மறுமன்ன	66
மறுமை	237
மறுமை	734
மறைந்த	694
மன்றமன்	602
மன்றல்	266
மன்னர்ம	464
மன்னரா	172
மன்னெர	220
மன்னவன்	73
மன்னவ	87
மன்னவ	141

செய்யுள்.	பக்கம்.
மன்னவ	147
மன்னவ	162
மன்னவ	204
மன்னவ	207
மன்னவ	223
மன்னவ	233
மன்னவ	247
மன்னவ	285
மன்னவ	331
மன்னவ	345
மன்னவ	349
மன்னவ	496
மன்னவ	538
மன்னவன்	568
மன்னவன்	586
மன்னவ	588
மன்னவ	595
மன்னவ	627
மன்னவா	59
மன்னவா	686
மன்னன்	34
மன்னன்	88
மன்னன்	96
மன்னன்	108
மன்னன்	137
மன்னன்	155
மன்னன்	237
மன்னன்	250
மன்னன்	291
மன்னன்	397
மன்னன்	442
மன்னன்	465
மன்னன்	447
மன்னன்	462
மன்னன்	482
மன்னன்ள	586
மன்னன்	739
மன்னன	408

செய்யுள்.	பக்கம்.
மன்னனு	131
மன்னனு	227
மன்னனு	332
மன்னனு	362
ன்னனு	592
ன்னனுறு	701
ன்னனு	714
ன்னனே	102
ன்னுயிர்	39
ன்னுயி	111
ன்னுயிர்	117
ன்னுயி	343
னதுதிடை	21
னதுதி	109
னத்தொ	736
னநலம்	119
மனநல	139
மனநல	142
மனமறுகி	228
மனமுடை	559
மனமுவ	238
மனிதர்த	432
மனிதன்	11
மனுநெறி	221
மனுமுதல்	734
மனுமுறை	33
மனவியை	346
மனவி	345
மனவியை	348
மா	
மாகவூர்	327
மாசிலா	50
மாசிலா	81
மாசிலா	148
மாசிலா	251
மாசுமீப்	26
மாட்டை	431
மாடங்க	663
மாடமா	18
மாடமா	154
மாண்டவ	589
மாண்ட	168
மாதமும்	147
மாதவன்	77
மாதவன்	96
மாதவ	137
மாதுள	139
மாதருள்	103
மாமன்மக	260
மாமன்வந்	308
மாமன்ஆ	636
மாயமே	477
மாரனுக்	246
மாரனே	214
மாலுமா	51
மாலையிட்	259
மாற்றல	10
மாற்றல	469
மாற்றல	656
மாற்றல	690
மாற்றுன்	673
மாற்று	13
மாறுபட்டு	552
மாறுபட்டு	312
மாறுபாடு	54
மாறுவே	127
மானம்பே	5
மானம்ஒ	297
மானம்	392
மானமெ	433
மானம்கெ	434
மானமல்	25
மானமா	195
மானமும்	212
மானமுயர்	386
மானமுட	387
மானமும்	691
மானமே	353
மானவீ	402
மானவீ	442
மானவீ	465
மானவீர	466
மானுப்வே	706
மி	
மிக்கவெ	463
மிடரவினை	580
மில்லர்	422
மின்னல்	87
மின்னல்	520
மு	
முக்கண்	45
முக்குல	45
முடங்க	233
முட்டிநர	433
முடிமன்	11
முடிமனூ	321
முத்தமமா	669
முத்துரா	249
முத்துரா	370
முத்தையா	621
முத்தையா	438
முதிர்சி	415
முதியதன்	316
முந்தமை	243
முந்துற	340
முந்துந	487
முந்தையோ	9
முயங்கி	106
முரசங்	572
முரசங்க	611
முரசறை	585

செய்யுள்.	பக்கம்.
முருகமூ	47
முல்லை	442
முழுதும்	401
முழையி	623
முழைபை	668
முள்ளுப்	318
முற்றிய	346
முறிந்தப	531
முறைபுரி	266
முறையி	49
முறையொ	112
முறையொ	221
முன்பமை	203
மூன்புதே	209
முன்புநா	306
முன்ன	48
முன்னதா	250
முன்னம்	182
முன்னம்	269
முன்னம்	457
முன்னம்	552
முன்னம்	635
முன்னம்நீ	741
முன்னமோ	212
முன்னவ	156
முன்னவன்	439
முன்னவ	503
முன்னவ	506
முன்னவ	576
முன்னவ	712
முன்னணி	571
முன்னிரு	701
முன்னின	556
முன்னுள	177
முன்னுற	167
முன்னுற	170
முன்னுறக்	556
முன்னுறவ	649
முன்னுறு	168
முன்னேநா	344
முன்னேயூ	83
மூ	
மூட்டிய	195
மூட்டின	255
மூண்ட	198
மூண்டகொ	511
மூண்டதெ	463
மூண்ட	282
மூண்ட	338
மூண்ட	347
மூண்டபா	510
மூண்டபோ	285
மூண்டபோ	505
மூண்டபோ	551
மூண்டபோ	634
மூண்டபோ	707
மூண்டவெ	207
மூண்டவெ	539
மூண்டவெ	649
மூண்டவெ	658
மூண்டுகு	443
மூண்டுசெ	293
மூண்டுப	136
மூண்டு	324
மூண்டுபோ	479
மூண்டுமு	469
மூண்டுநி	636
மூண்டுமு	500
மூண்டுமு	515
மூண்டுமூ	481
மூண்டுமே	688
மூண்டுவ	312
மூண்டுவ	407
மூண்டுள்	500
மூண்டெழு	690
மூத்தநன்	101
மூலமன்	424
மூளைகள்	318
மூன்று	99
மூன்றுநா	381
மூன்றுநா	207
மெ	
மெய்எலா	668
மெய்யை	396
மே	
மேடைமே	194
மேலடி	49
மேலதி	349
மேலவர்	201
மேலவ	426
மேலான	333
மேலிரு	422
மேலிரு	458
மேலும்	637
மேலுள்	198
மேலுள	206
மேலுறு	316
மேலேநா	174
மேலேநா	432
மேற்றி	62
மேன்மை	664
மை	
மைந்தர்	43
மைந்தர்	46
மொ	
மொழியு	432
யா	
யாண்டும்	324

செய்யுள்.	பக்கம்.
யார்க்கு	172
யாரும்ஈ	292
யாருமே	185
யாரும்	440
யாரென்	144
யாரை	143
யாரைஏ	181
யாரையும்	178
யாவரும்	72
யாவும்வி	719
யாவுமே	110
யானைசெய்	78
யானைகள்	207
யானையின்	508
யானையேற்	38
வ	
வங்கநா	84
வங்கம்	153
வங்கம்கை	505
வங்கமா	164
வங்கமா	234
வசையுட்	435
வஞ்ச	25
வஞ்சக	206
வஞ்சகமா	584
வஞ்சநெ	296
வஞ்சநெ	657
வஞ்சம்	455
வஞ்சமி	179
வஞ்சமி	199
வஞ்சமி	337
வஞ்சமும்	94
வஞ்சனை	66
வஞ்சனை	95
வஞ்சனை	142
வஞ்சனைமி	655
வட்டியெ	143
வடக்கொ	665
வடதிசை	63
வடதிசை	360
வடதிசை	378
வடபுறம்	605
வடித்த	73
வடிவாள்	712
வண்டன்	172
வண்டுள	51
வண்மையா	6
வணங்க	181
வணங்கி	56
வணிகநீ	152
வந்த	390
வந்தஅவ்	614
வந்தகா	55
வந்தகா	110
வந்தசெ	188
வந்தசே	31
வந்தசே	550
வந்தடை	102
வந்தத	464
வந்தத	539
வந்ததெ	277
வந்தநம்	633
வந்தபடை	530
வந்தபா	131
வந்தபா	235
வந்தபி	291
வந்தபி	467
வந்தபொ	213
வந்தம	551
வந்தமன்	617
வந்தரசை	132
வந்தவ	134
வந்தவ	171
வந்தவ	191
வந்தவ	223
வந்தவ	231
வந்தவ	238
வந்தவ	258
வந்தவ	265
வந்தவ	334
வந்தவ	398
வந்தவ	544
வந்தவக்	141
வந்தவக்	141
வந்தவப்	578
வந்தவர்	58
வந்தவர்	71
வந்தவர்	255
வந்தவர்	569
வந்தவன்	602
வந்தவன்	666
வந்தவனை	63
வந்தவா	399
வந்தவீ	155
வந்தவீ	490
வந்தவெ	174
வந்தவெ	293
வந்தழிப்	577
வந்திருந்	421
வந்திரு	105
வந்திலர்	346
வந்து	462
வந்துகோ	464
வந்துபடை	574
வந்துப	595
வந்துபா	557
வந்துமண்	684
வந்துமே	564
வந்துவந்	110
வந்துவ	524
வந்துவந்	577
வந்துவந்	602
வந்துவந்	623

செய்யுள்.	பக்கம்.
வந்துவன்	684
வந்துவே	495
வந்துள்ப	604
வந்தெதி	605
வந்தெனை	207
வந்தோடி	412
வம்புகூ	494
வயதில்	436
வயிற்றை	164
வரிசை	117
வரியென	162
வரியென	193
வரியைவா	158
வரியை	277
வருகின்ற	384
வருகின்ற	543
வருகின்ற	645
வருடம்	437
வருதிறை	64
வருந்த	225
வருந்தி	234
வருநெறி	52
வரும்வ	218
வருவதி	251
வருவதுஓ	657
வரைச்சி	710
வல்லஅ	431
வல்லபல்	599
வல்லம	425
வல்லியத்	595
வல்லியம்	588
வல்லியம்	606
வல்லியம்	610
வல்லியல்	114
வல்விரை	378
வலக்கை	313
வலத்தவ	590
வலிந்த	277
வலியவ	221
வலிய	348
வலியவ	511
வலியவ	312
வல்லியிடை	391
வழிமறித்	509
வழிமுறை	166
வழியலா	232
வழியில்	510
வழிவழிக்	8
வழிவழி	166
வழிவழி	439
வள்ளல்	126
வள்ளல்	129
வள்ளலெ	51
வள்ளலே	59
வள்ளலே	242
வள்ளியூர்	59
வள்ளுவ	9
வன்புலி	363
வன்றுலு	256
வன்னவா	591
வனத்து	317
வா	
வாக்கும்	109
வாக்கொ	113
வாகைவே	40
வாங்கிய	242
வாசிமேல்	305
வாசியூ	373
வாசியைச்	615
வாசியைத்	613
வாடிக்	27
வாடிநின்	12
வாணிக	161
வாணிக	167
வாணிக	174
வாணிகம்	687
வாய்த்து	275
வாய்த்து	284
வாய்ப	455
வாய்பே	506
வாய்பே	677
வாய்மை	729
வாயிலில்	491
வாயுவே	33
வாயு	370
வாரணம்	20
வாரநாள்	385
வாரம்மூ	553
வாரமொ	146
வாரமொ	288
வாரும்வா	325
வாலமங்	102
வாலமன்	38
வாலிலா	165
வாவிஓ	372
வாவிமே	525
வாவியுள்	673
வாவிவ	327
வாவிவா	322
வாவிவா	593
வாவிவெ	316
வாவும்வா	630
வாவுவா	239
வாவுவா	573
வாவுவெ	324
வாவுறு	612
வாவென்	427
வாழ்ந்த	234
வாழ்ந்த	418
வாழிமா	744
வாள்க	313
வாள்கள்	473
வாள்களு	592

செய்யுள்.	பக்கம்.
வாள்களு	604
வாள்களு	58
வாள்சுழ	32
வாள்வலி	19
வாள்பயி	45
வாள்வ	216
வாள்வல	321
வாள்வலி	710
வாள்வீ	329
வாள்வீர	643
வாள்வீ	679
வாளமா	168
வாளின்	30
வாளினல்	561
வாளினை	588
வாளெலா	192
வாளெழு	570
வாளொடு	194
வான்சு	126
வானகத்	96
வானகம்	68
வானம்	36
வாமாம	9
வானமா	57
வானமா	155
வானவில்	638
வாணுவ	715
வாணும்	110
வாணுயர்	97
வாணுமுட்	632

வி

செய்யுள்.	பக்கம்.
விசயர	218
விசயரகு	378
விட்ட	322
விட்டஅ	377
விட்டஅ	459
விட்டவெ	683
விடங்க	323
விடிந்தது	583
விடியவும்	29
விடுத்த	283
விடுவழி	304
விடைபெ	355
விண்அளா	706
விண்குடை	163
விண்டொ	641
விண்ணிடை	90
விண்ணே	699
விண்முகத்	42
வித்திய	82
வித்திய	83
விதிபடை	13
விதிமுறை	211
விந்தை	32
விம்மி	105
விரைந்தி	589
வில்எடுத்	711
வில்லாண்	700
வில்லில்	39
வில்லிசே	190
வில்லில்	558
வில்லினை	315
வில்லுகள்	311
வில்லுகள்	314
வில்லுறு	609
வில்லெடு	312
வில்லெறி	314
வில்வலி	227
வில்வலி	611
விலங்கி	85
விலைக்கு	253
விலைகொடு	249
விலைகொடு	269
விழுந்த	626
விழுமிய	42
விளைப்பு	737
விற்களில்	519
விறலுடை	567
வினைமிக	655
வினையம்	717
வினைவல்	183
வினைவி	82
வினைவிள	146

வீ

செய்யுள்.	பக்கம்.
வீச்சுக்கொ	560
வீசியவேல்	690
வீசுகின்ற	586
வீட்டரும்	3
வீடுமேல்	145
வீணனை	195
வீதிவாய்	69
வீரஅண்	638
வீரக்கல	617
வீரக	374
வீரகஞ்	320
வீரகே	425
வீரசக்	101
வீரசிங்க	31
வீரணன்	528
வீரணன்வி	603
வீரதேவ	16
வீரதே	99
வீரநா	132
வீரநா	418
வீரநாடெ	11
வீரநா	405
வீரப	126
வீரபத்	295
வீரபாண்	5
வீரபாண்டி	5
வீரபாண்டி	43
வீரபாண்	106

செய்யுள்.	பக்கம்.
வீரபாண்	131
வீரபாண்	561
வீரம்உ	6
வீரம்ள	7
வீரம	372
வீரமன்	154
வீரமன்	199
வீரமன்றி	270
வீரமன்	414
வீரமன	564
வீரமன்ன	744
வீரமாக்	3
வீரமாட்	5
வீரமா	100
வீரமா	283
வீரமா	391
வீரமா	443
வீரமா	614
வீரமாந	629
வீாமாந	657
வீரமாதே	658
வீரமாந	681
வீரமா	699
வீரமிக்க	30
வீரமில்	115
வீரமுள்ள	173
வீரமென்	44
வீரமெய்	4
வீரமேவி	4
வீரமே	115
வீரர்யா	479
வீரவாழ்	465
வீரவாள்	121
வீரவெஞ்	25
வீரவெண்	337
வீரவெந்	398
வீரவெம்	457
வீரவெவ்	587
வீரவெற்	32
வீரவே	297
வீரஃவே	420
வெ	
வெங்கொ	609
வெஞ்சேகம்	502
வெட்டவெ	503
வெட்டவீ	525
வெட்டிவெ	194
வெட்டின	317
வெட்டி	363
வெட்டிவீ	526
வெட்டினு	571
வெட்டிய	606
வெட்டிமே	614
வெட்டுகள்	593
வெட்டுவ	612
வெட்டுமெ	620
வெடிகளா	315
வெடிகள்	479
வெடிகள்	559
வெடிபிடி	561
வெடியொ	587
வெடிவீ	643
வெண்டலை	620
வெண்ணி	70
வெந்திற	385
வெந்திற	521
வெந்திற	528
வெந்திற	542
வெம்பகை	287
வெய்யது	273
வெய்ய	318
வெய்ய	393
வெய்யதெ	706
வெய்யப	572
வெய்யபோ	509
வெய்யபோ	708
வெய்யவ	561
வெய்யவெ	467
வெல்லும்	456
வெல்லுறு	523
வெல்வீ	429
வெவ்வலி	567
வெள்ளமா	696
வெள்ளமே	503
வெள்ளா	352
வெள்ளக்	389
வெள்ளக்	394
வெள்ள	164
வெள்ள	175
வெள்ளச்	269
வெள்ளய	260
வெள்ளய	279
வெள்ளய	288
வெள்ளய	307
வெள்ள	312
வெள்ள	324
வெள்ளய	332
வெள்ளய	340
வெள்ளய	343
வெள்ளயர்	347
வெள்ள	391
வெள்ளம	410
வெள்ளயர்	428
வெள்ளய	452
வெள்ள	455
வெள்ளய	469
வெள்ளய	505
வெள்ளய	549
வெள்ளவீ	517
வெள்ளவீ	557
வெள்ளவெ	559
வெள்ளவீ	585
வெள்ளயர்	598

செய்யுள்.	பக்கம்.
வெள்ளையர்	643
வெள்ளைய	658
வெள்ளையர்	661
வெள்ளைம	682
வெள்ளைய	683
வெள்ளையா	684
வெள்ளையர்	688
வெள்ளைய	693
வெள்ளையர்	694
வெளிமுக	720
வெளியய	567
வெளியாண்	626
வெளியி	129
வெளியி	217
வெளியி	380
வெளியி	386
வெளியி	441
வெளியுல	716
வெளியு	167
வெற்றி	63
வெற்றிவே	71
வெற்றி	148
வெற்றிவே	297
வெற்றி	338
வெற்றியு	342
வெற்றி	374
வெற்றி	421
வெற்றியு	673
வென்றி	179
வென்றி	424
வென்றி	447
வென்றிமே	616
வென்றிம	623
வே	
வேட்டை	18
வேட்டை	281
வேட்டை	683
வேட்டை	701
வேடப	418
வேண்டிய	211
வேதகன்	717
வேதமே	37
வேதனை	286
வேந்தன்	87
வேந்தன்	631
வேந்தன்	636
வேந்தனி	241
வேந்திவ	232
வேந்துவ	248
வேல்களா	522
வேல்கு	332
வேல்பி	331
வேல்வ	235
வேல்வி	328
வேலாளர்	150
வேறுவே	235
வேரொரு	544
வை	
வைகறை	124
வைகறை	300
வைகறைத	584
வைகுண்ட	253

செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றிற்று.

சரித்திர நிகழ்ச்சிகளின் காலக் குறிப்புகள்.

———

செகவீராமக் கட்டபொம்மு என்பவர் பாஞ்சாலங் குறிச்சி ஆட்சியில் மிக்க மாட்சியுடையவர். அரிய வீரத் திறல்கள் பல ஆற்றியுள்ளமையால் திக்குவிசயத்துரை என்று வெற்றிப் பெயருடன் இவர் விளங்கி வந்தார். சிறந்த வீரத்துடன் தெய்வ பத்தியும் இவரிடம் நிறைந் திருந்தது.

திருச்செந்தூர் முருகப்பெருமான் பால் இவர் பேரன்புடையவர். உச்சிப் போதில் அங்கே ஆண்டவ னுக்குப் பூசை முடிந்ததை அறிந்த பின்பே இவர் உணவு கொள்வது வழக்கம். * அந்த அறிவிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளை நன்கு செய்து வைத்திருந் தார்.

இவர் நாளும் நியமமாய்ப் பூசித்து வந்த அழகிய முருகனது திரு உருவம் திருச்செந்தூர் ஆலயத்தில் இன்றும் அலங்காரமா முன் மண்டபத்தில் பார்வைக்கு வைத்துள்ளனர். சிறந்த பொன்னல் அமைந்த அந்த விக்கிரகத்தை வைத்துள்ள பேழைமேல் பாஞ்சாலங் குறிச்சி ராஜா பூசித்து வந்த திரு உருவம் என முகப்பில் எழுதப்பட்டுள்ளது. இவருக்குப் புதல்வர் மூவர்.

வீரபாண்டியன்	1
தளவாய்க் குமாரசாமி	2
துரைச்சிங்கம்	3

திக்குவிசயத்துரைக்குப் பின்பு தலைமைப் புதல்வ னான வீரபாண்டியன் பட்டத்துக்கு வந்தார். தளவாய்க் குமாரசாமியை ஊமைத்துரை என்றே யாவரும் அழைத்து வந்தனர்.

வீரபாண்டியன் பிறந்தது	3—1—1760
பட்டத்துக்கு வந்தது	2—2—1790

---

* பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் முதல் பாகம் பக்கம் 39 முதல் இந்த விவரங்களைத் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

ஆங்கிலேயர் இவரிடம் திறை கேட்க நேர்ந்தது 1793

ஆலன்துரை பாஞ்சைக் கோட்டைக்கு வந்தது 1797

ஜாக்சன் சந்திப்பு. 10—9—1798

பாஞ்சைப் போர் மூண்டது. 5—9—1799

மன்னன் மாண்டது. 16—10—1799

ஊமைத்துரையின் சிறைவாசம். 1—11—1799

பாளையங்கோட்டைச் சிறை கடந்து வந்தது. 2—2—1801

பாஞ்சைக் கோட்டையைக் கட்டி முடித்தது. 8—2—1801

ஆங்கிலப்படை மூண்டு வந்தது. 9—2—1801

போர் புரிய அஞ்சி மீண்டு போனது. 10—2—1801

கும்பினியின் ஆயுதசாலையை ஊமைத் துரை கைப்பற்றியது. 21—2—1801

தூத்துக்குடியைக் கவர்ந்து அங்கிருந்த வெள்ளையர்களை வெளியேற்றி மீன்தோணி களில் வைத்துச் சீமைக்கு அனுப்பியது 29—2—1801

அங்கே சேனைகளுக்கு அதிபதியாயிருந்த Regimental officer Baggot பங்கெட் என் னும் ஆங்கில தளபதியைக் கைதியாகப் பிடித்து வந்து பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையில் சிறை வைத்தது. 30—2—1801

அந்தப் படைத்தலைவன் மனைவி பரிதாப மாய் வந்து ஊமைத்துரையை வணங்கித் தனக்குத் தாலிப்பிச்சை தரும்படி வேண் டிய போது சிறையிலிருந்த அந்த வெள் ளைத் தளபதியை விடுதலை செய்து அருளியது. 7—3—1801

கும்பினியார் யாண்டும் மூண்டு பெரிய படைகளைத் திரட்டிக் கொடிய வெடிகள்

பீரங்கிகளுடன் அரிய ஐரோப்பியத் தள
பதிகள் சேர்ந்து வந்து மீண்டும் பாஞ்சா
லங்குறிச்சியில் போராடியது. 31—3—1801

அந்தப் போரில் ஆங்கிலப் படைத்
தலைவர்களோடு படைவீரர்கள் பலர்
மாண்டனர்; கோட்டையைச் சூழ்ந்து
மடிந்து கிடந்த பிணங்களை எடுத்து
ராணுவ மரியாதையோடு புதைப்பதற்கு
உத்தரவு தரும்படி ஊமைத்துரையிடம்
சமைத்தளபதி சமாதானக் கொடியுடன்
(A Flag of Truce) சுபேதாரை அனுப்பியது. 1-4-1801

சேனைகளை இழந்து தோல்வி அடைந்த
சேனாதிபதி மானத்துடிப்புடன் முன்பு
போல் மீண்டு போகாமல் பாஞ்சைக்
கோட்டைக்கு அருகே ஒரு மைல் தூரத்
தில் பாசறை அமைத்திருந்தது. 2—4—1801

அடுசமர் சூழ்ந்து ஆயத்தங்கள் ஆய்ந்து
கும்பினியார் கடுங்கோபமாய் நெடும்
படைகளைத் திரட்டிச் சிறந்த ஆங்கிலப்
போர் வீரர்களோடு கர்னல் ஆக்னியூ
Colonel Peter Agnew என்னும் உயர்ந்த
சேனைத்தலைவனைப் பாஞ்சைக் கோட்
டைக்கு வீரோடு அனுப்பியது. 21—5—1801

கொடிய கொலைக் கருவிகளோடு புதிதாய்
மூண்டு வந்த ஆங்கிலப் படைகளைக் கடிது
ஏவிச் சேனைத் தலைவன் மான வீரோடு
போராடினன்; கொடிய கொலைகள் நெடிது
நேர்ந்தன. 23—5—1801

கடுமையாய் மூண்ட போரில் இருதிறத்
திலும் பல படைவீரர்கள் மாண்டு மடிந்
தனர்; கொடிய பீரங்கிகள் கோட்டையைக்
கடிது தகர்த்தன; உள்ளே புகைக் குண்டு